யாக இருக்கிறது. மற்ற நேரங்களிலே நெருக்கடி இல்லை. ஆகவே ரேஷியோ அந்த ரூட்டுகளில் 42 தான் வருகிறது. பாரிஸ் மந்தைவெளி ரூட்டில் 57 ஆக இருக்கிறது. பீக் அவரில் 100-க்கு 100, அதற்கு மேலும் ஆக்குபேஷன் இருக்கும். இந்தக் கணக்கை, நாள் பூராவும் டிக்கட் கணக்கை வைத்து 'நம்பர் ஆப் சேர்விஸ்' ஆல் வகுத்து ஆவரேஜ் எடுக்கவேண்டும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இப்போது ஏற்பட்ட பஸ் கட்டண உயர்வுக்குப் பிறகு இந்த ரூட்டுகளில் எத்தனை ரூட்டுகள் நஷ்டம் இல்லாமல் ஓடுகின்றன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த வருஷக் கணக்கைப் பார்த்த பிறகுதான் சொல்ல முடியும்.

**திரு. எம். எஸ். மணி :** குறைந்தபட்சம் ஒரு பஸ்ஸுக்கு எவ்வளவு தொகை வசூலானால் நஷ்டம் ஏற்படாது என்ற கணக்கைக் கொடுப்பார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பஸ் எவ்வளவு மைல் ஓடுகிறது என்பதைப் பொறுத்து இருக்கிறது. மின்ட்-திருவல்லிக்கேணி பஸ் ஒன்றுக்கு 169 ரூபாய் கிடைத்தால் கட்டுபடியாகும் ; பாரிஸ்—பெரம்பூர் ரூட்டில் 166 ரூபாய் கிடைத்தால் கட்டுபடியாகும் ; பாரிஸ்—மந்தைவெளி ரூட்டில் 174 ரூபாய் கிடைத்
11-30 a.m. தால் கட்டுப்படியாகும். இது தூரத்தைப் பொருத்திருக்கிறது.

### மதுவிலக்குப் பரிசீலனைக் குழுவின் அறிக்கை

***6 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுவிலக்கு குறித்து திட்டக் கமிஷன் நியமித்த பரிசீலனைக்குழு திட்டக் கமிஷனிடம் சமர்ப்பித்த அறிக்கை சென்னை மாநில அரசுக்கு கிடைத்து விட்டதா ?

(இ) ஆமென்றால் அறிக்கையின் நகல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) மதுவிலக்கு ஆய்வுக் குழுவினரின் அறிக்கையின் நகல் ஒன்று சட்டசபை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கரு. சீமைச்சாமி :** அந்தப் பரிசீலனைக்குழு கொடுத்த ரிப்போர்ட்டின் விவரம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்த அறிக்கை சட்டசபை நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பார்த்தால் எல்லா விவரங்களும் தெரியும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** அந்த அறிக்கையை நான் படிக்கவில்லை . . . என்றாலும் மதுவிலக்கு சம்பந்தமாக . . . .



16th October 1964]

**கனம் சபாநாயகர் :** படிக்கவில்லை என்றால் எப்படி விவரங்களை தெரிந்துகொள்ள முடியும் ?

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** ஸார்; இந்த அறிக்கையில் என்னென்ன சிபாரிசுகள் சொல்லப்பட்டிருக்கின்றன ? அவைகளில் நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரை எந்தெந்த சிபாரிசுகள் பரிசீலனை செய்யப்பட்டன என்பதை தெரிவிக்க முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பொதுவாக மதுவிலக்குச் சட்டம் என்னென்ன முறையில் அமலாகிக்கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி பரிசீலித்தார்கள். அதோடு என்னையும் கனம் முதலமைச்சர் அவர்களையும் தொழில் அமைச்சர் அவர்களையும் கலந்து ஆலோசித்தார்கள். அவர்கள் சென்னை மாநிலம்தான் மதுவிலக்குத் திட்டத்தை அமல் செய்வதில் முதன்மையாக இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

**திரு. க. ர. நல்லசிவம் :** இந்த அறிக்கையை சபையின் முன்னால் வைத்து விவாதிப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று நினைக்கிறேன். அறிக்கை அங்கத்தினர்களுடைய பார்வைக்காக சட்டசபை நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** ஸார்; அந்த அறிக்கையை மெம்பர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்று நான் முன்பே சொன்னேன்.

**கனம் சபாநாயகர் :** எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்றால் செலவு அதிகம் ஆகும் என்று எண்ணியிருப்பார்கள்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** குடி ஒழிப்பு சம்பந்தமாக மதுவிலக்குத் திட்டம் தோற்றுப்போய்விட்டது என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறதா ?

**கனம் சபாநாயகர் :** எல்லா மாகாணத்தையும்விட சென்னை மாகாணம் முதன்மையாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்களே.

**திரு. கரு. சீமைச்சாமி :** மகாராஷ்டிரத்தில் மதுவிலக்கை தளர்த்தியிருப்பதைப்போல் நமது மாநிலத்திலும் தளர்த்துவது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தளர்த்துவது என்ற பரிசீலனை நமது மாகாணத்தில் இல்லை.

[16th October 1964

**திரு. ஆ. கு. சுப்பையா :** மதுவிலக்கு திட்டத்தை அமல் நடத்துவதைப் பொறுத்தவரையில் இப்போது போலீசார்தான் அமல் நடத்தி வருகிறார்கள். அப்படியில்லாமல் தனியாக இதற்கென்று ஒரு இலாகாவை ஏற்படுத்தி அமல் நடத்த வேண்டும் என்று இந்த குழுவினர் ஆலோசனை கூறியிருக்கிறார்களா?

**கனம் திரு. பூ. கக்கன் :** போலீஸ் மூலமாக மட்டுமல்ல; கோவாபரேட்டிவ் வாலன்டரி ஆர்கனைஸேஷன் மூலமாகவும் மதுவிலக்குத் திட்டம் அமல் நடத்தவேண்டும் என்றும் பல நல்ல ஆலோசனைகளை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. எம். எஸ். மணி :** இந்த அறிக்கையை தயாரித்தவர்கள் யார் யாரை எல்லாம் பார்த்தார்கள்? குறிப்பிட்ட அமைச்சர்களை மட்டும் தான் பார்த்தார்களா; அல்லது எந்தெந்த சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் சந்தித்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** சில தனிப்பட்ட நபர்களையும் சந்தித்தார்கள். அதோடு கோயம்புத்தூர் சேலம் போன்ற ஜில்லாக்களுக்கும் சென்று மதுவிலக்கு திட்டம் எவ்வாறு அமல் நடத்தப்படுகிறது என்பதைப் பார்த்தார்கள்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** தேசீய ஒற்றுமை இருக்க வேண்டும் என்று சொல்லுகின்ற இந்த நேரத்தில், மதுவிலக்கு திட்டத்தை அமல் நடத்துவதில் எல்லா மாகாணத்திலும் ஒரே முறையை பின்பற்றுவதற்கு அரசாங்கம் யோசிக்குமா?

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** மதுவிலக்கு திட்டத்தை அமல் செய்ய வேண்டியவர்களே சாராயம் காய்ச்சுவது போன்ற தொழில்களில் அதாவது வேலியே பயிரை மேய்வதுபோல் ஈடுபடுகின்றார்கள் என்று ஃபைண்டிங் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அதன் மீது அரசாங்கம் என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அவர்கள் அனுப்பி வைத்த ரிப்போர்ட் ரெவின்யூ போர்டு—கமர்ஷியல் டாக்ஸ் அதிகாரிகள் பரிசீலனை செய்து வந்திருக்கிறார்கள். அவர்கள் பரிசீலனை செய்து தங்கள் சிபாரிசுகளை தெரிவிப்பார்கள். அதன்மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

## கழிவுநீர்ப் பண்ணைகள்

*7 கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் எங்கெங்கு கழிவுநீர்ப் பண்ணைகள் age Farms) இருக்கின்றன?

(இ) இன்னும் அவை ஏற்படுத்தாத நகராட்சிகள் ஏவை?

**கனம் திரு. பூ. கக்கன்:** சபைமுன் ஓர் அறிக்கை வைக்கப் பட்டுள்ளது.



16th October 1964]

A paper[a] is placed on the table of the House.

**திரு. நா. ப. செங்கோட்டுவேலு:** கழிவுநீர்ப் பண்ணைகள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் என்னென்ன உதவிகளை அளித்து வருகிறது?

**கனம் திரு. பூ. கக்கன் :** மேஜர் பஞ்சாயத்து மைனர் பஞ்சாயத்து இவைகளுக்கெல்லாம் கடன் கொடுத்து வருகிறது. நகர சபைகளுக்கும் வேண்டிய உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. க. ர. நல்லசிவம் :** இந்த ராஜ்யத்தில் பத்தொன்பது கழிவு நீர்ப் பண்ணைகள்தான் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இன்னும் 49 பண்ணைகள் ஏற்படுத்தவேண்டும் என்றும் சொல்லப் படுகிறது. கழிவுநீர்ப் பண்ணை ஏற்படுத்தினால் ஊர் சுத்தமாக இருக்கும். அதே சமயத்தில் வருமானம் வரும். ஆகவே ஒவ்வொரு நகராட்சி மன்றத்திற்கும் போதிய உதவி செய்து இதை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கனவே 26 ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் 19 இடங்களில் ஸூவேஜ் ஃபார்ம் ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## தாம்பரம், ஆலந்தூர் நகராட்சித் தேர்தல்கள்

*8 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் தாம்பரம், ஆலந்தூர் நகராட்சிகளில் தேர்தல்கள் நடத்துவதற்கான திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அந்நகராட்சிகளில் தேர்தல்கள் எப்போது நடைபெறும்?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** (அ) ஆம்.

(இ) வார்டுகள் முதலியவற்றைப் பிரிப்பதற்கான ஏற்பாடுகள் முடிந்த பிறகு தேர்தல்கள் நடத்தப்படும்.

**திரு. மு. கருணாநிதி:** ஊராட்சி மன்றங்கள் நகராட்சி மன்றங்கள் இவைகளுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்தல் நடைபெறவேண்டுமென்று சட்டம் இருக்கிறது. அதன்படி பார்க்கும் பொழுது இப்போது காலங்கடந்து விட்டது என்பதை அரசாங்கம் அறியுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** குறிப்பிட்ட ஆறு மாதம் காலக் கெடுவுக்குள் வார்டுகளையெல்லாம் திருத்தியமைப்பதற்கென்று தனியாக அதிகாரிகளை நியமித்து தேர்தலை நடத்தவேண்டுமென்று

[a] Printed as Appendix III on pages 88–89 infra.

இருக்கிறது. அப்படி சில நகராட்சி மன்றங்களில் மட்டும்தான் இன்னும் ஆறு மாத காலம் கடந்து தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கும் நகராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் நடத்துவதை காலவரையறையின்றி தள்ளி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்காக வார்டுகள் பிரிப்பதற்கு அதிகாரிகளை இன்னும் போடவில்லை. வரிகள் அதிகம் போட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இதையெல்லாம் சீக்கிரத்தில் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டுமென்று எண்ணிதான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ராமநாதபுரம், ராணிப்பேட்டை, கம்பம், ஆற்காடு போன்ற இடங்களில் எல்லாம் பல மாதங்களாக வேலைகள் முடியவில்லை. சில இடங்களில் பதினைந்து மாதம் இருபது மாதம் என்றெல்லாம் கால தாமதம் ஆகிவிடுகிறது. ஒரு இடத்தில் 65 மாதங்கள் கூட ஆகிறது. குறிப்பிட்ட கால அளவு ஆறு மாதம் என்றிருந்தாலும் சில சிக்கலான வேலைகள் வந்து விடுகின்றன. எப்படியும் இன்னும் ஆறு மாதகாலத்திற்குள் தேர்தல் நடத்த பூர்வாங்க வேலைகளைக் கவனிப்பதற்காக இன்னும் நீடிப்பு உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. ம. கமலநாதன் :** புதிதாக நகராட்சியாக அறிவிக்கப்படுகிற ஊராட்சிகளுக்காவது ஊராட்சிகளுக்கான தேர்தல் நடைபெறுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** தலைவர் அவர்களே, விதி முறைகளில் 6 மாதம் என்று இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இப்போது பதில் சொன்னபோது 6 மாதங்களில் முடிவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே காலத்தை அதிகரிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ? இல்லையென்றால் இருக்கக் கூடிய விதி முறைகளை அனுசரித்து 6 மாதங்களுக்குள் தேர்தலை நடத்த அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஆறு மாதங்களுக்குள் ஸ்பெஷல் ஆஃபீஸரினால் வார்டு ரிவிஷன், ரோல்ஸ் ரிவிஷன் வேலைகளையெல்லாம் செய்ய முடியவில்லை என்று சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததன் பேரில் இந்தக் காலத்தை நீடித்திருக்கிறோம்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சட்டத்தில் முனிசிபாலிட்டியாக மாற்றியதிலிருந்து 6 மாதங்களுக்குள் முனிசிபல் தேர்தலை நடத்த வேண்டும் என்று போடப்பட்டிருக்கிறது. அதிலே 'ஷல்' என்று தான் இருக்கிறது. பஞ்சாயத்தை முனிசிபாலிட்டியாக மாற்றுவதில்





வார்டுகள் அமைப்பதில் சிரமங்கள் இருக்கின்றன என்று உண்மையிலேயே அமைச்சர் கருதுகிறாரா ? அல்லது அந்த இடங்களிலெல்லாம் பக்குவமான சூழ்நிலை அமைகிற வரையில் காலம் தாழ்த்தித் தாழ்த்தி எலெக்ஷன் நடத்துவதை ஒத்திவைக்கிறார்களா என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** சர்க்காருக்கு காலதாமதம் செய்ய வேண்டுமென்ற நோக்கமே இல்லை.

**கனம் சபாநாயகர் :** பக்குவமான சூழ்நிலை வருவதற்குள் தேர்தல் நடத்தி விடவேண்டுமென்று கனம் அங்கத்தினர் அவசரப் படுத்துகிறார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** தாம்பரம் சம்பந்தப்பட்ட மட்டில் ஆலந்தூர், பழவந்தாங்கல் ஆகியவைகளின் எல்லைகளை ஏற்பாடு செய்ய சர்க்கார் மூலமாக சீஃப் எலெக்ட்டோரல் ஆபீசருக்கு ஸ்பெஷல் ஆபீசர் எழுதியிருக்கிறார். தாம்பரத்தில் விஸ்தாரமான எல்லை வேண்டுமென்று எழுதியிருக்கிறார். இம்மாதிரி அலுவல்களை ஸ்பெஷல் ஆஃபீசர் கவனிக்கவேண்டியிருப்பதால் காலதாமதத்தை தவிர்க்க முடியவில்லை.

**திரு. எம். எஸ். மணி :** ஸார், ஆறு மாதங்களுக்குள் நகரமன்ற தேர்தலை நடத்த முடியவில்லை, காலம் போதாது என்று சொல்லுகிற காரணத்தினால் விதியில் 6 மாதங்கள் என்று இருப்பதை ஒரு வருஷம் என்று மாற்றும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** விதிகளின்படி 6 மாதங்கள் என்று இருந்தாலும், அவசியம் ஏற்பட்டால் நீடிக்கலாம் என்று சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.

**திரு. முனு ஆதி :** நகர மன்றத் தேர்தல்கள் முக்கியம் என்று கருதுவதால் தனி அதிகாரிகளுக்குத் துணை அதிகாரிகளை வைக்க அரசாங்கம் ஏன் தயங்குகிறது ? இத்தனை மாதங்களுக்குப் பிறகு அல்லது இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு தேர்தல் நடக்கும் என்று வரையறுத்துச் சொல்ல முடியுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** பல இடங்களை நகராட்சிகளாக உயர்த்திருக்கிறோம். இன்னும் பல இடங்களை உயர்த்தவிருக்கிறோம். அதிகாரிகளை அதிகமாகப் போட்டுக்கொண்டு போனாலும் பிரச்னை தீராது.

**திரு. கரு. சீலைமச்சாமி :** புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள நகராட்சிகளுக்கு வார்டுகள் எந்த முறையில் பிரிக்கப்படுகிறது ? ஸ்பெஷல் ஆஃபீஸர் இஷ்டப்படி பிரிக்கப்படுகிறதா ? அல்லது பஞ்சாயத்து போர்டைக் கேட்டு பிரிக்கப்படுகிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஸ்பெஷல் ஆபீசர்தான் நிர்வாகம் செய்து கொண்டு வருகிறார்கள். மக்கள் தொகையை அனுசரித்து வார்டுப் பிரிவினை ப்ரொபோஸல்ஸ் அனுப்பி வருகிறார்கள்.

[16th October 1964

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்த வார்டுகள் பிரிப்பதிலே ஏதாவது தகராறுகள் இருக்குமானால் அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதற்கு வேண்டிய ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா?

**கனம் சபாநாயகர் :** இதற்குக் கேட்க வேண்டுமா என்ன?

**புலவர் கா. கோவிந்தன் :** ஆறு மாதங்களுக்குள் நடத்தி விட வேண்டுமென்று சட்டம் இயற்றும் நிலையில் முடித்து விடலாம் என்று சட்டம் இயற்றியவர்களுக்கு நிச்சயமாக தோன்றியதால் தான் ஆறு மாதம் என்று வரையறுத்திருக்கிறார்கள். ஆறு மாதங்களுக்குள் முடியாது என்ற நிலையை அரசாங்கம் உணர்ந்தால் ஒரு வருஷம் என்றாவது மாற்றவேண்டும். இல்லையென்றால் ஆறு மாதம் என்று வைத்துக்கொண்டு சர்க்கார் விரும்புகிறபோது நீடித்துக் கொடுக்கும்போது சர்க்காரின் போக்கில் உள் நோக்கம் கற்பிக்கும் நிலை ஏற்படுகிறது. சட்டத்தையாவது மாற்றி ஒரு ஆண்டு என்று ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முன் வருவார்களா? அல்லது இப்போது குறிப்பிட்டுள்ள ஆறு மாதங்களுக்குள்ளேயே முடிக்கவாவது அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் இல்லை. கூடுமான வரையில் அதிகாரிகள் துரிதமாகத் தான் வேலைகளை நடத்தி வருகிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** ஆறு மாதம் என்பதை ஒரு வருஷம் என்று போட்டாலும் அதற்கு மேலும் எக்ஸ்டென்ஷன் கொடுக்கவும் அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கும் அல்லவா?

**திரு. து. ப. அழகமுத்து :** ஊராட்சி மன்றங்களை நகராட்சி மன்றங்களாக ஆக்கும நேரத்தில், ஊராட்சி மன்றங்களை கிராம பஞ்சாயத்துக்களாக மாற்ற சர்க்கார் ஊக்கம் கொடுப்பதாகத் தெரிகிறதே அது உண்மையா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மேஜர் பஞ்சாயத்துக்களை நகராட்சி மன்றங்களாக மாற்றியதற்குப் பிறகு மறு தேர்தல் நடத்த இவ்வளவு கால தாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். இப்போது பஞ்சாயத்துக்களைப் பிரித்து தேர்தல் நடத்துகிற முறை வந்திருக்கிற நேரத்தில் இன்னும் பல பகுதிகளில் பஞ்சாயத்து வார்டு பிரிக்காமல் இருக்கிற காரணத்தினால் இதையும் அப்படியே தள்ளிப் போட உத்தேசித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** பஞ்சாயத்து தேர்தலுக்குத் தான் தேதி எல்லாம் நிர்ணயித்தாகி விட்டதே.



16th October 1964]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இந்தக் கேள்விக்கு இடமில்லை. பின்னால் இது சம்பந்தமான கேள்வி வரும்போது இதற்கு பதில் சொல்லுகிறேன்.

**திரு. அ. ராகவ ரெட்டி :** தாம்பரம், ஆலந்தூர் பஞ்சாயத்துக்களுக்கு எப்போது தேர்தலை நடத்த முடியும் என்று சொல்ல முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** வார்டுகள் பிரித்தல், வாக்காளர் பட்டியலில் திருத்தங்கள் ஆகிய வேலைகளெல்லாம் முடிந்தவுடனே தேர்தல் நடத்தப்படும்.

**MR. SPEAKER :** Is the hon. Member satisfied with the reply?

**திரு. அ. ராகவ ரெட்டி :** முடிவாக எத்தனை மாதங்கள் ஆகும் அல்லது எத்தனை வருஷங்கள் ஆகும் என்று தெரிந்துகொள்ள முடியுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** குறிப்பிட்ட தேதியை நிர்ணயமாகச் சொல்ல முடியாவிட்டாலும், விரைவில் வேலைகளையெல்லாம் முடித்து துரிதமாகத் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. எம். எஸ். மணி :** ஆற்காடு நகராட்சிக்கு 65 மாதங்கள் ஆனது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தாம்பரம் நகராட்சிக்கு ஆறு மாதங்களுக்குள் முடியாததால் காலத்தை நீடித்திருக்கிறார்கள். நீடித்த காலத்திற்குள்ளாவது தேர்தல் நடைபெற கனம் அமைச்சர் ஆவன செய்வாரா?

**கனம் சபாநாயகர் :** ஆற்காடு 65க்கு மாதமா அல்லது 25 மாதமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஆற்காடுக்கு 10½ மாதம்.

**திரு. எம். எஸ். மணி :** ஏதோ ஒரு ஊருக்கு 65 மாதங்கள் ஆனதாக அமைச்சர் குறிப்பிட்டார்கள்.

### பஞ்சாயத்து தேர்தல்கள்

* 9 கேள்வி.—திரு. மு. கருணாநிதி
திரு. மீ. கலியாணசுந்தரம் : } கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து மன்ற ஒன்றிப்புகள், பஞ்சாயத்து மன்றங்கள் ஆகியவற்றுக்கான தேர்தலை நடத்துவதற்கான திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றதா?

(இ) தேர்தலை எப்போது நடத்த அரசு திட்டமிட்டுள்ளது?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) & (இ) 1964-ம் ஆண்டின் இறுதிக்குள் பஞ்சாயத்துக்களுக்கு சாதாரண தேர்தல்களை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பஞ்சாயத்துச்

[16th October 1964

சட்டத்தின் 12-வது பிரிவு 1964-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து (திருத்த -பலவகை- ஷரத்துக்கள்) சட்டத்தின் 3-வது பகுதியினால் திருத்தப்பட்டுள்ளது. இதன்கீழ் ஒரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்தில் அடியிற்கண்டவர்கள் அங்கம் வகிப்பார்கள்:—

(1) பஞ்சாயத்து யூனியனிலுள்ள பஞ்சாயத்துக்களின் தலைவர்கள்;

(2) பஞ்சயத்து யூனியனிலுள்ள டவுன்ஷிப்கமிட்டி ஒவ்வொன்றிலிருந்தும் நிர்ணயித்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவல் சார்பற்ற உறுப்பினர் ஒருவர். எனவே, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு தனியாகத் தேர்தல்கள் நடத்துவது குறித்த பிரச்னைக்கு இடமில்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** பஞ்சாயத்துக்களுக்கு எந்தத் தேதி நிர்ணயிக்கப்படவிருக்கிறது? இந்த ஆண்டு இறுதிக்குள் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போதே நாம் ஆண்டு இறுதியை நெருங்கியிருக்கிறோம். தேதி நிர்ணயிக்கப்பட்டுவிட்டதா? அப்படியானால் தேதி என்ன?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** டிசம்பரில் மூன்று பகுதிகளாகப் பிரித்து நடத்துவது என்று உத்தேசித்திருக்கிறோம். வருஷ இறுதிக்குள் என்றுதான் சொல்ல முடியும். வேறு ப்ரொக்ராம் பைனலைஸ் ஆகவில்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தனித் தேர்தல் இல்லையென்றாலும் இப்போதே பல சேர்மன்கள் தங்களுக்கு அனுகூலமான முறையில் ஆசிரியர்கள் போன்றவர்களை மாற்றுவதாகப் புகார்கள் வருகின்றன. தேர்தல் வருகிற காரணத்தினால் பஞ்சாயத்து யூனியன்களில் எந்த விதமான மாற்றமும் செய்யக்கூடாது என்று அரசாங்கம் உத்திரவிடுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அவர்களை போலிங் பர்ஸொனெலாக்கூடப்போடக்கூடாது, அவர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்தலில் தலையிடக்கூடாது என்று சர்க்கார் தெளிவான உத்திரவு பிறப்பிப்பதாக இருக்கிறது.

**திரு. எம். தண்டாயுதபாணி:** பஞ்சாயத்து தேர்தல் நடத்துவதற்கு முன்பாக அதிக எண்ணிக்கை உள்ள பஞ்சாயத்து கூட்டுறவு மன்றங்களை பஞ்சாயத்துகளாக பிரித்து சிறிய கூட்டுறவு மன்றங்களாக மாற்றி தேர்தல் நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா? அதற்குரிய கோரிக்கை தஞ்சை ஜில்லாவிலிருந்து அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அப்படி உத்தேசம் இல்லை.

**திரு. ர. ஜீவரத்னம்:** பல பெரிய பஞ்சாயத்துக்களில் பல பகுதிகளாக பிரித்து, பல சிறிய கிராமங்கள் தனி பஞ்சாயத்துக்களாக இயங்க வேண்டும் என்று ஏராளமான மனுக்கள் சர்க்காருக்கு வந்திருக்கின்றன. அவற்றைப்பற்றி எல்லாம் முடிவு எடுத்த பிறகு பஞ்சாயத்து தேர்தல் நடைபெறுமா? அல்லது அதற்கு முன்பாக நடத்த உத்தேசமா என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?



16th October 1964]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** பல பஞ்சாயத்துக்களை அம்மாதிரி பிரிக்க வேண்டும் என்று பல கோரிக்கைகள் வந்ததன் காரணமாக அவற்றை நன்றாக பரிசீலனை செய்து, எவை எவை ஏற்றுக்கொள்ள வேண்டுமோ அவை பற்றி அந்தந்த பஞ்சாயத்துகளுக்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறது. அப்படி பிரிக்க முடியாது என்று இருந்தால், அந்தக் கோரிக்கைகளை மறுத்து உத்தரவு சென்று விட்டது என்று நான் நினைக்கிறேன். பஞ்சாயத்து தேர்தல்களுக்கு முன்பு 'பைபர்கேஷன் ப்ரபோஸல்ஸ்' பற்றி முடிவு செய்யப்பட்டு விடும். அவைகள் முடிவு பெற்ற பிறகுதான் தேர்தல்கள் நடக்கும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பஞ்சாயத்துகளை பிரிப்பதிலே கால தாமதம் ஏற்பட்டால், அதனால் தேர்தல்களை இன்னும் 6 மாதங்களுக்கு தள்ளி வைக்கவேண்டும் என்ற நிலைமை அரசாங்கத்திற்கு ஏற்படுமே? அப்படியானால் அந்தத் தேர்தல்கள் எப்பொழுது நடத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அம்மாதிரி ஏற்படும் என்று நம்புவதற்கு இல்லை.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** பஞ்சாயத்து தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தேர்தல்களை டைரக்ட் எலக்ஷன் மூலம், அதாவது நேரடியாக, சர்வஜன வாக்குகள் மூலம் நடத்த வேண்டும் என்று சொல்லப்பட்டு வருவதை மாற்றி பழைய முறையை கொண்டு வருவதற்குக் காரணம் என்ன?

(பதில் இல்லை).

**திரு. கரு. சீமைச்சாமி:** சமீபத்தில் நடந்த பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மகாநாட்டில், டிசம்பரில் நடக்கும் பஞ்சாயத்து தேர்தலை அது அறுவடை காலமாக இருப்பதினால் மாற்றி அமைக்க வேண்டும் என்ற தீர்மானம் போட்டிருக்கிறார்களே? அது குறித்து அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** டிசம்பரில் தேர்தல் நடத்த வேண்டும் என்று சர்க்கார் முடிவு எடுத்திருக்கிறார்கள்.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, is it a fact that elections are to be postponed in the added territory, i.e., area that has been recently tagged on to the Madras State on account of the amendment enacted recently?

THE HON. SRI S. M. A. MAJID: I request the hon. Member to put a separate question.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஆசிரியர்களைப் பற்றி நான் கேட்ட கேள்வி என்னவென்றால், ஆசிரியர்கள் தேர்தலில் தலையிடுவதாக நான் சொல்லவில்லை, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ஆசிரியர்

[16th October 1964

களை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்துகிறார்கள். ஆசிரியர்களை அதற்காக வேண்டி மாற்றுகிறார்கள். அது மாதிரி மாறுதல் செய்யக்கூடாது என்று பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதோடுகூட, குறுகிய காலமாக இருப்பதால், பஞ்சாயத்து யூனியன் காரியங்களுக்கு பயன்படுத்துவதற்குப் பதிலாக அரசியல் காரியங்களுக்கு பயன்படுத்தக்கூடிய காரணம் இருப்பதால், ஜீப்புகளை இவர்கள் அம்மாதிரி உபயோகப்படுத்தக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவு இடுவார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அம்மாதிரி குறிப்பிட்ட பிரச்னைகள் இருந்தால், அவைகளை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். பஞ்சாயத்து யூனியன் சேர்மன்கள் ஜீப்புகளை அம்மாதிரி தவறுதலாக உபயோகப்படுத்தக்கூடாது என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் பிளாக் டெவலப்மெண்டு ஆக்டிவிடிஸ்க்கு ஜீப்புகளை உபயோகப்படுத்துவதற்கு வசதி இருக்கவேண்டும் என்று சொன்னதையும் சர்க்கார் கவனத்தில் எடுத்து, அது சம்பந்தமாக உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். இம்மாதிரி விஷயங்களை சுட்டிக்காட்டி அடிக்கடி ஜீப் உபயோகத்தைப்பற்றி உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருக்கிறோம். மேல் அதிகாரிகள் ஆர். டி. ஓ., கலெக்டர் போன்றவர்கள் லாக் புக்குகளை செக் பண்ணி கண்காணிக்க வேண்டும் என்ற கடுமையான உத்தரவும் சென்றிருக்கிறது என்பதையும் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** பஞ்சாயத்து பழைய தேர்தல் முறைக்கும் இப்பொழுது நடக்கிற தேர்தல் முறைக்கும் குறிப்பிடத்தகுந்த மாறுதல் இருக்கிறதா ? அப்படியானால் எவை ? அதாவது 'ரூல்ஸ் ரிகார்ட்டிங் காண்டக்ட் ஆப் எலக்ஷன்ஸ்'.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ரூல்ஸ் ஏற்கனவே ஒரு பகுதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு விட்டது. இன்னும் அதற்குப் பிறகு மேற்கொண்டுள்ள ரூல்ஸ் அவ்வப்பொழுது வெளியிடப்படும். கனம் அங்கத்தினர் எந்தப் பிரச்னை என்று தெளிவாகச் சொல்ல வேண்டும்.

The hon. Member may put a specific question.

முன்பு 'க்யுமுலேடிவ் வோடிங் சிஸ்டம்' இருந்தது. இப்பொழுது அந்த சிஸ்டம் இல்லை.

**திரு. கே. டி. கோசல்ராம் :** இப்பொழுது இயங்கி வரும் பஞ்சாயத்துகளை எந்த அடிப்படையில் சர்க்கார் 'பைபர்கேட்' பண்ணுகிறார்கள் ? பஞ்சாயத்துகள் தாங்களாகவே 'பைபர்கேட்' பண்ண வேண்டும் என்று சொல்லுவதை வைத்துக் கொண்டா ? அல்லது அவர்கள் "பைபர்கேட்" பண்ணவேண்டாம் என்று சொன்னால் அவர்கள் தீர்மானத்திற்கு விரோதமாக சர்க்கார் 'பைபர்கேட் பண்ணுகிறார்களா ? எந்த அடிப்படையில் பைபர்கேட் பண்ணுகிறார்கள் என்று அரசாங்கம் சொல்ல இயலுமா ?



16th October 1964]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** பஞ்சாயத்து மக்கள் தொகை, அதாவது ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகை இருக்க வேண்டும், அதற்குமேல் இருக்கக்கூடியவற்றை பிரித்தால் வருமானம் தகுந்தபடி இருக்க வேண்டும். 'வையபிள் இகனமிக் யுனிட்டாக' இருக்க வேண்டும், ஒரே ரெவின்யு யூனிட்டில் இல்லாமல் பல ரெவின்யு யூனிட்டாக இருந்தால் பிரிக்கலாம். இதுபோன்ற அடிப்படையில்தான் பஞ்சாயத்து பிரிக்கப்படுகின்றன. பஞ்சாயத்து ரிசல்யூஷன், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அபிப்பிராயம், கலெக்டரின் அபிப்பிராயம், இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டுதான் சர்க்கார் ஒரு முடிவு எடுக்கும்.

**திரு. கே. டி. கோசல்ராம் :** பஞ்சாயத்துகள் பிரிக்க வேண்டாம் என்று தீர்மானித்தால் அவற்றை அரசாங்கம் பிரிக்காமல் விட்டுவிடுமா? அல்லது அதிலும் தலையிட்டு பஞ்சாயத்துகளை பிரிப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** நான் முன்பு சொன்ன எல்லா கருத்துக்களையும் மனதில் கொண்டு, அவசியமிருந்தால் பிரிக்கப்படும்.

**கனம் சபாநாயகர் :** அவசியம் இருந்தால் தீர்மானத்திற்கு எதிராகவும் முடிவு செய்யலாம்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பஞ்சாயத்து தேர்தல்கள் டிசம்பர் 7, 12, 17 ஆகிய தேதிகளில் நடைபெறுவதாக இருந்தது. சமீபத்தில் 12, 17, 24 ஆகிய தேதிகளுக்கு மாற்றப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. சர்க்கார் எந்தத் தேதிகளில் தேர்தல்கள் நடத்துவதற்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** இன்னும் பரிசீலனையில் இருக்கிறது, உத்தேசிக்கப்பட்ட தேதி 12, 14, 21 ஆக இருக்கலாம்.

**கனம் சபாநாயகர் :** இன்னும் தேதி 'பைனலைஸ்' ஆகவில்லை.

**திரு. முனு ஆதி :** பஞ்சாயத்து தலைவர்கள், உறுப்பினர்கள் தங்களுக்குச் சாதகமாக வார்டுகளைப் பிரித்துக் கொண்டார்கள் என்று தெரிந்து, பொது மக்கள், வாக்காளர்கள் அதுபற்றி ஆட்சேபணை மனு கொடுத்திருக்கிறார்கள், அதன் பேரில் அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**கனம் சபாநாயகர் :** கவனிக்கப்படும்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் பரிசீலனை செய்யலாம்.

**திரு. எம். எஸ். மணி :** தமிழ் நாட்டிலுள்ள கிராமங்கள் அனைத்தும் பஞ்சாயத்துகளாக மாற்றப்பட்டு விட்டனவா ? அப்படி மாற்றப்படவில்லை என்று சொன்னால், காரணம் என்ன ? இன்னும் எத்தனை கிராமங்கள் மாற்றப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

[16th October 1964

**கனம் சபாநாயகர் :** பஞ்சாயத்து இல்லாத கிராமங்கள் இருக்கின்றனவா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கிராமங்கள் எல்லாவற்றையும் கூடுமான வரையில் சேர்த்து தேர்தல் நடத்துவதற்கு உத்தேசம்.

**புலவர் கா. கோவிந்தன் :** தேர்தல் நடக்கிற தேதி மாறி வருகிறது. ஜனவரி 26-ம் தேதி ஊராட்சி மன்றத் தலைவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளுவதாக முடிவு செய்யப்பட்டிருந்ததே ? அந்த முடிவுகூட மாற்றப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஒரு முடிவும் மாறவில்லை. உத்தேச தேதியை முன்பு அறிவித்தேன். தேர்தல் ‘ப்ரொகிராம்’ இன்னும் ‘பைனலைஸ்’ ஆகவில்லை.

**திரு. ம. கமலநாதன் :** அவர்களுக்கு உள்ள இடங்களைவிட அதிகமான பேர்கள் போட்டியிட்டால், அவர்களுக்குக் கொடுக்கப்படும் வாக்குகள் எப்படி பிரயோகிக்கப்பட வேண்டும் ? ஒரேயடியாக மூன்று ஸ்தானங்களுக்கும் நிற்கிற அங்கத்தினர்களுக்கு ஒரே பெட்டியில் வோட்டுப் போடவேண்டுமா என்பது போன்ற சந்தேகங்கள் எழுகின்றன. அதற்கான விளக்கங்களை அமைச்சர் அவர்கள் தருவார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஒரே பாக்ஸ் தான். முன்பு ‘க்யுமுலேடிவ் சிஸ்டம்’ இருந்தது, இப்பொழுது அப்படியில்லை. முன்பு ஒரே நபருக்குப் போடலாம், எல்லா வாக்குகளையும். இப்பொழுது ஒரே நபர், ஒரே ஆளுக்கு மூன்று வோட்டுகள் போட முடியாது. மார்க்கிங் முறை அமுல் நடத்தப்படும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இப்பொழுது நடக்கின்ற முறையிலே, முதல் நாள், அபேட்சகர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கப்படுகின்றன. அதிகாரிகள் குறிப்பிட்ட 10 சின்னங்களை அபேட்சகர்களுக்கு ஒதுக்குகிற முறை இப்பொழுதும் அமுலுக்குக் கொண்டுவருவதாக இருக்கிறது என்று அறிகிறேன். அந்த முறையை மாற்றி சட்டமன்றத் தேர்தலில் செய்வது போல் அங்கத்தினர்கள் பெயர் வரிசையிலே அவர்கள் கேட்கிற சின்னங்களைக் கொடுப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** பொதுத் தேர்தல் மாதிரி கிராமப் பஞ்சாயத்து தேர்தலை நடத்த முடியாது. முதல் நாள் காலையில் நாமினேஷன் பெற்றுக்கொண்டு, மத்தியானம் ‘ஸ்குருடினைஸ்’ செய்து, மாலையில் முடிவு எடுக்கப்பட்டவுடன், ‘ஓவர் னைட்’ எப்படி சின்னங்களை அச்சிட முடியும் ? அம்மாதிரி நடைமுறையில் முடியாது. ஆகையால் இப்பொழுது இருக்கிற இதே முறையில்
12-00 noon. தான் நடத்துவது என்று முடிவு எடுத்திருக்கிறோம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஜீப்களை உபயோகிப்பதிலே மிகவும் கடுமையான உத்தரவுகளை அனுப்பியிருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் உப கேள்விகளுக்கு பதில் அளிக்கும்பொழுது கூறினார்கள். நமது நாட்டின் பிரதமர் அவர்கள் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஜீப்களை வாபஸ் பெற வேண்டும் என்று கூறியிருக்கிறார்களே, அத்தகைய உத்தரவு நமது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? ஆம் என்றால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?



16th October 1964]

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** தனிக் கேள்வி போடவேண்டும்.

**ஊராட்சி மன்றங்களின் தொகுதிகளை மாற்றியமைத்தல்**

*10 **கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஊராட்சி மன்றங்களின் தொகுதிகளை மாற்றி அமைக்கும் திட்டம் எப்போது செயல்படும் ?

(இ) இதற்காக தனிக்கமிஷன் ஒன்று அமைக்கும் நோக்கம் உண்டா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) 1964 முடிவிற்குள் பஞ்சாயத்துக்களுக்கு சாதாரணத் தேர்தல்களை நடத்துவதென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அது சம்பந்தமாக அவசியமான இடங்களில் பஞ்சாயத்துக்களின் வார்டுகள் மாற்றியமைக்கப்படும்.

(இ) இல்லை.

**திரு. கே. டி. கோசல்ராம் :** இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல்களுக்கு முன்னர், தொகுதிகளை ரீகான்ஸ்டிட்யூட் பண்ண வேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. அவ்வாறு ரீகான்ஸ்டிட்யூட் செய்வதற்கு ஷோ காஸ் நோட்டீஸ் கொடுத்த பிறகு, அரசாங்கத்திலிருந்து பழைய வார்டுகளையே வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாமென்று அரசாங்க உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களே, அது சட்டத்திற்குப் புறம்பானது என்பதை ஒப்புக்கொள்வார்களா ? அப்படி ஒப்புக்கொண்டால் அதை வாபஸ் வாங்குவார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடத்துவதற்கு முன்னர், பஞ்சாயத்துக்களை பிரிப்பதை முடித்துவிட்டுத்தான், தேர்தல் நடத்தப்படுமென்று அமைச்சர் அவர்கள் முன்பு ஒரு கேள்விக்கு பதில் அளித்தார்கள். ஆனால், இப்பொழுது பதில் சொல்லும்பொழுது, வந்த கோரிக்கைகளில் சிலவற்றை ஏற்றுக்கொண்டிருக்கிறோம், சிலவற்றைத் தள்ளி விட்டோம் என்று சொல்லுகிறார்கள். இது முரணாகை இல்லையா ?

**கனம் சபாநாயகர் :** கோரிக்கைகளில் நியாயமிருந்தால் பிரித்திருப்பார்கள்.

**திரு. து. ப. அழகமுத்து :** பஞ்சாயத்துக்களை பிரிப்பதில் நியாயமான கோரிக்கைகளைக்கூட சர்க்கார் தங்களுக்கு சாதகமில்லை என்பதற்காக ஒப்புக்கொள்ளவில்லை என்பது உண்மையா ?

[16th October 1964

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அம்மாதிரி எங்கேயாவது நடந்திருக்கிறது என்றால், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், கவனிக்கப்படும்.

**புலவர் கா. கோவிந்தன் :** வார்டுகளைப் பிரிக்கிற நேரத்தில், நிர்வாக அதிகாரிகள் ஊராட்சி மன்றத்தின் ஒப்புதலைப் பெறாமல், பிரப்போசலை அனுப்பியிருக்கிறார்களே. அப்படி அனுப்பலாமா? அம்மாதிரி வந்திருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளலாமென்று சர்க்கார் விதி முறை வகுத்து இருக்கிறதா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அப்படி நடந்திருந்தால் மேலதிகாரி கலெக்டர் அவர்கள் இருக்கிறார்கள். அவர் ரீஜனல் இன்ஸ்பெக்டராக இருப்பதால், அவருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். அதற்கு மேல், சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இப்படி பஞ்சாயத்துக்களைப் பிரிக்க வேண்டுமென்று சுமார் இரண்டு, மூன்று ஆண்டுகளாக மனுச் செய்திருந்தும். கடைசியாக 30—9—1964-க்குள்ளாக வந்தவைகள் தான் கவனிக்கப்படும், 1-ம் தேதி, 2-ம் தேதி அனுப்பித்த மனுக்கள் கவனிக்கப்பட மாட்டாது என்று சொல்லுகிறார்கள். பல அதிகாரிகள் அனுப்பாமலேயே கிராமப் பஞ்சயத்துக்களுக்குத் திருப்பி அனுப்பியிருப்பது தெரியுமா? அப்படிப் பட்டவைகளை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தால், இரண்டு மூன்று ஆண்டுகளாக இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதைக் கருதி, அவைகளைப் பிரிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** பஞ்சாயத்து தேர்தல் சம்பந்தமாக ஏற்கெனவே சட்டத் திருத்தம் வந்தபோது, சட்டமன்றத்திலே நான் குறிப்பிட்டதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். குறிப்பிட்ட காலத்திற்குள் பைபர்கேஷன் பிரப்போசல்களை அனுப்பியிருந்தால், அவைகள் கவனிக்கப்பட்டிருக்கும். தேர்தல் நடக்கும் சமயத்தில் பைபர்கேஷன் செய்ய வேண்டுமென்று சொன்னால், எப்படித் தேர்தலை நடத்துவது?

## UNSTARRED QUESTIONS.

*Radio sets for Harijan colonies*

1 *Q.*—PULAVAR K. GOVINDAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம ஆண்டு அக்டோபர் மாதம் 30-ம் தேதி நடைபெற்ற தென் வேலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு அவ்வலுவலகம் ஆர். ஸி. எஸ். ஏ. 3,89637/63 என்ற எண் இடப்பெற்று 1963–ம் ஆண்டு நவம்பர் மாதம் 12–ம் தேதி மாவட்ட அரிசன நல அலுவலருக்கு அனுப்பப்பட்ட எல்லா அரிசனக் காலனிகளுக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வானொலிப் பெட்டிகள் வழங்கியாக வேண்டும் என அரசை வேண்டிக்கொள்வது என்ற தீர்மானம் அரசாங்கத்திற்குக் கிடைத்ததா?

(இ) அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

*A.*—(*a*) No Sir.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.



16th October 1964]

*Licences for touring talkies*

2 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGHAVATHAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to grant licences to touring talkies for a period of two years considering the huge expenses incurred in consturcting a thatched theatre, labour and rent of the site. etc.

*A.*—No.

இல்லை.

*Resolutions passed by the All-India Mayor's Conferences*

3 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the details as to the resolutions and recommendations communicated to Madras Government by the All India Mayors' Conferences held at Ootacamund and Bombay convened by the Union Health Ministry under the Chairmanship of Shri Karmarkar, the then Health Minister;

(*b*) how many of them were implemented; and

(*c*) the reasons for the non-implementation of the rest?

*A.*—(*a*), (*b*) *and* (*c*).—A statement [a] furnishing the resolutions passed at the All India Mayors' Conference held at Ootacamund in 1959 and All-India Second Conference of Municipal Corporations held at Bombay in 1961 and the action taken by the Government is placed on the Table of the House.

*Industrial Estate, Ambattur*

4 *Q.*—SRI M. KARUNANIDHI : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையை அடுத்துள்ள அம்பத்தூர் தொழிற்பேட்டையில் இதுவரை எத்தனை தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன

*A.*—Out of 70 factory Units provided in the Industrial Estate, Ambathur, 62 units have so far been allotted to various industrialists out of whom 37 have started production.

அம்பத்தூர் தொழில் பேட்டையில் வகை செய்துள்ள 70 தொழிற்சாலை யூனிட்டுகளில், இதுவரை 62 யூனிட்டுகள் பற்பல தொழிலதிபர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இவர்களில் 37 தொழிலதிபர்கள் உற்பத்தி துவங்கிவிட்டனர்.

*Co-operative House-site Societies in Mylapore*

5 *Q.*—SRI RAMA ARANGANNAL : கனம் உறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மயிலாப்பூர் தொகுதிக்குள் இருக்கின்ற பதிவுபெற்ற வீடுகட்டும் கூட்டுறவு மனை சங்கங்கள் எத்தனை?

(இ) இவைகளில் குடிசை வாழ்வோர் சம்பந்தமானது எத்தனை? மத்திய தர மக்களுக்கானது எத்தனை?

(உ) எந்த ஆண்டில் இவை பதிவு பெற்றன? எத்தனை நோக்கங்களை நிறைவேற்றியுள்ளன?

*A.*—(*a*) (*b*) *and* (*c*).—There are 8 (eight) Co-operative House-site societies in the Mylapore Constituency of the Madras city. These eight societies have been formed for the benefit of the hut dwellers in

[a] Printed as Appendix IV on pages 90–109 infra.

[16th October 1964

the area. Two societies were registered, one each in 1955 and 1961, four societies in 1960 and the remaining two societies in 1962. The societies have not yet got possession of lands due to unavoidable reasons and, therefore, they have not yet allotted house-sites to their members.

(அ), (இ), (உ).—சென்னை நகரின் மயிலாப்பூர் தொகுதியில் வீடு கட்டும் 8 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அப் பகுதியில் உள்ள குடிசை வாழ்பவர்களின் நலத்திற்காக இந்த எட்டுச் சங்கங்களும் அமைக்கப் பட்டுள்ளன. 1955-ல் ஒன்றும், 1961-ல் மற்றொன்றுமாக இரண்டு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. நான்கு சங்கங்கள் 1960-ல் பதிவு செய்யப்பட்டன. எஞ்சிய இரண்டு சங்கங்களும் 1962-ல் பதிவு செய்யப் பட்டன. தவிர்க்கமுடியாத காரணங்களால் இந்த சங்கங்கள் இதுவரையில் எந்த நிலத்தையும் தம் வசம் எடுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே, அச் சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்கு வீட்டு மனைகளை இன்னும் வழங்கவில்லை.

*Dam across river Mangarai in Madurai district*

6 *Q.*—Sri V. S. S. MANI : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டம் ரெட்டியார்சத்திரம் யூனியன் எல்லையிலுள்ள மலையடிவாரத்தில் மாங்கரை ஆற்றின் குறுக்கே அணை கட்டி நீர் தேக்கும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

*A.*—The scheme is under investigation by the local officers of the Irrigation Department.

மேற்படி திட்டம் நீர்ப்பாசனத் துறை ஸ்தல அதிகாரிகளின் ஆய்வி லிருக்கிறது.

*Quarters for Women teachers in rural areas*

7 *Q.*—Sri V. S. S. MANI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any programme for instituting part-time instruction courses for girls in the age group 6—11 in villages who discontinued their studies at school for domestic reasons ;

(*b*) whether there is any proposal to provide residential accommodation for qualified women teachers who take up jobs in villages ; and

(*c*) if so, the action taken in that regard ?

*A.*—(*a*) No Sir.

(*b*) Yes Sir.

(*c*) A provision of Rs. 25 lakhs is included in the Third Five-Year Plan for providing quarters for women teachers in rural areas at a cost of Rs. 3,300 for each quarters. This scheme is eligible for cent per cent central assistance. Under this scheme, the number of quarters sanctioned for construction are as follows :—

| 1961-62. | 1962-63. | 1963-64. |
|---|---|---|
| 204 | 171 | 375 |

*Cancer Ward for Government Erskine Hospital at Madurai*

8 *Q.*—Sri K. CHEEMAICHAMY : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பார—

(அ) மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் புற்றுநோய் சிகிச்சைக்காக தனி எக்ஸ்-ரே (X-Ray) பிளாக் கட்டப்பட்டதா ?



16th October 1964]

(இ) ஆமென்றால் எத்தனை படுக்கைகள் இருக்கின்றன ?

*A.*—(*a*) Yes.

(*b*) Cancer patients admitted into the hospital are now treated jointly by the various Surgeons, Physicians and Specialists in consultation with the Radiologist. As such, the beds for such patients are included as part of those of the General Surgeons, Physicans, etc. Arrangements are being made by the Dean of the institution to have a separate cancer ward of 28 beds in the X-ray block of the hospital.

(அ) ஆம்.

(இ) இந்த மருத்துவ மனையில் புற்றுநோய் சிகிச்சைக்காக சேர்க்கப் பட்ட நோயாளிகளுக்கு பல்வேறு சர்ஜன்கள், டாக்டர்கள், விசேஷ மருத்துவ நிபுணர்கள் சேர்ந்து எக்ஸ்ரே பிரிவு நிபுணரைக் (Radiologist) கலந்து சிகிச்சையளிக்கிறார்கள். எனவே அத்தகைய நோயாளிகளின் படுக்கைகளும் ஜெனரல் சர்ஜன்கள் டாக்டர்கள் போன்றவர்களின் கண் காணிப்பில் உள்ள படுக்கைகளுடன் சேர்க்கப்படுகின்றன. மருத்துவ மனை யின் எக்ஸ்ரே தொகுதியில் 28 படுக்கைகள் கொண்ட புற்றுநோய்ப் பிரிவு ஒன்றைத் தனியாக ஏற்படுத்த அம் மருத்துவ மனையின் தலைவர் ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

*Tuberculosis Sanatorium at Austinpatti*

9 *Q.*—Sri K. CHEEMAICHAMY : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஆஸ்டின்பட்டி க்ஷயரோக மருத்துவமனைக்கு அரசாங்கத் தால் வழங்கப்படும் மானியத் தொகை வருஷம் ஒன்றுக்கு எவ்வளவு ?

*A.*—The Tuberculosis Sanatorium at Thoppur (formerly Austinpatti) Madurai District is maintained by Government and as such no grant is paid to the Sanatorium.

மதுரை மாவட்டம், தோப்பூரிலுள்ள (பழைய ஆஸ்டின்பட்டியிலுள்ள) காச-நலம் பேண் மருத்துவமனையை (Tuberculosis Sanatorium) அரசாங்கம் நடத்தி வருவதால், அதற்கு மானியம் எதுவும் வழங்கப்படுவதில்லை.

*Primary Health Centre for Marandahally*

10 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) Whether the Government have received any representations from the Palacode Panchayat Union Council for opening of Primary Health Centre in the building to be offered by the Panchayat Union Council at Marandahally ; and

(*b*) If so, the action taken thereon ?

*A.*—(*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

*Desilting of tanks in North Salem*

11 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Home be pleased to state the number of tanks proposed to be taken up for desilting during the year 1964 in North Salem District with their names, taluk-wise ?

*A.*—Nil.

ஒன்றும் இல்லை.

[16th October 1964

*Resolution passed by the 16th Co-operators' Conference*

12 *Q.*—Sri. R.S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that a resolution passed by the 16th Tamil Nad Co-operators' Conference held at Kumbakonam during 1961 requesting the grant of 50 per cent subsidy for the construction of buildings by the Rural Credit Societies has been received by the Government ; and

(*b*) if so, the action taken thereon ?

*A.*—(*a*) Yes.

(*b*) A scheme was drawn up by the Registrar of Co-operative Societies for giving financial assistance to the Co-operative Credit Societies to construct office buildings. The Government have not approved the scheme in view of financial stringency.

(அ) ஆம்.

(இ) கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக நிதி உதவி அளிக்க; கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் திட்டம் ஒன்றைத் தயாரித்தார். நிதி இடர்ப்பாடு காரணமாக இத் திட்டத்தை அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை.

13 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government are in receipt of a resolution passed in the 16th Co-operator's Conference held in 1961 requesting them to advise the temple managements and local bodies to deposit their funds in the Co-operative institutions ; and

(*b*) if so, the action taken thereon ?

*A.*—(*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*Townships in the State*

14 *Q.*—Sri K. NARAYANASWAMI PILLAI : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்திலுள்ள டவுன்ஷிப்புகள் எத்தனை ?

(இ) இன்னும் எங்கெங்கே டவுன்ஷிப்புகள் நிறுவ உத்தேசம் ?

*A.*—(*a*) Eleven.

(*b*) Townships will be constituted for the areas covered by (1) Mahabalipuram and Poonjeri panchayats in Chingleput District and (2) the High Ways Panchayat and Cloud Land Estate in Madurai District. A few more proposals are under consideration, but as they have not been finalised yet, it is not now possible to indicate all the places where townships will be formed in future.



16th October 1964]

(அ) பதினொன்று.

(இ) (1) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மகாபலிபுரம், பூஞ்சேரி ஆகிய பஞ்சாயத்துகளுள் அடங்கியுள்ள பகுதிகளுக்கும். (2) மதுரை மாவட்டத்திலுள்ள ஹைவேவஸ் பஞ்சாயத்திலும், "கிளவுட்லாண்ட் எஸ்டேட்"டிலும் அடங்கியுள்ள பகுதிகளுக்கும் டவுன்ஷிபபுகள் அமைக்கப்படும். இன்னும் சில பகுதிகளுக்கு டவுன்ஷிப்புகள் அமைப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. ஆனால் அந்தப் பகுதிகள் எவையெவை என்று முடிவாகத் தீர்மானிக்கப்பெறாமையால் மேற்கொண்டு எந்தெந்தப் பகுதிகளில் டவுன்ஷிப்புகள் அமையும் என்பதை இப்பொழுது குறிப்பிட இயலாது.

*High Schools in the State.*

15 *Q.*—Sri K. NARAYANASWAMI PILLAI, Sri M. V. KARIVENGADAM : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் தனியார் உயர்நிலைப்பள்ளிகள் மாவட்ட வாரியாக எத்தனை இருக்கின்றன ?

(இ) சர்க்கார் உயர்நிலைப்பள்ளிகள் எத்தனை இருக்கின்றன ?

*A.*—A statement[a] is placed on the table of the House.

சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

III.—NO CONFIDENCE MOTION.

Mr. SPEAKER : I have received from the hon. Member, Sri K. A. Mathialagan, notice of a Motion under rule 55 of the Assembly Rules. The motion runs as follows :—

"That this House expresses its want of confidence in the Council of Ministers."

Under rule 55 of the Assembly Rules, I have permitted it.

I now request those hon. Members who are in favour of the leave being granted to the motion to rise in their places.

(Several Opposition Members stood up.)

I think the number of Hon. Members standing is more than twenty-one. So, leave is granted. Time will be allotted for that.

IV.—MOTION DISAPPROVING POLICY OF THE MINISTRY.

Mr. SPEAKER : I have received from the hon. Member, Sri M. Kalyanasundaram, notice of a motion under rule 55 of the Assembly Rules. The motion reads as follows :—

"This House disapproves the policy of the Ministry in respect of food crisis which had resulted in—

(*a*) shooting up of prices of all essential articles of life, very steeply ;

(*b*) hoarding and black-marketing by wholesale traders with the aid of "legal bank money" and "illegal black money"; and

(*c*) man-made scarcity of foodgrains and other vital articles of daily use, subjecting millions of people to unprecedented suffering.

[a] **Printed as Appendix V on pages 110–111 infra.**

[Mr. Speaker] [16th October 1964

The motion is in order. I now request those hon. Members who are in favour of leave being granted to the motion to rise in their places.

(Several Opposition Members stood up.)

I think the number of hon. Members standing is more than twenty-one. So, leave is granted.

With regard to the no confidence motion, I would like to bring to the notice of the House the following point :—

There is a convention that, when an hon. Member gives notice of a question or a motion, he should not give publicity to the same before the notice is admitted or disallowed and the matter is brought before the House.

In the present case, there was publication of the no-confidence motion in the newspapers. It is not necessary now to enquire as to who was responsible for the publicity. My only request to the hon. Members is that they should not give publicity before the matter is raised in the House. Otherwise, it will lose its charm and importance. This convention is followed in the Lok Sabha also. A ruling to that effect was given on 10th September 1963 in the Lok Sabha.

## V.—ADJOURNMENT MOTIONS.

### (1) FOOD SITUATION IN THE STATE.

MR. SPEAKER : I have received notice of the following adjournment motion from the hon. Member Sri Saw Ganesan :—

"மாநிலத்தில் நிலவும் உணவுப் பண்ட நெருக்கடி நிலையையும், அதனுல் மக்களுக்கு ஏற்பட்டுள்ள எல்லையற்ற துயரங்களையும், அதற்குக் காரணமான அரசாங்கத்தின் உணவுக் கொள்கையையும் பற்றிச் சிந்தித்து நல்ல வழி காண்பதைப் பற்றி விவாதிப்பதற்காக மன்றத்தின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்."

I think we can discuss it along with the other two motions.

**திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் கருத்து எதுவோ, அதை ஏற்றுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : May I take it as not pressed.

SRI SAW GANESAN : Yes, Sir.

**திரு. இராம. அரங்கண்ணல் :** நான் கொடுத்துள்ள ஒத்தி வைப்புப் பிரேரணை என்னவென்ருல். . . .

**கனம் சபாநாயகர் :** அந்த இரண்டு மோஷன்கள் வரும்பொழுது இதைப் பற்றிப் பேசலாமே.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தாங்கள் என்னுடைய பிரேரணையைப் படிக்கவில்லையாதலால், அதைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே இருக்கின்ற மக்கள் இன்றைய தினம்



16th October 1964] [திரு. இராம. அரங்கண்ணல்]

அரிசி கிடைக்காமல் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். அதிலும் குறிப்பாக சென்னை மாநகரத்தில் தினசரி மக்கள் க்யூ வரிசையில் நிற்கும் காட்சி மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதே நிலைமை பல நகரங்களிலும், எல்லா முனிசிபல் நகரங்களிலும் இன்றைய தினம் நிலவி வருகிறது. அதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்பதற்காக, தங்களுடைய அனுமதியை நான் கோருகிறேன்.

MR. SPEAKER : In view of the other two things, is the hon. Member pressing this?

**திரு. இராம. அரங்கண்ணல் :** தங்களுடைய விருப்பத்திற்கே விட்டுவிடுகிறேன்.

**கனம் சபாநாயகர் :** விருப்பத்திற்கே என்ருல், எப்படி? 'டிஸ்ஸலவ்' தான் செய்யவேண்டும்.

SRI RAMA. ARANGANNAL : I am not pressing it, Sir.

### (2) LOCATION OF SALEM-NEYVELI STEEL PLANT.

### (3) PROHIBITION OF PROCESSIONS NEAR THE ASSEMBLY.

**கனம் சபாநாயகர் :** அடுத்தது கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் கொடுத்திருக்கும் ஒத்திவைப்புப் பிரேரணைகள் . .

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருப்பவை இரண்டு இருக்கின்றன ஒன்று போலீஸ் தடை உத்தரவு பற்றியது; இன்னென்று சேலம் உருக்கு ஆலை பற்றியது. சேலம் உருக்காலை பற்றியது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குச் சம்பந்தமில்லாதது. சேலம் உருக்காலை பற்றி தஸ்தூர் ரிப்போர்ட் இப்பொழுது மத்திய சர்க்கார் கையில் இருக்கிறது. அதைப் பற்றிய விவரங்கள் என்ன என்பதெல்லாம் தெரியவில்லை . .

MR. SPEAKER : Would it come within the scope of an adjournment motion?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சேலம் உருக்காலை பற்றி ஒரு அவசரக் கேள்வி போட்டால், இயன்ற அளவு பதில் அளிக்க முயலுகிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** ஏற்கனவே கேள்வி கொடுத்திருக்கிறேன். அதை இன்னும் இரண்டொரு நாளில் பதிலுக்கு எடுத்துக் கொண்டால் போதும். அதற்கு சீக்கிரமாகவே பதிலளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது போலீஸ் தடை உத்தரவு பற்றியது. இந்தச் சபையை நோக்கி ஊர்வலமாகவோ, மற்றவகையிலோ யாரும் வரக்கூடாது என்று போலீஸ் கமிஷனர் உத்தரவு பிறப்பித்திருக்கிருர்கள்.

[16th October 1964

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, நிர்வாக சம்பந்தமாகப் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளைப் பற்றி அவசரப் பிரேரணைக்கு எடுத்துக் கொள்வது வழக்கமில்லை. போலீஸ் தன் கடமையை ஆற்றும் வகையில் நிலைமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அது அவசரப் பிரேரணைக்கு உரியதாக ஆகாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். வெளியிலிருப்பவர்களைத் தடுப்பதற்காகப் போடப்பட்ட உத்தரவுதான். உறுப்பினர்கள் நுழைவதைத் தடுத்திருந்தால் அதை பிரிவிலேஜ் மோஷனாகக் கொண்டுவரலாம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : உறுப்பினர்களைத் தடுக்கும் காலம் வரும் என்று நான் நினைக்கவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்**: உறுப்பினர்கள் இங்கே மறியல் செய்தால் அதையும் தடை செய்யவேண்டிவந்தால் தடை செய்துத் தான் ஆகவேண்டும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : இவ்வளவு வருஷ காலமாக அமைதியாக நடந்து வந்திருக்கிறது. மறியல் நடக்கும் என்று சொல்லி, பகிரங்கப் படுத்திவிட்டு, மறியல் செய்தகாலத்தில், அவர்களை இங்குவரை வரவிட்டு, மறியலும் செய்துவிட்டு அதன்பிறகு எடுத்திருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது விதித்திருக்கும் தடை உத்தரவு இந்தச் சபையின் கௌரவத்திற்கு ஹானி விளைவிப்பதாக இருக்கும் என்பதனால் அதைச் சொல்லுகிறேன். இதற்கு முன்பும் ஆர்ப்பாட்டங்கள் நடந்திருக்கின்றன. ஊர்வலங்கள் நடந்திருக்கின்றன. இன்றைக்கு சட்ட சபைக்கு வரும் ரஸ்தாக்கள் ஒரு மைலுக்கு தடைக்குள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

**கனம் சபாநாயகர்** : இங்கே நடக்கும் நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்கவேண்டும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : அதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். அப்படி பங்கம் வரும் என்று சபாநாயகர் ஏதாவது கம்ப்ளெயிண்ட் கொடுத்தார்களா? கனம் சபாநாயகரைக் கலந்தாலோசித்துச் செய்தார்களா? ஆகவேதான் இந்த விஷயத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Of course Government will consider it and take whatever action is necessary. Let there not be any disturbance to the proceedings of the House.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, அப்படிப்பட்ட தடை உத்தரவு ஒன்றும் சட்டசபைக்குள்ளே இல்லை. இங்கு மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்ளுகிறார்கள். வெளியிலே இருக்கிறவர்களும் இங்கே சபைக்கு வெளியே வந்து அங்கத்தினர்களைக் கலந்து பேச முடியும். அவரவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இங்கே சட்ட



16th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

சபை நடக்கும் போது வெளியிலே ஆர்ப்பாட்டம் செய்வது என்றால், அது இந்த மன்றத்தின் கௌரவத்திற்கு உரியது அல்ல. அம்மாதிரியான தவறுகள் சில இடங்களில் நடந்திருக்கின்றன ப்ரீஸிடெண்டுகள் இருக்கின்றன. வெளியிலே ஆர்ப்பாட்டம் செய்கிறவர்கள் உள்ளே நுழைகிறார்கள், உள்ளேயும் கலாட்டா செய்கிறார்கள். நடந்திருக்கிறது, பார்த்திருக்கிறோம். சில சமயங்களில் அங்கத்தினர்களும் கூட உள்ளே நுழையத் தடையாகப் போகிறது. ஆகவேதான் போலீசார் தன் கடமையை நடத்தியிருக்கிறார்கள். சட்டசபையின் வெளியே அமைதியை நிலைநாட்ட வேண்டியதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : ப்ரீஸிடெண்ட்ஸைப்பற்றிச் சொன்னார்கள். அப்பொழுது கனம் முதல் அமைச்சரும் டெல்லியில் இருந்தார்கள். நானும் டெல்லியில் இருந்தேன். பாராளுமன்றத்திற்கு எதிரில், ஒரு மேடையையே அமைத்து—அது அங்கே அனுமதிக்கப்பட்டிருக்கிறது—தாழ்த்தப்பட்டோர் லீக் ஒரு இயக்கத்தை நடத்தினார்கள் . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : ஒரிசா சட்டசபையிலே நடந்ததையும் பார்த்திருக்கிறோம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்**: நமக்கு வழிகாட்டி லோக் சபைதான். அங்கே சபைக்கு வெளியில் அவர்கள் கூட்டம்போட்டுப் பேசினார்கள். அது அனுமதிக்கப்பட்டது . . .

**கனம் சபாநாயகர்** : அங்கே கூட்டமா? அதை யார் கவனிப்பது? சபைக்குள்ளேயும் கூட்டம். வெளியேயும் கூட்டம் என்று கனம் அங்கத்தினர் சொல்கிறார்கள்?

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : அங்கே வெளியில் மேடையே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இங்கே சட்டசபை அங்கத்தினர்கள் கண்ணிலேயே படக்கூடாது என்ற வகையில் செய்திருக்கிறார்கள்.

**கனம் சபாநாயகர்** : கண்ணிலே பட்டாலும் சட்டசபை ப்ரொஸீடிங்ஸுக்கு டிஸ்டர்பன்ஸ் இல்லாமல் இருந்தால் சரி.

கல்வி பெறுவதற்கான பாஷையாக இருக்க வேண்டும், அரசாங்க அலுவல்களை நடத்துவதற்கு அதுவே நிரந்தரமாக இருக்க வேண்டும் என்கிற நிலையை நாம் எவ்வளவு காலம் அனுமதிக்கப் போகிறோம் என்பதை நாம் யோசிக்க வேண்டும். நமக்கு அரசியல் சட்டத்தைத் தயாரித்துக் கொடுத்தவர்கள் 15 வருஷ அவகாசம் போதுமென்று நினைத்தார்கள். அதன்படி நம்மைத் தயார் செய்துக் கொள்ளவில்லை என்பது தான் இந்தச் சட்டத்தின் மூலமாகத் தெரிகிறது. ஸி. ஆர். தாஸ் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலே, 15 வருஷ காலத்திற்குள் இந்த தேசத்திலுள்ள அத்தனைபேரும் கல்விஅறிவு பெற்று, இந்த தேசத்தின் பொது மொழி மூலமாக இந்த தேசத்தின் அலுவல்களை அதிகாரம் கொடுத்தால் நடத்திக் காட்ட முடியும் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு உதாரணமாக ஜப்பான் தேசத்தை அந்தப் பிரசங்கத்திலே குறிப்பிட்டார்கள். ஜப்பான் தேசம், தன்னுடைய கல்வித்துறையிலும், ஆட்சித்துறையிலும் 15 வருஷ காலத்திற்குள் தன்னுடைய சொந்த பாஷையைக் கொண்டு வர முடிந்தது என்றால், ஏன் நம்முடைய தேசத்திலும் அது சாத்தியமாக இருக்கக் கூடாது என்று அந்தக் காலத்திலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நினைவில் வைத்துக்கொண்டுதானோ என்னவோ, 15 வருஷ அவகாசம் போதுமென்று தீர்மானித்து, ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, அதனுடைய இடத்தை இந்தியாவின் பொதுமொழியான இந்திக்கு அளிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். இந்த 15 வருஷ கால தயாரிப்பு இந்தத் துறையிலே மாத்திரம் தயங்கிவிட்டது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், தென்னிந்தியப் பகுதியிலே வசிக்கிற நம்முடைய மக்கள் எப்பொழுது ஆங்கிலத்தை அகற்ற விரும்புகிறார்களோ, அதுவரையிலும் அது தொடர்ந்து இருப்பதற்கு நம்முடைய தேசத்தின் பெரும் தலைவர் பண்டித நேரு அவர்கள் வாக்களித்துள்ளார்கள். அதை ஒட்டி இந்த சுதந்திரம் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நடைமுறைக்காக அதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதிலே இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. உணர்ச்சி வசப்படாமல், நிதானமாக, இந்த தேசத்தின் கல்வி வளர்ச்சிக்கும், அரசாங்க நிர்வாகத்திற்கும் உதவியாக அமைவதற்கு நம்முடைய தாய் மொழியாகிய தமிழ் எவ்வளவு சீக்கிரத்தில் தகுதி அடையும், அந்தத் தகுதியைப் பெறுவதற்கு நாம் எவ்வாறு முயற்சி செய்கிறோம் என்பதைப் பார்க்கவேண்டும். அதே சமயத்தில், நாம் தனித் தமிழ் நரடாக இயங்க முடியாத காரணத்தினால், நாம் எல்லோரும் ஒரே தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வு ஏற்கெனவே ஏற்பட்டு விட்டதனால், இந்தத் தேசம் சிதறுண்டு போகாமலிருப்பதற்கு ஒரு பொது மொழியின் அவசியத்தை ஒப்புக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தப் பொது மொழி ஆங்கிலமாக இருக்கவேண்டும் என்பது ஒப்புக்கொள்ள முடியாத நிலை. ஆங்கிலம் ஒரு பெரிய பாஷை. உலக மொழியாக அது வேறு இடம் பெற்றுள்ளது. ஆனால் நம்முடைய தேசீய மொழி ஆங்கில மொழியாக வந்துவிடக் கூடாது என்பதை நான் எச்சரிக்க விரும்புகிறேன். பிராந்திய மொழியை வைத்துக்கொண்டே எல்லாவற்றையும் நடத்திக் கொள்





ளலாம் என்றாலும், பிராந்திய மொழியைத் தவிர வேறு ஒரு மொழி ஒப்புக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அது ஹிந்தி மொழியாகத்தான் இருக்க முடியும். அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. இந்த தேசத்தில் பெரும் பகுதியான மக்கள் ஹிந்தியை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஹிந்தி பேசுகிறார்கள். எங்களுக்கு ஹிந்தி தெரியாது என்ற நொண்டி வாதம் இனிமேல் பொருந்தாது மற்றொன்று, 'தென் பகுதியில், அத்தனை ராஜ்யங்களும், தமிழ்நாடு தவிர, மற்ற எல்லா ராச்சியங்களும், இந்தியைக் கட்டாயமாக ஏற்றுக்கொண்டு பயின்று வருகிறார்கள். ஆனால் நம் ராச்சியத்தில் சிலருடைய கிளர்ச்சிக்காக, பலருடைய விருப்பத்திற்கு மாறாக இந்தி கட்டாயபாடமாக இல்லாமல் இருக்கிறது. அப்படிக் கட்டாயபாடமாக இல்லாமலேயே நம் ராச்சியத்தில் தட்சிணபாரத இந்தி பிரசாரசபையின் முயற்சியால் கட்டாயம் இல்லாமலேயே நல்ல முறையில் இந்தி பரவி வருகிறது. அதோடு கூட சமீபத்தில் கல்வி திட்டத்திலே ஏற்படுத்தியிருக்கிற முக்கியத்துவத்தின் மூலமாக நல்ல பலன் இருக்கும் என்று நமபுகிறேன்.

இருந்த போதிலும் இதிலே இருக்கும் ஒன்றிரண்டு குறைபாடுகளை எடுத்துக் கூற விரும்புகிறேன். தமிழ் மொழியே போதனா மொழியாக, பயிற்சி மொழியாக; அலுவலக மொழியாக எல்லாத் துறையிலும் இருக்கவேண்டும் என்று எல்லோரும் அபிப்பிராயப் படுகிறார்கள். அது நியாயமும்கூட. ஆனால் அந்த அளவுக்கு தமிழுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்றால், இல்லை; ஆகவே அதற்கென்ன செய்ய வேண்டும் என்றால் அதுவரைக்கும் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த காலத்திற்குள் தமிழ் முன்னேற்றம் அடைந்து விடும் என்பது நம்பிக்கை.

இதிலே வேறொரு கருத்தும் இருக்கிறது. சில மொழி வல்லுநர்கள் சொல்கிறார்கள், தெரிந்ததைத் தெரிந்துகொள்ளத்தான் ஆங்கிலம் பிரயோசனப்படும், தெரியாததைத் தெரிந்துகொள்ள ஆங்கிலம் பிரயோசனம் இல்லை என்று. 'இன்வெண்டிவ் பாக்கல்டி ( ıfaculty ), கொடுப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம் அது ஒரு அந்நிய மொழியில் பயிற்சி பெருவதால் என்றும் சொல்லுகிறார்கள். நம் நாட்டிலே உள்ள பல்வேறு ராச்சியங்களிலும் பல நிபுணர்கள் இருக்கிறார்கள். விஞ்ஞானத் துறையில், கணக்கியல் துறையில் மற்ற பல்வேறு துறையில் அறிவாளிகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய ஆற்றல் எல்லாம் ஆங்கிலம் அந்நியமொழியாக இருப்பதால்தான் தடைப்படுகிறது என்று சொல்கிறார்கள். பொதுவாக உலகத்திலே கண்டுபிடிப்புப் பட்டியிலே உயர்ந்த நிலையை அடைய வேண்டுமானால் தமிழுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும், அதிகமாக அது வளர்ச்சி அடைய வேண்டும். முதலில் ஆங்கிலத்திற்கு 15 வருஷ காலம் என்று குறிப்பிட்டார்கள் அன்றைக்கு இருந்த நிலையில் நம் தலைவர்கள் அப்படி வரையறை செய்தார்கள். இப்பொழுது அது போதவில்லை என்று காலத்தை

நீடிக்க வேண்டும் என்று இந்தச் சட்டத்தைச் செய்கிறோம். அப்படிச் செய்யும் போது ஆங்கிலம் அப்படி எவ்வளவு நாட்களுக்கு நீடிக்கும் என்று சொல்லப்படவில்லை. தமிழ் வளர்ச்சிக்கு வேண்டிய காலம் அல்லது தமிழ் அறிவுத்திறன் கொடுக்கும் சக்தி ஏற்படும் வரை என்று எடுத்துக்கொள்வதா அல்லது நிரந்தரமாகவா என்று புரியவில்லை. ஆகவே ஒரு கால வரையறையை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். காலவரம்பிற்குள் வளர்ச்சி அடையவில்லை என்றால் அதை பின்னால் நீடித்துக்கொள்ளலாம். முன்பு ஆங்கிலத்திற்கு 15 ஆண்டுகள் என்று வைத்தார்கள். இப்பொழுது அதை நீடிக்கிறோம். அதே போல இப்பொழுதும் ஒரு காலவரம்பு கட்டுவதுதான் சாலச் சிறந்தது. ஆனால் அந்த காலவரம்பிற்குள் தமிழ் வளர்ச்சி அடைந்து விட்டாலும், ஆங்கிலம் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆங்கிலம் மட்டும் இன்றி; பிரெஞ்ச்; ரஷ்யன்; ஜப்பானீஸ் முதலிய பாஷைகளையும் நாம் படிக்க வேண்டும். ஆனால், அப்படிச் சொல்லும் போது அத்தனை பேருமே ஆங்கிலத்தைப் படிக்க வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆராய்ச்சியாளர்கள் மட்டும் படித்தால் போதாதா என்றும் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால், அது 'எஜுகேஷனல் வேஸ்ட்' ஆகப் போய்விடும். ஏற்கனவே நம் குழந்தைகளின் திறமையைப் பற்றித் தெரியும். ஆகவே ஆங்கிலத்தை நீடிப்பது ஆங்கிலத்தைக் காப்பாற்ற இல்லை, நம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேதான். ஆங்கிலத்திற்குத் தேவை இருக்கிறது என்றால், அந்த அளவுக்கு தமிழுக்கு வளர்ப்பின்மை. இருக்கிறது என்பதைத்தான் அது காட்டுகிறது. தமிழ் வளர்ப்பை உயர்த்த வேண்டும் என்றால் அது சுலபத்தில் முடியாத ஒன்று. ஊர்வலம் போகலாம், பொதுக் கூட்டங்கள் போடலாம்; ஆள் சேர்க்கலாம். ஆனால் வளர்ப்பை ஏற்படுத்த மட்டும் இயலாது. ஆகவே அந்த பெயில்யூரைப் பார்க்கிறோம். அதனால் ஆங்கிலத்தை நீடிக்க வேண்டும் என்று நம்மீது அந்த முத்திரையை அடித்துக் கொள்கிறோம். அதுவும் எதற்காக? விஞ்ஞானத்தை, ஆராய்ச்சி அறிவை வளர்க்க அல்ல, நிர்வாகத்தை நடத்த. ஆகவே இந்த சட்டம் அமுலாக்கப்படும்போது, இந்தி பொது மொழியாக வளர்வதைத் தடைபடுத்தும் வகையில் அமையாமல் அமுல்படுத்தப்படவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அது பொது மொழியாக அமைய அனுகூலமாக இருக்கும் வகையில் அமுலாக்கப்படவேண்டும். அதே சமயத்தில் நாம் தக்க பயிர்ச்சி பெறும் வரையில்தான் ஆங்கிலம் என்று ஒரு கால வரை செய்வதும் நல்லதே என்ற என் எண்ணத்தையும் தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன்:** அவைத் தலைவர் அவர்களே, ஆட்சியாளர்கள் கொண்டு வந்துள்ள இந்த சட்டத்தை, அவர்கள் கொண்டு வந்துள்ள நேரத்தைப் பார்க்கும் போது, ஆட்சியாளர்களுடைய நோக்கம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது. அரசியல் சட்டம் வந்த காலத்தில் 15 ஆண்டு காலத்தில் இந்தியைப் பரப்பிவிடலாம், இந்தியை தேசிய



மொழியாக்கிவிடலாம் என்று இருந்தார்கள். இப்பொழுது அப்படிச் செய்துவிட முடியாது என்று உணர்ந்து சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அப்படி உணர்ந்தவர்கள், 15 வருட காலத்தில் முடியாது என்று உணர்ந்திருக்கிறார்களா அல்லது என்றுமே முடியாது என்று உணர்ந்திருக்கிறார்களா என்பதனை உணர்த்த மறுத்திருக்கிறார்கள். நாங்கள் சொல்லுவது இந்தி மொழி எந்தக் காலத்திலும் தேசிய மொழியாக இருக்கும் நிலையை அடைய முடியாது என்பதுதான்; அதை அவர்கள் ஒப்புக்கொண்டு இந்த சட்டத்தை கொண்டுவந்திருந்தார்களென்றால் நலமாக இருந்திருக்கும். ஆனால் அந்தக் கருத்தை அவர்கள் ஒப்புக்கொள்ள முடியாத காரணத்தினால், இந்த மசோதாவை ஒரு இடைக்காலத்திற்கு வேண்டும் என்றுதான் கொண்டுவந்திருக்கிறார்கள். 1965-க்குப் பிறகு இந்தியைப் புகுத்த மத்திய அரசு நடவடிக்கைகள் எடுத்து அமுலாக்கிவருகிறது. அந்த சந்தர்ப்பத்தில் இந்த சட்டத்தைக் கொண்டு வருவது ஏமாற்றுகிற ஒன்றாகத்தான் இருக்கிறது. இந்தியை நுழைப்பதினால் தமிழ் அழிந்து போகும். இந்தியை நுழைக்கும் வரை ஆங்கிலத்தினுடைய தேவை இருக்கிறது என்று உணர்ந்து அப்படி இந்தி மொழி ஆட்சிமொழியாகும் வரை, அதுவரை ஆங்கிலம் எடுபிடி சிற்றாள் போல் பணியாற்றச் செய்யப்படும் ஒன்றாகத்தான் இது அமைகிறது. நாங்கள் சொல்வது இந்தி வந்தால் தமிழ் அழியும் என்பதுதான். அதைத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறோம். ஆனால் அதை அமைச்சர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அங்கே கருத்துக் குருடாக இருக்கிறது. அதை வலியுறுத்த முடியாது என்று உணருகிறார்கள். ஆனால், நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய பிறந்த நாள் விழா காரணமாக கேரள சர்க்காருக்கு ஒரு நல்ல பரிசை அளித்திருக்கிறார்கள். அது போன்ற ஒரு பரிசைத் தமிழகத்திற்கு அளிக்கக்கூடிய வகையில் 'எதிர்காலத்தில் இந்தி கூட இல்லை, தமிழ்தான் ஆட்சி மொழி' என்ற அளவிற்கு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பாரானால் பாராட்ட முடியும். ஆனால், நாங்கள் நன்றாக உணர்கிறோம்' அமைச்சருடைய இக்கட்டான நிலையை. அவருடைய உண்மையான நிலையை எங்களால் உணர முடிகிறது. இந்த மாநில முதலமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்கள் ஒரு செய்தியைக் கூறினார்கள் . . . 1–30 p.m.

• • • •

கம்ப இராமாயணப் பாடல் ஒன்றில் குறிப்பிட்டதுபோல, அந்த [illegible] உண்டாய்விடுமோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான் [illegible]தக் கொண்டு வராமலிருக்கிறார்கள். அவர்கள் சொல்லி வரு[illegible]கள். 'தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்புக்குத் தேவை [illegible] தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் பிசு பிச[illegible]விட்டது' என்று என்ன காரணத்தினாலோ சொல்கிறார்கள். போரா[illegible]ம் என்றால் முதல் அமைச்சர் அவர்கள் எதைக் கருதி கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இந்தி போராட்டம்

* Expunged as ordered by the Chair

என்று சொல்லிக்கொண்டு கடற்கரையில் எங்கோ கண் காணாத துறைகளில் மொழிப் பிரிவுக்குத் தீ வைப்பது போராட்டம் ஆய்விடுமா? இந்தி ஒழிக, தமிழ் வாழ்க' என்று சொல்லிவிட்டுச் சிறை போவது போராட்டம் ஆய்விடுமா? போராட்டம் என்றால், பாராளுமன்ற மண்டபத்திற்கு முன்னால் இந்தி மொழிப் பிரிவுக்குத் தீ வைக்க வேண்டும் . . .

• • • • •

அமைச்சர் அவர்கள், அதுதான் போராட்டம் என்று நினைப்பார்களானால் நாங்கள் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறோம், அது எங்களால் முடியாத காரியம். ஏனென்றால், கண்ணியம், கட்டுப்பாடு என்பதையே கருத்தாக உடைய தலைவரின்கீழ் 'நாங்கள் பணியாற்றுகின்றோம். அதன் காரணமாகத்தான் தமிழகத்தில் அவ்வாறு முடியவில்லை. மேசை மீதுள்ள இந்த மணல் வைத்துத் தைத்த பையை வீசி எறிவதற்கு எவ்வளவு நேரம் ஆகும்? முடியும். ஆனால், 'கூடாது' என்பதற்காக; அது தமிழனுடைய பண்பு அல்ல என்பதற்காகத்தான் நாங்கள் அமைதியான முறையில் போராட்டம் நடத்தி வருகிறோம்.

• • • •

எங்களுடைய வாதத்திற்கான சான்றுகளைப் பல முறை இந்த மன்றத்திலேயே தெளிவாக எத்தனையோ முறை எத்தனை வகையில் கூற முடியுமோ அத்தனை வகையில் கூறியிருக்கிறோம். ஆனால் அமைச்சர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்ற காரணத்திற்காகத்தான் மீண்டும் அதையே சொல்லாமல், நடத்த வேண்டிய முறையைப்பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறோம்.

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் சொல்கிற அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளாமல் மறுப்பதற்குள்ள உரிமை மற்றவர்களுக்கும் உண்டு அல்லவா?

**புலவர் கா. கோவிந்தன்:** ஆம். உண்டு.

**கனம் சபாநாயகர்:** அப்படியானால், கனம் அங்கத்தினர் இப்பொழுது பேசுகிற முறையில் பேசுவது கூடாது.

**புலவர் கா. கோவிந்தன்:** அத்தகைய போராட்டத்தை நாங்கள் நடத்தத் தயாராயில்லை. மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டும். எங்கோ ஆறாயிரம் மைல்களுக்கப்பால் பிறந்து இந்த நாட்டுக்கு வந்து இங்கே தமிழை வளர்த்து, தன்னுடைய நாட்டிலே தன்னுடைய கல்லறையின் மீது "Here lies a student of Tamil" (இங்கே ஒரு தமிழ் மாணவன் இறந்து கிடக்கிறான்) என்ற சொற்களைப் பொறிக்கச் செய்தான் என்கிற அளவுக்குப் பாராட்டைத் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட பாராட்டைப் பெறும் தமிழகத்தில் ஆளும் கட்சியில் இருக்கும் உறுப்பினர்களும் அமைச்சர்களும் தமிழ்மொழி வாழப் பாடுபடவேண்டும்.



***டாக்டர் பா. நடராஜன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை வரவேற்கின்ற அளவில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்புகிறேன். இதில் எதிர்ப்பதற்கோ ஆட்சேபிப்பதற்கோ என்ன இருக்கிறது என்பது எனக்கு விளங்கவில்லை. இப்பொழுது தமிழ் நம் மாநிலத்தில் ஆட்சி மொழியாக இருக்கின்றது. ஆங்கிலத்தையும் நாம் ஆட்சியிலே பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்தி தொடர் மொழி என்பதையும் நாம் ஒத்துக் கொண்டிருக்கிறோம். ஆங்கிலம் உலகத்திற்கும், இந்தி அகில இந்தியாவிற்கும், தமிழ் நமது மாநிலத்திற்குமாக நாம் உபயோகித்து வருகிறோம். இன்றிருக்கும் நிலைமையில், இந்த மசோதா எந்த வித மாறுதலையும் செய்யவில்லை. ஆகவே, இதில் 'தமிழ் அழிந்து விட்டது' என்றோ, அல்லது 'இந்தி வந்து விட்டது' என்றோ சொல்வதற்கு ஒன்றும் இல்லை. பிரச்சினை அது அல்ல. ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் பிரச்சினை. அதைவிட்டுவிட்டு, தமிழ் என்றும் இந்தி என்றும் பேசுவதற்குரிய பிரச்சினை ஒன்றும் இல்லை.

ஒன்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்ப் பற்றில் நாம் எல்லோரும் சிறந்தவர்களாக இருந்தாலும்கூட, நாம் ஒன்றை மறந்துவிடக் கூடாது. வேற்று மொழியினுடைய தொடர்பினால் தமிழ் வளர்ந்ததே தவிர, தமிழ் என்றும் அழிந்ததில்லை என்பதை வரலாறு நன்றாகக் கூறுகிறது. வட மொழி வந்ததினால் தமிழ் மொழி கெட்டது என்பது இல்லை. தாயுமானவர், அருணகிரிநாதர் போன்றவர்கள் அநேக நூல்களை வட மொழிப் பயிற்சியால் செய்திருக்கிறார்கள். அதனால் சந்த இலக்கியம் மிகச் சிறந்து விளங்கியது. தத்துவ சாஸ்திரங்கள், சைவ சித்தாந்தம் மற்றும் பற்பல வேதாந்தக் கருத்துக்களெல்லாம் வந்து தமிழ் இலக்கியத்தை மிகச் சிறக்கச் செய்தது. தமிழர்களுடைய வாழ்வையும் மிகச் சிறக்கச் செய்துள்ளது. அதே போன்று தெலுங்கு மொழித் தொடர்பினால் தமிழிசை மிகச் சிறப்புற்றது. பற்பல விதமாகத் தமிழ் வளர்ந்தது. ஆங்கிலம் வந்த பிறகுதான் தமிழினுடைய பெருமையை அதிகமாகத் தெரிந்து கொண்டோம். ஆங்கிலத் தொடர்பினால் ஆங்கிலப் பாதிரியார் ஜி. யு. போப் தமிழ் படித்து, தமது கல்லறை மீது, 'நான் தமிழ் மாணவன்' என்று பொறிக்கச் செய்து, தமிழின் பெருமையைச் சொன்ன பிறகுதான் நாம் தமிழின் பெருமையைத் தெரிந்துகொண்டோம். இன்றும், ஆங்கிலத்தில் 'ஃபைலாலஜி' என்று சொல்லக்கூடிய மொழி நூல் துறையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத் தொடர்பினால் ஏற்பட்ட, விஞ்ஞான முறையில் நடக்கின்ற [illegible]ய்ச்சினால் தமிழினுடைய வளர்ச்சியானது சிறந்துகொண்டே [illegible] இருக்கிறது. ஆகவே இன்னொரு மொழியினால் நம்முடைய [illegible] அழிந்துவிடும் என்ற வாதம் வரலாற்றுக்கு முற்றும் முரணானது. நாம் தமிழர்கள். நாம் ஒரு வளருகின்ற சமுதாயம். நமக்கு மற்றைய மாநிலங்களோடு தொடர்பு வேண்டும்.

* Expunged as ordered by the Chair.

அகில இந்தியாவில் நாம் தனி இடம் பெற வேண்டும். இப்போது பெற்று இருக்கிறோம். பெற்றிருக்கிற இடத்தை நாம் தொடர்ந்து வைத்துக் கொள்ள வேண்டும். உலகத்தில் இன்று ஏற்பட்டு வருகிற விஞ்ஞான வளர்ச்சியின் முழுப் பயனையும் பெறுகிற வாய்ப்பு நமக்கு இருக்க வேண்டும். ருஷ்யா போன்ற தேசங்களில் ஆங்கிலம் மிக்க அக்கறையோடு பயிலப்பட்டு வருகிறது. பயிற்றுவிக்கப்பட்டும் வருகிறது. ஆகவேதான் அவர்கள் விஞ்ஞானத் துறையில் அமெரிக்கர்களையும் வென்று இருக்கிறார்கள்.

குறிப்பாக, இந்த மசோதாவுக்கு இந்த அளவு ஏன் எதிர்ப்புக் காட்ட வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. எதையோ மனதில் வைத்துக் கொண்டு ஆங்கிலம் வேண்டாம், இந்தி வேண்டாம் என்று சொல்கிறார்களே தவிர, இந்த மசோதாவில் எதிர்ப்பதற்கு ஒன்றும் இல்லை. பதினான்கு மொழிகளும் தேசிய மொழி ஆகவேண்டும் என்று விரும்பின விரிந்த மனோபாவம் உடைய உறுப்பினர்கள் இப்போது ஆங்கிலம் கூடாது, இந்த மசோதா கூடாது என்று சொல்வது சற்றும் பொருத்தமாக இல்லை. இந்த நாட்டில் ஆங்கிலம் வேண்டும். ஆங்கிலம் போனால் அந்த இடத்திற்கு இந்தி வருமா என்பது வேறு விஷயம். ஆங்கிலத்திற்கும் இந்திக்கும் போட்டி இருப்பது போலத் தோன்றுகிற இப்போது ஆங்கிலமே வேண்டாம் என்கிறார்கள், இந்தி வெறியர்கள். நாமும் அதுபோல ஏதேதோ பேசி இந்த மசோதாவை எதிர்ப்பதில் அர்த்தம் இல்லை. அந்த வெறியர்களே ஆங்கிலம் வேண்டுமென்று சொல்லப் போகிறார்கள். எல்லா மொழிகளும், இந்தி உள்பட எல்லா மொழிகளும், தொடர்ந்து நம்முடைய மொழியை வளப்பம் தான் செய்யும்.

ஆங்கில நாட்டில் இருந்து வந்த பாதிரியார் இங்கே வந்து தமிழ் கற்று தமிழின் பெருமையைப் போற்றினார், அவரது சமாதியில், "நான் தமிழ் மாணவன்" என்று பொறிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அவர் ஆங்கிலேயர், தமிழை விரும்பினார். நாம் தமிழர் ஆங்கிலத்தை விரும்ப வேண்டாமா. அது தானே பரஸ்பர உறவு. கதே என்ற ஜெர்மானியக் கவிஞன் ஷேக்ஸ்பியரைப் பற்றிச் சொல்கிறான். ஷேக்ஸ்பியர் ஆங்கிலேயருக்கு மட்டும் உரியவரல்ல, ஜெர்மானியருக்கும் உரியவர், ஏன் உலகத்துக்கே உரியவர் என்கிறான். இந்த முறையில் நாம் ஆங்கிலத்தைக் கருத வேண்டும்.

தமிழ் உலக மொழிகளுள் ஒன்றாகப் பாராட்டப்பட வேண்டுமென்றால், அது ஏனைய மொழிகளோடு உறவு கொள்ள வேண்டும். இன்றையதினம் ஆங்கில மொழியின் தொடர்பினால் திருக்குறளும், கம்ப ராமாயணமும் ஆங்கில மொழி பெயர்ப்பில் வந்த பிறகு தான், பிற நாட்டவர்களும்கூட அவற்றைப் படித்துப் பாராட்ட ஆரம்பித்து இருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. இதன் காரணமாகத்தான், அமெரிக்க ரஷ்யப் பல்கலைக் கழகங்





களிலேயே தமிழுக்குத் தனி இடம் வந்துள்ளது. ஆகவே இந்தப் பிரச்சினையை வேறு அரசியல் பிரச்சினைகளோடு சேர்த்துக் குழப்பக் கூடாது. அரசியல் பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் நாம் வேறுபடலாம். ஆனால் மக்களைக் குழப்பக் கூடிய வகையில் மொழிச் சிக்கலைக் கொண்டு வந்து புகுத்தக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தமிழ் மக்களை நல்ல வழியில் செலுத்துவது நம் கடமை என்று சொல்லிக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. க. ர. நல்லசிவம்:** மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, சபை முன்பு வந்திருக்கும் இந்த மசோதாவை முழு மனதுடன் எதிர்க்கக் கூடியவன் நானாகத்தான் இருப்பேன் என்று நினைக்கிறேன். இந்த மசோதா 1965 ஜனவரி 26-ஆம் தேதிக்குப் பிறகும் ஆங்கிலம் தொடர்ந்து நிர்வாக மொழியாக நீடிப்பதற்கு வகை செய்கிறது. அப்படி ஆங்கிலம் அதிகார பூர்வமான மொழியாக இருக்க வேண்டுமா என்பது தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய கருத்து. இங்கே இந்தியைப் பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. மற்ற மற்ற மொழிகளில் தொடர்பினால் தான் தமிழ் வளர்ச்சி அடைய வேண்டுமென்று சொன்னால் அதை என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. ஒரு உண்மையை எல்லா அறிஞர்களும் ஒப்புக் கொள்வார்கள். இந்தச் சட்டசபையைப் பொறுத்த வரையில் சட்டத்தை ஆங்கிலத்தில் இயற்றக் கூடிய அளவிற்கு ஆங்கில அறிவு பெற்றவர்கள் எத்தனை பேர்? நான் இங்குள்ளவர்களை உயர்த்துவதற்கோ, தாழ்த்துவதற்கோ சொல்லவில்லை. இதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் நான் 12 ஆண்டு காலமாக சட்டசபையில் இருக்கிறேன். ஆங்கிலத்தில் ஏதோ வருகிறது, படிக்கிறேன், யாராவது பேசினாலும் புரிந்து கொள்கிறேன். ஆனால் எந்த அளவு தமிழில் திறமை பெற்று இருக்கிறேனோ அந்த அளவு ஆங்கிலத்தில் கிடையாது. ஒரு வேடிக்கையான நிலை என்னவென்றால் ஆங்கிலத்தில் மசோதாக்கள், மற்ற நிர்வாக அறிக்கைகள் எல்லாம் வருகின்றன. அவற்றில் தமிழ் மொழி பெயர்ப்பும் தரப்படுகிறது. ஆனால் தமிழில் வருவதை அதிகாரபூர்வமானதாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொல்கிறார்கள். மொழி பெயர்ப்பே கூடத் தவறாக இருக்கின்றன. இதைப் பற்றி நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆனால் எந்தவிதமான பதிலும் கிடையாது. அப்படி இருக்கிறபோது தமிழ் ராஜ்யத்தில் நிர்வாக மொழியாகத்தான் இருக்கிறதே என்று சொல்வதற்கு எங்கே இடம் இருக்கிறது? சட்டசபையில் அதற்குப் பரிபூரணமான ஸ்டேடஸ் இருக்கிறது என்று சொல்வதை யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். வேறு ஒரு மொழியின் ஆதிக்கியம் இருக்கிற வரையில் தமிழ் மொழி வளர்ச்சி அடைவதற்குச் சந்தர்ப்பம் கிடையாது. ஆகவே தான் தமிழ் நம்முடைய நிர்வாக மொழியாக, அதிகார பூர்வமான மொழியாக ஆகவேண்டும். 1965 ஜனவரி 26-க்கு மேலும் ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்ற இந்த மசோ

[திரு. க. ர. நல்லசிவம்] [16th October 1964

தாவுக்கு அவசியமே இல்லை. ஆங்கிலத்தைத் தனியாகப் படிப்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. நாம் சுதந்திரம் அடைந்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை இயற்றி ஏழு ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. இத்தனைக்கும் பின்னால் நாம் ஆங்கிலத்தை நம்பித்தான் வாழ வேண்டுமென்று வைத்துக் கொள்வது கேலிக்கு இடமானதாகும். இங்குள்ள கனம் அமைச்சர்களோ, மற்ற உறுப்பினர்களோ அப்படிச் சொல்லமாட்டார்கள். கம்பன் பிறந்த தமிழ் நாடு என்று புகழ்கிறோம். வான மளந்ததனைத்து மளந்திடு வண் மொழி என்று பெருமை கொள்கிறோம். ஆயினும் நம்முடைய தமிழ் மொழியைக் கொண்டே விஞ்ஞான அறிவைப் பெற முடியாது என்று நினைக்கிறார்களா? இதைப்பற்றி நாம் கொஞ்சம் சிந்திக்க வேண்டும். இதைச் சுற்றி வளைத்து பொதி மூட்டையாக்க நான் விரும்பவில்லை. எல்லா விஷயங்களையும் சேர்த்துக் குழப்புவதனால் பயனில்லை. இன்றைய தினம் சட்டசபை நடவடிக்கைகள் தமிழில் தாராளமாக நடைபெறலாம்.

எனது மதிப்புக்குரிய திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் இந்த மசோதாவை எதிர்ப்பார்களேயானால், நான் மனப்பூர்வமாக வரவேற்று வாழ்த்துத் தெரிவிப்பேன். இந்த மசோதாவை நான் ஒருவன் மட்டுமே எதிர்க்க வேண்டிய பரிதாபகரமான நிலைமை இப்போது இருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை இன்னும் எத்தனை ஆண்டு காலத்திற்கு ஆங்கிலத்தை வைத்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள்? இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பதிலே தெளிவில்லை. இது ஒரு பெரிய குழப்பத்திற்குத்தான் ஆதாரமாக இருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தெளிவாகக் கூறிவிடலாம். இன்னும் ஆங்கிலமும் வேண்டும்; இந்தியும் வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் என்ன? நம்முடைய சட்டசபையைப் பொறுத்த மட்டில் எல்லாக் காரியங்களுக்கும் ஆங்கிலத்தில்தான் நடக்கிறது. தமிழுக்கு ஏதோ பிச்சை போடுவதைப் போல் ஏதோ மொழி பெயர்ப்புகள்தான் தமிழில் வருகின்றன. நாம் ஆங்கிலத்தில்தான் சட்டம் செய்கிறோம். அதற்குத் திருத்தங்களை இந்த மன்றத்தில் கொடுக்கிறோம். ஆங்கிலத்திலே இயற்றப்பட்ட மசோதாவின் முழுக் கருத்தையும் அறிந்து திருத்தம் கொடுக்க தகுதி பெற்றவர்கள் இந்த மன்றத்திலே எத்தனை பேர் இருக்க முடியும். கனம் முதலமைச்சர் அவர்கள் 'இனி ஆங்கிலம் படித்தவர்கள்தான் தேர்தலில் நிற்கலாம்' என்று அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு ஏற்பாடு செய்தால் கூட நல்லது. தமிழ் நாட்டில் 100-க்கு 40 பேர் படித்தவர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டசபையிலே 100-க்கு 10 பேர் மட்டுமே சட்டத்தை ஆங்கிலத்தின் மூலமாக நன்றாக உணர முடியும் என்ற நிலைமையில் மற்றவர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சரிவரக் கூற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, நான் இந்த மசோதாவைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ் மொழி



16th October 1964] [திரு. க. ர. நல்லசிவம்]

யிலேயே சட்டங்கள் இயற்றப் படக்கூடிய நிலை இருந்தால் உறுப்பினர்கள் அனைவரும் தமிழிலேயே திருத்தங்கள் கொடுத்து நல்லபடி பணியாற்ற முடியும். இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக தமிழ் மொழிப் பற்றின் காரணமாக கடுமையாக எதிர்க்கிறேன் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. டி. கோசல்ராம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா அவசியம் என ஆதரித்துப் பேசுவதற்கு நான் முன் வந்திருக்கிறேன். இந்த மசோதாவை எதிர்த்துப் பேசிய நண்பர் ஒருவர் 'இந்தி வந்து விடும்; ஆங்கிலம் வேண்டாம்' என்று நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமாகச் சொன்னார். ஆனால் நண்பர் நல்லசிவம் அவர்கள் நேரடியாக இந்தி வேண்டுமென்று சொல்கிறார்; இவரை நான் பாராட்டுகிறேன். ஆனால் நம்முடைய எதிர்க்கட்சி நண்பர்கள் மறைமுகமாக இந்தி வேண்டுமென்று சொல்கிறார்களே தவிர, அவர்கள் தமிழை ஆதரிக்கவில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

நண்பர் நல்லசிவத்தைப் பாராட்டுகிறேன்; ஆனால் எதிர்க்கட்சி நண்பர் மறைமுகமாக இந்திதான் வரும் என்று பேசினார். தேசத்திற்கு ஒரு மொழி வேண்டும், நீங்கள் நினைக்கிற தேசம், நாடு வேறு; அது எப்போது வாங்குகிறீர்களோ அப்போது பார்த்துக் கொள்ளுங்கள். பாரத நாட்டில் நாம் 'தமிழில்' எழுதி அனுப்பினால் அங்கிருக்கும் இந்தி வெறியன் இந்தியில் வேண்டுமென்று சொல்வான்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** நண்பர் கோசல்ராம் அவர்கள் யார் பேசியதைக் குறிப்பிட்டுப் பேசுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கோசல்ராம்:** இங்கிருந்து தமிழிலே டில்லிக்கு எழுதினால் அவர்கள் புரிந்து கொள்ளுவார்கள் என்று சொல்லும் நேரத்தில் இங்கே ஒருவித வெறித் தன்மை இருக்கிறதே, அதே போன்று அங்கே இந்தி வெறியர்கள் இருக்கிறார்கள் என்பதை மறக்க முடியாது. இந்தச் சட்டம் வேண்டாமென்று சொன்னால் இந்திதான் வேண்டுமென்று சொல்வதற்கு ஒப்புமே தவிர, வேறு ஒன்றுமில்லை. ஆங்கிலம் வேண்டாமென்று சொல்வதன் அர்த்தம் அதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. நண்பர் வீரபாகு அவர்கள் பேசும்போது இதற்கு ஒரு காலவரையறை நிர்ணயிக்க வேண்டுமென்று சொன்னார்கள். தேசம் முழுமையும் தமிழ்நாடு தவிர மற்ற எல்லா ராஜ்யங்களிலும் இந்தி கட்டாயமாக வைக்கப்பட்டிருக்கிறது. அது சிந்திக்க வேண்டிய விஷயம். [illegible]க்காமல் இருக்க முடியாது. எவ்வளவு நாட்கள்தான் [illegible]லம் இருந்து கொண்டிருக்க முடியும் என்பது ஒரு பிரச்சினை. [illegible] ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இந்தியைக் [illegible]ட்டாயப் பாடமாக நல்ல இருதயத்தோடு ஆக்கினார் என்று [illegible]னைக்கிறேன். இப்போது 'கான்ட்ரவர்சி'யில் இருந்த போதிலும் அப்போது இந்தி மூலம்தான் அகில இந்தியத் தொடர்பு

[திரு. கே. டி. கோசல்ராம்] [16th October 1964

கொள்ள முடியும் என்று கட்டாயமாக்கினார். மக்களை எப்படி ஏமாற்றுவது என்ற நிலையிலே உள்ள அரசியல் வாதிகள் இளம் குழந்தைகள் மத்தியிலே இந்தப் பிரச்சினையைப் புகுத்த வேண்டாமென்பது என்னுடைய வேண்டுகோள். மற்ற விஷயங்களில் — அரிசி இல்லை சோறு இல்லை பொருளாதார ரீதியில் மக்களை இந்த அரசாங்கம் உயர்த்தவில்லை என்று வேண்டுமானால் சொல்லுங்கள் (ஆரவாரம்); நான் பல முறை வேண்டுமானாலும் சொல்லுகிறேன் மக்களுக்கு சுபிட்சத்தைக் கொண்டு வராத அரசாங்கம் ஒரு நாளும் இருக்க முடியாது (ஆரவாரம்). நண்பர்கள் இங்கே கை தட்டிப் பயன் இல்லை; நீங்கள் மக்களிடத்திலே போய் அவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமே தவிர இங்கே கை தட்டுவதாலே மக்களுடைய ஆதரவைப் பெற்றதாகக் கொள்ள முடியாது. ஏதோ 40 நகரத்திலே ஒரு நகரத்தை விட்டு விட்டோம் என்று சொன்னால் ஜனநாயகத்தில் அந்த நிலைமைதான் இருக்கும். அரசாங்கத்தைப் பொறுத்து மெஜாரிடி எங்கே இருக்கிறது என்று பாருங்கள். நண்பர்கள் இந்த மசோதாவை எதிர்க்கிறேன் என்று கூறுவதை விட இது வரவேண்டுமென்று சொல்லிவிட்டு உட்கார்ந்து விடலாம்; மறைமுகமாகச் சொல்லவேண்டாம் நேரடியாகச் சொல்லுங்கள் என்று கூறி இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

2-00 p.m. திரு. மு. கருணாநிதி : ஆன் எ பாயிண்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன், சார், கனம் அங்கத்தினர் கோசல்ராம் அவர்கள் இப்போது பேசியதிலிருந்து இந்த மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எதிர்த்தார்கள் என்ற அபிப்பிராயம் வெளிப்படுகிறது. அந்த அபிப்பிராயத்தை கனம் அங்கத்தினர் கோசல்ராம் அவர்கள் மாற்றிக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் கோவிந்தன் அவர்கள் இங்கிலீஷ் நிரந்தரமாக இருக்கவேண்டுமென்று சொன்னார்.

The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

## XI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 1. *Notification issued with G.O. No. 1356, Revenue, dated the 5th May 1964, amending rule 53 of the Madras General Sales Tax Rules. 1959, published with Revenue Department Notification S.R.O. No. A-1941, dated the 28th March 1959, at pages 232-280 of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the 1st April 1959. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]*



16th October 1964]

* 2. *Notification issued with G.O. Ms. No. 1295, Home, dated the 29th April 1964, amending the Madras Motor Vehicles Rules,* 1940, *published with Home Department Notification No. 357, dated the 29th March 1940, at pages 1 to 40 of the* Fort St. George Gazette *Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

* 3. *Notification issued with G.O. No. 1016, Revenue, dated the 2nd April 1964, exempting from sales tax, the sales by the Municipal Corporation of Madras, any Municipal Council, Panchayat Union Council, or Panchayat in the State of Madras to agriculturists and Agricultural Co-operative Societies of compost manure manufactured by it. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]*

* 4. *Notification issued with G.O. No. 836, Revenue, dated the 17th March 1964, exempting from the sales tax, the sale by Gramodyog Sales Depots the products of chekkus and hand oil presses by co-operative societies of oil producers formed of owners of country oil chekkus or hand oil presses. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]*

* 5. *Notification issued with G.O. Ms. No. 836, Public (Services-A), dated the 2nd May 1964, amending the Madras Public Service Commission Regulations, 1954, published with Public (Services) Department Notification No. 50, dated the 5th May 1954, at pages 759 to 768 of Part I of the* Fort St. George Gazette, *dated the 9th June 1964. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]*

* 6. *Notification issued with G.O. Ms. No. 885, Food and Agriculture, dated the 18th March 1964, appointing the date of publication of this Notification in the* Fort St. George Gazette, *as the date on which the Madras Khadi and Village Industries Board Act shall come into force in the territories specified in the Second Schedule to the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959 (Central Act 56 of 1959). [Laid on the Table of the House under section 29 (3) of the Madras Khadi and Village Industries Board Act, 1959 (Madras Act 18 of 1959).]*

* 7. *Notification issued with G.O. No. 387, Revenue, dated the 17th February 1964, amending the Madras General Sales Tax Rules, 1959, published with Revenue Department Notification S.R.O. No. A-1941, dated the 28th March 1959, at pages 232-280 of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated 1st April 1959. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales tax Act, 1959 (Madras Act I of 1959).]*

[16th October 1964

* 8. *Notification issued with G.O. Ms. No.* 1700, *Food and Agriculture, dated the 30th May* 1964, *notifying the market areas to markets at Palladam and Dharapuram in Coimbatore district under the Madras Agricultural Produce Markets Act*, 1959. [*Laid on the Table of the House under sub-section* (4) *of section* 29 *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

* 9. *Notification issued with G.O. No.* 906, *Revenue, dated the 24th March* 1964, *amending the Madras Entertainments Tax Rules*, 1939 *as subsequently amended.* [*Laid on the Table of the House under sub-section* (4) *of section* 16 *of the Madras Entertainments Tax Act*, 1939 (*Madras Act X of* 1939).]

*10. *Notification issued with G.O. No.* 734, *Revenue, dated the 9th March* 1964 *amending the Madras Entertainments Tax Rules*, 1939, *as subsequently amended.* [*Laid on the Table of the House under sub-section* (4) *of section* 16 *of the Madras Entertainments Tax Act*, 1939 (*Madras Act X of* 1939).]

* 11. *Notification issued with G.O. Ms. No.* 3379, *Industries, Labour and Co-operation, dated 2nd July* 1964 *publishing the Rules under the Madras Chit Funds Act*, 1961 (*Madras Act* 24 *of* 1961). [*Laid on the Table of the House under section* 63 (4) *of the Madras Chit Funds Act*, 1961 (*Madras Act* 24 *of* 1961).]

* 12. *Notification issued with G.O. Ms. No.* 705, *Public (Services-A), dated 15th April* 1964 *amending the Madras Public Service Commission Regulations*, 1954 *regarding redesignation of post of the Production Assistant, Factory for Crushing quartz and limestone at Salem.* [*Laid on the Table of the House under Article* 320 (5) *of the Constitution of India*).]

* 13. *Notification issued with G.O. Ms. No.* 1698, *Revenue, dated 23rd June* 1964 *amending the Revenue Department Notification No.* 253, *dated the 20th August* 1954, *published at page* 1149 *of Part I of the* Fort St. George Gazette, *dated the 25th August* 1954. [*Laid on the Table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

* 14. *Notification issued with G.O. Ms. No.* 1697, *Revenue, dated 23rd June* 1964 *amending the Revenue Department Notification No.* 253, *dated the 20th August* 1954, *published at page* 1149 *of Part I of the* Fort St. George Gazette, *dated the 25th August* 1954. [*Laid on the Table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1949).]

* 15. *Notification issued with the Additional Development Commissioner's ROC No.* 52566/63 *F5, dated 24th March* 1964 *extending the provisions of the Madras District Municipalities Act*, 1920 *and the rules made thereunder to the areas within the jurisdiction of the Nilakottai Town Panchayat in Nilakottai taluk of Madurai*



16th October 1964]

*district with effect from* 1st *May* 1964. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 16. *Notification issued with the Additional Development Commissioner's ROC No.* 108907/61-F5, *dated 22nd March* 1964 *extending provisions of the Madras District Municipalities Act*, 1920 *and the rules made thereunder to the area within the jurisdiction of the Sankarankoil Panchayat in Sankarankoil taluk of Tirunelveli district with effect from* 1st *May* 1964. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 17. *Notification issued with G.O. Ms. No.* 1584, *Food and Agriculture, dated 15th May* 1964 *amending Rule* 32 *of the Madras Agricultural Produce Markets Rules*, 1962. [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

* 18. *Notification issued with G.O. Ms. No.* 1190, *Revenue, dated 24th April* 1964 *creating the border and checkposts in certain places under section* 42 (1) *of the Madras General Sales Tax Act*, 1959. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act*, 1959 (*Madras Act* 1 *of* 1959).]

* 19. *Notification issued with G.O. Ms. No.* 1319, *Home, dated 30th April* 1964 *amending the Madras Vinegar Manufactories (Establishment, Working and Supervision) Rules*, 1949 *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act*, 1937 (*Madras Act X of* 1937).]

* 20. *Notification issued with G.O. Ms. No.* 1551, *Home, dated 15th May* 1964, *continuing for another year in collecting the quarterly tax at reduced rate in respect of Luxury Coach MDE* 2975 *belonging to Anjaneya Motor Transports (Private), Limited, Erode in so far as the said vehicle is used for tourist purposes.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

* 21. *Notification issued with G.O. Ms. No.* 1318, *Home, dated 30th April* 1964 *amending the Madras Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules*, 1959 *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act*, 1937 (*Madras Act X of* 1937).]

* 22. *Notification issued with G.O. Ms. No.* 3671, *Food and Agriculture, dated 19th December* 1963, *reconstituting the Madras Land Improvement Board consisting of non-official members for a period of three years from* 1st *December* 1963. [*Laid on the Table of the House under section* 44 (3) *of the Madras Land Improvement Schemes Act*, 1959 (*Madras Act* 31 *of* 1959).]

[16th October 1964

* 23. *Notification issued with G.O. Ms. No.* 1715, *Revenue, dated 25th June* 1964 *amending the Revenue Department Notification No.* 280, *dated the 1st September* 1951, *published at pages* 1–14 *of Part I of the* Fort St. George Gazette *Extraordinary, dated the 7th September* 1951. [*Laid on the Table of the House under section* 67 (4) *of the Madras Estates Abolition and Conversion into Ryotwari Act,* 1948 (*Madras Act XXVI of* 1948).]

* 24 *Notification issued with G.O. Ms. No.* 1555, *Revenue, dated 4th June* 1964, *exempting Sri Subramaniaswami Temple* (*Utsavar temple*), *Poonamallee High Road, Aminjikarai, Madras, from the provisions of section* 92 *of the Madras Hindu Religious and Charitable Endowments Act,* 1959 (*Madras Act* 22 *of* 1959). [*Laid on the Table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act,* 1959 (*Madras Act* 22 *of* 1959).]

* 25. *Notification issued with G.O. Ms. No.* 1617, *Revenue, dated 11th June* 1964, *appointing Sri K. Somasundaram Pillai, No.* 7, *Pillaimar Mela street, Perumalpatti, Srivilliputhur, as a Member of the Area Committee, Ramanathapuram, as Sri N. B. Sivagaminatha Pillai has ceased to be a Member under section* 16 (5) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act,* 1959. [*Laid on the Table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act,* 1959 (*Madras Act* 22 *of* 1959).]

* 26. *Notification issued with G.O. Ms. No.* 2320, *Food and Agriculture, dated 5th August* 1964, *appointing Sri G. Venkatachalapathy, Government Estate, Mount Road, Madras as a non-official member of the Madras State Khadi and Village Industries Board in the place of Additional Secretary to Government, Rural Development and Local Administration Department.* [*Laid on the Table of the House under section* 29 (3) *of the Madras Khadi and Village Industries Board Act,* 1959 (*Madras Act* 18 *of* 1959).]

* 27. *Notification issued with G.O. Ms. No.* 1752, *Home, dated 3rd June* 1964 *amending Rule* 8 (*b*) *of the Madras Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules,* 1959, *as subsequently amended.* [*Laid on the Table of the House under Section* 54 (3) *of the Madras Prohibition Act,* 1937 (*Madras Act X of* 1937).]

† 28. *The Madras General Sales Tax (Special Provisions) Amendment Ordinance,* 1964 (*Madras Ordinance No.* 1 *of* 1964). [*Laid on the Table of the House in pursuance of Article* 213 (2) (*a*) *of the Constitution of India*).]

‡ 29. *Notification issued with G.O. Ms. No.* 941, *Public (Services-A). dated 21st May* 1964, *amending the Madras Public Service Commission Regulations,* 1954, *regarding inclusion within Commission's purview the post of Statistical Assistants under the Madras Agricultural Subordinate Service.* [*Laid on the Table of the House under Article* 320 (5) *of the Constitution of India*).]



16th October 1964]

‡ 30. *Notification issued with G.O. Ms. No.* 1517, *Home, dated 30th April* 1964, *amending the Madras Denatured Spirit, Methyl Alcohol and Varnish (French Polish) Rules,* 1959, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act,* 1937 (*Madras Act X of* 1937).]

‡ 31. *Notification issued with G.O. Ms. No.* 1064, *Food and Agriculture, dated 31st March* 1964, *regulating the trade in turmeric in Coimbatore district under the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959). [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]

‡ 32. *Notification issued with G.O. Ms. No.* 1052, *Food and Agriculture, dated 30th March* 1964, *regarding market area and notified market area at Virudhunagar, Rajapalayam and Sattur in Ramanathapuram district for the purposes of the Madras Agricultural Produce Markets Act,* 1959. [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]

‡ 33. *Notification issued with G.O. Ms. No.* 1535, *Health, dated 8th July* 1964, *amending the Madras Legislature (Medical Attendance and Treatment) Rules, regarding free medical attendance to Deputy Speaker, Deputy Chairman and Members of their families.* [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Madras Payment of Salaries and Removal of Disqualifications Act,* 1951 (*Madras Act XX of* 1951).]

‡ 34. *Notification issued with G.O. Ms. No.* 1739, *Food and Agriculture, dated 2nd June* 1964, *amending the rules for the management of Toda Patta lands on the Nilgiris published with Notification No.* 170, *dated the 11th April* 1893, *at pages* 399–402 *of Part I of the* Fort St. George Gazette. [*Laid on the Table of the House under section* 64-*A of the Madras Forest Act,* 1882 (*Madras Act V of* 1882).]

‡ 35. *Notification issued with G.O. Ms. No.* 546, *Home, dated 26th February* 1964, *exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act,* 1931, *vehicle bearing Registration No. MSV* 5730 *belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Additional Development Commissioner, Rural Development and Local Administration Department, Madras.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

‡ 36. *Notification issued with G.O. Ms. No.* 1176, *Home, dated 28th April* 1964, *continuing for another year with effect from 22nd March* 1964 *in collecting quarterly tax at reduced rate in respect of the luxury coach bearing Registration No. MDE*/2090, *belonging to the Anamallais Bus Transport (Private) Limited, Pollachi.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

[16th October 1964

‡ 37. *Notification issued with G.O. Ms. No.* 1609, *Home, dated 21st May* 1964, *collecting the quarterly tax at reduced rate under the Madras Motor Vehicles Taxation Act,* 1931, *in respect of the luxury coach bearing Registration No. MDR* 2921, *belonging to Sri Meenambikai Transport, Aruppukkottai.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

‡ 38. *Notification issued with G.O. Ms. No.* 840, *Rural Development and Local Administration, dated* 6th *April* 1964, *declaring Rekkiripatti hamlet of No.* 9. *Pottapatti village, Melur taluk, Madurai district, as a "Gramdan Village" under the Madras Bhoodan Yagna Act,* 1958. [*Laid on the Table of the House under section* 28 (3) *of the Madras Bhoodan Yagna Act,* 1958 (*Madras Act XV of* 1958).]

‡ 39. *Notification issued with G.O. No.* 973, *Revenue, dated* 30*th March* 1964, *amending the Madras General Sales Tax Rules,* 1959, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act,* 1959 (*Madras Act I of* 1959).]

‡ 40. *Notification issued with G.O. Ms. No.* 1926, *Revenue, dated* 20*th July* 1964, *appointing Sri R. K. Mariappa Thevar, "Ramalinga Vilas", Maravakkadu, Pattukkottai taluk, Thanjavur district, as a Member of the Area Committee, Thanjavur.* [*Laid on the Table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act,* 1959 (*Madras Act* 22 *of* 1959).]

‡ 41. *Notification issued with G.O. Ms. No.* 1061, *Food and Agriculture, dated* 31*st March* 1964, *directing the Ramanathapuram Market Committee to establish a regulated market for the purchase and sale of cotton, groundnut and chillies at Kamuthi in Ramanathapuram district.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]

‡ 42. *Notification issued with G.O. Ms. No.* 1708, *Food and Agriculture, dated* 30*th May* 1964, *declaring the market area and notified market areas to the Market at Paramakudi in Ramanathapuram district.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]

‡ 43. *Notification issued with G.O. Ms. No.* 1931, *Food and Agriculture, dated* 23*rd June* 1964, *directing the North Arcot Market Committee to establish markets and to provide facilities for the purchase and sale of paddy at Vellore, Tiruvannamalai, Arni, Tirupattur, Wandiwash, Chetput, Cheyyar, Chengam, Gudiyattam, Arkonam, Vaniyambadi and Arcot in the North Arcot district.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]



16th October 1964]

‡ 44. *Notification issued with G.O. Ms. No.* 1062. *Food and Agriculture, dated* 31*st March* 1964, *regarding market area and notified market areas to the market at Pennadam in South Arcot district.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]

‡ 45. *Notification issued with G.O. Ms. No.* 1143, *Food and Agriculture, dated* 7*th April* 1964, *declaring market area and notified market area to the regulated market at Annur in Coimbatore district.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]

‡ 46. *Notification issued with G.O. Ms. No.* 1432, *Home, dated* 6*th May* 1964, *amending rule* 28 *of the Madras Motor Vehicles Rules,* 1940, *in so far as it relates to the intimation of loss by destruction of driving licence and application for duplicate driving licence.* [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act,* 1939 (*Central Act IV of* 1939).]

‡ 47. *Notification issued with G.O. Ms. No.* 3554, *Industries, Labour and Co-operation (Labour), dated* 14*th July* 1964, *exempting from the licensing provisions of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act,* 1958, *the Houses in the Tirunelveli district where women are employed for manufacturing beedies.* [*Laid on the Table of the House under section* 41 (3) *of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act,* 1958 (*Madras Act XXXII of* 1958).]

‡ 48. *Notification issued with G.O. Ms. No.* 894, *Home, dated* 26*th March* 1964, *cancelling the Home Department Notification S.R.O. No. A*-974 *of* 1960, *dated the* 11*th January* 1960, *published at page* 232 *of Part I of the* Fort St. George Gazette, *dated the* 17*th January* 1960. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931. (*Madras Act III of* 1931).]

‡ 49. *Notification issued with G.O. Ms. No.* 1840, *Home, dated* 12*th June* 1964, *exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act,* 1931, *vehicle bearing registration No. MDF* 3296 *belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Medical Officer, South Arcot.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

‡ 50. *Notification issued with G.O. Ms. No.* 1787, *Health, dated* 5*th August* 1964, *regarding application of the provisions of the Madras Nurses and Midwives Act,* 1926 (*Madras Act III of* 1926) *as amended from time to time, to the Nurses and Midwives registered under sub-section* (2) *of section* 5 *of the said Act prior*

*to its amendment. [Laid on the Table of the House under section* 11 (3) *of the Madras Nurses and Midwives Act*, 1926 (*Madras Act III of* 1926).]

‡ 51. *Notification issued with G.O. Ms. No.* 2142, *Home, dated 7th July* 1964, *amending rule* 9 *of the Madras Motor Accidents Claims Tribunal Rules*, 1961, *in so far as it relates to the appearance of legal practitioner. [Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

‡ 52. *Notification issued with G.O. Ms. No.* 1513, *Food and Agriculture, dated 6th May* 1964, *declaring the Market Area and notified market area to the regulated Markets at Tiruvarur and Papanasam in Thanjavur district. [Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

‡ 53. *Notification issued with G.O. Ms. No.* 1514, *Food and Agriculture, dated 6th May* 1964, *regulating trade in chillies, under the Madras Agricultural Produce Markets Act*, 1959, *in North Arcot district. [Laid on the Table of the House, under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

‡ 54. *Notification issued with G.O. Ms. No.* 1478, *Food and Agriculture, dated 1st May* 1964, *regulating trade in cashewnut under the Madras Agricultural Produce Markets Act*, 1959, *in Thanjavur district. [Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

‡ 55. *Notification issued with G.O. Ms. No.* 1052, *Food and Agriculture, dated 30th March* 1964, *regulating trade in paddy and groundnut under the Madras Agricultural Produce Markets Act*, 1959 *in Tirunelveli district. [Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

‡ 56. *Notification issued with G.O. Ms. No.* 1727, *Food and Agriculture, dated 1st June* 1964, *directing the Tirunelveli Market Committee to establish markets for the purchase and sale of cotton and chillies at Kalugumalai in Tirunelveli. [Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

‡ 57. *Notification issued with G.O. Ms No.* 1512, *Revenue, dated 30th May* 1964, *amending Rules* 17, 18 *and Form I of the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Rules*, 1962 *as subsequently amended. [Laid on the Table of the House under section* 61 (2) *of the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act*, 1961 (*Madras Act* 57 *of* 1961).]



‡ 58. *Notification issued with G.O. Ms. No.* 2023, *Home, dated 29th June* 1964, *amending the Home Department Notification II*-1 *No.* 5270 *of* 1961, *dated the 20th October* 1961, *published at page* 1814 *of Part II—Section* 1 *of* Fort St. George Gazette, *dated the 29th November* 1961, *regarding refund under the Madras Court Fees and Suits Valuation Act*, 1955. [*Laid on the Table of the House under Section* 82 (2) *of the Madras Court Fees and suits Valuation Act*, 1955 (*Madras Act XIV of* 1955).]

‡ 59. *Notification issued by the Additional Development Commissioner in Roc. No.* 23358/63-F-3, *dated 5th June* 1964, *revising the jurisdiction of the Ayan Singampatti, Zamin Singampatti, Aladiyur Panchayats in Ambasamudram taluk of Tirunelveli district. [Laid on the Table of the House under Section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

‡ 60. *Notification issued with G.O. Ms. No.* 3722, *Industries, Labour and Co-operation (Co-operation), dated 24th July* 1964, *framing rule regarding inclusion of tamarind seeds in the Schedule to the Madras Warehouses Act*, 1951. [*Laid on the Table of the House under Section* 27 (3) *of the Madras Warehouses Act*, 1951 (*Madras Act XV of* 1951).]

‡ 61. *Notification issued with G.O. Ms. No.* 1973, *Revenue, dated 28th July* 1964, *cancelling the Revenue Department Notification II*-1 *No.* 374 *of* 1961, *dated the 25th January* 1961, *appointing the date on which certain provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948, *came into force in the Alagiyanayakipuram inam estate in Pattukkottai taluk. Tenants' Protection Rules*, 1955, *as subsequently amended.* [Laid *Section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948.)]

‡ 62. *Notification issued with G.O. Ms. No.* 1551, *Revenue, dated 4th June* 1964, *amending Rule* 3 *of the Madras Cultivating Tenants Protection Rules*, 1955, *as subsequently amended. [Laid on the Table of the House under Section* 7 (2) *of the Madras Cultivating Tenants' Protection Act*, 1955 (*Madras Act XXV of* 1955).]

| 19 This Conference expresses its gratification at the directive issued by the Central Government for the reservation of certain percentage in services for the Backward Classes and requests all the Corporations to implement the same as early as possible. | This has been commended to the Corporation of Madras. |

| Serial number, resolutions and recommendations (1) | Action taken. (2) |
|---|---|
| 20 This Conference is of opinion that the beggar problem has become a ve y formidable one in all the States in India and in order that it is tackled effectively, the State Governmen s should be requested to allocate sufficient funds for the Corporations to open Beggar Homes and to take such other suitable measures as may be nécessary to prevent beggary in the cities. | This Government formulated a scheme for the eradication of beggar nuisance in large towns and tourist centres in the districts by which "Special Homes" for infirm, diseased and disabled beggars and "Work Houses" for able bodied beggars will be established by the local bodies and run with the assistance of Government gran . No furthe action is proposed on this recommendation by this Government. |
| 21 In view of the fact that untouchability has been abolished under the Constitution of India and further the fact that no person other than the one belonging to the class of untouchables is prepared to work as sweepers and scavengers and the drainage workers doing unclean work and the fact that their social welfare should be the concern of the State, it was resolved that the Municipal Corporations should make special provisions for the upl ftment of persons carrying out such unclean work by methods amongst others— | |
| (i) Requesting the Government to appoint an All-India Committee to investigate into the service conditions and the general amenities available to them. | This is a matter for the Government of India. |
| ii) Making their work humane and by establishing hostels for their children and also making provision for the employment of their children in clean type of work and by providing them with housing accommodation and study rooms for children and such other amenities as would ensure a higher standard of life for the rising generation so far as the sweepers, drainage cleaners, etc., are concerned. | The amelioration of the service and living conditions of sanitary workers has been taken up by Government. |

138009
D V21',31'N64 N64.4

## RESOLUTIONS PASSED AT THE SECOND CONFERENCE OF ALL-INDIA MUNICIPAL CORPORATIONS HELD AT BOMBAY DURING 1961.

| Serial number, resolutions and recommendations. (1) | Action taken. (2) |
|---|---|
| RESOLUTION No. 1. | |
| 1 The Conference having considered the report of the sub-committee appointed by it to review the résolutions passed in June 1959 Conference of Mayors reiterated resolutions Nos. 4 and 9 of the June 1959 Conference. | *Resolution No. 4 of June 1959 Conference—Contribution by Government towards expenditure incurred by Corporation on the supply of Mid-day meals to Primary School Children*—The Government of India were informed that no grant would be sanctioned by this Government towards the expenditure incurred by the Corporation on the supply of mid-day meals in the Corporation Elementary Schools. <br> *Resolution No. 9 of June 1959 Conference—Contribution to Local Government Service Fund.*—This resolution will not apply to the Corporation of Madras. |
| The Conference, having further considered Resolution No. 15 of the 1st Conference of All-India Mayors, regrets that the Central Council of Local Self-Government has not approved of the said resolution in regard to the desirability of giving effective powers to Mayors to control executive functions of the Commissioner. While it is not the intention of this Conference for the present generally to encroach upon the powers of the chief executive it is essential that some immediate changes be brought about in the present state of affairs under which the Mayors are almost figureheads without having any powers to fulfil the aspirations of the citizens they represent. | The Mayor has been given wider powers under the Madras City Municipal (Amendment) Act, 1961. |

| Serial number, resolutions and recommendations. (1) | Action taken. (2) |
|---|---|
| **Resolution No. 1—cont.** | |
| For instance, the establishment of an Appellate Authority over the executive of the Corporation by vesting powers in the Mayor and the Chairman of the Statutory Committees to hear appeals from decisions taken in matters involving discretionary powers exercised by the Executives with a view to ensure that no injustice takes place in redressing civic grievances, will serve the purpose to some extent. In the circumstances this Appellate Authority may also be vested with powers to decide upon priority for execution of works and development schemes together with such other matters which might involve exercise of discretion in dealing with civic grievances. | In the Corporation of Madras, the Circle Committees constituted under the Act are the bodies vested with statutory powers to deal with matters relating to the civic grievances and the appellate authority is the Council of the Corporation. Hence this suggestion will not apply to the Corporation of Madras. |
| **Resolution No. 2.** | |
| 2 This Conference of Corporations having discussed the question of Town-Planning in Corporation areas and for having Interim Plans pending preparation of Master Plans is of the view that for the purpose of ensuring proper development of the Corporation areas, the early enactment of Town-Planning Legislation by all State Governments is necessary. To enable Corporations to study this problem and give their suggestions copies of the Model Town-Planning Act prepared by the Ministry of Health may be sent to all Corporations in India. | The suggestion to adopt a Model Town-Planning Act prepared by the Government of India is under consideration of this Government. |
| This Conference is also of the view that for the purpose of collecting factual information on the present position in Corporation areas in this regard, a small sub-committee of Commissioners of the following Corporations (1) Bombay, (2) Delhi, (3) Hyderabad, (4) Kanpur and (5) Bangalore in association with the Chairman, Central Regional and Urban Planning Organisation should summarise the position at present. | No action is called for by the Government. |
| **Resolution No. 3.** | |
| 3 This Conference appreciates the importance of a national campaign for the eradication of smallpox and welcomes the steps being taken for its implementation. This conference requests the Corporations to co-operate fully in this campaign. The Conference recommends that re-vaccination may be made compulsory by law. | The Corporation of Madras has already launched the Smallpox Eradication Programme in the city of Madras. The re-vaccinations are being done in the city compulsorily by this Corporation under bye-laws framed under Section 349 (20) of the Madras City Municipal Act, 1919. |
| **Resolution No. 4.** | |
| 4 The Conference having discussed the problem of beggars, request State Governments to take steps by legislation or otherwise to deal with the problem of vagrancy and beggary. It also urges on Corporations to take necessary supplementary steps in the matter for their respective areas. | The question of amending the Madras Prevention of Begging Act, 1945, so as to make it more comprehensive and more effective in eradicating the evil of beggary from this State is under consideration of this Government. There is however no proposal to provide for restricting the movement of beggars from one place to another. |
| **Resolution No. 5.** | |
| 5 The Conference having discussed the problems faced by tourists recommends that the Corporations may take such steps as they can to improve facilities for tourists in their areas. The Conference suggests that Corporations may publish brochures giving | This Government are taking necessary action for encouraging the tourist traffic in India and no action is called for in the matter by the Corporation of Madras. |

| Serial number, resolutions and recommendations. (1) | Action taken. (2) |
|---|---|
| **Resolution No. 5—*cont.*** | |
| information of tourist interest. The Conference is of the view that it will be useful if small advisory committees are set up in all importan Corporation areas of tourist interest. The Mayors of the respective areas should be associated with such committees. | |
| **Resolution No. 6.** | |
| 6 The Conference having discussed in detail the subject of water-supply and sanitation scheme in Corporation areas places on record its opinion that the provision of monies for this purpose in the Third-Plan is inadequate, and more provision need to be made, and further that steps may be taken at all levels to expedite these schemes.<br>In regard to the question of setting up Regional Water and Sewage Boards, the Conference is of the opinion that the form and functions of the Boards should be further examined by State Governments in consultation with the Corporations. | The Public Health Board constituted by the State Government serves as an Advisory Board to the Governments in the matter relating to water-supply, sewage and sanitation. The Sanitary Engineer and Director of Public Health are among the seven members of the Board. In view of this, this Government consider that there is no need for a Water-supply and Sewage Board. |
| **Resolution No. 7.** | |
| 7 The Conference having discussed the question of augmenting the financial resources of corporations is of the view that the question may be taken up by the Corporations with their respective State Governments. | This Government have taken steps to augment the finances of the Corporation. An Act called "The Madras Local Authorities Finance Act, 1961" was passed in 1961. Under the provisions of the Act, the local bodies including the Corporation in this State are permitted to levy a surcharge on the entertainments tax and to levy a show-tax on films. The maximum rate of property tax leviable under the Madras City Municipal Corporation Act, 1919, viz., 20 per cent was permitted to be increased to 25 per cent. The rate of education tax was also increased from 18 per cent of property tax to 20 per cent of property tax. |
| **Resolution No. 8.** | |
| 8 This Conference having discussed the question of grants for Primary Education is of the view that as laid down in Article 45 of the Constitution of India, it is the duty of the State to provide for free and compulsory education for all children until they complete the age of 14 years; and in view of the fact that such of the Corporations as provided for free and compulsory primary education up to the age of 14 years have to undertake a heavy financial burden, this Conference is of the considered opinion that the respective State Governments should with a view to enabling the Corporations to carry out the programme of free and compulsory education as laid down in the Directive Principles of the Constitution, agree to a reasonable formula of sharing the expenditure incurred by the respective Corporations in Primary Education. | This Government are giving grants to local bodies to cover the deficit in the Elementary Education Fund maintained by them. This Government consider that nothing more can be done in the present circumstances. |

| *Serial number, resolutions and recommendations.* (1) | *Action taken.* (2) |
|---|---|
| **Resolution No. 9.** | |
| 9 Even though housing is not an obligatory function of the Corporations they are called upon to provide shelter to those who are victims of house collapses, fire and other natural calamities, and those who are evicted because of acquisitions of lands and buildings for urgent development activities.<br>At present, subsidies are given to Corporations under Slum Clearance Schemes. Many Corporations are not in a position to undertake construction of houses or shelters with their own resources and if they are to attempt to avoid future calamities and continue progress on the development front, it is necessary that substantial subsidies be made available.<br>This Conference, therefore, strongly recommends that substantial subsidies for construction of tenements of various types should be made available to Corporations for providing housing accommodation to cover cases of the types mentioned above. | Generally fire hazards, etc., happen only in hutting areas of the City of Madras and this will be avoided by improving them under the Government of India Slum Improvement Schemes. The families dehoused by acquisition of lands will normally be provided with alternative accommodation if that was considered justified. |
| **Resolution No. 10.** | |
| 10 The Conference having discussed the subject of Model Building Regulations is of the view that the Indian Standard Code of Building Bye-laws adopted by the Indian Standards Institution may be adopted by the Corporations. | The suggestion is under the consideration of this Government. |
| **Resolution No. 11.** | |
| 11 The Conference having discussed the subject of Slum Clearance Schemes is of the view that the following suggestions of the Mayors of Hyderabad and Kanpur may be brought to the notice of the Ministry of Works, Housing and Supply—<br>(1) Suggestions of the Mayor of Hyderabad—The slum dwellers are hut dwellers and if they are to switch over to new houses which may cost Rs. 10 per mensem for providing them in new houses, they feel that they are not in a position to pay this amount. The rental value should be more acceptable to the slum dwellers by reducing further the prices of the house. The houses that are built should be given to the slum dwellers ultimately.<br>(2) Suggestions of the Mayor of Kanpur—Within the total ceiling prescribed for Slum Clearance Scheme a portion might be utilised for Slum Improvement Schemes on the basis of 50 per cent subsidy. | This Government consider that it is not possible to fix rents acceptable to the slum dwellers, unless the existing standards are relaxed and resort made to semi-pucca structures. This Government have decided to charge a rent of Rs. 10 per mensem per tenement which the slum dwellers will be able to pay. This Government also consider that it is not desirable to sell or give the houses or plots to the slum dwellers ultimately. The suggestion that within the total ceiling prescribed for slum clearance a portion might be utilised for Slum Improvement Schemes, is not supported by this Government. |
| **Resolution No. 12.** | |
| This Conference regrets that the Central Council of Local Self Government (held at Hyderabad in 1959) has not accepted Resolution No. 14 of the last Conference of Mayors regarding the place of the Mayor in the warrant of precedence and has supported the recommendation contained in the Government of India, Ministry of Home Affairs circular letter No. 12/15/58-Pb. II, dated the 2nd September 1958. | No action is called for on this resolution at the State Government level. |

| Serial number, resolutions and recommendations (1) | Action taken. (2) |
|---|---|
| RESOLUTION No. 12—*cont.* | |
| As the place given in the said circular of the Home Ministry is not in keeping with the dignity and honour of the office of the first citizen of a city corporation, this Conference reiterates its previous views in this regard and make it very clear that at all State functions held in the city, the order of precedence of its Mayor should be just after that of the Prime Minister in Delhi and elsewhere after the Chief Minister of the State. | |
| It is also the confirmed opinion of this Conference that the proper definition at the earliest opportunity of the position of the Mayors will remove confusion not only in this country but even in foreign countries which the Mayor may visit on official delegations. | |
| RESOLUTION No. 13. | |
| The Conference having discussed the question of powers, previleges and immunities of members of Corporations is of the view that the same immunities as for members of the Legislature should be extended to the members of the Corporations. | The suggestion is one for consideration by the Government of India as it would involve amendment of the constitution. |
| RESOLUTION No. 14. | |
| The Conference having discussed the question of forming Assurances Committees in Corporations recommends that such Committees may be formed in all Corporations. | The suggestion has been accepted by the Corporation of Madras in principle and it will be implemented when the Council of the Corporation feels it necessary. |
| RESOLUTION No. 15. | |
| The Conference having discussed the subject of creating an All-India Cadre of services of Corporations is of the view that the question should be further examined and be taken up at the next Conference of Corporations. | No action is called for on the resolution at present. |
| RESOLUTION No. 16. | |
| The Conference having discussed the subject, of provision of amenities like Stadium, Swimming Pools, Play-grounds, etc., to encourage recreation and physical activities of the growing generation recommends that to meet the cost 50 per cent grant should be allotted by the Central Government and 25 per cent by State Governments and the remaining 25 per cent may be taken as loan or may be met by the Corporations themselves. | The Corporation of Madras is already providing excellent amenities to citizens in this regard. No action is therefore called for on this resolution. |
| RESOLUTION No. 17. | |
| The Conference having discussed the question of constituting a City Police for the Corporations is of the view that wherever any problems of law and order exists the Corporations may take up the matter with the State Government concerned. If however, such a force is constituted, it should be placed under the control of the Corporation Commissioner. | This Government consider that there is no need to have separate City Police staff for the Corporations and that Mobile Court may be utilised to deal with nuisance cases which persist in any area. |

## Appendix V.

[Vide answer to unstarred question No. 15 on page 31 supra.]

*Number of High Schools under private managements and Government in the Madras State as on 1st September 1963 according to revenue districts.*

| Revenue Districts. | Boys' schools. | | | | Girls' schools. | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Government. | Aided Mission. | Aided Non-Mission. | Non-Aided. | Government. | Aided Mission. | Aided Non-Mission. | Non-Aided. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 Madras .. .. | 7 | 13 | 36 | 2 | 8 | 12 | 16 | .. |
| 2 Chingleput .. .. | 1 | 6 | 20 | .. | 5 | 7 | 3 | .. |
| 3 South Arcot .. .. | 1 | 6 | 21 | .. | 3 | 3 | 1 | .. |
| 4 Thanjavur .. .. | .. | 10 | 43 | .. | 2 | 9 | 7 | .. |
| 5 Madurai .. .. | 3 | 6 | 38 | .. | 3 | 8 | 10 | .. |
| 6 Ramanathapuram .. | 2 | 4 | 42 | .. | 1 | 2 | 10 | 1 |
| 7 Tirunelveli .. .. | 3 | 30 | 39 | .. | 2 | 11 | 7 | .. |
| 8 Kanyakumari .. .. .. | 28 | 12 | 26 | .. | 2 | 11 | 1 | .. |
| 9 North Arcot .. .. | 1 | 6 | 15 | .. | 2 | 7 | .. | .. |
| 10 Salem .. .. .. | 1 | 4 | 13 | .. | 3 | 5 | 3 | .. |
| 11 Tiruchirappalli. .. | 4 | 13 | 36 | .. | 3 | 12 | 5 | .. |
| 12 Coimbatore .. .. | 1 | 9 | 43 | .. | 2 | 6 | 9 | .. |
| 13 Nilgiris .. .. | 2 | 5 | 1 | .. | .. | 6 | 2 | .. |
| | 54 | 124 | 373 | 2 | 36 | 99 | 74 | 1 |







*தமிழ் நாட்டிலிருக்கும் ரெவினியூ மாவட்டங்களில் உள்ள தனியார் உயர்நிலைப்பள்ளிகள், அரசாங்க உயர்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை (1—9—1963 அன்றைய நிலவரப்படி).*

| ரெவினியூ மாவட்டங்கள். | ஆண் பள்ளிகள். | | | | பெண் பள்ளிகள். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அரசாங்கப் பள்ளிகள். | உதவிபெறும் மிஷன் பள்ளிகள். | உதவிபெறும் மிஷனில்லாதவை. | உதவி பெறாதவை. | அரசாங்கப் பள்ளிகள். | உதவிபெறும் மிஷன் பள்ளிகள். | உதவிபெறும் மிஷனில்லாதவை. | உதவி பெறாதவை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 சென்னை .. | 7 | 13 | 36 | 2 | 8 | 12 | 16 | .. |
| 2 செங்கற்பட்டு .. | 1 | 6 | 20 | .. | 5 | 7 | 3 | .. |
| 3 தென் ஆற்காடு. | 1 | 6 | 21 | .. | 3 | 3 | 1 | .. |
| 4 தஞ்சாவூர் .. | .. | 10 | 43 | .. | 2 | 9 | 7 | .. |
| 5 மதுரை .. | 3 | 6 | 38 | .. | 3 | 8 | 10 | .. |
| 6 இராமநாதபுரம். | 2 | 4 | 42 | .. | 1 | 2 | 10 | 1 |
| 7 திருநெல்வேலி. | 3 | 30 | 39 | .. | 2 | 11 | 7 | .. |
| 8 கன்னியாகுமரி. | 28 | 12 | 26 | .. | 2 | 11 | 1 | .. |
| 9 வட ஆற்காடு .. | 1 | 6 | 15 | .. | 2 | 7 | .. | .. |
| 10 சேலம் .. | 1 | 4 | 13 | .. | 3 | 5 | 3 | .. |
| 11 திருச்சிராப்பள்ளி. | 4 | 13 | 36 | .. | 3 | 12 | 5 | .. |
| 12 கோயம்புத்தூர். | 1 | 9 | 43 | .. | 2 | 6 | 9 | .. |
| 13 நீலகிரி .. | 2 | 5 | 1 | .. | .. | 6 | 2 | .. |
| | 54 | 124 | 373 | 2 | 36 | 99 | 74 | 1 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 17th October 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Raid by police of Salem camp*

*11 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the circumstances under which the Sub-Inspector of Police at Salem Camp, Mettur Circle, raided the village called "Ramamoorthy Nagar" on 12—9—1963;

(b) whether any enquiry was conducted regarding this incident by the R.D.O., Dharmapuri; and

(c) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) When the Harijan residents of S. No. 610 of Ramamoorthy Nagar tried to remove a portion of the fencing put around their colony by the Madras Aluminium Company in such a way as to prevent the Harijans from going to the well and to the burial ground the Police intervened on a complaint from the company.

(b) Yes.

(c) The Revenue Divisional Officer found that the police had acted in excess of their powers and therefore recommended that departmental action be taken against the Sub-Inspector, Head Constable and Police Constable concerned.

*12 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any complaint was received from the Secretary of the Communist Party, Mettur Branch, on or about 13th September 1963 containing allegations against the police of Salem camp;

(b) the details of the allegations contained in the complaint; and

(c) the action taken in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) It was alleged that the police chased and beat the women with their hands and sticks and also kicked them. Some of the women sustained injuries and were also arrested.

[17th October 1964

(c) The Revenue Divisional Officer who conducted an enquiry found that the police had acted in excess of their powers and therefore recommended that departmental action be taken against the Sub-Inspector, Head Constable and Police Constable concerned.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்தக் கேள்வியை நான் போட்டு ஒரு வருஷத்திற்கு மேலாகிறது. சம்பவம் நடந்து ஒரு வருஷத்திற்கு மேலாகிறது. சட்டசபை 'ப்ரோரோக்' ஆகி கேள்வி 'லாப்ஸ்' ஆகிவிடுகிறது. இம்மாதிரி கேள்விகளுக்காவது உடனுக்குடன் பதில் அனுப்புமாறு இனியாவது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டு, என்னுடைய உபகேள்விகளை போட முற்படுகிறேன்.

ஆர்.டி.ஓ. விசாரணையில் போலீஸ் அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தை அத்து மீறி பயன்படுத்தினார்கள் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட ஹரிஜனங்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும். என்னிடம் தகவல் இல்லை. பாதிக்கப்பட்ட நபர்களுக்கு எத்தகைய நஷ்ட ஈடு கோரப்படுகிறது என்பது பற்றியும் நஷ்ட ஈடுக்கு உரியவர்களைப் பற்றியும் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் அதை விசாரித்து சொல்லலாம். இத்தகைய கேள்விகளுக்கு கூடிய சீக்கிரம் விடை அளிக்கவேண்டுமென்றுதான் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகள் எவ்வளவு பேர் ? அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது தான் குறிப்பிட்டேன். சப் இன்ஸ்பெக்டர், ஹெட் கான்ஸ்டேபிள், கான்ஸ்டேபிள்கள் இதிலே அத்து மீறி நடந்துகொண்டதாகத் தெரியவருகிறது. அந்த போலீஸ் அதிகாரிகள்மீது கோர்ட்டு மூலம் வழக்குத் தொடரலாமா என்றுகூட சட்ட நிபுணர்களை வைத்து பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு தொடர்ந்தால் அது வெற்றிகரமாக நடைபெறாது என்ற அபிப்பிராயம் ஏற்பட்டது. அது வெற்றிகரமாக நடைபெறாது போய்விட்டால், வேறு ஒன்றும் செய்ய முடியாது என்பதை கனம் உறுப்பினர்கள் உணர்வார்கள். ஆகவேதான் டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் எடுப்பதாக இப்பொழுது முடிவு செய்திருக்கிறோம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** போலீஸ் அதிகாரிகள் அத்து மீறி நடந்துகொண்டார்கள் என்பதற்குக் காரணம், அலுமினியம் கம்பெனியிடமிருந்து லஞ்சம் பெற்றுக்கொண்டு அம்மாதிரி நடந்துகொண்டார்கள்; அவர்கள் தூண்டுதலின் பேரில் என்று புகாரில் சொல்லப்பட்டிருக்கிறது. எனக்குத் தெரியாது. புகாரில் இருந்ததைத்தான் சொல்லுகிறேன். அவர்கள்மீது லஞ்ச ஒழிப்பு



17th October 1964]

இலாகா மூலம் நடவடிக்கை எடுக்கப்படுமா ? டிபார்ட்மெண்டலாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அத்து மீறி நடந்துகொண்டதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். லஞ்சம் வாங்குவது மட்டும் காரணமாக இருக்க முடியாது. லஞ்சம் வாங்குவதும் இருக்கலாம். இந்த அதிகாரிகள் மட்டுமல்ல, யார் லஞ்சம் வாங்கினாலும், அதைப்பற்றி விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் எடுப்பதென்றால் அதற்கு வேண்டிய விசாரணை செய்து அவர்களை வேலையிலிருந்து நீக்குவதா, அல்லது கீழ் பதவிக்கு அனுப்புவதா என்று தீர்மானிக்கவேண்டும். இதையெல்லாம் விசாரித்துத்தான் செய்ய வேண்டும். விசாரிக்காமல், நமக்குத் தெரிகிறது என்று ஒரு முடிவு செய்துவிட்டால், அதுவும் கோர்ட்டில் நிற்காது. இதையெல்லாம் முறைப்படி விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** அந்த போலீஸ் அதிகாரிகள் இன்னும் அதே ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருக்கிறார்களா, அல்லது வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார்களா ? அவர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அவர்களுக்கு குற்றப் பத்திரிகை கொடுக்கப்பட்டிருக்கிறதா இலாகா மூலமாக ? கோர்ட்டு நடவடிக்கை இல்லை என்று சொன்னார்கள். அதை நான் வற்புறுத்தவில்லை. இலாகா மூலம் அவர்களுக்கு சார்ஜ் ஷீட் கொடுக்கப்பட்டு, இப்பொழுது சஸ்பென்ஷனில் வைக்கப்பட்டிருக்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது என்ன நிலை என்பது பற்றி என்னிடம் தகவல் இல்லை. சம்பந்தப்பட்ட போலீஸ் மேலதிகாரிகளிடம் இதை விசாரித்து ஒரு ரிப்போர்ட் அனுப்ப வேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது. அந்த ரிப்போர்ட்டு இன்னும் வரவில்லை.

**திரு. து. ப. அழகமுத்து :** விசாரணை எப்பொழுது தொடங்கியது ? எப்பொழுது முடிவு பெறும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எப்பொழுது தொடங்கியது என்ற விவரம் என்னிடம் இல்லை. நான் முன்பே சொன்னேன். முறைப்படி அதை விசாரிக்கவேண்டும். கொஞ்சம் அதைச் சுருக்கினால் பின்னர் அவர்கள் கோர்ட்டுக்குப் போனால், நாம் விசாரித்ததுகூட தவறுதல் என்று தீர்மானிக்கப்பட்டுவிடலாம். ஆனையினால் முறைப்படி விசாரிக்கவேண்டியிருக்கிறது.

[17th October 1964

## குடிநீர்த் திட்டம்

* 13 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட கீழ் தஞ்சை அபிவிருத்தி மன்றம், சீர்காழி, நன்னிலம், மாயூரம், நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி தாலுக்காக்களில் தேசீய குடிநீர் பாதுகாப்புத் திட்டத்தை அமல் படுத்தக் கோரியுள்ளார்களா?

(இ) ஆமெனில் அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** (அ) ஆம்.

(இ) தேசீய நீர் வழங்கல், துப்புறவுத் (கிராமத்) திட்டத்தின்கீழ்த் தற்போது புதிய பணிகளை எடுத்துக்கொள்வதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருப்பதையொட்டிப் புதிய பகுதிகளுக்கு இத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கில்லையெனக் கிழக்கு தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சி மன்றத் தலைவரான தஞ்சாவூர் கலெக்டருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** நமது ராஜ்யத்தில் மற்ற மாவட்டங்கள் போல தஞ்சை மாவட்டம் இல்லை. காவேரியிலிருந்து வரக்கூடிய வடிகால் நீரெல்லாம் 4, 5 தாலுகாக்கள் வழியாக செல்கிறது. வடிகால் நீரை உபயோகப்படுத்துவதன் மூலம் அந்தப் பகுதி மக்கள் காலரா போன்ற வியாதிகளினால் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்தப் பிரதேசங்களை தேசீய குடிநீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்வது பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** 1961-ம் ஆண்டில் மத்திய அரசாங்கம் 'நாஷனல் வாடர் சப்ளை ஸ்கீம்' என்ற அடிப்படையின் கீழ் சில இடங்களை எடுத்துக்கொள்வதற்கு உத்தரவு பிறப்பித்தார்கள். அவர்களும் 'எய்டு' கொடுப்பதாகச் சொல்லி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் சில குறிப்பிட்ட இடங்களை எடுத்திருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் அவர்களுடைய பங்கு என்ன என்பதை இன்னும் தெரியப்படுத்தாததன் காரணமாக, இவைகளையெல்லாம் தற்பொழுது எடுத்துக்கொள்ள இயலாது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசீய குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் காவேரிக் கரையில் எந்தெந்தப் பகுதிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டன? அவைகள் திட்டமிட்டபடி நிறைவேற்றப்பட்டு, மக்களுக்கு பயன் அளித்து வருகின்றனவா? இதைப் பற்றி ஏதாவது பரிசீலனை செய்யப்பட்டதா?



17th October 1964]

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** குறிப்பிட்ட கிராமங்களை ஒட்டி, 984 கிராமங்களுக்கு இதை விஸ்தரிக்க வேண்டும் என்று தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சி, ராமநாதபுரம், திருநெல்வேலி; வட ஆற்காடு, செங்கல்பட்டு, கன்யாகுமரி ஜில்லாக்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. தற்பொழுது மத்திய சர்க்கார் கொடுக்கும் கிராண்டு நிலை தெரியாததினால், அது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஏற்கனவே எடுத்துக்கொண்ட 'வொர்க்ஸை' மாத்திரம் 'கம்ப்ளீட்' செய்வதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அவைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. ஜே. மாதா கவுடர்:** நேஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீமில் எடுத்துக்கொள்ள முடியாவிட்டாலும் கூட, நம்முடைய சர்க்கார் ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீம் மூலமாக குடி தண்ணீர்த் திட்டத்திற்கு ஏற்பாடு செய்ய முடியுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** நேஷனல் வாட்டர் சப்ளை ஸ்கீமில் எதெல்லாம் சேர்க்கப்பட்டிருக்கிறதோ, அதைத்தான் செய்ய முடியும். ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீமில் எடுத்துக் கொள்ள இயலாது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** தேசீய குடி தண்ணீர் வழங்கும் திட்டத்தின்கீழ் விஸ்தரிக்கப்பட்ட கிராமங்களில் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. குழாய்கள் போடப்பட்டிருக்கின்றன. அதிலே தண்ணீர் வராத கிராமங்கள் எவ்வளவு?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தனிப்பட்ட கேள்வி போட வேண்டும்.

**திரு. ம. கமலநாதன்:** இந்த தேசீய குடி தண்ணீர் பாதுகாப்புத் திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. சேலம் மாவட்டத்திற்கு விஸ்தரிக்கப்படாததன் காரணம் என்ன? இம்மாதிரித் திட்டத்தை மாநில அரசினர் சிபாரிசு செய்கிறார்களா, அல்லது அவர்களே எடுத்துக் கொள்கிறார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** அதற்குத் தனிப்பட்ட கேள்வி போடவேண்டும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தென்னாற்காடு மாவட்டத்தில் எடுத்துக்கொண்ட கிராமங்கள் எந்தப் பகுதியில் இருக்கின்றன என்பதை அறியலாமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** மொத்தம் எடுத்துக்கொண்ட 576 கிராமங்களில் 234 கிராமங்களில் வேலை முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பாக்கி கம்ப்ளீட் செய்யப்படாதவைகள் எல்லாம் 1964-65-ம் ஆண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும். என்னிடம் மொத்த எண்ணிக்கைதான் இருக்கிறது. ஜில்லாவாரியாக விவரம் இல்லை.

[17th October 1964

**ஆரம்ப சுகாதார நிலையம், கண்டமானடி**

** 14 கேள்வி.—திரு. மு. சண்முகம்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரம் வட்டம் கோலியனூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கண்டமானடி பஞ்சாயத்தில் பிரைமரி ஹெல்த் சென்ட்டர் ஒன்று ஏற்படுத்த அவ்வூர் பஞ்சாயத்து பொதுமக்களிடமிருந்து contribution ரூ. 10,000 அரசு கோரியதை கட்டி விட்டார்களா? எப்போது?*

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: A local contribution of Rs. 8,000 was collected and remitted into the Treasury during 1961.

**திரு. மு. சண்முகம்:** பஞ்சாயத்து பொது மக்கள் தொகை செலுத்தியிருந்தும், வேலை துவக்கப்படாததற்குக் காரணம் என்ன?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** டி.எச்.ஓ. விடமிருந்து ரிப்போர்ட் வருவதற்கு சற்று காலதாமதம் ஆயிற்று. இப்பொழுது ரிப்போர்ட் வந்திருக்கிறது. அதை பரிசீலனை செய்துதான் ஏற்றுக் கொள்ள முடியும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** இந்த பிரைமரி ஹெல்த் சென்டருக்காக 1961-ல் பொது மக்களிடத்திலிருந்து பணம் பெற்று, 1962, ஜூலை மாதத்தில் அரசாங்கத்தால் உத்தரவிடப்பட்டு, அந்த உத்தரவு எனக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 1962 ஜூலை மாதத்தில் முடிவு செய்யப்பட்ட பிரைமரி ஹெல்த் சென்டரை ஏன் இன்னும் திறக்கவில்லை? அதற்கான காரணங்கள் என்ன?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** 1962-ல் முடிவு எடுத்த போதிலும், நேஷனல் எமர்ஜென்ஸி வந்ததன் காரணமாக, ஒத்தி வைக்கப்பட்டது.

**திரு. ஜே. மாதா கவுடர்:** இப்பொழுது நேஷனல் எமர்ஜென்ஸி தீர்ந்து விட்டதா? ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களை இந்த ஆண்டு கட்டுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** குறிப்பிட்ட இடங்களில் எங்கே அவசியமிருக்கிறதோ, அந்த இடங்களில் கட்டுவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்து எடுத்துக்கொள்ளப்படும்.

**கிணறு, குளங்கள் வெட்டத்தடை**

** 15 கேள்வி.—திரு. சா. ராமசாமி: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*திருச்சி மாவட்டத்தில் நீர்ப்பாசனக் கால்வாய்களின் இரு புறங்களிலும் இரண்டு பர்லாங் தூரத்திற்குள் உள்ள சொந்த நிலச்சுவான்தார்கள் கிணறு, குளம் முதலியன வெட்டி தண்ணீர் எடுத்துக்கொள்ள தடை செய்யப்பட்டு உள்ளதா?*



17th October 1964]

THE HON. SRI V. RAMAIAH: Yes, but the ban is applicable only to Monjanur, Karavallai and Anjur villages of Karur taluk benefited by the Lower Bhavani Project.

**திரு. சா. ராமசாமி:** நீர்ப்பாசனக் கால்வாய்களின் இரு புறங்களிலும் இருக்கிற இரண்டு, மூன்று பர்லாங் தூரத்திலுள்ள நிலங்களுக்கு, வாய்க்கால் சம்பந்தப்பட்ட அளவிலே பாசனம் இல்லாவிட்டாலும், தனிப்பட்டவர்கள் வெட்டுகின்ற கிணறுகளுக்குத் தடை விதிப்பதை நிறுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** இப்பொழுது இருக்கக்கூடிய முடிவுப்படி, கால்வாய்களில் வரக்கூடிய தண்ணீர் கிணற்றில் போய் தேக்கம் ஏற்பட்டு, அதனால் கால்வாய்ப் பாசனம் பாதிக்கப்படுகிறது என்ற கருத்து இருக்கிறது. தொடர்ந்து பரிசீலனை செய்து, கஷ்டம் இருக்கக்கூடிய இடங்களில், இப்பொழுதிருக்கக்கூடிய முடிவிலிருந்து விதிவிலக்கு அளிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. க. ர. நல்லசிவம்:** புதிய கால்வாய்களில் ஆரம்ப காலத்தில் நீர்க்கசிவு ஏற்படுகிறது. கொஞ்ச காலமானவுடன், அது செட்டாய் விடுகிறது. ஆகவே குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் இந்த விதியை ரத்து செய்வதற்கோ அல்லது தூரத்தைச் சுருக்குவதற்கோ அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** இப்பொழுது இருக்கக்கூடிய முடிவுப்படி, இந்த தூரத்தைச் சுருக்குவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றபடி கனம் அங்கத்தினர் சொன்னதுபோல, நீர்க்கசிவு செட் ஆனதற்குப் பிறகு என்ன செய்வது என்பதை ஒரு பொது உத்தரவு போட்டுச் செய்ய முடியாது. அந்தந்த இடத்தில் இருக்கக்கூடிய நிலையை அனுசரித்து இதுபோல் நீர்க்கசிவு ஏற்படாது என்ற முடிவுக்கு வந்தால், அதெல்லாம் பரிசீலனை செய்யப்படும்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** வருஷம் முழுவதும் தண்ணீர் பாயக்கூடிய இடங்களில் இம்மாதிரி தடை போடப்பட்டிருப்பதை வரவேற்கலாம். ஆனால், வருஷத்தில் நாலு மாதம் தண்ணீர் கிடைத்துவிட்டு பாக்கி எட்டு மாதம் தண்ணீர் கிடைக்காத பகுதிகளிலும் இந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அதையாவது பரிசீலனை செய்வார்களா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** நம்முடைய ராஜ்யத்தில் பல புதிய திட்டங்கள் வேலை முடிந்து நடைமுறையில் இருக்கக்கூடிய நிலையிலே நாலைந்து மாதத்திற்குமட்டும் தண்ணீர் கொடுத்து மீதமுள்ள மாதங்களில் தண்ணீர் இல்லாமல் இருக்கும் வறண்ட பகுதிகளுக்கு இந்த முடிவிலிருந்து மாறுதல் செய்யமுடியுமா என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

[17th October 1964

**திரு. க. ர. நல்லசிவம் :** பி.ஏ.பி போன்ற புதிய கால்வாய்த் திட்டங்களில் வாய்க்கால்களிலும், கிளை வாய்க்கால்களிலும் காரை போடப்பட்டிருக்கிறது. அதனால் நீர்க்கசிவு ஏற்படாது. அங்கு இதுபோன்ற உத்திரவுகள் போடப்பட்டிருக்கின்றனவா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** பி.ஏ.பி. பிராஜெக்டைப் பொறுத்த வரையில் அரசாங்கம் ஒரு நிபுணர் குழுவை நியமனம் செய்து அவர்கள் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்திலே தண்ணீர் வந்ததற்குப்பிறகு எப்படி நிலைமை இருக்குமென்பதைப் பார்த்து முடிவுசெய்யவேண்டுமே தவிர, ஏதோ பிளானிங் செய்துவிட்டோம். அதனாலே எல்லாம் நின்றுவிடும் என்று சொல்வதற்கு இல்லை. ஆகவே இப்பொழுது முடிவு சொல்லமுடியாது.

**திரு. சா. கணேசன் :** வாய்க்கால் ஓரங்களில் இருக்கிற நிலங்களுக்கு வாய்க்கால் வழியாக தண்ணீர் பாயுமானால், பக்கத்தில் இருக்கிற கிணற்றிலிருந்து கவலைபோட்டு தண்ணீர் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. வாய்க்காலிலே தண்ணீர் வராத காலத்திலேதான் கிணற்றிலிருந்து தண்ணீரை நிலக்காரர்கள் உபயோகப்படுத்துவார்கள். குறைந்தபட்சம் 50 அடி தூரத்திற்கு அப்பாலுள்ள இடங்களில் கிணறு தோண்டவோ, பம்புசெட்டு இறக்கவோ வசதி செய்யலாம் என்று சொல்வது அரசாங்கக் கருத்திற்கு உகந்ததாக இருக்குமென்று நான் கருதுகிறேன். அப்படிச் செய்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : It is only a suggestion, Sir.

MR. SPEAKER : It may be properly considered.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** வாய்க்காலிலே வரக்கூடிய தண்ணீரை தனிப்பட்டவர்கள் சுரண்டிக்கொள்ளாமல் பாதுகாக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். இதற்கு 200 அடி இருக்க வேண்டுமென்று எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இது ஒன்றும் யூகத்தில் செய்யவில்லை. நிபுணர்கள் எவ்வளவு தூரம் நீர்க்கசிவு ஏற்படுகிறது என்பதைக் கணக்கிட்டு செய்திருக்கக்கூடிய ஒரு முடிவு. அந்த முடிவு நிரந்தரமாக இருக்கக்கூடிய நிலைமையில்லாமல், இருக்கக் கூடிய நிலைகளை நன்றாக உணர்ந்து கூட்டவோ குறைப்பதற்கோ ஆன முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

**புலவர் கா. கோவிந்தன் :** வாய்க்கால் ஓரங்களில் இருக்கிற கிணறுகளுக்கு மின்சாரம் வழங்கக்கூடாது என்பது திட்டமா, அல்லது வாய்க்கால் ஓரங்களில் கிணறுகளை வெட்டக்கூடாது என்பது திட்டமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அரசாங்கத்தின் திட்டம் கிணறுகள் வெட்டக்கூடாது என்பதுதான். ஆனால் சில சந்தர்ப்பங்களில் மீறி வெட்டிவிடுகிறார்கள். மின்சாரம் கொடுக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.



17th October 1964]

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** சார், இந்த மாடர்னைஸிங் சிஸ்டப்படி செமண்ட் காங்க்ரீட் போட்டு நல்ல முறையிலே பூசினால், கசிவு இருப்பதில்லை. ஆகவே அப்படிச் செய்து அங்கெல்லாம் அனுமதி கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அதைத்தான் பி.ஏ.பி. ஸ்கீம் சம்பந்தமாக சொல்லும்போது குறிப்பிட்டேன்; நீர்க்கசிவு ஏற்படுமா ஏற்படாதா என்பதைப் பற்றி எல்லாம் பரிசீலனை செய்யவேண்டும் என்று சொன்னேன்.

## வாழை, வெற்றிலை பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம்

*16 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் 1964 ஏப்ரல் 17-ந் தேதி அடித்த காற்றின் காரணமாக, வாழை, வெற்றிலை, திராக்ஷை பயிர்கள் எவ்வளவு ஏக்கர் பாதிக்கப்பட்டது ?

(இ) அதன் மூலமாக ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

(உ) பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சர்க்காரால் என்னென்ன உதவிகள் செய்யப்பட்டுள்ளன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Plantain and betel vine crops in an extent of 91.82 acres and 11.00 acres respectively were damaged by heavy winds on 17th April 1964 in Tiruchirappalli district.

(b) The total value of the crops damaged was estimated at Rs. 50,000.

(c) No relief was given to the affected ryots as no single ryot was affected to such a great extent as to warrant assistance from the Government.

**திரு. து. ப. அழகமுத்து :** விவசாயிகள் உதவி செய்யவேண்டும் என்ற கோரிக்கையை அனுப்பியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அப்படி வந்ததாகத் தகவல் இல்லை.

**திரு. அ. ராமசந்திர ராயர் :** சார், தென்னாற்காடு ஜில்லாவில் எவ்வளவு ஏக்கரா பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்க முடியுமா ?

**கனம் திரு வெ. ராமைய்யா :** இது திருச்சி ஜில்லா பற்றிய கேள்வி, சார்.

MR. SPEAKER : The main question relates to Tiruchirappalli district. The hon. Minister has not got statistics about all the districts.

[17th October 1964

### துறைமுக அபிவிருத்தி (எண்ணூர்)

* 17 கேள்வி.—திரு. மு. கருணாநிதி: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை அருகிலுள்ள எண்ணூரை சிறிய துறைமுகமாக்குவதற்கான திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

THE HON. SRI V. RAMAIAH : Yes. There is a proposal for the development of Ennore as a Minor Port during the IV Plan period.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எண்ணூரை டவுன்ஷிப்பாக ஆக்கவும், சிறிய துறைமுகமாகவும் உருவாக்க திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. அதற்கு ஆகும் செலவு எவ்வளவு, அந்த வேலைகள் எப்பொழுது ஆரம்பிக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : சிறிய துறைமுகமாக அமைக்க பூர்வாங்க வேலைகள் நடந்து வருகின்றன. இப்பொழுது எவ்வளவு செலவாகும் என்று திட்டவட்டமாகச் சொல்வதற்கு இல்லை; இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. ப்ரிலிமினரி இன்வெஸ்டிகேஷன் பிரகாரம் ரூ. 94 லட்சம் ஆகும் என்று தெரிகிறது, ஆனால் தொடர்ந்து பரிசீலனை நடந்துக்கொண்டு இருக்கிறது. இறுதியாக முடிவு எடுத்த பிறகுதான் மொத்த அளவு தெரியும்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: சார், இது போன்று மாநிலத்தில் எந்தெந்தப் பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன ? எப்பொழுது வேலை துவங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : நம் மாநிலத்தில் கடற்கரை ஓரத்தில் உள்ள பிரதேசங்களில் எங்கு எங்கு வாய்ப்பு இருக்கிறதோ அதையெல்லாம் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம். சிறிய துறைமுகங்களை நான்காவது திட்டத்தில் எடுக்க முடியும்; எவை எவைகளை நான்காவது திட்டத்தில் எடுக்கலாம் என்று இன்னும் திட்டவட்டமாக தீர்மானிக்கவில்லை; ஆகவே அதைப் பற்றி இப்பொழுது சொல்வதற்கில்லை.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, பல்லவர் காலத்தில் மகாபலிபுரமும், சோழர் காலத்தில் காவிரிப்பூம் பட்டணமும் கடற்கரைத் துறைமுகங்களாக இருந்தன. அவற்றை மறுபடியும் நல்ல துறைமுகங்களாகச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இரண்டும் பரிசீலனையில் இல்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, இப்பொழுது மெரைன் ஒர்க்ஸ் சர்கிள் என்று புதிய துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே, அதன் வேலை எப்பொழுது துவங்கும் ?



17th October 1964]

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது மெரைன் சர்க்கிள் ஏற்பட்ட பிறகுதான் இது போன்ற பரிசீலனைகள் செய்வதில் ஊக்கம் ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : எண்ணூருக்காக ஏற்படும் செலவு பூராவையும் மாநில சர்க்காரே ஏற்றுக் கொள்ளுகிறதா அல்லது மத்திய சர்க்காருக்கும் பங்கு இருக்கிறதா ? இருக்கிறது என்றால் எவ்வளவு சதவிகிதம் என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : சிறிய துறைமுகங்கள் அபிவிருத்திக்காக விசேஷ முறையில் நிதிகள் இருக்கின்றன. அவையெல்லாம் அந்த அடிப்படையில் நடக்கும். விதிமுறைகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்றால் அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், அமைச்சர் பதிலிலிருந்து சில சிறு துறைமுகங்கள் நான்காவது திட்டத்தில் சேர்க்கப்படும் என்று தெரிகிறது. கிழக்கு ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தொண்டியை நான்காவது திட்டத்தில் சேர்க்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இன்னும் திட்டம் உருவாகவில்லை. அது உருவாகி ஒரு நிலைக்கு வந்த பிறகுதான் எதுவும் சொல்ல முடியும். இப்பொழுது இதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. அ. ராமச்சந்திர ராயர் : சார், தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பரங்கிப்பேட்டை கடற்கரை துறைமுகத்தை நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : பரங்கிப்பேட்டை நான்காவது திட்டம் வரை காத்துக் கொண்டிருக்க வேண்டாம். இப்பொழுதே அங்கு நல்ல துறைமுகம் இருக்கிறது. அதை நல்ல முறையில் பயன்படுத்த மராமத்து இலாகாவினரும், மீன் துறையினரும் பரிசீலனை செய்து வருகிறார்கள். நல்ல முடிவுக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

### முதலியார் குழுவின் சிபாரிசுகள்

*18 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆரம்ப மருத்துவ மனைகளைப் பற்றி 1961-ல் திரு. ஏ. எல். முதலியார் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியின் சிபாரிசுகளின் நகல் ஒன்று சபை முன் வைக்கப்படுமா ?

[17th October 1964

(இ) அந்த சிபாரிசுகள் எந்த அளவு நிறைவேற்றப்பட்டுள்ளன?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) & (இ) முதலியார் குழு எனப்படும் சுகாதார ஆய்வுத் திட்டக் குழுவை இந்திய அரசாங்கம் அமைத்தது. இந்தக் குழு சமர்ப்பித்த அறிக்கை அச்சிடப்பட்டுள்ளது. புது டில்லி, இந்திய அரசாங்க அச்சக வெளியீடுகள் நிர்வாகியிடமும் மத்திய அரசாங்க விற்பனை நிலையங்கள் அனைத்திலும் இந்த அறிக்கை விற்பனைக்குக் கிடைக்கும். இந்திய அரசாங்கம், இந்த அறிக்கையில் அடங்கியுள்ள பரிவுரைகளின் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. சுகாதாரப் பணிகள் டைரக்டர்-ஜெனரல், சென்னை, மருத்துவப் பணித் துறை நெறியாளரைக் கலந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் சம்பந்தமான பரிந்துரைகளை ஆராய்ந்து வருகிறார். இந்த அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்ட இனங்கள் சம்பந்தமாக, அவசியமேற்படும்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சார், அமைச்சரவர்கள் பதிலைப் பார்த்தால், மத்திய சர்க்காருடைய வெளியீட்டு இலாகாவிற்கு விளம்பரம் போல இருக்கிறது. கேள்வி, அறிக்கை அரசாங்கத்திற்கு வந்ததா, அதன் பேரில் என்ன நடவடிக்கை என்பதாகும். அது பற்றிய விவரங்கள் வேண்டும் என்றுதான் கேள்வி போடப்பட்டது. இனியாவது அமைச்சர் சம்மந்தப்பட்ட இலாகாவிற்கு இம்மாதிரி பதில் எழுத வேண்டாம் என்று உத்தரவு போடவேண்டும், அல்லது அமைச்சர் இம்மாதிரிப் பதிலுக்கு கையெழுத்துப் போடாமல் இருக்கவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சார், கேள்வி மருத்துவமனைகளைப் பற்றி முதலியார் கமிட்டி சிபாரிசுகள் சபைமுன் வைக்கப்படுமா என்பது; ஆகவே, அது எங்கெல்லாம் கிடைக்கும் என்ற தகவலை கொடுத்திருக்கிறோம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சபைமுன் வைக்கப் படாவிட்டாலும், நம் ராச்சியத்துக்குச் சம்மந்தப்பட்ட வரையில் என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்க வேண்டியது அவசியம் . . .

**கனம் சபாநாயகர் :** அதையே கேள்வியாகப் போட்டு விடலாமே.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அங்கத்தினர்களின் சௌகரியத்திற்காக, சட்டசபை லைப்ரரியிலாவது சில பிரதிகளை வைத்தால், அந்த அங்கத்தினர்கள் பயன் படுத்திக் கொள்ளலாம். அதையாவது செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**MR. SPEAKER :** I think the Library is in the charge of the Speaker. Anyway the copies should be made available for the use of the hon. Members.



17th October 1964]

## திருத்துறைப்பூண்டி சர்க்கார் மருத்துவமனை

*19 கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி, சர்க்கார் மருத்துவ மனையை விஸ்தரிக்க கோரி தஞ்சை மாவட்ட அபிவிருத்தி மன்றம் சர்க்காருக்கு சிபாரிசு செய்துள்ளதா?

(இ) ஆமெனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) இல்லை. ஆனால் இதுபற்றிய தீர்மானம் ஒன்று மருத்துவத் துறை நெறியாளருக்கு கிடைத்துள்ளது.

(இ) திருத்துறைப்பூண்டி, அரசாங்க மருத்துவ மனையில் 20 படுக்கைகள் கொண்ட கூடுதல் வார்டு ஒன்றைக் கட்டுவதற்கும் நர்ஸுகள் குடியிருப்பிடம் கட்டுவதற்கு நில அடைவுச் சட்டத்தின் ஷரத்துக்களின்கீழ் 17 சென்ட் பரப்பளவுள்ள தனியார் நிலத்தை அடைவது குறித்து மருத்துவத்துறை நெறியாளருடன் கடிதப் போக்கு வரத்து நடந்து வருகிறது.

## தஞ்சை நகர சுத்தித் தொழிலாளர்கள்

*20 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) தஞ்சை நகர சுத்தித் தொழிலாளர்கள் வயது முதிர்ந்த காரணம் காட்டி 1963-64-ம் ஆண்டில் எத்தனை பேர்கள் நிறுத்தப்பட்டார்கள்?

(இ) வேலையிலிருந்து நீக்கப்பட்ட நகர சுத்தித் தொழிலாளர்கள் திரு. ஆ. கு. சுப்பையா, எம்.எல்.ஏ. மூலம் சர்க்காருக்கு விண்ணப்பம் செய்தார்களா?

(உ) அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) 33 தொழிலாளர்கள்.

(இ) ஆம்.

(உ) இத் தொழிலாளர்களுக்கு 60 வயது பூர்த்தியாகிவிட்டதால் அவர்களைத் தொடர்ந்து வேலையில் வைத்துக்கொள்ளும்படி அவர்கள் அனுப்பிய வேண்டுகோளை ஏற்க முடியவில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் உண்மையிலேயே அவர்களுக்கு 60 வயது ஆகவில்லை என்று டாக்டர் சர்டிபிகேட்டுகள் தாக்கல் செய்திருக்கிறார்கள். தகப்பன் வேலையிலிருக்கும்போது மகன் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். அண்ணன் வேலையிலிருக்கும்போது தம்பி வேலையிலிருந்து நீக்கப்

[17th October 1964

பட்டிருக்கிறார். இதைப்பற்றி மகஜர்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தஞ்சாவூர் மருத்துவ நிலைய சிவில் ஸர்ஜன் அவர்கள், வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் எல்லாம் 60 வயதுக்கு மேற்பட்டு இருக்கிறவர்கள்தான் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. கோ. சி. மணி :** மற்றைய நகராட்சி மன்றங்களில் உள்ள தலைவர்களுக்கும் இம்மாதிரி வயது கூடுதலாக இருக்கக்கூடாது என்று அரசாங்கம் ஏதாவது நிபந்தனை விதித்திருக்கிறதா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்தக் கேள்வி தஞ்சாவூரைப் பற்றியது. பிற விவரங்களைப் பற்றி இப்போது சொல்வதற்கில்லை.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk *at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—EXPUNCTION OF OBJECTIONABLE REMARKS.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நேற்றையதினம் கனம் அங்கத்தினர் திரு. புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்
9 00 a.m. போது தாங்கள் குறுக்கிட்டு அவருடைய பேச்சு நடவடிக்கை புத்தகங்களில் ஏறக்கூடாது என்று கூறியதாக இன்று சில பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கின்றது. ஆனால் தாங்கள் என்னிடத்தில் கூறியது சில குறிப்பிட்ட பகுதிகள் மட்டும்தான் நடவடிக்கையிலிருந்து நீக்கப்படுவதாக குறிப்பிட்டீர்கள். ஆனால் செய்தி இவ்வாறாக இருக்கிறது . . .

MR. SPEAKER : Because I was not able to pick out the portion to be expunged in the course of the delivery of the speech, I had to order that the whole speech be expunged. After perusing the official report of the speech, I have marked out some portions of the speech which alone will be expunged.

## III.—ADJOURNMENT MOTION *RE*-RICE SCARCITY IN MADRAS.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சென்னை நகரத்திலும் தமிழ்நாட்டிலும் அரிசி கிடைப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. நம்முடைய அரசாங்கத்திலிருந்து, ஆந்திராவிலிருந்து அரிசி வாங்குவதற்கு யார் யாருக்கு அதிகாரம் கொடுத்திருந்தார்களோ அவர்கள் அங்கே போய் அரிசி வாங்கியிருந்தும், அவைகள் எல்லாம் ஆந்திர அரசாங்கத்தால் தடுக்கப்பட்டிருக்கிறது. சேலம் ஜில்லாவில் ஒரு கூட்டுறவு சொஸைட்டிக்கு வாங்கியிருந்த அரிசியும் தடை செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக இவ்விதம் தடை செய்திருப்பது மிகவும் வருந்தத்திற்குரிய விஷயமாகும். ஆகவே நமது முதலமைச்சர் அவர்கள் தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி ஆந்திர அரசாங்கம்



17th October 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

தடை செய்திருக்கும் அரிசியை எல்லாம் விடுதலை செய்து சீக்கிரமாக கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து இதை சபையில் விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்னொரு அரசாங்கம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி, எடுக்காத நடவடிக்கைகளைப்பற்றி விவாதிப்பதற்கு என்று ஒரு அவசரப் பிரேரணை கொண்டு வருவது சரியல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக அரிசி பற்றாக்குறை என்பது இல்லை. அரிசி விநியோகத்தில்தான் கோளாறு ஏற்பட்டிருக்கிறது. சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் நெல்லூர் பச்சரிசிதான் அதிகமாக வேண்டும் என்ற எண்ணத்தில் அதிகமாக வாங்கிக்கொண்டிருந்தார்கள். வியாபாரிகள் அதே நேரத்தில் புழுங்கலரிசியை, வருகின்ற அரிசியை எல்லாம் அதிக விலை கிடைக்கின்றது என்ற எண்ணத்தில் வந்ததும் கேரளாவுக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள். நியாயமான விலையில் கொடுக்கவேண்டும் என்று வியாபாரிகள் விரும்பவில்லை. அரசாங்க நடவடிக்கைகளோடு ஒத்துழைக்காமல் ஸ்தம்பிக்கக்கூடிய வகையில் வியாபாரிகள் நடந்து கொண்டார்கள். அப்போது அரசாங்கம் தலையிட்டு மத்திய அரசாங்கமும் ஆந்திர அரசாங்கமும் பேசி முடிவு செய்து புழுங்கல் அரிசி இவ்வளவு கொடுக்கவேண்டும், பச்சரிசி இவ்வளவு கொடுக்கவேண்டும் இதை இன்னின்ன வியாபாரிகள் பெற்றுக்கொள்வார்கள் என்று முடிவு செய்து வியாபாரிகளை நியமித்து அவர்கள் மூலம் அரிசியை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. இதை அரசாங்கமும் ஒப்புக்கொண்டது. அதன்படி ஓரளவுக்கு அரிசி வந்தது. அப்படி நிலைமையைப் பார்த்துவரும்போது அரிசி சென்ட்ரல் ஸ்டேஷனில் வந்து சேர்ந்தவுடனேயே அதிக விலை கிடைக்கிறது என்ற நோக்கத்துடன் கேரளாவுக்கு அனுப்புகிறார்கள். இதன் [illegible]மாக கூட்டுறவு சங்கங்கள் கொள்முதல் செய்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் கூட்டுறவு சங்கங்கள் எல்லாவற்றையும் கொள்முதல் செய்து கொள்ள முடியவில்லை. இதனால் மில்லர்களையும் ஏற்பாடு செய்தோம். இதைப் பற்றி எல்லோரிடத்திலும் வற்புறுத்தி வந்தோம். ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்திற்கு அரிசி போக்குவரத்து அரசாங்கம் மூலமாகத்தான் நடைபெறவேண்டும் என்று தீர்மானித்தோம். தனிப்பட்டவர்கள் விலை அதிகமாக கிடைக்கிறது என்ற நோக்கத்துடன் பிற மாகாணங்களுக்கு அனுப்புகிறார்கள். இது கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. இங்கிருக்கின்ற வியாபாரிகள் விற்பனை செய்வதில் தான் மிக அக்கறை கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு சங்கங்களும் தனிப்பட்ட ஏஜெண்டுகளும் கொள்முதல் செய்வதைப்பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டது. கேரளம், மைசூர், ஆந்திரா, தமிழ்நாடு முதலிய மாகாணங்களும் சேர்ந்து இதைப்பற்றி பரிசீலித்தன. அதில் அரசாங்கம் அமர்த்தக்கூடிய நபர்கள் கூட்டுறவு சங்கங்கள் ஏஜெண்டுகள் [illegible] கொள்முதலை அனுமதிப்பது என்று முடிவு [illegible]

[திரு. எம். பக்தவத்சலம்] [17th October 1964

உத்தரவும் போடப்பட்டது. ஆனால் இதற்கிடையில் ஆந்திராவிலிருந்து கொள்முதல் செய்த நெல் தடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. சேலம் கூட்டுறவு சங்கத்திலிருந்து வாங்கப்பட்ட நெல்லும் தடுக்கப்பட்டிருப்பதாக கனம் கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். இதைப்பற்றி கனம் தொழில் அமைச்சர் அவர்களுக்கும் விவரம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இவ்விதம் தடுக்கக் கூடாது என்று உத்தரவு போட்டாகிவிட்டது. இதைப்பற்றித்தான் நான் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆனால் இந்த உத்தரவை அமல் நடத்துவதில் டெக்னிக் முறையில் அதிகாரிகள் சில வேறுபட்ட கருத்துக்களை கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நல்லெண்ணம் இல்லை என்று சொல்ல முடியாது. இவ்விதம் தடை செய்திருப்பது யார், இதற்கு என்ன காரணம் என்பதைப்பற்றி கழிந்த இரண்டு நாட்களாக அந்த அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டோம். ஆந்திரா உணவு அமைச்சர் அவர்களுக்கு நிலைமை தெரிவிக்கப்பட்டது. ஆந்திரா முதலமைச்சர் அவர்களுக்கும் தந்தி அனுப்பியிருக்கிறோம். ஆந்திரா உணவு அமைச்சர் அவர்கள் இனிமேல் இவ்வாறு ஏற்படாது என்று சொல்லியிருக்கிறார். தடை செய்வது கூடாது, மேலும் அனுமதிப்பதில் எந்த விதமான தடையும் இராது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே சீக்கிரமாக நிலைமை சீராகும் என்று நம்புகிறேன். ஆகவே இதற்காக அவசரப் பிரேரணை கொண்டுவருவது உகந்ததல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திலிருந்தே நான் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானம் எவ்வளவு அவசர முக்கியத்துவம் உள்ளது என்பது தெளிவாகிறது. அரசாங்க அதிகாரிகள் டெக்னிக் முறையில் வேறுபட்ட கருத்துக்கள் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அரசாங்கம் அதிகாரிகளுக்கு கட்டுப்பட்டுத்தான் நடந்து வருகிறது என்ற எண்ணமா? அல்லது அரசாங்க உத்தரவை அதிகாரிகள் சரியாக செயல்படுத்தவில்லை என்ற எண்ணமா என்று கேட்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : Whatever might be the case, we cannot discuss in this House about the officers of the Government of another State.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** முக்கியமாக அமைச்சர் அவர்கள் சொன்னது அரிசி பற்றாக்குறை ஒன்றும் இல்லை, விநியோகம் தான் சரியாக இல்லை என்று சொன்னார்கள். இவ்வளவு காலத்திற்குப் பின்னாலாவது இதை முதலமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டதற்கு பாராட்டுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அரிசி பற்றாக்குறை இல்லை என்று சொன்னால் பதுக்கல் இருக்கிறது என்று அர்த்தமல்ல.

MR. SPEAKER : The hon. Member's purpose of bringing the matter to the notice of the Government has been achieved.



17th October 1964]

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** பதுக்கல் இருக்கிறது என்று இல்லாவிட்டாலும் அரிசி வெளியில் இல்லை என்பது மட்டும் தெளிவான உண்மை. ஆகவே இது மிக முக்கியமான விஷயம் என்று கருதி இதைப்பற்றி விவாதிப்பதற்கு அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இன்னொரு அரசாங்கத்தைப் பற்றி அல்லது இன்னொரு அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பற்றி விவாதிப்பது நல்ல முறை அல்ல. நமக்கு வேண்டியது நம்முடைய காரியம் சித்தி பெற வேண்டும். இப்போதுள்ள நிலைமையைப் பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. இதற்கான வேண்டிய நடவடிக்கையும் எடுத்து வருகிறது. மத்திய அரசாங்கத்திற்கும் இதைப்பற்றி தெரிவித்து இருக்கிறோம். இந்த நிலைமையில் இன்னொரு அரசாங்கத்தைப்பற்றி விவாதிப்பது சரியல்ல. முறையுமல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The adjournment motion is out of order and I withhold my consent to it.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** அப்படியானால் இதைப்பற்றி ஒரு குறுகிய கால கேள்வி கொடுத்து, அதற்கான பதிலையாவது சீக்கிரமாக தருவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர்:** இப்போது சொன்னதைவிட இன்னும் என்ன அதிகமான விவரங்களை கனம் அங்கத்தினர் கேட்கப் போகிறார்கள்?

## IV.—CALLING ATTENTION TO REACTION OF SMALL-POX PREVENTION VACCINE IN TIRUCHIRAPPALLI DISTRICT.

**திரு. து. ப. அழகமுத்து:** திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் அம்மை நோய் தடுப்பு செய்ததில் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட அம்மை தடுப்பு மருந்தினால் ஏற்பட்ட எதிர் விளைவு குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Mr. Speaker, Sir, the freeze-dried smallpox vaccine which is being used now in this State is not in any way different from the glycerinated lymph prepared by the King Institute, Guindy, which was in use before the implementation of the National Smallpox Eradication Programme. Both are prepared from calves. In the case of freeze-dried vaccine, the vaccinia pulp containing the virus is ground and dried by a special process and supplied as a powder with the required quantity of diluent. The powder is mixed with the diluent at the time of the vaccination. The advantage of using the dry vaccination is that the lymph retains its potency for a longer time and therefore gives better success rates than the glycerinated lymph which loses

[Srimathi Jothi Venkatachallum] [17th October 1964

potency vary rapidly. Since success rate is very important in Small pox Eradication work, the dry vaccine is in use all over the country for the National Smallpox Eradication Programme.

In the Smallpox Eradication Programme, the work has to be completed in a stipulated period, all over the State and to keep up to the target date, the work is completed in village after village within that period and necessarily all the members of all the families in the villages get vaccinated within the space of a week or ten days the period which the vaccination staff spend at the particular village. Though all the members of a family are vaccinated on a particular day, only one or two among them will get the reaction. It is very very rare that all the members of family get reaction. Excepting the inconvenience of having fever for two or three days, no other serious inconvenience is caused to the individuals because of the reaction. Nobody is so severely incapacitated as to be unable to carry on his normal avocation.

Under the National Smallpox Eradication Programme as many as 200 lakhs of persons have been vaccinated so far in this State with freeze-dried smallpox vaccine and no untoward reaction has been reported till date from the districts. All the Districts Health Officers and Municipal Health Officers have conducted primary vaccination and revaccination on a reasonable number of people in their presence. All of them, without exception, have reported that the reactions both in primary vaccination and revaccination were just the same as with the traditional glycerinated vaccine lymph. The Assistant Director of Public Health in charge of National Smallpox Eradication Programme has verified and confirmed that this is so in cases conducted in his presence.

By tradition, people of our State use all sorts of applications over the fresh vaccination areas. Materials are varied as slaked lime, powdered tiles, cow-dung, neem and turmeric pastes are applied over the areas and instead of aiding in healing these areas, they irritate them, cause sepsis and worsen the condition. Exaggerated reactions, if any, complained of, are mainly the result of such maltreatment by the vaccinated individuals themselves. The Health Inspectors in charge of National Smallpox Eradication Programme, visit the vaccinated households a week after vaccination and verify the reactions. They supply drugs like boric powder, zinc oxide, sulphadiazine tablets and APC tablets, etc., to these vaccinated individuals who may need them. No report of death after vaccination with freeze-dried vaccine has been received from the districts so far.

## V.—GOVERNMENT BILL.

### THE MADRAS STATE LEGISLATURE (CONTINUANCE OF USE OF ENGLISH LANGUAGE) BILL, 1964—*cont.*

MR. SPEAKER : Now the discussion on the Madras State Legislature (Continuance of use of English Language) Bill, 1964, will be resumed.



17th October 1964]

* **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய அரசாங்க மொழியாக ஆங்கிலம் 1965 ஜனவரி 26-ம் தேதிக்கு பிறகும் நீடிக்கலாம் என்ற மசோதாவை இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள் நம்முடைய அரசாங்கம். இந்த மசோதாவைப்பற்றி கருத்து தெரிவிப்பதற்கு முன்பாக மிக மிக வருத்தத்தோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாகாணத்தில் இருக்கின்ற கோரிக்கைகளையும் நம்முடைய சட்டமன்றத்தின் முன்னால் கொண்டு வந்து அதற்கு தீர்மானங்கள் நிறைவேற்றியிருப்பதையும், . அவைகளெல்லாம் எந்த நிலைமையில் இருக்கின்றன என்பதையும் எனக்கு ஆதாரவாக வைத்துக்கொண்டு என்னுடைய பேச்சை துவக்க விரும்புகிறேன். மிக மிக வருத்தமான விஷயம் என்னவென்றால் ஒரு நாடு சுதந்திரம் அடைந்து ஏறக்குறைய 17 வருடங்கள் ஆகியும் நம்முடைய மொழிப்பிரச்னை இன்னும் தகராறு கொண்ட ஒரு பிரச்னையாகவே இருக்கிறது என்றால் இது இந்நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு, இந்த நாட்டினுடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு குறுக்கே நிற்கின்ற நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது என்பதை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். தமிழர்கள் பண்பாடு மிக்கவர்கள். இந்த மாமன்றம் என்றைக்கும் சீரிய முறையில் செயல்பட வேண்டும் என்று நாம் ஆவல் கொண்டிருக்கிறோம். அந்த முறையில்தான் இதுவரை செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. இனியும் தங்கள் தலைமையில் நிச்சய மாக அவ்விதமாகவே செயல்பட்டுவரும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது. ஆனால் மொழிப் பிரச்னையைப் பொறுத்தளவில் மற்ற மாகாணங்களில் எப்படி நடக்கிறதோ—நான் பெயர் குறிப்பிட்டு சொல்ல விரும்பவில்லை—எம்மாதிரி மற்ற மாநிலத்திலுள்ளவர்கள் செய்து கொண்டிருக்கிறார்களோ அதே மாதிரி நாமும் நடந்து கொள்ளவேண்டுமா என்று யோசிக்க வேண்டிய நிலைமை வந்துவிடுமோ என்று நான் அஞ்சுகின்றேன். இந்த சர்க்கார் நிறைவேற்றுகின்ற தீர்மானத்தை மத்திய சர்க்காரில் இருக்கின்றவர்கள் ஏற்றுக்கொள்ள தயங்குகின்றார்கள் என்பதைத்தான் நான் மிகவும் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழர்கள் என்றைக்கும் பண்பாடு மிக்கவர்கள். என்றைக்குமே நியாயத்திற்கு புறம்பாக எந்த கோரிக்கையும் தெரிவிக்கமாட்டார்கள். நம் நாடு சுதந்திரம் அடைந்ததற்கு பின்னால், பல மாகாணங்களில் உள்ளவர்களும் தங்கள் தங்கள் மொழி தங்கள் நாட்டு ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று பேசி முடிவு செய்து 15 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இந்த நிலைமையில் ஒரு நாட்டினுடைய மொழிப் பிரச்னை இத்தனை ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் இருந்தால் இந்த நாடு என்றைக்குத் தான் ஒற்றுமையாக இருக்கும்? இதே நிலைமை நீடித்துக்கொண்டிருக்குமானால் நிச்சயமாக ஒற்றுமையாக இருக்க வேண்டியவர்கள் எல்லாம் சிதறுண்டு போகக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள் கிறேன். மத்திய சர்க்காரில் இருக்கின்றவர்கள் இன்றைக்கு இதைப்பற்றி அக்கறை எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிய வில்லை. மறைந்த பண்டித நேரு அவர்கள் எல்லோரையும்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [17th October 1964

ஒற்றுமையாக வைத்திருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் ஓர் வழிகாட்டியாக இருந்தார். இந்தி பேசாத மக்கள் எப்போது தாங்களாகவே என்றைக்கு ஒருமித்த கருத்தைத் தெரிவிக்கின்றார்களோ அன்றைய தினம் வரையிலும் இந்தி ஆட்சிமொழியாக கொண்டு வரப்படமாட்டாது என்று மறைந்த பண்டித நேரு அவர்கள் தெரிவித்தார்கள். இன்றைக்கு அதை எடுத்துப் பேசுவதற்கு, இந்தி பேசாத மக்களுடைய கருத்தை, எண்ணத்தை எடுத்துச் சொல்வதற்கு, அதை எடுத்துச்சொல்லி வாதாடுவதற்கு வக்கீல்கள் இல்லாத நிலைமையில் காலம் போய்க்கொண்டிருக்கிறது. இதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். நண்பர் திரு. வீரபாகு அவர்கள் நேற்றைய தினம் பேசியபோது, இந்த நாட்டுக்கு—தமிழகத்திற்கு—தமிழும் இந்தியும்தான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நான் அவருக்கும் எனக்குப் பின் பேச இருக்கின்ற காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கும் நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த மன்றத்தில் இந்த அமைச்சரவையில் பல்வேறு அமைச்சர்களுடைய தலைமையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்ன ஆனது? இந்த நாட்டினுடைய ஆட்சி மொழியாக, அகில இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி மொழி மட்டும் கூடாது. இந்தி பேசுகின்றவர்கள் இந்தியை ஆட்சி மொழியாக வைத்துக் கொள்ளலாம். இந்தி பேசாத மக்கள் ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக வைத்துக்கொள்ளலாம். ஆக, இரண்டு மொழிகளும் இருக்கலாம் என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தாருடைய கோரிக்கை பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பது. அதைத்தான் நாங்கள் சொல்லி வருகிறோம். அது முடியுமோ முடியாதோ. அது காலம் பொறுத்துப் பார்க்க வேண்டிய விஷயம். அடுத்த கட்டத்திலாவது மத்திய சர்க்காரிலே இருக்கிறவர்கள் சிந்தித்தார்களா? நம்முடைய வேதனையைச் சொல்கிறோம். உரிமையை நிலைநாட்ட நாம் இங்கே பேசுகின்றோம். தமிழகத்திலே இருக்கும் மக்களுடைய நிலையை விளக்குகின்ற ஒரு பெரிய மன்றம் இது. இதில் 205 சட்ட மன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து நிறைவேற்றிய தீர்மானத்தை மத்திய சர்க்கார் எவ்வளவு அலட்சியமாகப் பாவித்து எவ்வளவு வேதனை நிரம்பிய இடத்திலே நம்மைத் தள்ளியிருக்கிறார்கள், தீர்மானத்தை ஒத்துக்கொள்ளாததன் காரணமாக இந்த நிலை நீடிக்கத்தான் வேண்டுமா என்பதைப்பற்றியெல்லாம் எண்ணி எண்ணி வருத்தப்படுகின்ற ஒரு அறிகுறியாகத்தான் இந்தச் சட்டத்தை நான் கண்நோக்குகின்றேன். நம்முடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாததன் மூலம் நம்முடைய குரல் வளையை நெறிக்கிறார்கள் வடக்கே இருக்கிறவர்கள். நம்முடைய பேசும் திறமையை நெறிக்கிறார்கள் வட நாட்டிலே இருக்கிறவர்கள் என்பதற்கு ஒரு அடையாளம் தான் இந்தச் சட்டம் என்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எதற்காக இந்தச் சட்டம்? இரண்டு மொழிகளும் ஆட்சி மொழிகளாக இருந்து தொலையட்டுமே. இந்தியும் இருக்கட்டும். ஆங்கிலமும் இருக்கட்டும். என்ன வந்துவிட்டது? இது நம்மால் பேசப்பட்டது 1960-ஆம் ஆண்டிலே. இதே மன்றத்திலே காங்கிரஸ் மந்திரிகள் பேசினார்கள். இங்கே நிதி மந்திரியாக இருந்து திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேசினார்கள். பல காங்கிரஸ் உறுப்பினர்களும் பேசினார்கள். ஆனால், ஆண்டு நான்கு இன்னும் ஆகவில்லை. நான்காண்டு காலத்திற்குள்ளாகவே சொன்னதை மறந்துவிடுவதா? நான்கு ஆண்டுகளுக்குள் இந்த சட்ட மன்றத்திலே முடிவு செய்ததை மறந்துவிடுவதா? என்ன அவ்வளவு சீக்கிரமாக விவேகம் வந்துவிட்டது? என்று நான் கேட்கின்றேன். அன்று இந்த மன்றத்திலே இருப்பவர்கள் பிளவுபட்ட கருத்தைக் கொண்டிருந்தார்களா? ஒருவர் ஆங்கிலம் வேண்டுமென்றும், ஒருவர் இந்திதான் வேண்டுமென்றும், ஒருவர் தமிழ்தான் வேண்டுமென்றும் பேசினார்களா? அல்ல.



17th October 1964] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

அன்றைய தினம் திரு. லால்பகதூர் சாஸ்திரி பாராளுமன்றத்தில் என்ன சொன்னார்கள்? "நான் சென்னைக்குச் சென்றிருந்தேன். இந்தியைக் கற்றுத் தருகின்ற தட்சிண பாரத இந்தி பிரசார சபையிலே நான் பேசினேன். மூவாயிரம் பேர்கள் பட்டம் பெறுகிற விழாவில் நான் அங்கே பேசினேன். "அவர்கள் வரவேற்றார்கள்" என்று அவர்கள் பேசினார்கள். லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் நம்மைக் கேட்டாரா? தமிழ்ப் புலவர்களைக் கேட்டாரா? படித்த மேதாவிகளைக் கேட்டாரா? டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அவர்களைக் கேட்டாரா? சர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்களைக் கேட்டாரா? அறிஞர் அண்ணா அவர்களைக் கேட்டாரா? அவர்களையெல்லாம் அவர் கேட்கவில்லை. அவர் கேட்ட இடம், அவர் குறிப்பு அறிந்த இடம் என்ன? பிரதம மந்திரி லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் யாரைக் கேட்டார்கள்? தட்சிண பாரத இந்தி பிரசார சபாவில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவிலே, 'அப்பர் டிவிஷன் க்ளார்க் வேலை கிடைக்குமா, மத்திய அரசாங்க அலுவலகங்களில்' என்று இந்தி பரீட்சையில் தேர்வு பெற்றவர்களிடம் பேசியிருக்கிறார்கள். இங்கிருந்து வடக்கே சென்று வேலை பார்ப்பதற்காக ஒரு மொழியிலே தேர்வு அடைந்து பட்டம் வாங்க வந்திருந்த சமயத்தில், "எவ்வளவு பேர்கள் இந்தியை விரும்பிப் படிக்கிறார்கள்? இந்தி வேண்டுமென்று விரும்புகின்றவர்கள் கை தூக்குங்கள்" என்று சொன்னார்கள். அங்கிருந்த மூவாயிரம் பேர்களும் கை தூக்கினார்களாம். எவ்வளவு வேதனை தரக்கூடிய விதத்தில் அவர்கள் அங்கே பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். இந்தி ஆட்சி மொழியாக இருந்துதான் தீர வேண்டும், அதுதான் நாம் படிக்கவேண்டும் என்றால் அதை எப்பொழுது படிப்பது? இன்றையதினம் இந்தியைப் படிக்க ஆரம்பித்தால் கூட, இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகுமோ? 150 ஆண்டுகள், 200 ஆண்டுகள் ஆங்கில ஆட்சிக்குப் பிறகு கூட எத்தனை பேர்கள் ஆங்கிலத்தில் இன்றைக்குப் புலமை பெற்றிருக்கிறார்கள்? முடிகிறதா? முடியவில்லையே! அப்படியிருக்க ஒரு மொழியை எதற்காக இன்றைய தினம் தமிழ் மக்கள் பேரிலே, தமிழ்க் குழந்தைகளின் பேரிலே திணிக்கவேண்டும்? இதிலேயாவது நமக்குள் ஒருமித்த கருத்து இருக்கக்கூடாதா? திராவிட முன்னேற்றக் கழகமா தீர்மானம்

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [17th October 1964

கொடுத்தது? அன்றையதினம் கொடுத்த தீர்மானம் நம்முடைய அமைச்சரவையினர் கொடுத்த தீர்மானமாகும். ஒரு வேளை, இன்றையதினம் முதலமைச்சராக இருக்கின்றவர், 'திரு. சுப்ரமண்யம் அவர்கள் கொடுத்த தீர்மானம்தானே' என்று சொல்லி விட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவர் இருக்கின்ற நிலை அது மாதிரி. 'சுப்ரமண்யம் தானே தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றச் செய்தார். அவரைக் கேளுங்கள்' என்று சொல்லி விடக் கூடிய அளவிலே தான் முதல் அமைச்சர் அவர்கள் இருக்கிறாரே தவிர, அவரும் தம் கட்சியைச் சார்ந்தவர், அவர் கொடுத்த தீர்மானத்தைத்தான் நிறைவேற்றினோம் என்று சொல்ல வில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் உறுப்பினர் அவர்கள், மத்திய அரசாங்க அமைச்சராக இருக்கும் திரு. சுப்பிரமணியம் அவர்களை நன்றாகத் தெரிந்தவராக இருக்கிறார். அவருக்கு எழுதியோ அல்லது நேராகச் சொல்லியோ அவரைவிட்டு எனக்கு ஒரு கடிதம் எழுதிவிடச் சொல்லிவிட்டும். திரு. சுப்பிரமணியம் அவர்கள் எப்படிச் சொல்கிறாரோ அதே மாதிரி நான் செய்கிறேன். 'அய்யம்பேட்டை விவகாரம்' என்று என் சக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த அய்யம்பேட்டை விவகாரம் வேண்டாம் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சபாநாயகர் அவர்களே, ஐயம்பேட்டை விவகாரத்தில் தேர்ச்சி பெற்ற முதல் அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்கிறேன். சுப்பிரமணியம் அவர்கள் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டிய அளவில் அவர் கீழிறங்கியிருக்கிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. சட்டமன்ற புத்தகம் இருக்கிறது. தீர்மானம் இருக்கிறது. அந்தத் தீர்மானத்தைப் பார்க்கட்டும். 'அய்யம்பேட்டை விவகாரம்' என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று நான் சொல்லிக் கொள்கின்றேன்.

**திரு. சா. கணேசன் :** இரண்டு பேருமே அய்யம்பேட்டையை விட்டுவிடலாம். அய்யம்பேட்டையைச் சந்திக்கு இழுக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு.)

**கனம் சபாநாயகர் :** அய்யம்பேட்டையை விட்டு, பேசவேண்டிய விஷயத்திற்கு வருவோம். (சிரிப்பு)

**திரு. கோ. சி. மணி :** கனம் சபாநாயகர் அவர்களே, அய்யம் பேட்டையைக் குறித்து ஏதோ தரக் குறைவாகக் கொள்ளக் கூடாது என்று நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். 'அய்யம் பேட்டை விவகாரம்' என்றால் என்ன என்றே புரியாமல் சொல்கிறார்கள் என்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தரக் குறைவாகக் குறிப்பிடுவது என்பது என்னிடம் எப்போதும் இல்லை. தரக் குறைவு வேறு இடத்தில் இருக்கலாம். 'அய்யம்பேட்டை' என்று சொன்னாலும் அய்யம்பேட்டைக்கு ஒன்றும் குறைவு இல்லை.



17th October 1964]

**திரு. மு. கருணாநிதி :** அய்யம்பேட்டையைக் குறித்து இவ்வளவு சந்தேகம் வந்த பிறகு, அந்த விவகாரம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கிவிட்டால் அது சால்புடையதாக இருக்கும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சம்பந்தம் இல்லாத இரண்டு பேருக்கு சண்டை மூட்டிவிடுவது அய்யம்பேட்டை விவகாரம்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** தொழில் அமைச்சர் மாவட்டத்திலுள்ள அய்யம்பேட்டையைக் குறிப்பிடுகிறார்களா? அல்லது முதல் அமைச்சர் மாவட்டத்திலுள்ள அய்யம்பேட்டையைக் குறிப்பிடுகிறார்களா?

**கனம் சபாநாயகர் :** எந்த அய்யம்பேட்டையாக இருந்தால் என்ன? எந்த அய்யம்பேட்டையாக இருந்தாலும், எந்த ஊரையும் கேவலப்படுத்துவதில்லை. ஏதோ 'கும்பகோணம்' என்கிறார்களே, அது போல் இதுவும் இருக்கலாம். (சிரிப்பு)

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** அய்யம்பேட்டையை முதலமைச்சரிடம் விட்டுவிட்டு நான் என்னுடைய பேச்சை தொடங்கி விடுகிறேன்.

இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நான் பக்கத்திலே வைத்துக்கொண்டு, அதன் அடிப்படையிலேதான் பேசுகின்றேன். நாம் நிறைவேற்றின அந்தத் தீர்மானம் என்ன ஆயிற்று? அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சமயத்தில் நமக்கெல்லாம் தெரிந்தது இப்பொழுது தெரியவில்லை என்று அர்த்தமா? அப்பொழுது தெரியவில்லை. இப்பொழுது தான் புத்திசாலித்தனம் வந்திருக்கிறது என்று நினைத்துக்கொண்டு இங்கு சிலர் இந்தி வேண்டுமென்று சொல்கிறார்களா? ஆகையால் நான் சொல்கிறேன். இந்த மன்றத்தினுடைய உரிமையைப் பாதிக்கின்ற வகையில் மத்திய சர்க்கார் நடந்துகொள்கிறார்கள். இந்த மன்றத்தினுடைய வளர்ச்சியை; இந்த மாநிலத்தினுடைய மொழி வளர்ச்சியைப் பாதிக்கின்ற வகையிலேதான் அவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தின் மூலமாக மீண்டும் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். 200 ஆண்டு ஆங்கிலேய ஆட்சிக்குப் பின்பும் ஆங்கிலக் கல்வி பெறாத மக்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படியிருக்க, ஆங்கிலத்தின் நிலையைப் பெறாதிருக்கின்ற இந்தியைப் புகுத்துவதன் மூலமாக நிலைமை என்ன ஆகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்னும் 200 ஆண்டு காலத்திற்கு தமிழ்நாட்டினை, இந்தி பேசாத மக்கள் வசிக்கும் பகுதியினை அடிமைக்காடாக வைத்து ஆளுவதைத்தான் மத்திய சர்க்கார் தங்களுடைய குறிக்கோளாக வைத்திருக்கிறார்கள், அதற்கு அடையாளமாகத்தான், அடிமைச் சின்னத்தைப் போலத்தான் இன்றையதினம் அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று கூட நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். என்ன காரணத்திற்காகக் கொண்டு வருகிறார்கள்? ஏன் இவர்கள் பேசக் கூடாது? [illegible]

கழகத்தினைக் குறித்து தரமான எதிர்க் கட்சிகள் இல்லை என்று குறிப்பிட்டதாக நேற்றைய தினம் பத்திரிகையில் பார்த்தேன். 'தரமான எதிர்க்கட்சி' என்னும்போது, இவர்கள் எந்த 'ஸ்கேலை' வைத்துப் பார்க்கிறார்கள்? என்று நான் கேட்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் 'ஸ்கேல்'-படி 'தரமான எதிர்க்கட்சி' என்று எதை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? நீங்கள் எடுத்த முடிவை ஆதரிக்கின்ற திராவிட முன்னேற்ற கழகத்தாரை பார்த்தா தரமான எதிர்கட்சி இல்லை என்று சொல்லுகிறீர்கள்? நீங்கள் நிறைவேற்றிய தீர்மானத்தை நீங்கள் வற்புறுத்துவதற்கு உங்களுக்குத் திராணி இல்லை, உங்களிடத்திலே தைரியம் இல்லை. இருந்தால் எதிர்க் கட்சியைப் பார்த்து இப்படி சொல்வீர்களா? இந்த அமைச்சரவை . . .

**கனம் சபாநாயகர்:** 'நீங்கள்', 'நீங்கள்' என்று கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறார். 'நீங்கள்' என்றால் என்னைக் குறிப்பதாக ஆகும். கனம் அங்கத்தினர் அவ்வாறு பேசுவது சரியல்ல. அவ்வளவு தரமானதும் அல்ல.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** உங்கள் மூலமாகத்தான் ஆட்சியாளருக்குச் சொல்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** என் மூலமாகத்தான் கனம் அங்கத்தினர் பேசுவதாகச் சொன்னாலும், கனம் அங்கத்தினர் பேசிக் கொண்டிருக்கிற முறையிலேயே பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** ஆகையால், ஆங்கிலம் தொடர்ந்து இருக்கலாம் என்ற இந்தச் சட்டத்தை நிறைவேற்றவேண்டிய
9-30 a.m. அவசியமே கிடையாது. அவர்கள் அரசியல் சட்டத்தைத் திருத்தி இருக்கலாம், அல்லது பாராளு மன்றத்திலே அபிஷியல் லாங்வேஜாக ஆங்கிலமும், இந்தியும் இரண்டு தேசிய மொழிகள் இருக்கலாம் என்று வைத்திருப்பார்களானால் இந்தச் சந்தர்ப்பமே எழுவதற்கு இடமில்லை. ஒரு வேளை நம் மாநிலத்தில் உள்ள அமைச்சர்கள் சொல்ல முடியும். இந்தக் கருத்தை நாங்கள் வற்புறுத்தியும் மத்திய அரசாங்கத்தில் உள்ளவர்கள் கேட்கவில்லை என்பதாக. இவர்கள் சொல்லியும், முன்னாள் முதல் அமைச்சர் சொல்லியும் அவர்கள் விட்டுவிட்டார்களே என்று சிந்திக்கிற போது நாம் வேதனைப்படத்தான் வேண்டியிருக்கிறது. இனி முதல் அமைச்சர் அவர்களுக்கு வரப்போகிற கடிதங்கள், சுற்றறிக்கைகள் எல்லாம் கூட இந்தியில் வரப்போகிறது என்று சொல்கிறார்கள். நம்முடைய முதல் அமைச்சர் இந்தி பண்டிதரா? மைசூர் முதல் மந்திரி அல்லது கேரள முதல் மந்திரி இவர்கள்தான் இந்தி பண்டிதர்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதுவரைக்கும் ஒரு கடிதம் கூட எனக்கு இந்தியில் வரவில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** வருமுன் காப்பதுதான் விவேகம். அதுவே அமைச்சர்களுடைய இலக்கணமும் ஆகும். ஆகவேதான் சொல்கிறேன். இந்தியில் கடிதங்களும், சுற்றறிக்கைகளும் 1965





ஜனவரி 26-க்குப் பின் வருவதற்கு முன் நாம் அதைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். வந்த பின் பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்துவிட்டால், இந்தியில் கடிதம் வர ஆரம்பித்துவிட்டால், "ஹலோ மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி இதில் என்ன எழுதி இருக்கிறது, கொஞ்சம் படித்துச் சொல்லுங்களேன்" என்று என்னிடம் எடுத்துக்கொண்டு ஓடி. வரவேண்டுமா? (சிரிப்பு) ஆகையால்தான் இப்போதே தடுங்கள் என்று சொல்கிறேன். இந்தி மொழி திணிக்கப்பட்டால் அதனால் இந்தி பேசாத நம் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டுமா அல்லது ஸ்டேட்ஸ்மென் என்ற அளவில் இதைப் பார்க்க வேண்டுமா என்று யோசிக்க வேண்டும். இது ஏதோ ஒரு அரசியல் காரணத்திற்காகக் கொண்டு வந்த மசோதா இல்லை. அரசியலில் இருக்கிறவர்கள் எப்போதும் அடுத்து வருகிற தேர்தலையேதான் பார்ப்பார்கள். ஆனால் உயர்ந்த ஸ்டேட்ஸ்மென்னுடைய லட்சியம் தேசத்தை, சமுதாயத்தை ஒரு நூற்றாண்டு கால நல் வாழ்வைச் சிந்தையில் கொண்டு சிருஷ்டிப்பதாகும். தேர்தலைப் பற்றிய எண்ணத்தைவிட அவர்களுக்கு தேசத்தைப் பற்றிய எண்ணமே மிகுதியாக இருக்கும். இது தேர்தலைக் கருத்தில் கொண்டு கொண்டுவரப்பட்டுள்ள மசோதா இல்லை. தாய் மொழியை அழிக்கும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள மசோதா இல்லை. தாய் மொழியை அழிக்கும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவும் இல்லை. அரசியலை மறந்துவிட்டு நம்முடைய தேசத்தை, நம்முடைய மக்கள் சமுதாயத்தை நாம் எவ்வாறு நீண்ட காலக் கண்ணோட்டத்தோடு உருவாக்குவது என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் இந்த மசோதா எவ்வளவு அவசியமானது என்பதை நாம் உணரக் கூடும்.

இன்று காலையில் பேப்பரைப் பார்த்தவர்களுக்கு அதிர்ச்சி ஏற்படக்கூடிய வகையில் செய்தி வெளியாகி இருப்பது தெரிந்திருக்கும். இங்கிலாந்து தேசத்தில் 13 வோட்டு மெஜாரிட்டியில் லேபர் கட்சி பதவிக்கு வந்திருப்பது தெரியும். இன்றைய தினம் உலகத்தில் எத்தகைய மாறுதல் ஏற்பட்டால் தான் நமக்கு என்ன என்று நாம் சும்மா இருக்க முடியாது. உலகத்தில் ஏற்படுகிற மாறுதல்கள் ஒவ்வொன்றும் நம்மையும் பாதிக்கிறது. அதற்குக் காரணம் நாம் பலவகையில் உலக நாடுகளோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். இந்தத் தொடர்பு நாளுக்கு நாள் பல வகையில் உரம் பெற்று வருகிறது. இப்படி இருக்கிறபோது எதிர்காலத்தை தீர்க்கமாக யோசித்து பார்க்கிற ஸ்டேட்ஸ்மென் எவரும் ஆங்கிலம் வேண்டாம் என்று சொல்லமாட்டார்கள் என்பது உறுதி. அரசியல் அமைப்புச் சட்டப் பிரகாரம் 1965 ஜனவரி 26-ஆம் தேதிக்குப் பிறகு இந்தி நம்முடைய தேச நிர்வாக மொழியாக வரும். இந்த மசோதாவினால் நம்முடைய ராஜ்யத்தில் ஆங்கிலமும் நீடிக்கும். இது அவசியம் இல்லை என்று யாரும்

சொல்லமாட்டார்கள். 1965 ஜனவரிக்குப் பிறகு ஆங்கிலமும் போய் இந்தி மொழியோ, தமிழோ அந்த ஸ்தானத்தைப் பெற்றிருக்கவில்லை என்றால் வீணான குழப்பங்கள்தான் உண்டாக நேரிடும். ஆகவேதான் ஆங்கிலமும் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என ஒரு ஸ்டேட்ஸ்மென் பாயின்ட் ஆப் வியூவில் இருந்து பார்த்தால் தெரியும். இதில் கட்சிப் பிரச்சினைக்கே இடம் இல்லை. இந்தி மொழி நம்முடைய தேசிய மொழி. சபாநாயகர் அனுமதிக்கமாட்டாரோ என்ற எண்ணத்தில்தான் நான் இப்போது இந்தியில் பேசவில்லை. இல்லையானால் என்னுடைய இந்தப் பேச்சை இந்தியிலேயே பேசியிருப்பேன். சட்டசபையில் இந்தி நிருபர் இல்லையாதலால் நான் இந்தியில் பேசினால் அது ரெக்கார்டு ஆகாமல் போகக்கூடும். ஆகவே இந்தியில் பேசவேண்டாம் என்று சொல்வார்களோ எனப் பேசவில்லை. (இந்தியில் பேசுங்கள் என்பதாக திரு. சா. கணேசன் அவர்கள் கையைக் காட்டினார்கள்.) நான் இந்த சட்டசபை மெம்பர்களைப்பற்றிய குறிப்புகள் அடங்கிய "Who is Who" என்ற புத்தகத்தைப் பார்த்தேன். திரு. சா. கணேசன் அவர்களைப்பற்றிய குறிப்பில் இந்தி வாடையே காட்டவில்லை. இப்போது இருக்கிற குழப்பமான நிலைமையில் இந்தி வேண்டுமா, ஆங்கிலம் வேண்டுமா என்று சாதாரண ஜனங்களிடத்தில் போய்க் கேட்டால் அவர்களால் எதையும் தீர்மானமாகச் சொல்ல முடியாது போகும். நாம்தான் நீண்டகாலக் கண்ணோட்டத்தை வைத்துக்கொண்டு நம் நாடு எப்படி இருக்க வேண்டும், நம்முடைய தேசத்தை எப்படி உருவாக்க வேண்டும் என்பதை யோசித்துத் தீர்மானம் செய்ய வேண்டும். அந்தக் கண்ணோட்டத்தில்தான் நான் இப்போது கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

தமிழ் நம்முடைய தாய் மொழி. அது இந்த ராஜ்ய மொழியாக இருக்கும். அந்த ஸ்தானத்தை அது பூரணமாகப் பெறுகிற வரையில் ஆங்கிலமும் நீடிக்கும். இந்தி நம்முடைய தேச மொழி. அது ஏதோ கற்பதற்குக் கடினமான மொழி என்பதாக நினைக்க வேண்டாம். நான்கு மாதத்திற்கு முன்பு என்னுடைய பிராந்தியத்தைச் சேர்ந்த ஒரு மாணவன் பிலாய் உருக்கு ஆலைக்கு வேலைக்குப் போனான். அந்த வட்டாரத்தில் நான்கு மாதம் இருந்துவிட்டு திரும்பி வந்திருக்கிற பொழுது அவன் பேசுகின்ற இந்திப் பேச்சு மிகவும் பெருமைப்படக் கூடியதாக இருக்கிறது. நான்கு மாதத்தில் அவர் படித்துக் கொண்டிருக்கிற இந்தி அமோக இந்தியாக இருக்கிறது. இந்தி மொழி தெரியாது என்றால் இப்படி அங்கே போய் பழகி தொழில் செய்ய வாய்ப்பு ஏற்பட்டு இருக்காது. ஆகவே தான் நம்முடைய மாநிலத்தில் உள்ள மாணவர்கள் பிற மாநிலங்களிலும் சென்று பழக சந்தர்ப்பம் உள்ள வகையில் இந்தியைக் கற்பதற்கு உற்சாகம் கொடுக்க வேண்டும். இன்றைய தினம் சாதாரணமாக எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்தவர்களுக்கே ஆங்கில மோகம் இருக்கிறது, இந்தி வெறுப்பு இருக்கிறது என்றால் மிக்க ஆங்கிலப் புலமை பெற்ற ராஜாஜி போன்றவர்களுக்கு ஆங்கிலத்தில் பற்றுதல் இருக்கத்தான் செய்யும். ராஜாஜி போல்



இருக்கிறவர்கள், என் போன்றவர்களுக்கு சாகிற வரை ஆங்கில மோகம் தீரவே தீராது. பிலாய்க்குப் போய் வந்த வாலிபனைப் பார்த்தால் இந்தி வேண்டாமென்று யாரும் சொல்ல மாட்டார்கள். அந்த வாலிபனுக்கு அரசியல் தெரியாது. பிலாய்க்குச் சென்ற வாலிபனைப்போல் லட்சக்கணக்கான தமிழ் மக்கள் வட இந்தியாவில் வேலை செய்கிறார்கள். இந்தியை விட்டால் வேறு எந்த மொழியும் இல்லை. குறுகிய மனப்பான்மை உள்ள அரசியல் பேச்சு வேண்டாம். ஸ்டாடஸ்கோ மெயின்டைன் பண்ணி தமிழ், ஆங்கிலம் அதற்குப் பிறகு இந்தி என்று மூன்றுக்கும் சமமான மரியாதை கொடுத்து நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த வேண்டும். இந்த மசோதாவை ஆதரிக்கிறேன் என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. வி. எஸ். எஸ். மணி**: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1965 ஜனவரிக்குப்பின் தமிழக சட்டமன்றத்தில் தொடர்ந்து ஆங்கிலத்தைப் பயன்படுத்தவேண்டுமென்ற இந்த மசோதாவை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்ற இக்கட்டான நிலை உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஆதரிப்பது என்றால் நிச்சயமாக ஆங்கிலத்தை நாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலை இருக்கிறது. இதை எதிர்த்தால் நமக்கு அந்நிய மொழியான இந்தி மொழி அந்த இடத்தை பிடித்துவிடும். எனவே நமது சட்ட மன்றத்தில் முழுக்க முழுக்க தமிழைப் பயன்படுத்தக்கூடிய நிலை வரும் வரையில் ஆங்கிலமே இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. ஆங்கிலம் மாநிலத்திற்கு மாநிலம் தொடர்பு மொழி; அகில உலகத்திற்கும் தொடர்பு மொழி என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இன்றைய நிலையிலே ஆட்சி மொழியாக இந்தி இருக்க வேண்டுமென்று திட்டமிட்ட காரணத்தால், தென்னகத்திலே இந்தி திணிக்கப்படுகிற காரணத்தால் அதை எதிர்த்துப் போராடுகின்ற மக்களின் குரலை வட நாட்டார், டில்லி சர்க்கார் ஏற்றுக்கொள்வதில்லை என்று நினைக்கும் போது உண்மையிலேயே விசனிக்கக்கூடிய நிலைதான் ஏற்படுகிறது. இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடுகிற ஒரு காரியம் ஒரு தனிப்பட்ட கட்சியை மட்டும் சார்ந்ததல்ல; தமிழகத்தில் பிறந்த தமிழ் மக்கள் எல்லோரும் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாயினும் போராட்டத்தில் ஈடுபடக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தமிழனுடைய சுய மரியாதையைக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால் ஒவ்வொரு தமிழ் மகனும் இந்த போராட்டத்தில் ஈடுபடவேண்டும். இந்தித் திணிப்பால் தமிழ் மொழி பாதிக்கப்படும் என்ற கருத்து எல்லோராலும் சொல்லப்பட்டு வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கருத்தைக் கூற ஆசைப்படுகிறேன். நீதித் துறையிலே நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தற்போது ஆங்கிலத்தில் உள்ள சட்டங்கள் எல்லாம் இந்தியிலே மொழி பெயர்க்கப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றங்கள் அந்த மாநிலத்திலே இந்தி மொழியாக்கப்பட்ட சட்டங்களை வைத்துச் செயல்படுத்தினால் மாநிலத்திற்கு மாநிலம் உள்ள உயர்நீதி மன்ற நீதிபதிகளுடைய நிலை என்னவாகும்? சென்னை மாநில உயர்நீதி மன்ற நீதிபதிகள் சுப்ரீம்

[திரு. வி. எஸ். எஸ். மணி] [17th October 1964

கோர்ட் நீதிபதிகளாக நியமிக்கப்படுகிறார்கள். இந்தியில் சட்டங்கள் இருந்தால் எப்படி விவாதித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள முடியும்? நீதி மன்றங்களில் மொழி பெயர்க்கப்பட்ட சட்டத்தை அமல்படுத்தினால் எப்படி இந்த நாட்டிலே ஒரு தேசிய ஒருமைப்பாடு அமைய ஏதுவாகும்? நிச்சயமாக தேசிய ஒருமைப்பாடு குலைந்து விடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீதி மன்றங்கள் ஒன்றுக்கொன்று கூறப்படுகிற ஜட்ஜ்மெண்டுகளை (தீர்ப்புகளை) இன்னொரு மன்றத்தில் எடுத்துக் காட்ட வேண்டுமென்றால் அது தற்போது உள்ளபடி ஆங்கிலத்தில் இருந்தால்தான் முடியும். அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் சொல்லப்பட்ட ஜட்ஜ்மெண்டை கல்கத்தா உயர்நீதி மன்றத்திலே எடுத்துக் கூறுகிறார்கள். கல்கத்தா உயர்நீதி மன்றத்திலே சொல்லப்படுகிற ஜட்ஜ்மெண்ட் தமிழகத்திலே சுட்டிக்காட்டப்படுகிறது. இந்த முறையெல்லாம் ஆங்கிலத்திலே இருக்கிற காரணத்தால் இருக்கிறதே தவிர, இந்தியிலே சட்டங்கள் வந்தால் நிச்சயமாக இந்த முறை இருக்க முடியாது. (கனம் சபாநாயகர்: அந்தப் பிரச்சினை இப்போது இல்லை; ஆங்கிலத்தைப்பற்றி மட்டுந்தான் இந்த மசோதாவிலே இருக்கிறது) எல்லா தமிழ் மக்களும் இந்திப் போராட்டத்தில் கட்சி சார்பற்று ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, ஆங்கிலத்தை தொடர்ந்து இந்த மன்றத்தில் உபயோகிக்க கோரும் இந்த மசோதாவை வரவேற்று, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER: The present Bill is for continuing English. But our discussion is not very much on that. It is all about the background of what is going to happen afterwards.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பத்து மணி வரை இந்த மசோதாவின் பேரில் மற்ற அங்கத்தினர்கள் பேசி, கனம் துணைத் தலைவர் அவர்கள் 10 மணிக்குப் பேசினார்கள் என்றால் அதற்குப் பிறகு நான் பேசி முடித்து விடலாம். அதற்குப் பிறகு வேறு மசோதாக்கள் இருக்கின்றன.

**திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த விவாதத்திலே பல உறுப்பினர்கள் கலந்து கொள்ள விருப்பப்படுகிறார்கள். ஆகவே, இன்னும் நாலைந்து உறுப்பினர்களைப் பேச அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** இந்தி வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி இன்னொரு நாள் பேசலாம். ஆங்கிலத்தை மேலும் நீடிக்க வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி இரண்டு வார்த்தைகளில் சொல்லிவிடலாம்.

***திரு. நா. மகாலிங்கம்:** கனம் சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் கொண்டுவந்திருக்கக் கூடிய ஆங்கிலம் 1965-ஜனவரிக்கு அப்பாலும் தொடர்ந்து ராஜ்ய சட்ட சபையில் உபயோகிக்கப்படுவதற்கு அனுமதி வேண்டும் என்று சொல்லக் கூடிய இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.



17th October 1964] [திரு. நா. மகாலிங்கம்]

இன்று அரசியல் சட்டம் இருக்கக் கூடிய சூழ்நிலையில் குறிப்பிட்ட காலவரையறைக்கு அப்பால் நம்முடைய சட்ட சபையில் தமிழ் உபயோகப்படுத்தலாம் அல்லது ஹிந்தி உபயோகப்படுத்தலாம், அதாவது ராஜ்ய மொழி அல்லது தேசிய மொழி ஆகிய இரு மொழிகளைத் தான் உபயோகப்படுத்தலாம் என்கிற முறையில் நமது அரசியல் அமைப்பில் இருக்கிறது. தொடர்ந்து ஆங்கிலத்தை உபயோகப்படுத்த வேண்டும் என்ற அபிப்பிராயம் நம்முடைய ராஜ்யத்தில் பெருவாரியான மக்களிடையே இருக்கிறது. அதன் காரணமாக இந்த அனுமதி கொடுக்கக் கூடிய சட்டத்தை மத்திய பார்லிமெண்ட்டிலே நிறைவேற்றியிருக்கிறார்கள். பார்லிமெண்ட்டிலே மட்டும் நிறைவேற்றுவது போதாது. இது ராஜ்ய சட்ட சபைகளிலெல்லாம் நிறைவேற்றப் படவேண்டும். இன்றைக்கு பல ஹிந்தி ராஜ்யங்களில் பார்க்கிறோம், தொடர்ச்சியாக ஆங்கிலம் மறுபடியும் சட்ட சபைகளில் பேசப்படுவதற்கு அனுமதி வேண்டும் என்று சொல்லும்போது அங்கே பெருவாரியான எதிர்ப்பு இருக்கிறது. இங்கு தமிழிலேயே நாம் பூர்ணமாக சட்ட சபையின் விவகாரங்களை நடத்த முடியும் என்று சொல்லக் கூடிய நிலை இருக்கிறது என்று சொன்னால் நாம் ஆங்கிலத்தைத் தொடர்ந்து உபயோகப்படுத்த வேண்டியதில்லை. நம் சட்ட மன்றங்கள், சட்டங்கள், சட்டங்கள் செய்யும் ஸ்தாபனங்கள் எல்லாம் தமிழிலேயே சட்டங்களைத் தயார் செய்யக் கூடிய நிலையில் பூர்ணமாகத் தயாராகாத நிலையில், தமிழ் மட்டும் போதும் என்று சொன்னால் சட்ட சபை நடவடிக்கைகள் பல தாமதப்படும். பல இடங்களில் சட்டங்கள் சரியாக இருக்காது. ஆங்கிலமானது சட்டத்திலே பல ஆண்டுகளாக உபயோகப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வார்த்தைக்கும் அர்த்தமானது கோர்ட்டுகளால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சட்டத்திலே இருக்கக்கூடிய ஒவ்வொரு வார்த்தைக்கும் அர்த்தம் கோர்ட்களால் நியாயாதிபதிகளால் நிர்ணயிக்கப்படவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட அர்த்தத்தை வைத்துக்கொண்டு நாம் சட்டங்கள் செய்யும்போதே பார்க்கிறோம், நம்முடைய பல சட்டங்கள், இது அரசியல் அமைப்புக்கு ஒவ்வாதது என்றும், இது அரசியல் அமைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது என்றும், ஏற்கெனவே ஆங்கிலத்தை சட்டம் செய்யும் போதே, கூட, பல சட்டங்கள் சரியில்லை என்றும் உயர் நீதி மன்றங்களும், சுப்ரீம் கோர்ட்டும் சொல்லுவதைப் பார்க்கிறோம். இவ்வாறு அர்த்தம் இல்லாமல் நாம் சட்டங்கள் செய்தோம் என்று சொன்னால், நாம் சட்டங்களை அமல் நடத்துவதற்கு பதில் ஒவ்வொரு தடவையும் நீதி மன்றங்களில் அடிப்பட்டுப் போகும் என்ற நிலைமை வரும். ஆகவே, நம் ராஜ்ய மொழி தமிழை நாம் சரியானபடி வளர்த்து அதை சட்டம் செய்ய உபயோகப்படுத்தும் நிலைமையைச் சீக்கிரமாகக் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும். அவ்வாறு அந்த நிலை வரும் வரையிலும் ஆங்கிலத்தை நாம் உபயோகப்படுத்தித் தான் ஆகவேண்டும். அதைத் தவிர வேறு வழியில்லை. அதையும் தவிர இவ்வாறு சட்டங்கள் செய்யும் போதும் எல்லா ஆங்கில வார்த்தைகளையுமே மொழி பெயர்க்க முயற்சி செய்தால் சிரமமாக இருக்கும். ஆங்கிலத்தையே எடுத்துப் பார்த்தால் லத்தீன் மொழியை சட்டங்கள் செய்வதிலே

அதிகமாக உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அதே போன்று பல வார்த்தைகளை நாம் லத்தீன் மொழியிலிருந்து உபயோகப்படுத்தலாம். ஆங்கில மொழியிலிருந்து உபயோகப்படுத்தலாம். அதில் தவறு ஒன்றும் கிடையாது. அவ்வாறு உபயோகப்படுத்துவது சரி என்று ஏற்றுக் கொண்டால், சீக்கிரமாக தமிழில் சட்டங்கள் செய்வது முடியும். இப்போது இன்னும் ஜில்லா நீதி மன்றங்களில் வக்கீல்கள் கூட அநேகர் தமிழிலேயே பேசக் கூடியவர்கள் தங்கள் வாதங்களை நிகழ்த்தக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அந்த நிலை இன்னும் உயர் நீதி மன்றத்தில் தான் வரவில்லை. அதன் பிறகு ரெக்கார்டு வைக்கும் மொழி ஆங்கிலமாக இருக்கிறது. அந்த இடத்திற்கு ராஜ்ய மொழி இன்னும் வரவில்லை. பல்வேறு காரியங்களுக்கு ராஜ்ய மொழியை உபயோகப்படுத்தவேண்டும். ராஜ்ய மொழி என்று சொன்னால் அந்தந்த மாகாணத்தின் மொழி. அந்த முறையில் ராஜ்ய மொழியை உபயோகப்படுத்தும் நிலை வந்தால் தான் நமது மாநிலத்தில், நமது சட்ட சபையில் தமிழில் சட்டங்களை உடனடியாகச் செய்ய முடியும். இப்போது இருக்கக் கூடிய சூழ்நிலையில் ஆங்கிலத்தைத் தொடர்ந்து உபயோகப்படுத்துவது என்பது அவசியமான காரியம். அதைத் தடுக்க முடியாது. தமிழில் இல்லை என்று சொன்னால் ஹிந்தி மொழியில் பல்வேறு சட்டங்களை மொழி பெயர்க்கக் கூடிய வேலை, வார்த்தைகளைத் தயார் செய்வது போன்ற வேலைகள் மத்திய சர்க்காரில் நடைபெற்று வருகிறது. ஆகவே ஆங்கிலத்தைத் தொடர்ந்து உபயோகப்படுத்த ஒத்துக்கொள்ளவில்லை என்றால் ஹிந்தியை சட்டம் செய்வதற்கு உபயோகப்படுத்தும் நிலை வரும். இங்கே பல அன்பர்கள் அந்த ஹிந்தி மொழியைத் தீவிரமாக எதிர்க்கும் மனப்பான்மையுடன் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். உண்மையில் நான் இருக்கக் கூடிய காங்கிரஸ் கட்சியின் லட்சியம், அபிலாஷை இவைகளை எண்ணிப் பார்த்தால், ஹிந்தி மொழி தான் இந்திய தேசத்துடைய தேசிய மொழி என்பது நீண்ட காலமாக ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம் ஆகும். தேசியப் போராட்ட காலத்திலேயே தேசிய மொழி ஹிந்துஸ்தானி என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. காங்கிரஸினுடைய பல்வேறு அடிப்படை வேலைகள் என்று சொல்லக் கூடியதில் தேசிய மொழியைப் பரப்புவது அவசியமான காரியம் என்பதையும் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அவ்வாறு இருக்கும்போது, நம்முடைய ஒரு ராஜ்யத்தில் தான் ஹிந்திக்கு எதிர்ப்பு இருக்கிறதே தவிர வேறு எந்த ராஜ்யத்திலும் ஹிந்திக்கு பிரமாதமாக எதிர்ப்பு இருக்கிறது என்று தெரியவில்லை. அது மட்டுமல்லாமல் நம் ராஜ்யத்திலே அதிகமாகப் படிக்க கூடிய மாணவர்களுக்கு நம் ராஜ்யத்திலேயே வேலை பெறக்கூடிய வாய்ப்புகள் இல்லை. நம் ராஜ்யத்தின் ஜனத்தொகை சுமார் 64 லட்சம் 1961-ம் வருஷ சென்ஸஸ் பிரகாரம். இப்போது அது இன்னும் கொஞ்சம் ஜாஸ்தி ஆகலாம். படித்த வாலிபர்களில், அதிலும் தொழில் துறைகளில் படித்த வாலிபர்களில், மருத்துவத் துறையில் வேண்டுமானால் இங்கேயே வேலை கிடைத்து விடுகிறது; ஆனால் பொறியியல் கல்லூரியில் படித்தவர்கள்கூட நம் ராஜ்யத்திலேயே வேலை பெற முடியவில்லை.



அவர்கள் வெளி ராஜ்யங்களுக்குப் போக வேண்டியிருக்கிறது. அந்த முறையில் வெளி ராஜ்யத்திற்கு போய், அங்குள்ள மக்களுடன், அந்தத் தொழிலாளர்களுடன் பழகவேண்டுமென்று சொன்னால், அந்தப் பிரதேச மொழி படித்தாகவேண்டும். ஆகவே, ஹிந்தி வேண்டாம் என்று சொல்லுவது விவேகமாக இருக்கலாம். அது வீரமாகவும் இருக்கலாம், ஆனால் நம்முடைய எதிர்கால சந்ததிகளின் வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்று சிந்தித்துப்பார்த்தால் அது அவர்களின் வாழ்க்கைக்கு உபயோகமாக இருக்கும் என்று ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட ஹிந்தி வேண்டும் என்று சொன்னால், இப்போது வைத்திருக்கும் நிலையில் எவ்வாறு இருக்க வேண்டும், நாகரி எழுத்தை வைத்துக் கொள்வதிலும் அந்த பாஷையில் நியூட்டர் ஜெண்டர் கிடையாது, இப்படி பல கஷ்டங்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் மாற்றியாக வேண்டும். இண்டர்நேஷனல் டெர்மினாலஜியுடன் ஆங்கில எழுத்து இருந்தால் சுலபமாக இருக்கும் படிக்க. இது மத்திய பார்லிமெண்ட் கவனிக்க வேண்டிய விஷயமே தவிர நாம் கவனிக்க வேண்டியது ஒன்று அல்ல. தமிழை சீக்கிரமாக வளர்த்தால் தொடர்ச்சியாக ஆங்கிலத்தை உபயோகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்காது. இன்று பலர் தீவிரமாக ஆங்கிலம் தொடர்ந்து இருக்கக் கூடாது என்ற அபிப்பிராயத்தை தெரிவித்திருக்கிறார்கள். அந்த அபிப்பிராயம் எனக்கும் உண்டு. உண்டு என்று சொன்னால், ஆங்கிலம் இருக்கும் இடத்தை தமிழ் மொழிக்கு அளிக்கவேண்டும் என்கிற யாருடைய அபிப்பிராயத்திற்கும் என்னுடையது குறைந்தது அல்லது. ஆனால் நடை முறையில் காரியத்தை வெற்றிகரமாகச் செய்ய அந்தத் தகுதிக்கு நம் மொழியைத் தயார் செய்வது அவசியம். அந்த மாதிரி தயார் செய்ய இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். இப்போது எல்லையில்லாமல் உபயோகப்படுத்தவேண்டும் என்று இல்லாமல் 5 வருஷம் அல்லது 10 வருஷம் என்று வரையறுப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன். சட்ட சபையில் ஆங்கிலத்தை எவ்வளவு காலம்தான் உபயோகப்படுத்திக் கொண்டிருப்பது? ஆகவே 5 வருஷம் அல்லது அதிகமாகப் போனால் 10 வருஷம் என்று இருக்கவேண்டும் என்று சொல்லி, தற்போதைக்கு ஆங்கிலம் தொடர்ந்து இருந்தால் தான் உபயோகமாக இருக்கும் என்று சொல்லி எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. எம். எஸ். செல்வராஜன்** : கனம் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய ஆங்கில நீடிப்பு மசோதாவை மத்திய சர்க்கார் கொண்டு வந்ததற்கு அனுசரணையாக இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. நமது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மொழிக்கொள்கை தெளிவாகவே இருக்கிறது. ராஜ்ய அரசாங்கம் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ராஜ்யங்களை பொறுத்தவரையில் தாய்மொழியை ராஜ்ய ஆட்சிமொழியாகவும், மத்திய சர்க்கார் தொடர்பு மொழியாக இந்தியும், சர்வ தேச தொடர்பு மொழியாக ஆங்கிலமும் நீடிக்க வேண்டும் என்பது தான் அரசாங் 10–00 a.m.

கத்தின் கொள்கை. ஆகவே இந்தக் கருத்தில் தான் இன்றைய தினம் வந்திருக்கின்ற மசோதாவும் வற்புறுத்துகிறது. நாம் ஏற்று கொண்டிருக்கக்கூடிய கொள்கையை வலியுறுத்துகிற வகையில் தான் இன்றைய மசோதா அமைந்திருக்கிறது. இங்கு இருக்கக் கூடிய எதிர்க்கட்சித் தலைவர்களும், மெம்பர்களும் வெளியில் எடுத்துச் சொல்கின்ற கருத்துக்களை பார்க்கிற பொழுது மொழிக்கொள்கையைப் பொறுத்தவரையில் அவர்களுக்குள் ஒன்றுபட்ட கருத்து இல்லாமல் இருப்பதொன்று, அதோடு தெளிவில்லாமல் இருப்பதொன்று, தெளிவற்ற நிலைமையில்தான் இன்னும் அவர்கள் இருந்து கொண்டிருப்பதாக நான் கருதுகிறேன். இந்த சபையைப் பொறுத்தவரையில் சோஷலிஸ்ட் அங்கத்தினர் கனம் நல்லசிவம் அவர்கள் தமிழ் மொழி தொடர்பு மொழியாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். ஆனால் அவர்களுடைய தலைவர் அவர்கள், அகில இந்திய ரீதியில் இந்தி கட்டாய மொழியாக சீக்கிரமாக வரவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் தொடர்பு மொழியாக இருக்கவேண்டும் என்று கூறுவோமேயானால் ஒவ்வொரு மாகாணத்திலுள்ளவர்கள் தங்கள் தங்கள் மொழி தொடர்பு மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் 1963-ம் ஆண்டு சேலத்தில் தீர்மானம் போட்டு, 14 மொழிகளும் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். இன்னும் அடுத்த பிரதான எதிர் கட்சியாக இருக்கின்ற சுதந்திரா கட்சியின் தலைவர்கள், வெளியில் கூட்டங்களிலும், மாநாடுகளிலும் வேறுவிதமான கருத்தைத் தெரிவித்து வருகிறார்கள். முத்தமிழ் விழா கூட்டத்திலும், சட்டக் கல்லூரியில் நடந்த கூட்டத்திலும் கலந்து கொண்டுபேசிய கனம் ராஜாஜியும் அண்ணாத்துரை அவர்களும் ஒரே கருத்தைத் தான் வலியுறுத்தினார்கள். கனம் ராஜாஜி அவர்கள் நிச்சயமாக ஆங்கிலம்தான் இந்திக்குப்பதிலாக நிற்கும் என்ற கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். பின்னால் பேசிய அண்ணாத்துரை அவர்களும் எனக்கும் ராஜாஜி அவர்களுக்கும் மொழிக் கொள்கையைப் பொறுத்தளவில் ஒரே கருத்துத்தான் என்றும் பேசியிருக்கிறார்கள். ராஜாஜி அவர்கள் ஹிந்திமொழி தொடர்பு மொழியானால் தேசத்தின் ஐக்யம் சிதறிவிடும் என்கிறார். காங்கிரஸ் தேசிய ஐக்கியத்திற்கே ஹிந்தி உதவும் என்கிறது. தேசத்தின் ஒருமைப்பாட்டைப்பற்றி தேசப் பிரிவினையை விரும்புவர்களுக்கு என்ன கவலை?

**கனம் சபாநாயகர்:** வெளியே பேசியதை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னால் அதைப்பற்றி எல்லாம் எதிர்த்துச் சொல்வதற்கு இங்கே அவர்கள் யாரும் இல்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** எல்லா மொழிகளும் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று கருத்தை ஏற்றுக்கொண்டால், ஏறக்குறைய நம் நாட்டில் இன்றைக்கு 400, 500 பேர்கள் பேசக்கூடிய சமஸ்கிருதத்தையும் ஒரு ஆட்சி மொழியாகத்தான் வைத்துக்கொள்ளவேண்டும். எதிர்க்கட்சியினர் இதையெல்லாம் புரிந்தேயிருப்பார்கள் என்று எண்ணுகிறேன். ஆகவே மொழிக் கொள்கையைப் பொறுத்தளவில், தேசம் ஒன்றாக இருக்கவேண்டும் என்ற நம்பிக்கையில்தான் இன்னும் ஹிந்தி பூரண தகுதிபெறுகிற வரை ஆங்கிலமும் நீடித்து பொதுமொழியாக இருக்கவேண்டும் என்று நினைத்து அதை நீடித்து வைத்துக்கொள்வதற்கு மசோதா கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் எதிர்க்கட்சியில் தெளிவான கருத்தும் இல்லை, ஒற்றுமையான கருத்தும் இல்லை. இந்த நிலையில் மும்மொழி கொள்கைதான் நமக்கு சிறந்ததாக இருக்கும் என்று எண்ணித்தான் நாம் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவை எதிர்ப்பின்றி எல்லோரும் ஆதரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.





**திரு. க. ர. நல்லசிவம்:** மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. செல்வராஜன் அவர்கள் பேசும்போது, எங்கள் தலைவர் இந்தி மொழிதான் பொது மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் நாங்கள் இங்கே சொல்வது வேறாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். இதில் நான் சொல்ல விரும்புவது, இந்தி பேசாத மக்கள் எப்போது இந்தியை வேண்டும் என்று சொல்லுகின்றார்களோ அப்போது இந்தி பொது மொழியாக வரவேண்டும் என்றுதான் எங்கள் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. நானும் அந்தக் கருத்தைத் தான் கொண்டிருக்கிறேன். ஆகவே நான் சொல்வதற்கும் எங்கள் தலைவர் அவர்கள் சொல்வதற்கும் வேறுபாடு இருக்கிறது என்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. உ. சண்முகம்:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டம் 1965 ஜனவரி 26-ம் தேதிக்குப் பின்னால் வரவிருந்த பேராபத்தை தவிர்ப்பதற்கு இடைக்காலமாக இன்னும் ஆறு மாத காலத்திற்கு தள்ளி வைப்பதற்குத்தான் இப்போது இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று நான் எண்ணுகிறேன். 1965 ஜனவரி 26-க்குப் பின்னாலும் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும். இந்தச் சட்டத்தைக் குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்பதற்குப் பதிலாக ஏன் ஆதரிக்கிறார்கள் என்று பலர் நினைக்கக்கூடும். இவர்கள் ஏன் ஆதரிக்கிறார்கள் என்று புரியவில்லை என்று திரு. கோசல்ராம் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று திரு. நல்லசிவம் அவர்களும் குறிப்பிட்டார்கள்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

திராவிட முன்னேற்றக் கழகம் இதை ஆதரிப்பதும், வெளியே இந்தி வேண்டாம், தமிழ் வேண்டும் என்று கேட்பதும், இதற்காக அரசியல் சட்டத்தை கொளுத்துகின்ற போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதும் தமிழ்நாடு மட்டுமல்ல, இந்திய கண்டம் முழுவதுமே அறிந்து அதன் விளைவு என்ன ஆகும் என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. எங்களுக்கு இந்தியின் மீது எந்தவிதமான வெறுப்பும் கிடையாது. இந்தி பாஷாவது

படித்துக்கொள்கிறார்கள் என்றால் நாங்கள் அதற்கு எந்தவிதமான எதிர்ப்பும் நாங்கள் காட்டவில்லை. ஆனால் கட்டாயமாக இந்தியை படி என்று சொல்வதையும், இந்திதான் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்வதையும்தான் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக எதிர்த்தது, எதிர்த்துக்கொண்டிருக்கிறது, எதிர்த்துக்கொண்டிருக்கும் என்று முக்காலத்தையும் குறிப்பிட்டு நான் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி எதிர்ப்பு போராட்டம் நடத்திக்கொண்டிருக்கின்ற காலத்தில் இந்த சட்டம் கொண்டு வரப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் மொழி வெறியை தூண்டுகிறது, முன்னேற்றக் கழகத்தினர் மொழி வெறியர்கள் என்றுகூட சொல்லப்படுகிறது. எங்களைப் பொறுத்தமட்டில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மொழிவெறி முன்னேற்றக் கழகத்திற்கு இருக்குமானால் உத்திரப் பிரதேசத்தில் நடைபெற்றது போல இங்கும் அமளி நடைபெற்றிருக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் அம்மாதிரி அமளியில் ஈடு படாததிலிருந்து நாங்கள் மொழி வெறி படைத்தவர்கள் அல்ல என்பதை உணர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மொழியைப் பொறுத்த மட்டில் அரசியல் கண்ணோட்டம் இல்லாது, சாதாரணமாக எல்லா வல்லுனர்களும் சேர்ந்து செய்யக்கூடிய ஒரு நல்ல முடிவு இருக்குமானால், அதை முன்னேற்றக் கழகம் வரவேற்கத் தயாராக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த மட்டில் மொழியை அது அரசியலுக்குப் பயன்படுத்தாது. முன்னேற்றக் கழகத்தின் கொள்கை அதுவல்ல. இந்திதான் முன்னேற்றக் கழகத்திற்கு மேடைக்குக் கிடைத்திருக்கிற ஒரு கடைசி எலும்புத் துண்டு என்று நாங்கள் கருதவில்லை. முன்னேற்றக் கழகத்து மேடைக்கு இந்தி மட்டுமல்ல, பல பிரச்னைகள் இருக்கக்கூடும். இந்தி எதிர்ப்பு இல்லாத போனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மேடையே இல்லை என்று கூறுவதை தயவு செய்து நிறுத்திக்கொள்ள வேண்டும். இந்தியை நாங்கள் எதிர்க்கிறோம் என்றால், ஆளும் கட்சியினரோ, முதல் அமைச்சரோ எங்களுக்கு ஆதரவு அளிப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அரசியல் சட்டப் பகுதியை தீயிட்டுக் கொளுத்துவதாக இருந்தாலும் சரி, அரசாங்க அலுவலகங்களின் எதிரில் மறியல் செய்வதாக இருந்தாலும் சரி, அரசாங்கக் கட்சியைச் சார்ந்தவர்களோ அல்லது அமைச்சர்களோ எங்களை ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அவைகளுக்கு எதிர்ப்பு இருந்தாலும், நாங்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும், செய்தே தீரவேண்டும்.

நாட்டுக்கு வந்திருக்கிற பேராபத்து இந்தி மொழி. இந்தி மொழியால் தமிழ் கெடுமா, கெடாதா என்ற கேள்விக்கு நான் போகவில்லை. காரணம், தமிழ் மேதைகள், தமிழ் வல்லுனர்கள் அதைப் பற்றி சொல்லிவிட்டார்கள். திரு. மறைமலை அடிகள், திரு. சோமசுந்தர. பாரதியார், திரு. வி. கலியாணசுந்தரனார் போன்ற தமிழ்ப் புலமை வாய்ந்தவர்கள் முடிவு சொல்லிவிட்டார்கள். ஆகவே, இந்தியினால் தமிழ் கெடுமா, கெடாதா என்ற



கேள்விக்கு, விவாதித்ததற்கு நான் வரவில்லை. இந்தி நாட்டு ஆட்சி மொழியானால், இந்தி திணிப்பினால், தமிழ் கெடும், நிச்சயம் கெடும், அதனால் தமிழ் நாட்டிற்கு பெரிய ஆபத்து ஏற்படக்கூடும். அந்த பேராபத்தைத் தடுப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தைரியமாக, துணிந்து, இந்தி எதிப்புப் போராட்டம் நடத்துகிறது. எதிர்க்கட்சியினர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டம் பிசுபிசுத்துவிட்டது என்று கேலி பேசினாலும் சரி, முன்னேற்ற கழகம் இந்தி வெறி பிடித்தது என்று நையாண்டியாகப் பேசினாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் அதற்காக தன்னுடைய போராட்டத்திலிருந்து பின்வாங்காது ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கட்டும். ஆனால், இந்தியை திணித்து, ஆங்கிலம் இருக்கும் இடத்திற்கு இந்தி தகுதி என்பதைதான் நாங்கள் எதிர்க்கிறோம். பதினான்கு தேசிய மொழிகளில் ஒரு மொழியாகிய தமிழ் தொடர்பு மொழியாக இருக்கும் என்றால் நாங்கள் அதை இரு கரம் கூப்பி வரவேற்கிறோம். ஆங்கிலம் இருக்கும் இடத்தில் இந்தியை திணித்து, இந்திதான் தொடர்பு மொழி என்று சொன்னால், அதைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்காது, எதிர்த்தே தீரும். இதே போக்கில் அமைச்சர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால் என்னவோ மத்திய அரசாங்கத்தைச் சார்ந்த கல்வி அமைச்சர் திரு. சக்ளா அவர்கள் இன்னும் பயங்கரமாகப் பேசியிருக்கிறார்கள். பொது மொழி மட்டுமல்லாமல், பொது எழுத்து தேவை என்று திரு. சக்ளா அவர்கள் நினைக்கிறார்கள். வரக்கூடிய ஆபத்து ஒரு பேராபத்தாக இருக்கிறது. தமிழை தேவநாகரியில் எழுத வேண்டும் என்று குறிப்பிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தமிழை வீட்டில் வைத்துக்கொள்ளலாம், தமிழை இந்தியில் எழுத வேண்டும் என்று சொன்னால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த பேராபத்தை தடுக்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் தடுத்தே தீரவேண்டும், வேறு வழியே கிடையாது என்ற முடிவுக்கு வந்துதான் நாங்கள் இந்தியை எதிர்க்கிறோமே தவிர, வேறு எந்த காரணத்திற்காகவும் அல்ல என்பதை அருள் கூர்ந்து அரசாங்கம் தெரிந்து கொள்ளவேண்டும். எந்த ஒரு நிலைமையும் எதிர்பார்த்து நாங்கள் கொள்கையை மாற்றி கொள்பவர்கள் அல்ல. அம்மாதிரி மாற்றிக்கொண்டதும் இல்லை. அமைச்சராக வரவேண்டும், ஏதேனும் மாற்றம் ஏற்படவேண்டும் என்றும் எதையும் எதிர்பார்த்து எடுத்துக்கொண்ட கொள்கையை மாற்றிக் கொள்ளும் கோமாளி அல்ல திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை அரசாங்கத்திற்கு தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியை எதிர்க்கின்ற நேரத்தில் நான் ஒன்று அரசாங்கத்திற்கு தெளிவாக தெரியபடுத்த விரும்புகிறேன். கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டம் இடைக்கால சட்டம். இந்தியைக் கொண்டு திணிக்கும் ஆபத்தை அது தடுக்கும். ஆங்கிலத்தை நீடிக்கப்போகிறோம் என்று சொல்லப்படுகிறது. எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும் ஆங்கிலத்தை நீடிக்கலாம். ஆனால், தமிழை வளருங்கள். தமிழுக்கு ஆபத்து வராது, வராது என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். தமிழைப் பாதுகாத்து, தமிழை வளர்க்

[திரு. ப. உ. சண்முகம்] [17th October 1964

செய்யுங்கள், தமிழை போதனு மொழியாக்குங்கள், தமிழை ஆட்சி பீடத்தில் அமர்த்துங்கள், முதல் அமைச்சர் அவர்கள் குறுகிய காலத்திற்கு இருந்தாலும், அந்தக் காலத்திற்குள் இதைச் செய்து முடிக்கவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி.

SRI R. PONNAPPA NADAR : Mr. Deputy Speaker, Sir, I welcome the Madras State Legislature (Continuance of use of English) Bill, 1964, and congratulate the Hon. Chief Minister for bringing this useful legislation.

I would like to refer to Rule 61 of the Madras Assembly Rules. The rule reads as follows :—

"The business of the Assembly shall be transacted in English provided that any member may address the Assembly in any recognized language of the State or in Hindi, and provided further that the Speaker may permit any member who cannot adequately express himself in any of the aforesaid languages to address the Assembly in his mother-tongue."

So, from the rules that we have formulated, it is clear that English is the language for the transaction of business in this House. For the continuance of English, this legislation is very useful. So far as English is concerned. I would humbly plead that English is an international language, where there is treasure of knowledge and for the acquisition of scientific or technical knowledge, English is essential. I would once again reiterate that English should continue as long as it is possible. I would also incidentally refer to Part XVII of our Constitution, which deals with official language. Article 343 of the Constitution of India reads as follows :—

"343 (1) The official language of the Union shall be Hindi in Devanagiri script.

The form of numerals to be used for the official purposes of the Union shall be the international form of Indian numerals.

(2) Notwithstanding anything in clause (1), for a period of fifteen years from the commencement of this Constitution, the English language shall continue to be used for all the official purposes of the Union for which it was being used immediately before such commencement :

Provided that the President may, during the said period, by order authorise the use of the Hindi language in addition to the English language and of the Devanagari form of numerals in addition to the international form of Indian numerals for any of the official purposes of the Union.

(3) Notwithstanding anything in this article, Parliament may by law provide for the use, after the said period of fifteen years, of—

(a) the English language, or



17th October 1964] [Sri R. Ponnappa Nadar]

(b) the Devanagari form of numerals, for such purposes as may be specified in the law.

So, from Article 343, our official language is Hindi and whatever be the attitude expressed in the floor of the House towards Hindi by the Opposition, Hindi is recognised as the Official language in the Consititution. We swear and, owe allengiance to the Constitution. So far as the Constitution is binding on us, we have to respect the National language. Some more time may be given for the acquisition of Hindi knowledge and to adopt Hindi as the National language in all the places.

I would also refer to Article 345 of the Constitution, which refers to Regional Official language. Article 345 reads as follows :—

"Subject to the provision of Articles 346 and 347, the Legislature of a State may by law adopt any one or more of the languages in use in the State or Hindi as the language or languages to be used for all or any of the official purposes of that State :

Provided that, until the Legislature of the State otherwise provides by law, the English language shall continue to be used for those official purposes within the State for which it was being used immediately before the commencement of this Constitution."

So, English was used in this Legislature. I would also refer to Article 348 of the Constitution, which would solve many of the difficulties that have been expressed on the floor of this House. Article 348 reads as follows :—

"384 (1) Notwithstanding anything in the foregoing provisions of this Part, until Parliament by law otherwise provides—

(a) all proceedings in the Supreme Court and in every High Court,

(b) the authoritative texts—

(i) of all Bills to be introduced or amendments thereto to be moved in either House of Parliament or in the House or either House of the Legislature of a State,

(ii) of all Acts passed by Parliament or the Legislature of a State and of all Ordinances promulgated by the President or the Governor of a State, and

(iii) of all orders, rules, regulations and bye-laws issued under this Constitution or under any law made by Parliament or the Legislature of a State, shall be in the English language.

We get law reports in English. But now Hindi is also used for the purpose of legislation in Parliament and our laws are also translated into Hindi. So far as English is concerned, we will have to dispel all our hatred towards languages. We have got special aptitude; because many of us acquired knowledge because of political circumstances. English is rich because many eminent persons like Rabindranath Tagore and Sarojini Naidu have written

[Sri. R. Ponnappa Nadar] [17th October 1964

many poems in English and this will bear testimony to the English language. They were proficient in English and wrote many books in English, and they were able to do very well in English. Legislators like Rt. Hon. Srinivasa Sastri who was acclaimed as silver-tongued otaror during the British regime, Sri Satyamurthi and Sri Bhulabhai Desai were also proficient in English. Once again, I would say that English is an international language and it should be continued for some more time.

So far as English is concerned I would humbly say that it should be continued for some more time to come until it is replaced by the regional language. Regional language has not grown to such an extent as to express all the ideas obtaining in the other rich languages of the world; whether it is English or Latin or some other language, it does not matter. So far as languages are concerned we should not have any hatred or provincial feeling. So I would welcome the provisions of the Bill and suggest that English should be continued for some more time until we are fully equipped with the National Language, viz., Hindi. Hindi has been recognised as the National Language and it has been incorporated in the Constitution. Article 343 of the Constitution states that Hindi shall be the National Language in Devanagari script.

We will have to dispel all our emotional feelings so far as English is concerned. I once again plead that this Bill may be accepted by this House.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** கனம் உதவித் தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்ற இந்த மசோதாவை ஆதரித்து, ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய ஜனநாயக நாட்டின் குடியரசு ஆட்சியில் இப்பொழுது உலக நாடுகளை நாம் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால் இதுவரையில் சுதந்திரம் அடைந்த எந்த நாட்டிலும் அவர்களுடைய சொந்த மொழி எதுவோ அதைத்தான் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தேசத்தில் நாம் சுதந்திரம் அடைந்து பதினேழு ஆண்டுகள் ஆகியும், கடந்த பதினாறு, பதினேழு, ஆண்டு காலமாக ஆங்கில மொழியைத்தான் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது இந்த நாட்டில் அதிகப்படியான மக்கள் பேசும் ஒரு பொது மொழியை ஆட்சி மொழியாக ஆக்கி, அது மாத்திரம் அல்லாமல், ஒவ்வொரு மாகாணத்திற்கும் அந்தந்த மாகாணத்திலே பேசப்படுகிற மொழியை மாகாண ஆட்சிமொழியாக ஆக்கி இப்பொழுது சட்டம் செய்திருக்கிறார்கள். ஹிந்தியை ஆட்சிமொழியாக ஏற்றுக் கொண்டிருக்கிற இந்த சந்தர்ப்பத்தில் நம்முடைய மறைந்த தலைவர் நேருஜி அவர்கள், "நாங்கள் ஹிந்தியைப் புகுத்தவில்லை, நாட்டின் ஆட்சிமொழியாக ஹிந்தியை ஏற்றுக் கொண்டிருந்த



17th October 1964] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

போதிலும், ஹிந்தி பேசப்படாத மற்ற பகுதிகளிலே இப்பொழுது ஆங்கிலம் எந்த அளவுக்கு நடைமுறையில் இருந்து வருகிறதோ, அந்த அளவுக்கு ஹிந்தி வரும்வரையிலும் ஆங்கிலம் நீடிக்கப்படும்" என்ற ஒரு உறுதியைத் தந்துள்ளார். அந்த உறுதியை பாதுகாக்கக்கூடிய அளவிலேதான், ஹிந்தி பேசப்படாத பகுதிகளிலே, இப்பொழுது நடைமுறையில் ஆங்கிலம் இருக்கக்கூடிய அளவுக்கு ஹிந்தி வரும் வரையிலும் ஆங்கிலம் நீடிக்கப்படும் என்ற இந்த மசோதாவை நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்பு வைத்திருக்கிறார்கள். இதற்காக ஒரு பெரிய கிளர்ச்சியைக் கிளப்பி, மொழிப் பிரச்னையைப் புகுத்தி இந்த சந்தர்ப்பத்தில் ஹிந்தியைப்பற்றி கண்டபடி பேசுவது அவ்வளவு நல்லதல்ல. வடஇந்தியாவில் உள்ள ஹிந்தி வெறியர்கள் கூச்சலும் குழப்பமும் போடுகிறார்கள் என்றால், அது வேறு பிரச்சினை. அந்தப் பகுதிகளில் வாழ்பவர்களின் கருத்தும் அந்தஸ்தும் அந்த அளவுக்கு இருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் சர்வக்கட்சியைச் சார்ந்த அத்தனை அங்கத்தினர்களும், நாங்கள் நல்ல பண்புள்ளவர்கள் என்று எடுத்துக் கூறினார்கள். வட நாட்டில் நடந்த அளவுக்கு நாங்கள் இறங்க மாட்டோம் என்று அவர்கள் சொல்லியிருப்பதை நான் உண்மையிலேயே வரவேற்கிறேன். நம்முடைய நாட்டில் அது போன்று ஒரு இக்கட்டான நிலைமை ஏற்படுமானால் அதைத் தடிகொண்டோ அல்லது குண்டாந்தடி கொண்டோ அடக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. ஒரு வரியிலே அதை அடக்கக்கூடிய திறன் இந்த ஆளும் கட்சிக்கு இருக்கிறதென்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த ஆங்கில நீடிப்பு மசோதா கொண்டுவருவதனால், ஏதோ தமிழே போய்விடும், தமிழுக்கு பாதுகாப்பு இல்லை என்றெல்லாம் இங்கே கூறினார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர் கூறியதைப் போல, மற்ற கட்சியிலிருப்பவர்கள் ஒரு பார்ட்டி மீட்டிங் போட்டு அதிலே ஒரு முடிவு எடுத்து அதையொட்டி இங்கே பேசினால் நன்றாக இருந்திருக்கும். அப்படியில்லாமல் ஒவ்வொருவரும் ஒரு கருத்தைச் சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எங்கள் ஜில்லாவைச் சேர்ந்த திரு. மணி அவர்கள், ஒரு இக்கட்டான நிலையில் தான் இருப்பதாகச் சொன்னார்கள். வேறு ஒரு அங்கத்தினர் ஆங்கிலத்தை தற்காலிகமாக ஆதரிக்கிறோம் என்று சொன்னார். மக்கள் மத்தியிலே சென்று ஓட்டு வாங்க வேண்டுமென்பதற்காக கண்டபடியெல்லாம் பேசுவது சரியல்ல. பெரும் பொறுப்பு வாய்ந்த அங்கத்தினர்களாக நாம் இங்கே இருக்கிறோம். கட்சியின் கொள்கைக்கு முன்பின் முரணாக ஏதோ சமீபத்தில் பஞ்சாயத்துத் தேர்தல் வருகிறது, ஒரு குழப்பத்தை உண்டாக்கவேண்டும், 1967-ல் சட்டசபைத் தேர்தல் வரவிருக்கிறது, எங்களுக்கு இலட்சியமும் இல்லை, கொள்கையும் இல்லை, மொழிப் பிரச்சினையை வைத்து ஒரு குழப்பத்தை உண்டாக்க வேண்டுமென்று நினைத்தால் அது நாட்டிற்கோ அல்லது கட்சிகளுக்கோ நல்லதல்ல. தமிழுக்கு கெடுதல் வந்துவிட்டது என்று கூறினார்கள். இன்றைக்கு தமிழை எந்த அளவுக்கு நாம் கொண்டுவந்திருக்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [17th October 1964

கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். இந்த சபையிலே நடக்கக் கூடிய அத்தனை நடவடிக்கைகளும் தமிழில்தான் நடக்கின்றன. சுதந்திரம் வருவதற்கு முன்னால் இந்த சபையில் தமிழ் பேசக் கூடிய நண்பர்களைப் பார்க்க முடியாது. ஆனால் இன்றைக்கு தமிழுக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய அளவிலே, அரசாங்க அலுவல்கள் அத்தனையும், கடிதப்போக்கு வரத்து அத்தனையும் தமிழிலேதான் நடக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கு ஏதாவது எழுத வேண்டுமென்று சொன்னால், இப்பொழுது ஆட்சி மொழியாக இருக்கிற இந்தியிலே எழுத முடியாது. உலக அரசியலோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டிய அளவிலே ஆங்கிலத்தை கால வரையின்றி நீடிக்கலாம் என்ற நேர்மையான ஒரு மசோதாவை கொண்டு வந்திருக்கிறோமே தவிர, ஏதோ தமிழை அழிப்பதற்கோ அல்லது தமிழ் மாணவர்களை அழிப்பதற்காகவோ இந்த மசோதாவைக் கொண்டு வரவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் ஒரு அங்கத்தினர் சொன்னார், பதினேழு ஆண்டுகள் ஆகியும் இந்த காங்கிரஸ் ஆட்சியிலே ஒரு ஸ்திரமான மொழிக் கொள்கை ஏற்படவில்லை என்று சொன்னார். அதை நான்கூட ஒப்புக்கொள்கிறேன். பதினேழு ஆண்டுகள் ஆகியும்கூட நாம் ஆங்கிலத்தைத்தான் ஏற்றுக் கொண்டிருந்தோம். ஆனால் உலக நாடுகளில் எல்லாம் அவர்களது சொந்த மொழியைத்தான் தேசிய மொழியாக ஆக்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கட்டாயப்படுத்தி ஹிந்தியைப் புகுத்தாமல், நமது பெருந் தலைவர் நேருஜி அவர்கள் கூறியது போல் படிப்படியாக ஹிந்தியை புகுத்த வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்த மசோதாவை கொண்டு வந்திருக்கிறோம் என்பதை மனதில் வைத்து, ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்ற இந்த மசோதாவை எல்லோரும் ஒப்புக்கொண்டால் நம்முடைய மதிப்பிற்கும், கண்ணியத்திற்கும், கடமைக்கும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக இருக்கும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஆங்கிலம் வேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றி எதிர்க்கட்சியில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்வார்களேயானால் அவர்கள் எந்த நோக்கத்தோடு அதை சொல்கிறார்கள் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியும். இந்த மொழிப் பிரச்னையை வைத்து நாங்கள் ஒரு போராட்டத்தை நடத்துவோம், ஜெயிலுக்குச் செல்லுவோம் பாருங்கள் என்று அவர்கள் கூறிக்கொண்டு இருந்தால் அவர்களுக்கு ஒரே ஒரு வரிதான்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: ஒரே ஒரு வரி என்று அடிக்கடிச் சொல்லுகிறார்களே, அது என்ன என்று அறிய விரும்புகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: இப்பொழுது உயிரைக் கொடுத்தாகிலும் நாட்டைப் பிரிப்போம் என்ற கொள்கையை விட்டுக் கொடுத்துவிட்டோம் என்று விளம்பரப் படுத்தினார்கள். மத்திய அரசாங்கம் ஒரு வரியில் சட்டம் கொண்டு வந்ததால் கொள்கையை விட்டு விட்டவர்களை ஒரு வரி சட்டத்தால் அடக்க



17th October 1964] [திரு. ஏ. எஸ். பொன்னம்மாள்]

முடியும் என்பதைத்தான் குறிப்பிடுகிறேன் என்று கூறிக்கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. காஞ்சி மணிமொழியார்: சட்டமன்றத் துணைத்தலைவர் 10-30 a.m.
அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக விவாதம் நடந்து வரும் மசோதாவை ஆதரித்து என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் அம்மையார் அவர்கள், திராவிட முன்னேற்றத்திற்குக் கொள்கையில்லை, குழப்ப நிலையில் இருந்துக்கொண்டு ஒருவருக்கொருவர் முரணாகப் பேசுகிறார்கள் என்று கூறினார்கள். உண்மையிலேயே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு குழப்பம் எதுவும் இல்லை. கொள்கை பலம் இல்லாததால் தான் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையைப் பற்றி காங்கிரஸ்காரர்கள் குழப்பிக் கொள்கிறார்கள்.

ஆங்கில நீடிப்பின் அவசியம் இருக்கிறது என்று பல ஆண்டுகளாகச் சொல்லி வருகிறோம். அதனால் எந்தக் காலத்திலும் ஆங்கிலம் இருக்க வேண்டும் என்பதில்லை. இந்த நாட்டு மொழி தமிழ்; இந்த நாட்டவரின் தாய் மொழி தமிழ். அதை வளர்ப்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் தீவிரமாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீவிரத்தை இந்த ஆட்சியாளர்களால் நிறைவேற்ற முடியவில்லை. அதற்குப் பல காரணங்கள் சொல்லுகிறார்கள். நேற்று வரை கல்லூரிகளில் தமிழ் மொழிதான் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்று இருந்தது. ஆனால் அதை மாற்றி அமைக்கக்கூடிய இழி நிலைக்கு இந்த சர்க்கார் வந்திருக்கிறது. காரணம் என்ன? அதற்கு பாட புத்தகம் இல்லை என்று சொல்லுகிறார்கள். மொழி பெயர்க்கப்பட்ட பல புத்தகங்கள் அச்சுக்கு வராமல் இருக்கின்றன. இந்த நிலைக்குக் காரணம் என்ன? இன்றைக்கு ஆட்சியில் இருப்பவர்கள் மற்ற மொழியில் இருப்பதைப் போன்ற பற்று தமிழில் இல்லாமல் இருக்கிறார்கள் என்பதேதான். அதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்? அவர்களுக்கு வேறு மொழிகளில் அக்கறை இருக்கிறது. ஆனால் தமிழ் மொழியில், தமிழ் வளர்ச்சியில் ஆட்சி பீடத்தில் இருப்பவர்களுக்கு அக்கறையில்லை என்பதைத் தவிர வேறொன்றும் சொல்ல முடியாது. முதல் அமைச்சராகவும், கல்வி அமைச்சராகவும் இருக்கும் கனம் பக்தவத்சலம் அவர்கள், 'சான்றோர் உடைத்து தொண்டை நாடு' என்று தொண்டை நாட்டைச் சேர்ந்தவர்கள், சான்றோராக இருப்பவர்கள். அவர்கள் உண்மையிலேயே தமிழ்ச்சான்றோராக இருக்கவேண்டும், இங்கெல்லாம் தமிழ் மணம் கமழ வேண்டும் என்று தான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி ஒரு சட்டம் கொண்டு வராவிட்டால், நண்பர் சண்முகம் குறிப்பிட்டது போல, 1965, ஜனவரி 25-க்குப் பிறகு வேறொரு மொழி இங்கே வந்து தானாகவே குந்திக்கொள்ளும்; ஆட்சி பீடத்தில் வந்து குந்தி விடும் என்பதை உண்மையிலேயே உணர்ந்துதான் இதை

ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் இது மட்டும் போதாது. தமிழ் மொழிக்கு வேண்டிய ஆக்கம் கொடுக்கப்பட வேண்டும்.

நேற்று டாக்டர் நடராஜன் அவர்கள் பேசும்போது பிற மொழிகள் படையெடுப்பினால் தமிழ் மொழி கெட்டு விடாது என்றும், வடமொழி வந்த காலத்திலும் தமிழில் திருப்புகழ், தமிழ் சாத்திரங்கள் வரவில்லையா என்று கேட்டார்கள். உண்மைதான். ஆனால் திருப்புகழும், தமிழ் சாத்திரங்களும் நல்ல தமிழ்த் தானா, நல்ல தமிழ் இலக்கியங்களா என்று பார்க்க வேண்டும். நல்ல பக்தி ரசம் சொட்டச் சொட்டப் பாடப்பட்ட பாக்களாக இருந்தாலும் அவை நல்ல தமிழ் இலக்கியம் என்று சொல்ல முடியாது. வேற்று மொழியால் பாதிக்கப்பட்ட தமிழ் மொழி ஒரு மிக்சர் மொழியாகத்தான் இருக்க முடியும். தூய தமிழ் மொழியாக இருக்க முடியாது. ஆகவே தான் நாங்கள் சொல்லுகிறோம், இந்தி வந்தால் தமிழ் கெட்டுவிடும் என்று. தமிழ் கெடாது என்ற வாதம் சரியானதாக இருக்காது. இந்தி வந்தபிறகுதான் அதனால் ஏற்படும் தீமையை உணர முடியும். இந்தி வந்தால் தமிழ் கெடும் என்று தெளிவாக கூறியிருக்கிறார்கள் திரு.வி.க. அவர்கள் நாட்டின் விடுதலைக்காக உழைத்த சிறந்த தலைவர். அவர்கள் இந்தி வேண்டாம் என்று சொன்னார். இந்தி வந்தால் தமிழ் கலப்பு மொழியாகிவிடும், அதன் பண்பாட்டை விளக்கும் தமிழர்கள் பிற்போக்கடைவார்கள் என்று கூறியிருக்கிறார்கள். மறைமலையடிகளும் இந்தியினால் தமிழ் கெடும் என்று புத்தகத்தில் எழுதியிருக்கிறார்கள். இங்கே இந்த மசோதாவை திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த அத்தனை பேர்களும் ஆதரிக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம், இன்றைக்கு இந்த மசோதா வராவிட்டால் ஜனவரி 25-க்குப் பிறகு இன்னொரு மொழி ஆங்கிலத்தின் இடத்தைப் பறித்துக்கொண்டு தானாகவே வந்து உட்கார்ந்துவிடும். ஆகவேதான் இந்த மசோதாவை வரவேற்கிறோம். ஆனால் ஆங்கிலம் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதை எதிர்க்கிறோம். அதைப்பற்றி இப்பொழுது பேசத் தேவையில்லை. பின்னால் பார்த்துக்கொள்ளலாம். இந்த சந்தர்ப்பத்திலாவது ஆட்சி பீடத்திலுள்ளவர்கள் தாற்காலிகமாகவாவது இந்தியை எதிர்க்கும் முறையில் ஆங்கிலத்தை நீடிக்க வருவது வரவேற்கத் தக்கது. இது தெளிவாகத் தெரிகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்தவிதமான குழப்பமும் இல்லை. இந்தி இந்த நாட்டிற்குத் தேவையே அல்ல. தமிழிலேயே எல்லா அலுவல்களும், எல்லாத் துறைகளிலும், சட்டமன்றத்திலே மட்டுமல்லாமல், எல்லா அலுவலகங்களிலும் நிகழ வேண்டும், அந்த முறைக்கு அமைச்சரவை பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

(Mr. Speaker in the Chair)

* SRI K. S. G. HAJA SHERIEF : Mr. Speaker, Sir, I rise to support the Bill brought forward by the Hon. the Chief Minister that English should continue even after 1965. Sir, it is



a very important Bill and I am sure that the Hon. Members of this House will give their very serious consideration and give their unanimous support to this Bill.

Sir, under the present context of the development with which our country is undergoing, it is very essential that there should be one language by which we can establish contact or we can make ourselves known in all respects with the other parts of the world. During the last 15 or 17 years, the tremendous manner in which we have improved our industrial and economic conditions are well known to the people. We have established our contacts in various parts of the world and the trade and commerce and industry have developed to a very considerable extent. If at all there is one language by which we can move about and we can correspond with any other country, it is only this language, i.e., English, with which we are accustomed for the last about two hundred years. There is also another point. The whole world is undergoing a great revolution in technological and in scientific improvements, and so when that is the case we are also anxious that we should also move with other countries and try to come up to their level. It is, therefore, very essential that this language should be continued and should also be intensified from the first standard itself. English should be taught to the children from the first standard so that they can be well versed.

Sir, there might be a view with the members of the Opposition that by this means we do not give serious attention or the attention required to develop the national language or the regional language. But it is not so. We have made very clear that the National and the regional language should get greater and more importance and we are actually giving greater importance. It is easier for the children to learn three languages than for adults to know. That is the reason why it is provided that English should continue till such time that our regional language also reaches to its level in all respects. From all angles, viz., economically, industrially and scientifically and from various other angles, it is but very essential that this language should be continued even after 1965 so that the ideals with which we are all working, i.e., to come up economically, industrially along with other nations of the world should be achieved. Now it is decided that by the end of the Fourth Plan our export target should be doubled than the present target. Therefore, we are now in search of new markets all over the world and we are intensifying our attempts with these markets. So it is very essential that we should keep ourselves more accustomed with this language. Therefore, I would request the Government not only to continue the use of this language but also give serious consideration in imparting this language to children from the first standard itself more effectively. Thank you, Sir.

* திரு ஜே. மாதா கவுடர் : கனம் சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த ஆங்கில நீடிப்பு மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

*[திரு. ஜே. மாதா கவுடர்]* [17th October 1964

ஆங்கிலம் 1965-ம் ஆண்டுக்குப் பிறகு இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றிப் பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றி, அதன் பிறகு நம்முடைய மாநிலத்தினுடைய அபிப்பிராயத்தைக் கேட்டதற்கு இங்கு நாம் இந்த விவாதத்தை ஆரம்பித்திருக்கிறோம். நமது பாராளுமன்றத்திலே ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எத்தனை ஆண்டுக் காலம் என்று அங்கு எழுதப்படவில்லை. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளுவது என்னவென்றால், இந்தி மொழியை இந்த நாட்டு மக்கள் அத்தனை பேர்களும் நன்றாகப் படித்துப் பாண்டித்தியம் பெறும் வரையிலும் ஆங்கிலம் நீடித்திருக்கும் என்பது தான் அதனுடைய உட்கருத்தேயல்லாது, இந்தி உடனடியாக வந்து விடும், ஆங்கிலம் போய் விடும், அதனால் தமிழ் அழிந்து விடும் என்பதல்ல. அந்த நோக்கத்தோடு யாரும் பாராளுமன்றத்திலே சட்டத்தை இயற்றவில்லை.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் இதற்கு முன்பே நாம் சட்டம் செய்தோம். எதற்காக அதனை நாம் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று செய்தோம்? இங்கும் கூட கனம் சபாநாயகரைச் சில கனம் அங்கத்தினர்கள் கேட்டார்கள். இங்கும்கூட தமிழிலேயே சட்டம் இயற்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். ஆங்கிலத்தில் வேண்டாம், தமிழிலே இருக்க வேண்டும் என்று கேட்பதன் உட்கருத்து என்னவென்றால், இங்கு இருக்கக்கூடியவர்களில் தமிழ் பேசக் கூடியவர்கள் அதிகமாக இருக்கும் காரணத்தால், ஆங்கிலத்திலே அதிகமாகப் புரியவில்லை என்பது தான் அதனுடைய அர்த்தம். ஒரு மாநிலத்தில் தமிழ் பேசக்கூடிய மக்கள் அதிகமாக இருக்கும்போது, அந்த மாநிலத்தில் தமிழ் தான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று எப்படி நாம் விவாதித்து எடுத்துச் சொல்கிறோமோ அதே முறையில் ஒரு நாட்டினுடைய மொழி என்னவாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். ஒரு மாநிலத்தினுடைய ஆட்சி மொழி, அந்த மாநில மக்கள் பேசக்கூடிய மொழியாக இருக்க வேண்டும் என்று நாம் எப்படி ஒரு முயற்சியோடு இந்தத் திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறோமோ அதுபோல், ஒரு நாட்டினுடைய மொழி நாட்டு மக்கள் பேசக்கூடிய மொழியாக இருக்க வேண்டுமா இல்லையா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எத்தனை ஆண்டுக் காலம் நாம் அன்னிய நாட்டு மொழியினை இந்த நாட்டினுடைய ஆட்சி மொழியாக வைத்துக் கொண்டிருக்க முடியும் என்பதை நாம் சிந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த நாட்டு மக்களுக்குக் குழப்பம் ஏற்படாத வகையில், இந்த நாட்டு மக்கள் நன்றாகப் புரிந்துக் கொள்ளும் வகையில், நாட்டினுடைய தேசிய மொழி அமைய வேண்டும். எல்லா மக்களும் படித்து அறிந்த பிறகுதான் கொண்டு வர வேண்டும் என்பதற்காக, இன்றைக்குத் தற்காலிகமாக ஆங்கிலத்தை நாம் கையாண்டு வருகிறோம். இன்றைக்கு ஆங்கில மொழியை நீக்குவதற்குச் சிரமமாக இருக்கும் காரணத்தால் தான், படிப்படியாக ஆங்கிலத்தை நாம் இந்த நாட்டி-



17th October 1964] *[திரு. ஜே. மாதா கவுடர்]*

லிருந்து அகற்ற நினைக்கிறோம். இந்தி மொழி இந்த நாட்டிலே படிக்கக்கூடிய நாள் வருகிற வரைக்கும் ஆங்கிலத்தை நீடித்துக் கொண்டே போகிறோம் என்பது தான் இந்தச் சட்டத்தினுடைய உட்கருத்து. ஆகையால், ஆங்கிலத்தை நீடிக்கிறோம் என்று சொல்லும் இந்தச் சட்டத்தின் மீது இன்றைக்கு இந்த விவாதம் இவ்வளவு அவசியமா என்பதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இன்றைக்கு ஆங்கிலம் இந்த நாட்டின் ஆட்சி மொழியாக வந்து விட்டது என்று சொன்னால், அதைக் குறித்து இந்த மன்றத்தில் விவாதிக்கலாம். இப்பொழுது நாட்டு மக்கள் இந்தி படிக்கவில்லையே, அதிகமாகப் படிக்காமலிருக்கும்போது ஆங்கிலத்தை அவசர அவசரமாக நீக்கி விட்டீர்களே என்று பேசினால் அதிலே அர்த்தம் உண்டு. ஆனால், இந்தி மொழியை இந்த நாட்டு மக்கள் படிக்கும் வரையில், ஆங்கிலத்தை நீடிப்பதற்குக் காலவரம்பின்றி இந்தச் சட்டத்தை நாம் திருத்தி வைத்திருக்கக்கூடிய நேரத்தில் இப்படிக் குழப்பங்கள் ஏற்படுத்துவது முறையா என்பது தான் நாம் சிந்திக்க வேண்டிய விஷயம். பாரதப் பிரதமர் தமிழ்நாட்டுக்கு வந்தபோது, தங்களைப் பார்க்கவில்லை என்று குறை கூறி கனம் அங்கத்தினர் ஒருவர் ஆவேசமாகக் குறிப்பிட்டார்கள். ஒன்று மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன். சாதாரணமாக, பி.ஏ. பட்டம் பெற்றவர்கள் எத்தனை பேர்கள் என்று கணக்குத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், யுனிவர்சிடிக்குச் சென்றால்தான் முடியும். வேறு இடத்திற்குச் சென்றால் அந்த விவரம் தெரிந்து கொள்ள முடியாது. அதே மாதிரி, தமிழ் நாட்டிலே எத்தனை பேர்கள் இந்தியிலே படித்துத் தேர்வு அடைந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள இந்தி பிரசார சபைக்கு நம்முடைய பாரதப் பிரதம மந்திரி அவர்கள் சென்றார்கள். அங்கே சென்றால்தான் எத்தனை பேர்கள் தேர்வு அடைந்திருக்கிறார்கள், எத்தனை விகிதம் மார்க் பெற்றிருக்கிறார்கள் என்று பார்க்க முடியும். ஆகவேதான் அவர் அங்கே சென்று பார்த்தார். அப்படியிருக்க, 'அவரைப் பார்த்தாரா, இவரைப் பார்த்தாரா' என்றும் 'அண்ணாவைக் கேட்கவில்லையே' என்றும் குறை கூறுவதிலே எந்தவிதமான அர்த்தமும் இல்லை என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மொழிப் பிரச்னையை எப்படியாவது மக்களிடத்தில் மாற்றிச் சொல்ல வேண்டும் என்று "பார்த்தீர்களா, காங்கிரஸ்காரர்களிடத்தில் தமிழ் இந்த நாட்டின் ஆட்சிமொழியாக வர வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். இந்தியைப் புகுத்த வேண்டாம், திணிக்க வேண்டாம் என்று சொல்கிறோம். ஆனால், காங்கிரஸ் அரசாங்கம், தங்களுக்கு இருக்கும் மெஜாரிடி காரணமாக எங்கள் கோரிக்கைகளை நிராகரித்து விட்டார்கள்" என்று மக்களிடத்தில் உண்மைக்குப் புறம்பாக எடுத்துச் சொல்வதென்பது தேர்தல் விஷயத்தில் வைத்துக் கொள்ளலாமே தவிர, நாட்டு மக்களுக்கு நன்மை பயக்க முடியாது என்பதைச் சொல்லிக் கொண்டு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

[17th October 1964

* **திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திலே ஆங்கிலத்தை நீடிப்பதற்காகக் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவின் மீது பல கனம் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். இந்த மசோதாவை நாங்கள் ஆதரிக்கின்றோம் என்று எங்கள் கட்சியின் துணைத் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்த மசோதாவை நாங்கள் ஆதரிக்க முன் வந்திருக்கிற காரணத்தினாலேயே இந்த மசோதா ரொம்ப முழுமையானது, இது நம் மாநிலத்திற்குத் தேவையானது, இது அவசியமானது என்பது கருத்து அல்ல. ஏற்கெனவே ஒரு தவறு நடந்து விட்டது. அந்தத் தவற்றுக்குப் பரிகாரம் தேடுவதற்காக இந்த மசோதாவைக் கொண்டு வந்து ஆங்கிலத்தை நீடிக்க வேண்டியிருக்கிறது என்று கருத்திலேதான், ஆங்கிலமும் நம்முடைய சட்டமன்ற நடவடிக்கைகளுக்கும் மற்றவைகளுக்கும் இருக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கருத்தை எடுத்துச் சொல்லி வருகிறது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 210 (1)-வது பிரிவில் குறிப்பிட்டிருப்பதாவது :—

" 210. (1) Notwithstanding anything in Part XVII, but subject to the provisions of article 348, business in the Legislature of a State shall be transacted in the official language or languages of the State or in Hindi or in English ;"

[இரண்டாவது பிரிவில்]

" 210. (2) Unless the Legislature of the State by law otherwise provides, this articles shall, after the expiration of a period of fifteen years from the commencement of this Constitution, have effect as if the words ' or in English ' were omitted therefrom ".

இதன்படி, ஜனவரி மாதம் 26-ந் தேதியிலிருந்து ஆங்கிலம் கிடையாது என்று ஆகிவிடுகிறது. அதனுடைய இடத்தில் இந்தி தான் ஆட்சி மொழி ஆகிறது. கனம் உறுப்பினர் திரு. ஹாஜா ஷெரீஃப் அவர்கள் குறிப்பிட்டது போல, இந்த மன்றத்தில் ஆங்கிலத்தை நீடிக்க வேண்டுமென்றால் இந்த மசோதா கொண்டு வர வேண்டியிருக்கிறது. ஆனால், இந்தியைக் கொண்டு வருவதற்கு இந்தச் சட்ட மன்றத்திலே மசோதா எதும் கொண்டுவர வேண்டியதில்லை. மசோதா எதும் இல்லாமலேயே, அரசியலமைப்புச் சட்டத்தின்படியே 1965-ம் ஆண்டு ஜனவரி 26-ந் தேதி முதல் இங்கு இந்தியிலே பேசுவதற்கு உரிமை இருக்கிறது, நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைத்தான் இந்தப் பிரிவு நமக்கு எடுத்துக் காட்டுகிறது. அதனுடைய விளைவுகளை மறுப்பதற்காகவும், அதனுடைய விளைவுகளைப் பிரதிகூலம் ஆக்குவதற்காகவும் ஆங்கிலத்தை நீடிக்கலாம் என்ற அடிப்படையில் இந்த மசோதாவை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இதனை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிப்பதற்கு முன்னால் அருள் கூர்ந்து கனம் முதல் அமைச்சர் அவர்களை நான் ஒன்று கேட்டுக்கொள்வேன். இந்த மசோதா சம்பந்தமான விவகாரத்திலாகட்டும்,



இந்தி மொழிப் பிரச்சினையிலேகூட அவர்களுக்கு ஒரு கருத்து, எதிர்க்கட்சிக்காரர்களுக்கு வேறொரு கருத்து என்ற வித்தியாசமே இருந்ததில்லை.

மொழி கமிஷனிடம் கொடுக்கப்பட்டிருக்கிற மெமராண்டம், பின்னால் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், டெல்லியில் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் ஆகிய எல்லாவற்றையும் எடுத்துப் பார்த்தாலே தெரியும். எதிர்க்கட்சியில் உள்ள எங்களுடைய கருத்துக்களும், ஆளும் கட்சியில் உள்ளவர்களின் கருத்துக்களும் ஒன்றுதான். எங்களுடைய கருத்துக்களைத்தான் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நிறைவேற்றவில்லை. நிறைவேற்ற முடியாத நிலைமையில் விட்டுவிட்டார்கள். எனவே நாங்கள் எல்லாம் ஆறு மாதம், ஏழு மாதம் என்று அதைத் எதிர்த்து கடுங்காவல் தண்டனை பெற்று வருகிறோம். அவ்வளவுதான். ஆக மொழி அடிப்படையில் பார்த்தால் ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கும், மத்திய அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கும் கருத்து ஒன்று தான். ஆனால் தங்கள் கருத்துக்களை இங்கே உள்ள ஆளும் கட்சியினர்களால் டெல்லியில் நிலை நிறுத்த முடியவில்லை. உதாரணமாக நான் சொல்வேன். இன்றைக்கு ஆசாரியார் அவர்கள், " திருடன் நுழைவது போல இந்தி இப்பொழுது நுழைகிறது" என்று சொன்னார்கள். அது முற்றிலும் உண்மை. அரசியல் சட்டத்தை வகுத்தபோது 1965 ஜனவரி 26-ம் தேதிக்குப் பிறகு இந்தி நிர்வாக மொழியாக வந்து விடும். ஆங்கிலம் அறவே அகற்றப்படும் என்று செய்தார்கள். அப்படி இந்தி வராது, ஆங்கிலமும் தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்கும் என்று பாராளு மன்றத்திலே இதற்குத் தகுந்தாற் போல சட்டம் வந்திருக்க வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அத்தகைய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. ஆகவே இந்தி நுழைவது மிகவும் லேசாக ஆக்கிக் கொண்டுவிட்டார்கள். " நாங்கள் அப்படி இந்தியில் எல்லாமே வருவதற்கு இடம் விட்டுவிடுவோமா ? நிர்வாக மொழிச் சட்டம். சம்பந்தமாக நம்முடைய கொள்கையை நாம் விடமாட்டோம்" என்று நமது முதல் அமைச்சர் அவர்கள் சொல்லலாம். நான் உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இப்போதுள்ளவரே முதல் அமைச்சராக இருந்தால் சரி; திரு. நஞ்சுண்டராவ் அவர்கள் முதல் அமைச்சராக வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்—அத்தகைய துரதிருஷ்டம் வரக் கூடாது.

MR SPEAKER : The hon. Member should not say like that.

**திரு. மு. கருணாநிதி :** இவருக்குத் துரதிருஷ்டம் வரக்கூடாது.

MR. SPEAKER : Ingenious interpretation. (Laughter).

**திரு. கே. ஏ. மதியழகன் :** அவ்வாறு நிலைமை ஏற்பட்டால் என்ன ஆகும் என்பதைக் குறிப்பிடுவதற்குத்தான் நான் சொன்னேன். இன்றைக்கு நாம் பிரச்சினைகளைக் குழப்பிக் கொள்ளக் கூடாது. நம்முடைய ஆட்சி மொழி தமிழ் தான். 1957-லேயே அதற்கு நாம்

[திரு. கே. ஏ. மதியழகன்] [17th October 1964

சட்டம் செய்திருக்கிறோம். அப்படி ஏழெட்டு வருஷமாகப் பிரகடனப்படுத்தியிருந்தும் நாம் அதைச் சரியான முறையில் செயல்படுத்த முற்பட்டு இருக்கிறோமா என்று கவனிக்க வேண்டும். அது இல்லாத காரணத்திஞல்தான் இன்று எதிர்க்க வேண்டியிருக்கிறது. மும்மொழிக் கொள்கையை இவர்கள் வற்புறுத்திஞர்களே, அது என்ன ஆயிற்று? ஏன் அதை அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை? இரண்டு மொழிக் கொள்கையையாவது ஒத்துக் கொண்டார்களா? ஏன் இது நடக்கவில்லை? அது நடந்திருந்தால் கூட இவ்வளவு பெரிய நிலைமை ஏற்பட்டு இருக்காது. நம்முடைய அரசாங்க மெமராண்டத்தில் தெளிவாகக் கொடுத்தார்களே :—

" The Government of Madras take the view that there can be no reasonable doubt in the mind of anyone who has grasped the practical implications of the transition from English to Hindi that 26th January 1965 is an utterly impossible date-line. The obvious truth must be acknowledged so that unfulfilable expectations may not continue to be fostered and unnecessary apprehensions may not continue to be entertained. It will be necessary to use both English and Hindi as two official languages of the Indian Union for a prolonged period. The framers of the Constitution have foreseen and provided for this contingency in Article 343 (3). It is accordingly recommended that the Government of India and Parliament should accept this perspective of prolonged bilingualism, and announce their readiness to make statutory provision therefor through the exercise of legislative power vested in Parliament under Article 343 (3) of the Constitution. Such statutory provision should not be altered, after it is made except with the concurrence of all the States ".

இப்படி மிகத் தெளிவாக ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பே கொடுத்திருந்தும்கூட இன்னும் ஆங்கிலம் 'may be used' 'shall be used' என்ற அளவில்தான் சட்டம் என்று சொன்ஞல் அதை நாம் எதிர்க்காமல் என்ன செய்கிறது?

இந்திய சர்க்காருக்கு நாம் கூறிய யோசனை என்ன ஆயிற்று? அவர்களைக் கேட்கிறேன், நமது மாநில சட்டசபையைக் கலந்து என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? நம்முடைய சிபார்சிலே:—

" The necessity for this conclusion is not obvious to the Government of Madras. The laws of the State are addressed to the people of the State. The courts of the State have to interpret the laws and to apply them. The language of State Legislation should, therefore, be the same as the official language of the State. It will, no doubt, be necessary that an authorised translation of the laws (and, possibly also, statutory rules) should be made available to the Government of India, Parliament and the Supreme Court. Steps can be taken, without undue difficulty, to secure that such an authorised translation is made available in whatever language or languages may happen to be, for the time being, the official language of the Union. It is neither necessary nor proper that the laws of the State should be required to be made in a language which is different from the official language of the State.



17th October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

The Government of Madras suggest that the Government of India and Parliament should accept this view as an integral part of their ' Official Language ' Policy."

என்று இந்தி மொழியிலே மாநிலச் சட்டத்தை இயற்றுவது அவசியமற்றது, முறையற்றது என்று நாம் சொல்லியிருக்கிறோம். இதை அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடாதா? இந்தி மொழிதான் உடனடியாக நிர்வாக மொழியாக வரும். என்ருல் இந்தி தெரியாத மாநிலத்தவர்கள் நிலைமை என்ன ஆகும்? நாம் ஆட்சி மொழிச் சட்டம் என்று ஏற்படுத்தி அதில் தெளிவாக நம்முடைய ராஜ்ய ஆட்சி மொழி தமிழ் தான் என்பதை வரையறுத்து இருக்கிறோம்.

'*Language to be used in Bills, etc.*—The language to be used—

(i) in Bills introduced in, or amendments therea to be moved in, or Acts passed by, the Legislature of the State of Madras,

(ii) in Ordinances promulgated under Article 213 of the Constitution,

(iii) in orders, rules, regulations and bye-laws issued by the State Government under the Constitution or under any law made by Parliament or the Legislature of the State, shall be Tamil on and from such date as the State Government may, by notification, specify :'

என்று சட்டத்திலே 5-வது பிரிவிலே தெளிவாக சொல்லியிருக்கிறோம். இருந்தும் இந்த ஏழெட்டு ஆண்டுகளிலே இதைச் செயல்படுத்துவதற்கு நம்மால் ஏன் முடியவில்லை? இன்றைய தினம் அசல் சட்டங்கள் தமிழில் தயாரிக்கப்படுகின்றனவா? திருத்தங்களும், மற்ற நிர்வாக அறிக்கைகளும் தமிழிலேயே தயாரிக்கப்படுகின்றனவா என்று பார்க்க வேண்டும்? நாம் வகுத்துக் கொண்ட கொள்கையைச் செயல்படுத்த என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்? ஏழு ஆண்டுகள் ஆகியும் இன்னும் ஆங்கிலத்திலேதான் உத்தரவுகளைப் படிக்க வேண்டியிருக்கிறது. எத்தனை மசோதாக்களை நாம் இதுவரை தமிழிலே கொண்டு வந்திருக்கிறோம்? சட்டசபையிலே தமிழிலே பிரசங்கம் செய்து விட்டால் போதுமா? எத்தனை மந்திரிகளின் காரியாலயங்களில் தமிழ் இடம் பெற்றிருக்கிறது? அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்டைப் படித்துப் பார்த்தால் வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருக்கிறது. மாவட்டங்களில் 7,000 அலுவலகங்களில் இதுவரை தமிழில் அலுவல்கள் நடைபெறுகின்றன என்பதோடு முடிந்து விடுகிறது. ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இன்னும் டைப்ரைட்டர்கள் இல்லை, தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்கள் இல்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. இவ்வளவு காலமாக தமிழிலே மொழி பெயர்க்கப்பட்ட சட்டங்கள் என்னென்ன? 11-00 a.m.

"The Madras Co-operative Societies Act.

The Madras Panchayats Act.

The Madras State Aid to Industries Act.

[திரு. கே. ஏ. மதியழகன்] [17th October 1964

The Madras Places of Public Resort Act.
The Madras Elementary Education Act.''

இவ்வளவுதான். இவையெல்லாம் இலாகாவினால் மொழி பெயர்க்கப்பட்டவைதான். தாமதத்திற்குக் காரணம் கேட்டால் சட்டக் கலைச்சொல் அகராதி தயார் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு இது போன்ற நிலைமை? நான் சிறைச்சாலையிலே இருக்கும்போது ஜூரிஸ்புருடன்ஸ் (Jurisprudence), டார்ட்ஸ் (Torts) போன்ற ஒரு சில தமிழிலே மொழி பெயர்க்கப்பட்ட நூல்களைப் படித்துப் பார்த்தேன். நமது சட்டமன்றத்துறை துணைச்செயலாளர் ஒருவர் கூட எழுதியுள்ள நூலைப் படித்தேன். நல்ல படைப்புக்கள். உற்சாகப்படுத்தியிருந்தால் இந்த ஏழு வருஷ காலத்திலே இது போன்ற காரியங்களை மிகவும் செய்திருக்கலாம். இதிலே சரியான படி அக்கறை செலுத்தவில்லை. அலுவலகங்களிலே தெலுங்கர்கள், மலையாளிகள் இருக்கிறார்கள். அவர்களுக்காக தமிழ் வகுப்புகள் எத்தனை நடக்கிறது? எங்கெங்கே? ஏதோ கிராமங்களிலே இருக்கிற அலுவலகங்களிலே தமிழைக் கொண்டு வந்திருக்கிறார் களே தவிர, இங்கே தமிழில் கடிதப் போக்குவரத்தை ஏற்படுத்தி னார்களா? கல்லூரியிலே தமிழிலே படிப்பவர்களுக்கு உத்தி யோகம் கொடுப்பதில் சலுகை காட்டப்படும் என்று முன்பு உறுதி மொழி கொடுத்தார்கள். அதை நாங்கள் சுட்டிக் காட்டுகிற நேரத்தில் 'எங்கே உறுதிமொழி கொடுத்தோம்' என்று அமைச்சர் கள் கூறுகிறார்கள். நான் என்னுடைய வாசகங்களை கூறவில்லை. ஜீ.ஓ. நெம்பர் 748, எஜுகேஷன், தேதி 14—4—1959-ல் கூறப்பட் டிருக்கிற உறுதிமொழியைச் சொல்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தப் பேச்செல்லாம் 22-ம் தேதி பேசுவதற்குரியது. இந்த மசோதாவிற்கு உரியதல்ல.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தக் கருத்து இந்த மசோதாவுக்கு உரியதல்ல என்று கூறும் சர்க்கார்தான் தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை விரைவில் அமல் படுத்துவதிலும் கல்லூரியிலே தமிழ் பாட மொழித் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதிலிருந்தும் தவறியிருக்கிறது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். ஜீ.ஓ. 748, எஜுகேஷன், 14—4—1959-ம் தேதி உத்தரவில் இந்த சர்க்கார் உறுதி அளித்திருக்கிறது.

'Government are anxious that the pupils taking the Tamil medium B.A. degree course in the Pilot College in 1960-61 should not entertain the apprehension that their future prospects will be adversely affected thereby. To this end, Government wish to give the assurance that these pupils will not only have equal opportunities with others in regard to admission to post-graduate courses. employment under the Government of India, etc., but will also be given special preference in the matter of selection to suitable appointments under the State Government and in quasi-Governmental agencies. '



17th October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

கீழே சொல்லப்போகும் வாசகங்களை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

'This Government assures that they will be given special preference in the matter of selection to suitable appointments under the State Government and in quasi-governmental agencies. '

இவ்வாறு சர்க்கார் உறுதியளித்தது. இந்த உறுதிமொழியை யெல்லாம் காற்றிலே விட்டு விட்டு, துரோகமிழைத்து விட்டு முதல மைச்சருக்குப் பக்கத்திலே இருக்கும் கனம் தொழிலமைச்சர் "யார் உறுதி மொழி கொடுத்தார்கள் ?" என்று இந்த மன்றத்திலே கேட்டார்கள். இந்த உறுதி மொழி வெறும் கடுதாசியா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் கனம் அங்கத்தினருடைய பேச்சிலே குறுக்கிட விரும்பவில்லை. பல விஷயங்களைப் பற்றிக் கனம் உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஒவ்வொன்றாக விடை யளிக்கப் போதிய அவகாசம் இல்லை. இப்போது சொன்ன விஷ யத்தைப்பற்றி மட்டும் ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். நான் உறுதி அளித்திருக்கிறேன்; மீண்டும் அளிக்கிறேன். தமிழிலேயே சரித்திரம் படித்தவர்கள்தான் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று கூறியிருக்கிறோம். ஏறத் தாழ 2,000 பள்ளிகள் இருக்கின்றன. இந்த விஷயத்திலே திருப்பித் திருப்பி உறுதி கொடுத்துக் கொண்டுதான் வருகிறோம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ரொம்ப மகிழ்ச்சி. முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் இல்லாத சமயத்தில் கனம் வெங்கட்ட ராமன் அவர்கள் 'யார் அவ்வாறு உறுதி மொழி அளித்தார்கள்?' என்று கேட்டார்கள். இந்த மசோதா இன்றைய தினம் இந்த மன்றத்திற்கு வரக் காரணம் இந்தச் சர்க்கார் தமிழை எல்லாத் துறைகளிலும் கொண்டு வருவதற்கு நல்ல முறையில் அக்கறை யுடன் முயற்சி எடுக்காததுதான். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரை தமிழ்தான் என்று கொள்கை வரையறை செய்யப்பட்டிருந்த போதிலும் நடைமுறைப்படுத்துவதிலே தயக்கம் இருக்கிறது என்று கூறி இந்த மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆதரித்து அமர்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் சபாநாயகர் அவர்களே, ஓரே பிரிவு கொண்ட ஆங்கில நீடிப்பு மசோதாவை இந்தச் சபை ஆதரிக்க வேண்டிய நிலையில்தான் இருக்கிறது. மசோதாக்கள், உத்தரவுகள் எல்லாம் தமிழிலே இருக்கவேண்டுமென்று சட்டம் இருக்கிறது. அதற்கு மாறாக ஆங்கிலத்தை நீடிப்பதற்கான சந்தர்ப்பத்தை சிருஷ்டித்து வைத்திருப்பதற்கு யாரைக் குற்றம் சொல்வது என்பது சிரமமான காரியம். 1956-ம் வருஷத்தில் மொழிவழி ராஜ்யம் அமைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தமிழக சட்ட சபையைப் பொறுத்தமட்டில் எல்லாம் தமிழிலேயே நடக்கும் என்று ஆட்சி மொழிச் சட்டத்தில் சேர்க்கப்பட்டது. ஆங்கிலத்தை நீடிக்கவேண்டுமென்றாலும் அந்தச் சட்டத்திலேயே இடம் இருக் கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். இப்போது தனியாக

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [17th October 1964

அதற்கென்று ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை விட்டு விடுகிறேன். அது சட்டப் பிரச்சினை. இன்றைய நிலைமை என்ன? தமிழிலே நடத்த முடியும் என்ற சூழ்நிலை இல்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் உறுப்பினர் அவர்களிடம் இருந்து ஒரு விளக்கத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆட்சிமொழி தமிழ் மொழி; அதோடுகூட தொடர்பு மொழி அவசியம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி உறுப்பினர் கருத்தை அறிய விரும்புகிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** நான் பேசுகிறபோது எந்தக் கருத்தையும் மறைக்கப் போவதில்லை. அந்தச் சந்தேகம் எதற்காக கனம் முதலமைச்சர் அவர்களுக்கு வந்தது? . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தமிழே போதும், வேறு எந்த மொழியும் வேண்டாம் என்று சொல்கிறீர்களா?

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** தமிழில் நாம் சட்டசபையில் எல்லா நடவடிக்கைகளையும் நடத்த வேண்டுமென்றால் ஹைக் கோர்ட்டில் நிர்வாகம் எல்லாம் தமிழில் நடக்கவேண்டும். இப்போதுள்ள நிலைமையில் ஆங்கிலம் இன்னும் நீடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்கின்ற நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு நாம் இயற்றக்கூடிய சட்டங்களை எல்லாம் ஆங்கிலத்தில்தான் ஹைக் கோர்டில் உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தோடு எந்த மொழி தொடர்பு மொழியாக இருக்கவேண்டும் என்பதைப்பற்றிதான் இப்போதுள்ள பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. நாம் ஒப்புக்கொண்டிருக்கக்கூடிய முறையில், ராஜ்ய நிர்வாகங்களில் எல்லாம் தமிழ் மொழி இருக்க வேண்டும், கல்லூரி பாட மொழிகளில் எல்லாம், உயர்ந்த படிப்புகளில் எல்லாம் தமிழ் மொழி இருக்கவேண்டும். இந்த அடிப்படையில்தான் நாம் நமது மொழிக் கொள்கையை வகுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இவைகள் எல்லாம் எந்த அளவுக்கு நடைமுறையில் இருக்கின்றன என்பதையும் பார்க்கவேண்டும். இந்த அளவுக்கு நாம் நமது கொள்கைகளை எல்லாம் வகுத்து வைத்துக்கொண்டு இப்போது அதிலிருந்து பின்வாங்கினால் எப்படி நாம் மொழிப் பிரச்னையில் தீவிரம் காட்டுவதாக இருக்கும். மொழிப் பிரச்னையைப் பொறுத்தவரையில், எல்லோரும் விருப்பு வெறுப்புக்கு இடம் கொடுக்காமல் நாம் இந்தப் பிரச்னையை பார்க்கவேண்டும். அரசியலுக்காக மட்டும் இந்தப் பிரச்னையை பயன்படுத்தக்கூடாது. தேசீய ஒற்றுமை வேண்டும் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் மொழிப்பிரச்னையை தீர்ப்பதில்தான் நாம் அதிக அக்கரை செலுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம். 1956-ம் வருஷத்திய சட்டத்தில் கூறியிருக்கிறபடி எல்லா பிரிவிலும் தமிழில் நிர்வாகம் நடக்கவேண்டும். அரசியல் சட்டத்தில் இதற்கு எல்லாவிதமான வசதியும் இருக்கிறது. இதில் நமது முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தினால் நடைமுறை



17th October 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

யில் கொண்டு வருவதற்கு எந்தவிதமான கஷ்டமும் இராது. நம்முடைய அரசியல் சட்டத்தில் 344-வது பிரிவில் என்ன சொல்லியிருக்கிறார்கள். . . .

It shall be the duty of the Commission to make recommendations to the President as to—

(a) the progressive use of the Hindi language for the official purposes of the Union;

(b) restriction on the use of the English language for all or any of the official purposes of the Union;

என்று சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட வரையில் படிப்படியாக எப்படி இந்தியினுடைய உபயோகத்தை விஸ்தரிப்பது, அதே நேரத்தில் எப்படி படிப்படியாக ஆங்கிலத்தை குறைப்பது, இது சம்பந்தமாக மொழி கமிஷன் என்ன சிபாரிசு சொல்லியிருக்கிறது? போகப்போக இந்தி ஆங்கிலத்தினுடைய இடத்திற்கு வர வேண்டும் எனற குறிக்கோள்தான் அதில் இருக்கிறது. அடுத்து இந்தி பேசாத மக்களுடைய நிலைமையைப்பற்றி என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது?

In making their recommendations under clause (2) the Commission shall have due regard to the industrial, cultural and scientific advancement of India, and the just claims and the interests of persons belonging to the non-Hindi speaking areas in regard to the public services.

இந்தி பேசாத மக்கள் தாங்களாகவே விரும்பும் வரையிலும் அதாவது இந்தி பேசாத மக்களுடைய எண்ணங்களுக்கு மதிப்பு ஏற்படுத்துவதின் மூலம் தொழிற் வளர்ச்சியிலும் கலாச்சார வளர்ச்சியிலும் விஞ்ஞான புத்தகங்களும் வரக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற சிபாரிசுகள் இருக்கின்றன. அதற்குரியவகையில் அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொண்டு நம்முடைய ராஜ்யத்தில் இருந்தும் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து நாம் கொடுத்த முறையை ஏற்றுக்கொண்டு அமல் நடத்துவார்களேயானால் எந்த மொழிக்கும் கேடு வராத வகையில் பார்த்துக்கொள்ள முடியும். 17-வது ஷரத்தை கொளுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. இதன் அடிப்படையில் அரசாங்கம் போதுமான நடவடிக்கை எடுத்திருந்தால் நிச்சயமாக இதைக் கொளுத்த வேண்டிய நிலைமையோ அல்லது வேறு எந்தவிதமான நிலைமையோ ஏற்பட்டிருக்காது. ஏற்கனவே ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய கொள்கையை, நடைமுறையில் நிறைவேற்றினால் உருவான பலனும் கிடைக்கும். அதல்லாமல் எந்த மொழியை வைத்துக் கொள்வது என்ற குழப்பத்தோடு நிலைமையை நீடித்துக்கொண்டிருப்பது சர்க்காருக்கு நல்லதல்ல . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் அறிந்து கொள்ள விரும்புவது இந்தியைப் பொறுத்தவரையில் தொடர்பு மொழியாக இருக்கவேண்டுமா, வேண்டாமா, தொடர்பு மொழி

[திரு. எம். பக்தவத்சலம்] [17th October 1964

இருக்கவேண்டும் என்று சொன்னால், எந்த மொழியாக இருக்க வேண்டும், ஆங்கிலமாய் இருக்க வேண்டுமா அல்லது இந்தியாய் இருக்கவேண்டுமா என்பதைப்பற்றி தெரிவிக்க வேண்டுகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: அதைத்தான் நானும் சொல்லிக் கொண்டு வருகிறேன். மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொள்வதற்கு இந்தி இருக்கவேண்டுமா, அல்லது ஆங்கிலம் இருக்க வேண்டுமா என்பதைப்பற்றி என்னிடம் மட்டும் கேட்பதால் எந்தவிதமான பலனும் கிடைத்து விடப்போவதில்லை. ரீஜனல் மொழியாக அந்தந்த மொழியை வைத்துவிட்டு, அந்த மொழியிலேயே தொடர்பு கொள்ளவும் முடியும் என்பதை மற்ற நாடுகளில் பார்க்கின்றோம். சமீபத்தில் ரஷ்யாவுக்கு சென்று வந்த மத்திய அரசாங்க அமைச்சர் திரு. சாக்ளா அவர்கள் கூட இதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்களும் ரஷ்யாவுக்கு சென்றிருக்கிறார்கள். பல மொழிகள் அங்கு பேசப்படுகின்றன. அங்கெல்லாம் பல மொழிகள் கற்றுக்கொள்ள வில்லையா, என்ன? இம்மாதிரிப்பட்ட பிரச்னையை தீர்க்க முடியாமல் அவர்கள் கஷ்டப்படவில்லை. நம்மைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கம் இந்த மொழிக்கொள்கை விஷயத்தில் தெளிவில்லாத ஒரு நிலையை வைத்துக் கொண்டிருப்பதின் காரணமாகத்தான் தந்திரமாக இந்தியை புகுத்துகிறார்களோ என்று எண்ண வேண்டிய நிலைமைக்கு வந்திருக்கிறது. இதைத் தீர்க்காமல் தேசிய ஒருமைப்பாடு வேண்டும், வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தால் எங்கிருந்து ஒருமைப்பாடு வரும்? ஒரு கட்சி இதற்காக கிளர்ச்சி செய்கிறது என்பது மட்டும் முக்கியமல்ல. இந்தியை எதிர்ப்பது என்கிற குறிக்கோளை மட்டும் வைத்திருக்கலாம். அதே நேரத்தில் அரசாங்கத்தினுடைய போக்கு நாட்டில் ஒருமைப்பாட்டுக்கு கேடு விளைவிக்கக்கூடிய நிலைமையில் ஆகியிருக்கிறது. நாங்கள் இவ்வளவு நாட்களாக என்ன செய்தோம் என்று கேட்கலாம். ஏழெட்டு வருஷமாக இப்பிரச்சினை இதே நிலைமையில் தான் இருந்து கொண்டிருக்கிறது. 1948-லிருந்து நான் சட்டசபையில் எதிர்க் கட்சியின் உப தலைவராக இருந்தபோது, தமிழை ஆட்சி மொழியாக்குவது என்ற சட்டத்தையாவது கொண்டு வந்தோம். இப்போது எட்டு வருஷமாக எதிர்க்கட்சி இவ்வளவு பலமாக இருந்தும் என்ன செய்ய முடிந்தது? காரணம் அரசாங்கத்தின் போக்கும் ஒரே நிலைமையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. மொழிப் பிரச்னையின் மீது எடுத்த முடிவுகள் எல்லாம் ஒவ்வொன்றாக கைவிடப்பட்டிருக்கிறது. தமிழில் ஆட்சி நடத்தவேண்டும் என்று சொல்லும்போது, நீதிமன்றத்தில் தமிழ் வரவேண்டும். இதற்காக அரசியல் சட்டத்தில் எல்லாம் இடம் இருக்கிறது. அந்த உரிமையை நாம் வற்புறுத்தியாக வேண்டும். இதற்காக நாம் 17-வது பிரிவை கொளுத்தவேண்டியதில்லை. நல்ல அம்சங்கள் பல அதிலேயே இருக்கின்றன. அதை வைத்துக்கொண்டே ராஜ்ய சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். மத்திய சர்க்காரை இதற்காக வற்புறுத்த வேண்டும். நீதிமன்றங்களில் தமிழை



17th October 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

கொண்டு வருவதற்கும் பட்டப்படிப்பில் தமிழை கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக தனிச் சலுகை காட்டப்படுவதாக சொல்லப்படுகிறது. சலுகை என்பது எதற்காக, தமிழில் படித்தால் இரண்டாம் தரமாக ஏன் கருதப்படவேண்டும்? கல்லூரிகளில் தமிழ் பண்டிதர்களை நடத்துவது போன்ற எண்ணம் கல்லூரியில் தமிழ் படிப்பவர்களுக்கு வரக்கூடாது. உத்யோகம் கிடைப்பதிலும் இரண்டாம் தரமாக எண்ணக்கூடிய நிலைமையைப் போக்கவேண்டும். ஆகையால் உறுதியாக தமிழை பயிற்சி மொழியாக ஆக்கவேண்டும் என்பதில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதிலே தாற்காலிகமாக கஷ்டம் இருக்கலாம். நம் தமிழ் நாட்டிலும், மத்திய அரசாங்கத்திலும் கூட இந்தியே இருக்கக் கூடாது, ஆங்கிலம் மட்டும் இருக்க வேண்டும் என்கிற எண்ணம் உடையவர்கள் இருக்கிறார்கள். அதே மாதிரி பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்புகளுக்கும் பட்ட மேல் படிப்புகளுக்கும் பிரதேச மொழி இருக்கக்கூடாது, ஆங்கிலம்தான் இருக்க வேண்டும் என்று கூறுகிறவர்களும் இருக்கிறார்கள். இவர்கள்தான் நமது பிரதேச மொழியின் வளர்ச்சிக்கு விரோதிகள் என்பது எனது அபிப்பிராயம். இவர்கள்தான் தேசிய ஒருமைப்பாடுக்கு விரோதிகள் என்பது எனது அபிப்பிராயம். ஆங்கிலம் எப்போதும் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று சொன்னால் அது 17 கோடி மக்களின் மனதைப் புண்படுத்த கூடியதாகும். அதனால்தான் இந்தி வெறி ஏற்படுகிறது. அதுதான் இந்தியை எப்படியும் புகுத்தவேண்டும் என்று சொல்லக் கூடியவர்களின் கைகளை பலப்படுத்தக் கூடியதாக இருக்கிறது என்பது எனது அபிப்பிராயம். குருட்டுத் தனமாக இந்தியை எதிர்ப்பதை விட்டு விட்டு பிரதேச மொழியின் வளர்ச்சிக்கான வேலைகளில் ஈடுபட வேண்டும். நமது முதல் அமைச்சர் அவர்கள் இப்படி இந்தி வராமல் தடுக்க, இந்தி ஆபத்தைத் தடுக்க என்ன கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்கள்? இந்தி ஆபத்தைத் தடுக்க ஆங்கிலத்தை நீடிப்பது சரியான மார்க்கம் அல்ல. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஆங்கிலத்தை நீடிக்க வேண்டியது அவசியம் தான். அதனால் தான் நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன். மத்திய அரசாங்கத்திலே இந்தியையும் ஆங்கிலத்தையும் காலவரையின்றி நீடிக்கவேண்டும். அதன் மூலம் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். என் கட்சியின் யோசனை கூட. அதே சமயத்தில் ஆங்கிலம் இருக்கும் இடத்திற்கு, அதே அந்தஸ்திற்கு இந்தி பேசாத ராஜ்யத்திலும் இந்தியை அமல் நடத்தலாம் என்று நினைப்பதும் அபாயமானது. இந்தி வந்துவிடுமோ என்று நமது முதல் அமைச்சர் மாதிரி ஆங்கிலத்தை நீடிக்கவேண்டும் என்று கருத்து வைத்திருப்பதும் அபாயம். இதற்கு பதில் ஆங்கிலத்தை நீடிப்பது அல்ல. ஆங்கிலம் போனால் இந்தி என்பது அல்ல மாற்று. மாற்று பிரதேச மொழியாகதான் இருக்கவேண்டும் அதற்கு திட்டம் போட வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு கொள்கை வகுக்கவேண்டிய அவசியம் இல்லை. எல்லாக் கட்சிகளும் சேர்ந்து, திராவிட முன்னேற்றக்

கழகம் உட்பட எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஒப்புக்கொண்ட கொள்கை இருக்கிறது. அதை அமல் நடத்த துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கத்திற்கு இருக்கும் அதிகாரத்தில் சட்ட சபையில் ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்று கொண்டு வருவது போல, நீதி மன்றங்களிலும் தமிழில் தீர்ப்பு அளிக்க வேண்டும். தமிழிலேயே வழக்கறிஞர்கள் வாதாட வேண்டும். அவர்கள் கூட தமிழில் படித்து விட்டு சட்டக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் ஆங்கிலத்தில் படித்து விட்டு கோர்ட்டுகளில் வாதாடும் போது தமிழில் வாதாடுவது சுலபமாக இருக்கும். ஆங்கிலத்தில் வாதாடுவது அவ்வளவு சுலபமல்ல. நீதி மன்றங்களில் எந்த அளவு தமிழைப் பயன்படுத்த முடியுமோ அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். தீர்ப்பு எழுதுவது வேண்டுமானால் ஆங்கிலத்தில் இருக்கட்டும் என்று வைக்கட்டும். மற்றவைகளைத் தமிழில் நடத்துவதில் என்ன கஷ்டம் இருக்க முடியும்? அதற்கு நடவடிக்கை எடுத்தால் தான் இந்தியைச் சமாளிக்க முடியும். இந்தியால் இருக்கிற ஆபத்தைத் தடுக்க சரியான வழி, நம் ராஜ்யம் சம்பந்தப்பட்ட மட்டில் பிரதேச மொழியிலேயே சட்ட சபை நடைபெற வேண்டும். சட்டங்களைத் தமிழிலேயே இயற்றவேண்டும், நீதி மன்ற நடவடிக்கைகள் தமிழில் இருக்கவேண்டும், கல்லூரிகளிலும் தமிழிலேயே போதனை செய்யவேண்டும். இந்த முறையில் மாற்றம் செய்வதற்கு முயற்சி எடுப்பது முக்கியம் என்ற இந்த யோசனைகளோடு கூட, இந்த மசோதாவை எதிர்க்க வேண்டிய நிலை இருந்தாலும் இந்த மசோதாவை எதிர்த்தால் பயன் ஏற்படாது. இந்த மசோதா தேவை என்ற அளவுக்கு சூழ்நிலையை உருவாக்கி வைத்திருக்கிறார்கள், இந்தச் சட்டத்தை இயற்றாவிட்டால், நாளைக்கே தமிழில் நடத்த முடியாத நிலைமை இருக்கிறது என்ற காரணத்தினால் நான் இதை ஆதரிக்கிறேன்.

**திரு. கோ. வெங்கட்ராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் இந்த மசோதா மூலம் ஜனநாயகக் கருத்துக்களுக்கும், இந்தி பேசாத பகுதி மக்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். காரணம், 1965-க்குப் பிறகு இந்தி மட்டும் இந்த நாட்டில் ஆட்சி மொழியாக நீடிக்கும் என்ற நிலையை மாற்றி 17-வது திருத்தத்தின் மூலம் ஹிந்தியோடு ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்ற நிலை உருவாகியிருக்கிறது. நாட்டிலே 17-வது அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொளுத்துவது, அதன் மூலம் அரசியல் போராட்டத்தை நடத்துவது என்ற நிலையைப் பார்க்கும்போது உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது. புராண காலத்தில் பார்த்தால், துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் என்ற முறையில் அரக்கர்களையெல்லாம் அழித்து தேவர்கள் ஆட்சி புரிய வேண்டிய முயற்சிகளை எடுத்ததாகப் பார்த்திருக்கிறோம். ஹிந்தி அரக்கியை எதிர்த்து தேவர் குலம் போராடப்புறப்பட்டுள்ள போர்க்கோலக் காட்சியை இன்று பார்க்கிறோம். ஹிந்தி அரக்கி என்ன கொடுமை செய்து விட்டாள்? ஹிந்தியை அரக்கர் குலத்தில் சேர்க்க



வேண்டிய அவசியம் என்ன என்று பார்க்கும்போது, இவர்கள் கொளுத்துவதற்குப் புறப்பட்டுள்ள அரசியல் சட்டம் தமிழ் மக்களுக்குச் சாதகமான திருத்தச் சட்டமாகும்.

**கனம் சபாநாயகர்:** அரசியல் சட்டத்தைக் கொளுத்துவது பற்றி கனம் அங்கத்தினர் இப்போது பேசவேண்டாம்.

**திரு. கோ. வெங்கட்ராமன்:** அரசியல் சட்டத் திருத்தம் கொளுத்தப்படுகிறது என்று ஏன் சொல்லுகிறேன் என்றால் அந்தத் திருத்த சட்டத்திற்கு ஆதரவு தருகிற வகையில் இந்த மசோதாவை இங்கே இப்போது நிறைவேற்றுகிறோம். 1965-க்குப் பிறகு ஹிந்தியோடு ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்ற அடிப்படையில் பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் ராஜ்ய சட்ட சபைகளின் அங்கீகாரம் தேவை என்ற விதத்தில் இந்த மன்றத்தில் இன்றைய தினம் இந்த மசோதா பரிசீலிக்கப்படுகிறது. ஹிந்தி பேசாத மக்களுக்கு அனுகூலமாக இருக்கும் ஒன்றை எதிர்க்கிறார்களே, அத்தகைய மக்களுக்கு நல்லதைச் செய்யக் கூடிய ஒன்றை எதிர்க்கக்கூடிய எதிர்க்கட்சியைப் பற்றிக் குறிப்பிடுவதற்காகத்தான் குறிப்பிடுகிறேனேயொழிய, சம்பந்தம் இல்லாத ஒன்றை நான் இங்கே சொல்லவரவில்லை. ஜனநாயகத்திற்கு ஆக்கம் கொடுக்கக் கூடிய, மக்கள் மதிக்கக் கூடிய முறையில் அரசியல் சட்டத் திருத்தமாக இது உருவாகியிருக்கிறது. பல பல ஆண்டுகள் ஹிந்தி பேசாத மக்கள் ஏற்றுக்கொள்ளும் வரையில், தாங்களாக ஒப்புக்கொள்ளும் வரையில் ஆங்கிலம் நீடிக்கும், முன்னேற்றம் அடைந்திருக்கிற பல்வேறு நாடுகளைப் போல ஹிந்தி பேசாத பகுதியிலுள்ள மக்கள் தொழில் துறையிலும் மற்ற துறையிலும் நல்ல வாய்ப்புகளைப் பெறக் கூடிய முறையில் செய்யவேண்டுமென்று ஆங்கிலத்தை நீடித்திருக்கிறோம் அந்த சட்டத் திருத்தத்தின் மூலமாக. இந்த மசோதாவின் மூலமாகவும் அதே கருத்தைத் தான் ஏற்றுக்கொள்ளவிருக்கிறோம். ஆகையால் மசோதாவைப் பொறுத்த வரையில் எதிர் கட்சிகள் ஆதரித்துத் தான் தீரவேண்டும். 1965-ம் ஆண்டுக்குப் பிறகு ஆங்கிலம் நீடித்துத்தான் ஆக வேண்டும். ஆகவே தான் இந்த மசோதாவிற்கு அவர்கள் ஆதரவு தரவேண்டியிருக்கிறது. எதிர் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஹிந்திப் பிரச்னையைப்பற்றி எப்படியாவது பேசவேண்டும் என்று கொண்டிருக்கிறார்கள். எங்கள் கட்சியின் நாட்டுப் பிரிவினைக் கொள்கையைப்பற்றி காங்கிரஸ்காரர்கள் புரிந்துகொள்ளவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் கொள்கை அவர்களுக்கே புரியாமல் இருக்கும் போது காங்கிரஸ்காரர்களுக்குப் புரியாமல் இருப்பதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. அவர்களுக்குக் கொள்கை இருக்கிறது என்றால் அதை எடுத்துச் சொல்லியிருந்தால் ஏற்றுக்கொள்ள முடியும். மொழிப் பிரச்னையை வைத்து நாட்டு மக்களிடத்தில் நாடகம் ஆடி, அதைச் சரக்காக்கி வாணிபம் செய்யும் நிலைக்கு வந்திருக்கிறார்கள். ஆகவேதான் இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் ஒரு சிக்கலான நிலை ஏற்பட்டு விட்டது. ஆதலால் தான் எதிர்க்க வேண்டிய ஒன்றை ஆதரிக்கும் நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் இதை

[திரு. கோ. வெங்கட்ராமன்] [17th October 1964

ஆதரிக்கவில்லை என்று சொன்னால் ஹிந்தியை ஆதரிக்கிறவர்களாக மாறுகிறார்கள் என்று சொல்லி இந்த மசோதாவை ஆதரித்து எனது வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. சா. கணேசன்** : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது வந்திருக்கிற இந்த மசோதாவை நான் ஆதரித்து அதன் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஆங்கிலத்தை தொடர்ந்து நீடிக்கின்ற அளவிலே இந்த மசோதா வழி வகுக்கிறது. அதைப் பற்றி முன்னே பேசிய அன்பர்களெல்லாம் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். வேறு விதமான கருத்துக்களுக்கு நான் பதில் சொல்ல முடியவில்லை, முயலவும் மாட்டேன். சிலர் பேசுகிற போது ஆங்கில நீடிப்புக்கு கால வரம்பு இட்டுத் தீரவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். பொது மொழியாக ஹிந்தி வருவதைத் தடை செய்யவே ஆங்கிலத்தின் நீடிப்பு பயன்படும் என்றும் குறிப்பிட்டார்கள். அதை நான் குறிப்பிட்டு ஆங்கில நீடிப்புக்கு கால
11-30 a.m. வரம்பு கூடாது என்கிற என்னுடைய கருத்தைப் புலப்படுத்த விரும்புகிறேன். பொது மொழியாக இந்தி வருவதை இது தடை செய்யும் என்று அவர்கள் அஞ்சுகிற ஒன்றை நான் மனப்பூர்வமாக ஆமோதிக்கிறேன். பொது மொழியாக இந்தி வருவதை ஆங்கிலம் தடை செய்யும் என்பது மட்டுமல்ல. ஆங்கிலம் தடை செய்யத்தான் வேண்டும் என்பது என்னுடைய அழுத்தமான கருத்து.

மற்றும் ஒரு கனம் உறுப்பினர் பேசும்பொழுது, தமிழ் வேண்டும், ஆகவே ஆங்கிலம் வேண்டாம் என்று கூறினார்கள். அதிலே ஒரு பகுதியை அப்படியே நான் ஏற்றுக்கொள்கிறேன் தமிழ் வேண்டும். இந்தி பூர்ணத்துவம் பெறாத, தகுதி அற்ற ஒரு மொழி, அது வந்துவிடுமானால் தமிழ் வளர்ச்சி பெற முடியாது. ஆகவே தமிழ் வேண்டும். இந்தி வரப்படாது; ஆதலினாலே ஆங்கிலம் வேண்டும் என்ற என்னுடைய கருத்தையும் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சபையில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் குறைவு. அதனால் சபையிலே சட்டங்கள் செய்துவிட முடியாது என்று அதே கனம் உறுப்பினர் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். ஆங்கிலம் மட்டும் தெரிந்து கொண்டு விட்டதினாலே சட்டம் இயற்றி விடமுடியும், அல்லது சட்டத்தை செம்மையாக்கிவிட முடியும் என்று கூறிவிடமுடியாது. மொழி ஒன்று மட்டும் அதற்கு வழி வகுக்காது, சட்ட அறிவு பெறாமல் என்பதை நம்மில் பலர் ஏற்றுக்கொள்வார்கள் என்பதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

ஆங்கிலம் வேண்டாம் என்று சொன்னால் இந்தி தான் ஆட்சி மொழி ஆகித் தீரவேண்டும் என்ற நிலைமை நமக்கு இருக்கிறது. இப்பொழுது இந்த மசோதா வராவிட்டால், தற்செயலாக இந்தி அமுலுக்கு வந்துவிடும் என்பதை நாம் மறந்துவிடப்படாது. ஆதலினாலே இந்த மசோதா நல்லது, அவசியமானது என்று மட்டும் நான் சொல்ல விரும்பவில்லை. இன்றியமையாத ஒன்று என்று நான் என்னுடைய கருத்தை புலப்படுத்திக்கொள்ள வேண்டிய கடமை உள்ளவனாக இருக்கிறேன்.



17th October 1964] [திரு. சா. கணேசன்]

இனி நேரடியாக ஆங்கிலத்திற்கு வருவோம். தேசம் முழுவதற்கும் இந்தி பொது மொழியாக இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இந்தியின் பேரில் துவேஷம் கிடையாது. ஓரளவுக்கு எனக்கு இந்தி தெரியும். இந்தியின் மீது வெறுப்பினாலே நான் எதையும் சொல்லவில்லை. ஆங்கிலத்தின் மீது உள்ள மோகத்தினாலும் சொல்லவில்லை. வேறு எந்தக் காரணத்தைக் கொண்டும் எதையும் பேசவில்லை. எதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேனோ அதை மட்டும் தான் நான் புலப்படுத்துகிறேன். தேசம் முழுவதற்கும் ஒரு பொது மொழி வேண்டும், ஆதலினால் இந்தி வேண்டும் என்று நம் சகோதரர்களில் பலர் கருத்து தெரிவிக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். தேசம் முழுவதற்கும் ஒரு பொது மொழி வேண்டுமென்றால், உலகம் முழுவதற்கும், இப்பொழுது ஒன்றாகிக்கொண்டு வருகிற, சிறுத்துக்கொண்டு வருகிற உலகம் முழுவதற்கும், அப்படி தொடர்பு, வாய்ப்புகள், வசதிகள் பெருகிக் கொண்டு வருகிற இந்தக் காலத்தில் உலகம் முழுவதற்கும் தகுதியான ஒரு பொதுமொழி ஒன்று நம்மிடையே இருக்க, அதிலே பேசுவதிலே பலர் புலனும் பெற்றிருக்க, அதை விட்டு விட்டு, இந்தியாவுக்கு மட்டும் தேவை என்று ஒரு மொழியை இடையிலே கடைப்பிடிக்க தொடங்குவோமானால் பாதிக் கிணறு தாண்டிய நிலையை நாம் அடைவோம் என்று மனச் சங்கடத்தோடு எச்சரிக்கை செய்ய வேண்டியவனாக இருக்கிறேன். நாம் நன்றாக விஷயம் தெரிந்தவர்கள். தமிழ் நல்ல வளமான மொழி. இன்னும் கொஞ்சம் அழுத்திச் சொல்லவேண்டுமென்றால் தமிழைப் போல இந்தியாவிலே இவ்வளவு பண்பட்ட மொழி இல்லை என்று கூட நான் சொல்லத் துணிவேன். ஆனால் அது போதாது. இங்கே பொருத்தமான வழிகளிலே பார்க்கும்பொழுது, எல்லோருக்கும் புரிகிற முறையில் பார்க்கிறபொழுது, தமிழ் தெரிந்தவர்களுடைய எண்ணிக்கையைப் பார்க்கும்பொழுது, பிற மொழி தெரிந்தவர்களின் எண்ணிக்கையை பார்க்கிறபொழுது, தமிழ் தான் தேசிய மொழியாகவேண்டும் என்று சொல்லுவதற்கு வாய்ப்பு மிக மிகக் குறைவு. ஆகையினால், தமிழ் எப்படிப்பட்டது என்பதை நாம் புரிந்து கொண்டு, அதன் மீது எதை நாம் அடையவேண்டும் என்பதை உணர்ந்துகொண்டு சிந்தித்துப் பார்ப்போமானால் அப்பொழுது நமக்கு நல்ல பலன் கிடைக்கும். தமிழ் ஒரு நல்ல பாலை மரத்தைப் போன்றது. கறையான், அந்து போன்றவைகளினால் அது செத்துவிடாது, கெட்டு விடாது. அப்படி பாலை மரத்தில் இருக்கிற நாம், தேக்கு மரத்தில் இருக்கிற நாம், தேக்கைவிட பாலை இன்னும் வளமானது, நமக்கு இன்னும் வாய்ப்பு, வசதி, பலன் வேண்டும் என்று நினைத்தால் ஒரு இலுப்பையைப் பிடிக்கவேண்டும். 2000 8000 வருஷங்கள் ஆனாலும் இலுப்பை வளருவதை எதனாலும் அழித்துவிட முடியாது. அதை விட்டுவிட்டு முருங்கை மரத்தைப் பிடித்தால் கதி என்ன ஆகிறது? பாலை மரத்தில் வீற்றிருக்கிற நாம் தமிழுக்கு உலகம் முழுவதிலும் நேரடியான பலன் இருக்கும் வாய்ப்பு இருக்கும் என்று கருதுவோமானால் ஆங்கிலத்தைப் போன்ற இலுப்பை மரத்தைப் பிடிக்காமல், இந்தி போன்ற

முருங்கை மரத்தைப் பிடித்தால், நாம் விழுந்து பல் உடைந்து போகக்கூடிய நிலை தான் ஏற்படும் என்று மனக்கிலேசத்தோடு இந்தியின் பேரில் உள்ள அன்போடு சொல்ல விரும்புகிறேன்.

இனி, ஆங்கிலமானது உலகத் தொடர்பு மொழி மட்டுமல்ல. தமிழ் வளம் பெறுவதற்கு பிற மொழிகள் பல உதவி செய்தன. சமஸ்கிருதம் தமிழ் வளர்வதற்கு நன்றாக உதவி பண்ணியது என்று நம்புகிறவர்களில் நானும் ஒருவன். அதைவிட அதிகமாக உதவி புரிந்த ஒரு மொழி ஆங்கிலம். வரலாற்றை எடுத்துப் பார்த்தால் பல்வேறு துறை நூல்கள் பல்வேறு முறைகளில் தமிழிலே வெளிவந்திருக்கின்றன, அகராதி உள்பட. அதற்கு முன்பு நிகண்டுவைப் பார்த்துத்தான் படித்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. 12 நிகண்டுகள் பல்வேறு பட்ட நிகண்டுகள் இவைகளைப் படித்துக்கொண்டிருக்க வேண்டியிருந்தது. அகராதி முதற்கொண்டு எல்லா வளமும் ஆங்கிலத்தினால் நமக்குக் கிடைத்த பலன். பல்வேறு துறை அறிவுகளை நாம் ஆங்கிலத்தின் மூலம் பெற முடிந்தது. 10000 பேர்களில் இரண்டு ஒருவரைத் தவிர, 10000 பேர்களில் 9998 பேர்கள் என்று சொல்லி விடலாம், அவர்கள் ஆங்கிலத்தின் மூலம் தான் பல்வேறு துறை அறிவைப் பெற்றவர்கள். மற்றவர்கள் 'பிரெஞ்சு, கிரீக், லாடின்' போன்ற மொழிகளின் மூலம் பல்வேறு துறை அறிவைப் பெற்றிருக்கலாம். அந்த எண்ணிக்கை .002-க்கு மேல் இருக்காது. அப்படித் தான் போகும். இந்த மாதிரி வளமான ஒரு மொழியில் நாம் அனுபவமும் வாய்ப்பும் பெற்றுவிட்டோம். அதை விட்டுவிட்டு புதிதாக அதுவும் வளரவேண்டிய மொழி, இன்னும் அதிலே வளமே கிடையாது, எல்லாம் அங்கே உற்பத்தி செய்யப்படவேண்டிய ஒரு மொழி, தேசத்திலே மிகப் பெரும்பாலானவர்களால் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு மொழி என்பதில் துளியும் ஆட்சேபனை இல்லை, வளமே துளியும் இல்லாத ஒரு மொழி, இலக்கிய நலம், செறிவே இல்லாத ஒரு மொழி, அதைப்போய் நாம் கைக்கொள்ளவேண்டும் என்று எண்ணுவது நம்மைப்போன்றவர்களுக்கு புத்திசாலித்தனமாக அமையமாட்டாது என்று மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கும் மேலாக, ஆங்கிலமானது ஒரு நாட்டு மொழி கூட அல்ல. நமது நாட்டில் கூட இப்பொழுது ஆங்கிலத்தைக் தாய் மொழியாகக் கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள். பல்வேறு பெரிய தேசங்களிலே, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து போன்ற பல்வேறு நாடுகளில் ஆங்கிலமே நாட்டு மொழியாக இருக்கிறது. அந்த நாடுகளெல்லாம் பல்வேறு துறை அறிவுகளில் வளம் பெற்றிருக்கின்றன. அங்கெல்லாம் சட்டம் உள்பட, நிர்வாகம் உள்பட, கலைகள் உள்பட எல்லாத் துறைகளும் ஆங்கிலத்திலேயே பெருகி வளர்கின்றன. எந்த அறிவை, எந்தத் துறை அனுபவத்தை நாம் பெறவேண்டுமென்றாலும் ஆங்கிலம் ஒன்று மட்டும் கற்றிருந்தால் போதும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்று உலகிலே நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட இன்றியமை



யாத ஆங்கிலத்தை நாம் உதாசீனம் செய்துவிட்டுவிடுவதினால் நமக்கு பயன் உள்ள நல்ல மொழியை நாம் தேடிக்கொள்பவர்களாக ஆகமாட்டோம்.

அதை விட்டுவிட்டு இந்தியாவின் நிலைக்கு வருவோமானால் ஆங்கில மொழி பொது மொழியாக இருக்குமேயானால் நமது அரசியல் நிர்ணய சட்டத்தில் காணப்பட்ட எல்லோருக்கும் சம சந்தர்ப்பமும் சம வாய்ப்பும் உண்டு என்று நம்புகிற நிலை நீடிக்கும். இந்தி மொழி பொது மொழி ஆனால், அல்லது வேறு எந்த மொழி ஆனாலும் சமசந்தர்ப்பம் கிட்டமாட்டாது. சுமார் 200 ஆண்டுகளாக பல்துறை மேதைகள் இந்த மொழியிலே பயிற்சி பெற்றுவிட்டதினாலே மாநிலம் தோறும் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு ஆங்கிலத்தில் ஆற்றல் பெற்றவர்களாக, அனுபவம் பெற்றவர்களாக அவர்கள் விளங்குகிறார்கள். ஆதலினாலே ஒவ்வொரு மகாணத்திலும் ஒரு தனிப் பகுதி தோறும் இருப்பவர்களுக்கு இந்த மொழி வாய்ப்பும், வசதியும் கொடுக்கிறது. மற்றவர்களுக்கு பாரபட்சமான நிலைமையை உண்டு பண்ணுகிறது என்ற குற்றச்சாட்டிற்கு, பழிக்கு இடம் இல்லாத நிலை இந்தியாவில் ஏற்படவேண்டும் என்றால், நிதானமும், நேர்மையும், பாரபட்சம், விருப்பு, வெறுப்பு அற்ற உள்ளமும் கொண்டவர்களாக நாம் அமையவேண்டுமென்றால் ஆங்கிலம் தான் வேண்டும் என்று நினைப்பதில் இரண்டாவது கருத்தை நாம் கொண்டு இருக்க முடியாது. இன்னொன்றும் சொல்கிறேன். ஆங்கிலம் பொது மொழியாக நீடித்தால் தான் இந்தியாவின் ஐக்கியமும், ஒருமைப்பாடும் நிலைக்கும். ஆங்கிலம் அன்றி வேறு ஒரு மொழி பொது மொழியாக வருமானால், இந்தியா நிச்சயம் சிதறுண்டு போகும். அதனால் ஏற்படுகிற விளைவுகள் விரும்பத் தக்கவையோ, விரும்பத் தகாதவையோ, அவை நடைபெற்றுத் தான் தீரும். அம்மாதிரி நடைபெறவேண்டும் என்பது நம்முடைய கருத்தோ, பிரார்த்தனையோ அல்ல. நம்முடைய விருப்பம் கூட அல்ல என்றாலும் அந்த நிலை ஏற்பட்டே தீரும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

பொது மொழி அல்லது ஆட்சி மொழி என்று சொல்லிவிட்டால் இந்தியாவிலே உள்ள மக்கள் நூற்றுக்கு நூறு பேரும் கற்றிருக்க வேண்டுமென்று கருதுவது நியாயமல்ல, அது சாத்தியமுமல்ல. எந்த மொழி பொது மொழியாக இருந்தாலும், அந்த மொழியை, நூற்றுக்கு நூறு பேரும், அதாவது இந்தியா முழுவதிலும் உள்ளவர்கள், கற்று விட மாட்டார்கள். ஏதோ, அந்தந்தத் துறைகளுக்கு, நிலைகளுக்குத் தக்கவாறு, ஒரு சிலர் தான், மிகக் குறைந்த சதமானத்தினர்தான், பொது மொழியாக எது வந்தாலும் சரி—அது ஆங்கில மொழியாக இருந்தாலும் சரி, ஹிந்தியாக இருந்தாலும் சரி, தமிழாக இருந்தாலும் சரி--அதைக் கற்பார்கள். ஆதலினாலே, பொது மொழியை அத்தனை பேரும் கற்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது சாத்தியமல்ல. வேறு கணக்கில் பார்த்தாலும், அதாவது பெரும்பாலான மக்கள் ஹிந்தி பேசுகிறார்களா என்று பார்த்தாலும், ஹிந்தி அடிப்படைப்

போய்விடும். ஆனால் அதற்கு இப்பொழுது நான் போக விரும்பவில்லை. இந்த மசோதாவின் மீது அதைப் பற்றிப் பேச வேண்டிய அவசியமும் இல்லை. இன்னும் மத்திய ஆட்சியிலுள்ள அபிஷியல் லாங்குவேஜ் கமிஷன் மூலமாக நியமிக்கப்பட்டிருக்கும் கிளைக் குழுக்கள், எல்லா மாகாண மொழிகளிலும் நூல்கள் எழுதுகிற பொழுது, ஆங்கில டெக்னிகல் டெர்ம்ஸ்களை உபயோகப்படுத்தப்படாது, மாநில மொழி கலைச்சொற்களை உபயோகப்படுத்தப்படாது, அக்குழுவினாலே அங்கீகரிக்கப் பட்ட கலைச் சொற்களை மட்டுமே. . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சமீபத்திலே என்னிடம் ஒரு ஹிந்தி டிக்ஷனரி கொடுக்கப்பட்டது. அது சமீபத்திலே தயாரிக்கப்பட்டது. அதை நான் பார்த்தேன். "டெம்பரேச்சர்" என்பதற்கு ஹிந்தி வார்த்தையைப் போட்டிருக்கிறார்கள். அதோடு கூட, டெம்பரேச்சர் என்றும் போட்டிருக்கிறார்கள். அதேமாதிரி, 'தெர்மாமீட்டர்' என்பதற்கு "தெர்மாமீட்டர்" என்றும் போட்டிருக்கிறார்கள். எல்லோரும் புரிந்துகொள்ளக் கூடிய வார்த்தைகள். கூடியவரையிலும் இன்டர்நேஷனல் வார்த்தைகளாக இருக்கவேண்டும் என்பது இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. சா. கணேசன்:** அதை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறேன். அபிஷியல் லாங்குவேஜ் கமிஷன் ரிப்போர்ட்டிலும் அது வந்திருக்கிறது. அதேமாதிரி பல்வேறு சொற்களுக்கு இன்டர்நேஷனல் டெர்ம்ஸில் உள்ளவைகளை ஒப்புக்கொள்கிறார்கள். அதையும் நான் மறுக்கவில்லை. ஆனால் பல வார்த்தைகள் புதிதாக மொழிப்பட்டறையில் தயாரிக்கப்பட்டு உபயோகிக்கப்படும் வார்த்தைகள். அந்த வார்த்தைகளைத்தான் உபயோகிக்கவேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். அதை ஒப்புக்கொள்ளாவிட்டால் மத்திய சர்க்கார் உதவிகளும் நின்றுவிடும் என்று பயமுறுத்தப் படுகிறது; அன்றியும் அதற்குவேண்டிய அங்கீகாரம்கூட நமக்கு கிடைக்குமோ கிடைக்காதோ என்று ஐயப்படும்படியான நிலைமை இருக்கிறதென்பதை நான் தஸ்தாவேஜ் மூலமாகவே நிரூபிக்க முடியும். ஆகையினால் இந்தமாதிரி ஒரு நிலை வந்துவிடுமானால் பல சொற்கள் நமக்குப் புரியாத நிலைமையில் போய்விடும். அவர்கள் டெர்மில் 'வாட்டர் வே' என்பதற்கு 'ஜலபாதை' என்று போட்டிருக்கிறார்கள். 'குழாய் வழி' அல்லது 'நீர்வழி' என்ற வார்த்தைகளை உபயோகப்படுத்தியிருக்கலாம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதேமாதிரி வழிப்போக்கர் விடுதி என்று போடுவதும் தவறு.

**திரு. சா. கணேசன்:** வழிப்போக்கர் விடுதி என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் குறிகிய மனோபாவத்தில் இதைப் பற்றி பேசவில்லை. பல்வேறு துறைச் சொற்களெல்லாம் இன்டர்நேஷனல் டெர்ம்ஸிலேயே இருக்கவேண்டுமென்பதை இந்தச் சட்டசபையிலே நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.



'மோட்டார்' என்ற வார்த்தையைத்தான் உபயோகப்படுத்த வேண்டும். அது தமிழ் இலக்கண மரபுக்கும் சரியாக இருக்கிறது. அதைவிட்டு 'தான் இயங்கி' என்று சொல்லக்கூடாது என்றும் சொல்லியிருக்கிறேன். 'ஆட்டோமோபைல்' என்பதை மொழி பெயர்த்து 'தான் இயங்கி' என்று சொல்கிறார்கள். 'மோட்டார்' என்பது தனித் தமிழ் மாதிரி இருக்கிறது. அதைத்தான் உபயோகிக்கவேண்டும். குண்டு சட்டியிலே குதிரை ஓட்டிக்கொண்டு இருப்பதை தமிழ்ப் பற்று என்று நான் கருதவில்லை. மற்றவர்களும் கருதமாட்டார்கள். அதற்காக இந்த அவந்தரமான நிலையில் வெறியும் கூடாது. வெறுப்பும் கூடாது, சமநிலையிலே நின்று கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதற்காகத் தான் இதை நான் சொல்லுகிறேன்.

தமிழிலே முடியுமா, முடியாதா என்பதைப் பற்றி இப்பொழுது பேசவேண்டாம். ஹைகோர்டிலே தமிழ் வந்துவிட்டால் இங்கே பூர்ணமாக தமிழ் வந்துவிடும் என்றெல்லாம் கருத்து தெரிவிக்கப் பட்டது. ஹைக்கோர்ட்டுக்குச் சென்று பழங்காலத்தில் நீதிபதிகள் தங்கள் ஜட்ஜ்மெண்டுகளைத் தமிழிலேயே எழுதியிருப்பதை என் கண்ணால் நான் பார்த்திருக்கிறேன். விசாரணை, ஆர்க்யுமெண்ட், ஜட்ஜ்மெண்ட் இவ்வளவும் தமிழிலேயே எழுதப்பட்டிருக்கிறது. பெர்மிஷன் வாங்கிக்கொண்டு சென்றால் இன்றும் இவற்றையெல்லாம் பார்க்கலாம். அப்பொழுது டைப்ரைட்டிங் கிடையாது. அழகாக கையினாலேயே எழுதியிருக்கிறார்கள். 'ஸீல்' என்பதற்கு முத்திரை என்றும், 'ட்ரெஷரி' என்பதற்கு பொக்கிஷம் என்றும் வார்த்தைகளை உபயோகித்திருக்கிறார்கள். மேலும் ஸ்டாம்புகளில் 'இரண்டு ரூபாய்கள், மூன்று ரூபாய்கள்' என்றெல்லாம் போட்டிருக்கிறார்கள். பனையோலைகளிலும்கூட எம்பாஸிங் சீல் போட்டிருக்கிறார்கள். முடியாது என்பது ஒன்றும் இல்லை. ஆனால் ஹைக்கோர்ட்டிலிருந்து சுப்ரீம் கோட்டுக்குப் போகிற பொழுது நிலைமை மாறுபடும். ஹைக்கோர்ட்டு நிகழ்ச்சிகளெல்லாம் தமிழில் இருக்கலாம். பதிவு எல்லாம் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. ரிக்கார்டிங் முழுவதும் ஆங்கிலத்தில் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்தக் கேஸ் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறபொழுது, மறுபடியும் யாராவது மொழி பெயர்த்து பிழைகள் நேராமல் அமையும். இங்கே இரண்டு வக்கீல்களும் கூட இருந்து மொழி பெயர்ப்பைப் பார்த்துவிடுவதினால் தவறுகள் வராது. ஹைக்கோர்ட்டு நிலையிலே, அதாவது பதிவு நிலையிலே மட்டும் ஆங்கிலம் இருக்கவேண்டும். என்னுடைய சுருக்கமான கருத்தை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். மாநில அளவிலே, எல்லாம் தமிழில் இருக்க வேண்டும், சட்டசபை நிகழ்ச்சிகள் உள்பட என்ற என் கருத்தை நான் தெரிவிக்கிறேன். இந்திய அளவிலே எங்கும் ஆங்கிலமே தொடர்பு மொழியாக, ஆட்சிமொழியாக அமையவேண்டும் என்றும் நான் சொல்லுகிறேன். 1956-ம் ஆண்டு 31-வது சட்டமாகிய ஸ்டேட் அபிஷியல் லேங்க்வேஜ் சட்டத்தில் சொல்லியிருக்கிறபடி சர்க்கார் நோட்டிபிகேஷன் போட்டுவிட்டால் சட்

*[திரு. சா. கணேசன்]* [17th October 1964

சபை உள்பட எல்லா இடங்களிலும் தமிழ் ஆட்சிமொழியாக அமையும். அதையும் செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு, ஆங்கிலம் நீடித்து நிலைக்கவேண்டும் என்று கொண்டுவந்திருக்கிற இந்த மசோதாவை மனப்பூர்வமாக வாழ்த்தி, வரவேற்று, அதனை ஆதரிக்கிறேன்.

* **திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் விவாதிக்கப்படுகிற இந்த மசோதாவைக் குறித்து நேற்றைய தினம் பேசிய நண்பர்களும், இன்றைய தினம் கருத்துக்களை தெரிவித்திருக்கிற நண்பர்களும், இறுதியிலே இந்த மசோதாவை வரவேற்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். நண்பர் நல்லசிவம் அவர்களைத் தவிர. இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் நான் நேற்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தை நண்பர் கே. டி. கோசல்ராம் அவர்கள் பேசுகிற நேரத்தில் சொல்லியிருக்கிறேன். மசோதாவை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை யென்று கூறியிருக்கிறேன். ஆட்சேபிக்கவில்லை யென்று கூறுவதற்கும், மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம் என்று கூறுவதற்கும் இருக்கிற வேறுபாட்டை யாரும் மறந்துவிட முடியாது என்பதை நான் நம்புகிறேன். ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்கிற இந்த மசோதா சூழ்நிலைக்கு ஏற்றவகையில் மிக மிக அத்தியாவசியமான ஒரு மசோதா ஆகும். அந்தச் சூழ்நிலையை ஒட்டித்தான் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மசோதாவை ஆட்சேபிக்கவில்லை என்ற கருத்தினை இந்த மாமன்றத்திலே எடுத்து வைத்திருக்கின்றது. ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எல்லாம் ஆங்கிலம் நீடிப்பதை ஒரு காலவரையறைக்குள் உள்படுத்தப்பட வேண்டும் என்று கூறினார்கள். சுதந்திரக் கட்சியின் தலைவர் திரு. சா. கணேசன் பேசுகிற நேரத்தில் ஆங்கிலமே காலவரையறையின்றி என்றென்றும் நீடிக்கவேண்டுமென்று எடுத்துக்கூறினார்கள். வழங்குகின்ற வட்டார மொழிகளெல்லாம் பொது ஆட்சிமொழியாக ஆகின்ற பக்குவம் பெறுகிற வகையில் ஆங்கிலம் நீடித்தால் போதுமானது என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து. வழங்குகிற வட்டார மொழிகள் ஆட்சிமொழியாக ஆவது என்பது பற்றி இங்கே பேசிய ஆளுங்கட்சி நண்பர்கள் கருத்துத் தெரிவித்த போது பதினான்கு மொழிகளும் ஆட்சிமொழியாக ஆவது என்பது சாத்தியமா, சமஸ்கிருதத்தை ஆட்சிமொழியாக ஆக்க முடியுமா என்றெல்லாம் கேட்டார்கள். நாங்கள் 14 மொழி என்று சொன்ன காரணத்தால், சமஸ்க்ருதமும் இருக்குமா என்கிறார்கள். ஏதாவது ஒரு மொழி தகுதியுடையதாக இருக்காது என்றால் அப்படி இருக்கும் ஒன்றிரண்டு மொழிகளை வேண்டுமானால் ‘தகுதியில்லை’ என்று கூறிவிட்டார்கள் என்றால் மற்ற மொழிகள் பற்றி சந்தேகமற நிலைமை புரிந்து விடும். ஆகவே, இப்பொழுது எண்ணிக்கை பற்றிய பிரச்சனை எழவில்லை. குறிப்பாகவும், சிறப்பாகவும் தமிழ் தக்க தகுதி பெறுகின்ற வரை ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறோம். அப்படிக் கூறுவதால் ஆங்கில மோகத்தால் ஆங்கிலம் இருக்கவேண்டும் என்று குறிப்பிடவில்லை.



17th October 1964] *[திரு. மு. கருணாநிதி]*

தமிழ் காப்பாற்றப் படவேண்டும், தமிழ் இந்தியாவின் பொது மொழி என்று தகுதி பெற்றாகவேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில்தான் குறிப்பிடுகிறோம். ஆங்கிலம் காக்கவைக்கப் படவேண்டும் என்பதற்கும் தமிழ் காக்கப்படவேண்டும் என்பதற்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்துக்கொள்ள வேண்டும். ஆகவேதான் சொல்லுகிறோம், தமிழ் ஆட்சி மொழி அந்தஸ்து பெறும் வரை ஆங்கிலம் இருக்கவேண்டும் என்று. ஆகவேதான் இந்த மசோதா ஆட்சேபணைக்குரியது அல்ல என்ற முறையில் இன்றையதினம் இதை நிறைவேற்றுகிறோம். மாறுபாடாக இந்த மசோதா இன்றையதினம் நிறைவேறக்கூடாது என்று எதிர்த்தோமானால், என்ன நேரிடும்? அந்த இடத்தில் இந்தி வந்து குந்திக் கொள்ளும் பேராபத்து இருக்கிறது என்பதனை உணர்ந்தே இதை ஒத்துக்கொள்கிறோம். ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பதனை எதிர்த்தால் அதன் பின் விளைவுகளை யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கூறுகிறோம். இதில் பல் வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டன. பல்வேறு அரசியல் பிரச்சினைகள் ஆராயப்பட்டன. அவைகளுக்கெல்லாம் இந்த நேரத்தில் பதில் சொல்லுவது தேவையற்றது. இந்தியாவின் பொது மொழி ஆவது பற்றியும், அதற்கு ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பு பற்றியும் பேசுவதற்கு வேறு ஒரு தீர்மானம் சபைமுன் வர இருக்கிறது. அப்பொழுது இவைகளையெல்லாம் விளக்கமாக விவாதிக்க சந்தர்ப்பம் இருக்கும். ஆனால் ஒன்று மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மன்றத்திலே இந்த மசோதாவை ஆதரித்த காங்கிரஸ் நண்பர்கள் இந்தி இந்தியாவின் பொதுமொழியாக ஆகவேண்டும், ஆகமுடியும் என்று நம்புகிறார்களா? உள்ளபடியே காங்கிரஸில் இருக்கின்ற பெரியவர்கள், பெரும் பெரும் பதவிகளில் இருப்பவர்கள் இந்தி தான் பொதுமொழி ஆகவேண்டும் என்ற கருத்தை மனமார ஆதரிக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். மறைந்த டாக்டர் சுப்பராயன் அவர்கள் தான் எழுதிய கட்டுரையில் ‘இந்தி இந்தியாவின் பொதுமொழியாகத் தகுதி அற்றது’ என்ற கருத்தினை தெளிவாக எழுதியிருக்கிறார்கள். திரு. காமராஜர் அவர்களை டெல்லியில் நிருபர்கள் பேட்டிக்கண்ட நேரத்தில், 9—4—1963-ம் தேதியில் ஒரு கேள்வியை நிருபர்கள் கிளப்பினார்கள். “பல மாநில அமைச்சர்கள் மொழித் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள அடிக்கடி டெல்லிக்கு வந்து போகிறார்களே. நீங்கள் அப்படி வருவதில்லையே. உள்ளபடியே உங்கள் மாநிலத்தில் மொழி பூசல்கள் எதுவும் கிடையாதா?” என்று கேட்டார்கள். அப்பொழுது கூட இருந்த கனம் சுப்பிரமணியம் அவர்கள் குறுக்கிட்டு, நிருபர்களுக்குச் சொன்னார்; “எங்களிடம் எந்த பூசலும் கிடையாது; எங்கள் பூசலெல்லாம் உங்களோடுதான், ‘இந்தி வெறியர்களோடுதான்.’ என்ற கருத்துப்பட சொன்ன பதிலை பத்திரிகைகளில் படித்திருக்கிறோம். காங்கிரஸ் பாராளு மன்ற உறுப்பினரும், பல்வேறு பொறுப்பான பதவிகளில் இருந்தவருமான திரு. கே. சந்தானம் அவர்கள் காங்கிரஸ்காரர்கள் கூட்டத்தில் எடுத்துச் சொன்னதையும் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

[திரு. மு. கருணாநிதி] [17th October 1964

"இணை ஆட்சி மொழியாகவோ, துணை ஆட்சி மொழியாகவோ, ஆங்கிலத்திற்குச் சிறப்பான இடம் ஒதுக்கப் படவில்லையென்றால் நாட்டின் சில பாகங்களில் போராட்டம் துவங்கும். பத்து வருடங்களுக்குப் பிறகு ஆட்சி மொழி பற்றி ஆராய வேண்டிய அவசியமில்லை. அது பற்றிய விதி நீக்கப்பட வேண்டும். இந்த மசோதா பற்றி மூன்று விஷயங்களை கவனத்தில் வைக்கவேண்டும்.

(1) இந்த மசோதா இந்தி பேசாத மக்களின் மனதில் பயத்தை உண்டாக்குகிறதா?

(2) நாட்டில் கலாசார தொழிலியல் வளர்ச்சியைப் பாதிக்கிறதா?

(3) பிரதமர் வாக்குறுதியை இது நிறைவேற்றுகிறதா?

இந்த மசோதா பிரதமர் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. ஆங்கிலம், இணை மொழியாக 'இருக்கலாம்' என்று இருப்பதை 'இருக்கவேண்டும்' என்று மாற்றவேண்டும். இணை அந்தஸ்து தரப்படவேண்டும். இவற்றையெல்லாம் செய்யாவிடில் போராட்டம் துவங்கப் பெறும்." என்று 20—4—1963-ல் நடந்த காங்கிரஸ் பார்லிமெண்ட் கட்சிக் கூட்டத்தில் கே. சந்தானம் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே காங்கிரஸ்காரர்களும்கூட இந்தியை மனமார பொது மொழியாக வேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால் இந்தி வெறியர்களைத் தட்டிக் கேட்க அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் இந்த மசோதாவில் இந்தி மறைமுகமாக திணிக்கப்படக்கூடிய ஆபத்தின் நிழல் படிந்திருக்கிறது. 1975 வரைக்கும் இந்த நீடிப்பு இருக்கும். 1975-க்குப் பிறகு பாராளுமன்ற உறுப்பினர்களும் ராஜ்ய சபை உறுப்பினர்களும் சேர்ந்த ஒரு குழு "இந்தி வளர்ந்து விட்டதா" என்று ஆராயும். அவர்கள் ஆராய்ந்து இந்தி தகுதி பெற்று விட்டது என்று கருதினால் ஆங்கிலத்தை அகற்றி விட்டு அந்த இடத்தில் இந்தி இந்தியாவின் பொது மொழியாக அமையும். அப்பொழுது தமிழர்கள் இரண்டாந்தர மக்களாக ஆகி விடுவார்கள்.

இந்தி பாஷைக்கு 13-ஆம் நூற்றாடில்தான் முதல் முதல் கலை நூல் உற்பத்தியாகியது என்று கூறுகிறார்கள். அப்பொழுதுதான் அதன் ஆதி கவி தோன்றினார். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ், தொல்காப்பியம் என்ற இலக்கணத்தைப் பெற்றிருக்கிற மொழியாக விளங்குகிறது. எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு வளம் பெற்ற மொழியாக இருந்தால் அது மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்று ஒரு இலக்கணத்தைப் பெறக்கூடிய தகுதியுள்ளதாக இருக்கும் என்பதை எடுத்துக்கூற வேண்டிய அவசியம் இல்லை. இந்தியாவின் பொதுமொழியாக ஆகத்தக்க தகுதி பதிமூன்றும் நூற்றாண்டிலே இலக்கிய நூலைப் பெற்ற இந்திக்குத் தான் இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தியாவிற்கு பொதுமொழி தேவை. ஆனால் இந்திதான் அந்த



17th October 1964] [திரு. மு. கருணாநிதி]

இடத்தை நிரப்ப வேண்டுமென்ற உரிமைப் பேச்சு சீர்தூக்கிப் பார்க்கப் படவேண்டும். கனடா நாட்டிலே சமஷ்டி அரசியல் இருக்கிறது. அங்கே பிரஞ்சு பாஷையும் ஆங்கில பாஷையும் சம அந்தஸ்துடன் இருக்கின்றன. அதேபோல தென் ஆப்பிரிக்காவில் சமஷ்டி அரசியல் இருக்கிறது. அங்கேயும் இரண்டு மொழிகள் இருக்கின்றன, ஆங்கிலமும் டச்சு மொழியும். போயர்கள் என்பவர்கள் டச்சு மொழியை கையாளுகிறார்கள். ஸ்விட்சர்லாந்தில் 1874-ம் சமஷ்டி சட்டத்தின்படி ஜர்மானிய மொழி, பிரஞ்சு மொழி, இத்தாலி மொழி ஆக மூன்று மொழிகளும் சமஷ்டி அரசியலில் இடம் பெற்றிருக்கின்றன. இத்தனைக்கும் ஜெர்மானிய மொழி பேசுகின்றவர்கள் 100-க்கு 71 பேர்கள். ஃபிரெஞ்ச் மொழி பேசுகின்றவர்கள் 100-க்கு 23 பேர்கள். இத்தாலிய மொழி பேசுகின்றவர்கள் 100-க்கு ஐந்து அல்லது ஆறு பேர்கள். இப்படியிருந்தும்கூட, இந்த மூன்று மொழிகளும் பிரதானமொழிகளாக ஆக்கப்பட்டு, சமஷ்டி அரசியலினுடைய சட்ட திட்டங்களெல்லாம் இந்த மூன்று மொழிகளிலும் உருவாக்கப்படும் நிலைமை அங்கே இருக்கிறது. ஆகவே, ஒருமைப்பாட்டுக்காகத்தான் ஒரு பொது மொழி தேவை, அந்த பொது மொழி இந்தியாக இருக்கவேண்டும் என்று கூறும் வாதமும் இப்படிப்பட்ட உதாரணங்களால் உடைப்பட்டுப் போகின்றது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

12-00 noon

நேற்றைய தினம் பேசிய டாக்டர் நடராஜன் அவர்கள் 'வேற்று மொழியினுடைய கலப்பால் தமிழ் அழியாது' என்று குறிப்பிட்டார்கள். வேற்று மொழிக்கலப்பால் தமிழ் வளம் பெறும் என்றும குறிப்பிட்டார்கள். அது வாதத்திற்குரிய பிரச்சினை. வாதத்திற்காக 'வளம் பெறும்' என்று ஒத்துக்கொண்டாலும், 'கலப்பு' என்பதற்கும், 'ஆதிக்க உணர்வு' என்பதற்கும் இருக்கும் வித்தியாசத்தை நாம் மறந்துவிடக் கூடாது.

தமிழர்கள் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். ஆதிக்கம் செலுத்த வருகின்ற இந்தி மொழியை தாய் மொழியாகக் கொண்டவர்கள் உத்தரப் பிரதேசக்காரர்கள், பீகாரைச் சேர்ந்தவர்கள். இப்படிப் பட்டவர்கள் தாய் மொழியாகக் கொண்டிருக்கிற மொழி தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்துமானால், அப்படி ஆதிக்கம் செலுத்தும் நேரத்தில், தமிழ்க் குடிமக்கள் இரண்டாந்தர மக்களாக ஆக்கப்பட்டுவிடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாகத்தான், மொழியோடு மொழி கலப்பதை அல்ல, ஒரு மொழி இன்னொரு மொழியின்மீது ஆதிக்கம் செலுத்துவதை நாம் வெறுக்கிறோம்.

இந்த மசோதா நிறைவேறும் நேரத்தில், பத்து ஆண்டுகளுக்குப் பிறகு வர இருக்கும் ஆபத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் மனத்திலே சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆரம்பத்தில், அன்னியர்கள் வெளியேற்றப்பட்டபோது, அவர்கள் மீது இருந்த வெறுப்புக் காரணமாக, அவசர அவசரமாகக் கூடி, இந்திதான் நாட்டின் பொது மொழியாக இருக்கவேண்டும், ஆங்கிலத்தை உடனடியாகத் தூக்க வேண்டும் என்று எடுத்துச்சொல்லப்பட்டு,

[திரு. மு. கருணாநிதி] [17th October 1964

"இணை ஆட்சி மொழியாகவோ, துணை ஆட்சி மொழியாகவோ, ஆங்கிலத்திற்குச் சிறப்பான இடம் ஒதுக்கப் படவில்லையென்றால் நாட்டின் சில பாகங்களில் போராட்டம் துவங்கும். பத்து வருடங்களுக்குப் பிறகு ஆட்சி மொழி பற்றி ஆராய வேண்டிய அவசியமில்லை. அது பற்றிய விதி நீக்கப்பட வேண்டும். இந்த மசோதா பற்றி மூன்று விஷயங்களை கவனத்தில் வைக்கவேண்டும்.

(1) இந்த மசோதா இந்தி பேசாத மக்களின் மனதில் பயத்தை உண்டாக்குகிறதா?

(2) நாட்டில் கலாசார தொழிலியல் வளர்ச்சியைப் பாதிக்கிறதா?

(3) பிரதமர் வாக்குறுதியை இது நிறைவேற்றுகிறதா?

இந்த மசோதா பிரதமர் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. ஆங்கிலம், இணை மொழியாக 'இருக்கலாம்' என்று இருப்பதை 'இருக்கவேண்டும்' என்று மாற்றவேண்டும். இணை அந்தஸ்து தரப்பட வேண்டும். இவற்றையெல்லாம் செய்யாவிடில் போராட்டம் துவங்கப் பெறும்." என்று 20—4—1963-ல் நடந்த காங்கிரஸ் பார்லிமெண்ட் கட்சிக் கூட்டத்தில் கே. சந்தானம் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே காங்கிரஸ்காரர்களும்கூட இந்தியை மனமார பொது மொழியாக வேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால் இந்தி வெறியர்களைத் தட்டிக் கேட்க அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் இந்த மசோதாவில் இந்தி மறைமுகமாக திணிக்கப்படக்கூடிய ஆபத்தின் நிழல் படிந்திருக்கிறது. 1975 வரைக்கும் இந்த நீடிப்பு இருக்கும். 1975-க்குப் பிறகு பாராளுமன்ற உறுப்பினர்களும் ராஜ்ய சபை உறுப்பினர்களும் சேர்ந்த ஒரு குழு "இந்தி வளர்ந்து விட்டதா" என்று ஆராயும். அவர்கள் ஆராய்ந்து இந்தி தகுதி பெற்று விட்டது என்று கருதினால் ஆங்கிலத்தை அகற்றி விட்டு அந்த இடத்தில் இந்தி இந்தியாவின் பொது மொழியாக அமையும். அப்பொழுது தமிழர்கள் இரண்டாந்தர மக்களாக ஆகி விடுவார்கள்.

இந்தி பாஷைக்கு 13-ஆம் நூற்றாண்டில்தான் முதல் முதல் கவிஞர் உற்பத்தியாகியது என்று கூறுகிறார்கள். அப்பொழுதுதான் அதன் ஆதி கவி தோன்றினார். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ், தொல்காப்பியம் என்ற இலக்கணத்தைப் பெற்றிருக்கிற மொழியாக விளங்குகிறது. எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு வளம் பெற்ற மொழியாக இருந்தால் அது மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்று ஒரு இலக்கணத்தைப் பெறக்கூடிய தகுதியுள்ளதாக இருக்கும் என்பதை எடுத்துக்கூற வேண்டிய அவசியம் இல்லை. இந்தியாவின் பொதுமொழியாக ஆகத்தக்க தகுதி பதிமூன்றாம் நூற்றாண்டிலே இலக்கிய நூலைப் பெற்ற இந்திக்குத்தான் இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தியாவிற்கு பொதுமொழி தேவை. ஆனால் இந்திதான் அந்த



17tn October 1964] [திரு. மு. கருணாநிதி]

இடத்தை நிரப்ப வேண்டுமென்ற உரிமைப் பேச்சு சீர்தூக்கிப் பார்க்கப் படவேண்டும். கனடா நாட்டிலே சமஷ்டி அரசியல் இருக்கிறது. அங்கே பிரஞ்சு பாஷையும் ஆங்கில பாஷையும் சம அந்தஸ்துடன் இருக்கின்றன. அதேபோல தென் ஆப்பிரிக்காவில் சமஷ்டி அரசியல் இருக்கிறது. அங்கேயும் இரண்டு மொழிகள் இருக்கின்றன, ஆங்கிலமும் டச்சு மொழியும். போயர்கள் என்பவர்கள் டச்சு மொழியை கையாளுகிறார்கள். ஸ்விட்சர்லாந்தில் 1874-ம் சமஷ்டி சட்டத்தின்படி ஜர்மானிய மொழி, பிரஞ்சு மொழி, இத்தாலி மொழி ஆக மூன்று மொழிகளும் சமஷ்டி அரசியலில் இடம் பெற்றிருக்கின்றன. இத்தனைக்கும் ஜெர்மானிய 12-00 noon.
மொழி பேசுகின்றவர்கள் 100-க்கு 71 பேர்கள். ஃபிரெஞ்ச் மொழி பேசுகின்றவர்கள் 100-க்கு 23 பேர்கள். இத்தாலிய மொழி பேசுகின்றவர்கள் 100-க்கு ஐந்து அல்லது ஆறு பேர்கள். இப்படியிருந்தும்கூட, இந்த மூன்று மொழிகளும் பிரதானமொழிகளாக ஆக்கப்பட்டு, சமஷ்டி அரசியலினுடைய சட்ட திட்டங்களெல்லாம் இந்த மூன்று மொழிகளிலும் உருவாக்கப்படும் நிலைமை அங்கே இருக்கிறது. ஆகவே, ஒருமைப்பாட்டுக்காகத்தான் ஒரு பொது மொழி தேவை, அந்த பொது மொழி இந்தியாக இருக்கவேண்டும் என்று கூறும் வாதமும் இப்படிப்பட்ட உதாரணங்களால் உடைபட்டுப் போகின்றது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சால்ல விரும்புகிறேன்.

நேற்றைய தினம் பேசிய டாக்டர் நடராஜன் அவர்கள் 'வேற்று மொழியினுடைய கலப்பால் தமிழ் அழியாது' என்று குறிப்பிட்டார்கள். வேற்று மொழிக்கலப்பால் தமிழ் வளம் பெறும் என்றும குறிப்பிட்டார்கள். அது வாதத்திற்குரிய பிரச்சினை. வாதத்திற்காக 'வளம் பெறும்' என்று ஒத்துக்கொண்டாலும், 'கலப்பு' என்பதற்கும், 'ஆதிக்க உணர்வு' என்பதற்கும் இருக்கும் வித்தியாசத்தை நாம் மறந்துவிடக் கூடாது.

தமிழர்கள் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். ஆதிக்கம் செலுத்த வருகின்ற இந்தி மொழியை தாய் மொழியாகக் கொண்டவர்கள் உத்தரப் பிரதேசக்காரர்கள், பீகாரைச் சேர்ந்தவர்கள். இப்படிப் பட்டவர்கள் தாய் மொழியாகக் கொண்டிருக்கிற மொழி தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்துமானால், அப்படி ஆதிக்கம் செலுத்தும் நேரத்தில், தமிழ்க் குடிமக்கள் இரண்டாந்தர மக்களாக ஆக்கப்பட்டுவிடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாகத்தான், மொழியோடு மொழி கலப்பதை அல்ல, ஒரு மொழி இன்னொரு மொழியின்மீது ஆதிக்கம் செலுத்துவதை நாம் வெறுக்கிறோம்.

இந்த மசோதா நிறைவேறும் நேரத்தில், பத்து ஆண்டுகளுக்குப் பிறகு வர இருக்கும் ஆபத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் மனத்திலே சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆரம்பத்தில், அன்னியர்கள் வெளியேற்றப்பட்டபோது, அவர்கள் மீது இருந்த வெறுப்புக் காரணமாக, அவசர அவசரமாகக் கூடி, இந்திதான் நாட்டின் பொது மொழியாக இருக்கவேண்டும், ஆங்கிலத்தை உடனடியாகத் தூக்க வேண்டும் என்று எடுத்துச்சொல்லப்பட்டு,

அந்த வகையிலே முடிவு செய்யப்பட்டது. ஆகவே, அப்படி மிக மிக அவசரமாக, அரை வேக்காடுத் தன்மையில் உருவான அந்த மொழிப் பிரச்சினையை இன்றைய தினம் வைத்துக்கொண்டு அந்த அடிப்படையிலே, அந்த போலி அஸ்திவாரத்தின் மீது மேலும் மேலும் கட்டடத்தை எழுப்பிக்கொண்டு செல்வது நல்லதல்ல என்று நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஆங்கிலத்தை நீடிக்க வேண்டும் என்று சொல்வது ஒரு தாய் தன்னுடைய குழந்தைக்குப் பால் கொடுக்க முடியாது நோயுற்றிருக்கும் நேரத்தில் புட்டிப் பால் புகட்டுவதை அனுமதிப்பதாகும். ஆகவே, ஆங்கிலத்தை நீடிப்பது கூடாது என்று சொல்ல முடியாது. ஆனால், நண்பர்கள் சிலர், 'ஆங்கிலம் என்கிற புட்டிப் பால் வேண்டாம், இந்தி என்கிற கள்ளிப் பால் போதும்' என்று கூறுவதை ஏற்றுக்கொண்டால் குழந்தையும் சாகும்; குழந்தை செத்ததைக் கண்டு தாயும் சாவாள். இந்தப் புட்டி பால்கூட அந்தத் தாய் நோய்ப் படுக்கையிலிருந்து எழுந்திருக்கிற வரையில் தான். தாயை நோய்ப் படுக்கையிலிருந்து எழவைக்கின்ற நல்ல மருத்துவம் செய்ய, எழெட்டு ஆண்டுகளாகத் தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவதற்கு, எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சி களெல்லாம் முடங்கிக் கிடக்கின்றன.

திரு. கலியாணசுந்தரம் அவர்கள் பேசும்போது, 'நாங்கள் பிரதான எதிர்க் கட்சியாக இருந்தபோது தமிழ் ஆட்சிமொழி ஆயிற்று. திராவிட முன்னேற்றக் கழகம் பிரதான எதிர்க் கட்சியாக ஆகி அந்த முயற்சி பின்னே போகிறது' என்று குறிப்பிட்டார்கள். ஒரு வேளை அவர்கள் எதிர்க் கட்சியாக இருந்தபோது கொண்டுவந்த கைராசிதானோ என்னவோ அது இன்றையதினம் பின்னுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. (சிரிப்பு) இனி மேலாவது இந்த ஆட்சியிலுள்ள அமைச்சர் பெருமக்கள் தமிழ் மொழிக்கு உரிய இடத்தை அளிக்கவேண்டும், சட்ட மன்றத்தில் கேள்வி நேரத்திலிருந்து சட்டங்களை உருவாக்குவது வரையில் தமிழ் மொழிக்கு இங்கே உரிய இடத்தைத் தரவேண்டும் என்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அழுத்தமான கருத்தை வலியுறுத்தி, இந்த மசோதா, சூழ்நிலை காரணமாக, ஆட்சேபிக்கப் படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா இரண்டு நாட்களாக நீண்ட விவாதத்திற்குரிய தாக வந்துவிட்டது. இது இத்தகைய விவாதத்திற்குரியதல்ல என்று கனம் உறுப்பினர்கள் பலர் குறிப்பிட்டார்கள். இந்த மசோதாவைப் பொறுத்த வரையில், தாங்கள் வோட்டெடுக்கும் போது 'டிவிஷனு'க்கு இடம் இருக்காது என்பதில் எனக்குச் சற்றும் ஐயம் இல்லை. ஒருக்கால் கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்கள் 'டிவிஷன்' வேண்டும் என்று கேட்டால்தான் உண்டு—நமக்கும் பசி குறைவாக இருக்கும், அரிசி குறைவாக இருப்பதால், நேரம் சற்று ஆனாலும் அதுபற்றிப் பாதகம் இல்லை.





இந்த மன்றத்திலே கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்கள் ஒரே ஸ்திரமான கொள்கை கொண்டவராக இருக்கிறார். அது எல்லோருக்கும் புரிகிறது. அன்னிய ஆட்சியை மனத்திலே வைத்துக்கொண்டு, 'ஆங்கிலம் அன்னிய மொழி, அடிமைப்படுத்திய மொழி, ஆகவே ஆங்கிலமே வேண்டாம்' என்பது அவர்கள் கொள்கை—மொழிதான் அடிமைப்படுத்தியது; ஆட்சியாளர் அல்ல என்ற கருத்து அவர்களுக்கு இருக்கிறது போலும்—அவர் சோஷலிஸ்டுக் கட்சியைச் சார்ந்தவர். 'ஆங்கிலமே கூடாது' என்கிற கட்சியைச் சார்ந்தவர். அவருடைய கருத்து நமக்கு நன்றாகப் புலப்படுகிறது.

மற்றபடி, இந்த மசோதாவை ஆதரித்த கனம் உறுப்பினர்கள் வெவ்வேறு கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவ்வளவு திருப்தி கூடத் தெரிவிக்கப்படவில்லை.

கனம் உறுப்பினர் திரு. வீரபாகு அவர்கள், 'ஆங்கிலம் நீடிப்ப தற்கு ஒரு கால வரம்பு வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். 'ஆங்கிலத்தையே எப்பொழுதும் எதற்காக வைத்துக்கொள்ள வேண்டும்? தமிழிலே எல்லாவற்றையும் செய்யலாம், அதோடு இந்தியையும் கையாளலாம். ஒரு காலத்திற்குப் பிறகு ஆங்கிலம் வேண்டியதில்லை' என்பது அவருடைய கருத்து.

மற்றபடி, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், 'இந்தி கூடாது' என்று பேசினார்கள். அவர்களுடைய இந்தக் கருத்தும் நமக்கு எப்போதும் புரிந்தது தான்.

'இந்தி வேண்டாம்' என்று மற்றொரு கருத்து தெரிவிக்கப் பட்டது. அதைத் தெரிவித்தவர் கனம் திரு. சா. கணேசன் அவர்கள் என்று நான் சொல்லமாட்டேன். கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. கணேசன் தெரிவிப்பதாயிருந்தால் அது வேறு மாதிரியாக இருக்கும். அவரே இந்தியைப் படித்திருக்கிறார். இந்தியே வேண்டாம் என்று நினைத்திருந்தால் அவர் ஃப்ரெஞ்ச் படித்திருக்கலாம்; சம்ஸ்க்ருதம் படித்திருக்கலாம். அவை அதிகப் பயனுள்ளதாக இருக்கும். 'இந்தி ஆட்சி மொழிக்கு உரியது அல்ல, நமக்கு வேண்டவே வேண்டாம்' என்ற கருத்து அவருக்கு இருந்திருந்தால் அவர் இந்தி படித்தே இருக்கமாட்டார். இந்தியிலே அவருக்கு வெறுப்பு இல்லை. 'நான் ஓரளவு இந்தி படித்திருக்கிறேன்' என்று அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே, அவர்கள் தெரிவித்த கருத்து திரு. கணேசன் கருத்து அல்ல; சுதந்திராக் கட்சியினுடைய கருத்து ஆகும்.

**திரு. சா. கணேசன் :** மன்னிக்கவேண்டும். இங்கே அமர்ந் [illegible]ருப்பது, தேர்ந்தெடுக்கப்பட்டது சா. கணேசனே. ஆனால், இப்[illegible]ராக் கட்சியின் பிரதிநிதியாக இருக்கிறேன். அதே தின் மூலம் [illegible] சுதந்திராக் கட்சியினுடைய கொள்கை அதுவாக [illegible]பதற்காக எனக்கு அது உடன்பாடு அல்ல என்று நம் கருத்து. இந்[illegible]

[திரு. சா. கணேசன்] [17th October 1964

பொருள் அல்ல. எனக்கு உடன்பாடு அது அல்ல என்றால் சுதந்திராக் கட்சியைவிட்டே வெளிவந்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் நான் யோக்கியன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தம்முடைய கட்சியைப் பற்றி அவ்வளவு குறைவாக அவர்கள் நினைக்கக்கூடாது. சுதந்திராக் கட்சியைச் சார்ந்தவர் என்றுதான் மக்கள் அவரைத் தேர்ந்தெடுத்தார்கள் என்று அவர்கள் நினைத்துக்கொள்வதுதான் சரி. நாங்கள் வேறு எப்படி நினைத்துக்கொண்டாலும் அவர்கள் அப்படி நினைத்துக் கொள்ளவேண்டும்.

இப்பொழுது இந்த மசோதா எவ்வாறு வந்திருக்கிறது என்பதை நான் சில வார்த்தைகளிலே விளக்க விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே பல மொழிகள் பேசப்படுகின்றன. பல மாநிலங்களைக் கொண்டது நம்முடைய நாடு. நாம் சுதந்தரம் பெறுவதற்கு முன்பே நாட்டுக்கு ஒரு பொது மொழி வேண்டும் என்று நம்முடைய ஒப்புயர்வற்ற தலைவர் காந்தியடிகள் கூறினார்கள். அதை நாம் ஏற்றுக்கொண்டோம். பல பேர் ஏற்றுக் கொண்டார்கள். ஒரு சிலர் ஏற்றுக் கொள்ளவில்லை. நாம் ஆட்சியை ஏற்றுக்கொண்ட பிறகு, நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்திலும் அதற்கு வகை செய்தோம். ஆங்கிலத்தைத் தொடர்ந்து கையாண்டு வருகிறோம். '1965 வரையில் தான் ஆங்கிலம் இருக்கும். அதற்கு மேலே இந்தி அகில இந்திய ஆட்சி மொழியாக இருக்கும்' என்று அவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தைச் செய்தார்கள். ஆனால், நம்மைப் பொறுத்தவரையில், நாம் யோசித்துப் பார்த்தோம். நாம் இந்திக்கு விரோதிகள் அல்ல. இந்தி, தமிழை அப்படியே அழித்துவிடும் என்ற அச்சமும் எங்களுக்கு இல்லை.

இந்தியைப் பல பேர் பயில்கிறார்கள்; உற்சாகத்துடன் பயில்கிறார்கள். எதிர்க் கட்சியிலே உள்ள கனம் உறுப்பினர் ஒருவர், 'இந்தி படிக்கின்றவர்கள் வடநாட்டிலே ஏதாவது உத்தியோகம் கிடைக்குமா என்று தான் படிக்கிறார்கள்' என்று சொன்னார்கள். அப்படியிருந்தாலும், அது கூடத் தவறு இல்லை. உத்தியோகம் வேண்டாம் என்ற விரக்தி எல்லோருக்குமே இருக்க முடியாது. வழக்கறிஞராக இருப்பதனால் நல்ல வருமானம் வருகிறது என்று சிலர் நினைக்கலாம். ஆனால், எல்லோருமே வழக்கறிஞராக ஆக முடியாது. உத்தியோகத்தையும் பலர் வேண்டுகிறார்கள். பல பேருக்குப் பிதுரார்ஜித சொத்து இல்லை. அதனால் தான் உத்தியோகத்தை நாடுகிறார்கள். பல பேர் வட நாட்டில் கல்கத்தா, பம்பாய், ஜெய்பூர், அம்ரிட்ஸார், டில்லி போன்ற இடங்களில் எல்லாம் பணியாற்றுகிறார்கள்; உத்தியோகம் வகிக்கிறார்கள். அப்படி உத்தியோகத்திற்காகப் படிக்கிறார்கள் என்று சொன்னால்கூடத் தவறு இல்லை. படிக்கின்றவர்கள் மீது ஏதாவது ஒரு எண்ணத்தைப் போட்டு அவர்கள் அறிவுக்காகப் படிக்கவில்லை, உத்தியோகஸ்த்திற்காகத்தான் ஏதோ படிக்கின்றார்கள்.



17th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

என்று சொல்வதென்றால் ஒவ்வொருவருடைய மனோ நிலையையும் அலசிப்பார்க்க முடியுமா? கனம் உறுப்பினருக்கு இந்தி பிடிக்கவில்லை என்றால், 'பிடிக்கவில்லை' என்று சொல்லலாம். ஆனால் இந்தி பயில்கிறவர்களைக் குறை கூறுவது சரியல்ல.

அநேகம் பேர்கள் இந்தி படித்துக் கொண்டிருந்தபோதிலும், இங்கே தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், கையாளுவது சிரமம். விவகாரங்களுக்குக் கையாளுவதற்கு இப்பொழுது நம்மால் முடியாது. ஆகையால், ஒரு தொடர்பு மொழி வேண்டியிருக்கிறது. இந்தி இல்லையென்றால் வேறு எதை வைத்துக் கொள்வது? இதுவரையில் ஆங்கிலத்தை நம்மில் சில பேர் ஏதோ ஓரளவு படித்திருக்கிறோம். அதையே நாம் கையாளவேண்டும் என்றால், எத்தனை காலம் என்று யோசித்து, 'அது காலவரம்பின்றி கையாளப்படவேண்டும்' என்று நாம் சொன்னோம். அந்த வகையிலேதான் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. 'காலவரம்பின்றி' என்ற கருத்திலேதான் இந்தியோடு கூட ஆங்கிலமும் இருக்கிறது. '1965' என்று போட்ட மாதிரி இதில் நாம் போடவில்லை. 'காலவரம்பின்றி' என்று போடுவதும் முறையாக இருக்காது. அந்தக் கருத்திலேதான் போட்டிருக்கிறார்கள். ஆனால், காலஞ்சென்ற நம்முடைய பிரதம மந்திரி அவர்கள், 'இந்தி பேசப்படாத பிராந்திய மக்கள் விரும்புகின்ற வரையில் ஆங்கிலம் இருக்கும் என்பது என்னுடைய கருத்து, அதை எப்படி சட்டத்திலே போடுவது என்று புரியவில்லை' என்று குறிப்பிட்டார்கள். அதை எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். அம்மாதிரி கருத்துத்தான் இங்கும் இருக்கிறது. இந்தி பேசுகிறவர்கள் ஏதோ நம் மீது திணிப்பதாக நினைக்கக் கூடாது. இன்றைக்கு தமிழ் நாட்டில் உள்ளவர்கள் இந்த இந்தி மொழி சம்பந்தமான நிலையை நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலர் கொண்டிருக்கிற எண்ணம் நியாயம் இல்லை. மற்ற மாநிலங்களை எடுத்துக்கொண்டால், குறிப்பாக இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாத ஆந்திரா, மைசூர், கேரளா போன்ற ராஜ்யங்களை எடுத்துக்கொண்டால் அங்கெல்லாம் இந்தி கட்டாயப் பாடமாகச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அதுபோல நாம் இங்கே கட்டாய பாடமாகக் கொண்டு வரவில்லை. கட்டாயமாகக் கொண்டு வருவது என்றால் கூட நமக்கே பாதகமாகப் போகலாம். ஆகவேதான் விரும்பிப் படிக்கிறவர்கள் படிக்கட்டும் என்று வைத்திருக்கிறோம். நம்முடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாக இந்திய சர்க்காரும் ஒன்றும் செய்யமாட்டார்கள். அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம் என்று மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது நாம் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்தச் சட்டத்தின் மூலம் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பதுதான் நம் கருத்து. இந்தச் சட்டம் வேண்டாம் என்றாலும் கூட எனக்கு

[திரு. எம். பக்தவத்சலம்] [17th October 1964

ஒன்றும் இல்லை. ஆனால் இந்தச் சட்டம் இல்லை என்றால் என்ன ஆகும்? தமிழோடுகூட இந்திதான் இருக்கும் என்ற நிலை ஏற்படும். இந்தி வர வேண்டும் என்று நாம் இப்போது செய்யவில்லை. ஏற்கெனவே அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி 1965 ஜனவரி 26-ம் தேதி முதல் இந்தி இந்தியாவின் நிர்வாக மொழியாக வருகிறது. இந்தச் சட்டம் இல்லையென்றால் நம்முடைய ராஜ்யத்திலும்கூட ஆங்கிலம் போய் இந்தி வரவேண்டிய நிலை ஏற்படும். கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அச்சமுறுவதுபோல நான் அச்சப்பட விரும்பவில்லை. இந்த மசோதாவையே நாம் நிறைவேற்றவில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். அதனால் இந்தி வந்துவிடாது. நாம் இப்போதே தமிழில்தான் நம்முடைய நடவடிக்கைகளை நடத்துகிறோம். ஒருவர் இருவர் ஆங்கிலத்தில் பேசுகின்றார்கள். பொதுவாக எல்லா நடவடிக்கைகளையும் தமிழில்தான் நடத்துகிறோம். அசல் மசோதாக்களை ஆங்கிலத்தில் தானே தயாரிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது உண்மைதான். ஆட்சி மொழி சட்டம் ஏற்படுத்தி எட்டு வருஷங்களாகின்றன. அதை ஏன் இன்னும் பரிபூரணமாக நிறைவேற்றவில்லை என்று கேட்டார்கள். ஒரு உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் மசோதா தயாரிக்க இலாகாவில் உள்ளவர்கள் பலகாலமாகப் பழக்கப்பட்டு இருக்கிறார்கள். நீண்ட நாள் அனுபவத்தைக்கொண்டு இப்படித் தயாரிக்கிற பொழுதே அவை மேல் கோர்ட்டுக்குப் போனால் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று தள்ளிவிடுகிறார்கள். அதனால் பல அவதிகள் ஏற்படுகின்றன. நாம் கூடிய வரையில் மிகவும் ஜாக்கிரதையாகவே பரிசீலித்துச் சட்டங்களை நிறைவேற்றுகிறோம். சட்டம் என்பது என்ன? நம்முடைய கருத்தை மிகவும் "Precise" ஆகச் சொல்வதுதான் சட்டம். அதைத் தமிழில் சொல்லக்கூட அச்சமாக இருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் இதைச் சிந்திக்க வேண்டும். தமிழில் பேசுகிற போது சம்பந்தா சம்பந்தம் இல்லாமல்கூடச் சில சமயங்களில் வார்த்தைகளை உருவாக்குகிறோம். ஆகவேதான் கொஞ்ச காலம் தொடர்ந்து ஆங்கிலத்தில் மசோதாக்களைத் தயாரிப்பது நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படாமல் இருப்பதற்கு உதவியாக இருக்கும். அதைத்தான் நான் முன்பே சொன்னேன். இந்த மசோதா இல்லையென்றாலும்கூட ஒன்றும் பயப்படவேண்டியதில்லை. இதை வாபஸ் வாங்கிக் கொண்டாலும்கூட ஒன்றும் கெட்டுப்போகாது. நம்முடைய கருத்தை உணர்ந்துதான் மத்திய ஆட்சியினர் அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஆங்கிலத்தைத் தொடர்ந்து வைத்துக்கொள்ள விரும்புகிற ராஜ்யங்கள் வைத்துக்கொள்ளலாம் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆங்கிலம் ஒரு கால வரம்பு இன்றி இந்தியோடுகூட நீடிக்க வேண்டுமென்ற கருத்தோடு இது அமைக்கப்பட்டு இருக்கிறது. இப்போது நாம் இந்தச் சட்டத்தை இங்கே நிறைவேற்றாவிட்டால் நாமே புனராலோசனை செய்து, முன்பு சொன்ன கருத்துக்களை இப்போது மாற்றிக் கொண்டுவிட்டதாக நினைக்கத் தோன்றும்.



17th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

நம்முடைய எண்ணத்தில் அத்தகைய மாற்றம் ஏற்படவில்லை. அந்த வகையில்தான் இந்த மசோதா இப்போது நிறைவேற்றப்பட வேண்டிய அவசியத்தை நான் வற்புறுத்துவேன்.

இதற்கு முன் இந்த தமிழ் நாட்டு அரசாங்க அமைச்சராக இருந்தவர்கள் ஆட்சிமொழியைப் பற்றித் திட்டவட்டமான கருத்துக்களைக் கொண்டு இருந்தார்கள். அந்தக் கருத்துக்கள் இப்போது நடைபெறவில்லை என்று கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார். அப்போது பதவியில் இருந்த கட்சியேதான் இப்போதும் இருக்கிறது. அப்போது இருந்தவர்களுடைய கொள்கையில் இருந்து இப்போது மாறுபடவில்லை. திரு. மதியழகன்கூட ஏற்கெனவே நாம் சமர்பித்த மெமாரண்டத்தில் இருந்து ஒரு பகுதியைப் படித்துக் காட்டினார்கள். அவர் படித்ததற்கும் மேலாக இன்னும் கொஞ்சம் படித்திருந்தால் விஷயம் நன்றாகத் தெரிந்திருக்கும். போன சட்ட மன்றத்திலேயேகூட இந்தக் கருத்தை அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அதை நான் வாசிக்க விரும்புகிறேன். இது தமிழ் நாட்டு அரசாங்கம் சமர்ப்பித்த மெமாரண்டத்தில் உள்ளது.

"The Government of Madras desire to place before the Parliamentary Committee and the Government of India the view that it will be necessary to use both English and Hindi as two official languages of the Indian Union for a prolonged period. The initial phase of transition will consist in the progressive increase in the use of Hindi for different official purposes."

இதிலும்கூட இந்தியே வேண்டாம் என்று சொல்லவில்லை. தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டும் இருந்தார்கள் என்று சொல்வதற்கு இல்லை. அப்போது தி.மு.க. கட்சித் தலைவரே இங்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள். அப்போது தெரிவிக்கப்பட்ட கருத்துதான் இது.

'If Hindi continues to be recognised as the third language in all schools, and all practicable steps are taken to raise the efficiency of instruction in Hindi, consistently with its optional character, the knowledge of Hindi is bound to increase steadily in this State."

இந்தத் தமிழ்நாட்டு மன்றத்திலேயேதான் இந்தக் கருத்து எல்லா கட்சியினராலும் ஒத்துக்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது. இன்னொரு கருத்தைக்கூட நான் சொல்லுகிறேன்.

"If, as it is to be expected, the Government of India require that candidates should have passed an approved school examination in Hindi as the condition of employment under the Government of India, there can be little doubt that the students will voluntarily make good use of the facilities made available to them in all schools."

"The foregoing analysis makes it clear that so far, at any rate, as this State is concerned, planning must be based, between now and 1965, on the assumption that the mother-tongue will be

[திரு. எம். பக்தவத்சலம்] [17th October 1964

the compulsory first language, English will be the compulsory second language, and Hindi will be the optional third language in schools and colleges. It is practically certain that the position will be the same in all South Indian States of which Telugu, Tamil, Kannada or Malayalam will be the official language. ''

**திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் முதல் அமைச்சர் அவர்கள் இப்போது படித்த கருத்துக்கள் அவர்களுடைய கருத்துக்கள் அல்ல என்று நாங்கள் சொல்லவில்லை. எங்களுடைய கருத்துக்களுக்கும் அவர்களுடைய கருத்துக்களுக்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. ஆயினும் நான் முன்பே குறிப்பிட்டது போல இந்தி 1965-ம் ஆண்டு ஜனவரி 26-ம் தேதிக்குப் பிறகு அமலுக்கு வந்துவிடுகிறது. அத்தகைய நிலையை நாம் இப்போது ஏற்படுத்தாவிட்டாலும் ஏற்கெனவே நாம் வகுத்துக் கொண்டுள்ள அரசியல் அமைப்புச் சட்டப்படி அமலுக்கு வந்து விடுகிறது. 45 வயதிற்கு உட்பட்டவர்கள் மத்திய அரசாங்க அலுவலகத்தில் இந்தியை கட்டாயமாகக் கற்றுக்கொண்டே ஆக வேண்டும் என்று இருக்கிறது. இனி அமைச்சர்களுக்கு வருகிற கடிதங்கள் சுற்றறிக்கைகள் எல்லாம்கூட இந்தியிலேயே வரும் என்று சொல்லப்படுகிறது. இன்னொரு மொழியாக இந்தியை ஒப்புக்கொள்வதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் இந்திதான் நிர்வாக மொழி என்று வருமானால் அதைத் [illegible] [illegible] நம் அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது? நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் நிர்வாகத்துறை சம்பந்தமாகவும், பள்ளிக்கூடம் சம்பந்தமாகவும் இந்தியைப் பொறுத்த வரையில் நிலைமை எப்படி இருக்கும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து விளக்க வேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் இதைப்பற்றிக் குறிப்பிட்டது எல்லாம் முன்பு இருந்த ஆட்சியாளர்களுக்கும், இப்போது இருக்கிற ஆட்சியாளர்களுக்கும் இடையே கருத்து வித்தியாசம் எதுவும் இல்லை என்பதற்காகத்தான். கனம் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் ரஷ்யாவைப்பற்றி நன்றாகத் தெரிந்தவர்கள்; அவர்கள் அங்கே போயிருக்கிறார்கள். நானும் ரஷ்யாவுக்குப் போயிருக்கிறேன். நான் அங்கே பல மாநிலங்களுக்கும் போயிருக்கிறேன். டேஷ்கண்ட் ரிபப்ளிக் பார்லிமெண்டுக்கு என்னை அழைத்தார்கள். அங்கு என்னை விசிட்டர் மாதிரி உட்கார வைக்கவில்லை; முதல் சீட் கொடுத்தார்கள். (திரு. பீ. கலியாணசுந்தரம்: அங்கு அவ்வளவு 'ஃப்ரீடம்'.) இந்தியர்கள் என்ற முறையில் எங்களுக்கு மரியாதை செய்தார்கள். அங்கு நடவடிக்கை ஆரம்பித்து முடிகிற வரை யாரும் வெளியே போகக் கூடாது. கதவைச் சாத்தி விடுகிறார்கள். என்னுடன் கூட வந்திருந்தவர் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு போகலாம் என்றார். அவர்களிடம் சொன்னதற்கு முடிந்த பிறகுதான், வெளியே போக முடியும் என்று சொல்லிவிட்டார்கள். அந்தச் சபையில் 500 பேர்கள் இருந்தார்கள். எல்லோரும் இருந்தார்கள்; அந்த மாதிரி வெளியே போகாதபடி நம்முடைய [illegible]



17th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

அவர்கள் கூட ஏற்பாடு செய்தால் நல்லது என்று தோன்றுகிறது. (சிரிப்பு) அந்த மன்றத்தில் மூன்று மணி நேரம் வரை நடவடிக்கைகள் நடந்தன. ப்ரிசிடியம் தலைவர் அவர்களும், அமைச்சர்களும் விஷயங்களை விளக்கினார்கள். முதலிலே டேஷ்-கண்ட் மாநில மொழியிலே விளக்கினார்கள்; பின்னர் ரஷ்யன் மொழியிலே விளக்கினார்கள். இவ்வாறு இரண்டு மொழியிலும் எடுத்து விளக்கினார்கள். மொழி விஷயத்தில் ரஷ்யாவுக்கு நம்முடைய நாட்டில் உள்ளது போன்ற பிரச்சினை இருக்கிறது. அங்கு ரஷ்யன் மொழி ஆட்சி மொழி. மற்ற மாநில மொழிகள் பல இருக்கின்றன. வேறு சில நாடுகளைப் போல இரண்டு மூன்று மொழிகள் இருந்தால் எல்லா மொழிகளையும் ஆட்சி மொழியாக்கி விடலாம். ஆனால் நம்முடைய நாட்டையும் ரஷ்யாவையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டு நாடுகளும் பல மொழிகளைப் பேசுபவர்களைக் கொண்ட நாடு. ஆகவே, ஒவ்வொரு மொழியையும் மத்திய ஆட்சி மொழி என்று ஆக்குவது இயலாது. பதினான்கு மொழியையும் மத்திய ஆட்சி மொழியாக்கவேண்டு மென்று கூறுவது அர்த்தமற்றது. எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளலாம் என்றால் மற்றவர்கள் விடுவார்களா? குஜராத்தி மொழி பேசுபவர்கள் விட்டு விடுவார்களா? மராத்தி மொழி பேசுபவர்கள் விட்டு விடுவார்களா? சமஸ்கிருதத்தை மட்டும் விட்டு விடுவது என்றாலும் 13 மொழி ஆகிறது. பதிமூன்றையும் மத்திய ஆட்சி மொழியாக வைத்துக்கொள்வது முடியாது; கேவலமாகப் போய்விடும். இதனை ரஷ்யா நன்றாக உணர்ந்திருக்கிறது. ரஷ்யாவிலே முதலிலே தாய் மொழி; அதற்கு மேலே மத்திய ஆட்சி மொழியான ரஷ்யன் மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு மேலே ஒரு அந்நிய மொழி. முன்பு பிரெஞ்சு மொழியைக் கற்றுவந்தார்கள்; தற்போது பெரும்பாலோர் ஆங்கிலத்தைப் படித்து வருகிறார்கள். இவ்வாறு மூன்று மொழிகளையும் கற்றுக் கொள்ளுகிறார்கள். ரஷ்யாவில் இருப்பவர்கள் மூளை சக்தியில் குறைந்தவர்கள் அல்ல; மொழிப் பற்றுக் குறைந்தவர்கள் அல்ல. அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ளுகிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நம்முடைய நாட்டில் இந்தி மத்திய ஆட்சி மொழியாக இருக்கிறது. ஆனால் நம்முடைய மாகாணத்தில் இந்தி படிக்க வேண்டுமென்று கட்டாயமாக வைக்கவில்லை. இஷ்டப்படுகிறவர்கள் இந்தி படித்தால் நல்லது என்கிறோம். இந்தி மட்டும் மத்திய ஆட்சி மொழியாக இருந்தால் பாதகம் ஏற்படும் என்பதை உணர்ந்து காலவரம்பின்றி ஆங்கிலத்தை நீடிக்க வேண்டுமென்று சொல்லி சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதையொட்டி ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்ற முறையிலே இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. நமக்கு சில சமயங்களிலே பிரமை [illegible]. இந்தி பெரிய 'பூதம்' நம்மை அழித்து விடும்போல் [illegible]. தமிழ் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக [illegible]. [illegible] தமிழிலே நன்றாகக் கற்றுணர்ந்தவர்கள் மறைமலை [illegible]. அவர்கள் சமஸ்கிருதத்தையும் நன்றாகப் பயின்றார்கள். அது போன்ற பல மொழிகளைக் கற்ற பன்மொழிப் புலவர்கள் பலர் இருக்கிறார்கள்.

திரு. மு. கருணாநிதி: அந்த மறைமலையடிகள் 'இந்தியால் தமிழ் கெடும்' என்று கூறிய அந்த வாதத்தை ஏன் ஒத்துக் கொள்ளக்கூடாது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவர்களுடைய வாழ்க்கையைப் பார்த்த பிறகு அந்தக் கூற்றுக்கு அவசியம் இல்லையென்று நான் கூறுவேன். ஆதி குமரகுருபரர் தமிழுக்காக நிறையத் தொண்டாற்றியவர். அவர் சமஸ்கிருதம் போன்ற மொழிகளை நன்றாகக் கற்றுணர்ந்திருந்தார். ஆகவே, இந்தியால் தமிழ் கெடும் என்று சொல்வது சரியல்ல. எந்த ஆபத்தும் வந்துவிடாது. நம்மில் கொஞ்சம் பலவீனமாக உள்ளவர்கள் கனவு காண்கிறோம்; தூங்கிய பிறகு கனவு காண்கிறோம். பகலில் தூங்குகிற போதுகூடக் கனவு காண்கிறோம். மன பலவீனம் காரணமாக கனவு காண்பதைப்பற்றிப் பல சைகாலஜி நூல்கள் இருக்கின்றன. அந்த நூல்களைப் படித்தால் ருசிகரமாக இருக்கும். கனவில் ஏதோ பூதம் வந்து விட்டது மாதிரித் தோன்றுகிறது. காலை எடுத்து உதைக்கிறோம். கால், சுவற்றின் மேலோ கட்டிலின் மேலோ பட்டு சுளுக்கு ஏற்பட்டு விடுகிறது. சில சமயங்களில் எலும்புகூட முறிந்து போகிறது. இல்லையென்றால் ஏதேதோ பேசுகிறோம். இதை வாய் பிதற்றல் என்று சொல்வார்கள். பேசுகிறவர்களுக்கு என்ன பேசுகிறோம் என்று தெரியாது. தூங்கி விழித்துக் கொண்டவர்கள்கூட அம்மாதிரி பேசுகிறார்கள்; தூக்கத்தில் பேசலாம். விழித்துக் கொண்டிருப்பவர்கள் பேசுகிறார்கள் என்றால் என்ன சொல்வது? அப்படிப் பேசுகின்றவர்கள் கோட்டையில் இல்லை; சென்னையில் வேறு ஒரு பகுதியில் இருக்கிறார்கள். அவர்கள் விழித்துக்கொண்டே பேசுகிறார்கள். நாம் எல்லாம் தெளிவுள்ளவர்கள்; நிலைமையை நன்றாக அறிந்து கொள்ளக் கூடியவர்கள். அரசியல் நோக்கத்தோடு பேசுகிறார்கள் என்றால் அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. எதிர்க் கட்சி நன்றாக இயங்கவேண்டும். அவர்களுக்கு வேறு ஒன்றும் கிடைக்கவில்லை என்றால் இதை வைத்துக்கொள்ளட்டும். எனக்கு அதிலே அனுதாபம் உண்டு. அதை நான் ஆட்சேபிக்கவில்லை. மக்களுக்கு எது நல்லது என்று பார்க்கவேண்டும். இன்றைக்கு ஏதோ 'நீங்கள் துரோகம் செய்து விட்டீர்கள்' என்று பேசலாம். ஆனால் தமிழுக்கு யார் உண்மையான தொண்டு புரிகிறார்கள் என்பதை மக்கள் நன்றாக உணர்வார்கள். ஆபாச வார்த்தைகளுக்குத் தமிழை உபயோகப்படுத்த வேண்டாம். அதற்காக வேறு ஒரு மொழியை வேண்டுமானால் கற்றுக் கொள்ளட்டும். ஆபாசமாகப் பேசுவதற்குத் தமிழ் மொழியைப் பயன்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வேறு பல பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் இன்று பேசினார்கள். திரு. மதியழகன் அவர்கள் எங்கள் மீது குற்றம் சாட்ட எப்போதும் தயங்கவேமாட்டார்கள். அதற்காக 22, 23-ம் தேதிகள் வேறு இருக்கின்றன. முன்பு இருந்த கொள்கையை நாங்கள் ஏதோ மாற்றிவிட்டோம் என்று கூறினார்கள். அப்போது என்ன முடிவு செய்யப்பட்டது? பரிட்சார்த்த திட்டமாக, பைலட்



ஸ்கீமாக சிலபாடங்களைக் கல்லூரியில் தமிழிலே சொல்லிக் கொடுப்பது, தமிழைப் போதனா மொழியாக்குவது என்று திட்டமிடப்பட்டது. அந்தத் திட்டம் எவ்வளவு தூரம் வெற்றி பெறுகிறது என்று பார்த்து மேலும் விஸ்தரிப்பது என்று திட்டமிடப்பட்டது. விஞ்ஞானப் பாடத்தைப் பொறுத்து அந்த முடிவு செய்யவில்லை. உலகத்தின் மூலை முடுக்கில் நடைபெறும் விஞ்ஞான வளர்ச்சியைப்பற்றியெல்லாம் தங்களுடைய பிள்ளைகள் அறிய வேண்டுமென்று பெற்றோர்கள் மிகவும் விரும்புகின்றனர். தமிழிலே தேவையான புத்தகங்கள் வரவில்லை. தமிழிலே புத்தகங்களைக் கொண்டு வருவதற்கு உற்சாகத்தோடு பணி புரிந்துகொண்டிருக்கிறார்கள். தயாரிக்கப்பட்ட புத்தகங்களை உடனே அச்சடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம்; காகிதம் இல்லையென்று சொன்னாலும் உடனே காகிதத்தைப் பெற்று விரைவாக அச்சடிக்க வேண்டுமென்று கூறுகிறோம். அவ்வாறு தமிழில் வெளியிடப்பட்ட சில புத்தகங்களை அயல் நாடுகளுக்கெல்லாம்கூட அனுப்பி இருக்கிறோம். நம்முடைய மாணவர்கள் உயர்ந்த அறிவு பெற வேண்டுமென்றால் இந்த அளவு போதாது. தமிழிலே அந்த அளவுக்குப் புத்தகங்கள் வரவேண்டுமானால் இன்னும் ரொம்பநாள் ஆகும். ஏன் ரஷ்யாவில் ஆங்கிலம் 12-30 p.m.
படிக்கச் சொல்லுகிறார்கள்? இன்றைய தினம் பல நூல்கள் ஆங்கிலத்தில் இருக்கின்றன. அவைகளை ரஷ்ய மொழியில் மொழி பெயர்ப்பதில் கஷ்டம் இல்லை. ரஷ்யாவிலே புத்தகங்களை தமிழிலே கூட மொழிபெயர்க்கிறார்கள். அற்புதமான தமிழ் மொழி பெயர்ப்பைப் பார்க்கிறோம். அந்த முறையில் தமிழில் மொழி பெயர்த்து, அச்சிட்டு இங்கே அனுப்பியிருக்கிறார்கள். உடனடியாக எல்லா நூல்களையும் ரஷ்ய மொழியில் மொழிபெயர்ப்பது என்பது கஷ்டமான காரியம். நூல்களை மொழிபெயர்க்கும் வரையில் காத்துக்கொண்டிருக்கக் கூடாது என்று ஆங்கில மொழியைப் படிக்கச் சொல்லுகிறார்கள்.

உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் இவைகளிலெல்லாம் மாற்றி விட்டார்கள் என்று சொன்னார்கள். உயர்நிலைப் பள்ளிகளில் தாய் மொழிதான் போதனா மொழி. அதில் ஒன்றும் மாற்றம் இல்லை. அந்த நிலையில் தாய் மொழியில்தான் சொல்லிக் கொடுக்கவேண்டும். இல்லையென்றால் மாணவர்கள் புரிந்துகொள்ள முடியாது என்பது எனது கருத்து. அதற்கு மேல் உயர் படிப்பு படிக்க, உயர்ந்த அறிவு பெற நமது இளைஞர்கள் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். விஞ்ஞானம் படிக்க வேண்டுமென்று ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் பல விஞ்ஞானத் துறைகளில் நம் இளைஞர்கள் பலர் உயர்ந்த அறிவு பெறுகிறார்கள். தமிழ்நாட்டு இளைஞர்கள் வெளிநாடுகளோடு ஒப்பிடக் கூடிய அளவுக்கு சாதனைகளைச் சாதிக்கும் அளவுக்குப் பக்குவம் அடைந்திருக்கிறார்கள். பம்பாய் அருகில் உள்ள டிராம்பே அணுசக்தி நிலையத்திற்கு சமீபத்திலே நான் சென்றிருந்தேன். காலம் சென்ற நமது பிரதமரின் பெரு முயற்சியாலும் ஆர்வத்தாலும் ஏற்பட்டுள்ள சாதனைகளில் இதுவும் ஒன்று. அங்கே பல தமிழ்நாட்டு இளைஞர்களைப் பார்த்தேன். அவர்களுடைய ஆற்றலால், அவர்களுடைய

[திரு. எம். பக்தவத்சலம்] [17th October 1964

அறிவால் அவர்கள் உற்பத்தி செய்கிற சில பொருள்களை பாராட்டி வெளி நாடுகளில் அவைகளை விலை மதித்து வாங்குகிறார்கள். அத்தகைய ஆற்றல் நம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு இருக்க வேண்டும் என்றால், குண்டு சட்டியில் குதிரை ஓட்டு என்று முறையில் இருக்கிற புத்தகத்தைப் படித்தால் போதும் என்று சொல்லி, மேற்கொண்டு வேண்டாம் என்று சொல்லுவது நல்லதல்ல. அது நமது நாட்டுக்கும் நல்லதல்ல, நமது மக்களுக்கும் நல்லதல்ல என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். எவ்வளவு தூரம் உயர்ந்த அறிவு பெற வேண்டுமோ அந்த அறிவைப் பெறுவது முக்கியமே தவிர வேறு அல்ல. பொருளாதாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அதிலே டெ ஃபிஸிட் ஃபைனான்ஸிங் என்று எடுத்துக் கொள்ளுங்கள். அல்லது வரி போடும் விஷயத்தில் ஒரு நுட்பமான விஷயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அதையெல்லாம் எப்படிச் சொன்னால் புரிகிறது. இன்று இருக்கும் நிலையில் தமிழைப்பற்றிப் பிரமாதப்படுத்திக் கொள்ளுவதில் பிரயோசனம் இல்லை. ஒரு விஷயத்தை எடுத்துக் கூறவேண்டுமானால், எடுத்துக் கூறப்பட்ட விஷயத்தைப் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் சொல்லவேண்டுமானால் எப்படிச் சொன்னால் புரியும் இன்று இருக்கிற மாணவர்களுக்கு என்பது முக்கியம். இன்றைக்கு இருக்கும் நிலைமைக்கு ஏற்ப அவர்கள் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் எடுத்துச் சொல்லவேண்டும். அதற்கு அப்புறம் தமிழிலே எடுத்துச் சொல்லலாம். தமிழில்தான் இன்று சொல்ல வேண்டும் என்று சொன்னால் அதனால் தமிழுக்கே பாதகம் ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கு இருக்கக்கூடிய எந்த உறுப்பினருடைய தமிழ் ஆர்வத்திற்கும் என்னுடைய தமிழ் ஆர்வம் குறைந்தது கிடையாது. நம் எல்லோருக்கும் உயர்ந்த அறிவு பெறவேண்டுமென்று எண்ணம் இருக்கிறது. தமிழால் எதுவும் ஆகும் என்ற நம்பிக்கை எனக்கும் இருக்கிறது. கனம் எதிர் கட்சி உறுப்பினர்கள் கூறியதுபோல தமிழில் மசோதா செய்யலாம். சட்டம் செய்யலாம். சரியான சட்டம் செய்யலாம். எல்லா பாடங்களையும் கற்றுக் கொடுக்கக்கூடும். ஆனால், காலம் ஆகும். இதை ஒரு கட்சியாக வைத்துக்கொண்டு பேசுவது பிரயோசனம் இல்லை. முன்பு எந்தக் கொள்கை அநுசரிக்கப் பட்டதோ அதில் எந்த மாறுபாடும் இல்லை. இப்போதே தமிழிலே போதனா மொழியாக எடுத்துப் படிக்கவேண்டும் என்று சொல்லும் போது மாணவர்களுக்கு இதெல்லாம் தெரிகிறது. எல்லோருக்கும் ஐ.ஏ.எஸ். படிக்க வேண்டும் என்று ஆசை. வெளிநாடுகளுக்குப் போகவேண்டும் என்று ஆசை. பி.எஸ்.ஸி. படித்தாலும் எம்.எஸ்.ஸி படிக்கவேண்டும் என்று ஆசை. இப்போது இருக்கும் நிலையில் தமிழ் போதனா மொழி என்றால் மாணவர்களுக்கே உற்சாகம் இல்லை. இதை யாரும் மறுப்பதற்கில்லை. சவுக்கை எடுத்து அடித்து தமிழிலே படிப்பதானால் இரு, இல்லையென்றால் பம்பாய்க்குப் போ, பங்களூருக்குப் போ, கல்கத்தாவுக்கும் போ என்று விரட்டி அடிப்பது தமிழ் நாட்டுக்கு உகந்ததா? இந்த நிலையில் நான் கல்லூரிக் கொள்கையை வகுத்து அநுசரித்து வருகிறோம் என்று கூறுகிறேன். இந்தியே கூடாது என்ற கொள்கையை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. ஏனென்றால் கனம் [illegible]



17th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல இந்த நாடு ஒன்று—இமயம் முதல் குமரி வரையில் ஒன்று. இராமாயண காலத்திலிருந்து, சரித்திர காலத்திலிருந்து ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. ஒன்றாக இருந்தால்தான் நாடு பலம் பொருந்தியதாக இருக்கும். மக்கள் இன்புற்று, உயர்ந்த வாழ்வு வாழ ஒன்றாக இருக்கவேண்டும். இப்படி இருக்கும்போது, பல மொழிகள் இருக்கும்பொழுது எப்படித் தொடர்பு கொள்ளுவது? பல மொழிகள் பேசும் நாட்டிலே அதுவும் நாம் பார்க்கிறோம். இன்று ஒரு மாநிலம் இருக்கிறது, இன்னொரு மாநிலம் இருக்கிறது. இன்று ஒரு பல்கலைக்கழகம் இருக்கிறது, இன்னொரு பல்கலைக் கழகம் இருக்கிறது. இங்கே ஒரு மொழி இருக்கிறது, அங்கே ஒரு மொழி இருக்கிறது. இந்த நிலையில் எப்படி ஒற்றுமை வளரும்? எப்படி ஒருமைப்பாடு வளரும்? தமிழில் தொடர்பு கொள்ள முடியுமா? அல்லது குஜராத்தி மொழியில் தொடர்பு கொள்ள முடியுமா? நாம் இங்கே தமிழில் எல்லாவற்றையும் செய்வோம், செய்யமுடியும். அதற்கு வேண்டிய ஆதரவு அளிப்போம். லிங்க் லாங்குவேஜ், அதாவது ஒரு தொடர்பு மொழி ரொம்பவும் அவசியம். தொடர்பு மொழி ஹிந்தி என்று சொன்னால் கூடாது என்று நான் சொல்ல முடியாது. அப்போது தமிழ் நாட்டில் முடியாது என்று சொன்னோம். மரியாதைக்கு அப்போது கேரளாவும், மைசூரும், ஆந்திராவும் சரி என்று ஒப்புக் கொண்டார்கள். இன்றைக்கு அவர்கள் கட்டாயமாக ஹிந்தியை போதித்து வருகிறார்கள். ஆகவே, நமக்கு ஆங்கிலமும் இருக்க வேண்டும். காலவரம்பு என்று 10 ஆண்டு போட்டு விட்டு பிற்பாடு தகராறு வேண்டாம் என்று அந்த முறையில் சட்டம் இயற்றியிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் ஏ. பி. ஸி. வீரபாகு அவர்கள் ஆங்கிலத்தை நீடிப்பதற்கு கால வரம்பு இருக்க வேண்டும் என்று சொன்னார். தமிழ்நாட்டின் நன்மையையொட்டி நான் அளித்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதையொட்டி இன்று இந்த மசோதா வந்திருக்கிறது என்று சொன்னால் காலவரம்பு வேண்டுமென்று சில அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள். தாய் மொழி தமிழைப் படிக்கவேண்டும். இந்தியையும் படிக்கட்டும். இல்லையென்றால் நம் கொள்கைப்படி ஹிந்திக்கு பதில் வேறு மொழியைப் படிக்கலாம். ஆங்கிலமும் படிக்க வேண்டும். இது புட்டிப் பாலும் அல்ல, கள்ளிப் பாலும் அல்ல. இது கழுதைப் பால், ஆட்டுப் பால். பசுவின் பால் இடைக்கா விட்டால் எருமைப் பால் சாப்பிடுகிறார்கள். கழுதைப் பால் கெடுதல் அல்ல. ஆட்டுப் பால் கெடுதல் அல்ல. இப்போது அளிக்கப்படுவது ஆட்டுப் பாலும் கழுதைப் பாலும்தான். அதற்காக யாரும் கலங்கவேண்டாம். சில பேர்கள் பிரமாதமாக மதித்து வாங்கிச் சாப்பிடுகிறார்கள். கனம் அங்கத்தினர் இடைப் பிறவி என்று சொல்லுகிறார்கள். கிடைக்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. மு. கருணாநிதி: ஹிந்தி முடியாது என்பதால் தேவையில்லை என்று கூறியதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். முடியாது என்ற அளவில் குறிப்பிட்டு தோரணை [illegible]

[திரு. மு. கருணாநிதி] [17th October 1964

என்று, கூடாது என்று மனதில் வைத்துக்கொண்டு முடியாது என்று அமைச்சர் அவர்கள் கூறினாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கூடாது என்பதல்ல. இன்றைய நிலைமையில் நான் ஹிந்தி படித்திருக்கிறேன். கனம் அங்கத்தினர் சா. கணேசன் படித்திருக்கிற அளவு படித்திருக்க மாட்டேன். எத்தனையோ இலக்கியங்கள், இலக்கணங்கள் எல்லாம் படித்திருக்கிறேன். அடிக்கடி பேசிப் பழக்கம் இல்லை. நமக்கு ஹிந்தியில் பேசும் வாய்ப்பு இல்லை. பார்லிமெண்ட்டுக்கு உறுப்பினர்கள் போகிறார்கள். அவர்கள் ஹிந்தியைக் கற்றுக்கொண்டு விடுகிறார்கள். இன்றைக்கு பெண்மணிகளும், குழந்தைகளும் சுத்தமான ஹிந்தி பேசுகிறார்கள். இப்போது இருக்கிற முறையில், நமக்கு இருக்கும் அனுபவத்தைக் கொண்டு திருப்திகரமாக விவகாரங்களை கவனிக்க முடியாது. அதை நாம் புறக்கணிக்கவில்லை. அதை வேண்டாமென்று சொல்லவில்லை. ஆங்கிலம் தொடர்ந்து இருக்கட்டும், பாதகம் இல்லை என்று சொல்லுகிறோம். கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள், இண்டர்நேஷனல் லாங்குவேஜ், உலக மொழி இருக்கும்போது இது எதற்கு என்று. இண்டர் நேஷனல் லாங்குவேஜ் போதும் என்றால் தமிழ் கூட வேண்டாமே. உலக மொழி இருக்கும்போது ஹிந்தி மொழி வேண்டாம் என்று சொன்னால், இன்னும் ஒரு படி மேலே போய் தமிழ்கூட வேண்டாம் என்று சொல்லலாம். . . .

**திரு. சா. கணேசன் :** இந்த விஷயத்தைப்பற்றி பல முறை நான் சொல்லியிருக்கிறேன். ஹிந்தி வேண்டாம் என்று சொல்லவில்லை. பொது மொழியாக ஹிந்தி அமையலாம். ஆனால் இன்றைக்கு ஹிந்தி வளமானதாக இல்லை என்ற காரணத்தினால் இப்போது அந்தத் தகுதியில்லை, ஆகவே ஆங்கிலம் இருக்க வேண்டும். தமிழ் மாநில நிலையில் இடம் பெறவேண்டும் என்று இன்றுகூடச் சொன்னேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆங்கிலம் காலவரையின்றி நீடிக்கவேண்டும் என்று நாம் சொல்லுகிறோம். ஆனால் ஆங்கிலம் இந்த நாட்டு மொழி என்று சொல்லுவதற்கில்லை. அது நமது அரசியல் சட்டத்தில் இடம் பெறவில்லை. இந்த நாட்டு மொழியே ஒன்று ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். அது இந்தியைத் தவிர வேறு ஒரு மொழி இருக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. அப்படியிருந்தால் கனம் அங்கத்தினர் திரு. சா. கணேசன் அவர்கள்தான் சொல்லவேண்டும். மராத்தியை வேண்டுமானால் வைத்துக்கொள்ளுங்கள், தெலுங்கை வேண்டுமானால் வைத்துக்கொள்ளுங்கள், குஜராத்தியை வேண்டுமானால் வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லலாம். ஆங்கிலம் அன்னிய மொழி, அதை நாட்டு மொழியாக வைத்துக்கொள்ள முடியாது. அதற்காக, அன்னிய மொழி என்ற காரணத்திற்காக உறுப்பினர் நல்லசிவம் அவர்கள் வெறுக்கிற மாதிரி நான் ஆங்கிலத்தை வெறுக்கவில்லை. ஆங்கிலத்தின் அருமையை நான் உணர்கிறேன். நம்முடைய பிள்ளைகள் ஆங்கிலமும் படிக்கவேண்டும், தமிழும்



17th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

படிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்தியையும் படிக்க வேண்டும். இந்தி படித்தால் நல்லது என்று அவர்களே உணர்ந்து படிக்கிறார்கள். எப்பொழுதும் கட்டாயம் இல்லை என்றால், அவர்களே உற்சாகத்தோடு படிக்கிறார்கள். தமிழ் நாடு அரசுக் கட்டாயக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் இந்தியை ஏராளமான பேர்கள் படிக்கிறார்கள். கனம் அங்கத்தினர்கள் இங்கே எப்படிப் பேசினாலும், அதை மாணவர்கள் சற்றும் பொருட்படுத்த மாட்டார்கள். இவர்கள் இப்படித்தான் பேசுவார்கள் என்று நினைப்பார்கள்.

இப்பொழுது இருக்கிற நிலைமை இது தான். தமிழே இருக்கட்டும் என்று சொன்னால் ஆட்சேபணை இல்லை. இந்த சட்டமன்றத்தைப் பொறுத்த மட்டில் தமிழ் இருக்கும். வேறு ஒரு ஆட்சி மொழி வேண்டும், இப்பொழுது ஆங்கிலம் தொடர்ந்து இருக்கட்டும் என்று சொன்னதினாலே சட்டசபையில் ஆங்கிலம் அதிகமாக புகுத்தப்படும் என்று யாரும் நினைக்கவேண்டாம். சீக்கிரம் தமிழ் பரிபூரணமாக வரும். காலவரையின்றி ஆங்கிலம் இருக்க வேண்டும் என்பது அவசியம். முன்பு நான் எதை வேண்டினேனோ, எந்த வகையில் நமக்கு ஒரு பாதுகாப்பு அளிக்கப்பட்டதோ அதற்கு இது அவசியமாகிறது. ஆகவே, நான் மேலும் உங்களுடைய காலத்தை எடுத்துக்கொண்டு பேச விரும்பவில்லை. இந்த மசோதாவை இந்த மன்றம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Madras State Legislature (Continuance of use of English Language) Bill, 1964 be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras State Legislature (Continuance of use of English Language) Bill, 1964, be passed.'

MR. SPEAKER : Motion moved—

'That the Madras State Legislature (Continuance of use of English Language) Bill, 1964, be passed.'

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது ஆங்கிலத்தை இன்னும் தொடர்ந்து பயன்படுத்தலாம் என்று சட்டம் இயற்றி விட்டதனாலே இந்தச் சபையில் நடவடிக்கைகளும், சட்டம் இயற்றுவதும் ஆங்கிலத்திலேயே தான் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கவேண்டும் என்கிற நிலைமை

இருக்கக்கூடாது என்பதை அரசினரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அரசினர் சபையில் இருக்கக்கூடிய அபிப்பிராயங்களை புரிந்து கொண்டிருக்கிறார்கள். திடீரென்று தமிழைத் தவிர வேறு இல்லை என்ற நிலை ஏற்பட்டாலும் சங்கடம் ஏற்படும். அந்த சங்கடத்தைத் தவிர்ப்பதற்குத் தான் இந்தச் சபையில் இந்த மசோதாவுக்கு நாங்கள் ஆதரவு கொடுக்கிறோம். இந்தச் சபை நடவடிக்கைகளை இன்னும் தொடர்ந்து தமிழிலேயே நடத்துவதற்கும், இன்னும் பல பிரிவுகளையும் தமிழிலேயே நடத்துவதற்கும், நிர்வாகத்தை தமிழிலேயே நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு விஷயத்தை ஒப்புக்கொண்டார்கள். எல்லாவற்றையும் தமிழிலேயே நடத்துவது சாத்தியம் என்பதில் அவர்கள் மிகவும் நம்பிக்கையோடு இருக்கிறார்கள் என்பதில் எனக்கு சந்தேகம் கிடையாது. எடுக்கிற நடவடிக்கைகளில் ஆங்கிலம் இருக்கவேண்டியது அவசியமாகிறது என்பதை அவர்கள் உணர்கிறார்கள். அவர்களுக்கு அச்சம் என்னவென்றால், ஆங்கிலம் திடீரென்று போய்விட்டால், அந்த இடத்திற்கு இந்தி வந்துவிடுமோ என்பது தான். இந்தியைப் பொறுத்தமட்டில் நாம் தெளிவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தி, ஆங்கிலம் இரண்டும் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் இந்த நாட்டின் தேசீய ஒருமைப்பாட்டை நிச்சயம் கவர்ச்சி பண்ண முடியும். மத்திய அரசாங்கத்திடம் அதற்காக தொடர்ந்த முயற்சியை கனம் முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி எடுக்கக் கூடிய முயற்சியில் நாம் மத்திய அரசாங்கத்தோடு, மந்திரிகளோடு பேசினால் மட்டும் போதாது. நாம் சுயேச்சையாகவும் நடவடிக்கை எடுக்கவேண்டியதாக இருக்கிறது. பிரதேச மொழியை பயன்படுத்துவதில் நாம் தீவிர முயற்சி எடுக்க வேண்டும். அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும். டாஷ் கண்டை முதல் அமைச்சர் அவர்கள் உதாரணமாகக் கூறினார்கள். டாஷ் கண்டு மொழி மிகவும் பின் தங்கிய மொழி, லிபியே இல்லாத மொழி. அப்பேர்ப்பட்ட மொழிகளில் சட்டசபை நடவடிக்கைகளை நடத்துகிறார்கள் அங்கு இருக்கக்கூடிய மக்கள். ஆனால், அவர்கள் ரஷ்ய மொழியையும் மனமுவந்து கற்றுக்கொள்ள முன்வந்திருக்கிறார்கள். இந்தி பேசாத பகுதி மக்கள் தாங்களாகவே மனமுவந்து இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்தி மொழி நமக்குத் துணையாக இருக்கும். நம்முடைய மொழிக்கு அது ஹானி விளைவிக்காது என்ற சூழ்நிலையிலேதான் இந்தியை பொது மொழியாக எல்லோரும் மனமுவந்து ஏற்றுக் கொள்வார்கள். இந்தி கற்றுக் கொண்டால் தாய் மொழிக்கு உதவியாக இருக்கும் என்ற ஒரு சூழ்நிலை ஏற்படவேண்டும். தமிழ் மொழிக்கு உரிய இடம் இருக்கக்கூடுமானால், தமிழ் மட்டும் படித்தால் போதாது, ஆங்கிலத்தைப் படித்தாலும் போதாது, இந்தியையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற உணர்வு ஏற்படும். அந்தந்த பிரதேச மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதில் அதிக அக்கறை செலுத்த





வேண்டும். அதற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபடவேண்டும். முக்கியமாக பிரதேச மொழியை, தமிழ் மொழியை கல்லூரியில் பயிற்சி மொழியாக்க வேண்டும். பின் வாங்கவில்லை, மாற்றவில்லை என்று முதல் அமைச்சர் அவர்களே பேசும்பொழுது கூறினார்கள். ஆனால் போட்ட முடிவுகளை நிறைவேற்றவில்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம், முதலில் பரீட்சார்த்தமாக சில கல்லூரிகளில் தமிழ் போதனா மொழியாக ஆக்கப்பட்டது. பரீட்சார்த்தமாக ஆக்கப்பட்டது என்றால், பின்னர் எல்லா கல்லூரிகளிலும் தமிழ் பயிற்சி மொழியாகக் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். இதை முதல் அமைச்சர் அவர்கள் மனதில் வைத்துக் கொண்டு, தமிழை எல்லாத் துறைகளிலும் பலப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை துரிதமாக எடுத்தால், இந்திப் பிரச்னையை தானாகவே சமாளித்துவிடலாம் என்று கூறிக்கொண்டு இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

**திரு. சா. கணேசன்:** 'தேர்டு ரீடிங்கில்' பேசுவதற்கு உரிமை உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** ஒரு 'பில்லில்' 'கிளாஸ் பை கிளாஸ் கன்சிடரேஷனில்' என்னென்ன மாறுதல் செய்யப்பட்டதோ, அதை ஒட்டித்தான் 'தேர்டு ரீடிங்கில்' பேசவேண்டும் என்பது பார்லிமெண்டரி கன்வென்ஷன்.

**திரு. சா. கணேசன்:** தங்களுடைய கட்டளை, தீர்ப்பு என்ன என்பதை அறியவிரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர்:** என்னுடைய தீர்ப்பு.

It must not be too general as the honourable member Sri Kalyanasundaram talked.

* **திரு. கூ. ர. நல்லசிவம்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நான் ஏதோ என்னுடைய கட்சிக் கொள்கையை வற்புறுத்துவதற்காகவோ அல்லது நான் கொண்டு இருக்கக்கூடிய தனிப்பட்ட கொள்கையை வற்புறுத்துவதற்காகவோ பேச விரும்பவில்லை. நான் உண்மையை வற்புறுத்த விரும்புகிறேன். பொது மொழி விவகாரத்தில் தமிழ் நாட்டில் இருப்பதுபோல் மேற்கு வங்காளத்தில் எதிர்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. எனக்குத் தெரிந்தவரையில் தமிழ் நாட்டில் மட்டும் தான் சக்தி வாய்ந்த ஒரு எதிர்க்கட்சி பொது மொழியை எதிர்த்து போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறது. தேசம் பூராவும் சுற்றுப்பிரயாணம் செய்து பார்த்தோமானால் இது நன்கு விளங்கும். மேற்கு வங்காளத்தில் நான் ஒரு வாரம் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. கல்கத்தாவில் ஒரு சில அறிஞர்கள் இதைப் பற்றி எதிர்ப்பு தெரிவிக்கிறார்களே தவிர, பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. தமிழ் நாட்டின் பொது மொழி சம்பந்தப்பட்டவரை ஒரு பெரிய கிளர்ச்சி நடப்பதுபோல், அதற்காக ஒரு கட்சி தன்னுடைய முழு நேரத்தையும் செலவிடுவதுபோல், வேறு எந்த மாநிலத்திலும் எந்தக் கட்சியும் செலவிடவில்லை. பொதுவாக இந்தப் பிரச்னையை தீர்க்க வேண்டுமென்று சொன்னால், அதுவும்

[திரு. க. ர. நல்லசிவம்] [17th October 1964

இந்தி பிறபகுதிகளில் வந்து புகுந்துவிடும் என்ற பயம் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு இருக்கிறது என்றால், இந்த மசோதாவைப் பொறுத்தமட்டில் ஏன் அவர்கள் அதை ஆதரிக்க வேண்டும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆளும் கட்சியினருக்கும் சரி எதிர்க்கட்சியினருக்கும் சரி நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதா வராவிட்டால் நிச்சயம் தமிழுக்கு ஒரு குறிப்பிட்ட இடம் ஊர்ஜிதமாக ஏற்பட்டு விடும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏன் எதிர்க்கட்சிக்காரர்களும் இந்த மசோதாவை ஆதரிக்கிறார்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆளும் கட்சிக்கு நான் சொல்லக்கூடிய யோசனையெல்லாம், பொது மொழிக்கு எதிர்ப்பு இருக்கிறது, அதைச் சமாளிக்கவேண்டுமென்று சொன்னால், மாநில அளவில் சட்ட மன்றத்தில் தமிழை ஆட்சி மொழியாக பூரணமாக ஏற்றுக் கொள்ளவேண்டும். அதை அனுசரித்து தமிழை நீதி மன்றத்திலும் நீதி மன்ற மொழியாகக் கொண்டுவந்துவிட முடியும். சட்டம் செய்து, விதிகள் வகுத்து அதை வைத்துக்கொண்டுதான் நாம் காரியங்கள் செய்யவேண்டியிருக்கிறது. இன்னும் கஷ்டப் பட்டு நமது சட்டசபையிலே தமிழைக் கொண்டுவந்துவிட்டால் மீதமுள்ள எல்லாத் துறைகளிலும் தமிழைக் கொண்டு வருவது அவ்வளவு கஷ்டமல்ல. மாநில அளவிலே எல்லாத் துறைகளிலும் தமிழைக் கொண்டுவந்துவிட்டால் ஹிந்தி வந்து புகுந்துவிடுமென்ற பயம் மாணவர்களுக்கோ அல்லது பொது மக்களுக்கோ இருப்பதற்கு ஆதாரம் கிடையாது.

**கனம் சபாநாயகர்**: இப்பொழுது இவற்றையெல்லாம் பற்றிப் பேசுவதற்கு நேரம் கிடையாது. இவையெல்லாம் முன்பே பேசிய விஷயங்கள்தான்.

**திரு. க. ர. நல்லசிவம்**: ஆகவே, இந்த மன்றத்தின் எதிர்க்கட்சியில் உள்ளவர்களாவது இந்த மசோதாவை எதிர்ப்பதற்குத் தயாராக இருக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர்**: இப்பொழுது அதற்கு ஆள் சேர்க்கிறார்களா, அப்பொழுதே அந்த வேலை முடிந்துவிட்டது. (சிரிப்பு)

The question is—

'That the Madras State Legislature (Continuance of use of English Language) Bill, 1964, be passed.'

The motion was put and declared carried.

A poll was demanded by Sri K. R. Nallasivam.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, if the hon. Member insists on the division, the result is obvious. But I would suggest to the Chair that he may ask those hon. Members who are against the Motion to stand up so that the time of the House may not be taken up by a division.



17th October 1964] [Sri M. Bhaktavatsalam]

The Hon. Speaker asked the hon. Members who were against the motion to stand up.

Sri K. R. Nallasivam alone stood up.

Then the Hon. Speaker asked the hon. Members who were for the Motion to stand up in their seats.

The hon. Members belonging to the Congress, Swatantra and Communist Parties stood up.

(The hon. Members belonging to the Dravida Munnetra Khazhagam remained neutral.)

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I thank the hon. Member, Sri Nallasivam, for this revelation.

MR. SPEAKER: As there are more hon. Members for the motion and only one hon. Member against the motion, I declare the motion carried, and the Bill passed.

## VI.—GOVERNMENT MOTIONS.

### (i) CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I move—

'That item III, viz., Government Motion, be taken up before items (2) and (3), viz., The Madras (Transferred Territory) Jenmikaram Payment Abolition Bill, 1964 (L.A. Bill No. 28 of 1964), as amended by the Select Committee and the Madras Public Buildings (Licensing) Bill, 1964 (L.A. Bill No. 31 of 1964) as amended by the Joint Select Committee.'

The motion was put and carried.

### (ii) APPRECIATION OF THE SERVICES OF SRI T. HANUMANTHAPPA, SECRETARY, LEGISLATIVE ASSEMBLY.

*THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I move—

'That the Hon. Speaker be requested to convey to Sri T. Hanumanthappa, B.A., (Hons.), B.L., appointed as Additional Secretary to the Mysore Legislature, the appreciation of this House of his long, sincere and meritorious service in our Legislature from 1946 to 1964 which, by his ready advice and his great knowledge of the law and the custom of the Legislature, he has rendered to it and to all its Members in the conduct of their business; and the good wishes of this House for his future career in the Mysore State.'

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சட்ட மன்றத்தைப் பற்றிய ஒரு சிறந்த பாரம்பரியம் என்றென்றும் உண்டு என்று பெருமைப் படுகிறோம். சிறந்த சபாநாயகர்கள் இங்கே இருந்து வந்திருக்கிறார்கள். சிறந்த காரியதரிசிகளும் இதுவரையிலும்

[Sri M. Bhaktavatsalam] [17th October 1964

இருந்து வந்திருக்கிறார்கள். ஆதிமுதற்கொண்டே சிறந்த காரியதரிசிகள் இங்கே பணியாற்றி வந்திருக்கிறார்கள். 1955-ஆம் வருடத்திலிருந்து திரு. ஹனுமந்தப்பா அவர்கள் காரியதரிசியாகப் பணியாற்றி வருகிறார்கள். அதற்கு முன்பும் அவர்கள் இந்த மன்றத்திலே அனுபவம் பெற்றவர்கள். அவர்கள் அந்த வகையிலே எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் திருப்தியளித்து, அவர்களுடைய பாராட்டுதலைப்பெற்று, மிகவும் சீரிய வகையிலே இங்கே பணியாற்றி வந்திருக்கிறார்களென்பதைப்பற்றி நான் விஸ்தரிக்க வேண்டிய அவசியமில்லை. எல்லோரும் பாராட்டக்கூடிய வகையிலே அவர்கள் தன்னுடைய பணியை ஆற்றிவந்திருக்கிறார்கள். ஒன்று நினைவுக்கு வருவதை நான் கூற விரும்புகிறேன். சில சமயங்களிலே நாம் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நினைப்போம். ஒரு வகையிலே அந்த நடவடிக்கையை ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று நாம் நினைப்போம். ஒரு தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதாகவோ அல்லது மறுப்பதாகவோ நினைப்போம். நாங்கள் என்று சொல்லும்பொழுது, வேறு உறுப்பினர்களோ அல்லது சபாநாயகர் அவர்களோ நினைக்கலாம். ஆனால் காரியதரிசி அவர்கள், அம் மாதிரிச் செய்வது தவறு, இந்த மாதிரி ப்ரிசிடெண்ட் இருக்கிறது, இம்மாதிரிச் செய்யவேண்டும், நாங்கள் நினைத்தமாதிரிச் செய்வது முறையல்ல என்பதை துணிவாக எடுத்துச்சொல்வார்கள். அதை நான் எப்பொழுதும் வரவேற்பதுண்டு. தாங்களும் அதை வரவேற்றிருப்பீர்கள். ஆலோசனை கூறுகிறவர்கள் தயாதாட்சண்யமின்றி யோசனை சொல்வதை நாங்கள் எப்பொழுதும் வரவேற்கிறோம். அவர்கள் நல்ல ப்ரிசிடெண்ட்களையெல்லாம் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அதிலே மிகவும் ஆற்றல் பெற்றவர்கள். அவ்வாறு எடுத்துச்சொன்னபிறகு, அதைப்பற்றி முடிவுசெய்யக் கூடியவர்கள் எப்படி வேண்டுமானாலும் செய்யலாம். ஆலோசனை கூறுகிறவர்கள் தங்களுக்குப் படுகிற உண்மையான நிலையை எடுத்துக்கூறுவது கடமையும் பொறுப்புமாகும். அதை நாம் பாராட்டவேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த ஒரு அரிய ஆற்றல் திரு. ஹனுமந்தப்பா அவர்களுக்கு இருந்து வந்தது எனக்கு நினைவுக்கு வருகிறது.

அவர்கள் இந்த மன்றத்தைவிட்டுப் போகவேண்டுமென்று யாரும் விரும்பவில்லை. அவர்கள்கூட விரும்பவில்லை. ஆனால், மைசூர் சட்டமன்ற சபாநாயகர் அவர்களும், மைசூர் முதலமைச்சர் அவர்களும் என்னை சில மாதங்களுக்கு முன்பு பார்த்து "நீங்கள் எப்படியாவது ஹனுமந்தப்பா அவர்களை எங்களுடைய மன்றக் காரியதரிசியாக நியமிப்பதற்கு இணங்க வேண்டும்" என்று என்னைக் கேட்டார்கள் (இப்பொழுது அவர்கள் அடிஷனல் காரியதரிசியாகப் போகிறார்கள், சீக்கிரத்திலேயே காரியதரிசியாக ஆகிவிடுவார்கள்). அப்பொழுது நான் "நாங்கள் அவர்களை விடுவது சிரமமாக இருக்கும், எங்களுக்கும் அவர்களுடைய சேவை வேண்டியிருக்கிறது. அதோடுகூட அவரும் அதை விரும்பவில்லை, எங்களோடு இருப்பதற்கே அவர்கள் விரும்புகிறார்கள்" என்று சொன்னேன். "இல்லை, நீங்கள் ஒரு முடிவு செய்யவேண்டும்,



17th October 1964] [Sri M. Bhaktavatsalam]

நீங்கள் எப்படியாவது அவரிடம் சொல்லி அவர்களை அனுப்ப வேண்டும், அவர்களுடைய சேவை எங்களுக்கு இன்றியமையாததாக இருக்கிறது" என்று மிகவும் வற்புறுத்திக் கூறினார்கள். அதற்குமேல்தான் நான் ஹனுமந்தப்பா அவர்களிடம் "இம் மாதிரி மைசூர் முதலமைச்சர் அவர்களும், சபாநாயகர் அவர்களும் விரும்புகிறார்கள், உங்களுடைய அபிப்ராயம் என்ன, நீங்களே முடிவு செய்யுங்கள்" என்று சொன்னேன். அப்பொழுதும், அவர்கள் தயங்கினார்கள். அதன்பிறகு கொஞ்ச காலத்திற்குப் பிறகுதான் அவ்வாறு போவதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அதன்படி அவர்கள் இங்கிருந்து போக நேரிட்டிருக்கிறது. அவர்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவிப்பதோடுகூட, இந்த மன்றத்தின் நல்வாழ்த்துக்களையும் நான் கூற விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தை இந்த மன்றம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளுமென்று நம்பி, என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. மு. கருணாநிதி**: சபையின் முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நன்றியறிவிப்பு, பாராட்டு வாழ்த்துத் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மனப்பூர்வமாக நான் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய சட்டப் பேரவையிலிருந்துகொண்டு நல்ல பல பணிகளாற்றி இது வரையில் நம் அனைவருடைய நன்மதிப்பையும் மரியாதையையும் பெற்றுக்கொண்டு வருகிற உயர்திருவாளர் ஹனுமந்தப்பா அவர்கள் மைசூர் மாநிலச் சட்டப்பேரவையின் கூட்டுச் செயலாளராக பொறுப்பு ஏற்கிறார் என்பது அந்த மாநிலத்திலிருக்கிற சட்டப் பேரவையில் உள்ளவர்களுக்கு எந்த அளவுக்கு மகிழ்ச்சி யூட்டுகிறதோ, அந்த அளவுக்கு அவர்களுடைய பிரிவு நமக்கு வேதனையை ஊட்டுகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்காமல் இருக்கமுடியாது. வெள்ளையன் நமது நாட்டிற்கு எத்தனையோ தீங்குகளை இழைத்திருந்தாலும் அதிகார வர்க்கம் எப்படிப் பண்போடு நடந்துகொள்ளவேண்டும், நடுநிலைமையில் இருந்துகொண்டு எப்படி நடந்துகொள்ளவேண்டும், என்ற பாரம்பரியத்தை உருவாக்கினான் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த நல்ல பாரம்பரியத்தைக் கட்டிக்காப்பாற்றுகிற வகையிலே, அந்தப் பாரம்பரியத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிற வகையிலே, திரு. ஹனுமந்தப்பா அவர்கள் இந்த மாமன்றத்திலேயுள்ள எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் ஒளி விளக்காக, கலங்கரை விளக்காக அமைந்திருக்கிறார்கள். அதிகாரத்தில் உள்ளவர்களை ஏதாவது கேட்கிற நேரத்திலே சம்பந்தப்பட்டவர்களிடத்தில் "இல்லை" என்று சொல்வதையே மிகப் பணிவோடும் கனிவோடும் சொல்லும்பொழுது, அப்படி "இல்லை" என்று சொல்வதனால் ஏற்படும் ஏமாற்றம் கூட மறைந்துவிடுகிறது. அந்த வகையிலே இந்தச் சபையிலேயுள்ள உறுப்பினர்களுடைய சந்தேகங்களுக்கு பதிலளிக்கும் நேரங்களில் எல்லாம் இருக்கின்ற பல்வேறு பிரச்னைகளை எடுத்துச்சொல்லி திரு. ஹனுமந்தப்பா அவர்கள் சிறிதும் சோம்பலில்லாமல், அயர்வு இல்லாமல், எந்த நேரத்திலும் புன்னகைபூத்த முகத்தோடு நல்ல யோசனைகளை

[திரு. மு. கருணாநிதி] [17th October 1964

வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையில் அவர்கள் பொறுப்பேற்று கமிட்டிகளெல்லாம் ஒழுங்குற, பாங்குற பணி புரிய உறுதுணை புரிந்திருக்கிறார்கள். அயராது பணி புரியும் ஒரு நல்லவரும் வல்லவரும் ஆவார். இந்த மன்றத்திலிருந்து அவர்கள் மைசூர் மாநில பேரவைக்கு செல்லுகிறார்கள் என்கின்ற இந்த நேரத்திலே நம்முடைய இயல்பான இருதய பூர்வமான நன்றியுணர்ச்சிகளை இந்த மாமன்றத்தின் சார்பாக அவர்களுக்கு தெரிவிக்கும் இந்த தீர்மானத்தை நான் முழுமனதோடு ஆதரித்து, அன்னார் பல்லாண்டு பணிகள் பல புரிந்து தமிழ் சட்ட மன்றத்திலே ஏற்றி வைத்த ஒளி மைசூர் மாநில பேரவையிலே பிரகாசிக்கின்ற அளவு வீறுநடைபோட வேண்டும் என்று வாழ்த்துகிறேன். அவர்கள் விட்டுச் செல்லும் இந்த இடத்திற்கு இந்த பாரம்பரியத்திற்கு ஏற்றவர் வருவதையும் ஆதரித்து என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. சா. கணேசன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய அன்புக்கும், பெருமதிப்பிற்கும் உரிய நமது சட்டமன்றக் காரியதரிசி, இந்தச் சட்ட மன்றத்திலிருந்து மைசூர் சட்டமன்றத்திற்கு மாற்றப்படுகிற காரணத்திற்காக அவர்களுக்கு நாம் கூறுகிற வாழ்த்து நன்றி உரையில் நானும் கலந்துகொள்ள மிகவும் மகிழ்ச்சி உள்ளவனாக இருக்கிறேன். உயர்ந்த பண்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்; சட்ட மன்றத் துறைக்கு ஏற்ப நிறைந்த கல்வி அறிவும், அனுபவமும் நிறைந்தவராக விளங்கியவர். இந்தத் துறையில் இருக்கிறவர்கள் மற்றத் துறையில் போல இன்றி, இன்னும் மேலாக, பெருமையாக இருக்க வேண்டும் என்பதற்கு இணங்க ஒரு லட்சிய புருஷராக விளங்கினார் என்றால் அது மிகையாகாது. நல்ல பண்பும் யாரிடமும் கோபிக்காத நிலையும், யார் வந்து என்ன கேட்டாலும், எவ்விதமான ஆலோசனைகள் கேட்டாலும் அதையெல்லாம் கடமை உணர்ச்சியோடு விருப்பு, வெறுப்பு இல்லாமல் பாரபட்சம் இல்லாமல் நடுநிலையோடு நின்று ஆற்றும் பணி, அந்த மனப்பண்பு இருந்ததே அதை நான் மனமார பாராட்டுகிறேன். அவருடைய சொல்லும் இனிமையாக இருக்கும். யார் எதைக் கேட்டாலும் கவர்ன்மெண்டுக்கு சாதகமாகவோ பாதகமாகவோ இல்லாமல் கேட்பவருடைய விருப்பு வெறுப்பைப் பொறுத்து இல்லாமல் சட்டப்படி எது சரியோ அதை எடுத்துக்கூறி ஜனநாயக சம்பிரதாயத்தை செம்மையாகக் காத்து நின்ற பெருமகன்! நல்ல மனிதன்; எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு கனவான் என்று கூறுவதிலே நான் மனநிறைவு கொள்கிறேன். அவர்கள் வேறு இடத்திற்குச் செல்வதில் வருத்தம் ஏற்படத்தான் செய்கிறது. இருந்தபோதிலும் இங்கிருந்து அவர்கள் பெற்ற அனுபவம் அவருடைய தாய் மாநிலத்திற்கே பயன்பெறப்போகிறது என்று ஆறுதல் பெறலாம். அங்கே [illegible] உள்ளவர்களுக்கு ஆலோசனை கூறும் அப்படிப்பட்ட காலத்திலெல்லாம் அவர்களுக்கு நம்மைப் பற்றிய நினைவு வரும். முன்பு பிரசிடென்சி என்ற பெயரைப் பெற்றிருந்த சென்னை மாகாணத்தில் அவர்கள் பணியாற்றி நல்ல [illegible], [illegible] பெற்று இப்பொழுது அவர்கள் மைசூர் மாநிலத்திற்குச் சென்று



17th October 1964] [திரு. சா. கணேசன்]

பணியாற்றி வருவார் என்பது மற்ற மாநிலங்களுக்கும் வளம் பெருக்கக் கூடிய நிலையைக் கொடுக்கும். அந்த நிலையில் நம்மை விட்டு பிரிந்து செல்லும் அவர்களுக்கு நம்முடைய இதயம் நிறைந்த பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் நன்றியையும் கூறிக் கொள்கிறேன். அதே நிலை, அனுபவமுள்ள நடராஜன் அவர்களின் மூலம் மீண்டும் தொடர்ந்து நமக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் பெருகமுடியும் என்று நம்பி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் பிரேரேபித்துள்ள இந்த தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரிக்கிறேன். நம்முடைய சட்டசபை 1950-வது வருஷத்திற்குப் பிறகு புதிய அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு புதிய அந்தஸ்தைப் பெற்றது. இந்த சட்டசபை இயங்குகிற விதத்திலேதான் ஜனநாயகத்தில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படமுடியும். நம் நாட்டின் பிரச்சினைகளை ஜனநாயக ரீதியில் தீர்க்க நாம் விரும்புகிறோம். ஆகவே சட்டசபை இயங்குவது நம்பிக்கை அளிக்கக்கூடிய முறையில் இருக்க வேண்டும். சட்டசபையில் நம்முடைய பணிகளைப் பார்த்து மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை அடைகிறார்கள். அப்படி அங்கத்தினர்கள் புரியும் பணி மேலானதாக இருக்க சட்டசபை இலாகா நன்கு உதவி செய்ய வேண்டும். அது மிக முக்கியம். அந்த அடிப்படையில் பார்க்கும்போது இந்த இலாகா கடந்த பத்து பன்னிரண்டு வருஷங்களாக அங்கத்தினர்களுக்கு நன்கு உதவி செய்து வந்து இருக்கிறது. அதற்குப் பெரும் பொறுப்பு செகரட்டரி என்ற முறையில் நண்பர் ஹனுமந்தப்பா அவர்களைச் சாரும். அவர்களிடத்தில் குறையென்றால், நம்முடைய அங்கத்தினர்கள் இந்த இலாகாவின் பணிகளை இன்னும் சரியாக பயன் படுத்திக் கொள்ளவில்லையே என்பதுதானே அல்லாமல், அங்கத்தினர்கள் தொந்தரவு செய்கிறார்களே என்று எப்பொழுதும் நினைத்தது இல்லை. இதில் ஊழியர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. ஒரு செகரட்டரி மட்டும் எல்லா வேலைகளையும் செய்துவிட முடியாது. அவர்களுடைய தலைமையின்கீழ் அவருக்கு உறுதுணையாக நல்ல முறையில் பணி புரிந்து வந்திருக்கிறது இந்த அலுவலகம் என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்வோம். சட்டசபை முறைகளைப் பற்றி அவர்கள் சிறந்த அனுபவம் பெற்றவர்கள். பார்லிமெண்டரி முறைகளை ஒரு பெரும் லட்சியமாக வைத்துக்கொண்டு அதற்கு ஒரு தனி அந்தஸ்து வேண்டும், அது புனிதமானதாக காப்பாற்றப் பட வேண்டும் என்ற லட்சியத்தைக் கொண்டு, பிரிட்டிஷ் பார்லிமெண்டரி மரபுகளைப் படித்து, இதர நாடுகளுடைய மரபுகளையும் படித்து அரிய யோசனைகளையும் கொடுத்து உதவியிருக்கிறார்கள். அவர்கள் ரொம்பவும் தன்னடக்கம் உள்ளவர்கள். அவர்களுடைய யோசனைகளை நாம் பல சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொள்ளாமல் இருந்ததுமுண்டு. அம்மாதிரி சமயங்களிலும் எவ்விதமான வருத்தமும் இல்லாமல் சொல்லவேண்டிய கருத்துக்களை துணிவுடன் கூறி இந்தச் சபையின் அங்கத்தினர்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் அவர்கள் சேவை செய்து அனுபவம் பெற்றிருக்கிறார்கள். இப்பொழுது தன்னுடைய சொந்த மாநிலத்திற்கு தன்னுடைய சொந்த உற்றார் உறவினர்களுடைய நடுவில் செல்கிறார்கள். அவர்கள் மைசூர் மாநிலத்தில் ஆற்றும் பணி தமிழ் நாட்டின் கவுரவத்தை உயர்த்துவதாக இருக்கும் என்பதில் எனக்கு நிச்சயமான நம்பிக்கை உண்டு. அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். வரக்கூடிய காரியதரிசி அவர்களும் நமக்குப் புதியவர் அல்லர். தமிழ் நாட்டில் பல இலாக்காக்களில் வேலை செய்து அனுபவம் பெற்று, குறிப்பாக கவுன்சிலிலே காரியதரிசியாகப் பணியாற்றி அனுபவம் பெற்றுத்தான் இந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ள முன் வந்திருக்கிறார்கள். அவர்களும் சிறந்த முறையில் இந்தச் சபைக்கு உதவி செய்து, இந்தச் சபையின் அலுவல்களை வெற்றிகரமாக நடத்துவதற்குரிய முறையில் பணியாற்றி, இந்த இலாக்காவையும் சிறந்த முறையில் இயங்க வைத்து, இந்தச் சபையிலுள்ள எல்லோருடைய பாராட்டுதலையும் பெறுவார் என்ற நம்பிக்கையோடு அவர்களுக்குப் வரவேற்புக் கூறிக்கொண்டு, நண்பர் திரு. ஹனுமந்தப்பா அவர்களுக்கு மீண்டும் என்னுடைய சார்பிலும் என்னுடைய கட்சியின் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. க. ர. நல்லசிவம்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த நன்றி யறிவிப்புத் தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தியன் ஒருவன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு உதாரணம் வேண்டுமென்றால் நம்முடைய சட்டசபைச் செயலாளராக இருந்து வந்திருக்கும் திரு. ஹனுமந்தப்பா அவர்களைத்தான் சொல்ல முடியும் என்று நான் நினைக்கிறேன். மைசூர் மாநிலத்திற்கு அவர் போவதாக வந்த செய்தியை அறிந்ததற்குப் பின்னால் தான் அவர் எந்த இராஜ்யத்தைச் சேர்ந்தவர் என்று தெரிந்துகொள்ளக்கூடிய நிலை எனக்கு ஏற்பட்டது. இன்றைக்குத்தான் அதைப்பற்றி எண்ண வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தது. இதுவரையில் நம்முடன் சேர்ந்த ஒருவராகத்தான் அவரை எண்ண முடிந்தது. அவர் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர் என்கிற நினைப்பே பல கனம் அங்கத்தினர்களுக்கு இருந்திருக்காது என்று நான் நம்புகிறேன். அவர் தமிழ் நாட்டோடு ஒன்றுபட்டிருந்தார். அந்த அளவிற்கு அவருடைய பண்பு அமைந்திருந்தது.

அவர் இந்த இலாகாவில் பணிபுரிந்த காலத்தில், என்னைப் போன்ற அங்கத்தினர்களுக்குச் சட்டசபை முறைகளைத் தெரிந்து கொள்வதற்கும், அவற்றிலே திறமை பெறுவதற்கும் ஆசிரியர் போல் இருந்து காரியம் செய்தார் என்றால் அது மிகையாகாது. மைசூர் மாநிலத்திற்குப் போவதை அவர் விரும்பிக்கொண்டிருந்தார் என்று நான் நினைக்கிறேன். நண்பர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூறியது போல், தங்கள் தங்கள் மாநிலத்திற்குப் போக வேண்டும் என்கிற அவா ஒவ்வொருவருக்கும் [illegible]





செய்யும். அந்த முறையில் அவர்கள் மைசூர் மாநிலத்திற்குச் சென்று, இன்னும் சிறப்பான பெயர் பெற்று நல்ல முறையிலே வாழ வேண்டுமென்று நான் வாழ்த்திக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடிக்கின்றேன்.

**திரு. கே. டி. கோசல்ராம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நண்பர் திரு. ஹனுமந்தப்பா அவர்கள் 1946-ம் வருஷத்திலிருந்து உதவிக் காரியதரிசியாகவும் இப்பொழுது காரியதரிசியாகவும் இந்தச் சட்டசபையில் பணியாற்றி அனுபவம் பெற்றுள்ளவர். அவருடைய அனுபவத்தைப் பயன்படுத்திக் கொண்ட அநேகம் அங்கத்தினர்களில் நானும் ஒருவன்.

நண்பர் திரு. ஹனுமந்தப்பா அவர்களிடத்தில் அடக்கம், பண்பு, பணிவு ஆகிய இந்த மூன்று குணங்களையும் எப்பொழுதும் நாம் பார்த்து வந்திருக்கின்றோம். அது மாத்திரம் அல்ல. நாட்டில் நிர்வாகம் (எக்ஸிக்யூடிவ்), நீதி (ஜுடிஷியரி), சட்ட மன்றம் (லெஜிஸ்லேச்சர்) ஆகிய இந்த மூன்றும் மூன்று உறுப்புகளாக இருந்து, அது அதற்குள்ள கடமைகளைச் செய்ய வேண்டியது அவசியம். அந்த வகையில் சட்ட மன்றத்தின் கடமைகளில் நீதி ஸ்தலமோ அல்லது நிர்வாகமோ தலையிட்டு ஆக்கிரமிக்காமல், அவற்றைப் பாதுகாத்துக் கொண்டுவந்த காரியதரிசிகளில் நண்பர் திரு. ஹனுமந்தப்பா அவர்களும் ஒருவர் ஆகும். இந்தத் துறையில் அவர்கள் மிகத் திறமையாகக் காரியம் செய்துவந்துள்ளார் என்பதை இந்த நேரத்தில் நான் இங்கே ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

அவர் சட்டமன்றக் காரியதரிசியாக இருந்த காலத்தில், தன்னை ஏதோ ஒரு அரசாங்க அதிகாரியாக அவர் ஒரு நாளும் நினைத்திருக்கமாட்டார் என்பது என்னுடைய துணிவு. இந்த சட்ட மன்றத்திற்குக் காரியதரிசியாகவே அவர் தம்மைக் கருதிக் கொண்டு வேலை செய்து வந்தார்கள். இந்தச் சட்டமன்றத்திற்கு எத்தகைய 'லாயல்டி' இருக்கவேண்டுமோ, இந்தச் சட்ட மன்ற அங்கத்தினர்களுக்கு எத்தகைய காரியங்களைச் செய்துகொடுக்க வேண்டுமோ, அவர்களுடைய உரிமைகளை எத்தகைய வகையில் பாதுகாக்க வேண்டுமோ அவற்றிலிருந்து அவர்கள் ஒரு நாளும் தவறியவர் அல்லர். இத்தகைய கண்ணியம் வாய்ந்த அவர் நம் மாநிலத்தோடு ஆந்திரா, கேரளா, கர்நாடகப் பகுதிகள் சேர்ந்திருந்த காலத்திலிருந்து பணியாற்றி வருகிறார். நண்பர் ஒருவர் சொன்ன மாதிரி, அவர் 'மைசூரியன்' என்பது கூடப் பல பேருக்குத் தெரிந்திருக்காது. அவர் நிச்சயமாக நமது தமிழகத்தில் நம்மில் ஒருவராகவே இருக்க ஆசைப்பட்டாரே தவிர, இன்னொரு மாநிலத்தைச் சேர்ந்தவராகத் தம்மை ஒரு நாளும் கருதியதில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

பல பொறுக்குக் கமிட்டிகளில் நான் அங்கம் வகித்திருக்கிறேன், [illegible] வருஷத்திலிருந்து இன்று வரை நிர்வாகத்தில் ([illegible]க்யூடிவ்) உள்ளவர்கள் எந்த விதமாக எப்படிச்

[திரு. கே. டி. கோசல்ராம்] [17th October 1964

சொன்னாலும், சட்ட மன்ற உரிமைகளில் தலையிட அவர்களுக்குச் சம்பந்தம் இருக்கிறதா என்று நாம் நினைப்பதற்கு முன்னாலேயே, 'எக்ஸிக்யூடிவ்விலே உள்ளவர்களுக்கு இத்தகைய உரிமைகளில் தலையிட அதிகாரமே கிடையாது, நம் செலக்ட் கமிட்டி என்பது இதற்கெல்லாம் அப்பாற்பட்டது, நிர்வாகத்தில் இருப்பவர்களுக்குச் சம்பந்தம் எந்த அளவுக்கு இருக்கவேண்டுமோ அந்த அளவுக்குள்தான், அந்த வரையறைக்குள்தான் இருக்கவேண்டும்' என்பதைத் திட்டவட்டமாக அங்கத்தினர்களுக்கு அவர் 'ப்ரீஃப்' பண்ணக்கூடியவராக இருந்து வந்தார். அத்தகைய ஒரு மரபை அவர்கள் காரியதரிசியாக இருந்த காலத்தில் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி, நமது சென்னை மாநில சட்ட மன்றம் இந்த தேசத்திற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே கூட, சிறந்த முன்மாதிரியாக விளங்கி, நல்லதொரு பாரம்பரியத்தை உண்டாக்கி வந்திருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. அந்தப் பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்க சட்ட மன்ற அங்கத்தினர்களாகிய நாம் முயன்று வந்திருக்கிறோம். அதற்கு நமக்கு உறுதுணையாக இருந்தவர்கள் பலர். நண்பர் திரு. வர்மா அவர்கள் காரியதரிசியாக இருந்தார். அவருக்குப் பிறகு திரு. ஹனுமந்தப்பா அவர்கள் வந்தார்கள். திரு. ஆர். வி. கிருஷ்ணய்யர் அவர்களும் இடையிலே காரியதரிசியாக இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் சட்ட மன்றத்தின் சுதந்தரத் தன்மையைச் சிறந்த முறையில் காப்பாற்றி வந்தார்கள். 'இன்டிபென்டென்ட் ஜுடிஷியரி'-யைப்போல, 'இன்டிபென்டென்ட் லெஜிஸ்லேச்சர்' இருக்கவேண்டும், எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு சட்ட மன்றம் விளங்கவேண்டும், சட்ட மன்றத்தினுடைய உரிமை பாதுகாக்கப்படவேண்டும். சட்ட மன்ற அங்கத்தினர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கண்காணிப்புடன் திரு. ஹனுமந்தப்பா அவர்களும் பணியாற்றி வந்தார்கள். அத்தகைய நண்பர் இன்று மைசூருக்குப் போகிறார். மைசூரும் பாரத தேசத்தின் ஒரு பகுதியாகும். பாரத தேசம் முழுமையும் ஒன்று என்ற நிலையில், மராட்டிரம், பீகார் போன்ற எந்த ராஜ்யத்திற்கும் யாரும் போகக்கூடும். இந்தத் தேசத்தில் எந்தப் பகுதிக்கும் யார் வேண்டுமானாலும் போகலாம். அந்த வகையில்தான் அவர்கள் மைசூர் ராஜ்யத்திற்குப் போகிறார்கள். தமிழகத்தில் எத்தகைய நிலைமையை ஊர்ஜிதம் செய்தார்களோ, அத்தகைய நிலைமையை மைசூரிலும் பரவச் செய்ய அவர் உறுதுணையாக இருப்பார் என்று நான் நம்புகிறேன்.

இந்தச் சட்ட மன்றத்திற்குக் காரியதரிசியாக நண்பர் திரு. நடராஜன் அவர்கள் வருகின்றார்கள். மத்தியில் ஒன்றிரண்டு வருஷங்கள் நான் கவுன்சிலில் அங்கத்தினராக இருந்தேன். அப்பொழுது அவருடைய திறமையை நன்கு அறிந்திருக்கின்றேன். திரு. ஹனுமந்தப்பா அவர்கள் கடைப்பிடித்து வந்த பாரம்பரியத்தை நண்பர் திரு. நடராஜன் அவர்களும் ஏறத்தாழ அதே நிலைமையில் கடைப்பிடிப்பார் என்ற நம்பிக்கை எனக்குப் பரிபூரணமாக உண்டு. அதே பாரம்பரியத்தில், சட்ட மன்றத்



17th October 1964] [திரு. கே. டி. கோசல்ராம்]

தினுடைய கண்ணியம், உரிமை ஆகியவைகளைப் பாதுகாப்பதற்கு அவர்கள் சிறிதும் தவறமாட்டார் என்ற நம்பிக்கையில் என் உரையை நான் முடிக்கின்றேன்.

MR. SPEAKER : Hon. Members, we all know that Sri T. Hanumanthappa has been brought up well by the good and sound traditions of this great House. He has served well and got the affection and kindness of us all. I have no doubt he will shine in the Mysore Legislature in the light of the experience which he got here. With these words I associate myself with you in wishing him all success in future. Now I will read the motion and I have no doubt that it will be carried unanimously. One way of expressing your joy is by thumping the table and passing the motion.

The motion is as follows :—' That the Hon. Speaker be requested to convey to Sri T. Hanumanthappa, B.A. (Hons.), B.L., appointed as Additional Secretary to the Mysore Legislature, the appreciation of this House of his long, sincere and meritorious service in our Legislature from 1946 to 1964 which, by his ready advice and his great knowledge of the law and the custom of the Legislature, he has rendered to it and to all its Members in the conduct of their business; and the good wishes of this House for his future career in Mysore State.'

The motion was carried *nem con* with accamation.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 19th October 1964.

The House then adjourned. 1-30 p.m

### VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders

83. *Notification issued with G.O.P. No.* 1667, *Revenue, dated 18th June* 1964, *amending the Revenue Department Notification II-1 No.* 4418 *of* 1962, *dated the 30th August* 1962, *published at page* 1802, *of Part II—Section* 1 *of the* Fort St. George Gazette, *dated the 19th September* 1962, *relating to the exemption from the sales tax of pottery.* [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act*, 1959 (*Madras Act* 1 *of* 1959).]

84. *Notification issued with Government Memo No.* 70443. M2/63-4, *Revenue, dated 17th July* 1964, *cancelling the exemption granted from the sales tax of the sales of dried and salted fish.* [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act*, 1959 (*Madras Act* 1 *of* 1959).]

85. *Audit Report on the accounts of the Madras State Housing Board for the period from 21st April* 1961 *to 31st March* 1962. [*Laid on the Table of the House under section* 125 (2) (*a*) *of the Madras State Housing Board Act*, 1961 (*Madras Act* 17 *of* 1961).]

[17th October 1964

**B. Reports, Notification and other Papers.**

*17. *The Madras Land Improvement Schemes (Amendment) Bill*, 1964.

† 18. *Annexure to the Madras Preservation of Private Forests (Amendment) Bill*, 1964.

‡19. *Annexure to the Madras Land Improvement Schemes (Amendment) Bill*, 1964.

---

* Sent by post to members on the 13th October 1964.
† Laid on the table of the House on 16th October 1964.
‡ Sent by general despatch to members on 16th October 1964.



# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, 19th October 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. SPEAKER (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### லஞ்ச ஊழல் வழக்குகள்

*21 *கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி:* கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964 ஜூன் ஜூலை மாதங்களில் லஞ்ச ஊழல் காரணமாகக் கைது செய்யப்பட்டவர்களில் ஓய்வு பெற்ற அதிகாரிகள் எத்தனை பேர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: One retired official was arrested on charges of corruption while in service.

**திரு. கரு. சீமைச்சாமி:** லஞ்ச ஊழல் சம்பந்தமாகக் கைது செய்யப்படுகிறவர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை மிக்க காலதாமதம் ஆகிறது? அதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நடவடிக்கை எடுப்பது என்றால் எல்லாவற்றையும் பரிசீலனை செய்த பிறகுதான் எடுக்க வேண்டும். பரிசீலனை செய்வதற்கு எவ்வளவு காலம் பிடிக்கிறதோ அதைத் தவிர்ப்பதற்கு இல்லை.

**திரு. வை. சங்கரன்:** அந்த அதிகாரியின் பேரில் என்ன என்ன குற்றங்கள் சாட்டப்பட்டு இருக்கின்றன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ப்ராசிக்யூஷன் ஸ்டேஜில் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. சார்ஜ் ஷீட் பைல் பண்ணின பிறகுதான் சொல்லலாம். ஆகவே அதுபற்றிய விவரங்களை இப்போது சொல்வது உசிதம் அல்ல என்று நான் கருதுகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவம்:** அதிகாரிகள் எந்த எந்தக் குற்றச்சாட்டுகளின் மீது கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்த நிலையில் அந்த விவரங்களை எல்லாம் சொல்ல முடியாது என்றுதான் சொன்னேன்.

**திரு. பீ. கலியாணசுந்தரம்:** அந்த அதிகாரிகளின் மீது குற்றச்சாட்டுகள் இருக்க, அதுவும் பரிசீலனையில் இருக்கும்போது எவ்வாறு அந்த அதிகாரிகள் ரிடையர் ஆக அனுமதிக்கப்பட்டார்கள்?

[19th October 1964

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இன்னும் பென்ஷன் நிர்ணயிக்கப்படவில்லை. பிராசிக்கியூஷன் பரிசீலனையில் இருக்கிறது. இதற்கிடையில் ரிடையர்மென்ட் பீரியட் வந்ததனால் அதைத் தவிர்க்க வேண்டாம் என்று சொல்லப்பட்டது. பிராசிக்யூஷன் முடிவு என்ன என்று தெரிந்த பிறகு மற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: குற்றச்சாட்டுகள் பரிசீலனையில் இருக்கும்போது கௌரவமாகப் பதவியில் இருந்து விலக அனுமதித்துவிட்டு, பென்ஷனை நிறுத்த அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரிடையர்மெண்டு வேறு; பென்ஷன் வேறு. எப்போதுமே ரிடையர்மெண்டுக்குப் பிறகு தான் பென்ஷன் நிர்ணயிக்கப்படுகிறது.

திரு. மு. சண்முகம் : லஞ்ச ஊழலைக் கண்டுபிடிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கிற அதிகாரிகளே லஞ்சம் வாங்கும் காரியத்தில் ஈடுபடுவதாகச் சொல்லப்படுகிறதே; அத்தகைய தகவல் அரசாங்கத்திற்கு வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தமாதிரியாகக் கேள்வி கேட்க முற்படுவதே சரியல்ல.

திரு. ம. கமலநாதன் : லஞ்ச ஊழல் சம்பந்தமாக மோட்டார் வாகன ப்ரேக் இன்ஸ்பெக்டர்களில் பத்துப் பேர்களின் மீது வழக்குகள் போடப்பட்டு ருசுவாகாமல் போய்விட்டதே, இவர்கள் சரியான முறையில் செயல்படவில்லை என்று ஆகாதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அத்தகைய அபிப்பிராயத்திற்கு இடமில்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, லஞ்ச ஊழல் சம்பந்தமாக அண்மையில் கைது செய்யப்பட்ட சேலம் தாசில்தாருக்குக் கையில் விலங்கிட்டு தப்பி ஓடிச் செல்லக் கூடிய கொலைக் குற்றவாளியைப் போல அழைத்துச் சென்றது முறைதானா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. லஞ்சக் குற்றம் செய்பவர்கள் மீது அனுதாபம் கொள்ளலாம்; லஞ்ச ஊழல் அவ்வளவு பெரிய குற்றம் அல்ல என்று சொல்வதை நான் பாராட்ட முடியாது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: லஞ்ச ஊழல் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட அந்த அதிகாரிகள் கெஜடெட் அதிகாரிகளா? நான்-கெஜடெட் அதிகாரிகளா? அவர்கள் எந்த உத்தியோகம் பார்த்துக் கொண்டு இருந்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கெஜடெட் ஆபீசர்கள்.



19th October 1964]

திரு. மீ. கலியாணசுந்தரம்: இதிலே ஹெட்ஸ் ஆப் டிப்பார்ட்டுமெண்ட்ஸ் எத்தனை பேர் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதிலே ஹெட்ஸ் ஆப் டிபார்ட்மெண்ட்டும் இருக்கிறார்கள்.

விலைவாசி உயர்வு (கண்டனப் போராட்டம்)

* 22 கேள்வி—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விலைவாசி உயர்வுக்குக் கண்டனம் என்ற பெயரால் ஆகஸ்டு மாதம் போராட்டம் நடத்தியதற்காக, எத்தனை கம்யூனிஸ்டுகள் நம் மாநிலத்தில் கைது செய்யப்பட்டார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விலைவாசிகள் ஏற்றத்தை எதிர்த்து 1964 ஆகஸ்டில் நடத்திய கிளர்ச்சியில் 2,040 கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டனர்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த இயக்கம் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்களில் நானும் ஒருவன். நாங்கள் என்ன செய்யப்போகிறோம் என்பதை முன்கூட்டியே அறிவித்து, பகிரங்கமாகப் போராட்டத்தைக் குறிப்பிட்ட தேதியில் நடத்த இருந்தபோது, அதை நடத்துவதற்கு முன்கூட்டியே 151-ஆவது செக்ஷன் கீழ் எல்லோரையும் கைது செய்தது நியாயம் தானா? 151-ஆவது செக்ஷன் சந்தேகாஸ்பதமானவர்களைக் கைது செய்வதற்கு வழி செய்வது. அரசியல் கைதிகளின் மீது இந்த செக்ஷனை உபயோகிப்பது நியாயந்தானா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசியல்வாதிகளாக இருந்தாலும் குற்றம் குற்றமே. விலைவாசி உயர்வுக்காக மறியல் செய்வதை அனுமதிக்கக் கூடாது என்பது அரசாங்கத்தின் அபிப்பிராயம். 151-ஆவது செக்ஷனைப் பிரயோகித்து கைது செய்ததை அரசாங்கம் தவறு என்று கருதவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : விலைவாசி மறியல் சம்பந்தமாக ஒரு சமயத்தில் மறியல் செய்த பிறகு கைது செய்திருக்கிறார்களே, இப்போது மறியல் செய்வதற்கு முன்பாகவே 151-ஆவது செக்ஷன் படி கைது செய்திருக்கிறார்களே, இதில் ஏதாவது கட்சிக்குக் கட்சி பாரபட்சம் காட்டும் தன்மை இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கட்சி பாரபட்சம் இல்லை. அந்த அந்த நிலைமைக்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. மு. [illegible]: கைது செய்யப்பட்ட கம்யூனிஸ்டுத் தோழர்கள் மீது வழக்குகள் போடப்பட்டு அவர்கள் தண்டிக்கப் பட்டார்களா ?

[19th October 1964

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. எனக்குத் தெரிந்த வரையில் வழக்குகள் போடப்பட்டதாக நினைவு இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** நாங்கள் முன் கூட்டியே இந்த நேரத்தில், இன்ன இடத்தில் மறியல் செய்யப் போவதாக அறிவித்து இருக்கிறோம். அதன்படி செய்ய எங்களை அனுமதித்து விட்டு, எங்கள் மீது வழக்குகள் தொடர்ந்து தண்டனை கூட வாங்கிக் கொடுத்திருக்கலாம். அதைவிட்டுவிட்டு 151-ஆவது செக்ஷன் பிரகாரம் தடுப்பு நடவடிக்கையை எடுத்ததற்குக் காரணம் சர்க்காருக்கு இவர்கள் மீது அச்சம் ஏற்பட்டுவிட்டதா? எங்களைக் கண்டு அச்சப்படுவானேன் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சர்க்காருக்கு ஒருவிதமான அச்சமும் இல்லை. 151-ஆவது செக்ஷன் பிரகாரம் சந்தேகப்படுகிறவர்கள் மீதே நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்றால், சந்தேகத்திற்கு இடமின்றி இன்ன குற்றம் செய்யப் போகிறோம் என்று அறிவித்தவர்கள் மீது, அந்தக் குற்றத்தைச் செய்ய வொட்டாமல் தடுப்பதற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்வது தவறு அல்ல.

**திரு. எஸ். முருகையன்:** அப்படிக் கைது செய்யப்பட்டவர்களில் எத்தனை பேர்களுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது? இப்போது யாராவது சிறையில் இருக்கிறார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அது பற்றிய தகவல் இல்லையென்று சொன்னேன். எனக்குத் தெரிந்த வரையில் வழக்குத் தொடரப்பட்டதாக நினைவு இல்லை. அவர்களும் அதைத் தொடர்ந்து வேறு ஒரு குற்றமும் செய்யவில்லை.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** 1962-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்திய விலைவாசி உயர்வு மறியல் போராட்டத்தில் எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்? எத்தனை பேர்கள் மீது வழக்குகள் போடப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. கரு. சீமைச்சாமி:** விலைவாசிப் போராட்டத்தில் ஈடுபட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினர்களின் மீது வழக்குகள் போடப்பட்டு அவர்கள் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள், ஆனால் கம்யூனிஸ்டுக் கட்சியினர் நடத்திய விலைவாசிப் போராட்டத்தில் இவர்கள் மீது வழக்குகள் போடப்படவில்லை என்றதற்கு ஏதேனும் காரணம் உண்டா? ஏன் இப்படி என்று சொல்ல முடியுமா?



19th October 1964]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அந்த அந்த நிலைமைக்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும். பாரபட்சம் இல்லையென்று தான் முன்பு சொன்னேன்.

**திரு. கோ. சி. மணி:** திராவிட முன்னேற்றக் கழகம் விலைவாசிப் போராட்டம் நடத்தியபோது இருந்த நிலைமை என்ன? கம்யூனிஸ்டுக் கட்சி நடத்த இருந்த சமயத்தில் இருந்த நிலைமை என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவர்கள் போராட்டம் நடத்திய போது இருந்த நிலைமை வேறு; இவர்கள் போராட்டம் நடத்த இருந்தபோது இருந்த நிலைமை வேறு. இவர்கள் நடத்த இருந்தபோது வழக்குகள் தொடர வேண்டிய நிலைமை இல்லை.

**திரு. மு. கருணாநிதி:** கம்யூனிஸ்டுகள் போராட்டம் நடத்த இருந்தபோதுள்ள நிலைமை இவர்கள் தேர்தலில் காங்கிரசை ஆதரித்தார்கள் என்பது தானா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இவ்வாறு துணைத் தலைவர் கூறுவது தவறு என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன், கம்யூனிஸ்டுகள் காங்கிரசை ஆதரிக்கவில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல்:** கம்யூனிஸ்டுகள் காங்கிரசை ஆதரிக்கவில்லை என்று சொன்னார்கள். சமீபத்தில் நடந்த நகரசபைத் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் காங்கிரசை ஆதரிக்கவில்லையா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் இப்படிப் பேசுவது சரியல்ல. அதற்கு முன் நடந்த தேர்தலில் அவர்கள் தி.மு.க.வைத்தான் ஆதரித்திருக்கிறார்கள்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** திராவிட முன்னேற்றக் கழகம் விலைவாசிப் போராட்டம் நடத்திய காலத்தில் பலாத்காரச் செயல்களில் ஈடுபடச் சந்தர்ப்பம் இருந்தது என்பது உண்மையா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நடவடிக்கை எடுத்துக் கொள்ளாவிட்டால் பலாத்காரம் ஏற்படக்கூடும் என்று உத்தேசித்து முன் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** 1962-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்திய விலைவாசிப் போராட்டத்தின்பொழுது ஏற்பட்ட பலாத்காரத்தை அடக்குவதற்கு சர்க்கார் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று சென்னையில் அபிப்பிராயம் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அபிப்பிராயம் இருக்கலாம். அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

### *Tamil pandits (Qualifications)*

*** 23 Q.—Sri K. A. MATHIALAGAN :** Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether Dr. A. Chidambaranathan Chettiar, M.L.C. and President of Tamil Teachers' Association, made representations to the Hon. Chief Minister regarding the training qualifications insisted upon for the Tamil Pandits who had been in service for long and the consequent unemployment of many efficient Tamil Pandits; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Grade—II Tamil Pandits without training qualification appointed up to 28th October 1963 on regular basis are continued in service and are paid the minimum pay of Rs. 90 per mensem, in the time scale of pay of Rs. 90—4—110—3—140. Sri Chidambaranathan, M.L.C. was also informed accordingly.

*(அ) ஆம்.*

*(இ) 1963 அக்டோபர் 28-ம் தேதி வரையில் முறையாக நியமிக்கப்பட்டு, பயிற்சித் தகுதி பெற்றிராத 2-ம் கிரேடு தமிழ்ப் பண்டிதர்கள் தொடர்ந்து வேலையில் வைத்துக் கொள்ளப் படுகிறார்கள். ரூபாய் 90—4—110—3—140 என்ற சம்பள விகிதத்தில் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 90 என்ற குறைந்த பட்ச சம்பளம் அவர் களுக்கும் கொடுக்கப்படுகிறது. திரு. சிதம்பரநாதன், எம்.எல்.சி. அவர்களுக்கும் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.*

**திரு. எஸ். முருகையன் :** *முதல் வகுப்புக்குத் தகுதியாக இருந்தும் பல தமிழ் புலவர்கள் இரண்டாவது கிரேடில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். உடனடியாக முதல் வகுப்புக்குத் தகுதியாக உள்ள அத்தனை பேர்களையும் முதல் வகுப்பு ஆசிரியர் களாக ஆக்குவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *அது பற்றித் தனிக் கேள்வி போட வேண்டும்.*

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** *இந்தி பண்டிட்களுக்கும், தமிழ் பண்டிட்களுக்கும் சம்பள விகிதத்தில் ஏதாவது வேற்றுமை இருக்கிறதா? அப்படியானல் விவரம் என்ன?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *என்னிடம் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கலாம்.*

### *Disbursement of teachers' salaries*

*** 24 Q.—Sri S. MADHAVAN :** Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the teachers in private schools have represented to the Government about the irregular payments of salary by the managements; and

(*b*) the steps taken or proposed to be taken in this regard?





THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes. Occasionally representations are made to the Government.

(*b*) Action is taken by the inspecting officers to make direct payment to the teachers or to withdraw the recognition of the schools if that is warranted.

**திரு. வை. சங்கரன் :** *இப்பொழுது உள்ள மாறுபட்ட நிலைமை யின் காரணமாக ஒரு சிலருக்கு ரூ. 20, 30 குறைவாகக் கிடைக் கிறது. இதை மானேஜ்மெண்டுகளே கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் சொல்லுகிறது. ஒன்று மானேஜ்மெண்டுகளைக் கொடுக்கும்படி பலவந்தப்படுத்த வேண்டும் அல்லது சர்க்கார் அதைக் கொடுக்கவேண்டும். இதனால் ஆசிரியர்கள் ஓரளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இதைத் தவிர்ப்பதற்கு இரண்டில் ஒன்றை செய்ய சர்க்கார் முன்வர வேண்டும்.*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *அதற்குத் தனி கேள்வி போட வேண்டும்.*

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** *இம்மாதிரி சம்பளம் சரியாகப் பட்டுவாடா செய்யப்படவில்லை என்கிற குற்றச்சாட்டுகள் இருக் கின்றன. சர்க்கார் கொடுக்கும் தொகையிலும் சுங்கம் பிடித்துக் கொண்டு ஆசிரியர்களுக்கு குறைவாகச் சம்பளம் கொடுக்கப் படுகிறது என்ற புகார்களும் இருந்து வருகின்றன. சர்க்கார் சம்பளத்தை நேரடியாகப் பட்டுவாடா செய்யும்பொழுது, இம் மாதிரி பள்ளிகளை சர்க்காரே எடுத்துக் கொள்வதற்கு என்ன ஆட்சேபணை இருக்கிறது?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *இதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. இம்மாதிரிப் புகார்கள் வந்தால் அரசாங்கம் விசாரணை செய்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இம்மாதிரிப் புகார்கள் இருக்கின்ற இடங்களில் அரசாங்கமே அந்தப் பள்ளிகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால், அவசியம் இருந்தால் அம்மாதிரி எடுத்துக் கொள் வார்கள். இல்லையென்றால், ஆசிரியர்களுக்கு அவர்கள் சரியாகச் சம்பளம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள், அந்த வற்புறுத்துவார்கள்.*

**திரு. து. ப. அழகமுத்து :** *இது சம்பந்தமாக புகார்கள் வந்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், ஆசிரியர்கள் கல்வி இலாகாவுக்கு இம்மாதிரிப் புகார்கள் அனுப்பியும், நீண்ட காலமாக அதுபற்றி முடிவு செய்யப்படவில்லை. அவர்களுக்குப் பதிலும் அனுப்பப்படவில்லை, இதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** *கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட விவரங்கள் கொடுத்தால், அதைக் கவனித்து அதில் தாமதம் இருந்தால், தாமதத்தைத் தவிர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய லாம்.*

[19th October 1964

**திரு. ம. கமலநாதன் :** கனம் முதல் அமைச்சர் அவர்கள் 'அகேஷனல்' என்று சொன்னார்கள். ஆனால் ஜெனரலாக அவ்வாறு உள்ளது. பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதை அரசாங்கம் உணர்ந்து, அம்மாதிரி செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் உறுப்பினர் அவர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர். சில பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்குத் தனிப்பட்ட பள்ளிகள் மீது அவ்வளவு அனுதாபம் இல்லை. இதை சில பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல இது. ஆனால் இம்மாதிரி எந்தப் புகார் வந்தாலும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் தெரிவிக்கலாம். அரசாங்கம் அதைக் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

*பொறியியல் பட்டப்படிப்பில் மாணவர்களின் தேர்ச்சியின்மை*

*25 **கேள்வி—புலவர் கா. கோவிந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நம் மாநிலத்தில் பொறியியற் கல்லூரிகளில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டுப் படிப்பு மேற்கொண்ட மாணவரிடையே தேர்ச்சியின்மை உண்டாவதற்கான காரணங்களை ஆராய்ந்து காணுதல் வேண்டும் என்ற மதிப்பீட்டுக் குழு செய்த பரிந்துரையைச் செயற்படுத்த அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The matter has been examined and it has been found that the performance of students of the six Engineering Colleges under the control of the Director of Technical Education in the Final B.E. examination has been steadily improving in the past five years.

இந்த விஷயம் பரிசிலனை செய்யப்பட்டது. கடந்த சில ஆண்டுகளில் தொழில் நுட்பக் கல்வி நெறியாளரின் கட்டுப்பாட்டில் உள்ள ஆறு பெறியியற் கல்லூரிகளின் மாணவர்கள் பி. ஈ. இறுதியாண்டுப் பரீட்சையில் காட்டிய தேர்ச்சி படிப்படியாக வளர்ச்சியுடைந்திருக்கிறது என்று தெரியவருகிறது.

**புலவர் கா. கோவிந்தன் :** அவர்களுடைய தகுதியை அதிகப்படுத்துவதற்குச் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. அதற்கு அமைச்சர் அவர்கள் விடை அளிப்பாரா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதுபற்றி என்னிடம் விவரம் இல்லை. டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷன் இதைக் கவனித்துக் கொண்டு வருகிறார். அவர்கள் கவனிப்பதால்தான் இப்பொழுது நிலைமை அபிவிருத்தி ஆகியிருக்கிறது என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள்.



19th October 1964]

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அபிவிருத்தி எந்த அளவுக்கு இருக்கிறது என்பதற்குக் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு புள்ளிவிவரம் அமைச்சர் அவர்களிடம் இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆறு கல்லூரிகள் தனிப்பட்டவர்கள் நடத்தும் கல்லூரிகள். 1961-62-ல் 65% பாஸ், 1962-63-ல் 69% பாஸ், 1963-64-ல் 81% பாஸ். இதிலிருந்து நிலைமை அபிவிருத்தி ஆகியிருக்கிறது என்பது தெரிய வருகிறது.

**திரு. வை. சங்கரன் :** பொறியியல் கல்லூரிகளை இன்றைக்கு உள்ள நவீன முறைக்கு ஏற்றபடி மாற்றி அமைக்காத காரணத்தினால், ஓரளவுக்குத் தரம் குறைவாக இருக்கிறது. ஐ.ஏ.எஸ். போன்ற காம்பெடிஷன் பரீட்சைகளில் தென் பகுதியில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் தேர்வு குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, நவீன முறைகளுக்கு ஏற்றபடி கல்லூரிகளை மாற்றி அமைத்து, தரத்தை அதிகரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பொறி இயல் கல்லூரிகளில், இந்த மாநிலத்தில், தரம் குறைவாக இருக்கிறது என்பதை நான் ஒருக்காலும் ஒப்புக்கொள்ள முடியாது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அரசாங்கக் கல்லூரிகளில் இந்த அபிவிருத்தி எந்த அளவுக்கு இருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றித் தனிக் கேள்வி கேட்டால் விவரங்கள் கொடுக்கலாம்.

*Engineering College for Salem District*

*26 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the details of the proposal to locate an Engineering College in Salem District; and

(b) the present stage of the proposal and when the College would start functioning?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The College will be located at a site on the Salem-Omalur main road at a distance of seven miles from Salem Town.

(b) Acquisition of a considerable portion of the site is already over. Administrative approval has been accorded for the building and water supply schemes and a Special Construction Division has also been sanctioned for executing the works. The College will start functioning from the academic year 1965–66.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** சேலம் என்ஜினியரிங் கல்லூரியும், பொதுவாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட இருந்த மற்ற என்ஜினியரிங் கல்லூரிகளும் எந்த நிலையில் இருக்கின்றன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

**கனம் சபாநாயகர்:** குறிப்பாகத் திருநெல்வேலி என்று கேளுங்களேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** நில ஆர்ஜிதம் செய்து முடிந்து விட்டது என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த விவசாயிகளுக் கெல்லாம் பணம் பட்டுவாடா செய்வதில் தாமதம் இருப்பதால், அதைத் துரிதமாகப் பட்டுவாடா செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அது கவனிக்கப்பட்டுத் தான் வருகிறது.

**திரு. சா. கணேசன்:** இந்தக் கல்லூரி இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குள் தொடங்கப்படும் ? மொத்த எதிர்பார்க்கப்படும் அடிப்படைச் செலவுகள் எவ்வளவு ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அடுத்த ஆண்டிலே துவக்கப்படும் என்று முன்னமே குறிப்பிட்டேன். செலவு விவரம் என்னிடம் இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** 1965-66-ல் தொடங்கப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறியதில் மகிழ்ச்சி. அஸ்திவாரம் கூட இன்னும் போடப்படவில்லை. வேலை தொடங்கி எப்பொழுது கட்டடம் பூர்த்தி செய்யப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கட்டட நிலைமை பற்றி என்னிடம் விவரங்கள் இல்லை. ஆனால், ஓரளவுக்குக் கட்டடம் கட்டப்பட்டு, எப்படியும் கல்லூரி துவங்கப்படலாம் என்று தான் அரசாங்கம் கருதுகிறது.

*Purchase of 'Thamilagam'*

* 27 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether additional amount by way of interest had to be paid for 'Tamilagam' at Ooty on account of the fact that there was undue delay in the payment of purchase price, and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) Government had to pay interest on the purchase price of the property, pending payment of the amount which could be made only after confirmation of title of the vendor. But there was no actual loss to Government on this account in view of the fact that, though the payment was made only in March, 1964, the buildings and land has been taken possession of by the Government even in December, 1958, and the interest paid has to be taken to be in lieu of the rent payable for the buildings and land for the period from the date of taking possession of the property to the date of payment of the purchase price.





**திரு. கே. ஏ. மதியழகன்:** உதகமண்டலத்திலுள்ள 'தமிழகக்' கட்டடத்தின் 'பர்ச்சேஸ் ப்ரைஸ்' என்ன என்று கூறமுடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மொத்த விலையெல்லாம் சேர்த்து 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** அதிகப்படியாக வட்டித் தொகை எவ்வளவு கொடுக்க வேண்டியிருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதைப்பற்றி என்னிடம் விவரம் இல்லை. அப்பொழுதே நாம் ஐந்தரை லட்சம் ரூபாய் கட்டியிருந்தாலும் நாம் அதற்கும் வட்டி கொடுக்க வேண்டும். ஏனென்றால் இது 'காபிடல் எக்ஸ்ப்பெண்டிசர்'. இதெல்லாம் கடன் வாங்கித் தான் நாம் செய்கிறோம். அந்த வட்டியை இப்பொழுது கொடுத்திருக்கிறோம். வட்டித் தொகை ரூ. 87,335 ஆகிறது. 2—12—1958-லிருந்து 17—12—1964 வரை ஆண்டொன்றுக்கு 3 சதவிகிதம் வீதம் வட்டி கணக்கிடப்படுகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** அரண்மூர் மாளிகை என்று சொல்லப்படுகிற 'தமிழகம்' என்ன என்ன காரணங்களுக்காகச் சர்க்காரால் வாங்கப்பட்டது. எந்த எந்த காரியங்களுக்கு அது இப்பொழுது உபயோகப்பட்டு வருகிறது என்று கூற முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சர்க்கார்க் கமிட்டிக் கூட்டங்களும், சட்டசபைக் கமிட்டிக் கூட்டங்களும், சட்ட மன்றக் கூட்டமும் நடைபெற செளகரியமாக இருக்கும், இன்னும் இது போன்ற காரியங்களுக்குப் பயன்படட்டும் என்று அந்த மாளிகை வாங்கப்பட்டது. ஒரு முறை சட்ட மன்றக் கூட்டம் அங்கே நடந்தது. மேற்குறிப்பிட்ட காரியங்கள் எல்லாவற்றிற்கும் அது நன்றாகப் பயன்பட்டு வருகிறது. மன்ற உறுப்பினர்கள் அதிகாரிகள் போன்றவர்கள் உதகைக்குச் செல்லும்போதும் அவர்கள் தங்குவதற்கு வசதியாக இருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல்:** ஐந்தரை லட்சம் ரூபாய்க்கு மேல் விலை கொடுத்திருக்கிறோம். எண்பதாயிரம் ரூபாய்க்கு மேல் வட்டித் தொகை கொடுத்திருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில், வாடகைத் தொகை எவ்வளவோ அவ்வளவுதான் வட்டித் தொகை ஆகி இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியானால், எண்பதாயிரம் ரூபாய் வாடகைத் தொகை ஆகியிருக்கும் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அந்த மாளிகைக்கு மாதமொன்றுக்கு ஐயாயிரம் ரூபாய் கூட வாடகை கொடுக்கலாம். இரண்டாயிரம் ரூபாய் வைத்தால் கூட, எண்பதாயிரம் ரூபாய்க்கு மேல் ஆகிறது.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** எந்த நோக்கத்திற்கு அந்தக் கட்டடம் வாங்கப்பட்டதோ, அந்த நோக்கம் செயல்படாத காரணத்தால் அது தேவை இல்லை என்று கருதினால் அதைத் திருப்பி விற்கும் நோக்கம் உண்டா ?

[19th October 1964

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நோக்கம் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று சொன்னேன். நாம் வாங்கிய விலை நமக்குச் சௌகரியமான விலை. இன்னும் அதிகமான விலை அது பெறும். அதைத் திருப்பி விற்பது என்பது அரசாங்கத்திற்கும் நன்மை தரக்கூடியதல்ல; நாட்டுக்கும் நன்மை தரக்கூடியதல்ல.

**திரு. து. ப. அழகமுத்து:** தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம் கிரயத்திற்கு வாங்கப்பட்ட பிறகு சுவாதீனத்திற்கு வருகிற வரையில் உள்ள காலத்திற்கு வாடகையாக வட்டியைக் கணக்கிட்டுக் கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி சுவாதீனம் செய்வதற்கு ஏன் தாமதம் ஏற்பட்டது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சுவாதீனம் உடனே எடுத்துக் கொள்ளப்பட்டது. 'டைடில்' பார்த்து எல்லாவற்றையும் ஏற்பாடு செய்து பணம் கொடுக்க நாளாயிற்று. வட்டி கொடுத்த காலத்திற்கு அந்த மாளிகை நம்முடைய சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது.

**திரு. மு. கருணாநிதி:** மொத்த விலை, வட்டி ஆகியவை போக, அந்தக் கட்டடம் வாங்கிய பிறகு அதைப் பழுது பார்ப்பதற்குச் செலவு எவ்வளவு என்று குறிப்பிட முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதைப் பற்றிய விவரம் என்னிடம் இல்லை. பழுது பார்ப்பதற்கு எல்லாக் கட்டிடங்களுக்கும் என்ன செலவு ஆகிறதோ அதே மாதிரிதான் இதற்கும் ஆகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** 'டைடில்' சம்பந்தமாகத்தான் கால தாமதம் ஆனதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த தஸ்தாவேஜ், டைடில் எல்லாம் யார் பெயரில் இருக்கிறது? இப்போதாவது சரியான டைடில்தானா என்பதைப்பற்றிச் சர்க்காருக்குத் திருப்தியாக இருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அந்த மாளிகை ஜெய்ப்பூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தது. ஜெய்ப்பூர் மகாராணி அதை விற்றார். டைடில் எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்துதான் பணம் கொடுக்கப்பட்டது. மூன்று சதவிகிதம்தான் வட்டி; அதிகமான வட்டி கொடுக்கவில்லை. நாம் கொடுத்த வட்டி ஒன்றும் அதிகம் இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி:** முதல் அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது, சட்டசபைக் கூட்டத்தைக் கூட அங்கே நடத்தலாம் என்று சொன்னார்கள். அங்கே ஏதாவது ஒரு கூட்டத்தை நடத்த உத்தேசம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** 'சட்டசபைக் கூட்டத்தை நடத்தலாம்' என்று நான் சொல்லவில்லை. 'சட்டசபைக் கூட்டம் ஒரு முறை அங்கே நடந்தது' என்றுதான் சொன்னேன்.



19th October 1964]

**திரு. எம். எஸ். மணி:** அந்த அரண்மனையில் ஏற்கெனவே வேலை செய்து கொண்டிருந்தவர்களை நம்முடைய அரசாங்கம் வேலைக்கு எடுத்துக் கொண்டதா? அல்லது அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்து வேலையை விட்டு நீக்கிவிட்டதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இது வேறு கேள்வி. இதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

**திரு. து. ப. அழகமுத்து:** வட்டி அதிகமா, குறைவா என்பதல்ல பிரச்சினை. ஆனால், கொடுக்கப்பட்ட வட்டி, சாதாரணமாக நிலம் வாங்குகின்ற நடைமுறைக்கு மாறாக இருக்கிறதே, அது சரியா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கிரயத் தொகையை நாம் அப்போதே கொடுத்திருந்தாலும், அதற்குள்ள வட்டியை நாம் வேறு யாருக்காவது கொடுத்துத்தான் இருக்க வேண்டும். முதலீட்டுச் செலவிற்குக் கடன் வாங்குகிறோம். இந்தக் கட்டடத்தைப் பொறுத்த வரையில் 3 சதவிகிதம் வட்டி கொடுத்தது அதிகம் இல்லை என்று அந்தப் பொருளில்தான் நான் சொன்னேன்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** சர்க்கார் கொடுத்த கிரயத் தொகை, வட்டித் தொகை, கட்டடத்தைப் பழுது பார்த்த செலவு இவையெல்லாம் போக, இன்னும் ஒரு லட்சம் முதல் இரண்டு லட்சம் ரூபாய் வரை அதிகமாகத் தொகை கொடுத்து அந்தக் கட்டடத்தை வாங்கப் பொது மக்கள் தயாராயிருக்கிறார்கள். அரசாங்கம் அந்தக் கட்டடத்தை விற்றுவிடத் தயாராயிருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் உறுப்பினர் அவர்கள் உதகையைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கு அதைப்பற்றி நன்றாகத் தெரியும். ஆகையால்தான் இந்த நிலையை அவர்கள் எடுத்து விளக்கியிருக்கிறார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** தமிழக அரண்மனையை வாங்கும் போது இருந்த மார்க்கெட் நிலவரத்தையும் இப்போதைய நிலவரத்தையும் கணக்கிட்டால் நாம் கொடுத்த ஐந்தரை லட்ச ரூபாயைவிட பத்து மடங்கு, இருபது மடங்கு அதிகப் பெறுமானம் இருக்கும். . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் உறுப்பினர் அவர்கள் 'அரசாங்கம் நல்ல பேரம் செய்தது' என்று பாராட்டியதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். இதே அபிப்பிராயத்தைத்தான் நான் முன்பு தெரிவித்தேன்.

*Engineering staff for Class I Panchayats*

* 28 Q.—SRI K. CHEEMAICHAMY (on behalf of SRI R. S. VEERAPPA CHETTIAR) : Will the Hon. the Minister for Works be pleased to state :

(a) whether it is a fact that Sri R. S. Veerappa Chettiar, M.L.A. has brought to the notice of the Government on 12th September 1963 the need for the formation of a separate engineering staff for Class I Panchayats; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The matter is under consideration of the Government.

### கைதிகளுக்குத் தினசரி பத்திரிகைகள்

***29 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறைச்சாலையில் கைதிகளுக்கு தினசரிப் பத்திரிகைகள் அனுமதிக்கப்படுகின்றனவா ?

(இ) அப்படியானால், அந்தப் பத்திரிகைகளில் ஆங்கில, தமிழ் தினசரிகளின் பெயர்கள் யாவை ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) ஆம்.

(இ) அனுமதிக்கப்படும் ஆங்கில, தமிழ் பத்திரிகைகளின் பெயர்கள் வருமாறு—

| ஆங்கிலம்— | தமிழ்— |
| --- | --- |
| தி இந்து. | தினமணி. |
| தி மெட்ராஸ் மெயில். | சுதேசமித்திரன். |
| தி இந்தியன் எக்ஸ்பிரஸ் | நவ இந்தியா. |
| தி டயம்ஸ் ஆப் இந்தியா. | நவ சக்தி. |
| | தினமலர் |

இதைத் தவிர தி.மு.க. கைதிகள் தங்கள் செலவில் நம் நாடு, முரசொலி ஆகிய பத்திரிகைகள் பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**திரு. மு. கருணாநிதி :** சிறையில் அனுமதிக்கப்படும் பத்திரிகைகளுக்கு என்று என்ன தகுதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** சிறையில் எந்த எந்தப் பத்திரிகைகளைச் சிறைக் கைதிகள் படிக்கலாமோ அப்படிப்பட்ட பத்திரிகைகளைக் கொடுக்கும்படியாக அரசாங்கம் அனுமதித்து வருகிறது.

**திரு. மு. கருணாநிதி :** சிறைச்சாலையைப்பற்றி அவதூறாகச் செய்திகளை வெளியிடும் பத்திரிகைகளும் சிறைச்சாலைக்குள் அனுமதிக்கப்படுகின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் சிறையில் இருக்கும்போது அவர்கள் வெளியிலிருந்து பீடிகள் வரவழைத்து உள்ளே இருப்பவர்களுக்குக் கொடுத்து, முட்டை, இன்னும் தேவையான உணவுப் பொருள்களை வாங்கிக்கொண்டார் என்று 'நவ சக்தி' வெளியிட்ட செய்தி இருட்டடிப்பு செய்யப்படாமலேயே திருச்சி, மதுரை, சென்னை இன்னும் மற்ற சிறைச்சாலைகளுக்கும் அனுப்பப்பட்ட விவரம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?



**கனம் திரு. கோ. பூவராகன் :** நான் மேலே குறிப்பிட்ட பத்திரிகைகள் வெளியிடும் செய்திகளை அவர்கள் எங்கிருந்து பெறுகிறார்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை. அந்தப் பத்திரிகைகள் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட காரணத்தால் அவை சிறைச்சாலைகளில் வருகின்றன.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சமீபத்தில் தோன்றிய 'நவ சக்தி' 'தின மலர்' போன்ற பத்திரிகைகள் சிறைச்சாலையில் இடம் பெற்றிருந்தும், பல வருஷங்களாக நடைபெற்று வருகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகார பூர்வமான ஏடான 'நம் நாடு' பத்திரிகை, 'மாலை முரசு' போன்ற பல ஆயிரக் கணக்கான மக்கள் வாங்கிப் படிக்கின்ற பத்திரிகைகள் சிறைச்சாலைகளிலே இடம் பெறாமல் போனதற்கு என்ன காரணம் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அந்தப் பத்திரிகைகள் சிறைச்சாலையில் இருக்கின்ற கைதிகள் படிப்பதற்குத் தகுதி இல்லை என்று அரசாங்கம் நினைப்பதனால் அவை அனுமதிக்கப்படவில்லை.

**திரு. மு. கருணாநிதி :** 'நம் நாடு', 'முரசொலி' பத்திரிகைகளைத் தகுதி இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். சிறைச்சாலையைப்பற்றி அவதூறாகக் குறிப்பிடுகிற 'நவ சக்தி' பத்திரிக்கைக்கு மாத்திரம் என்ன புதிய தகுதி வந்துவிட்டது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** தகுதியைப் பார்த்துத்தான் பத்திரிகைகள் சிறைச்சாலைகளில் அனுமதிக்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் கருத்து.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அமைச்சர் அவர்கள் கூறுகிற 'தகுதி' என்பதற்குக் கொடுக்கப்படுகிற அர்த்தம் என்ன ? 'தகுதி' என்பது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பத்திரிகையாக இருக்க வேண்டும் என்பதுதானா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** மேலே சொன்ன பத்திரிகைகள் எந்தக் கட்சியைச் சார்ந்த பத்திரிகை என்று நான் சொல்லவில்லை. பொதுவாக இருக்கும் பத்திரிகைகள் என்று நான் சொல்கிறேன். அதே சமயத்தில், இதிலே கனம் அங்கத்தினர் சொன்னது போல் வேறு ஒன்றும் அர்த்தம் அல்ல.

**திரு. சா. கணேசன் :** கட்சி சார்பற்ற பத்திரிகைகள் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியானால் நவ சக்தி போன்றவை கட்சி சார்பற்றவையா ? அப்படி இருக்க ஜனசக்தி, முரசொலி ஆகிய எல்லாவற்றையும் வரவழைப்பது நியாயமான, பாரபட்சமற்ற போக்கை நிலைநாட்ட உதவும். அதைத்தான் ஏன் செய்யக் கூடாது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** பாரபட்சமற்ற போக்கின் மூலமாகத்தான் நான் முன்பு குறிப்பிட்ட பத்திரிகைகள் சிறையில் வாங்கிப் படிக்க அனுமதிக்கப்பட்டு இருக்கிறது.

[ 19th October 1964

## கைதிகளின் தண்டனைக் குறைப்பு

*30 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்குச் சிறைச்சாலை விதிகளின்படி வழங்கப்படும் தண்டனைக் குறைப்பைத் தவிர அரசாங்கம் தனியாகத் தண்டனைக் காலத்தைக் குறைப்பதுண்டா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** ஆம்.

**திரு. மு. கருணாநிதி :** சிறைச்சாலையில் ஆயுள் தண்டனை பெற்றிருக்கிற கைதிகளைக் குறைந்த காலத்தில் விடுதலை செய்ய ஒரு போர்டு என்று இருக்கிறது. அந்த போர்டில் போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக அந்தக் கைதிகள் வாசம் செய்கிற சிறை அதிகாரிகள் அந்தக் கைதிகளுக்கு விடுதலை அளிக்கலாம் என்று சிபார்சு செய்தால் போதும், விடுதலை அளிப்பது என்று செய்வார்களா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** போர்டு என்று வைத்திருக்கிறோம். அதில் சிறை அதிகாரிகளும் இருக்கிறார்கள். போர்டு செய்கிற சிபார்சுகளையும் கூட அரசாங்கம் நன்றாகப் பரிசீலனை செய்துதான் உத்தரவுகள் பிறப்பிக்கிறார்கள். ஆகவே தான் இப்போது இருக்கிற போர்டு அமைப்பை மாற்றுவதற்கில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சிறைச்சாலை விதிகளின்படி தண்டனை குறைப்பு இல்லாமல் சர்க்காராக எந்த எந்த சந்தர்ப்பங்களில் என்ன என்ன காரணங்களுக்காக ரிமிஷன் கொடுக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கூறுவாரா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** தண்டனை கொடுக்கும் நீதிபதிகள் தங்களுடைய தீர்ப்பிலேயே சில சமயங்களில் அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்வார்கள். இன்னும் சிறைச்சாலைகளில் கைதிகள் நடந்துகொள்கிற முறையைப் பற்றியும் சிறை அதிகாரிகள் ரிப்போர்ட் அனுப்புவார்கள். அதோடு சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் உடல் நலம் பற்றி டாக்டர்கள் சிபார்சு செய்வதும் உண்டு. இப்படி பல விஷயங்களையும் பற்றிப் பரிசீலனை செய்தே அரசாங்கம் ரிமிஷன் கொடுப்பது பற்றி உத்தரவு பிறப்பிக்கும்.

**திரு. சா. கணேசன் :** ஆயுள் கைதி போன்றவர்களுக்கு எந்த விதமான நிலைமையில் எவ்விதமான ரிமிஷன் கொடுக்கப்படுகின்றது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அதைத்தான் நான் முன்பே குறிப்பிட்டேன். அதற்கென்று அமைக்கப்பட்டுள்ள போர்டு பற் பல விஷயங்களையும் பரிசீலனை செய்து அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யும்.

**திரு. க. ர. நல்லசிவம் :** ஜன்ம தண்டனை என்றால் எத்தனை வருஷம் ?



19th October 1964]

**கனம் சபாநாயகர் :** அதுபற்றிய விதிமுறைகள் அடங்கிய சட்ட திட்டங்கள் இருக்கின்றன.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த மாதிரி ஆயுள் தண்டனைக் கைதிகளின் தண்டனைக் காலத்தைக் குறைப்பதற்கு அந்தக் கைதிகளின் பிராந்திய போலீஸ் அதிகாரிகளிடம் விசாரிக்கிறார்கள். அவர்கள் பழைய கோப தாபத்தில் சரியான முறையில் சிபார்சு செய்வதில்லை. ஆகவே அந்தக் கைதிகள் எந்த எந்த சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வருகிறார்களோ, அந்த அந்த சிறைச்சாலை அதிகாரிகளிடம் அவர்களைப் பற்றிய நன் நடத்தையைப்பற்றி விசாரித்தால் போதும் என்று செய்வார்களா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** சிறைச்சாலை அதிகாரிகளும் விசாரிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களைப்பற்றி அந்த அந்த வட்டார போலீஸ் அதிகாரிகளும் விசாரிக்கப்பட வேண்டியிருக்கிறது. அவர்கள் குற்றம் புரிவதற்குக் காரணமான சூழ்நிலை இன்னமும் அந்த வட்டாரத்தில் இருக்கிறதா என்று அறிந்து கொள்வதற்கு அந்த அந்த வட்டார போலீஸ் அதிகாரிகளும் விசாரிக்கப்பட வேண்டியிருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** நீதிபதிகள் தங்களுடைய தீர்ப்பில் தண்டனை காலத்தைக் குறைக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தால் அதன்படி தண்டனை குறைக்கப்படுகிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** நான் முன்பு குறிப்பிட்டபடி எல்லா விவரங்களும் பரிசீலனை செய்யப்பட்டு ரிமிஷன் சம்பந்தமாக அரசாங்கம் உத்தரவு போடுகிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** கிழக்கு ராமநாதபுரம் கலவர வழக்கு சம்பந்தமாகத் தண்டனை பெற்று சிறையில் இருப்பவர்கள் விஷயத்தில் சர்க்கார் ரிமிஷன் கொடுக்கலாம் என்று நீதிபதி தம் தீர்ப்பில் கொடுத்து இருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து நீண்ட காலமாகத் தண்டனை அனுபவித்து வருகிற அவர்களுக்கு ரிமிஷன் கொடுப்பார்களா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** எல்லாவற்றையும் பரிசீலனை செய்து ரெமிஷன் கொடுக்கலாம் என்பதற்கு அரசாங்கம் கொடுத்து வருகிறது.

**திரு. க. ர. நல்லசிவம் :** நான் தெரிந்து கொள்ள விரும்புவது ஜன்ம தண்டனை எத்தனை ஆண்டு காலம் என்பது.

**கனம் சபாநாயகர் :** அதற்கென்று உள்ள சட்ட திட்டங்களைப் படித்துப் பாருங்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சாதாரணமாக 14 ஆண்டு காலம் என்று கருதப்படுகிறது.

[19th October 1964

**திரு. எம். எஸ். மணி :** சுமார் ஐந்தாயிரம் ரூபாய் பெறுமான மேல்நாட்டு மதுபானங்களைக் கள்ளக்கடத்தல் செய்து 6 மாதம் தண்டனை பெற்றவருக்கு சிறையில் ஒரு மாத லீவு கிடைத்தது. அரசாங்கம் ஒரு மாத லீவு கொடுத்தது, சீக்கிரமாகவே வெளி வந்து தம்முடைய தொழிலில் ஈடுபடட்டும் என்றா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** என்னிடம் தகவல் இல்லை.

**திரு. து. ப. அழகமுத்து:** ஆயுள் தண்டனைக் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை காலம் சிறையில் தண்டனை அனுபவித்த பிறகு ரிமிஷன் கொடுப்பது பற்றி பரிசீலிக்கப்படும்? அவர் சிறையில் இருந்த காலம் லீவு காலத்தையும் சேர்த்து தண்டனை காலத்திற்கு அதிகமாக இருந்தால் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்களா ?

**கனம். திரு. கோ. பூவராகன் :** கொடுக்கப்பட்ட தண்டனை காலத்தில் மூன்றில் இரண்டு பங்கு நேர்மையான முறையில் நடந்து கொண்டு சிறையில் கழித்துவிட்டாலே அவர்களுக்கு ரிமிஷன் கொடுப்பது பற்றி இந்த போர்டு பரிசீலனை செய்யும்.

**திரு. மு. கருணாநிதி :** ஆபாசமாகப் பத்திரிகையில் எழுதியதற்காகத் தண்டிக்கப்பட்ட நாத்திகம் ராமசாமி ரிமிஷன் கொடுக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். ஆனால் திரு. மதியழகன் அவர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை காலத்தில் பெரும்பகுதியை அவர் சிறையில் கழித்தும், விடுதலைக்கு 15 நாள் முன்னதாக தொகுதி நிர்ணயக் குழுவில் அவர் கலந்து கொள்வதற்கு விடுதலை செய்யப்பட்டால் நல்லது என்று கேட்டுக் கொண்டும் விடுதலை செய்யப்படாததற்கும் உள்ள முரண்பாட்டை உணர முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முரண்பாடு ஒன்றும் இல்லை, தொகுதி நிர்ணயக் குழுவில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ரிமிஷன் கொடுப்பது என்று இல்லை. ஒருவருக்குக் கொடுப்பது, இன்னொருவருக்குக் கொடுப்பது இல்லை என்று அல்ல. அதற்கென்று விதிகள் இருக்கின்றன. அதைப் பரிசீலித்துக் கொடுக்கிறோம்.

**திரு. எஸ். ஜே. இராமசாமி :** அந்த போர்டுகளை எந்த அடிப் படையில் அமைக்கிறார்கள்? அந்த போர்டு உறுப்பினர்களை யார் யார் சிபார்சு செய்கிறார்கள் ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** தனியாகக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

**திரு. இரா. நாராயணன் :** சிறைச்சாலை போர்டை 10½ வருஷத்திற்கு என்று வைக்கிறார்கள்? அதை 7½ ஆண்டுக்கு என்று மாற்ற அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இப்போதுள்ள முறையை மாற்றுவதாக உத்தேசம் இல்லை.



19th October 1964]

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த போர்டிலே யார் யார் இருக்கிறார்கள்? எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை இந்த போர்டு கூடி தண்டனையைக் குறைக்க பரிசீலனை செய்கிறது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** தலைமைக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

**திரு. எஸ். முருகையன் :** ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளுக்கு ரிமிஷன் கொடுப்பது சம்பந்தமாக ரெவின்யூ அதிகாரிகளின் யோசனையைக் கேட்கும் வகையில் இந்த போர்டு மாற்றி அமைக்க படுமா ? ரெவின்யூ அதிகாரிகள் சிபார்சு செய்தால் போதாதா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** ரெவின்யூ அதிகாரிகளும் இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களும் இருக்கிறார்கள்.

**திரு. எம். எஸ். மணி :** ஆயுள் தண்டனை பெற்று இருக்கக்கூடியவர்களுக்கு லெவி கொடுக்காமல் 15 ஆண்டுகள் முடிந்த பிறகும் ஜாமீன் கொடுக்கப்படாமல் இருந்தால் திரும்பவும் சிறைச் சாலையில் வைத்துவிடுகிறார்களே அதற்கு என்ன காரணம் என்று அறியலாமா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** குறிப்பிட்ட கேள்வியாக இருந்தால் பரிசீலித்து பதில் அளிக்க முடியும்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—DELAY IN ANSWERING QUESTIONS.

**திரு. கே. ஏ. மதியழகன் :** 'ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். சட்ட மன்றக் கேள்விப் பட்டியலில் பல நேரங்களில் கேள்விகள் அதிகமாக வருவதில்லை என்று ஏற்கெனவே முறையிட்டிருந்தும் கூட கேள்விப் பட்டியலில் மிகக் குறைவாகக் கொடுக்கப்பட்டு கேள்வி நேரம் குறித்த காலத்திற்கு முன்னதாகவே முடிந்து விடுகிறது. அடிக்கடி இந்த நிலை ஏற்படுகிறது. கேள்விகளை சட்ட மன்ற இலாகாவில் இருந்து அனுப்பியும் இலாக்காக்களில் இருந்து துரிதமாகப் பதில் வராத காரணத்தால் இந்தநிலை ஏற்படுகிறது. ஆகவே, இலாகாக்களில் இருந்து பதில் அனுப்புவதைத் துரிதப் படுத்தும்படி உத்தரவிடவேண்டும். இதை நினைவுப்படுத்துவதற்காகத்தான் சபாநாயகர் அவர்களிடம் கூறுகிறேன்.

MR. SPEAKER : I will be glad if the hon. Member asks the Government or the Speaker about the reasons for the delay in getting answers to questions. But, it is not a point of order.

[19th October 1964

SRI K. A. MATHIALAGAN : The Departments are repeatedly delaying in furnishing answers to questions. So, the hon. Speaker may please arrange to expedite the replies to questions. That is why I raised this point of order.

MR. SPEAKER : I agree with the hon. Member and ask the Government to send answers to questions as early as possible.

### III.—ADJOURNMENT MOTIONS.

(1) Unsatisfactory position of rice supply in Madras city.
(2) Sale of paddy in Thanjavur district.
(3) Distress to Harijan workers due to closure of tanneries at Ranipet, Pernampattu and Vaniyampadi.
(4) Shooting of Arjunan by the Police at Coimbatore.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் அரிசி கிடைக்காத காரணத்தால் கடந்த இரண்டு தினங்களாக ஏற்பட்டிருக்கின்ற நிலைமை மிகவும் பீதியடையத்தக்க அளவுக்குச் சென்று கொண்டிருக்கிறது. பகல் நேரத்திலே மட்டுமின்றி இரவு நேரங்களிலும் க்யூவில் நின்று கொண்டிருக்கிறார்கள். ஏராளமான தாய்மார்களும், வயதான முதியவர்களும், எண்ணற்ற மத்தியதர மக்களும், ஏழை மக்களும் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் அரசாங்கம் பரிகாரம் செய்ய என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது, என்ன செய்யப் போகிறது என்பதைத் தெரிந்து கொள்ளுகின்ற ஒரு நிலைமையிலே நான் இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறேன். அதைப் பற்றி விவாதிக்க தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, அரங்கண்ணல் அவர்களும், நானும் சேர்ந்து தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

" acute scarcity of rice and lathi-charge resorted to by the Police at many places in city and the consequent panic, starvation and unrest among the people."

என்று தீர்மானம் கொடுத்திருக்கிறோம். இந்தப் பிரச்சினை அன்றாட நிர்வாகத்திலே வரக்கூடிய பிரச்சினை அல்ல. பல இடங்களில் தடியடி நடைபெறக்கூடிய பரப்பரப்பான நிலைமைகளும், மக்கள் அரைப்பட்டினி, கால் பட்டினி கிடக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது. சர்க்கார் இதிலே தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழித்து விட முடியாது. சர்க்காரும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிற முறையில் இரு அமைச்சர்கள் தஞ்சைக்குப் பறந்திருக்கிறார்கள். ஆகவே, ரொம்ப நெருக்கடியான இந்தப் பிரச்சினையை, மக்களுக்கு உணவு கொடுக்க வேண்டுமென்ற இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, ஒத்தி வைப்புப் பிரேரணை 'ஸ்பெசிபிக் மேட்டர் ஆப் பப்ளிக் இம்பார்டன்ஸ்' ஆக இருக்க வேண்டும். எங்கெங்கோ லத்தி



19th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

சார்ஜ் நடந்தது என்று சொல்வது இந்தப் பிரேரணையில் வராது. பொதுவாகக் கடைகளில் கூட்டம் அதிகமாக இருக்கிறது. இதிலே அரசாங்கம் சரியாக நடக்கவில்லை, நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவில்லை என்று பேசுவதற்கு 22, 23 தேதிகளில் அவகாசம் இருக்கிறது. ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கடைகளில் கூட்டம் அதிகமாக இருக்கிறது என்றெல்லாம் பத்திரிகைகளில் படம் போடுகிறார்கள். இதிலே ஒன்றைக் கவனிக்க வேண்டும். நியாய விலைக் கடைகள் ஒரு சிலதான் இருக்கின்றன. அந்தக் கடைகளில் மத்திய சர்க்கார் கொடுக்கிற அரிசியை வைத்துக் கொண்டு கொடுக்கிறோம். குறைந்த விலைக்கு, சப்சிடைஸ்டு பிரைசுக்குக் கொடுக்கிறோம். உயர்ந்த பட்ச விலையை நிர்ணயித்து அதற்கு மேல் போகக்கூடாது என்று சொல்லும்போது அந்த இடத்தில் பற்றுக்குறை இருப்பது கவனிக்கப்பட்டது. தற்போது தஞ்சையில் அறுவடை பரிபூரணமாகத் துவக்கப்பட்டிருக்கிறது. ஏராளமான அளவுக்குக் குறுவை கிடைக்கும். தஞ்சையிலிருந்து சென்னைக்கு அரிசி கொண்டு வருவதற்காகத்தான் இப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இங்கு நியாய விலைக் கடைகளில் விலை ரொம்பக் குறைவு. கண்ட்ரோல் விலைக்கும், நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் விலைக்கும் 17 பைசா வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, கூட்டம் அதிகமாக இருக்கிறது. அவர்கள் இதை வாங்கி இன்னொரிடத்தில் அதிக விலைக்கு விற்று விடுகிறார்கள். அதனால்தான் நியாய விலைக்கடைகளில் கூட்டம் பெருகுகிறது. எனினும் வேண்டிய அரிசி கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதிலே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. இந்தப் பிரச்சினை ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றி நம்பிக்கை இல்லாத் தீர்மான விவாதத்தின் போது பேசலாம் என்று சொன்னார்கள். மணிக் கணக்கில், நிமிஷக் கணக்கில், வினாடிக் கணக்கில் இந்தப் பிரச்சினையின் நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது. மக்கள் க்யூவில் நிற்பதைப் படம் பிடித்துப் பத்திரிகைகளில் போடுவதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இரவு நேரத்தில் நிற்க வேண்டாம், கலைந்து போய் விடுங்கள் என்று சொன்னால்கூட போக முடியாத அளவுக்குப் பயமும் பீதியும் அடைந்திருக்கிறார்கள். . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தப் பிரச்சினை ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று சொன்னேன். இதைப் பற்றி மேலும் பேசிக் கொண்டு போவது முறையல்ல.

**திரு. இராம. அரங்கண்ணல் :** முதலமைச்சர் அவர்கள் விளக்கங்கள் சொன்னார்கள். . . .

**கனம் சபாநாயகர் :** மேலும் அதைப்பற்றிப் பேச வேண்டாம். அதுவே விவாதமாகி விடும்.

* **திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் சபாநாயகர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு குறுவை மகசூல் நல்ல முறையில் இருந்தும், அறுவடை ஆகக்கூடிய தானியத்தை விற்பனை

[திரு. சா. கணேசன்] [19th October 1964

காரணம் குறிப்பிடவில்லை, அல்லது டெஃபனெட் அல்லது ரீசண்டு இல்லை என்ற காரணம் காட்டி தள்ளி விடாமல் பெரிய மனசு பண்ணி, அவசர நிலையையும் அவந்தர நிலையையும் ஏற்றுக்கொண்டு அதைத் தீர்க்க, அதற்கு விமோசனம் கிடைக்கத் தக்க வழி வகை செய்யவேண்டும் என்பதை நாமெல்லோரும் கூடி விவாதிக்கவும், அதற்கு என்னென்ன வகையிலே விமோசனம் கிடைக்க வழி ஏற்படுத்தலாம் என்று ஆராய்வதும் நமது கடமை என்ற காரணத்தினால் இந்தச் சபையின் வேறு அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று உங்கள் சம்மதத்தோடு கொண்டு வந்திருக்கிற ஒத்திவைப்புப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்லம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் இந்த விஷயத்தில் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்வதுபற்றி மிகுந்த மகிழ்ச்சி. அவர்கள் கூறினார்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டதற்குக் காரணம் தெரியாது என்று. அது எனக்கும் தெரியாது. அது மட்டுமல்ல, தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டது என்றும் தெரியாது. ஒரு விவரமும் இல்லை. இந்த நிலையில் ஒரு விவரமும் இல்லாத போது விவாதிப்பதில் பிரயோசனம் இல்லை. கனம் அங்கத்தினர் ஒரு அவசரக் கேள்வி கேட்டால் 24-ம் தேதிக்குள் விடை அளிக்கலாம். அரசாங்கம் விவரங்களைப் பெற்று வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம். இதைத்தான் தங்கள் முன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால் அவசரப் பிரேரணையாக விவாதிக்க இப்போது இடம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**MR. SPEAKER** : The hon. Members Sri M. Karunanidhi, Sri Saw Ganesan, Sri K. R. Nallasivam and Sri M. Kalyanasundaram have given notice of an adjournment motion for discussing a matter of urgent public importance, viz., the shooting of one, Sri Arjunan, at Coimbatore on 17th October 1964.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, சமீபத்திலே நாட்டிலே ஏற்பட்டிருக்கிற உணவு நெருக்கடி குறித்து இங்கு கொண்டுவரப்பட்ட ஒத்தி வைப்புப் பிரேரணைகளையெல்லாம் சபை முதல்வர் அவர்கள் அவருக்கே உரிய திறமையான கணைகளின் மூலம் சமாளித்திருக்கிறார்கள் என்றாலும், இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையை முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்வார்கள் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைத் தந்திருக்கிறேன். சென்னை போன்ற இடங்களிலும், வேறு பல இடங்களிலும் அரிசிக்கு மக்கள் படுகிற கஷ்டங்களை எண்ணி ஒத்தி வைப்புப் பிரேரணைகளில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் தொடர்பாக கோவை நகரில் அரிசி கிடைக்காமல் அல்லலுற்ற மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினார்கள் என்று காரணம் காட்டப்பட்டு ஆறு பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்த ஆறு பேர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நண்பர் அர்ச்சுனன் கலெக்டரிடம் சென்று வாதாடினார்கள். கலெக்டர் அவர்களும் அர்ச்சுனன் வாதாடிய பிறகு அர்ச்சுனனோடு சென்று அங்கே விசாரித்து கலெக்டர் கேட்டுக்



19th October 1964] [திரு. மு. கருணாநிதி]

கொண்டதற்கிணங்க அந்த ஆறு பேர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள். விடுதலை செய்யப்பட்டவர்களை அழைத்துக்கொண்டு சுமார் 2,000 பேர்களோடு எம்.எல்.ஸி. திரு. பொன்னுசாமி அவர்களுடைய வீட்டுக்கு அரிசி சுலபமாகக் கிடைக்க வழி வகை காண வேண்டுமென்று சென்றிருக்கிறார். அன்னார் அந்த நேரத்தில் அங்கே இல்லாத காரணத்தினால், நகர சபைத் தலைவர் திரு. நஞ்சப்பா அவர்கள் வீட்டுக்குச் சென்றிருக்கிறார். அவரும் வீட்டில் இல்லாத காரணத்தினால் ஊர்வலமாகக் கடைத் தெரு வழியாக வரும்போது ஒரு பையனைப் போலீஸ் அதிகாரி நையப் புடைக்கவும், அதைத் தடுத்து 'ஏன் அடிக்க வேண்டும்' என்று திரு. அர்ச்சுனன் கேட்க வாய்த் தகராறு முற்றி, போலீஸ் அதிகாரி பக்கத்தில் இருந்த போலீஸ்காரருடைய துப்பாக்கியை எடுத்துக் கொண்டு சுட்டு விடுவேன் என்று பயமுறுத்த, 'சுட்டுக் கொல்லுங்கள் பார்க்கலாம்' என்று அவர் மார்பைத் திறந்து காட்ட, உடனே அவர் தொண்டைக் குழியண்டை துப்பாக்கி கொண்டு சூடு கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட கொடூரமான காட்டாட்சி தர்பார் நடத்தியிருக்கிறார்கள். திரு. அர்ச்சுனனைச் சுட்டுக்கொன்ற போலீஸ் அதிகாரிக்கும் அவருக்கும் பழைய விரோதம் உண்டு என்று சொல்லப்படுகிறது. திரு. அர்ச்சுனனுக்கு [illegible]தாடும் நேரத்தில், அவர் மது விலக்குக் கொள்கையை [illegible]த்து, சர்க்கார் திட்டத்தை எதிர்த்துப் போராடினார் என்று எல்லோருக்கும் தெரியும். அவருடைய இந்தப் போராட்டத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உடன்பாடுதான் என்ற. . .

**MR. SPEAKER** : This is a matter which may go to a court. Therefore, the hon. Member need not go into the details. Let him be brief.

**திரு. மு. கருணாநிதி :** ஆகவே போலீஸ் அதிகாரி அர்ச்சுனன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய எந்த விதமான வேறு பயங்கர 9-30 a.m.
மான நிலைமையும் ஏற்பட்டு விடவில்லை என்று மிகத் துல்லியமாகத் தெரிகிறது. வேண்டுமென்றே, அர்ச்சுனனைக் கொல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தக் காரியம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. சர்க்கார் இப்படிப்பட்ட போலீஸ் அதிகாரிகளை வளர்ப்பார்களேயானால் அல்லது இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு சர்க்கார் முயலுவார்களேயானால் அதனால் பெரிய பயங்கரங்கள் ஏற்படுவதுடன் கொள்கை மாறுபடுகிற தலைவர்களின் உயிருக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விடும் என்பதினால் இதை ஒரு முக்கிய அவசரப் பிரேரணையாக எடுத்துக் கொண்டு, உடனடியாக ஒரு பொது நீதி விசாரணையை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நீதி விசாரணை நடக்கிற வரையிலும் அந்தப் போலீஸ் அதிகாரியை வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை அங்கீகரிக்க வேண்டும் என்றும், அனுமதிக்க வேண்டுமென்றும் சபையின் முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், மனிதாபிமானத்தின் காரணமாக.

காரணம் குறிப்பிடவில்லை, அல்லது டெம்பனெட் அல்லது ரீசண்டு இல்லை என்ற காரணம் காட்டி தள்ளி விடாமல் பெரிய மனசு பண்ணி, அவசர நிலையையும் அவந்தர நிலையையும் ஏற்றுக்கொண்டு அதைத் தீர்க்க, அதற்கு விமோசனம் கிடைக்கத் தக்க வழி வகை செய்யவேண்டும் என்பதை நாமெல்லோரும் கூடி விவாதிக்கவும், அதற்கு என்னென்ன வகையிலே விமோசனம் கிடைக்க வழி ஏற்படுத்தலாம் என்று ஆராய்வதும் நமது கடமை என்ற காரணத்தினால் இந்தச் சபையின் வேறு அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று உங்கள் சம்மதத்தோடு கொண்டு வந்திருக்கிற ஒத்திவைப்புப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்லம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் இந்த விஷயத்தில் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்வதுபற்றி மிகுந்த மகிழ்ச்சி. அவர்கள் கூறினார்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டதற்குக் காரணம் தெரியாது என்று. அது எனக்கும் தெரியாது. அது மட்டுமல்ல, தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டது என்றும் தெரியாது. ஒரு விவரமும் இல்லை. இந்த நிலையில் ஒரு விவரமும் இல்லாத போது விவாதிப்பதில் பிரயோசனம் இல்லை. கனம் அங்கத்தினர் ஒரு அவசரக் கேள்வி கேட்டால் 24-ம் தேதிக்குள் விடை அளிக்கலாம். அரசாங்கம் விவரங்களைப் பெற்று வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம். இதைத்தான் தங்கள் முன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால் அவசரப் பிரேரணையாக விவாதிக்க இப்போது இடம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** The hon. Members Sri M. Karunanidhi, Sri Saw Ganesan, Sri K. R. Nallasivam and Sri M. Kalyanasundaram have given notice of an adjournment motion for discussing a matter of urgent public importance, viz., the shooting of one, Sri Arjunan, at Coimbatore on 17th October 1964.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, சமீபத்திலே நாட்டிலே ஏற்பட்டிருக்கிற உணவு நெருக்கடி குறித்து இங்கு கொண்டுவரப்பட்ட ஒத்தி வைப்புப் பிரேரணைகளையெல்லாம் சபை முதல்வர் அவர்கள் அவருக்கே உரிய திறமையான கணைகளின் மூலம் சமாளித்திருக்கிறார்கள் என்றாலும், இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையை முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்வார்கள் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைத் தந்திருக்கிறேன். சென்னை போன்ற இடங்களிலும், வேறு பல இடங்களிலும் அரிசிக்கு மக்கள் படுகிற கஷ்டங்களை எண்ணி ஒத்தி வைப்புப் பிரேரணைகளில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் தொடர்பாக கோவை நகரில் அரிசி கிடைக்காமல் அல்லலுற்ற மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினார்கள் என்று காரணம் காட்டப்பட்டு ஆறு பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்த ஆறு பேர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நண்பர் அர்ச்சுனன் கலெக்டரிடம் சென்று வாதாடினார்கள். கலெக்டர் அவர்களும் அர்ச்சுனன் வாதாடிய பிறகு அர்ச்சுனனோடு சென்று அங்கே விசாரித்து கலெக்டர் கேட்டுக்





கொண்டதற்கிணங்க அந்த ஆறு பேர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள். விடுதலை செய்யப்பட்டவர்களை அழைத்துக்கொண்டு சுமார் 2,000 பேர்களோடு எம்.எல்.ஸி. திரு. பொன்னுசாமி அவர்களுடைய வீட்டுக்கு அரிசி சுலபமாகக் கிடைக்க வழி வகை காண வேண்டுமென்று சென்றிருக்கிறார். அன்னார் அந்த நேரத்தில் அங்கே இல்லாத காரணத்தினால், நகர சபைத் தலைவர் திரு. நஞ்சப்பா அவர்கள் வீட்டுக்குச் சென்றிருக்கிறார். அவரும் வீட்டில் இல்லாத காரணத்தினால் ஊர்வலமாகக் கடைத் தெரு வழியாக வரும்போது ஒரு பையனைப் போலீஸ் அதிகாரி நையப் புடைக்கவும், அதைத் தடுத்து 'ஏன் அடிக்க வேண்டும்' என்று திரு. அர்ச்சுனன் கேட்க வாய்த் தகராறு முற்றி, போலீஸ் அதிகாரி பக்கத்தில் இருந்த போலீஸ்காரருடைய துப்பாக்கியை எடுத்துக் கொண்டு சுட்டு விடுவேன் என்று பயமுறுத்த, 'சுட்டுக் கொல்லுங்கள் பார்க்கலாம்' என்று அவர் மார்பைத் திறந்து காட்ட, உடனே அவர் தொண்டைக் குழியண்டை துப்பாக்கி கொண்டு சூடு கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட கொடூரமான காட்டாட்சி தர்பார் நடத்தியிருக்கிறார்கள். திரு. அர்ச்சுனனைச் சுட்டுக்கொன்ற போலீஸ் அதிகாரிக்கும் அவருக்கும் பழைய விரோதம் உண்டு என்று சொல்லப்படுகிறது. திரு. அர்ச்சுனனுக்காக வாதாடும் நேரத்தில், அவர் மது விலக்குக் கொள்கையை எதிர்த்து, சர்க்கார் திட்டத்தை எதிர்த்துப் போராடினார் என்று எல்லோருக்கும் தெரியும். அவருடைய இந்தப் போராட்டத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உடன்பாடுதானா என்ற . . .

**Mr. SPEAKER :** This is a matter which may go to a court. Therefore, the hon. Member need not go into the details. Let him be brief.

**திரு. மு. கருணாநிதி :** ஆகவே போலீஸ் அதிகாரி அர்ச்சுனன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய எந்த விதமான வேறு பயங்கர 9-30 a.m.
மான நிலைமையும் ஏற்பட்டு விடவில்லை என்று மிகத் துல்லியமாகத் தெரிகிறது. வேண்டுமென்றே, அர்ச்சுனனைக் கொல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தக் காரியம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. சர்க்கார் இப்படிப்பட்ட போலீஸ் அதிகாரிகளை வளர்ப்பார்களேயானால் அல்லது இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு சர்க்கார் முயலுவார்களேயானால் அதனால் பெரிய பயங்கரங்கள் ஏற்படுவதுடன் கொள்கை மாறுபடுகிற தலைவர்களின் உயிருக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விடும் என்பதினால் இதை ஒரு முக்கிய அவசரப் பிரேரணையாக எடுத்துக் கொண்டு, உடனடியாக ஒரு பொது நீதி விசாரணையை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நீதி விசாரணை நடக்கிற வரையிலும் அந்தப் போலீஸ் அதிகாரியை வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை அங்கீகரிக்க வேண்டும் என்றும், அனுமதிக்க வேண்டுமென்றும் சபையின் முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், மனிதாபிமானத்தின் காரணமாக.

[19th October 1964

* திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, சம்பவம் நடந்த இடம் விவரமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தகராறுக்கு முதல் அடிப்படை உணவு தானியம் தருகிற இடத்தில் ஏற்பட்ட கட்டம் என்பது தெரிகிறது. உணவு தானியம் வாங்கச் செல்கிற மக்கள், க்யூவில் நிற்கிற பொதுமக்கள், ஆவலோடு ஆர்வத்தோடு முண்டியடித்துக்கொண்டு இருப்பது இயல்பு. அதைப் போலீசார் சாமார்த்தியமாக சமாளித்திருக்க வேண்டும்; சமாளித்திருக்கலாம்; முதலிலே போலீசார் இதைச் சமாளிக்கத் தவறியிருக்கிறார்கள் என்பது நிச்சயம். சம்பவம் நடந்த இடம் வைசியாள் வீதி என்று தெரிகிறது. அங்கேயுள்ள பி-1 போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னரே தான் சுட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளே மக்கள் கூட்டம் சென்றதாக எந்த வகையிலும் நமக்குச் செய்தி கிடைக்கவில்லை. சுட்ட இடம் தெருவின் நடுமத்தி என்று நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் பத்திரிகையிலே பார்த்தார்களா ?

திரு. சா. கணேசன் : பத்திரிகையிலே வந்ததையும் பார்த்தேன். ஆனால், எங்களுக்கு நேரடியாக வந்த செய்திகளையும், பத்திரிகையில் வந்ததையும் வைத்துக்கொண்டுதான் நான் பேசுகிறேன். சுடப்பட்ட பகுதியோ தொண்டைக்கு சமீபம் என்று பத்திரிகையிலே சொல்லப்பட்டிருக்கிறது. வந்த செய்தியோ தொண்டையிலே சுடப்பட்டது என்று சொல்லுகிறது. முன் எச்சரிக்கையாக சுடுவதற்கு என்னென்ன முறைகள் உண்டு என்பதெல்லாம் நமது நிர்வாக உத்திரவுகளிலும் விதிகளிலும் இருக்கின்றன. திடீரென்று முதல் குண்டே ஒரு மனிதனின் தொண்டைக்குப் போகிறது— சமீபமாகவே என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம்— அது பாய்ந்தவுடனேயே, அந்த ஆள் காலமானார் என்று செய்தி வருவது எவ்வளவு பயங்கரமானது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்தக் கட்சியையும் குறைகூறுகிற வகையிலே நான் இதைச் சொல்லவில்லை. போலீஸ் அதிகாரிகள் முறை தவறியிருக்கிறார்கள் என்று கூடச் சொல்லவில்லை இப்பொழுது தவறு செய்யவில்லையென்றும் சொல்லவில்லை. என்ன நிலைமை என்பதை சர்க்கார் நன்றாக விசாரிக்கவேண்டும். தீர விசாரித்துப் பார்த்த பிறகு முடிவு கட்டவேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தத் தீர்மானத்தை நான் கொண்டுவந்திருக்கிறேன். ஜனங்கள் திடீரென்று வந்து போலீஸ் ஸ்டேஷனையும் அந்தப் பகுதியையும் ஏதோ ராணுவ சூழ்ச்சித் தந்திரங்கள் என்று சொல்வார்களே, அதுபோல் வளைத்துக்கொண்டு சக்ர வியூகம் வகுத்து முற்றுகையிட்டு விட்டார்கள் என்பது இல்லை என்று நன்றாகத் தெரிகிறது. உணவுப் பண்டம் வினியோகம் செய்த இடத்தில் கைது செய்யப்பட்டவரை கலெக்டர் வந்து மேற்படி அர்ஜுனன் முயற்சியின் மீது விடுதலை செய்தார். அங்கிருந்து புறப்பட்டு வெற்றி ஊர்வலமாக ஜனங்கள் வருவதாகவும் செய்தித் தாளில் போடப்பட்டிருக்கிறது. ஜனங்கள் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் என்றும் தெரிகிறது. இப்படிப்பட்ட நிலையில் போலீஸும் அங்கேயுள்ள ரெவின்யூ அதிகாரிகளும் முன்னெச்சரிக்கையாக ஏன் தக்க நடவடிக்கை எடுத்துக்



19th October 1964] [திரு. சா. கணேசன்]

கொண்டு எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்காமல் கண்காணித்துக் கொள்ளவில்லை என்பதை நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிந்தித்துப்பார்த்து, எந்த வகையிலே, எங்கே, என்ன தவறு இருக்கிறது ? எப்படிப்பட்ட தவறு ? யார் தவறு செய்திருக்கிறார்கள் ? இவற்றை எல்லாம் கண்டுபிடிக்கவேண்டும். கண்டுபிடித்து தக்க முறையில் நீதி கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்கான முயற்சிகளிலே நாம் முனைய வேண்டுமென்பதற்காகத் தான் இந்த சபை மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து இந்த அவசரமான, முக்கியத்துவமுள்ள, விஷயத்தைப்பற்றி வாதம் செய்யவேண்டுமென்று நான் சபாநாயகர் அவர்களை அனுமதி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை கொண்டுவந்திருப்பதன் நோக்கம் என்னவென்றால் இந்தச் சம்பவம் நன்றாக விசாரிக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான். ஒரு நீதிபதியை நியமித்து விசாரிக்கப்பட வேண்டிய சம்பவம் இது. ஏனென்றால் துப்பாக்கி சூடு தற்காப்புக்காக செய்யப்பட்டது என்று சொல்லப்படுகிறது. தற்காப்புக்காக செய்யப்பட்டது என்று சொன்னால் முதலிலேயே தொண்டைக் குழியிலே சுடவேண்டிய அவசியமில்லை. முழங்காலுக்குக் கீழே சுட்டுப் பார்த்திருக்கலாம். முதலில் சுட்டதே தொண்டைக் குழியில் பாய்ந்து ஆள் இறந்திருக்கிறார். மேலும், எங்களுக்கு நேரடியாக சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன. சுடப்பட்ட அர்ஜுனன் என்பவர் சேலம் நகரத்தைச் சேர்ந்தவர். 1952-1957-ல் இந்தச் சட்டசபையில் அங்கத்தினராகவிருந்த திரு. பி. ரத்தின சபாபதிப் பிள்ளையின் நெருங்கிய உறவினர். நேற்று தகவல் கிடைத்தபிறகு சென்னையிலிருந்து அவர் அங்கே போயிருக்கிறார். அவரைச் சந்தித்து நான் பேசினேன். இந்த அர்ஜுனன், தெரிந்தோ தெரியாமலோ போலீஸ் இலாகாவைப் பகைத்துக் கொண்டு விட்டார். கடைசி காலத்தில் அவருக்கு என்ன எண்ணம் ஏற்பட்டுவிட்டது என்றால் இந்தப் போலீஸ் இலாகாவிலே தன்னைத் தவிர யோக்கியன் கிடையாது என்ற நினைப்பு அவருக்கு ஏற்பட்டு விட்டது. எந்தப் போலீஸ் அதிகாரியும் தன்மீது குற்றஞ்சாட்டுவதற்கு அருகதையற்றவர் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டு விட்டது. மேலும், இந்தப் போலீஸ் இலாகாவிலே லஞ்ச ஊழலுக்கு முக்கிய காரணம் மதுவிலக்குச் சட்டம் என்பது அவரது எண்ணம். மதுவிலக்குக்கு அவர் எதிரியல்ல. ஆனால் அதை அமல் செய்யும் பொறுப்பு போலீஸ் இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதினால், போலீஸின் தரமும் ஒழுக்கமும் கெட்டு விட்டது என்று நினைத்து ஒரு வெறி பிடித்த நபராகி விட்டார். அவர் சமூக விரோதியல்ல. இவ்வாறு அவர் போலீஸ் இலாகாவைப் பகைத்துக் கொண்டுவிட்டதினால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவரை ஒழிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது, என்பது எனது அனுமானம். மற்றவர்களின் அனுமானமும் அதுதான். ஆகவே, ஒரு நீதிபதியை நியமித்து . . .

[19th October 1964

MR. SPEAKER : What is the use of making such allegations against the Police on the basis of suspicion? These are all matters for investigation. Whether or not the opportunity was availed of to kill the ex-Sub-Inspector of Police is a matter for investigation.

***திரு. மீ. கலியாணசுந்தரம் :*** அந்த இன்வெஸ்டிகேஷனை யார் நடத்துவது என்பதுதான் பிரச்னை. ஆர்.டி.ஓ. அவர்கள் மாமூலாக விசாரணை செய்வதுபோல் நடத்தினால் சரியான விவரங்கள் கிடைக்காது. மேலும், ஆர்.டி.ஓ. இலாகாவின் அதிகாரி. ஆகவே, அவரைக்கொண்டு விசாரிப்பது சரியாக இருக்காது. ஜில்லா நீதிபதி அந்தஸ்து உடைய ஒருவரைக்கொண்டு பகிரங்க விசாரணைக்கு ஏற்பாடு செய்தால்தான் நாட்டில் சட்டமும் அமைதியும் ஒழுங்காக நடத்தப்படும் என்ற நம்பிக்கை மக்களுக்குக் கிடைக்கும். துணிந்து மக்களுக்கு இருக்கக்கூடிய குறைகளை அதிகாரிகளிடத்தில் சொல்வதற்குத் தைரியம் வரவேண்டும். ஜனநாயக ஆட்சியில் மக்களின் குறைகளை எடுத்துச் சொன்னால் தான் அரசாங்கம் அவற்றைப் புரிந்துகொள்ள முடியும், அவற்றிற்கு பரிகாரம் தேடமுடியும். குறைகளைக்கூட சொல்லமுடியவில்லை யென்றால் அராஜகமும் ஒழுங்கீனமும்தான் ஏற்படும். அதிகாரிகளைப் பார்த்து குறைகளைச் சொல்வதற்கான சந்தர்ப்பமே தடை செய்யப்பட்டுவிட்டால் அது பிற்காலத்தில் மிகவும் அபாயகரமாக முடியும். ஆகவே, ஒரு நீதிபதியை வைத்து விசாரணை நடத்த வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஓரளவுக்கு இது அரசாங்கத்தின் கையைப் பலப்படுத்தும். இந்தச் சபையின் மூலமாக அரசாங்கத்தின் கவனத்திற்கு இதைக்கொண்டுவந்தால் அரசாங்கம் ஒரு நீதிபதியை நியமித்து விசாரணை நடத்துவதற்கு உத்திரவிடவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதற்காகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன்.

**** திரு. க. ர. நல்லசிவம்:*** கனம் சபாநாயகர் அவர்களே, சுடப்பட்ட சப் இன்ஸ்பெக்டரையும் சுட்ட சப் இன்ஸ்பெக்டரையும் எனக்கு நன்றாகத் தெரியும். இரண்டு பேரும் என்னுடைய தாலூகாவில் இருந்தவர்கள். ஒரு விஷயத்தை மட்டும் நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சுட்ட சப் இன்ஸ்பெக்டர் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு . . .

MR. SPEAKER : The hon. Member need not go to deep into the matter, as it is likely to go to a Court of law.

***திரு க. ர. நல்லசிவம்:*** சம்பவம் நடந்த இடம் ஒரு பெரிய ரோடு அல்ல. 75 அடியிலிருந்து 100 அடிக்குள் உள்ள ஒரு ரோடு. அங்கே இருந்த கூட்டம் சுமார் 5,000 அல்லது 6,000 பேர் இருக்கலாம் என்று பத்திரிகையிலே போடப்பட்டிருக்கிறது. ஆனால், சுமார் 200 அல்லது 300 பேர்கள் தான் அர்ச்சுனன் உடன் போயிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் யாரோ இரண்டு பேர் கோஷம்



19th October 1964] [திரு. க. ர. நல்லசிவம்]

போட்டிருக்கிறார்கள். சப் இன்ஸ்பெக்டர் முத்துசாமி ஏதாவது ஈரோயிஸம் பண்ண வேண்டுமென்று நினைத்திருக்கிறார். சத்தம் போட்ட ஆட்களை உதைத்திருக்கிறார். அப்பொழுது உள்ள சப்-இன்ஸ்பெக்டருக்கும் அர்ஜுனனுக்கும் நேரடியாக மோதல் ஏற்பட்டிருக்கிறது. பழைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் இப்பொழுது வேலையில் இருக்கும் சப் இன்ஸ்பெக்டர் இவ்வாறு செய்திருக்கிறார் என்று தெரிகிறது. இரண்டாவது, முன்பிருந்த சமாச்சாரத்தையும் சேர்த்து சில விவரங்களை சொல்ல விரும்புகிறேன். அதாவது முன்பிருந்த கோபத்தின் காரணமாக சொந்தமாக பழி தீர்த்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக, சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்தவிதமாக சுட்ட சப் இன்ஸ்பெக்டர் இப்போது ஆசுபத்திரியில் அனுமதிக்கப் பட்டிருப்பதாக தெரிகிறது. இந்த நிலைமையில் ஜில்லா ஜட்ஜ் அந்தஸ்துக்குக் குறையாத ஒருவர் மூலமாக ஒரு பொது விசாரணை நடத்துவது தான் பொருத்தமாக இருக்கும். ஆகவே, இது குறித்து விவாதிப்பதற்காக இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, அர்ச்சுனன் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியை நேற்றுக் காலையில் தான் முதல் முதலாகப் பார்த்தேன். அதன் பிறகு போலீஸ் ஐ.ஜி. அவர்கள் இந்த விவரங்களை எல்லாம் சேகரித்து கூறினார்கள். இப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கு சொன்ன விவரங்கள் எல்லாம் சரியல்ல என்பதை முதலில் கூறிக்கொள்கிறேன். கோஷ்டியாகச் சென்று போலீஸ் ஸ்டேஷனைப் போய்த் தாக்க முயன்ற போது தற்காப்புக்காகச் சுட்டிருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனில் இருக்கக்கூடிய ஆயுதங்களை எல்லாம் பறித்துக்கொண்டு போக வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்திருக்கிறார்கள். இது ஆபத்தானது, மேலும் பல ஆபத்தான நடவடிக்கைகளில் இறங்கக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாக தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தோடு சுட்டிருக்கிறார். போலீஸ் அதிகாரிகள் தங்களை எந்த முறையில் எல்லாம் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. 'ஸெல்ஃப்டிஃபன்ஸ்' என்ற முறையில் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. அந்த முறையில் தான் இங்கு சுடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவ்விதம் சுட்டது சரி என்று நான் இப்போது சொல்லவில்லை. அரசாங்க முறைப்படி கோயம்புத்தூர் ஜாயின்ட் கலக்டர் அவர்கள் இதைப்பற்றி விசாரணை செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஜாயின்ட் கலக்டர் இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வார். விசாரணையும் முறையாக நடக்கும். இதில் எந்த விதமான மோட்டிவ் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜாயின்ட் கலக்டர் என்று போட்டிருப்பது போதாது, ஜில்லா ஜட்ஜ் தான் இருக்க வேண்டும் என்று எதிர்கட்சியினர் சொல்வதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. உடனடியாக ஜாயின்ட் கலெக்டரிடம் இதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

[திரு. எம். பக்தவத்சலம்] [19th October 1964

மேலும் போலீஸ் ஐ.ஜி. கோயம்புத்தூருக்குச் சென்றிருக்கிறார்கள். மேலும் வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. ஜாயின்ட் கலக்டர் ரிப்போர்ட் அனுப்பிய பிறகு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்பதைப் பற்றி முடிவு எடுக்க முடியும். இந்த நிலைமையில் இப்பிரச்னை அவசரப் பிரேரணைக்குரியது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு சா. கணேசன்:** அரசாங்கம் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொள்கிறோம். இதற்காக நடைபெறும் விசாரணையில் சம்பந்தப்பட்ட போலீஸ், அல்லது நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கிற கலக்டர் இவர்கள் ஈடுபடுத்தப்பட்டால் உண்மையான விசாரணையாக இருக்குமா என்கின்ற அச்சம் தான் எல்லோருக்கும் இருக்கிறது. ஆகவே ஜில்லா ஜட்ஜ் அந்தஸ்துக்குக் குறையாத அளவில் ஒரு நீதிபதியை நியமித்து விசாரணை நடத்துவது சிறந்ததாக இருக்கும் என்பதை உங்கள் மூலம் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் முன்பு சொன்னதைத் தான் இப்போதும் சொல்கிறார்கள்.

**திரு சா. கணேசன்:** ஆம்; முன்பு சொன்னது ஏற்றுக்கொள்ளப்பட்டால் மீண்டும் அதைச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. மீண்டும் மீண்டும் சொன்னாலாவது அரசாங்கம் ஏற்றுக்கொள்ளமாட்டாதா?

**கனம் மீ. கலியாணசுந்தரம்:** கனம் முதலமைச்சர் அவர்கள் மிகவும் சிரமப்பட்டு இந்த விவரங்களை எல்லாம் சேகரித்திருப்பதாகச் சொன்னார்கள். . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சிரமப்பட்டு சேகரிக்கவில்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இந்த விவரங்கள் எல்லாம் போலீஸ் அதிகாரிகள் வயர்லெஸ் மூலம் அனுப்பியிருப்பார்கள். ஒரே ஒரு குண்டு தான் வெடித்திருக்கிறது, உடனே செத்துப் போயிருக்கிறான். உண்மையிலேயே ஜனங்கள் போலீஸ் ஸ்டேஷனைத் தாக்க வேண்டும் என்ற நோக்கம் இருந்தால் ஒரு குண்டு வெடித்தவுடனேயே போயிருக்க மாட்டார்கள் . . . .

MR. SPEAKER : The Hon. Member Sri M. Kalyanasundaram, should not go into the details.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஜனங்கள் அக்ரஸிவ்-வாக இல்லை என்பதைத் தான் சொல்ல விரும்புகிறேன். அக்ரஸிவ்-வாக இருந்தால் உடனே கலைந்து போயிருக்க மாட்டார்கள் என்கின்ற உண்மையைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

MR. SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram is assessing the situation. He should not go into the merits of the case.



19th October 1964]

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கேஸின் உள்ளே போய் நான் ஒன்றும் சொல்லவில்லை. போலீஸ் இலாகாவுக்கு இருந்த எண்ணத்தை மட்டும் தான் சொல்லவிரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர்:** பப்ளிக் ஒரு பக்கம், போலீஸ் ஒரு பக்கம். இன்னொன்று விசாரணைக்கு ஜட்ஜ் போட வேண்டும் என்பது, போலீஸ் அதிகாரிகளோ அல்லது கலெக்டரோ போதாது என்பது இதைத்தான் நான் பரிசீலிக்கவேண்டும். . .

SRI M. KALYANASUNDARAM : The Police department as a whole has got a grievance against Sri Arjunan.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : An enquiry by the Joint Collector has been ordered.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இதற்கான விசாரணை செய்வது போலீஸ் அதிகாரிகளோ, கலெக்டரோ கூடாது என்பது தான். ஜட்ஜ் அளவில் விசாரணை நடக்கவேண்டும் என்பதுதான் இதிலுள்ள கோரிக்கை.

MR. SPEAKER : The hon. Member, Sri M. Kalyanasundaram, has stated that the investigation by the Joint Collector is not sufficient. The Government say that they are not prepared to accept the suggestion of the hon. Member

**திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த சம்பவம் போலீஸ் ஸ்டேஷனில் நடந்திருப்பதால் அங்குள்ள மக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதைப்பற்றி ஒரு பொது விசாரணை நடத்துவதுதான் உகந்ததாக இருக்கும் என்பதையும் கூறி, அதற்காக இந்தத் தீர்மானத்தை அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். போலீஸ் விசாரணையோ அல்லது கலக்டர் விசாரணையோ நமக்கு உதவியாக இராது, ஆகவே நீதிபதி கொண்ட விசாரணை தான் நியாயமானதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member, Sri K. A. Mathialagan, states that he is not satisfied with the enquiry made by the Joint Collector or the Inspector-General of Police.

**திரு. மு. கருணாநிதி:** பொதுவான நீதி கிடைக்கவேண்டும் என்றால் போலீஸ் அதிகாரிகள் இந்த விசாரணை நடத்துவதாலோ அல்லது கலக்டர் அளவில் இந்த விசாரணை நடத்துவதாலோ கிடைக்காது. ஆகவே நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்துவது தான் பொருத்தமாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். பொதுமக்களுக்கு அப்போதுதான் ஒரு நம்பிக்கை ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** பொது மக்கள் இரண்டு பக்கமும் இருப்பார்கள். ஒரு பக்கம் தான் இருப்பார்கள் என்று சொல்வதற்கில்லை . . .

[19th October 1964

SRI M. KALYANASUNDARAM : Sir, the enquiry conducted as a whole should inspire confidence among the people.

MR. SPEAKER : How can we decide it? There may be people who will say that the witnesses were aggressive. Some may say that the other side was aggressive. We cannot take anything for granted. The opinion of the public is there. I do not want to express anything more on that point.

SRI M. V. KARIVENGADAM : The Hon. Chief Minister stated that in exercise of self-defence the shooting was resorted to. The quantum of force to be used must be proportionate for averting the danger. In this particular case, the Sub-Inspector of Police might or might not have exceeded his right or self defence. If he had exceeded his limits he would be guilty. So the proper course would be to order for a judicial enquiry.

MR. SPEAKER : The question of facts and law would have to be examined after the enquiry.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, போலீசார் விசாரணை செய்வதில்லை. ஜாயின்ட் கலக்டர்தான் விசாரணை செய்கிறார். ஆர்.டி.ஓ. கூட இதில் போடவில்லை. நேற்று கனம் கலியாணசுந்தரம் அவர்களுடைய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போது சொன்னேன் முன்பு ஒரு சம்பவத்தில் போலீசார் அத்துமீறி நடந்து கொண்டவர் என்று இதைப்பற்றி விசாரணை செய்த ஆர். டி.ஓ. கருத்து தெரிவித்திருந்தார் அதற்கு மேல் அந்த ரிப்போர்ட்டின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட இலாகா நடவடிக்கை எடுத்துக்கொண்டது. இப்படியெல்லாம் நடந்துகொண்டு வருகிறது. ஆகவே ஆர்.டி.ஓ வோ அல்லது ஜாயின்ட் கலக்டரோ விசாரணை செய்தால் சரியாக இராது, இவர்கள் நீதி வழங்க மாட்டார்கள் என்று நினைப்பது சரியல்ல, தவறும் கூட என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவம்:** பிரேத விசாரணை நடத்திய ஜில்லாக் கலக்டர் அவர்கள் சுட்டது நியாயமாகத்தான் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பிரேத விசாரணையில் நியாயமாகத் தான் சுட்டிருக்கிறார் என்று மட்டும் தான் தெரிவிக்கப் பட்டது.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சியைப் பற்றி நாங்கள் எடுத்துக்கூறிய விவரங்களைச் சரியானது என்று கனம் முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவை சரியான தகவல் இல்லை என்று கூறுகிறார்கள். அதுமாத்திரம் அல்ல, இதுவரை தனக்குக் கிடைத்த தகவல்தான் சரியானவை என்று சொல்கிறார்கள். நேற்று ஐ.ஜி. அவர்கள் விடுத்த அறிக்கைப் படி பொதுஜனங்கள் துப்பாக்கிகளைக் கைப்பற்றுவதற்காக



19th October 1964] [திரு. மு. கருணாநிதி]

ஸ்டேஷனுக்கு வந்தார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால் ஏற்பட்ட அச்சத்தின் காரணமாகத்தான் நாங்கள் பொது விசாரணை நீதிபதி விசாரணையாக இருக்க வேண்டுமென்று கோருகிறோம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** நேற்று என் கேள்விக்கு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த பதில் பற்றிக் குறிப்பிடும்பொழுது அவருடைய கருத்துக்கு மாறுபட வேண்டியிருப்பதற்காக வருந்துகிறேன். ஒரு குறிப்பிட்ட போலீஸ் அதிகாரியைப் பற்றி குறைகூறி, அவர் ஜனங்கள் மீது ஆத்திரப்பட்டு . . .

MR. SPEAKER : Whatever that may be, yesterday we were talking about the Revenue Divisional Officer holding an enquiry and finding fault with the Police officers. So, there is no room for thinking that the Joint Collector will go wrong.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அந்த சம்பவமும் சூழ்நிலையும் வேறு. உயர்தர அதிகாரிகளுக்கு இதில் அக்கறை இல்லை. ஜனங்கள் துப்பாக்கிகளைக் கைப்பற்ற முயற்சித்தார்கள் என்று சொல்லப் படுகிறது. இது சம்பந்தமாக கலெக்டரை வைத்து விசாரணை செய்ய அரசாங்கம் ஒத்துக்கொள்கிறது. ஆனால் நாங்கள் கோருவது நீதிபதி விசாரணை செய்யவேண்டுமென்பது. அதை மறுப்பதனால் அரசாங்கத்திற்கு நீதிபதி மீது நம்பிக்கை இல்லையா என்ன?

MR. SPEAKER : There is no question of lack of confidence in the judiciary but the difficulty is that it will mean that there is no confidence in the Collector or Joint Collector.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கலெக்டரைப் போட்டு விசாரணை நடத்தவில்லையென்றால் கலெக்டர் ராஜினமா செய்துவிடுவாரா என்ன? கலெக்டர் என்ன சர்க்காரை 'என் மீது நம்பிக்கை இல்லையா? என்று கேட்க முடியுமா? கேட்கத்தான் செய்வாரா? கலெக்டர் அரசாங்கத்திற்கு நோட்டீஸ் கொடுத்துவிடுவாரா?

MR. SPEAKER : Not that the Collector can question the Government. It is not like that.

**திரு சா. கணேசன்:** தலைவர் அவர்களே, எல்லோருக்கும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கும் ஒரு நீதிபதியை போட்டு விசாரிப்பது நஷ்டமா, கஷ்டமா அல்லது மானபங்க உணர்ச்சிகூட வந்துவிடுமா என்ன? அதை ஒத்துக்கொள்வதில் ஒன்றும் சிரமம் இருக்காது என்று நினைக்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** யார் ஒத்துக் கொள்வது? சர்க்காரா அல்லது சபைத் தலைவரா?

**திரு மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எங்கள் கோரிக்கையை கனம் முதலமைச்சர்தான் மறுக்கிறார் என்றால் தலைவர் அவர்களும் எங்கள் கோரிக்கையை மறுப்பது அவ்வளவு சரியாக இல்லை (எதிர்க்கட்சி மேஜையை தட்டினர்) என்று கருதுகிறேன்.

[19th October 1964

MR. SPEAKER : Considering all the points discussed in the House, I have to disallow the motion on merits.

SRI M. KALYANASUNDARAM : In fact, your interruptions have helped us to make our case stronger.

MR. SPEAKER : That is not the position. The hon. Members who spoke say that the Chair should allow a discussion on the subject immediately. We are emotional on this matter; of course, we will be. Because we are representatives of the people, we will necessarily be emotional but we will have to function according to rules and laws.

The shooting had taken place in or near a police station. A person who was supposed to be the leader of a section of the people had gone there with 1,000 or 2,000 people and the Sub-Inspector of Police shot him and that person died. Necessarily the man who shot, will say that he shot that person in self-defence. But the hon. Members, who took part in the discussion, say that he has exceeded his powers. Therefore, this is a question of law and facts and it has to be investigated. Now the question is : who should investigate? Should it be by the Collector or the Joint Collector or straightaway by a Sessions Judge? The hon. Members who spoke want a judge to enquire into the matter. The Government cannot say that they have no confidence in the Joint Collector or Revenue Divisional Officer and that the matter should go immediately to the Sessions Judge. They have got confidence in their officers and they have asked them to enquire about it. That is the position. Under these circumstances, I want to make the position clear to the hon. Members, not that I am answering all those questions. Straightaway I can say that the matter involves nothing more than the ordinary administration of the law. I could say, on the fact of it, that this is an administrative matter relating to maintenance of law and order and therefore, there is no room for discussing it as an adjournment motion. But since it is a matter of definite importance and it is a sensational one—we, as representatives of the people are a bit emotional—I have given the utmost consideration to it, though ordinarily I do not allow hon. Members to talk at this stage. I am driving home the point only to know the facts. I have not stated that this is right or that is right. But how can the Government come to the conclusion that the Collector or the Joint Collector will not do justice or conduct the investigation properly, as it will mean that the Government have no confidence in the officers of the Department?

SRI M. KALYANASUNDARAM : It can only mean that the Opposition want a better method of enquiry and there is no question of confidence.

MR. SPEAKER : The Opposition want a better method of enquiry. The Government think that this also is a better method of enquiry. Under these circumstances, it is not a matter for an adjournment motion.



19th October 1964]

SRI M. KALYANASUNDARAM : According to us, it is a cold-blooded murder.

SRI M. KARUNANITHI : What is the ruling?

MR. SPEAKER : This is not a matter for an adjournment motion, and therefore the consent is withheld.

*திரு மு. கருணாநிதி:* தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்புக்குத் தலைவணங்க கட்டுப்பட்டு இருக்கிறோம். கனம் முதலமைச்சர் அவர்கள் மனிதாபிமானத்தோடு நீதிபதி கொண்ட பொது விசாரணை செய்யவேண்டுமென்ற எங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினாலும், அப்படி நீதி விசாரணை காலம்வரை வேலையிலிருந்து சம்பந்தப்பட்ட அதிகாரியை விலக்கி வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாததாலும், இந்த அவசரப் பிரேரணைக்கு, அதில் கண்ட கோரிக்கைகளுக்கு அவர் ஒத்துக்கொள்ளாததாலும், அந்தப் போக்கை வன்மையாகக் கண்டிக்கும் வகையில் இந்தச் சபையை விட்டு வெளி நடப்புச் செய்ய வேண்டிய அவசியத்திற்கு ஆளாகியிருக்கிறோம்.

*(எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எல்லோரும் சபையை விட்டு வெளியேறினர்.)*

MR. SPEAKER : I have disallowed the adjournment motions of Sri Mathialagan and Sri Rama Arangannal. They do not relate to a specific matter and the general question can be discussed in the discussion on the No-Confidence Motion.

Regarding the notice of an adjournment motion given by the Hon. Member, Sri Saw Ganesan, the Government will have to get information and take suitable action. He may give notice of a short notice question. Therefore, I disallow it. With regard to the notice given by the hon. Member, Sri A. K. Subbiah also, I disallow it.

### IV.—DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1961-62 PRESENTATION.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, 1961-62-ம ஆண்டில் ஏற்பட்ட அதிகச் செலவுகளுக்கான 10-00 a.m.
மானியக் கோரிக்கைகளின் அறிக்கையை நான் சபை முன் சமர்ப்பிக்கிறேன். சில மானியங்களின் கீழ் இறுதியாக அனுமதித்த தொகைகளுக்கும் மேலாக செலவாகியிருப்பது தெரிய வந்தது. பற்பல தலைப்புகளின்கீழ் ஆன அதிகச் செலவினங்களின் மொத்தத் தொகை சுமார் 3 கோடியே 98 லட்சம் ரூபாயாகும். இந்த அதிகச் செலவிற்கு இப்போது சட்டப் பேரவையின் அனுமதி கோரப்படுகிறது. ஒவ்வோர் செலவினத்தின்கீழும் அதிகச் செலவு ஏற்பட்டதற்கான காரணங்கள் விபரமாக இம் மானியக் கோரிக்கைகளின் இணைப்பில் விளக்கப்பட்டுள்ளன.

1963-64 ம் ஆண்டிற்குரிய பொதுக் கணக்குக் குழுவினர் அதிகச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பின்னர், 1961-62-ம் ஆண்டில் தமிழ்நாடு அரசாங்கக் கணக்குகள் பற்றிய

[திரு. எம். பக்தவத்சலம்] [19th October 1964

அறிக்கையின் 30-வது பாராவில், இந்தச் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளைச் சட்ட மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்துள்ளனர். அதற்கேற்ப 1961-62-ம் ஆண்டிற்குரிய அதிகச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிக்கை இப்போது சமர்ப்பிக்கப்படுகிறது.

1961-62-ம் ஆண்டிற்குரிய அதிகச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிக்கையை இம் மன்றம் ஏற்றுத் தன் இசைவினை நல்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## V.—SECOND SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1964-65—PRESENTATION.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டின் இரண்டாவது துணை மதிப்பீடுகளை தங்கள் முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன். இதுபற்றி, பல்வேறு மானியக் கோரிக்கைகளை விளக்கும் விவர அறிக்கை ஒன்று மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கைகளின் மொத்த மதிப்பு சுமார் 5 கோடியே 25 லட்சம் ரூபாய் ஆகும். இதில் சுமார் 3 கோடியே 67 லட்சம் ரூபாய் ரெவினியூ கணக்கிலும், 1 கோடியே 58 லட்சம் ரூபாய் மூலதனம்-கடன் கணக்குகளிலும் அடங்கும். இம்மன்றத்தின் முன் தற்போதுள்ள துணை மதிப்பீடுகளில் பெரும்பாலானவை நடப்பு ஆண்டில் அரசாங்கம் அனுமதி அளித்த "புதுப் பணித்" திட்டங்கள் பற்றியனவாகும். அத்துடன் முன்பு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பெற்ற நிதியைவிடக் கூடுதலாகச் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படும் சில மானியங்களின்கீழ் கூடுதல் நிதியைக் கேட்டுப் பெறவும் இவ்வாய்ப்பனைப் பயன்படுத்திக் கொண்டுள்ளேன்.

2. இந்த துணை மதிப்பீடுகளில் உள்ள முக்கியமான கூடுதல் செலவினங்களில் ஒன்று, அண்மையில் அரசாங்கத்தாரால் அறிவிக்கப்பட்ட அகவிலைப்படியின் உயர்வைப் பற்றியதாகும். இச் செலவினத்திற்காகச் சட்டமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. கடந்த மே மாதத்தில் அகவிலைப்படி வீதங்களை முதல் தடவையாக உயர்த்தி, அதனால் ஏற்பட்ட கூடுதல் செலவிற்காக, முதல் துணை மதிப்பீட்டில் அடையாள மானியம் ஒன்றைப் பெற்றதை கனம் அங்கத்தினர்களுக்கு நன்கு நினைவிருக்கலாம். மத்திய அரசாங்கப் பணியாளர்களின் அகவிலைப்படி வீதங்கள் உயர்த்தப்பட்டிருப்பதை யொட்டி, நாமும் இவ்வாண்டு செப்டம்பர் முதல் தேதியிலிருந்து, அதாவது அக்டோபர் முதல் தேதி வழங்கப்படும் செப்டம்பர் மாதச் சம்பளத்திலிருந்து இந்த அகவிலைப்படி வீதங்களை மேலும் உயர்த்தியுள்ளோம். இந்த உயர்வு முன்போலவே ஆசிரியர்களுக்கும், தல ஸ்தாபன ஊழியர்களுக்கும் கிடைக்கும் வகையில் அளிக்கப்பட்டுள்ளது. அகவிலைப்படி



19th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

உயர்வு சம்பந்தமான விவரங்களைத் துணை மதிப்பீட்டின் 32-வது பக்கத்தில் காணலாம். இதன்படி மாநில அரசாங்கப் பணியாளர்களின் அகவிலைப்படி வீதங்கள், அவர்களுக்கு நிகரான மத்திய அரசாங்கப் பணிகளில் உள்ளவர்களுக்கான வீதங்களுக்குச் சமமாக இருக்கும். குறிப்பாக, ரூ. 90 முதல் 109 வரை சம்பளம் பெறும் பணியாளர்களைப் பொறுத்தமட்டில் இந்த வீதங்கள் அதே நிலையிலுள்ள இந்திய அரசாங்கப் பணியாளர்களுக்குரிய வீதங்களைவிட சற்று கூடுதலாகவே இருக்கும். நடப்பு நிதி ஆண்டில் அகவிலைப்படியை இரண்டு தடவை உயர்த்தியதால், ஆண்டு ஒன்றுக்கு 3 கோடியே 82 லட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும். இந்த உயர்வு காரணமாக ஆகும் தோராயச் செலவிற்காக, மானிய மிச்சத்திலிருந்து மறு ஒதுக்கம் செய்துகொள்ள முடியாத அளவுக்கேற்ப, கூடுதல் நிதி ஒதுக்கம் கேட்கப்பட்டுள்ளது.

3. அரசாங்க ஊழியர்களிலே மற்றொரு முக்கியமான பிரிவினர் கிராம அதிகாரிகளாவர். இவர்களுக்கும் ஓரளவு பரிகாரம் அளிக்க வேண்டியது அவசியமென்று அரசாங்கம் கருதிவந்துள்ளது. நமது மாநிலத்தின் பொது நிர்வாகத் துறையில் அவர்கள் வகிக்கும் முக்கிய நிலையைக் கருத்தில் கொண்டு இவ்வாண்டு செப்டம்பர் 1-ந் தேதி முதற்கொண்டு அவர்களுடைய சம்பளத்தை கணிசமாக உயர்த்துவதென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இந்தப் புதிய சம்பள வீதங்கள் பழைய வீதங்களைப் போல ஏறக்குறைய இரண்டு மடங்காக இருக்கும். இந்த உயர்வினால் ஒரு முழு ஆண்டில் 1 கோடியே 55 லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும். நடப்பு ஆண்டில் இதற்காக தேவைப்படும் அளவிற்கு நிதி ஒதுக்கும்படி இந்தத் துணை மதிப்பீடுகளில் வேண்டப்பட்டுள்ளது. நமது மாநில அரசாங்கப் பணியாளர்களுக்கு மேற்கூறிய சலுகைகளை வழங்குவதால் நடப்பு நிதி ஆண்டிலும், அடுத்த நிதி ஆண்டிலும் நமது வருவாய்க் கணக்கில் குறிப்பிடத்தக்க சிரமம் ஏற்படும். ஆனாலும் நிதிக் கமிஷன், அடுத்த திட்டக் காலத்தில் நமது மாநிலத்தின் நிதித் தேவைகளைத் தீர்மானிக்கும்போது இந்தக் கூடுதல் செலவினத்தையும் கருத்தில் கொள்ளுமாதலால் நமது வரவினச் செலவினங்களில் ஏற்பட்டிருக்கும் இந்தச் சிரமம் தாற்காலிகமானதாகவே இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

4. திட்ட வேலைகளில் நாம் முதலில் எதிர்பார்ப்பதைவிட அதிகரிக்குமென்று தெரிகிற செலவினங்களுக்காகவும் இத் துணை மதிப்பீடுகளில் வழக்கம் போல் நிதி ஒதுக்கியிருக்கிறோம். புன்செய் நிலங்களில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு "மண்வளப் பாதுகாப்பு" ஏற்பாடுகள் பெரிதும் துணை செய்கின்றன. இதைக் கருத்திற்கொண்டு சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களில் பல மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு 15 லட்சம் ரூபாய் செலவில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சிறு பாசனத் திட்டங்களால் விரைவில் நமக்குப்

[திரு. எம். பக்தவத்சலம்] [19th October 1964

பலன்கள் கிடைக்குமாதலால், இவற்றிற்கான நிதி ஒதுக்கத்தையும் அதிகப்படுத்தியிருக்கிறோம். அறுபத்திரண்டு லட்சம் ரூபாய் உத்தேசச் செலவில் பல சிறு பாசனத் திட்டங்களுக்கு அண்மையில் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இவற்றின் விவரங்களைத் துணை மதிப்பீடுகளின் 39, 40-வது பக்கங்களில் காணலாம்.

5. ஏற்கெனவேயுள்ள சிறு பாசனத் துறைகளைச் சிறந்த முறையில் பராமரித்து வரவேண்டியதன் அவசியத்தையும் கருத்திற்கொண்டு, பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தரவேண்டிய தலபாசன மானியத்தை (Local Irrigation Grant ) 25 சத விகிதம் உயர்த்த முடிவு செய்திருக்கிறோம். இதன் விளைவாக 5 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மேலும் செலவு ஏற்படும். இச் செலவிற்காகவும் சபையின் சம்மதம் வேண்டப்படுகிறது.

6. முதல் துணை மதிப்பீடுகளின் மீதான விவாதத்தைத் தொடங்கி வைத்து பேசும்போது வேளாண்மைத் துறையிலும், ஏனைய துறைகளிலும் உற்பத்தியைப் பெருக்குவதற்காக அப்போது தீட்டப்பட்டு வந்த "விரைவுத் திட்டங்களைப்" ( Crash Programmes) பற்றி குறிப்பிட்டிருந்தேன். இந்திய அரசாங்கத்திற்கு நாம் அனுப்பி வைத்திருந்த திட்டங்களில் விலங்கின வளர்ப்புத் துறை சம்பந்தமான திட்டங்களுக்கு ஏற்கெனவே அனுமதி கிடைத்துவிட்டது. இதற்கேற்ப, இப்போது மன்றத்தின் முன் உள்ள துணை மதிப்பீடுகளில் 41 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்திருக்கிறோம். ஐந்தாண்டுத் திட்டத்துக்கான நிதி உதவிக்கும் புறம்பாக இந்தத் திட்டங்களுக்காக நிதி உதவி அளிப்பதற்கு இந்திய அரசாங்கம் முன் வந்துள்ளது என்பதை நான் இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமென்று எண்ணுகிறேன்.

7. கூட்டுறவுத் துறைக்குப் புறம்பாகவுள்ள கைத்தறி நெசவாளர்கள், தங்கள் கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதில் உதவி புரிவதற்காக, நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நீண்டகாலமாகவே கேட்டு வந்துள்ளனர் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். இது சம்பந்தமாக இந்திய ரிசர்வ் பாங்குடனும், இந்திய அரசாங்கத்துடனும் வெகுகாலமாக விவாதங்கள் நடைபெற்று, அண்மையில்தான் நாம் ஏற்றுக் கொள்ளத்தக்க திட்டம் ஒன்று இறுதியாக முடிவு செய்யப்பட்டது. இதன் பயனைக் கைத்தறி நிதிக் கார்ப்பொரேஷன் ஒன்று இப்போது பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த கார்ப்பொரேஷனுக்கு அரசாங்கம் ஆரம்பப் பங்கு மூலதனத் தொகையாக 5 லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது. துணை மதிப்பீடுகளில் இத் தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த் கார்ப்பொரேஷனில் பங்கு மூலதனம் எடுத்துக் கொள்ள கைத்தறி நெசவாளர்கள் பலர் ஊக்கமுடன் முன் வந்துள்ளனர். மேலும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்க் கூட்டுறவு சங்கம் வருகிற தீபாவளி, பொங்கல் பண்டிகைகளின்போது கைத்



19th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

தறித் துணிகளை வாங்கி விற்பதற்கென்று மாநிலக் கூட்டுறவுப் பாங்கியின் மூலம் அதற்கு 25 லட்சம் ரூபாய் குறுகிய காலக் கடன் வழங்கியிருக்கிறோம்.

8. பர்மாவிலிருந்து வரும் அகதிகளின் நலத்தில் நமது மாநில மக்கள் மிகுந்த அக்கறையும் பரிவும் காட்டியுள்ளனர். இவர்களின் இன்னலைப் போக்கி, மறுவாழ்வு அளிப்பதற்காக, இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களை நான் கனம் அங்கத்தினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பர்மா அகதிகளுக்கு மறு வாழ்வு அளிக்கும் பிரச்னையை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருத வேண்டும் என்று இந்திய அரசாங்கத்துக்கு நாம் தெளிவுபடுத்தினோம். நமது கருத்தை இந்திய அரசாங்கமும் ஏற்றுக்கொண்டு தாராளமாக உதவியளிக்க முன் வந்திருக்கின்றனர் என்பதை நான் இச் சபைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வசதிகள் பர்மாவிலிருந்து இந்தியா வருவதற்கான பயணச்செலவையும், வந்து சேரும் துறைமுகத்திலிருந்து அவரவர்களுடைய ஊர் போய் சேருவதற்காகும் கட்டணச் செலவையும் இந்திய அரசாங்கம் வழங்குவதுடன் இந்த நாட்டில் உறவினர்கள் யாருமே இல்லாதவர்கள் வேறு வேலையில் அல்லது பயனுள்ள தொழிலில் ஈடுபடும் வரையில் இருப்பதற்காக நடத்தப்படும் முகாம்களுக்கு ஆகும் செலவையும், சில வரையறைகளுக்குட்பட்டுக் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளனர். இவர்களுக்கு ஏற்ற வேலை வாய்ப்புக்களைத் தரும்படி. தனியார் துறையின் ஒத்துழைப்பையும் நாம் கோரியிருந்தோம். அத் துறையினர் கொடுத்திருக்கும் ஆரம்ப ஒத்துழைப்பு ஊக்கமளிப்பதாய் உள்ளது. பர்மா அகதிகளில் வியாபார அனுபவம் வாய்ந்த குடும்பங்கள் தகுந்ததொரு வியாபாரத்தைத் தொடங்கி நடத்திக் கொள்வதற்காகக் குடும்பம் ஒன்றுக்கு அதிக அளவு 2,000 ரூபாய் வரையில் கடன் வழங்கும் ஒரு திட்டத்திற்கும் நாம் அனுமதி அளித்திருக்கிறோம். மாநில அரசாங்கம் அளிக்கும் இத்தகைய கடன்களில் 80 சத விகித அளவுக்கு நிதி உதவி அளிப்பதற்கு இந்திய அரசாங்கம் முன் வந்திருக்கிறது. இதற்கென்று முதலில் 25 லட்சம் ரூபாய் ஒதுக்குவதற்காக சட்டப் பேரவையின் அனுமதியைத் தற்போது கேட்டுள்ளோம். நாளடைவில் தேவைப்படும் அளவுக்கு ஏற்ப நிதி ஒதுக்கம் மேலும் அதிகப்படுத்தப்படும்.

9. துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மற்றத் திட்டங்களைப் பொறுத்த வரையில், குறிப்பாக விள்க்கம் எதுவும் தேவையில்லையென்று கூறி, இத்துணை மதிப்பீடுகளைச் சபை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Since the hon. Member Sri M. Kalyanasundaram is not in his seat, his notice under Rule 41 is deemed to have been withdrawn.

VI.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS (TRANSFERRED TERRITORY) JENMIKARAM PAYMENT ABOLITION BILL 1964 (L.A. BILL NO. 28 OF 1964)

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras (Transferred Territory) Jenmikaram Payment Abolition Bill, 1964 (L.A. Bill No. 28 of 1964) as amended by the Select Committee be taken into consideration.

In moving the motion, I wish to explain briefly what jenmikaram is and the main provisions in the Bill.

In the Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district, which were transferred to this State from the former Travancore-Cochin State, under the State Reorganisation Act, 1956 (Central Act 37 of 1956) there is in force a levy called Jenmikaram on certain lands of 'Jenmom Tenure'. This jenmikaram is levied under the provisions of the Travancore Jenmi and Kudiyan Act, 1071 (Travancore Act V of 1071) which is in force in Kanyakumari district and Shencottah taluk. The Jenmi and Kudiyan Act regulates the relationship between the jenmis and kudiyans. According to the Jenmi and Kudiyan Act, the jenmis have no right, claim or interest in the jenmam lands except the right to receive the jenmikaram thereon and the kudiyans are deemed to be the owners of the lands subject only to the payment of jenmikaram. According to section 8 of the Travancore-Cochin Land Tax Act, 1955 (Travancore-Cochin Act XV of 1955) the kudiyans have to pay basic tax to the Government, in addition to jenmikaram to the jenmis. The Bill seeks to abolish this jenmikaram payment and bring the jenmam lands on a par with other ryotwari lands.

Under the provisions of the Bill, the jenmikaram will be abolished with effect from the appointed day. In the case of individual jenmis, the Government will pay them as compensation an amount equal to 10 times the aggregate of the annual amount of jenmikaram payable to them, after deducting 2½ per cent of the said amount as collection charges. In the case of jenmis who are religious, educational or charitable institutions, the Government will pay them every fasli year, as tasdik allowance, an amount equal to the aggregate of the amount of jenmikaram payable to them after deducting 2½ per cent of the said amount as collection charges. The Bill also provides for the payment, to the Government by the kudiyans, of contribution of an amount equal to 10 times the aggregate of the annual amount of jenmikaram payable by them. The above are the main provisions of the Bill. The other provisions are ancillary to the implementation of the above provisions.

The Select Committee has made the following important changes in the Bill—

*Clauses* 1 (3) *and* 2 (1).—The Committee decided that before the commencement of the main provisions of the proposed Act, the Register of Jenmikaram should be brought up-to-date. Accordingly sub-clause (3) of Clause 1 has been amended so that the provisions relating to amendment of the Register of Jenmikarams and other connected provisions shall come into force at once and the other provisions of the proposed Act shall come into force after a period of 6 months from the date of publication of the proposed Act. In consonance with the above modification, sub-clause (1) of Clause 2, containing the definition of 'appointed day' has also been modified, so as to mean the date of expiration of a period of six months from the date of publication of the proposed Act.



*New Clauses* 9, 10 *and* 11.—The Committee decided that an opportunity should be given to the parties concerned for making applications to include jenmom lands in the Register of Jenmikarams if they have not already been included in the Register. It also decided that if any person claims that in respect of any jenmom land already included in the Register of Jenmikaram any modification is required in respect of the entries relating to the name of the jenmi or of the kudiyan by reason of the death of the person concerned or by reason of the transfer of interest or by reason of any other subsequent change in the circumstances, he should be given an opportunity to apply to the proper authority for making such modification. New Clauses 9, 10 and 11 provide for these decisions.

*Clause* 22 (*renumbered as Clause* 25).—Clause 22 provided that the amount of contribution payable by the kudiyan shall be paid to the Government in 5 equal annual instalments. The Committee decided that the number of annual instalments be increased to 10. This clause has been amended accordingly and re-numbered as Clause 25.

The other changes in the Bill are consequential to the amendments mentioned above.

Sir, with these words, I request the House to accept the motion.

MR. SPEAKER : Motion moved :—

"That the Madras (Transferred Territory) Jenmikaram Payment Abolition Bill, 1964 (L.A. Bill No. 28 of 1964) as amended by the Select Committee be taken into consideration".

* SRI R. PONNAPPA NADAR : I welcome the general provisions of this Bill. While supporting this Bill, I wish to express a few words of thanks to the Government for having brought forward this Bill. This Bill seeks that the Jenmikaram, existing in our district, should be abolished because it was very oppressive so far as tenants were concerned. In order to give protection to the tenants concerned, by a legislation that has been enacted in the erstwhile Travancore-Cochin State, the tenants were given full rights and there was complete enfranchisement.

Originally it was thought that the compensation due for the abolition of jenmikaram should be paid in 5 annual instalments. Now Government have shown greater concessions and it has now been put in this amending bill that the whole compensation should

[Sri R. Ponnappa Nadar.] [19th October 1964

be paid in 10 annual instalments. I welcome this provision and I express my sincere gratitude to the Government for having brought forward this Bill. With these words I conclude my speech.

MR. SPEAKER : The question is—

" That the Madras (Transferred Territory) Jenmikaram Payment Abolition Bill, 1964 (L.A. Bill No. 28 of 1964) as amended by the Select Committee be taken into consideration ".

The motion was put and carried and the Bill as amended by the Select Committee was taken into consideration.

Clauses 2 to 38 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move :—

" That the Madras (Transferred Territory) Jenmikaram Payment Abolition Bill, 1964 (L.A. Bill No. 28 of 1964) be passed. "

*திரு. வை. சங்கரன் :* கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே பேச நினைத்தேன். அப்போது பேச வாய்ப்புக் கிடைக்கவில்லை. (கனம் சபாநாயகர் : பரவாயில்லை. இப்போது பேசுங்கள்) கனம் சபாநாயகருடைய அனுமதியோடு ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இந்த மசோதாவானது, ட்ரான்ஸ்ஃபர்ட் டெர்ரிட்டரி அல்லாத மற்றப் பகுதிகளைப் பொறுத்த மட்டில் இதே போன்ற மற்ற ஆக்ட்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சில தவறுகள் ஏற்பட்டு, அந்தத் தவறுகள் திருத்தி அமைக்கப்பட்டது போல இந்த மசோதாவிலே செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக நஷ்ட ஈடு சம்பந்தமாக டெப்பாஸிட் செய்து டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டில் வைத்து மூன்று ஆண்டுகளுக்குள் பெறலாம் என்ற அர்த்தத்தில் இதிலே காணப்படுகிறது. ஜமீந்தாரி சட்டத்தில் குறை இருந்தது. பின்னால் வலியுறுத்திச் சொன்னதால் ஜமீந்தாரி சட்டத்தில் கொண்டுவரப்பட்டது. அந்த ப்ரொவிஷன் இப்போதே இந்த மசோதாவில் செய்யப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல அம்சம். மொத்தத்தில் ஆக்ட் பூராவும் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குடியன் காம்பென்ஸேஷன் பற்றிச் சொல்லும்போது 10 வருஷ ட்யூஸ் கொடுத்தால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த அடிப்படையில் 10 வருஷத் தொகை இருந்தால் போதும் என்று விளக்கம் கொடுத்தால் நலமாக இருக்கும். பொதுவாக நஷ்ட ஈடு என்று வரும்போது 20 வருஷ வருவாயைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுவதுதான் வழக்கம். இங்கே 10 ஆண்டு என்று சொல்லப்படுகிறது. சென்னையிலே வீட்டு மனைக்காக நிலங்களை எடுக்கும் சட்டத்தில் 5 ஆண்டு என்று கண்டிருந்தது. அந்தச் சட்டம்



19th October 1964] [திரு. வை. சங்கரன்]

சுப்ரீம் கோர்ட் வரையில் போய் தள்ளி விட்டு விட்டார்கள். எந்த முறையில் 10 வருஷம் என்பது உகந்தது என்று சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு தாஸ்திக் அலவன்ஸ் ரிலிஜியஸ் இன்ஸ்டிட்யூஷனுக்கு வருவாயைக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டு அந்தந்த ஆண்டு கொடுத்து வரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது நியாயமான அடிப்படையில் இருக்கிறது. அதே அடிப்படையில் தான் மற்றச் சட்டங்களில் செய்திருக்கிறோம். இன்றைக்கு இருக்கும் நிலைமை மாறிக்கொண்டு போகும்போது, மதிப்பு மாறிக் கொண்டு போகும்போது இப்போது நிர்ணயிக்கப்படும் அடிப்படையிலேயே எப்போதும் கொடுத்துவரவேண்டுமென்று சொல்லுவது சரியாகுமா என்று பார்க்கவேண்டும்.

ஆஃபீஸர்ஸுக்கு இண்டெம்னிட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக இரண்டு மூன்று ப்ரொவிஷன்ஸ் போடப்பட்டிருக்கின்றன.

" No suit, prosecution, or other proceeding shall lie against any officer or servant of the Government for any act done or purporting to be done under this Act or any rule made thereunder without the previous sanction of the Government."

" expiration of a period of six months from the date of the act complained of "

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரீவியஸ் சாங்க்ஷன் வேண்டுமென்ற அடிப்படை என்ன என்று தெரியவில்லை. ஆறு மாதங்களுக்குள் போடவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டுக்கு அப்ளை செய்து சாங்க்ஷன் வர என்ன காலம் ஆகும் என்று சொல்லவேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் கவர்ன்மெண்ட் சாங்க்ஷன் வரவேண்டுமென்று இருந்தால் நலமாக இருக்கும். இல்லையென்றால் ஆறு மாதங்களுக்குள் போட முடியாத நிலை ஏற்படலாம். புதிதாக டி நோவோ செக்ஷன் இருக்கிறது.

" No Officer or servant of the Government shall be liable in respect of any such act in any civil or criminal proceeding if the act was done in good faith in the course of the execution of the duties, or the discharge of the functions imposed by or under this Act."

என்று இருக்கிறது. லயபிலிட்டி இல்லை என்று சொல்லும் போது கவர்ன்மெண்ட் சாங்க்ஷன் வாங்கிக் கொண்டு செய்ய வேண்டும் என்று ஏன் சொல்லப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. லயபிலிட்டி இல்லை என்று கோர்ட்டிலே தான் நிர்ணயம் செய்து விடுவார்களே? சர்க்கார் சாங்க்ஷன் வாங்கி ஏன் செய்ய வேண்டுமென்று புரியவில்லை. இந்தச் சில சந்தேகங்களுக்கும் இடம் இல்லாதிருந்தால் நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொண்டு இந்த மசோதாவை வரவேற்று முடித்துக்கொள்கிறேன்.

[19th October 1964

MR. SPEAKER : The question is—

" That the Madras (Transferred Territory) Jenmikaram payment Abolition Bill, 1964 (L.A. Bill No. 28 of 1964) be passed."

The motion was put and carried and the Bill was passed.

(2) THE MADRAS PUBLIC BUILDINGS (LICENSING) BILL, 1964 (L.A. BILL NO. 31 OF 1964).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

" That the Madras Public Buildings (Licensing) Bill, 1964 (L.A. Bill No. 31 of 1964), as amended by the Joint Select Committee be taken into consideration."

The salient features of the Bill as was presented to the House in July last were explained by the Minister for Industries at the time of its introduction. The Select Committee has considered the Bill clause by clause in detail and made a number of changes. Any regulatory Act necessarily causes a certain amount or inconvenience, if not hardship, to the public. But it has always been the endeavour of Government to minimise the extent of that inconvenience. With the same object in view, the Select Committee has provided in the amended Bill that in the case of new public buildings, the competent authority should communicate his orders within a period of three months from the date of receipt of an application and that if an order either granting or refusing the licence is not communicated to the applicant within three months, a licence shall be deemed to have been granted to him provided he had sent a certificate from an engineer regarding structural stability along with his application. Similarly, in the case of existing buildings, if the competent authority, does not pass any order as stipulated, the licence is similarly deemed to have been granted provided the engineer's certificate had been sent with the application earlier.

Under the revised Bill a licence for existing buildings becomes mandatory after a period of a year. The application has to be submitted by the owners within a period of six months from the date of commencement of this Act. These periods are long enough to meet all contingencies.

" The Select Committee considered that the definition of the term ' building ' used in the Bill should be made comprehensive and should include—

(i) a house, out-house, stable, latrine, shed, hut, roofed enclosure and any other structure whether of masonry, bricks, mud, wood, metal or any other material whatsoever and any compound wall or gate appurtenant to such building, house, out-house, stable, latrine, shed, hut, roofed enclosure and other structure;

(ii) a portion of such building, house, out-house, stable, latrine, shed, hut, roofed enclosure and other structure; and



19th October 1964] [Sri M. Bhaktavatsalam]

(iii) any fittings affixed to such building, house, out-house, stable, latrine, shed, hut, roofed enclosure and other structure.

The definition has been amplified accordingly.

The definition of the term ' owner ' did not earlier include a licensee and a mortgagee in possession. The relevant sub-clause of clause 2 has also been amplified.

During the discussions in the Joint Select Committee, a point arose that additions and alterations may be made to buildings which have been licensed and that they may affect structural stability. A new clause has therefore been added that a fresh licence should be obtained in the case of such additions and alterations.

The amended bill also empowers the competent authority to review any orders passed by him *suo motu*.

(i) on the basis of a mistake or error apparent on the face of the record; or

(ii) on the basis of new and important facts brought to its notice after the order was made; or

(iii) for any other sufficient reason.

The above provision should enable the competent authority himself to revise his orders without the party affected having to go in appeal.

To ensure safety of human lives, the Committee thought that the competent or appellate authority should have the power to prohibit the use of a public building if that authority is satisfied that the building is in a ruinous state or that there is reason to apprehend imminent danger to life or property or that there is no licence. A new clause (clause 15) provides the requisite power in this regard.

In view of the fact that the Act is self-contained remedies by way of appeal and revision are provided therein, it has been decided to exclude the jurisdiction of civil courts on matters falling within the purview of this Act so that conflicts of jurisdiction may be avoided.

I now commend that the Bill be taken up for consideration.

திரு. வை. சங்கரன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சட்டத்தினுடைய அவசியத்தைப்பற்றியோ அல்லது தேவையைப் பற்றியோ எடுத்து விளக்கிச் சொல்லத்தேவையில்லை. சமீபத்தில் நடந்த மதுரைப் பள்ளியின் சம்பவம் காரணமாக உடனடியாக இந்த மசோதாவானது கொண்டுவரப்பட்டிருக்கிறது. எல்லோரும் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ரொம்ப நாட்களாக இது போன்ற ஒரு சட்டம் இல்லாததினால்தான், இதுபோன்ற ஒரு விபத்து ஏற்பட்டது 10-30 a.m.

[திரு. வை. சங்கரன்] [19th October 1964

இனியாவது இதுபோன்ற சம்பவம் நடக்கக்கூடாது என்பதை உணர்ந்து சர்க்கார் இவ்வளவு விரைவிலே இதுபோன்ற ஒரு மசோதாவைக் கொண்டுவந்தது பற்றி உண்மையிலேயே நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

'பப்ளிக் பில்டிங்ஸ்' வியாக்கியானத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், பொதுவாக எல்லாவிதமான கட்டடங்களும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. ஆனால், எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. 'கவர்ன்மெண்டு பில்டிங்ஸ்' இந்த 'டெபனிஷனுக்குள்' வருமா என்பதுதான் சந்தேகம்.

"Public building" means any building to which the public or any class or section of the public are granted access or any building which is open to the public or any class or section of the public and includes

என்று போட்டு ஒரு 8, 10, 'காடிகரிகள்' சேர்க்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக 'கவர்ன்மெண்டு பில்டிங்ஸ்' சொந்தக் கட்டடங்களும் இருக்கின்றன, வாடகை கட்டடங்களும் இருக்கின்றன. 'பப்ளிக்' வரக்கூடிய, கவர்ன்மெண்டு பில்டிங்ஸ்' இருக்கின்றன அம்மாதிரி கட்டடங்கள் இந்த டெபினஷனில் திட்டவட்டமாக சேர்க்கப்படவில்லை. அவைகள் இதிலே சேருமா, சேராதா என்ற ஐயப்பாடு எழலாம்.

**It includes . . . . . . any building, hosted, library, hospital, nursing home, lodging house, choultry, hotel, etc.**

அப்படியிருக்கும்பொழுது 'கவர்ன்மெண்ட் பில்டிங்ஸ்' என்பதையும் இதிலே சேர்ப்பதில் என்ன கஷ்டம். 'கவர்மெண்டுஆபீஸஸ்' பொதுவாக இருப்பதினால், முன்னால் பொது வியாக்கியானத்திலே அது சேர்ந்துவிடும் என்று சொல்லலாம். இருந்தாலும் கூட 'கவர்ன்மெண்ட் பில்டிங்ஸ்' என்பதையும் திட்டவட்டமாகச் சேர்த்துவிட்டால் நலமாக இருக்கும். ஒரு சில 'கவர்ன்மெண்ட் ஆபீஸஸ்' 'ரெண்டட் பில்டிங்ஸ்'-ல் இருக்கின்றன. ஆகவே, கவர்ன்மெண்ட் பில்டிங்ஸ்' என்பதையும் திட்டவட்டமாகச் சேர்ப்பதற்கு வழி வகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கூட கட்டடங்கள் 'எக்ஸிஸ்டிங் பில்டிங்ஸ்', 'நியூ பில்டிங்ஸ்' இரண்டு விதமாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. புதியதாகக் கட்டப்படும் கட்டடங்களுக்கு லைசென்ஸுக்கு அப்ளை செய்து வாங்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**'Save as otherwise provided in this Act, on and after the date of the expiry of a period of one year from the date of the commencement of this Act, no existing public building shall be used as a public building without a licence and except in accordance with the terms and conditions specified therein.'**



19th October 1964] [திரு. வை. சங்கரன்]

ஏற்கனவே உள்ள 'பப்ளிக் பில்டிங்ஸ்' ஒரு வருஷத்திற்குள்ளே லைசென்ஸ் எடுக்கவேண்டுமென்று வகை செய்யப்பட்டிருக்கிறது. ஓரளவுக்கு அனுகூலம் என்ற முறையில் அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். 'எக்ஸிஸ்டிங் பப்ளிக் பில்டிங்ஸ்' சம்பந்தப்பட்டவரை ஓராண்டிற்கு அவைகளுக்கு 'லீஸ் ஆப் லைப்' கொடுக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் ஏற்படக்கூடிய 'பப்ளிக் பில்டிங்ஸ்' சம்பந்தப்பட்டவரை உடனடியாக 'லைசென்ஸுக்கு' அப்ளை செய்து வாங்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது சரியாக இருக்கிறது. 'எக்ஸிஸ்டிங் பப்ளிக் பில்டிங்ஸ்' ஏற்கனவே மிகவும் 'ரூயினஸ் ஸ்டேட்டில்' இருக்கலாம், 'டேஞ்சரஸ் ஸ்டேட்டில்' இருக்கலாம். அவைகள் ஓராண்டிற்குள் லைசென்ஸ் எடுக்கலாம் என்று இருப்பதால், அந்த ஓராண்டிற்குள் ஏதாவது விபத்து ஏற்பட்டால் என்ன செய்வது? சில 'எக்ஸிஸ்டிங் பப்ளிக் பில்டிங்ஸ்' உண்மையிலேயே மோசமாக இருக்கலாம். அவைகள் ஓராண்டிற்குள் லைசென்ஸ் வாங்கலாம் என்றால், அதற்குள் ஏதாவது விபத்து ஏற்படுவதைத் தடுக்க வேண்டும். உடனடியாக எல்லா 'எக்சிஸ்டிங் பில்டிங்ஸையும்' சர்வே செய்து பார்த்து, அவைகளுக்கு ஏதாவது மாற்றம் தேவையா என்பதை கவனிக்கவேண்டும். ஏற்கனவே உள்ள கட்டடங்கள் சரியான நிலைமையில் இருக்கின்றனவா என்று சர்வே செய்து பார்ப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். ஓராண்டிற்குள் அவைகள் லைசென்ஸ் வாங்கிக்கொள்ளலாம் என்று இருப்பதினால் அதற்குள் ஏதாவது விபத்து ஏற்படாமல் தடுப்பதற்கு வழிவகை செய்யப்படவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, கிளாஸ் 7 பற்றியது. லைசன்ஸுக்கு அப்ளை செய்யும்பொழுது தனிப்பட்ட என்ஜினியரிடமிருந்து சர்டிபிகேட் வாங்கி அப்ளை செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக என்ஜினியர் சர்டிபிகேட் வாங்கப்படவேண்டும் என்று சொல்லப்படவில்லை. 'மே' என்று தான் கூறப்பட்டிருக்கிறது. என்ஜினியர் சர்டிபிகேட் வைத்து லைசென்ஸுக்கு அப்ளை செய்யாவிட்டால், 'காம்பிடெண்ட் அதாரிடி' தகுந்த என்ஜினியரை வைத்துப்பார்த்து 'லாடிஸ்பை' செய்து கொண்டு லைசென்ஸ் கொடுக்கலாம். என்ஜினியர் சர்டிபிகேட்டோடு லைசென்ஸுக்கு அப்ளை செய்து, மூன்று மாதங்களுக்குள் லைசென்ஸ் கொடுக்கப்படாவிட்டால், லைசென்ஸ் கொடுக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வகை செய்யப்பட்டிருக்கிறது. 'லைசென்ஸ் அப்ளிகேஷன்' 'not accompanied by engineers certificate' என்ற நிலைமையில் மூன்று மாதங்களுக்குள் லைசென்ஸ் கிடைக்கவில்லை என்று சொன்னால் லைசென்ஸ் வழங்கப்படவில்லை என்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்ஜினியர் சர்ட்டிபிகேட் இருந்தால் மூன்று மாதங்களுக்குள் லைசென்ஸ் வரவில்லை என்றால், லைசென்ஸ் கொடுக்கப்பட்டதாகக் கருதப்படும். என்று சொல்லப்பட்டிருப்பது அவர்களுக்கு அனுகூலமாக இருக்கிறது. அதிகாரிகளின் சோம்பல் காரணமாக மூன்று மாதங்களுக்குள் லைசென்ஸ் கிடைக்கப்பெறு

[திரு. வை. சங்கரன்] [19th October 1964

விட்டால், என்ஜினியர் சர்டிபிகேட்டோடு அப்ளை செய்திருந்தால், லைசென்ஸ் வழங்கப்பட்டதாகக் கருதப்படும். ஆனால், என்ஜினியர் சர்டிபிகேட் இல்லை என்றால் அரசாங்க அதிகாரிகளின் சொஸ்தி, தாமதம் காரணமாக அவர்களுக்கு லைசென்ஸ் கிடைக்கவில்லை என்று சொன்னால், மறுக்கப்பட்டதாகக் கருதப்படும் என்று சொல்லப்பட்டிருப்பது ஓரளவுக்கு அதிகப்படியாக இருக்கிறது என்று நினைக்கிறேன். சர்க்காரே என்ஜினியரை வைத்துப் பார்த்து அந்தக் கட்டடத்திற்கு லைசென்ஸ் கொடுக்கலாமா கொடுக்கக் கூடாதா என்று தீர்மானம் செய்யலாம். அல்லது அவர்களுக்கு 'டைம் கொடுக்கவேண்டும். அல்லது என்ஜினியர் சர்டிபிகேட் அவர்களிடமிருந்து கேட்கலாம். ஆனால், என்ஜினியர் சர்டிபிகேட் இல்லாவிட்டால், மூன்று மாதங்களுக்குள் லைசென்ஸ் வரவில்லை என்றால், மறுக்கப்பட்டதாகக் கருதவேண்டும் என்று போடப்பட்டிருப்பது ஓரளவுக்கு அநீதமாக இருக்கலாம் என்று எனக்குப் படுகிறது.

competent authority to be prescribed by Government' ஆர்.டி.ஓ. வாக இருக்கலாம் என்று செலக்ட் கமிட்டி டிஸ்கஷனிலிருந்து தெரியவருகிறது. ஏற்கனவே உள்ள வேலைகளையே ஆர்.டி.ஓ. சுமக்க முடியவில்லை. ஆர்.டி.ஓ. அவர்களுடைய 'ஜூரிஸ்டிக்ஷனில்' உள்ள பப்ளிக் பில்டிங்ஸ்ஸையும் நிர்வாகம் செய்யவேண்டுமென்றால் அவரால் இந்த வேலை பளுவையும் தாங்க முடியுமா என்பதைப் பார்க்கவேண்டும். அவர் ஏரியாவில் உள்ள பில்டிங்ஸ் 'டேஞ்சரஸ் அல்லது ரூயினஸ் ஸ்டேட்டில்' இருந்தால் அது சம்பந்தமாக நோடீஸ் கொடுப்பதற்கு அவருக்கு பூரண அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அதிகமாக வேலை பளு உள்ள ஆர். டி. ஓ. அதிகாரியே இந்த வேலையையும் சுமப்பது கஷ்டமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே, இதற்கு என்று ஒரு தனி அதிகாரி போட்டால் நலமாக இருக்கும். 'காம்பிடெண்டு அதாரிடி' என்பவர் ஓரளவுக்கு என்ஜினியரிங் சம்பந்தமாக 'டெக்னிகலாக குவாலிபைடாக' இருந்தால் நன்றாக இருக்கும். ஆகவே, இதற்கு ஒரு தனி அதிகாரி போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆர்.டி.ஓ.-தலையிலேயே இந்த வேலையையும் சுமத்தினால், அதனுடைய முக்கியத்துவம் குறைந்து விடும் என்று சொல்ல விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். சினிமாக்கள், பாக்டரிகள் சம்பந்தப்பட்டவரை அவைகளுக்கு ஏற்கனவே தனியாகச் சட்டங்கள் இருக்கின்றன, அவைகளே போதும். அம்மாதிரி கட்டடங்களின் 'ஸ்ட்ரக்சால் சவுண்ட்னஸ்' பற்றி 'சாடிஸ்பை' செய்து கொள்வதற்கு ஸினிமாடோகிராப் சட்டத்தில், பாக்டரி சட்டத்தில் இடம் இருக்கிறது என்று சொல்லப்பட்டதாக செலக்ட் கமிட்டி ப்ரொஸீடிங்ஸைப் பார்த்தால் தெரியவருகிறது. சினிமாடோகிராப் ஆக்டில் தாசில்தார் இன்ஸ்பெக்ஷன் போன்றவைகளுக்கு ப்ரொவிஷன் இருக்கிறதே தவிர, இது போன்று என்ஜினியர் சர்டிபிகேட் வாங்கவேண்டும் என்ற நிலைமை இருப்பதாகத் தெரியவில்லை. 'ஸ்ட்ரக்சரல் ஸவுண்ட்னஸ்' என்று சொன்னால்



19th October 1964] [திரு. வை. சங்கரன்]

தாசில்தார் போன்ற ரெவின்யூ அதிகாரிகள் பார்த்துச் சொல்வதை விட, ஒரு 'டெக்னிகல் பெர்ஸன்' பார்த்துச் சொன்னால் நலமாக இருக்கும். ஆகவே, அந்தச் சட்டங்களின் கீழும் என்ஜினியர் சர்டிபிகேட் வாங்கவேண்டும் என்று வகை செய்வதில் எந்த விதமான தவறும் இல்லை. அந்த முறையில் அதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யவேண்டும் என்று கூறிக்கொண்டு, மற்றபடி உள்ள ஷரத்துக்கள் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன, அதை எல்லோரும் வரவேற்பார்கள் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRIMATHI A. SUARES: Mr. Speaker, Sir, while agreeing with the Government that the lives of those who resort to schools, colleges, hospitals, places of entertainment and of religious worship should be safeguarded by ensuring the structural stability of the building concerned, I wish to offer a few remarks.

The Bill in question provides for the inspection and licensing of public buildings in the State of Madras. The various classes of public buildings have been listed in the Bill. Some buildings used as colleges, universities, hospitals, places of religious worship, cathedrals, etc., are usually structurally sound for they have been built so that they may last not only for decades but not even for centuries, e.g., the Madras University buildings colleges, like Loyola College, Christian College, the Catholic Centre, the Y.M.C.A., etc. Some modern buildings have been constructed when cement was scarce or adulterated and contractors were not as conscientious as they were in the past. Such buildings have sometimes proved a failure like the Madurai school building. In trying to avoid such catestrophes too great a burden should not be placed on the owners of buildings, that are monuments of engineering skill and they have stood the ravages of time and weather.

To apply for a licence, to have it renewed every three years and to subject the building to frequent inspection will cause inconvenience to owners of buildings. Sufficient notice of inspection should be given to heads of institutions for the dates of inspection should not clash with the holding of examinations or when the head of the institution is out of station or on vacation periods. Notice should also be given to those in charge of places of religious worship. Such places have special days and hours of religious services and it would be highly objectionable if a team of officers appointed for the inspection of buildings enter these places at such times. Each place of worship has its Holy of Holies or sanctuary to which part of the building only certain people have access. A thorough inspection of temples, churches, mosques may raise objections on the ground of disregarding the sentiments of religious worshippers when the Construction provides for "freedom of conscience and the right freely to profees practice and propagate religion", according to Article 25 of the Constitution.

[Srimathi A. Suares] [19th October 1964

Inspection and licensing of public buildings will lead to certain evils. A host of engineers with varying qualifications and experience will have to be appointed to inspect the numerous buildings in the whole State. Taking only educational institutions, there are 30,000 elementary schools, 2,000 secondary schools, and over 100 Colleges and Polytechnic institutions.

This inspection may lead to favourtism or even to corruption. If serious defects in the buildings are overlooked the purpose for which the Bill is introduced will be defeated. Care should be taken to appoint engineers with reputed integrity.

Clause 20 of the Bill as amended by the Joint Select Committee provides for exemption in certain cases. Government have been given powers to exempt certain cases from the provisions of the Act. I suggest that Government may consider the following cases for exemption :—

(1) Existing public buildings that are well known to be structurally sound like universities, cathedrals, colleges, hospitals, hostels, etc.

(2) Newly constructed public buildings which have been certified to have been constructed according to plans and estimates which have been scrutinised by competent authorities.

(3) Buildings that have been constructed with the aid of building grants. The existing procedure is that detailed plans and estimates are submitted to the head of the department and these are scrutinised by the engineering section of the Government. The controlling authority also demands a completion certificate stating that the building has been completed according to plans and estimates. In such cases, there is no need to take out a license. The inspection of these buildings could be done by the Public Works Department at stated intervals.

When an institution takes a building grant from the Government, the building is considered as a Government building for a specified period according to the amount of grant paid. The management of the institution cannot dispose of that building and cannot even change the purpose for which the building was constructed with the Government aid.

Lastly, I would include buildings of religious worship that are structurally sound to be exempted from the provisions of the Act. Such places could submit a certificate testifying to the soundness of the place of worship. There is a moral obligation of those incharge of the buildings to see that temples, churches and mosques are in sound and suitable condition. The bigger temples, churches and mosques are usually housed in excellent buildings. Licences need not be taken in such cases.



19th October 1964] [Srimathi A. Suares]

This Bill is necessary to safeguar dthe lives of the people. If exemption is granted in the case of structurally sound buildings the hardships that are unavoidable in the implementation of this Bill will be minimised.

Thank you, Sir.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, முன்பு இங்கே வாக்களிக்கப்பட்டது போல், இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. யாருக்கும் தொல்லை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அல்ல. தொல்லை கொடுக்கக் கூடாது என்ற கவலையோடு இந்த மசோதா தயாரிக்கப்பட்டு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. எந்தவிதத்திலும் பொது மக்கள் உபயோகிக்கிற கட்டிடங்களுக்கு ஆபத்து வரக்கூடாது, ஒரு விபத்தும் ஏற்படக்கூடாது என்பதுதான் நோக்கம். இதற்கு முன்பு நடைபெற்ற சம்பவங்கள் நமக்கு அனுபவமாக இருக்கின்றன. அதனால் அத்தகைய விபத்துக்கள் ஏற்படுவதற்கு கொஞ்சம்கூட இடம் கொடுக்கக்கூடாது என்ற கவலையோடுதான் இந்த மசோதா தயாரிக்கப்பட்டு, பொறுக்கு கமிட்டியும் இதைப் பரிசீலனை செய்து சில மாறுதல்களுடன் இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி சுவாரஸ் அவர்கள் கல்வி ஸ்தாபனங்களில் மிகுந்த அக்கரை கொண்டவர்கள். பள்ளி ஸ்தாபனங்கள் எல்லாம் சீராக நடக்க வேண்டும் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். சில நல்ல கட்டடங்கள் இருக்கின்றன, அவைகளுக்கு விலக்கு அளிக்கக் கூடாதா என்று அவர்கள் கேட்டார்கள். நல்ல கட்டடமாக இருந்தாலும் சரி, நீண்ட காலமாக இருந்து வருகிற கட்டடமாக இருந்தாலும் சரி, இந்தக் கட்டடங்களுக்கெல்லாம் ஒரு காலம் உண்டு. காலத்தின் கோளாறு கட்டடங்களைப் பாதிக்கிறது. ஆகவே, அவற்றை மீண்டும் பரிசீலனை செய்வதிலே தவறு ஒன்றும் இல்லை. எந்த விதத்திலும் பழைய கட்டடங்களுக்கு ஆபத்து வரக் கூடாது என்ற கவலையோடு கவனிக்க வேண்டிய ஒரு நிலைமை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. இன்னும் கொஞ்சம் அதிகமாக விதி விலக்கு அளிக்கலாம் என்று கூறினார்கள். விதிவிலக்கு அளிப்பதிலேகூட நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஸவுண்டாக இருக்கிறது என்று கருதப்படும் கட்டடங்கள்கூட நாளைக்கு என்ன ஆகும் என்று நமக்குத் தெரியாது. அரசாங்கத்தின் உதவி பெறுவதற்காக முன்பே கவனிக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்ட கட்டடங்களாக இருந்தால் மேலும் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இராது, ஆகவே, இதையெல்லாம் பார்த்துச் செய்ய வேண்டும். நிறைய இன்ஸ்பெக்டர்கள் போட்டால் சிலர் தவறுதலாக நடப்பார்கள் என்று சொன்னார்கள். தவறுதல்களுக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. அதுதான் அரசாங்கத்தின் நோக்கம் காம்பிடெண்ட் அத்தாரிட்டியைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது. கனம் உறுப்பினர் சங்கரன், "ஆர்.டி.ஓ. எதற்கு? அவருக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கின்றன" என்று சொன்னார்கள். அட்மினிஸ்ட்ரேட்

[திரு. எம். பக்தவத்சலம்] [19th October 1964

டிவ் ஆபீசர் ஒருவர் முக்கியமாக வேண்டும். காம்பிடெண்டு அத்தாரிட்டி என்று ஒருவரைப் போட்டாலும், டெக்னிக்கல் ஆபீசரின் ஆலோசனையைக் கேட்டுத்தான் அவர் நிர்ணயிக்க வேண்டும். ஆர்.டி.ஓ. வுக்கு நிறைய வேலையிருக்கிறது. அவர்களின் எண்ணிக்கையைக் கூட அதிகப் படுத்தியிருக்கிறோம். இதற்கு என்று ஒரு தனி அதிகாரி போடுவது சரியல்ல. ஆர்.டி.ஓ.-வே இருப்பதுதான் நலம் என்று நான் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஏற்கனவே ஆலைகளைப் பற்றிய பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. இப்பொழுது இருக்கிற சட்டத்தின் கீழ் வரும் ஸ்தாபனங்களுக்கு இது வேண்டாம் என்று சொல்வதும் பொருத்தம்தான். அதே மாதிரி தான் சினிமாக்களும். அதற்கென்று தனிச் சட்டம் இருக்கிறது. அவையெல்லாம் இதிலே சேர்க்க வேண்டிய அவசியமில்லை. இதிலே அரசாங்க கட்டடம் சேருமா என்று கனம் அங்கத்தினர் சங்கரன் கிளப்பினார்கள். 'பில்டிங்' என்றால் என்ன என்று பார்த்தால், அது என்ன என்ன கட்டடங்களை கவர் செய்யும் என்று பார்த்தால் தெரியும். அரசாங்கக் கட்டடத்திற்கு விதிவிலக்கு அளித்தால் "என் விலக்கு அளிக்க வேண்டும்" என்று கேட்கலாம். அப்படி இல்லாத வரை அப்படிப்பட்ட கட்டடங்களும்தான் சேரும். பொது உபயோகத்திற்கு இருக்கும் எல்லாக் கட்டடங்களுக்கும் தான் இது பொருந்தும். இப்பொழுது இருக்கிற கட்டடங்களுக்கு ஒரு காலவரம்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்யவேண்டும் என்றுதான் எல்லாவற்றையும் ஆராய்ந்து இப்பொழுது இருக்கும் முறையில் செலக்ட் கமிட்டி ஏற்றுக்கொண்டிருக்கிறது.

லைசென்சிங்பற்றி திரு. சங்கரன் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி நானே ஒரு திருத்தம் கிளாஸ் 7-க்கு கொடுக்க இருக்கிறேன். அப்பொழுது அதைப்பற்றி விளக்குகிறேன் என்று சொல்லி என் வார்த்தையை முடிக்கிறேன்.

MR. SPEAKER: The question is—

'That the Madras Public Buildings (Licensing) Bill, 1964 (L.A. Bill No. 31 of 1964) as amended by the Joint Select Committee be taken into consideration.'

The motion was put and carried and the Bill as amended by the Joint Select Committee was taken into consideration.

Clauses 2 to 6 were put and carried.

*Clause 7.*

MR. SPEAKER: The question is—

'That clause 7 do stand part of the Bill.'



19th October 1964]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move the following amendment:—

In clause 7—

(i) in sub-clause (1) (i), for the portion commencing with the words " be deemed to have been granted " and ending with the words " rules made thereunder, and ", *substitute* the following, namely:—

" be deemed to have been granted subject to the conditions ordinarily imposed under this Act or the rules made thereunder—

(A) for a period of three years commencing on the date of the expiry of the period of three months aforesaid, in any case where the period mentioned in the application and the period mentioned in such certificate of structural soundness is three years, and

(B) in any other case—

(a) for the period mentioned in the application, or

(b) for the period mentioned in such certificate of structural soundness,

whichever period is less, and such less period shall in no case exceed three years and shall commence on the date of the expiry of the period of three months aforesaid, and ";

(ii) in sub-clause (2) (i), for the portion commencing with the words " be deemed to have been granted " and ending with the words " rules made thereunder, and ", *substitute* the following namely:—

" be deemed to have been granted subject to the conditions ordinarily imposed under this Act or the rules made thereunder—

(A) for a period of three years commencing on the date of the expiry of a period of one year from the date of the commencement of this Act, in any case where the period mentioned in the application and the period mentioned in such certificate of structural soundness is three yeare, and

(B) in any other case—

(a) for the period mentioned in the application, or

(b) for the period mentioned in such certificate ot structural soundness,

whichever period is less, and such less period shall in no case exceed three years and shall commence on the date of the expiry of a period of one year from the date of the commencement of this Act, and."

Sir, I would like to explain the scope of this amendment Clause 7 (1) (i) and clause 7 (2) (i) relate to the national grant of licences. It is considered necessary to make it clear that the period

of licence should not exceed the period for which the building is certified to be structurally sound, subject however to the maximum period of three years. In other cases, the licence should be deemed (1) (i) seeks to provide that if the period mentioned in the application and in the certificate of structural soundness is three years, the licence should be deemed to have been granted for the said period of three years in all cases. The amendment to sub-clause to have been granted either for the period mentioned in the application or for the period mentioned in the certificate of structural soundness whichever period is less. Such less period will not however exceed three years. The amendment to sub-clause (2) (i) is intended to achieve the same object.

The rules will specifically provide that the applicant should specify the period in the application for licence and that the application which is not in the proper form should be returned to the applicant for re-presentation in the proper form. Rules will also provide that the Engineer giving the certificate of structural soundness should specify the period for which, in his opinion, the building will be structurally sound.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

**திரு. வை. சங்கரன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஏற்கெனவே ஒரு சந்தேகத்தைக் குறிப்பிட்டேன்; அதைத் தீர்க்கவில்லை. அதை மறுபடியும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். கிளாஸ் 7-ஐ எடுத்துக்கொண்டால், சப்-கிளாஸ் (2)-ல் அப்ளிகேஷன் போடுபவர் சர்டிபிகேட்டைக் கொடுக்க வேண்டும் என்று இம்பெரட்டிவ்வாகவோ அல்லது அது அவன் ட்யூடி என்றோ போடவில்லை

'He may attach a certificate from an Engineer'

An application under sub-section (1) or sub-section (2) may be accompanied by a certificate of structural soundness in the prescribed form obtained from an Engineer.'

என்றுதான் போட்டிருக்கிறது. இம்பெரடிவ் ட்யூடியாகவோ அல்லது ஒரு லயபிலிடியாகவோ போடவில்லை. என்ஜினியர் சர்ட்டிபிகேட் வைக்காவிட்டால் இப்பொழுது யாருடைய தவறு பட்டிருக்கிறது. அதிகாரிகள் லைசென்ஸ் இஷ்யூ செய்தாலும் செய்யலாம் செய்யாமல் இருந்தாலும் இருக்கலாம். சர்ட்டிபிகேட் வைத்து அனுப்பியிருந்தால் லைசென்ஸ் கொடுக்காவிட்டால் அப்பொழுது அது அதிகாரியின் தவறு என்று சொல்லலாம். சர்டிபிகேட் வைத்து அனுப்பலாம் என்று சொல்லப் என்று கூறமுடியாத நிலைமை இருக்கிறது. வைத்தால் வைக்கலாம் வைக்காவிட்டால் வைக்காமல் இருக்கலாம். வைக்க வேண்டும்



என்று கட்டாயம் இல்லை, லயபிலிடி இல்லை. அப்படி இல்லாமல் லையபிலிடியாக இருந்தால், தவறு யாருடையது என்று குறிப்பிட்டுச் சொல்லிவிடலாம். லைசென்ஸ் கொடுக்காவிட்டால் தவறு அதிகாரியினுடையது என்று சொல்லமுடியும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, சர்ட்டிபிகேட் அனுப்பவேண்டும் என்று கட்டாயப் படுத்தப்படவில்லை, என்று சொன்னார்கள். அதற்கு அவசியம் இல்லை. எஞ்ஜினியரின் சர்ட்டிபிகேட் இல்லாமலும் அதிகாரிகள் கொடுக்கலாம். அது அதிகாரிகளின் பொறுப்பு. கட்டடத்தில் அக்கறை உள்ளவர்கள் அதையெல்லாம் பார்த்துக் கொள்வார்கள்; ஆகவே கட்டாயப் படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

The amendment was put and carried.

Clause 7, as amended, was put and carried.

Clauses 8 to 28 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Public Buildings (Licensing) Bill, 1964 (L.A. Bill No. 31 of 1964), as amended, be passed'

The motion was put and carried and the Bill, as amended, was passed.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE. 11-00 a.m.

*Nil.*

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 20th October 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George at half-past eight of the clock, MR. SPEAKER (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### கல்விச் சலுகைகள்

*31 கேள்வி—திரு. மு. கருணாநிதி: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ராணுவ வீரர்கள், எல்லைப்பகுதியில் பணியாற்றும் போலீஸார் ஆகியோரின் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்விச் சலுகைகளை ஆயுத போலீஸ் படையினரின் பிள்ளைகளுக்கும் அளிக்க வேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசாங்கத்திற்கு ஏதேனும் உத்தரவிட்டுள்ளதா ?

(இ) ஆமெனில் அந்த உத்தரவு எப்போது அமுலுக்கு வரும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The Government of India recommended the extension of the educational concessions admissible to the children of Defence Service Personnel to the children of Armed Police Personnel serving in operational areas like NEFA, Nagaland, Jammu and Kashmir, etc., Accordingly orders were issued extending the educational concessions to such children.

### தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்

*32 கேள்வி—திரு. பி. முருகையன்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் எத்தனை தாழ்த்தப்பட்டவர்கள் ஐ.ஏ.எஸ். பட்டம் பெற்றவர்கள் இருக்கின்றனர் ?

(இ) எத்தனை பேர் மாவட்ட ஆட்சித் தலைவராக பதவி வகிக்கின்றனர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) சென்னை மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பதினைந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியாற்றி வருகின்றனர்.

(இ) அவர்களுள் இருவர் கலெக்டர்களாக செயலாற்றுகிறார்கள்.

(a) There are 15 Indian Administrative Service Officers belonging to the Scheduled Caste who are serving in this State; and

(b) Two among them are acting as Collectors.

[20th October 1964

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சர்விஸிலே இருக்கக்கூடிய அதிகாரிகளை ஐ.ஏ.எஸ்-க்குச் சிபாரிசு செய்யும்போது வருப்பு விகிதாசார அடிப்படையில் அரசாங்கம் சிபார்சு செய்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்போதைக்கப்போது மற்ற அதிகாரிகளிலிருந்து ஒருவர், இருவர் தான் ஐ.ஏ.எஸ்-க்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குச் சிபார்சு செய்யப்படுகிறார்கள். அவர்கள் தகுதியைப் பார்த்துச் சிபார்சு செய்யப்படுகிறார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** மொத்தத்தில் கெஜட் பதிவு செய்யப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அரிசன வருப்பைச் சேர்ந்தவர்கள் ஐ.ஏ.எஸ் பதவி பெற்றிருப்பது மிகவும் குறைவாக இருக்கும் காரணத்தால், இதை அதிகப்படுத்துவதற்கு ஆலோசனை உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த அரசாங்கத்திடம் அத்தகைய ஆலோசனை ஒன்றும் இல்லை. இதிலே ஏதாவது மாறுதல் செய்யவேண்டுமென்றால், மத்திய அரசாங்கம் தான் மாறுதல் செய்யவேண்டும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், மொத்தம் எத்தனை ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் இருக்கிறார்கள் ? அவர்களில் எத்தனை பேர்கள் தாழ்த்தப்பட்ட வருப்பைச் சேர்ந்தவர்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

**திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்களே, நமது தமிழ்நாட்டிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றனவா ? அந்த சத வீதம் கண்டிப்பாக நிறைவேற்றப்பட்டு வருகிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** என்ன என்ன வகையிலே ஸ்தானங்கள் ஒதுக்கப்படுகின்றனவோ அது கவனிக்கப்பட்டுத் தான் வருகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மத்திய அரசாங்கம் தான் மாறுதல் செய்ய முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தாழ்த்தப்பட்டவர்களில் தகுதியானவர்களை இந்தப் பதவிகளுக்கு நியமனம் செய்யவேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு நமது அரசாங்கம் சிபார்சு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நியமனம் செய்வது பற்றிச் சிபார்சு செய்வது இந்த அரசாங்கம். அவ்வாறு மேற்கொண்டு சிபார்சு செய்வதாக இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சர்விசில் இருக்கக்கூடிய அதிகாரிகளில் எத்தனை பேர்களுக்கு ஐ.ஏ.எஸ். பதவி வழங்கப்பட்டது ? அவர்கள் எத்தனை பேர்கள் அரிசன அதிகாரிகள் ?



20th October 1964]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த ஆண்டிலே புதிதாக ஐ.ஏ.எஸ். பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக எனக்கு நினைவில் வரவில்லை.

### திருச்சியில் நிலக்கரி எடுத்தல்

* 33. **கேள்வி—திரு. து. ப. அழகமுத்து :**
**திரு. பி. முருகையன் :**
**திரு. ஆ. கு. சுப்பையா :** } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூரை அடுத்த குளத்தூரில் கிணறு வெட்டும்போது நிலக்கரி கிடைத்த செய்தி சர்க்காரின் கவனத்திற்கு வந்ததா ?

(இ) ஆமெனில், அதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டதா ? விவரமென்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) ஆம்.

(இ) இப் பகுதியில் மாநிலப் புவியியல் பிரிவினர் பரிசீலனை நடத்தினர். இப் பகுதியில் நிலக்கரி கிடைப்பதற்கான அறிகுறி சிறிதுமில்லை. மாதிரிப் பாளங்களில் நிலக்கரி இல்லை. இதில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறு தாவர கீற்றுகள் மட்டுமே காணப்பட்டன. மேற்படி கொளத்தூர் பகுதியில் நிலக்கரிக்காகத் துளை போட்டுப் பார்த்ததில் திருப்திகரமான பலன் கிடைக்காததால், மேற்கொண்டு பரிசீலனை செய்யும் வேலை கைவிடப்பட்டது.

(*a*) Yes Sir.

(*b*) The area was investigated by the State Geological Branch. There was little indication of any coal occurrence in the area. The core samples were also devoid of coal except for a few stray thin streaks of vegetable matter. In view of the discouraging results achieved in the drilling operations, further investigation for coal in Kolathur area was given up.

### தஞ்சை மாவட்டத்தில் பாய் முடைவோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

* 34 **கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் பாய்முடைவோர் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை இயங்கி வருகின்றன ?

(இ) அவற்றுள் பணம் கையாடல் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள சங்கங்கள் எத்தனை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 9 (nine).

(*b*) None Sir.

[20th October 1964

### *Ceramic Centre at Salem*

* 35 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be please to state—

(*a*) whether the Government are aware that large quantities of ceramic are available at Salem; and

(*b*) if so, will the Government take steps to open a ceramic centre at Salem?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The main raw material required for setting up Ceramic Industries is China Clay of the required quality. Other raw materials like feldspar, quartz, bauxite, magnesite, etc., generally referred to as Ceramic minerals are required only in small quantities.

In Salem, district, though the above ceramic minerals occur in abundance, clay of the required quality is not available.

### *Export of bananas*

* 36 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Central Government asked the Madras Government to formulate a scheme for encouraging the export of bananas from this State to foreign countries?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த சர்வதேச வர்த்தகத் துறை இந்தியாவிலிருந்து வாழைப்பழ ஏற்றுமதி செய்யும் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் "வாழைப் பழ மற்ற பழ வகை அபிவிருத்திக் கார்ப்பொரேஷன்" என்னும் நிறுவனம் பதிவு செய்யப்படும். இதை ஆந்திரப் பிரதேசம், மைசூர், தமிழ்நாடு, கேரள மாநில அரசாங்கங்கள் ஏற்படுத்தும். இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 10 லட்சம். இதில் 51 சதவீதப் பங்குகளை மேற் சொன்ன மாநில அரசாங்கங்கள் எடுத்துக்கொள்ளும். மீதிப் பங்குகள் வாழை பயிரிடுவோர்களுக்கு ஒதுக்கப்படும். இந்த நாட்டிலிருந்து வாழைப்பழங்களைச் சேகரித்தல், அனுப்புதல், சேர்த்து வைத்தல், ஏற்றுமதி செய்தல் ஆகிய வேலைகளை இந்தக் கார்ப்பொரேஷன் கவனிக்கும். நமது மாநில அரசாங்கம் இந்தக் கார்பொரேஷனில் பங்குகள் எடுத்துள்ளது. இந்தக் கம்பனி பதிவாகி விட்டது. எனினும், இது இன்னும் தொழிற்பட ஆரம்பிக்கவில்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** வாழைப்பழம் எந்த எந்த ஜில்லாக்களிலிருந்து கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டு இருக்கிறது? கொள்முதல் செய்யும் முறை எப்படி?

**கனம் திரு. பூ. கக்கன் :** கொள்முதல் பண்ணுவதற்கு ஏற்பாடு பண்ணவில்லை. பொதுவாக திருச்சி, தஞ்சை மாவட்டத்தில் விளையும் பூவன்பழத்தை வெளிநாட்டில் உள்ளவர்கள் அதிகம் விரும்புகிறார்கள். அனுப்புவதற்கு அவை வாகாக இருக்கிறது.



20th October 1964]

இப்போது எந்த எந்த ஜில்லாவில் இருந்து கொள்முதல் செய்வது என்பது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** மாதம் எவ்வளவு ஏற்றுமதி செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது? அதில் நம் தமிழ் நாட்டுக்கு எவ்வளவு ஒதுக்கப்படும்?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

**திரு. சா. கணேசன் :** இந்த வாழைப்பழ ஏற்றுமதிக்காக அமைக்கப்படுகிற கார்ப்பரேஷனில் சென்னை சர்க்கார் எவ்வளவு ரூபாய் பெறுமான பங்கு எடுத்துக்கொள்வதாக உத்தேசம்? அந்தக் கார்ப்பரேஷன் யாருடைய நிர்வாகத்தில் நடைபெறுகிறது?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தக் கார்ப்பரேஷன் மத்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற பப்ளிக் செக்டார் நிறுவனமாக நடைபெறுகிறது. ஒரு லட்சத்து இருபத்தேழாயிரத்து ஐநூறு ரூபாய்க்கு ஷேர் எடுத்திருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இங்கே கொள்முதல் செய்யப்படுகிற வாழைப்பழம் எந்த எந்த நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஜப்பான், ருஷ்யா இட்டாலி ஆகிய இந்தப் பகுதிகளில் தான் இந்தப் பழத்தை அதிகம் விரும்புவதாகத் தெரிகிறது. இன்னும் அரேபியா, ஸ்பெயின் போன்ற நாடுகளிலும் விரும்புகிறார்கள்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** இப்படி வெளிநாடுகளுக்கு வாழைப் பழம் ஏற்றுமதி செய்வதை உத்தேசித்து நம் மாகாணத்திலே அதிகமாக வாழை உற்பத்தி செய்வதற்கு ஜில்லாவாரியாகத் திட்டம் வகுக்கப்பட்டு இருக்கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன் :** எந்த எந்த ஜில்லாக்களிலே வாழை நன்றாக வளருமோ அந்த அந்த ஜில்லாக்களில் அதிகம் பயிர் செய்ய திட்டமிடப்பட்டு இருக்கிறது.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** ஏற்கனவே நாட்டில் உணவுப் பஞ்சம் அதிகமாக இருப்பதனால் வெளிநாட்டுக்கு வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வதைத் தடுக்கும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன் :** நம் நாட்டில் உள்ளவர்கள் வாழைப் பழங்களில் பூவனைத் தவிர மற்ற ரகங்களையே அதிகம் விரும்புகிறார்கள். ஆகவே பூவன் பழத்தை ஏற்றுமதி செய்வதைத் தடுக்க வேண்டிய அவசியம் இல்லையென்று நினைக்கிறேன். அதோடு நமக்கு ஃபாரின் எக்ஸ்சேஞ்சும் கிடைக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தமிழ் நாட்டில் பூவன் தவிர வேறு எந்த எந்த ரகங்கள் சிபார்சு செய்யப்படும்?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதர ரகங்கள் இங்கேயே செலவாகி விடுகிறது.

[20th October 1964

**திரு மு. கருணாநிதி :** மேல்நாடுகளில் உள்ளவர்கள் பூவன் பழத்தை விரும்புவதாகச் சொன்னார்களே, அதிலே அதிக உணவு சத்து இருப்பதாக அவர்கள் கருதுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. வேறு பழங்களை அனுப்பினால் போய்ச் சேருவதற்குள் கெட்டு விடுகிறது. ரெப்ரிஜிரேடர் அமைக்கப்பட்ட கப்பல்களில் இந்தப் பூவன் பழத்தை அனுப்பினால் கெடாமல் இருக்கிறது. அதனால் தான் இந்த ரகம் அனுப்பப்படுகிறது.

**கனம் சபாநாயகர் :** அதுதான் அதில் ஏதோ ஒரு சத்து இருக்கிறது.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** சமீபத்தில் வெளிநாட்டுக்குக் கப்பல்களில் அனுப்பிய வாழைப்பழங்கள் அழுகி வீணாகப்போய் விட்டதாக வெளி வந்த செய்தியைப் பத்திரிகைகளில் பார்த்தோம். இப்படி நமக்கும் இல்லாமல், அவர்களுக்கும் இல்லாமல் பழங்களை அழுகவிடுவதற்குப் பதிலாக, வெளிநாடுகளுக்கு அனுப்பாமல் இருக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** நம் மாநிலத்தில் இருந்து அனுப்பப்பட்டது அழுகிப்போவதாகத் தகவல் இல்லை. பம்பாய் மாநிலத்தில் இருந்து அனுப்பப்பட்டது சரியான முறையில் அனுப்பப்படவில்லை. அதனால் வீணாகியிருக்கலாம். நாம் அந்த மாதிரி அனுப்புவதில்லை.

**திரு. து. ப. அழகமுத்து :** நம்முடைய மாநிலத்தில் தற்போது உற்பத்தியாகும் வாழைப்பழத்தை வெளிநாட்டிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்து ஏற்றுமதி செய்யும் வகையில் அதிகம் இருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அப்படி அதிகமிருந்தால்தானே அனுப்பப் போகிறோம்.

**திரு. கோ. சி. மணி :** வாழை விளைகிற பகுதியாகிய தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறையில் வாழை ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது. அங்குள்ள அதிகாரிகளிடம் அரசாங்கம் இது சம்பந்தமாக கலந்து ஆலோசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அவர்களை கலந்தே இதுபற்றி பரிசீலனை செய்திருக்கிறோம் என்று நினைக்கிறேன். அப்படியில்லாவிட்டாலும் அவர்களைக் கலந்து பரிசீலனை செய்ய முடியும் என்று கருதுகிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** வாழைப்பழத்தினால் நமக்கு வெளிநாட்டு செலாவணி கிடைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இங்கு அதிகம் உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ் மலை



20th October 1964]

வாழைப்பழத்தை ஜவ்வாது மலையில் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யும் உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** எங்கு எங்கு உற்பத்தி செய்ய முடியுமோ அங்கு அங்கு உற்பத்தி செய்ய விவசாய இலாகா மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. மு. கருணாநிதி :** வெளிநாட்டிலுள்ளவர்கள் இந்தப் பூவன் பழத்தில் உணவு சத்து இருக்கிறது என்பதற்காக விரும்புகிறார்களா ? ஒருவேளை மதுபானம் தயாரிப்பதற்கு மிகவும் உபயோகமாக இருக்கிறது என்று விரும்புகிறார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அநேகமாக உணவுக்காக என்று நினைக்கிறேன்.

**திரு. சா. கணேசன் :** வாழைப்பழத்திலிருந்து மது இறக்குவது சுலபமாகவும் லாபகரமாகவும் இருக்குமென்று பலர் கருதுகின்ற காரணத்தால் மதுபானத்திற்காக அதிகம் விரும்புகிறார்களோ என்று நான் அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இத்தகைய உப கேள்விகளின் மூலமாக இந்தப் பிரசாரத்தை இந்த நாட்டில் செய்ய வேண்டாம் என்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சா. கணேசன் :** ஏற்கெனவே நடந்துக்கொண்டிருக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** வாழைப்பழ ஏற்றுமதி செய்வது நம் நாட்டுப் பொருளாதாரத்திற்கு உதவிகரமாக இருக்கிறது. அதற்கு இன்னும் ஊக்கம் அளிக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதே சமயத்தில் வாழைப்பழம் உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு என்னென்ன சலுகைகளை சர்க்கார் கொடுக்கும் என்று அறியலாமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கெனவே பல சலுகைகள் கொடுக்கப்படுகிறது. தனியாகக் கேள்வி போட்டால் முழு விவரம் சொல்லுகிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** இந்த வாழைப்பழம் நீண்ட நாட்கள் கெடாமல் இருக்க எத்தகைய முறையில் அனுப்பி வைக்கப்படுகிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ரெப்ரிஜிரேட்டர் அமைப்புள்ள கப்பல்களில் அனுப்ப ஏற்பாடு செய்கிறோம்.

**திரு. ர. ஜீவரத்தினம் :** வாழைப்பழம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதனால் வாழை பயிரிடுவது லாபகரமாக இருக்கிறது என்று நெல் சாகுபடி செய்வதை விட்டு பல விவசாயிகள் வாழை போடுகிறார்கள். அதனால் உணவுக் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, வாழை உற்பத்தி செய்வது நிறுத்தி நெல் பயிரிட முற்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[20th October 1964

**கனம் திரு. பூ. கக்கன் :** நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். வெளிநாடுகளுக்கு நாம் அனுப்புகிற வாழைப்பழம் காரணமாக நமக்கு எந்தவிதமான கஷ்டங்களும் வந்துவிடாது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** வாழைப்பழ சாகுபடியாளருக்கு அரசாங்கம் மேலும் பல தனிச் சலுகைகளை அளிக்க முன் வருவார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அது எல்லாம் ஏற்றுமதியைப் பொறுத்திருக்கிறது. நமக்கு லாபம் அதிகம் வந்தால் இன்னும் அதிகம் உதவி செய்யக்கூடும்.

**திரு. க. ர. நல்லசிவம் :** வெளிநாடுகள் சிலவற்றில் நம்முடைய நாட்டு வாழைப்பழத்திற்கு கிராக்கி இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உலகிலுள்ள வேறுபல நாடுகளிலும்கூட நம்முடைய வாழைப் பழத்திற்கு மார்க்கெட் ஏற்படும் வகையில் இதுபற்றி எல்லா நாடுகளிலும் பிரச்சாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** முதலிலே ஜப்பான், ருஷ்யா, இத்தாலி, அரேபியா போன்ற நாடுகளில் நம் நாட்டு வாழைப்பழத்திற்கு கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. ஏற்றுமதி செய்வது நமக்கு லாபகரமாகவும் வெற்றிகரமாகவும் இருந்தால் பிறநாடுகளுக்கும் அனுப்ப பிரச்சாரம் செய்வது பற்றி யோசிக்கலாம்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** ஏற்கெனவே வெளிநாட்டுச் செலாவணி மூலமாக உணவு தானியங்களுக்காக நூற்றுக் கணக்கான கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. வாழைப்பழம் 'கிங் அமங் ஃப்ரூட்ஸ்'. அவ்வளவு நல்ல ஆகாரம். இப்போது உள்ள பஞ்ச காலத்திலே இவ்வாறு வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வதை நிறுத்தி விடுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மலைப் பகுதியில் மலை வாழைப் பழங்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இதர பழங்கள் எல்லாம் ஜாஸ்தி உற்பத்தி செய்யப்படுவதில்லை. குறிப்பிட்ட பழங்களை மட்டும் நம்முடைய மக்கள் விரும்புவதால் மற்றவற்றை நமக்குக் கஷ்டம் இல்லாத முறையிலே அனுப்பலாம் என்றுதான் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நமக்குக் கஷ்டம் இல்லாத காலத்தில் பழங்களை அனுப்பலாம்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** பண்ட மாற்று முறையிலே நம்முடைய நாட்டிலிருந்து பழங்களை அனுப்பி அரிசி விளைகிற நாடுகளிலிருந்து அரிசியைப் பெற அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பண்ட மாற்று முறை அவசியமில்லை. வாழைப் பழங்களை அனுப்பி அன்னியச் செலவாணி பெறுகிறோம். அந்த அன்னியச் செலாவணியைப் பயன்படுத்தி மற்ற நாடுகளிடமிருந்து அரிசியை வாங்கிக்கொள்ளலாம்.



20th October 1964]

**திரு. து. ப. அழகமுத்து :** ஏற்றுமதிக்குத் தகுதியுள்ள பூவன் வாழைப்பழம் எவ்வளவு நம் நாட்டில் உற்பத்தியாகிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் தற்போது இல்லை.

**திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம் :** அதிகக் கஷ்டம் வரும்போது ஏற்றுமதியை நிறுத்திவிடலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இப்போது இருக்கும் உணவுக் கஷ்டத்தை விட இன்னும் அதிகமாக வரும் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இன்னும் பழம் அனுப்பவே இல்லை. அதற்கான ஏற்பாடுகள் இனித்தான் செய்ய வேண்டியிருக்கிறது.

### தஞ்சை மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதிகள்

* 37 கேள்வி—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் தஞ்சை மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்க எத்தனை திட்டங்கள் போடப்பட்டுள்ளன ?

(இ) அந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(உ) இந்தத் திட்டங்களை நிறைவேற்ற தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) 1963-64-ல் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நடந்துவருகிற அல்லது நிறைவேற்ற எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை 437 ஆகும்.

(இ) ரூ. 19,86,050.

(உ) பொதுப்பணித் துறையைச் சேர்ந்த முறையான பணியாளர்களாலும் விசேஷ சிறிய பாசனத் திட்டத்தின் கீழ் அமர்த்தப்பட்ட விசேஷ பணியாளர்களாலும் மேற்படி வேலைகள் நிறைவேற்றப்பட்டு வந்தன.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இந்தத் திட்டங்கள் இன்னும் எத்தனை ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.

**கனம் திரு. பூ. கக்கன் :** எத்தனை ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் என்று இப்போது சொல்லமுடியாது. எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு துரிதமாக அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, is it a fact that Government have allotted money for sinking 700 wells in Thanjavur district and executed the work at the cost of the Government?

**THE HON. SRI P. KAKKAN** : I have not got the information. A separate question may be put.

[20th October 1964

**திரு. கோ. சி. மணி :** இந்தத் திட்டம் சீராகவும் சிறப்பாகவும் நிறைவேற்றப்படவேண்டுமானால் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒரு வாய்க்காலை அரசாங்கம் பி.டபிள்யு.டி. இலாகாவில் கொடுக்க வேண்டுமென்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்களா?

**கனம் திரு. பூ. கக்கன் :** சூப்பரின்டெண்டிங் எஞ்சினியர் சீஃப் எஞ்சினியர் சேர்ந்து சில திட்டங்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** இந்தச் சிறு பாசனத் திட்டத்தின் கீழ் பம்ப் செட் மூலம் நீர் இறைவைப் பாசனம் சேர்க்கப்பட்டுள்ளது. தஞ்சையில் எத்தனை நீர் இறைவைப் பாசனம் சேர்க்கப்பட்டுள்ளது?

**கனம் திரு. பூ. கக்கன் :** தனியாகக் கேள்வி போடவேண்டும்.

**திரு. க. ர. நல்லசிவம் :** அமெரிக்க நிபுணர்கள் தஞ்சையில் சுற்றுப் பயணம் செய்தபோது பூமிக்கடியில் ஏராளமான தண்ணீர் இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த கிணறு என்ற அடிப்படையில் இல்லாமல் பெரிய அளவில் தண்ணீரை எடுக்க சர்க்கார் என்ன திட்டமிட்டிருக்கிறார்கள்?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்த மாதிரி சில இடங்களில் கிணறுகள் வெட்டி தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது. பட்டுக்கோட்டை வட்டாரத்தில் கிணறுகள் வெட்டி பயிர் செய்துவருகிறார்கள். மேலும் எந்த இடத்தில் ஜாஸ்தி தண்ணீர் வருகிறதோ அங்கு ட்யூப் வெல்ஸ் ஏற்படுத்தவேண்டிய அவசியம் பரிசீலிக்கப்படுகிறது.

**திரு. எம். தண்டாயுதபாணி :** அமைச்சர் அவர்கள் கூறியபடி பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு பகுதிகளில் கிணறு வெட்டி பாசனம் செய்வதற்கு முழு மானியம் மத்திய அரசில் இருந்து கொடுப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. மத்திய அரசு எவ்வளவு மானியம் கொடுக்கிறது? மாநில அரசு எவ்வளவு மானியம் கொடுக்கிறது?

**கனம் திரு. பூ. கக்கன் :** பொதுவாக மத்திய அரசு, மாநில அரசு சேர்ந்து உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் கடன் கொடுக்கிறது.

**திரு. ஆ. துரையரசன் :** பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, அறந்தாங்கி பகுதிகளில் பூமிக்கடியில் அதிகமான தண்ணீர் இருப்பதை விவசாயிகளுக்குப் பயன்தரத்தக்க வகையில் செய்ய சர்க்கார் என்ன திட்டமிட்டிருக்கிறார்கள்?

**கனம் திரு. பூ. கக்கன் :** பட்டுக்கோட்டை பகுதியில் அதைப் பற்றி இன்வெஸ்டிகேஷன் செய்துகொண்டிருக்கிறார்கள். அறந்தாங்கி பகுதியில் தீவிரமாக வேலையை மேற்கொள்ளவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.



20th October 1964]

**திரு. கோ. சி. மணி :** பட்டுக்கோட்டை வட்டாரத்திலிருந்து ட்யூப் வெல்கள் அமைக்க வேண்டுமென்று எத்தனை அப்ளிகேஷன்கள் வந்திருக்கின்றன? எவ்வளவு கொடுக்கப்பட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. பூ. கக்கன் :** தனியாகக் கேள்வி போடவேண்டும்.

**திரு. ஆ. துரையரசன் :** அறந்தாங்கி வட்டம் அம்மாப் பட்டணத்தில் நீர் ஊற்றிலிருந்து தண்ணீரை எடுத்து கிண்டிக்கு அனுப்பப்பட்டது அரசாங்கத்துக்குத் தெரியுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

**திரு அ. ராகவ ரெட்டி :** தஞ்சை ஜில்லாவைப் போன்றே மற்ற ஜில்லாக்களிலும் பூமிக்கடியில் ஏராளமான தண்ணீர் இருக்கிறது என்ற தகவல் இருக்கிறது. அம்மாதிரி மற்ற ஜில்லாக்களிலும் ஆராய்ச்சி செய்ய, ட்யூப் வெல்ஸ் போன்றவற்றை அமைக்க அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** எங்கெல்லாம் தண்ணீர் கிடைக்கிறதோ அதைப் பயன்படுத்த அரசாங்கம் முன் வரும்.

**திரு. கோ. சி. மணி :** அமைச்சர் அவர்கள் சொன்ன திட்டங்களில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் எத்தனை? நிறைவேற்றப்பட இருக்கும் திட்டங்கள் எவ்வளவு?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் கீழ் நிறைவேற்றப்பட்டது 25; அண்டர் புரோகிரஸ் 75; நிறைவேற்றப்பட வேண்டியவை 102. நம்பர் ஆப் வொர்க்ஸ் அண்டர் கன்ட்ரோல் ஆப் எஸ்.பி. 21; புரோகிரஸ் 83; எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை 81; "நான் எஸ்.பி." பூர்த்தியானது 7; புரோகிரஸ் 27; எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை 1. இவையெல்லாம் உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. எம். தண்டாயுதபாணி :** அந்தப் பகுதிகளில் வெட்டப்படுகிற கிணறுகளுக்கு 2,000 ரூபாய் கடனுகக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை 4,000 ரூபாய் அளவுக்குக் கொடுத்தால் நலமாக இருக்குமென்று அந்தப் பகுதி மக்கள் முறையிட்டிருக்கிறார்கள். அரசினர் அதைப் பரிசீலனை செய்து 4,000 ரூபாய் கடன் கொடுக்க வழிவகை செய்வார்களா?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கனவே ஆயிரம் ரூபாய் கொடுத்து வந்தோம். பின்னர் பரிசீலனை செய்து இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து வருகிறோம். சில இடங்களில் பக்கத்தில் ஊற்று இல்லையென்று சொன்னால் 3,000 ரூபாய் கூடக் கொடுத்திருக்கிறோம். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரை எஞ்சினீயர்கள் சென்று பரிசீலனை செய்து முடிவுக்கு வருவார்கள்.

[20th October 1964

**திருவிலஞ்சி குமரன் கூட்டுறவு விவசாயப்பண்ணை, இலஞ்சி**

* 38 கேள்வி—**திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தாலுக்கா, இலஞ்சி கிராமம் 2095 நெ. திருவிலஞ்சி குமரன் கூட்டுறவு விவசாயப்பண்ணை சம்பந்தமாக அரசாங்கத்திற்கு புகார் வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** சங்கத் தலைவருக்கு எதிராக சில குற்றச்சாட்டுகள் அடங்கிய மனுக்கள் வந்தன. மாநில கூட்டுறவு சங்க பதிவாளருடன் அந்த குற்றச்சாட்டுக்கள் குறித்து கலந்தாலோசித்து, அவற்றின்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் முடிவு செய்தது. அதற்கு அடுத்தாற்போல் ஆகஸ்ட் 1964-ல் மற்றும் சில குற்றச்சாட்டுகள் அடங்கிய மனுக்கள் வந்தன. இந்தக் குற்றச்சாட்டுகள் மாநில கூட்டுறவு சங்க பதிவாளருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஸார், இந்த கூட்டுறவுப் பண்ணை ஆரம்பித்து எத்தனை வருடமாகின்றது. எவ்வளவு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இதுவரை லாபத்தில் நடக்கிறதா அல்லது நஷ்டத்தில் நடந்து வருகிறதா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** இந்த பண்ணையில் 68 ஏக்கர் உழவு செய்வதற்கு எடுத்திருக்கிறார்கள். ஏழு பேர் மானேஜ்மெண்ட் செய்து கொண்டிருக்கிறார்கள். 79 மெம்பர்கள் இருக்கிறார்கள்.

**திரு. சா. கணேசன்:** இந்த நிர்வாகஸ்தர்களின் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டாம் என்று தீர்மானிப்பதற்குரிய காரணம் என்ன, அவர்கள் மீது வந்த புகார் என்ன, இந்த புகாரின் காரணமாக ஏற்பட்ட நஷ்டம் என்ன?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** இதில் முக்கியமாக மெம்பர்களை சேர்த்துக்கொள்வதில் தகராறு இருக்கின்றது என்பதைப்பற்றித்தான் முதலில் கேட்டார்கள். பிறகு சில டிஸ்க்ரிமினேஷன் அதாவது சில பாகுபாடுகள் இருப்பதாக புகார் சொல்லப்பட்டது. இதைப்போன்ற புகார்கள் ஆரம்பத்தில் வந்தது. இதைப்பற்றி ரெஜிஸ்டிரார் அவர்கள் விசாரித்து இதில் ஒன்றும் இல்லை, ஒழுங்காகத்தான் நடக்கிறது என்று சொல்லி தள்ளிவிட்டார்கள்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** இதே கிராமத்தில் இன்னொரு சொஸைட்டி இருந்தும் அதற்கு கொடுக்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டு இதில் அடங்கியிருந்ததா?



20th October 1964]

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பது, இன்னொரு சொஸைட்டியும் தங்கள் சொஸைட்டிக்கு நிலம் ஒதுக்கப்படவேண்டும் என்று கோரியிருந்தார்கள். அதற்கும் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்பது தான்.

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** அந்த தகவல்கள் என்னிடமில்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, in view of the fact that most of the Co-operative Farming Societies have failed, will the Government consider the desirability of giving up these societies?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** எல்லா இடத்திலும் சரியாக நடக்கவில்லை என்று சொல்வது சரியல்ல.

**திரு. க. ர. நல்லசிவம்:** இந்தக் கூட்டுறவு சங்கத்திற்கு சர்க்கார் மான்யமாக எவ்வளவு கொடுத்திருக்கிறது? கடனாக எவ்வளவு கொடுத்திருக்கிறது? கொடுத்த கடனை எல்லாம் ஒழுங்காக காலா காலத்தில் கட்டிவிட்டார்களா?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: The Government guarantee to the repayment of short-term loans for Rs. 10,000 from the Central Bank. The Society has since been sanctioned a Government loan of Rs. 8,150 and a subsidy of Rs. 1,400 for the purchase of plough bulls and agricultural implements.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** எல்லா கூட்டுறவு சங்கங்களும் சரியாக நடக்கவில்லை என்று சொல்லமுடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால் சரியாக நடக்கின்ற கூட்டுறவு சங்கங்கள் எத்தனை என்பதைத் தெரிவிக்க முடியுமா?

**கனம் சபாநாயகர்:** உடனடியாக எப்படி இதற்கு பதில் சொல்ல முடியும்?

**திரு. கோ. சி. மணி:** சம்பந்தப்பட்ட புகார் விசாரணை செய்யப்பட்டதா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** அதுதான் முதல் கேள்விக்கே பதில் சொன்னேன். கொடுக்கப்பட்ட புகாரைப் பற்றி ரெஜிஸ்டிரார் அவர்கள் விசாரணை செய்து அதில் ஒன்றும் இல்லை என்று தள்ளிவிட்டார்கள். அடுத்ததாக மறுபடியும் வைஸ் பிரசிடெண்டாக இருப்பவர் வேறொரு புகார் அனுப்பினார்கள் பின்னால் அவ்விதம் கொடுக்க புகாரில் சொன்னது ஒன்றும் இல்லை என்று வாபஸ் வாங்கிக்கொண்டார்கள். வேறுள்ள புகார்களை எல்லாம் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன்.

[20th October 1964

## மீன் வளர்த்தல்

*39 கேள்வி—திரு. சா. ராமசாமி: கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் என்னென்ன வகை மீன்கள் வளர்க்கப் படுகின்றன ?

(இ) நம் மாநிலத்திலிருந்து மீன்கள் இன உற்பத்திக்காகவும், உணவுக்காகவும் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றனவா ?

(உ) இம் மாநிலத்தில் எங்கெங்கு மீன் பதப்படுத்தும் நிலையங்கள் உள்ளன ?

(எ) 1962-63-ல் பதப்படுத்துவதற்காக செலவான தொகை எவ்வளவு ? அதனால் வருவாய் எவ்வளவு ?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) இம் மாநிலத்தில் அடியிற் கண்ட மீன் வகைகள் வளர்க்கப்படுகின்றன:—

கண்ணாடிக் கெண்டை, தங்கக் கெண்டை, ட்ரவுட், காக்கா மீன், சேல் கெண்டையில் மூன்று நான்கு ரகங்கள், வெண்கெண்டையில் இரண்டு மூன்று ரகங்கள், வாளை, காணும் கெளுத்தி, விரால் திலாப்பியா. கண்ணாடிக் கெண்டை, பால்மீன், மடவை, சங்கரா போன்றவை.

(இ) ஆம். பொதுமக்கள் உட்கொள்வதற்காகவும் வளர்ப்பதற்காகவும் மீன் வகைகள் இம் மாநிலத்திற்கு வெளியில் உள்ள இடங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

(உ) 1. மேட்டூர் அணைக்கட்டு, சேலம் மாவட்டம்.

2. தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம்.

3. எண்ணூர், செங்கற்பட்டு மாவட்டம்.

4. நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டம்.

5. கடலூர், தென் ஆர்க்காடு மாவட்டம்.

6. நீலங்கரை, செங்கற்பட்டு மாவட்டம்.

(எ) 1962-63-ல் செலவான தொகை: 60,950 ரூபாய் 43 காசுகள்.

1962-63-ல் பெற்ற வருமானம்.—61,532 ரூபாய் 21 காசுகள்.

திரு. சா. கணேசன்: வாழைப்பழம் ஏற்றுமதிக்கு கஷ்டங்கள் இருப்பதாக சொல்லப்பட்டது. அப்படியென்றால் இதிலுள்ள வாளையையாவது ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

கனம் திரு. கோ. பூவராகன்: நான் குறிப்பிட்டது வாழை அல்ல. வாளை என்கின்ற மீனைப்பற்றி.

திரு. சா. ராமசாமி: தலைவர் அவர்களே, மீன் வகைகளை பிடித்து பதப்படுத்தி வைக்கின்ற முறைகள் நம் நாட்டில் குறைவாக இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்ற மீன்களைத்தான் நாம் உபயோகப்படுத்தவேண்டியிருக்கிறது.



20th October 1964]

விலையும் அதிகம் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே நம் நாட்டிலேயே மீன்களை பக்குவப்படுத்துவதற்கான நடவடிக்கையை தீவிரப்படுத்த உத்தேசம் உண்டா ?

கனம் திரு கோ. பூவராகன்: என்னுடைய விடையில் மீன்களை பனிக்கட்டியில் வைத்து பதப்படுத்துவதைப்பற்றி சொன்னேன். டின்களில் மீன்களை அடைத்து பதப்படுத்துவது பற்றி அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எத்துக்கொண்டிருக்கிறது. சீக்கிரமாகவே இது கிடைப்பதற்கு வேண்டிய வழி செய்யப்படும்.

திரு. எம். தண்டாயுதபாணி: தஞ்சாவூர் ஜில்லாவில் மீன் வளம் போதிய அளவு அமையவில்லை. அதிராம்பட்டினத்தில் இதற்காக மீன் வள நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

கனம் திரு. கோ. பூவராகன்: இப்போது பல இடங்களிலும் இதற்கான வசதி செய்து கொடுத்து போதிய பலனும் கிடைத்து வருகிறது. நாகப்பட்டிணம், தஞ்சாவூர் இந்த இடங்களிலும் ஏற்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

SRI K. S. G. HAJA SHERIFF: Sir, are the Government aware of the fact that this food stuff has not been tapped to any appreciable extent and if so, in view of the great scarcity of other foodstuffs, will the Government find it possible to tap this foodstuff, taking all aids possible?

கனம் திரு. கோ. பூவராகன்: இதை அரசாங்கம் உணர்ந்துதான் க்ராஷ் ப்ரோக்ராமில் பல திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன.

திரு. கோ. சி. மணி: சேல் கெண்டை என்ற இனம் இப்பொழுது இருந்து வருகிறதா ? இது எவ்வளவு நம் மாகாணத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. கோ. பூவராகன்: இதை இரண்டு மூன்று வகைகளாக வைத்திருக்கிறார்கள். என்னிடத்தில் தனித் தனியாக பெயர் இல்லை.

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, மீன் வளர்ப்பு இலாகாவினர் பூவாளூர் பஞ்சாயத்து யூனியனுக்கு மீன் குஞ்சுகள் கொடுத்தது, வளர்ந்தபோது அவைகளெல்லாம் தவளைக் குஞ்சுகளாக மாறி விட்டன என்று சர்க்காருக்கு புகார் வந்ததா ?

கனம் திரு. கோ. பூவராகன்: கனம் அங்கத்தினர் தவளைக் குஞ்சுகளை வளர்த்தால் தவளைகளாக ஆகியிருக்கும். மீன் குஞ்சுகளை வளர்த்தால் மீன்களாக ஆகியிருக்கும்.

கனம் சபாநாயகர்: மீன் குஞ்சுகளே தவளைகளாக மாறினால் தவளைகளையும் சாப்பிடலாம் என்பதற்கு இது ஒரு ஆதாரம். (சிரிப்பு)

திரு. ம. கமலநாதன்: மீன் வளத்தைப் பெருக்குவதற்குச் செயற்கை முறையில் மீன் முட்டைகளை உண்டாக்கும் திட்டம் எந்த அளவில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

[20th October 1964

**கனம் திரு. கோ. பூவராகன் :** செயற்கை முறையில் உற்பத்தி செய்யும் திட்டம் நல்ல முறையில் நடந்து வருகிறது. அந்த முறையிலும் நம் ராஜ்யத்தில் செய்து வருகிறோம்.

**திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர் :** அமைச்சர் அவர்கள் செலவு 60,000 ரூபாய் என்றும் வருவாய் 61,000 ரூபாய் என்றும் சொல்லியிருக்கிறார்கள். மேட்டூரைப் பொறுத்த வரையிலும் அங்குள்ள மீன்களுக்கு கல்கத்தாவில் நல்ல கிராக்கி இருப்பதால், கிலோ ஒன்றுக்கு தனிப்பட்ட வியாபாரிக்கு 2 ரூபாய் லாபம் கிடைப்பதால் கூட்டுறவு முறையில் ஏற்பாடு செய்து நல்ல வருவாய் வருவதற்கு அதிக விரைவில் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** மொத்தத்தில் மேட்டூர் டாமில் மட்டும் 17,000 ரூபாய் செலவு செய்யப்பட்டு 20,000 ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. மேட்டூரிலிருந்து கல்கத்தா போன்ற இடங்களுக்கு கோவாப்பரேடிவ் சொஸைட்டி மூலம் அனுப்பப்பட்டு வருகிறது.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, மீன் வளர்ப்புக்கும், பக்குவப்படுத்துவதற்கும் செலவு செய்யும் அரசாங்கம் கருவாட்டுக்கான திட்டம் ஏதாவது வைத்திருக்கிறார்களா? வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்காக திட்டம் போட்டு தொகை ஒதுக்கி வைத்திருக்கிறார்களா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** கருவாடு தயாரிக்கும் திட்டம் ஒன்றும் இல்லை. வெளிநாட்டுக்கு 1962–63-ம் ஆண்டில் 267.66 மெட்ரிக் டன்னும், 1963–64-ம் ஆண்டில் 8,565.962 மெட்ரிக் டன்னும் அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** மீன் வளர்ப்புத் திட்டத்திலே தொட்டிகள் கட்டுவதிலே செலவழிப்பதால் வருமானம் அதிகமாக இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு பதில் ஆங்காங்கு கிராமங்களில் இருக்கிற குளங்களில் மீன் குஞ்சுகளை வளர்ப்பதற்கான திட்டமாக மாற்றினால் லாபம் அதிகமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அந்த மாதிரி மாற்றி அமைத்துச் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** ஓரளவு வளர்க்கப்பட்ட பிறகு தான் குட்டைகளில் விட முடியும். அந்த நிலையில் தான் செய்கிறார்கள். ஆரம்பத்தில் முட்டையில் இருந்து வெளி வந்து கொஞ்ச காலம் வரையில் தனிப் பராமரிப்பு இருந்து பிறகு குட்டைகளில் விட்டுப் பாதுகாக்க முடியுமே தவிர அந்த முறை இல்லையென்றால் பாதுகாக்க முடியாது.

**திரு. மு. கருணாநிதி :** மீன்கள் வெளியிடங்களுக்கு அனுப்பப்படுவதாகக் கூறினார்கள். இனப் பெருக்குக்கு எந்த எந்த இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன? உணவுக்காக எந்த இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன?



20th October 1964]

**கனம் திரு. கோ. பூவராகன் :** இனப் பெருக்குக்காக பஞ்சாப், உத்தர் பிரதேஷ், கேரளா, உகாண்டா போன்ற இடங்களுக்கு அனுப்பிக்கொண்டிருந்தோம். இப்போது யார் யார் எங்கிருந்து கேட்கிறார்களோ அங்கு அனுப்புகிறோம். மீனைப் பொறுத்த அளவில் குளம் குட்டைகளில், நீர்த் தேக்கங்களில் உள்ள மீன்களை பெங்கால், கல்கத்தா போன்ற இடங்களுக்கு அனுப்புகிறோம். மற்றும் வெளி நாடுகளுக்கு தனிப்பட்டவர்களால் அனுப்பப்பட்டு சிலோன் போகிறது. மற்ற விவரங்கள் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** இத்தனை மீன் உற்பத்திக்கு அரசாங்கம் செலவழித்தும் மீன் விலை 10 அணா, 12 அணா இருந்தது 1½ ரூபாய், 1¾ ரூபாய் ஆக இருக்கிறது. வெளி நாடுகளுக்கும் வெளி மாகாணங்களுக்கும் அனுப்புவதை சிறிது காலத்திற்கு நிறுத்தி வைப்பது பற்றி யோசிப்பார்களா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** வெளி நாடுகளுக்கும் வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படும் மீன்கள் உள்நாட்டில் விற்பனை ஆவதில்லை. மேட்டூர் தேக்கத்தில் கட்லா மீன் பெரிய அளவில் இருப்பதால் அது பக்கத்திலுள்ள வட்டாரங்களில் விற்பனை ஆவதில்லை. அதனால்தான் அது வங்காளத்திற்கு அனுப்பப்படுகிறது. அதே போன்று தென் மாவட்டங்களில் கடலில் பிடிக்கும் மிகச் சிறிய மீன்கள் அந்த ஊரிலும் பக்கத்து பகுதிகளிலும் விற்பனை ஆகாததால் எங்கு அவைகளை விருப்பமாக ஏற்றுக் கொள்கிறார்களோ அந்த இடத்திற்கு ஏற்றுமதி செய்து விற்பனை செய்யப்படுகிறது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கேரளாவிலிருந்து அதிகமாக தவளைகளை ஏற்றுமதி செய்கிறார்களே, நம் மாநிலத்திலிருந்தும் ஏற்றுமதி செய்வது பரிசீலிக்கப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** நம் மாநிலத்திலிருந்து தவளைகளை ஏற்றுமதி செய்ய திட்டம் ஒன்றும் இல்லை. கேரளக்காரர்கள் இங்கே வந்து தவளைகளை வாங்கிச் செல்வதாக இப்போது தகவல் இருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** வெளியிடங்களுக்கு மீன்களை அனுப்புவதன் மூலம் கிடைக்கிற வருமானம் எவ்வளவு என்று கூற முடியுமா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** வருமானம் பற்றி என்னிடம் தகவல் இல்லை. என்னென்ன வகைகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது என்று தகவல் இருக்கிறது. அதைப் படிக்கிறேன்.—

| | 1962–63 | 1963–64 |
|---|---|---|
| Fish—salted, dried .. | 667·667 M.Tons | 8,565·962 M.Tons. |
| Prawns .. .. .. | 332·179 ,, | 444·580 ,, |
| Shark fins, fish maws, etc. .. | 139·506 ,, | 150·082 ,, |
| Other sorts .. .. .. | 1,195·608 ,, | 5·447 ,, |

[20th October 1964

| | 1962–63. M. Tons. | 1963–64 M. Tons. | |
|---|---|---|---|
| Chilled or frozen prawns and shrimps .. .. .. .. | | 16,585 | |
| Frozen fish .. .. .. .. | | 2,787 | ,, |
| Dried turtle meat .. .. .. | | 0·680 | ,, |
| Frozen turtle meat .. .. .. | | 10·017 | ,, |

**திரு. எம். தண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே, அமைச்சர் கூறிய பதிலில் மீன் பதப்படுத்தும் நிலையம் நாகப்பட்டணத்தில் ஒன்றும், தஞ்சையில் ஒன்றும் அமைக்கப்படுவதாகக் கூறினார்கள். நாகையில் அமைக்கப்படுவது சரியாக இருந்தாலும், தஞ்சைக்கு பதப்படுத்துவதற்கு அதிராம்பட்டணம் பகுதியிலிருந்துதான் மீன்களைக் கொண்டு வரவேண்டும். முப்பது மைல்களுக்கு மேல் தொலைவு இருக்கிறது. ஒரு பதனிடும் நிலையம் அதிராம் பட்டணத்தில் அமைக்கப்படுவதாக இருந்து பிற்பாடு கைவிடப் பட்டது. ஆகையால் தஞ்சையில் அமைக்கப்படுவதை மாற்றி அதிராம்பட்டணத்தில் அமைக்க ஆவன செய்ய முடியுமா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** தஞ்சையிலும் நாகப் பட்டிணத்திலும் வேலை துவக்கப்பட்டு முடியும் தறுவாயில் இருக் கிறது. அதிராம்பட்டிணத்தில் வேண்டுமென்று சொன்னால் நாகப் பட்டிணத்தில் போதுமான அளவு இருந்து மேலும் தேவைப் பட்டால் அங்கும் ஏற்பாடு செய்யலாம்.

SRI K. S. G. HAJA SHERIFF : Will the Government place before the House a statement regarding the total catch of river and sea fish and also prawns for a period of one year and the steps the Government have taken to increase production of fish?

**கனம் திரு. கோ. பூவராகன் :** பரிசீலனை செய்து சபையில் வைக்க முயற்சி எடுத்துக்கொள்கிறேன்.

**திரு. சி. பொன்னுசாமி நாடார் :** மீன் உற்பத்தியோடு சரியா அல்லது இதிலே ஆமையும் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். ஆமையை இந்த நாட்டில் ஒரு சிலர் மட்டுமல்லாமல் அந்நிய நாட்டிலும் விருப்பத்தோடும் கிராக்கி யோடும் வாங்கி உபயோகப்படுத்துகிறார்கள். அதனால் அந்நியச் செலாவணியும் கிடைக்கும். ஆகையால் அதையும் அதிகம் உற்பத்தி செய்ய திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** உற்பத்தி செய்ய திட்டம் ஒன்றும் இல்லை. ஆமையை இங்கிருந்து வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய உத்தேசம் ஏதும் இல்லை.

**திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர் :** கனம் அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலில் கூட்டுறவு முறையில் மேட்டூரிலிருந்து மீன் விற்பனை செய்வதாகச் சொன்னார்கள். கல்கத்தா முதலிய இடங்களுக்கு இதுவரையில் தனிப்பட்ட வியாபாரிகள் அனுப்பி வந்தார்கள். எப்பொழுதிருந்து கூட்டுறவு முறையிலே ஆரம்பித் தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.



20th October 1964]

**கனம் திரு. கோ. பூவராகன் :** கூட்டுறவுச் சங்கத்திற்கு இங்கே மீன் பிடித்து விற்பதற்கு நம்முடைய அரசாங்கம் அனுமதி அளித் திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் நேரிடையாக கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்களுக்கு விற்பனை செய்வதற்கு சூழ்நிலை இல்லாததினால் அவர்கள் குறிப்பிட்ட லாபத்தை வைத்துக் கொண்டு வியாபாரிகளுக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் விற்பனை செய்துவிடுகிறார்கள்.

**திரு. ஏ. ஆறுமுகம் :** மீன் முக்கியமான உணவு, மிக ருசியான உணவு. ஆகவே, மீன் சாப்பிடாதவர்களையும் சாப்பிடும்படியாகச் செய்து இந்த உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதுபற்றி சர்க்கார் ஆலோசிக்குமா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இப்பொழுது நமக்கு இருக்கிற பிரச்னை சாப்பிடுகிறவர்களுக்கே குறைந்த விலையில் குறித்த நேரத்தில் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வதென்பது தான்.

**கனம் சபாநாயகர் :** சாப்பிடுகிறவர்களை சாப்பிடாமல் பண்ணி சாப்பிடாதவர்களை சாப்பிடுகிறவர்களாக்ப் பண்ணி தீர்க்க முடியுமா என்று கேட்கிறார்.

**திரு. எஸ். முருகையன் :** பஞ்சாயத்து யூனியன்களுக்கு மீன் வளர்ப்புக்காக ஏராளமாக பணம் ஒதுக்கப்பட்டும்கூட, அதை மீன் வளர்ப்புக்கு செலவழிக்க முடியாமல் வேறு இனங்களுக்கு மாற்றப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன்கள் மீன் வளத்தை அதிகப்படுத்துவதற்கு சர்க்கார் புதியதாக ஏதாவது திட்டம் ஏற்பாடு செய்திருக்கிறதா? அப்படியிருந்தால் அந்தத் திட்டத் தின் விவரம் என்ன?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இப்பொழுது இருக்கிற திட்டத்தையே நல்ல முறையில் விரைவிலே நடத்துவதற்கு உயர் அதிகாரிகள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். உடனடியாக இந்தத் திட்டம் தீவிரமாக நடைபெறுவதற்கு தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி :** மீன் இலாகாவினால் கொடுக்கப்படுகிற மீன் குஞ்சுகள் குறிப்பாக சேல்கெண்டை இனவிருத்திக்கு அதிக மாக பயன்படுகிறது. அதிலே அதிகமாக முட்கள் இருப்பதால் சாப்பிட லாயக்கற்றது. அது சாப்பிட லாயக்கு இல்லாத காரணத்தினால், இதனுடைய அபிவிருத்தியை நிறுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

**கனம் திரு. கோ. பூவராகன் :** சிலர் சேல்கெண்டை மீன்களை விருப்பமாகச் சாப்பிடுகிறார்கள். சில இடங்களில் முட்கள் இருப் பதினால் அதை வேண்டாம் என்று ஒதுக்குகிறார்கள். சிலர் ஆர்வமாக சாப்பிடுகிறார்கள்.

**திரு. கோ. சி. மணி :** தஞ்சை மாவட்டத்தில் உள்நாட்டு மீன் பிடிப்பு கூட்டுறவு சங்கத்திலிருந்து மீன் பதனிடும் சாலை வைக்க

[20th October 1964

வேண்டும் என்று ஏதாவது அரசாங்கத்திற்கு கோரிக்கை வந்திருக்கின்றதா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** மூலக் கேள்விக்கும், இந்த உப கேள்விக்கும் சம்பந்தமில்லை. இதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் விடை அளிக்கலாம்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** மீன்கள் உற்பத்தி செய்வதிலே தற்பொழுது கடலையும், ஆறுகளையும், ஏரிகளையும் வைத்துத்தான் உற்பத்தி செய்கிறார்கள். தனிப்பட்டவர்கள் கிணறுகளில் தனிப்பட்ட முறையிலே மீன்களை உற்பத்தி செய்ய அவர்களுக்கு ஏதாவது சலுகை அளித்து, மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசாங்கத்தினிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** அதற்கென்று ஒரு தனித் திட்டம் இல்லை. யாராவது தனிப்பட்டவர்கள் தங்களுடைய கிணறுகளில் மீன் வளர்ப்பதற்கு தயாராக இருக்கிறோம் என்று சொன்னால், அவர்களுக்கு மீன் குஞ்சுகள் கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்துவோம்.

**திரு. ம. கமலநாதன்:** மீன் இலாகா முன்பு நமது கூட்டுறவு அமைச்சர் அவர்களிடம் இருந்தது. அவர்கள் மீனைப்பற்றி ருசி அறியாதவர்கள். தற்பொழுது உள்ள அமைச்சர் அவர்களும் அப்படித்தான் என்று கேள்விப்படுகிறேன். அப்படி மீன் ருசி தெரியாதவர்களிடத்தில் இந்த இலாகா இருப்பதற்குக் காரணம் என்ன? (சிரிப்பு)

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ருசி பார்க்கின்றவர்களாக இருந்தால்தான் சாப்பிடுவதில்தான் அக்கறை உள்ளவர்களாக இருப்பார்கள். மற்றவர்கள் சாப்பிடுவதில் அக்கறை எடுத்துக் கொள்ளமாட்டார்கள். ஆகையால் அவர்களிடம் இந்த இலாகா இருக்கிறது. (சிரிப்பு)

**புலவர் கா. கோவிந்தன்:** மீன் சாப்பிடாதவர்கள்கூட மீன் எண்ணெய் சாப்பிடுகிறார்கள். ஆகவே, மீன் எண்ணெய் எடுக்கும் அளவில் சுரா போன்ற பெரிய மீன்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்தினிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? அப்படியானால், அந்தத் திட்டம் தற்பொழுது எந்த அளவில் இருக்கிறது?

**கனம் திரு. கோ. பூவராகன்:** அதற்கு தனிக் கேள்வி போட வேண்டும். என்னிடத்தில் இப்பொழுது முழு விவரம் இல்லை. மீன் எண்ணெய் தயாரிப்பதற்கும் இடம் இருக்கிறது.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** கிழக்கு ராமநாதபுரம் பகுதிகளில் ஏராளமான ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளை ஆழப்படுத்தி, அவைகளில் மீன் உற்பத்தி செய்தால், நல்ல முறையில் ஏராளமாக உற்பத்தி செய்ய முடியும். இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்குமா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** அம்மாதிரித் திட்டம் நம்மிடம் இல்லை. எங்கே மீன்கள் நல்ல முறையில் வளர்க்க முடியுமோ, அங்கெல்லாம் வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.



20th October 1964]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நம்முடைய மாகாணத்தில் கடலோரத்தில் 'காட் லிவர் ஆயில்' எடுக்கக்கூடிய மீன்கள் கிடைக்கின்றனவா? அப்படி கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படுத்துவதற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** அதுபற்றி தனிக் கேள்வி வேண்டும்.

SRI K. S. G. HAJA SHERIFF: Sir, are the Government aware of the fact that Japanese people are coming near our coast to catch fish? If so, why not our ships go there and catch fish? Will the Government aid private people, who would be coming forward with such schemes?

**கனம் திரு. கோ. பூவராகன்:** ஜப்பானிய அரசாங்கத்திற்கு போதுமான வசதி இருக்கிறது. நீண்ட தூரம் கடலில் சென்று மீன் பிடிப்பதற்கு நம்முடைய அரசாங்கத்திற்கு அதுபோன்ற வசதி வேண்டுமென்றால், அதற்கு அதிக நிதி ஒதுக்கப்பட வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மீன் இலாகா அந்த அளவுக்கு போவதற்கு நிதி வசதி இல்லை. நான்காவது, ஐந்தாவது திட்டத்தில் இதெல்லாம் சேர்க்கப்படும்.

SRI R. V. SWAMINATHAN: May I ask the hon. Minister whether there is any proposal to have atleast a few ships for deep sea fishing? After all, only a few lakhs would be required for such deep sea fishing.

**கனம் திரு. கோ. பூவராகன்:** மத்திய அரசாங்கம் இப்பொழுது இது போன்ற 'டிராலர்கள்' வைத்திருக்கிறார்கள். நாம் ஒரு டிராலர் வாங்கவேண்டுமென்றால் ரூ. 5 லட்சம், 6 லட்சத்திற்கு மேல் ஆகிறது. நமக்கு இருக்கிற நிதி வசதி அதற்குப் போதுமானதாக இல்லை. மேலும் வெளிநாட்டு செலாவணி மூலம் இதை வரவழைக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது இதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. நான்காவது, ஐந்தாவது திட்டத்தில் அது முழுமை பெறும்.

## தமிழ் டைப்ரைட்டர்கள்

***40 கேள்வி—திரு. சி. கோதண்டராம பாகவதர்:** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது அரசாங்கத்தின் அலுவலகங்களில் எத்தனை தமிழ் டைப்ரைட்டர்கள் இதுவரை வாங்கிக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன?

(இ) அவற்றுக்கு செலவான தொகை எவ்வளவு?

**கனம் திரு. கோ. பூவராகன்:** (அ) 1,520.

(இ) ரூ. 12,13,330.

**திரு. கே. ஏ. மதியழகன்:** நமது 'ஸ்டேஷனரி அண்டு பிரிண்டிங்' அலுவலகத்தில் விநியோகிக்கப்படாமல் பல தமிழ்

[20th October 1964

டைப்ரைட்டர்கள் இருக்கின்றனவா? அப்படியானால் நம்முடைய சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதில் பயிற்சி பெற வில்லை என்று பொருள்படுமா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** ஆண்டுதோறும் அவ்வப்பொழுது தேவைக்கு ஏற்றவாறு இவைகளை வாங்கி எந்த இலாகா கேட்கின்றார்களோ அவர்களுக்கு அளித்துக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது எவ்வளவு இருக்கிறது என்பது பற்றி என்னிடம் விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

**திரு. சா. கணேசன்:** நமது ஸ்டேஷனரி இலாகாவில் இருக்கிற தமிழ் டைப்ரைட்டர்கள் என்ன மேக் என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** ரெமிங்டன், ஹால்டா.

**திரு. சா. கணேசன்:** ரெமிங்டன் டைப்ரைட்டரில் உள்ள எழுத்துக்கள் செம்மையாக இல்லாமலும், ஹால்டாவில் உள்ள எழுத்துக்கள் செம்மையாகவும் இருப்பதினால்,—எந்த மெஷின் என்பது கேள்வி அல்ல—ஹால்டா போன்ற எழுத்துக்களை எந்தக் கம்பெனி தயாரிக்கிறார்களோ அதை உபயோகப்படுத்த வேண்டும் என்ற ஒரு வரையறையை அரசாங்கம் மேற்கொள்வது நலம் என்று கருதி, அதை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன்:** எந்தக் கம்பெனியிடமிருந்து வாங்குவது என்று முடிவு செய்வது அபிஷியல் லாங்க்வேஜ் கமிட்டி சேர்மன் அவர்கள் பார்க்கிறார்கள். அதோடு டைரக்டர்-ஜெனரல் ஆப் சப்ளைஸ் அண்டு டிஸ்போஸல்ஸ்' அவர்களும் இதைக் கவனிக்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டு எந்தக் கம்பெனிக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்களோ அந்தக் கம்பெனியிடமிருந்து தான் இதை அரசாங்கம் வாங்கவேண்டும். நம்முடைய அரசாங்கத்தில் அதற்கென்று ஒரு குழு இருக்கிறது. அத்தனை பேர்களும் பரிசீலனை செய்து, எது நல்ல முறையில் இருக்கிறதோ அதை வாங்குவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள்.

**திரு. ர. ஜீவரத்னம்:** கனம் தலைவர் அவர்களே, தமிழ் டைப்ரைட்டர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆர்டர் கொடுத்தால் 8 மாதம், ஒரு வருஷம் தாமதம் ஆகிறது. ஆகவே, இன்னொரு டைப்ரைட்டர் கம்பெனி ஆரம்பிப்பதற்கு சர்க்கார் ஊக்குவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன்:** தேவைக்கு ஏற்ப, அவ்வப்பொழுது எவ்வளவு கோரிக்கை வருகிறதோ, அந்தக் கோரிக்கைக்கு ஏற்ப வரவழைத்துக்கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்ட கம்பெனிகள் பாரின் எக்ஸேஞ்ச் விஷயமாக ஏதாவது அவர்களுடைய கஷ்டங்களைத் தெரிவித்தால், மத்திய அரசாங்கத்திற்கு எழுதி அவர்களுக்கு உதவி அளிக்குமாறு நம்முடைய அரசாங்கம் சிபார்சு செய்யும்.



20th October 1964]

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** இந்த டைப்ரைட்டர்கள் வாங்குவதற்கு ஒரு குழு இருக்கிறது என்று அமைச்சர் சொன்னாரே, அந்தக் குழுவில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள்?

**கனம் திரு. கோ பூவராகன்:** 4, 5 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயர் என்னிடம் இப்பொழுது இல்லை. அதுபற்றி தனிக்கேள்வி போட்டால் நான் பதில் அளிக்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—ADJOURNMENT MOTION.

### AGRICULTURAL SITUATION IN THE LOWER BHAVANI AREA

9-30 a.m.

**திரு. க. ர. நல்லசிவம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வருடம் செப்டம்பர் 23-ம் தேதி சென்னை அரசாங்கம் கீழ்பவானி பாசனத்தில் தண்ணீர் விடுவது சம்பந்தமாக ஒரு உத்திரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். விவசாயிகள் அந்த உத்திரவைப்பார்த்துப் பீதி அடைந்திருக்கிறார்கள். இரண்டாவது போகத்திற்கு நாற்று விடுவதற்கு இதுதான் காலம். இந்தக் காலத்தில் எந்தப் பயிரை வைப்பது என்ற சந்தேகத்தில் அவர்கள் இருக்கிறார்கள். புதிதாகப் போட்டிருக்கிற உத்திரவுப்படி இரண்டாவது போகத்தில் நெல் பயிர் செய்யக் கூடாது என்றும் முதல் போகத்தில் விடப்பட்ட தண்ணீரில் பாதிதான் விடப்படுமென்றும் உத்தரவு போட்டிருக்கிறார்கள். இந்த உத்தரவு நீடித்திருந்தால் இரண்டாவது போகம் சாகுபடி செய்வது கஷ்டமாக இருக்கும். அரசாங்கத்தின் தரப்பில் என்ன பதில் சொல்கிறார்கள் என்றால், இது புஞ்சைத் திட்டம்தானே, ஆகவே புஞ்சைப் பயிருக்குக் கொடுக்கக்கூடிய அளவுக்குத் தண்ணீர் கொடுக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. இது சரியான பதில் அல்ல. ஆரம்பகாலத்திலிருந்து இதுவரையிலும் இரண்டு போகத்திற்கு இரண்டு லட்சம் ஏக்கருக்குத் தண்ணீர் கொடுக்கப்பட்டது. அதை விவசாயிகள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தற்போது ஒரு லட்சம் ஏகராவிலே ஒரு போகம் என்ற முறையிலே விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஏழு வருடங்களுக்கு முன்பு . . .

**கனம் சபாநாயகர்:** இந்த விஷயத்தினைப் பூராவும் பேச முடியாது. எப்படி இது அவசரப் பிரேரணைக்கு உரியது என்பதைத்தான் சொல்லவேண்டும்.

**திரு. க. ர. நல்லசிவம்:** ஏழு வருஷத்திற்கு முன்பு இதிலே புதிய மாறுதல் ஏற்பட்டு இரண்டு போகம் பயிர்க் கட்டுப்பாடு இல்லாமல் விவசாயம் செய்வதற்கான ஒரு உத்திரவை சர்க்கார் போட்டார்கள். இப்பொழுது போடப்பட்டிருக்கும் உத்தரவுப்படி நெல் உற்பத்தி செய்யமுடியாமல் இருக்கிறது. அதனால், அந்தப் பிராந்தியத்தில் ஒரு அவசரமான நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, புதிய உத்திரவை ரத்துசெய்து பழைய முறை

[திரு. க. ர. நல்லசிவம்] [20th October 1964

யையே அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற வகையில் இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **கனம் திரு. எம் பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இது அவசரப் பிரேரணைக்கு உரியதல்ல என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். நிர்வாக வகையிலே பல நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைதான் இது. கீழ் பவானித் தேக்கத்திலே எவ்வளவு தண்ணீர் தேக்குவதற்குரியது, எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது என்பதைப் பார்த்துத்தான் என்ன பயிரிடுவது, எவ்வளவு தூரம் பயிரிடுவது என்றெல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. கனம் உறுப்பினருக்குத் தெரியும், சென்ற ஆண்டில் தண்ணீர்த் தட்டு ஏற்பட்டபோது 120 மைல் பூராவும் தண்ணீர் விடுவதற்கு போதிய தண்ணீர் இல்லாததினால் 63-வது மைலில் நிறுத்துவதற்கு விவசாயிகள் ஆட்சேபித்தார்கள். எல்லோருக்கும் தண்ணீர்கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். எல்லோருக்கும் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அரைகுறையாக தான் கொடுக்கமுடியும். எவ்வளவு தண்ணீர் இருக்கிறது, அந்தத் தண்ணீரை எப்படி விநியோகிப்பது என்பதை அரசாங்கம் அப்போதைக்கப்போது கவனித்து ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. கனம் அங்கத்தினர் இப்பொழுது அரசாங்கம் முடிவுசெய்துள்ள ஏற்பாட்டைப்பற்றி சொன்னார். முதல் சாகுபடியிலே இதற்கு முன்பு சாகுபடி செய்த அளவிலேமட்டுமல்லாமல் அதற்கு மேலுங் கூட நெல் சாகுபடி செய்யலாம். இரண்டாவது சாகுபடியிலே நெல் தவிர மஞ்சள், வாழை போன்ற பயிர்களைச் சாகுபடி செய்யலாம். இரண்டு நாட்களுக்கு முன்பு 50 பேருக்கு மேற்பட்ட விவசாயப் பிரதிநிதிகள் என்னிடம் வந்து தங்களுடைய கஷ்டங்களைச் சொன்னார்கள். நான் நிலைமையை விளக்கினேன். இந்த நிலைமைக்கேற்றவாறு வேறு ஒரு தகுந்த யோசனையைக் கூறுங்கள், மேற்கொண்டு அரசாங்கம் யோசிக்கும் என்று சொன்னேன். அப்படியே நாங்கள் யோசித்து எழுதியனுப்புகிறோம் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். ஆகவே, இது அவசரப் பிரேரணைக்குரிய விஷயமல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

Mr. SPEAKER : The matter does not warrant an adjournment of the business of the House. So, I withhold my consent.

### III.—STATEMENT *RE* DECISION OF THE MEMBERS OF THE OPPOSITION TO GO ON FAST.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, சட்டமன்ற விதி 82-ன்கீழ் ஒரு விஷயத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கு தங்களுடைய அனுமதியைக் கோரினேன். தாங்கள் அனுமதியளித்திருக்கிறீர்கள். அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று காலை பத்திரிக்கைகளிலே வந்த செய்தியைப் பார்த்தேன். கனம் எதிர்க்கட்சி சட்ட மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவு செய்ததாகவும் அந்த முடிவின்படி



20th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

நாளை காலையிலேயே ஏழு மணிக்கு உபவாசம் தொடங்கி மெமோரியல் கட்டடத்திலிருந்து இங்கே வருவதாகவும், சட்டமன்றக் கூட்டத்திலே கலந்துகொள்ளாமல் வெளியே இருப்பார்கள் என்றும் வந்த செய்தியைப்பார்த்து நான் ஆச்சரியமடைந்தேன். இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் ஒன்றுக்குமேற்பட்ட எதிர்க்கட்சிகள் இருக்கின்றன என்றாலும், எதிர்க்கட்சிகளுக்கும் அரசாங்கத்திற்கும் அல்லது அரசாங்கத்துக்கும் கட்சிகளுக்கும் இடையில் பலவித அபிப்பிராய பேதங்கள் இருப்பினும், ஒரு சுமுகமான முறையிலே ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகள் எவ்வாறு இயங்கவேண்டுமோ அந்த வகையிலே இந்த மன்றம் கொடுக்கக்கூடாதுதான். அதே மாதிரி அரசாங்கம் ஒப்புக் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. எதிர்க்கட்சிகள் விட்டுக் கொள்ளக்கூடியதை ஒப்புக்கொள்ளலாம்.

Sri M. KALYANASUNDARAM : On a point of order, Sir. . . .

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, is the point of order allowed?

Mr. SPEAKER : Let me hear what the hon. Member says.

Sri M. KALYANASUNDARAM : Sir, I want to know whether this is in order. Rule 82 says :

" A statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker but no question shall be asked but no question shall be asked at the time the statement is made."

On any matter of public importance relating to the Government the Hon. Chief Minister is free to make a statement. . . . .

Mr. SPEAKER : The only point the hon. Member refers to is that it must be a matter of public importance, i.e., Government business. Does the hon. Member mean to say that Government should not be concerned with any other matter which is of public importance ?

Sri M. KALYANASUNDARAM : Sir, this is a decision taken by political parties. How can that decision be taken as a matter of public importance?

Mr. SPEAKER : Where is it laid down as to what a matter of public importance is?

Sri M. KALYANASUNDARAM : The political parties have announced the decision. It has not yet been implemented. Here is the rule. What is the definition given to an urgent matter of public importance ? I must refer to a matter of recent occurrence. This is only a decision. There is no occurrence here. The statement may be made by the Minister on a matter of public importance. If the Hon. Chief Minister makes a statement on the availability of rice or about the scarcity of rice, then it is alright

MR. SPEAKER : What is the hon. Member's point?

SRI M. KALYANASUNDARAM : If the statement or the subject is not with reference to the decision, he is quite welcome to make a statement. It will be in order. But he wants to make a hostile statement and wants to attack our decision.

MR. SPEAKER : What is a matter of public importance ?

SRI M. KALYANASUNDARAM : Scarcity of rice and long queues are matters of public importance, The Hon. Chief Minister can refer to that and we would welcome that statement. If he wants to talk about the decision, he must bring forward a motion as the Leader of the House and take the permission of the House.

MR. SPEAKER : What is the point? How is it not a matter of public importance ?

SRI M. KALYANASUNDRAM : Under this rule the Hon. Chief Minister wants to take shelter and prevent us from putting questions.

MR. SPEAKER : If the hon. Member, Sri M. Kalyanasundaram, cannot put question, what can I do? He must get the rule changed.

SRI M. KALYANASUNDARAM : We can only bring it to the notice of the Hon. Speaker. It is for the Chair to consider. We are helpless. I do not think the decision of the political parties can form a matter of public importance on which the Hon. Chief Minister can make a statement. I am not agreeable to that. I think my view is reasonable and that of the Chief Minister is unreasonable.

MR. SPEAKER : I do not think so.

SRI M. KALYANASUNDARAM : I think the Hon. Chief Minister had chosen to make a statement utilising the occasion to attack our decision. That is my conviction.

MR. SPEAKER : In the course of the statement the decision may be criticised or attacked. That is not the point here. But the hon. Member cannot ask the Hon. Chief Minister to state how he can make a statement when that statement relates to a matter of public importance.

SRI M. KALYANASUNDARAM : Sir, may I kindly request the Chair to let me know whether there are any precedents. We are always guided by precedents. What were the occasions when Rule 82 had been resorted to? Only when an Hon. Minister makes a wrong statement, he resorts to Rule 82 to correct that statement. When he wants to make a statement of his own on a matter of public importance, he makes that statement under Rule 82. But so far there has been no precedent for a statement of this nature in this House. In my parliamentary experience of more than 12 years, I have not come across such an instance.



MR. SPEAKER : I do not think I can debar the Hon. Minister from making a statement.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, தங்கள் அனுமதி பெற்று, 82-வது விதிப்படி நான் இந்த ஸ்டேட்மெண்டைச் சமர்ப்பிக்கத் தொடங்கிப் பேசியபோது, கனம் உறுப்பினர், நான் என்ன சொல்லப் போகிறேன் என்பதை கேட்கக்கூடப் பொறுத்திராமல் பொறுமை இழந்து ஆத்திரப்பட்டார்கள். ஆத்திரப்பட்டு, பாயிண்ட் ஆப் ஆர்டர் செய்ஸ் பண்ணினார்கள். பாயிண்ட் ஆப் ஆர்டர் அதில் ஒன்றும் இல்லை என்று தாங்களே குறிப்பிட்டு விட்டீர்கள். நம் சபையில் ஒன்றுக்கு மேற்பட்ட எதிர்க்கட்சிகள் இருந்தபோதிலும்கூட, பலமான அபிப்பிராய பேதம் இருந்தபோதிலுங்கூட, நம்மிடையே நல்லுறவு நிலவி, ஜனநாயக முறையில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் இயங்கி வந்திருக்கிறோம். அந்த வகையில்தான் இப்பொழுதும் இயங்கி வருகிறோம். அந்தத் தனிப்பெருமை நம் தமிழ்நாட்டுக்கு உண்டு, இந்தச் சட்டமன்றத்திற்கு உண்டு, தங்களுக்கும் உண்டு. அவ்வாறெல்லாம் பல சந்தர்ப்பங்களில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டாலும் பொதுவாக ஜனநாயக சம்பிரதாயங்களையொட்டி நாம் நடந்து வருகிறோம்; சில சந்தர்ப்பங்களில் புதிய புதிய சம்பிரதாயங்களையும் உருவாக்குகிறோம். புதிய சம்பிரதாயங்களை வேண்டாம் என்று நான் கூற மாட்டேன். கனம் உறுப்பினர்களும் கூறமாட்டார்கள். இந்தச் சட்ட மன்றத்திலும் அப்படி புதிய சம்பிரதாயங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். எதிர்க்கட்சியினர் தாங்கள் கூறுவதை கோருவதை ஆட்சியாளர்கள் ஒத்துக்கொள்ளவில்லையென்றால், வெளிநடப்பு செய்வது என்ற ஒரு புதிய சம்பிரதாயம் ஏற்பட்டிருக்கிறது. அது ஒரு நல்ல சம்பிரதாயம் என்று நான் கூற மாட்டேன். நேற்று அவசரப் பிரேரணைகள் கொண்டு வந்தார்கள். கனம் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய அவசரப் பிரேரணைகளை நான் ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு, தாங்களும் அவ்வாறு ரூலிங் கொடுத்தீர்கள். அதற்கப்புறம் எதிர்க்கட்சியினர் வெளியேறினர். அதோடு இல்லாமல் அதற்குப் பின்னால் நடந்த நடவடிக்கைகளிலும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை அதன்பிறகுதான் சப்ளிமெண்டரி ஸ்டேட்மெண்ட் சமர்ப்பிக்கப்பட்டது. இரண்டு பெரிய மசோதாக்கள் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. அதிலெல்லாம் அவர்கள் கலந்துகொள்ளவில்லை. இன்று காலையிலே பத்திரிக்கையிலே பார்த்த செய்தியைப் பற்றி குறிப்பிட்டேன். சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பீஸ் மெமோரியலிலிருந்து ஊர்வலமாக வந்து, இங்கே உபவாசம் இருக்கப்போகிறோம் என்கிறார்கள். உபவாசம் இருக்கட்டும்; அது அவர்கள் உரிமை. நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் உணவு நிலையைப்பற்றி கண்டிக்கும் வகையில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று தெரிகிறது. உணவு நிலையைப்பற்றி விவாதிக்க பின்னால் 22, 23-ம் தேதிகளில் சந்தர்ப்பம் இருக்கிறது. நிலைமையை எடுத்துக்கூற எனக்கு வாய்ப்பும் இருக்கும். நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் உற்பத்தியில் குறைவில்லை. நல்ல உற்பத்தியாகியிருக்கிறது.

*[திரு. எம். பக்தவத்சலம்]* [20th October 1964

நாங்கள் நான்கு மாதங்களாக சொல்லி வந்திருக்கிறோம். தனிலோனாக இருக்கட்டும், நிலைமை எப்படி ஆகிறது என்று பார்க்கலாம், என்று. இந்தக்கட்டுப்பாட்டை தென்மண்டலத்திலே உள்ள வியாபாரிகள் பலர் ஒத்துக்கொள்ளவில்லை—வெறுக்கிறார்கள். கட்டுப்பாடு இல்லாமலே அதிகமான விலைக்கே கேரளாவிற்கு விற்றுக் கொண்டிருந்தார்கள். உத்தரவு போடுவதில் கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது. விலை அதிகமாகப் போய்விட்டது. போன சனிக்கிழமையிலிருந்து தஞ்சையில் அறுவடை ஃபுல் ஸ்விங்கில் இருக்கிறது. நிறைய அறுவடை கிடைக்கும் என்று தெரிகிறது. அங்கு கிடைக்கக்கூடிய அவ்வளவு தானியத்தையும் உடனடியாக அறுவடை செய்து, குறிப்பிட்ட மில்காரர்கள் மூலம் அவர்களுக்கு கடன் வசதியளித்தும், அரசாங்கமேகூட நேரிடையாக கொள்முதல் செய்தும் வினியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் பற்றி பின்னால் விளக்கமாகக் கூறுகின்றேன். இதன் நடுவில் பலருக்கு கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அரசாங்கம் அதை உணராமல் இல்லை. பாராமுகமாக இல்லை. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாகவே a senior member of the Board of Revenue -ம் உணவுத் துறை செகரட்டரி அவர்களும் தஞ்சாவூர், திருச்சி முதலிய இடங்களுக்குச் சென்று, எப்படி எப்படி சென்னைக்கு, கோயம்புத்தூருக்கு இன்னும் பெரிய நகரங்களுக்கு அரிசி அனுப்புவது என்பதுபற்றி ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். மேலும் இன்றுதான் விழித்துக்கொண்டோம் என்று இல்லை. நிலைமையைச் சமாளிக்கும் வகையில் எல்லா விதமான நடவடிக்கைகளும் அவ்வப்பொழுது எடுக்கப்பட்டு வருகின்றன. இப்பொழுது உண்ணா விரதம் இருக்கிறோம் என்றால், பீஸ் மெமோரியலிலிருந்து வருகிறோம் என்றால், இப்பொழுது தடையுத்தரவு இருக்கிறது. இந்த மன்ற நடவடிக்கைகள் நடக்கும் பொழுது சில பக்கங்களில் ஏதாவது டெமான்ஸ்ட்ரேஷனோ, ப்ரொஸெஷனோ வரக்கூடாது, நடக்கக்கூடாது என்று தடையுத்தரவு இருக்கிறது. அதை யார் மீறினாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் வந்தால் அது தனி விஷயம். அதைப்பற்றி எப்படிச் செய்யலாம் என்று தனியாக யோசிக்கலாம். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் வரும்பொழுது வேறுபலர் சேர்ந்த கூட்டமும் வரலாம். அப்படிக் கூட்டம் சேர்ந்து வந்தால் எப்படி, என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைப்பற்றி அமைதியை நிலைநாட்டும் பொறுப்பை ஏற்றுள்ள போலீஸ்காரர்கள் கவனிக்க வேண்டியது அவசியம். இதையெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் கவனிக்காமல் காரியங்கள் செய்தால், அதற்கும் அமைதியை நிலை நாட்டும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். அவ்வாறு ஊர்வலமாக வந்துவிட்டு, உள்ளேயும் வந்து சட்டமன்றத்திலே கலந்துகொள்ள மாட்டோம் என்றால்—நான் அவர்களைக் குறை கூறவில்லை, கலந்துகொள்வதற்கும், கலந்துக் கொள்ளாமல் இருப்பதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது—அது எவ்வளவு தூரம் சரி என்று பார்க்கவேண்டும். இங்கிலாந்தில் கூட "மே" அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இரு காலத்தில் சட்ட மன்றத்திற்கு வரக்கூடிய அங்கத்தினர்கள்



20th October 1964] *[திரு. எம். பக்தவத்சலம்]*

வராமல் போய்விட்டால், அவர்களுடைய சம்பளத்தைக் கூடப் பிடிப்பது என்று இருந்தது, அதெல்லாம் இப்பொழுது அந்தந்தக் கட்சியே பார்த்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறது சட்ட மன்ற நடவடிக்கைகள் நடக்கும்போது சிற்சில ஏற்பாடுகள் செய்ய வேண்டும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று இருக்கிறது :—

*Access to the Houses of Parliament.*

*Obstructions in the streets, etc.; Sessional orders.*—To facilitate the attendance of Members without interruption, both Houses, at the commencement of each session, by order, give directions that the commissioner of the police of the metropolis shall keep during the session of Parliament the streets leading to the Houses of the Parliament free and open, and that no obstruction shall be permitted to hinder the passage thereto of the Lords or Members. The police accordingly give every facility to Members and officers of the two Houses to cross the streets and approach the Houses of Parliament without interruption and where necessary hold up the traffic for this purpose.

இதெல்லாம் சட்ட மன்றக் கூட்டத்தில் கலந்துக் கொள்கிறவர்களுக்கு : இன்னொன்றும் கூடச் சொல்லியிருக்கிறார்கள்.

'*Tumultuous assemblages.*—When tumultuous assemblages of people have obstructed the thoroughfares, lobby or passages, orders have been given to the local authorities to disperse them.'

இங்கே நாளைக்கு சட்ட மன்ற நடவடிக்கைகள் நடக்க இருக்கின்றன. காலை 8-30 மணி முதல் நடக்கும் அப்படி நடக்கின்ற போது, சட்ட மன்ற உறுப்பினர்களாயிருந்தாலும், வெளியிலிருந்து அறுபது பேர்கள் கூட்டமாக ஃபோர்ட் ஸெயின்ட் ஜார்ஜுக்குள்ளே வந்து உண்ணாவிரதம் இருந்து, மற்றவர்களும் அந்தக் கூட்டத்தில் சேரக்கூடிய வகையிலே இருந்தால், அது சட்ட மன்ற நடவடிக்கைகளுக்குப் பாதகம் விளைவிக்காதா என்பது தாங்கள் கவனிக்க வேண்டிய விஷயம். "Privilege of the House" என்று சொல்கிறோம். இந்த மன்றத்தின் உரிமையைப்பற்றி நாம் கண்ணுங்கருத்துமாக இருக்கிறோமே, அந்த உரிமை ஏதாவது பாதிக்கப்படுமா, பாதிக்கப்படாதா என்பதைப் பார்த்து, அந்த உரிமை பாதிக்கப்படாத வகையில் எவ்வாறு 'ரெகுலேட்' செய்வது என்பது, ஃபோர்ட் ஸெயின்ட் ஜார்ஜுக்குள்ளே, தங்களுடைய பொறுப்பு, அதைத் தாங்கள் நிர்வகிப்பீர்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயம் இல்லை. இந்த நிலையை எடுத்துக் காட்டுவதற்காகவே நான் இந்த ஸ்டேட்மென்டைச் சமர்ப்பிக்கின்றேன். இதற்கு மேல் நான் பேச விரும்பவில்லை.

SRI M. KARUNANITHI (Rose)

MR. SPEAKER: The hon. Member cannot ask a question. Let him read the rules.

[20th October 1964

SRI M. KALYANASUNDARAM : Sir, I want to make a personal explanation. I am one of the parties to that decision.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எந்த பார்ட்டியாக இருந்தாலும் கலைம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களைப்பற்றி நான் ஒன்றும் பேசவில்லை.

MR. SPEAKER : Let the hon. Member first be clear about the Rules.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : But, it must be according to Rule 82.

SRI M. KALYANASUNDARAM : I am sorry the Hon. Chief Minister is interfering . . . .

MR. SPEAKER : Let the hon. Member please read Rule 82.

SRI M. KALYANASUNDARAM : It is not with regard to that statement. The Hon. the Leader of the House has referred to the decision of the Opposition Parties. I am also one of the parties to that decision. I want to make a personal explanation.

MR. SPEAKER : It may be anything. But let the hon. Memeber please read Rule 82.

SRI KALYANASUNDARAM : I am not putting any question to the Hon. Chief Minister nor am I raising a debate on the statement. I am not going to move a substantive motion. I am only trying to make a suggestion or clarify a point by way of personal explanation. The Hon. Speaker is the custodian of the rights of the Members of this House. . .

MR. SPEAKER : The hon. Member can make any statement at any other time but not at this time.

SRI M. KALYANASUNDARAM : I want to make a personal explanation regarding the matter referred to by the Hon. Chief Minister.

MR. SPEAKER : That will lead to a debate. The hon. Member may make a statement. Then the hon. Member, Sri Karunanithi, may make another statement. That means that it will lead to a debate. So, the hon. Member cannot make a statement now but he can do so tomorrow.

SRI M. KALYANASUNDARAM : Arising out of the statement of the Hon. Chief Minister, I want to make a suggestion to the Chair, regarding how best the House could be conducted tomorrow.

MR. SPEAKER : I will send for the hon. Member but not here.

SRI M. KALYANASUNDARAM : We can meet in the Chamber of the Hon. Speaker.

MR. SPEAKER : I will invite all leaders of parties to discuss the matter.



20th October 1964]

SRI M. KALYANASUNDARAM : Then it is all right.

MR. SPEAKER : For that, this is not the time.

SRI M. KALYANASUNDARAM : I would have added some more points, if the Chair had allowed me to speak.

MR. SPEAKER : But the rule says that no question shall be asked at the time the statement is made. What can I do? The Speaker is not anxious to shut out anybody from speaking and he will be pleased to hear so many new things from the Members. But the rule says that no question shall be asked.

SRI M. V. KARIVENGADAM : Sir, the Hon. Member is entitled to make a personal explanation.

MR. SPEAKER : Not at that time. Also, he must get permission to make that statement.

SRI M. V. KARIVENGADAM : The Hon. Chief Minister has made some statement.

MR. SPEAKER : The hon. Member is expected to get my permission.

SRI M. V. KARIVENGADAM : Yes, Sir.

MR. SPEAKER : I do not give permission.

SRI M. V. KARIVENGADAM : Then it is all right.

*திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற இந்த ஸ்டேட்மெண்டுக்கு நாங்கள் விளக்கம் அளித்தால் தங்களுக்கு உதவியாக இருக்கும் என்ற முறையிலே தான் . . .*

MR. SPEAKER : The rule does not permit it. The rules have been framed with some ultimate object.

SRI M. V. KARIVENGADAM : What is the ultimate object?

THE HON. SRI M. BHAKTAVATSALAM. Sir, I submit that the rules have been adopted by this Legislative Assembly.

MR. SPEAKER : If any hon. Member wants to make a statement questioning the statement of an Hon. Minister under rule 82, then that rule must be changed.

## IV.—CALLING ATTENTION TO THE ACUTE SCARCITY OF WHEAT AND WHEAT PRODUCTS.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் சபாநாயகர் அவர்களே, சட்டசபை விதிகளின் 41-வது விதியின் கீழ் உணவு அமைச்சர் அவர்களுடைய் கவனத்திற்கு நான் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன்.

அரிசி கிடைக்காத கஷ்டம் ஒரு புறமிருக்கிறது. அதைப்பற்றிய கவலை எல்லோருக்கும் இருக்கிறது. அரசாங்கத்திற்கு மட்டும்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [20th October 1964

கவலை இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனாலும், கருத்துக்களை நன்றாக எடுத்துச்சொல்ல சந்தர்ப்பம் இருக்குமானால் எல்லோரும் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

கோதுமை ஒரு முக்கியமான உணவுத் தானியம். அதுவும் கிடைக்காத கஷ்டம் இருக்கிறது. கோதுமையிலிருந்து தயாரிக்கப்படுகிற மற்றப் பொருள்களும், ரவை, மைதா போன்ற பொருள்களும் கிடைக்காத கஷ்டம் தமிழ்நாடு பூராவும் இருக்கிறது. இதனால் சங்கடம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவதற்காகத் தான் நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இந்தப் பிரச்னையைக் கொண்டுவர விரும்புகிறேன்.

* THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Sir, during August 1964, the Government of India allotted a quantity of 4,100 tonnes of wheat to this State for distribution through fair price shops, authorised dealers, etc. This quantity was allocated to the district with reference to the previous offtake and the district officers were asked to restrict the permit for lifting wheat to those persons who have been habitually getting supplies in the past and at the rates corresponding to the average of the quantity allowed for the last six months. Subsequently an additional quantity of 1,900 tonnes was allotted to this State by the Government of India on our representation, making a total of 6,000 tonnes per month for the State. The additional quantity of 1,900 tonnes was also allocated to the Districts with reference to their needs. Again in September 1964, a further quantity of 1,000 tonnes was allotted on our request which was also distributed to needy districts. Thus in all 7,000 tonnes was allotted to this State during September 1964. The Government of India subsequently increased the monthly quota for October 1964 to 8,000 tonnes. The Government of India were again requested to increase the wheat quota to the State to ten thousand tonnes per month. The Government of India have agreed to supply ten thousand tonnes of wheat to this State from October 1964, onwards. Action is being pursued to distribute it evenly throughout the State through Fair Price Shops and authorised dealers.

During August 1964, the Regional Director (Food), Madras, intimated that it was proposed to reduce the supply of wheat to Roller Flour Mills to 40 per cent of the normal quota owing to scarcity. Thereupon the Board directed the Flour Mills not to sell any of the wheat products, produced in the Mills out of the imported stocks supplied to the Mills by the Regional Director (Food), Madras, except to the nominees especially authorised in this behalf by the Board of Revenue (Civil Supplies). After consulting the Collectors/District Revenue Officers regarding their requirements of wheat products in their districts for sale to the public through retailers and for actual use by bulk consumers such as bakery owners, vermicelli manufacturers, etc., the Board has been allotting the requirements of the districts from the mills



20th October 1964] [Sri Nallasenapathi Sarkarai Manradiar]

in the Madras City and elsewhere. The requirements of the other States—Kerala, Mysore, Andhra Pradesh—and the Centrally administered areas such as Pondicherry, Goa, Port Blair administration, etc., are also being met with to the extent possible from the stocks produced in the mills in the Madras State. From October, 1964, the wheat quota to flour mills has been raised to 75 per cent of the normal quota. Though there might have been some difficulty in the obtaining of wheat product at the time the cut was levied the position has improved considerably since then.

## V.—SECOND SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1964-65—GENERAL DISCUSSION.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்த 1961-62-ம் ஆண்டில் அதிகப்படி செலவுக்கான மானியக் கோரிக்கையை பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி சரியான முறையில் பரிசீலனை செய்திருக்கிறது. ஆகவே இதைப்பற்றி அதிகம் விவாதம் செய்யவேண்டியதில்லை. 1961-62-ம் வருஷத்தில் வரவு செலவு திட்டத்தை தயாரித்தவர்கள்கூட இங்கே இல்லை. ஆகவே, அதை ஃபார்மலாக சபை அங்கீகரித்து விடலாம். 1964-65-ம் வருஷத்திற்கான இரண்டாவது துணை மான்ய கோரிக்கையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். இந்த வருஷத்திலிருந்து ஒரு புது மாறுதலாக இது காணப்படுகிறது. ஒரு ஆண்டுக்குள்ளே இரண்டு மூன்று துணைமான்யக் கோரிக்கைகள் வரக்கூடியதாக இருக்கிறது. இவ்வாறு வரும்போது இதைப் பற்றிப் பேசுவதற்கு கனம் அங்கத்தினர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது என்றாலும்கூட நிதி இலாகா முன் கூட்டியே இம் மாதிரி துணைமான்யக் கோரிக்கையை முன் வைக்காமல் போதிய நிதியை வரவு செலவு திட்ட சமயத்திலேயே பெற்றுக்கொள்ள முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்கிற யோசனையை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். 10-00 a.m.

**புலவர் கா. கோவிந்தன் :** கனம் தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டுக்கான இரண்டாவது துணைமான்யக் கோரிக்கையைச் சபை முன்பு வைத்திருக்கிறார்கள். இந்த கோரிக்கையைக்கொண்டு வந்ததற்குக் காரணம் அரசாங்க ஊழியர்களுக்கு அதிகப்படியான பஞ்சப்படியைக் கொடுக்கும்படி வந்த காரணத்தினால் எழுந்த செலவாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசாங்க ஊழியர்களுக்கு அகவிலைப்படியைக் கூட்டிக் கொடுக்க வேண்டியது அவசியம் தான் என்றாலும் எந்த முறையில் கூட்டிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். தாய்மார்களை மூன்று வகையாகப் பிரிப்பார்கள். பால் நினைந்து ஊட்டும் தாய் ஒருத்தி. அழுதால் தான் பால் கொடுப்பது என்று இருப்பவள் ஒருத்தி. அழுதாலும் பால் கொடுக்காத தாய் ஒருத்தி. இப்படி மூன்று வகையாகப் பிரிக்கலாம். அந்த வகையில் பார்த்தால் ஊழியர்களுடைய கஷ்டத்தை உணர்ந்து அவர்களுடைய அகவிலைப் படியைக் கூட்டிக் கொடுக்க இவர்கள் முன் வந்தார்களா என்றால் இல்லை. அவர்கள் அழுது, அழுது ஆன பிறகு அப்போதும் கூட அவர்களுக்கு அக விலைப்படியை கூட்டிக்

[புலவர் கா. கோவிந்தன்] [20th October 1964

கொடுக்க மனம் வரவில்லை. மத்திய அரசு தன் ஊழியர்களுக்கு அகவிலைப்படியைக் கூட்டிக்கொடுக்க முன்வந்த போது அதே போல இவர்களுக்கும் உயர்த்தவில்லை. அதுமட்டுமன்றி அமைச்சர் அவர்களுடைய மனநிலைக்கு ஆதாரமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு செய்தியை வெளியிட்டார்கள். 'மத்திய அரசு கொடுத்துவிடுகிறது. அவர்கள் கொடுப்பதினால் நாமும் கொடுத்தாக வேண்டிய நிலைமை உண்டாகிறது. இப்படி நம்மைக் கலந்துகொள்ளாமல் நம்முடைய பொருளாதார நிலை என்ன என்பதை உணர்ந்துகொள்ளாமல் அவர்கள் கொடுத்துவிடுகிறார்களே' என்று ஆத்திரத்தோடு சொல்லியிருக்கிறார்கள். அதற்குப்பிறகு நம்முடைய அரசாங்க ஊழியர்கள் மாதக்கணக்காக அழுது அழுது கேட்டுக்கொண்டே வந்த காரணத்தினால் அகவிலைப்படியை கூட்டிக்கொடுத்தாக வேண்டிய சூழ்நிலையும் உண்டானபிறகுதான் 'ஏண்டி குழந்தை அழுது அழுது உயிர் போய்விடும்போல் இருக்கிறது கொஞ்சம் எடுத்துவிடக் கூடாதா' என்று பக்கத்து வீட்டுக்காரி எடுத்துக் காட்டிய பிறகு வேண்டா வெறுப்பாக தன் குழந்தைக்கு பால் கொடுக்க வருகிற தாயைப் போல நமது அமைச்சர் பிற கட்சிக்காரர்களும் அரசாங்க ஊழியர்களின் அகவிலைப்படியை கூட்டிக் கொடுத்தாக வேண்டும் என்று இடித்துக்காட்டிய பிறகே இதைக் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள் என்றாலும்கூட இப்படி அகவிலைப்படியை கூட்டிக்கொடுக்க முன் வந்ததற்காக மகிழ்ச்சி அடைகிறோம் (கனம் சபாநாயகர் : அழாமல் பால் கொடுத்தால் ஒருவேளை மந்தம் வந்து விடலாம்). கொடுத்திருக்கிறார்கள் என்றால் எந்த வேளையில் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். நகராட்சி மன்றங்களின் தேர்தல் வந்த இந்தச் சமயத்தில் அரசாங்க ஊழியர்களிடம் அதிருப்தி நிலவ இடம்கொடுத்தால் தேர்தல் நிலைமை என்ன ஆகுமோ? அவர்களுக்கு அகவிலைப்படியை கூட்டிக் கொடுத்து விட்டால் ஒருவேளை இந்தத் தேர்தலில் தப்பித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தின் காரணமாகத்தான், என்கிற உள்நோக்கத்தின் காரணமாகத்தான் கூட்டிக்கொடுத்திருக்கிறார்களே தவிர மனப்பூர்வமாகக் கொடுக்கவில்லை என்று சொல்லலாம்.

அடுத்து கிராம உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் அவர்கள் ஆண்டுதோறும் தங்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று கோரிக்கைகளை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அதையெல்லாம் அரசாங்கம் சட்டை செய்யவில்லை. அதுவும் சமீபத்தில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள கிராம உத்தியோகஸ்தர்கள் அத்தனைபேரும் தங்களுடைய ராஜினாமாக்களை ஒன்றாகக் கொடுத்து நாங்கள் இனி வேலை செய்ய மாட்டோம் என்று அடம் பிடித்த பிறகுதான் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு இந்த அரசாங்கம் முன்வந்திருக்கிறது. அதோடுகூட இன்றையதினம் கிராம உத்தியோகஸ்தர்களான கணக்கப்பிள்ளை, மணியக்காரர் ஆகியவர்களிடத்தில்தான் கிராம அடங்கல் இருக்கிறது. டிசம்பரில் தேர்தல் வந்துவிட்டால் அவர்கள் கிராம மக்களின் மனதை தங்கள் அதிகாரத்தால் எப்படி மாற்றி விடுவார்களோ என்கிற உள்நோக்கத்தின் காரணமாகத்தான் அவர்களுடைய சம்பளத்தை



20th October 1964] [புலவர் கா. கோவிந்தன்]

உயர்த்த இந்தச் சமயத்தில் அரசாங்கம் முன்வந்தது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இவர்கள் கொண்ட உள்நோக்கத்தை பார்க்கும்பொழுது இவர்களுடைய செயலை நாம் நிச்சயமாக கண்டிக்காமல் இருக்கமுடியாது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து மண்வள பாதுகாப்பு திட்டத்திற்காக என்று பணம் கோரியிருக்கிறார்கள். இந்த மண்வள பாதுகாப்புத் திட்டத்திற்கு நிலம் மிகச் சரிவாக இருக்கிற இடங்களில் செய்தால்தான் பயன் உண்டே தவிர எல்லா இடங்களுக்கும் இதைச் செய்வது பயனில்லை. நிலங்கள் சமமாக இருக்கிற பகுதிகளில் கூட இப்போது இந்தத் திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வந்து பணத்தை வாரி வாரிக் கொடுக்கிறார்கள். ஆகவே, இத்துறையில் செலவு செய்யப்படுகிற பணம் சரியான முறையில் செலவு செய்யப்படவில்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்

அடுத்து பர்மா தமிழ் அகதிகளுக்கு பல சலுகைகளை கொடுப்பதற்காக சில திட்டங்களை வகுத்து அதற்காக அதிகப்படியான செலவு கோரியிருக்கிறார்கள். சாத்தனூரில் வந்து தங்கியிருக்கிற பர்மா அகதிகளில் ஒரு பெரும் பகுதியினருக்கு ஆரம்பத்தில் ஒரு சில நாட்கள் சோறு போட்டார்கள். திடீரென்று ஒரு நாள் அவர்களுக்கு எதிர்கால உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை தற்காலிகமாகக்கூட ஏற்படுத்திக்கொடுக்க முயற்சிக்காமல் இனி உங்களுக்கு நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை என்று சொல்லி விட்டார்கள்.

(கனம் உதவிசபாநாயகர் தலைமை.)

அதன்காரணமாக அவர்கள் படுகிற அல்லல் சொல்லமுடியாது. வியாபாரம் செய்ய கடன் தருகிறோம் என்று இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்களே தவிர நடைமுறையில் அவர்களுக்கு எந்த விதமான உதவியும் அளிக்கவில்லை. நாளைக்கு எங்கே சோறு என்கிற நிலை தெரியாத நிலையில் அவர்களை நடுத்தெருவில் நிறுத்தி விட்டார்கள். அவர்களது வாழ்விலே ஓர் இருண்ட நிலையாக இருக்கிற இதை மாற்ற அமைச்சர் அவர்கள் உடனடியாக முன்வரவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு இவர்கள் செலவு செய்வதற்காக கோரியிருக்கிற தொகை ஏற்றுக்கொள்ளத் தக்கது என்றாலும் இந்தச் சமயத்தில் அதைச் செலவிடுவதற்கு முன்வந்ததன் உள்நோக்கத்தை கவனிக்கும்போது இதை கண்டிக்காமல் இருக்க முடியவில்லை என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். தண்டாயுதபாணி** : சட்ட மன்ற உபதலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 1964-65-ம் ஆண்டு இரண்டாவது துணை மதிப்பீடுகள் கோரிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தக் கோரிக்கையில் கூடுதல் செலவினமாகக் கூடிய ஒன்று அரசாங்கப் பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்டிருக்கிற படி. இந்தப் படியை

[திரு. எம். தண்டாயுதபாணி] [20th October 1964

ஏறத்தாழ மத்திய அரசு ஊழியர்கள் பெறுகின்ற அளவுக்குச் சரிக்கட்டி இருக்கிறோம். ஊழியர்கள் கோருகின்றபடி அடிப்படைச் சம்பளத்தைச் சரிக்கட்ட முடியாவிட்டாலும்கூட அகவிலைப் படியையாவது சரிக்கட்டி இருப்பது பாராட்டத் தக்கதாகும். கிராம ஊழியர்களுக்கு உயர்த்தப்பட்டிருக்கிற சம்பள விகிதத்தைப் பற்றி மதிப்புக்குரிய அங்கத்தினர் கோவிந்தன் அவர்கள் குறிப்பிடும்போது தேர்தலை உத்தேசித்து அவ்வாறு சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவ்வாறு கூறுவது உண்மைக்குப் புறம்பான விஷயம். கிராமாதிகாரிகள் எல்லாம் அரசினருக்குச் சார்பாக இருக்கிறார்கள் என்ற நிலைமையும் இல்லை. அவர்கள் கூறுகின்ற கொள்கையை கிராம மக்கள் கேட்கின்ற அடிப்படையில் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த அளவில் இல்லை. அந்த கிராம ஊழியர்களுக்கு—கிராம முன்சீப்புக்கு 25 ரூபாயிலிருந்து 52 ரூபாயாகவும், கணக்கப்பிள்ளைக்கு 30 ரூபாயிலிருந்து 56 ரூபாயாகவும், வெட்டி தலையாரிகளுக்கு 22 ரூபாயிலிருந்து 54 ரூபாயாகவும்—சம்பளத்தை உயர்த்தியிருப்பது வரவேற்க வேண்டிய ஒன்றாகும்.

அதற்கு அடுத்தபடியாக துணை மதிப்பீட்டுக் கோரிக்கையில் முக்கிய இடம் பெற்றிருப்பது விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய பாசன வசதிகளுக்காக ஒதுக்கி இருக்கும் மானியம். சிறுபாசனத் திட்டங்களால் அதிகப் பலன் கிடைக்கும் என்ற வகையில் நிதி ஒதுக்கத்தை அதிகப்படுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது. பொதுப் பணித் திட்டம் அடிப்படையில் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தமட்டில் எனது தொகுதியைச் சேர்ந்த ஓரத்தநாடு தாலுகாவில் 3,000 ஏக்கர் அளவுக்குப் பாசன வசதி செய்வதற்காக 13,24,000 ரூபாய் இந்தத் திட்டத்தில் ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

பஞ்சாயத்து கூட்டு மன்றங்களுக்குக் கொடுக்கப்படும் தல பாசன மானியம் 25 சதவிகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக உயர்த்தப்பட்டிருக்கும் தொகையை வரவேற்றாலும்கூட இந்தப் பணியை அவர்களிடத்தில் இருந்து மாற்றி பொதுப் பணித் துறையினரிடம் கொடுப்பது நல்லது. அவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு 2½ ரூபாயிலிருந்து 3 ரூபாய் அளவுக்குத்தான் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிறிய தொகையைக் கொண்டு அவர்கள் அந்தப் பணியைச் செவ்வையாகச் செய்ய முடியாது. ஆகவே, இந்தப் பணியைப் பொதுப் பணித் துறையினர் மேற்கொண்டால் சிறப்பாக அமையும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பர்மா அகதிகளுக்குக் கடன் வழங்குவது சம்பந்தமாக இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. பர்மாவிலிருந்து வருகிற மக்கள் வியாபாரம் செய்வதற்கு வழி செய்யும் வகையில் இந்த இரண்டாயிரம் ரூபாய் கொடுப்பதாகத் தெரிய வருகிறது. அங்கிருந்து வந்து



20th October 1964] [திரு. எம். தண்டாயுதபாணி]

வாழ வழி இல்லாமல் இருக்கும் அத்தனை பேருக்கும் இந்த இரண்டாயிரம் ரூபாய் கடன் வசதியை அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சையில் புதிதாக கட்டப்பட்டிருக்கும் மருத்துவக் கல்லூரியும் அதனுடன் இணைந்த ஆஸ்பத்திரிக் கட்டிடமும் கட்டி முடிந்து விட்டன. 1965-வது வருஷத்தில் புதிய கட்டிடத்திற்கு ஆஸ்பத்திரியை மாற்றுவது என்று திட்டமிட்டு 'எக்விப்மெண்ட்ஸ்' வாங்குவதற்காக 21 லட்சம் ரூபாய் சர்க்காரிடத்தில் அனுமதி கோரப்பட்டிருந்தது. அந்த அனுமதி தற்போது வழங்கப்படவில்லை. அந்தக் காரணத்தினால் அந்த ஆஸ்பத்திரியைப் புதிய கட்டிடத்திற்கு மாற்றுவது 1965 மார்ச் மாதத்திற்குப் பின்புதான் முடியும் என்ற நிலை இருக்கிறது. கட்டிடங்கள் கட்டி மருத்துவக் கல்லூரி நடந்து கொண்டிருக்கும் சமயத்திலே ஆஸ்பத்திரியை மாற்றுவது மிக மிக அவசியம் என்பதை அரசினர் மனதில் கொண்டு துரிதமாக மாற்றுவதற்கு வேண்டிய வழிவகைகளைக் காண வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்த உப தலைவர் அவர்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கி. இரா. சம்பந்தம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கிராம கடைநிலை ஊழியர்களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்தியிருப்பதைப் பற்றி யாருமே குறைகூற முடியாது. நல்ல சமயத்தில் அவர்களுக்கு அது கொடுக்கப்பட்டிருக்கிறது அதே சமயத்தில் கமிட்டி முடிவு செய்தது போல அவர்களை என்.ஜி.ஓ-க்களைப் போல் முழு நேர ஊழியர்களாகப் போடுவது நலமாக இருக்கும். அவர்கள் அடிக்கடி தாலுகா ஆபீசுக்கு யூனியன் வேலை சம்பந்தமாகவும் மற்ற வேலைகள் சம்பந்தமாக்வும் வரவேண்டியிருக்கிறது. அவ்வாறு அவர்கள் போவதற்கு படி எதுவும் கிடையாது. மாதத்திற்குக் குறைந்தது அவர்கள் 15 தடவை தாலுகா ஆபீசுக்குப் போக வேண்டியிருக்கிறது. ஆகவே. அவர்களுக்குப் படி கொடுப்பதற்கும் நாம் முன்வரவேண்டும். அகவிலை காரணமாக என்.ஜி.ஓ.-க்களுக்கு ஓரளவு படி உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பொருள்களின் விலை உயர்ந்துவிட்டன என்று எதிர்க்கட்சி அன்பர்கள் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் விலையை எப்படிக் குறைக்க முடியும் என்பதைப் பற்றி அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. தொழிலாளர்களுடைய கூலியை லிவிங் வேஜசுக்குத் தக்கபடி கூட்டிக் கொடுத்துக்கொண்டே வருகிறோம். அப்படி இருக்கும்போது உற்பத்தி செய்யக்கூடிய சாமான்களின் விலை எப்படிக் குறையும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவ்வப்போது இருக்கக்கூடிய ஸ்டாண்டர்டு ஆப் லிவிங் பொறுத்து அவர்களுடைய சம்பளத்தை அதிகப்படுத்த முடியுமே தவிர வேறு ஒன்றும் நடைமுறையில் செய்ய முடியாது.

*[திரு. கி. இரா. சம்பந்தம்]* [20th October 1964

கல்வியைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய மாற்றத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். தனியார் துறையில் நடத்தப்படுகிற பள்ளிகளில் வருஷத்திற்கு ஒரு தடவை ஆடிட் ஆகி சம்பளம் கொடுக்கவேண்டுமென்ற நியதி இருந்தது. அந்தச் சட்டத்தின்படி ஆடிட் ஆகிற வரையில் ஆசிரியர்கள் எல்லாம் நாலைந்து மாதச் சம்பளம் பெற முடியாமலே வேலை பார்க்கக் கூடிய நிலைமை ஏற்பட்டது. அதையெல்லாம் மாற்றியமைத்து ஆரம்ப பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுப்பதைப் போல இவர்களுக்கும் மாதா மாதம் சம்பளம் கொடுத்து வருவதை நான் வரவேற்கிறேன். ஒரே சமயத்தில் ஆசிரியர்களுக்கு மாணவர்களின் ரேஷியோவை மாற்றியமைக்க முன்வந்திருக்கிறார்கள். இவையெல்லாம் கல்வியின் தரம் உயர்வதற்குக் காரணமாக இருப்பதை வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையிலே விவசாயிகளுக்குப் போதுமான நல்ல விலை கிடைக்கவில்லை. வியாபாரிகள் அந்த ஆதாயத்தை அடைகிறார்கள் என்ற நிலைமையை உத்தேசித்து விலை நிர்ணயம் பண்ணியிருக்கிறார்கள். அதற்கு வியாபாரிகள் ஒத்துழைப்புக் கொடுக்காததன் காரணமாக இன்று அரிசிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இத்தனை வருஷங்களாக இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை நாம் எல்லோரும் சேர்ந்து நல்ல முறையில் சமாளித்தாக வேண்டும். 'பசிவந்திடப் பத்தும் பறந்து போகும்' என்பதை உணர்ந்து அமைச்சர்களும் அதிகாரிகளும் நடவடிக்கைகள் எடுத்து வந்த போதிலும் இன்னும் அதிகக் கவனம் தேவை என்று சொல்ல ஆசைப்படுகிறேன்

சென்ற ஆண்டிலே வெள்ளம் அதிகமாக தஞ்சையிலும் மற்ற இடங்களிலும் ஏற்பட்டதன் காரணமாக மைனர் இரிகேஷன் மூலமாக பாசன வசதியை ஆங்காங்கே எவ்வளவு தூரம் விஸ்தரிக்க முடியும் என்பதற்கான திட்டத்தை உருவாக்கினார்கள். அதன் காரணமாக தஞ்சை ஜில்லாவிலும், சேலம், இராமநாதபுரம் போன்ற பல இடங்களிலும் மேலும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் சாகுபடி செய்யும் நிலைமையை ஏற்படுத்தியது வரவேற்கத் தக்கது.

தஞ்சை ஜில்லாவில் வடிகால் வசதி இல்லாமல் பல வருஷங்களாக, பாதிக்கப்பட்டு ஒரு பிரச்னையாக இருந்து வருகிறது. இதற்காக தனியாக அதிகாரிகள்போட்டு பார்த்து வந்திருக்கிறார்கள். அதையும் கூடிய சீக்கிரத்தில் ஒரு டிவிஷனை எடுத்துக் கொண்டு நடத்தினால் நலமாக இருக்கும். முக்கியமாக கோஸ்டல் ஏரியாவில், மாயூரம், திருத்துறைப்பூண்டி நாகப்பட்டிணம், அதிராமப்பட்டிணம் இந்த இடங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் உடனடியாகக் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு பாக்கேஜ் ஏரியாவில் கடன் கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு கொடுக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்று கேட்டபோது, கழிந்த வருடம் கொடுக்கப்பட்ட



20th October 1964] *[திரு. கி. இரா. சம்பந்தம்]*

பணம் திருப்பிக் கொடுக்கப்படாததின் காரணமாகத்தான் இவ் வருடம் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. இப்போது மறுபடியும் மிகவும் கஷ்டப்பட்டு சாகுபடி செய்திருக்கிறார்கள். ஏதோ குறுவை சாகுபடியில நல்ல மகசூல் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சென்ற ஆண்டு வரி வஜா செய்துகொடுக்கப்படவில்லை. குத்தகை தள்ளுபடியும் செய்து கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாகத்தான் அவர்கள் வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாத நிலையில் இருந்தார்கள்.

ஃபாமிலி பிளானிங்-திட்டத்தில் அதிக அக்கரை எடுக்கப்பட்டு வருகிறது. இது மிகவும் முக்கியமான பிரச்சினை. கிராமங்களில் கூட இது தீவிரமாக நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இதை இன்னும் பரவலாகச் செய்வதற்கு ஆஸ்பத்திரியிலும் அதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து தனியான சலுகைகள் காண்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக நான் இதை வரவேற்கிறேன். இந்த அளவில் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ந. இராசாங்கம்:** கனம் துணைத் தலைவர் அவர்களே, எத்தனையோ மானியக் கோரிக்கைகள் உள்ளத்தில் ஒரு சில அம்சங்களைப் பற்றி மட்டும் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதில் ஒரு முக்கியமான அம்சம் என்.ஜி. ஓ.-க்களுக்கு படி உயர்வு அதிகரித்திருப்பதைப் பற்றியது. பஞ்சப்படி உயர்வு ஏற்பட்டிருப்பதனால் நிலைமை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது. என்பதைப் பார்த்தால் ஒன்றுமே இல்லை என்றுதான் சொல்ல முடியும். இந்த விஷயம் தெரிந்ததோ தெரியவில்லையோ உணவுப் பொருள்களின் விலையும் மற்ற சாமான்களின் விலையும் இரண்டு மடங்காக ஆகிவிட்டது. பஞ்சப்படியின் உயர்வின் காரணமாக உத்தியோகஸ்தர்கள் எல்லாம் மகிழ்ச்சியடைவதை விட்டு விட்டு எல்லா நேரங்களிலும் வேறு விதமான கவலைகளைத்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் நல்லதொரு முயற்சி எடுத்து அவர்களுக்கு நிவாரணம் அளித்தால்தான் உத்தியோகஸ்தர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். வெறும் பஞ்சப்படி உயர்வினால் மட்டும் இன்றைய தினம் உத்தியோகஸ்தர்கள் மகிழ்ச்சியடையக் கூடிய நிலையில் இல்லை. கிராம உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தவரையில் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார்கள். கிராம உத்தியோகஸ்தர்களுக்கு வேலை நிர்ணயம் மட்டும் போதாது. அத்துடன் அவர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பும் இருக்கவேண்டும். முன்னால் எல்லாம் அவர்களுக்கு இனாம் பாத்தியதை போன்றவைகள் இருந்து வந்தன. இப்போது அதுவும் கிடையாது. அவர்கள்தான் இன்றைக்கு நமது சர்க்கார் கஜானாவை நிரப்புவதற்கு பணம் வசூலித்து நமக்கு உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இல்லாவிட்டால் சர்க்காருடைய நடவடிக்கையில் பெரும்பாகமும் ஸ்தம்பித்துப் போய்விடும். ஆகவே, அவர்களுக்கு நிரந்தரமான வேலை கிடைப்பதற்கான வழி ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ந. இராசாங்கம்] [20th October 1964

அத்துடன் இப்பொழுது அதிகமான அளவில் பர்மா தமிழர்கள் வந்திருக்கிறார்கள். இதுதவிர ஆகாய விமானத்திலும் பர்மாவிலிருந்து தமிழர்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள். கப்பலில் வந்த பர்மாத் தமிழர்களுக்குக் காட்டக் கூடிய சலுகை ஆகாய விமானத்தில் வந்த பர்மாத் தமிழர்களுக்கு காட்டப்படவில்லையென்றும் தகவல் வந்திருக்கிறது. ஆகாய விமானத்தில் வரக் கூடியவர்கள் ஏதோ செல்வாக்குடையவர்கள் என்றும் அவர்கள் நிரம்பக் கையில் பணத்தைக் கொண்டுவந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் உண்மை நிலை அதுவல்ல. அவர்கள் விமானத்தில் வருகிறார்களே தவிர இங்கு வந்த பின்னால் அவர்களும் இங்குள்ள சாதாரண மக்களைப் போலவே எந்த விதமான வசதியும் இல்லாமல் பிச்சைக்காரர்களாகத்தான் ஆகி விடுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய நிலைமையை பரிசிலனை செய்து, இவ்விதம் எத்தனை பேர்கள் வந்திருக்கிறார்கள் என்பதையும் கணக்கெடுத்து அவர்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு வழி செய்துகொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக மண்வளப் பாதுகாப்பிற்காக சில லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவிடுகிறோம். ஆனால் மண்வள பாதுகாப்பு வேலைகளெல்லாம் பார்ப்பதற்கு நன்றாக இருந்தாலும்கூட ஒரு மழை விழுந்து விட்டால் பாழடைந்து போய் விடுகிறது. ஒரு ஏக்கர் நிலத்திற்கு 10 ரூபாய் செலவு செய்திருந்தாலும் செலவு செய்யக்கூடிய பணம் நல்ல அளவில் பயன் படுத்தப்படுகிறதா என்பதை நாம் பார்க்க வேண்டும். ஆகவே, இப்பொழுது கொடுக்கப்படுகிற பணத்தைவிட இன்னும் சற்று அதிகமாக இதற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கைத்தறி நெசவாளருக்கு சில சலுகைகளை நாம் அளித்துக்கொண்டிருக்கிறோம். கூட்டுறவுச் சங்கங்களுக்கு வெளியிலிருக்கின்ற நெசவாளர்களுக்கும் நல்ல முறையில் அவர்கள் வாழ்வதற்கு நாம் வழி செய்துகொடுக்கவேண்டும். கூட்டுறவு சங்கங்கள் அமைப்பது என்றால் 10 பேர்கள் 20 பேர்கள் என்று சேர்ந்து கொண்டு பெயரளவுக்கு அமைத்து விடுகிறார்கள். ஆனால் உண்மையான கைத்தறி நெசவாளர்கள் யார், ஏழை நெசவாளர்கள் யார் என்பதை யெல்லாம் கணக்கெடுத்து அவர்களுக்கு உதவி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். திட்டத்தைப் போடுவதால் மட்டும் அவர்களுக்கு நன்மை வந்துவிடாது. கைத்தறி நெசவாளர்களுக்கு போதுமான அளவு உதவியளிக்க நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறு பாசனத் திட்டங்களுக்காக செலவழித்து வருவதாக சொல்லுகிறோம். கடலூரைப் பொறுத்தவரை எத்தனையோ சிறு பாசனத் திட்டங்கள் இருக்கின்றன. பலதடவைகள் நான் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன் அரசாங்கத்திற்கும் எழுதியிருக்கிறேன். இதுவரையில் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. நான் குறிப்பிடக்கூடிய ஏரியில் நீர் இருந்தால் சுமார் 70



20th October 1964] [திரு. ந. இராசாங்கம்.]

ஏக்கர் வரை விவசாயம் செய்ய முடியும். பத்து ஆண்டு காலத்திற்குள் சிறிய திட்டங்களையெல்லாம் நிறைவேற்றினால் நிச்சயமாக உணவு உற்பத்தியை அதிகமாக்க முடியும். நான் எத்தனையோ தடவை இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இப்பொழுதும் கடைசித் தடவையாக சொல்லுகிறேன். சிறு பாசனத் திட்டங்களில் கவனம் செலுத்தி அதற்கு வேண்டிய பணத்தை ஒதுக்கி வேலைகளை நிறைவேற்றினால் பெரும் பலன் ஏற்படும் என்பதைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்புக்குரிய அங்கத்தினர் ராஜாங்கம் அவர்கள் பர்மா அகதிகள் ஏரோப்ளேனில் வந்தாலும் அவர்கள் பிச்சைக்காரர்கள் என்று சொன்னதை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசாங்கம் அவர்களுக்கும் மேலும் சலுகை கொடுக்கலாமே தவிர அவர்களும் பிச்சைக்காரர்கள் என்று சொல்லுவது சரியல்ல என்று கூறிக்கொள்ளுகிறேன். 10-30 a.m.

*திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் இந்தச் சபையில் கொண்டு வந்திருக்கிற துணை மான்யக் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன்.

குறிப்பாக, துணை மான்யக் கோரிக்கையில் அரசாங்க சிப்பந்திகளுக்கும் கிராம அதிகாரிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற விசேஷச் சலுகைகள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரசாங்க சிப்பந்திகளும் அரசாங்கமும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போல. அந்தக் குடும்பத்திலே, குறிப்பாக நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் நிர்வாகத்தின்றுக்கும் ஆளுகிறவர்களுக்கும் நல்ல தொடர்பு இருக்கிறது, இருந்து வந்திருக்கிறது என்ற நல்ல பெயர் இருக்கிறது. அந்தப் பெயரை இரு தரப்பினரும் காப்பாற்றி வருகின்றனர். அந்த நிலைமைக்கு பங்கம் வரும் முறையில் சில எதிர் கட்சிகள் முயற்சி செய்து, அந்தப் பெயருக்கு விரிசல் ஏற்படச் செய்வது நல்லதல்ல. இதற்குத் தேர்தல் தான் காரணம் என்று சொல்லுவது நல்லதல்ல. டிஸம்பரில் தேர்தல் வருகிறது என்பதற்காக செப்டம்பரில் ஏன் செய்யவேண்டும்? நவம்பரில் சலுகை கொடுத்து அவர்களின் நல்ல எண்ணத்தை வளர்த்திருக்க முடியாதா என்ன? எப்படியாவது நல்லது செய்யவேண்டும் என்ற அடிப்படையில் செய்து நல்ல அரசாங்கம் கொடுத்திருக்கிற சலுகை போல, மற்றொரு இலாகா, காதி இலாகா இப்போது தனியாக போர்டாக இயங்கி வருகிறது. இரண்டு தடவைகள் அரசாங்க சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சலுகைகள், [illegible] உயர்வு, காதி இலாகாவைப் பொறுத்த மட்டில் அமல் [illegible] வில்லை என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மற்ற [illegible] தகுதி கொண்டவர்களாக இருப்பவர்களுக்கு [illegible] கிடைக்காமல் இருக்கிறது. அரசாங்கம் எந்த அளவுக்கு [illegible] செய்து நிறைவேற்ற முடியுமோ அதைச் செய்யவேண்டும் என்று தான் விரும்புகிறேன்.

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [20th October 1964

இன்றைய தினம் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய கிராக்கிப் படியில் ஒரு பகுதி, அரிசியைப் பொறுத்த மட்டிலாகிலும் சிப்பந்திகளுக்கு அரசாங்கத் தரப்பில் வினியோகம் சரியாக நடைபெற ஏற்பாடு செய்தால் கூடியிருக்கக் கூடிய கிராக்கிப்படியின் அருமையை முற்றிலும் பெற முடியாது இருக்கிற தடையை நீக்கிவிட முடியும். இன்றைய தினம் அரசாங்கம் தொழில் அதிபர்களைத் தூண்டி வருகிறது. அதை மேலும் மேலும் செய்யலாம். சில பகுதிகளில் தனிப்பட்ட மானேஜ்மெண்ட்டார் ஆசிரியர்களுக்கு முன் பணம் கொடுத்து, தங்களுக்கு வேண்டிய நவ தான்யங்களும் பெற வேண்டிய உதவி செய்து, அந்தத் தொகையை தவணைகளில் திரும்பப் பெறுவதற்கு வசதி செய்து ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். அதே முறையில் தொழில் துறையில் இருப்பவர்களுக்கு வேண்டிய அளவுக்கு அரசாங்கம் தூண்டுதல் கொடுக்கலாம். தன் சிப்பந்திகளைப் பொறுத்த மட்டில் சில பகுதிகளில் இப்போது கூட நல்ல அரிசி கொள்முதல் செய்து கொடுத்து நம் சிப்பந்திகளுக்கு கடனுதவி செய்து தவணைகளில் திரும்பப்பெறுமாறு, இது போன்ற சந்தர்ப்பங்களில் ஏற்பாடு செய்ய தனியார் துறையில் இருக்கக் கூடிய தொழில் அதிபர்கள் முன் வந்தால், இது போன்ற சிரமங்களைத் தவிர்க்க உதவி செய்தவர்கள் ஆவார்கள் என்று கருதுகிறேன்.

இருபது ரூபாயாகிலும் குறைந்தது பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறது. அதை அமல் நடத்தும்போது, எனக்கே இரண்டு புகார்கள் இரண்டு பகுதிகளிலிருந்து வந்திருக்கின்றன. சில ஆசிரியர்கள் 20 ரூபாய்க்குக் குறைவாக பென்ஷன் பெற்றுக்கொண்டு வந்தார்கள். ஏப்ரலில் இருந்து குறைந்தது 20 ரூபாயாவது இருக்க வேண்டும் என்ற சலுகை கிடைத்தது. நான்கு மாதங்கள் அந்த முறையில் பெற்ற பிறகு, அக்டோபர் மாதம் ட்ரெஷரிக்குப் போகும்போது, அவர்களுக்கு முன்பு இருந்ததைவிட எந்த அளவுக்கு அதிகமாகப் பெற்றிருந்தார்களோ அந்தத் தொகையை திரும்பக் கட்ட வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்து திரும்பக் கட்ட வேண்டிய கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கான காரணம் கேட்டபோது, அக்கவுண்டண்ட்-ஜெனரல் ஆஃபீஸிலிருந்து அங்கீகரித்த உத்திரவு சரியான காலத்தில் வரவில்லை என்ற காரணத்தினால் கஷ்டம் ஏற்பட்டிருக்குமானால் அரசாங்கம் மிகுந்த தீவிர கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவிலே புதிய பணிகள் என்ற தலைப்பிலே மூன்றாவது திட்டத்தின் கீழ் ஆரம்பிப்பதாக இருந்த என்ஜினீயரிங் கல்லூரி என்ன நிலையில் இருக்கிறது என்று சுவடு சாதாரண அடையாளம் கூட தெரியாமல் இருக்கிறது. சேலத்தில் ஒரு கல்லூரி ஆரம்பிக்க எல்லா வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதில் மகிழ்ச்சி. அது போன்று திருநெல்வேலியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற பொறியியல்



20th October 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

கல்லூரிக்கு அவசர நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். இல்லையென்றால் மூன்றாவது திட்ட முடிவிற்குள் ஆரம்ப வேலையை பூர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் யாரோ ஒரு கல்லூரியை ஆரம்பிக்க, நான் நினைக்கிறேன் டி.வி.எஸ். ஸ்தாபனத்தார், முன் வந்திருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் ஆரம்பிப்பதாக இருந்தால் அதற்குத் தூண்டுதல் தேவை. அவர்கள் முன் வராவிட்டாலும் அரசாங்கத் தரப்பில் அவசியமாக ஆரம்பிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலியில் புதிய பணிகள் என்ற இனத்தில் கடயநல்லூர் என்ற இடத்தில்—நமது அமைச்சர் மஜீத் அவர்களுடைய தொகுதி அது—அந்த ஆஸ்பத்திரியை அரசாங்கம் தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டு பண உதவி செய்து வசதி செய்திருக்கிறது. அதைப் பற்றி மிகுந்த சந்தோஷம். நீண்ட நாள் குறை, தேவை பூர்த்தி அடைவதில் சந்தோஷம். அதைவிட முன் பாத்தியதை உடைய பகுதி காயல்பட்டணம் பகுதி. அத்தகைய பகுதிக்கு அந்த வசதி அவசரமாகத் தேவை. அதைக் குறித்து எத்தனையோ நடவடிக்கைகள் அரசாங்கத்தில் இருந்தாலும், தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அங்கே இரண்டு டாக்டர்கள் பணி செய்து வருகிறார்கள். ஜில்லா போர்டு இருந்தபோது இரண்டு டாக்டர்கள் இருந்தார்கள். இப்போது பஞ்சாயத்து யூனியனுக்கு வந்தபோதும் இரண்டு டாக்டர்கள் இருக்கிறார்கள். சர்க்கார் இதை எடுத்துக்கொண்டால் அதிகத் தொகை செலவு ஆகும் என்று நான் நினைக்கவில்லை. ஆகவே இதைக் காலாகாலத்தில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது போன்று துணை மதிப்பீட்டில் சிப்பந்திகளுக்கும் மற்றவர்களுக்கும் 5 கோடி ரூபாய் அளவுக்குக் கொடுக்க வசதியாக இருப்பதற்கு மற்றொரு காரணம் அதிக வருவாய்க்கு வழி செய்திருப்பது என்று நினைக்கிறேன். சமீபத்தில் நல்ல அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிற நல்ல முயற்சி பதுங்கியிருக்கிற பணத்தை வெளியே கொண்டுவருவதற்கு எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சி பாராட்டத் தகுந்தது. அது மட்டுமல்லாமல் வர்த்தக துறையில் தவறான வழியில் செல்லுபவர்களைத் திருத்த சந்தர்ப்பம் கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. அது சந்தோஷத்திற்கு உரியது. பெல்ஜியம் நாட்டில் இந்த முயற்சியை ஒரு வருஷத்திற்கு செய்தார்கள். அத்தகைய பணத்தை கட்டடங்களில் உபயோகப்படுத்துவார்கள் என்று என்னென்ன கட்டடங்களில் உபயோகப்படுத்தலாம் என்று சொல்லிவிட்டால் கட்டடத் தேவையும் பூர்த்தி ஆகும், பதுங்கி இருக்கும் பணமும் வெளியே வர சந்தர்ப்பம் இருக்கும் என்று ஒரு வருஷ காலம் பரீட்சை பார்த்தது. சில மாத காலமாகிலும் அவர்களாகவே அரசாங்கத்தை ஏய்ப்பதாக இல்லாமல் நாணயமான வர்த்தகர்களுக்கு எந்த வித அபராதம் இல்லாமல் செலுத்த வேண்டியதை மாத்திரம் செலுத்திக்கொள்ள அரசாங்கம் கொடுத்திருக்கக் கூடிய சந்தர்ப்பம் பாராட்டத் தகுந்த ஒரு அம்சம்.

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [20th October 1964

பர்மாவிலிருந்து வந்திருக்கிற அகதிகளுக்கு அவசர அவசரமாக வசதிகளும், வாய்ப்புகளும் கொடுக்க அரசாங்கம் காரியங்களை செய்திருப்பது பாராட்டத் தகுந்தது. அதற்காக ஏறக்குறைய 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். திருநெல்வேலிக்கு பல்லாயிரக்கணக்கான பேர்கள் வந்திருக்கிறார்கள். அதே போலத் தான் மற்ற ஜில்லாக்களின் அனுபவமும் இருக்கும் என்று நினைக்கிறேன். ஒதுக்கியிருக்கும் தொகை ஒரே நாளில் கூடுமானவரை 5-ல் ஒரு பகுதியினருக்குத் தான் உதவியாக இருந்திருக்கிறது. மேற்கொண்டு நூற்றுக்கணக்கானவர்கள் மனுக்கொடுத்தவர்களுக்கு உதவி அளிக்கப்படாமல் பாக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கும் வெகு சீக்கிரமாக உதவி செய்ய முன் வருவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இலங்கையிலிருந்து வந்தவர்களுக்கு இந்த மாதிரி உதவி கொடுக்க அரசாங்கம் முயற்சி செய்தது. பர்மாவிலிருந்து வந்தவர்களுக்குச் செய்ய முன் வந்திருக்கிறார்களே அந்த அளவுக்கு இலங்கையிலிருந்து வந்தவர்கள் இது வரையில் பெற்று விடவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. பல்லாயிரக்கணக்கான பேர்கள் இலங்கை ரிப்பாட்ரியட்ஸ் வந்ததில் திருநெல்வேலிக்கு வந்தவர்கள் 50,000 பேர்களில் 20,000 பேர்கள் திருச்செந்தூர் தாலுகாவில் மாத்திரம் இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான மனுக்கள் கடன் உதவிக்காகவும், தொழில் செய்வதற்கு உதவி அடைவதற்காகவும் கொடுத்தும் பண ஒதுக்கீடு இல்லாமல் காத்திருக்கிறார்கள். இதை அரசாங்கம் ஜாக்கிரதையாகப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ராஜ்யம் முழுவதிலும் 50,000 பேர்கள் உப்புத் தொழிலில் ஈடுபட்டவர்கள் இருக்கிறார்கள். 10 வருஷத்திற்கு முன் நான்—பவர் ஃபாக்டரி ஆக்டின் கீழ் சில சலுகைகள் செய்து தொழிலுக்குப் பாதுகாப்புக் கொடுத்து வசதி செய்ய முயற்சி செய்தார்கள். சட்டமும் செயலற்ற நிலையில் பயனற்றதாகப் போய் விட்டது. ஏதாவது உதவி செய்யவேண்டுமென்று கேட்டபோது, மத்திய அரசாங்கத்திலிருந்து சட்டம் இயற்ற முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள், ஆகையால் ராஜ்ய அளவில் சட்டம் தேவையில்லை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. எந்த அளவுக்கு மத்திய அரசாங்கத்திற்கு தூண்டுதல் கொடுக்க முடியுமோ அந்த அளவு செய்து அந்த உதவியைச் செய்ய முன் வரலாம். அல்லது தாமதம் ஆகுமானால் ராஜ்ய அளவில் செய்து, கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு பொருள்கள் போய் இந்தோனேசியாவிலிருந்து, ஜப்பானிலிருந்து, இலங்கையிலிருந்து நம் நாட்டுக்கு வரும்படியான உப்புத் தொழிலுக்குத் தகுந்த பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்செந்தூர் தாலுகாவில் 12,000 ஏக்கர் குதிரைமொழித் தேரி என்ற இடத்தில் இருப்பதில் மழைகாலத்தில் வரும் தண்ணீர் சமுத்திரம் போல் ஆகி மண் வளத்தை அடித்துக்கொண்டு



20th October 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

போகக் கூடிய நிலை இருக்கிறது. காண்டூர் பண்டிங் அல்லது தடுப்பு அணை தேவை என்று பல வருஷமாக திட்டம் தயாராக இருக்கிறதாகச் சொல்லப்பட்டு வந்தது. இன்றைய தினம் இந்த அம்சத்திலாவது ஏதேனும் இருக்கலாம் என்று நினைத்தேன். எதிர்பார்த்தேன். எப்படியானாலும் காலாகாலத்தில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும். வீணாக அந்தத் தண்ணீர் தேங்கி கடலுக்குப் போகக்கூடிய நிலைமையில், மண்ணும் அனாவசியமாக அரித்துக்கொண்டு போகக் கூடிய அளவுக்கு நிலைமையை விடக்கூடாது. காண்டூர் பண்டிங் ஏற்படுத்துவதை எந்த அளவுக்கு துரிதப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு துரிதப்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்செந்தூர் பக்கத்தில் புன்னக்காயல் துறைமுகத்தை எவ்வளவு தூரம் அபிவிருத்தி செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். தூத்துக்குடி துறைமுகம் அபிவிருத்தி அடைந்து கொண்டு வருகிறது. தூத்துக்குடி துறைமுகம் பெரிய துறைமுகமாக அபிவிருத்தி அடையும் பொழுது சிறிய சிறிய போட்டுகள் அந்தத் துறைமுகத்தோடு ஓட்டி வந்து நிற்பதற்கு கஷ்டம் ஏற்படலாம். ஆகவே, அதன் அருகிலுள்ள சிறிய சிறிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதில் கவனம் செலுத்தவேண்டும். திருநெல்வேலியில் குலசேகரப் பட்டணம் துறை முகத்தையும், புன்னக்காயல் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு வெகு நாட்களாக அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜில்லா போர்டு சிப்பந்திகளை 'ரெகுலரைஸ்' செய்து 'அப்ஸார்ப்' செய்வதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தாலும், பல இலாகாக்களில் அந்த ஏற்பாடு பூர்த்தி அடைந்திருக்கிறது என்றாலும் கூட, சில இலாகாக்களில் ஜில்லா போர்டுகளில் பணி செய்த சிப்பந்திகள் முற்றிலும் 'அப்சார்ப்' செய்யப்படவில்லை. அவர்களுடைய சிரமங்களை நிவர்த்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி ஜில்லாபோர்டு ஆஸ்பத்திரிகளில் பணி செய்த சிப்பந்திகள், கம்பவுண்டர் போன்ற சிப்பந்திகள் பல வருஷங்கள் ஆகியும் அவர்களுடைய சர்வீஸ் எல்லாம் ரெகுலரைஸ் செய்யப்பட்டு, அவர்கள் 'அப்ஸார்ப்' செய்யப்படாத நிலைமை இருந்துவருகிறது. அந்த விஷயத்தில் துரிதமாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரிக்கிறேன்.

திரு. ச. ஜீவரத்தினம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மான்யக் கோரிக்கையை நான் மனப்பூர்வமாக வரவேற்கின்றேன். அதன்பொழுது [illegible] கருத்துக்களை சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். நம்முடைய சர்க்கார் ஊழியர்களுக்கு இந்த நிதி ஆண்டில் பஞ்சப்படி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் அளித்துள்ள உயர்வை அனுசரித்து அவர்களுக்கு அளிக்கப்

[திரு. ர. ஜீவரத்தினம்] [20th October 1964

பட்டுள்ள உயர்வை நான் வரவேற்கிறேன். அதே போன்று கர்ணம் தலையாரி, தோட்டிகள் போன்ற கிராம அதிகாரிகளுக்கு நீண்ட காலமாக சம்பள வசதி அளிக்கப்படாமல் இருந்தது. இந்த ஆண்டிலாவது அவர்களுக்குச் சம்பள உயர்வு அளித்தது பற்றி நான் கனம் முதல் அமைச்சர் அவர்களையும், ரெவின்யூ அமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன். சர்க்கார் ஊழியர்களும், கிராம அதிகாரிகளும், இந்தத் திட்டத்தின்படி சம்பளம், பஞ்சப்படி ஆகியவைகளில் உயர்வைப் பெற்று, சர்க்காருடன் நல்ல முறையில் ஒத்துழைப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

வேலூர் நகரத்திற்கு அருகாமையில் சுமார் ரூ. 5 லட்சம் செலவில் 'டி.பி. சானடோரியம்' கட்டப்பட்டு, இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அது இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. அங்கு டாக்டர்கள் கூட நியமிக்கப்படாமல் இருக்கிறது. உடனடியாக அங்கு வேண்டிய டாக்டர்களையும், பணியாளர்களையும், அதிகாரிகளையும் நியமித்து அந்த ஆஸ்பத்திரி துவக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை ஜில்லாவிற்கு அடுத்தாற்போல் வட ஆற்காடு ஜில்லாவில் உணவு உற்பத்தி ஆகிறது என்று நமது முதல் அமைச்சர் அவர்களும், பல அமைச்சர்களும் பெருமையோடு கூறிக்கொள்கிறார்கள். வட ஆற்காடு ஜில்லா வாசிகள் எப்பொழுதும் கடுமையாக உழைப்பவர்கள். உழைப்பைத் தவிர அவர்களுக்கு வேறு ஒன்றும் தெரியாது. வட ஆற்காடு ஜில்லா வாசிகளுக்கு சில வசதிகள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வட ஆற்காடு ஜில்லா பெரும்பாலும் பாலாறு பாசனத்தை கொண்டது. பாலாற்றின் இரு கரைகளிலும் பாசனக் கிணறுகள் வெட்டப்பட்டு அதன் மூலம் தண்ணீர் இறைத்து பயிரிடுகிறார்கள். அங்கு மின்சார பம்பு செட்டுகள் ஏராளமாக அளிக்கப்பட்டிருக்கின்றன. பாலாறு பாசன விதி என்ற ஒரு விதி இருக்கிறது. அதன்படி சுமார் 2,000 அடிகளுக்கு அப்பாற்பட்டுத் தான் மின்சாரம் கொடுக்கப்பட வேண்டும் என்ற ஒரு விதி இருக்கிறது. அதனால் புராதன கிணறுகளுக்கு மின்சாரம் உபயோகப்படுத்த முடியாமல் இருக்கிறது. உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கக் கூடிய நேரத்தில் இந்த விதியை தளர்த்தி ஏற்கெனவே கிணறுகள் வெட்டப்பட்டிருந்தால், அந்தக் கிணறுகளுக்கெல்லாம் மின்சாரம் சப்ளை செய்ய வேண்டும் என்று ஒரு உத்தரவு போட்டால் இந்த உணவு நெருக்கடியை ஓரளவுக்கு சமாளிக்கமுடியும். அதன் மூலம் அதிக உற்பத்தியை பெருக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பாலாற்றுக் கரை ஓரத்தில் வாணியம்பாடியிலிருந்து வாலாஜா வரையில் தோல் பதனிடும் நிலையங்கள் இருக்கின்றன. அவைகளிலிருந்து கழிவு நீர் ஏராளமாக ஆற்று ஓரத்தில் போய்ச் சேருகிறது. அது நெற்பயிருக்கு கெடுதிகள் விளைவிக்கிறது. இந்த மன்றத்தில் இதைப்பற்றி கடந்த ஆண்டில் கூட வற்புறுத்திக் கூறியிருக்கிறேன். அதைத் தடுக்கும்படியாக சுகாதார அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



20th October 1964] [திரு. ர. ஜீவரத்தினம்]

வேலூர் நகரத்தில் ஏராளமாக பொற்கொல்லர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சரியானபடி வேலை வாய்ப்புக்கள் இல்லாமல் இருக்கின்றன. அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டப்படி சர்க்கார் பலருக்கு உதவி அளித்துக் கொண்டு வருகிறார்கள். இருந்தும், இன்னும் ஏராளமான மனுக்கள் பைசல் செய்யப்படாமல் இருக்கின்றன. அவைகளையெல்லாம் துரிதமாக உடனுக்குடன் விசாரித்து பைசல் செய்யும்படி உத்தரவிட வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறியாளர்களுக்கு, அதாவது கூட்டுறவு சங்கங்கள் இல்லாமல் உள்ள பிற கைத்தறியாளர்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு நிதி உதவி கார்ப்பரேஷன் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு ஜில்லாவில் பெரும்பாலான கைத்தறியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய முன் வந்திருப்பதை மிகவும் பாராட்ட விரும்புகிறேன். இப்பொழுது கொடுத்திருக்கக் கூடிய ரூ. 5 லட்சம் மூலதனம் போதாது என்று நினைக்கிறேன். மேலும் அவர்களுக்கு நிதி உதவி அளித்து, அவர்களுடைய நிலையை சீர்திருத்தி உயர்த்துவதற்கு சர்க்கார் வழி வகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் ஒன்றை வகுத்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். கிராம ஆசிரியர்களின் நிலைமை சீர்படுத்தப்படவேண்டும். அவர்களுக்கு வீடுகள் இல்லாத நிலைமையினால், வீடு இல்லாத பல ஆசிரியர்கள் நகர் புறங்களுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். நகர் புறங்களுக்கு அருகாமையில் உள்ள இடங்களைத் தான் ஆசிரியர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டு வருகிறார்களே தவிர, கிராமப்புறங்களுக்குச் செல்ல விரும்பவில்லை. கிராமப்புறங்களில் வீடுகளுக்கு கஷ்டம் இல்லாமல், ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுத்தால் கிராமங்களில் இருக்கும் மாணவர்களுடைய கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு ஹேதுவாக இருக்கும். ஆகவே, கிராம ஆசிரியர்களுக்கு கட்டாயம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி பரிசீலிக்கும்படி கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று போலீஸ்காரர்களுடைய நிலைமையையும் நாம் பரிசீலிக்கவேண்டும். 25 ஆண்டுகள் அவர்கள் சேவை செய்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் சரியான வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் அவர்கள் உத்தியோகத்தில் இருக்கும் பொழுதே, அவர்களுக்கு என்று ஒரு திட்டத்தை வகுத்து அவர்களுக்குக் கடன் கொடுத்து, அல்லது கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடன் கொடுத்து, வீடு கட்டும் திட்டத்தை மேற்கொள்ளவேண்டும். அது பற்றி பரிசீலிக்கும்படி கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வீடுகட்டும் திட்டம் பெரிய நகரங்களில் அமுலில் இருக்கிறது. சென்னை, மதுரை, திருச்சி, கோவை போன்ற ஜில்லா தலைநகரங்களிலெல்லாம் அமுலில் இருக்கிறது. வேலூர் போன்ற நகரங்களுக்கும் அந்த வீடு கட்டும் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும். வட ஆற்காடு தலைநகரமாகிய வேலூர் நகரத்தில் ஜன நெருக்கடி ஏராளமாக இருக்கிறது. வீட்டு வசதி பற்றாக்குறை இருக்கிறது. ஒரு வீட்டிலே 8, 10 குடும்பங்கள் இருக்கின்றன. அந்த நிலைமை மாறி அங்கும் வீட்டு வசதி போர்டு மூலம் வீடு கட்டும் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கு இருக்கக்கூடிய அரசாங்க ஊழியர்களுக்கும் வீட்டு வசதி இல்லாமல் இருக்கிறது. அதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு ஒரு தனி திட்டம் வகுத்து, அவர்களுக்கும் வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு நிலைமையைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உணவு உற்பத்தியில் தஞ்சைக்கு அடுத்தாற்போல் முன் அணியில் நிற்கும் ஜில்லா வட ஆற்காடு ஜில்லா என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி கூறி வந்திருக்கிறார்கள். மின்சாரத் துறையில் வட ஆற்காடு ஜில்லாவிற்கு ஏராளமான மின்சாரத்தை வழங்கியிருக்கிறார்கள். அதன் மூலமாக ஓரளவு தான்ய உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது அங்கும் கொஞ்சம் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையைப் போக்குவதற்கு சுமார் 10, 15 நாட்களுக்கு எங்களுக்கு வேண்டிய தானியங்களைக் கொடுத்தால் போதும், அதற்குப் பிறகு நாங்கள் வேண்டுமானால், 50 ஆயிரம் டன்னோ, அல்லது ஒரு லட்சம் டன்னோ பிற ஜில்லாக்களுக்குக் கொடுக்க முடியும். ஆகவே இப்பொழுதுள்ள நிலைமையைக் கொஞ்சம் அபிவிருத்தி செய்யும்படி கனம் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

*திரு. இரா. நாராயணன்: சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் 1964-65-ம் ஆண்டிற்கான இரண்டாவது துணை மதிப்பீட்டை ரூ. 5 கோடியே 25 லட்சத்திற்கு கோரியிருக்கிறார்கள். இந்த சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இதை வரவேற்றுப் பேசக் கூடிய நிலையில் நான் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் சென்னை நகரத்தில் இப்பொழுது மக்கள் க்யூ வரிசையிலே நின்று அரிசிக்காக அவதிப்படும் நிலையிலே, அரிசி கிடைக்காமல் சர்க்காரால் தடியடிப் பிரயோகம் நடத்தி மக்கள் அவதிப்படும் நிலையிலே, கிராம அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் கொஞ்சம் அகவிலைப் படியை உயர்த்தியதை முன்னிட்டு யாராவது இதை வரவேற்க இருக்கிறார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். மக்கள் படும் அவதி நிலையை முன்னிட்டு நீங்கள் உண்ணாவிரதம் இருக்கப் போகும் ஏற்பாட்டைப் பற்றி எங்களுக்கு முன்[illegible] கனம்



முதலமைச்சர் அவர்கள் இந்த சட்டமன்றத்திலே பயமுறுத்தினார்கள். ஏதோ எங்களைச் சிறைப்படுத்தி விடுவார்கள் என்றும், எங்களை தண்டனைக்கு உள்ளாக்குவார்கள் என்றும் பயமுறுத்தினார்கள். அதை வரவேற்கிறோம். இருந்தாலும் சட்ட மன்றத்திற்கு உட்பட்டுத்தான் நடக்கவேண்டும். சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் நடக்கவேண்டும். இந்த சந்தர்ப்பத்திலே, தஞ்சை ஜில்லாவில் கொள்முதல் திட்டம் தோற்றுவிட்டது அங்கே நெல் அதிகமாகக் கிடைக்கிறது. அதை வாங்குவதற்கு ஆள் இல்லை என்று சட்ட மன்றத்திலே ஒரு உறுப்பினர் பேசினார். சென்னை நகரத்திலே விலை வாசி ஏறியிருக்கிறது. மக்கள் சோற்றுக்குத் திண்டாடுகிறார்கள். இந்த நிலையில் இந்தத் துணை மதிப்பீட்டை எந்த அளவில் வரவேற்றுப் பேசுவது என்று புரியவில்லை.

கிராம அதிகாரிகளின் சம்பளத்தை ஒரு பங்கிலிருந்து இரண்டு பங்காக உயர்த்தி விட்டோம் என்று சர்க்கார் கூறுகிறார்கள். ஆனால் அப்படி உயர்த்தினாலும்கூட இன்னும் கிராமங்கள் சீர்திருத்தம் அடையவில்லை. கிராம அதிகாரிகளுக்கும் கிராம ஊழியர்களுக்கும் வேறுபாடு இருக்கிறது. சில கிராமங்களிலே தலையாரி, வெட்டியான் இவர்கள் சரியான காலத்தில் வேலைக்கு வந்தாலுங் கூட, அவர்கள் வரவில்லை, வேலை செய்யவில்லை என்று ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு ரிப்போர்ட் செய்து தாசில்தார் அவர்களுடைய சம்பளத்தைப் பிடித்துக்கொள்ளும் நிலைமை இருக்கிறது. அதாவது அரசாங்கத்திலே கொடுக்கிற பஞ்சப்படியை அரசாங்கமே திருப்பி எடுத்துக் கொள்கிற நிலைமையில் அங்கேயுள்ள கீழ்த்தர ஊழியர்கள் நடத்தப்பட்டு வருகிறார்கள். அந்த ஊழியர்களுக்கு ஒரு ரிஜிஸ்டர் ஏற்படுத்தி அவர்களும் அதிலே கையெழுத்து போடக் கூடிய அளவிலே ஒரு சீர்திருத்தம் கொண்டு வர வேண்டும். இப்பொழுதுள்ள நிலையில் வெட்டியான், தலையாரி சரிவர வேலைக்கு வந்தாலும் கூட அவர்கள் வரவில்லையென்று கிராம அதிகாரிகள் சொல்லுகிறார்கள். சில கிராமங்களிலே ரூ. 3,000 அல்லது ரூ. 4,000-ம் தான் கிஸ்தி வசூலாகிறது. அதற்கும் கர்ணம் ஒன்று இரண்டு கிராம முன்சீப் அதிகாரிகள் தான் இருக்கிறார்கள். ரூ. 20,000 அல்லது ரூ. 30,000 கிஸ்தி வசூல் செய்யக்கூடிய கிராமங்களுக்கும் அதே அளவில்தான் கிராம அதிகாரிகள் கர்ணங்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் ஒரேயளவுக்குப் பஞ்சப்படி உயர்வு அளிக்கப்படுகிறது. இது வரவேற்கக்கூடிய நிலையில் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். அதிகக் கிஸ்தி வசூல் ஆகும் கிராமங்களில் இன்னும் அதிகப்படியாக இரண்டு கிராம அதிகாரிகளை நியமித்தால் கிஸ்தி வசூல் நல்ல முறையில் நடக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த விதமான குறைபாடும் இருக்காது.

அடுத்தபடியாக சிறு நீர்ப் பாசனத் திட்டத்திற்காக பஞ்சாயத்து யூனியன்களுக்கு 25 சதவிகிதம் தொகையை அதிகப்படுத்தியிருப்பதாகக் கூறினார்கள். பஞ்சாயத்து யூனியன்களிலே, இந்தச் சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் சரிவர நடக்கவில்லை.

கனம் திரு. பூ. கக்கன்: சிறு நீர்ப்பாசனம் என்று சொல்லுகிறார்களே (சிரிப்பு).

[20th October 1964

**திரு. இரா. நாராயணன்:** இந்தச் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகப் பஞ்சாயத்து யூனியன்களுக்கு 25 சதவிகிதம் கொடுப்பது போதாது என்றுதான் சொல்ல வேண்டும். அதுவும் சில பகுதிகளிலே குடிதண்ணீர் வசதியே இல்லாமல் இருக்கிறது. குடிதண்ணீர் வசதி இல்லாத நிலையிலே இம்மாதிரி நீர்ப்பாசனத் திட்டங்களை எப்படி பஞ்சாயத்துக்கள் அமுல் நடத்த முடியும் என்பது புரியவில்லை. மக்களுக்கு வேண்டியது தண்ணீர், உணவு உடை, இருக்க இடம். ஆகவே இந்த முக்கியமான திட்டங்களை அரசாங்கமே பொறுப்பு எடுத்து அமுல் நடத்த வேண்டும். சில கிராமங்களிலே குடியிருப்பதற்குப் போதுமான இடம் இல்லாமல் இருக்கிறது. சிறு குடிசைகளிலே மக்கள் வசிக்கிறார்கள். இதை அரசாங்கம் சிந்தித்துப் பார்த்து, குடியிருப்புக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். நகரங்களிலே வசிக்கும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. ஆனால் கிராமங்களிலே வசிக்கும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை. கிராமங்களிலே போதுமான இடவசதி இருக்கிறது என்று நினைத்து அவர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸை நிறுத்தியிருக்கிறார்களா? கிராமங்களில் கிராம உத்தியோகஸ்தர்கள் வசிப்பதற்குப் போதுமான இடவசதி இல்லை. ஆகவே, அப்பேர்ப்பட்ட ரெவின்யூ அதிகாரிகளுக்கும் வீட்டுவாடகை அலவன்ஸ் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக பர்மாவிலிருந்து வருகிற அகதிகளுக்கு சில சலுகைகள் கொடுப்பதாக இங்கே கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே சபை முன்பு வைக்கப்பட்ட ஒரு துணை மதிப்பீட்டில் கூட தங்கக் கட்டுப்பாடு விதியினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களுக்கு உதவியளிக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்று காலையிலேகூட மதுரையிலிருந்து வந்த ஒரு பொற்கொல்லர் அப்படிக் கொடுக்கும் கடன் தொகை அவர்களுக்குச் சரிவர கிடைக்கவில்லையென்று சொன்னார். இந்த நிர்வாகம் சரி வர இயங்கவில்லை, அதை எடுத்துச் சொல்லுவதற்குத்தான் நான் இங்கே வந்திருக்கிறேன்; அமைச்சர் அவர்களையும் பார்க்கப் போகிறேன் என்று இன்று காலை 5 மணிக்கு என்னிடம் சொன்னார். ஆகவே, இந்த பொற்கொல்லர்களுடைய நிலைமைபோல் ஆகாமல், பர்மாவிலிருந்து வந்துள்ள அகதிகளுக்கு நல்லமுறையில் அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். வி. சுவாமிநாதன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே இந்த பர்மா அகதிகளைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பர்மா அகதிகள் இங்கே வந்து படும் கஷ்டத்தைப் பார்க்கும்போது உள்ளபடியே, எனது மனம் கஷ்டப்படுகிறது. பர்மாவிலே எனக்கு அதிகமான தொடர்பு உண்டு. என் னுடைய இளம் வயதிலே நான் பர்மாவில் இருந்தேன். கனம் முதலமைச்சர் அவர்களுக்கும் இது தெரியும். பர்மாவிலே தமிழர்



20th October 1964] [திரு. ஆர். வி. சுவாமிநாதன்]

கள் அதிகமாக இருக்கிறார்கள். சுதந்திரம் கிடைத்த பின்னர் நமக்கு வந்த கஷ்டங்களில் இந்த அகதிகள் பிரச்சினையும் ஒன்று. மற்ற நாடுகளுக்கெல்லாம் சுதந்திரம் கிடைத்தபிறகு அங்கே வாழ்க்கை நடத்தும் தமிழர்களுக்கு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகளின் கஷ்டம் ஒரு புறம் இருக்கிறது. அது நம்மை நேரடியாகப் பாதிக்கவில்லை. ஆனால் இந்த பர்மா அகதிகள் கஷ்டம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நேரடியாக நம்மை பாதிக்கிறது. ஆனால் இப்பொழுது இந்த 11-00 a.m.
பர்மா அகதிகள் பிரச்சினை பெரிதாக ஏற்பட்டிருக்கிறது. பர்மாவில் இந்த மக்கள் வாழ்ந்த நிலையைக் கவனித்து அவர்கள் இப்பொழுது இங்கே படும் கஷ்டத்தையும் பார்த்தால் மிக்க மனச் சஞ்சலம் ஏற்படுகிறது. பர்மாவுக்கு முதன் முதலிலே மூன்று நான்கு தலைமுறைகளுக்கும் முன்னால் இந்தியாவிலிருந்து போனவர்கள் தமிழர்கள் தான். பிரிடிஷ்காரர்கள் போவதற்கு முன்பே தமிழர்கள் அங்கே போயிருக்கிறார்கள். அப்படி பல தலைமுறைகளுக்கு முன்பாகச் சென்றவர்கள் தனித்தனித் தொழில்களில் ஈடுபட்டார்கள். ஆனால், தமிழர்கள் மட்டும் விவசாயத்தில் மட்டும் தான் ஈடுபட்டார்கள். மற்றவர்கள் குஜராத்திகள் வங்காளிகள் இவர்களெல்லாம் வேறு வேறு தொழில்களில் ஈடுபட்டார்கள். ஆனால் தமிழர்கள் மட்டும் விவசாயத்தில் தான் ஈடுபட்டார்கள். தமிழ் நாட்டிலிருந்து சென்ற முஸ்லீம்கள் வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். நகரத்தார்கள் வட்டித் தொழிலில் ஈடுபட்டார்கள். மற்றவர்கள் எல்லோரும் மராட்டியர் குஜராத்தியர் சைனாக்காரர் இவர்களெல்லாம் பல்வேறு வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். ஒரிசாவிலிருந்து சென்றவர்கள் தமிழர்களைப்போல விவசாயத்தில் ஈடுபட்டார்கள். ஆந்திராக்காரர்கள் ரிக்ஷா இழுப்பது, வண்டி இழுப்பது போன்ற கூலி வேலையில் ஈடுபட்டார்கள். தமிழர்கள் மட்டும் விவசாயத்தில் மாத்திரமே ஈடுபட்டார்கள். அங்கே அவர்களுடைய வாழ்க்கைத்தரம், நம்நாட்டில் அவர்களைப் போன்றவர்கள் வாழ்க்கையைவிட நல்ல விதமாக இருந்தது; இங்கே 4, 5 ஏக்கரா நிலம் உள்ளவர்களுடையது போல அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்ததாக இருந்தது. அங்கே பர்மாவில் சுதந்தரம் ஏற்பட்ட பிறகு கிராமங்களில் இந்த விவசாயிகள் இருக்க முடியாத நிலைமை ஏற்பட்டு இவர்கள் நகரங்களுக்கு வந்து வியாபாரத்தில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. முன்பெல்லாம் அவர்களுக்கு அரிசிக் கஷ்டம் என்றால் என்ன என்றே தெரியாது. மிக்க ஏழையாக இருப்பவர் வீட்டில் கூட அரிசிக் கஷ்டம் என்பது இருந்ததே இல்லை. ஆனால் அவர்கள் இங்கே திரும்பி வந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கே மிகுதியாக அரிசிக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக அரசாங்கம் அவர்களுக்கு ஒன்றும் செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. இப்பொழுது கூட அந்த இனத்திற்காக ரூ. 25 லட்சம் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக் கெல்லாம் தலைக்கு நாளுக்கு ஒரு ரூபாய் ஒன்றரை ரூபாய் என்று, கொடுப்பது என்பது எவ்வளவு நாட்களுக்குத்தான் அப்படிக் கொடுத்துக் கொண்டிருக்க முடியும்? அவர்களுக்கு ஏதாவது நிரந்தரமான

நிவாரணம் அளிக்க ஏற்பாடுகள் செய்தாக வேண்டும். அவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தவர்கள். இங்கே தமிழ் நாட்டில் நில உச்சவரம்புச் சட்டம் வந்தபிறகும் உபரி நிலம் எவ்வளவு இருக்கிறது ; தலைக்கு 30 ஏக்கர் என்று நிர்ணயித்த பிறகும் அதிகப்படியாக உபரி நிலம் இல்லாதவர்களுக்கு வினியோகிக்க இல்லை என்றே தெரிகிறது. அப்படி உபரி நிலம் இருந்தாலும் கூட அது ஏற்கனவே உழுது கொண்டிருந்தவர்களுக்குத்தான் கொடுக்கப்படும். புதிதாக வந்திருக்கிற இந்த பர்மாக்காரர்களுக்கு விவசாயத்திற்கு என்று நிலம் கொடுக்க முடியாது என்றே தெரிகிறது. நாம் பார்த்தோம் கோயம்புத்தூரில் வைக்கப்பட்ட பாகிஸ்தான் அகதிகள் தங்களுக்கு விவசாயத்திற்கு நிலம்தான் வேண்டும் என்று கேட்டு வேறு தொழில்களுக்குப் போக முடியாது என்று சொல்லி அங்கிருந்து கிளம்பி வந்து விட்டதாகத் தெரிகிறது. இந்த நிலையில் பர்மா அகதிகளுக்கு சர்க்கார் என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள் என்று தெரிய வேண்டும். கனம் முதல் அமைச்சரும் கூட பெரும்பாலும் அதிகாரிகளைக் கேட்கிறோம் என்றுதான் சொல்கிறார்கள். (கனம் முதல் அமைச்சர் ஸ்தல ஸ்தாபன அமைச்சருடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.) நான் சொல்வதை கனம் முதல் அமைச்சர் அவர்கள் சற்று கவனித்தால் நன்றாக இருக்கும் (கனம் முதல் அமைச்சர் : என் காது கேட்டுக்கொண்டுதான் இருக்கிறது) பர்மா அகதிகளுக்குப் பணம் கொடுக்கலாம். ஆனால் எவ்வளவு நாட்களுக்குக் கொடுப்பது? நான்கு மாதம் அல்லது ஆறு மாதம் கொடுக்கலாம். நிரந்தரமாகக் கொடுக்க முடியாது. நிரந்தரமாக அவர்களுக்கு ஏதாவது பரிகாரம் செய்ய வழி தேட வேண்டும். அவர்கள் மூன்று நான்கு தலைமுறைகளுக்கு முன்பாக எங்கேயோ சில இடங்களில் இருந்து சென்றிருப்பார்கள். ராமநாதபுரம், மதுரை, தஞ்சை போன்ற மாவட்டங்களிலிருந்து சென்றிருப்பார்கள். அங்கு போய் பார்த்தால் இப்பொழுது அவர்களுடைய சந்ததியார் யாராவது இருக்கிறார்களோ என்னவோ. அப்படி ஏதாவது ரூட் உள்ளவர்களுக்கு யாராவது சந்ததியார் இருந்தால் 'யாரோ பாட்டன் பர்மாவுக்குப் போனான் என்று சொல்லுங்கள். அவரைச் சேர்ந்தவராகத்தான் நீங்களும் இருப்பீர்கள். சரி சரி வா' என்று சொல்லலாம். இருந்தாலும் கூட இன்றைக்.க் கிழக்கு ராமநாதபுரம் போன்ற இடங்களில் விவசாய நிலைமை மிக மிக கெட்டு இருக்கிறது. விவசாயிகளின் நிலை கஷ்டமானதாக இருக்கிறது. வெளவால் விருந்துபோல்தான் இருக்கும். ஏற்கனவே வெளவால் மரத்தில் தலைகீழாகத் தொங்கி கொண்டிருக்கிறது. அதுபோல அங்கு இருப்பவர்களே ஏற்கனவே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இந்த அகதியும் போய்ச் சேர்ந்தால் யாருக்கும் பிரயோஜனம் இல்லை. இவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்றால் அமைச்சர்கள் செகரேடேரியட்டில் கேட்கிறார்கள். செகரட்டரிகள் ஏதோ பழைய கால வெள்ளைக்காரன் காலத்தில் போட்ட ஏதோ திட்டப்படி இவர்களுக்கு 'டோல்' கொடுக்கலாம் என்று யோசனை சொல்லுகிறார்கள். அன்றிருந்த ஐ.ஸி.எஸ். லைனிலேதான் இன்றைய ஐ.ஏ.எஸ். காரர்களும் செய்கிறார்கள். அது சரியானதாக இருக்காது. பர்மா சென்ற மக்களின் நிலைமை



புரிந்த சிலபேரை வரவழைக்க வேண்டும். அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகவோ அல்லது மற்றவர்களாகவோ இருக்கலாம். அப்படிப்பட்டவர்களையும் சேர்த்து வைத்துக்கொண்டு யோசனை கேட்க வேண்டும். அதிகாரிகள் சொல்லும் வழி மட்டும் போதாது.

இன்றைக்கு எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சை எடுத்துக் கொள்வோம். பர்மாவிலிருந்து வருபவர்களில் சில பேர் அரை குறையாகப் படித்தவர்கள் வருகிறார்கள். அவர்கள் அங்கே சென்று உத்தியோகம் கேட்டால் எம்பளாய்மெண்ட் எக்சேஞ்ச் மெஷின் மாதிரி ரிஜிஸ்டர் பண்ண வேண்டும் என்று சொல்லி வருகிறவர் பெயரை பதிவு செய்து கொண்டு ஒரு கார்டைக் கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள். அங்கே ஏற்கெனவே அந்தப் பட்டியலில் ஆயிரக்கணக்கான பேர்கள் ரிஜிஸ்டர் பண்ணி காத்துக் கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக நல்ல திறமையுள்ளவன் எங்காவது நல்ல உத்தியோகத்திற்குப் போய்விடுவான். திறமையில்லாத அப்பாவி ஆள்தான் ரிஜிஸ்டர் பண்ணிவிட்டு தன்னுடைய முறை வரும் என்று உட்கார்ந்திருப்பான். அப்படி இந்த பர்மாவிலிருந்து வருபவர்களுக்குச் செய்வது பிரயோசனம் இல்லை. எம்பளாய்மெண்ட் எக்சேஞ்சில் இவர்களுக்கென்று ஒரு தனியாக ரிஜிஸ்டர் வைக்க வேண்டும். இவர்களுக்கு உத்தியோகம் கொடுப்பதில் ப்ரையாரிட்டி கொடுக்க வேண்டும்.

இந்த அகதிகள் பிரச்னை பெரிய பிரச்னை. இது பர்மாவிலிருந்து வரும் அகதிகளோடு நின்று விடும் என்று சொல்ல முடியாது. உலக நாடுகளிலிருந்து வரும் அத்தனை தமிழர்களுக்கும் நாம் வழி செய்தாக வேண்டும். தமிழ் நாட்டிலிருந்து அந்நிய நாடுகளுக்குச் சென்றுள்ள தமிழர்கள் அங்கெல்லாம் பெரும்பாலும் விவசாயத்திலேயே ஈடுபட்டு இருந்திருக்கிறார்கள். பஸிபிக் ஐலண்டுகளில் ஏராளமான தமிழர்கள் இருக்கிறார்கள். ஆப்பிரிக்கா கண்டத்திலும் ஏராளமாக இருக்கிறார்கள். இலங்கை இந்தியர் பிரச்சினையும் இருக்கிறது. இன்று சுமூகமாக இருந்தாலும் பின்னால் மலேயா பிரச்சினை வந்தாலும் வரலாம். ஆகவே அப்படிப் பல நாடுகளிலிருந்து கோடிக்கணக்கான மக்கள் திரும்பி வந்தால் அந்தப் பிரச்னையை நாம் தீர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படத்தான் செய்யும். இன்றைக்கு நாம் பர்மா அகதிகளின் பிரச்னையை எந்த முறையில் தீர்க்கிறோமோ அதுதான் பின்னால் வரக்கூடிய பிரச்சினைக்கு முன்னோடியாக இருக்கும். ஆகவே அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க அந்தப் பிரச்சினையை ஆய்ந்து அறிந்தவர்களைக் கொண்ட குழுவை அமைத்து யோசித்து வழி வகை செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடிக்கிறேன்.

*திரு. ஜி. ஈ. சின்னதுரை : கனம் துணை சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் துணை மதிப்பீட்டுக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு அகவிலைப் படியை உயர்த்தியதன் காரணமாகவும், கிராம உத்தியோகஸ்

தர்களுக்குச் சம்பளம், அகவிலைப்படி ஆகியவைகளை உயர்த்தியதன் காரணமாகவும் இந்தத் துணை மதிப்பீட்டுக் கோரிக்கை வந்திருக்கிறது. அகவிலைப் படியை உயர்த்தியதன் காரணமாக அவர்களுடைய வருவாயை ஓரளவு நாம் உயர்த்தியிருக்கின்றோம். ஆனால், அவர்களுடைய குறைகளைப் பூரணமாகப் போக்க வேண்டுமானால், இன்னும் அவர்களுக்குப் பல சலுகைகளைச் செய்ய வேண்டும். குறிப்பாக, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் நிலையை உயர்த்த அவர்களுக்கு இன்னும் சில சலுகைகளைக் காட்ட வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள், ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கூறினார்கள். ஆசிரியர்கள் பள்ளிக்குச் செல்கின்றபோது, எந்தவிதமான குறையும் இல்லாதவர்களாக, இன்முகத்தோடு குழந்தைகளிடத்தில் அன்பாகப் பழகக்கூடிய நிலைமையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். அந்த நிலையை ஆசிரியர்களுக்கு ஏற்படுத்தினால் தான், குழந்தைகளுக்கு நல்ல முறையில் ஆசிரியர்கள் கல்வி கற்பிக்க முடியும். அதோடு, கல்வியின் தரத்தையும் உயர்த்த முடியும். எனவே, ஆசிரியர்களது குறைகளை அரசாங்கம் நல்ல முறையில் கவனித்து வரவேண்டும்.

கைத்தறி நிதிக் கார்ப்பரேஷனுக்கு நிதி ஒதுக்குவது இந்த மானியக் கோரிக்கையில் முக்கியமான ஒரு அம்சமாகும். கூட்டுறவு இயக்கத்திலே சேராத கைத்தறி நெசவாளர்களுக்குக் கடனுதவி செய்யும் முறையில் இந்தக் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கார்ப்பரேஷனை அமைப்பதன் நோக்கம் கைகூட வேண்டுமானால், தனிப்பட்டு ஒரு தறி வைத்திருக்கும் நெசவாளிக்குக்கூட இந்தக் கைத்தறி நிதிக் கார்ப்பரேஷனிலிருந்து உதவி கிடைக்கக்கூடிய வகையில் இது அமைய வேண்டும். ஆனால், இன்றைக்கு கைத்தறி நெசவாளிகள், கூட்டுறவு இயக்கத்திலே இல்லாதவர்கள் பலர், 50 தறிகள், 100 தறிகள், 200 தறிகள் ; 1000 தறிகள் என்று வைத்துக்கொண்டு தலைமை நெசவாளிகள் (மாஸ்டர் வீவர்ஸ்) என்ற முறையில் வியாபாரம் நடத்தி வருகிறார்கள். அவர்கள் தான் இந்த ஸ்தாபனத்திலே அதிகமான பங்குகளைப் பெற்று, அதிகக் கடனுதவி பெற வாய்ப்பு ஏற்படும். எனவே, இதைத் தவிர்க்க கைத்தறி நிதிக் கார்ப்பரேஷனிலிருந்து தனிப்பட்ட ஒரு தறி வைத்திருக்கக்கூடிய நெசவாளியும்கூட கடனுதவி பெறக்கூடிய முறையில் இந்தக் கைத்தறி நிதிக் கார்ப்பரேஷன் அமைய வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயத் துறையில்; உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வகையில் சிறு பாசனத் திட்டங்களையும் மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தையும் ஊக்குவிக்கின்ற முறையில் மானியம் கோரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு விவசாயிகள் தங்களுடைய நிலத்தில் அதிக லாபம் வரக்கூடிய பயிர்களை விளைவிக்க முயற்சிக்கிறார்கள். காரணம், நெல் போன்ற தானியங்களை உற்பத்தி செய்வதன் மூலமாக அவர்களுக்கு [illegible] வருவாய் கிடைப்பதில்லை. எனவே, [illegible] காரம் [illegible]கூடிய கரும்பு, மஞ்சள், வாழை போன்ற பயிர்களை [illegible] செய்ய முன் வருகிறார்கள்.



அதன் காரணமாக, நெல் விளைச்சல் குறைவாகும். நெல் விளைச்சலை அதிகப்படுத்துவதற்கான ஊக்கத்தை விவசாயிகளுக்கு அளிக்கும் வகையில் பல சலுகைகள் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். 'மின்சாரக் கட்டணத்தைக் குறைப்போம், நெல் விளைவிப்பதற்கான உரத்தைக் குறைந்த விலையில் விவசாயிகளுக்குக் கொடுப்போம்' என்று அரசாங்கம் அறிவிக்குமானால், விவசாயிகள் நெல்லை விளைவிப்பதற்கு முன் வருவார்கள். எனவே, இந்தச் சலுகைகளை அவர்களுக்கு அளித்து, நெல் விளைச்சலை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கூறிக்கொண்டு இந்த மான்யக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து என்னுடைய வார்த்தைகளை முடிக்கின்றேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த இரண்டாவது துணை மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்க நான் விரும்புகிறேன்.

நமது முதலமைச்சர் அவர்கள் நமது மாநில அரசு ஊழியர்களின் நீண்ட நாள் கோரிக்கையான அகவிலைப் படி உயர்வை ஏற்றுக் கொண்டு, அதன் மூலம் நமது சர்க்காருடைய கஜானாவிற்கு ஏறக்குறைய 3 கோடி 85 லட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவானாலுங்கூட, நமது மாநில அரசு ஊழியர்களின் அகவிலைப்படியை மத்திய அரசு ஊழியர்களுடைய அகவிலைப்படி அளவிற்கு உயர்த்தியிருக்கிறார்கள். அது நிச்சயமாக வரவேற்கத் தகுந்த ஒன்று தான். இருந்தாலுங்கூட நமது மாநில அரசு ஊழியர்களுடைய அடிப்படைச் சம்பள விகிதத்திற்கும், மற்ற மாநில அரசு ஊழியர்களுடைய சம்பள விகிதத்திற்கும், மத்திய அரசு ஊழியர்களுடைய சம்பள விகிதத்திற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது என்பதும், அத்தகைய வித்தியாசத்தைப் போக்க வேண்டும் என்பதும் நமது மாநில அரசு ஊழியர்களுடைய நெடுநாளைய கோரிக்கையாகும். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான சாயல் நிச்சயமாக இந்தத் துணை மானியக் கோரிக்கையில் இல்லை. அதோடு மட்டுமல்ல. நமது முதல் அமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் சுற்றி வருகின்ற நேரத்தில் அவருடைய கண்களில் ஒரு சுவரொட்டி தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். "மாநில அரசு ஊழியர்களுக்கும் மத்திய அரசு ஊழியர்களுக்கும் சம்பள வித்தியாசம் ஏன்? இது தான் ஜனநாயக சோஷலிசமா?" என்ற கேள்விகள் எழுப்பப்பட்டிருப்பதைப் [illegible]இருக்கலாம். சர்க்காருடைய கொள்கையைக் கண்டிப்பதற்[illegible] சொல்லவில்லை. ஜனநாயக சோஷலிசம் என்ற சொல் [illegible]. அதே சந்தர்ப்பத்தில் அடிப்படைச் சம்பளத்தில் மாநில அரசு ஊழியர்களுக்கும், மத்திய அரசு ஊழியர்களுக்கும் வித்தியாசம் இருப்பானேன் என்ற கேள்வியை எழுப்பி, அந்தக் கேள்விக்கு விடை அளிக்கும் வகையில், 'அந்த வித்தியாசம் விரைவிலே போக்கப்படும்' என்ற உறுதிமொழியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [20th October 1964

அதே போல், மத்திய அரசு ஊழியர்களுக்கு நகரப் படி (சிடி அலவன்ஸ்) இருக்கிறது. அது மாநில அரசு ஊழியர்களுக்கு இல்லை. அதே சந்தர்ப்பத்தில் மத்திய அரசு ஊழியர்களைப் பொறுத்த வரையில் வீட்டு வாடகைப்படி (ஹௌவுஸ் அலவன்ஸ்) இருக்கிறது. அந்தச் சலுகை மாநில அரசு ஊழியர்களுக்கு இல்லை. ஆகவே, அந்த வித்தியாசங்களைப் போக்க வேண்டும். எப்படி அவர் அகவிலைப் படி உயர்வு செய்ததன் காரணமாக நமது பாராட்டைப் பெறுகிறார்களோ அப்படி நான் குறிப்பிட்ட வித்தியாசங்களை யெல்லாம் போக்கி அனைவருடைய பாராட்டுதலையும் நமது முதலமைச்சர் அவர்கள் பெற வேண்டும் என்பதற்காக நான் அதை அழுத்தந்திருத்தமாக இந்தச் சந்தர்ப்பத்தில் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், கிராம அதிகாரிகளுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் எதிர்க் கட்சியினர் சொன்ன கருத்தை ஏற்று, அதற்கேற்ப அவர்களுடைய சம்பள விகிதத்தை அதிகரித்திருக்கிறார்கள். அதே சந்தர்ப்பத்தில் இந்த மாமன்றத்தில் ஒரு கருத்து பரவலாக எல்லா அங்கத்தினர்களாலும் சொல்லப்பட்டு வந்தது. அதாவது, கிராம அதிகாரிகளுக்கு என்று ஒரு குறைந்தபட்சக் கல்வித் தகுதி நிர்ணயித்து, இனிமேலாவது நியமனம் செய்கின்ற கிராம அதிகாரிகள் குறைந்தது எஸ்.எஸ்.எல்.சி. வரையிலாவது படித்தவர்களாக இருக்க வேண்டும் என்கிற விதியைச் சேர்த்து, அந்த அளவுக்குப் படித்தவர்களை நியமித்து அவர்களைச் சர்க்காருடைய நிரந்தர ஊழியர்களாக்கி, சர்க்கார் ஊழியர்களுக்கு இருக்கின்ற சலுகைகள் எல்லாம் அவர்களுக்கும் பரவும்படிச் செய்து, உத்தியோக உயர்வுக்கான வாய்ப்பும் அவர்களுக்கு ஏற்படும்படிச் செய்தால், நிச்சயமாக அந்தப் பணியிலே இன்று நிலவி வரும் பல ஊழலைத் தவிர்க்க முடியும்.

பர்மா அகதிகளைப் பொறுத்த வரையில், 'பர்மா அகதிகள்' என்று சொல்வதைவிட, வாழ வழியின்றி தமிழ்நாட்டிலிருந்து பர்மாவிற்குச் சென்று குடியேறி, மீண்டும் பர்மா அரசாங்கத்தால் அங்கு வாழ வழிவகை செய்யப்படாமல், எப்படியும் அந்த நாட்டிலிருந்து துரத்தப்பட வேண்டும் என்ற நிலையிலே சட்டங்களை யெல்லாம் அவர்கள் உருவாக்கியதன் காரணமாக மீண்டும் தமிழகத்திற்கு வந்தவர்கள்தான் பர்மா அகதிகள். அவர்களைப் பர்மாவிலிருந்து தமிழகத்திற்கு ஏற்றி வருவதற்குரிய கப்பல் கட்டணத்தையும் கப்பலிலிருந்து இறங்கி ஊர்களுக்கு செல்வதற்கான ரயில் கட்டணத்தையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டு இடையிலே தங்கியிருக்கும் நாட்களில் அவர்களுக்குச் சாப்பாடு வசதி செய்து கொடுப்பதோடு, ஏதாவது கடன் வசதியும் செய்து கொடுக்க வேண்டும். உத்தியோகம் கொடுக்கப்படும் என்று சர்க்காருடைய இந்த மானியக் கோரிக்கையிலே காணப்பட்டாலுங்கூட, பர்மா அகதிகளின் எண்ணிக்கை எவ்வளவு, எத்தனை பேர்கள் உத்தியோகம் வேண்டுமென்று கேட்டார்கள், அவர்களிலே எத்தனை பேருக்கு உத்தியோக வாய்ப்பு இந்த அரசாங்கம் அளித்தது,



20th October 1964] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

நிச்சயமாக நூற்றுக்குத் தொண்ணூறு பேர்களுக்கு உத்தியோகம் கிடைத்தது, பர்மாவிலிருந்து வந்தவர்களுக்கு வாழ்க்கையிலே மறு மலர்ச்சி ஏற்பட்டுவிட்டது, புனர்வாழ்வு அவர்களுக்குக் கிடைத்து விட்டது என்று சொல்லவில்லை. ஆனால் சர்க்கார் ஏதோ செய்வதாகச் சொல்லியிருக்கிறார்களே தவிர, எத்தனை பேர்களுக்கு வாழ்வளிக்கப் பட்டிருக்கிறது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்க ஆசைப்படுகிறேன். அதேபோல பொற்கொல்லர்களுடைய நிலையைச் சமாளிக்க அவர்களுக்குக் கடன் வசதி கொடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. உண்மையிலே உள்ள பிரச்னை என்னவென்றால் எங்கள் வட்டாரத்திலிருந்து 150 பொற்கொல்லர்கள் உதவி கோரி விண்ணப்பம் போட்டிருந்துங்கூட ஒருவருக்குக் கூட கடன் வசதி கிடைக்கவில்லை. ஆனால் சர்க்கார் அவர்களுக்குப் பெரிய அளவில் உதவி செய்வதாக இந்த அறிக்கையில் மட்டும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதன்படி உதவி பெற்றவர்கள் எத்தனை பேர் என்று அறிய நான் ஆசைப்படுகிறேன்.

அதுபோல பர்மா அகதிகளுக்குத் தொழில் செய்வதற்காக தங்களுடைய வாழ்வை புனர் அமைத்துக் கொள்வதற்காக உதவியளிக்கப்படும் என்று போகும் இடங்களில் எல்லாம் சொல்லிவிடுகிறார்கள். வெறும் பிரச்சாரத்திற்காக மட்டும் சொல்வதாக இருக்கிறதே தவிர உண்மையிலேயே அவர்களுக்கு தக்க உதவி அரசாங்கம் அளிக்கவில்லை. இனிமேலாவது அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித்தர தீவிரமாக முயற்சி செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்துவதாக இந்த அறிக்கையில் தரப்பட்டிருக்கிறது. ஆனால் எங்களுடைய பிராந்தியத்தை எடுத்துக் கொண்டால் ஜமீன் ஒழிப்புக்கு முன்னால் 200 ஏரிகள் இருந்தன. அவற்றை ஏரிகள் என்று சொல்வதை விட பாழடைந்து போன கரை போன கொள்ளளவு இல்லாத ஏரிகள் என்று சொல்லலாம். தர்மபுரி வட்டாரத்தை எடுத்துக் கொண்டால் 500 ஏரிகள் இருக்கும். ஆனால் அந்த ரெவின்யு ஏரிகளில் 6, 7 பெர்சண்டு கூட சாகுபடிக்குப் பயன்படக்கூடிய வகையில் அமைந்திருக்கவில்லை. அந்தப் பிராந்தியத்திலிருந்த 1,500 ஏரிகளில் 150, 200 ஏரிகள் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் பழுது பார்க்கப்பட்டனவே அன்றி மற்றவை யெல்லாம் யாதொரு விதமான மராமத்து வேலையும் செய்யப்படாமல் இருக்கின்றன. உணவுப் பிரச்சினை மிகக் கடுமையாக இருக்கிற இந்தக் காலத்திலாவது அந்தப் பகுதியிலுள்ள எல்லா சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் செப்பனிட்டுத் தர இந்த அரசாங்கம் முன் வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எங்கள் பகுதியில் ஒரு கலைக்கல்லூரியை ஏற்படுத்த அனுமதி தர வேண்டுமென்று முதலமைச்சரை சந்தித்துக் கேட்ட நேரத்தில் ஒரு லட்ச ரூபாய் சேகரித்து அரசாங்கத்திற்குக் கொடுத்தால் கல்லூரியை ஏற்படுத்தித் தருவதாக வாக்களித்திருந்தார்கள். நாங்கள் ஒரு லட்சம் சேகரம் செய்து

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [20th October 1964

அரசாங்கத்தினிடத்தில் கொடுத்திருக்கிறோம். சர்க்காரும் வருகிற ஆண்டில் அந்தக் கல்லூரியை ஆரம்பிக்க ஆவன செய்ய வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். அதோடு அதற்குச் சர்க்கார் கலைக் கல்லூரி என்று பெயர் வைப்பதாக இருக்கிறார்கள் என்று அறிகிறேன். அந்த வட்டாரத்தில் அந்தக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு பெரும் அளவில் நிதி உதவி அளித்தவர்கள் 'ஔவை' என்ற பெயராலே அந்தக் கல்லூரி அமைய வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆகவே ஔவை அரசினர் கலைக் கல்லூரி என்று பெயர் வைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தைப் பொருத்த வரையில் சேலம் இரும்புத் தொழிற்சாலை அவர்களுடைய முக்கிய கனவாக இருக்கிறது. சேலத்தில் அந்தத் தொழிற்சாலை அமைவது சேலம் மாவட்ட வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரியும் என்பதோடு கூட தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கே தொழில் வளர்ச்சிக்கே பெரிதும் துணை புரியும். ஆகவே சேலம் இரும்புத் தொழிற்சாலையை உடனடியாக ஆரம்பிக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். பிலாய் உருக்காலையைப்போல துர்காப்பூர் உருக்காலையைப் போல சேலம் இரும்புத் தொழிற்சாலை உருவாக வேண்டும். அத்தகைய தொழிற்சாலை அங்கே நிறுவுவதற்காக நில ஆர்ஜிதம் செய்வதற்காக மான்யம் ஒதுக்கப்பட்டது என்பதை நாம் அறிவோம். நிலங்களும் ஆர்ஜிதம் செய்யப்பட்டன. ஆனால் மத்திய அரசாங்கத்தின் கொள்கையில் ஏற்பட்ட மாறுதல் காரணமாக நில ஆர்ஜிதம் செய்யும் வேலை கொஞ்சம் சுணக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். ஏற்கனவே, பொருளாதார ரீதியில், விஞ்ஞான ரீதியில், அந்தத் தொழிற்சாலை அமைந்தால் செயல்பட முடியுமா என்பதைப்பற்றி தஸ்தூர் கம்பெனியின் அபிப்பிராயத்தைக் கோரியிருந்தார்கள். அவர்களும் கூட இந்தத் தொழிற்சாலை விஞ்ஞான ரீதியில், பொருளாதார ரீதியில் சரியான நிலைமையில் இருக்கும் என்று அறிக்கை சமர்ப்பித்தார்கள். அப்படியிருந்தும் மத்திய அரசு இதில் தயக்கம் காட்டுகிறது என்றால் நாம் இந்த நேரத்தில் பேசாமல் இருந்துவிடக் கூடாது. அஸ்ஸாமில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஏற்படுத்த வேண்டும் என்று அந்த மாநில முதலமைச்சர் அவர்களும் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் மத்திய அரசாங்கத்திடம் கேட்ட போது அவர்கள் முதலில் தயங்கினார்கள். அதற்காக அஸ்ஸாம் மாநில முதலமைச்சராக இருந்த திரு. விஷ்ணுராம் மேதி அவர்களோ மற்ற உறுப்பினர்களோ பேசாமல் இருந்துவிடவில்லை. அந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை உடனடியாக ஏற்படுத்தியே ஆகவேண்டும், இல்லையென்றால் நாங்கள் அனைவரும் ராஜினமா செய்வோம் என்பதாக மத்திய அரசாங்கத்திற்கு எதிராக போர்க் கொடியை உயர்த்தினார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்கு மத்திய அரசும் பணிந்தது. அஸ்ஸாம் மாகாணத்தில், கடற்கரை, பக்கத்தில் இல்லாமலிருந்தும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை ஏற்படுத்துவதற்குப் போதுமான வசதி அங்கே இல்லாமல் இருந்தும்கூட அந்த ஆலையை அங்கே அமைத்துக் கொடுத்தார்கள் என்பதை நாம் அறிவோம். அதைப்போலவே



20th October 1964] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

நம்முடைய மாநிலத்தில் சேலம் இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்பதாக நமது முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு எதிராக போர்க் கொடியை உயர்த்த வேண்டும். அந்தப் போர்க்கொடியை இந்த மாநிலத்தில் உள்ள மக்கள் அத்தனை பேரும் ஆதரித்து நிற்பார்கள் என்கிற என்னுடைய உறுதியை அளித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வை. சங்கரன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய அரசாங்க ஊழியர்களுக்கு விலைவாசிப்படியை உயர்த்தியதன் காரணமாக ஏற்பட்ட செலவுக்கான மான்யக் கோரிக்கை இதில் இருக்கிறது. அதே போல நம் கிராம அதிகாரிகளுடைய ஊதியத்தையும் நாம் இரட்டிப்பு மடங்காக்கி யிருக்கிறோம். இவையெல்லாம் உண்மையிலேயே நல்ல செலவினங்களாகும். குறிப்பாக கிராம உத்தியோகஸ்தர்களுடைய வேலை சமீப காலங்களில் மிகவும் அதிகமாகி விட்டது. போன ஆண்டிலே சர்சார்ஜ் போன்ற வரிகளை அவர்கள் சேர்த்து வசூலிக்க வேண்டியிருந்தது. எல்லாவற்றையும் சேர்த்து ஒரே தடவையாக வசூலிக்கும்படி நேர்ந்த காரணத்தினால் விவசாயிகளுக்குக் கொஞ்சம் சிரமம் ஏற்பட்டது என்றாலும் அந்த வேலைகளையெல்லாம் கவனித்தவர்கள் கிராம அதிகாரிகள்தான். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தியிருப்பது பற்றி நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். அதே சமயம் விவசாயிகளுடைய சிரமங்களையும் உணர்ந்து அவர்கள் கொடுக்க வேண்டிய வரிப் பணத்தை கொஞ்சம் இரக்க புத்தியோடும் வாய்தாக்கள் என்ற முறையில் வசூலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது பர்மா அகதிகள் சம்பந்தமாக அவர்களுக்கு புனர் வாழ்வு அளிக்க நமது அரசாங்கம் நல்ல பல திட்டங்களை வகுத்திருக்கிறது. அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக திட்டங்களை வகுத்திருக்கிறது. ஆனால் வேலை செய்த பிறகுதான் கூலி என்கிறபோது சாப்பாட்டிற்கே வழியின்றி அவர்கள் பட்டினியோடு வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்கள் வேலை செய்கிறபோது பாதிச் சம்பளத்தையாவது முன் கூட்டியே கொடுத்து அவர்களை வேலையில் ஈடு படுத்த முயற்சி செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது தவிர இரண்டாயிரம் ரூபாய் வரை அவர்களுக்குக் கடனைகத் தொழில் நடத்தக் கொடுக்கலாம் என்றிருக்கிறது. அதை மேக்சிமம் லிமிட்டாக வைத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர யாருக்கும் இரண்டாயிரம் கொடுத்ததாகத் தெரியவில்லை. மூன்னூறு, ஐந்நூறு என்றுதான் கொடுக்கிறார்கள். அவற்றையும் இரண்டு மூன்று தவணைகளில் கொடுக்கிறார்கள். ஒரு தவணையில் கொடுக்கிற பணத்தை வைத்துக் கொண்டு எந்த தொழிலையும் அவர்களால் ஆரம்பிக்க முடியவில்லை. வாங்கின பணத்தையும் வீணாகச் செலவழித்துவிடுகிறார்கள். அப்படியின்றி தொழில் நடத்த அவர்களுக்குக் கடன் உதவி செய்வதாக இருந்தால் உடனடியாக கணிசமான பகுதியை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதே போன்றுதான் பொற்கொல்லர்களுக்கும், இரண்டாயிரம்

[திரு. வை. சங்கரன்] [20th October 1964

ரூபாய் கொடுக்கப்படும் என்றால் 2,000-ம் கொடுப்பதில்லை. நானூறு, 500-தான் கொடுக்கிறார்கள். அதைக்கொண்டு அவர்கள் எந்தத் தொழிலையும் ஆரம்பிக்க முடியவில்லை. ஆகவே, இவர்களுக்கும் தொழில் ஆரம்பிப்பது என்றால் கணிசமான தொகையை கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

11-30 a.m. பொதுவாக, அந்தந்த மாவட்டத்தில் உள்ள தொழில் அதிபர்களைக் கொண்டு அந்தந்த மாவட்டத்தில் உள்ள பெரிய தொழில் அதிபர்களையெல்லாம் அழைத்து ஒவ்வொருவரும் 10, 20 பேருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமல்படுத்தினால் அவர்களுக்கு நிரந்தரமான ஒரு நிவாரணம் கொடுத்ததாகும். அந்த மாதிரிச் செய்தால் தற்போது தொழிற் துறை வளர்ந்து வரும் நிலையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரக் கணக்கான பேர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்படும். பொற் கொல்லர்களுக்குக் கொடுத்தது போன்று கடன் வசதி கொடுப்பதால் அது அவ்வளவு பயன்தரத்தக்கதாக இல்லை. அது ஏதோ கடலில் பெருங்காயம் கரைத்தது போல்தான் ஆகி விடுகிறது.

தற்போது சிவில் சப்ளைஸ் இன்ஸ்பெக்டர்களை நியமிப்பதாக இருக்கிறது. அது ஓரளவு நல்ல யோசனைதான். இருந்த போதிலும் இன்னொரு யோசனையை நான் கூற விரும்புகிறேன். அதிகாரிகள் என்று நியமிக்கப்பட்டாலும் இந்த விஷயத்திலே 'நான்-அபிஷியல்' யோசனையும் கேட்கப்பட்டால் நல்லது. யாருக்கு லைசென்ஸ் கொடுப்பது என்பதை வெறும் பேப்பரை வைத்துக் கொண்டு தீர்மானிப்பதிலே தவறு ஏற்பட்டு விடுகிறது. ஏற்கெனவே கொடுக்கப்பட்ட லைசென்ஸ்தாரர்களில் 83 லைசென்ஸ் 'போகஸ்' ஆக இருந்தது. பின்னால் அதைக் கான்சல் பண்ண ஏற்பாடு செய்தேன். அதிகாரிகளுக்கு யதார்த்த நிலைமை தெரியாமல் இருக்கிறது. நகரங்களில் உள்ள எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.க்கள் கவுன்சிலர்கள் ஆகியவர்களைக் கொண்டு அட்வைசரி கமிட்டி மாதிரி அமைத்து அவர்களுடைய யோசனையையும் அறிந்து விநியோகிக்க ஏற்பாடு செய்யலாம். அவ்வறு செய்தால் 'ஈக்விடபிள் டிஸ்ட்ரிப்யுஷன்' கிடைக்கும். இதைப் பற்றி பல தடவை சொல்லியிருக்கிறேன்.

நகரங்களில் பொதுவாக உணவு தானியங்களை டிஸ்ட்ரிப்யூட் செய்வதில் ஓரளவு கஷ்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. எல்லாக் கட்டத்திலும் ஓரளவு தவறுகள் ஏற்படத்தான் செய்யும். உற்பத்தியாளர்கள் தவறு செய்கிறார்கள்; அதிகாரிகளும் அதற்கு புறம்பு என்று சொல்ல முடியாது. நகரங்களில் ஐடெண்டிடி கார்டு கொடுப்பது நல்ல முறை. யாருக்கும் பொல்லாப்பு இல்லை. உற்பத்தியாளருக்கும் பொல்லாப்பு இல்லை; வியாபாரிகளுக்கும் பொல்லாப்பு இல்லை; அதிகாரிகளுக்கும் பொல்லாப்பு இல்லை.

கோவாப்பரேடிவ் டிப்பார்ட்மெண்டில் 35 சீனியர் இன்ஸ்பெக்டர்களைப் போடப் போவதாகத் தெரிய வருகிறது. இதிலே ஒரு பெரிய குறையைச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். பத்துப் பதினைந்து ஆண்டுகள் சீனியர் இன்ஸ்பெக்டராக ஆக்ட் பண்ணிய



20th October 1964] [திரு. வை. சங்கரன்]

வர்களைக் கூட ஜூனியர் இன்ஸ்பெக்டர்களாக ரிவர்ட் பண்ணி விடுகிறார்கள். அவ்வாறு பத்துப் பதினைந்து ஆண்டுகள் சீனியர் இன்ஸ்பெக்டராகப் பணியாற்றியவர்கள் ஏதோ பரிட்சைகள் பாஸ் பண்ணாமல் இருந்தாலும் அவர்களுக்கு எக்ஸெம்ஷன் கொடுத்து அவர்களை சீனியர் இன்ஸ்பெக்டர்களாகப் பர்மனெண்ட் செய்ய வேண்டும்.

ஆசிரியர்களுடைய சம்பளத்தைப் பொறுத்து இன்று 'டிஃபரன்ஸ் இன் பே' இருக்கிறது. மானேஜ்மெண்ட் அதைக் கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் கூறுகிறது; சர்க்கார் கொடுக்க வேண்டுமென்று மானேஜ்மெண்ட் கூறுகிறது. இதிலே பாதிக்கப்படுகிறவர்கள் ஆசிரியர்கள். 150 ரூபாய் வாங்கிக் கொண்டிருந்த ஆசிரியர்களுக்குத் திடீரென்று 20 ரூபாய் குறைந்துவிட்டால் இந்த விலைவாசி காலத்தில் அது மிகவும் கஷ்டமான நிலைமையாகும். ஆகவே, மானேஜ்மெண்டைப் பலவந்தப்படுத்தி அதைக் கொடுக்கச் சொல்ல வேண்டும்; அல்லது சர்க்காரே கொடுக்க வேண்டும். மினிமம் பென்ஷனாக ரூ. 20 அவர்களுக்கும் கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சி. பொன்னுசாமி : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற உப மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். கோரப்பட்டிருக்கிற 5 கோடியே 25 லட்சம் ரூபாய் உப மானியக் கோரிக்கையில் 3 கோடி 82 லட்சம் ரூபாய் அளவுக்கு உள்ள தொகை குறைந்த வருமானமுள்ள ஊழியர்களுக்காகச் செலவழிக்கப்படுவது மிகவும் வரவேற்கத் தக்கது. வளர்ச்சி அடைந்து வரும் நாட்டில் நாம் இது போன்ற உப மானியங்கள் கேட்டுச் செலவு செய்தாலும்கூட குறைபாடுகள் இருந்து கொண்டேதான் இருக்கும். இது போன்ற மானியக் கோரிக்கைகள் அதிகமாக வரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, நமக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. விற்பனை வரி சம்பந்தமாக இப்போது நடக்கும் துரித ஏற்பாட்டின் காரணமாக பல கோடி ரூபாய்கள் நமக்கு அதிகப்படியாகக் கிடைத்திருக்கிறது. அவ்வாறு பெறக்கூடிய அதிகப்படியான ரூபாயைக் குறைந்த சம்பளம் வாங்குகிற சர்க்கார் ஊழியர்களுக்கு மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கும் சம்பள விகிதத்தைப் போல் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் அது வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்ற எனது சொந்தக் கருத்தைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பர்மா அகதிகளுக்குச் சலுகைகளை அளிப்பதற்காக 25 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பர்மா அகதிகள், இலங்கை அகதிகள், பாகிஸ்தான் அகதிகள், இன்னும் சக்தியற்ற நம் நாட்டு அகதிகள், பொற்கொல்லர் போன்று கஷ்டப்படுகிறவர்கள் இவர்களுக்கெல்லாம் சேர்ந்துத் தனியாக ஒரு இலாகா அமைத்து

[திரு. சி. பொன்னுசாமி] [20th October 1964

உடனடியாக நல்ல நிவாரணம் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்த சர்க்கார் முன்வருமானால் அது வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

இன்று நம் நாட்டிலுள்ள மிக முக்கியமான பிரச்சினை உணவுப் பிரச்னை. உணவுப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளும் போது விவசாயிகளைத் தான் குறிப்பாக எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். பரந்த பாரத நாட்டில் 45 கோடி மக்களுக்கு உணவு கொடுக்க வேண்டுமானால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 10 கோடி டன் உணவுப் பொருள்களை ஆண்டொன்று உற்பத்தி செய்தாக வேண்டும். எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் உணவில் பற்றாக் குறை நாடாக இருந்தால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து பூர்த்தி செய்து கொள்ளும். அமெரிக்கா போன்ற நாடுகள் அதிகப்படியான உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ளும். இது எல்லா நாடுகளுக்கும் உள்ள பொறுப்பான காரியம். இதிலே நாம் நல்ல முறையில் செயல்பட்டாக வேண்டும். விவசாயிகளை எடுத்துக் கொண்டால் அவர்களுக்குப் பொறுக்கு விதை கொடுக்கிறோம். தண்ணீர் வசதி செய்து கொடுக்கிறோம். நல்ல உரம் கொடுக்கிறோம். கடன் வசதி செய்து கொடுக்கிறோம். இன்னும் பல வழிகளில் உதவி செய்து கொண்டு வருகிறோம். இவ்வளவு செய்தும் கூட ரிசர்வ் பாங்க் ரிப்போர்ட்டைப் பார்த்தால் சாகுபடியில் இன்னும் போதுமான அளவு முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். அதாவது 'மேன்-பவர்' நாம் 45 கோடி மக்களிருக்கிறோம். அந்த அளவுக்கு பெரிய அளவில் மனித சக்தி இருக்கிறது என்று நினைத்திருந்தோம். ஆனால் அவைகள் எல்லாம் நல்ல முறையில் அதாவது பெருந் தொழிலில், சிறிய தொழிலில் குடிசைத் தொழிலில் பயன்படுத்தப்பட்டுவிட்டது. அன்னிய நாட்டை எடுத்துக் கொண்டால் 100 பேர்கள் பெண்கள் இருக்கிறார்கள் என்றால் அந்த 100 பெண்களுமே தொழிலில் ஈடுபடுகிறார்கள். நம் நாட்டில் அப்படியில்லை. உபரி மனித சக்தி நம்மிட மில்லை. ஆகையால் உணவுப் பொருட்கள் சம்பந்தப்பட்ட வரையில் இன்னும் மேலும் 'மெக்கானைஸ்ட் பார்மிங்' முறையில் அமைக்க வேண்டும் என்பதுதான் என் கருத்து. மத்திய சர்க்கார் புல்டோசர்கள் டிராக்டர்கள் எல்லாம் எளிதான வகையில் கிடைப்பதற்கான திட்டம் போட்டிருப்பதாக இருக்கிறது. இதையும் சீக்கிரமாகவே அமல் நடத்த வேண்டும். இவற்றில் நாம் முக்கிய கவனம் செலுத்தினால் நிச்சயமாக 1965-ம் ஆண்டுக்குள் ஏறக்குறைய ஒரு கோடி டன் அளவுக்கு அதிகமான உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். அதன் மூலமாக நமக்கு உணவுக் கஷ்டமும் இருக்காது. இப்போதுள்ள நிலைமையில் உத்தியோகஸ்தர்களுடைய கஷ்டமும் இருக்காது. வியாபாரிகள் கொள்ளை லாபமும் அடைய முடியாது. மக்களுடைய கஷ்டமும் போக வேண்டும் என்றால் நான் சொன்ன விஷயங்களில் சர்க்கார் தீவிரமாக கவனம் செலுத்தவேண்டும். அதிகப்படியாக விவசாயம் செய்யும்போது வியாபாரிகள் அதிகமான அளவில் லாபம் அடைய முடியாது.



20th October 1964] [திரு. சி. பொன்னுசாமி]

அதே சமயத்தில் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். இவ்விதம் உபரியாகக் கிடைப்பதை சர்க்காரே வாங்கி அன்னிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்தால் அன்னிய நாட்டுச் செலவாணியும் நமக்கு கிடைக்கும். விவசாயிகளுக்கும் நல்ல விலை கிடைக்கும்.

அடுத்தபடியாக தூத்துக்குடி துறைமுக வேலைகள் வேகமாக நடந்து வருகிறது. அங்கு பெரிய பெரிய தொழிற்சாலைகள் ஏற்படப் போவதாகத் தெரிகிறது. இந்த வேலைகளின் காரணமாக அங்கு அடிக்கடி பெரிய பெரிய உத்யோகஸ்தர்களும், பெரிய தொழில் அதிபர்களும் வருகிறார்கள். அங்கு வந்து இரண்டு மூன்று நாட்கள் தங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அப்படி அவர்கள் தங்குவதற்கு இடம் போதாமல் இருக்கிறது. இவர்கள் தங்குவதற்கு வசதியாக எல்.ஐ.ஸி. மூலமாகவோ அல்லது மாகாண சர்க்கார் மூலமாகவோ பல நல்ல கட்டிடங்கள் கட்டி வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உணவுப் பொருட்கள் சம்பந்தமாக கழிந்த காலத்தில் நல்ல முறையில் எல்லா விநியோகங்களும் நடந்து கொண்டிருந்த நேரத்தில் திடீரென்று பல சிக்கல்கள் வந்தன. இன்னும் சில தினங்களுக்குள் இந்தச் சிக்கலைத் தீர்க்கின்ற முறையில் தஞ்சாவூர் மாவட்டம், ஆந்திரா முதலிய இடங்களிலிருந்து நமக்குப் போதுமான அரிசி வந்து விடும் என்று எண்ணுகிறேன். இருப்பினும் இந்தச் சிக்கல் இனிமேலும் வராத அளவில், முன்னால் எப்படியிருந்ததோ அதே போன்று முன்னால் யார் யார் இதை விநியோகம் செய்து கொண்டிருந்தார்களோ அவர்கள் மூலமாகவே தற்காலிகமாக விநியோகம் செய்யலாம் என்ற உத்தரவை அரசாங்கம் பிறப்பித்தால் நலம் என்று எண்ணுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: விலையைக் கட்டுப்படுத்தாமல் என்ன விலைக்கு வேண்டுமானாலும் அவர்கள் கொடுக்கலாம் என்று சொல்வதை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

திரு. சி. பொன்னுசாமி: விலையைப்பற்றிப் பரிசீலிக்கும்போது, பொதுமக்கள் சொல்வது என்னுடைய காதில் விழுந்துகொண்டிருப்பது என்னவென்றால், இப்போது கூட, 1 ரூபாய், 6 அணா 1 ரூபாய் 8 அணா இந்த விலைகளில் எல்லாம் அரிசி கிடைத்ததே, இப்போது கிடைக்கவில்லையே என்று சொல்கிறார்கள். ஆகவே தான் இந்தக் கருத்தைச் சொன்னேன். எவ்விதம் இருந்தாலும் அரசாங்கம் இதில் கவனம் செலுத்தி தக்க நடவடிக்கை உடனடியாக எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு மான்யக் கோரிக்கையை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Mr. Deputy Speaker, Sir, I would like to say a few words on the Supplementary Demands that are before the House for discussion. While welcoming the announcement of the Government regarding the enhancement of the Dearness Allowance to non-gazetted officers, I would

[Sri C. Chiranjeevulu Naidu] [20th October 1964

also suggest that the amount deposited by them under the Compulsory Deposit Scheme may kindly be refunded to them as they have been asking for the refund of the deposit. I also understand that certain deposits have been collected from some people and they may also be refunded. Though the enhancement of the Dearness Allowance may give relief to some extent, the soaring prices of foodstuffs are not conducive to the wellbeing of the Government employees. They may be provided with store facilities and essential commodities may be supplied to them.

At the same time, it is gratifying to note that the Government have also enhanced the basic pay of the village officers. Most of the village officers whom I met recently, have expressed their joy over the decision of the Government to enhance their pay. This will go a long way in improving the lot of the village officers and giving enthusiasm to co-operate with the officers at the taluk level. We have been demanding for a long time that the request of the village officers should be sympathetically considered and that has been conceded by the Government. The village officers, who form an important link in the administration, have been agitating for it and their request has been granted at last. But my only request to the Government is to see that they are paid the increased pay from this month itself. The officers at the taluk level have expressed certain difficulties with regard to the fixation of the pay scales of these village officers. Whenever certain arrears of pay are due, many a time there has been inordinate delay at the taluk office in making the payment. I request the Government to look into this matter.

From the Supplementary Statement of Expenditure I find that the Government are going to revive the appointments of Family Planning Officers. Some time ago, they have abolished these appointments. Now these Officers are to be recruited from the cadre of Tahsildars and posted at the district level. It is for consideration by the Government whether it is necessary to appoint these Tashildars who are useful to the Panchayat Union in collecting particulars and co-ordinating their activities as Family Planning Officers. They should give incentive at least to the persons who are working as Health Inspectors and to those working in the primary health centres by appointing them as Family Planning Officers.

The facilities to be provided to the agriculturists in the matter of minor irrigation and soil conservation are all welcome. The Hon. Chief Minister is not new to all the activities connected with agriculture and in one of the conferences convened by the Central Bank, he suggested that the President of the Central Bank might consider the desirability of reducing the rate of interest for the loans paid to the ryots. But recently after the Central Finance Minister had announced an increase by half a per cent in the Reserve Bank rate, the Central Banks also have increased the



20th October 1964] [Sri C. Chiranjeevulu Naidu]

interest rate by half a per cent. Already he ryot taking a loan has to pay 10 per cent of the amount towards the share capital, more than 10 per cent towards fixed deposit and about 20 per cent towards manure which is supplied out of season and not at the proper time. Thus about 50 per cent of the amount is collected from the loan. Added to that, 8 per cent interest is collected from the agriculturist. It is really a harship to the agriculturist and actually the loan taken from the Central Bank for the agricultural operations is not useful to them. In this connection, I may point out that in the case of handloom weavers only 3 per cent interest is charged but in the case of agriculturists 8 per cent interest is collected. When we are asking the agriculturists to step up production, we are not giving them sufficient incentives. We are not giving assistance in a proper way. We are charging 8 per cent interest on the loans taken by them. So, I request the Government to consider the pros and cons of the matter and see that every assistance is given to the agriculturists in time. With these few words, I resume my seat.

*திருமதி சி. குழந்தையம்மாள்:* கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு துணை மதிப்பீட்டை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்புகிறேன்.

சிறப்பாக, தொழில் நுட்பக் கல்வியிலே பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு 500 ரூபாயாக இருந்த உபகாரச் சம்பளம் 700 ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. அதுவும் பெறக்கூடிய மாணவர்கள் லிஸ்ட்டிலே உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் ஓரளவு பாரம்பரையாக வறுமையில் உள்ளவர்களாக இருக்கக் கூடிய ஒரு சிலருக்கு இந்த உபகாரச் சம்பளத்தைக் கொடுக்க வழிவகை செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜனத் துறையிலே மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டு உடைகள் வழங்கப்படுவதற்கு ஏற்கெனவே ஒதுக்கீடு இருக்கிறது. அதை மூன்றாக உயர்த்தவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் என்னவென்றால் மிகவும் வறுமையற்ற மாணவர்கள், விடுதியில் படிக்கும் மாணவர்கள், இரண்டு உடை என்றால், அவர்களை பெற்றோர் விட்டுச் செல்லும்போது ஒரு உடை கொடுத்துவிட்டுச் செல்லுகிறார்கள். அந்த ஒரு உடையை மட்டும் வைத்துக்கொண்டு, இந்த இரண்டு உடைகளை போட்டுக்கொண்டு பள்ளிக்குச் செல்லுவது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் இதை மூன்றாக உயர்த்தவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

சிறு நீர்ப்பாசனத் திட்டத்தை தீவிரப்படுத்தவேண்டுமென்று 1,500 ரூபாய் என்று இருந்ததை 3,500 ரூபாய் ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அதற்காக விவசாயிகள் சார்பில் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். 3,500 ரூபாயைச் செலவு செய்தா

[திருமதி சி. குழந்தையம்மாள்] [20th October 1964

லாவது எங்கள் பகுதியில் நீர்ப்பாசனத் திட்டம் அமலுக்கு வருமா என்று கேட்டால் இல்லை. வரண்டு இருக்கிற பஞ்சப் பகுதிகளில், பெரிய திட்டங்களால் அனுகூலம் அடையாத பிரதேசங்களில், கிணறு வெட்டி வெட்டி கீழ் நோக்கிச் செல்ல வேண்டியிருக்கக் கூடிய பகுதிகளில், வெட்ட வெட்ட பாறைகளாக இருக்கக் கூடிய பகுதிகளில் அந்த முறையில் செய்ய முடியாது. குறிப்பாக சில பகுதிகளில் 1,500 என்பதை 3,500 என்று உயர்த்தினால் போதும். எங்கள் பகுதி கடல் மட்டத்திலிருந்து 1,700 அடி உயரத்தில் இருப்பதால், கிணறுகள் 100 அடி ஆழத்தில் இருப்பதாலும் அதிகமாக கஷ்டமாக இருக்கிறது. ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் ஸ்கீமின் கீழ் அதிகப்படி சலுகைகளை செய்து தீவிரப் படுத்த வேண்டும். அதற்கு தனி ஸ்கீம் அமைக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களுக்கு குறைந்த பட்சம் 2,000 ரூபாய் வேறு தொழில் செய்வதற்காக உதவி அளிக்கப்படுவது பாராட்டத் தக்கது. அதற்காக உப மான்யக் கோரிக்கையில் பணம் ஒதுக்கியிருக்கிறோம். இந்த உதவி பெரும்பாலானவர்களுக்கு இன்னும் சரிவரக் கிடைக்கவில்லை. எல்லோருக்கும் நல்ல முறையில் கிடைக்க வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்க யந்திரம் தீவிரப் படுத்தவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இன்றைக்கு மிகவும் கவனம் செலுத்த வேண்டியது குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம். குடும்பக் கட்டுப் பாடுத் திட்டத்தை நன்றாகத் தீவிரப்படுத்தவேண்டியிருக்கிறது. இன்றைக்கு உணவு உற்பத்திப் பெருக்கத்தை எவ்வளவு தீவிரப் படுத்துகிறார்களோ அதற்கு அடுத்தபடி குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தையும் தீவிரப்படுத்தவேண்டும். எந்தெந்த முறையில் பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் இன்னும் தலைமை மருத்துவ மனைகளும் ஒத்துழைக்க முடியுமோ அதற்கு வேண்டிய திட்டங்களைச் செய்யவேண்டும். அதற்கு எந்தெந்த முறையிலே அனுசரணையாகச் செய்தால் அந்தத் திட்டம் தீவிரமாக வெற்றி பெறுமோ அதற்காக வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று குறிப்பிடுகிறேன். காரணம் என்ன என்றால் போன சட்ட சபை பீரியட்டில் கட்டிய பள்ளிகளில் அப்போது இருந்த பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டிய பள்ளிகள் இன்றைக்கு இருக்கும் நிலையில் பிள்ளைகளால் நிறைந்து அந்த இடங்களிலெல்லாம் புதிய பள்ளிகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த அளவுக்கு குடும்பங்கள் அபிவிருத்தி அடைவதால், குடி தண்ணீர் வசதி, ரோடு வசதி எல்லாம் செய்வதிலே பற்றாக் குறை ஏற்பட்டு, அதற்கு மேல் உணவுப் பிரச்னையே பெரிய பிரச்னையாக இருக்கிறது. ஆகையால் இந்தத் திட்டத்தைத் தீவிரப்படுத்தவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.



20th October 1964] [திருமதி சி. குழந்தையம்மாள்]

தமிழ்நாட்டு கைத்தறி கார்ப்பரேஷன் ஏற்படுத்த கூட்டுறவில் சேராத நெசவாளர்களுக்கு அவர்களுடைய எதிர்கால வாழ்வை அனுசரித்து உப மான்யக் கோரிக்கையில் பணம் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கது. நான் ஒன்று குறிப்பிடுவது என்ன என்றால், கூட்டுறவில் சேராமல் ஒதுக்கப்பட்ட நெசவாளர்கள் இந்த கார்ப்பரேஷனில் சேர்ந்து பலன் பெறுதவாறு மாஸ்டர் வீவர்ஸ் போன்று வசதி உள்ளவர்கள் இதையும் பிடித்துக்கொண்டு ஏழை நெசவாளர்களைக் கஷ்டப்படுத்தக் கூடாது என்று அமைச்சர் நல்ல முறையில் கண்காணித்து உதவி செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஹையர் கிரேடை செகண்டரி கிரேடாக மாற்ற 1½ லட்சம் ரூபாய் இந்த ஆண்டு செலவு செய்யப்போகிறார்கள். கல்வி இலாகா சிறந்த பணி செய்யவேண்டிய இலாகாவாக இருக்கிறது. மாணவர்களின் படிப்பின் தரம் உயர செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆரம்பப்பள்ளிகளிலும் தொடக்கப் பள்ளிகளிலும் பயிற்றுவிக்க முன்வரவேண்டுமென்று பல நாட்களாக அபிப்பிராயம் இருந்து வருகிறது. ஹையர் கிரேட் என்று இருப்பதை ஆண்டு ஒன்றுக்கு சில இடங்களில் மாற்றி செகண்டரி கிரேடாக மாற்றுவது போற்றத்தக்க ஒன்று ஆகும்.

இந்த உப மான்யக் கோரிக்கையில் கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சம்பளம் பல ஆண்டுகளாக எதிர்பார்த்திருந்த அவர்களுக்கு ஒரு வரப் பிரசாதம். அதனை அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் சாதாரணமாக அவர்கள் எதிர் பார்த்ததை விட தாராளமாக வழங்கியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர் கட்சி நண்பர் பேசும்போது சொன்னார்கள், தாய்மாரில் மூன்று வகை என்று. தாய்மார்களில் ஒரு வகை தான் இருக்கிறது. வழக்கமாகச் சொல்லும் பழமொழியை பழிச்சொல்லாகச் சொல்லி விட்டார். அந்த மாதிரி தாயின் வயிற்றில் பிறந்தவர்கள் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் பழிக்கக் கூடாது. அழுதால்தான் பால் கொடுப்பவள் தாயாக மாட்டாள். ஏதோ இலக்கியத்தைப் படித்து விட்டு சந்தர்ப்பம் இல்லாத நேரத்தில் சொல்லத் தகாததைச் சொல்லி தங்களையே குறைத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். அமைச்சர் தேர்தலுக்காக கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். தேர்தல் அடிக்கடி தான் வருகிறது. முனிஸிபல் தேர்தல், பஞ்சாயத்து தேர்தல் இப்படி 6 மாதம் 1 வருஷத்தில் தேர்தல் வருகிறது. எந்தக் காரியத்தைச் செய்தாலும் தேர்தலுக்காகச் செய்கிறோம் என்று சொல்லுவது மிகப் பொருத்தம் இல்லாத ஒன்று. ஆட்சி பீடத்தில் இருக்கிறவர்கள் ஜனநாயக அடிப்படையில் யார் யாருக்கு எந்த எந்த சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டுமோ செய்வார்கள் என்று சொல்லிக் கொண்டு, அவர்கள் சொல்லியிருக்கிற உதாரணம் பொருத்தம் இல்லாதது என்று சொல்லிக்கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

[20th October 1964

12-00 noon. * திரு வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு உதவி மான்யக் கோரிக்கையின் பேரில் நான் சில வார்த்தைகள் சொல்லலாம் என்று கருதுகிறேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தில் வேலை செய்பவர்களுக்கு பஞ்சப்படி உயர்வும், கிராமங்களில் வேலை செய்யும் கிராம அதிகாரிகளுக்கு சம்பள உயர்வும் அளித்திருக்கிறார்கள். அதன் மூலம் ஏறக்குறைய ரூ. 3 கோடிக்கு மேல் நம்முடைய ரெவின்யூ கணக்கில் அதிகச் செலவு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தப் புதிய சம்பள விகிதத்தையும், அதே போல பஞ்சப்படி உயர்வையும் நாங்கள் வரவேற்கிறோம், ஆதரிக்கிறோம் என்று நான் முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதை எந்த சந்தர்ப்பத்திலே கொடுத்தார்கள், எந்த உள் நோக்கத்தோடு கொடுத்தார்கள் என்று அதில் குற்றம் குறை கண்டு நான் பேசவரவில்லை. இருந்தாலும், இப்பொழுதாகிலும் இந்த அரசாங்கம் தங்களுடைய சிப்பந்திகளுடைய குறைகளை கண்டுகொண்டு, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்தது பற்றி அவர்களை பாராட்டாமல் இருக்க முடியாது.

மூன்றாவது பினான்ஸ் கமிஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கமிஷன் நம்முடைய பட்ஜெட்டில் நம்முடைய வரவையும், செலவு இனங்களையும் சீர்தூக்கிப் பார்த்து நமக்கு கணிசமான அளவுக்கு நிதி உதவி அளிக்கவேண்டுமானால், நாம் இதே போன்ற முயற்சியில் இப்பொழுதே ஈடுபட்டால்தான் நல்லமுறையில் மத்திய அரசாங்கத்தினிடமிருந்து மேலும் நிதி வசதி பெற முடியும். இரண்டாவது பினான்ஸ் கமிஷன் வந்த சமயத்தில் அப்பொழுது பட்ஜெட்டை சரிக்கட்டினார்கள், வருமானத்திற்கும் செலவினங்களுக்கும் சரியாக இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். அப்படிச் சொல்லிய காரணத்தினால், பினான்ஸ் கமிஷன் நம்முடைய மாகாணத்தைப் பொறுத்தமட்டிலும் நல்ல முறையில் சிபார்சு செய்து இருந்தும் அதிகப்படியான நிதி வசதி கொடுக்க முடியாமல் போய்விட்டது. ஆகையினால் நம்முடைய முதல் அமைச்சர் இந்த முயற்சியை இப்பொழுது மேற்கொண்டதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். அதேபோல வருகிற பட்ஜெட் தயாரிக்கிற சமயத்திலும் எந்தத் திட்டங்கள் மிகவும் அவசியமோ, எந்தத் திட்டங்கள் மாநிலத்திற்கு மிகவும் தேவையோ அவைகளையெல்லாம் விட்டுவிடாமல் சேர்த்து அந்த பட்ஜெட்டை துண்டு விழுகிற பட்ஜெட்டாக தயாரிப்பார்களேயானால், மூன்றாவது பினான்ஸ் கமிஷன் அதையெல்லாம் மேற்கோளாக வைத்து மத்திய சர்க்காரிடம் குவிகின்ற எக்ஸைஸ் டியூட்டி மூலம் நம்முடைய மாநிலத்திற்கு அதிகப் பங்கு கொடுக்கிற விதத்தில் சிபாரிசு செய்வதற்கு லாயக்காக இருக்கும். ஆகவே, இந்த முயற்சியில் கனம் முதலமைச்சர் அவர்கள் ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் இப்பொழுது பஞ்சப்படியை அதிகப்படுத்தியிருக்கிறோம். கிராம



20th October 1964] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

உத்தியோகஸ்தர்களுக்கு சம்பள உயர்வு கொடுத்திருக்கிறோம். இதையெல்லாம் நான்கு வருஷங்களுக்கு முன்னால் கொடுத்திருந்தால் நிச்சயம் பாராட்டியிருப்பார்கள். அப்பொழுது ரூபாய்க்கு 1½ படி அரிசி விற்றது. 1962-ல் ரூபாய்க்கு ஒரு படி அரிசி விற்றது. அன்று மட்ட ரக அரிசியாக இருந்தது, இன்று உயர்ந்த அரிசியாக இருக்கிறது. அந்த மட்ட ரக அரிசி அப்பொழுது 14 அணாவுக்குக் கிடைத்தது. அந்தச் சமயத்தில் இந்த உயர்வைக் கொடுக்காமல் இப்பொழுதுதான் கொடுத்திருக்கிறார்கள். ஒரு படி நெல்லூர் அரிசி ஓப்பன் மார்கெட்டில் கிடைக்காமல் பிளாக் மார்கெட்டில் ரூ 1.75-க்கு கிடைக்கக்கூடிய நிலைமையில் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த சமயத்தில் அவர்களுக்கு திருப்தியில்லையென்றாலும், வருகிற வருஷத்தில் விலைவாசி குறைந்தால் இந்த சம்பளத்தை வைத்துக்கொண்டு நிம்மதியாகக் காலம் கழிக்கும்போது அவர்கள் அரசாங்கத்தைப் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன். அதே போலத்தான் விலைவாசி ஏறுகின்ற கணக்கையும் பார்த்து அவர்களுடைய குடும்ப சூழ் நிலையையும் பார்த்து அந்த அடிப்படையில் ஐந்து வருஷத்திற்கு ஒரு தடவை ஒரு சம்பள கமிஷன் நியமிக்க வேண்டும். ஒரு தடவை சம்பள கமிஷனை நியமித்துவிட்டால் போதாது. 1960-ல் சம்பள கமிஷன் நியமித்தோம். இனி 1972-ல் தான் நியமிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது. விலைவாசி ஏறுவதைக் கருத்தில் கொண்டு அரசாங்க ஊழியர்களுடைய அடிப்படை சம்பளத்தையும் பஞ்சப்படியையும் 'பிக்ஸ்' பண்ணுவதற்கு இன்னொரு சம்பளக் கமிஷன் உடனடியாக நியமிக்க வேண்டும். அப்படி சம்பளக் கமிஷன் நியமித்தால்தான் வரவிருக்கிற மூன்றாவது பினான்ஸ் கமிஷன் அதைக் கருத்தில் கொண்டு நம்முடைய மாநிலத்திற்கு வேண்டிய நிதி வசதியை நல்ல முறையில் செய்து கொடுக்க முடியும். அதற்கான முயற்சியில் நம்முடைய அரசாங்கம் மேலும் ஈடு படவேண்டும் என்று நான் யோசனை கூறிக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக என்னுடைய தொகுதியைப்பற்றி சில வார்த்தைகள் கூறி முடிக்கலாம் என்று இருக்கிறேன். நான் நெல்லிக்குப்பம் சட்டமன்றத் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன். என்னுடைய தொகுதியில் பண்ருட்டி, நெல்லிக்குப்பம் என்ற இரண்டு நகரங்கள் இருக்கின்றன. நெல்லிக்குப்பம் என்றாலே அங்கத்தினர்களுக்குத் தெரியும் நாற்றம் அடிக்கின்ற நகரம் என்று. அம்மாதிரி நாற்றம் அடிக்கும் நகரம் இம் மாநிலத்தில் என்னுடைய தொகுதியில்தான் இருக்கிறது. ரயில் மூலம் வந்தாலும் சரி கார் மூலம் வந்தாலும் சரி நாற்றம் அடிப்பது நெல்லிக்குப்பம் தான் என்று தெரியும். சாக்கடை நாற்றம் அடிக்கும். பாரி கம்பெனிக்காரர்கள் உள்ளே இருக்கிற கழிவு நீர்களையெல்லாம் அங்கே வெளியே தள்ளுகிறார்கள். கடலூரில் இருந்து ரோடு மூலம் வந்தாலும் சரி, ரயில் மூலம் வந்தாலும் சரி இரவில் தூக்கத்தில் விழித்துக்கொண்டால் கூட நாற்றம் அடித்தால் அதை

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [20th October 1964

நெல்லிக்குப்பம் என்று தான் கொள்ளலாம். அந்த அளவிற்கு நாற்றம் இருக்கிறது. மந்திரிகளும் அங்கே வருகிறார்கள். நிலைமை சீர்பட்டதா? நான் எடுத்துச் சொல்லலாம். நான் வேறு என்ன செய்வது? பாரி கம்பெனிக்காரர்களோடு சண்டை செய்ய முடியுமா? பஞ்சாயத்துப் போர்டினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இதுபற்றி சட்ட மன்றத்தில் பல தடவை சொல்லியிருக்கிறேன். பஞ்சாயத்து போர்டினால் இதைத் தடுக்க முடியவில்லை. இதை முனிசிபாலிட்டியாக மாற்றி விடவேண்டும் என்று நான் சொன்னேன். நான் ஒன்றும் அரசாங்கத்திற்குப் புதிய யோசனை கூறி விடவில்லை. நம்முடைய அரசாங்கம் ஏற்கனவே மேற்கொண்டிருக்கிற யோசனையைத்தான் சொன்னேன். 20,000-க்கு மேல் ஜனத்தொகை இருந்தால் ரூ. 1 லட்சத்துக்கு மேல் வருமானம் வந்தால் அந்த பஞ்சாயத்தை முனிசிபாலிட்டியாக மாற்றி விடலாம் என்று நம்முடைய அமைச்சர் மஜீத் அவர்கள் உறுதி மொழி கொடுத்திருக்கிறார்கள். அஷ்யூரன்ஸ் கமிட்டி ரிக்கார்டில் கூட உறுதி மொழி இருக்கிறது. நெல்லிக்குப்பத்தில் 1,60,000 ரூபாய் வருமானம் வருகிறது ஆண்டு ஒன்றுக்கு. அங்கே ஜனத்தொகை 22,600. நெல்லிக்குப்பத்தை ஏன் முனிசிபாலிட்டியாக மாற்றவில்லை என்று கேட்டால் மந்திரி அவர்களுக்கு ரொம்ப கோபம் வரும். காரணம் அங்கே அவர்களுக்கு வேண்டியவர் திரு. அமீர் சாகிப் அவர்கள் தலைவராக இருக்கிறார். நிரந்தரமாக ஒரு பஞ்சாயத்து போர்டு சேர்மனாக இருக்க ஆசைப்படுகிறார். பஞ்சாயத்துப்போர்டை பாரி கம்பெனி விரும்புகின்றபடி முனிசிபாலிட்டி ஆக்கவேண்டாம் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனும் அம்மாதிரி தீர்மானம் போட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து போர்டு தலைவர் பாரி கம்பெனிக்கு வேண்டியவர். அவரே பஞ்சாயத்து யூனியன் தலைவர். அவர்களுக்கு அந்தப் பஞ்சாயத்து கீழ்நிலையில் இருக்க வேண்டுமென்பது ஆசை. முனிசிபாலிட்டியாவது பிடிக்கவில்லை. அமைச்சர் அவர்களுக்கும் பிடிக்கவில்லை. இம்மாதிரி நெல்லிக்குப்பத்திற்குச் சட்டம். ஆனால் கடையநல்லூருக்கு வேறு சட்டம். அந்தப் பஞ்சாயத்து யூனியனில் முனிசிபாலிட்டியாக மாற்ற வேண்டாம் என்று தீர்மானம் போடப்பட்டது. அங்கே ஜனத்தொகை குறைவு. எங்களைவிட வருமானமும் குறைவு. இருந்தாலும்கூட அதை முனிசிபாலிட்டியாக மாற்ற வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மந்திரிக்கு ஒரு சட்டம், எதிர்க் கட்சியிலிருந்து வருகிற அங்கத்தினர்களுக்கு ஒரு சட்டமா? இம்மாதிரி பாரபட்சமான முறையில் காரியங்கள் செய்வதில் ஈடுபடக்கூடாது. கீழ்மட்டத்தில் இருப்பவர்கள் வேண்டுமானால் இம்மாதிரி செய்யக் கூடும். ஆனால் பெரிய பதவியிலிருப்பவர்கள் மந்திரிகள் நகரம் நல்லபடியாக இருக்கவேண்டும் என்பதைத்தான் மனதில் கொண்டு செயல்பட வேண்டும். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்கிறார்களா, அமீர் சாகிப் அவர்கள் சொல்கிறார்களா, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்களா என்பதைப் பார்க்கக்கூடாது. நகரத்தின் நன்மையைக் கருதி நெல்லிக்



20th October 1964] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

குப்பத்தை முனிசிபாலிட்டியாக மாற்ற வேண்டியது அமைச்சர் அவர்களுடைய கடமை. அந்தக் கடமையிலிருந்து தினம் தினம் தவறி வருகிறார்கள் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பஞ்சாயத்துச் சட்டம் வந்தபிறகு இடையே உள்ள சில கிராமங்களை தனிப் பஞ்சாயத்துக்களாக பிரிக்க வேண்டுமென்று சொல்லி மக்கள் விருப்பப்படுகிறார்கள். 700, 800 ஜனத்தொகையுள்ள சில கிராமங்களுக்கு தனிப் பஞ்சாயத்து அமைக்கப்பட வேண்டும் என்று ஆசைப்படுவது இயற்கை. முன்பு நான் கேட்டபோது நமது முதலமைச்சர் அவர்கள் பொதுத் தேர்தலின்போது பார்த்துக்கொள்ளலாம், இடையிலே பிரிக்கக்கூடாது என்று சொன்னார்கள். அது நியாயமான யோசனை. பொதுத் தேர்தல் வரப்போகிறது. என்னுடைய தொகுதியில் 5, 6 பஞ்சாயத்துகள் தனியாகப் பிரிக்கப்படவேண்டும் என்று கோரப்பட்டது. 5,000 ஜனத்தொகையுள்ள பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிக்கலாம். அவ்வாறு பிரிக்கலாம் என்று பஞ்சாயத்தில் தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. 4,000, 5,000 ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது. குறைந்த பட்சம் 2,000 ரூபாய் வருமானம் வந்தால் போதும். 1,500-க்கு மேல் ஜனத்தொகை இருந்தால் போதும். அப்படியிருந்தும் ஏன் பிரிக்கக்கூடாது? நம்முடைய மந்திரி அவர்களுக்கு பஞ்சாயத்து சேர்மன் ரொம்பவும் வேண்டியவர். மீண்டும் அவர் சேர்மனாக வர விரும்புகிறார். அதனால்தானோ என்னவோ பிரிக்கப்படவில்லை. அவரே மறுபடியும் சேர்மனாக வரட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை.

MR. DEPUTY SPEAKER: The hon. Member should not impute personal motives.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** நீண்ட நாட்களாக அவர்களிடம் சொல்லிக்கொண்டு வருகிறேன். இது நியாயம் அல்ல. நமது முதலமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டும். இந்த கிராமங்களின் பெயர் வீர பெருமாள் நல்லூர், கண்டரகோட்டை, கணிசப்பாக்கம், திருக்கண்டேஸ்வரம், மேலக்குமாரமங்கலம், திருவதிகை, ஒரு மைல் 1½ மைல் தூரத்தில் இடையிலேயுள்ள கிராமங்களுக்கு தனித்தனியாக ஒரு பஞ்சாயத்து இருக்க வேண்டும் என்று கோரப்படுவது நியாயம்தான். நம்முடைய 'பாயே' சேர்மனாக வரவேண்டும் என்று இங்குள்ள மஜீத் பாய் கருதி இம்மாதிரி பிரிக்காமல் இருப்பது நல்லதல்ல. முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு நல்லமுறையில் இந்த பஞ்சாயத்துக்களைப் பிரித்து தேர்தல் வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் 1964-65-ம் ஆண்டு துணை மதிப்பீட்டை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துணை மதிப்பீட்டிலே பல நல்ல அம்சங்கள் காணப்படுகின்றன.

[திரு. ஜே. மாதா கவுடர்] [20th October 1964

சாதாரணமாக, சர்க்கார் சிப்பந்திகளுக்குப் பஞ்சப் படியை உயர்த்தியிருப்பது எல்லோரும் வரவேற்கக்கூடிய ஒரு நல்ல அம்சம். அதே நேரத்தில் ரூபாய் 90 முதல் 110 வரை சம்பளம் வாங்கும் மத்திய ஊழியர்களைக் காட்டிலும் நம்முடைய மாகாண ஊழியர்களுக்கு அதிப்படியான அகப்படி விலை கொடுத்திருப்பது மிகமிகப் போற்றத்தக்கது. மத்தியஅரசு ஊழியர்களுக்கு எவ்வளவு கொடுக்கப்படுகிறதோ அதேமுறையில் மாநில அரசு ஊழியர்களுக்கு கொடுக்கவில்லையென்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டார்களே தவிர அதிகப்படியாக கொடுத்திருப்பதை அவர்கள் பார்க்கவில்லை. நம்முடைய சர்க்கார் அதிகப்படியாக அகப்படி அளவை உயர்த்தியிருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் பார்த்திருக்க வேண்டும். இவ்வாறு அதிகப்படியாகக் கொடுத்திருப்பதை நான் பாராட்டுகின்றேன். நான் பாராட்டுவதோடு மட்டுமல்லாமல் எதிர்க்கட்சியிலுள்ள நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் இந்தத் துணை மதிப்பீட்டைப் பாராட்டியிருக்கிறார் என்றால், அது எவ்வளவு நன்றாக அமைந்திருக்கிறதென்று நான் சொல்லவேண்டிய அவசியமில்லை. இந்தத் துணை மதிப்பீட்டில் நல்லவிதமான பல அம்சங்களை நமது முதலமைச்சர் அவர்கள் அமைத்திருக்கிறார்கள். பர்மாவிலிருந்து வந்திருக்கக் கூடிய அகதிகளுக்கு என்ன செய்யவேண்டுமென்பது மிக முக்கியமான பிரச்னை. அவர்களுக்கு நல்ல முறையில் உதவியளிக்கும் வகையில் நமது சர்க்கார் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அரசாங்க ஊழியர்களுக்கு, அதிலும் குறிப்பாக கிராம உத்தியோகஸ்தர்களுக்கு, சம்பள உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஏதோ பஞ்சாயத்துத் தேர்தலை நினைத்துக்கொண்டு கொடுத்திருப்பதாக சொல்கிறார்களென்று நினைக்கிறேன். பஞ்சாயத்து தேர்தலுக்காகவோ அல்லது எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னதற்காகவோ இந்த உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வதற்கு இடமேயில்லை. கிராம உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தவரையில் சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தப் பிரச்னை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எஸ்டிமேட்ஸ் கமிட்டியினர் இதை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டார்கள். நானும் அப்பொழுது அந்தக் கமிட்டியில் இருந்தேன். கிராம உத்தியோகஸ்தர்களை எல்லாம் நாங்கள் பார்த்தோம். அவர்களில் ஒருசிலர் எல்.டி.சி. அல்லது யூ.டி.சி.க்குக் கொடுப்பதுபோல் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், அதிகப்படியானவர்கள் ஓரளவு சம்பளத்தை உயர்த்தினால் போதும், இதை ஒரு கௌரவமான உத்தியோகமாக நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். எங்களை மாற்றக்கூடாது என்று சொன்னார்கள். என்னுடைய ஜில்லாவைப் பொறுத்தவரையில், அங்கேயுள்ள கிராமாதிகாரிகள் ஓரளவு சம்பளத்தை உயர்த்தினால் போதும், ஆனால் மாற்றம் செய்யக் கூடாதென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த கிராம உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை இரண்டு மடங்காக உயர்த்திருப்பதை என்னுடைய தொகுதியிலுள்ள எல்லா கிராம உத்தியோகஸ்தர்களும் மனப்பூர்வமாக வரவேற்று சர்க்காரைப் பாராட்டு



20th October 1964] [திரு. ஜே. மாதா கவுடர்]

கிறார்கள். மேலும், வெட்டியான், தலையாரி போன்றவர்களுக்கும் அதிகப்படியாக சம்பளம் கொடுக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். தற்போது உள்ள சூழ்நிலையில் கொடுக்கப்பட்டிருக்கும் சம்பளம் ஓரளவு திருப்திகரமாக இருக்கிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய ஜில்லாவைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு சிறிய குறை இருந்துவருகிறது. அது குளிர்ப் பிரதேசமாக இருப்பதால் 1959-ஆம் ஆண்டில் வெட்டியான்களுக்கும், தலையாரிகளுக்கும் உல்லன் டிரஸ் ஓராண்டுக் காலம் கொடுக்கப்பட்டது. மறு ஆண்டிலிருந்து என்ன காரணத்திற்காகவோ அது நிறுத்தப்பட்டுவிட்டது. தயவுசெய்து அதைப் பரிசீலனைசெய்து மீண்டும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நமக்கு இருக்கக்கூடியவை உணவுப் பிரச்னை நிலைமையில் நாம் ஒன்றைச் சிந்திக்கவேண்டும். எதிர்க்கட்சிக்காரர்களும் நான் சொல்வதை ஒப்புக்கொள்வது நல்லது. சர்க்காரின் அபிப்பிராயம் எப்படியிருந்தபோதிலும், இப்பொழுது இருக்கக் கூடிய சூழ்நிலையில், வரக்கூடிய டிசம்பர் மாதத்திலே இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல் நடத்தவேண்டியது அவசியமா என்பதைச் சிந்திக்க வேண்டும். இருக்கக்கூடிய அதிகாரிகளையும் வேறு சர்க்கார் துறையில் இருக்கக்கூடிய எல்லோரையும் தேர்தலுக்காக இந்த நேரத்தில் ஒதுக்குவது சரியாக இருக்குமா என்பதைப் பார்க்கவேண்டும். இந்த நேரத்தில் இந்தத் தேர்தலை ஒத்திவைத்தால்கூட நல்லது என்பது என்னுடைய சொந்த அபிப்பிராயம். அதை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டைப் பார்க்கும்பொழுது சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் இந்த உயர்வானது ஹரிஜன இலாகாவிலுள்ளவர்களுக்கு பொருந்தாது என்று சொல்லியிருப்பதைப் பார்த்து நான் வருந்துகிறேன். ஹரிஜன இலாகாவில் இருக்கும் உத்தியோகஸ்தர்கள் தாழ்த்தப்பட்ட உத்தியோகங்களைப் பார்க்கிறார்களா? அல்லது ஒரு தாழ்த்தப்பட்ட இலாகாவா என்று நான் கேட்கிறேன். தாழ்த்தப்பட்ட ஹரிஜன மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடுகிறவர்களுக்குத்தான் முதலிடமும் உற்சாகமும் கொடுக்கவேண்டும். இந்தக் கம்யூனிட்டி சென்டரில் வேலை பார்க்கக்கூடிய ஒரு சில உத்தியோகஸ்தர்களுக்கு ஃபிக்ஸட் பே என்ற அடிப்படையில் ரூபாய் 100 அல்லது 110 கொடுக்கிறார்கள். இந்த நிலையில் ஹரிஜன மக்களுக்காக அவர்கள் எவ்வளவு தூரம் பாடுபடுவார்கள் என்பதை நாம் யோசித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, ஹரிஜன இலாகாவில் இருப்பவர்களுக்கு மட்டும் உயர்வு கொடுப்பதில்லை என்ற முறையை மாற்றவேண்டும். அகில இந்திய ரீதியில் எப்படியிருந்தபோதிலும் நமது மாநிலத்தைப் பொறுத்தமட்டில் இந்த ஃபிக்ஸட் பே முறையை நீக்கவேண்டும். அவர்களுக்கும் ஒரு பே ஸ்கேலை நிர்ணயம் செய்து மற்ற சலுகைகளையும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஜே. மாதா கவுடர்] [20th October 1964

என்னுடைய தொகுதியிலே கூனூரில் ஒரு அடிஷனல் ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்திரேட் கோர்ட் இதுவரையிலும் இருந்தது. அதை இப்பொழுது டீகிரேடு செய்யப்போவதாகக் கேள்விப்பட்டு நான் வருத்தப்படுகிறேன். எந்தக் காரணத்தைக்கொண்டும் அதை டீகிரேடு செய்யக்கூடாது. உதகமண்டலத்தில் ஒரு முதல் கிளாஸ் மாஜிஸ்திரேட் கோர்ட் வைத்தாலும்கூட, இதை டீகிரேட் செய்ய வேண்டாம். இதை டீகிரேட் செய்துவிட்டால் கூனூர் தொகுதியில் உள்ளவர்கள் ஒரு ஃபர்ஸ்ட்கிளாஸ் கேஸ் போட வேண்டுமென்று சொன்னால் 50 அல்லது 60 மைல் தூரத்திலுள்ள கோயம்புத்தூருக்கு வந்து கேஸ் போட வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, இதை மனதில் வைத்துக்கொண்டு, எந்தக் காரணத்தை முன்னிட்டும் டீகிரேட் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீலகிரி ஜில்லாவில் இருக்கக்கூடிய மக்களுக்கு ஒரு செண்ட் நிலம் கூட கொடுக்கக்கூடாது என்று சர்க்கார் ஒரு ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள். பட்டா செய்துகொடுக்க முடியாத நிலை அங்கு இருக்கிறது. இதைப்பற்றி அங்கேயுள்ள அரிஜன மக்கள் சர்க்காருக்கு முறையிட்டு இருக்கிறார்கள். தயவு செய்து நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையில் போடப்பட்டிருக்கும் இந்தத் தடையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கோசல்ராம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மதிப்பீட்டில் கோரியிருக்கும் விஷயங்களைப் பார்க்கும்பொழுது இதைவிட அதிகமாக வேண்டுமென்று சொல்லுவதைத் தவிர இது தவறு என்று யாரும் சொல்லுவதற்கில்லை. ஆனால் என்னைப் போன்றவர்கள் இதிலே எதிர்பார்த்து ஏமாற்றம் அடையக் கூடிய ஒன்றிரண்டு விஷயங்களை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். விரைவுத் திட்டங்கள் என்று போட்டு அனிமல் ஹஸ்பெண்டரி இலாகாவுக்கு ரூபாய் 41 லட்சம் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கது. விவசாயத்தை எம்பஸைஸ் பண்ணி அதிகமாகச் செய்ய வேண்டுமென்று சொல்லும்பொழுது, நமக்கு எஞ்சியிருப்பது சப்ஸாயில் வாட்டர்தான், அதாவது பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரை எவ்விதம் விவசாயத்திற்குப் பயன்படுத்துவது என்பது. மற்றவைகளை நாம் ஏற்கனவே எக்ஸ்பிளாயிட் பண்ணியாகிவிட்டது ரூபாய் 3,000, 3,500 என்று பணத்தைக் கொடுத்துவிட்டால் மட்டும் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடாது. சமீபத்தில் நானும் மத்திய நிதி மந்திரி திரு. டி. டி. கே. அவர்களும் சுற்றுப் பிரயாணம் செய்தோம். ஆயிரக்கணக்கான நிலங்கள் சம பூமியாக இருக்கிற சில தாலுகாக்களுக்கு நாங்கள் சென்றோம். இந்தத் தாலுகாக்களில் கிணறு வெட்டிக் கொடுத்ததால் பிரமாதமான விவசாயம் செய்வதைப் பார்த்தோம். அம்மாதிரி கிராஷ் பிரோக்கிராம் போட்டிருக்கிறபோது ஒரு கிணற்றுக்கு 10,000, 20,000 அல்லது 25,000 வரை ஆகிறது, அதைச் செய்து கொடுத்தால், குறைந்தது 25 ஏக்கர் அல்லது 30, 40 அல்லது 50 ஏக்கர் வரை விவசாயம்



20th October 1964] [திரு. கே. டி. கோசல்ராம்]

தண்ணீர் கிடைக்கிறது. அதை விட்டு விட்டு 2,000 ரூபாயில் கிணறு வெட்டிக்கொள்ளுங்கள் என்று சொன்னால், கிணற்றை வெட்டுகிறான், ஆனால் பாதியில் போட்டு விடுகிறான். பணத்தைச் செலவழித்தும் தண்ணீரைப் பார்க்க முடியவில்லை. சில இடங்களில் பிரயோசனம் இருக்கலாம். ஆனால் அது எல்லா இடங்களிலும் முழுப் பிரயோசனம் உள்ளது என்று சொல்வதற்கில்லை. ஆனால் பாதிக் கிணறு தாண்டிய கதையாக இருக்கிறது. இருந்தாலும் சர்க்கார் பணத்தைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதற்காக அவன் தன் மனைவியின் நகைகளை விற்றுக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆகவே தான் சொல்லுகிறேன் இந்த கிராஷ் பிரோக்ராமை எடுத்துக்கொண்டு நம் ராச்சியத்தில் கோயம்புத்தூர், திருநெல்வேலி, சவுத் ஆர்காடு, நார்த் ஆர்காடு முதலிய மாவட்டங்களில் சப்-சாயில் வாட்டரை டாப் செய்ய உடனடியாகத் திட்டம் வகுத்து, இதை அவுட்லைட் ப்ளான் என்று சில கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் அதற்குப் பதிலாக ரூபாய் 2,000, 3,000 என்று போட்டிருக்கிறார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். கிராஷ் பிரோக்ராம் கீழ் ரூபாய் 15,000-க்குக் குறையாமல் கிணறு வெட்ட என்று போட்டு உதவி செய்தால் நலமாக இருக்கும். ட்ரில்லிங் செட்டு வேண்டும். எத்தனை இருக்கிறது என்று தெரியும் அதைப் பொருத்து எத்தனை இன்னும் வேண்டும் என்று பார்க்க வேண்டும், பவர் ட்ரில் நம்மிடம் இல்லை என்றால், இம்போர்ட் செய்ய வேண்டும்; அதற்கு நமக்கு பாரின் எக்ஸ்சேஞ்ஜ் இல்லை என்று சொல்லுகிறார்கள். நிலத்திற்கு நீர் இருந்தால் தானே நல்ல விவசாயம் செய்து தானியம் கிடைக்கும்? தானியம் கிடைத்தால் தானே டிஸ்ட்ரிப்யூஷன் செய்யலாம். டிஸ்ட்ரிப்யூஷனில் இருக்கும் குறைகளைப்பற்றி அப்புறம் பார்க்கலாம். வேண்டும் என்றால் ஒரு கார்ப்பொரேஷன் போடுங்கள். அதற்கு வேண்டிய பணத்தைக் கோரி செலவு செய்து ஆவன செய்யுங்கள். நமக்கு வேறு இர்ரிகேஷன் ஸ்கீம் இல்லை. சப்-ஸாயில் வாட்டரைத்தான் பயன்படுத்தியாக வேண்டும். கனம் முதல் மந்திரி அவர்கள் பழுத்த நிர்வாகத் திறமை உள்ளவர்கள். பொது வாழ்க்கையில் சீனியர் பாலிடீஷனாக இருக்கிறார்கள். பர்மா அகதிகளுக்காக ரூபாய் 25 லட்சம் கோரியிருக்கிறார்கள். அதேபோல் இலங்கை-இந்தியா பிரச்னையும் இருக்கிறது. அது சம்பந்தமாக விவாதிக்க டெல்லிக்குப் போக இருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களை அழைத்திருக்கிறார்கள். மிக்க சந்தோஷம். அதிகம் பேச சந்தர்ப்பம் இல்லாததால், ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டும் சொல்லுகிறேன். உதவி சபாநாயகர் அவர்கள் மணியை பார்க்கிறதிலிருந்து அதிக நேரம் இல்லை என்று அறிகிறேன். பர்மாவிற்கும் இலங்கைக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. இலங்கையில் உள்ள எட்டு லட்சம் இந்தியர்களும் இலங்கைக்குச் சென்று இலங்கையை வளம் பெறச் செய்திருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு ஸ்டேட்லெஸ் ஆக இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த நாடும் இல்லை என்று சொல்லுகிறார்கள். அவர்களைக் கொண்டு இலங்கை அரசாங்கம் ரூபாய்

[திரு. கே. டி. கோசல்ராம்] [20th October 1964

110 கோடி வருஷத்திற்கு வருமானம் அடைகிறது. அவர்கள் எஸ்டேட்டுகளில் வேலைசெய்து விளைவிக்கும் ரப்பர், தேயிலை வெளி நாடுகளுக்கு எக்ஸ்போர்ட் செய்யப்படுகின்றன. அது இந்த 8 லட்சம் இந்தியர்களால் உண்டாக்கப்படுகிறது. உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வளவு நன்மையும் இவர்களைக் கொண்டு அடைந்து கொண்டே இலங்கை அரசாங்கம் நம்மை மிரட்டிக் கொண்டு இருக்கிறது. ஆகவேதான் சொல்லுகிறேன், அமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போகிறார்கள். அதிகம் பேச நேரம் இல்லை. அமைச்சர் அவர்கள் இந்த எட்டு லட்சம் பேர்களையும் ரிபாட்ரியேட் செய்து கொள்ளத் தயார் என்று சொல்லி விடட்டும். நமக்கு இங்கே மலைகள் இருக்கின்றன. எஸ்டேட்டுகள் இருக்கின்றன. அவர்களை எப்படியும் உத்தியோகம் தேடி வேலையில் அமர்த்திக்கொள்ளலாம், அவர்களை நாங்களே ரிபாட்ரியேட் செய்துகொள்கிறோம் என்று அமைச்சர் சொல்லி விடட்டும். இவர்கள் பர்மா அகதிகள் போல அல்ல. இவர்களுக்கு உடனே வேலை கொடுக்க முடியும். நமக்கு இருக்கும் மலைப் பிரதேசங்களை வளம் பெறச் செய்யலாம். நாம் அப்படி அவர்களைத் திரும்ப எடுத்துக்கொள்கிறோம் என்று சொல்லிவிட்டால் இலங்கை அரசாங்கம் என்ன நிலையில் இருக்கும் என்பது நமக்குத் தெரியும். அவர்களுக்கு வரும் வருமானம் வருஷத்திற்கு 100 கோடி ரூபாய். அதை இழக்க அவர்கள் தயாராக இருக்க மாட்டார்கள். இந்த நிலையிலும் அவர்கள் நம்மை மிரட்டுகிறார்கள். இந்திய மக்களை கிரிமினல்கள் போல மிருகத்தனமாக நடத்துகிறார்கள். எவ்வளவோ அசம்பாவிதங்கள் நடக்கின்றன. இவர்களெல்லாம் இந்திய மண்ணில் தோன்றியவர்கள். இரண்டு மூன்று தலைமுறைக்கு முன்பு இலங்கை சென்றவர்கள். அவர்கள் இலங்கைத் தோட்டங்களை வளம்பெறச் செய்திருக்கிறார்கள். அவர்களை இன்றைக்கு ஸ்டேட்லஸ் என்று சொல்லுகிறார்கள். பொன்னை விளைவிக்கும் இந்தியர்களை இலங்கை அரசாங்கம் அனுப்புவார்களா என்று கேட்டால் அவர்கள் அனுப்பத் தயாராக இருக்க மாட்டார்கள். அப்படி அவர்கள் இங்கே வந்தால் அவர்களைக் கொண்டு நாம் பொன்னை விளைவிக்க முடியும். ஆகவே, தைரியமாக இந்த 8 லட்சம் பேர்களையும் எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லிவிடுங்கள். இலங்கை அரசாங்கம் விட்டுவிடுமா என்று பார்ப்போம். முதலமைச்சர் அவர்களுக்கு அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் எல்டர் ஸ்டேட்ஸ்மென். அட்மினிஸ்டிரேடிவ் எக்ஸ்பீரியன்ஸ் பெற்றவர்கள். அத்தகைய பெருமை வாய்ந்த முதலமைச்சர் சொல்லுகிறார்கள். அவர்கள் சென்று இலங்கைப் பிரச்சினையைத் தீர்த்து, இந்தியர்களுக்கு இருக்கும் அவல நிலையைப் போக்க உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உதவி மானிய கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்வதற்கு முன்பாக, ஆரம்பத்தில் மானிய



20th October 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

கோரிக்கைகள் பற்றிய தஸ்தாவேஜிகளை அங்கத்தினர்களுக்கு வழங்கும் முறையைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பட்ஜெட் மான்யுவலின் 69-வது பிரிவுப்படி—

" Copies of the Budget publications containing the Demands for Grants and the Detailed Estimates relating to them will be sent to the Secretary to the State Legislature, a week before the date fixed for the presentation of the budget for circulation to the Members of the Legislature. "

என்று இருக்கிறது. அந்தப் பிரிவின்படி இந்த தாஸ்தாவேஜிகள் ஒரு வாரத்திற்கு முன்பாகவே அங்கத்தினர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். டிமாண்டுகள், சப்ளிமெண்டரி டிமாண்டு உள்பட ஒரு வாரத்திற்கு முன்பு சட்டசபை காரியதரிசிக்கு வந்து அங்கத்தினர்களுக்கு சர்க்குலேட் செய்வதால் ஆபத்து எதுவும் ஏற்பட்டு விடாது. இதுபற்றி இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு கூட நான் குறிப்பிட்டேன். அது முன்பெல்லாம் மூன்று நாட்களுக்கு முன்னால் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அது இப்பொழுது படிப்படியாகக் குறைந்து பட்ஜெட் பிரஸண்ட் பண்ணும் அன்றைக்குத் தான் அங்கத்தினர்களுக்கு வந்து சேருகிறது. இந்த முறையை மாற்ற வேண்டுமென்று கனம் முதலமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அப்படி முன்னதாகவே பட்ஜெட் தஸ்தாவேஜிகளை அங்கத்தினர்களுக்கு வழங்கினால் நன்றாக ஆராய்ந்து ஒவ்வொரு டிமாண்டையும் பற்றி அங்கத்தினர்கள் நல்ல கருத்துக்களைக் கூறுவதற்கு உதவியாக இருக்கும். அதனால் அரசாங்கத்திற்கும் நன்மை ஏற்படும். அடுத்த பட்ஜெட்டின் போதாவது இந்தக் குறையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிதியமைச்சர் அவர்களுடைய பட்ஜெட் பிரசங்கத்தை கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. பிரசங்கம் தவிர மற்ற எல்லாவற்றையும் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அங்கத்தினர்கள் கைக்குக் கிடைக்கச்செய்ய வேண்டுமென்று பட்ஜெட் மான்யுவலில் இருக்கும் விதிப்படி கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதவி மானியக் கோரிக்கையை ஆட்சேபிக்க ஒன்றும் இல்லை. அதில் இரண்டு இனங்கள் இருக்கின்றன. ஒன்று சர்க்கார் ஊழியர்களுக்கு பஞ்சப்படி கொடுத்திருப்பது. இரண்டாவது, கிராம அதிகாரிகளுக்கு சம்பளத்தையும் பஞ்சப்படியையும் உயர்த்திக் கொடுத்திருப்பது. இவை இரண்டுமே நாம் வரவேற்கத்தக்க ஆதரிக்கத்தக்க திட்டங்கள்தான். ஆனாலும் இன்றைக்கு தமிழ் நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய கடுமையான அரிசிப் பஞ்சத்தினாலும், அதனால் மக்கள் படும் கஷ்டத்தினாலும், நன்மை பொருந்திய திட்டங்களுக்கும் கொடுக்க வேண்டிய பாராட்டுதலைக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. மக்கள் கஷ்டப்படும் நிலையில் இருப்பதால் மற்ற திட்டங்களால் அடையும் பலனுக்காகக்கூட பாராட்டுவார்களா என்பது சந்தேகம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் கஷ்டம் அவ்வளவு ஏற்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர் பிரிவையும் கவனிக்கிறார்கள்.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [20th October 1964

12-30 p.m. நம் முதலமைச்சர் அவர்கள் அனுபவம் பெறாத ஏதாவது இலாகா ஒன்று இருக்கிறதா என்பதே சந்தேகம். அப்படி அவர்கள் எல்லா இலாகாக்களிலும் அனுபவம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லா இலாகாக்களிலும் அனுபவம் உண்டு. சிலர் நல்ல எண்ணத்தினால் சொன்னார்களோ, கெட்ட எண்ணத்தினால் சொன்னார்களோ எனக்குத் தெரியாது. ஆனால், நான் மனப்பூர்வமாகச் சொல்கிறேன். அவர்கள் இருக்கும்போது மற்ற அமைச்சர்களுக்கு வேலை இருக்காது என்று ஒருவர் குறிப்பிட்டார். எல்லா மந்திரிகளுடைய வேலையையும் அவர் ஒருவரே பார்க்கக்கூடிய திறமை அவருக்கு இருக்கிறது. எந்த அர்த்தத்திலே சொல்லியிருந்தாலும் சரி, அவர் திறமையைப்பற்றிக் குறிப்பிடுவதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், அந்தத் திறமை நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆவல். இவ்வளவு திறமை இருந்தும் பிரச்னை ஏன் தீர்க்கப்படவில்லை?

தொழிலாளர் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் புள்ளி விவரம் கொடுக்கப்பட்டது. இந்த வருஷம் பிப்ரவரி மாதத்திலே விலைவாசிப் புள்ளி 506 ஆக இருந்தது. ஆறு மாத காலத்திற்குப் பிறகு 583 ஆக உயர்ந்திருக்கிறது. இந்த ஆறு மாத காலத்தில் கிட்டத்தட்ட 80 புள்ளி உயர்ந்திருக்கிறதென்றால், எவ்வளவு வேகமாக ஏறியிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். இரண்டாவது உலக யுத்தத்தில்தான் இந்த சங்கடம் ரொம்ப ஜாஸ்தியாயிற்று. வெள்ளைக்காரன் போனான். சுதந்திரம் அடைந்தோம். நிம்மதியான நிலைமை ஏற்படும் என்று எதிர்பார்க்கும் சமயத்தில், இந்த ஆறு மாத காலத்தில் இவ்வளவு வேகமாக விலைவாசி ஏறக் காரணம் என்ன? இவ்வளவு விரைவாக விலைவாசி ஏறியிருக்கிறது. ஆனால் கொடுத்திருக்கும் நிவாரணம் யானைப் பசிக்குச் சோளப் பொரி போட்ட மாதிரி இருக்கிறது. சர்க்கார் ஊழியர்களுக்கு இரண்டு தடவை பஞ்சப் படியை உயர்த்தியும், அவர்கள் அமைச்சர்களைப் பாராட்டுவார்களா என்றால் பாராட்ட மாட்டார்கள். அதற்குப் பதிலாக, அவர்கள் பெற்றிருக்கும் அனுகூலத்தைவிட அடைந்திருக்கும் வேதனை அதிகரித்திருக்கிறது என்பதை நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவந்து, அதற்குப் பரிகாரம் தேடவேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். கிடைக்கிற சந்தர்ப்பத்தையெல்லாம் வைத்துக்கொண்டு, அரசாங்கத்தைக் குறை கூறவேண்டும், தூற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு நான் சொல்வதாக அவர்கள் எடுத்துக்கொண்டால் அதற்காகவும் நான் வருத்தப்படவில்லை. நான் நல்ல எண்ணத்தோடு தான் இந்தக் குறைபாட்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சர்க்கார் ஊழியர்கள், இன்னும் மற்ற அதிகாரிகள் இவர்களுடைய நிலை என்ன? மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடிய அதே விகிதத்தில் பஞ்சப் படி இவர்கள் அனைவருக்கும் கொடுக்கப்படும் என்ற கொள்கையை ஒப்புக்கொண்டு அதைக் காலம் தாழ்த்தியாவது அமுல் நடத்தியிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் ஊழியர்கள் இன்னும் கிளர்ச்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 'பஞ்சப் படி போதாது, விலைவாசிப் புள்ளி உயர்வுக்கு ஏற்றபடி பஞ்சப்படியை உயர்த்தவேண்டும்' என்பதற்காகக் கிளர்ச்சி செய்து, அதன் விளைவாக மத்திய சர்க்கார் மத்தியஸ்தர் ஒருவரை நியமித்திருக்கிறது. மத்தியஸ்தர் நியமிக்கப்பட்டு, மத்திய அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப்படியை எப்படி உயர்த்தவேண்டும் என்று பரிசீலிக்க ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்கள். நமக்கு அந்தக் கமிட்டியில் சொல்லிக்கொள்ளச் சந்தர்ப்பம் இருக்கிறது. மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு மேலும் பஞ்சப்படியை உயர்த்த வேண்டாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களோ என்னவோ. நான் தயவு செய்து கேட்டுக்கொள்கிறேன், 'அப்படிச் செய்யாதீர்கள்' என்று. அவர்களுடைய குறையையும் போக்குங்கள். நம்முடைய ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுடைய குறையையும் போக்குங்கள். அதற்குள்ள பணத்தை எங்கே கண்டுபிடிப்பது என்பதற்கும் வழியைச் செய்யலாம். அந்தப் பொறுப்பையும் மத்திய சர்க்கார் பொறுப்பாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அவர்களை ஒத்துக்கொள்ள வைக்கவேண்டுமென்று நான் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதற்கு இப்பொழுது தகுந்த சந்தர்ப்பம் இருக்கிறது என்று அவர்களும் குறிப்பிடுகிறார்கள், தன்னுடைய பிரசங்கத்திலே.



20th October 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

வருஷமொன்றுக்கு இதனால் அதிகச் செலவு ஏற்படுவது ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் ஆகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது ஐந்தரை கோடி ரூபாய் ஆகும் என்று நான் நினைக்கிறேன். என்னுடைய அபிப்பிராயத்தில், போகப் போக இந்தச் செலவு அதிகமாகக்கூடிய சந்தர்ப்பம் தான் இருக்கிறதே தவிர, குறையக்கூடிய வாய்ப்பு இல்லை. மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு நிச்சயமாகப் பஞ்சப்படி உயரத்தான் போகிறது. அதையொட்டி நாமும் இந்த ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுடைய பஞ்சப் படியையும் உயர்த்தத்தான் வேண்டும். அப்படி உயர்த்தும்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்குக் கூடுதலான செலவு ஏற்படும். இந்தத் தொகை ஐந்தரை கோடி ரூபாயோடு நிற்காது. இது பத்து பதினொன்று கோடி ரூபாய் ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பஞ்சப் படியை உயர்த்த வேண்டிய நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை நிதிக் கமிஷன் முன்பு நம்முடைய ராஜ்யத்தில் நிதி நிலைமையைப் பற்றி எடுத்துக் கூறுகிறபோது, நாம் என்ன தியாகம் செய்து, இந்த நிதி நிலையைச் சரிக்கட்டியிருக்கிறோம் என்பதை அவர்களுக்கு நாம் உணர்த்தியாகவேண்டுமென்று நான் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு மக்கள் இரண்டு விதத்திலே தியாகம் செய்திருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் கூடுதலான வரியைக் கொடுத்திருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நம்முடைய ராஜ்யத்தில் அதிக வரி விதிக்க வேண்டுமென்று நிர்ண

யிக்கப்பட்டது. 45 கோடி ரூபாய் என்று நான் நினைக்கிறேன். விதித்திருக்கும் வரி பூராவையும் சரியானபடி, பாக்கியில்லாமல் வசூலிப்பார்களானால், அறுபது கோடி ரூபாய் வரையில் அதிக வரி மூலம் மூன்றாவது திட்டக் காலத்தில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். பட்ஜெட் மெமொராண்டம் வரட்டும். நான் சொல்வது சரியாக இருக்கிறதா இல்லையா என்று பின்னால் ஆராய்ச்சி செய்து பார்க்கலாம். நிதி இலாக்காவின் பழக்கம் எப்படி இருக்கிறதென்றால் எவ்வளவு வரி எதிர்பார்க்கப்படும் என்பதைக் குறைவாக மதிப்பிட்டு பின்னர் அதிகமாகக் காட்டுவார்கள். அதேபோல செலவை அதிகமாக மதிப்பிட்டு பின்னர் குறைவாகக் காட்டுவார்கள். இது வழக்கமாக இருக்கிறது என்று நான் எடுத்துக்காட்டியிருக்கிறேன். மூன்றாவது திட்டக் காலத்தில் நமது ராஜ்யத்தில் எவ்வளவு அதிக வரி விதிக்கவேண்டுமென்று திட்டக் கமிஷன் நமக்கு ஒதுக்கினார்களோ அதற்கு மேலாக நாம் வரியை விதித்திருக்கிறோம். வசூலித்தும் இருக்கிறோம். நில வரி உயர்ந்திருக்கிறது; பஞ்சாயத்து வரி உயர்ந்திருக்கிறது. கிராமத்திலே வீட்டு வரி விதிக்கப்படுகிறது. மின்சாரக் கட்டணமும் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படி புதிய வரிகளும் போட்டு ஏற்கனவே இருக்கக்கூடிய வரி விகிதத்தையும் உயர்த்தி நாம் அதிக வரி போட்டிருக்கிறோம். இது தமிழ்நாட்டு மக்கள் செய்திருக்கும் தியாகம்.

அரசாங்க ஊழியர்களும் அதிகாரிகளும் தியாகம் செய்திருக்கிறார்கள். நிர்வாகத்திலுள்ள பலவீனத்தையும், சுறுசுறுப்பாகவும் திறமையாகவும் வேலைசெய்யவில்லை என்று இப்படிப்பட்ட குறைகளையும் நாம் அவ்வப்போது எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஏறத்தாழப் பார்க்கும்போது தமிழ்நாட்டு நிர்வாகம் முதல் தரமான நிர்வாகம் என்று தான் சொல்லவேண்டும். அவர்கள் திட்ட வேலைகளைச் சரியாகவே செய்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தோடும் மற்ற மாநில அரசாங்கத்தோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது திட்ட வேலைகளில் ஏற்பட்ட விரயத்தையும் நஷ்டத்தையும் பார்க்கும்போது இங்கே குறைந்த அளவுக்குத்தான் நஷ்டமும் விரயமும் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நம் மாநிலத்தில் அதிகத் திறமை இருக்கிறது என்பதையும் குறித்து நாம் திருப்திப்பட முடியும். அவர்கள் இந்த வேலையை எந்த முறையில் செய்திருக்கிறார்கள் என்று ஒப்பிட்டுப் பார்த்தாலும் சரி அவர்கள் பெறக்கூடிய சம்பளத்தைவிட மிகக் குறைவாகப் பெற்று நம்முடைய ஊழியர்கள் இந்த வேலையைச் செய்து வந்திருக்கிறார்கள். ஊழியர்களிடையே திறமை இல்லாமல் அமைச்சர்களால் மட்டும் நிர்வாகத் திறமை வந்துவிட்டது என்று சொல்ல முடியாது. நம்முடைய ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நிர்வாகத் திறமை இல்லை என்று முதல் அமைச்சர் சொல்வார் என்று நான் நினைக்கவில்லை. அவர்களுக்கும் தெரியும் நிர்வாகத்தின் அவசியம். ஏனென்றால் முதல் அமைச்சர் அவர்கள் நிர்வாகத்தை அதிகமாக நம்பக்கூடியவர்கள். நிர்வாகத்தின் திறமையை அவர்களும்



ஒப்புக்கொள்வார்கள். நம் மாநிலத்திலுள்ள சர்க்கார் ஊழியர்களும் அதிகாரிகளும் இவ்வளவு குறைவாகச் சம்பளம் பெற்று இந்தக் காரியத்தை திறமையாகச் செய்திருக்கிறார்கள் என்பது நிர்வாகத்தினர் செய்த தியாகம். நாட்டு மக்களும் அதிக வரி கொடுப்பதன் மூலம் தியாகம் செய்திருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உருப்படியான சாதனை ஏற்பட்டிருக்கிறதென்று சொன்னால் அதற்கு இந்த இரு சாராரும் செய்திருக்கும் தியாகம் தான். இதை நான்காவது நிதிக் கமிஷன் முன்பு வலியுறுத்தவேண்டும். திட்டக் கமிஷன் முன்பும் வலியுறுத்த வேண்டும். டில்லிக்கு செல்கிறபோது முதல் அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் மனத்திலே வைப்பார்கள் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன்.

நான்காவது திட்டக் காலத்தில் அதிக வரி என்றோ புதிய வரி என்றோ இனி போட முடியாது. அடுத்த நிதி ஆண்டிலே கூட புதிய வரி என்று போடுவது ரொம்பக் கடினம், அப்படி ஏதாவது போடுவார்களானால் அரசாங்கம் ஜனங்களுடைய ஆத்திரத்திற்கு ஆளாக வேண்டியிருக்கும் என்று நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வரி விதிக்கக்கூடிய எல்லையை நாம் தாண்டிவிட்டோம். ராஜ்ய சர்க்காருக்கு என்ன என்ன வாய்ப்பு இருக்கிறதோ அந்த வாய்ப்புக்கள் பூராவையும் பயன்படுத்தியாய்விட்டது. நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் அதிக வரி போடவும் இனி இடமில்லை. ஏற்கெனவே போட்டிருக்கும் வரியை ஏய்க்கிறார்களே (இவேஷன்) அதையும் வசூலிக்க வேண்டும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதன் மூலம் எவ்வளவு அதிகமாக வருவாயை பெருக்க வேண்டுமோ அதைப் பெருக்க வேண்டும். மேலும், வரி இல்லாத வருமானங்களை (நான்-டாக்ஸ் ரெவினியூ) விருத்தி செய்வதற்கும் சிக்கனமாகச் செலவிடுவதற்கும் முயற்சி செய்து, நம்முடைய நிதி நிலைமையைச் சரிக்கட்டுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

நாம் செய்திருக்கும் சாதனைகளை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் எடுத்துக்காட்ட வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் ராஜ்யங்கள் பூராவும் 600 கோடி ரூபாய் அளவுக்கு அதிக வரி விதிக்கவேண்டும் என்று திட்டமிட்டதில் 200 கோடி ரூபாய் வசூலிக்கப்படவில்லை என்றால், அந்த அளவுக்கு மற்ற ராஜ்ய சர்க்கார்கள் அதிக வரி விதிப்பதிலே தயக்கம் காட்டியிருக்கிறார்கள். அதிக வரி போடவில்லை என்று அர்த்தமாகிறது. அந்த அளவுக்கு மற்ற மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்க நிதியைச் சார்ந்திருக்கிறார்கள். உத்திரப் பிரதேசம், பஞ்சாப் போன்ற மாநிலங்களைப் பார்க்கும்போது, அவர்கள் சர்க்கார் ஊழியர்களுக்கு மத்திய அரசாங்க ஊழியர்களின் சம்பளம், பஞ்சப்படி அவ்வளவு [illegible] கொடுத்து அதிகமாகச் செலவு செய்கிறார்கள். அந்த ராஜ்யங்கள் [illegible] வரியும் வசூல் செய்யவில்லை. மத்திய அரசாங்கத்திட [illegible] உதவிப் பெறப் பல தந்திரங்களை மற்ற மாநில அரசாங்கம்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [20th October 1964

கள் கையாளுகின்றன. ஆகவே, நம்முடைய மாநிலத்தில் நாம் தியாகம் செய்திருக்கும் சமயத்தில் நமக்கு நிதி வசதியை மத்திய அரசாங்கம் ஒதுக்க வேண்டும் என்பதை நான்காவது நிதிக் கமிஷன் மூலமாகவும் நாஷனல் டெவலப்மென்ட் கவுன்சில் மூலமாகவும் வற்புறுத்தி மத்திய அரசாங்கத்தினுடைய உதவியை அதிகமாகப் பெற அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய ராஜ்யத்திற்கு விசேஷமான பிரச்னை வந்திருக்கிறது. பர்மா அகதிப் பிரச்னை வந்திருக்கிறது. இலங்கையிலிருந்து வரக்கூடிய பிரச்னை வர இருக்கிறது. புதிய பிரச்னை நமக்கு வரக்கூடிய காரணத்தால் மத்திய அரசாங்கத்திடமிருந்து நாம் பெறவேண்டிய உதவியை அதிகமாகப் பெறுவதற்குள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வரி விதிப்பு ஏமாற்றத்தைத் தடுக்க முயற்சி எடுப்பது முக்கியமான பிரச்னையாகும். வரியின் மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தில் முக்கியமான ஒரு இனம் விற்பனை வரியாகும். அதன் மூலம் கிட்டத்தட்ட முப்பது கோடி ரூபாய் வருமானம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால், வியாபாரிகள் பூராவும் சரியானபடி கணக்கு கொடுத்துவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. வியாபாரிகள் உண்மையான கணக்குக் கொடுக்கவேண்டும். அது இல்லையென்றாலும் நியாயமான அளவுக்கு ஏமாற்றத்தைக் கையாண்டாலும் போதும். ஏமாற்றமே செய்யாத வள்ளுவராக இருக்கவேண்டுமென்று சொல்லவில்லை. ஏதோ ஓரளவுக்கு நியாயமாக ஏமாற்றுவது என்று இருந்தாலுங் கூடப் போதும். (திரு. சா. கணேசன்: அப்படி ஒரு 'மெதேட்' இருக்கிறதா?) நியாயமான ஏமாற்றம் இருந்தால்கூட இப்பொழுதைய வருமானத்தை விட இந்த இனத்தில் அதிகமாக இருக்க வேண்டும். அதிகமாக வரி ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறது என்பது சமீபத்தில் நடந்த சில நிகழ்ச்சிகளிலிருந்து தெரிகிறது. வரி ஏமாற்றுகின்றவர்களைக் கண்டுபிடித்து வரிப்பணத்தை வசூல் செய்வதற்கு சென்ற நான்கைந்து மாதங்களில் கடுமையாகச் சோதனை போட்டதை நாம் அறிவோம். வீடுகளுக்குச் சென்று ரெக்கார்டுகளை எல்லாம் கண்டுபிடித்து வந்தார்கள். இப்போது 60 நாளைக்கு சமரசம் செய்து கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. இந்த 60 நாளைக்குள் உண்மையான கணக்குகளைக் கொடுத்துவிட்டால் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காது என்று சர்க்கார் சமிக்ஞை அளித்திருக்கிறார்கள். இது உண்மையானதாகவும் இருக்கலாம் அல்லது கண்டுபிடித்துத் தூக்கி வந்துள்ள ரெக்கார்டுகளை எல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்து வரி விதிப்பதற்கு இவர்களுக்குக் கொஞ்சம் அவகாசம் ஆகலாம். அதற்காகவும் 2 மாத காலத்தை பயன்படுத்திக்கொண்டு அப்புறம் சோதனை போடும் காரியங்களில் ஈடுபடலாம். எப்படி இருந்தாலும் விற்பனை வரியை ஏய்ப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை



20th October 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

எடுப்பதற்குத் தயங்கக்கூடாது. அதைவிடப் பெரிய சமூகத் துரோகம் ஒன்றும் கிடையாது. அதுவும் பொது மக்களிடத்தில் இருந்து விற்பனை வரியை வசூல் செய்து விடுகிறார்கள். அதைச் சர்க்காருக்கு கட்டாமல் அதை ஒளிக்கிறார்கள் என்றால் அவர்களிடத்தில் கொஞ்சம் கூடத் தாட்சண்யம், இரக்கம் காட்டக்கூடாது. விற்பனை வரி ஏய்ப்பு முதல் நம்பர் சமூகத் துரோகமாகும். வரியை ஒளிப்பதோடு இல்லை. கணக்குப் பார்க்க போகிற அதிகாரிகளை மிரட்டுவது, ஆளை வைத்து அடிக்கச் சொல்வது என்றால் அவர்களை அரசாங்கம் சும்மாவிடுவதில் பயனில்லை. கையாலாகாத எங்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் தயங்குவது இல்லை. சோறு வேண்டும் என்று கோரி வருகிறவரை தற்காப்புக்காக என்று சுட்டுக் கொல்வதற்குத் தயங்கவில்லை. அவர்களைக் கண்டு ஏன் பயப்படவேண்டும்? விற்பனை வரியை ஏய்ப்பவர்கள் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயங்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. எதிர்க்கட்சியில் இருக்கக் கூடிய தி.மு.க. நண்பர்கள் வேண்டுமென்றால் எங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் ஏன் விட்டீர்கள் என்று சொல்லலாம். என்னுடைய வருத்தம் எல்லாம் நாங்கள் இன்ன காரியம் செய்யப் போகிறோம் என்று முன்கூட்டியே அறிவித்தும் அதன்படி நடப்பதற்கு ஏன் அனுமதிக்கவில்லை என்பதுதான். போட்ட திட்டப்படி நடக்க அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்தீர்கள். ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தை எங்களுக்குக் கொடுக்காமல் விட்டுவிட்டீர்களே என்பது தான்எங்களுக்கு வருத்தத்தை அளிப்பது.

இங்கே நான் சொல்ல வந்தது விற்பனை வரி ஏமாற்றுவது என்பது கட்சிப் பிரச்னை அல்ல. அவ்வாறு செய்கின்றவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் தாட்சண்யம் காட்டக்கூடாது, அவர்களால் ஏற்படக் கூடிய அபாயத்தைச் சமாளிக்க எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே துணை மதிப்பீட்டில் கோரப்பட்டு இருக்கிற தொகையைக் கொடுக்க எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அதை ஆதரிக்கிறேன். இன்னும் அதிக நிதி செலவானாலும் கோரிப் பெறலாம். தவிர உணவு பிரச்சினைகளை சமாளிக்க எல்லா விதமான நடவடிக்கைகளையும் நாம் எடுத்துக்கொண்டாக வேண்டும். விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. அரிசி கிடைக்காத காரணத்தால் மக்கள் படுகிற அல்லல் அதிகரித்துக் கொண்டே போகிறது. இவர்களுடைய கவலையைப் போக்க துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொண்டாகவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன். நன்றி.

திரு. சா. கணேசன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது நம் முன்னே சமர்ப்பிக்கப் பட்டிருக்கிற உபரி பட்ஜெட்டில் என்னுடைய கருத்துக்களையும் கூற சந்தர்ப்பம் அளித்ததற்

[திரு. சா. கணேசன்] [20th October 1964

காக முதலிலே என்னுடைய நன்றியை புலப்படுத்திக்கொண்டு விஷயத்திற்கு வருகிறேன். சிறப்பாக இப்போது நம் எல்லோரையும் கவர்ந்திருக்கிற ஒன்று உணவு நிலை. உணவுத் துறைக்கு இவ்வளவு சிரமங்கள் அல்லது அவலங்கள் ஏன் ஏற்பட்டன, ஏற்படுகின்றன என்பதை விருப்பு, வெறுப்பு இல்லாமல் நாம் சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். உணவு உற்பத்தி செய்கின்றவர்கள் முழுக்க முழுக்க ஊக்கமும், ஆக்கமும், ஆர்வமும் உடையவர்களாக செய்வதிலே நமது அரசாங்கம் தவறிவிட்டது என்றுதான் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எத்தனை சிரமங்களும், இடுக்கண்களும், கஷ்டங்களும் ஏற்பட முடியுமோ அத்தனையும் ஏற்படும்படியாக அந்தந்தத் துறையினர் செய்து கொண்டிருக்கிறார்கள். உரம் வேண்டுமென்றால்—நாள் கணக்கில்-மணிக் கணக்கில் அல்ல—சென்று காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. கட்டுப்பாடு என்ற ஒன்றை எல்லாத் துறையிலும் பிரயோகம் செய்வதன் மூலமாக எல்லாக் காரியங்களும் பெருமளவு பாதிக்கப் படுகின்றன என்பதுதான் இன்றுள்ள யதார்த்த நிலை. கட்டுப்பாட்டை வைத்து விலையை நிர்ணயிக்கிறார்களே தவிர எந்தப் பொருளை எடுத்தாலும் நிர்ணயித்த விலைக்குக் கிடைப்பது குதிரை கொம்பாகிவிட்டது. இது ஒரு புறம் இருக்க, நீர்ப்பாசன வசதிகளை எடுத்துக் கொண்டால் அதில் எத்தனையோ விதமான இடையூறுகள். அவர்களாகவே கிணறு வெட்டித் தண்ணீர் இறைத்துக் கொள்வதென்றாலும் அதற்கும் பலவிதமான சட்டக் குறுக்கீடுகள். இந்தப் பக்கத்தில் கால் ஓடுகிறது அங்கே கிணறு வெட்டினால் இந்தத் தண்ணீர் அங்கே இறங்கிவிடும் என்பதற்காக இப்படி. கால்வாயிலே தண்ணீர் ஓடும்போது எவனும் கிணற்றிலே தண்ணீர் இறைக்க மாட்டான். கால்வாயில் தண்ணீர் இல்லாதபோது கிணற்றிலே மின்சார மோட்டார் வைத்தோ கமலை அடித்தோ தண்ணீர் இறைத்துக் கொள்வதற்கு சர்க்காருக்கு ஏன் ஆட்சேபணை என்பதுதான் புரியவில்லை. உணவுப் பிரச்னை தீர வேண்டுமென்றால் எந்த எந்த இடங்களில் எல்லாம் பாசன வசதியை பெருக்கிக் கொடுக்க முடியுமோ அதைச் செய்ய வேண்டும். எந்த இடத்தில் வேண்டுமானாலும் கிணறு தோண்டிக் கொள்வதற்கு தடையிருக்கக்கூடாது. அப்படியின்றி இன்று வேண்டாத, தேவையில்லாத சில நிர்ப்பந்தங்கள் விவசாயிகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் பார்த்தால் அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கின்ற முறையில் இல்லாமல் அவர்களுக்குத் தேவைப்படுகிற இதர பொருள்களின் விலையெல்லாம் ஏறிக் கொண்டே போகிறது. சகோதரர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் கூட அதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். வரிச் சுமையும் தாங்க முடியாத அளவு ஏறிவிட்டது. விலைவாசியும் ஏறிக்கொண்டு போகிறது என்று சொன்னால் ஏன் ஏறுகிறது என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னும் தகிடுதத்தங்கள் செய்கின்றவர்களைப் பற்றியும் சொன்னார்கள். 100-க்கு 100 நான் அதை ஆமோதிக்கிறேன். வரி தகிடு தத்தங்கள் பண்ணுவது [illegible] என்பது



20th October 1964] [திரு. சா. கணேசன்]

என்னுடைய தாழ்மையான கருத்து. அதே காலத்தில் ஏன் அவர்கள் தகிடு தத்தங்கள் செய்கிறார்கள் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப் பட்டிருக்கிறோம். வரிப்பளு ஏற ஏற வரிக்குத் தப்பித்துக்கொள்ளுகிற மனப்பான்மையும் மக்களிடையே வளர்கிறது என்பதை நாம் மறக்க முடியாது. இன்றையத்தினம் பல்வேறு துறைகளையெடுத்து ஆராய்ந்தால் விலைவாசி எவ்வாறு பன்மடங்கு உயர்ந்திருக்கிறது என்பதையும் வரி ஏமாற்று வித்தைகளும் எவ்வளவு அதிகரித்துள்ளது என்பதையும் உணர முடியும்.

ஆகவே, வரி எவ்வளவு விதிப்பது என்பது பொருள் அல்ல; எப்படி விதிக்க வேண்டுமென்பதுதான் கவனிக்க வேண்டியது. வரி விதிப்பது மட்டுமல்ல, முழுவதையும் வசூல் செய்கிறோமா, செய்ய முடிகிறதா என்பதையும் நன்றாகச் சிந்திக்க வேண்டும். போடப்படுகிற வரி முழுவதும் வசூல் செய்யப்படுகிறது என்றால்தான் ஆட்சியினுடைய போக்கு, முறை, செவ்வியது என்ற நிலை ஏற்படும், இதை நாம் மனத்திலே கொள்ள வேண்டும்.

இதற்கும் அப்பாலே இன்னும் சென்று பார்த்தால் வளம் பெற்ற நாடுகளில் எல்லாம் காடுகள் இருப்பதைப் பார்க்கிறோம். காடுகள் என்றால் இங்கு இருக்கிற மாதிரி காடுகள் அல்ல. இங்கு பொட்டல் நிலங்களையெல்லாம் காடுகள் என்று போடுகிறோம். அதிகாரிகள் அவற்றை முள் வேலி போட்டு அடைத்து விடுகிறார்கள். மாடு மேய்க்க மேய்ச்சல் பூமி தமிழகத்தில் முன்பு இருந்ததில் நூற்றில் ஒரு பங்குகூட இன்று இல்லை. விவசாயிக்கு மேய்ச்சல் தரை இல்லாவிட்டால் அவனுடைய தொழிலை அவன் எங்ஙனம் செவ்வையாக செய்ய முடியும் வெஸ்ட். ஜெர்மனியைப் பற்றி சமீபத்தில் நான் ஒரு புத்தகம் படித்தேன். காடுகளைப் பற்றியே கூறக்கூடிய ஒரு புத்தகத்தைப் பிரமாதமாக வெளியிட்டிருக்கிறார்கள். அங்கு அவர்கள் காடுகளை முற்றிலும் அணுக விடாததாக ஆக்கி விடவில்லை. எல்லாக் காடுகளிலும் மாடுகள், ஆடுகள் மேய்வதற்கு அங்கீகரித்திருப்பதாக அவர்கள் எழுதியிருக்கிறார்கள். இந்த நிலையை மனத்திலே கொள்ளவேண்டும். விவசாயிகளுக்கு நிலம், உரம் எவ்வளவு இன்றியமையாததோ அத்தனை அளவு இன்றியமையாதவை கால்நடைகள். விவசாய மாடுகளை உழுவதற்காக மட்டும் பயன்படுத்தவில்லை; ஆடுகளை விவசாயி வளர்க்கிறான் என்றால் அது சாப்பிடுவதற்காக மட்டுமில்லை; உரத்திற்காகவே வளர்க்கிறான். புலவகை உரங்களில் பன்றியின் உரம் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. அதற்கு அடுத்து ஆட்டின் உரம் சிறந்தது. அதற்கு அடுத்து மாட்டின் உரம் சிறந்தது, அதற்குப் பிறகு தழை உரங்கள். இவையெல்லாம் எங்கு கிட்டவில்லையோ அங்குதான் ரசாயன உரங்களின் இன்றியமையாததன்மைக்கு இடம் ஏற்படுகிறது. இவற்றையெல்லாம் மனத்திலே கொள்ளவேண்டும். மாடுகள் ஆடுகள் மேய்வதற்கு வாய்ப்புகளைத் தவிர மேய்ச்சல் பூமிகளையெல்லாம் காடுகள் என்று சொல்லி முள் வேலி போட்டு அடைத்து விடுவோ

மாறுல் அங்கே ஆடுமாடுகள் நுழைந்து மேய்ந்துவிட்டால் விவசாயிகளுக்கு 80 ரூபாய், 100 ரூபாய் என்று அபராதம் போடுவோமானுல், விவசாயிகள் இனித் தங்களுடைய வீட்டுக் கூரைகளின் மேல் புல்லைப் பயிரிட்டுத்தான் கால்நடைகளை மேயவிட வேண்டும். கால்நடைகளுக்கு மேய்ச்சல் பூமி இன்றியமையாதது. ஒன்றும் விளையாத இடங்களில் எல்லாம் மழை பெய்தால் புல் பூண்டு சில தழைகள் ஓரடி, அரை அடி அளவுக்கு முளைக்கின்றன. எங்கள் இராமநாதபுரம் ஜில்லா முழுவதுமே இந்த மாதிரிதான் இருக்கின்றன என்று செல்லலாம். அவற்றை ரிசர்வ் ஃபாரஸ்ட் என்று போட்டு விடுகிறார்கள். பல இடங்களில் நெடுநாட்களாக ஏதோ ஹரிஜனங்கள் கேப்பை, கம்பு முதலியவற்றைப் போட்டு வயிற்றைக் கழுவிக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடங்களில் இருப்பவர்கள் எல்லாம் கூரைக் குடிசையில் இருப்பவர்கள் டாக்குமெண்டுகளை ட்ரிசர்வ் பண்ணிவைக்க வழி இருக்குமா? இருப்பினும் பல பேர் வைத்திருக்கிறார்கள் அந்தப் பகுதிகளை எல்லாம் இப்போது வேலியடைத்து ரிசர்வ் ஃபாரஸ்ட் என்று போட்டு விட்டார்கள். இந்த மாதிரி நிலையை உண்டாக்கிவிட்டு விலைவாசி இறங்கவேண்டும், விவசாயம் வளரவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பதிலே என்ன அர்த்தம் இருக்கிறது. மந்திரத்திலே மாங்காய் காய்க்காது. அல்லாவுதீன் விளக்கும் நம் கையில் கிடையாது. இந்த நிலையில் எது சாத்தியம், எப்படிச் செய்வது நன்மை பயக்கும் என்பதைப் பற்றி யெல்லாம் சிந்தித்துச் செயலாற்ற வேண்டுமென்று நான் விண்ணப்பித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மற்றொரு கணக்கில் பார்த்தால் பிற பொருள்கள் எல்லாம் விஷம் போல ஏறிக் கொண்டிருக்கும்போது விவசாயப் பண்டங்கள் மட்டும் அப்படியே இருக்க வேண்டுமென்று சொன்னால் விவசாயி எப்படி வாழ முடியும்? விவசாயினுடைய வாழ்க்கைத் தேவைக்கு தானியம் மட்டும் போதாது; உடை வேண்டும், உழவுக்கு வேண்டிய பிற சதானங்கள் வேண்டும்; வீடு வேண்டும்; தட்டுமுட்டுச் சாமான்கள் வேண்டும். கிராப் வெட்டிக் கொள்ளவேண்டும், இப்படி பல தேவைகள் அவர்களுக்கு இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் செலவு ஒன்றுக்குப் பத்தாக ஏறியிருக்கும்போது நெல், அரிசி, சோளம் போன்ற உணவு தானியப் பொருள்கள் மட்டும் முன்னிருந்த விலையிலேயே விற்கப்பட வேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயமும் அல்ல; தர்மமும் அல்ல; அவர்களுக்கு விவசாயத்திலே அக்கறை இருக்க வேண்டும் என்று சொன்னால் அதிலே அவர்களுக்கு லாபம் கிடைக்கிறது என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும். இன்றைக்கு உள்ள நிலையைப் பார்த்தால் வேறு எந்தத் தொழிலும் தனக்குத் தகுதியில்லை என்று நம்புகிறவர்கள் மட்டுமே விவசாயத்தில் மிஞ்சியிருக்கிறார்கள். முனிசிபாலிடியில் ஸ்காவஞ்சர் வேலை கிடைத்தால் அதைச் செய்வதற்குக் கூடத் தயாராக ஒவ்வொரு விவசாயியும் இருக்கிறான் என்பதை மறந்துவிடப்படாது. பிரத்தியட்ச நிலையை உணர்ந்து பார்த்த பிறகு இதை நான் சொல்கிறேன். இந்த மாதிரி நிலையிலே நாம் என்ன





செய்ய வேண்டும்? வெறுமனே கண்டித்துக் குறை கூற வேண்டுமென்பது என்னுடைய கொள்கை அல்ல. என்னுடைய யோசனைகளைச் சபை முன் சமர்ப்பிக்கிறேன். அதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும்; சிந்தித்து யார் சொல்கிறார்கள் என்பதை மறந்து என்ன சொல்கிறார்கள் என்பதை ஏற்று ஆய்ந்து தேர்ந்து தெளிந்து பொருத்தமான முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று மட்டும் நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயத் துறையிலே முதலிலே விவசாயிக்கு உற்சாகம் அளிக்க வேண்டும். நல்ல நில வளமும் நீர் வளமும் பிற வாய்ப்புக்களும் இருக்கிற பிராந்தியங்களிலே பிற பெருந் தொழில்களுக்கு ஆக்கம் கொடுக்கவே கூடாது. இப்படிச் சொன்னால் சிலருக்குக் கோபம் வரும். அதற்காக எது சரி என்பதை மறைப்பது நியாயமல்ல. எவை விவசாயத்திற்குத் தகுதி இல்லாத பகுதிகளோ அங்கெல்லாம் தொழிற்துறைகளுக்கு ஆக்கம் கொடுக்க வேண்டும். சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்றாற்போல் சில பகுதிகள் தொழில்களுக்கு ஏற்றவை. சில விவசாயத்திற்கு ஏற்றவை என்பதையெல்லாம் மனத்திலே கொள்ளவேண்டும். மலைப் பிராந்தியம் தரைப் பிராந்தியம் நல்ல பூ சத்து நிரம்பிய பூமிகள் என்றெல்லாம் கணக்கெடுத்து அதற்கேற்றாற் போல் பொருத்தமான இடங்களில் பொருத்தமான விவசாயத்தைச் செய்யவேண்டும். அந்த மாதிரி வளமான பூமிகளுக்கு அருகில் ஆலை இருக்குமானால் விவசாயத் தொழில் சிறக்காது. ஆலையில் வேலை செய்கிறவனுக்கு வருஷம் 346 நாட்கள் வேலைக்கு உத்தரவாதம் இருக்கிறது, விடுமுறை நாட்கள் போக. ஒவ்வொரு நாளும் அங்கே வேலை எட்டு மணி நேரம் தான் என்ற உத்தரவாதமும் இருக்கிறது. ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் 2½ ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. ஆக ஆண்டு வருமானத்தைக் கணக்கிட்டால் அவனுக்கு நிச்சயமாக சுமார் 750 ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கிறது என்ற நிலை இருக்கிறது. அதற்கும் மேலே இரண்டு மாதங்கள் மூன்று மாதங்கள் ஐந்து மாதங்கள் வருமானத் தொகையளவு போனஸ் பெற அவன் உரியவனாகவும் இருக்கிறான். ஆனால் அடுத்த பக்கத்தில் இருக்கும் விவசாயிக்கு இந்த மாதிரி உத்தரவாதங்கள் எதுவும் இல்லை. இந்த நிலைமைகளை மனதிலே கொண்டு அதற்கேற்ப சில நெறி முறைகளைக் கடைப்பிடித்து காரியங்களைச் செய்யவேண்டும். விவசாயிகளுக்குப் போடப்பட்டிருக்கிற வரியிலிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் கிட்டத்தட்ட சப்ளிமெண்டரி பட்ஜெட்டில் கோரப்பட்டிருக்கிற அளவுக்குத்தான் இருக்கும். ஆகவே அவனுக்குப் போடப்பட்டிருக்கிற வரியைப் பெரும் அளவு குறைத்து விட்டு பெயருக்கே அற்ப வரி போடவேண்டும். இப்படிச் செய்வதால் சர்க்காருக்கு வருமானம் ஒன்றும் குறையாது. அதற்காக ஆகும் செலவும் பொறுப்பும் கவலையும் வீண் உழைப்பும் மிகவும் குறையும். மொத்தமாகக் கணித்துப் பார்த்தால் இந்தத் துறையிலே பெரிய அளவுக்குச் சர்க்காருக்கு நஷ்டம் ஒன்றும் வரப் போவதில்லை.

[திரு. சா. கணேசன்] [20th October 1964

இதே போன்றுதான் கல்வித் துறையும். நான் முன்பு சொன்ன ஒரு கருத்தை கனம் முதலமைச்சர் அவர்கள் அப்படியே ஒப்புக் கொண்டார்கள். ஆறு வயது ஏழு வயதுக் குழந்தைகள் 20 நோட் புக்குகளுக்குக் குறையாமல் வைத்திருந்தாலொழிய பள்ளிக்கூடத் திற்குள் நுழைய முடியாது. ஒரு ஆண்டு படிப்பு முடிந்த பிறகு பார்த்தால் ஒவ்வொரு நோட்டிலும் ஆறு எட்டுப் பக்கங்கள் தவிர மற்றவை எல்லாம் காலியாகவே இருக்கும். பாடப் புத்தகங் களில் உள்ள குறைபாட்டைத் திருத்தவேண்டும். கைத்தறி துறைக்கு ஆக்கம் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது இயந்திர உதவிகளைப் பெற்று துணி நெய்வதைக் கைத்தறி என்று சொல்ல முடியாது. அது யந்திரம் இல்லாத கைத்தறி என்றாக வேண்டும். இன்று பாலில் முழுவதும் தண்ணீரைக் கலந்து விடுகிறார்கள். தண்ணீர் கலக்காத பால் வேண்டுமென்று சொல்வதைப் போல் இயந்திர சாதனம் அற்ற கைத்தறி வேண்டும். கைத்தறி என்றாலே யந்திர உதவியின்றிக் கையால் வேலை செய்யும் தறி என்பதுதானே பொருள்? இந்த நிலைமைகளை எல்லாம் மனத்தில் கொள்ளவேண்டும். கைத்தறியைப் பொறுத்த வரையில் பல சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. இதற்கென்று தனியாக இலாகா ஒன்றமைத்து அதன் மூலமாக நடத்தினால் செம்மையாக நடக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். பால்பண்ணையை எடுத்துக்கொண்டால். இப்போது திடீரென்று விலையைக்கூட்டப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்கு மேல் ஒவ்வொரு பாட்டிலும் பாலின் மீதும் அதிகமாக சப்ளை சார்ஜ் விதிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். எஸ்டிமேட் கமிட்டி அங்கு சென்று பார்த்து விலையைக் கூட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லியிருக்கிறது. லட்சக்கணக்கான அளவில் இதில லாபம் கிடைப்பதற்கு வழியிருக்கிறது. இதில் மாடுகள் யார் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் பெரிய அளவில் வருமானம் உடையவர்கள், சுப்பர் டாக்ஸ் கட்டுகிறவர்கள். இவர்கள் மாடுகள் வைத்துக்கொள்வதற்கும் பால் பண்ணைக்கும் ஒப்பந்தம் இருக்கிறது. ஆனால் இவர்கள் எல்லாம் ஒப்பந்தப்படி நடப்பதில்லை. எப்படியென்றால் அங்கு கொடுக்க வேண்டிய விலை குறைவு என்று நினைத்து வெளியில் கொண்டு போய் விற்று விடுகிறார்கள். இதனால் ஒழுங்கான முறையில் பால் கிடைப்பதில்லை. இதை நெறிப்படுத்த வேண்டும்.

இம்மாதிரிப்பட்ட பிரச்னைகளில் எல்லாம் அரசாங்கம் நன்கு கவனம் செலுத்தி நல்ல முறையில் மக்களுக்கு நன்மை ஏற்படுகிற வகையில் ஆட்சி நடத்தினால் தான் மக்களுக்காக நடக்கிற அரசாங்கம் என்ற பெயர் உண்மையாகும் என்பதைக் கூறி நேரமின்மை காரணமாக பிற விஷயங்களுக்கெல்லாம் போகாமல் இத்துடன் அமைகிறேன். வணக்கம்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு நடைபெறுகிற 1964-65-ம் ஆண்டு இரண்டாவது [illegible] கோரிக்கை [illegible] மீது விவாத[illegible]



20th October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் பல கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த விவாதத்தில் பல் வேறு பிரச்னைகளைப்பற்றி வலியுறுத்தியிருக்கிறார்கள். இவ்விதம் வலியுறுத்திய கருத்துக்களை எல்லாம் மீண்டும் வற்புறுத்துவதின் மூலம் இந்த விவாதத்தின் நேரத்தில் மிக முக்கியமான இரண்டு பிரச்னைகளைப்பற்றி மட்டும் எங்கள் கழகத்தின் உறுப்பினர்கள் கூறியதை ஆமோதிக்கின்ற வகையில் சில வார்த்தைகளை கூறி என் உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக இங்கு பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் சர்க்கார் ஊழியர்களுக்கு கொடுத்த அகவிலைப்படி உயர்வைப் பற்றியும். அதற்காக அரசாங்கத்தை பாராட்டியும் பேசினார்கள். அதே நேரத்தில் போதுமான அளவுக்கு அவர்களுடைய குறைகளை போக்க முடியவில்லையே என்று வருத்தம் நிறைந்த தங்கள் கருத்தையும் தெரிவித்தார்கள். இவைகளை எல்லாம் நான் தெரிவிக்காமல் சில விஷயங்களை மட்டும் நான் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். சென்ற மே மாதத்தில் சர்க்கார் ஊழியர்களுக்கு அகவிலைப்படியை அதிகப்படுத்தினார்கள். இப்போது அக்டோபர் மாதத்திலும் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்விதம் இருந்தும் அவர்களுக்கு குறைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த அகவிலைப்படி உயர்வினால் மட்டும் அவர்கள் திருப்தி அடைந்துவிட முடியாது. கனம் உறுப்பினர் திரு. கரிவேங்கடம் அவர்களும் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும். இதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு அவர்களுக்கு அகவிலைப்படி அதிகப்படுத்தியிருந்தாலும். வீட்டு வாடகைப்படி முதலியவைகளை சென்னை போன்ற நகரங்களில் உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு இன்னும் அரசாங்கம் பரிகாரம் தேடியதாக தெரியவில்லை. இந்த மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு வீட்டுவாடகைப்படி 10 ரூபாய் என்றால் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு 20 ரூபாய் வீட்டு வாடகைப்படி கிடைக்கிறது. அவர்களுக்கு 18 ரூபாய் கிடைக்கிறது என்றால் இங்குள்ளவர்களுக்கு 9 ரூபாய் கிடைக்கிறது. இவர்கள் வசிக்கின்ற வீட்டின் சொந்தக்காரருக்கு இன்னார் மாநில சர்க்கார் ஊழியர்கள், இன்னார் மத்திய சர்க்கார் ஊழியர்கள் என்று பார்த்து கருணை காட்டுவதில்லை. இந்த குறையை தீர்ப்பதற்கு சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. இதற்காகத்தான் சிட்டி காம்பன்சேட்டரி அலவன்ஸ் (நகர ஈட்டுப்படி) போன்றவைகளை தரவேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். கல்கத்தா, பம்பாய், டில்லி போன்ற நகரங்களை விட நமது நகர வாழ்க்கைச் செலவு புள்ளி அதிகம். எனவே இம்மாதிரி நகர ஈட்டு அலவன்ஸ் கொடுப்பதற்கு நமது மாநில சர்க்கார் முன் வரவேண்டும். இதற்காக நமது சர்க்கார் ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கலாமா என்பதற்காக ரெஃபரண்டம் எடுக்க வேண்டும் என்று ஜூலை மாதத்தில் தீர்மானித்தார்கள். சர்க்கார் ஊழியர்கள் தான் இன்றைக்கு [illegible] திறமையாக நிர்வாகத்தோடு நடத்திச் செல்வதற்கு

[திரு. கே. ஏ. மதியழகன்] [20th October 1964

உதவி செய்து வருகிறார்கள் என்பதை நான் முதலமைச்சர் அவர்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டு வருகிறேன். மூன்று நான்கு வருடங்களுக்கு முன்னால் மத்திய சர்க்கார் ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகள் நிறவேற்றித்தரவேண்டும் என்ற நோக்கத்தோடு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது, அந்த வேலை நிறுத்தம் சட்ட விரோதமானது என்று சர்க்கார் அறிக்கைவிட்டார்கள். அப்போது அவர்கள் கேட்டது, விலைவாசிகள் எல்லாம் அதிகமாக இருக்கின்றன. ஆகவே எங்களுக்கு அகவிலைப்படியை அதிகரிக்க வேண்டும் என்று முறையிட்டார்கள். அப்போது அந்த நோக்கில் ஒன்றும் கொடுக்காமல் பின்னால் தான் கொடுத்தார்கள். அப்போது அவர்கள் கேட்டது என்ன?

Either hold the price line or increase the dearness allowance. இதே கோரிக்கையைத்தான் இப்போதும் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது வருமானம் எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் கூறியமாதிரி ஆள் நடக்கும் வேகத்தில் போனால் விலைவாசி உயர்வு சைகில் வேகத்தில் போய்க்கொண்டிருக்கிறது. இதை நாம் பரிசீலனை செய்தாகவேண்டும். எனக்கு முன்பு பேசியவர்கள் குறிப்பிட்டதுபோல், தாஸ் கமிஷன் அறிக்கையின்படி இவர்களது குறைகளை தீர்த்து வைக்க அரசாங்கம் முன் வரவேண்டும். இனிமேல் இருக்கின்ற குறைகளை எல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்கின்ற முறையில் ஒரு சம்பள கமிஷனை நியமித்து இன்றைக்கு இருக்கின்ற விலைவாசி நிலைமைக்கு ஏற்ப சம்பளத்தை நிர்ணயிப்பதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறேன். அவ்விதம் முதலமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு ரூபாய்க்கு இருக்கிற மதிப்பை எடுத்துக்கொண்டால் ஒரு ரூபாய்க்கு 17 நயா பைசா தான் மதிப்பு இருக்கிறது. அதாவது 83 சதவிகிதம் மதிப்பு போய்விட்டது. இந்த நிலையில் சர்க்கார் ஊழியர்களுடைய நிலைமை என்ன என்பதையும் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். அதோடு கிராம அதிகாரிகள், மணியக்காரர்கள் இவர்களுக்கெல்லாம் முன்னால் இருந்த சம்பளத்தைவிட இப்போது உயர்த்தப்பட்டிருக்கிறது. அதோடு அவர்களுக்கு இருக்கின்ற வேறு பல கஷ்டங்களையும் அரசாங்கம் தீர்த்து வைக்கவேண்டியது மிகவும் அவசியம். இதற்கெல்லாம் தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பர்மா அகதிகளைப்பற்றி இங்கு நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த சர்க்காரும் மிக உருக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையில் நாங்கள் குற்றம் சாட்டுவதற்குத் தயங்க மாட்டோம் என்று சொல்லுவார்கள். ஆனால் குற்றம் சாட்டுகிற முறையில் நாங்கள் நிச்சயமாகச் சொல்லவில்லை. நாங்கள் பாராட்டுகிற நோக்கில் பாராட்டியிருக்கிறோம். இன்னும் பாராட்டுவதற்குச் சந்தர்ப்பம் வரவில்லையே என்றுதான் நாங்கள் [illegible] இந்த [illegible] பொறுப்பை



20th October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

ஏற்றிருக்கிறவர்கள் மிகவும் தவறியிருக்கிறார்கள் என்று நான் வருத்தத்தோடு சொல்லுகிறேன். இதை ஒரு தேசியப் பிரச்னையாக ஏற்படுத்துவதற்கும், மத்திய சர்க்காரில் இவர்கள் நிலைமையையும் உணர்வுகளையும் எடுத்துச் சொல்லி இந்தப் பிரச்னைக்கு அடித்தளத்தில் இருக்கிற நிலைமையைச் சொல்லத் தவறியிருக்கிறார்கள். இன்றைக்குக் கூட இங்கு பார்க்கிறோம். பல உறுப்பினர்கள் சொன்னார்கள். கனம் அங்கத்தினர்கள் ஆர். வி. சுவாமிநாதன், கோசல்ராம் போன்ற நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள் பர்மா, இலங்கைத் தமிழர்கள் பற்றி. நாளுக்கு ஒரு கப்பல் வருகிறது. 25,001 பேர்கள் வந்திருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் முடிவதற்குள் லட்சம் பேர்கள் வர இருக்கிறார்கள். நான் கும்முடிப்பூண்டியில், சோழவரத்தில், திருநகரத்தில் எல்லாம் சென்று பார்த்தேன். அதே போல எல்லா உறுப்பினர்களும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையில் உண்மையிலேயே பரிகாரம் தேடியிருக்கிறோமா? இந்தப் பிரச்னையை உண்மையிலேயே சமாளித்து விட்டோமா? நாள் ஒன்றுக்கு 2½ ரூபாய் கொடுத்து வந்தது 1.33 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். 45 நாட்களுக்குத்தான் முகாமில் இருக்கலாம் என்றால், உறவினர்கள், மற்றவர்கள் இல்லாதவர்கள் எங்கு போவார்கள்? முப்பது, நாற்பது ஆண்டுகளாக உழைத்து பெற்றதை விட்டுவிட்டு உயிருக்கு பயந்து, உடமைகளையெல்லாம் விட்டு விட்டு, யாரோ அக்கிரமக்காரர்கள், பணக்காரர்கள் பர்மா மக்களுக்கு துரோகம் செய்தார்கள் என்பதற்காக ஏழை எளிய மக்கள் விரட்டியடிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் மூர் மார்க்கெட்டில் பிச்சை எடுக்கிறார்கள். அவர்களை மதுரை பஸ் ஸ்டாண்டில் பார்த்தோம். வேலை கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதைப்பற்றி சரியான புள்ளிவிவரம் கொடுக்கட்டும். எத்தனை பேர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள்? கணக்குச் சொல்லட்டும். போலீஸ் இலாகாவில் வேலை, தீப்பெட்டி தொழிற்சாலையில் வேலை என்று இரண்டு பேர்களுக்கு அங்கும் இங்கும் வேலை கொடுத்து விட்டால் சரியாகப் போய்விடுமா? சமீபத்திலே அமைச்சர் அவர்கள் தொழில் அதிபர்களைக் கூப்பிட்டு மாநாடு நடத்தினார்கள். அவர்களுக்கு பயிற்சி கொடுக்கவேண்டும், பயிற்சி பெற்றதும் சேர்த்துக் கொள்கிறோம், என்று அனுகூலம் பெறவேண்டுமென்று நல்ல வார்த்தை சொல்லி விட்டுப் போயிருக்கிறார்களே தவிர எத்தனை பேர்கள் வேலையில் இருக்கிறார்கள்? இந்தப் பிரச்னை என்ன நிலைமையில் இருக்கிறது? வியாபாரம் செய்ய எத்தனை பேர்களுக்கு கடன் கொடுத்திருக்கிறார்கள்? அதைப்பற்றி புள்ளிவிவரம் கொடுக்கட்டும். கல்விச் சலுகைக்கு அடையாள ஒதுக்கீடு ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். எத்தனை குழந்தைகள் பள்ளிகளில் சேர்ந்திருக்கிறார்கள்? எத்தனை பேர்கள் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்? 45 நாட்கள் ஆனவுடனே விரட்டி அடிக்கப்படுவதாகச் சொன்னார்கள், அகதிகளாக கப்பலில் வருகிறார்கள். ஒரு வாலிபரும் மனைவியும் வருகிறார்கள். கும்மிடிப்பூண்டி பகுதி [illegible] முகாமுக்கு அவர்கள் அனுப்பப்பட்டார்கள். அடுத்த [illegible] வயதான தகப்பனுக்கும் தாய்க்கும் 8 வயது

[திரு. கே. ஏ. மதியழகன்] [20th October 1964

பிள்ளைக்கும் அங்கு இடம் கிடைக்கவில்லை. அவர்கள் திருச்சிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஒரே முகாமில் அவர்களுக்கு இடம் கொடுக்க வசதி செய்யவேண்டாமா? அவர்கள் நமது நாட்டைச் சபிக்கிறார்கள். நமது மக்களைச் சபிக்கிறார்கள். இந்த அரசாங்கத்தை சபிக்கிறார்கள். அவர்களை நம்பி வந்தோமே, நம் மொழி பேசுகிறவர்கள் என்று வந்தோமே என்ற எண்ணம், அந்த சூன்யம் அந்தக் கண்களில் தென்படுகிறது. அமைச்சர் மன்றாடியார் மாவட்டத்தைச் சேர்ந்த கோவைக்கு வட நாட்டு அகதிகள் ஒரு சிலர் சென்றார்கள். எங்களுக்கு இடம் கொடுங்கள். எங்களுக்குச் சொந்த நிலம் வேண்டும் என்று அந்த அகதிகள் கூச்சல் போட்டு வட நாட்டுக்கு ரயிலில் கிளம்பிவிட்டார்கள். அதே நேரத்தில் தமிழர்கள் பெருந்தன்மையாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் இந்தப் பிரச்னையைச் சமாளிக்கவில்லை. இவர்களுக்குப் பெருமளவுக்கு உதவி தரவேண்டும். இந்தப் பிரச்னையை தன்மானப் பிரச்னை என்று டில்லியில் வற்புறுத்த வேண்டும். இலங்கைப் பிரச்னை குறித்த மாநாட்டில் அமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளப் போவதாக அறிகிறேன். அவர்களுக்கு நல்வாழ்த்துக் கூறி அனுப்புகிறோம். கடல் கடந்து, ரப்பர், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கிற குடும்பங்களாகிய தமிழ் இனத்தவர்களுக்கு நல்வாழ்வை நிலைநாட்டி வெற்றி வீரராக வரவேண்டுமென்று வாழ்த்துச் சொல்லுகிற நேரத்தில் இந்த பர்மா அகதிகள் பிரச்னை, வளருகிற பிரச்னை, 1 லட்சம் 2 லட்சம் பேர்களாக ஆகப் போகிறார்கள், இந்த நிலைமையில் உண்மையான பரிகாரம் தேடவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். "நமது கருத்தை இந்திய அரசாங்கமும் ஏற்றுக்கொண்டு தாராளமாக உதவியளிக்க முன் வந்திருக்கின்றனர் என்பதை நான் இச் சபைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இவ்வகதிகள் பர்மாவிலிருந்து இந்தியா வருவதற்கான பயணச் செலவையும், வந்து சேரும் துறைமுகத்திலிருந்து அவரவர்களுடைய ஊர் போய் சேருவதற்காகும் கட்டணச் செலவையும் இந்திய அரசாங்கம் வழங்குவதுடன் இந்த நாட்டில் உறவினர்கள் யாருமே இல்லாதவர்கள் வேறு வேலையில் அல்லது பயனுள்ள தொழிலில் ஈடுபடும் வரையில் இருப்பதற்காக நடத்தப்படும் முகாம்களுக்கு ஆகும் செலவையும், சில வரையறைகளுக்குட்பட்டுக் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளனர்" என்று கூறியிருக்கிறார்கள். அங்கிருந்து வருகிற கப்பல் செலவு, ரயிலில் ஊர் போகிற செலவு அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ஊர் போவது என்றால் எந்த ஊருக்குப் போவது? அவர்கள் தமிழர்கள், தமிழ் மொழி பேசுகிறவர்கள், என்றைக்கோ போனவர்கள். இந்தப் பிரச்னையில் மாநில சர்க்காருக்கு விசேஷப் பொறுப்பு இருக்கிறது. இன்றைக்கு செய்கிற வேலையைப் பார்த்தால் 10-15 ஆண்டுகள் ஆனாலும் இந்தப் பிரச்னை தீராத நிலையில் இருக்கும் போல இருக்கிறது. 25,000 பேர்கள் பரிதாபமாக இருக்கிறார்கள், அவர்களுக்கு உதவுவதில் தவறியிருக்கிறார்கள் என்று குற்றம் சாட்ட வேண்டுமென்று சொல்லவில்லை, இந்தப் பிரச்னை வளருகிற பிரச்னை, அதைத் தீர்ப்பதற்கான வாய்ப்புகளை, வழிமுறைகளை



20th October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

செய்யவேண்டுமே தவிர சமாதானத்தை கண் துடைப்பாகச் சொல்லக்கூடாது என்று கூறிக்கொண்டு இத்துடன் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, துணை மதிப்பீடு பற்றிய இந்த விவாதத்திலே பொதுவாக பல விஷயங்கள் கூறப்பட்டன. முக்கியமாக, கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் விவசாயத்தைப்பற்றி, விவசாயிகள் எவ்வாறு ஊக்குவிக்கப்பட வேண்டும், எந்த வகையில் ஊக்குவிக்கப்படவில்லை என்றெல்லாம் விரிவாக பல அரிய கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். அவைகளைப் பற்றியெல்லாம் ஒவ்வொன்றாக ஆராய்ந்து கூறுவதற்கு இது சமயம் இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட, வேறு சில அங்கத்தினர்கள் குறிப்பிட்ட கருத்துக்கள் எல்லாவற்றையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் பல கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் வகையில் அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது என்று மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த விவாதத்திலே இப்போது கோரப்படுகிற மான்யங்களைப் பொறுத்த மட்டில் ஆட்சேபம் ஒன்றும் இல்லை. இது போதாது, வேறு சில சலுகைகள் வேண்டும், வேறு திட்டங்கள் நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்துக்களைத் தெரிவித்தார்களே தவிர கோரப்பட்ட மான்யங்களைப்பற்றி ஆட்சேபிக்கவேயில்லை. எந்தச் சூழ்நிலையில் இவ்வாறு கோரப்பட்டது, இதைப்பற்றி முடிவு செய்யப்பட்டது என்றெல்லாம் உறுப்பினர்கள் கருத்துக்களைக் கூறினார்கள்,

சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு பஞ்சப்படியை அதிகப்படுத்தியது ஒன்று. நாங்கள் யாருடைய பாராட்டுதலையும் பெற வேண்டுமென்று இதைச் செய்யவில்லை. அவர்களுக்கு செய்ய வேண்டுமென்று உணர்ந்துதான், அதற்கு பொருள் வசதி கண்டு பிடிப்பதில் எவ்வளவு சிரமம் இருந்தாலும், எப்படியாவது நெருக்கிச் செய்வோம் என்று இந்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இது சம்பந்தமாக உத்தியோகஸ்தர்களுக்குத் திருப்தி அளிக்காது, அளிக்கக் கூடாது என்று கருத்துக்களைத் தெரிவித்தால் அது உறுப்பினர்கள் கருத்து. இதைப்பற்றிப் பேசும்போது வேலை நிறுத்தம் செய்ய முற்பட்டார்கள். அது, இது என்றெல்லாம் பேசுவது முறையல்ல. வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று கனம் உறுப்பினர் யோசனை செய்தாலும் கூட அவர்கள் செய்யமாட்டார்கள். வேலை நிறுத்தம் என்று சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பேசுவதே முறையற்றது. ஒருவர் அல்லது இரண்டு பேர்கள் பேசுகிறார்கள். கனம் உறுப்பினர்களைச் சேர்ந்தவர்கள் அங்கு இருக்கிறார்கள். ஒருவர் இருவர் பேசுகிறார்களே தவிர, அதை சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தமட்டில், அவர்களுடைய பாராட்டுதலைப் பெறவேண்டும் என்பது அல்ல. அவர்களுக்கு எவ்வளவு தூரம் வசதிகள்

[திரு. எம். பக்தவத்சலம்] [20th October 1964

அளிக்கக்கூடுமோ அதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். அவர்களிடம் அனுதாபத்திற்கு ஒன்றும் குறைவு இல்லை. எதிர்க் கட்சிகள் அவர்களிடம் எத்தகைய அனுதாபத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் உண்மையான அனுதாபம் இருக்கிறது. அவர்கள் நன்றாக வாழவேண்டும், மக்களுக்காக, நாட்டிற்காக உழைப்பவர்கள், அரசாங்கத்திற்காக உழைப்பவர்கள் சௌகரியமாக வாழவேண்டும், கவலையற்று வாழவேண்டும் என்று பரிபூரண அனுதாபம் இந்த அரசாங்கத்திற்கு அவர்கள் பால் உண்டு. நான் முன்பே தெரிவித்ததுபோல, அவர்களுக்கு வசதிகள் அளிப்பதிலே மத்திய அரசாங்கம் ஓரளவுக்கு பங்கு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று தான் நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால், மத்திய அரசாங்கம் தங்களிடம் பொருள் இல்லை என்று கூறுகிறார்கள். எப்படியோ இந்த நிலைமையைக் கொஞ்சம் சரிப்படுத்துவோம், அவர்களுக்கு வேண்டியதை நாம் இப்பொழுதே கொடுத்துவிடுவோம், நாமே கொடுத்துவிடுவோம் என்று துணிந்து தான் அரசாங்கம் இந்த முடிவு செய்தது.

சில கனம் உறுப்பினர்கள் தேர்தலைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். யார் யாரைப் பிடித்துக் கொள்ளலாம், யார் யாரைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று நினைப்பவர்கள், அதே குறுகிய நோக்கத்தோடு தான், யார் யாரை தேர்தலில் தங்களுடைய வெற்றிக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மற்றவர்களும் நினைப்பதாகக் கருதுகிறார்கள். நம்மிடம் தவறுதலான கருத்து இருந்தால் எல்லோரும் தவறுதலான கருத்துக் கொண்டவர்கள், நாம் தவறுதலான போக்குடையவர்களாக இருந்தால் எல்லோரும் தவறுதலான போக்கு உள்ளவர்கள் என்று நினைப்பது சகஜம்தான். தேர்தல் இருந்தாலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களை தேர்தலுக்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இல்லை. அவர்கள் யாருக்காவது வோட்டு போடட்டும். நாங்கள் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னாலேயே கூட தேர்தலில் ஈடுபட்டோம். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய தயவை நாடித்தான் தேர்தலில் வெற்றி பெறவேண்டுமென்பது இல்லை. மக்களிடத்தில் அவ்வளவு நம்பிக்கை இல்லாதவர்கள் அல்ல இந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள். ஏதோ அவர்கள் அழுதார்கள். அழுத பிள்ளைக்கு பால் கொடுப்பது என்றெல்லாம் சொன்னார்கள். அழவேண்டியது இல்லை. அழாமலேயே வேண்டிய பாலைப் பெறலாம். ஆனால் ஒன்று தாய்மார்களுக்குத் தெரியும். அழுகிற பொழுது பால் கொடுக்கக்கூடாது. அதுவும் தலைக்கு ஏறிவிடும், பொறைக்கு ஏறிவிடும், ரொம்ப ஆபத்து. அழுகை நின்றபிற்பாடு தான் பால் கொடுக்க வேண்டும். அந்த முறையைத்தான் நானும் அனுஷ்டிக்கிறேன். வேறு வகையிலே கிளர்ச்சி, அந்தக் கிளர்ச்சியெல்லாம் இருக்கும்பொழுது கொடுப்பதற்கு இல்லை. எல்லாம் அடங்கட்டும் என்றுதான் 2, 3 மாதங்கள்கூட தாமதம் ஆகியது. அவர்களுக்கே சொல்லியிருக்கிறேன். இதெல்லாம் இல்லாமல் இருந்தால் இன்னும் 2, 3 மாதங்களுக்கு முன்பே செய்திருக்கலாம்.



20th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

அழுகிறபொழுது கொடுப்பது ரொம்ப ஆபத்து, தலைக்கு ஏறிவிடும், பொறைக்கு ஏறிவிடும். ஆகையினால்தான் 2, 3 மாதங்கள் தாமதம் ஆகியது என்று கூட சொல்லுகிறேன்.

இவ்வளவு தானா, இன்னும் நகர அலவன்ஸ் இருக்கிறது; சம்பளம் இருக்கிறது, 'பே கமிஷன்' வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். நாங்கள் இப்பொழுது மறுபடியும் 'பே கமிஷன்' அமைக்கிறோம் என்று ஒருக்காலும் உறுதி கொடுக்க முடியாது. 'பே கமிஷன்' அமைக்கிற சமயத்தில் அமைப்போம். நினைத்த போதெல்லாம் 'பே கமிஷன்' அமைப்பதில்லை. மத்திய அரசாங்கம் கொடுக்கும் அளவுக்கு பஞ்சப்படி கொடுக்கவேண்டும் என்ற 'பே கமிஷனுடைய' ஒரு முடிவை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் பஞ்சப்படியை எந்த அளவுக்கு உயர்த்துகிறார்களோ அந்த அளவுக்கு நாமும் உயர்த்த வேண்டும் என்ற பொதுவான ஒரு முடிவை, 'பே கமிஷன்' சிபார்சை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை அனுசரிப்பதற்கு பணக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** பஞ்சப்படி சம்பந்தமாக மத்திய அரசாங்கம் செய்யக்கூடிய சிபார்சுகளை அப்படியே ஏற்றுக் கொள்வதாக கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதே சமயத்தில், அந்தத் தேதியிலிருந்து அதை அமுல்படுத்துவதில்லை. (குறுக்கீடு.) அதைவிட அதிகமாகக் கொடுப்பதுபற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால், அந்தத் தேதியிலிருந்து அமுல் நடத்துவது பழக்கம் இல்லை. அதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதைத் தான் சொன்னேன். அப்படியே அந்த முடிவை ஏற்றுக்கொள்ளவேண்டுமானால் அதற்குப் பணம் வேண்டும். பணம் தேவைப்படுகிறது. மத்திய அரசாங்கத்தைக் கேட்கிறோம். அவர்கள் கொடுத்தால் சரி. கொடுக்கவில்லையென்றால், மத்திய அரசாங்கத்தின் உதவி இல்லாமல் எப்பொழுது நம்மால் செய்யமுடியுமோ அப்பொழுது தான் செய்ய முடிகிறது. அதன் காரணமாகத் தான் தாமதித்து வருகிறது... கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் கூறியபடி சில பேர்களுக்கு நாம் கொஞ்சம் அதிகமாகக் கூட கொடுத்திருக்கிறோம் என்று துணைமதிப்பீட்டுக் கோரிக்கையின் பேரில் நான் ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருக்கிறேன். மற்றபடி சம்பள விகிதம், வீட்டு அலவன்ஸ் ஆகியவைகளில் மத்திய அரசாங்கம் அளிக்கும் தொகைக்கும் நாம் அளிக்கும் தொகைக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஒரே வீட்டு வாடகை தானே, ஒரே பால் விலை தானே என்றெல்லாம் சொன்னார்கள். அதெல்லாம் சரி, மத்திய அரசாங்கம் ஒரு அரசாங்கம், மாநில அரசாங்கம் ஒரு அரசாங்கம், ஒருவருக்கொருவர் தொடர்பு இல்லாமல் இல்லை, நிதியெல்லாம் பங்கிடப்படுகிறது. இந்த அரசாங்கம் சிற்சில காரியங்கள் செய்கிறது. எல்லாமே மத்திய அரசாங்கம் செய்கிறபடி செய்வதில்லை. மத்திய அரசாங்கம் அளிக்காத சலுகைகள் இந்த அரசாங்கம் அளித்திருக்கிறது. இந்த அரசாங்கம் சர்க்கார் உத்தியோகஸ்தர்

களுக்கு கல்விச் சலுகை, மற்ற சலுகைகளெல்லாம் அளித்திருக்கிறது. மத்திய அரசாங்கத்தில் இருப்பவர்களுக்கு இந்தச் சலுகைகள் இல்லை. மத்திய அரசாங்கத்தில் இருப்பவர்கள் அகில இந்தியா பூராவும் சுற்றிவரவேண்டும். எங்கெல்லாம் இந்திய அரசாங்க ஆபீஸ்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பணிபுரிய தயாராக இருக்க வேண்டும். அதுமாதிரி நிலைமை இருக்கிறது. தனிப்பட்ட ஸ்தாபனங்களில் 'ப்ரைவேட் செக்டாரில்' இன்னும் நிறைய கொடுக்கிறார்கள். இந்த நாட்டில் மட்டும் இல்லை. எந்த நாட்டிலும் இந்த நிலைமைதான். அமெரிக்காவை எடுத்துக் கொண்டாலும் சரி, இங்கிலாந்தை எடுத்துக் கொண்டாலும் சரி, ரஷ்யாவைப்பற்றி இந்த விஷயத்தில் எனக்குத் தெரியாது. தனிப்பட்டவர்கள் அதிகமாகக் கொடுக்கிறார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ரஷ்யாவில் தனிப்பட்ட முதலாளிகளே இல்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதனால் தான் நான் அதைப் பற்றிச் சொல்லவில்லை. அங்கே இருந்த நிலைமை என்னவென்று மேற்கொண்டு ஆராயவேண்டும். இப்பொழுது சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் ஓரளவு இருக்கிறது என்றால், தனிப்பட்ட ஸ்தாபனத்தில் வேலை செய்கிற ஒரு என்ஜினியருக்கு, அதே அளவு படித்தவருக்கு அதே வேலை செய்பவருக்கு 8 மணி நேரம் 10 மணி நேரம் வேலை செய்பவருக்கு ப்ரைவேட் செக்டாரில் அதைவிட அதிகமாகக் கொடுக்கிறார்கள். எந்த நாட்டிலும் இந்த நிலைமை உண்டு. அம்மாதிரி தான் இந்த நாட்டிலும் இருக்கிறது. அவர்கள் கொடுக்கிறார்களே அவர்களும் சாப்பிடுகிறார்கள், இவர்களும் சாப்பிடுகிறார்கள், அதே வயிறு தான் இவர்களுக்கும்; இவர்களுக்கு ஒரு வயிறு, அவர்களுக்கு இரண்டு வயிறு அப்படி கேட்டுக் கொண்டே போனால் அது சரியல்ல. ஒவ்வொன்றுக்கும் மத்திய அரசாங்கம் எந்த அளவுக்குக் கொடுக்கிறார்கள் என்று அம்மாதிரி ஒப்பிட்டுப் பார்ப்பது முடியாது. அது சரியல்ல. பிறகு அதற்கு மேலே ப்ரைவேட் செக்டாரில் கொடுப்பதுபோல் கொடுக்கவேண்டும் என்று நீட்டிக்கொண்டே போகவேண்டியிருக்கும். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் எல்லாவற்றையும் ஆராய்ந்து சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு குறைவு இல்லாமல் அவரவர்கள் வேலைக்கு ஏற்றவாறு கொடுக்கப்படுகிறது; கெசடெட் ஆபீசர் இருக்கிறார். நான்-கெசடெட் ஆபிசர் இருக்கிறார். இரண்டு பேர்களுக்கும் ஒரே சம்பளம் இல்லை. இரண்டு பேர்களுக்கும் ஒரே வயிறு தானே. சொல்லப்போனால் சிறிய உத்தியோகஸ்தர்களுக்குத் தான் பெரிய குடும்பங்கள் இருக்கும் என்று கேட்டுக்கொண்டே போனால் எங்கே போய் நிற்பது. எல்லோரும் தான் சாப்பிடுகிறார்கள். அவர்கள் மட்டும் அதிகமாக சாப்பிடுகிறார்களா என்று கேட்டுக் கொண்டே போனால் என்ன செய்வது? எல்லாவற்றையும் ஆராய்ந்து எவ்வளவு குறைந்த பட்சம் கொடுக்கவேண்டுமோ அந்த வகையில் எப்படியும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அவதிப்படாமல் இருக்க வேண்டிய வகையில் நாங்கள் கவனம் செலுத்திக்





கொண்டு வருகிறோம். எது செய்தாலும் மக்களுடைய நிலையைப் பொறுத்துத் தான் இருக்கிறது. மக்களுக்கு அவர்கள் சேவை செய்கிறார்கள். ஆகையால் அந்த வகையிலே நாம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம்.

மற்றும், ஸாயில் கன்சர்வேஷன் பற்றி சொன்னார்கள். லெவல் இருந்தால் கூட சாயில் கன்சர்வெஷன் பண்ணவேண்டியிருக்கிறது. லெவல் இருந்தால் வேண்டியதில்லை என்ற கருத்தை ஒரு உறுப்பினர் தெரிவித்தார்கள். அப்படி இல்லை. விவசாயத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள் கனம் உறுப்பினர் திரு. கோசல்ராம் அவர்கள். விவசாயத்திலே தண்ணீர் வசதிக்காக என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இதெல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிற விஷயம் தான். சர்க்கார் உத்தியோகஸ்தர்களில், மாநில சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு சம்பளம், மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு சம்பளம் இதுதான் ஜனநாயக சோஷலிசமா என்றெல்லாம் சொன்னார்கள். ஜனநாயக சோஷலிசத்தைப் பற்றி அவரவர்கள் நினைத்தபடி வியாக்கியானம் செய்துகொள்ளலாம். குருடர்கள் யானையைப் பற்றி எப்படி வர்ணித்தார்கள் என்று உபநிஷத்தில் ஒரு கதை இருக்கிறது. அவரவர்களுக்கு தோன்றியபடி ஜனநாயக சோஷலிஸத்தை வியாக்கியானம் பண்ணிக்கொள்ளலாம். போஸ்டர் போடலாம். இந்த அரசாங்கத்திற்கு ஜனநாயக சோஷலிசம் என்ன என்பது திட்டவட்டமாகத் தெரியும். அந்த லட்சியத்தை கருத்தில் கொண்டு, சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும் சரி பொது மக்களாக இருந்தாலும் சரி எந்த வகையில் அவர்களுடைய வாழ்க்கையை சிறக்கச் செய்வது என்பதில் இந்த அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

கிராம உத்தியோகஸ்தர்களைப் பற்றி சொன்னார்கள். தேர்தல் வந்து விட்டது என்று சொன்னார்கள். கிராம அதிகாரிகளுக்கு கொடுக்கவேண்டும். அவர்களுடைய வேலை அவர்களுடைய தேவை இதையெல்லாம் அனுசரித்து அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. எப்பொழுது கொடுக்கிறது என்று பார்த்தோம். இப்பொழுது கொடுத்தோம். ஒரு பெரியவர் சொல்லியிருக்கிறார். 'வயிற்றைக் கிழித்துக் காட்டினாலும் ஜாலம் என்று சொன்னால் உங்களிடம் என்ன தான் கேட்கிறது' என்று சொன்னார். அதனால் 'மோடிவ்' சொல்லிக் கொண்டே போவது என்றால் சொல்லிக்கொண்டே போகலாம். எதிர்க்கட்சிக்காரர்களுக்கு அப்படிச் சொல்ல உரிமை இருக்கிறது. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. வெளியில் இருப்பவர்கள் அதைப்பற்றி நிலைமையை உணர்ந்துகொண்டவர்கள்.

இங்கே பேசப்பட்டதில் ஒரு முக்கியமான விஷயம் பர்மா அகதிகளைப் பற்றியது. அது ரொம்ப முக்கியமான விஷயம் தான். கனம் உறுப்பினர் திரு. கோசல்ராம் அவர்களும் கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்களும் இலங்கையைப் பற்றி சொன்னார்கள்.

[கனம் திரு. எம். பக்தவத்சலம்] [20th October 1964

இலங்கையைப்பற்றி இப்பொழுது நான் பேசுவது முறையல்ல. இலங்கை பிரதம மந்திரி அவர்கள் டெல்லிக்கு வருகிறார்கள். டெல்லியில் அவர்களெல்லாம் சேர்ந்து பேசப் போகிறார்கள். ஆகவே நான் இந்த சமயத்தில் இதைப்பற்றி குறிப்பிடவில்லை என்றால் தவறுதலாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இவைப்பற்றி இப்பொழுது குறிப்பிடுவது தவறு, அவ்வளவு தான் சொல்ல விரும்புகிறேன். பர்மா அகதிகளைப் பொறுத்த மட்டில் 23,655 பேர்கள் வந்திருக்கிறார்கள். 4,731 குடும்பங்களைச் சேர்ந்த 2,791
1-30 p.m. பேர்களுக்கு ப்ரைவேட் செக்டாரிலும். பப்ளிக் செக்டாரிலும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. சிலர் சொல்லாமலே கூட வெளியே போயிருக்கிறார்கள். எப்படி அவர்களை எல்லாம் நல் வாழ்க்கையில் அமர்த்துவது என்பதைப்பற்றி அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. மத்திய அரசாங்கமும் இதிலே அக்கரை செலுத்தி வருகிறது. இந்த பர்மா அகதிகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய நலன்கள் எந்தெந்த வகையிலே பாதுகாக்கப்பட வேண்டும். எப்படி அவர்களுக்கு ஒரு நிரந்தரமான வாழ்க்கையை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்பதிலே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. கனம் உறுப்பினர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் இப்பொழுது இங்கே இல்லை. ஆனால் அவருடைய நெருங்கிய நண்பர் திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இந்தக் கருத்தை அவர்களிடம் சொல்வார்கள் என்று நான் நம்புகிறேன். எனக்குத் தெரியும் திரு. சுவாமிநாதன் அவர்கள் பர்மாவிலே இருந்திருக்கிறார்கள். அவரைப்போல் அவ்வளவுதூரம் மற்ற உறுப்பினர்கள் உரிமை பாராட்ட முடியாது. பர்மா விஷயம் அவருக்கு நன்றாகத் தெரியும். யாரோ ஒரு அதிகாரியை வைத்துக்கொண்டு இந்த பர்மா அகதிகளுக்கு திட்டம் தயாரிப்பதில் பிரயோசனம் ஒன்றும் இல்லையென்று அவர்கள் சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்று தெரிவிக்கிறேன். அவர்களையே நான் அனுப்புவதற்குத் தயார். இந்த அகதி முகாம்களை அவர்களே போய்ப் பார்த்து, அவர்களோடு கலந்து பேசி அதற்குப் பிறகு என்ன திட்டம் போட வேண்டும் என்று சொல்லுகிறார்களோ அதைச் செய்வதற்கு நான் தயாராயிருக்கிறேன். நான் அவரை அழைக்கிறேன். இந்த பர்மா விஷயத்தை அவரே பார்க்கட்டும். அவர் சம்மதித்தால் அதற்கு வேண்டிய உத்திரவுகள் போட்டு வசதி செய்து கொடுக்கிறோம். எந்த எந்த வகையிலே இந்த அகதிகளின் புனர் வாழ்வுக்கு ஏற்பாடு செய்யலாம் என்பதைப் பற்றி யோசித்து முடிவு செய்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். கனம் உறுப்பினர் கோசல்ராம் அவர்கள் இதைத் தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன். வேறு சில விஷயங்களைப்பற்றியும் குறிப்பிட்டார்கள். அவைகளெல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கின்றன என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.



20th October 1964]

திரு. கே. ஏ. மதியழகன் : பிராவிடண்ட் பண்டுக்கு கூடுதலாகப் பிடிக்கப்படும் இந்த ஐந்து சதவிகிதம் தொகையை எப்பொழுது நிறுத்துவதாக உத்தேசம்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இன்னும் முடிவு எடுக்கவில்லை.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. 1-32 p.m.

The House then adjourned.

## VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

### A. *Statutory Rules and Orders.*

'Nil'

### B. *Reports, Notifications and other papers.*

* 20. Speech of the Hon. Chief Minister presenting the Statement of Demands for Grants for Excess Expenditure in the year 1961-62 to the Legislature on the 19th October 1964 (English and Tamil).

* 21. Speech of the Hon. Chief Minister presenting the Second Supplementary Estimates for 1964-65 to the Madras Legislature on the 19th October 1964 (English and Tamil).

* 22. Notice of Demands for Grants for Excess Expenditure in the year 1961-62 (English and Tamil).

* 23. Notice of Demands for Grants for Further Expenditure in the year 1964-65 (English and Tamil).

* 24. Demands for Grants for Excess Expenditure for the year 1961-62 (English and Tamil).

* 25. Demands for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1964-65 (English and Tamil).

* Placed on the table of the House on 19th October 1964.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 21st October 1964.**

The House met in the Assembly Chamber, *Fort St. George*, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER: As the hon. Members who gave notice of questions Nos. 41 to 50 are not in their seats, the questions and answers will be printed in the proceedings.

### *பள்ளியிறுதித் தேர்வுக்குத் தனி மாணவர்கள்*

** 41. கேள்வி.—திரு. செ. மாதவன்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) பள்ளியிறுதித் தேர்வுக்கு பள்ளியில் பள்ளியிறுதி வகுப்பு வரை படிக்காமலேயே மாணவர்கள் எழுத அனுமதிக்கப் படுகின்றனரா?*

*(இ) அவ்வாறு அனுமதிக்கப்படுகிறவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் யாவை?*

*(உ) நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஆண்களுக்கும், பெண் களுக்கும் வேறுபாடு உண்டா?*

*பதில்.—(அ) & (இ).—ஆம். அடியிற்கண்ட விஷயங்களில் மட்டும்.*

*(1) ஹையர் எலிமெண்டரி கிரேடு பெற்ற ஆசிரியர் சான்றிதழ் வைத்துள்ளவர்கள், பண்டிதர்கள், முன்ஷிக்கள், நெசவுப் பயிற்சி ஆசிரியர்கள் போன்ற ஆசிரியத் தொழில்புரிபவர்கள் (அவர்கள் தமிழ்நாடு கல்வி விதிகளின் 13-வது விதியின்படி நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்). மேலும், சென்னைக் கல்வித் துறை நெறியாளரின் மேலாதிக்கத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் பயிற்சிப் பள்ளி இறுதிச் சான்றிதழ் தேர்வில் தேறிய பிறகு குறைந்தபட்சம் மூன்றாண்டு களாவது ஆசிரியர்களாய் முழுநேரப் பணியாற்றி இருக்க வேண்டும். எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்கள் விஷயமாக, மேற் சொன்ன நிபந்தனைகள் பயன்படும். மற்றவர்கள் விஷயமாக, அவர்கள் பணியாற்றும் பதவிக்காக நிர்ணயிக்கப்பட்ட தகுதியைப் பெற்ற பிறகு அவர்கள் இத்தேர்விற்காக அனுமதிக்கப்படுவர்.*

*(2) ஆங்கிலத்தை விருப்பப்பாடமாக எடுத்துக்கொண்டு VIII ஸ்டாண்டர்டு தேறிய அல்லது மூன்றாவது படிவம் தேறிய, 20 வயது நிரம்பிய பெண்களும், எஸ். எஸ். எல். ஸி. அரசாங்கத் தேர்வில் தனிப்பட்ட முறையில் எழுத அனுமதிக்கப்படுகிறார்கள்.*

(உ) ஆம். எஸ். எஸ். எல். ஸி. அரசாங்கத் தேர்விற்கு தனிப்பட்ட முறையில் எழுத விரும்பும் ஆசிரியர்களும், ஆசிரியைகளும் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளையுடையவர்களாயிருந்தால் அவர்கள் எல்லோரும் தனிப்பட்ட முறையில் எஸ்.எஸ்.எல்.ஸி., தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள்.

மேலே சொன்ன (2) இனம் சம்பந்தமாக, குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கிற பெண்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள்.

### சதாசார சமதி, சென்னை.

* 42. கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள சதாசார சமதி மூலமாக இதுவரை லஞ்ச ஊழல் சம்மந்தமான புகார்கள் எவ்வளவு வந்திருக்கின்றன?

(இ) அவைகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

பதில்.—(அ) ஒன்றுமில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

### மகளிர்க்கான கடிகாரம் இணைப்புத் தொழிற்சாலை.

* 43. கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—

மகளிர்க்கான பல தொழில் கல்லூரிகளில் கடிகாரம் இணைக்கும் தொழில் கல்வியும் ஒரு பாடமாக அமைதல் வேண்டும் என்று மதிப்பீட்டுக்குழு செய்த பரிந்துரைமீது அரசு எடுத்திருக்கும் முடிவு யாது?

பதில்.—இந்திய அரசாங்கத் திட்டத்தில் இத்தகைய பாடமுறை எதுவும் சேர்க்கப்படவில்லை. இப் பாடமுறையை ஆரம்பிக்க முடியுமா என்பது தக்க சமயத்தில் பரிசீலிக்கப்படும்.

### பொறியியல் துறையில் பகுதிநேரப் பட்டப்படிப்பு

* 44. கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :
திரு. மு. கருணாநிதி : } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா?

தொழில் துறையில் பணிபுரிபவர் வேலையில் இருந்து கொண்டே மேலும் உயர்ந்த பட்டங்களைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் வகுப்புக்களைத் துவக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? ஆமெனில், எந்த ஆண்டு முதல்?

பதில்.—என்ஜினியரிங் டிப்ளமோ தேர்ச்சி பெற்றவர்களுக்காக பகுதிநேரப் பட்டப்படிப்பு வகுப்புகளைத் தொடங்குவதற்கான விரிவான [illegible] திட்டங்களையும் தயாரிக்க





சர்க்கார் ஒரு குழு அமைத்துள்ளனர். இக் குழுவின் அறிக்கை வந்தவுடன் மேற்படி திட்டம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்படும்.

### *Electrification of villages.*

* 45 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total number of villages electrified as on 31st December 1963 in the State; and

(*b*) whether it is proposed to complete rural electrification to cover all the villages in the State, before the end of the Third Plan Period?

*A.*—(*a*) 16,486 towns, villages and hamlets in the States heva been electrified up to 31st December 1963.

(*b*) All villages with a population of 5,00 and above and most of the villages with a population of 2,000 and above would be covered by the end of the Third Plan period.

### டால்மியா சிமெண்டுத் தொழிற்சாலையில் வெடி விபத்து

46. கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி டால்மியா சிமெண்ட் தொழிற்சாலையின் ஜிப்ஸம் சுரங்கத்தில் 1964 மார்ச் மாதம் வெடி விபத்து ஏதேனும் ஏற்பட்டதா?

(இ) ஆமெனில் அதன் காரணமாக எத்தனை பேர் உயிர் இழந்தனர்?

பதில்: (அ) & (இ) ஆம். 2—3—64 பிற்பகல் 12-30 மணிக்கு கள்ளக்குடி கிராமம், டால்மியாபுரத்தில், டால்மியா சிமெண்ட் லிமிட்டெட்டில், சுண்ணாம்புக்கல் வெட்டியெடுக்கும் இடத்திற்கருகில் வெடி விபத்து ஒன்று ஏற்பட்டது. இந்த விபத்தில் மூவர் உயிர் இழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### நிலக்கடலை சாகுபடியை அதிகரித்தல்

* 47 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் 1964-65க்கு நிலக்கடலை சாகுபடியை அதிகரிக்கும் திட்டத்தை அமலாக்க எந்தெந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன?

(இ) மேற்படி இடங்களில் அதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

**பதில்.**—(அ) அரியலூர்.

(இ) இத் திட்டத்தின்கீழ் அடியிற்கண்ட சலுகைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

(i) பூச்சிகளிலிருந்தும் நோய்களினின்றும் எண்ணெய் வித்துப் பயிர்களைப் பாதுகாக்க விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்பு மருந்து பாதி விலையில் விற்கப்படுகின்றது.

(ii) விவசாயிகளுக்கு நிலக் கடலை வித்துக்கள் உள்ளூர் சந்தை விலையில் விற்கப்படுகின்றன.

நவீன சாகுபடி முறைகளை மேற்கொள்வதுபற்றி சிறப்புப் பணியாளர் தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகின்றனர். அரியலூரில் உள்ள மூலவிதைப் பண்ணையில் விதைகள் ஏராளமான அளவில் தயாரிக்கப்படுகின்றன. இந்த விதைகள், விவசாயிகளின் நிலங்களில் முதல், இரண்டாம் நிலைகளில் அதிகரிக்கப்படுவதற்காக மீண்டும் வழங்கப்படுகின்றன.

### தீவிர விவசாய மாவட்டத் திட்டம்

* 48 **கேள்வி.—திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தீவிர விவசாய மாவட்டத் திட்டத்தை விஸ்தரிக்கும் உத்தேசம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் யாவை?

**பதில்.**—(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### ஸ்ரீபெரும்புதூர் பஞ்சாயத்து பஸ் ஸ்டாண்டு

* 49. **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் Panchayat **bus stand** -க்கு கால்கோள் விழா நடந்து பல ஆண்டுகள் கடந்தும் அந்த நிலையம் இதுவரையில் உருவாகாமைக்கு வருத்தம் தெரிவித்து அவ்வூராட்சிப் பொது மக்களிடமிருந்து அரசாங்கத்திற்கு முறையீடு ஏதேனும் வந்ததா?

(இ) அப்படியானால் அதன்மீது அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன?

**பதில்.**—(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



### *Full Finance Scheme*

* 50 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the Government are aware that the ryots are not getting Thakkavi and other loans in the Full Finance Scheme areas for the reason that the Government are not financing the Central Banks to disburse such loans through Societies; and

(b) if so, the action taken thereon?

A: (a) & (b)—In the Full Finance areas, the issue of taccavi loans (except those loans which involve an element of subsidy and require technical supervision) has been stopped and the co-operatives are sole agency for the supply of credit to the cultivators. It has been ordered that the following loans which involve an element of subsidy and technical supervision may continue to be issued by the Government through the Revenue or Agriculture Department, as the case may be.

(1) Horticultural Development Scheme.

(2) Cashewnut Development Scheme.

(3) Filter Point Well Scheme.

(4) Soil Conservation Scheme.

(5) Hire Purchase Scheme for supply of Oil and Electric Motor Pumpsets to ryots.

(6) Tractors Hire Purchase Scheme.

(7) Green Manure Seed Farm Scheme.

(8) Construction of Model Cattle Shed Compost Pit Scheme.

(9) Cultivation Advance to Cotton Growers Scheme.

(10) Loans for Sinking of Sub-artesian Scheme.

(11) New Well Subsidy Scheme.

2. It cannot be said that the ryots are not getting any loans in the full finance scheme areas because the loans listed above are still being issued to the ryots. The co-operatives are also providing loans. As regards long-term and medium-term loans which were available under the Land Improvement Loans Act, a substantial portion of long-term loans is issued by the Land Mortgage Banks and medium-term loans by the village co-operatives.

3. It has been decided by the Government, the following recommendations of the Full Finance Committee, that the entire amount of taccavi loans earmarked for the blocks where full finance scheme is in operation should be placed at the disposal of the co-operatives. The proposal of the Registrar of Co-operative Societies regarding fixation of terms and conditions for routing of taccavi funds through the co-operatives are under the consideration of the Government.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1961-62.

### DEMAND No. I.—LAND REVENUE DEPARTMENT.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs 6,49.141 under Demand No. I—Land Revenue Department —for the year 1961–62".

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND No. V.—MOTOR VEHICLES ACTS—ADMINISTRATION.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 6,246 under Demand No. V.—Motor Vehicles Acts—Administration—for the year 1961—62".

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND No. VII—IRRIGATION.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum not exceeding Rs. 66,02,089 under Demand No. VII—Irrigation—for the year 1961—62".

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND No. VIII—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum not exceeding Rs. 1,70,088 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters staff".

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND No. IX—STATE LEGISLATURE.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum not exceeding Rs. 1,925 under Demand No. IX—State Legislature—for the year 1961–62".

The Demand was put and carried and the Grant was made.



### DEMAND No. X—ELECTIONS.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum not exceeding Rs. 6,89,196 under Demand No. X—Elections—for the year 1961–62".

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND No. XI—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum not exceeding Rs. 16,86,457 under Demand No. XI—District Administration and Miscellaneous—for the year 1961—62".

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND No. XV—EDUCATION.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum not exceeding Rs. 1,21,91,925 under Demand No. XV—Education—for the year 1961–62".

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND No. XVI—MEDICAL.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum not exceeding Rs. 42,70,386 under Demand No. XVI—Medical—for the year 1961–62".

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND No. XX—ANIMAL HUSBANDRY.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum not exceeding Rs. 8,42,213 under Demand No. XX—Animal Husbandry—for the year 1961–62".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND No. XXV—HARIJAN UPLIFT.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 6,09,554 under Demand No. XXV—Harijan Uplift—for the years 1961—62".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND No. XXVI—COMMUNITY DEVELOPMENT PROJECTS, ETC.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 4,17,572 under Demand No. XXVI—Community Development Projects, etc.—for the year 1961-62".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND No. XXVIII—CIVIL WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 26,99,500 under Demand No. XXVIII—Civil Works—Establishment and Tools and Plant—for the year 1961—62".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND No. XXXI—PENSIONS.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 20,10,058 under Demand No. XXXI—Pensions—for the year 1961-62".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND No. XXXII—STATIONERY AND PRINTING.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 3,32,956 under Demand No. XXXII—Stationery and Printing Printing—for the year 1961-62".

The Demand was put and carried and the Grant was made.



DEMAND No. XXXIII—MISCELLANEOUS.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 37,97,032 under Demand No. XXXIII—Miscellaneous—for the year 1961-62".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND No. XXXIV—OTHER MISCELLANEOUS CONTRIBUTIONS AND ASSIGNMENTS.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 3,64,329 under Demand No. XXXIV—Other Miscellaneous Contributions and Assignments—for the year 1961-62".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND No. XXXV—ROAD TRANSPORT SCHEMES.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 23,43,615 under Demand No. XXXV—Road Transport Schemes—for the year 1961-62".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND No. XLII—CAPITAL OUTLAY ON CIVIL WORKS.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 78,771 under Demand No. XLII—Capital Outlay on Civil Works—for the year 1961-62".

The Demand was put and carried and the Grant was made.

## III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR FURTHER EXPENDITURE IN 1964-65.

### A. Expenditure in Revenue Account.

DEMAND No. I—LAND REVENUE DEPARTMENT.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,20,000 under Demand No. I—Land Revenue Department."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. II—MOTOR VEHICLES ACTS—ADMINISTRATION.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 30,000 under Demand No. II—Motor Vehicles Acts—Administration".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. III—GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES ADMINISTRATION.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,10,000 under Demand No. III—General Sales Tax and other Taxes and Duties Administration".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. IV—STAMPS ADMINISTRATION.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,000 under Demand No. IV—Stamps Administration".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. V—REGISTRATION DEPARTMENT.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,00,000 under Demand No. V—Registration Department".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. VI—STATE LEGISLATURE.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 10,000 under Demand No. VI—State Legislature".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. VII—ELECTIONS.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 30,000 under Demand No. VII—Elections".

The Demand was put and carried and the Grant was made.



DEMAND NO. VIII—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,60,100 under Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. IX—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 95,80,800 under Demand No. IX—District Administration and Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. X—ADMINISTRATION OF JUSTICE.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,20,000 under Demand No. X—Administration of Justice."

SRI V. SANKARAN : Sir, I want to speak on this Demand.

MR. SPEAKER : I think the hon. Member is not interested in the other Demands.

*திரு. வை. சங்கரன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த டிமாண்டில் பஞ்சப்படியாக 4 லட்சம் ரூபாய் அதிகப்படியாகச் செலவழிக்கப்படுவதற்காக இந்த மானியம் கோரப்பட்டிருக்கிறது. பொதுவாகச் சொல்லும்போது கோர்ட்டுகளைப் பொறுத்து பல இடங்களில் செய்ய வேண்டிய வேலைகள் பல இருக்கின்றன. குறிப்பாக, மதுரை போன்ற நகரங்களை எடுத்துக் கொண்டால் நெருக்கடி அதிகமாக இருக்கிறது. மதுரை இரண்டு ஜில்லாவுக்குத் தலைநகராக இருக்கிறது. இரண்டு ஜில்லா கோர்ட்டுகளும் அங்கேதான் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கோர்ட்டுகள் பழைய அரண்மனைக் கட்டிடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. இட நெருக்கடியின் காரணமாகக் கட்சிக்காரர்களுக்கும், வக்கீல்களுக்கும் கோர்ட்டுகளில் வசதி கிடையாது. கிரிமினல் கோர்ட்டுகளைப் பொறுத்தும் அதே நிலைமைதான். கட்டிடம் மோசமான நிலைமையில் இருக்கிறது. பெரிய கட்டிடமாகக் கட்டி கிரிமினல் கோர்ட், சிவில் கோர்ட் இரண்டையும் ஒரே இடத்தில் வைக்க வேண்டுமென்று ஒரு இடம் முன்பு பார்க்கப்பட்டது. ஆனால் வேறு இடம் பார்க்கும்படி அரசாங்கம் கூறிவிட்டது. இரண்டு கோர்ட்டுகளுக்கும் [illegible] மைல் தூரம் இருப்பதால் போக வர [illegible]

[திரு. வை. சங்கரன்] [21st October 1964

கஷ்டமாக இருக்கிறது. அடிஷனல் கோர்ட்ஸ் கண்டிப்பாக அமைக்கவேண்டும். சென்னையில் இருப்பது போன்று எல்லாக் கோர்ட்டுகளையும் இணைத்துக் கட்ட வேண்டும். இப்போது இருக்கிற கட்டிடங்களில் வக்கீல்களுக்குங் கூட சுகாதார வசதி போன்றவைகள் இல்லாத நிலைமை இருப்பதால் கூடிய சீக்கிரத்தில் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து கட்டிடத்தைக் கட்டி முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பொதுவாக கேஸ்களைச் சீக்கிரமாகத் தீர்க்க வேண்டுமென்பதற்காக கேஸ்களைத் தள்ளுபடி செய்து விடுகிறார்கள். முன் காலத்தில் நல்ல முறையில் விசாரித்துத் தீர்ப்புக் கூறக் கூடிய நிலைமை இருந்தது. இப்போது ஒரு டெண்டன்சி . .

MR. SPEAKER : But that is not within the province of the Legislature. What time is required and how Justice is dispensed with are matters which must be decided by Judges. It might take six months or even one year for deciding a case.

**திரு. வை. சங்கரன்:** ' அரியர்ஸ் ' இருக்கக்கூடாது என்ற ஆர்வத்தினால். . . .

**கனம் சபாநாயகர் :** அந்த ஆர்வம் எல்லாம் நம்முடைய ஜுரிஸ்டிக்ஷனில் இல்லை.

**திரு. வை. சங்கரன் :** மதுரையைப் பொறுத்தவரையில் இந்தக் காரியங்களையெல்லாம் நல்ல முறையில் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member might say that the disposal of arrears might be speeded up.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த டிமாண்டை ஆதரித்துப் பேசும் நிலையிலே எங்கள் ஜில்லாவிலே உள்ள சில குறைபாடுகளை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய மாகாணத்தில் நீதியும் நிர்வாகமும் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டு நல்ல முறையில் நடந்து வருகிறது. ஆனால் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கடலூரில் இதுவரை தாசில்தார் அவர்களே குற்றங்களையெல்லாம் விசாரிக்கக் கூடிய அவல நிலை இருந்து வருகிறது. கடலூர் பிராந்தியம் மிகவும் பின் தங்கிய பிராந்தியம். அங்கு மதுவிலக்குக் குற்றங்கள் அதிகமாக வருகின்றன. தாசில்தாரே இதை விசாரிக்கும் பொறுப்பில் இருப்பதால் நியாயம் கிடைக்கக் காலதாமதம் ஆகிவரும் நிலையில் கடலூரில் நீதி நிர்வாகத்தைப் பிரிந்து தாசில்தாரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்காமல் மாஜிஸ்ட்ரேட்டைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உப மானியக் கோரிக்கையிலே எதற்காக 4 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் கேட்கிறார்கள் என்பதைப் பற்றித்தான்



21st October 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

விவாதிக்க வேண்டும். அது ஊழியர்களுக்கு டியர்னஸ் அலவன்ஸ் கொடுப்பதற்காகக் கோரப்பட்ட கோரிக்கை. பொது விவாதத்திலே பேசும்போது தங்களுடைய ஊர்களுக்கு கோர்ட் வேண்டும், நீதி நிர்வாகம் பிரிக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் பேசலாம். ஆகவே அங்கத்தினர்கள் சங்கரன் அவர்களையும், கார்ச்சா கவுடர் அவர்களையும் அடுத்த பட்ஜெட் விவாதம் வருகிற வரையில் பொறுத்திருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 4,20,000 under Demand No. X—Administration of Justice."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XI—JAILS.

THE HON. SRI R. VENKATARAMAN : On the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 1,40,000 under Demand No. XI—Jails. "

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XII—POLICE.

THE HON. SRI R. VENKATARAMAN : On the recommendation of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 37,10,000 under Demand No. XII—Police."

MR. SPEAKER : Motion moved—

" That the Government be granted a sum not exceeding Rs. 37,10,000 under Demand No. XII—Police. "

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** கனம் சபாநாயகர் அவர்களே, சிவில் சப்ளைஸ் விஜிலென்ஸ் செல் என்று புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்க வேண்டிய ஒன்று தான். தானியங்களைக் கண்ட்ரோல் பண்ணுவதற்காக விஜிலென்ஸ் டிப்பார்ட்மெண்ட் வைக்கப்பட்டிருக்கிறது. இன்ஸ்பெக்டர் ஆப் சிவில் சப்ளைஸ் என்ற ஒரு இலாகாவும் வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கும் அதற்கும் தொடர்பு இருந்தால்தான் நாம் ' எஃபெக்டிவ் ' ஆக ப்ரைஸ் கண்ட்ரோலைப் பண்ண முடியும். இரண்டையும் ' கோ-ஆர்டினேட் ' செய்து டிஸ்ட்ரிக்ட் லெவலில் ஒரு அட்வைசரி கமிட்டியைப் போட்டால் ப்ரைஸ் கண்ட்ரோல் நன்றாகச் செயல்படும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். 9-00 a.m.

*** திரு. ஏ. சுவாமிதாஸ்:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் போலீசாருக்குக் கொடுத்திருக்கிற வசதிகள் போதாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

[21st October 1964

**கனம் சபாநாயகர்:** போலீஸ்காரர்கள் பிரச்னைகள் போன்றவற்றையெல்லாம் பின்னால் பேசிக்கொள்ளலாம். இப்போது தேவையில்லை என்று நினைக்கிறேன்.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் போன்றவர்களுக்கு டிரஸ் அலவன்ஸ் என்ற முறையில் மூன்று வருடங்களுக்கு 80 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால் ஒரு தொப்பியின் விலையே 20 ரூபாய் அளவில் இருக்கிறது. இந்த நிலைமையில் எப்படி 80 ரூபாயில் அவருடைய டிரஸ் முழுவதையும் வாங்கிக்கொள்ள முடியும்? ஆகவே இந்த அலவன்ஸை அதிகப்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு சப்-இன்ஸ்பெக்டர்களுக்குப் பிரயாணப்படி கொடுப்பதில்லை. இதன் காரணமாகப் பல சிக்கல்கள் எழுகின்றன. ஆகவே அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய பிரயாணப்படியும் அவர்களுடைய போக்குவரத்துக்கு வசதியாக மோட்டார்-பைக்கும் கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் போலீஸ்காரர்களிடம் மேலதிகாரிகள் ஒரு மாதத்திற்கு இத்தனை கேஸ்கள் போடவேண்டும் என்று ஏதோ டார்ஜெட் வரையறை தாக்கீது ( Target ) போட்டு கொடுத்திருப்பதாக தெரிகிறது. இதன் காரணமாகப் போலீஸ்காரர்கள் வழக்குகள் ஒன்றும் இல்லாத பகுதிகளில்கூட சென்று ஏதாவது வழக்கைப் போட்டுவிடுகிறார்கள். பதுங்கியிருந்தார்கள், அல்லது மது அருந்தினார்கள் என்றெல்லாம் வழக்கு போட்டுவிடுகிறார்கள். இதைக் கவனித்துத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, சிவில் சப்ளை அதிகாரிகளுக்கு உதவியாக விஜிலன்ஸ் ஸெல் போட்டிருக்கிறார்கள். இதைப்பற்றிப் பொது மக்கள் தெரிந்து கொள்கின்ற வகையில் ஆங்காங்கு அறிவிப்புக் கொடுக்க வேண்டும். அதோடு இவர்களோடு பொது மக்கள் தொடர்பு கொள்வதற்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும். மக்களுடைய பூரணமான ஒத்துழைப்பு இருந்தால் தான் இது நல்ல முறையில் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ரெவன்யூ அதிகாரிகளிடத்தில், சில சர்டிபிகேட்டுகளுக்காக மூன்று ரூபாய் அல்லது ஐந்து ரூபாய் என்று கொடுத்தால் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. இதனால் பொது மக்களுக்கு சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதை எல்லாம் நீக்கவேண்டியது நம்முடைய பொறுப்பு, மேலும் போலீஸ் டிப்பார்ட்மெண்டில் இத்தனை கேஸ்கள் போடவேண்டும் என்று ஒரு திட்டம் வைத்திருப்பதாகத் தெரிகிறது. இதன் காரணமாக அடிக்கடி இன்னின்ன ஆட்கள் ரௌடி லிஸ்டைச் சேர்ந்தவர்கள் என்று கைது செய்து விடுகிறார்கள். இதற்காக இவர் சீட்டாடிக் கொண்டிருந்தார், அல்லது மது அருந்திக்கொண்டிருந்தார் என் றெல்லாம் கேஸ் போட்டுவிடுகிறார்கள். ஏதோ ஒரு தடவை



21st October 1964] [திரு. வை. சங்கரன்]

குற்றம் செய்துவிட்டாலும் கூட, பின்னால் வாழ்க்கையில் நல்ல முறையில் நடந்து கொள்ளலாம் என்று முன் வந்தாலும் கூட, சமூகத்தில் அவருக்கு நல்ல இடம் கிடைக்கவில்லை என்றால் வாழ்க்கையே பாழாகிவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இதன் காரணமாக வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. இந்த நிலைமையை நாம் மாற்றியாக வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, உணவு நெருக்கடி சம்பந்தமாக அகில இந்திய ரீதியிலும், ராஜ்யங்களிலும் சில கட்டுப்பாடுகள் விதிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதைப்பற்றி நாடும் தெரிந்திருக்கிறது. நாடு பூராவிலும் பற்றாக்குறை இருக்கிறது என்ற காரணத்தினால் ஓரளவுக்கு மக்கள் எல்லோருக்கும் சரியாக விநியோகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. கட்டுப்பாடுகள், விதிகள் இவை எல்லாவற்றையும் ஏமாற்றினால் லாபம் ஜாஸ்தியாக கிடைக்கும். கட்டுப்பாடுகளை மீறி வந்தாலும் லாபம் அதிகமாகக் கிடைக்கும். இதையெல்லாம் கவனித்துக்கொள்வதற்காக ஒரு தனி இலாகா தேவைப்படுகிறது. கட்டுப்பாட்டை மீறுகின்றார்கள், சர்க்கார் விதிக்கின்ற முறைகளை எல்லாம் ஏமாற்றுகின்றார்கள் என்றால், இவற்றையெல்லாம் கவனிப்பதற்கு தனி ஒரு இலாகா தேவைப்படுகிறது. எனவே தான் இதற்கென்று தனியாக ஒரு "செல்" ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த செல் சிவில் சப்ளை டிப்பார்ட்மெண்டோடு தொடர்பு வைத்துக்கொண்டிருக்கும். எங்கேயாவது அதிகமான விலைக்குத் தான்யங்களை விற்கிறார்கள் என்று தெரிந்தால் சிவில் சப்ளை இலாகாவினர் அதைப்பற்றிக் கண்டு பிடிப்பதற்கு இந்த ஸெல் உதவியாக இருக்கும். சமீபத்தில் கூட அதிகமான விலைக்கு விற்றார் என்று தெரிந்து கைது செய்வதற்கு இந்த ஸெல் நல்ல முறையில் உதவியாக இருந்தது என்று தெரிய வந்தது. அந்த முறையில் தான் இந்த ஸெல் போடப்பட்டிருக்கிறது. இது நமக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் இலாகாவில் இத்தனை வழக்குகள் போட்டாக வேண்டும் என்று எந்தவிதமான உத்தரவும் போடப்படவில்லை. என்னுடைய சகா போலீஸ் அமைச்சர் அவர்களைக் கேட்டதிலும் அவ்வாறு எந்தவிதமான உத்தரவும் போட்டிருப்பதாக தெரியவில்லை. ஆனால் குற்றங்கள் நடைபெறுகின்ற இடத்தில் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் இருந்தால் இதைப்பற்றி மேலதிகாரிகள் கேட்பதற்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் நடவடிக்கை எடுக்காதவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்துத்தான் ஆக வேண்டும். சுவாமிதாஸ் அவர்களும், என். சங்கரன் அவர்களும், போலீஸார் தவறான முறையில் கேஸ்களைப் போடுகிறார்கள் என்று சொன்னார்கள். இவ்விதம் போடுகின்ற கேஸ்களைப்பற்றி நாமோ அல்லது சர்க்காரோ ஏதும் சொல்வதற்கில்லை; வழக்குப் போடுகிறார்கள் என்றால்

அதற்கான காரணங்கள் இருந்தால் போடுவார்கள். அதை சங்கரன் அவர்களோ, அல்லது சுவாமிதாஸ் அவர்களோ கேஸ் போட்டது தப்பு என்று எடுத்தவுடனேயே சொல்லிவிட முடியாது. போடப்பட்ட வழக்கு கோர்ட்டில் போன பின்னால் தான் அது பொய்க் கேஸா அல்லது சரியான கேஸா என்பது தெரிய வரும். கோர்ட் தீர்ப்பு எப்படி வருகிறதோ அதைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு வேளை நிர்வாகம் தான் தவறாகக் கேஸ் போட்டுவிட்டது என்றால் நிச்சயமாக யார் அல்லது எந்த அதிகாரி காரணமாக இருக்கிறாரோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அப்படியில்லாமல் வழக்கு போட்டவுடன் இவன் குற்றவாளியா இல்லையா என்று நாம் சொல்லிவிட முடியாது. இன்னின்ன கேஸ் பொய்யாக கேஸ் என்று சொல்வதற்கு கோர்ட்டுக்குத்தான் உரிமை இருக்கிறது. சட்டசபைக்கோ அல்லது மந்திரிசபைக்கோ கிடையாது. கோர்ட் என்ன முடிவு எடுக்கிறதோ அதன்படி சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்புறம் அலவன்ஸ், ட்ரெஸ் எல்லாம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் ஆரம்பத்தில் சொன்னது போல இதெல்லாம் ஜெனரல் பட்ஜெட் வரும்பொழுது பொது விவாதத்தில் பேசவேண்டிய விஷயங்கள் என்று கூறி இந்த மான்யக் கோரிக்கையை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன், ஸார், ஜில்லா ரீதியில் ஒரு அட்வைஸரி பாடி இருந்தால் எஃபெக்ட்டிவாகச் செய்யலாமே அதற்கு ஏதாவது யோசனை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது அந்த மாதிரி யோசனை இல்லை. அந்த மாதிரி நிலைமை ஏற்பட்டால் அந்த சமயத்தில் சர்க்கார் அதைப் பற்றிப் பரிசீலிக்கும்.

MR. SPEAKER : The question is :—

"That the Government be granted a sum not exceeding Rs. 37,10,000 under Demand No. XII—Police."

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND NON. XIII—EDUCATION.

THE HON. SRI R. VENKATARAMAN : On the recommendation of the Governor, I move :—

"That the Government be granted a sum not exceeding Rs. 35,52,200 under Demand No. XIII—Education":

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** கனம் சபாநாயகர் அவர்களே, கல்வி சம்பந்தமாக, ஹயர் கிரேட் அபாலிஷ் செய்து விட்டு அதற்கு பதில் செகண்டரி கிரேடை வைத்துக்கொள்வதாக இருக்கிறது. அதனால் ஏற்படக் கூடிய செலவு 1.5 லாக்ஸ் ஸ்ப்ரெட்





ஓவர் ஃபைவ் இயர்ஸ் என்று இருக்கிறது. இந்த வருஷத்துக்கு ரீ-அப்ரோப்ரியேஷன் ஃப்ரம் ஸேவிங்ஸ் என்று போடப்பட்டிருக்கிறது. இப்போதே சர்க்காருக்குத் தெரியும் செகண்டரி கிரேட் டீச்சர்ஸ் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். மேற்கொண்டும் இந்த வேலைக்கு வரத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு ஸ்டைஃபண்ட் அவசியமா என்று யோசிக்கவேண்டும். டீச்சர்ஸ் க்வாலிஃபிகேஷனுக்கு வரக் கூடியவர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று ஸ்டைஃபண்ட் கொடுத்தோம். இப்போது சர்ப்ளஸாக இருக்கிறார்கள். மேற்கொண்டும் படிக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகையால் இந்த இனத்திற்காகச் செலவு செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று நான் நினைக்கிறேன். அந்த ரூபாயை வைத்து ஒவ்வொரு தாலூகாவிலும் ஜூனியர் டெக்னிக்கல் ஸ்கூல் வைக்க வழி வகுக்கலாம். அதற்கு ஏற்படக் கூடிய செலவு ஆரம்பத்தில் ரொம்பக் குறைவு தான். சிக்கனமாகச் செயல்பட வழி இருக்கும் போது அதை மேற்கொண்டு அந்தப் பணத்தை மற்ற வேலைகளுக்குச் செலவு செய்யலாம். உதாரணமாக 7 வருஷங்கள் ஆகின்றன செங்கோட்டைப் பகுதி சென்னையுடன் சேர்ந்து. முன்பு அந்தப் பகுதியில் பள்ளிக்கு என்ன கட்டடம் இருந்ததோ, என்ன வேலை நடந்ததோ, என்ன கூரை இருந்ததோ, அதே தான் இருக்கிறது. அதைப் பற்றி பல முறை முறையிட்டிருக்கிறோம். அதற்கு எஸ்டிமேட் வந்திருக்கிறது. டெக்னிக்கல் ஸாங்க்ஷன் ஆகிவிட்டது. அட்மினிஸ்ரேடிவ் ஸாங்க்ஷன் ஆகி பணம் இருந்தும் ஒதுக்கப்படாமல் இருக்கிறது. இப்போது பில்டிங் ரெகுலேஷனுக்குச் சட்டம் போட்டிருக்கிறோம். அங்கே இருக்கக் கூடிய பள்ளிக் கட்டடத்தைப் பார்த்தால் பயமாக இருக்கிறது. அந்த மாதிரி கட்டடங்களைப் புதுப்பிப்பதற்கு அந்தப் பணத்தை ஒதுக்கலாம். அந்த முறையில் வழி வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஸ்டைஃபண்ட் ஸிஸ்டத்தை நிறுத்த வழி இருக்கிறதா என்று பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வை. சங்கரன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையின் கீழ் பர்மா ரீபாட்ரியேட்ஸ் குழந்தைகளுக்குக் கல்வி சம்பந்தமாகப் பல சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அது உண்மையிலேயே வரவேற்கவேண்டிய முக்கியமான விஷயம். குறிப்பாக ஸ்பெஷல் ஃபீஸுக்கு எக்ஸெம்ப்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. புத்தகங்களுக்கு க்ரடேஷனில் 3 ரூபாய், 8 ரூபாய், 15 ரூபாய், 25 ரூபாய் என்று நான்கு விதமாகப் போடப்பட்டிருக்கிறது. கல்விச் சலுகை சம்பந்தமாக போஸ்ட் மெட்ரிக் ஸ்டடீஸுக்கு ஹாஃப் ஃபீஸ் கன்ஸெஷன் போடப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு ஒரு வேண்டுகோள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதே மாதிரி பொற்கொல்லர் சம்பந்தப்பட்ட மட்டில் புத்தகம் வாங்கிக்கொடுக்க திட்டம் போட்டார்கள். ஆனால் இன்று வரையில் என்னுடைய நகரத்தைப் போன்ற இடங்களில் ஒருவருக்கும் கிடைக்கவில்லை. ஏனென்றால் அதற்கு சர்ட்டிஃபிகேட் வாங்க, கர்ணத்திடம் போய், அப்புறம் ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் போய் அதற்கு மேலே அப்புறம் சர்ட்டிஃபிகேட் [illegible] காலதாமதமும் பல கஷ்டங்களும் இருக்கின்றன.

சொன்னபடி பொற்கொல்லர்களுக்குக் கிடைக்காமல் இருக்கின்றது. அவர்களும் வராவிட்டாலும் பரவாயில்லை என்று இருக்கிறார்கள். அந்த மாதிரி நிலைமை இங்கே இருக்கக் கூடாது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். சர்ட்டிஃபிகேட்டுக்கு அடித்தளத்திலிருந்து போக வேண்டியிருக்கிறது. ஒரு சிலருக்கு ஏவு இறக்கம் என்பது கிடையாது. பர்மா ரிப்பாட்ரியேட்ஸ் என்றோ, வாழ வழியில்லாதவர்கள் என்றோ கிடையாது. ஒரு சில கர்ணங்களை வீட்டில் கண்டுபிடிக்க முடியாது. எங்காவது காப்பி ஹோட்டலில் பார்த்து, மூன்றாம் மனிதன் மூலமாகப் பணம் கொடுத்தால் தான் சர்ட்டிஃபிகேட் கொடுப்பார்கள். இந்த மாதிரி இல்லாமல் கலெக்டரிடம் மனுக் கொடுத்து உடனே தொகை கிடைக்கும் அளவில் கஷ்டமில்லாமல் எளிதாகக் கிடைக்க வழி செய்ய வேண்டும். அதிகமாகக் கூடக் கொடுக்கலாம். ஹாஃப் ஃபீ கன்ஸெஷன் 1,200 ரூபாய்க்குள் வருமானம் இருந்தால் வருகிறது. ஒருவருக்கு 5, 6 குழந்தைகள் இருக்கலாம். அவருக்கு 1,500 ரூபாய் வருமானம் வந்தால் கன்ஸெஷன் கிடைக்காத நிலைமை இருக்கிறது. இதனால் பூர்ணமாகப் பயன் கிடைக்காது. இதை 3,000 அளவுக்கு உயர்த்தினால் அல்லாது பயன் கிடைக்காது. இல்லையென்றால் கண்துடைப்பாகத்தான் அமையும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மற்றும் மதுரையில் யூனிவர்ஸிட்டி வருவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதைச் சீக்கிரத்தில் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னும் விமன்ஸ் காலேஜ் வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் சுப்பையா முதலியார் சொன்ன யோசனை சம்பந்தப்பட்ட மட்டில் அது சரியாக இருக்கும் என்று தோன்றவில்லை. காரணம் என்ன என்றால் இந்தப் பயிற்சி எடுத்துக்கொள்ளுகிறவர்கள் மிக ஏழைகள்; குறைந்த வருமானம் உள்ளவர்கள். ஸ்டைஃபண்ட் கொடுக்காவிட்டால் செகண்டரி க்ரேட் ட்ரைனிங்குக்கு ஏழைகள் வரமாட்டார்கள். இன்றைக்கு ஆசிரியர்கள் கொஞ்சம் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் நீண்ட காலமாகத் தொடர்ந்து ஆசிரியர்கள் தேவை. இதற்கு வருகிறவர்கள் குறைந்த வருமான குரூப்பில் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஸ்டைஃபண்ட் கொடுப்பது நியாயம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக அவர்கள் ஊரில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்பது தனிப் பிரச்னை. விவரம் எழுதி கல்வி இலாகாவிற்கு அனுப்பினால் அவர்கள் பார்த்து முடிவு செய்வார்கள்.

கனம் அங்கத்தினர் சங்கரன் பேசும்போது ஃபைனான்ஷியல் ப்ரொஸீஜர் கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினருக்குத் தெரியும், அவர் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி



யில் அங்கத்தினராக இருந்திருப்பார் என்று நினைக்கின்றேன். ஃபைனான்ஷியல் ப்ரொஸீஜர் பிரகாரம் செய்யாவிட்டால், பணம் கொடுத்தது தவறு, சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்று சர்க்கார் மீது குறை எல்லாம் சொல்லப்படும். பொதுப் பணமாக இருப்பதால் ஃபைனான்ஷியல் ப்ரொஸீஜர்ஸை அனுசரித்து, சரியான தகுதி, யோக்கியதாம்சம் இருக்கிறதா என்று பார்த்து சர்ட்டிஃபிகேட் பெற்றுத்தான் கொடுக்கவேண்டும். காலதாமதம் ஆனாலும் துரிதப்படுத்த வேண்டுமே தவிர ஃபைனான்ஷியல் ப்ரொஸீஜர்ஸைத் தளர்த்துவது உசிதமாகாது.

மதுரை யூனிவர்ஸிட்டி வருகிறது என்று முதல் அமைச்சர் அவர்களே சந்தோஷத்தோடு தெரிவித்து விட்டார்கள். அது சீக்கிரத்தில் அமைக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

கனம் அங்கத்தினர் சுப்பையா முதலியார் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இப்போது.

It is not actually in surplus but there is no dearth of Secondary Grade trained teachers. The information of the hon. Member, Sri A. R. Subbiah Mudaliar, itself is not correct.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : அதற்குப் போட்டி நிறைய இருக்கிறது. பலர் சேருவதற்கு விண்ணப்பம் போடுகிறார்கள். அதனால்தான் ஸ்டைபண்டு வேண்டாம் என்று நினைக்கிறேன்.

**கனம் சபாநாயகர்** : ஸ்டைபண்டு இருப்பதனால்தான் எல்லோரும் வருகிறார்கள்.

The question is :—

"That the Government be granted a sum not exceeding Rs. 35,52,000 under Demand No. XIII—Education."

**The Demand was put and carried and the Grant was made.**

## DEMAND NO. XIV—MEDICAL.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 20,51,400 under Demand No. XIV—Medical."

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : கனம் சபாநாயகர் அவர்களே, மருத்துவம் என்ற தலைப்பில் கூடுதல் செலவுக்காக மானியம் கோரப்பட்டு இருப்பது நியாயம் தான். அதை நான் வரவேற்கிறேன். குறிப்பாக கடையநல்லூர் பஞ்சாயத்து யூனியன் மருத்துவக் கட்டிடங்கள், கருவிகள் முதலியவற்றை இலவசமாக அரசாங்கத்துக்கு வழங்கிட வேண்டுமென ஷரத்து ஏற்படுத்தப்பட்டது. இதற்காகக் கூடுதல் பணியாளர்களை நியமிக்கவும் அரசாங்கம் அனுமதி வழங்கியது. இதன் காரணமாக ஆண்டொன்றுக்கு நடைமுறைச் செலவாக ரூ. 51,400-ம், மூலதனச் செலவாக ரூ. 22,600 ஆகும் என்று இருக்கிறது. இதில் ஒரு

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [21st October 1964

விஷயத்தைக் கனம் அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். மொத்தத்தில் 51,400 ரூபாயா? 22,600 ரூபாய் போக அந்தத் தொகையா என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். அதுபோக முன்பே செய்யப்பட்ட சில வேலைகளுக்காக உடனடியாகச் சில காரியங்கள் செய்யப்படுகின்றன. அதற்காக எந்தப் பணமும் ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. செங்கோட்டையில் எக்ஸ்ரே யூனிட் வைப்பதற்காகக் கட்டிடம் கட்டப்பட்டது. ஆனால் அந்தமாதிரிக் காரியங்களுக்குக் கூட பணம் கொண்டிருக்கிறது. அதுபோலவே வேறு பல காரியங்களுக்காகவும் 1959-ஆவது ஆண்டிலேயே டெக்னிகல் சாங்ஷன் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்தமாதிரி காரியங்களுக்குக் கூட பணம் ஒதுக்கப்படவில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கடைய நல்லூர் பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரிக்கு ரெக்கரிங் எக்ஸ்பெண்டிசர் 51 ஆயிரம், நான்-ரெக்கரிங் எக்ஸ்பெண்டிசர் 21 ஆயிரம் இரண்டு வகையிலும் செலவழிக்க வேண்டியிருக்கிறது.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 20,51,400 under Demand No. XIV—Medical."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XV—PUBLIC HEALTH.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,20,100 under Demand No. XV—Public Health."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XVI—AGRICULTURE.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 21,25,000 under Demand No. XVI—Agriculture."

திருமதி. சி. குழந்தையம்மாள் : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற வேளாண்மைத் துறை கூடுதல் செல்வினத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்காக அதி தீவிரமாகச் செலவழிக்கப்படுகிறது என்ற குறிப்பு இருக்கிறது. இது பாராட்டுவதற்குரிய விஷயம். கடந்த காலங்களில் லாப நஷ்டக் கணக்குப் பார்த்து கடுமையாக வைத்துக் கொண்டிருந்த விதி முறைகளைக் கொஞ்சம் தளர்த்த முன் வந்திருப்பது விவசாயத் துறை வளர்ச்சிக்கு உதவக் கூடும். அதுவும் தற்போது குளங் [illegible]



21st October 1964] [திருமதி. சி. குழந்தையம்மாள்]

குட்டைகளை அமைப்பதிலும் அதிகக் கவனம் செலுத்துவதாகத் தெரிகிறது. அதனைத் தீவிரப்படுத்த வேண்டுமென்பதோடு கோயம்பத்தூர் ஜில்லாவில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் கிடையாது. அவிநாசி, பல்லடம், சூலூர் வட்டாரங்களில் குளம் குட்டைகளை அமைக்க லோன் கொடுத்து இருக்கிறோம். இப்போது கோரப்படுகிற மானியத்தொகையைக் கொண்டும் அந்த வட்டாரங்களில் குளங்குட்டைகளை அமைக்கும் காரியத்தை மேற்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

வேளாண்மைத் துறையில் நிலக்கடலைக்கு விழும் நோயைத் தடுப்பதற்கான ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக மானியம் கோரியிருக்கிறார்கள். அதோடு கூட பருத்திச் செடிக்கு வரக் கூடிய நோய் ஆண்டுக்கு ஆண்டு மிகக் கஷ்டமாக இருக்கிறது. கடந்த ஒரு மாதத்தில் இரண்டு மூன்று மழை பெய்ததின் காரணமாக விளைவு குறைவாக இருக்கிறது. அதோடு பூச்சியும் விழுந்திருக்கிறது. அந்தப் பூச்சிகளை அழிப்பதற்காகக் கொடுக்கப்படுகிற மருந்தை ஓர் பக்கெட் ஜலத்தில் கரைத்து இந்தப் புழுக்களை எடுத்துவிட்டால் இவை அதன்மீது மிதக்கின்றன. பத்து புழுக்களை எடுத்துவிட்டால் ஒன்று கூடச் சாவதில்லை. இந்தப் பூச்சு ஒழிப்பு மருந்துக்காக நாம் ஏராளமான பணத்தைச் செலவிடும்போது இப்படி காரம் இல்லாத மருந்தைக் கொடுப்பதினால் என்ன பயன்? ஆகவே இந்தப் பரிசோதனையை நல்ல முறையில் நடத்தி பூச்சிகளை உண்மையிலேயே ஒழிக்கக் கூடிய மருந்தை விவசாயிகளுக்குக் கொடுத்து அந்த மாவட்டத்து பருத்திப் பயிரைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதாகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தீவிரச் சாகுபடித் திட்டத்தின் கீழ் தஞ்சை ஜில்லாவில் நெல் சாகுபடி இயக்கத்தையும், கோயம்புத்தூர் ஜில்லாவில் பருத்தி சாகுபடித் திட்டத்தையும் மேற்கொண்டுள்ளார்கள். அதுவும் கடந்த 13-ம் தேதி அன்றுதான் முதல் அமைச்சர் அவர்கள் அங்கே வந்து பருத்தி சாகுபடி செய்வது, அதை எப்படி அபிவிருத்தி செய்வது என்பதைத் தொடங்கி வைத்தார்கள். பருத்தி சாகுபடி செய்வதில் எங்கள் வட்டாரம், உடையார் பாளையம் எல்லாம் முன்னணியில் இருக்கும். அங்கே நல்ல ரக நீண்ட இழைப் பருத்தியைச் சாகுபடி செய்ய முடியும். பருத்தி நன்றாக விளைய வேண்டுமானால் தண்ணீர் இருந்தால்தான் வளரும். கிணற்றிலே இருந்துதான் தண்ணீர் இறைக்க வேண்டும். ஒரு மணி நேரம் இறைப்பதற்குள் தண்ணீர் கிணற்றில் வரண்டுவிடுகிறது. மேலே ஏறுவதற்குள் பாத்தியில் பாய்ச்சின நீர் வற்றி விடுகிறது. இந்தமாதிரி வாழ்வதற்கு வாழாமல் இருக்கலாம் என்று விவசாயிகள் மனம் நொந்துபோகிறார்கள். அந்த நிலையை மாற்ற அரசாங்கம் அந்தப் பகுதியில் உள்ள குளம் குட்டைகளை எல்லாம் ஆழப்படுத்தி, அவற்றில் தண்ணீர் தேங்கி நிற்கும்படி செய்தால் கிணற்றில் தண்ணீர் மட்டம் எப்போதும் உயர்ந்து இருக்கும். இதற்கு ஆவன செய்யுமாறு அரசாங்கத்தை நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி. சி. குழந்தையம்மாள்] 21st October 1964

அடுத்தபடியாகக் குழாய்க் கிணறுகள் போடக் கூடிய மிஷின் கோயம்புத்தூர் ஜில்லாவில் 5 இருக்கிறது. இந்த ஐந்தும் அரசாங்க பண்ணையில் வேலை செய்கிறது. அதிலே மூன்றை சர்க்கார் வேலைக்காக வைத்துக்கொண்டு இரண்டை விவசாயிகளுடைய வேலைக்காக மாற்றி மாற்றிக் கொடுக்கிறார்கள். அந்த வட்டார விவசாயிகள் அந்த மெஷினைப் பெரிதும் விரும்புகிறார்கள். ஒரு மிஷின் விலையே 80 ஆயிரம் ரூபாய். அவ்வளவு பெரிய மிஷின் இருந்தால்தான் குழாய்க் கிணறுகளைத் தோண்ட முடியும். விவசாயிகளுக்கு அவை அதிகம் பயன்படும்படியாக அவர்கள் தேவைக்கு அதிக மிஷின் ஒதுக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மண்வளப் பாதுகாப்புத் திட்டத்திற்காக நாம் பணம் ஒதுக்கியிருக்கிறோம். எங்கள் ஜில்லாவைப் பொறுத்த வரையிலும் மண் சரிவு கரைவுக்கு இடமின்றி தக்க பாதுகாப்புச் செய்து தரவேண்டும் என்பதாகவும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்த ஜில்லா பருத்திச் செடியில் விழுகிற புழுவை ஒழிப்பதற்கும் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தஞ்சை ஜில்லாவில் எலி ஒழிப்புத் திட்டம் என்று ஒரு திட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்திலும் கூட எலிகளால் ஏற்படக் கூடிய தொல்லை மிக அதிகமாகவே இருக்கிறது. (குறுக்கீடு) தஞ்சாவூரில் இருந்து வந்தது என்று சொல்ல வரவில்லை—உண்மையிலேயே எலி வளைகளில் இருந்து கிடைக்கக்கூடிய பருத்திதான் மிக்க நீண்டதாக இருக்கிறது. ஆகவே எலி ஒழிப்புத் திட்டத்திற்காக கோயம்புத்தூர் ஜில்லாவிற்கும் பணம் ஒதுக்கித் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற மாதங்களில், உரங்கள் சம்பந்தமாகப் பெரிய விளம்பரங்களை எல்லாம் வெளியிட்டுப் பிரசாரம் செய்தார்கள். உரங்களை வாங்கி நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமென்றால்—தண்ணீர் வேண்டும். கூட்டுறவுத் துறையில் ஆயிரம் ரூபாய்க்குக் கடனில் உரத்தை வாங்கிவைத்துவிட்டுச் சாகுபடிக்குத் தண்ணீர் இல்லையென்றால் அத்தனை உரமும் வீணாகப் போய்விடும். ஆகவே நாம் போடுகிற திட்டங்கள் எல்லாவற்றினாலும் பலன் இருக்கவேண்டுமென்றால் அந்த மாவட்டத்தில் சாகுபடிக்குத் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படாதவாறு எல்லாவிதமான சிறிய நீர்ப்பாசனத்திட்டங்களிலும் கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** கனம் சபா நாயகர் அவர்

9-30 a.m. களே, இப்பொழுது இருக்கக்கூடிய உணவு நெருக்கடியில் விவசாய சம்பந்தமாக இருக்கக்கூடிய தலைப்பைப் பார்க்கும்பொழுது 'கிராஷ் ப்ரோகிராம்' என்பது தேடிப் பிடிக்கக் கூடிய நிலைமையில் இருக்கிறது. அதுதான் பாக்கியமான தேவை. 'அனிமல் ஹஸ்பெண்டரி டிபார்ட்மெண்டுக்காக ரூபாய் 35 லட்சம் அல்லது 45 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.



21st October 1964] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

"A scheme for the manufacture of 70 handboring sets and 72 filter-point equipment at Government Agricultural Engineering Workshop, Madras, for the filter-point tube-wells and borewells scheme, under the Crash Programme for minor irrigation during 1964-65, has been sanctioned at an estimated cost of Rs. 6,36,000."

அதிலே இப்பொழுது டோகனாக ரூ. 100 ஒதுக்கப்பட்டிருக்கிறது. 'கிராஷ் ப்ரோகிராம்' என்று பேசிக்கொண்டிருக்கிறோம். உணவு உற்பத்தி அதிகரிக்க வேண்டுமென்று நினைக்கிறோம். ஆனால் இந்த 'கிராஷ் ப்ரோகிராம்' திட்டத்தை இந்த வருஷத்திலேயே நடத்துவதற்கு வழி இல்லை. இதை நினைக்கும்பொழுது எப்படி அதிகமாக உணவு உற்பத்தி செய்யப்போகிறோம் என்று தெரியவில்லை. 'ட்யூப் வெல் ஆர்கனைசேஷன்' அல்லது 'போர் வெல் ஸ்கிம்' இதன் கீழ் உடனடியாக அன்னிய நாட்டிலிருந்தாவது நாம் தேவையான செட்டுகளை வரவழைப்பதற்கு வழி வகுத்து உடனடியாக உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அது இல்லா விட்டால் 'ஓபன் வெல்' ஆவது வெட்டுவதற்கு வழி வகுக்க வேண்டும். இம்மாதிரி செய்தால்தான் அதிக உற்பத்தி செய்ய வழி ஏற்படும்.

ஸாயில் டெஸ்டிங் யூனிட் ஒவ்வொரு பிளாக்குக்கும் தேவை என்பது என்னுடைய கருத்து. அம்மாதிரி யூனிட்டுகளை உடனடியாகத் துவக்கக்கூடிய நிலைமை இருந்தால்தான் நாம் அதிக உற்பத்தி செய்வதற்கு வழி ஏற்படும். 'பூல் ப்ரூப் டெஸ்டு லாபரடரி' ஆரம்பிப்பதற்கு அதிக நாட்கள் ஆகும். அதை உடனடியாகச் செய்ய முடியாது என்று சொல்லுகிறார்கள். அதைவிட 'ஸ்மால் ஸாயில் டெஸ்டிங் யூனிட்' இருக்கிறது. அதை உபயோகப்படுத்துவதற்கு பரீட்சார்த்தமாக சில பிளாக்குகளில் கொடுப்பதற்கு வழி செய்யலாம். நைட்ரஜன் தேவையா, ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு எந்த உரம் தேவை என்பதைச் சொல்லுவதற்கு சாதாரணமாக ஒரு 'போர்டபிள் டெஸ்டிங் யூனிட்' இருக்கிறது. அதையாவது வாங்கி பரீட்சார்த்தமாக பல ஜில்லாக்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் அதிக உற்பத்தி செய்ய வழி ஏற்படும். 'கிராஷ் ப்ரோகிராம்' என்று போட்டுக்கொண்டு, ஒன்றும் செய்யாமல் இருந்தால், உணவு உற்பத்தி தடைபடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** கனம் தலைவர் அவர்களே, விவசாய உற்பத்திக்காக அதிகப்படியாக உதவிமான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய அரசாங்கமானது பல முறை இந்தச் சட்டமன்றத்தில் எடுத்துக் கூறி, மருந்து சத்து இருக்கும்படியானதும், நல்ல உணவு சத்து கொடுக்கும்படியானதுமான திராட்சை உற்பத்திக்கு ரூ. 600 வரை கொடுக்கலாம் என்று இப்பொழுது சமீபத்தில் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். பழ உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு இந்த வசதியைச் செய்து கொடுத்ததற்காக

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [21st October 1964

அவர்களுக்கு நான் நன்றி செலுத்திக்கொள்கிறேன். எங்கெல்லாம் பழ உற்பத்தி தீவிரமாகச் செய்யப்படுகிறதோ எங்கெல்லாம் தீவிர சாகுபடி செய்யப் படுகிறதோ அந்த விவசாயி களுக்கு அவர்களுடைய யூனியன் மூலமாகக் கொடுப்பதற்கு வழி செய்வார்களேயானால், இன்னும் பழ உற்பத்தியை அதிகப் படுத்தும் வழியிலே அமையும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஸாயில் டெஸ்டிங் பற்றிக் கூட இன்னும் அதிகப்படியாக அக்கறை செலுத்தவேண்டும். ஒரு கிராம சேவக் குறைந்தது 120 ஸாயில் டெஸ்டுகள் செய்யவேண்டும் என்று நிர்ண யம் செய்திருக்கிறோம். நாம் உணவு உற்பத்தி திட்ட சம்பந்தமாக கிராம சேவக்குகள் தீவிரமாக வேலை செய்ய வேண்டும் என்று உத்தரவு போட்டிருந்தாலும், இன்னும் சற்று அதைத் தீவிரமாகச் செய்து, 120 டெஸ்டுகள் என்பதை அதிகரித்து; 500 ஸாயில் டெஸ்டு கள் செய்யவேண்டுமென்ற அடிப்படையில் அவர்களைத் துரிதப் படுத்தி, அந்த வேலையை மேற்கொள்ளச் செய்யவேண்டும். எங்கே எந்தவிதத்தில் என்ன உரம் போடவேண்டும் என்று பார்த்து எங்கே சாயில் சரியில்லாமல் இருக்கிறது என்று பார்த்து, தேவை யான உரத்தை அதிகப்படியாகக் கொடுத்தால், நல்ல முறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஒரு வழியாக அமையும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு அதிகப்படியாகப் பணம் ஒதுக்கியிருக் கிறோம். நமது மாகாணத்தைப் பொறுத்தவரையில், பெரிய நீர்ப் பாசனத்திட்டங்களை ஓரளவுக்கு நிறைவேற்றிவிட்டோம். பல பகுதிகளில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. அவைகளில் சில இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள்; இப்படி காலம் கடந்து போகக்கூடிய ஒரு சூழ்நிலையில் இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி எங்கெல்லாம் என்ஜினி யர்கள் பரிசீலனை செய்து பார்த்து, எஸ்டிமேட் போட்டு எஸ்.இ. பார்த்து ஸி.இ. பார்த்து கவர்ன்மெண்டுக்கு திட்டங்கள் வந்திருக் கின்றனவோ அவையெல்லாம் 'டிலே' ஆகாமல் சம்பந்தப் பட்ட அமைச்சர்கள் அவைகளில் சற்று கவனம் செலுத்தி துரிதமாக நிறைவேற்றிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். எதற்கு அதிகப்படியான பணம் தேவையோ அதையும் ஒதுக்கி, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எங்கெல்லாம் சாத்தியமோ, அவைகளை அதிக அளவுக்கு விரைவில் சாங்ஷன் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். மதுரை ஜில்லா சம்பந்தப்பட்டவரை சில சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் 'பெண்டிங்காக' இருக்கிறது. நிலக்கோட்டை தாலுகாவில் பழனி பாண்டவர் ஓடை, மஞ்சம நதி போன்ற திட்டங்கள் கடந்த 3, 4 ஆண்டுகளாக பரிசீலனையில் இருக்கின்றன. அம்மாதிரிப்பட்ட திட்டங்களை விரைவிலே சாங்ஷன் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



21st October 1964] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

எலி ஒழிப்புத் திட்டம் தஞ்சை ஜில்லாவில் அமுலில் இருக்கிறது. திருமதி குழந்தையம்மாள் கோவையிலும் அந்த திட்டம் வேண்டும் என்று கேட்டார்கள். எங்கள் ஜில்லாவிலும் சோழவந்தான் போன்ற பகுதிகளில் எலிகள் தொந்தரவு அதிகமாக இருக்கிறது, சமாளிக்க முடியவில்லை. அதனால் நெல் உற்பத்தி அதிகமாக பாதிக்கப்படுகிறது. ஆகவே அந்தத் தொந்தரவைப் போக்குவதற்கு எலி ஒழிப்புத் திட்டத்தை எங்கள் ஜில்லாவுக்கும் விரிவுபடுத்தவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக புஞ்சை தானியங்களுக்குப் பூச்சி விழுந்தால் பூச்சி மருந்து தெளிக்கிறோம். நாங்கள் இதுபற்றி சட்ட மன்றத்தில் பல முறை வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். எங்கெல்லாம் பூச்சி வருகிறதோ அங்கெல்லாம் உடனடியாக மருந்து தெளிக்கவேண்டும். இந்தப் பொறுப்பை கிராம சேவக்கு களிடம் கொடுத்திருக்கிறோம். அங்கெல்லாம் அதிகாரிகள் நேரடியாக சென்று பார்க்கிறார்கள். பூச்சி விழுந்தவுடன் மருந்து அடித்து விட்டு பாதிப்பணம் மான்யமாகவும், பாதிப்பணம் கடனாகவும் கொடுப்பது என்றாலும், கிஸ்தியோடு அதை வசூலிப்பது என்றும் நிர்ணயம் செய்திருக்கிறோம். ஆனால் எங்கே பூச்சி விழுகிறதோ, அங்கே உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பதில்லை. கனம் விவசாய அமைச்சர்; கனம் தொழில் அமைச்சர்; கனம் முதல் அமைச்சர் எல்லோரும் சேர்ந்து எங்கே பூச்சி விழுகிறதோ உடனே அங்கு மருந்து அடிக்கவேண்டிய ஏற்பாட்டைத் தூண்ட வேண்டும். விவசாயிகள் ஒத்துக்கொள்கிறார்களோ, இல்லையோ அவர்களைப்பற்றிக் கவலைப்படாமல் உடனடியாக மருந்து தெளிக்க வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். பூச்சியை ஒழிக்க வேண்டுமென்ற ஒரே கண்ணோட்டத்தோடு, கிராம சேவக்கு கள் பூச்சி விழுந்தவுடனேயே மருந்து அடிக்கவேண்டும். அப் பொழுதுதான் திராட்சை; பருத்தி; மற்ற உணவு தானியங்கள் பூச்சிகளினால் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதற்கு வழி ஏற்படும். ஆகவே, இதற்கு உடனடியாக நிவாரணம் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நூறு, இருநூறு ஏக்கர் புஞ்சைக்காடுகள் இணைப்பாக வைத்தி ருக்கும் விவசாயிகள் கிணறு வெட்ட முடியவில்லை. முழுக்கடன் திட்டம் அமுலுக்கு வந்த பகுதிகளில் மக்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். அம்மாதிரிப் பகுதிகளில் 30, 40 ஏக்கர்களுக்கு ஒரு பெரிய கிணறு வெட்டிக்கொடுத்து; விவசாயிகள் அந்தக் கிணற்றின் மூலம் பாசன வசதி செய்துகொள்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பிறகு மக்களிடம் பணத்தை வசூல் செய்து கொள்ளலாம். கிணற்றைத் தாங்களாகவே வெட்ட முடியாமல் இருக்கும் மக்கள் பொதுக் கிணற்றை உபயோகப் படுத்தி நல்ல முறையில் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று கூறி, 'வெல் இர்ரிகேஷன்' செய்து கொள்வதற்கு வழி வகுத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆறுமுகம்:** கனம் சபாநாயகர் அவர்களே, வட ஆற்காடு, செங்கம் தாலுகாவில் பல வேலைகள் அதற்குரிய எஸ்டிமேட்டுகள் என்ஜினியர்களால் தயாரிக்கப்பட்டு, சர்க்காருக்கு அனுப்பப்பட்டு இருந்தாலும், பல மாதங்களாகக் காலதாமதம் செய்யப்படுகிறது. இதனால் பல நல்ல வேலைகளெல்லாம் நடைபெறாமல் இருக்கின்றன. அந்தத் திட்டங்களை உடனடியாக சர்க்கார் சாங்ஷன் செய்து அந்த வேலைகளெல்லாம் துரிதமாக நடைபெறுவதற்கு வழி வகை செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கம் தாலுகாவில் திருவண்ணாமலை தண்டராம்பேட்டை பஞ்சாயத்து யூனியன்களில் மணிலா தீவிர சாகுபடித் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கான வேலைகள் அங்கே நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் எல்லாக் கடன் வசதிகளும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகப் பெறவேண்டும் என்ற நிலை இருப்பதன் காரணமாக, அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை விவசாயிகள் சரியான முறையில் நன்மை பெறமுடியாத நிலையில் இருக்கிறார்கள். இது பற்றி நான் பல முறை ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் கூட்டங்களில் எடுத்துக் கூறியிருக்கிறேன். இது சம்பந்தமாகப் பல அதிகாரிகளிடம் எடுத்துச்சொல்லியும், சாதாரண ஏழை விவசாயிகள் சிறிய விவசாயிகள் இதுவரையிலும் நன்மை பெற முடியாமல் இருக்கிறார்கள். இது சம்பந்தமாகச் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்து தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு ஜில்லாவிலே விவசாயத்தைப் பெருக்குவதற்காக மின்சார வசதி கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் செங்கம் தாலுகாவைப் பொறுத்தவரையில் இன்னும் துரிதமாக மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னும் துரிதமாக மின்சாரம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கனம் மின்சார இலாகா அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்ரீமதி குழந்தையம்மாள் அவர்கள் பேசுகிறபொழுது பாண்ட்ஸ் ஸ்கீம் மூலமாக; கோவை ஜில்லாவில் தண்ணீர் அதிகமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். எடுத்துக்கொண்டிருக்கிற பாண்ட்ஸ் ஸ்கீமிலே முதலிடம் கோவைக்கும் சேலத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தெந்த இடத்திலே சாத்தியமோ; அந்தந்த இடத்தில் தண்ணீர் கிடைக்கும்படியான நிலையை உண்டாக்கவேண்டுமென்று இந்தத் திட்டம் இப்பொழுது தீவிரமாகக் கோவையிலும் சேலத்திலும் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. மேற்கொண்டு இன்னும் பல இடங்களுக்கு விஸ்தரிக்க வேண்டுமென்று எழுதி அனுப்பினால் சர்க்கார் அதைக் கவனிக்கும்.

அடுத்தாற்போல, பம்புசெட்டுகளுக்காக அதிகமாகப் பணம் கொடுப்பது கோவை ஜில்லாவிலேதான். மற்ற ஜில்லாக்களில் ரூ 2,000; 3,000 என்று கொடுத்தால் கோவையிலே ரூ. 6,000 அல்லது



7,000 என்று கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஏதோ தாராளமாகக் கொடுக்கிறோம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், அங்கேயிருக்கிற நிலையை உணர்ந்து அங்கு கிணறு வெட்டுவதற்காகும் செலவைப் பார்த்துக் கொடுக்கிறோம். போதிய அளவு கொடுப்பதற்கு சர்க்கார் வழிவகை செய்திருக்கிறது.

Rat (ராட்) கண்ட்ரோல் ஸ்கீம் கோவை ஜில்லாவுக்கு அவசியமா என்பதைப் பரிசீலனை செய்து அவசியமாக இருந்தால் ராஜ்யத்தில் எந்தப் பகுதியாக இருந்தாலும் அதற்கு விஸ்தரிப்பதில் தயக்கமொன்றும் இருக்காது. இப்பொழுது தஞ்சை ஜில்லாவில் வெள்ளாமை எல்லாம் எலியினால் பாழாகிவிட்டது என்று தெரிந்த பிறகு இந்த ராட் கண்ட்ரோல் ஸ்கீம் அங்கே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அது போல் கோவை ஜில்லாவிலும் அவசியமானால் அனுமதிக்கப்படும் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. சுப்பையா முதலியார் அவர்கள் பேசுகிற பொழுது கிராஷ் புரோகிராமுக்கு ரொம்பவும் குறைவாக பணம் ஒதுக்கியிருக்கிறார்கள்; ரூ. 6,36,000 தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். கிராஷ் புரோகிராம் பூராவும் இது அல்ல. இப்பொழுது வெளிநாட்டிலிருந்து drills வேண்டுமென்றால் தருவிப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். வேறு இலாக்காவிலிருந்தும் பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அதோடுகூட நம்முடைய விவசாய இலாகாவிலே ஒரு வொர்க்ஷாப் வைத்து ஹாண்டு போரிங் செட்டுகள் மற்றபடி இந்த ஃபில்டர் ட்யூப்வெல் போன்றவைகளையெல்லாம் நம்முடைய தொழில் இலாகாவிலேயே செய்யவேண்டுமென்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. இப்பொழுது முதல் கட்டமாக ரூ. 6 லட்சத்திற்கு மேற்பட்டுக்கொடுத்திருக்கிறோம் இது வெற்றிகரமாக நடந்தால் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு ஏராளமான பணம் ஒதுக்கப்படும். நம்முடைய ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால், விவசாயத்தைப் பொறுத்தவரையில் இனி முக்கியமாகக் கவனம் செலுத்தவேண்டியது இந்த டியூப் வெல்ஸ் ஸ்கீம் தான். நமக்கு இருக்கக்கூடிய நீர்ப்பாசன வசதிகளையெல்லாம் ஏற்கனவே ஓரளவுக்கு நாம் பயன்படுத்திவிட்ட காரணத்தால் இனிமேல் அண்டர் கிரவுண்டு வாட்டர் சப்ளை, கிரவுண்டு வாட்டர் இவைகளைத்தான் நாம் நம்பியிருக்கவேண்டியிருக்கிறது. நம்முடைய நாட்டிலே அதற்கான இயந்திரங்கள் செய்வதற்காக முதற்படியாக இப்பொழுது இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாயில் டெஸ்டிங் ஸ்டேஷன் ஒவ்வொரு பிளாக்கிலும் ஒன்று வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதற்கு அயல்நாட்டுக் கருவிகள் தேவைப்படுகின்றன என்று கனம் அங்கத்தினருக்குத் தெரியும். அவைகள் சுலபமாகக் கிடைக்கவில்லை. சர்க்காரைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு சாயில் டெஸ்டிங் ஸ்டேஷன் வைக்கவேண்டுமென் [illegible]

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [21st October 1964

வைத்துக் கொண்டிருக்கிறோம். கூடிய சீக்கிரம் செய்யவேண்டுமென்பது இந்த இலாகாவினுடைய கருத்தாக இருந்து கொண்டிருக்கிறது. முன்னூற்றெழுப்பத்தைந்து பிளாக்குகளிலும் சாயில் டெஸ்டிங் ஸ்டேஷன் வைக்க வேண்டுமென்று சொன்னால், இப்பொழுதிருக்கக்கூடிய நிலைமையில் அதற்கு வசதி இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீமதி பொன்னம்மாள் அவர்கள் பேசுகிறபோது நம்முடைய கிராம சேவக்குகள் செய்கின்ற வேலையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்பொழுது 'கிராம சேவக்'களுக்கு விவசாய வேலையைத்தவிர வேறு வேலை கொடுப்பது இல்லை. அது மாத்திரமல்லாமல் ஒவ்வொரு பிளாக்கிலும் டஸ்டர்களும், ஸ்பிரேயர்களும் கொடுத்திருக்கிறோம். சில பிளாக்குகளில் பவர் ஸ்பிரேயர்கள் கொடுத்திருக்கிறோம். இவற்றைப் பயன்படுத்தி அந்தந்த இடத்திலே பெஸ்ட் கண்ட்ரோல் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். பெஸ்ட் கண்ட்ரோலைப் பொறுத்தவரையில் ஒரு தடவை மருந்து அடித்தால் அது கண்ட்ரோல் ஆவது இல்லை. ஸ்ரீமதி குழந்தையம்மாள் அவர்கள் ஒரு தரம் மருந்து அடித்தால் பூச்சிகள் சாகவில்லையென்று சொன்னார்கள். இரண்டு தரம், மூன்றுதரம்கூட அடிக்கவேண்டும். ஒரே ஸ்பிரேயில் பெஸ்டுகளெல்லாம் செத்துப்போவதில்லை. சில பெஸ்டுகள் ஒரு தரம் ஸ்பிரே பண்ணினால் இறந்து போய்விடும். சில பெஸ்டுகளுக்கு இரண்டு மூன்று தரம் ஸ்பிரே பண்ண வேண்டிய நிலைமை இருக்கிறது. பெஸ்ட் கண்ட்ரோலைப் பொறுத்த வரையில் ஏராளமான ஆராய்ச்சி செய்யப்பட்டாலும் இரண்டு முறை, மூன்று முறை ஸ்பிரே செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, திரு. ஆறுமுகம் அவர்கள் மின்சார வசதியை விஸ்தரித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதுவும் கவனிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 21,25,000 under Demand No. XVI—Agriculture".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XVII—FISHERIES.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,40,700 under Demand No. XVII—Fisheries".

The Demand was put and carried and the Grant was made.



21st October 1964]

DEMAND NO. XVIII—ANIMAL HUSBANDRY.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 45,49,700 under Demand No. XVIII—Animal Husbandry".

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: கிராஷ் புரோகிராம் மூலமாக ரூ. 41 லட்சம் செலவழிக்கப் போவதாகத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது 'establishment of 16 Sheep and Wool Extension Centres, six Intensive Poultry Development Blocks, one sheep section, four Intensive Egg and Poultry Production-*cum*-Marketing Centre' இப்படி நான்கு விதமான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அயிட்டத்தையும் பார்க்கும்பொழுது 'the expenditure is likely to be incurred' என்று போடப்பட்டிருக்கிறது. செய்யக்கூடிய திட்டமாக இருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொன்றிற்கும் ஒரு டாக்கெட்டாவது ஸ்பிக்ஸ் பண்ண வேண்டும். உதாரணமாக அபிஷேகப்பட்டியில் ஒரு ஷீப் செக்ஷன் வரப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1964-65 ஆம் ஆண்டு முடிவடைய இன்னும் நாலைந்து மாதங்கள்தான் இருக்கின்றன. இப்பொழுதே முன்னதாக ஏதாவது வேலைசெய்திருக்கிறார்களா என்று பார்த்தால் ஒன்றுமில்லை. பேப்பரில்தான் கிராஷ் புரோகிராம் இருப்பதாகத் தெரிகிறது. ஆக்ஷன் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. இதை சர்க்கார் உன்னிப்பாகக் கவனித்து உடனடியாக இந்தத் திட்டங்களை நடைமுறையில் கொண்டுவர வேண்டும். குறிப்பாக 'Intensive Egg and Poultry Production-*cum*-Marketing Centre' என்பது உடனடியாக நமக்கு பயனைத்தரக்கூடியது ஒரு வருஷத்திற்குள்ளேயே நாம் இந்தத் திட்டத்தின்கீழ் புரொடக்ஷனை எதிர்பார்க்க முடியும். புரொடக்ஷன் இல்லாவிட்டால் இத்திட்டத்தினால் ஒன்றும் பிரயோசனம் இல்லை. ஆகவே, குறிப்பிட்டிருக்கும் எல்லாத் திட்டங்களையும் உடனடியாகச் செயல்படுத்துவதற்கு இப்பொழுது முதற்கொண்டே வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று முடித்துக் கொள்கிறேன்.

திருமதி சி. குழந்தையம்மாள்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த 1965-66-ம் ஆண்டில் தீவிரமாக பன்றி வளர்ப்பு யூனிட் ஒன்றை நிறுவத் திட்டமிட்டு அந்தத் திட்டம் செங்கற்பட்டு மாவட்டத்தில் அமலாகும் என்று தெரிகிறது. பன்றிக்கு உணவாக ஆகக் கூடியது குச்சிக்கிழங்கு என்று சொல்வார்களே அது. அது நல்ல உணவாக ஆகிறது. அதைச் சாப்பிடுவதால் பன்றிக்கும் எந்த கெடுதலோ வியாதியோ வருவதில்லை. இந்தக் கிழங்கு ஈரோடு, சேலம் மாவட்டங்களில் நிறையக் கிடைக்கிறது. பன்றி வளர்ப்பில் பன்றிக்கு ஆகாரமாகக் கூடிய இந்தக் குச்சிக்கிழங்கு [illegible]வையும் சேர்த்து நல்ல திட்டமாகத் தீவிரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[21st October 1964

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : கனம் சபாநாயகர் அவர்களே, ஷீப் பாரம் சம்பந்தமாக விவசாய இலாகா அமைச்சர் அவர்கள் உடனடியாக வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். அதற்கு வேண்டிய திட்டம் தயாராகியிருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். ஆகவே the expenditure is likely to be incurred என்பதின் பேரில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கிறேன்.

பன்றி வளர்ப்பு சம்பந்தமாக ஒரு சுவையான தகவல் கிடைத்திருக்கிறது. இந்தப் பன்றிகளெல்லாம் 'வெஜிடேரியன்ஸ்' (சிரிப்பு) இவை சாதாரணமாக தெருக்களிலே ஓடும் வரையிட்டி அல்ல. (திரு. கே. டி. கோசல்ராம்: அதனால் வெஜிடேரியன்ஸ் எல்லாம் சாப்பிடலாம்.) திருமதி குழந்தையம்மாள் தான் சோக் இப் பன்றியும் ஜாதிப்பன்றிதான் என்று சொல்லுகிறார்கள். அவைகளின் உணவு சம்பந்தமாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப்** : தலைவர் அவர்களே ஒன்று சொல்ல வேண்டும். மனுஷர்கள் சாப்பிடும் பிராணிகள் எல்லாமே வெஜிடேரியன்ஸ். நான்-வெஜிடேரியன்ஸ் அல்ல.

Sir, I would like to know whether there are any non-vegetarian animals. For instance, goats, sheet and chickens are all vegetarians and not non-vegetarians.

MR. SPEAKER : That is the opinion of the hon. Member.

THE HON. SRI R. VENKATARAMAN : Does it not show that the animals which are non-vegetarians are not eaten by men?

MR. SPEAKER : What about human flesh? That also is not consumed.

The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 45,49,700 under Demand No. XVIII—Animal Husbandry".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XIX—CO-OPERATION

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,00,300 under Demand No. XIX—Co-operation."

**திரு. வை. சங்கரன்**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையின் கீழ் 35 சீனியர் இன்ஸ்பெக்டர்களை நியமிக்கப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி நியமிப்பதற்கு முன்னால் இந்த இலாக்காவிலுள்ள ஒரு குறையைத் தீர்க்க வேண்டும், இந்த இலாகாவிலே பத்துப்பதினைந்து ஆண்டு



21st October 1964] [திரு. வை. சங்கரன்]

களுக்கு மேலாக ஜூனியர் இன்ஸ்பெக்டர்கள் சீனியர் இன்ஸ்பெக்டர்களாக ஆக்டிங் வேலை பார்த்து விட்டு கடைசியில் டிமோஷன் போல ரிவர்ட் பண்ணப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஹார்டுஷிப் இருக்கிறது. புதிதாக சீனியர் இன்ஸ்பெக்டர்களை நியமிப்பதற்கு முன்னால் இவர்களுக்கு அந்தப் பதவிகளில் நிரந்தரமாக்கப்பட வேண்டும். எனக்கு நன்றாகத் தெரியும் எங்கள் ஊரில் ஒருவர் 30 ஆண்டுகள் சீனியராக ஆக்டிங் வேலை பார்த்து விட்டுக் கடைசியில் எந்த விதமான அனுகூலமும் இல்லாமல் நிராதரவாக நிர்க்கதியாக ரிட்டையராகி இருக்கிறார். காரணம் என்னவென்றால் ஏதோ ஒருசில டிப்பார்ட்டுமெண்டு எக்சாமினேஷன்கள் பாஸ் செய்யவில்லை என்பதுதான். இந்த மாதிரி கேஸ்களை இரக்கத்தோடு பார்க்க வேண்டும். அவர்களுக்கு ஏதாவது சலுகை காட்டி அவர்கள் சர்விசை ரெகுலரைஸ் செய்ய வேண்டும். அம்மாதிரி வேறு சில இலாக்காகளில் சலுகைகள் காட்டப்படுவதாகத் தெரிகிறது.

அடுத்தபடியாக கூட்டுறவு பால் சப்ளை யூனியன் சம்பந்தமாக தற்காலிகமாக ரூ. 100 ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு விருத்தி செய்து இதற்கும் சீனியர் இன்ஸ்பெக்டர்கள் போடப் போகிறார்கள். இந்தத் திட்டத்தையும் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். ஓரளவுக்கு இது நகர்ப்புறங்களில் லாபகரமாக இல்லையென்று தெரிகிறது. நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். பால் விநியோகத்தில் டிமாண்டு பீரியட் என்றும் லீன் பீரியட் என்றும் இருக்கிறது. கல்யாண காலங்களில் அதிகமாக டிமாண்டு இருக்கிறது. அப்பொழுது விலையைச் சற்று உயர்த்தினால் லாபமாக இருக்கும். டிமாண்டு குறைந்த மற்ற காலங்களில் விலையைக் குறைக்கலாம். அப்படிச் செய்தால் நலமாயிருக்கும் என்று சொல்லிக்கொண்டு முடிக்கிறேன்.

**திருமதி சி. குழந்தையம்மாள்** : கனம் சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு என்ற தலைப்பில் கூடுதலாகத் தொகை கேட்டிருப்பதை ஆதரிக்கிறேன். பால் பண்ணை அபிவிருத்தி பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது ஈரோட்டிலிருந்து சென்னைக்குப் பால் வருகிறது. சென்னைக்குப் பக்கத்தில் மாதவரத்திலிருந்தும் பால் வருகிறது. இதிலே விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலை கொடுக்கப்பட வேண்டும். இப்பொழுது அவர்களுக்குக் கொடுக்கப்படும் விலைக்கும் விற்பனை விலைக்கும் இடையே பதினெட்டு பைசா வித்தியாசம் இருக்கிறது. இதைப்பற்றி இந்தச் சபையிலே நான் பல முறை கேட்டுக்கொண்டிருக்கிறேன். விவசாயிகளுக்கு இன்னும் ஆறு பைசா சேர்த்துக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்குக் கட்டுப்படியாகும். சென்ற மாதத்திலிருந்து பருத்திக்கொட்டை விலை குண்டால் ஒன்றுக்கு ரூ. 5 அதிகமாக ஏறியிருக்கிறது. இன்னும் அடுத்து வரும் மாதங்களில் அது 7, 8 ரூபாயாக உயர்ந்துவிடலாம். கூட்டுறவு முறையில் உணவு தானியங்களை வாங்கி வைத்து இனி [illegible] பால் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பருத்திக்

கொட்டைகளை வாங்கி வைத்து வினியோகித்தால் நலமாக இருக்குமென்று வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறேன். ஈரோடு மாதவரம் பண்ணைகளிலுள்ள விவசாயிகள் தவிர மற்றச் சிறிய சங்கங்களில் இருக்கும் விவசாயிகளுக்கும் ஊக்கமளித்தால்தான் உண்மையிலேயே பால் உற்பத்தித் திட்டம் தீவிரமாகும்.

உணவுத் தானியங்களை விநியோகிப்பதிலே கூட்டுறவு சொசைட்டிகளுக்கு முதலிடம் கொடுக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் சில கிராமங்களில் கூட்டுறவு சொசைட்டிகள் இல்லை. கூட்டுறவு சொசைட்டிகள் இருந்தால் தான் பொருளைக் கொடுக்க முடியும் என்று சொல்லப்படுகிறது ஆகவே கிராமக் கூட்டுறவு சொசைட்டி இல்லாத இடங்களிலெல்லாம் கூட்டுறவு சொசைட்டிகளை அமைக்க வேண்டுமென்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஒரு லிட்டருக்கு 6 ந. பை. வீதம் அதிகப்படியாகக் கொடுக்கும் திட்டத்தை மாநிலம் பூராவிலுமுள்ள விவசாயிகளுக்கும் விஸ்தரிக்கவேண்டும் என்று வற்புறுத்தி என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* **திருமதி ஏ. ஸ். பொன்னம்மாள்:** தலைவர் அவர்களே, இந்தக்
10-00 a.m. கூட்டுறவு உப மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே எல்லாவற்றையும் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகவே செய்யவேண்டும் என்ற அடிப்படையில் நாம் அதற்காக இலட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இதிலேயுள்ள சில அதிகாரிகள் மிகவும் நன்றாகத் தங்களுடைய பணியைச் செய்து வருகிறார்கள். நல்ல முறையில் திட்டங்களைப் பரிசீலனை செய்து பார்த்து வருகிறார்கள். தப்பிதத்தைக் கண்டு பிடித்து நன்றாக வேலை செய்யும் அதிகாரிகளைப்பற்றிப் பாதிக்கப்பட்டவர்கள் அமைச்சர்களிடத்திலே கூறினால் உடனே நன்றாக வேலை செய்கிறவர்களை அந்த இடத்தை விட்டு மாற்றுவது தான் வழக்கமாகிறது. இம்மாதிரி நிலைமை கூட்டுறவிலே இருந்தால் அது கூட்டுறவுக்கோ நாட்டுக்கோ நமக்கோ நல்லதல்ல என்பதை நான் முதலிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நில அடமான பாங்க் மூலமாக நிலத்தின் மீது கடன் கொடுக்கப்படுகிறது. நிலத்திற்குப் பாட்டன், முப்பாட்டன் பேரில் பட்டா இருந்திருக்கும். நிலம் பரம்பரை பரம்பரையாக அனுபவத்தில் இருந்து வந்திருக்கும். 100 வருஷங்களுக்கு முன்பு நிலத்தின் மதிப்பு 100 ரூபாய் என்று எழுதப்பட்டிருக்கும். அதே நிலத்திற்கு இப்பொழுது 20,000 ரூபாய் அளவுக்கு மதிப்பு அதிகரித்திருக்கும். ஆனால், தற்போதைய மதிப்பை வைத்துப் பார்க்காமல் பூர்வீகப் பட்டாவில் கண்டுள்ள மதிப்பை அடிப்படையாக வைத்துக் கடன் கொடுக்க முன்வருகிறார்கள். இதனால் இந்த மான்யத்தில் ஒதுக்கப்படுகிற பணம் சாதாரண விவசாயிகளுக்குப் போய்ச் சேர முடியாத அளவுக்கு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. தற்போதைய மார்க்கட் வால்யு அடிப்படையில் கடன் வேண்டு





மென்று நானே எனக்காக முயற்சி செய்து பார்த்தேன். மார்க்கட் வால்யு அடிப்படையில் கடன் கிடைக்கவில்லை. இலாகாவில் உள்ளவர்களுக்கு ஜீப் வசதி செய்து கொடுத்து, மேற்கொண்டு அதிகாரிகளையும் நியமித்திருக்கிறோம். இதெல்லாம் பாராட்டத்தக்கது தான். என்றாலும், இத்தகைய குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. சாதாரண, நடுத்தர விவசாயிகள் 10, 20 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள்—நில அடமான பாங்கில் கடன் வாங்க வேண்டுமென்று முயற்சி எடுத்தால் இத்தகைய சிரமங்கள் இருக்கின்றன. மிகப்பெரிய விவசாயிகளைப்பற்றி நான் ஒன்றும் பேசவில்லை. அவர்கள் எப்படியும் வாங்கிவிடுகிறார்கள். ஆனால் சிறிய விவசாயிகள் கடன் வாங்குவது சிரமமாக இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் சொல்கிறேன். நான் ஏழு ஆண்டுகளாக முயற்சி செய்தும் ஒன்றும் முடியவில்லை. நமக்கே இப்படியிருந்தால் நம்மைவிட மோசமாக இருக்கும் சாதாரண விவசாயிகளின் கதி என்ன ஆகும் என்பதைப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். பழைய பட்டாவிலுள்ள மதிப்பைத் தூக்கி வைத்துவிட்டு, தற்போதைய மதிப்பைக் கணக்கிட்டு உடனடியாகக் கடன் கிடைக்கச் செய்தால் அது இன்னும் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கூட்டுறவு சொஸைடி மூலமாக இன்னும் உர விநியோகம் செய்கிறோம். அறுவடையாகும் சமயத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் ப்ரொக்யூர்மெண்ட் பண்ணிக் கொண்டிருக்கிறோம். விவசாயிகள் சொல்லும் பெரிய குறை என்னவென்றால், உரத்தின் விலை அதிகமாக இருக்கிறதென்பது. 'நெல்லை ஒரு மூட்டை ரூ. 20-க்கு வேண்டுமானாலும் அளந்துகொள்ளட்டும். ஆனால், பிண்ணாக்கு மூட்டையையும் அந்த இருபது ரூபாய்க்காவது கிடைக்கச் செய்யுங்கள்' என்று அவர்கள் கேட்கிறார்கள். இதை எப்படி நடைமுறையில் சாத்தியப்படும்படி செய்வது என்பதை அமைச்சரவை முழுவதும் பரிசீலனை செய்து, ஒரு மூட்டை நெல் என்ன விலைக்கு விற்கிறதோ அந்த விலைக்கே ஒரு மூட்டை பிண்ணாக்கு இருக்கவேண்டுமென்று நிர்ணயம் செய்துவிட்டால், விவசாயிகளுக்குக் கூட்டுறவு முறையில் நல்ல காரியம் செய்தவர்களாவோம்.

பால் பண்ணைகளையும், பால் வழங்கும் சங்கங்களையும் ஆங்காங்கு ஏற்படுத்தியிருக்கிறோம். பால் கறக்கும் மாட்டுக்குரிய கடனைக் கட்டிய பிறகு புதிதாகக் கடன் மனு போடும்போது, கடன் கிடைப்பதில் கால தாமதம் ஆகிறது. அதையும் உடனடியாக நிவர்த்தி செய்யும் வகையில், பால் பண்ணைக்குக் கடன் கேட்டால், துரிதமாகக் கடன் வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று வலியுறுத்திக்கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* **திரு. ஏ. ஆறுமுகம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு உப மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுகையில் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

வடாற்காடு ஜில்லாவில் பல கிராமங்கள் இருந்தும் அந்தக் கிராமங்களில் தனியாகக் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கவேண்டு [illegible] பணம் கட்டியும் கூட கோரிக்கையை அனுப்பிப் பல மாதங்
[illegible]

கள் ஆகியும் கூட, கூட்டுறவுச் சங்கம் தனியாக அமைக்கவேண்டிய நடவடிக்கை சர்க்காரிலே எடுத்துக்கொள்ளப்படவில்லை. காரணம், அதற்கு எத்தனையோ சட்ட திட்டங்களும் விதிகளும் இருக்கின்றன என்று சொல்லிக் கால தாமதம் செய்கிறார்கள். நம்முடைய சர்க்காருடைய கொள்கைப்படி எல்லாம் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாகத்தான் செய்யவேண்டுமென்ற நிலை இருக்கிறது. கூட்டுறவு இயக்கம் வெற்றிகரமாக நடைபெற்று, மக்களுக்கு நல்ல பலனை அளிக்க வேண்டுமானால், பழைய சட்ட திட்டங்களையும், விதிகளையும் பார்த்துக்கொண்டிராமல் தேவையான சட்ட திட்டங்களையும், விதிகளையும் தளர்த்த வேண்டும். அந்த வகையில் எந்த எந்தக் கிராமங்களுக்குத் தனித்தனியாகக் கூட்டுறவு சங்கங்கள் வேண்டுமென்று கேட்கிறார்களோ அங்கெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக்கொடுக்க சர்க்கார் தாராளமாக முன்வரவேண்டுமென்ற கருத்தைச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள் இந்த உபமானியக் கோரிக்கை பற்றிய அறிக்கையைப் படித்திருந்தாரானால், சீனியர் இன்ஸ்பெக்டர்களை எதற்காக நியமித்திருக்கிறோம் என்பது தெரிந்திருக்கும். ஆடிட் செய்வதிலே தாமதம் ஆவதனால் அதைத் துரிதப்படுத்தவேண்டும் என்பதற்காக அதிகப்படியாக சீனியர் இன்ஸ்பெக்டர்களை இப்பொழுதே நியமித்திருக்கிறோம். அவர்களுக்கு ப்ரொமோஷன் குறைந்து போயிற்று என்று அவர்கள் சொன்னார்கள் அவர்களுக்கு ப்ரமோஷன் கிடைப்பதற்காக நாம் இந்தத் திட்டத்தைக் கொண்டுவரவில்லை. சில சமயம் அம்மாதிரி கொண்டு வருவதுண்டு. 'ஸ்டாக்னேஷன்' இருக்குமானால், 'ஸுப்பர்-ந்யூமரரி போஸ்ட்' ஏற்படுத்துவது உண்டு கூட்டுறவுச் சங்கங்களை ஆடிட் செய்வதைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த இன்ஸ்பெக்டர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். சீனியர் இன்ஸ்பெக்டர்கள் என்றால் ஆடிட் செய்வதற்கு அவர்களுக்குத் தகுதி இருக்க வேண்டும். அவர்கள் பரீட்சையில் தேறியிருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள்தான் இதற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். 'பரீட்சையில் தேறாதவர்கள்' என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்டவர்களையெல்லாம் இதிலே எடுத்துக்கொள்ள முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் திருமதி குழந்தையம்மாள் சொல்கிறபோது, பால் விலையை அதிகரிக்கப் போவதைப் பால் சப்ளை செய்கின்றவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். சர்க்கார் இப்பொழுது மாதவரம் பால் பண்ணை சம்பந்தமாக முயற்சி எடுத்துக்கொண்டு அதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த மாதவரம் பால் பண்ணைக்கு சப்ளை செய்கின்றவர்களுக்கு இந்த அதிகப்படியான சலுகை கொடுக்கப்படும்.

கனம் அங்கத்தினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் பேசுகின்றபோது, கூட்டுறவு நில அடமான பாங்கிலே கடன் கொடுக்கும்போது இரண்டு, மூன்று வருஷங்களுக்கு முன்னால் இருந்த ஒரு



மதிப்பை வைத்துப் பணம் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். அம்மாதிரி நிலைமை சில வருஷங்களுக்கு முன்பு இருந்தது. ஆனால், இப்பொழுது 'மார்க்கட் வால்யூ' பிரகாரம் கொடுக்கவேண்டுமென்று நாம் உத்தரவு போட்டிருக்கிறோம். ஒரு வேளை திருமதி பொன்னம்மாள் அவர்களுடைய நிலத்தினுடைய மதிப்பு குறைந்திருக்குமோ என்னவோ! அது எனக்குத் தெரியாது. இப்பொழுது இருக்கிற விதிகளில் தவறு இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், இப்பொழுது உரம் கொடுப்பதிலும் சர்க்கார் கவனம் செலுத்தி, 'ஸப்ஸிடைஸ்டு ப்ரைஸ்' ஸில் தான் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இன்னும் அதிகமாகக் குறைத்துக்கொடுப்பது என்பது சரியாக இருக்காது.

கனம் அங்கத்தினர் திரு. ஏ. ஆறுமுகம் அவர்கள் பேசுகிறபோது, கூட்டுறவு சொஸைட்டியைத் தனித்தனியாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி பிரித்தாலும் அது viable ஆக இருக்கவேண்டும். ஒரு கூட்டுறவு சொஸைட்டியைப் பிரித்துக் கொடுத்தால், அது தானாக இயங்க முடியுமா, நஷ்டமில்லாமல் ஓடிக்கொண்டிருக்க முடியுமா என்பதை நாம் பார்க்க வேண்டும். கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற இடங்களில் viable ஆக இருக்கும் என்று கனம் அங்கத்தினர் கருதினால், அதைப் பிரித்துக் கொடுக்க முடியும். அந்தக் கொள்கையின் அடிப்படையிலே தான் பிரித்துக்கொண்டிருக்கிறோம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** 'மார்க்கெட் வால்யூ' என்றால், எந்த மார்க்கெட் வால்யூ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுதிருக்கிற 'மார்க்கெட் வால்யூ'-வைக் கணக்கிட 'அஸெஸ்ஸர்கள்' இருக்கிறார்கள். அந்த அஸெஸர்கள் மதிப்பிட்டு 'மார்கெட் வால்யூ' என்னவென்று சொல்வார்கள். அதிலே 50 சதவிகிதம் அளவுக்குக் கடன் கொடுக்கிறார்கள்.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,00,300 under Demand No. XIX—Co-operation."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XX—INDUSTRIES.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 27,37,100 under Demand No. XX—Industries."

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** கனம் சபாநாயகர் அவர்களே, தொழில்துறையை எடுத்துக்கொண்டால் காட்டேஜ் இண்டஸ்ட்ரி என்று ஒரு இனம், வில்லேஜ் இண்டஸ்ட்ரி என்று ஓர்

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [21st October 1964

னம். இரண்டுக்கும் ஒன்றுக்கொன்று கோவார்டினேஷன் இல்லை. இரண்டு வகையிலும் ப்ளாக் லெவலில் எடுத்துக்கொண்டால் ஒருங்கிணைந்து சீராக வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது. காட்டேஜ் இண்டஸ்டரி என்பதற்கு இன்றையதினம் டெக்னிகல் ஹெட் இல்லை. ஆகவே இது இரண்டையும் தொழில் இலாகாவின் கீழ் ஒன்றாக இணைக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரண்டு துறையிலும் ஒரு இலாகாவின் கண்ட்ரோல் இருந்தால்தான் நலமாக இருக்கும் என்ற கருத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்திலே முதல் இடமாக பொற்கொல்லர்களுக்குக் கடன் வசதி செய்து கொடுப்பதற்கு என்று அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டு இருப்பதாகப் போடப்பட்டு இருக்கிறது. அது மிகவும் அவசியமானது. ஆனால் இதில் ஒரு விஷயம் பொற்கொல்லர்களுக்கு 2,000 ரூபாய் வரை கடன் உதவி அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நானூறு, ஐந்நூறு ரூபாய்களுக்கு மேல் கொடுப்பதே கிடையாது. அதையும் ஒரு சமயத்தில் கொடுக்காமல் இரண்டு தவணை, மூன்று தவணைகளில் கொடுப்பதாகச் சொல்லி நிறுத்தி வைத்துக் கொள்கிறார்கள். முதல் தவணையில் கொடுக்கிற பணத்தைக் கொண்டு எந்தத் தொழிலையும் ஆரம்பிக்க முடியவில்லை. அதுவும் விரைவாக அவர்களுடைய வறுமையின் காரணமாகக் குடும்பத்தில் அடிப்பட்டுப் போகும் நிலைதான் உண்டாகிறது. அதிகாரிகள் வந்து பார்க்கும்போது முதல் தவணைப் பணத்தைக் கொண்டு தொழிலைத் துவக்காததனால் மறு தவணைப் பணம் கொடுக்கப்படமாட்டாது என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே கொஞ்சம் மனிதாபிமான இரக்கத்தோடு இந்தக் கடன் உதவியினால் அவர்கள் பயன்பெறத்தக்க வகையில் இந்த உதவியை அளிக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். 2,000 ரூபாய் கொடுக்கிறோம் என்றால் 2,000 கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அங்கங்கே தொழிற் பேட்டைகளை ஏற்படுத்தி வருகிறார்கள். சிறு சிறு தொழில்களில் மிக அதிகமான பேர்கள் ஈடுபடும்படியாகச் செய்ய வேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கம். ஆனால் இன்றைக்கு நடைமுறையில் நடப்பது என்னவென்றால் கொழுத்த பணக்காரர்கள், பெரிய முதலாளிகள், தொழில் துறையில் பெரிய நிமிங்கலமாக இருக்கக்கூடியவர்களுக்குத் தான் அந்தத் தொழிற்பேட்டைகளில் யூனிட் அலாட் செய்கிறார்கள். இவர்களுக்கு அலாட் செய்யாவிட்டாலும் சொந்தத்தில் பெரிய முதலீடு செய்து தொழில் நடத்த வசதி உடையவர்கள். இவர்களுக்குக் கொண்டுபோய் பத்து யூனிட், இருபது யூனிட் என்று அலாட் செய்வது நம்முடைய தத்துவ அடிப்படையில் சரியா என்று பார்க்க வேண்டும். பொதுவாக சிறிய முதல் போட்டுத் தொழில் ஆரம்பிக்க முன் வருகிறவர்களுக்கு நாம் இந்தத் தொழிற்பேட்டைகளில் முதல் இடம் அளிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



21st October 1964]

**திருமதி சி. குழந்தையம்மாள்:** கனம் சபாநாயகர் அவர்களே, சிறு தொழில் என்ற அடிப்படையில் பெரிய பெரிய தொழில்களுக்குத் தேவைப்படுகிற சிறிய சிறிய பொருள்களை உற்பத்தி செய்ய நாம் திட்டமிடுகிறோம். பெரிய தொழில்களுக்கு பீடர் இண்டஸ்ட்ரியாக இந்தச் சிறு தொழில்களை அமைக்கிறோம். இந்தத் தொழிற்பேட்டைகளில் எனக்கு முன் பேசிய உறுப்பினர் சொன்னமாதிரி கோடிக்கணக்கான ரூபாயைப் போட்டு தொழில் ஏற்படுத்தத் தகுதி வாய்ந்த பெரிய பெரிய முதலாளிகளுக்கு யூனிட் அலாட் செய்யக் கூடாது. இன்றைக்கு அவ்வாறு கொடுத்திருக்கிறார்கள். யார் யாரிடமிருந்து தொழில் பேட்டைக்காக அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்தார்களோ, அவர்கள் அந்த இடத்தில் தொழில் ஏற்படுத்த அனுமதி கேட்கிறபோது "உங்களுக்கு அனுபவம் இல்லை. ஆகவே தருவதற்கு இல்லை" என்று மறுக்கிறார்கள். இது சரியான வாதம் அல்ல. தொழில் நடத்த அனுமதி தந்தால் அவர்களும் சிறிது நாட்களில் பூரண அனுபவத்தைப் பெற்றுவிடுகிறார்கள். ஆகவே பெரிய முதலாளிகளுக்கு அனுபவம் இருக்கிறது என்பதற்காகத் தொழில் பேட்டைகளில் யூனிட் ஒதுக்குவதைவிட்டு சிறிய சிறிய முதல் போட்டு தொழில் ஆரம்பிக்க முன் வருகிறவர்களுக்கும் கூட இங்கே அதிக இடம் தர வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறிய சிறிய சாமான்களைச் செய்ய நாம் முன் வருகிறபோது நமக்கு ஒரு கஷ்டம் ஏற்படுகிறது. நிலக்கரி, இரும்பு போன்ற பொருள்களை நாம் வெளியில் இருந்துதான் தருவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த மூலப்பொருள் கிடைக்கக் கூடிய இடத்தில் அதற்கு 4½ ரூபாய் என்றால் நம்மிடத்தில் வந்து சேருவதற்குள் அதன் அடக்கவிலை 9 ரூபாயாகிறது. நாம் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களின் விலையோடு இந்தச் செலவையும் கூட்டுகிறபோது வெளி மாநிலத்தில் அவற்றுக்கு உள்ள விலையைவிடச் சற்றுக் கூடப்போகிறது. ஆகவே நம் சரக்கைக் காட்டிலும் வெளி இடத்துப் பொருள்களைப் பெரும் தொழில்காரர்கள் வாங்க இடமேற்படுகிறது. இதில் அரசாங்கம் சற்றுக் கவனம் செலுத்தி நம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்கள் சரியான முறையில் விற்பனை ஆக தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாம் சிறு தொழில்களை அபிவிருத்தி செய்கிறோம். அபிவிருத்தி செய்கிறோம் என்று சொல்கிறோமே தவிர அவற்றுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் சரியான முறையில் கிடைக்கிறதா என்று பார்ப்பதில்லை. மாதம் ஒன்றுக்கு 10 டன் ஜிங் ஷீட் வேண்டுமென்று கேட்டால் ⅓ டன் கொடுக்கிறார்கள். டன் 1,200 ரூபாய் என்றால் 1,800 ரூபாய் வெளியில் கொடுத்தால் கிடைக்கிறது. இது இரண்டையும் பரிசிலனை செய்து பத்து டன் என்று கேட்கிற இடத்தில் 5 டன்னாவது கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[21st October 1964

* **திரு. ஏ. ஆறுமுகம் :** கனம் சபாநாயகர் அவர்களே, எங்களுடைய வடாற்காடு மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகும். அதன் காரணமாகச் சென்ற மாதம் 15, 16-ஆம் தேதிகளில் இண்டஸ்ட்ரியல் செமினார்' என்று நடத்தி அந்த மாவட்டத்திலே பெரிய பெரிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் என்பதாகத் தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம். தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய மாவட்டம் அது. வருடத்தில் அங்குள்ள விவசாயக் கூலிகளுக்குப் பாதி நாட்கள்தான் வேலை இருக்கும். மற்ற நாட்களில் வேலை கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே 5-வது ஐந்தாண்டு திட்டத்திலாவது அந்த மாவட்டத்தில் பல தொழில்களை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துகொள்கிறேன். வணக்கம்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, திரு. சுப்பையா முதலியார் அவர்கள் கிராம கைத் தொழில் போர்டின் கீழ் செயல்படுகிற சிறு தொழில்களுக்கும், நமது அரசாங்க தொழில் வர்த்தக இலாகாவின் கீழ் செயல்படுகிற சிறு தொழில்களுக்கும் இடையில் ஒரு இணைப்பு இல்லை. ஆகவே இது இரண்டையும் இணைக்கலாம் என்று யோசனை தெரிவித்தார்கள். இப்போது நாம் அமைத்திருக்கிற முறை என்னவென்றால் வில்லேஜ் இண்டஸ்ட்ரி என்று என்ன என்ன குறிப்பிட்டு இருக்கிறோமோ அவை எல்லாம் காதி, வில்லேஜ் இண்டஸ்ட்ரி என்று இணைக்கப்பட்டு இருக்கிறது. ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரி சம்பந்தமாக நம்முடைய தொழில் இலாகா கவனம் செலுத்தி வருகிறது. வில்லேஜ் இண்டஸ்ட்ரி என்ற இனத்தைக் காதியுடன் இணைப்பதுதான் நன்மையாக இருக்கும் என்று தனிக் கமிஷன் போட்டுப் பார்த்துவிட்டார்கள். அவ்வாறு முதலில் பிரிக்க இருந்தபோதே திரு. சுப்பையா முதலியார் இந்தக் கருத்தைச் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இப்போது அவர் அப்படிச் சொல்வதில் இருந்து அவ்வாறு இணைத்தது சரியான முறையில் செயல்படவில்லையோ என்று எண்ண இடமேற்படுகிறது. இப்போது நாம் கோரியிருப்பது நம்முடைய தொழில் வர்த்தக இலாகாவின் கீழ் இயங்குகிற ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டரி சம்பந்தமானதுதான்.

அடுத்தாற்போல் சங்கரன் அவர்கள் பேசுகிறபோது பொற்கொல்லர்களுக்குக் கொடுக்கப்பட்ட உதவி பாதி பாதியாகக் கொடுக்கப்பட்டதால் அவர்கள் கஷ்டப்பட்டார்கள் என்று சொன்னார்கள். எந்தத் தொழில் வைக்கிறேன் என்று சொல்கிறார்களோ அந்தத் தொழிலைப் பார்த்து அதற்கு வேண்டிய அளவு உதவியைத்தான் கொடுப்பார்கள். மாக்சிமம் 2,000 ரூபாய் கொடுப்பார்கள். ஒரு கடை வைக்கிறேன் என்று சொன்னால் முதலிலே ஒரு பகுதி



21st October 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

கொடுத்து அவர்கள் கடை வைக்கிறார்களா என்றெல்லாம் பார்த்து மேலும் கொடுக்கப்படும். தற்போது அந்த மாதிரி பார்ட் பேமெண்ட் வாங்கி தொழிலை ஆரம்பிக்காமலே இருந்தது போல் முழுத் தொகையையும் வாங்கி தொழிலை ஆரம்பிக்காமலே உபயோகித்து இருப்பார்கள். எந்த நோக்கத்திற்காகப் பணம் கொடுக்கப்படுகிறதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்படுகிறதா என்று பார்த்து பணம் கொடுக்கப்படுகிறது.

இண்டஸ்டரியல் எஸ்டேட்டில் மேஜர் இண்டஸ்ட்ரிசுக்குத்தான் இடம் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். நமக்கு ஏதோ ஒன்றைப் பார்த்து விட்டு எல்லாமே அப்படித்தான் இருப்பதாகச் சொல்லுகின்ற மனப்பான்மை வந்து விடுகிறது. நம்முடைய ராஜ்யத்தில் 700 யூனிட்டுகள் இருக்கின்றன. பெரிய தொழில் செய்கிறவர்களுக்காகக் கொடுக்கப்பட்டிருப்பது ஏழு கூட இருக்காது. அவ்வாறு ஏன் கொடுக்கிறோம் என்றால், பெரிய தொழில் செய்கிறவர்கள் சிறு தொழில்களைச் செய்வதைப் பார்த்து மற்றவர்கள் அந்தத் தொழிலைச் செய்வதற்கு முன் வரக் கூடும். அவர்களைப் பார்த்து மற்றவர்கள் கற்றுக் கொள்ளக்கூடிய வசதி ஏற்படும் என்பதற்காகத்தான். பெரிய தொழில் செய்கிறவர்கள் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் வந்து ஒரு யூனிட்டை எடுத்துக் கொண்டு தொழிலை நடத்துவதால் அவர்களுக்குப் பெரிய லாபம் ஒன்றும் வந்து விடவில்லை. அதன் காரணமாக அவர்களுக்கு இன்கம் டாக்ஸ் கொஞ்சம் குறைகிறது. அவர்களிடமிருந்து புதிதாகச் சிறு தொழிலைச் செய்ய வருகிறவர்கள் தொழில் நுணுக்கத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் அவ்வாறு கொடுக்கிறோம். மத்திய சர்க்கார் கூட இதைப் பற்றிக் கேட்டபோது இதே தத்துவ விளக்கத்தைத்தான் நான் எடுத்து விளக்கினேன். இவ்வாறு இல்லாவிட்டால் ' Blind leading the blind ' என்று முடிந்துவிடும்.

திருமதி குழந்தையம்மாள் பேசுகிறபோது 'கோல், கோக்' இரும்பு போன்றவைகளுக்கெல்லாம் டிரான்ஸ்போர்ட் சார்ஜ் அதிகமாகி விட்டது என்று சொன்னார்கள் கண்ட்ரோல் இருக்கும்போது 'டி-கண்ட்ரோல்' செய்ய வேண்டுமென்று கூறுகிறார்கள். டி-கண்ட்ரோல்' செய்தால் கண்ட்ரோல் செய்யவேண்டுமென்று கூற ஆரம்பித்து விடுகிறார்கள். 1½ ஆண்டுகளுக்கு முன் வரை அகில இந்தியாவிலும் ஸ்டீல் கண்ட்ரோல் இருந்தது. 'பூல் ப்ரைஸ்' இருந்தது. இந்தியா பூராவும் ஸ்டீலுக்கு ஒரே விலை இருந்தது. அப்போது, கண்ட்ரோல் இருப்பதால் ஸ்டீல் சரியாகக் கிடைக்கவில்லை; டி-கண்ட்ரோல் செய்து விட்டால் வாங்கி விற்க சவுகரியமாக இருக்கும் என்ற அபிப்பிராயத்தை எல்லோரும் கூறினார்கள். அதன் காரணமாக அகில இந்திய ரீதியில் ஒரு கமிட்டி போடப்பட்டு விசாரணை செய்து, ஸ்டீலுக்குப் பற்றாக்குறை இல்லையென்பதை அறிந்து 'டி-கண்ட்ரோல் செய்து விடலாம், என்று சொன்னார்கள். இப்போது குழந்தையம்மாள் அவர்கள் டிரான்ஸ்போர்ட் சார்ஜ் அதிகமாகிவிட்டது; நம்மால் போட்டி போட முடியவில்லை

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [21st October 1964

என்று சொல்கிறார்கள். இந்த நிலைமை ஒரே கொள்கையில் ஸ்திரமாக இல்லாத காரணத்தால்தான் ஏற்படுகிறது. இன்று நம்முடைய நாட்டில் எல்லா இடத்திலும் எல்லாத் தொழில்களும் சரியாக நடக்க வேண்டுமென்று சொன்னால் அதற்காக ஒரு கண்ட்ரோல் முறையை ஏற்றுக் கொள்ள முடியும். அதே சமயத்தில் அதில் இருக்கக் கூடிய நிர்ப்பந்தங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எவ்வளவு கிடைக்கிறதோ அதை வைத்துக் கொண்டு தான் வியாபாரம் நடத்தவேண்டும். கண்ட்ரோல் வேண்டியதில்லை என்று சொன்னால் விலையைப் பற்றி யாரும் கேட்கக் கூடாது. வாங்குகிறவர்கள் சாமர்த்தியம், விற்கிறவர்கள் சாமர்த்தியம், சப்ளை அண்டு டிமாண்டைப் பொறுத்து இருந்து விடும். இப்போது எடுத்திருக்கும் கொள்கைப்படி 'டி-கண்ட்ரோல்' செய்திருப்பதால் சரக்குகளை அவரவர்கள் வாங்கி விற்கும் நிலைமை வந்திருக்கும் காரணத்தால் இதைப் பற்றியெல்லாம் அந்தந்த தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, மீண்டும் கண்ட்ரோல் செய்வது என்பது இயலாது.

'ஸிங்க் ஷிட்' ரொம்பக் குறைவாக இருக்கிறது. அதனால் கண்ட்ரோல் இருக்கிறது. வயருக்குக் கண்ட்ரோல் இருக்கிறது. பற்றாக்குறை இருப்பதால் கண்ட்ரோல் போடப்படுகிறது. கோட்டா கொடுத்து அரை டன் ஒரு டன் என்று கொடுக்கப்படுகிறது. அதெல்லாம் எப்படி பிளாக் மார்க்கட்டுக்கு வருகிறது என்றால் இவ்வாறு அரை டன் ஒரு டன் வாங்குகிறவர்கள் மூலமாகத்தான் வருகிறது. இது நமக்குத் தெரியவில்லையா? தேவைப்படாதவர்கள் வாங்காமல் இருந்தால் பளாக் மார்க்கட் இருக்காது. தேவையில்லாதவர்கள் வாங்கி லாபத்திற்கு விற்று விடுவதால் ப்ளாக் மார்க்கட் இருக்கிறது. பற்றாக் குறை இருக்கும்போது கண்ட்ரோல் செய்து டிஸ்ட்ரிப்யூஷன் செய்வதுதான் சரியான முறை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது வட ஆற்காட்டில் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்று இண்டஸ்ட்ரியல் செமினாரில் தீர்மானம் போட்டோம் என்று சொன்னார்கள். தீர்மானம் போடுவதற்காக இண்டஸ்ட்ரியல் செமினாரைக் கூட்டுவதில்லை. அந்தப் பகுதியில் இருப்பவர்கள் என்ன தொழில்களை அங்கு வைக்க முடியும் என்று பார்த்து அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு அதற்கு வேண்டிய உதவிகளைச் சர்க்காரிடத்திலே வந்து கேட்க வேண்டும். அப்போது சர்க்கார் பரிசிலித்து அதற்கு வேண்டிய உதவிகளைக் கொடுக்கும். அந்த இண்டஸ்ட்ரியல் செமினார் மூலம் நல்ல பயன் பெறும் வரையில் பல சிறு தொழில்களை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபட முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.



21st October 1964]

MR. SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 27,37,100 under Demand No. XX—Industries.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXIII—COMMUNITY DEVELOPMENT PROJECTS, ETC.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 7,00,000 under Demand No. XXIII—Community Development Projects, etc."

*திரு. ஏ. ஆறுமுகம்: கனம் சபாநாயகர் அவர்களே, சமுதாய நலத் திட்டத்தின் கீழ் நமது மாநிலத்திலே மட்டுமல்லாமல் அகில இந்தியாவிலும் பல நல்ல வேலைகள் நடைபெற்று வருவதை நாம் அனைவரும் அறிவோம்.

கனம் சபாநாயகர்: முதலில் நம்முடைய மாநிலத்தில் உள்ளதைக் கவனிப்போம்.

திரு. ஏ. ஆறுமுகம்: பல மாவட்டங்களிலும் பல தாலூகாக்களிலும் பல குக்கிராமங்களிலும் அன்றாடம் வசதியான நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வரும் நிலைமையிலே இந்தத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் கூட இன்னும் பல கிராமங்களில் ரோடுகள் இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. பள்ளிக்கூடம் இல்லாத ஊரே இல்லையென்ற நிலைமை இருப்பது போல் ரோடு இல்லாத கிராமமே இல்லையென்ற நிலைமை ஏற்பட வேண்டும். கிராமங்களிலே பள்ளிக்கூடம் இருக்கிறது; ஆனால் குடி தண்ணீர்க் கிணறு இல்லாத நிலைமை இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால் விகிதாசாரம். சில பஞ்சாயத்துக்களிலே பஞ்சாயத்துக்கள் 40 சதவிகிதம் சர்க்கார் 60 சதவிகிதம் என்றும், சில பஞ்சாயத்துக்களிலே பஞ்சாயத்துக்கள் 60 சதவிகிதம் சர்க்கார் 40 சதவிகிதம் என்றும் பாகுபாடுகள் இருந்து கொண்டிருப்பதுதான் காரணம். அந்த நிலையில் என்னுடைய தொகுதியில் இன்னும் பல கிராமங்களில் ரோடு வசதி இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பகுதிகள் எல்லாம் மிகவும் பின் தங்கிய பகுதிகள். அதிலும் மலை மேல் இருக்கும் கிராமங்களுக்கும் மலையின் பக்கத்தில் காடுகளில் நடுவே இருக்கும் கிராமங்களுக்கும் ரோடுகள் இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது இதையெல்லாம் போக்குவதற்கு நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காரிடம் இருந்து ஷெட்யூல்டு டிரைப்களுக்காக கொடுக்கப்படுகிற மானியத்தை அதிகமாகப் பெற்று முழுந் தொகையையும் பயன்படுத்தி அந்தக் கிராமங்களுக்கெல்லாம் ரோடு வசதி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். 10-30 a.m.

அடுத்தபடியாக கிணறுகள் வெட்டுகின்ற காலத்தில் மலைமேல் இருக்கின்ற கிராமங்களில் நல்லமுறையில் குடிதண்ணீர் கிடைப்பதில்லை. காரணம் கிணறு வெட்டும்போது பாராங்கல், பெரிய கற்

[திரு. எ. ஆறுமுகம்] [21st October 1964

கள் முதலியவை வந்துவிடுகின்றன. இதன் காரணமாக அந்தப் பகுதிகளில் எல்லாம் குடிதண்ணீர் வசதியில்லாமல் மக்கள் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே இவர்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வடார்காடு ஜில்லாவிலுள்ள மலை ஜாதியினர் எல்லாம் டிரைபல் பிளாக்-காக சேர்ப்பதாக சர்க்காரில் ஒரு திட்டம் இருந்தது. இதை உடனடியாக செயலாற்றவேண்டும் என்றும் இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, எங்கள் சேர்வராயன் மலைப் பகுதி மிகவும் பிற்போக்கான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. நேற்றும் இதைப் பற்றி பேசவேண்டும் என்று நினைத்தேன். சாமி வரம் கொடுந்தாலும் பூசாரி வரம் கொடுக்க மறுப்பார் என்று சொல்வது போல் சபாநாயகர் பேசுவதற்கு அனுமதி கொடுத்தாலும் எங்கள் கொறடா ஏழுமலை அவர்கள் பேசுவதற்கு இடம் கொடுக்கவில்லை. ஏதோ பேசலாம் பேசலாம் என்று சொல்லிக்கொண்டிருந்தார்களே தவிர கடைசியில் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. எங்கள் தொகுதி மலைப் பிரதேசமானது. இநத பிரதேசத்தில் 10 வருடம் 15 வருடம் விவசாயம் செய்து வந்தவர்களுக்கெல்லாம் இதுவரை பட்டா தருகிறோம் என்று சொன்னார்களே தவிர இதுவரை பட்டா கொடுக்கப் படவில்லை. இப்போது அம்மாதிரி விவசாயமும் செய்யக் கூடாது என்று சொல்லி புளியமரத்தை எல்லாம் வெட்டிக்கொண்டிருக்கிறார்கள். லோக்கூர் பஞ்சாயத்து பகுதியில் சேர்ந்த கண்ணப்பாடி கிராமத்தில் மலை நீட்டமாக இருக்கிறது. இந்த இடத்தில் விவசாயம் செய்து கொண்டிருந்தவர்களைத்தான் இப்படி துரத்திவிட்டார்கள். அவர்கள் என்னிடம் வந்து அழுதார்கள். நான் கலெக்டர் அவர்களிடம் போய் அழுதேன். இப்பொழுது விவசாயமும் செய்வதற்கில்லை, பட்டாவும் கொடுக்கப்படவில்லை. நான் இதைப்பற்றி கலெக்டரிடம் சொன்ன பின்னால் தாசில்தார் மூலமாக தற்காலிகமாக புளியமரத்தை ஒன்றும் வெட்டக்கூடாது என்று நிறுத்தியிருக்கிறார்கள். அதோடு நின்று விடாமல் மேலும் இந்த இடங்களில் விவசாயம் செய்வதற்கு உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் ஏற்காடு மலைப் பிரதேசத்தில் 64 கிராமங்கள் கொண்டது ஒரு பஞ்சாயத்து யூனியனாக இருக்கிறது. இதை ஒன்பதாக பிரிக்க வேண்டும் என்று அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்கிறேன். இன்னும் அது நடைமுறைக்கு வராமல் இருக்கிறது. அடுத்த எலக்ஷனும் வரவேண்டிய நேரமாய்விட்டது. திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் இதைப்பற்றி சொன்னேன். இந்த இடங்கள் எல்லாம் சிதறி கிடப்பதால் மலை ஜாதியினரிலிருந்து தலைவராக யாரும் வருவதற்கு வழியில்லாமல் இருக்கிறது. வசதியுள்ளவர்கள் தான் தலைவராக வந்து விடுகிறார்கள். வைஸ்-பிரசிடெண்டாகவும் வந்துவிடுகிறார்கள். ஆகவே இதைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



21st October 1964] [திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்]

அதே போன்றுதான் கோணமடு, குரல்நத்தம், சிறுமலை போன்ற ஐந்து கிராமங்கள் ஒன்றாக சேர்ந்து இருக்கிறது. இந்த கிராமங்களுக்கு கடன் வசதி செய்து கொடுப்பதற்காக இருக்கிற சொசைட்டியில் கடன் கேட்கப் போகும் போது மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகையினால் இதையும் பிரித்துக் கொடுத்தால் வசதியாக இருக்கும். இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடத்திலும் சொன்னேன். பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் நடைமுறையில் இன்னும் வசதி வரவில்லை. ஆகவே மலை ஜாதியினரை நல்ல முறையில் நடத்துவதற்கான வழிவகைகளை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. செ. சதாசிவம்:** கனம் சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் மூலமாக 63-64 வரையிலும் விவசாயிகளுக்கு பம்புசெட்டுக்கு கடன் கொடுக்கப்பட்டு வந்தது. 64-65- ஆண்டின் முழுப் பண கடன் திட்டம் (ஃபுல் ஃபைனான்ஸ் ஸ்கீம்) வந்த பின்னால் பஞ்சாயத்து யூனியன் மூலமாக கொடுக்கப்பட்டுவந்த கடன் திட்டம் நிறுத்தப்பட்டு இப்போது கூட்டுறவு மூலமாக கொடுக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு முறையில் குறுகியகால கடனாக ஓராண்டு காலத்திற்குத்தான் கொடுக்கப்படுகிறது. பம்பு செட்டுக்காக சுமார் 2,000 அல்லது 2,500 ரூபாய் ஒரு வருடத்தில் பெற வேண்டியிருக்கிறது. இதை ஒரே ஆண்டில் திருப்பிக்கொடுப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இந்தக் கடனை பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகவே கொடுக்க வழிவகை செய்தால் பத்து வருடங்களில் திருப்பிக்கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். இம்மாதிரி கொடுத்தால் விவசாயிகள் நல்ல முறையில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வசதி எற்படும் என்பதை சர்க்காருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, டியர்னஸ் அலவன்ஸ் பற்றியும், பஞ்சாயத்து முறைகள் பற்றியும் பேசப்பட்டது. குறிப்பாக மலைஜாதியினருக்கு அதிக வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று திரு. குழந்தைசாமி கவுண்டர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அவர் மனு செய்து கொண்டதைப்பற்றியும், அதை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பதில் சொன்னதாகவும் அவர்களே தெரிவித்து விட்டார்கள். பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் மலைப் பிரதேசத்தில் தனித்தனியாக ஏற்படுத்த முடியுமா என்பதைப் பற்றி ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போதுள்ள முறையில் அங்கே பஞ்சாயத்து யூனியன் ஒன்றாக இருக்கிறது. சேர்வராயன் மலைப்பிரதேசம் பூராவும் தனித்தனியாக ஏற்படுத்த முடியுமா என்பதைப்பற்றி நன்றாக பரிசிலனை செய்துதான் முடிவு எடுக்க வேண்டும்.

பம்புசெட்டுக்கு கடன் கொடுப்பது சம்பந்தமாக கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதை சம்பந்தப்பட்ட இலாகாவினர் பரிசீலனை செய்வார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[21st October 1964

MR. SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 7,00,000 under Demand No. XXIII—Community Development Projects, etc."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXIV—LABOUR INCLUDING FACTORIES.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,20,000 under Demand No. XXIV—Labour Including Factories."

The Demand was put and carried and the Grant was made

DEMAND NO. XXV—WELFARE OF SCHEDULED TRIBES, CASTES AND OTHER BACKWARD CLASSES.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 13,70,700 under Demand No. XXV—Welfare of Scheduled tribes, castes and other backward classes."

*திரு. எம். தண்டாயுதபாணி:* தலைவர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையிலே இடம் பெற்றிருக்கும் ஹரிஜன நலத் துறையினரால் நடத்தப்படும் ஹாஸ்டல்களுக்கு, குறிப்பாக தனியார் நடத்தி வந்தாலும் கூட, நபர் ஒன்றுக்கு இத்தனை ரூபாய் என்று ஒதுக்கி மான்யமாக வழங்கி வருகிறோம். அப்படி நடத்தப்படுவதில் ஹாஸ்டல்கள் எந்தப் பகுதியிலே நடத்தப்படு கிறதோ அந்தப் பகுதியிலே இருக்கிற உயர் நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் அந்த ஹாஸ்டல் இந்தப் பள்ளியுடன் இணைந் திருக்கிறது என்று சான்றிதழ் கொடுக்கவேண்டும். அப்படி அவர்கள் கொடுக்க, தனியாரால் நடத்தப்படுகிற காரணத்தினால் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் வார்டனாக நியமிக்கப்பட்டு பல ஹாஸ்டல்கள் அந்த முறையில் நடத்தப்படுகின்றன. அப்படி நடத்தப்படும் ஹாஸ்டல்களுக்கு தலைமை ஆசிரியர்கள் சான்றிதழ் வழங்கிவிடுகின்றனர். சில இடங்களில் தலைமை ஆசிரியரை வார்டனாக நியமிக்க கமிட்டியினர் சம்மதப்பட்டாலும் கூட தலைமை ஆசிரியர் விரும்பாவிட்டாலும் கூட தனியார் மேற்பார்வையுடன் நடத்தி வருகின்றனர். கிராண்ட் வாங்க தலைமை ஆசிரியர் சான்றிதழ் தேவை என்று இருக்கிறது. சான்றிதழைக் கொடுக்க தலைமை ஆசிரியர் மறுக்கிறார். எனக்கும் அந்த ஹாஸ்டலுக்கும் சம்பந்தம் இல்லை என்ற நிலையை மேற்கொண்டு கொடுக்க மறுக்கிறார். எனது பகுதியில் அந்த மாதிரி இரண்டு ஹாஸ்டல்கள் நடத்தப்படுகின்றன. வடசேரி என்ற இடத்தில் ஒரு ஹாஸ்டல் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டு காலமாக நடத்தப்படுகிறது. அந்த ஹாஸ்டலுக்கு கிராண்ட் கேட்டபோது தலைமை ஆசிரியர்



21st October 1964] [*திரு. எம். தண்டாயுதபாணி*]

சிபாரிசு செய்யாத காரணத்தினால் நிறுத்தப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு இதே தலைமை ஆசிரியர் சான்றிதழ் கொடுத்திருக் கிறார். இந்த ஆண்டு ஏதோ காரணமாக சான்றிதழ் கொடுக்க வில்லை. ஆகையால் இந்த மாதிரி நிலைமையைப் போக்கி கிராண்ட் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திருமதி சி. குழந்தையம்மாள்:* கனம் சபாநாயகர் அவர்களே, ஹரிஜன நலப் பள்ளிகளில் கற்கும் மாணவர்களில் ஹரிஜனங்கள் அல்லாத மாணவர்களுக்கு உணவு வழங்க தொகை ஒதுக்கியிருக் கிறார்கள். இப்போது இருக்கும் அரிசிக் கஷ்டத்தில் ஹாஸ்டலில் கூட அரிசி கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அவர்களுக்கு சௌகரியமாகக் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்தபடியாக, தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு விடுதிகளை அமைக்க மான்யம் கோரியிருக்கிறார்கள். சாதாரணமாக ஏழை மாணவர்கள் விடுதிகளில் சேர்ந்து படிப்பதே கஷ்டம். அதிலே இன்றைக்கு கல்லூரியிலோ அல்லது உயர்நிலைப் பள்ளியிலோ படிப்பதில் அதற்குச் செலவு ஆவதில் ஹாஸ்டலுக்கு பணம் செலவு ஆவது தான் அதிகமாக இருக்கிறது. எஸ். எஸ்.எல். ஸி. வரையில் ஃப்ரி எஜுகேஷன். அதற்கு மேலே போவது அவரவர் செல்வத் திற்குத் தக்கபடி. சர்க்கார் நடத்தக் கூடிய விடுதியில் ஆவதை விட தனியார் விடுதியில் செலவு அதிகம் ஆகிறது. இங்கே குறிப் பிட்டபடி சர்க்கார் விடுதிகளை ஆரம்பிப்பதை தீவிரப்படுத்த வேண்டும், அதை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சர்க்கார் விடுதியில் 42 ரூபாய் சாப்பாட்டுக்கு ஆகிறது. தனியார் நடத்தக் கூடிய விடுதியில் 75-80 ரூபாய் ஆகிறது. இந்த முறையில் 45 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றாலும் கூட, 4-5 குழந்தைகள் இருக்கும்போது அவர்களை ஹாஸ்டலில் விடுவது என்பதே மிகவும் கஷ்டம். இன்னும் அதிக துணை மான்யம் கோரினால் கூட தாராளமாகச் செலவு செய்து விடுதிகளை அமைக்கலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உபகாரச் சம்பளம் கொடுப்பதில் 500 ரூபாய் என்பதை 700 ரூபாய் என்ற அளவுக்கு தொழில் நுட்பப் பள்ளிகளைப் பொறுத்த மட்டில் உயர்த்தி அதற்கு மான்யம் கோரப்பட்டிருக்கிறது. முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதில் தாராளமாக இருக்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டு, முற்போக்கு சமுதாயத்தில் வந்தவர்களுக்கு நூற்றுக்கு இரண்டு பேர்களுக்குத் தான் கிடைக்கிறது, குறைந்தது 25 சதவீதம் ஆகவாவது அதிகப்படுத்த வேண்டும், அந்த முறையில் தொழில் கல்வியைப் பரப்ப ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

• *திரு. கே. பி. பழனிசாமி:* கனம் தலைவர் அவர்களே, ஹரிஜன நலத் துறைக்கான உப மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ஹரிஜனங்களுடைய முன்னேற்றம் இந்த நாட்டிலே சுதந்திரத்திற்குப் பின்பு சற்று அதிகரித்திருக்கிறது என்று ஒத்துக்கொண்டாலும் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகை எல்லா மக்களுக்கும் கொடுப்பது போலத்தான் இருக்கிறது. அவர்களுக்குப் பிரத்தியேகமாக ஒன்றும் செய்யப்படவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு எல்லோருக்கும் எஸ்.எஸ்.எல்.ஸி. வரை இலவசமாக படிக்க உத்திரவு போடப்பட்டிருக்கிறது. ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் 1,500 ரூபாய்க்கு மேல் சம்பளம் இருந்தால் அவர்களும் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஹரிஜனங்களுக்கான ஹாஸ்டலில் நபர் ஒன்றுக்கு 16 ரூபாய் கொடுக்கிறார்கள். இப்போது விலைவாசி உயர்ந்துவிட்டது. இப்போது அந்த ரூபாயை வைத்துக்கொண்டு சாப்பிட முடியாத நிலை இருக்கிறது. நான் சில ஹாஸ்டல்களுக்குச் சென்று பார்த்த போது அவர்கள் சொல்லுகிறார்கள். முன்பு மாமிசம் வாரத்திற்கு ஒரு முறை கொடுத்து வந்தார்கள். இப்போது அதை நிறுத்தி விட்டார்கள். முன்பு மோர் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். அதையும் கொடுப்பது கிடையாது.

**கனம் சபாநாயகர்:** அருள் நெறி கூட்டத்தைச் சேர்ந்த அங்கத்தினர் திரு. கே. நாராயணசாமி பிள்ளை மாமிசம் நிறுத்தப்பட்டது பற்றிச் சந்தோஷப்படுகிறார்.

**திரு. கே. பி. பழனிசாமி:** சர்க்கார் அதைப்பற்றி சிந்தித்து 16 ரூபாய் என்பதை 20 ரூபாயாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும், ஹரிஜன மாணவர்கள் பி.யூ.ஸி.-யில் ஒரு வருஷம் படித்து தேர்வில் ஃபெயில் ஆகிறார்கள். அவர்கள் வேறு பாலிடெக்னிக் அல்லது டெக்னிக்கல் ஸ்கூலில் சேர்ந்தால் ஒரு வருஷம் சம்பளத்திற்கு வாங்கிவிட்டாய் என்று சொல்லி அவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்க மறுக்கிறார்கள். விதிகளை ரிலாக்ஸ் செய்தாவது அவர்களுக்கு உதவித் தொகை கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடிக்கின்றேன்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச முன் வருகிறேன். இந்த ஆண்டு இந்த உப மான்யக் கோரிக்கையிலே கனம் அமைச்சர் அவர்கள் தொழில் நுட்பக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 750 பேர்களுக்கு முன்பு கொடுத்த இந்த உபகாரச் சம்பளத்தை 1,000 ஆக உயர்த்தியிருப்பதற்கு அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே முறையிலே அடுத்த ஆண்டும் பட்ஜெட் தயாரிக்கும்போது இதைவிட அதிகப்படுத்தவேண்டுமென்று இப்போதே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் இன்றைக்கு அதிகமாகப் படிக்க முன் வரும் காரணத்தினால், அதிகமாக ஆண்டுதோறும் உயர்த்த வேண்டிய நிலையில் இருக்கிறோம்.





சாதாரணமாக டெக்னிக்கல் கோர்ஸுக்கு நாம் ஃபிக்ஸெட்டாக வைத்திருக்கிறோம். பி.எஸ்ஸி., பி.காம். அல்லது மெடிக்கல் காலேஜில் படிக்கிறவர்களுக்கு இத்தனை மாணவர்களுக்கு என்று வரையறுப்பு செய்திருக்கிறோம். அதன் காரணமாக அதிகமாக பின்னிலை மாணவர்களுக்கு அதிகச் சலுகை கொடுக்க முடியாத நிலை ஏற்படுவதை அனுசரித்து அடுத்த ஆண்டில் அதிகப்படுத்த யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த உப மான்யக் கோரிக்கையிலே உரைவிடப் பள்ளிகளில் உள்ள மாணவிகளுக்கு ஆண்டு தோறும் இரண்டு உடுப்புகள் கொடுப்பதற்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, ஹரிஜன மாணவ, மாணவிகளுக்குக் கொடுத்திருக்கக் கூடிய உடைகளைப் பார்த்தால் அது மிகவும் போதாது என்று சொல்லுவது மாத்திரமல்ல, அவைகளை சலவை செய்து, சுத்தப்படுத்தி வைத்து, மாற்றிக் கொள்ளக்கூடிய அளவுக்குக்கூட உடுப்புகள் அதிகமாக இல்லை. ஆதிவாசிகளுக்கு நாம் உரைவிடப் பள்ளிகள் ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த உரைவிடப் பள்ளிகளில் ஆதிவாசிகள் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை 5, 6 வயது பிள்ளைகளை கொண்டு வந்து சேர்த்துவிட்டுப் போகிறார்கள். அந்தப் பிள்ளைகள் ஒரு வருஷம் படித்துவிட்டு, ஏதாவது ஒரு வாரம் அவர்களுடைய வீடுகளுக்குப் போய் திரும்பிவிடுவார்கள். அந்த நிலையிலே அந்தப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு எந்த விதமான உடுப்பும் கொடுப்பதற்கு இல்லை, அவர்களால் கொடுப்பதற்கு சாத்தியமும் இல்லை. இந்தக் குழந்தைகள் மாற்றிக் கொள்வதற்கு வசதியாக குறைந்தது 3 உடுப்புகளாவது கொடுக்க வேண்டும். அவர்கள் உடுப்புகளை சுத்தம் செய்து, துவைத்து, மாற்றி உடுத்துக்கொள்வதற்கு குறைந்தது 3 அல்லது 4 உடுப்புக்கள் வேண்டும். அதுவும் பெண்களுக்கு 4 உடுப்புகளாவது வேண்டும். உரைவிட பள்ளிகளில் படிக்கும் ஆதிவாசி மாணவ மாணவிகளுக்கும், ஹரிஜன மாணவ மாணவிகளுக்கும் இம்மாதிரி உடுப்புகளை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு சில லட்ச ரூபாய் கூட செலவானால் பரவாயில்லை. குழந்தைகளை சுத்தம் இல்லாத உடுப்புகளோடு பார்க்கக்கூடிய அவல நிலை இருக்கிறது. அதை தயவுசெய்து போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஹரிஜன நல இலாகாவில் வேலை செய்பவர்களைப்பற்றி நான் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். நேற்றையத் தினம் கூட குறிப்பிட்டேன். ஹரிஜன இலாகாவில் பணிபுரிகின்றவர்களுக்கும், மற்ற இலாகாக்களில் வேலை செய்பவர்களுக்கும் அதிகமான வித்தியாசம் இருக்கிறது. ஹரிஜன இலாகாவில் வேலை செய்வதற்கு, வருவதற்கு சற்று சங்கடப் படுகிறார்கள் நல்ல திறமையுள்ளவர்கள், நல்ல படித்தவர்கள். தீண்டாமையை ஒழிப்பதற்காகவே ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த ஹரிஜன நல இலாகாவில் வேலை செய்பவர்களுக்குக்கூட சர்க்கார் தங்களை தீண்டப்படாதவர்களாகக் கருதுகிறார்களோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் ஹரிஜன நல இலாகாவில் டெபுடி சேவக்குகள்

வைத்திருக்கிறார்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் வைத்திருக்கிறார்கள், சோஷல் வொர்க்கர்ஸ் வைத்திருக்கிறார்கள். ரெவின்யூ இலாகாவில் இருக்கக்கூடிய ரெவின்யூ இன்ஸ்பெக்டர் காடருக்கும், ஹரிஜன நல இலாகாவில் இருக்கக்கூடிய ரெவின்யூ இன்ஸ்பெக்டர் காடருக்கும் அதிகமான பர்குபாடு இருக்கிறது. சம்பளத்திலும் வித்தியாசம் இருக்கிறது, பஞ்சப்படியிலும் வித்தியாசம் இருக்கிறது. அதன் காரணமாக ஹரிஜன நல இலாகாவுக்கு பொறுப்புள்ள உத்தியோகஸ்தர்கள் வருவதற்கு தயாராக இல்லை.

கம்யூனிடி சென்டர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த கம்யூனிடி சென்டர்களில் நிலைமை எப்படி இருக்கிறது என்று சொன்னால், 3 வயது, 5 வயது ஹரிஜன குழந்தைகளை காலையிலேயே கொண்டுவந்து அங்கே விட்டு விடுகிறார்கள். அந்தக் குழந்தைகளை சோப்புப் போட்டு தேய்த்து குளுப்பாட்டி, தலையில் எண்ணெய் போட்டு வாரி, துணி கொடுத்து, அவர்களுக்கு பகல் உணவு கொடுத்து, அவர்களுக்கு அ, ஆ சொல்லிக்கொடுத்து அவர்களை சாயந்திரம் 5 மணிவரை பாதுகாக்க வேண்டியிருக்கிறது. பிறகு மாலையில் அந்தக் குழந்தைகளின் பெற்றோர்கள் வந்து எடுத்துக் கொண்டு போகிறார்கள். வீட்டில் குழந்தைகளைப் பெற்றோர்கள் பார்த்துக்கொள்வது போல், அங்கு வேலை செய்யும் சோஷல் வொர்க்கர்ஸ் அந்தக் குழந்தைகளை பராமரிக்கிறார்கள். அவர்களுக்கு என்ன சம்பளம் என்று சொன்னால் ரூபாய் 100-க்கு மேல் கிடையாது. விலைவாசி உயர்ந்தாலும் கூட அவர்களுக்கு சம்பள உயர்வு இல்லை. வேறு இலாகாக்களில் வேலை செய்யும் சோஷல் வொர்க்கர்ஸுக்கு ரூ. 150 சம்பளம், இவர்களுக்கு ரூ. 100 சம்பளம், இவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. இது உசிதமில்லை. என்னைப் பொறுத்தவரையில் இவ்வளவு நல்ல பணிபுரியும் ஹரிஜன நல இலாகா சோஷல் வொர்க்கர்ஸுக்கு ரூ. 200 சம்பளம் கொடுக்க வேண்டும். இந்த கம்யூனிடி சென்டர்களில் இருக்கும் சோஷல் வொர்கர்ஸுக்கு 'பிக்ஸட் பே' என்று சொல்லியிருக்கிறார்கள் 'ஆல் இண்டியா பேஸிஸில்' 'பிக்ஸட் பே' கொடுத்திருந்தாலும், இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையை அனுசரித்து, விலைவாசி சூழ்நிலையை அனுசரித்து, வேறு இலாகாவில் இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு வருஷா வருஷம் எப்படி சம்பள உயர்வு கொடுக்கப்படுகிறதோ, பஞ்சப்படி உயர்வு கொடுக்கப்படுகிறதோ, அப்படி இவர்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவர்களுக்கு மட்டும் அரிசி விலை உயரவில்லையா? இவர்கள் மட்டும் சாப்பிடுவதில்லையா? 'பிக்ஸட் பே' என்று சொன்னால் நன்றாக வேலை செய்வதற்கு ஆர்வம் இருக்குமா? இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்த்து, இவர்களுக்கு ஒரு தனி 'ஸ்கேல் ஆப் பே' ஏற்படுத்தி, 'எல்.டி.ஸி.' அல்லது 'யூ.டி.ஸி.' காடரில் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். வேறு இலாகாக்களில் இருக்கக்கூடிய பணியாளர்களுக்கு சம்பளம் அதிகப்படுத்தும்பொழுதும், பஞ்சப்படி உயர்த்தப்படும்பொழுதும், இவர்களுக்கு அந்த உயர்வை அளிக்கவேண்டும் என்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.





திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் தலைவர் அவர்களே, இந்த உபமான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஹரிஜன நல இலாகாவுக்கு இன்னும் சற்று அதிகமாக பணம் ஒதுக்கியிருந்தால் கூட நன்றாக இருந்திருக்கும். இப்பொழுது ஹரிஜன நல இலாகா பள்ளிகளில் படிக்கக்கூடிய குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கிறோம். ஹரிஜன நல இலாகா பள்ளி அல்லாத பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் படிக்கும் ஹரிஜன பிள்ளைகளுக்கு மதிய உணவு கொடுப்பதற்காக நாம் பணம் ஒதுக்கியிருக்கிறோம். அது மிகவும் வரவேற்கக்கூடியது, பாராட்டத் தக்கது என்றாலும்கூட, ஹரிஜன குழந்தைகளுக்கு மாத்திரம் மதிய உணவு கொடுத்தால் அந்தக் கிராமத்தில் சிறிய குழப்பத்தை அது உண்டுபண்ணக்கூடும். ஆகவே, ஹரிஜனக் குழந்தைகளுக்காக ஒதுக்கக்கூடிய பணத்தையும், அந்தந்த யூனியன் மதிய உணவுக்காக கொடுக்கும் 6 நயா பைசா, 10 நயா பைசா தொகையையும் ஒன்றாகச் சேர்த்து ஒரே மாதிரியாக சமையல் செய்து, எல்லா குழந்தைகளுக்கும் நாம் மதிய உணவு கொடுப்பதற்கு வழிவகை செய்தால் நலமாக இருக்கும். ஒரு ஜாதி குழந்தைகளுக்கு மட்டும் மதிய உணவு கொடுத்தால் அது குழப்பமாக அமையும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஹரிஜன நல நடுத்தர உயர்நிலைப் பள்ளிகளை, அதாவது 8-வது வகுப்பு வரை இருக்கும் பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக மாற்ற வேண்டும் என்று கூறினால், கனம் அமைச்சர் அவர்கள் அவ்வாறு செய்ய சாத்தியப்படாது என்று குறிப்பிட்டுவிட்டார்கள். எட்டாவது வகுப்பு வரை இருக்கும் ஹரிஜன நல பள்ளியிருந்தால், அவர்கள் 5 எக்கர் நிலம் ஏற்பாடு செய்து கொடுத்தால், அரசாங்கமே ஹரிஜன நல துறையிலிருந்து மற்ற பங்குத் தொகையை கொடுத்து, அதை உயர்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொடுக்க வேண்டும், அதற்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜன ஹாஸ்டல் பள்ளிகளில் படிக்கும் பெண் குழந்தைகளுக்கு இலவசமாக உடுப்புகள் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். பெண் குழந்தைகளைப் பொறுத்தவரையில் ஆண்டுக்கு இரண்டு உடுப்புகள் கொடுப்பது வரவேற்கத்தக்கது. ஒரு ஆண்டுக்கு ஒரு முறையாவது ஹரிஜனப் பள்ளிகளில் படிக்கும் ஆண் குழந்தைகளுக்கு துணி கொடுப்பதற்கு வழி வகை செய்தால், துணியே இல்லாமல் சும்மாத் திரிந்துகொண்டிருக்கக் கூடியவர்களுக்கு நல்ல வசதி அளித்தவர்கள் ஆவோம், துணி கொடுத்து உதவினோம் என்ற ஒரு பெருமை நம்மைச் சேரும்.

பெண்கள் ஹாஸ்டல்களை நம் சர்க்கார் நடத்துகிறார்கள். கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர்கள் எல்லா குழந்தைகளுக்கும் வாரம் ஒரு முறையாவது மாமிச உணவு கொடுக்கவேண்டுமென்று கூறினார்கள். நான் சொல்லுகிறேன், எங்கேயாவது ஹரிஜன ஹாஸ்டலில் இப்பொழுது மாமிச உணவு கொடுத்தால் அதை [illegible]

உடனடியாக நிறுத்துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். மகாத்மா காந்தியடிகளின் பெயரால் நடத்துகிறோம். அந்த உண்டியில் போட்ட பணத்தைக் கூட இதற்காக செலவழிக்கிறோம். அரசாங்கம் நடத்தக்கூடிய விடுதியில் மாமிசம் என்ற பேச்சே இருக்கக்கூடாது. அரசாங்க ஹரிஜன ஹாஸ்டல்களில் எங்கே யாவது இப்பொழுது மாமிச உணவு கொடுக்கப்பட்டால், அதை உடனே நிறுத்திவிடும்படி கோரிக்கை விடுக்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் அவர்கள் சைவமோ?

**திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்:** வருஷத்தில் நான் இரண்டு மாதங்கள் சைவம். நான் ஹாஸ்டலில் படிக்கும்பொழுது மாமிசம் சாப்பிட்டதே இல்லை. பெண்கள் ஹாஸ்டல்களை நாம் நடத்து கிறோம். அதற்காக சற்று அதிகப்படியாக பணத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில இடங்களில் இடம் கிடைக்காமல் பெண்கள் தவிக்கிறார்கள். சோழவந்தான் போன்ற பகுதிகளில் ஹாஸ்டல்களில் இடம் இல்லாமல் பெண்கள் தவிக் கிறார்கள். ஆண்கள் ஹாஸ்டல் ஏற்படுத்துவதுபோல், ஆண்டு ஒன்றுக்கு 10, 12 பெண்கள் படிக்கும் இல்லங்கள் ஏற்படுத்து வதற்கு திட்டமிட்டு, அதற்கான மான்யத்தை ஒதுக்கி, அதற்கு வேண்டிய கட்டடத்தை நல்ல முறையில் கட்டிக்கொடுத்தால்தான், பெண்களுக்கு பாதுகாப்பு அளிப்பவர்களாக ஆவோம். வரப் போகிற பட்ஜெட்டிலாவது ஹாஸ்டல்கள் ஏற்படுத்துவதற்கு அதிக மான தொகை ஒதுக்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பால் பண்ணை ஏற்படுத்துவதற்கு கொஞ்சம் பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஹரிஜன நல இலாகாவிற்கு கூட்டுறவு பால் பண்ணைகள் ஏற்படுத்துவதற்கு ஒரு ஆண்டிற்கு ரூபாய் 2 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக அநேகம் பேபர்கள் சாங்ஷன் செய்யப்படாமல் கவர்ன்மெண்டில் பெண்டிங்காக இருக்கிறது. ஹரிஜனங்கள் பொருளாதாரத் துறையில் முன்னுக்கு வருவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு. அம்மாதிரி இருக்கக்கூடிய வகையில் இன்னும் கொஞ்சம் அதிகமாக பணம் ஒதுக்கி பால் பண்ணைகளை உடனுக்குடன் சாங்ஷன் செய்து, ஹரிஜனங்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'ஹவுஸ் சைட்' கொடுப்பதற்கும் இன்னும் கொஞ்சம் பணத்தை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உப மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பின்தங்கிய வகுப்பினருக்கு ஸ்காலர்ஷிப் கொடுப் பதற்காக, மத்திய சர்க்காரின் 50 சதவிகிதம் சப்ஸிடியுடன் கொடுப்பதற்கு, ரூபாய் ஒரு லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பின்தங்கிய வகுப்பாருக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதிலே, நடை





முறையில் உள்ள சில கஷ்டங்களை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்பொழுது ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப்புகள், நான்-ரெஸி-டென்ஷியல் ஸ்காலர்ஷிப்புகள் என்று இரண்டு விதமாகக் கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஹாஸ்டலிலே தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு, ஏறக்குறைய ரூபாய் 450 கிடைக் கிறது. ஆனால் ஹாஸ்டலிலே தங்காமல் படிக்கும் மாணவர் களுக்கு ரூபாய் 100 அல்லது 120 கொடுத்துக் கொண்டிருக் கிறோம். உதகையில் கல்லூரியிலே ஏறக்குறைய 750 மாணவர்கள் படிக்கிறார்கள். இவர்களிலே ஸ்காலர்ஷிப் பெறுவதற்குத் தகுதி யாயுள்ள மாணவர்கள் சுமார் 500 பேர் விண்ணப்பித்திருக் கிறார்கள். ஹாஸ்டலிலே சுமார் 100 பேர்கள் தான் தங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. உதகையில் ஹாஸ்டல் வசதியில்லாத கார ணத்தினால், சுமார் 300 மாணவர்கள் பிரைவேட் ஹோட்டல் களிலே தங்கிக்கொண்டு ரூபாய், 200, 250 என்று செலவழித்துக் கொண்டு படித்துக்கொண்டிருக்கிறார்கள். ரெஸிடென்ஷியல், நான்-ரெஸிடென்ஷியல் என்ற நிலையை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதகையைப் பொறுத்த வரையில், ஹோட்டலிலே தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கும் ரூபாய் 450 அல்லது 500 கொடுத்தால், உதகை ஒரு பின்தங்கிய பிரதேசமாக இருப்பதால், நன்மையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கனம் முதலமைச்சர் அவர்கள் உதகைக்கு வந் திருந்தபொழுது, இந்த விஷயத்தை நான் அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். கவனிப்பதாகச் சொன்னார்கள். கனம் உள்துறை அமைச்சர் அவர்களும் இந்த விஷயத்தை பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உதகையிலே ஹோட்டலில் தங்குகிறவர்களுக்கு அதிகமாகச் செலவாகிறது. ஆகவே, ஹோட்டலில் தங்கும் மாணவர்களுக்கும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ஏ. ஆறுமுகம்:** கனம் சபாநாயகர் அவர்களே, ஹரிஜன மக்களுக்கு மனைக்கட்டுகள் வழங்குவதிலே சர்க்கார் இன்னும் 100-க்கு 100 வெற்றி பெறவில்லை என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது ஏழை ஹரிஜன மக்கள் எல்லோ ருக்கும் மனைக்கட்டுகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** இந்த உபமான்யக் கோரிக்கைகளில் மனைக் கட்டு விஷயம் வருகிறதா? சரி, கனம் அங்கத்தினர் மேலே பேசலாம்.

**திரு. ஏ. ஆறுமுகம்:** இது மிகவும் முக்கியமான பிரச்னையாக இருக்கிறது. ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்கும் விஷயத் திலே சர்க்கார் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக ஹாஸ்டல்களை எடுத்துக் கொண்டால், 50 பிள்ளைகள் இருக்கவேண்டிய இடத்திலே சுமார்

70 அல்லது 80 பிள்ளைகள் படிக்கக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. ஹாஸ்டல் வசதியை விஸ்தரிக்க சர்க்கார் எவ்வளவு சீக்கிரமாக கட்டடங்கள் கட்ட முடியுமோ, அவைகளைக் கட்ட வேண்டும். குறிப்பாக செங்கம், திருவண்ணாமலை, செங்கற்பட்டு, வேலூர் போன்ற பகுதிகளிலே ஹாஸ்டல் கட்டட வேலை பல வருஷங்களாகியும் எடுத்துக்கொள்ளப் படாமல் இருக்கிறது. அங்கெல்லாம் ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வெல்பேர் பாடசாலைகள் மிகவும் மோசமான நிலைமையில் இருந்துகொண்டிருக்கின்றன. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மழை காலங்களிலே ஆபத்து கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கின்றன. நமது மாகாணத்திலுள்ள எல்லா வெல்பேர் பாடசாலைகளையும் சிறந்த முறையில் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லா தாலுகா தலைநகரங்களிலும் ஹரிஜன மாணவர்களுக்கு விடுதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தாலுகா தலைநகரங்களில் பெண்களுக்கும் உணவு விடுதிகள் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது இந்த விடுதிகளிலே தங்கி படிக்கிற பெண்களுக்கு மட்டும் ஆடை வழங்கிக் கொண்டு வருகிறோம். இந்த வெல்பேர் பாடசாலைகளில் படிக்கிற எல்லா மாணவர்களுக்கும் ஆடை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, சேலம் ஜில்லாவிலே பனைமரத்துப்பட்டி பக்கத்தில் தும்மல்பட்டி என்ற கிராமம் இருக்கிறது. அங்கே மலைஜாதியினர் இருக்கிறார்கள். அங்கே ஒரு சிறு பள்ளிக்கூடம் கட்டியிருந்தார்கள். மழை பெய்து இரவு நேரத்திலே மண்சுவர் சரிந்து அது கீழே விழுந்துவிட்டது. பகல் நேரத்தில் விழுந்திருந்தால் மாணவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும். கலெக்டர் அவர்களிடத்திலும், தாசில்தார் அவர்களிடத்திலும், இந்தப் பள்ளிக்கூடத்தை நல்ல முறையிலே கட்டுவதற்கு புறம்போக்கு நிலம் கொடுத்து உதவ வேண்டுமென்று நான் கேட்டிருக்கிறேன். 3 ஏக்கர் நிலம் ரோடு ஓரத்திலே இருக்கிறது. பஞ்சாயத்து ஆபீசுக்காக 30 செண்ட் நிலம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். பள்ளிக்கூடம் கட்டுவதற்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைக் கொடுப்பதாக கலெக்டர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மழை வந்தால் மாரியம்மன் கோவிலில் போய் மாணவர்கள் இருக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே. 1½ ஏக்கர் புறம்போக்கு நிலத்தை ஒதுக்கி, இந்தப் பள்ளிக்கூடத்தை கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்காடு தொகுதியில் இருந்து நான் இருக்கிற இடம் சுமார் 30 மைல் தூரத்தில் இருக்கிறது. ஏற்காடிலே ஒரு ஹாஸ்டல் இருக்கிறது. பக்கத்தில் கோணமடு போன்ற ஊரில் மலைஜாதியினர் வசிக்கிறார்கள். அதைச் சுற்றி 25 ஊர்கள் இருக்கின்றன. இந்த 25 ஊர்களிலுள்ள மாணவர்களும் ஏற்காட்டுக்கு வரமுடிவதில்லை. ஆகவே, கோணமடுவில் இந்த மலைஜாதியினருக்காக ஒரு ஹாஸ்டல் கட்டினால் வசதியாக





இருக்கும். இதைப்பற்றி நான் ஏற்கனவே சட்டசபையில் பேசியிருக்கிறேன். அங்கே ஒரு சின்ன பள்ளிக்கூடம் கட்டியிருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தை இன்னும் பெரிதாக்கி ஒரு ஹாஸ்டலைக் கட்டிக்கொடுத்தால் வசதியாக இருக்கும். சேலத்திலிருந்து கம்மாளப்பட்டிக்குப் போவதற்கு ஒரு பஸ் விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** இவையெல்லாம் பட்ஜெட் பொது விவாதத்தில் பேசவேண்டியவை.

(மணி அடிக்கப்பட்டது)

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உபமான்யக் கோரிக்கையின் மீது பொது விவாதமே நடந்துவிட்டது. குறிப்பாக இங்கே அங்கத்தினர்கள் பேசிய விஷயங்களை இரண்டு மூன்று தலைப்புகளின் கீழ் பிரித்துக் கொள்ளலாம். ஹாஸ்டல் வசதிகளை விஸ்தரிக்க வேண்டும் என்பது ஒன்று. இப்பொழுது சற்றேறக்குறைய 300 ஹாஸ்டல்கள் இருக்கின்றன. மேலும் 20 அல்லது 22 ஹாஸ்டல்களை திறப்பதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. எந்தெந்த இடத்திலே ஜில்லாக் கலெக்டர் அவர்கள் ஹாஸ்டல் அமைக்க வேண்டுமென்று சிபாரிசு செய்கிறார்களோ, அதையொட்டி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சாதாரணப் பள்ளிகளிலே படிக்கும் மாணவர்களுக்கு இருப்பதைப்போல டெக்னிகல் பள்ளிகளில் படிக்கிற மாணவர்களுக்கும் ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக பெண்களுக்கு ஹாஸ்டல்கள் அதிகமாக வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். சர்க்காருடைய கொள்கையும் பெண்களுக்கு ஹாஸ்டல் வசதியை அதிகரிக்க வேண்டுமென்பதுதான். அங்கு படிக்கிற மாணவர்கள் எல்லோருக்கும் உடை கொடுக்க வேண்டுமென்று கூறப்பட்டது. இப்பொழுது நாட்டிலே இருக்கிற நெருக்கடி காரணமாக, நிதி நிலையை ஒட்டி, எல்லா மாணவர்களுக்கும் கொடுக்கப்படவில்லை. மாணவிகளுக்கு மட்டும் உடை கொடுக்கப்பட்டு வருகிறது. பொதுவாக, ஹரிஜன ஹாஸ்டல்கள் சம்பந்தமான கொள்கை என்னவென்றால், எவ்வளவு அதிகமாகக் கொடுக்க முடியுமோ, அப்படிக் கொடுக்க வேண்டும் என்பதுதான். ஆனால் அந்தந்த ஆண்டிலுள்ள நிதி நிலையை ஒட்டி, அந்த வசதிகள் தீர்மானிக்கப்படுகின்றன. ஒரு சிறு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், முன்பு சென்னை ராஜதானியாக இருந்த காலத்தில் இந்தத் துறைக்காகச் செலவழித்த தொகை ரூ. 69 லட்சம்தான்; ஆனால் இன்றைக்கு ஹரிஜன இலாகாவிற்காகச் செலவாகும் தொகை ரூபாய் 4 கோடி. கனம் அங்கத்தினர்கள் இதிலிருந்து சர்க்கார் இந்த வகையில் எவ்வளவு விரைவாகவும் விரிவாகவும் ஆவன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள முடியும்.

ஹாஸ்டல் சம்பந்தமாக மாணவனுக்குப் பணம் கொடுப்பதில் இப்பொழுது கொடுக்கும் ரூபாய் 16 உணவுக்குப் போதவில்லை என்பது ஒரு முக்கியமான பிரச்னைதான். இதைப்பற்றி முன்பு

ஒரு முறைகூட பரிசீலனை செய்தார்கள். ஆனால் ராஜ்ஜியத்தில் இருக்கும் நிதி நிலை காரணமாக அதிகரிக்க இயலவில்லை என்றாலும் கூட அந்த பிரச்னை சர்க்காரின் கவனத்தில் இருக்கிறது, இருந்து கொண்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு வீட்டு மனை கொடுக்கும் விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும், தனியாக அவர்களுக்கு ஹைஸ்கூல்கள் அமைக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். மனை சம்பந்தமாக கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும், சர்க்காருக்கு மனை கொடுக்க வேண்டும் என்பதுதான் லட்சியம், என்று. ஆனால் மனைகள்தான் கிடைப்பதில்லை. எந்தக் கிராமத்தில் போய் ஹரிஜனங்களுக்கு வீட்டு மனை வேண்டுமென்றாலும், அதற்காக நிலத்தைக் கோரினாலும் அங்கே பலவிதமான சிக்கல்கள், தடைகள் இடையூறுகள் வருவதால் கொடுக்க முடியவில்லை, தாமதம் ஏற்படுகிறது. ஹைஸ்கூல் தனியாக வேண்டும் என்றார்கள். அது அவ்வளவு பொருத்தமானது என்று இந்த சர்க்கார் கருதவில்லை. எட்டாவது வரை அவர்கள் தனியாகப் படிக்கிறார்கள். அதன் பிறகு ஹைஸ்கூல் வகுப்புகளில், ஹரிஜனங்கள், மற்றவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல், ஒருமைப்பாடு உணர்ச்சியுடன் ஒருவரோடு ஒருவர் இணைந்து வளர்ந்தால்தான் தாங்கள் பிரிக்கப்பட்டவர்கள் என்ற எண்ணம் இல்லாமல் போகும். ஆகவே, தனி ஹைஸ்கூல் என்ற கருத்தை இந்த சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. அம்மாதிரியான முடிவு முன்பே எடுத்திருக்கிறது. ஹைஸ்கூல் ஸ்டேஜிலே எல்லோரும் சேர்ந்து எந்த விதமான வித்தியாச உணர்ச்சியும் இல்லாமல் படித்துப் பழகவேண்டும் என்பதுதான் சர்க்காருடைய நோக்கம்.

வேறு பல தனிப்பட்ட பிரச்னைகள் எழுப்பப்பட்டன. அவைகளையெல்லாம் பற்றித் தனித் தனியாக அமைச்சருக்கு எழுதி அனுப்பினால், அவைகளை கவனிப்பார் என்று சொல்லி முடிக்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 13,70,700 under Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND No. XXVI—IRRIGATION.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 10,13,100 under Demand No. XXVI—Irrigation."

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இரிகேஷன் சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். அதாவது, பஞ்சாயத்து யூனியன் சம்பந்தமாக சில தொகைகள் ஒதுக்கப்படுகின்றன.





இன்றைக்கு இரிகேஷன் ஐந்துபேர் ஆள்கையில் இருக்கிறது. பப்ளிக் ஒர்க்ஸ்; எஸ்.எம்.ஐ.பி.; புட் ப்ரொடக்ஷன்; யூனியன் கண்ட்ரோல் இருக்கக்கூடிய குளங்கள்; ரிவின்யூ டிபார்ட்மெண்டின்கீழ் இருக்கக்கூடிய குளங்கள்; இம்மாதிரி ஐந்து இலாகாவினால் பார்க்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வேலையையும் எடுத்துக்கொண்டால்; அது யார் செய்ய வேண்டும் என்று தீர்மானிப்பதற்கே கிட்டத்தட்ட ஒரு வருஷம்கூட ஆகிவிடுகிறது. யூனியன் பொறுப்பில் இன்றைக்கு மானவாரிக் குளங்கள்தான் இருக்கின்றன. யூனியன், ரெவின்யு இலாகா ஆக இரண்டு குளங்களும் ஹைவேஸ் டிபார்ட்மெண்டின் மேற்பார்வையில்தான் இருக்கிறது. ரோடு பராமரிப்பு, கவலை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. யார் பொறுப்பு என்று புரிவதில்லை. இரிகேஷன் எஸ்.எம்.ஐ.பி.யில் இருப்பதால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ரெகுலர் மெயின்டினன்ஸ் யார் செய்வது என்ற கவலை இருக்கிறது. நான்கு தினங்களுக்கு முன்பாக ப்ரைம் மினிஸ்டர் கூடச் சொல்லியிருக்கிறார்கள்; இரிகேஷனை இரண்டாகப் பிரிக்க வேண்டும். மேஜர், மைனர் என்று பிரிக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். நடைமுறையில் பார்க்கும் போது ஒரு வேலையை எந்த இலாகா செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கவேகூட ஒரு வருஷத்திற்கும் மேலாக ஆகிறது. ஒரு வேலை என்றால் அதை புட் ப்ரொடெக்ஷன் டிபார்ட்மெண்டா அல்லது எஸ்.எம்.ஐ.பி.யா யார் செய்ய வேண்டும் என்றே புரிய மாட்டேன் என்கிறது. புட் ப்ரொடெக்ஷன் போர்ட் ஆப் ரெவின்யூவின் கீழ் இருக்கிறது. எஸ்.எம்.ஐ.பி. பப்ளிக் ஒர்க்ஸ் கீழே இருக்கிறது. இரிகேஷன் ரொம்ப முக்கியமானது. ஆகவே இரிகேஷனை யார் பார்ப்பது என்று திட்டவட்டமாகத் தீர்மானித்து ஆவன செய்தால், நலமாக இருக்கும். அதன் மூலம் செலவையும் குறைக்கலாம். கால தாமதத்தையும் தவிர்க்கலாம்.

* திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது பாசனத் திட்டத்திலே உணவு உற்பத்திக்கு முதலிடம் கொடுத்து நம் அரசாங்கம் எவ்வளவு செலவு ஆனாலும் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று முயற்சி எடுத்திருக்கிறது. என்னுடைய தொகுதியில் லோயர் பவானித் திட்டத்தினால் ஸீப்பேஜ் ஏற்பட்டு 30, 32 பள்ளங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கோபி தாலூகாவில் ஈரோடு வரை பள்ளங்கள் போய்க் கொண்டிருக்கின்றன. அதற்கெல்லாம் மேஸன்ரி அணை கட்டி மேட்டுப்பாங்கிலே இருக்கும் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தால் உணவு உற்பத்தி அதிகரிக்க வசதியாக இருக்கும்.

கனம் சபாநாயகர் : இதையெல்லாம் ஜெனரல் டிஸ்கஷனிலே சொல்லலாம்.

திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் : இது மிக முக்கியமான விஷயம், சார். அங்கே இருக்கும் பள்ளங்களில் 29 பள்ளங்களுக்கு எஸ்டிமேட்டு போட்டு இன்னும் ஒருவிதமான வேலையும் துவங்க [illegible] ஈரோட்டிலே மட்டும் தட்சிணாமூர்த்தி அவர்கள் அமைச்சரைக் கூட்டிக் கொண்டுபோய் தூங்குப் பள்ளம்

. . . . . (?) பள்ளம் இரண்டையும் ஆரம்பிக்க விழா நடத்தி விட்டார்கள். மற்றவைகளைப் பாக்கிபோட காரணம் என்ன என்று தெரியவில்லை. அந்தப் பள்ளங்களையும் வேலைசெய்தால் குறைந்தது 20,000 ஏக்கராவிற்குத் தண்ணீர் பாய்ச்சி உற்பத்தியைப் பெருக்க முடியும்.

**கனம் சபாநாயகர்:** இது உப மானியக் கோரிக்கை. அது சம்பந்தப்பட்டவைகளை மட்டும்தான் பேசவேண்டும்.

**திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர்:** எமர்ஜன்சியாக இருக்கிறது, கஷ்டமாக இருக்கிறது. அதனால்தான் சொல்லவேண்டியிருக்கிறது.

**கனம் சபாநாயகர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர்:** ஸ்ப்பேஜ் தடப்பள்ளி வாய்க்காலில் கலந்து தண்ணீரினால் அடிக்கடி கரைகள் உடைந்து போகின்றன. அதனால் சாதாரணமாக ஏற்படும் உற்பத்தியும் குறைந்து போகிறது. விளைச்சல் குறைகிறது. வெள்ளாமைக்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, அங்கெல்லாம் கரைகளைப் போட்டு நல்லதொரு திட்டத்தை வகுத்து உடனடியாக அவைக் கட்டுகளைக் கட்டினால்தான் விவசாயத்திற்கு குந்தகம் இல்லாமல் இருக்கும். கஷ்டம் இல்லாமல் இருக்கும். உற்பத்தி நலமாகப் பெருகும். அரசன்கோட்டை பி. எச். சானலின் கடைசிப் பகுதி (டெயில் எண்ட்) யில் தண்ணீர் சரியாக வருவதில்லை. அந்தப் பகுதிக்குத் தண்ணீர் வரச் செய்ய வேண்டுமென்று எத்தனையோ விண்ணப்பங்கள் கொடுத்தும் தண்ணீர் வந்து சேர்வதில்லை. அப்படியிருக்கும்போது அங்கு ஏழெட்டு மைல்களுக்கப்பால் வாணப்புத்தூர் சானலை ஏற்படுத்தி ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி கொடுக்கவேண்டும் என்கிற திட்டம் போடப்பட்டது. அதிலே 100 ஏக்கர் புஞ்சைதான் இருக்கிறது. 770 ஏக்கர் தோட்டங்கள் இருக்கின்றன. அதிலே 120 கிணறுகள் இருக்கின்றன. அந்த 120 கிணறுகளுக்கும் பம்ப் செட் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தோட்டங்களில் மஞ்சள், புகையிலை விளைகிறது. இப்படியிருக்க வாணப்புத்தூர் சானலை வெட்டவேண்டும் என்று சில 'பொலிடிகல்' தீவிரவாதிகள் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டு அதற்கு திட்டம் வகுத்துக்கொண்டு அரசாங்கத்தினிடத்தில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அங்கிருக்கும்படியான விவசாயப் பெருங்குடி மக்கள் சிலர் 'அந்த வாய்க்கால் வேண்டியதில்லை. புகையிலை, மஞ்சள் கெட்டுவிடும். அந்தச் சானலை ஏழு லட்சம் ரூபாய் செலவில் கட்டினால் நாங்கள் பெட்டர்மெண்ட் டாக்ஸ் கட்ட முடியாத நிலையில் இருக்கிறோம். பூமி உரம்பு பிடித்து கெட்டுவிடும். மஞ்சள், புகையிலைப் பயிர் வைக்க முடியாமல் போகும். கம்பு சோளம் போட முடியாமல் விவசாயம் ஒரு வருஷம் பூராவும் செய்ய முடியாது' என்று அரசாங்கத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த வாய்க்கால் அங்கே தேவை இல்லை அதற்கு அதிகமாகச் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. விவசாயப்



பெருங்குடி மக்களுடைய பூமிகள் பாதிக்கப்பட்டுவிடும். ஒரு ஏக்கரில் மஞ்சள் பயிர் வைத்தால் 3,000 ரூபாய் பலன் கிடைக்கும். புகையிலை ஒரு ஏக்கரில் வைத்தால் 2,000 ரூபாய் கிடைக்கும். அப்படிப்பட்ட பூமிகள் கெட்டுவிடும். மூன்று போகம் விளைவு வீணாகப் போய்விடும். அரசாங்கம் வாய்க்காலை வெட்டினால் நெல் வைக்கவேண்டியிருக்கும். வீணாக விவசாயிகளுக்கு வருவாய் குறைந்து போகும். இந்தக் காரணங்களை விவசாயிகள் தெரிவித்து அந்த வாய்க்காலுக்கு ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள். அந்த வாணப்புத்தூர் பிராஞ்சு சானலை வெட்டினால் 500 ஏக்கருக்கு தண்ணீர் பாயாமல் விவசாயம் கெட்டுவிடும். . .

(மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உப மானியக் கோரிக்கையில் தலப் பாசனத் திட்டங்களுக்காக அதிகப்படியான பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். இது நல்ல ஏற்பாடாகும். பணம் அதிகம் இல்லாததால் பஞ்சாயத்து யூனியனிலிருந்து அதிகப்படியான வேலை செய்ய முடியாமல் இருந்தது. அந்தக் கஷ்டம் ஓரளவு இதிலிருந்து குறையும் என்று நான் நினைக்கிறேன்.

'ரீ-மாடலிங் ஆஃப் சானல்ஸ்' என்ற வகையில் அமராவதித் திட்டத்தின்கீழ் 'டோகன்' ஆக ரூ. 100 ஒதுக்கியிருக்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவிலும் இப்பொழுது சானல் மராமத்து செய்து வருகிறார்கள். அதிலே நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. வீணாக தண்ணீர் வெளியிலே கசிந்து போகாமலும் சீக்கிரமாகத் தண்ணீர் செல்வதற்கு இந்த 'ரீ-மாடலிங் ஆஃப் சானல்ஸ்' திட்டம் மிகவும் நல்லது என்பதை இந்த இடத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே சந்தர்ப்பத்தில் அதை விரைவாக நடத்தவில்லை. திட்டத்தை எடுத்தார்கள். அதைச் சீக்கிரமாகச் செய்யவேண்டுமென்று நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கன்யாகுமரி ஜில்லாவிலுள்ள குளங்களை மராமத்துச் செய்வதற்குச் சிறிது பணத்தை இதில் ஒதுக்கியிருக்கிறார்கள். நெல்லை ஜில்லாவைப் பொறுத்தவரையில் ஒன்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தாம்பரபரணி பாசனப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டாலும் தாம்பரபரணி பாசனம் அல்லாத மற்ற இடங்களை எடுத்துக் கொண்டாலும் ஏரிகள் அதிகமாக இருக்கின்றன. இப்பொழுது பெரிய நீர்த் தேக்கம் கட்ட வசதி இல்லை. அதற்குக் காரணம் எவ்வளவு கட்ட முடியுமோ அவ்வளவும் கட்டி விட்டார்கள். இனி மேல் கட்ட இடம் இல்லை. ஏதாவது ஒரு பெரிய மழை ஒன்றிரண்டு நாட்களுக்குச் சேர்ந்தாற்போல் பெய்து விட்டால் தண்ணீர் ஆற்றின் வழியாகக் கடலுக்குச் சென்றுவிடுகிறது. அப்படிச் செல்லாமல் தடுக்க ஒரு வழி என்னவென்றால் இப்பொழுதிருக்கும் குளங்களை மராமத்து செய்து ஆழப்படுத்த

[திரு. ஆர். எஸ். ஆறுமுகம்] [21st October 1964

வேண்டும். அப்படிச் செய்தால் தண்ணீரெல்லாம் குளங்களில் தங்குவதற்கு முடியும். இப்பொழுது குளங்களில் ஒரு மாதத்திற்கான தண்ணீர் தான் வருகிறது. எனவே குளங்களை ஆழப்படுத்த மராமத்துத் திட்டங்களை நிறைவேற்றினால் குளங்களில் அதிக காலத்திற்குத் தண்ணீர் தேங்கி விவசாயம் செய்ய நல்ல வசதியாக இருக்கும் என்று நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

சானலை 'ரீ-மாடல்' செய்வது போலவே, கன்யாகுமரி ஜில்லாவில் குளத்தை மராமத்து செய்ய ஏற்பாடு செய்திருப்பது போல, நெல்லை ஜில்லாவிலும் உள்ள குளங்களை ஆழப்படுத்தி, டீ-சில்டிங் செய்தால் நல்ல அபிவிருத்தி காண முடியும் என மீண்டும் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். முன்பு விவசாயிகள் பயிர் சாகுபடிக்காகக் குளங்களிலுள்ள வண்டல்களை நிலங்களில் போட அள்ளிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இக் காலத்திலே பெரும் பாலும் ரசாயன உரத்தைப் பயன்படுத்துவதன் மூலமாக விளைச்சலைக் காண்கிறோம். அதன் காரணமாகக் குளங்கள் மண் அள்ளப்படாமல் போய்விடுகின்றன. இதையெல்லாம் எண்ணிப் பார்த்தால் இப்பொழுது புதிதாக நீர்த் தேக்கங்களைக் கட்ட இடமில்லாமலிப்பதால் நீர்த் தேக்கங்கள் கட்டுவது போல எல்லாக் குளங்களையும் டீ-ஸில்டிங் செய்து அபிவிருத்தி அடையச் செய்யுமாறு ஆலோசனை கூறி எனனுடைய பேச்சை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்திலே பேசப்பட்டவையெல்லாம் பொது விவாதமாக அமைந்துவிட்டன. குறிப்பாக 'இர்ரிகேஷன்' ஐ 'மேஜர்', 'மைனர்' என்று பிரிக்கவேண்டும் என்பதைப் பற்றிப் பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன. இப்பொழுது நாம் அமைந்திருக்கும் முறை, ஒவ்வொரு இலாகாவும் ஒவ்வொரு பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது. உணவு சம்பந்தமான விஷயங்களை நம்முடைய ரெவினியூ போர்டு தன்னுடைய மேற்பார்வையிலும் 'மைனர் இர்ரிகேஷனை' பொது மராமத்து இலாகாவின் மேற்பார்வையிலும் கவனிக்கவேண்டும். இந்த இரண்டு துறைகள் மூலமாக இதை அதிகரிக்கக்கூடிய வழிகள் இருக்கின்றன. ஆகவே இது பொதுவான ஒரு விஷயம். அதைப்பற்றி உடனடியாக எந்த முடிவும் எடுப்பதற்கில்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. முத்துவேலப்ப கவுண்டர் அவர்கள் பேசும்போது "திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் பகுதியில் இருக்கும் அணையைக் கட்டி விட்டார்கள், எங்கள் ஊரில் உள்ள அணையை எடுத்துக் கட்ட முன்வரவில்லை" என்று குறிப்பிட்டார்கள். அணைத் திட்டங்களைப் பரிசீலனை செய்து பார்த்ததில் திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் சொன்ன இடத்திலே அந்த அணையைக் கட்டுவது லாபகரமாக இருந்தது. ஆனால் திரு. முத்துவேலப்ப கவுண்டர் அவர்கள் சொன்ன இடத்திலே



21st October 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

கட்டுவதைப்பற்றிக் கணக்கிட்டதில் நஷ்டமாக இருந்தது. அதனால்தான் அந்த முடிவு எடுக்க முடியவில்லை என்று நான் அறிகிறேன்.

அடுத்தாற்போல் பொதுவாக குளம் மராமத்து செய்யவேண்டும், குளத்திலே தண்ணீர் பிடித்து நாம் விவசாயத்தைப் பெருக்க வேண்டும் என்பது நல்ல முறையாகும். அதைக் கன்யாகுமரி மாவட்டத்தில் விரிவுபடுத்துவதற்காகப் பணம் ஒதுக்கியிருக்கிறோம். வேறு இடத்திலும் அந்தவிதமான திட்டம் உபயோகமாக இருக்கிறதா என்று அதைப் பின்பு பரிசீலனை செய்யலாம்.

கனம் அங்கத்தினர் திரு. ஆர். எஸ். ஆறுமுகம் அவர்கள் பேசும்போது நெல்லை ஜில்லாவில் குளங்கள் அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் மூலமாக விவசாயத்தைப் பெருக்க முடியும் என்று சொன்னார்கள். அதை அவர்கள் பொது விவாதத்தின்போது சொன்னால் அது பரிசீலனை செய்யப்படும். அந்த ஜில்லாக் கலெக்டருக்கு அவர்கள் அதைக் குறித்து எழுதியனுப்பினால் அதுவும் கவனிக்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

MR. SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 10,13,100 under Demand No. XXVI—Irrigation".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND No. XXVIII—PUBLIC WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,57,900 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND No. XXIX—PUBLIC WORKS—GRANTS-IN-AID.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 100 under Demand No. XXIX—Public Works—Grants-in-aid."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND No. XXX—ROAD TRANSPORT SCHEMES.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 97,500 under Demand No. XXX—Road Transport Schemes".

The Demand was put and carried and the Grant was made.

[21st October 1964

DEMAND NO. XXXIII—MISCELLANEOUS.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 9,53,000 under Demand No. XXXIII—Miscellaneous".

திரு. ஜே. மாதா கவுடர்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த
11-30 a.m. உப மானியக் கோரிக்கையில் பலவகை என்ற ஓர் இனத்தின் கீழ் உணவு தானிய வர்த்தகர்கள், அரிசி மில் சொந்தக்காரர்கள் ஆகியோர் வசம் உள்ள தானிய இருப்பை அடிக்கடிப் பார்வையிடுவதற்காகவும் பல்வேறு நிலையங்களில் தரகர்கள் சம்பாதிக்கும் லாபத்தைக் கண்காணிக்கவும் தனியாக நிர்வாகத் துறை ஒன்றை அமைக்கும் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்துள்ளது. இந்த நோக்கத்தையும் அரசாங்கத்தின் உணவு கொள்கை மாறுதலையும் கருத்தில் கொண்டு அரசாங்கம் சிவில் சப்ளை இன்ஸ்பெக்டர்கள் அலுவலகம் ஒன்றை நிறுவியுள்ளது என்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். சென்னை நகரத்திலும் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் போன்ற ஜில்லாக்களில் மட்டுமின்றி எல்லா மாவட்டங்களிலும் இந்த உணவுப் பிரச்னை இருக்கிறது. நாம் சிவில் சப்ளை இலாகாவை ஏற்படுத்துவதன் நோக்கம் சர்க்காரே தானியங்களைக் கொள்முதல் செய்து துரிதமாக நியாயமான விலைக்கு மக்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்பதுதான். இது மிக மிக அவசியம். இன்றைக்கு நாட்டில் இருக்கக் கூடிய அரிசி பற்றாக்குறை காரணமாக எத்தனையோ சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இருந்தாலும் அரசாங்கம் பலவகையிலும் என்ன என்ன செய்யலாம் இந்தப் பிரச்னையைச் சமாளிப்பதற்கு என்று பார்த்துப் பல ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். கூட்டுறவு இலாகா மூலமாக விநியோக ஏற்பாட்டை செய்யலாமா என்று பார்த்தார்கள். சிவில் சப்ளை மூலமாக எவ்வாறு அரிசி கொள்முதல் செய்து விநியோகம் செய்யலாம் என்று பார்த்தார்கள். அதுவும் அமைச்சர் அவர்கள் தஞ்சாவூருக்கு நேரிலேயே சென்று ஜில்லாக் கலெக்டர்களைக் கொண்டு கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்து வந்திருக்கிறார்கள். இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்டு வருகின்ற அரிசியை சிவில் சப்ளை இலாகா மூலமாக விநியோகிக்கின்ற முறையைப் பற்றித் தெரிந்து கொள்ள மக்கள் மிகவும் ஆவலாக இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காரணம், இன்றைக்கு நம்முடைய விநியோக முறையைப் பொறுத்த அளவில் கூட்டுறவுக் கடைகள் மூலமாகவோ தனிப்பட்ட வியாபாரிகளை நம்பியோ வெற்றிகரமாகச் சாதிக்க முடியுமா என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். தனிப்பட்ட வியாபாரிகளை நம்பிப் பயன் இல்லை. ஆகவே எப்படி இருந்தாலும் இன்றைக்கு அறுவடையாகிற நெல்லைக் குறைந்தது 2 லட்சம் டன்னாவது கொள்முதல் செய்து மக்களுக்குத் துரிதமாக விநியோகிக்க ஏற்பாடு



21st October 1964] [திரு. ஜே. மாதா கவுடர்]

செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிவிட்டது. அப்போதுதான் இந்தப் பிரச்னையை நாம் சமாளிக்க முடியும்.

அதோடு நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் அதை ஒரு சர்ப்ளஸ் மாவட்டமாகக் கருதிவிட முடியாது, கோயம்புத்தூர் ஜில்லாவைப் போன்றதுதான் அது. இன்றையதினம் கோயம்புத்தூரில் அரிசி பற்றாக்குறை இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் அங்கே இருந்து மிக அதிக அளவு கேரளாவுக்குப் போய் விடுவதுதான். அங்கே சிவில் சப்ளை அதிகாரிகளை நியமித்து அந்த மாவட்டத்திற்கு அரிசி சப்ளையைச் சீராக்குவதுபோலவே நீலகிரி மாவட்டத்திற்கும் தனியாகவே சிவில் சப்ளை அதிகாரிகளைப் போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் நாம் எல்லா அனுமதி பெற்ற கடைகளுக்கும் ஐந்து மூட்டை, பத்து மூட்டை என்று விநியோகம் செய்தாலும் கூட அரிசிக்காக நிற்கிற க்யூ குறையவில்லை. சாதாரண மக்களும் நடுத்தர வகுப்பாளர்களும் மணிக்கணக்காக அரிசிக்காக நிற்கிறார்கள் என்றால் அத்தகைய ஒரு பற்றாக்குறை நிலைமை உண்டாக்கப்பட்டு இருக்கிறது. இதை வெற்றிகரமாகச் சமாளிக்கவேண்டுமென்றால் குடும்ப ரேஷன் கார்டு முறையை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வந்தால்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமே அல்லாது வேறு எந்த தனிப்பட்ட நபர்களும் சரியான முறையில் விநியோகம் செய்ய முன்வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. இந்தமாதிரி கொள்முதல் விநியோக முறையைச் சர்க்கார் மேற்கொள்வதற்கு ஆகும் செலவுக்காக அடையாளமாக 100 ரூபாய் மானியம் கோருகிறார்கள். லட்சம் ரூபாய் செலவானாலும் பரவாயில்லை. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அதிகாரிகளைப் போட்டு ரேஷன் முறையை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்காலிகமாக ரேஷன் கார்டுகளைப் ப்ரின்ட் செய்து அமுலுக்கு உடனடியாகக் கொண்டுவரவேண்டும். இரண்டாயிரம் பேர் ஜனத்தொகை கொண்ட நகரம் என்றால் 500 குடும்பம் இருக்கும். ஒவ்வொரு நகரத்திலும் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரிசி சப்ளை உத்தரவாதம் செய்யப்படவேண்டுமென்றால் உடனடியாக ரேஷன் முறையைக் கொண்டுவரவேண்டும். சிவில் சப்ளை இலாகா, போலீஸ் இலாகா ஆகிய இரண்டும் ஒருங்கிணைந்து இந்த அரிசி விநியோக முறை வெற்றிகரமாக நடைபெற ஆவன செய்ய வேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவேதான் இந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்கிறேன். காரணம், மக்கள் இந்தச் சர்க்காரிடத்தில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். கடந்த இரண்டொரு தினங்களாக நாள் ஒன்றுக்கு 3,000 மூட்டைகளுக்கு மேல் நகருக்குள் கொண்டு வந்து விநியோகிக்கிறார்கள் என்றால் அவர்கள் இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கை வைக்காமல் எப்படி இருப்பார்கள்? ஆகவே, மக்களுடைய நம்பிக்கையை உறுதி செய்கின்ற முறையில் உடனடியாக ரேஷன் முறையை அமுலுக்குக் கொண்டு வந்து அரிசி விநியோக முறையை ஒழுங்குபடுத்த வேண்டும். இதுதான் நம்முடைய

முக்கிய பிரச்னை. அடுத்த மாதமோ, டிசம்பரிலோ வர இருக்கிற பஞ்சாயத்து தேர்தல்களைப் பற்றிக்கூடக் கவலைப்பட வேண்டாம். அந்தத் தேர்தலை அடுத்த ஆண்டு மார்ச்-ஏப்ரலுக்கு ஒத்தி வைக்கலாம். அந்தத் தேர்தல் வேலைக்கு ஆகும் பணம், அதில் ஈடுபடும் அதிகாரிகள் ஆகிய எல்லோரையும் கூட இந்த உணவு விநியோக வேலைகளுக்குப் பயன்படுத்தியாவது இதை வெற்றிகரமாகச் செய்யவேண்டுமென்று சொல்லி, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** கனம் சபாநாயகர் அவர்களே, இது நான்காவது ஐட்டத்தில் சொல்லப்படுகிறது, Preliminary work of preparation of plans and estimates என்பதாக. இப்பொழுது ஒவ்வொரு இடத்திலுமாவது ரெகுலேடெட் மார்க்கெட் வைத்தால் நலமாக இருக்குமென்று நினைக்கிறேன். இந்த உணவு வர்த்தக துறையில் நாம் அதிகாரிகளை நியமிக்கும்போது கொஞ்சம் தானியங்களில் தராதரங்களை நன்கு உணர்ந்தவர்களையே போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக விவசாய இலாகா அலுவலர்களை இத்துறைக்கு மாற்றலாம். மற்றவர்கள் தானியங்களில் உள்ள குறைபாட்டை எடுத்து சுட்டிக் காட்டுவதற்கு முன்னால் இவர்களே அவற்றை கண்டுபிடிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டுமென்பதற்காக இந்தக் கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன்.

இப்போது நாம் பெரிய திட்டத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம். பர்ச்சேஸ் பண்ணுகின்ற திட்டத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம். நீண்ட நாள் ஆனவுடன் அரிசியோ, நெல்லோ சரியில்லை என்ற அளவுக்குத் தவறுதல் ஏற்பட்டால் யார் பொறுப்பு என்று கண்டு பிடிக்க முடியாத குறை இல்லாமல் நடந்து கொள்ள வேண்டியது நம்முடைய பொறுப்பு. நெல் கொள்முதல் செய்ய வேண்டிய வேலையை அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்ட் செய்தால் நல்லது. யாராவது வங்குவது என்று ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பொறுப்பில் விட்டால் அப்போது என்ன தவறுகள் ஏற்படும் என்பது நமக்குத் தெரியும். 'செய்ன் ஆப் ஆபீசர்ஸ்' ஏற்படுத்த வேண்டும். அதோடு ரெகுலேடெட் மார்க்கட்டை ஆங்காங்கே ஏற்படுத்தி விட்டால் விவசாயிகளே கொடுக்கத் தயாராக இருப்பார்கள். தரம் பிரித்திருக்கிறோம். ப்ரொட்யூசர்கள் கொடுக்கத் தயாராக இருப்பார்கள். ரெகுலேடட் மார்க்கட் ஏற்படுத்தி விட்டால் தரத்திற்குத் தகுந்தபடி நெல்லுக்கு விலை கிடைக்கும். ப்ரொட்யூசர்களுக்கும் உற்சாகம் ஏற்படும். இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, தனியாக இப்போது சிவில் சப்ளைஸ் இன்ஸ்பெக்டரை ஒவ்வொரு மாவட்டத்திலும் போட ஸ்டாப் சாங்ஷன் செய்வதற்காக பூர்வாங்கமாக 100 ரூபாய் இந்த மானியத்தில் கோரப்பட்டிருக்கிறது. இந்த முறை





முதலில் நான்கு ஜில்லாக்களில் மட்டும் இருந்தது; தற்போது எல்லா ஜில்லாக்களுக்கும் விஸ்தரிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மதுரை போன்ற நகரங்களில்கூட சிவில் சப்ளைஸ் ஆபீஸ் தனியாக இருக்கிறது. விநியோகம் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்று சொன்னால் அதிகாரிகளை மட்டும் நம்பிப் பயன் இல்லை. ஏற்கனவே சில கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன. விநியோகத்தைப் பொருத்து நகரத்தை எடுத்துக் கொண்டால் ஆறு மாதக் கணக்கை எடுத்து அதிலிருந்து விகிதாசாரம் போட்டு கொடுக்கப்படுகிறது. கணக்கிலே போகஸ் நடந்திருக்கிறது என்று நாங்கள் எடுத்துக் காட்டிய பிறகு அதை அடித்தார்கள். பொதுவாக நகரங்களில் எம்.எல்.ஏ.க்கள், எம்.பி. க்கள், கவுன்சிலர்கள் ஆகியவர்களைக் கொண்ட அட்வைசரி கமிட்டியை வைத்து யாருக்கு லைசென்ஸ் கொடுப்பது என்று முடிவு செய்தால் நல்லது. அதிகாரிகள் ஜனங்களோடு அதிகமாகப் பழக்கம் இல்லாதவர்கள். அவர்கள் பொதுவாக இந்தப் பகுதியில் இரண்டு கடை, அந்தப்பக்கம் இரண்டு கடை என்று விநியோகப் பொறுப்பை கொடுத்து விடுகிறார்கள். ஏதோ பேப்பரை பார்த்து அவர்கள் லிஸ்ட் தயார் செய்வது சரியாக இருப்பதில்லை. யார் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற லிஸ்டைக் கேட்டால்கூட கொடுப்பதில்லை. அட்வைசரி கமிட்டியின் மூலமாக அவர்களைத் தேர்ந்தெடுத்தால் தவறு இருந்தால் எடுத்துச் சொல்ல முடியும். கோதுமை மற்ற உணவு தானியங்களில் பற்றாக்குறை ஏற்பட்டால் தனித் தனியாக அந்தப் பகுதிகளுக்குக் கடைகளை வைத்து அவர்கள் மூலமாக விநியோகிப்பதற்கு ஐடெண்டிடி கார்டு கொடுப்பது நல்லது. குறைந்த அளவு கொடுத்தாலும் எல்லோருக்கும் கிடைக்குமென்று கூற விரும்புகிறேன்.

திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் எழுந்தார்.

**கனம் சபாநாயகர்:** சேர்வராயன் மலைப் பகுதியில் அரிசி கொடுக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்லப் போகிறார்களா? நானே சொல்லி விடுகிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் கட்டுப்பாடு விதிகளை அமல்படுத்துவதற்காக சர்க்கார் சிப்பந்திகள் தேவை என்பதற்கான கோரிக்கையாகும். இந்தக் கட்டுப்பாடுகளை சரியான முறையில் அமல் நடத்த வேண்டுமென்பதைப் பார்க்கின்றபோது, இன்று விநியோக முறை சரியாக இருக்கவேண்டுமென்பது ஒன்று, போதிய அளவு இருக்கவேண்டுமென்பது மற்றொன்று.

அடுத்தாற்போல் எந்த வழிகளிலே ப்ரொக்யூர்மெண்ட் செய்ய வேண்டுமென்று பேசப்பட்டது. விநியோக முறை சம்பந்தமாக நகரங்களிலே பெரிய நெருக்கடி இருக்கிறது. நகரங்களில் எப்படி விநியோகம் செய்யவேண்டுமென்பதைப் பற்றி சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. கிராமப் புறங்களிலே விநியோகத்திலே

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [21st October 1964

இப்போது கஷ்டமோ, குறைவோ இல்லை. கிராமப் புறங்களில் விநியோக முறையைப் புதிதாகப் புகுத்தி அதனால் ஒரு தோந்தரவைக் கொண்டு வரும்படியான நிலைமையை உண்டாக்கக் கூடாது. நகரங்களைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் நியாயமான முறையில் கிடைக்க என்ன செய்ய வேண்டுமென்பதைச் சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு தினங்களில் முடிவு எடுக்கப்படும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ப்ரொக்யூர்மெண்ட் செய்வதிலே சர்க்காரே செய்கிறார்கள் என்று சொன்னால் சர்க்கார் தங்களுடைய கணக்கிலேதான் செய்கிறார்கள். சர்க்கார் போய்ச் செய்யவில்லை. யார் யாரிடத்தில் கிடைக்கிறதோ, மில்லராக இருந்தாலும் சரி, டீலராக இருந்தாலும் சரி அல்லது அக்ரிகல்சரிஸ்டு ஆக இருந்தாலும் சரி அவர்களிடத்தில் இருந்து கலெக்டர் அவர்கள் பொறுப்பிலே வாங்கப்படுகிறது. இன்றைக்கு அவ்வாறு வாங்குவதற்குத் தஞ்சை ஜில்லா ஒன்று தான் இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் இருந்து வாங்கி மாநிலத்தில் வெளி ராஜ்யங்களுக்கு அனுப்பக் கூடிய நிலையைப் பரிசீலித்துப் பார்த்த பிறகு அவ்வாறு வாங்குவதிலே கஷ்டமோ, சிரமமோ தெரியவில்லை. சாதாரணமாக விவசாயிகள் தங்களுடைய வழக்கமான முறைப்படி எந்த மில்லில் விற்றுக் கொண்டிருந்தார்களோ அங்குதான் கொண்டு போய்ப் போடுகிறார்கள். யாராவது தனிப்பட்ட நபர்கள் சப்ளை செய்கிறோம் என்று சொன்னால் அவர்களிடத்திலிருந்து வாங்கப்படுகிறது. ரெவின்யூ இன்ஸ்பெக்டரை இந்தப் பொறுப்பிலே விட்டால் கஷ்டமான நிலைமை வந்துவிடும் என்ற நிலைமை இல்லை. ப்ரொக்யூர்மெண்ட் சரியான முறையில் நடந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is :—

"That the Government be granted a sum not exceeding Rs. 9,53,000 under Demand No. XXXIII--Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXXIV—STATIONERY AND PRINTING.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,00,000 under Demand No. XXXIV—Stationery and Printing".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXXV—FOREST DEPARTMENT.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,10,000 under Demand No. XXXV—Forest Department".



21st October 1964]

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,10,000 under Demand No. XXXV—Forest Department.

The hon. Member Srimathi A. S. Ponnammal may now speak.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய உபமான்யக் கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நமது நாட்டில் காடுகளை வளர்க்க வேண்டும் என்பதற்காக நாம் பலவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அதற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் சிறிய கிராமப் பகுதிகளிலுள்ள காடுகளிலிருந்து பக்கத்திலுள்ள மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்திச் செல்வதற்காக விறகு உபயோகத்திற்காக இண்டமுள், பொத்தக்கள்ளி இவைகளை பொறுக்கிக்கொண்டு வருகிறார்கள். அங்கேயுள்ள பாரஸ்ட் அதிகாரிகள் இவ்விதம் சுள்ளிகளை பொறுக்கக்கூடாது என்று தடை விதிக்கிறார்கள். இது அங்குள்ள மக்களுக்கு மிகவும் பாதகமாக இருக்கிறது. பெரிய பெரிய மரத்தை ஒன்றும் இந்த மக்கள் வெட்டவில்லை. சாதாரண உபயோகத்திற்காக இண்டமுள், பொத்தக்கள்ளி போன்றவைகளைத்தான் எடுத்துவருகிறார்கள். இவர்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை ஜில்லாவில் குமரி கல்டிவேஷன் செய்வதற்கு பல நடவடிக்கைகள் எடுத்துவருகிறார்கள். அரிஜன மக்கள் இதை அதிகமாக செயல்படுத்தி வருகிறார்கள். இந்த குமரி கல்டிவெஷன் செய்வதற்கு ஷார்ட் டெர்ம் லோன் என்ற முறையில் ஏதாவது வசதி செய்து கொடுத்தால் அதன் மூலம் அவர்கள் வேறு செடிகளையும் வைத்து, இதை நல்ல முறையில் பாதுகாக்க முடியும். இதற்கும் ஆக்கமும் ஊக்கமும் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாரஸ்டிலிருந்து சாதாரண முள் கூட எடுத்துக்கொண்டு போகக் கூடாது என்று தடை விதிக்கின்ற நேரத்தில் 300 ஏக்கர், 400 ஏக்கர் என்று பாரஸ்ட் ஏரியாக்களை பட்டா வாங்கியிருக்கிறார்கள் பலர். அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் எதையோ நினைத்துக் கொண்டு ஆரம்பித்தீர்கள், அதைச் சொல்லவில்லையே.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** நான் சொல்ல விரும்புவது இப்பேர்ப்பட்ட நபர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது தான். கம்புதுரைக்கோட்டை (என் சொந்த பஞ்சாயத்து) என்ற பாரஸ்ட் ஏரியாவில் 80, 89 ஏக்கரா இடங்களுக்கு சென்னையிலுள்ள தனிப்பட்ட ஒரு பெரிய முதலாளி பட்டா [illegible]ங்கியிருப்பதாக தெரிகிறது. இதன் காரணமாக இந்த [illegible]த்தில் மாடுகள் மேய்வதற்குக் கூட போக முடியாத நிலை [illegible]டிருக்கிறது. அரசாங்கதிற்கு தண்டத் தீர்வை கொடுத்துக் [illegible]டு அதில் சாகுபடி செய்து வந்த சாதாரண மக்கள்

[illegible]3—9

இன்றைக்கு திண்டாட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படி பெரும் பணக்காரர்களுக்கு மட்டும் கொடுத்துவிட்டு ஏழை எளிய மக்களுக்கு கஷ்டத்தை உண்டு பண்ணக்கூடாது என்பதை வற்புறுத்தி கூறிக்கொள்ள விரும்புகிறேன். எப்பேர்ப் பட்ட செல்வாக்கு படைத்தவராக இருந்தாலும் அரசாங்கத் தினுடைய கொள்கைக்கு எதிராக இருந்தால் அதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கத் தவறக்கூடாது என்பதைக் கூறிக்கொண்டு, இவ்விதமாக கிடைக்கின்ற இடங்களில் எல்லாம் ஏராளமான மரங்களை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. அ. ராமச்சந்திர ராயர்: கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய பரங்கிப்பேட்டை தொகுதியில் பரங்கிப் பேட்டைக்கும் கடலூருக்கும் இடையில் 5, 6 மைல்களுக்கு சவுக்குக் காடாக இருக்கிறது. இந்த இடங்களிலிருந்து மீன் பிடிக்க செல்பவர்கள் திரும்பி வரும்போது வருவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இரவு காலங்களில் இவர்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். இந்த அடர்த்தியான காட்டுப் பிரதேசத்தை அழித்துவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த இடத்தை பஞ்சாயத்துக்கு ஜாரி செய்து விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, திருமதி பொன்னம்மாள் அவர்கள் காடுகளிலிருந்து சுள்ளிகள் முதலியவற்றை பொறுக்கிக்கொண்டு போவதைப் பற்றியும் அதற்கு எந்தவிதமான தடையும் இருக்கக்கூடாது என்றும் சொன்னார்கள். எல்லா இடங்களிலும் இந்தத் தடையில்லை சில இடங்களில்தான் இருக்கிறது. என்னென்ன கழிவு மரங்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி பார்த்து எந்தெந்த இடத்தில் இதற்கு தடை வேண்டுமோ அந்த இடங்களுக்கு மட்டும்தான் போடப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் தடை விதிக்கப்பட வில்லை. சில இடங்களில் ஹெட்லோட்-களுக்கு அனுமதி கொடுக் கப்பட்டிருக்கிறது. முக்கியமாக மரங்கள் அழிந்து விடக்கூடாது என்பதுதான் நமது நோக்கம். இதற்காக சில கட்டுப்பாடுகள் போடப்பட்டிருக்கிறது. குமரி கல்டிவேஷனுக்காக பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது. பாரஸ்ட் டிபார்ட் மெண்ட்காரர்கள்தான் இதை சரிவர பாதுகாத்து வர வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கான செலவு பூராவும் பாரஸ்ட் டிபார்ட்மெண்ட்தான் ஏற்று நடத்துகிறார்கள். அப்படி யிருக்கும்போது எதற்காக தனிப்பட்ட நபர்களுக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று தெரியவில்லை.

பணக்காரர்களுக்கு ஏதோ பாரஸ்ட் நிலங்களில் பட்டா கொடுத்திருப்பதாக சொன்னார்கள். யாருக்கும் பாரஸ்ட் ஏரியா வில் பட்டா கொடுப்பதில்லை. பாரஸ்ட் ஏரியா குறைந்துவிடும் என்று நினைத்து, யாருக்கும் பட்டா கொடுப்பதில்லை. இன்டஸ்ட் ரீஸ் வகைகளுக்கோ அல்லது பிளான்டேஷன் ... களுக்கோ மட்டும்தான் சில இடங்களில் ... தவிர வேறு எங்கும் கொடுப்பதில்லை.





இருக்கின்ற ஒரு கேஸை வைத்துக்கொண்டு பொதுவாக பேசுவது சரியல்ல. கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட விஷயம் கோர்ட்டில் இருக்கிறது என்று எண்ணுகிறேன். கோர்ட் என்ன முடிவு செய்கிறதோ அதன்படி சர்க்கார் நடக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் நான் குறிப்பிட்டது ஒரு தனிப்பட்ட கேஸ் என்று சொன்னார்கள் . . . இருந்தாலும் . .

கனம் சபாநாயகர்: கோர்ட்டில் இந்த கேஸ் இருந்தால் அதைப் பற்றி இப்போது எப்படி முடிவு சொல்ல முடியும்?

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கோர்ட்டில் இருக்கிறதா இல்லையா என்பது எனக்கு தெரியாது.

கனம் சபாநாயகர் : கோர்ட்டில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். கோர்ட் தீர்ப்பு எப்படியிருக்கிறதோ அது போன்றுதான் சர்க்கார் நடக்க முடியும்.

The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,10,000 under Demand No. XXXV—Forest Department".

The Demand was put and carried and the Grant was made.

B. EXPENDITURE ON CAPITAL ACCOUNT.

DEMAND NO. XXXIX—A CAPITAL OUTLAY ON CONSUMER CO-OPERATIVE.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,50,300 under Demand No. XXXIX—A Capital Outlay on Consumer Co-operative".

MR. SPEAKER: Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,50,300 under Demand No. XXXIX—A Capital Outlay on Consumer Co-operative."

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கனம் சபாநாயகர் அவர் களே, கூட்டுறவு சங்கங்களுக்காக வகை செய்திருப்பதற்கு பாராட்டுகிறேன். இன்று இருக்கிற உணவு நெருக்கடியான ... பல இடங்களிலும் கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையில் ... கொண்டிருக்கின்றன. அரசாங்க தரப்பிலிருந்து ஒரு ... கூட்டுறவு சங்கங்களுக்கு மான்யம் கொடுத்துக் கொண்டிருக் ... என்று கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த ... பல கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. மத்திய ... கூட்டுறவு சொஸைட்டியும் இருக்கிறது. பல டௌன் ... களிலும், முனிசிபாலிடிகளிலும் அநேகமாக

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [21st October 1964

சர்க்கார் உதவிபெற்று இம்மாதிரிப்பட்ட கன்ஸ்யூமர்ஸ் கோவாப்ரேடிவ் சொஸைட்டி ஏற்படுத்தினால் நல்லது என்று கருதுகிறேன். உணவு விநியோகம் செய்வதில் கூட்டுறவு சங்கங்களுக்கு பெரும் பங்கு உண்டு என்பதை நாம்
12-00 noon. மறந்துவிடக் கூடாது. ஆதலால் ஆங்காங்கு ஒரு சில பகுதிகளில் மாத்திரம் இயங்கிக்கொண்டிருக்கும் நிலை இருந்தால் போதாது. பரவலாக ஒவ்வொரு டவுன் பஞ்சாயத்திலும் நகரத்திலும் உருவாக்க அரசாங்கத் தரப்பிலிருந்து உதவி அளிக்க முன்வரவேண்டுமென்று வலியுறுத்தி எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,50,300 under Demand No. XXXIX—A Capital Outlay on Consumer Co-operative."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XL—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 23,05,300 under Demand No. XL—Capital Outlay on Industrial Development."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XLI—CAPITAL OUTLAY ON IRRIGATION.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,65,100 under Demand No. XLI—Capital Outlay on Irrigation."

**திரு. எம். தண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே, இந்த பாசன மூலதனச் செலவு தலைப்பிலே, பொதுப்பணித் திட்ட அடிப்படையில் குறிப்பாக தஞ்சை ஜில்லாவிலே ஒரத்தநாடு, மன்னார்குடி ஆகிய இரண்டு பகுதிகளிலும் 13,14,000 ரூபாய் அளவுக்கு பம்ப் செட் வைத்து தண்ணீர் இரைத்து பாசனம் செய்ய வசதி செய்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் அந்தப் பகுதியிலே 1962-ம் ஆண்டு ஆரம்பத்திலே அந்தப் பகுதி மக்களால் கோரப்பட்டு, பாசன வசதி செய்ய வாய்க்கால் வெட்ட வேண்டிய நிலையில் 4½ மைல் அளவுக்கு வாய்க்கால் வெட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு சர்க்காரினால் அந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்றாலும், மேற்கொண்டிருக்கிற திட்டத்திற்கு போதுமான பம்ப் செட் கிடைக்காத காரணத்தினால் சரியாக நிறைவேறாது இருக்கிறது. இதை மனதிற்கொண்டு உடனடியாக பம்ப் செட் கிடைக்க



21st October 1964] [திரு. எம். தண்டாயுதபாணி]

வழிவகை செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்வதோடுகூட, ஏறத்தாழ 15 லட்சம் ரூபாய் அளவில் நிறைவேற்றப்பட இருக்கிற இந்தத் திட்டத்தை பி.டபிள்யு.டி. ரெகுலர் டிவிஷனில் செய்ய முடியாது என்று கருதுகிறேன். அதற்குத் தனி டிவிஷன் போட்டால் குறிப்பிட்ட காலத்தில் செய்து முடிக்க முடியும் என்பதை மனதிற்கொண்டு துரிதமாக நிறைவேற்ற வழிவகை செய்ய வேண்டுமென்று கூறி எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,65,100 under Demand No. XLI—Capital Outlay on Irrigation".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XLII—CAPITAL OUTLAY ON PUBLIC WORKS.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 25,70,300 under Demand No. XLII—Capital Outlay on Public Works".

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** இந்த ஐடெமில், ஐடெம் 13-ல் சேப்பாக் பில்டிங்கை மேற்கொண்டு கட்ட ரூபாய் 2 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது வரவேற்க வேண்டியதுதான். அது போக சுப்பராயலு மான்ஷன் என்ற கட்டடத்தை கடலூரில் வாங்க பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் ஒதுக்கும் போது பஞ்சாயத்தில் ரோடுகளைப் போட முடியவில்லை, ஹைவேயில் எடுக்க வேண்டுமென்று கோரிக்கைகள் அனுப்பப்பட்டிருக்கிறது. ஃபுட் ப்ரொடக்ஷனை இம்ப்ரூவ் பண்ணினாலும் பொருள்கள் மார்க்கெட்டுக்கு வர நல்ல ரோடு வேண்டும், லாரிகள் போக வசதி வேண்டும், அவைகளுக்கு பணம் ஒதுக்கியிருப்பதாகத் தெரியவில்லை. வாடகை கட்டடத்தை மாற்ற பணம் ஒதுக்கி, மான்ஷன் வாங்க பணம் ஒதுக்கியிருப்பதற்கு பதில் கிராமங்களில் இருக்கும் ரோடுகளைப் போடுவது நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு அதற்கு ஏதாவது வழி இருந்தால் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பஸ் ரூட்டுகளை சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கொள்கை சர்க்காருக்கு இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். பஸ் ரூட்டாக இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம், இல்லையானால் பஞ்சாயத்துத்தான் போட வேண்டும். இந்தமான்யக் கோரிக்கைக்கும் கனம் அங்கத்தினர் சொல்லுவதற்கும் பொருத்தம் அவ்வளவாக இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** யூனியனில் பணம் இல்லை. அதனால் தான் ஹைவேஸ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது வெறும் யோசனைதான்.

[21st October 1964

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 25,70,300 under Demand No. XLII—Capital Outlay on Public Works".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND No. XLIV—CAPITAL OUTLAY ON FORESTS.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,64,500 under Demand No. XLIV—Capital Outlay on Forests".

The Demand was put and carried and the Grant was made.

## C. Expenditure on Local Acccount.

DEMAND No. XLVII—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,00,50,200 under Demand No. XLVII—Loans and Advances by the State Government".

**திரு. வை. சங்கரன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையிலே பர்மா அகதிகளுக்கு 25 லட்சம் ரூபாய் சிறு தொழில்கள் ஆரம்பிக்க ஒதுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாயிரம் ரூபாய் வீதம் கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. பொற்கொல்லர்களுக்கு உதவி கொடுப்பதில் ஏற்பட்ட அனுபவத்தை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். குடும்பத்தோடு வந்திருக்கிறவர்களுக்கு 2,000 ரூபாய் கொடுத்தால் தொழிலில் அதை உபயோகிக்க முடியாமல் செலவழிக்கும் நிலைமை ஏற்படலாம். பொற்கொல்லர்களாவது இங்கேயே இருந்து பழக்கப்பட்டவர்கள். பர்மாவிலிருந்து வந்தவர்களுக்கு பணமாகக் கொடுத்தால் பயன் கிடைக்குமா என்று மறு பரிசீலனை செய்யவேண்டும். அதைவிட நல்ல யோசனை இன்றைக்கு பல தொழில் அதிபர்களாக இருப்பவர்களை கண் இமைக்கும் நேரத்தில் கூப்பிட்டு அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று சர்க்காரோ அல்லது சர்க்கார் அதிகாரியோ கேட்டுக் கொண்டால், மாட்டேன் என்று சொல்ல மாட்டார்கள். இந்த மாதிரி செய்தால் அவர்களுக்கு நன்மை கிடைக்கும். இன்றைக்கு மதுரையில் ஹார்வி, மீனாட்சி, தியாகராஜா என்கிற மில்கள், டி.வி.எஸ். ஸ்தாபனம் எல்லாம் இருக்கின்றன. அவர்கள் ஆளுக்கு 10-20 பேர்களை வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால் கஷ்டம் இருக்காது.



21st October 1964] [திரு. வை. சங்கரன்]

அதனால், இம்மாதிரி அவர்களுக்கு நிரந்தரமான வாழ்க்கைக்கு வசதி கிடைக்கும்படி செய்ய வேண்டும். அதற்கு இது தான் நல்ல முறையாக இருக்கும். தனிப்பட்டவர்களிடம் போய் இவர்களுக்கு வேலை கொடுங்கள் என்று கேட்பது டெக்னிகலாக லீகலாக இருக்காது என்று சொல்லுவது சரியான பதிலாக இருக்காது. மக்களுடைய சேம நலத்தைக் கருதி நிர்வாகம் நடத்துகிற சர்க்கார் இம்மாதிரி தனிப்பட்ட ஸ்தாபனம் வைத்திருப்பவர்களைக் கேட்பது எந்தவிதத்திலும் சட்டப்படி பாதகமாக இருக்காது. சர்க்கார் இந்த மாதிரி தனிப்பட்டவர்களிடம் போய் தயவு கேட்பதில் ஒன்றும் தவறு இல்லை. கண்டிப்பாக நடக்கும். பொற்கொல்லர் விஷயத்திலும் இதைத்தான் நான் சொன்னேன். அதை எடுத்துக் கொள்ளவில்லை. அதே முறையில் பர்மா அகதிகள் விஷயத்திலும் இப்பொழுது சொல்லுகிறேன். இதை கண்டிப்பாக பரிசீலனை செய்ய வேண்டும்.

ஹாண்டு லூம் பைனான்ஸ் கார்பரேஷன் ஏற்படுத்துவதற்கு தனியாக ரூ. 5 லட்சம் ஒதுக்கி, அது மாதிரி ஒரு கார்பரேஷன் 'ப்ளோட்' பண்ண வேண்டும் என்று நடைமுறையில் வந்திருக்கிறது. தீபாவளி போன்ற முக்கியமான பண்டிகை சமயத்தில் கைத்தறியாளர்களுக்கு அதிகமாக உதவி வேண்டியிருக்கிறது. கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும், தனியார்களுக்கும் அந்த சமயத்தில்தான் அதிக உதவி வேண்டியிருக்கிறது. தீபாவளி போன்ற சீசனுக்கு சில மாதங்களுக்கு முன்பே கூடுமான வரையில் உதவி அளிப்பதற்கு முன்வரவேண்டும். தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை சீசன்களில் தான் 'டிமாண்டு' நிறைய இருக்கும். அந்த சமயத்தில்தான் அவர்கள் நிறைய சப்ளை செய்ய வேண்டியிருக்கும். அந்த சமயத்தில்தான் அதிக உதவி தேவையாக இருக்கும், இது ஒரு வரவேற்கக்கூடிய மான்ய கோரிக்கை என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*** கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. வை. சங்கரன் அவர்கள் சொன்ன கருத்தையே பரவலாக எல்லோரும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதில் தவறு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்குத் தான் நான் இப்பொழுது இது சம்பந்தமாக பேசுவதன் வந்திருக்கிறேன். எல்லா ஜில்லாக்களிலும் 'இண்டஸ்ட்ரீஸ்' கிடையாது. எல்லா ஜில்லாக்களிலும் 100 பேர்களை வேலைக்கு வைக்க முடியாது. தஞ்சாவூர் ஜில்லாவில் எத்தனை 'இண்டஸ்ட்ரீஸ்' இருக்கின்றன? அங்கே எத்தனை பேர்களை வேலைக்கு வைக்க முடியும்? வட ஆற்காடு ஜில்லாவில் எத்தனை 'இண்டஸ்ட்ரீஸ்' இருக்கின்றன. அங்கே எத்தனை பேர்களை வேலைக்கு வைக்க முடியும்? வருகிறவர்கள் பொதுவாக இதுமாதிரி என்னிடம் கூட சொல்லுகிறார்கள். "நீங்கள் அவர்களை எல்லா 'இண்டஸ்டிரீஸ்'-லும் சேர்த்து விடுவதற்கு என்ன?" என்று கேட்கிறார்கள்.

இரண்டாவதாக, பர்மாவிலிருந்து வருகிறவர்களெல்லாம் 'அன்ஸ்கில்டு வொர்க்கர்ஸ்'. அவர்களுக்கு எந்த [illegible] வேலையும் தெரியவில்லை. ஆகவே, '[illegible] வொர்க்கர்ஸ்'-க்கு

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [21st October 1964

என்ன வேலை கொடுக்க முடியுமோ அதைத்தான் அவர்களுக்குக் கொடுப்பதற்கு நம்மால் முயற்சி செய்ய முடிகிறது. இது வரையிலும் பல தொழில் அதிபர்களைக் கூட்டி, அவர்களைக் கலந்து ஆலோசித்து, பர்மாவிலிருந்து வந்த சற்றேறக்குறைய 7,000 பேர்களுக்கு வேலை தேடிக் கொடுத்திருக்கிறோம். எங்கெல்லாம் 'அன்ஸ்கில்டு வொர்க்கர்ஸை' ஏற்றுக்கொள்ள முடியுமோ அந்த இடங்களிலெல்லாம் பார்த்து அவர்களுக்கு வேலை தேடிக் கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறோம். அவர்களுக்கு வேறு பிழைப்பு வேண்டுமென்றால், அவர்கள் ஏதாவது ஒரு கடை வைப்பதற்கு, எந்தத் தொழில் அவர்கள் ஊரில் அவர்கள் செய்து கொண்டிருந்தார்களோ, அந்தத் தொழிலை மீண்டும் செய்வதற்கு வசதி செய்வது தான் சரியான முறையே தவிர, எல்லா 'இண்டஸ்டிரீஸ்'-லும் அவர்களைக் கொண்டு போய் சேர்த்து விடலாம் என்று நினைப்பது சரியல்ல. ஒரு தொழிற்சாலை என்றால் அது 'சாரிடபிள் இன்ஸ்டிடியூஷன்' அல்ல. ஒரு தொழிலாளியை ரூ. 100 கொடுத்து வேலைக்கு வைத்தால், ரூ. 100-க்கு கட்டுபடியாகக்கூடிய ரிடர்ன் அந்த ஆளிடமிருந்து அந்தத் தொழிற்சாலைக்குக் கிடைத்தால் தான், அவர்கள் வைத்துக்கொள்ள முடியும். இல்லாதபோனால் நஷ்டம் ஏற்பட்டு விடும். அவர்கள் எந்தத் தொழிலை செய்ய முடியுமோ அந்தத் தொழிலை செய்யக் கூடிய அளவுக்கு நாம் வசதிகள் செய்து கொடுக்கிறோம். நான் ஏற்கனவே சொன்னதுபோல, 7,000 பேர்களுக்கு வேலை தேடிக் கொடுத்திருக்கிறோம். மேற்கொண்டு இவர்களுக்குக் கடன் உதவியும் அளிக்கிறோம். எந்தத் தொழிலை அவர்கள் செய்து கொண்டிருந்தார்களோ அந்தத் தொழிலையே செய்வதற்கு இப்பொழுது வசதிகள் செய்து கொடுக்கிறோம்.

கைத்தறியாளர்களுக்கு தீபாவளி சமயத்தில் உதவி கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் 'ஐடெம்' 6-ஐப் பார்த்தால் தெரியும். கைத்தறியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ஸ்டேட் கோவாபரேடிவ் பாங்கு மூலம் கடன் உதவி அளிப்பதற்கு எல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். ஹாண்டு லூம் பைனான்ஸ் கார்பரேஷன் இன்னும் வேலை செய்ய தொடங்கவில்லை, தொடங்கியதும் 'டிரேடுக்கு' அது உதவி செய்யும். ஆகவே, இந்த மான்யக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,00,50,200 under Demand No. XLVII—Loans and Advances by the State Government".

The Demand was put and carried and the Grant was made.

### IV.—ANNOUNCEMENTS.

(1) THE MADRAS APPROPRIATION (NO. 6) BILL, 1964.

MR. DEPUTY SPEAKER : I have to announce that the Governor has given his recommendation for the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras Appropriation (No. 6) Bill, 1964.



21st October 1964]

### V.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS APPROPRIATION (NO. 6) BILL, 1964.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I beg leave to introduce the Madras Appropriation (No. 6) Bill, 1964.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Appropriation (No. 6) Bill, 1964".

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

### IV.—ANNOUNCEMENTS—cont.

(2) THE MADRAS APPROPRIATION (NO. 7) BILL, 1964.

MR. DEPUTY SPEAKER : I have to announce that the Governor has given his recommendation for the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras Appropriation (No. 7) Bill, 1964.

### V.—GOVERNMENT BILLS—cont.

(2) THE MADRAS APPROPRIATION (NO. 7) BILL, 1964.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I beg leave to introduce the Madras Appropriation (No. 7) Bill, 1964.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Appropriation (No. 7) Bill, 1964".

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

### IV.—ANNOUNCEMENTS—cont.

(3) THE MADRAS GENERAL SALES TAX (SPECIAL PROVISIONS) BILL, 1964.

MR. DEPUTY SPEAKER : I have to announce that the Governor has given his recommendation for the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras General Sales Tax (Special Provisions) Bill, 1964.

V.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS GENERAL SALES TAX (SPECIAL PROVISIONS) BILL, 1964.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I beg leave to introduce the Madras General Sales Tax (Special Provisions) Bill, 1964.

MR. DEPUTY SPEAKER : The question is—

" That leave be granted for the introduction of the Madras General Sales Tax (Special Provisions) Bill, 1964 ".

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

VI.—AMENDMENT TO THE NOTIFICATION CONTAINING THE MADRAS DISTRICT DEVELOPMENT COUNCILS (PREPARATION AND SUBMISSION OF ANNUAL REPORTS) RULES, 1964.

MR. DEPUTY SPEAKER : As the hon. Member Sri M. Kalyanasundaram, who gave notice of an amendment to the Notification issued in G.O. Ms. No. 1192, Rural Development, dated 30th May 1964 is not in his seat, the amendment is deemed to have been withdrawn.

The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

12-16 p.m. The House then adjourned.

VII. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*Nil.*

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, 22nd October 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, MR. SPEAKER (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

**STARRED QUESTIONS.**

*Salem-Neyveli Steel Project*

* S.N. 1 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Report by the Consulting Engineers, viz., Dastoor and Co., regarding the Salem-Neyveli Steel Project has been examined;

(*b*) what are the details of the recommendations;

(*c*) whether representations have been made to the Union Government for early approval of the scheme; and

(*d*) if so, with what result?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Detailed Project Report of the Consulting Engineers is under examination of the Government of India.

(*b*) A brochure summarising the salient features of the Detailed Project Report[a] has been placed on the table of the House.

(*c*) and (*d*) The State Government are taking appropriate steps in this regard.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** முதலிலே முக்கிய அம்சங்கள் அடங்கிய அறிக்கையை இந்தச் சபைமுன் வைத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அது ஒருபுறமிருக்க, இந்த அறிக்கை மத்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகக் கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது. சேலம் ஸ்டீல் பிராஜெக்டை எப்பொழுது ஆரம்பிப்பது என்பது பரிசீலனையில் இருக்கிறதா, அல்லது இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதா, இல்லையா, இன்னும் மற்ற ஹாஸ்பெட்; விசாகப்பட்டணம் திட்டங்களோடு இந்த திட்டத்தையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்ற முறையில் இது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இது மத்திய சர்க்காரிலே கேட்கவேண்டிய கேள்வி, மத்திய சர்க்காரிடம் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

[a] Placed in the Legislature Library.

[22nd October 1964

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** மத்திய அரசாங்கம் எந்த வகையில் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதற்குக் கனம் அமைச்சர் அவர்களுக்குத் தகவல் உண்டா? மத்திய அரசாங்கம் இதை ஹாஸ்பெட் விசாகப்பட்டணம் போன்ற மற்றத் திட்டங்களோடு பரிசீலக்க வேண்டுமென்ற தேவை இருக்கிறதா? அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை, இது தனியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது நம்முடைய அரசாங்கத்தின் அபிப்பிராயமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கடைசியாகக் கேட்ட கேள்விக்குத்தான் இந்த சர்க்கார் பதில் சொல்ல முடியும். இந்த சர்க்காரைப் பொறுத்தவரையில் ; வேறு எந்த திட்டத்துடனும் இணைக்காமல், இதனுடைய 'மெரிட்டின்' பேரில் இதை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் கருத்து.

**திரு. சா. கணேசன் :** வேறு எந்த திட்டத்துடனும் இணைக்காமல், இதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சென்னை அரசாங்கம் கருத்துத் தெரிவித்திருப்பதற்கு நன்றி. அந்தக் கருத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறதா, அல்லது வேறு ஏதாவது காரணங்கள், செதிக்குறைவுகள், அல்லது சங்கடங்கள் இருப்பதாக மத்திய அரசாங்கத்திலிருந்து செய்தி அல்லது கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நான் சொல்லிய கருத்து மத்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. க. ர. நல்லசிவம் :** ஹாஸ்பெட், விசாகப்பட்டணம் போன்ற திட்டங்களுக்கு முன்னதாகவே இந்த சேலம் திட்டம் மத்திய சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? முதன் முதலாக எப்பொழுது கொண்டு வரப்பட்டது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஹாஸ்பெட், விசாகப் பட்டணம் திட்டம் பற்றிய தகவல் இந்தச் சர்க்காரிடத்தில் இல்லை. இந்தத் திட்டத்தை இந்தச் சர்க்கார் சென்ற 10 ஆண்டுகளாக எடுத்து அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது என்பது சபையின் முன்பு வைக்கப்பட்ட அறிக்கையிலிருந்து புலனாகும்.

**திரு. இராம அரங்கண்ணல் :** கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்தத் திட்டம் சர்க்காரின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்னும் ஓராண்டு காலத்திற்குள்ளாக எப்படியாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசை வலியுறுத்துவதன் மூலம் சர்க்கார் மேற்கொள்ளுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தச் சர்க்கார் வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** மத்திய அரசாங்கத்தின் உருக்கு அமைச்சர் அவர்கள் ஹாஸ்பெட் திட்டத்திலும், விசாக் திட்டத்திலும் சொந்த அக்கறை உடையவராக இருக்கிற காரணத்தால் . . . . .



22nd October 1964]

THE HON. SRI R. VENKATARAMAN : On a point of order, Mr. Speaker, Sir, the hon. Member, Sri M. Kalyanasundaram, cannot make any insinuation. The hon. Member has been in this House for several years, and he must be familiar with the rules.

MR. SPEAKER : I quite agree with the Hon. Minister for Industries. The hon. Member, Sri M. Kalyanasundaram, cannot insinuate.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** நம்முடைய தொழில் அமைச்சருக்கு இதில் ஆட்சேபணை இருக்க வேண்டிய அவசியமிருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** இது அதற்கு அடுத்த இன்சின்யுவேஷன். கனம் அங்கத்தினர் பேசும்பொழுது பெர்சனலாக யாருக்கும் மோடிவ் கற்பிக்கக்கூடாது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இதிலே மோடிவ் என்ன இருக்கிறது?

**கனம் சபாநாயகர் :** வேண்டுமென்று செய்வதாக கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்களே.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** மத்திய உருக்கு அமைச்சர் அவர்கள் ஆந்திரத்தைச் சேர்ந்தவர்கள். ஹாஸ்பெட், விசாக், ஆந்திரத்தில் இருக்கின்றன. சேலம் தமிழ் நாட்டிலிருக்கிறது. இது உண்மை இல்லையா?

**கனம் சபாநாயகர் :** அதற்காக ஒரு ஆபீசரை குறிப்பிட்டு அவர் "ஐயர்" அல்லது "பிள்ளை" என்றெல்லாம் சொல்லலாமா?

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** துரதிருஷ்ட வசமாக உண்மை அப்படி இருக்கிறதே. அதை எப்படிச் சொல்லாமல் இருப்பது?

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I again protest. The hon. Member, Sri M. Kalyanasundaram, says that there is this sort of discrimination. It is unwarranted.

SRI M. KALYANASUNDARAM : I am glad to hear the protest. But let it be proved true.

இந்தத் திட்டத்திற்கு நியாயம் வழங்கக் கூடிய முறையில் இதைப் பற்றி பிரதம மந்திரியிடத்தில் காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக நம்முடைய அரசங்கம் முறையிடும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மத்திய சர்க்காரிலுள்ள எந்தெந்த மந்திரிகளுக்கு யார் யார் எந்தவிதமான கடிதங்கள் எழுதுகிறார்கள் என்பதெல்லாம் "கான்பிடென்ஷியல்". மத்திய சர்க்காரிடத்திலே நாம் ரெப்ரசென்டேஷன் செய்திருக்கிறோம் என்று தான் சொல்ல முடியும்.

[22nd October 1964

**திரு. ப. உ. சண்முகம் :** பயங்கரப் பரிசிலனைகளுக்கு உள்ளாகியிருக்கிற இந்த சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துவக்கப்படும் என்று முன்னாள் நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் உறுதிமொழி அளித்தார்கள். நான்காவது திட்டத்திலாவது இது சேர்க்கப்படும் என்ற உறுதிமொழியை இந்தச் சர்க்கார் அளிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த முடிவை மத்திய சர்க்கார் எடுக்க வேண்டியது.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்த சேலம் உருக்காலை சம்பந்தமாக சமீபத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லியில் பாராளுமன்ற உறுப்பினர்களோடு பேசினார்களே, அதனுடைய விவரம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அங்கேயுள்ள பாராளுமன்ற அங்கத்தினர்களை அழைத்து நிலைமையை விளக்கினேன்.

**திரு. ம. கமலநாதன் :** இப்பொழுது புதிதாக கிழக்கு ஜெர்மனியிலிருந்து ஒரு டெலிகேஷன் வந்து இதைப்பற்றிப் பரிசிலனை செய்வதாகச் சொல்லப்படுகிறதே. அதனுடைய விவரம் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பல நாடுகளிலிருந்து பல நிபுணர்கள் இந்தத் திட்டங்களுக்கு தாங்கள் உதவி அளிக்க முடியுமா என்பதைப் பார்ப்பதற்காக வருவார்கள். அதெல்லாம் பூர்வாங்க ஆலோசனைகளே தவிர, முடிவு ஒன்றும் இல்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, மூன்று உருக்காலைகளைப் பற்றி மூன்று முதல் அமைச்சர்களும் கலந்தாலோசித்துப் பேசி முடிவு எடுக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரிலிருந்து மாநில சர்க்காருக்கு ஏதாவது கருத்து வந்திருக்கிறதா ? அப்படி வந்திருந்தால், நம் சர்க்காரின் கருத்து என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த மாதிரி எந்தவிதமான தகவலும் அபிஷியலாக வரவில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சார், இந்த சேலம் உருக்காலை சம்பந்தமாக, தஸ்தூர் கமிட்டி ரிபோர்ட்டின் அடிப்படையில் பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆனால் அதை ஒத்திப்போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள், மத்திய சர்க்காரைச் சுட்டிக்காட்டினார்கள். இந்த அரசாங்கத்தின் சார்பில், அது சம்பந்தமாக இந்த மன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி மத்திய சர்க்காரை நடவடிக்கை எடுக்கச் செய்யக் கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அது ஒரு bad precedent. அப்புறம் ஒவ்வொரு ராச்சியத்திலும் தீர்மானங்கள் போடுவார்கள், எந்த ராச்சியத்திற்குக் கொடுப்பது என்பது ஒரு பெரிய பிரச்சினையாகப் போய்விடும். ஸ்கீம் நல்ல ஸ்கீமாக இருந்தால், அந்த



22nd October 1964]

மெரிட்டிலேயே நமக்குக் கிடைக்க வேண்டும். அப்படி இந்த ஸ்கிம் நமக்கு கிடைக்கும். நல்ல மெரிட்ஸ் இருக்கிறது. இது தீர்மானம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் சபா நாயகர் அவர்களே, ஒரு ராச்சியத்திற்கும் இன்னொரு ராச்சியத்திற்கும் போட்டி உண்டாக நானும் விரும்பவில்லை, நம் சர்க்காரும் விரும்பவில்லை. ஆனால் அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கும் தகவலிலிருந்து பார்த்தாலே, இது பிலாய் போன்ற மற்ற உருக்கு ஆலைகளை விட மூலதனம் குறைந்தது. அன்னியச் செலாவணி குறைவாக வேண்டுவது, ஏற்கெனவே அமைக்கப்பட்ட திட்டங்களைவிட மலிவானது. போக்குவரத்துச் செலவும் குறைந்த செலவில் கிடைக்கும் என்றெல்லாம் இருக்கிறது. ஆகஸ்ட் மாதத்திலேயே வந்த ரிபோர்ட்டின் பேரில் நடவடிக்கை எடுக்கக் காலதாமதம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது மத்திய சர்க்காரிடத்தில் கேட்கவேண்டிய கேள்வி. நம்மைப் பொருத்த வரையில் நாம் இதை வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. இராம அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் மத்திய சர்க்கார் பொறுப்பில் இருக்கிறது என்று ஸ்வரம் குறைந்த பதிலை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை ஏற்றுக்கொள்ள மத்திய சர்க்கார் ஒருவேளை மறுத்தால், அதை நாமே . . . .

MR. SPEAKER : That is a hypothetical question. I do not allow it.

'மறுத்தால்' அப்புறம் என்ன ஏற்படும் என்பதைப் பின்னால் பார்க்கலாம்.

**திரு. எம். எஸ். மணி :** சார், இந்தத் திட்டத்திற்கு வெளிநாட்டிலிருந்து யாராவது உதவியளிக்க முன் வந்திருக்கிறார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பல நாடுகள் இதில் அக்கறை கொண்டு இருக்கிறார்கள். அதற்கு மேல் சொல்வதற்கில்லை.

**புலவர். கா. கோவிந்தன் :** தலைவர், அவர்களே, நம்முடைய நெய்வேலி நிலக்கரியையும்; சேலம் இரும்புக் கனியையும் கலந்து ஆக்கிய இரும்புத்துண்டை தொழில் அமைச்சர் சபை முன் வைத்ததற்காக மகிழ்ச்சி அடைகிறோம். அப்படிப்பட்ட திட்டத்தை நான்காவது திட்டத்திலாவது உருவாக்க இந்த மந்திரி சபை என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதற்காகத்தான் எல்லா முயற்சிகளும் நடந்துக் கொண்டிருக்கின்றன.

[22nd October 1964

**திரு. ஜே. மாதா கவுடர் :** சார், தஸ்தூர் கமிட்டி ரிப்போர்ட்டை ஒட்டி வேறு மாநிலத்தைவிட நம் மாநிலத்திற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது என்று அமைச்சர் நம்புகிறார்களா ?

**கனம் சபாநாயகர் :** அதுதான் சொன்னார்கள், நமக்கு மெரிட்ஸ் ஜாஸ்தி என்று; அந்த பேஸ்ஸிலே வரும் என்று சொன்னார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** சார், தஸ்தூர் கமிட்டி அறிக்கையிலே,

' Compared to other Indian Steel works, Salem has the advantage of lowest raw material assembly and product distribution costs. The available raw materials can be utilised with advantage through the application of new technology to proudce quality products at competitive costs.'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் மத்திய சர்க்காரை வற்புறுத்தி உருக்காலையைக் கொண்டுவருவார்களா ?

HON. SRI R. VENKATARAMAN : I have already answered that question.

**திரு. ஏ. ஆறுமுகம் :** சார், சேலம் இரும்புத் தொழிற்சாலை அவசியம் வருகிறது என்று தமிழ் மக்கள் நினைக்கிறார்கள் என்பது உண்மைதானே ? (சிரிப்பு).

(பதில் இல்லை)

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** தலைவர் அவர்களே, சேலம் உருக்காலை நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்களுக்குக் குறைந்து வருகிறது. நிச்சயமாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை அமைச்சருக்காவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** இரண்டும் ஆபோஸிட் க்வெஸ்டியனாக இருக்கிறது.

**திரு. சா. கணேசன் :** தலைவர் அவர்களே, இந்த உருக்காலை நியமிப்பதில் மிகவும் காலதாமதம் ஆகிக்கொண்டிருப்பதால் தமிழ் நாட்டில் உருக்கு உற்பத்தியைப் பெருக்க, வளம் சிறப்பதற்கு, இதை தனியார் துறையில் விட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுது இருக்கின்ற இண்டஸ்ட்ரியல் பாலிஸி ரெஸல்யூஷன் பிரகாரம், இதைத் தனியார் துறைக்கு விடுவதற்கில்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சார், அமைச்சரவர்கள் இந்தக் காலதாமதத்திற்குக் காரணம் என்ன என்று அறிய முயற்சித்தார்களா? வைஸாக், ஹோஸ்பெட் திட்டங்கள் தொடக்க வேலை ஆரம்பிப்பதற்கு முன்பே எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டம் இது. இந்தத் திட்டத்தை அந்தத் திட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க



22nd October 1964]

வேண்டும் என்று அபிப்பிராயம் மத்திய சர்க்கார் நம் சர்க்காருக்குத் தெரிவித்திருப்பது உண்மையா ? அது உண்மையில்லையென்றால் நிச்சயமாகச் சேலம் திட்டம் வரும் என்று சொல்ல முடியுமா ?

**திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த சர்க்காருக்கு அந்த விதமான அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை.

**திரு. க. ர. நல்லசிவம் :** தலைவர் அவர்களே, சமீபத்திலே மத்திய சர்க்கார் இந்தத் திட்டத்தை எடுத்து நடத்த முடியாவிட்டால் மாநில சர்க்காரே வெளிநாட்டு உதவியுடன் எடுத்து நடத்தலாம் என்று இந்த சர்க்காருக்கு எண்ணம் இருப்பதாகப் பத்திரிகையில் படித்த ஞாபகம். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆர். வெங்கட்டராமன் :** மத்திய சர்க்காரை இந்தத் திட்டத்தை எடுத்து நடத்த வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். நம் ராஜ்ய சர்க்காருக்கு இதை எடுத்து நடத்தும் உத்தேசம் உண்டா என்பதைப் பற்றி, சார், இங்கிலீஷிலேயே சொல்லுகிறேன், எளியாக இருக்கும்.

The steel plant, being taken up by the Madras Government is a possibility.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சார், நம்முடைய அரசாங்கமே ஏற்று நடத்துவது என்றால், அதற்கு சந்தர்ப்பம் கிடைத்தால் நல்லது. ஆனால் வரம் கொடுக்கக்கூடியவர்கள் " தஸ்தூர் கமிட்டி ரிப்போர்ட் ஒரு அவசர ரிப்போர்ட்டு, விரிவான மறு பரிசீலனை வேண்டும் " என்று சொல்லி அந்த ரிப்போர்ட்டையே டிஸ்கிரடிட் செய்யும் வகையில் பொறுப்புள்ள மத்திய அமைச்சர் பேசுவது நம் அமைச்சரின் கவனத்திற்கு வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த விதமான தகவல் மத்திய சர்க்காரிடமிருந்தும் வரவில்லை. பத்திரிகையில் வந்திருக்லாம். என்ன கேள்வி போட்டார்களோ, என்ன பதில் சொன்னார்களோ, சொல்ல முடியாது.

**திரு. மீ. கல்யாணசுந்தரம் :** சார், நம்முடைய அரசாங்கம் தஸ்தூர் கமிட்டி ரிப்போர்ட்டின் அடிப்படையில் வற்புறுத்தி, 10 வருஷ கால தாமதத்திற்குப் பிறகும் மத்திய சர்க்காரால் நடத்த முடியவில்லை என்றால் ராச்சிய சர்க்காரே எடுத்து நடத்தவேண்டும் என்று வந்தால் அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதுதான் ஆரம்பத்திலேயே சொன்னேன்,

The State Government are taking appropriate steps in this regard.

[22nd October 1964

### பள்ளிக் கட்டிடங்கள்

*51 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :

திரு. பி. எஸ். எஸ். மணி : கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

மதுரை சரஸ்வதி வித்யாசாலா ஆரம்ப உயர்தரப் பள்ளிக்கு ஏப்ரல் மாதம் ஏற்பட்ட கோர விபத்தை ஒட்டி எச்சரிக்கை நடவடிக்கையாக மாநிலத்திலுள்ள எல்லாப் பள்ளிக் கட்டிடங்களையும் சோதித்துப் பார்க்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Orders for checking up the structural stability of the buildings of all educational institutions have been issued by Government.

### இந்திப் பாடத்தில் தேர்வு

*52 கேள்வி.—திரு. செ. மாதவன் :
திரு. கே. ஏ. மதியழகன் : } கனம் முதல் அமைச்சர்
திரு. மா. இராசாங்கம் :
தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

(அ) பள்ளி இறுதித் தேர்தலில் இந்தி மொழித்தேர்வு பற்றி அரசாங்கம் ஏதேனும் புதிய சுற்றறிக்கை அனுப்பியுள்ளதா ?

(இ) அதன் விவரம் என்ன ?

(உ) இந்திப் பாடத்தில், குறிப்பிட்ட மதிப்பெண்கள் வாங்க வேண்டும் என்று விதி ஏற்படுத்தப்பட்டுள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The Government have issued orders to the effect that there will be public examination in Hindi and any other Indian Languages other than the regional languages, under Part II of the Language Scheme with effect from the S.S.L.C. Examination of March 1964; but that the marks obtained therein will not count for purposes of declaring eligibility for University Courses of studies, but will count for " Moderation ".

(c) No Sir.

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்தியிலே குறைந்த பட்ச மார்க்கு வாங்கவேண்டும் என்ற கண்டிப்பு இல்லாமல் பரீட்சை நடக்கும். இந்தியில் வாங்கும் மார்க்கு மற்ற மார்க்குகளோடு சரி செய்ய உதவும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு அப்படி சரி செய்யப்பட்டதா ? அப்படிச் சரி செய்தால் கல்வித்தரம் குறையாதா ? அதற்கு அமைச்சருடைய சமாதானம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த முறையினால் எவ்வளவு மாணவர்கள் கேஸ்களில் சரி செய்யப்பட்டது என்று தகவல் இல்லை. இதனால் கல்வித்தரம் ஒருக் காலும் குறையாது.



22nd October 1964]

திரு. ப. உ. சண்முகம் : இந்தியை வளர்க்க இவ்வளவு பெரும் முயற்சி எடுக்கும் இந்த அமைச்சர் அவை, தமிழை வளர்க்க என்ன அக்கறை எடுத்துக்கொண்டார்கள் ? இப்படி மறைமுகமாக இந்தியைத் திணிக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மறைமுகமாக நடவடிக்கை ஒன்றும் இல்லை. இந்தியைப் பரப்ப அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. அதேசமயத்தில் அது போல பல மடங்கு, 100 மடங்கு தமிழைக் கற்று உணர்வதற்கும் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

### இந்திய எல்லைக்குட்பட்ட கடலில் இலங்கை ரோந்துப்படையினர்

*53 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டு மீனவர்களை 20-3-1964-ல் இந்திய எல்லைக் குட்பட்ட கடலில் மீன்பிடிக்கும் போது இலங்கை ரோந்துப் படையினர் சுட்டது உண்மையா ?

(இ) அதுபற்றித் தமிழ்நாட்டு அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை யாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, however, an incident of shooting on Indian fishermen by a Ceylon launch occurred on 20th March 1964 in *mid-sea* in Palk Bay at a distance of about 20 miles north-west of Rameswaram, 20 miles south-east of Tondi and 18 miles north-west of Katcha Theevu.

(b) At the instance of this Government, the Government of India have taken up the matter with the Government of Ceylon.

*54 கேள்வி.— திரு. செ. மாதவன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு மே மாதம் இராமனாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில் தமிழ் நாட்டவர் இருவருடைய பயணிகள் படகை இலங்கை நாட்டு காவல் துறையினர் ஆயுதங்கள் கொண்டு தாக்கியது உண்மையா ? அதன் விவரமென்ன ?

(இ) இலங்கை காவல் துறையினர் இது போன்று அடிக்கடி பயணிகள் படகில் செல்வோருக்கும்; மீனவர்களுக்கும் தொல்லைகள் கொடுத்துவருவது உண்மையா ?

(உ) அவர்களுக்குப் பாதுகாப்பு தர அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்துள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) There was a case of interference by a Ceylon Government launch with an

Indian Passenger boat plying between Rameswaram and Dhanushkodi on the 10th May 1963. The boat was towed towards Ceylon for a short distance by the launch but was allowed to return to Rameswaram on checking the licence and permit.

(b) Apart form the above incident there has been no case of attack on the Indian passenger boat by the Ceylon Government Patrol party. But three instances of harassment of Indian fishermen by Ceylon Government Sea Patrol party were reported in March 1960, July 1962 and March 1964.

(c) The matter was taken to the notice of the Government of India for necessary action.

**திரு. சா. கணேசன்:** கடற்கரைகளில் மீன் பிடித்தவர்களைச் சுட்டது சம்பந்தமாக மத்திய சர்க்காருக்கு நமது மாநில சர்க்கார் ஆட்சேபம் தெரிவித்ததற்கு அவர்கள் இலங்கை சர்க்காருக்குத் தெரிவித்து, அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்தது, அல்லது முடிவு எடுக்கப்பட்டது என்பதை அரசாங்கம் தெரியப் படுத்துமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஒரு சர்க்கார் இன்னொரு சர்க்காருக்குச் சில தவறுதல்களைத் தெரிவிக்க வேண்டுமென்றால், தெரிவிக்கிறார்கள். அவை பரிசீலனை செய்யப்படுகின்றன. ஒவ்வொன்றுக்கும் என்ன முடிவு ஏற்பட்டது என்பதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை. சட்ட விரோதமாக நாடு கடந்து செல்வது (illicit emigration) நடைபெறுகிறது என்பதை மறுப்பதற்கில்லை. அதைத் தவிர்ப்பதிலே இந்த அரசாங்கம் அக்கறை கொண்டு தான் இருக்கிறது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, நான்கு மாதங்களுக்கு ஒருமுறை, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை இலங்கை அரசாங்கத்தின் அதிகாரிகளும் இந்த அரசாங்கத்தின் அதிகாரிகளும் ஓரிடத்தில் கூடிக் கலந்து பேசுகிறார்கள். இலங்கை அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் டில்லிக்கு வருகின்றார்கள். அங்கு வேறு பல பிரச்சினை குறித்துப் பேசுவதோடு (illicit emigration) பற்றியும் பேசக்கூடும் என்பதற்காக இங்கிருந்து அதிகாரிகள் வரவேண்டும் என்று சொன்னார்கள். நம்முடைய போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் நேற்று டில்லியில் இருந்தார். சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேசும்போது இம்மாதிரி சம்பவங்கள் பற்றி அவர்கள் கூடி பேசுவார்கள். இதெல்லாம் பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கவனிக்கப் பட்டுதான் வருகிறது.

**திரு. சா. கணேசன்:** இது மாதிரி நாம் புகார் செய்தபோது, அதற்கு என் முடிவு ஏற்பட்டது என்பது தான் கேள்வி. அவர்கள் வருத்தம் தெரிவித்தார்களா? 'இனிமேல் அப்படி நடக்காது' என்று தெரிவித்தார்களா? அல்லது, 'செய்தது சரி' என்று சொன்னார்களா? இப்படி ஏதாவது ஒரு பதில் நமக்குக் கிடைக்கிறதா? அல்லது கிடைக்கமாட்டாதா? கிடைக்க மாட்டாது என்றால் இது கிடைக்க வேண்டும் என்பது அவசியம் என்பதை அரசாங்கம் கருதி அதற்கு ஆவன செய்யுமா?



**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மற்ற அரசாங்கம் பரிசீலனை செய்து, 'இது இல்லை, இப்படித்தான் நடைபெறவேண்டும்' என்றால் அதைத் தெரிவிக்கலாம். இன்னும் அம்மாதிரி அவர்கள் முடிவு ஒன்றும் தெரிவிக்கவில்லை.

**திரு. ப. உ. சண்முகம்:** இது போன்ற சம்பவம் நடைபெற்று ஓராண்டுக் காலம் ஆகப்போகிறது. அதைத்தொடர்ந்து வேறு சம்பவம் நடந்ததா? தொடர்ந்து அம்மாதிரி சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றனவா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தக் கேள்விகளிலே குறிப்பிடப்பட்ட சம்பவங்கள் தவிர, வேறு சம்பவங்கள் நடந்ததாக இந்த அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை.

### வடாற்காடு மாவட்டத்தில் நூற்பாலைகள்

* 55 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை நூற்பாலைகள் கூட்டுறவுத் துறையில் அனுமதிக்கப்பட்டன?

(இ) எத்தனை தனியார் துறையில் அனுமதிக்கப்பட்டன?

(உ) அவை அனுமதிக்கப்பட்ட இடங்கள் எவை?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** (அ), (இ) & (உ) வட ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் வேலூரில் ஒரு நூற்பு ஆலையும், தனியார் துறையில் ஆரணி, சோளிங்கபுரம் ஆகிய இடங்களில் இரண்டு நூற்பு ஆலைகளும் நிறுவ அனுமதி அளிக்கப் பட்டிருக்கிறது.

**புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையை ஊக்குவிக்க வேண்டும் என்பது சர்க்காருடைய கொள்கை. அப்படியிருக்கும்போது, வடாற்காடு மாவட்டத்தில் கூட்டுறவுத் துறைக்கு நூற்பு ஆலையொன்றைக் கொடுத்துவிட்டு, தனியார் துறைக்கு இரண்டு கொடுத்திருப்பது அரசாங்கத்தின் கொள்கைக்கு முரண்பட்டதல்லவா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கூட்டுறவுத் துறைக்குப் பங்குகள் சேர்ப்பது மிகவும் கஷ்டம். சென்ட்ரல் பாங்க் ஏதாவது பணம் கொடுத்து உதவினால்தான் அந்த ஊரிலே வைக்க முடிகிறது. ஒரு ஜில்லாவில் ஒரு மில்லுக்கு மேலே கூட்டுறவுத் துறையிலே வைக்க வசதிகள் கிடைக்கவில்லை. இந்த நிகழ்ச்சியிலே இந்த ராஜ்ய சர்க்காருக்கு ஒரு அதிர்ஷ்டம், ஒரு windfall வந்தது என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முதலில் மத்திய சர்க்கார் நமக்குக் கொடுத்த கதிர்கள் (ஸ்பின்டில்கள்) ஒரு லட்சம். அந்த ஒரு லட்சம் கதிர்களையும் நாம் தனியார்த் துறைக்கு கொடுக்கவில்லை என்று சொல்லி, கூட்டுறவுத் துறைக்கு எட்டு மில்கள் போட்டுவிட்டோம். நாம் கூட்டுறவுத் துறையில் அதிக

[22nd October 1964

மாக வைத்ததைப் பார்த்து மற்ற ராஜ்யத்திலிருந்து அவர்களும் அந்த அளவுக்கு வைக்கவேண்டுமென்று கேட்டார்கள். அப்பொழுது நாம், கூட்டுறவுத் துறையில் இருக்கும் ஸ்பின்டில்களில் ஸ்டேட் அலகேஷனை நீக்கிவிட்டால் எல்லா ராஜ்யங்களுக்கும் கொடுக்கலாம் என்று சொன்னோம். அதனால் அதை நீக்கினதன் காரணமாக 1,60,000 ஸ்பின்டில்கள் கிடைத்தன. நம்முடைய ராஜ்யத்தில் மில்கள் வரவேண்டும் என்பது முதல் கொள்கை. இரண்டாவது கொள்கை, கூட்டுறவிலே மில்கள் வரவேண்டும் என்பது.

**திரு. ர. ஜீவரத்னம் :** கனம் தலைவர் அவர்களே, வடாற்காடு ஜில்லா கூட்டுறவு நூற்பு ஆலைக்கு வடாற்காடு ஜில்லா கூட்டுறவு மத்திய பாங்க், ஏதாவது குறிப்பிட்ட தொகை தரவேண்டும் என்று சர்க்கார் ஏதாவது கோரி இருந்ததா ? அந்தத் தொகையை வடாற்காடு கூட்டுறவு மத்திய பாங்கு கூட்டுறவு நூற்பு ஆலைக்குக் கொடுத்திருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த விவரம் என்னிடம் இல்லை. சாதாரணமாக ஒரு கூட்டுறவு ஆலைக்குக் கொடுக்க வேண்டிய பணத்தில் ஒரு பகுதியைக் கூட்டுறவு பாங்குகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படித்தான் இதர பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கிறது.

**திரு. ர. ஜீவரத்னம் :** கனம் தலைவர் அவர்களே, ஒப்புக் கொண்ட அளவுக்கு வடாற்காடு கூட்டுறவு மத்திய பாங்கு வடாற்காடு கூட்டுறவு நூற்பாலைக்குத் தொகை கொடுக்காமலிருந்தால், கொடுக்கும்படி வற்புறுத்த அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** 'ஷேர் கலெக்ஷன்' செய்யும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** நமது மாநிலத்திலுள்ள அத்தனை மாவட்டங்களிலும் குறைந்தது ஒரு நூற்பு ஆலை வீதமாவது ஏற்படுத்தவேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நீலகிரியில் ஒரு நூற்பு ஆலை ஏற்படுத்துவதற்காகக் கோவையிலிருந்து மில் அதிபர்கள் சிலர் விண்ணப்பித்திருக்கிறார்களே, அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ததா ? பரிசீலனை செய்திருந்தால் அதன் முடிவு என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நீலகிரி ஜில்லாவில் நூற்பு ஆலையை விட வேறு ஆலைகள் வைப்பதுதான் வசதியாக இருக்கும். நூற்பு ஆலைக்கு அங்கு தேவை இருக்குமானால் பரிசீலனை செய்து அது பின்னால் கவனிக்கப்படும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** தனியார் துறைக்குக் கொடுக்கப்பட்ட பிற்பாடு இப்பொழுது மேற்கொண்டு அவர்களுக்கு நிதி சம்பந்தமாக ஏதாவது சலுகை கொடுக்கத் தயாராயிருக்குமா ? இப்பொழுது ஸ்பின்னிங் மில்லுக்கு இண்டஸ்ட்ரியல் பினான்ஸ் கார்ப்பரேஷன் போதுமான அளவிற்கு பினான்ஷியல்



22nd October 1964]

ஸப்போர்ட் கொடுக்காவிட்டால், தனிப்பட்டவர்கள் உடனடியாக வேலை செய்வதற்கோ அல்லது ஆரம்பிப்பதற்கோ கஷ்டப்படுமே, அதற்கு சர்க்கார் ஏதாவது சலுகை அளிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இன்டஸ்ட்ரியல் பினான்ஸ் கார்ப்பரேஷன் அதுமாதிரி முக்கியமான புதுத் தொழில்களுக்கு முதல் இடம் கொடுக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் டெக்ஸ்டைல் மில் வைப்பதென்பது 'ரொட்டீன்' தொழிலாகப் போய் விட்டது. அதனால் அவர்கள் பல இடங்களில் பணம் வாங்க வசதி இருப்பதால், எம்.ஐ.எப்.ஸி. இடமிருந்து அதிகமாக நிதி கிடைப்பதில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** ஆரணி, நெசவாளர்கள் பெருகிய இடம். அந்த இடத்தில் தனியார் துறைக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் கூட்டுறவுத் துறையில் ஒரு நூற்பு ஆலையைத் துவக்க முயற்சி செய்தால், அதற்கு சர்க்கார் இசையுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் அவர்களுக்கு, கூட்டுறவு நூற்பு ஆலை வைக்கக்கூடிய சங்கடம், தொல்லை பற்றிய முழு விவரமும் அவ்வளவாகத் தெரியவில்லை என்று நான் நினைக்கிறேன். கூட்டுறவு நூற்பு ஆலைக்கு வேண்டிய தொகையை நம்மால் இப்பொழுது வசூல் செய்யவே முடியவில்லை. மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதற்காகப் பல இடங்களில் நிதிக் கார்ப்பரேஷன் சென்று பணம் வாங்க முயற்சி எடுத்துக் கொள்கிறது. ஒரு ஜில்லாவில் ஒரு கூட்டுறவு ஆலைக்கு மேல் வைக்கப் பண வசதி செய்ய வசதி செய்ய இயலாது.

**திரு. ப. உ. சண்முகம் :** வடாற்காடு மாவட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்ட கூட்டுறவு நூற்பு ஆலைக்கு வடாற்காடு மத்திய பாங்க் எந்த விதப் பங்குத் தொகையும் கொடுக்க முடியாது என்று மறுத்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? கூட்டுறவு மத்திய பாங்க் கொடுக்கவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கூட்டுறவு பாங்கைப் பணம் கொடுத்துத்தான் தீரவேண்டுமென்று நிர்ப்பந்திப்பதற்கான அதிகாரம் சர்க்காருக்குக் கிடையாது. பொதுவாக இதெல்லாம் ஒத்துழைத்துச் செய்யவேண்டிய ஒரு முறை அந்தந்த ஜில்லாவில் நல்ல தொழில்களை வளர்க்கவேண்டுமென்று கூட்டுறவு இயக்கங்கள் முன்வந்து அவர்கள் உதவி செய்தால்தான் ஜில்லாக்களிலே தொழில்கள் வரும். இல்லாவிட்டால் தொழில் வராது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மாயவரத்தில் ஒரு கூட்டுறவு நூற்பு 9-00
ஆலை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது எந்த நிலையில் a.m.
இருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதே தொல்லைதான்; பணம் வசூலாகவில்லை.

**திரு. ம. கமலநாதன் :** மிகப் பின் தங்கிய மாவட்டம் எனக் கருதி ஹோசூரில் ஒரு நூற்பு ஆலைக்கு லைசென்ஸ் கொடுத்து விட்டு, அவ்வாறு லைசென்ஸ் பெற்றவர்கள் அந்த ஆலையை ஆத்தூரில் அமைக்க எவ்வாறு அரசினர் சம்மதித்தார்கள் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஆத்தூரும் பின் தங்கிய பகுதி என்று கனம் சட்ட மன்ற அங்கத்தினர்கள் நடவடிக்கை எடுத்த காரணத்தினால்தான்.

**திரு. ர. ஜீவரத்தினம் :** கூட்டுறவு நூற்பு ஆலை ஏற்படுத்த மத்திய பாங்க் பணம் கொடுக்கவில்லையென்றால் தனியாகப் பங்குத் தொகைகளை வசூலித்துக்கொள்ளவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவ்வாறு தனியாகப் பங்குத் தொகைகளை வசூலித்துக் கொள்ள முடியுமென்று நான் நம்புகிறேன். அவ்வாறு வசூலிக்கப்படும் பங்குத் தொகைகளுக்கு டிவிடெண்டு ஒரு வரையறைக்கு உட்பட்டிருக்கிறது. அந்த டிவிடெண்டை உயர்த்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது இருக்கின்ற விதிகளின்படி பங்குத் தொகைகளை வசூலிக்கவேண்டும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கோவை மத்திய சிறையிலுள்ள நூற்பு ஆலை பழமையான மெஷினரிகளைக் கொண்டு இயங்கி வருகிறது. அவற்றைப் புதுப்பித்து நவீன மெஷினரிகளை அமைக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த விதமான யோசனை சர்க்காரிடத்தில் இருக்கிறது.

**திரு. ஏ. ஆறுமுகம் :** வட ஆற்காடு தென்பகுதியில் இத்தகைய நூற்பு ஆலை ஒன்றைத் தனியார் துறையில் அமைக்க ஆக்கமும் ஊக்கமும் தருவார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வேண்டிய கதிர்கள் கொடுத்தாகிவிட்டன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இப்போதே தயாராக வேண்டும்

**புலவர் கா. கோவிந்தன் :** கூட்டுறவு நூற்பு ஆலைக்கு எவ்வளவு பங்குப் பணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது ? இன்னும் எவ்வளவு வசூலிக்க வேண்டும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்கிறேன்.

### தமிழ்நாடு வீட்டுவசதி போர்டு

* 56 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் (போர்டின்) கணக்குகளைப் பரிசீலனை செய்ய அரசாங்கம் தணிக்கையாளர் ஒருவரை நியமித்திருக்கிறதா ?





(இ) ஆம் எனில், மேற்படி வாரியத்தின் தணிக்கை அறிக்கையும் கணக்குகளும் அரசாங்கத்துக்குக் கிடைத்தனவா ?

(உ) 1961 முதல் 1963 வரையுள்ள ஆண்டுகளுக்கு மேற்படி வாரியத்தின் நிர்வாக அறிக்கைகள் அரசாங்கத்துக்குக் கிடைத்தனவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*), (*b*) & (*c*) Yes, Sir.

### வண்டிச்சீட்டுகள் (முத்திரையிடுதல்)

* 57 **கேள்வி.—திரு. சா. ராமசாமி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தனியார் நடத்தும் பஸ்களில் சரியான கணக்கு முறையை அமுலாக்கும் பொருட்டு டிக்கட்டுகளை அரசினர் சோதித்து முத்திரையிட்டுக் கொடுக்கும் முறையைக் கையாளும் உத்தேசமுண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இல்லை.

**திரு. சா. ராமசாமி :** தனியார் நடத்தும் பஸ்களில் பல இடங்களில் அதிகப்படியான டிக்கட்டுகளை எடுத்துக் கொள்வதும், இரண்டு முறை கொடுக்கும் பழக்கமும் இருந்து வருகிறது. இந்த முறையை ஒழிக்க என்ன வழிவகைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதற்காக இன்ஸ்பெக்ஷன் செய்வது, Motor Vehicle Inspector மூலமும், ஆங்காங்கு போலீஸ் மூலமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**திரு. து. ப. அழகமுத்து :** இப்படி ஒரு முறையைக் கையாள்வதன் காரணமாக சர்க்காருக்குக் கூடுதலான வருமானம் கிடைக்குமென்ற நிலை இருப்பதால் சர்சார்ஜை கம்பவுண்டு செய்வதற்குப் பதிலாக எண்டோர்டெய்ன்மெண்ட் டாக்சுக்காக புத்தகங்களில் சீல் போடுவதைப் போன்ற முறையை இதற்கும் அனுசரிக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த முறையைப்பற்றிப் பரிசீலனை செய்து அதிலே பலவிதமான கஷ்டங்கள், சிக்கல்கள் இருந்த காரணத்தால்தான் கைவிடப்பட்டது. பலவிதமான டிக்கட்டுகள் இருக்கின்றன. இடையிலே ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் போகும்போது மூன்று நான்கு ஸ்டேஜ்கள் இருக்கின்றன. ஸ்டேஜுக்குத் தகுந்தபடி டிக்கட்டுகள் ஏற்பாடு செய்ய வேண்டும். பரீட்சார்த்தமாக எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் ப்ரின்டெட் டிக்கட் கொண்டு வரவேண்டுமென்ற விதியைக் கொண்டு வருகிறோம்.

**திரு. ஆ. தங்கவேலு :** தனியார் பஸ்களில் இரண்டு டிக்கட் புத்தகங்கள் கொடுக்கப்பட்டு ஏறும் பிரயாணிகளின் பாதிப் பெயரை ஒரு புத்தகத்திலும் மற்றப் பாதிப் பெயரை மற்றொரு புத்தகத்திலும் போட்டு கணக்குகளை மறைத்து விடுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஓரளவு வரி ஏய்க்கப் படுகிறது என்பது தெரிகிறது. எந்தெந்த முறையில் ஏய்க்கிறார் கள் என்பது முழுவதும் தெரியாது.

**திரு. ம. கமலநாதன் :** குறிப்பாக சேலம் எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் ஏறியவுடன் டிக்கட் கொடுக்கப்பட்டு கிருஷ்ணகிரி வரும்போது டிக்கட்டைத் திரும்பப் பெறுவதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் தேதி குறிப்பிட்டு எந்த தினத்தில் நடந்தது, எந்த ரூட்டில் எப்படி நடக்கிறது என்ற விவரத்தை எழுதி அனுப்பினால் சர்க்கார் கண் காணிக்கத் தயாராக இருக்கிறார்கள்.

**திரு. ஏ. ஆறுமுகம் :** சர்க்கார் எக்ஸ்பிரஸ் பஸ்களிலாவது சட்டசபை அங்கத்தினர்களுக்கு டிக்கட் கொடுப்பதிலே சலுகை காட்ட முன் வருவார்களா ?

**கனம் சபாநாயகர் :** டிக்கட் 'ஃப்ரீ' ஆகக் கொடுக்க வேண்டு மென்று கனம் அங்கத்தினர் சொல்கிறார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் பள்ளிக்கூடத்துப் பையன் மாதிரி இருக்கின்றார். ஆகவே, அரை டிக்கட் கேட்கிறாரோ என்னவோ ? (சிரிப்பு.)

### ரசாயன உரத்தொழிற்சாலை

*** 58 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தமிழ் நாட்டில் ரசாயன உரத்தொழிற்சாலை ஒன்று நிறுவுவ தற்கு சர்க்கார் உத்தேசித்துள்ளதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Government of India have approved in principle the proposal to locate a fertilizer factory in Madras State in the public sector.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இந்த ரசாயன உரச் சாலையை எந்த மாவட்டத்தில் ஆரம்பிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சென்னை நகரத்தில் பெட் ரோலியம் ரிஃபைனரியைச் சேர்த்து ஆரம்பிக்க உத்தேசம்.

**திரு. ர. ஜீவரத்தினம் :** சென்னை நகரத்திலே ஏராளமான தொழில்கள் பெருகி இடவசதி இல்லாத காரணத்தால் சென்னையை அடுத்தாற்போன்று இருக்கின்ற வட ஆற்காடு ஜில்லா விலே அந்த உரத்தொழிற்சாலையை ஆரம்பிக்க சர்க்கார் முன் வருவார்களா ?





**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது நிபுணர்கள் பார்த்து ஆலோசனை செய்கிற விஷயம். நிபுணர்கள் பல இடங்களையும் பார்வையிட்டு சென்னையில் ரிஃபைனரியின் பக்கத்தில் வைப்பது தான் சரி என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** பெட்ரோல் ரிஃபைனரிக்குப் பக்கத்தில் இதை அமைப்பதால் பொருளாதாரத்திலோ அல்லது பிற வகை யிலோ இதற்குச் சாதகம் ஏற்படும் என்ற நிலை இல்லாவிட்டால், உர விநியோகம் எங்கே அதிகமாகச் செல்கிறதோ, அந்த இடத்தில் மத்திய பாகத்தில் அதை அமைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ரிஃபைனரிக்குப் பக்கத்தில் வைத்தால்தான் செலவு குறைவாக இருக்கும், எகனாமிக்காக இருக்கும் என்று நிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்தத் தொழிற்சாலையில் எந்த எந்த வகை உரங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ? அவற்றுக்குத் தேவையான மூலப் பொருள்கள் இந்த ராஜ்யத்தில் என்னென்ன கிடைக்கின்றன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது யோசனையில் இருக்கிறது. இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இதிலே ரிஃபைனரி மிகவும் முக்கியமானது.

### அங்கீகாரம் பெற்ற நர்சரிகள்

*** 59 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவை களில் நடப்படும் பழமரங்களை வாங்குவதற்கென சர்க்காரின் அங்கீகாரம் பெற்ற நர்சரிகள் இருக்கின்றனவா ?

(இ) ஆமெனில், இந்த மாநிலத்தில் எத்தனை நர்சரிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது ?

(உ) அந்த நர்சரிகளில் விலைகள் சர்க்காரால் நிச்சயிக்கப் பட்டுள்ளனவா ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) Thirty-six (36) nurseries were recognised during 1964-65.

(*c*) No.

**திரு. து. ப. அழகமுத்து :** பஞ்சாயத்து யூனியன் பழ மரங்கள் போன்றவற்றை வாங்கவேண்டுமென்று சொன்னால் குறிப்பிட்ட சில நர்சரிகளில்தான் வாங்கவேண்டுமென்று நிர்ப்பந்திப்பதால் அவர்கள் விலையை அதிகமாக வைத்து விற்கிறார்கள். அதை விடக் குறைந்த விலைக்கு வெளியிலே கிடைக்கின்றன. ஆகவே, இந்த நியதியை மாற்றுவார்களா ?

[22nd October 1964

**கனம் திரு. பூ. கக்கன்:** இதை மாற்றுவதற்கில்லை. ஒவ்வொரு வருஷமும் இந்த மாதிரிச் செடிகளை விற்பனை செய்பவர்களை அரசாங்கம் அங்கீகரிக்கிறது. இந்தப் பழத் தோட்டங்களில் சென்று வாங்கினால் நல்லது என்று அரசாங்கம் ஆராய்ந்து ஏற்பாடு செய்திருக்கிறது.

**திரு. து. ப. அழகமுத்து:** அப்படி ரெகக்னைஸ் பண்ணிய இடங்களில் வாங்குகின்றபோது அவை உபயோகமில்லாமல்கூடப் போய் விடுகின்றன. நிர்ப்பந்தத்தின் காரணமாக அங்கேயே வாங்க வேண்டியிருப்பதால் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, பஞ்சாயத்து யூனியன்களே இந்த மாதிரி நர்சரிகளை வைத்து நடத்த சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** அவ்வாறு நடத்த சில இடங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் முன் வந்திருக்கின்றன. மற்றப்படி அங்கீகரிக்கப்பட்ட நர்சரிகளில் வாங்கப்படுகிற மரங்கள் சரியில்லை என்று சொன்னால் அந்த நர்சரிகளைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் அங்கீகாரம் கொடுக்காமல் நிறுத்தி விடலாம்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** தலைவர் அவர்களே, இந்தப் பழச் செடிப் பண்ணைகள் வைக்கும்போது, இதற்கான ரிகக்னைஸேஷன் செய்யும்போது இன்னின்ன விலைக்குத்தான் விற்க வேண்டும் என்று ஏதாவது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா, அப்படியென்றால் அதன்படி விற்கப்பட்டு வருகிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** பழச்செடி வைத்து வளர்ப்பவர்கள் அந்தந்த ஜில்லாக்களில் உள்ள விவசாய அதிகாரிகளுக்கு இன்னின்ன விலைக்கு விற்கப்போகிறோம் என்று அறிவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** தென்னங்கன்றுகள் இன்னின்ன விலைக்குத்தான் விற்கலாம் என்று இருக்கிறது. உற்பத்திச் செலவு முதலியவைகளை எல்லாம் பார்த்து முடிவு செய்யப்படுறகிது. அதே போன்று ஸீட்லிங்க்களுக்கும் இம்மாதிரி ஒவ்வொரு ஜில்லாவிற்கும் விலையை நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள விவசாய அதிகாரியும் இதைப்பற்றி விசாரிக்கிறார்கள். பிற்பாடு தான் இன்னின்ன விலைக்கு விற்கவேண்டும் என்று நிர்ணயிக்கிறார்கள்.

**திரு. ம. கமலநாதன்:** சில குறிப்பிட்ட செல்வாக்குள்ளவர்களுக்கு மட்டும் தான் இம்மாதிரி நர்சரிகள் வைப்பதற்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் லட்சக்கணக்கில் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு இடமளிக்காத வகையில் பரவலாக இந்த நர்சரிகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** ஒரு சிலர் என்று மட்டும் சொல்லிவிட முடியாது. இந்த மாகாணத்தில் 36 பழச் செடி பண்ணைகள் இருக்கின்றன. ஆகவே ஒருசிலர் மட்டும்தான் இதை நடத்துகிறார்கள் என்று சொல்ல முடியாது.



22nd October 1964]

**திரு. கோ. சி. மணி:** தலைவர் அவர்களே, இந்த நர்சரிகளை நடத்துவதற்கு என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும், என்பதைப்பற்றி தெரிவிக்க முடியுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** பழச்செடி பண்ணைகள் வைப்பதற்கு நல்ல அனுபவம் இருக்கவேண்டும். ஏற்கெனவே பண்ணைகள் வைத்து நல்ல முறையில் அனுபவம் பெற்றவர்களும் நம்பிக்கையுடையவர்களாகவும் இருக்கவேண்டும். சர்க்காரும் இவற்றையெல்லாம் பார்த்துத்தான் அங்கீகாரம் கொடுக்கிறது.

## விவசாயத்துறையில் நவீன முறைகள்

* 60 **கேள்வி.—திரு. மு. கருணாநிதி:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயத்துறையில் நவீன முறைகளைப் பயன்படுத்துதல் பற்றி ஆராய அரசாங்கம் ஏதேனும் தனிக்குழு ஒன்றை அமைத்துள்ளதா?

(இ) ஆம் எனில் அந்தக் குழு அளித்த பரிந்துரைகள் என்ன?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, விவசாயத்தில் நவீன முறைகளைப் பற்றிய தகவல்களை கிராமப் பகுதிகளுக்கு கொடுப்பதற்கு கிராம விஸ்தரிப்பு சர்வீஸ் மூலம் மக்களுக்கு தெரிவிப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** கிராமங்களில் கிராம சேவக்குகள் மூலம் மட்டுமில்லாமல், டெப்டி டைரக்டர், இன்னும் இவர்களின் கீழே இருக்கின்ற அதிகாரிகள் மூலமாகவும் நவீன முறைகளைப் பற்றித் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இதற்காக வேண்டிய நடவடிக்கைகளையும் சர்க்கார் எடுத்து வருகிறது.

**திரு. மு. கருணாநிதி:** நவீன சாகுபடி முறையில் ஜப்பான் சாகுபடி முறை சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** பல முறைகளில் அதுவும் ஒன்று.

**திரு. க. ர. நல்லசிவம்:** நல்ல முறைகளில் உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்றும், இவ்விதம் பெருக்காதவர்களுடைய நிலங்களைச் சர்க்காரே எடுத்துக்கொள்ளலாம் என்ற முறையில் சமீபத்தில் திட்டக் கமிஷன் மாநில சர்க்காருக்குச் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. அதாவது தஞ்சாவூரில் தீவிர சாகுபடி திட்டம் நடைபெறும் இடங்களில் உற்பத்தியைப் பெருக்காதவர்களுடைய நிலங்களை எடுத்துக்கொள்ளலாம் என்ற தகவலை திட்டக் கமிஷன் அனுப்பியிருக்கிறார்களா?

**கனம் திரு. பூ. கக்கன்:** அந்தத் தகவல் என்னிடமில்லை.

[22nd October 1964

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, நவீன சாகுபடி முறை என்பது ஜப்பானிய முறையையா அல்லது சைனு முறையையா, எதை அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது? வேறு எந்த விதமான முறைகளெல்லாம் கையாளப்படுகிறது?

**கனம் திரு. பூ. கக்கன் :** அங்கங்கே இருக்கின்ற விவசாய அதிகாரிகள் என்னென்ன முறையில் விவசாயத்தை மேற்கொண்டால் உற்பத்தி அதிகமாக இருக்கும் என்பதைப் பார்த்துச் சொல்கிறார்கள். ஜப்பானிய முறை சில இடங்களில் நன்றாக இருக்கிறது. அதைக் காட்டிலும் சிறந்த முறை கிடையாது என்று சொல்லிவிட முடியாது. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற முறையைப் பொருத்துத்தான் இருக்கிறது.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** நல்ல ரசாயன உரங்களையும் தாள்களையும் போட்டும் உற்பத்தி கணிசமான அளவு பெருகவில்லை. இதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்வதற்கு விவசாய வல்லுனர்களைக்கொண்ட ஒரு குழுவை நியமிக்க அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** அம்மாதிரிக் குழு நியமிக்கவேண்டிய தேவையில்லை. இதற்கான அதிகாரிகள், அனுபவம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்கான யோசனைகளை எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் :** இன்று காலையில் நான் செங்கற்பட்டிலிருந்து வரும்போது பார்த்தேன், வயலில் ஒரு எருமை மாட்டையும், ஒரு நொண்டிப் பசுவையும் சேர்த்துக் கட்டி உழுது கொண்டிருந்தார். நவீன முறை சாகுபடியைக் கொண்டு வருவதற்கு முன்னால் இம்மாதிரிப்பட்ட நிலைமையைச் சமாளிப்பதற்கு சர்க்கார் ஏதாவது கவனம் செலுத்துமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** உழவர்கள் பலவிதத்திலும் மாடுகளைக் கட்டி உழுகிறார்கள். பொதுவாக, எருமை மாட்டையும் பசுவையும் கட்டி உழுவதில்லை.

**திரு. கோ. சி. மணி :** நவீன சாகுபடி முறையில் எந்தெந்த நாட்டுச் சாகுபடி முறைகளை எல்லாம் நாம் அனுஷ்டானத்தில் வைத்துக்கொண்டிருக்கிறோம்.

**கனம் திரு. பூ. கக்கன்:** பொதுவாக ஜப்பான் முறையைக் கையாண்டு வருகிறோம்.

**திரு. மு. கருணாநிதி :** நவீன சாகுபடி முறைகளைப்பற்றிய தகவல்களைக் கிராமத்திலுள்ள மக்களுக்குத் தெரிவிப்பதற்காகக் கிராம ரேடியோ இணைப்பு, கிராம கருத்தரங்குகள் முதலியவைகள் பயன் படுத்தப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அவ்வாறு இப்போதும் செய்து கொண்டிருக்கிறோம்.



22nd October 1964]

**புலவர் கா. கோவிந்தன் :** மாதிரிப் பண்ணைகள், செயல்முறைப் பண்ணைகள் இவைகளை எங்கே பார்க்கவேண்டும் என்று விரும்புகிறோமோ அங்கே நம்மால் பார்க்க முடிவதில்லை. ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தின் அருகாமையிலும் இந்த மாதிரிப் பண்ணைகளையும் செயல்முறை பண்ணைகளையும் ஏற்படுத்தினால் அங்கு வருகின்ற பஞ்சாயத்துத் தலைவர்களாவது பார்த்து, அவர்கள் தங்கள் கிராமங்களில் சென்று சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் யோசிக்குமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** இம்மாதிரிப்பட்ட மாதிரிப் பண்ணைகள் முதலியவை கூடுமான வரை பரிசீலனை செய்து பார்த்து, மக்கள் அதிகமாக, போக்குவரத்து அதிகமாக இருக்கக்கூடிய இடங்களில் தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. எந்த இடத்தில் வைத்தால் நல்லது என்பதைப் பார்த்துத்தான் வைக்கப்படுகிறது. அருகாமையில் வைக்கவேண்டும் என்பதற்காக மண் வளம் இல்லாத இடத்தில் ஏற்படுத்த முடியாது.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** தீவிர சாகுபடி செய்வதற்காக ஜப்பான் நாட்டில் சிறிய அளவில் விவசாயிகள் உபயோகப்படுத்தக் கூடிய வகையில் டிராக்டர் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதை இங்கேயும் வாங்கவேண்டும் என்று யோசிக்கப்பட்டது, அது இப்போது வாங்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** ஜப்பான் நாட்டிலிருந்து சில கருவிகள் பரீட்சார்த்தமாக வாங்கப்பட்டது. மேலும் பல கருவிகள் வாங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** விவசாயத் துறையில் நவீன முறைகளைக் கையாள வேண்டும் என்று நாம் நீண்ட நாளாகச் சொல்லிக்கொண்டு வருகிறோம். சமீபத்தில் ஏற்பட்ட உணவு நெருக்கடி இதைச் சுட்டிக்காட்டி வருகிறது. நம்முடைய மாகாணத்தில் ஜப்பான் சாகுபடித் திட்டம், நவீன முறை என்று கருதப்பட்டு வருகிறது. இவை எல்லாவற்றையும் கவனித்து விவசாயிகளுக்கு நல்ல ஊக்கமும், உற்சாகமும் அளிக்கின்ற வகையில், சாகுபடித் திட்டத்தை நல்ல முறையில் பரிசீலனை செய்வதற்காக அரசாங்கத்தின் சார்பில் மூன்று நல்ல அதிகாரிகளை ஒரு குழுவாக நியமிக்க அரசாங்கம் முன் வருமா? முதலமைச்சர் அவர்கள் . .

MR. SPEAKER : The hon. Member is making a speech.

SRI RAMA ARANGANNAL : Sir, I am putting the question.

MR. SPEAKER : A question should be brief.

**திரு. இராம. அரங்கண்ணல் :** நான் கேள்வி கேட்டாய்விட்டது.

**கனம் திரு. பூ. கக்கன் :** உணவு உற்பத்தி முறைகளைப்பற்றி பிளானிங் கமிஷனில் சொல்லப்பட்டது. இதற்காக அக்ரிகல்சர் ப்ரொடக்ஷன் கமிட்டி ஒன்று அமைத்து, அந்தக் கமிட்டி சில இடங்களுக்குச் சென்று பரிசீலனை செய்து மண் வளம், எவ்வளவு லாபம்

வருகிறது என்பதைப்பற்றி எல்லாம் பார்த்து நான்கு மாதங்களுக்குள் ஒரு ரிப்போர்ட்டை சமர்பிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அது சீக்கிரம் வந்துவிடும் என்று நினைக்கிறோம்.

**திரு. மு. கருணாநிதி:** இது சம்பந்தமாக விவசாய இலாகாவினால் வெளியிடப்படும் அறிக்கைகள், சஞ்சிகைகள் இவைகளின் தரத்தை மேலும் உயர்த்த அரசாங்கம் பரிசீலனை செய்கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** எவ்வளவு தூரம் தரத்தை உயர்த்த வேண்டுமோ அவ்வளவு தூரம் உயர்த்தியிருக்கிறோம். மத்திய சர்க்காரும் விவசாய நிபுணர்களும் என்றைக்கும் பரிசீலனை செய்வார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. மு. சண்முகம்:** தலைவர் அவர்களே, நவீன விவசாய முறைப் பணிகள் பிளாக் டெவலப்மெண்ட் ஆபீஸரிடம் ஒப்படைத்திருப்பது அது மாதிரிப் பண்ணையாக இருக்கும் என்ற நம்பிக்கையிலா? அல்லது உணவுப் பொருள் உற்பத்தி அதிகம் ஆகும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** விவசாயப் பண்ணைகளை அரசாங்கமே நடத்தி வருகிறது. அதோடுகூட விவசாயப் பண்ணையையொட்டி அக்ரிகல்சுரல் ஸ்கூல்ஸ் வைத்து மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம். இந்த வகையில்தான் விவசாயப் பண்ணைகள் நடத்தப்பட்டு வருகிறது.

SRI R. V. SWAMINATHAN rose.

MR. SPEAKER: There are other hon. Members who had raised their hands earlier.

SRI R. V. SWAMINATHAN: May I know whether raising of hands to catch the Speaker's eye is parliamentary? I think it is not proper and it is not also parliamentary.

MR. SPEAKER: The hon. Member has not raised this point earlier. If he wants to put any question, I shall call him afterwards.

**திரு. செ. கோ. விஸ்வநாதன்:** தலைவர் அவர்களே, சென்னை நகரைச் சுற்றி இருக்கிற கிராமங்களில் உள்ள விளை நிலங்கள் வீடு கட்டும் நிலங்களாக மாற்றி அமைக்கப்படுகிறதே; அதைத் தடுக்க உத்தேசம் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன்:** வீடு கட்டும் திட்டத்தில் நிலம் எடுக்கும்போது உணவு உற்பத்தி செய்யும் நிலங்களை, நன்செய் நிலங்களை எடுக்கக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் அவா ஆகும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்லும்போது உணவு உற்பத்தியை அதிகப்படுத்த கமிட்டி அமைத்திருக்கிறோம், அதனுடைய ரிப்போர்ட் இன்னும் வரவில்லை என்று சொன்னார்கள். ரிப்போர்ட் கிடைத்தால் ரிப்போர்ட்டை அப்படியே செயலில் எடுத்துக்கொள்வார்களா அல்லது அதில் ஏதாவது நிறுத்தி விடுவார்களா?



**கனம் திரு. பூ. கக்கன்:** ரிப்போர்ட் வந்ததும் பரிசீலனை செய்து அமல் நடத்துவார்கள். அவர்கள் நல்ல ரிப்போர்ட் தான் கொடுப்பார்கள், ஒன்றும் தப்பிதமாகக் கொடுக்க மாட்டார்கள். ஜில்லா வாரியாகப் பார்த்து வந்திருக்கிறார்கள். அதில் எல்லா விவரங்களும் அடங்கி இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. ர. முனிரத்தினம்:** விவசாயிகளுக்கு முக்கியமாக வேண்டியது உழவு காரணங்கள். இப்போது தந்து கொண்டிருக்கிற டிராக்டர்களுக்கு விதிகள் கடுமையாக இருக்கின்றன. எல்லா கிராமங்களிலும் தாராளமாகத் தருவதற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன்:** வருஷந்தோறும் நிறைய டிராக்டர்கள் வரவழைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு இரும்புக் கலப்பைகள் புதிது புதிதாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மேலூர் கலப்பைகள், மோல்டு கலப்பைகள் எல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதைவிட வேறு ஏதாவது தயார் செய்து கொடுத்தால் விவசாயிகளுக்குப் பயன்படுமா என்று தனிப்பட்ட நபர்களும் பரிசீலிக்கிறார்கள். அவைகளையும் அரசாங்கத்தில் பார்த்து அங்கிகாரம் செய்துகொடுக்க அரசாங்கம் முன் வரும்.

**திரு. ஆர். வி. சுவாமிநாதன்:** நமது அரசாங்கம் எத்தனையோ தொழிற்சாலைகளை ஸ்தாபித்து வருகின்றது. சிறிய டிராக்டர்களைச் செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** விவசாய இலாகா மூலம் சென்னையிலே ஒரு தொழிற்சாலை வைத்திருக்கிறோம். டிராக்டர்களுக்கு வேண்டிய சில சாமான்கள் செய்கிறார்கள். டிராக்டர்கள் செய்வதற்கு இப்போது நம் விவசாய இலாகா மூலம் வைப்பதா அல்லது தனியார் துறையில் வைப்பதா என்பதைப் பற்றியெல்லாம் தனியாக இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டருக்குக் கேள்வி போட்டால் அவர் பதில் சொல்லுவார்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** நவீன முறைகளில் சாகுபடி செய்கிற அயல் நாடுகளுக்கு பி.எஸ்ஸி. (அக்ரி.) மாணவர்களை அதிகமாக அனுப்பி, அங்குள்ள முறையைப்பற்றி நன்றாகத் தெரிந்து கிராமங்களில் உள்ளவர்களுக்குத் தெரியும் முறையில் நன்கு பிரசாரம் செய்யும் அளவில் அதிக மாணவர்களை அனுப்ப அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** இப்போதே அனுப்பிக்கொண்டிருக்கிறோம். அமெரிக்க நாட்டிலிருந்து இங்கே வருகிறார்கள். நம் நாட்டிலிருந்து அங்கே போகிறார்கள். எவ்வளவு தூரம் தேவையோ அந்த அளவுக்குக் கூடுமான வரையில் அனுப்பிக் கொண்டுதான் வருகிறோம்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, நவீன முறை விவசாயம் புகுத்தப்பட்ட பிறகு நவீனமான வியாதிகள் பயிர்களுக்கு ஏற்படுகிறதே. இந்த முறைகள் வெளிநாடுகளிலிருந்து

[22nd October 1964

இறக்குமதி செய்யப்படும்போது, அதோடு சேர்ந்து இந்த வியாதிகளும் இறக்குமதி செய்யப்படுகிற காரணத்தினுல் வருகிறதா? அதைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஸ்ப்ரேயர்ஸ், டஸ்டர்ஸ், பவர் ஸ்ப்ரேயர்ஸ் எல்லாவற்றையும் வரவழைத்து அதிகப்படியாகக் கொடுத்து, பூச்சிகள் வருவதைத் தடுக்க . . . பூச்சிகள் இறக்குமதி செய்யப்படுவதில்லை. என்ன காரணம் என்று தெரியாமலேயே சில சமயங்களில் எதோ மாதிரி வியாதி வந்துவிடுகின்றது. அதைத் தடுக்க அரசாங்கம் பிரயத்தனம் செய்து வருகிறது.

### கொலை வழக்குகள்

* 61 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் 1963-ல் எத்தனை கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன?

(இ) அவைகளில் (1) எத்தனை துப்பு விசாரிக்கப்பட்டு வழக்குகள் போடப்பட்டன. (2) எத்தனை துப்பு துலக்காமல் விடப்பட்டன?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 64.

(*b*) (*i*) 48.

(*ii*) 13.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, மொத்தம் ஏற்பட்ட கொலை வழக்குகளில் 13 கண்டு பிடிக்க முடியாமல் போய் விட்டது என்று அமைச்சர் கூறுகிறார்கள். கண்டு பிடிக்க முடியாமல் போனது போலீஸாரின் திறமைக் குறைவு காரணமா? அல்லது வேறு குறுக்கீடு காரணமாகக் கண்டு பிடிக்க முடியாமல் போய் விட்டதா?

**கனம் திரு. பூ. கக்கன் :** எவிடென்ஸ் சரியாக இல்லாததால் சில கேஸ்கள் கண்டுபிடிக்க முடியாமல் போகின்றன.

**கனம் சபாநாயகர் :** குறுக்கீடு என்பது தெளிவாக இல்லை.

### பால்பண்ணைத்துறையில் பயிற்சி

* 62 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாதவரம் பால்பண்ணையிலிருந்து டென்மார்க்குக்கு எத்தனை பேர் பயிற்சி பெற அனுப்பிவைக்கப்பட்டனர்?

(இ) இதற்கான மொத்தச் செலவு எவ்வளவு?



22nd October 1964]

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் :** (அ) சென்னை, பால் பண்ணைத் திட்டத்திலிருந்து இரண்டு பேர் டென்மார்க்கிலுள்ள பால் பண்ணைத்துறையில் மேல் பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்பட்டனர். 1962-ம் ஆண்டில் மத்திய பால் பண்ணை நிர்வாகி திரு. சி. ஆர். சீதாராமனும், 1963-ம் ஆண்டில் பால் பண்ணை மேற்பார்வையாளர் திரு. ஆர். பாலகிருஷ்ணனும் இப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார்கள்.

(இ) டென்மார்க்கில் அவர்களுடைய பயிற்சி சம்பந்தமாக மாநில அரசாங்கம் சுமார் 4,000 ரூபாய் (நாலாயிரம் மட்டும்) செலவழித்தது.

**திரு. து. ப. அழகமுத்து :** இப்படி பயிற்சிக்குச் சென்று வந்த ஒரு உயர்தர அதிகாரி பயிற்சி முடிந்து வந்ததும் பால் பண்ணையில் தொடர்ந்து வேலையில் இல்லாமல் போய் விட்டார் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படியானுல் பயிற்சிக்காகச் செலவு செய்யப்பட்ட பணம் என்ன ஆவது?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் :** பயிற்சி பெற்றவர்களில் இன்னொருவர் இனிமேல்தான் வரவேண்டும். அவர் நவம்பர் கடைசியில் வரவேண்டும். வந்துள்ள ஒருவர் இப்போது பால் பண்ணையில் இருந்து கொண்டிருக்கிறார்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** பயிற்சி பெற இரண்டு பேர்கள்தான் அனுப்பப்பட்டதாகக் கூறினர்கள் எத்தனை பேர்கள் விண்ணப்பம் செய்திருந்தார்கள் என்று அறியலாமா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார் :** நமக்கு இரண்டு பேர்கள் வேண்டியிருந்தது. அப்போது இரண்டு பேர்களை அனுப்பினேம். எத்தனை அப்ளிகேஷன் என்ற தகவல் இப்போது இல்லை. அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

### *Zamin forests*

* 63 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Panchayats of Mittadhainahally, Mittareddihally, etc., in Dharmapuri taluk for the entrustment of a portion of Noolahally Reddihally Mitta forests and for transfer of the same as unassessed waste; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) Yes.

(*b*) It is under consideration of the Government.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** இது போன்று பல இடங்களில் ஜமீன் பிராந்தியங்களில் விவசாயத்திற்கு லாயக்கான நிலங்களைக் கூடக் காடுகள் என்று பிரித்திருக்கிறார்கள். அதனுல்

விவசாயிகளுக்குத் தொல்லையாக இருக்கிறது. விவசாயத்திற்கு லாயக்கான நிலங்கள் இவை, காடுகள் இவை என்று உண்மை நிலையை ஆராய்ந்து பார்த்து, விவசாய நிலங்களை விவசாயத் திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** ஜமீன் காடுகளை ஜமீன் ஒழிப்புத் திட்டம் வந்த காலத்தில் சர்க்கார் எடுத்துக்கொண்டது. இதிலே சிலவற்றைக் காடுகளாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தீர்மானித்து இன்று அவைகள் காட்டு இலாகாவின் பொறுப்பில் இருந்துகொண்டிருக்கிறது.

பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களுக்கான விதிகள்

* 64 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :
திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : } கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன்களில் பணிபுரியும் ஊழியர்களின் ஊதியம், ஊதிய உயர்வு, உத்தியோக உயர்வு ஆகிய உரிமைகளை வகைப்படுத்தும் தனி விதிகள் ( Ad hoc rules ) ஏற்படுத்தப் படவில்லை என்பது உண்மையா ?

(இ) அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) பஞ்சாயத்து யூனியன் களில் பணிபுரியும் ஊழியர்களின் உத்தியோக நிலை பற்றிய விதிகள் (தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம், 1958-ன் கீழ்) வகுப்பது குறித்த வரைவுகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. இவ்விதிகள் வகுக்கப்படும் வரையில், சென்னை ஜில்லா போர்டு சட்டம் 1920-ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள உத்தியோக நிலைமை பற்றிய விதிகள் மேற்படி ஊழியர்களுக்கும் பொருந்தும்படி செய்யப்பட்டிருக்கிறது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

9-30 a.m. **திரு. ம. கமலநாதன் :** இந்தப் பஞ்சாயத்து யூனியன் பணியாளர் களைப்பற்றி முதல் அமைச்சரிடத்தில் அவர்கள், அவர்களும் அரசாங்க ஊழியர்களைப்போலவே பலவித தொந்தரவுகளுக்கு உள்ளாகிப் பணிபுரிகிறார்கள். ஆகவே சம்பளம், பஞ்சப்படி முதலியவற்றில் அரசாங்க ஊழியர்களாகவே கருதப்படுவார் களா? என்று கேட்டபோது அவர்கள் சர்வீஸ் தனியானது, அவர்களுடைய சம்பள விகிதம் தனியாகவே இருக்கும் என்றார்கள். அதைப் புதிதாக ஏற்படுத்த இருக்கும் விதிகளிலேயே ஏன் ஏற்படுத்தக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இந்த விதிகள் எல்லாம் தயாரான வுடன் பொதுஜனங்களுக்குத் அறிய கெஜட்டில் பிரசுரிக்கப்படும். கனம் உறுப்பினர் தம் ஆலோசனைகளை எடுத்து அப்போது எழுதி அனுப்பினால் பரிசீலிக்கப்படும்.



**புலவர் கா. கோவிந்தன் :** இப்படிப்பட்ட விதிமுறைகளை வகுக்கும்போது அரசாங்கம் ஒன்றைக் கவனிக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன்களில் வேலை செய்யும் ஊழியர்களில் ஒரு சிலரைக் கடைநிலை ஊழியர்களாகக் கருதுகிறார்கள். பஞ்சாயத்து பள்ளிகளில் வேலை செய்யக்கூடியவர்களை அன்றாடக் கூலிகளாக வைக்கிறார்கள். அரசாங்கத்திற்கு எழுதினால் அப்புறம் மாற்று கிறார்கள். அப்படியின்றி விதிமுறைகள் வகுக்கும்போது இதைத் திட்டவட்டமாகச் செய்ய முடியுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** முதலில் விதிகளைத் தயாரித்து 20—3—1963-இல் கெஜட்டில் பிரசுரித்தோம். பலர் தங்கள் கருத் துக்களைத் தெரிவித்தார்கள். அதை வைத்துக்கொண்டு அதிகாரி கள் பரிசீலனை செய்து இந்த விதிமுறைகளைத் தயாரிக்கிறார்கள். இதுவும் கெஜட்டில் பிரசுரமாகும். கனம் அங்கத்தினர் தம் யோசனைகளை எல்லாம் அதைப் பார்த்த பின் அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பினால் பரிசீலனை செய்யலாம்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** முன்பு மாவட்ட மன்றங்களில் பணி புரிந்து வந்தவர்களுடைய சம்பளம், உத்தியோக உயர்வு ஆகியவை இப்போது பஞ்சாயத்து மன்றங்களில் கொடுக்கப்படாமல் இருப் பது உண்மையா ? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுத்து மாற்ற உத்தேசம் ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** என்னிடம் தகவல் இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் கீழ் பணிபுரியக்கூடிய ஊழியர்கள் அனைவரும் ராஜ்ய சர்க்கார் ஊழியர்களைப் போல நடத்தப்பட வேண்டுமென்ற அபிப்பிராயம் நிலவி வருகிறது. ஆனால் அவர் களுடைய சர்வீஸ் ரெக்ரூட்மெண்டு பஞ்சாயத்துக்களிடமே இருக் கிறது. நம்முடைய சர்க்கார் ஊழியர்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் பொறுக்கி எடுக்கப்படுகிறார்கள். இதுபோலவே பஞ்சா யத்து யூனியன் ஊழியர்களைப் பொறுக்கவும் தனி ஸ்தாபனத்தை ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. சே. ம. மஜீத் :** தனியாகக் கேள்வி போட வேண்டும்.

ஜெயில்களின் தேவைக்கான உணவு தானியங்கள் வாங்குதல்

* 65. கேள்வி.—திரு. பி. முருகையன்: கனம் செய்தி விளம் பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-64ம் ஆண்டிற்கு மாவட்ட ஜெயில், சப்-ஜெயில் களுக்குத் தேவையான உணவு தானியங்கள் வாங்க டெண்டர் கோரப்பட்டனவா?

(இ) ஜெயில்களுக்கு வாங்கப்படும் உணவு தானியங்களில் 1963-64-க்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?

**கனம் திரு. கோ. பூவராகன்:** (அ) ஆம். சில சிறைச்சாலைகள் நீங்கலாக,

[22nd October 1964

(இ) 1963-64-ல் சிறைச்சாலைகளுக்காக உணவுப் பண்டங்கள் வாங்குவதற்குச் செலவான தொகை ரூ. 44,59,350

திரு. எம். எஸ். மணி: சிறைச்சாலையில் வாங்குகிற உணவுப் பண்டங்களுக்கு காண்டிராக்டர்கள் முதலில் சாம்பிள் கொடுக்கிறார்கள். சப்ளை செய்யும்போது அதுபோலக் கொடுப்பது இல்லை. அவர்கள் சப்ளை செய்கிறபோது சாம்பிள் கொடுத்ததுபோல இருக்கிறதா என்பதை யார் பரிசீலனை செய்து வாங்குகிறார்கள்?

கனம் திரு. கோ. பூவராகன்: ஜெயில் சூப்பரண்டுதான் பார்த்து வாங்குகிறார்கள்.

திரு. பி. முருகையன்: இந்த டெண்டரில் கொடுக்கும் விலைக்கும் தனியார் கொடுக்கின்ற விலைக்கும் வித்தியாசம் இருக்கிறது. இப்படிப்பட்ட வித்தியாசத்தை நிறுத்த டெண்டர் கோருகிற முறையை அரசாங்கம் ஒழுங்கு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன்: இதில் ஒன்றும் தவறுதல்கள் வருவதில்லை. இது மாமூலாக சரியான முறையில்தான் நடந்து வருகிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: சிறைச்சாலைக்கு உணவு சப்ளை செய்வதற்காக ஆன தொகை 44 லட்சம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறையில் உள்ளவர்கள் பல பல தொழில்களைச் செய்து வருகிறார்கள். ஆகவே அதில் இருந்து கிடைக்கும் வருமானம் இதைவிட அதிகமானதாக இருக்கிறதா? தாழ்ந்ததாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன்: அந்தக் கணக்கு என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. அ. தியாகராஜன்: கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ல் யாருமே காண்டிராக்ட் எடுக்க முன்வரவில்லையா? முன் வந்திருந்தார்கள் என்றால் அரசாங்கம் ஏன் அவர்களுக்குக் கொடுக்காமல் கூட்டுறவு ஸ்டோர்சில் வாங்கிக் கொள்ளும்படியான ஏற்பாட்டைச் செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன்: காண்டிராக்டுக்கும் விடப்பட்டு இருக்கிறது. ஸ்டோர்சுகளிலும் வாங்குகிறார்கள்.

திரு. எம். எஸ். மணி: சிறைக்கு வருகிற எண்ணெய் டின்களில் ஆக் மார்க் சீல் சரியாக இருக்கிறது. ஆனால் உடைத்துப் பார்க்கிறபோது முத்திரையிட்ட எண்ணெய் இருப்பது இல்லை. வேறாக இருக்கிறது. அதைப்போன்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

கனம் திரு. கோ. பூவராகன்: அதைப்போன்ற புகார் வராவில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: காண்டிராக்ட் கொடுக்கும்படியான பண்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். இதிலே இந்தமாதிரித் தகராறு ஏற்படாது இருக்கும் வகையில் அரசாங்கம் ஒழுங்காக சப்ளை செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?



22nd October 1964]

கனம் திரு. கோ. பூவராகன்: அரசாங்கத்திற்குத் தவறாக சப்ளை செய்வதாக எவ்விதப் புகாரும் வரவில்லை. குறிப்பிட்ட இடத்தைப் பற்றிச் சொன்னால் விசாரிக்கலாம்.

திரு. எம். எஸ். மணி: தலைவர் அவர்களே, சிறைக்கு வெளியே சாம்பிள் காட்டுகிற தானியம் ஒரு வகையாக இருக்கிறது. ஆனால் சிறைக்குள் சப்ளை செய்கிற தானியம் ஒரு வகையாக இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் சிறைச்சாலைக்குச் சென்று நேரில் பார்வையிடுவார்களா?

கனம் திரு. கோ. பூவராகன்: இரண்டு, மூன்று சிறைகளுக்கு நான் முன் அறிவிப்பு இன்றிப் போய்ப் பார்த்து இருக்கிறேன். சரியான முறையில் இல்லாததனால்தான் கோவாப்ரேடிவ் ஸ்டோரில் வாங்கவேண்டுமென்று உத்தரவு போடப்பட்டு இருக்கிறது.

திரு. பி. முருகையன்: 1963-64 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மத்திய சிறைக்கு டெண்டர் கோரப்பட்டதா? கோரப்பட்டபோது டெண்டர்தாரர்கள் என்னென்ன வகை தானியங்களை சப்ளை செய்தார்கள்?

கனம் திரு. கோ. பூவராகன்: பெரும்பாலும் எல்லா உணவு தானியங்களும் டெண்டர் மூலமாகப் பெறப்படுகின்றன.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II—ADJOURNMENT MOTION.

### ABSENCE OF THE CHIRF JUSTICE FROM MADRAS HIGH COURT.

MR. SPEAKER: I do not think that the hon. Member Sri M. Kalyanasundaram, can raise a discussion in this House regarding the 'continued absence of the Chief Justice from the Madras High Court' about which he has given notice of an adjournment motion.

SRI M. KALYANASUNDARAM: I must be permitted to speak on this.

SRI R. V. SWAMINATHAN rose.

SRI M. KALYANASUNDARAM: I am on my legs. I must not be interrupted. I am not raising the question of the conduct of the Judge; I only want to draw the attention of the House to the 'break down' in the administration of justice.

MR. SPEAKER: Where is the evidence for the collapse of the administration of justice?

SRI M. KALYANASUNDARAM: On account of the continued absence of the Chief Justice, the Government have been prevented from taking his advise whenever required.

[22nd October 1964

MR. SPEAKER: Even assuming that a Judge was absent from the Court, the hon. Member, Sri M. Kalyanasundaram, cannot presume that there is a breakdown or collapse in the administration of justice.

SRI M. KALYANASUNDARAM: Let the Hon. Chief Minister say that there is no breakdown in the administration of justice. I want to know what action has been taken by the Hon. Chief Minister. This House is entitled to know about that.

This House is entitled to know what action the Hon. the Chief Minister took to represent to the President about the situation in our State.

MR. SPEAKER: There is no situation at all. What is the situation?

SRI M. KALYANASUNDARAM: Because Chief Justice is not attending the Court.

MR. SPEAKER: Whether he is attending the court or on leave or in his Chamber is not a matter for us here to discuss.

SRI M. KALYANASUNDARAM: If the Chief Justice had been on leave, there would have been somebody officiating in his place. He is neither on leave nor has he retired. Are we not entitled to know about it? We vote the Demand for the administration of Justice.

MR. SPEAKER: What is there to show that there is a breakdown?

SRI M. KALYANASUNDARAM: The very fact that the Chief Justice is absent and his advice is not available to the Government shows that there is a breakdown.

MR. SPEAKER: Did the Government refer any matter?

SRI M. KALYANASUNDARAM: Yes.

MR. SPEAKER: The hon. Member cannot presume things. This cannot be the subject matter of an adjournment motion here.

SRI M. KALYANASUNDARAM: Sir, we are voting the budget. 'Administration of Justice' is included in the State List and only the appointment of Judges is outside our purview.

திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் சபாநாயகர் அவர்களே, 'ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர்', ஸார். ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி ஒத்திவைப்புப் பிரேரபணை கொடுக்கும் பொழுது, அந்த விஷயத்தை ஸ்பீக்கர் அவர்கள் மறுக்கத் தகுந்ததாக இருந்தால், 'மூவர்' அதைப்பற்றி ஆரம்பமாகச் சொல்ல வேண்டிய விஷயங்களை எல்லாம் சொன்ன பிற்பாடு தீர்ப்புச் சொல்லுவது சரியா? அது தவிர்க்கக்கூடியதாக இருக்குமானால்



22nd October 1964] [எம். எஸ். செல்வராஜன்]

அதைத் தவிர்த்து தீர்ப்புக் கூறுவது சரியா? அல்லது 'மூவர்' எதற்காக அந்த 'அட்ஜார்ன்மெண்டு மோஷனை' கொண்டுவர நினைக்கிறாரோ அதனுடைய 'பர்பஸ்' 'ஸர்வாகக்கூடிய' முறையில் 'பிரிலிமினரி டிஸ்கஷனுக்கு' விட்டு, பின்னர் தீர்ப்பு கொடுப்பது முறையா?

கனம் சபாநாயகர்: சேம்பரில் டிஸ்மிஸ் பண்ணுவது முறையாக இருக்கலாம். ஸ்பீக்கர் ரொம்ப நல்லவராக இருப்பதினால் (ஆரவாரம்) அங்கத்தினர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்து, அவர்களுக்கு அந்த விஷயத்தை மனதில் படும்படி சொல்லி, அதற்கப்புறம் அப்படிச் செய்யலாம். இது ஸ்பீக்கருடைய நல்ல குணத்தைக் காட்டுகிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. (பலத்த ஆரவாரம்) எதற்காக 'ஹானரபிள் மெம்பர்' அவர்கள் இந்தக் கேள்வியை எழுப்பினர் என்று எனக்குப் புரியவில்லை. We need not go into the matter further. Let the hon. Member convince the speaker.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய 'அட்ஜார்ன்மெண்டு மோஷன்' உங்களுடைய அனுமதி கொடுப்பதற்கு அருகதை உடையதா என்பது முதல் பிரச்னை. 'அட்மினிஸ்டிரேஷன் ஆப் ஜஸ்டிஸ்' ஸ்டேட் லிஸ்டில் இருக்கக் கூடியது. அதற்கு இந்தச் சட்ட மன்றம் 'வோட்' பண்ணி பணத்தை ஒதுக்கவேண்டும். நீதிபதிகளை நியமிப்பது, நீதிபதிகளின் நடத்தை இதுபோன்ற விஷயங்களை விவாதிப்பதற்கு இந்தச் சபைக்கு உரிமை கிடையாது என்பதை ஒத்துக்கொள்கிறேன். அதைப்பற்றி நான் ஒத்திவைப்பு பிரேரபணை கொண்டு வரவில்லை. பிரதம நீதிபதி தொடர்ந்து கோர்ட்டுக்கு வருவதில்லை; அதற்கு மாற்று ஏற்பாடு செய்யப்படவும் இல்லை. இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் எவ்வளவு நாட்களுக்குத் தொடர்ந்து இருப்பது?

MR. SPEAKER: How do we know that he absented himself without taking any leave or making any arrangement?

SRI M. KALYANASUNDARAM: I know it.

MR. SPEAKER: The hon. Member cannot presume things.

SRI M. KALYANASUNDARAM: Let the Hon. the Chief Minister say that the Chief Justice is attending the court.

MR. SPEAKER: Only after I give my consent, the matter can be discussed.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இதை 'அட்மிட்' பண்ணுவதற்கு இந்த விஷயம் உண்மையா, இல்லையா என்று பார்க்க வேண்டும்.

கனம் சபாநாயகர்: 'அட்மிட்' பண்ணுவதற்கு 'ப்ரைமா பேஸி கேஸ்' இருக்கவேண்டும்.

SRI M. KALYANASUNDARAM: 'Administration of Justice', is in the State List.

[22nd October 1964

MR. SPEAKER : I do not say that it is not in the State List. It is in the State List. But how do we knew that the Chief Justice has absented himself without making any arrangement?

SRI M. KALYANASUNDARAM : There is a dereliction of duty and it is the concern of this House and we have every right to discuss it.

MR. SPEAKER : That is right. But the point is whether there is a *prima facie* case to show that there is a dereliction of duty or absence or anything like that.

SRI M. KALYANASUNDARAM : That is why I am bringing to the notice of the Hon. Speaker.

MR. SPEAKER : But the hon. Member cannot bring an adjournment motion on a matter which he suspects because the adjournment motion must relate to a specific matter of recent occurrence.

SRI M. KALYANASUNDARAM : As a responsible Member of this House I have brought this matter to the notice of the Hon. Speaker.

MR. SPEAKER : As a responsible Speaker, I must ascertain on what basis the hon. Member is saying it.

SRI M. KALYANASUNDARAM : The Hon. Speaker can ascertain the fact from the Government. Let the Government contradict what I say.

MR. SPEAKER : Why does the hon. Member expect the Government either to contradict or confirm it?

SRI M. KALYANASUNDARAM : The fact of the absence of the Chief Justice is well known to the whole world.

MR. SPEAKER : Where is the question of the whole world knowing it? I saw in newspapers only to this extent. . . .

SRI M. KALYANASUNDARAM : Sir, I am not relying on newspaper reports.

SRI R. V. SWAMINATHAN : On a point of order, Sir. Is it proper to discuss the matter in the House itself before it is admitted by the Hon. Speaker? This may be discussed either this afternoon or to-morrow in the Chamber of the Hon. Speaker. So, I want to know whether it is right to allow a discussion on a matter which could be discussed only after getting the consent of the Hon. Speaker?

MR. SPEAKER : Let the hon. Member, Sri Swaminathan, please resume his seat. Again I may tell the House that the Speaker may disallow it in his Chamber. If the hon. Member, Sri Kalyanasundaram is ready with some documentary or authentic evidence to prove that there is a dereliction of duty or dead lock or breakdown in the administration, then I can allow it. There



22nd October 1964] [Mr. Speaker]

is nothing to prevent the Speaker from taking the House into his confidence and asking the hon. Member, Sri Kalyanasundaram to speak on the matter. So, the hon. Member, Sri Swaminathan need not raise a point of order similar to the one raised by the hon. Member, Sri Selvarajan.

SRI R. V. SWAMINATHAN : My point is whether a discussion can be allowed on this matter at this stage.

MR. SPEAKER : I do not go into other things. I am only asking whether he has got any evidence...

SRI M. KALYANASUNDARAM : I think there is a misunderstanding about the procedure to be adopted for admitting an adjournment motion in the House. The Hon. Speaker has explained it correctly. Sir, I invite the attention of the House to Rules 43 and 44. They are different from the Lok Sabha Rules. There is nothing to show that the Hon. Speaker must refuse consent in his Chamber. There is nothing to show that the Member should take consent only in his Chamber. He can take his consent publicly in this House. We discussed this point while framing the Rules and I was one of the Members who served in the Rules Committee which framed the rules.

MR. SPEAKER : Does the hon. Member doubt whether the Speaker has got a right to disallow it in his Chamber?

SRI M. KALYANASUNDARAM : No, Sir.

MR. SPEAKER : Therefore, the hon. Member need not go into the matter. Now, we are not at that stage.

SRI M. KALYANASUNDARAM : My only fear is that the Hon. Speaker should not be influenced by the points of order raised in the House.

MR. SPEAKER : To say that the Speaker might be influenced by the points of order is another aspersion on the Speaker.

SRI M. KALYANASUNDARAM : The points of order might have a bearing on the views of the Hon. Speaker.

MR. SPEAKER : So, I must be very careful when the hon. Member raises a point of order?

SRI M. KALYANASUNDARAM : If the Hon. Speaker wants evidence to show that the Chief Justice is absent, I am prepared to produce evidence. Let the motion be taken up tomorrow but if the Hon. the Chief Minister assures us, that the Chief Justice is continuously present, then there is no difficulty.

MR. SPEAKER : I do not think, at any rate, there is any point to support the adjournment motion. I therefore withhold consent. If the hon. Sri M. Kalyanasundaram has any fresh material, he can raise the matter to-morrow as a fresh motion.

III.—PRIVILEGE MATTER.

PLACING OF A BOARD NEAR THE ENTRANCE TO FORT ST. GEORGE, CONTAINING A SLOGAN CASTING REFLECTION ON THE FASTING BY OPPOSITION MEMBERS.

MR. SPEAKER: There is the privilege motion given notice of by Sri Saw Ganesan, Sri M. Kalyanasundaram, etc.

SRI SAW GANESAN rose.

SRI M. KALYANASUNDARAM: May I just say a few words?

MR. SPEAKER: Before going to the question raised in the privilege motion, I want to know whether fasting (leaving out the question whether it is within the precincts of the House or not) is a parliamentary act and legitimate act of a member of the House and whether it has got the protection as a privilege. Is it the proper duty or function of a member? That is the only point I want to know. The point that the board at the entrance to the Secretariat saying viz. "once a session, it will do good to go without food" was kept purposefully knowing fully that there was going to be fast by certain M.L.As.—I am not going into those points... I want to know whether privilege is there only in respect of preventing or hampering a member from doing anything on casting aspersion on a member in the discharge of his legitimate duties as a member of a legislature. I want to know whether fasting, in the precincts of the legislature, is a legitimate act, and whether it comes under the protection of privilege afforded to a member.

SRI M. KALYANASUNDARAM: In this case I do not agree with the presumption that this is intended to ridicule only those members who went on fast. It is a ridicule against the whole House.

MR. SPEAKER: I hope the hon. Member has heard what I said.

SRI M. KALYANASUNDARAM: If I have stated that it was an attempt to ridicule members who went on a fast yesterday, then the point is right. I feel offended personally. It is not against me alone but it is against the House as a whole, including members who did not fast. The slogan "once a session it will do good to go without food' is not directed against us......

THE HON. SRI R. VENKATARAMAN: It might be against the public also.

SRI M. KALYANASUNDARAM: It affects all members of the House. There is a purpose in planting this placard. It is planted only yesterday morning.

MR. SPEAKER: What the privilege motion says is that it is against the people who fasted. There may be another interpretation that it might include other hon. Members also. First of all what is the hon. Member's suggestion? Does he say that it is directed only against the hon. Members who fasted?



SRI M. KALYANASUNDARAM: It is directed against the House.

MR. SPEAKER: The hon. Member is not coming to the point. Does the hon. Member say that it is an aspersion against the hon. Members who fasted?

SRI M. KALYANASUNDARAM: It has been planted only yesterday.

MR. SPEAKER: So the hon. Member has brought this motion.

SRI M. KALYANASUNDARAM: I say that it has been planted to provoke those members who believed that fasting was right as a method of protesting against policies of the Government. Nowhere on earth has fasting within the precincts of the legislature been held unparliamentary.

MR. SPEAKER: It may not be unparliamentary. But is it the legitimate duty of a member?

SRI M. KALYANASUNDARAM: I do not claim that the Hon. Speaker should give protection for members to fast. Of course the Hon. Speaker and the staff were good enough......

MR. SPEAKER: The hon. Member can stand on his own legs. He need not drag the Speaker into this. Why does he say that the Speaker was good enough to do this or that? The Speaker was good enough not to do so many things.

SRI M. KALYANASUNDARAM: What I would like to bring to your notice is that the placard has been planted only yesterday morning. The materials constituting the board belong to Government. It is made of wooden polls with plywood. I suspect that it is the property of Government. It has been put there, just at the entrance to the House. It applies to all members irrespective of those who fasted yesterday. It applies to those who did not fast and who attended the Assembly yesterday. It might apply even to the Hon. Speaker. The Chief Secretary to the Government of Madras is responsible for proper upkeep of the precincts of the House. The Government or Chief Secretary or Police might find out as to who was responsible for planting this placard and take whatever action necessary.

MR. SPEAKER: How is it a breach of privilege?

SRI M. KALYANASUNDARAM: If I have pasted a thing like that the police would have immediately taken action against me. But here the police did not do anything and Government have allowed it to remain. Even now the placard is there.

MR. SPEAKER: In what way it is a breach of privilege? Let the hon. Member please come to the point.

[22nd October 1964

SRI M. KALYANASUNDARAM: Government officers should not indulge in things like this. I can understand if hon. Members belonging to the ruling party want to protest against our action. They can show a placard like that. We will respect it and appreciate it. But we will not allow some government officer taking this idea into his head and creating confusion and attacking the dignity of the House.

MR. SPEAKER: It might refer to others also, the public. Let the hon. Member tell me whether it is the legitimate duty of a member to fast and whether protection of privilege could extend to that.

SRI M. KALYANASUNDARAM: It has been planted yesterday and it is even now there. It affects all of us......

MR. SPEAKER: The hon. Member Sri Saw Ganesan may now speak.

* **திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம் நாங்கள் புறப்படுவதற்கு சில நிமிஷங்களுக்கு முன்புதான் இந்த போர்டு ஊனப்பட்டிருக்கிறது என்பதை நன்றாக நாங்கள் நம்புகிறோம், பலப்படுகிற, அங்கு இருக்கிற நிலையைப் பொறுத்தும் கீழே தண்ணீர் ஊற்றப்பட்டு இருப்பதைப் பொறுத்தும், அது காயாமல் இருப்பதைப் பொறுத்தும். அதுவும் நாங்கள் வருகிற வழியிலே, எந்த ஓரத்தில் நாங்கள் வரவேண்டுமோ, அங்கே ஊனப் பட்டிருக்கிறது. நீதி வாக்கியம் மாதிரியாக அது இருந்த போதிலும், அந்த நீதி வாக்கியத்தை முன்னதாகவோ, பின்ன தாகவோ அல்லது எப்பொழுதுமே ஊன்றியிருந்தால் அதற்குப் பொருள் வேறு. இப்பொழுது இந்த நிமிஷத்தில் இந்த நீதி வாக்கியத்தைச் சொல்லுவது என்பது நிச்சயமாக குறைந்த பட்சமாகச் சொல்லுகிறேன், அரசாங்க உயர்தர அதிகாரிகளின் அனுமதி பெற்று, அந்தச் செயல் நடந்திருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். அது உண்மையிலே சட்டமன்றத்தின் ஒரு கணிச மான தொகையினர் மேற்கொள்கின்ற ஒரு முறையை இடித்துக் காட்டி, அவர்கள் உள்ளத்தைப் புண்படுத்தி, அவர்களைக் கிண்டல்
10-00 a.m. செய்து, அவமதிக்க வேண்டுமென்ற நோக்கந்தான் இதற்கு அடிப்படை என்பதை நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம். சபை அங்கத்தினர்களின் ஒரு பகுதியினர், ஆளுங் கட்சியினரோ மற்ற வர்களோ அதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம், இருந்த போதிலும் அவர்கள் செய்த காரியம் வேறு எந்தவிதமான நோக்கமும் இல்லாமல் அரசாங்கத்தின் கருத்தை இழுக்க என்று செய்யப்பட்டது. ஆகவே, யாருக்காகச் செய்யப்பட்டது என்பதை மறந்துவிடப்படாது. நாங்கள் மேற்கொண்ட இந்த முறை காரிய சாத்தியமான முறையென்று அஹிம்சா முறையில் போராட்டம் எதுவும் நடக்க வேண்டுமென்று எடுத்துக்காட்டிய காந்தியடிகளே ஏற்றுக்கொண்ட ஒன்று. அதை குத்தி, கிண்டல் செய்வது, உள்ளத்தை ஊறு படுத்துவது எவ்வளவு தவறானது என்ற



22nd October 1964] [திரு. சா. கணேசன்[

உணர்ச்சிகள் எங்கள் உள்ளத்திலே அரும்பாமல் இல்லை. எழும்பாமல் இல்லை. சபாநாயகர் அவர்களே, உங்கள் உறுப்பினர்கள் அவமதிக் கப்படுவதிலிருந்து, எங்களுக்கு ப்ரொட்டெக்ஷன் கொடுக்க வேண் டியது சபாநாயாகிய உங்களுடைய பொறுப்பு. அந்தப் பொறுப்பு சபாநாயகர் அவர்களுக்கு இருக்கிறது என்ற நம்பிக்கையிலே இந்த மோஷனைத் தந்திருக்கிறோம். இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பி விவாதம் நடத்தி, ஏன் இப்படி நடந்தது, இதற்கு யார் யார் காரணம் என்பதையெல்லாம் விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி நடவடிக்கை எடுக்காவிட்டால் இன்றைக்கு 60 அங்கத்தினர்கள் அவமதிக்கப்பட்டிருக்கிறார்கள், மற்றொரு முறை பலபேர் அமெதிக்கப்படலாம். இதை அப்படியே விட்டுவிட்டால் பின்னால் இதை மாற்ற முடியாது விதி விதிக்க வேண்டிய நிர்பந்தம் வரும். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் ஒருவரானாலும், பலபேரானாலும், மெஜாரிடி ஆனாலும் மைனாரிடி ஆனாலும், யாரானாலும் சரி, அவர்களுடைய உள்ளத்தைப் புண் படுத்துவது நியாயம் இல்லை, தர்மம் இல்லை என்ற அடிப்படையில் அணுகவேண்டும், இத்தகைய நாகரீகமற்ற செயலைக் கண்டிக்க ஆவன செய்யவேண்டும். இதை மனிதாபிமானத்தோடு பார்க்க வேண்டும், கனவான் செயல் முறையில் செயல் பட வேண்டும், கனவான் அணுகுகிற நெறியில் அணுகவேண்டும் என்ற வகையில் இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று அழுத்த மாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, உண்ணா விரதம் இருப்பது என்பது சட்ட மன்ற நடவடிக்கைகளில் பாதிக் கப் பட்ட ஒன்று என்ற வினாவைத் தாங்கள் கிளப்பினீர்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் என்ற முறையில், எதிர்க் கட்சியைச் சேர்ந்த நாங்கள் உண்ணாவிரதம் இருப்பதை மேற்கொண்டோம். ஆனால் அங்கே வைக்கப் பட்ட போர்ட் இன்னும் அங்கேயே இருக்கிறது. அந்த போர்டாலே எழுதப் பட்டிருப்பது சபை அங்கத்தினர்களை வேண்டுமென்றே புண் படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு, யாரோ ஒரு அதிகாரி அல்லது அமைச்சரவையின் பரிவைப் பெற வேண்டுமென்று யாரோ ஒரு அதிகாரி . . . .

**கனம் சபாநாயகர்:** நான்-அபிஷேலும் செய்திருக்கலாம் அல் லவா?

**திரு. இராம. அரங்கண்ணல்:** அங்கே உபயோகப் படுத்தப் பட்ட பொருள்கள் சர்க்காருக்குச் சொந்தமான பொருள்கள். இதை வேறு யாராவது செய்திருந்தால், சட்டத்தையும் ஒழுங்கை யும் நிலைநாட்டும் போலீஸ் இலாகா போர்டை அகற்ற முயற்சி செய்திருப்பார்கள். அதிலே உள்ள அறிவுரை உறுப்பினர்களை அவமானப்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது. இது அங்கத் தினர்கள் உரிமையைப் பாதிக்கிறது என்ற வகையில் இந்தப் பிரச் சினையை உரிமைக் கமிட்டிக்கு விடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[22nd October 1964

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நேற்றைய தினம் உண்ணா நோன்பு மேற்கொண்ட எதிர் கட்சி அங்கத்தினர்களுக்கு முன்பாக வைக்கப் பட்ட பலகையில் பொறிக்கப் பட்டிருந்த வாசகங்களால், மன்ற அங்கத்தினர்கள் உரிமை பாதிக்கப் பட்டிருக்கிறது என்ற பிரச்னையில் என் கருத்துக்களை வைக்க விரும்புகிறேன். அந்தப் பலகையில் எழுதப் பட்டுள்ள நீதி வாக்கியங்கள் வேறு காலத்தில் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருக்கலாம், ஆனால் நேற்று ஏற்பட்ட சூழ்நிலையில், உறுப்பினர்களை அவமதித்த செயலாகும். நீதி வாக்கியத்தைத் தாங்கிய பலகையை க்யூவரிசையில் நிற்கும் மக்களுக்கு முன்னால் வைத்திருந்தால் என்ன கதியாகி இருக்கும் என்பதைச் சர்க்கார் உணர்ந்திருக்க மாட்டார்கள். யார் செய்திருந்த போதிலும் அது மிக்க வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. பிரான்சில் பர்கண்டியில் பசி என்று அழுத மக்களை புல்லைச் சாப்பிடுங்கள் என்று . . . .

கனம் சபாநாயகர்: அது இருக்கட்டும், எப்படி உரிமைப் பிரச்சினை என்பதைக் கனம் அங்கத்தினர் சொல்ல வேண்டும்.

திரு. மு. கருணாநிதி: எங்களை மட்டும் அல்ல, மன்ற அங்கத்தினர்கள் அத்தனை பேர்களையும் அவமதிப்பதாக இருக்கிற காரணத்தினால், இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று கோருகிறேன். கனம் அரங்கண்ணல் குறிப்பிட்டது போல, இந்தப் பலகை போலீசாரால் அகற்றப் படாததால்--சர்க்காரை தாக்கி எழுதப் பட்டிருந்தால் அகற்றப் பட்டிருக்கும்--இது சர்க்காரைச் சேர்ந்தவர்களே செய்திருப்பார்களோ என்ற ஐயம் எழுகிறது. ஆகவே இதை ஒரு உரிமைப் பிரச்னையாகக் கருதவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: One more point, Sir. தாங்கள் உண்ணாவிரதம் இருப்பது பார்லிமெண்டரியா என்று கேட்டீர்கள்.

நாங்கள் வந்தது சட்டசபை கட்டடத்திற்கு. இங்கு வந்த பிறகு சட்டத்திற்குப் புறம்பான காரியம் செய்தால், அப்பொழுது நடவடிக்கை எடுக்க வேண்டியது சபாநாயகர் அவர்களுடைய பொறுப்பு. நாங்கள் சபையை நோக்கி வருகிறோம். அப்படி வருகிறபோது, இம்மாதிரி ஒரு போர்ட் வைக்கப்படுவதும் அதைப் போலீசார் அகற்றாமல் இருப்பதும் முறையா?

MR. SPEAKER: Now the hon. Member has given up his case. I want to knew whether it is a legitimate legislative duty of a member. If there is any impediment or obstruction to the hon. Member coming to the Assembly, I am responsible for removing it.



22nd October 1964]

திரு. மி. கலியாணசுந்தரம்: நாங்கள் எந்த நோக்கத்தோடு வந்தாலும், இந்த சபைக் கட்டடத்தை நோக்கி வந்துக் கொண்டிருந்தோம். அப்படி வரும்போது எந்த இடையூறும் வராமல் பாதுகாப்பது அவசியம். இம்மாதிரி அவமானம் செய்வது சரியா? இதற்கு முன்பு கனம் முதல் அமைச்சர் 'இது சரியில்லை இதைக் கைவிட்டால் நலமாக இருக்கும் என்று புத்திமதி கூறினார்கள். தாங்களும் அம்மாதிரியே புத்தி மதி கூறினீர்கள். ஆனால் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இருந்த போதிலும் எவ்வளவோ முறையாக, அமைதியாக நடந்துகொண்டு இருக்கிறோம். அதற்காகப் பாராட்டா விட்டாலும் இந்த முறையில் அவமானப் படுத்துவது, அவமானப்படுத்த விடுவது சரியா? என்பதை விவாதிக்க வேண்டும் என்பதுதான் முக்கிய நோக்கம்.

* கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே இந்தப் பலகை விஷயம் எனக்குத் தெரியாது. நான் அதைப் பார்க்கவில்லை. ஊரில் இல்லை. ஆனால் ரொம்ப சுருக்கமாகக் கூறலாம் என்றால் நான் தங்கள் முன்பு தெரிவிப்பது, there is no privilege and there can be no breach of privilege. உரிமை இருந்தால்தான், உரிமை பாதிக்கப்பட்டது என்ற பிரச்சினை வரும். தாங்களே கூறியதுபோல சபை உறுப்பினர்களுக்குப் பல உரிமைகள் உண்டு. அவர்கள் தங்களுடைய கடமையையும் பொறுப்பையும் செலுத்துவதற்கு உரிமைகள் உண்டு. ஆனால் உண்ணாவிரதத்தை உரிமை என்று ஏற்றுக் கொள்ள முடியாது. அன்பார்லமெண்டரி இல்லை என்றால் மட்டும் போதாது. அன்பார்லமெண்டரி இல்லையென்றாலும், பார்லமெண்டரி என்று இருக்க வேண்டும். உரிமை என்று இல்லாதபொழுது உரிமைப் பாதுகாப்பு என்பதும் இல்லை. உண்ணாவிரதம் பற்றி நான் குறை கூற இல்லை. தவறு என்று சொல்லவில்லை. ஆனால் அவர்கள் செய்த முறை சரிதானா என்று பார்க்க வேண்டும். இங்கே சட்ட மன்றம் நடக்கிறது. கேள்வி நேரம் மிக முக்கியமானது என்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். இங்கே சபை நடக்கிறது. எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் இங்கே இல்லாமல் வேறு வேலையில் ஈடுபட்டார்கள் என்பதில் உரிமைப் பிரச்னை வரவில்லை. பலகையைப் பொறுத்த வரையில், யார் அங்கே பலகையை வைத்தார்கள் என்பது தெரியாது. பலகை வைத்ததிலே பிரமாதம் இல்லை. உரிமை இல்லை என்று சொன்னேன். பலகை வைத்தவர் யார் என்பதை ஆராய்ந்து, விசாரணை செய்து கண்டு பிடிக்கவும் முடியாது. அப்படிக் கண்டுபிடிக்க வேண்டும் என்றால், அப்படி ஆராயவேண்டும் என்றால், ஆராய வேண்டிய நிமித்தம் இல்லை, அவசியம் இல்லை. It is not worthwhile என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: I find there is no privilege involved *prima facie*. So there is no need to place this before the Committee of Privileges.

## IV. Calling attention to restrictions on movement of rice.

**திரு. கரு. சீமைச்சாமி:** மாவட்ட வழங்கல் அதிகாரிகளின் அனுமதியுடன் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றதற்கு லாரிகள் மூலம் அரிசி கொண்டு வருவதைச் சோதனையிடுவதன் காரணமாக வணிகர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்படும் இடர்ப்பாடுகள் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் உணவு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகின்றேன்.

* The Hon. Sri NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Mr. Speaker, Sir, there were complaints from Madurai and Ramanathapuram districts in the first week of September 1964, that the lorries carrying rice or paddy are being intercepted by the Civil Supplies Officials in the districts of South Arcot, Thanjavur and Tiruchirappalli where the movements originated. It is ascertained from the District Officers that the movements during August and September had to be checked in order to see that the stocks had been declared as per the provisions of the Madras Paddy and Rice (Declaration and Requisition of Stocks) Order, 1964. Wherever, circumstances warranted the stocks were either requisitioned or seized. The movement of rice and paddy was, regulated by the Collector of Thanjavur under the provisions of the above said order in order to see that the requirements of the general public of that district were met with. Wherever undeclared stocks were moved they were requisitioned and distributed to the general public. The authorisations were issued by the Collector, Ramanathapuram, to show that the bearers were bona-fide millers and did not entitle them to purchase stocks in violation of the Price Control Order and the Requisitioning Order. This position has continued in Thanjavur district till the beginning of kuruvai harvest. Intensive procurement by the Collectors is in progress in Thanjavur, Tiruchirappalli districts now. Movements from these two districts are regulated by the Collectors concerned with a view to maintaining suppplies locally and to other districts.

## V. STATEMENT *re.* CONCESSION SEASON TICKETS IN STATE TRANSPORT BUSES.

* The Hon. Sri R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I wish to make the following statement :

The scheme of nationalisation of bus transport was first implemented in this State in October 1947 and by June, 1948, the entire bus service in the Madras City was nationalised. The fares then fixed remained unchanged till 1—4—1964 except for a mere conversion of the fares into decimal coinage in 1957. The cost of operation of buses had been increasing steadily owing to the increase in cost of fuel and spare parts, levy of taxes, grant of benefits to workers, etc. A revision of the fare structure became inevitable. After careful consideration, the Government revised the fare structure of the Madras State Transport Department with effect from 1—4—1964.





Representations have been received by the Government for issue of concession tickets to students for travel in the State Transport buses in the City of Madras. The Government have examined the representations. With a view to provide relief to the students travelling long distances in the State Transport buses in the City, the Government have decided to issue monthly season tickets to the students at a flat rate of Rs. 10 per ticket. The students of the schools recognised by the Director of Public Instruction, Colleges regularly affiliated to the Madras University and technical institutions run by the Department of Technical Education will be eligible to get the season ticket. The season ticket will cover all routes in the city for one up and one down trip daily. Orders for the issue of season tickets will be issued shortly.

## VI. GOVERNMENT BILLS.

### (1) The Madras Appropriation (No. 6) Bill, 1964 (L.A. Bill No. 42 of 1964).

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

"That the Madras Appropriation (No. 6) Bill, 1964 (L.A. Bill No. 42 of 1964) be taken into consideration."

Mr. SPEAKER : The question is—

"That the Madras Appropriation (No. 6) Bill, 1964 (L.A. Bill No. 42 of 1964) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

The Schedule was put and carried.

Clause 1, the Enacting Formula and the long Title were put and carried.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

"That the Madras Appropriation (No. 6) Bill, 1964 (L.A. Bill No. 42 of 1964) be passed.

Mr. SPEAKER : The question is—

"That the Madras Appropriation (No. 6) Bill, 1964 (L. A. Bill No. 42 of 1964) be passed.

The motion was put and carried and the Bill was passed.

### (2) The Madras Appropriation (No. 7) Bill, 1964 (L.A. Bill No. 43 of 1964).

The Hon. Sri. M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

"That the Madras Appropriation (No. 7) Bill, 1964 (L.A. Bill No. 43 of 1964) be taken into consideration."

[22nd October 1964

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, அரசாங்க ஊழியர்களுக்குப் பஞ்சப்படி உயர்த்தப்பட்டிருப்பதும், கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளமும் பஞ்சப்படியும் உயர்த்தப்பட்டிருப்பதும் வரவேற்கத்தகுந்தவை என்று ஆரம்பத்திலேயே நாங்கள் பேசியிருக்கிறோம்; இந்தச் சபையும் ஆதரித்து இருக்கிறது.

இன்னும் ஒரு விஷயத்தை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். கிராம ஊழியர்களுக்கு இந்தச் சம்பளம், பஞ்சப்படி உயர்த்தப்பட்டிருப்பதோடு அவர்கள் பஞ்சாயத்து வேலை செய்வதற்குப் பஞ்சாயத்து அலவன்ஸ் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருமா, அது இவற்றோடு இணைக்கப் பட்டுவிட்டதா என்ற விவரத்தைத் தெரிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதே சமயத்தில், கிராம ஊழியர்களுக்குச் சில கஷ்டங்கள் இருக்கின்றன. பஞ்சாயத்துக்களின் வரியை வசூலிக்கின்றபோது ஏற்பட்டிருக்கக்கூடிய கஷ்டங்கள் என்ன என்பதை இரண்டு வருஷ அனுபவத்தை வைத்துப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். பஞ்சாயத்து விதிக்கக்கூடிய வரிகளைக் கிராம உத்தியோகஸ்தர்கள், கிராம மணியக்காரர்கள் வசூலிக்க வேண்டும் என்று இருக்கிறது. பெரும்பாலான கிராமங்களில் வீட்டு வரி வசூலிக்கப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி மணியக்காரர்கள் 'ஸஸ்பென்ஷனிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள் ஏற்கனவே நில வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த வரிகளையெல்லாம் வசூலிக்கின்றபோது, ரெவினியூ இலாகாவினரும், கிராம உத்தியோகஸ்தர்களும்தான் மக்களுடைய கோபத்திற்கு ஆளாக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் வரியை விதித்துவிட்டு, வசூலிக்கும் பொறுப்பை கிராம அதிகாரிகளுக்குக் கொடுத்துவிட்டு, அவர்கள் தப்பித்துக்கொள்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவர்களும், மற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்களும் சேர்ந்து ஒத்துழைத்துத்தான் வரி வசூலிக்க வேண்டும். ஆனால் இன்றைய தினம் பஞ்சாயத்துத் தலைவர்கள் வரியை விதித்து தாசில்தாருக்கு அனுப்பிவிடுகிறார்கள். தாசில்தார் கிராம உத்தியோகஸ்தர்களின் மூலம் இந்த வரியை வசூலிக்கிறார்கள். சரியாக வசூல் செய்யாத கிராம உத்தியோகஸ்தர்கள் சஸ்பெண்டு செய்யப்படுகிறார்கள். இன்றையதினம் குறிப்பாக வீட்டு வரி போடுகிறார்கள். இன்னும் மற்ற பல வரிகளைப் போடுகிறார்கள். ஆனால் பஞ்சாயத்து வேலைகளைச் சரியாகச் செய்வதில்லை. ஜனங்களிடத்தில் வரி வசூலிக்கப் போனால் ஏன் வீட்டு வரி கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். "வீட்டு வரி கொடுங்கள். அப்படி கொடுப்பதனால் இன்ன இன்ன நல்ல அம்சங்கள் இருக்கின்றன. இன்ன இன்ன வசதிகளை நம்மால் செய்து கொடுக்க முடியும். நாம் இவ்வளவு தொகை வசூல் செய்தால் அரசாங்கம் இவ்வளவுதொகை தரும்" என்பதாக எல்லாம் பஞ்சாயத்துத் தலைவர்கள்



22nd October 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

மக்களிடத்தில் சொல்லி கிராம உத்தியோகஸ்தர்களோடு சேர்ந்து வேலை செய்தால் பாக்கி இல்லாமல் வரிப்பணத்தை வாங்க முடியும். ஜனங்களும் மன திருப்தியோடு கொடுப்பார்கள். பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் ஜனங்களுக்கு உடனடியாக நல்ல பல வசதிகளைச் செய்து கொடுக்கக் கூடிய பொறுப்பு ஏற்படும். அப்படி இல்லாத காரணத்தினால் நூற்றுக்கணக்கான கிராமங்களில் சரியான முறையில் வேலைகள் நடைபெறவில்லை. ஆகவே அரசாங்க உத்தியோகஸ்தர்களோடுகூட பஞ்சாயத்துத் தலைவர்களும் சேர்ந்து ஒத்துழைக்கும்படியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நாம் இப்போது பஞ்சப்படி, சம்பளம் ஆகியவற்றைத்தான் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு கூட்டிக் கொடுக்க முன் வந்தோம். ஏற்கனவே அவர்கள் இதர வேறு வேலையில் ஈடுபடுவதற்காக ஏதாவது தனி அலவன்சு பெற்று வந்தால் அது இனியும் தொடர்ந்து தனியாக அவர்களுக்குக் கிடைக்கும்.

மற்றபடி கிராம அதிகாரிகளுக்கு இருக்கிற துயரங்களை கனம் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு உள்ள குறைகளை எல்லாம் அரசாங்கம் அவ்வப்போது பரிசீலனை செய்து வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது.

MR. SPEAKER : The question is—

"That the Madras Appropriation (No. 7) Bill, 1964 (L.A. Bill No. 43 of 1964) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

The Schedule was put and carried.

Clause 1, Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI. M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Appropriation (No. 7) Bill, 1964 (L.A. Bill No. 43 of 1964) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

## VII. MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY AND MOTION DISAPPROVING THE FOOD POLICY OF THE MINISTRY.

**திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சபாநாயகர் அவர்களே, உயர் திரு பக்தவத்சலம் அவர்களை முதல் அமைச்சராகக் கொண்ட அமைச்சரவை மீது இந்தச் சட்ட மன்றம் நம்பிக்கை இன்மையைத் தெரிவிக்கிறது என்கிற என்னுடைய தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

[22nd October 1964

"That this House expresses its want of confidence in the Council of Ministers.'

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** நான் வழிமொழிகின்றேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, நான் என்னுடைய தீர்மானத்தைப் பிரேரிக்கிறேன். அதன் விவரமாவது:—

கீழ்க்கண்ட விளைவுகளுக்குக் காரணமான உணவு நிலைச் சீர்கேடு சம்பந்தமாக அமைச்சரவையின் கொள்கையை இச்சபை ஒப்பவில்லை:—

(அ) வாழ்வின் இன்றியமையாப் பொருள்கள் அனைத்தின் விலைகளும் பெருமளவில் ஏற்றங்கண்டுள்ளன;

(ஆ) பாங்கியிலிருந்து பெறும் சட்டப்படியான பணத்தைக் கொண்டும் சட்டப்புறம்பான கறுப்புப் பணத்தைக் கொண்டும் மொத்த வியாபாரிகள் பொருள்களைப் பதுக்கி வைத்தலும், கள்ளச் சந்தையில் விற்பனை செய்தலும்;

(இ) இதற்கு முன் கண்டிராத அளவில் லட்சக்கணக்கான மக்கள் துயர் எய்தும் நிலையில், நாளும் பயன்படுத்தும் உணவு தானியங்கள், மற்ற இன்றியமையாப் பொருள்கள் ஆகியவற்றில் அறிந்தே மனிதன் ஏற்படுத்திய பற்றாக்குறை

**திரு. க. ர. நல்லசிவம்:** நான் இதை ஆமோதிக்கிறேன்.

MR. SPEAKER : To-day seven hon. Members from the Opposition Benches and six hon. Members from the Government Benches will speak on the Motion.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு அதிக உறுப்பினர்கள் முன் வந்திருப்பதாகத் தாங்கள் கொடுத்த விவரங்களில் இருந்து தெரிகிறது. திரு. மதியழகன் அவர்கள் முன்மொழிந்து நீண்ட நேரம் பேசுவதற்கு இருக்கிறார்கள். இந்தச் சபையில் முன்பு ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த கனம் பிரகாசம் அவர்களுக்கு அப்போது 5 மணி நேரம் கொடுத்தார்கள். அப்புறம் 1958-இல் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த திரு. கலியாணசுந்தரம் அவர்களுக்கு 2 மணி நேரம் கொடுக்கப்பட்டது. திரு. மதியழகன் அவர்களும் அதிக நேரம் பேச வேண்டியிருப்பதனால் சபை கூடுகிற நேரத்தை அதிகப்படுத்த வேண்டும். வேண்டுமானால் இரவு சபை கூடலாம். எப்படியாவது அதிக நேரம் எடுத்துக்கொள்ள வகை செய்வதன் மூலம் அனைவருக்கும் பேச சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** தீர்மானத்தைப் பிரேரிக்கின்றவருடைய நேரத்தைக் கட்டுப்படுத்தாமல் இருந்தது சம்பிரதாயம். அந்தமாதிரி விடுவது தான் நல்லது.



22nd October 1964]

MR. SPEAKER : Now I am not worried about fixing a time limit to the speech of the hon. Member, Sri Mathialagan, or allowing him to speak as long as he wants. But the point is I cannot call other hon. Members to speak.

**திரு. சா. கணேசன்:** அப்படிப்பட்ட நிலை இருக்குமானால் நேரத்தையும், நாட்களையும் கூட்டி வைப்பதுதான் நியாயம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : According to the decision of the Business Advisory Committee, we have already allotted two days for it and on the third day the Hon. Chief Minister will reply. So, I am at the disposal of the hon. Members now.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** அப்படியானால் திரு. மதியழகன் பேசிக்கொண்டே போகட்டும். பிஸினஸ் அட்வைசரி கமிட்டி இன்று கூட இருக்கிறது. அங்கே அதிக நேரம் வேண்டுமென்றால் இரவு கூடுவதைப் பற்றியும் கலந்து பேசி முடிவு செய்துகொள்ளலாம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இரவு பத்து மணிக்கு மேல் கூடுவது என்றால் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அநேகம் உறுப்பினர்களுக்கு வசதியாக இருக்காது. நான் கூறுவது என்னவென்றால் 24-ஆம் தேதி நான்-அபிஷியல் டே. அந்த நாளிலும் 3 மணி நேரம் எடுத்துக் கொள்ளலாம். எனக்கு 1½ மணி நேரம் கொடுத்தால் போதும்.

SRI K. A. MATHIALAGAN : We need not have a Non-Official Day.

MR. SPEAKER : Assuming that three days are allotted for it, the hon. Member should also restrict his speech without the intervention of the Chair.

SRI K. A. MATHIALAGAN : We can have an afternoon session or night session so that more time can be given to hon. Members.

MR. SPEAKER : I do not think, that apart from three days, we should also have a sitting in the night. For want of time, I would suggest to hon. Members on both sides to devote their time to salient points and not to repeat the points already stated by the previous speakers so that they can cover all the vital points. It is better that we get more light than heat. That is my humble suggestion.

• **திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் சபாநாயகர் அவர்களே, 10-30 a.m.
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இன்று ஆட்சி பீடத்தில் இருக்கும் அமைச்சரவையின் மீது இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நான் முன்மொழிய முன் வந்ததற்குக் காரணமும், என்னுடைய கட்சி இந்தத் தீர்மானத்தை இந்த மன்றத்தில் முன்னாலே இன்றைக்கு கொண்டுவந்ததற்கான காரணமும் நான் விளக்கத் தேவை இல்லாத அளவுக்கு அனைவரும்

[திரு. கே. ஏ. மதியழகன்] [22nd October 1964

அறிந்த ஒன்றாக இருக்கிறது என்பதை நான் முதலிலே சொல்லிக் கொள்வேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

மக்களிடத்திலே வாக்குப் பெற்று வந்த நாங்கள், கோடிக்கணக்கான மக்களிடத்தில் அவர்கள் வாக்குச் சாவடிக்குப் போவதற்கு முன்னாலே அவர்களிடம் என்ன சொல்லி வந்தோமோ அந்த வாக்குறுதியை நிறைவேற்றுகிற ஒரு புனிதமான கடமையாகத்தான் நான் இந்தத் தீர்மானத்தை, கனம் பக்தவத்சலம் அவர்களுடைய மந்திரிசபை மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன். இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததற்காக நாங்கள் வருந்தவோ, இந்தத் தீர்மானத்தை இன்னின்ன காரணங்களுக்காகக் கொண்டுவந்தோம் என்று சமாதானம் சொல்லவேண்டிய நிலைமையிலோ நாங்கள் இல்லை. இந்த மாநிலத்திலே இருக்கக் கூடிய 3½ கோடி மக்கள் ஆட்சி பீடத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்களோடு மற்ற அமைச்சர்களையும் அமர்த்தினார்கள். அந்தக் கோடிக் கணக்கான மக்களுடைய மனக் கொதிப்பை, மனக் குமுறலை எடுத்துச் சொல்லும் வகையில் அவர்களுடைய பிரதிபலிப்பாகத்தான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மன்றத்திலே இருந்து கொண்டிருக்கிறது. லட்சம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற சட்ட மன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுடைய சந்நிதானத்திலே நின்று சலுகை கேட்க வேண்டுமென்ற நிலைமை இருக்கும் வரையிலே சட்ட மன்றங்கள் மிகப் பெருமைப்படத் தக்க பணியை ஆற்ற முடியாது. ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினரும் இன்றைக்கு மந்திரிமார்களிடத்திலே சலுகைகள் கேட்கிறவர்கள் அல்ல. லட்சக் கணக்கான வாக்காளர்கள் எங்களைச் சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பியதன் காரணமாக, அவர்களுக்கு விசுவாசமாக நடந்து கொள்கிறோம் என்ற முறையில், நாங்கள் ஆளும் கட்சி கூறுகின்ற அத்தனைக்கும் பின்பாட்டுப் பாடும் நிலைமையில் இல்லாமல், மக்களுடைய மனக் குமுறலை, அவர்களது அதிருப்தியை எடுத்துச் சொல்வதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். தனிப்பட்ட முறையில் முதலமைச்சர் அவர்கள்மீது அல்லது மற்ற அமைச்சர்கள் பேரிலோ எந்த விரோதமோ அல்லது மனக் கிலேசமோ, மாச்சரியமோ எங்களில் யாருக்கும் இல்லை. தனிப்பட்ட முறையிலே எங்களுக்கு அவர்களிடத்திலே அன்பு இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு அளித்த பொறுப்பைச் சரிவர ஏற்று நடத்துவதிலே தவறிவிட்டார்கள் என்ற கருத்திலேதான் இந்தத் தீர்மானம் வருகிறது என்பதைப் பணிவுடனும், தெளிவுடனும், மிகுந்த அடக்கத்துடனும் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய கனம் சபாநாயகர் அவர்கள் குறிப்பிட்டது போல் இந்த மாமன்றத்திலே இப்போது துவங்குகிற விவாதத்தில் உண்மையிலேயே வெப்பம் குறைவாகவும், ஒளி அதிகமாகவும் இருக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய பேராவல். அந்த ஒத்துழைப்பை இந்த மன்றம் வழங்கவேண்டும். உண்மையில் பார்ப்போமானால் இந்த மன்றத்திற்கு வெளியிலே நீண்ட நெடும் க்யூ வரிசையிலே பட்டினியால் பரிதவித்து நின்றுகொண்டிருக்கும் மக்களுடைய வாழ்க்கை



22nd October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

யிலே ஒளி வருவதற்கு இது உதவியாக இருக்க வேண்டுமென்ற வகையிலே இந்தத் தீர்மானம் இந்த மன்றத்தின் முன்னாலே வருகிறது என்பதைத் தங்களுக்கு அடக்கத்துடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மந்திரிசபையின்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிற நேரத்தில், பத்திரிகைக்காரர்கள் எழுதுகிறார்கள்—'இவர்கள் 50 பேர் இருக்கிறார்கள்; மற்ற எதிர்க் கட்சியினரையும் சேர்த்துக்கொண்டால் இன்னும் சில பேர்தான் தேறும்' என்று புள்ளி விவரங்களைக் கொடுக்கிறார்கள். நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொடுப்பது ஜனநாயகத்திலே அளிக்கப்பட்டிருக்கிற உரிமை. மந்திரி சபையைத் தோற்கடிக்க வேண்டுமென்றால், பதவியிலிருந்து விலக்க வேண்டுமென்றால் நேற்றைக்கு வந்த துணை மானியக் கோரிக்கையிலேகூட மந்திரிசபையைத் தோற்கடிக்க முடியும். நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவருவது நமது சட்ட மன்ற விதிகளின்படி கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு உரிமை. மந்திரி சபை கவிழ வேண்டுமென்றால் அதற்கு இந்த மன்றத்தின் முன்னாலே வந்து நிற்க வேண்டிய அவசியமில்லை, நாட்டு மக்கள் அதற்கான முறையை அறிவார்கள். இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இன்றையதினம் கொண்டுவரவேண்டிய நிர்ப்பந்தத்தை ஆட்சிபீடத்தில் இருப்பவர்கள்தான் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று நான் முதலிலே சொல்லிக்கொள்வேன்.

நான் இந்த விவாதத்தில் இந்தச் சபையின் விலைமதிக்க முடியாத நேரத்தை எடுத்துக்கொள்ளாமல், மிக முக்கியமான சில கருத்துக்களை ஆதாரங்களோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கிற நெருக்கடியின் தன்மைக்கு இரண்டு உதாரணங்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். நான் எடுத்துச் சொல்லக்கூடிய விவரங்கள் எங்கள் கட்சிக்காரர்களுடைய வாசகங்களாக இருந்தால் அவர்கள் அதற்கு மரியாதை செலுத்துவதில்லை. இவர்கள் என்ன? எதிர்க்கட்சிக்காரர்கள் இவர்கள், இப்படித்தான் கூறுவார்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். இன்றைக்கு உள்ள உணவு நெருக்கடியைப் பொறுத்த அளவில் இந்தச் சர்க்கார் விவசாயத் துறையில் எப்படித் தவறிவிட்டது; விலைவாசி உயர்வைத் தடுக்க வழி வகுப்பதிலே எவ்வாறு தவறிவிட்டது என்பது பற்றிய விவரங்களை மட்டும் முதலிலே எடுத்துரைத்து மேலே செல்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மான விவாதம் முடிந்த பிறகு டெல்லியிலே நடைபெற இருக்கிற நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் கலந்துகொள்ள இருக்கிறார்கள். அந்த நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்திற்குப் ப்ளானிங் கமிஷன் ஒரு நோட் அனுப்பி இருக்கிறது. அந்தக் குறிப்பிலே எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாங்கள் நம்பிக்கை இல்லாத தீர்மானத்திலே பேசுவதற்கு உரிய வாதங்கள் மிகத் தெளிவாக இருக்கிறது. அது எங்களுக்கு மிகவும் துணை புரிகிறது. 'விவசாய உற்பத்தி பெருகவில்லை; வாழ்க்கைப் புள்ளி, விலைவாசி உயர்ந்திருக்கிறது' என்பதைப் பற்றி அதிலே குறிப்பிட்டிருக்கிற வாசகங்களை மட்டும் இந்த மன்றத்தின் முன்னாலே நான் படிக்கிறேன்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [22nd October 1964

The performance in the agricultural sector has been woefully short of expectation.

This has been largely responsible for limiting the increase in consumption standards and for abnormal increase in prices.

Between March 1961 and September 1964 the rise in the price index of food articles was 44.4 per cent, while in manufactured articles it was 5.9 per cent, industrial raw materials 7.0 per cent and general price index 24 per cent.

Large shift in price of cereals, pulses and other essential consumer articles has led to serious concern over the price situation. '

என்று நாளை மறுநாள் நடக்க இருக்கிற நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்திற்குக் குறிப்பு அனுப்பியவர்கள் சொல்கிறார்கள். 44.4% உணவு தானியங்களின் விலை உயர்ந்திருக்கிறது; மொத்த விலை 24.5% உயர்ந்திருக்கிறது இந்த மூன்று வருஷங்களிலே. இதற்குக் காரணம் இந்தச் சர்க்கார் விவசாயத் துறையிலே தவறி இருக்கிறது என்று அந்தக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள்.

' The performance in the agricultural sector has been woefully short of expectation. '

என்று ப்ளானிங் கமிஷன்காரர்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். விவசாயத்தைப் பொறுத்து இந்த மாநிலத்திலே தஞ்சை மாவட்டந்தான் மிகப் பெரிய மாவட்டம். இன்றைக்கு கூட அங்கிருந்துதான் ரயில்களில் தானியம் வரவேண்டுமென்பதற்காக நம்முடைய மந்திரிமார்கள் நெருக்கடியில் விமானத்தில் பறந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் அமுலாக்கப்படும் தீவிர சாகுபடித் திட்டத்தைப் பற்றி மிகப் பெருமையோடு எடுத்துச் சொல்லப்பட்டது. கொஞ்ச நாளைக்கு முன்னால் வந்த அமெரிக்க நிபுணர்கள் அதைப் பற்றி ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அது தஞ்சை மாவட்டத்திலே சாகுபடித் திட்டம் எப்படி அமல் நடத்தப்படுகிறது என்பதைக் காட்டுகிறது. நில உச்ச வரம்புச் சட்டத்தைச் செய்தார்கள்; நிலச் சீர்திருத்தச் சட்டத்தைச் செய்தார்கள். அங்குள்ள நிலைமையைப் பற்றி அவர்கள் சொல்லிய சில வாசகங்களைக் கூறிவிட்டு மேலே செல்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : Is the hon. Member reading from a newspaper report ?

SRI. K. A. MATHIALAGAN : I am reading only an extract.

A team of leading U. S. Team experts who toured Tanjore district had remarked as follows :—

" The Land Ceiling Act is only a paper proposition. Only a great optimist would say that the district has a bright future unless the land system is completely overhauled.

The tenurial system in Tanjore district is one of the Nation's worst. There is a vast army of tenants and agricultural labourers. Personal cultivation is not popular in this district. The owners,



22nd October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

big and small, are ' gentle farmers '. Rentals range from 60 to 65 per cent of the crop although the Fair Rent Act of 1956 provides for 40 per cent of the normal gross produce to be paid as rent. Officials behave as if the Act was not meant to be enforced and in the circumstances the landlords see no case for being on the defensive. Faulty land reform laws and the negative attitude of Government officials at State, district, block or village levels are responsible for the unsatisfactory tenurial conditions in the package programme districts. Such tenure conditions are obviously not conducive to agricultural production.

என்று யு.எஸ். டீம் " இது வெறும் பேப்பர் ப்ராப்பொஸிஷன்—காகிதத் திட்டம்" என்று சொல்லக்கூடிய அளவுக்குத்தான் நடந்து கொண்டிருக்கிறது. அமைச்சர்கள் இதைப்பற்றி இங்கே சொல்லுகின்ற புள்ளிவிவரங்களை எல்லாம் பார்த்தால், நாங்கள் அதைச் செய்து விட்டோம், இதைச் செய்துவிட்டோம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள், ஆனால் உண்மை நிலை என்ன என்பதைப் பார்த்து நாம் மிகவும் வருத்தப்படவேண்டியவர்களாக இருக்கிறோம். அமைச்சர்கள் நாட்டில் வெளியே இருக்கின்ற நிலைமையை ஒன்றும் பாராமல் புள்ளிவிவரங்களை கொடுக்கிறார்கள். புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? சாப்பிடவா முடியும்? மக்கள் வெளியில் எந்த நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்? கள்ளப்பணத்தை எடுத்துக் கொண்டால், நாட்டில் கள்ளப்பணம் ஒன்றும் இல்லை என்று ஆரம்பத்தில் சொன்னார்கள். சேலத்தில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் டாக்டர் நடராஜன் அவர்கள் நாட்டில் 3,000 கோடி கள்ளப்பணம் இருக்கிறது என்று பேசிய நேரத்தில் அங்கிருந்த திரு. காமராஜ் அவர்கள் 'ஆம், ஆம்' என்று ஒத்துக்கொண்டு பேசினார்கள். இன்றைக்கு இருக்கின்ற கள்ளச் சந்தைக்காரன், கொள்ளை லாபக்காரன், கள்ள வியாபாரிகள் இவர்கள் எல்லாம் வெளியில் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்களை ஏன் வெளியில்விட்டு வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டால் கோபம் தானே வருகிறது? ஆனால் அதே நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் சொல்வதையும், அவர்கள் பேசுவதையும் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன். வியாபாரிகள் மோசடி செய்கிறார்கள், வியாபாரிகள் ஒத்துழைக்கவில்லை, என்றெல்லாம் முதலமைச்சர் அவர்கள் பேசுவதாக பத்திரிகைகளில் பெரிது பெரிதாக வந்தது. எனக்கு அதைப் பார்த்து சந்தேகம் தான் வந்தது. வியாபாரிகள் ஒத்துழைக்க மறுக்கிறார்கள், மறைத்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தால், சர்வ வல்லமையும் கொண்டிருக்கிற இந்த சர்க்கார், எவ்வளவோ போலீசாரை வைத்துக்கொண்டிருக்கிற சர்க்கார், இவர்களைப் பார்த்து வெட்கப்பட்டிருக்க வேண்டாமா, இந்த அரசாங்கத்தை நடத்துகிற முதலமைச்சர் அவர்கள் வெட்கப்பட்டிருக்க வேண்டாமா? வியாபாரிகள் எல்லாம் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் கடுங்கோபம் வருகிறதே தவிர உண்மையான நிலைமை என்ன, நீங்கள் செய்தது என்ன என்பதைப் பார்க்கவேண்டாமா? இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அரிசிப் பஞ்ச நிலைமைக்கு முழுப் பொறுப்பு திரு. பக்தவத்சலம் அவர்கள்

[திரு. கே. ஏ. மதியழகன்] [22nd October 1964

தலைமையில் நடக்கின்ற இந்த மந்திரிசபையைச் சார்ந்தது. இந்த மந்திரிசபையினுடைய திறமைக்குறைவுதான் இத்தனைக்கும் காரணம் என்பதை நான் இந்த சபையில் ஒளிவு, மறைவின்றி பகிரங்கமாக குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். ஆட்சியாளர்களுடைய நோக்கிலும் சரி, போக்கிலும் சரி மக்களுடைய கஷ்டங்களை தீர்ப்பதற்கு நிச்சயமாக எந்தவிதமான உறுதியும் கடமையுணர்வும் கிடையாது. அமைச்சரவையை எடுத்துக்கொண்டால் அவர்களுக்குள்ளேயே கொள்கை குழப்பம் கொண்டதாக இருக்கிறது. கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கூட்டுறவு துறை மூலம் மிக பிரமாதமாக விநியோகித்துக் கொண்டு வருகிறோம் என்று பெருமிதப்பட்டுக்கொள்கிறார். ஆனால் முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், சில கூட்டுறவு சங்கங்கள் தவறாக நடந்து கொண்டிருக்கின்றன என்று வருத்தப்படுகிறார். இதற்கு என்ன காரணம்? இந்த நிர்வாக இயந்திரத்தில் ஏற்பட்டிருக்கும் ஊழல்கள் புரையோடி விட்டது என்றுதானே எடுத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு காங்கிரஸ் அரும்பெரும் தலைவராக இருக்கக்கூடிய காமராஜ் அவர்கள் ரேஷன் முறையை எடுத்தது தவறு, உணவுத் தட்டுப்பாட்டை சரியாக தீர்க்கவேண்டுமென்றால் ரேஷன் தான் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் இங்குள்ள முதலமைச்சர் அவர்கள் ரேஷனோ கட்டுப்பாடோ தேவையற்றது என்று சொல்லுகிறார்கள். இவற்றில் கருத்து மோதல்கள் இல்லையா? இதில் எந்த கொள்கையை சரியான கொள்கை என்று எடுத்துக்கொள்வது? உணவு தானியக் கடைகளிலே நிற்கும் 'க்யூ' வரிசைப்பற்றி தொழில் அமைச்சருடைய கருத்துக்களைப் பற்றி ஓர் ஆங்கிலப் பத்திரிகை—மெயில் பத்திரிகை என்று கருதுகிறேன்—அப்பத்திரிகை எள்ளிநகையாடுவது போல் எழுதியிருந்ததை அமைச்சர்கள் பார்க்கவில்லையா? மக்கள் உணவுக்காக க்யூவில் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அதை மூன்றரைக் கோடி மக்களை பாதுகாக்க வேண்டிய இந்த அமைச்சரவை இந்தப் பத்திரிகையின் தலையங்கத்தைப் பார்த்து வெட்கப்பட வேண்டாமா? இந்த நிலைமைக்கு விவரம் தெரிந்த அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் ஏன் நடந்து கொள்ளவேண்டும்? அது மட்டுமல்ல, விளம்பர அமைச்சர் அவர்கள், ஜெயில் அமைச்சராக இருந்துவருகிற அமைச்சர் அவருடைய பேச்சில் எல்லோருடைய பேச்சுக்களை விடவும் முதற்பரிசு பெற்றுவிட்டார் (எதிர்க்கட்சி தரப்பிலிருந்து கைதட்டல்) . . . மக்கள் க்யூவில் அரிசிக்காக நிற்கிறார்கள் என்றால், 'சினிமாக் கொட்டகையிலும் மக்கள் க்யூவில் நிற்கவில்லையா. க்யூவில் நிற்பவர்களைப் பார்த்தால் மக்களின் பொருளாதார நிலைமை முன்னேறியிருக்கிறது என்பது தெரியவில்லையா'? என்று கேட்கிறார். இவ்வாறு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் பேசுகிறார்கள். அரசியல் விவேகமாக பேசுகின்றவர்கள் இவ்விதம் பேச முடியுமா? மக்கள் என்ன நினைப்பார்கள்? மக்கள் வெளியில் தங்கள் மனக் கொதிப்பையெல்லாம் கொட்டிக்கொண்டு இருக்கிறார்கள், கொளுத்துகிற வெயிலில் மைல் கணக்கில் க்யூவில் காத்து நிற்கிறார்கள். இரவென்றும் பகலென்றும் பார்க்காமல் கடும் மழையையும் கொடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் தெருவில் படுத்து இருக்கிறார்கள், இதைக்



22nd October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

கேட்பதற்கு ஆள் இல்லை, இவர்களுக்கு சாப்பாடு கொடுப்பதற்குத்தான் முடியவில்லை என்றால், இந்த அமைச்சர்கள் வாயை மூடிக்கொண்டு சும்மாவாவது இருக்கக்கூடாதா? சோறு போடத்தான் வழியில்லை, இதையெல்லாம் ஏன் பேசவேண்டும்? நம்முடைய முதலமைச்சரை எடுத்துக்கொண்டால் மிகவும் பெரிய அனுபவம் உள்ள அமைச்சர், திறமையான அமைச்சர் என்றெல்லாம் அவரது பிறந்தநாள் விழாவில் பட்டீல் போன்ற தலைவர்கள் எல்லாம் பேசினார்கள். 'ஐடியல் அக்ரிகல்சரல் மினிஸ்டர், லட்சிய விவசாய அமைச்சர் என்றெல்லாம் பலர் புகழ்ந்தார்கள். நமது நாட்டுக்கு மட்டுமல்ல, உலக உணவு மகாநாட்டுக்கே இந்தியக் குழுவிற்கு தலைமை வகித்தவர். அவரால் இந்த மாநிலத்திற்கு உணவு கொடுக்க முடியவில்லை, லட்சிய விவசாய அமைச்சரின் ஆட்சியின் லட்சணம் இப்படியா இருப்பது? இப்பேர்ப்பட்ட முதல் அமைச்சர் சொல்லுகிறார், உணவு பற்றாக்குறை கிடையாது. சரி, அதை ஒத்துக்கொள்ளலாம். அதே நேரத்தில் நடைமுறையில் பற்றாக்குறை இருக்கிறது, இது ஏன்? எவ்வளவோ தான்யங்கள் வந்திருக்கிறது, விளைந்தது என்றால், வந்த தான்யங்கள் எல்லாம் எங்கே, எங்கே, எங்கே என்று நாங்கள் கேட்கிறோம், ஆனால் அந்த நெல்மணிகள் எங்கே என்று நீங்கள் வெளியே கேட்கவில்லை என்றாலும், நிச்சயமாக உங்களுடைய மனசாட்சி கேட்கத்தான் செய்யும். வயலில் அறுவடையான நெல் எங்கே போயிற்று? மார்க்கெட்டுக்குப் போகவில்லை, நெல்மணிகள் எல்லாம் ஏழைத் தொழிலாளர்களுக்குப் போய்ச் சேரவில்லை. அந்த மக்கள் நடுத்தெருவில் பரிதாபமாக தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியானால் வந்த தான்யங்கள் எங்கேயோ பதுக்கப்பட்டிருக்கின்றன. வெளியே வரவில்லை, இதைக் கண்டுபிடிப்பதற்கு என்றைக்காவது உருப்படியான நடவடிக்கைகள் எடுத்ததுண்டா, அவ்விதம் நடவடிக்கை எடுத்திருப்பதாக ஏதாவது சொல்ல முடியுமா? இல்லை என்பதைத்தான் வெட்கத்துடன் சொல்லவேண்டும். அதே நேரத்தில் பக்கத்திலுள்ள மாநிலங்களில் நிலைமை என்ன? நம்முடைய அமைச்சர்கள் அடிக்கடி பம்பாய்க்குச் சென்று வருகிறார்கள். அங்கு என்ன நடத்துகிறார்கள், கள்ளப் பதுக்கல்காரர்களை எல்லாம், அநியாயமான விலையில் விற்கும் உணவு தான்ய வியாபாரிகளை எல்லாம் கைது செய்திருக்கிறார்கள். வங்காளத்திலும், ஒரிசாவிலும் கைது செய்துள்ளனர். அதே போன்று நம் மாநிலத்தில் யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? கள்ளச் சந்தைக்காரர்கள் கொள்ளை லாபக்காரர்கள், பதுக்கல்காரர்கள் இங்கு இல்லையா? 1,000 மூட்டை, 2,000 மூட்டை வைத்து பதுக்கல் செய்து, கள்ளச் சந்தையில் விற்றுக்கொண்டிருக்கும் நிலப்பிரபுக்கள் இல்லையா? அவர்களைக் கண்டு என்ன அச்சம்? என்ன செய்து விடுவார்கள் மக்கள் தானே தேர்ந்தெடுத்தார்கள் உங்களை? மக்களை நம்பித் தானே இங்கே வந்தீர்கள்? இன்றைக்கு ஏன் அஞ்சுகிறீர்கள்? ஏன் ஒன்றும் செய்ய வில்லை? யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? ஏதாவது ஒரு உதாரணம் சொல்ல முடியுமா? ஒரு உதாரணம் சொல்லட்டும். யோசித்து யோசித்து சொல்லட்டும்? இலாகாவில் இருக்கிற அத்தனை தஸ்தாவேஜுகளையும் வரவழைத்

[திரு. கே. ஏ. மதியழகன்] [22nd October 1964

துப் பார்த்து விட்டுச் சொல்லட்டும். ஒரிசாவில் பதுக்கிவைத்திருந்தவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வங்காளத்தில் இருக்கும் ரைஸ் மில்காரர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இங்கே யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறாரா? இன்றைக்கு விஜிலன்ஸ் செல் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள் சிவில் சப்ளைஸ் இலாகாவில், இத்தனையையும் ஏற்படுத்தியிருந்தும் யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? மாறாக, சோறு கேட்டவர்கள் மீது; இதைப் பற்றியெல்லாம் வர்ணிக்க பல உறுப்பினர்கள் காத்திருக்கிறார்கள், விலை மதிக்க முடியாத கருத்துக்களை தெரிவிக்க இருக்கிறார்கள். ஆகையால் வர்ணனையில் இறங்காமல் சொல்லுகிறேன், சோறு கேட்டவர்கள் மீது தடியடி நடத்தப்படுகிறது. அரக்கோணத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. மக்கள் வழிப்பறி கொள்ளை நடத்தினார்கள். நல்ல பண்பாட்டுக்குப் பெயர்போன மக்கள் நம் மக்கள். இவ்வளவு பண்பாட்டுக்குப் பெயர்போன மக்களை வழிப் பறிக்குத் தூண்டியது யார்? இந்த அமைச்சர் அவையைத் தவிர அவர்களை வேறு யார் தூண்டினார்கள்? எதற்காக வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட வேண்டும்? அரக்கோணத்தில் பெண்கள் அடித்தார்கள். சிவா என்ற பையனை பெண்கள் அடித்தார்கள். அடக்கத்திற்கும் பண்பாட்டிற்கும் பேர் போன தமிழ் நாட்டு பெண்கள் அரிசி கடையில் வேலை செய்கிற பையனை அடிக்கிற அளவுக்கு நிலைமையை மாற்றியவர்கள் யார்? பில்லூர் என்ற இடத்தில் காந்தப்பன் என்று ஒருவர் இறந்து போனார். இறந்தார் என்று பத்திரிக்கைகள் வர்ணித்தன. ஆனால் அந்தப் படுகொலைக்கு யார் காரணம்? மின்சாரத் திட்ட அணைக்கட்டு வேலை நடக்கும் இடம் அது. அங்கே இருக்கிற கடையிலே அரிசி இல்லை. அந்த இடத்திற்கு ஐ.ஜி. போய் வந்தார்களே. அந்த ரிபோர்ட்டின் விவரம் என்ன? அங்கே கடைகள் பல இருக்கின்றன, 2,000, 3,000 பேர்கள் தொழிலாளர்கள் வேலை செய்யும் இடத்தில் ஒரு கடையிலும் ஒரு நெல் மணி கூட இல்லை. அங்கு அரிசி விநியோகிக்கப்படவில்லை. அதனால் பரிதாபத்துக்குரிய காந்தப்பன் இறந்து போனார். அங்கேயே லக்கி ஸ்டோர் என்று ஒரு ஸ்டோர் இருக்கிறது. திருப்பூர் ஸ்டோர் என்று ஒரு ஸ்டோர் இருக்கிறது. ஒரு வாரமாக, 10 நாட்களாக அங்கே எல்லா இடங்களிலும் அரிசியே கிடையாது. இதைப்பற்றி கனம் அங்கத்தினர் மாதா கவுடர் அவர்கள் எடுத்துச் சொல்லுவார் என்று கருதுகிறேன். தைரியமாக இதை மக்கள் பிரச்னையாக எடுத்துச் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன். உருளைக் கிழங்குகளை இருளர்களிடத்திலிருந்து வாங்கிச் சாப்பிட்டார்கள். கனம் அமைச்சர் தவறு, கனம் உணவு அமைச்சர் தவறு அல்லது வியாபாரிகள் தவறு? ஆத்திரப்பட்ட மக்கள் அரிசி பதுக்கப்பட்டிருக்கிறது என்று போனார்கள். அப்போது காந்தப்பன் பயந்தே செத்து விட்டார். காந்தப்பன் இறந்ததற்கு யார் காரணம்? காரணம் அமைச்சர் இல்லையா? கனம் தொழில் அமைச்சர் சொல்லுகிறார்கள் எங்கு இருக்கிறது அரிசிப் பஞ்சம் என்று. தஞ்சை மாவட்டம், தானியக் களஞ்சியமாக இருக்கிற மாவட்டத்தில் காவிரி பாய்ந்து கொள்ளை விளைச்சல் இருக்கக்கூடிய இடத்தில் கும்பகோணத்தில், மனு,



22nd October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

மாந்தாத காலத்தில் இப்படி அங்கே கூடி நின்றது? துணைச் சபாநாயகர் அவர்களே, நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். கோயம்புத்தூரிலே வருந்தத்தக்க சம்பவம் நடைபெற்றது. எதிர்கட்சித் தலைவர் அவர்களும் மற்ற கட்சித் தலைவர்களும் கொண்டு வந்த கோரிக்கையை மறுத்திருக்கிறார்கள். சர்க்கார் இலாகாவை விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன். துணை கலெக்டர் விசாரிப்பார் என்று சொன்னார். இதைத் தானே அவர் சொன்னார். இந்தக் காரியம் என்ன காரணத்தினால் நடந்தது? உணவுத் தட்டுப்பாட்டினால் ஊர்வலம் போன தலைவன் மீது போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. துப்பாக்கிப் பிரயோகம் பற்றி கொஞ்சம் இருக்கட்டும். கேட்டது என்ன? நீதி விசாரணை வேண்டும். அதிகாரிகள் விசாரிக்கக் கூடாது. நியாயமாக நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டார்கள். இதை ஒத்துக் கொண்டதா அரசாங்கம்? அர்ச்சுனன் படுகொலை செய்யப்பட்டதற்கு யார் காரணம்? என்ன காரணத்தினால் உணவுப் பொருள் கிடைக்கவில்லை என்று கேட்க 200, 300 பேர்கள் வந்திருக்கிறார்கள். தலைவர் வந்திருக்கிறார். நாங்கள் நேராகவும், கழக மாவட்டச் செயலாளர் போன்ற நம்பிக்கைக்குப் பாத்திர மானவர்களைக் கொண்டும் இதுபற்றி விவரம் சேகரித்திருக்கிறோம். அங்கே 1,000 பேர்களும் அல்ல, 2,000 பேர்களும் அல்ல. போய்க்கொண்டிருந்தது ஒரு ஊர்வலம். 200 பேர்கள் வருகிறநேரத்தில், குறிப்பிட்ட சம்பவம், அர்ச்சுனன் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு முன்னால் கொஞ்சதூரத்தில் சீதாராம விலாஸ் என்ற ஹோட்டல் இருக்கிறது. ஹோட்டலுக்கு அருகே ஒரு தானியக் கடை இருக்கிறது, ஏ. ஆர். நாகமாணிக்கம் செட்டியார் கடை என்ற பெயரால் அதைப் பார்த்தவுடன் உணவு தானியம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கேட்க மாட்டார்களா? அப்படிக் கேட்டவர்களைப் பார்த்து இந்த சப்-இன்ஸ்பெக்டர் முத்துசாமி அடித்திருக்கிறார். அடித்தவுடனே, அடிபட்டவர் சார்பில் தலைவரிடத்தில், அர்ச்சுனனிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். அர்ச்சுனன் முன்னாலேயிருந்து பிற்பகுதிக்கு வந்தவுடன் அவர்களிவருக்கும் வாய் வார்த்தை முற்றியிருக்கிறது. அந்த ஊரில் உள்ள பல எம்.எல்.ஏ., எம்.பி.-க்கள், திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார், திரு. பி. எம். ராமகிருஷ்ணன், திருமதி குழந்தை அம்மாள் இவர்கள் வீட்டுக்கெல்லாம் போய் உணவுப் பொருள் கிடைப்பதற்கான வழி செய்யவேண்டும் என்று விண்ணப்பிக்க மக்கள் வரிசையாக வந்தார்கள். அப்போது தான் ஊர்வலத்தை முந்திக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் துப்பாக்கி எடுத்து வந்து, ஊர்வலமாக வருகிற நேரத்தில் சுட்டியிருக்கிறார், படுகொலை நடந்திருக்கிறது. இதை அப்படியே ஒத்துக்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்கு நாங்கள் சொல்லவில்லை. போலீஸ் ஸ்டேஷன் எதற்கு இருக்கிறது? ஒவ்வொரு உயிரையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதற்காக நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டால் அது கூட கிடையாது என்றால் இந்த அரசாங்கத்தை யார் நம்புவார்கள்? உங்கள் மீது மக்களுக்கு என்ன மரியாதை இருக்கும்? நாங்கள் சொன்னது இருக்கட்டும். மெயில் பத்திரிகை எழுதுகிறது—

It is amazing that the hon. Sri M. Bhaktavatsalam is insensitive to public opinion.

என்று. இதற்கு என்ன அர்த்தம்? இன்சென்ஸிட்டிவ்—என்ன அர்த்தம்? உணர்வு மழுங்கியிருக்கிறது, உணர்வு இல்லை வேறு வார்த்தைகளை வெளியில் இருக்கிறவர்கள் சொல்லுவார்கள், நான் சொல்லவில்லை, "மந்திரியின் உணர்வு மரக்கட்டையாக ஆகியிருக்கிறது என்று. நான் அந்த முறையில் இவ்வளவு பெரிய வரைச் சொல்ல விரும்பவில்லை. வக்கீல்கள் சங்கம் போட்டிருக்கிறது கோயம்புத்தூரிலே தீர்மானம். இத்தகைய நிலைமையை ஏற்படுத்தியவர்களை யார் நம்புவார்கள்? ஒவ்வொரு உயிரும் புனிதமானது. அதைக் காப்பாற்ற வேண்டாமா? கேட்டது உணவு, முதல் அமைச்சர் கொடுத்திருப்பது துப்பாக்கி குண்டு. அர்ச்சுனனுடைய குடும்பம் சபித்திருக்காதா? பெண்டு பிள்ளைகள் சபித்திருக்கமாட்டார்களா? அதைப் பற்றி யோசித்துப் பார்த்திருக்கமாட்டார்களா? என்ன செய்திருப்பார்கள்; ஏன் ஏற்பட்டது என்று பரிகாரம் தேடாமல் நீதி விசாரணை கேட்டும் ஒத்துக்கொள்ளாத அளவுக்கு அன்றைக்கு பிரசங்கம் செய்தார்கள். யார் இனிமேல் பாதுகாப்பாக போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக முடியும்? வக்கீல்கள் சங்கமே சொல்லுகிறதே? மற்றவர்கள் சொல்லுகிறார்களே? ஆனால் அமைச்சர் சொல்லுகிறார்கள் சம்பிரதாயப்படி, இத்தனை வது நல் படி செய்கிறேன் என்று சொல்லுகிறார்கள். துப்பாக்கிச் சூடு இருக்கட்டும். அர்ச்சுனன் தவறு அல்லது மற்றவர் தவறு என்று கூடச் சொல்லவில்லை. நீதி மன்ற விசாரணை வேண்டுமென்று கேட்கும்போது அதற்குக்கூட ஒத்துக்கொள்ளவில்லையென்றால் நியாயமான நீதி நெறி நடக்கிறது என்று யார் நம்புவார்கள்? யார் ஒத்துக்கொள்வார்கள்? யார் இந்த ஆட்சி மீது நம்பிக்கை கொள்ள முடியும் என்று கேட்கிறேன்? இங்கே 50 பேர்கள் என்று நீங்கள் தவறாகக் கணக்குப் போடாதீர்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன் வேறு நிலைமை. இன்றைக்கு இருக்கிற மக்களின் தார்மீக ஆதரவை இழந்து விட்டீர்கள். இன்றைக்கு இருக்கிற நிலையைக் காட்டுகிறேன். என்னோடு வாருங்கள். போலீஸ்காரர்கள் தடியடி செய்வதையும் காட்டுகிறேன். மந்திரிகள் காரிலே வரக் கூடாது ஏனென்றால் பந்தோபஸ்தாக திரும்ப முடியாது. பஸ்ஸிலே போவோம். இராத்திரி, பகல் என்று இல்லை. எத்தனை இடத்தில் தடியடி செய்யப்பட்டிருக்கிறது? இரும்புத் தொப்பி போலீஸ்காரர்கள் செய்கிற தவறை ஆட்சியாளர்கள் உணரவில்லை. கள்ள மார்க்கெட்காரர்களை தைரியத்தோடு ஒழிக்க ஏன் முன்வரவில்லை? கள்ளச் சந்தையில் ஈடுபடுகின்றவர்களை பாரபட்சம் இல்லாமல் ஒடுக்க அரசாங்கம் ஏன் முன் வரவில்லை. ஜனநாயக சோஷலிசம் என்று பேசுகிறீர்களே, ஏன் உணவு தானிய வியாபாரத்தை தேசிய மயமாக ஆக்கக்கூடாது? ஏன் எடுத்து நடத்தக்கூடாது? ஏன் 500 பேர்கள் இருக்கிற

11-00 a.m.

இடத்தில் ஒரு நியாயவிலைக் கடை வைக்கக்கூடாது? ஏன் உணவு தானியத்தின் மீது இருக்கிற விற்பனை வரியை ரத்து செய்யக் கூடாது? எல்லாவற்றிற்கும் எதிர்க்கட்சி ஒத்துழைக்க வேண்டும் என்கிறார்களே? இதற்கு மட்டும் எதிர்க்கட்சிக்காரர்களைக் கூப்பிட்டால் இவர்கள் குறைந்துவிடுவார்களா? உங்களுடைய பழி





யிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொண்டிருக்கலாமே? ஒரு சின்ன விவாதம், உணவு நிலைப்பற்றி விவாதத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு சர்க்கார் ஒத்துக்கொள்ளவில்லை. டெல்லி மந்திரிகள் கூப்பிட்டால் போகிறீர்களே? இங்கே இருக்கிற எதிர்க்கட்சிக்காரர்களைக் கூப்பிட்டு கலந்து ஆலோசித்தால் என்ன பாதகம் வந்து விடும்? என்ன மரியாதை குறைந்துவிடும்? ஏன் செய்யக் கூடாது? பழியிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொண்டிருக்கலாமே? எல்லோருக்கும் இருக்கிற பிரச்னை தானே இது? ஒவ்வொரு மந்திரியும் ஒன்று சொல்லுகிறார்களே? ஒரு மந்திரி எல்லாம் 10 நாட்களில் சரியாகப் போய்விடும் என்று கூறுகிறார். கலெக்டர் 10 நாட்களுக்கு ஆந்திராவிலிருந்து அரிசி வராது என்று சொல்லுகிறார். அப்படி ஒரு கலெக்டர் அம்மையார் சொல்லுகிறார். இன்னொரு மந்திரி வேறு விதமாக சொல்லுகிறார். நிலைமைகள் இப்படி இருக்கின்றன. நிச்சயம் சொல்லுகிறேன், பணிவோடு சொல்லுகிறேன், நாட்டு மக்களுடைய பிரதிநிதிகளாகிய எங்களைக் கேட்கக் கூடாதா? எதிர்க்கட்சியை நீங்கள் கலந்து ஆலோசிக்கக்கூடாதா? அரக்கோணம் சம்பவம் பில்லூர் மரணம், கோயம்புத்தூர் படுகொலை தொடர்ந்து நடைபெறக்கூடாது. அந்தப் பழிச்சொல்லுக்கு நீங்கள் ஆளாகக்கூடாது என்று மிகவும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட வேண்டியது போலீஸ் இலாகா. ஆனால் அந்த போலீஸ் இலாகா இன்றைக்கு என்ன நிலைமையில் இருக்கிறது? காங்கிரஸ் பெருந்தலைவர்கள் மனம் கோணக்கூடாது, அவர்களை திருப்திப்படுத்த வேண்டும் என்கிற முறையிலே தானே இன்றைக்கு நடக்கிறது? கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நான் போலீஸ் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் கண்டிப்பாக பதில் சொல்ல வேண்டும். இன்றைக்கு நம்முடைய முன்னாள் முதல் அமைச்சர் கனம் காமராஜ் அவர்கள் பதவியிலிருந்து விலகி ஒரு ஆண்டு மேலாகிறது. அவர்கள் இப்பொழுது ஒரு அமைச்சர் அல்ல, ஒரு அரசியல் கட்சித் தலைவர். அவர்கள் அமைச்சராக இருந்தபோது யார் மெய்க்காப்பாளராக இருந்தாரோ, அதே போலீஸ்காரர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர் இன்றைக்கு தொடர்ந்து இருந்து வருகிறார்கள். போலீஸ்காரர்கள், 'எச். ஸி.' மற்றவர்கள் தொடர்ந்து நீடிக்கப்பட்டிருக்கிறார்கள். இது முறைதானா? இது நியாயம் தானா? இதெல்லாம் போலீஸ் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதா? அல்லது, தெரிந்தும், தெரியாதது போல் இருக்கிறார்களா? இதற்கு நீங்கள் ஏன் உடந்தையாக இருக்கிறீர்கள்? இவருக்கு சர்க்காரிலிருந்து போலீஸ் பாதுகாப்பு என்றால் என்ன பொருள்? மக்கள் வரி பணத்திலிருந்து போலீஸ் பாதுகாப்பு, என்று தானே கருத்து? இதற்கு முன்னால் முதல் அமைச்சர்களாக இருந்த திரு. ராஜகோபாலாச்சாரியாருக்கு இப்படி போலீஸ் பாதுகாப்பு அளிக்கிறீர்களா? திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாருக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்கிறீர்களா?

SHRIMATHI A. S. PONNAMMAL rose.

SRI K. A. MATHIALAGAN : I am not yielding.

*[திரு. கே. ஏ. மதியழகன்]* [22nd October 1964

பதவியிலிருந்து விலகிய வேறு எந்த முதல் அமைச்சருக்காவது இது மாதிரி போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்படுகிறதா? அது மட்டு மல்ல. இந்தத் தவறை வேறு யாராவது செய்தால் தண்டிக்கலாம். அரசாங்கமே இந்தத் தவறை செய்தால் அவர்களை யார் தண்டிப் பது? வேலியே பயிரை மேய்ந்தால் வேளாண்மை என்ன ஆகும்? அரசியல் கட்சித் தலைவரிடம் சர்க்கார் சம்பளம் கொடுத்து, மக்கள் வரிப்பணத்திலிருந்து சம்பளம் கொடுத்து, ஒரு க்ளார்க் அவர் களிடமே, கனம் திரு. காமராஜ் அவர்களிடமே பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவருடைய பெயரைக்கூட நான் வெளியிடத் தயாராக இருக்கிறேன். கனம் முதலமைச்சர் இந்த குற்றச்சாட்டை மறுத்தால் ஆட்சியாளர்கள் இந்தக் குமாஸ்தாவை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இதிலே விசேஷம் என்னவென்றால், இதிலே ஆச்சரியமான சம்பவம் என்னவென்றால் அந்தக் குமாஸ்தா நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய உதவியாளர்களில் ஒருவர் என்று பெயர். அவர் வேலை பார்ப்பது காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜரிடம். இதற்கு எப்படி நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள்? அரசாங்க ஊழியர் ஒருவர் ஒரு அரசியல் கட்சித் தலைவருக்கு உதவியாளராக பணியாற்றுவது முறைதானா? அர சாங்க சிப்பந்திகளுடைய நடைமுறை விதிகளுக்கு விரோதமான செயல் அல்லவா இது? அடிக்கடி பேசுகிறார்கள், அரசாங்க உத்தி யோகஸ்தர்கள் அரசியலில் கலக்கக்கூடாது என்று சொல்லு கிறார்கள். அதுபற்றி நிரம்பப் பேசும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இதற்கு துணை புரியலாமா என்று நான் கேட்க விரும்புகிறேன். திரு. காமராஜ் அவர்கள் பதவியிலிருந்து விலகி ஓராண்டிற்கு மேலாகிறது. ஆனால், அவர்களுடைய பங்களாவில், இல்லத்தில் போடப்பட்டிருக்கிற சோபாக்கள், சாமான்கள், இன்றைக்கு வரையிலே அகற்றப்படவில்லை. வருத்தப்படக் கூடாது, நாங்கள் உள்ளம் திறந்து பேசுகிறோம்; சில பேர்கள் பகிரங்கமாகப் பேசுவதில்லை. ஆனாலும் இரகசியமாகச் சொல்லு கிறார்கள் பல காங்கிரஸ்காரர்கள். பெயர் அளவுக்குத் தான் கனம் பக்தவத்சலம் அவர்கள் முதல் மந்திரி. திரு. காமராஜ் அவர்கள் தான் இன்றைக்கும் முதல் மந்திரியாக இருக்கிறார்கள்; தியாகராய நகர் திருமலைப்பிள்ளை தெருவில் எட்டாவது இலக்கம் உள்ள அவரது இல்லத்திலிருந்துதான் தாக்கீதுகள் பிறப்பிக்கப்படு கின்றன, உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன என்று பரவலாக காங்கிரஸ்காரர்கள் பேசிக்கொண்டு வருகிறார்கள். இதை ஊர்ஜிதப் படுத்துகிற நிலைமையில் தற்பொழுது இவையில்லையா? இதை நீங்கள் உறுதிப்படுத்துகிறீர்களா? என்ன காரணம்?

போலீஸ் இலாகா என்பது இன்றைக்கு எல்லோருக்கும் பொது வான இலாகாவாக இருந்து வருகிறது. சென்னைக்கு வெளி நகர்ப் புறத்திலிருந்து சீமைச்சாராயம் எடுத்துக்கொண்டு வந்த ஒரு வண்டி பிடிப்பட்டது என்று பத்திரிகையிலே செய்தி வந்தது. என்ன ஆயிற்று? ஏன் வழக்கு நகரவில்லை? யாராவது தண்டிக்கப் பட்டார்களா? ஒரு பட முதலாளி, கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர், காங்கிரஸில் ரொம்பவும் ஈடுபாடு உள்ளவர், அவர் இதில் ஈடுபட்டிருக்கிறார். இன்றைக்கு நான் சொல்ல முடியும்.



22nd October 1964] *[திரு. கே. ஏ. மதியழகன்]*

எனக்குத் தெரிந்த தகவலிலிருந்து சொல்ல முடியும். இதற்கு உடந்தையாக இருந்த அதிகாரி மாற்றப்பட்டார். இதைத் தவிர வேறு என்ன நிலைமை? சென்னை எல்லையில் பிடிப்பட்ட வானைப் பற்றி எங்களுடைய துணைத் தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்கள் போலீஸ் மான்ய விவாதத்தின்போது கேட்டார்கள். என்ன ஆயிற்று நிலைமை? இவர்கள் நமக்கு வேண்டியவர்கள் என்று இருக்கலாமா? மக்கள் நலனுக்குத் தானே ஆட்சி? போலீஸ் எல்லோருக்கும் பொதுவாகத்தானே இருக்க வேண்டும்? இப்படிச் செய்தால் போலீஸ் இலாகாவின் மீது யார் நம்பிக்கை வைப்பார் கள்? இந்த வழக்கு என்ன ஆயிற்று என்று சொல்ல கடமைப்பட் டிருக்கிறார்கள்.

லஞ்ச ஒழிப்புக்காக ஒரு கமிஷன் நியமித்தார்கள். வாஸ்தவம் தான், செய்யவேண்டிய காரியம் தான். அதைப்பற்றி இந்த மன்றத்திலும் பேசியாகிவிட்டது. இவ்வளவு நாட்களாக எத்தனை வழக்குகள் அதிகாரிகள்மீது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது? யார் யார் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்? அதுபற்றி புள்ளிவிவரம் தருவீர் களா? ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருக்கும் ஒரு கேட் கீப்பர் ஒரு ரூபாய் வாங்கினார், நான்கு அணா தான் வாங்கியிருப்பார், ஒரு ரூபாய் என்று எழுதி அதற்கு 6 மாதம் கடுங்காவல் தண்டனை. பரவாயில்லை, ரொம்ப கண்காணிப்பாக செய்கிறீர்கள், பாராட்டு கிறோம். இரண்டு நாட்களுக்கு முன்பு கூட கனம் முதல் அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்தின்போது பதில் சொன்னார்கள். 'சீப் என்ஜினியர்' ஒருவர் 'பி. டபிள்யூ. டி.'-யில் வேலை பார்த்தவர். அவர் வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர். சுராஜுதீன் அவர்கள், 'சீப் என்ஜினியர்' 'பில்டிங்க்ஸ்', 'பிரிட்ஜஸ்' மற்றும் ஸ்பெஷல் வொர்க்ஸுக்குப் பொறுப்பான என்ஜினியர். அவர்களைக் கைது செய்தார்கள். நான்கு மாதங்கள் ஆயிற்று. சொல்லுவார்கள், இன்வெஸ்டிகேஷன் செய்து கொண்டிருக்கிறோம் என்று. இன்வெஸ்டிகேஷன் சரி இல்லாதபோது ஏன் கைது செய்தீர்கள் அவ்வளவு விரைவாக? ஏன் வழக்கு மன்றத்திற்கு அந்த வழக்கு இன்னும் வரவில்லை? அதற்கு என்ன பொருள்? பதில் சொல் லுங்கள். பெரிய புள்ளிகள், மந்திரிமார்கள் நிலைமையில் இருப் பவர்கள் கூட, சந்திக்கு வரவேண்டும் என்பதினால் இதை இழுத்தடிக்கிறார்கள். நான்கு மாதங்கள் ஆகியும் குற்றப் பத்திரிக்கை வழக்கு மன்றத்திற்கு வரவில்லையே? இதற்கு என்ன அர்த்தம்? தஸ்தாவேஜியைக் காட்டுங்கள். நாங்கள் நிரூபிக்கத் தயாராக இருக்கிறோம். ஏன் இவ்வளவு நாட்களாக குற்றப் பத்திரிக்கை பதிவு செய்யப்படவில்லை? வழக்கு மன்றத்தில் ஏன் வழக்கு தொடரப்படவில்லை?

அது மாதிரி தான், ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஒரு டாக்டர். மூத்து என்று அவர் பெயர். அவர்களைக் கைது செய்தார்கள். ஏன் கைது செய்தார்கள் என்றால், ஒரு கொலை வழக்கில் சாட்சியம் சொல்லுவதாக 50 ரூபாய் லஞ்சம் வாங்கி ஒத்துக் கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டு, 'அலிகேஷன்' பேரில் அவர்கள் கைது செய் யப்பட்டார்கள். இன்றைக்கு அந்த வழக்கு என்ன ஆயிற்று?

[திரு. கே. ஏ. மதியழகன்] [22nd October 1964

அதைவிட விளக்கமான வழக்காயிற்றே இது? சொல்லட்டும் காரணம் இதற்கு. சொல்ல முடியுமா? இந்த முத்துவுக்கும் மந்திரிகளுக்கும் ஏதாவது உறவா? வேறு காரணம் என்ன இதற்கு? லஞ்ச ஊழல் ஒழிப்புக் கமிட்டி என்று நியமித்துவிட்டால், சொல்லிவிட்டால் எல்லாம் சரியாகிவிடுமா? இந்தத் தாமதத்திற்கு என்ன காரணம் என்று சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அதுபோல போலீஸ் விவகாரத்திலும், ஐ.ஜி. நியமனம் செய்யப்பட்டார்கள். பல பேர்களுக்கு சந்தேகம், இன்னும் கூட அதுபற்றி கேட்கிறார்கள். மகாதேவனா, அருளா ஐ.ஜி? முதலில் மகாதேவன் தான் ஐ.ஜி. என்று பெயர் வந்தது. பின்னாலே அருள் வந்தார். மகாதேவன் சட்டப்படி ஐ.ஜி. பொறுப்பில் இருப்பார், ஆனால் லஞ்ச ஊழல்களைக் கவனிப்பார். அருள் சட்டப்படி அடிஷனல் ஐ.ஜி.யாக இருப்பார், ஆனால் அவர் ஐ.ஜி. காரியங்களை கவனிப்பார். 'டி-பாக்டோ ஐ.ஜி. டி-ஜூரே ஐ.ஜி. ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? என்ன வந்தது? மகாதேவனிடத்தில் தானே ஐ.ஜி. பொறுப்பையும் கொடுக்க வேண்டும்? அப்படியில்லாமல் அவர் அங்கே போக வேண்டிய காரணம் என்ன? அடிஷனல் ஐ.ஜி. ஐ.ஜி. பொறுப்பில் இருப்பானேன்? அருள் அவர்களைப்பற்றி சொல்லும்பொழுது அவரைப்போல திறமையான அதிகாரி கிடையாது, ரொம்ப நேர்மையான அதிகாரி, ரொம்ப கண்டிப்பாக நடந்து கொள்ளுவார்கள் என்று முன்பு நான் எழுப்பிய ஓர் விவாதத்தின்போது முதலமைச்சர் கூறினார்கள். அவர்கள் கூற்றை நானும் கேட்டுக்கொண்டேன். அருள் அவர்களை ஏன் இந்த லஞ்ச ஊழல் குற்றங்களை விசாரிப்பதற்குப் போடக் கூடாது? ஏதாவது உங்கள் மீது அவர் குற்றம் கண்டு பிடித்து விடுவார் என்ற பயமா? அவரை ஏன் போடவில்லை? அல்லது அவரைத்தான் ஐ.ஜி.யாகப் போட வேண்டும் என்று யாராவது நிர்பந்தித்தார்களா? இதற்கு என்ன சமாதானம் சொல்ல முடியும்? இப்படி "அடிஷனல், அடிஷனல்" என்ற முறையில் போட்டால், எப்படி இந்த அரசாங்கத்துக்கு கௌரவம் ஏற்படும்? எப்படி ஆளும் கட்சியினரைப் பற்றி பொது மக்களிடத்திலே ஒரு நல்ல எண்ணம் ஏற்படும்? இதற்கு சமாதானம் சொல்ல தயங்கினால் மக்கள் இந்த சர்க்காரைப்பற்றி எப்படி நம்பிக்கை கொள்ள முடியும். இதே முறையிலேதான் ஒவ்வொரு காரியமும் நடந்து கொண்டிருக்கிறது.

விற்பனை வரி இலாகாவை எடுத்துக் கொள்ளுங்கள். அதைப் பற்றி நமக்கு எல்லோருக்கும் தெரியும். நானே நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களிடத்தில், இந்த மன்றத்தின் மூலம் இந்த விற்பனை வரி அதிகாரிகளுக்கு அதிகமான அதிகாரத்தைக் கொடுங்கள், கோடிக்கணக்கான ரூபாய் கணக்குகளை மறைக்கும் இந்த சமூக விரோதிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இரண்டு மாதங்களுக்கு முன்பு சொல்லியிருக்கிறேன். இந்தக் கள்ளக் கணக்குகளைப் பிடிப்பதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்குக்காக நாம் முன்பு அரசாங்கத்தைப் பாராட்டினோம். கமிஷனர் ஆப் கம்மர்சியல் டாக்ஸ் பொறுப்பிற்கு புதிதாக ஒரு அதிகாரியைப் போட்டார்கள். அவரும் அவருக்குக் கீழே உள்ள அதிகாரிகளும் சேர்ந்து சோதனையிட்டு இந்த ஆறு மாதங்களில்



22nd October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

ஐந்து கோடி ரூபாய்களை வரிமூலம் சர்க்காருக்கு வருமானமாகப் பெற்று தந்திருக்கிறார்கள். இந்த சமூக விரோதிகள் பொது மக்களோடு மட்டுமல்லாமல் சர்க்கார் கஜானாவையும் ஏமாற்றக்கூடிய புல்லுருவிகளாக இருக்கிறார்கள். நடந்த பல சம்பவங்களைப் பற்றி நான் சொல்ல முடியும். இரண்டு, மூன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஈரோட்டில் ஒரு பெரிய எண்ணெய் வியாபாரி, அவர் கணக்குகளை பரிசீலனை செய்ததில் ஒரு கோடி ரூபாய் கள்ளக் கணக்கு டர்ன்ஓவர் கண்டுபிடிக்கப்பட்டது. சென்னையிலேயே ஒரு எவர்சில்வர் சாமான்கள் மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு பெரிய வியாபாரி, ஆஸ்பத்திரி போன்ற இடங்களுக்கு சப்ளை செய்யக்கூடியவர். எவர்சில்வர் மெர்ச்சண்ட் என்று அவரைச் சொல்லுவது பொருந்தாது, எவர்சில்வர் சக்கரவர்த்தி என்றே சொல்ல வேண்டும். அவரிடத்தில் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் கள்ளக்கணக்கில் பதுங்கிக்கொண்டிருப்பதைக் கண்டுபிடித்தார்கள். அதே மாதிரி இன்னொரு வியாபாரி. கைத்தறி நெசவாளர்களுக்கு சாயப் பொருள் கொடுப்பதற்காக இறக்குமதி லைசென்ஸ் வைத்துக்கொண்டிருப்பவர். அவர் சக்காதிபதியாக இருக்கும் சாயப்பொருள் வணிகத்தில் இருந்து பல லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு டர்ன்ஓவர் காண்பிக்கவில்லை. மேலும் வெளி நாட்டுடன் செலாவணி வைத்துள்ள அந்நிய நாட்டுக் கம்பெனி அகப்பட்டது. அதற்கடுத்தாற்போல் ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியார் கம்பெனி, இவர் சினிமாத் தொழிலில் ஈடுபட்டு பல சினிமா அதிபர்களுக்கு லட்சக்கணக்கில் பணம் கடன் கொடுத்து வந்தார். இவரிடமிருந்தும் பல லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு இரகசிய விபரங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர, வேறு இடங்களில் உள்ள பல வியாபாரிகளிடமிருந்து கணக்குகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. இவற்றிக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் ஒரு பிரபல பத்திரிகை அதிபர். அவர் பல தொழில் நிறுவனங்களுக்கு சொந்தக்காரர். அவரிடமிருந்து கணக்குகள் பிடிக்கப்பட்டன. இன்றைய தினம் அது சம்பந்தப்பட்ட வழக்கு கோர்ட்டின் முன்பாக இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. மக்களது உயிர்நாடி ஊசலாடிக்கொண்டிருக்கும் இந்த நெருக்கடி நேரத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் உணவுப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க எதிர்கட்சிகளைக் கூப்பிட்டு மாநாடு போடவில்லை. ஆனால் இந்த மாதம் 17-ம் தேதி நமது முதலமைச்சர் அவர்கள் சென்னை வர்த்தக சங்கத்தினரைச் சந்தித்து அந்தக் கூட்டத்தில் இந்த மாதிரி கள்ளக் கணக்குகளை ஒப்புவிப்பதற்கு இரண்டு மாதம் கிரேஸ் பீரியடு கொடுத்திருக்கிறார்கள். அந்த வகையில் ஒரு உத்திரவும் போடப்பட்டிருக்கிறது. பல கோடி ரூபாய்க்கு கணக்குகளை மறைத்து வைத்திருக்கும் இந்த சமூக துரோகிகளுக்கா கிரேஸ் பீரியடு கொடுப்பது? இதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் வியாபாரிகளின் பூஜையறையிலிருந்தும், மனைவியின் புடவை பீரோவிலிருந்தும், மற்ற இடங்களிலிருந்தும் ஏராளமான கணக்குகளை கண்டு பிடித்திருக்கிறார்கள். திருப்பூர், கோயம்புத்தூர் போன்ற நகரங்களிலே எல்லாம் இம்மாதிரி சோதனைகள் நடைபெற்றிருக்கின்றன. புரண்டிபு நாட்டிலே கணக்குகளைக் கைப்பற்றுகிறபொழுது இந்த

[திரு. கே. ஏ. மதியழகன்] [22nd October 1964

கிரேஸ் பீரியடைக் காணோம். கொங்கு நாட்டுப் பகுதியிலே கண்டுபிடிக்கிற பொழுது இதைக் காணோம். ஆனால் வடநாட்டுக்காரர்கள் இருக்கிற செங்கற்பட்டு சென்னை மாவட்டத்திற்கு வந்த பொழுது, அந்த பிரபல பத்திரிகை அதிபரின் கணக்கைக் கைப்பற்றிய பொழுது, இந்த கிரேஸ் பீரியடு கொடுக்கப்படுகிறது. யாருக்குக் கிரேஸ் பீரியடு கொடுப்பது? கிரேஸ் என்றால் கருணை என்று அர்த்தம். இந்தக் கருணை, அன்பு, பச்சாதாபம், இரக்கம் இவை காண்பிக்கப்பட வேண்டிய அருகதை இவர்களுக்கு உண்டா. நம்முடைய அரசாங்கம், நமது அமைச்சர் இதனுடைய பொருளை யாவது உணர்ந்து கொண்டிருக்கிறார்களா. இரண்டு மாதம் டைம் கொடுத்தால், இந்தக் கணக்குகள் என்ன ஆகும்? ஏழை எளியவர்கள் நில வரி கொடுக்கவில்லையென்றால், நெல்லைப் பிடுங்கிக் கொள்கிறார்கள், மாடு, கன்றைப் பிடுங்கிக் கொள்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட சமூகத் துரோகிகள் கஜானாவை ஏமாற்றுகிறவர்கள், இவர்களைக் கூப்பிட்டு சென்ற 17-ம் தேதி நமது முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே மகாநாடு நடந்திருக்கிறது. இப்படி செய்தால் அதிகாரிகளின் கதி என்னவாகும்? அந்தப் பத்திரிகை அதிபர் அமைச்சர்களை நிர்பந்தித்திருக்கிறார். உடனே உத்தரவு மாறுகிறது. வேண்டுமானால் அவருடைய பெயரை நான் இங்கே சொல்லத் தயாராக இருக்கிறேன். இதிலே பல மத்திய மந்திரிகளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரிய தலைவர்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இப்படிச் செய்வதினால் சர்க்கார் கஜானாவுக்கு கிடைக்க வேண்டிய பணம் என்ன ஆகும்? கள்ளச் சந்தை வைத்து கொள்ளை லாபம் அடிக்கும் இந்த சமூக துரோகிகளுக்கா கருணை காட்டுவது?

இன்னொரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். இந்த விற்பனை வரி சம்பந்தமாக 1962-ல் சுப்ரீம் கோர்ட்டில் ஒரு வழக்கு நடந்தது. சுப்ரீம் கோர்ட் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்திருக்கிறது.

"The Supreme Court has held that tax is payable by a dealer on his entire turnover including the sales-tax collected by him."

இந்த சுப்ரீம் கோர்ட் தீர்ப்புப்படி வியாபாரத்தில் புழங்கிய பணத்திற்கு மட்டும் வரி என்று அல்லாமல், வசூலிக்கப்படுகின்ற வரிக்கும் வரி கொடுக்க வேண்டும். உதாரணமாக ஒரு லட்ச ரூபாய் டர்ன்ஓவருக்கு ரூபாய் 2,000-ம் வரி செலுத்த வேண்டுமென்றால், இந்த 2,000-ம் ரூபாய் வரிக்கும் வரி செலுத்த வேண்டும். இந்த தீர்ப்பு 1962-ல் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்ப்பை எப்பொழுது நமது சர்க்கார் அமுலுக்குக் கொண்டு வந்தார்கள் என்றால் 1964 செப்டம்பர் மாதத்தில். ஏன் இவ்வளவு இடைவேளை கொடுக்கப்பட்டது? 1962-ல் இந்தத் தீர்ப்பு வந்தது. அதாவது வாங்குகிற வரிக்கும் வரி கொடுக்க வேண்டுமென்பது. இதையாவது ஒழுங்காக அமல் நடத்தினார்களா? இது ஏதோ ஒரு சிறு உத்தரவு என்று இந்த சபை கருதிவிடக்கூடாது. இந்த உத்திரவை தள்ளிப் போட்டதன் மூலமாக இந்த சர்க்காருக்கு வருமானத்தில் ஒரு கோடி ரூபாய் சென்ற இரண்டு ஆண்டுகளிலே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்கு மட்டும் ரூபாய் 50 லட்சம்,



22nd October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

இதனால் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த செப்டம்பர் மாதத்திலே ஒரு உத்திரவைப் போட்டு அக்டோபர் மாதம் வரையிலும் அதைத் தள்ளி வைத்திருக்கிறார்கள். இதற்காக நான் சர்க்காரை பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். டி.வி.எஸ். கம்பெனி நிறுவனத்திற்கு மட்டும் இதனால் பல லட்சக்கணக்கான ரூபாய் லாபமாகியிருக்கிறது. 1962-ல் கொடுத்த தீர்ப்பை 1964-வரை அமுல் நடத்தாததால், ஆண்டு ஒன்றுக்கு டி.வி.எஸ். நிறுவனத்திற்கு மட்டும் ரூபாய் 10 லட்சம் அல்லது 15 லட்சம் லாபம் மிச்சம் கிடைத்திருக்கிறது. அவர்கள் இந்த சர்க்காரை நிர்ப்பந்தித்திருக்கிறார்கள். அந்த ஆதிக்க சக்திக்கு நமது சர்க்கார் அடிபணிந்திருக்கிறார்கள். இன்றைக்கு சேஸிஸ், மோட்டார் கார்கள், லாரிகள் எல்லாம் என்ன விலைக்கு விற்கின்றன என்பது மோட்டார் அதிபர்களுக்குத் தெரியும். ஒரு பார்கோ அல்லது லேலண்டு என்று சொன்னால் சுமார் 40,000 ரூபாய் விலையாகிறது. நாற்பதினாயிரம் ரூபாய் என்றால் வரியே சுமார் 4,000 ஆகிவிடும். இந்த வரிக்கு வரி கொடுக்க வேண்டுமென்று சொன்னால், ரூ. 400 இந்தப் புதிய தீர்ப்பின்படி கொடுக்க வேண்டும். ஒரு மாதத்தில் இந்த மாதிரியான வாகனங்கள் நூற்றுக்கணக்காக விற்கப்படுகின்றன என்பது நமக்கு எல்லோருக்கும் தெரியும். இதனால் பல லட்சக்கணக்கான ரூபாய் லாபம் அடைந்திருக்கிறது இந்த டி.வி.எஸ். நிறுவனம். அவர்களின் நிர்ப்பந்தத்திற்கு நமது சர்க்கார் அடிபணிந்திருக்கிறார்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். அதே மாதிரி தங்களுக்கு வேண்டியவர்கள், தங்களுடைய கட்சியின் ஆதிக்கக்காரர்கள், இவர்களுக்கு சலுகைகள் கொடுக்கும் விதத்தில் பல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக சத்திய மூர்த்தி பவனில் ஒரு பகுதி மாதர் நல இலாகா டைரக்டர் ஆபிசுக்கு ரூபாய் 1,500-க்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. இது எந்த வகையிலே நியாயம்? ஒரு கட்சியினுடைய அலுவலகக் கட்டடத்தைத் தவிர வாடகைக்கு வேறு இடம் இல்லை என்று சொல்வதானால் அதை ஒரு சமாதானமாக எப்படி நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டு விடுவார்கள்? கட்சி என்பது வேறு. அரசாங்கம் என்பது வேறு. கட்சி அலுவலகக் கட்டடத்தில் டைரக்டர் ஆப் விமென்ஸ் வெல்பேர் அலுவலகம் ஏன் இருக்க வேண்டும்? அதற்காக மாதமொன்றுக்கு ஆயிரத்தி ஐந்நூறு ரூபாய் வாடகையாகக் கொடுக்க வேண்டும். இதற்கெல்லாம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் சமாதானம் கூறலாம். வேறு இடம் கிடைக்கவில்லை என்று. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு நாங்கள் எத்தனையோ உதாரணங்கள் காட்டலாம். அமைச்சர்களுக்கு வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டியிருப்பதற்கான நிகழ்ச்சிகள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்வதற்கு எங்களுக்கே வெட்கமாக இருக்கிறது. பொது மன்றத்திலே இதையெல்லாம் நாங்கள் பேசவேண்டிய நிலையில் அமைச்சர் வைத்திருக்கிறார்களே என்பது குறித்து எங்களுக்கும் வருத்தம் தான். ஆனால், அமைச்சர்கள் தங்களுடைய அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்கள் 'Minus of power' என்று தான் சொல்ல முடியும். அமைச்சர்கள் திறமைக் குறைவாக நடந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [22nd October 1964

என்று சொல்ல வேண்டியிருக்கிறதே என்பதைக் குறித்து எங்களுக்கே கூட கொஞ்சம் வெட்கமாகத்தான் இருக்கிறது சிரமமாகவும் இருக்கிறது. சொல்ல வேண்டியிருப்பதற்குக் காரணம், அவ்வளவு நம்பிக்கையில்லாததனமாக அமைச்சர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

அட்வகேட்-ஜெனரல் நியமனம் பற்றிக் காலையிலே இங்கே குறிப்பிடப்பட்டது. கொஞ்ச நாட்களுக்கு முன்பு பப்ளிக் ப்ராசிக்யூடர் ஒருவர் நியமிக்கப்பட்டார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்கள் நியமித்தார்கள். இது மிகவும் வேதனை தரும் விஷயமாகும். முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய அதிகாரத்தை இதிலே துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் ஒரு தொகுதியிலே தேர்தலில் அபேட்சகராக நின்றார்கள். அவர்களுக்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அபேட்சகர் திரு. சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் போட்டியிட்டார்கள். அந்தத் தேர்தல் சம்பந்தப்பட்ட வழக்கில் முதல் அமைச்சர் சார்பில் வக்கீலாக இருந்த ஒருவருக்கு இந்தச் சர்க்காரிலே பப்ளிக் ப்ராசிக்யூடர் பதவிக்கு நியமனம் ஆகியிருக்கிறது. இது தவிர, செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த இன்னொருவருக்கு அட்வகேட்-ஜெனரல் பதவிக்கு நியமனம் ஆகியிருக்கிறது. இந்த நியமனங்களுக்கு முதல் அமைச்சர் அவர்கள் சமாதானம் என்ன சொல்லப் போகிறார்கள்? சமாதானம் சொல்வார்கள், நாங்கள் ஹைகோர்ட் தலைமை நீதிபதியிடம் 'பானல்' கேட்டோம். அந்த பானலிலிருந்து போட்டோம் என்று. உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியினுடைய விவகாரங்களை இன்றைய தினம் இந்தச் சபையில் நண்பர் ஒருவர் அறிமுகப் படுத்தினார்கள். அது இருக்கட்டும். இதற்கெல்லாம் ஒரு முறை, நெறி வேண்டாமா? முதல் அமைச்சர் அவர்களுக்கு வேண்டிய ஒருவருக்கு இவ்வளவு பெரிய பொது உத்தியோகத்தை (பப்ளிக் ஆபிஸ்) கொடுத்து விடுவதா? பப்ளிக் ப்ராசிக்யூடர் வேலை என்பது எவ்வளவு பொறுப்பு வாய்ந்தது? அதற்கு எத்தகைய சட்ட நிபுணத்துவம் வேண்டும்? எத்தனையோ கேஸ்களைக் கையாண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டாமா? நியமிக்கப்பட்டிருக்கிறவரைத் தவிர அந்தப் பதவிக்கு வேறு யாருமே இல்லையா? எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். பெரிய பிரபல வழக்கறிஞர்கள் இந்த பொறுப்பான இடத்திற்கு வரத் தகுதியோடு இருக்கவில்லையா? திரு. கோவிந்த சுவாமிநாதன் அவர்கள் க்ரௌன் ப்ராசிக்யூடராக இருந்திருக்கிறார்கள். திரு. எத்னேஷியஸ் என்பவர் துணை ப்ராசிக்யூடராக இருந்திருக்கிறார். சிறந்த வழக்கறிஞரான திரு. நாராயணசாமி முதலியார் அவர்கள் இருந்திருக்கிறார். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. செங்கல்வராயன் அவர்கள் இருந்திருக்கிறார்கள். இப்படி எத்தனையோ பேர்களைத் தாண்டி, பத்து வருஷங்கள் கூட அனுபவம் இல்லாத ஒரு இளைஞருக்கு பப்ளிக் ப்ராசிக்யூடர் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. அட்வகேட்-ஜெனரல் பதவிக்கு போக இந்தப் பதவியை 'ஸ்டெப்பிங் போர்டு' ஆக்கச் செய்திருக்கிறார்கள் என்று சொல்வதில் தவறு என்ன? அட்வகேட்-ஜெனரல் பதவியும் ஒரு பொறுப்புள்ள இடம். அரசாங்க சட்ட விஷயங்களைக் கவனிப்பதற்குள்ள



22nd October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

ஒரு முக்கியமான இடம். இதற்கெல்லாம் என்ன சமாதானத்தை அமைச்சர் அவர்கள் தரப்போகிறார்கள்? என்னதான் இருந்தாலும் இவ்வளவு பெரிய 'கன்சிடரேஷன்', இவ்வளவு பெரிய பதவிகளைப் பரிசுப் பொருளாகக் கொடுக்கலாமா? செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக ஒரு அட்வகேட்-ஜெனரல் பதவியா கொடுப்பது? தனது வக்கீல் என்பதற்காக ஓர் இளைஞருக்கு பப்ளிக் ப்ராசிக்யூடர் பதவியா கொடுப்பது? வக்கீல்களின் மத்தியிலே என்ன கௌரவம் நமக்கு வரும்? என்ன நிலைமை ஏற்படும்? இன்றைக்குப் பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன. சுதந்திராக் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி, திராவிட முன்னேற்றக் கட்சி, இன்னும் பெயர்கூடச் சொல்ல முடியாத கட்சிகளைச் சேர்ந்தவர்களைப் போடுங்கள் என்று நான் கேட்கவில்லை. அந்த ஆசாபாசங்கள் எங்களுக்கு இல்லை. ஒரு பெரிய உயர்ந்த இடத்திற்கு ஒருவரைப் போட வேண்டுமென்று நாங்கள் கேட்டால், உயர்நீதி மன்றமே ஸ்தம்பித்து விடும், நிர்வாகமே ஸ்தம்பித்து விடும் என்று சொல்லக்கூடும். ஆனால், இதெல்லாம் துஷ்பிரயோகம் இல்லையா? என்று நான் கேட்கிறேன். இதையெல்லாம் கேட்பதற்கு எனக்கே வெட்கமாக இருக்கிறது. கண்ணை மூடிக்கொண்டு, சகித்துக் கொண்டு தான் பேசுகிறேன்.

அடுத்து, எலெக்ட்ரிசிடி போர்டு இருக்கிறது. அது ஒரு 'தனி போர்டு' என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். 'அதெல்லாம் எங்களுக்குச் சம்பந்தம் இல்லை', 'அது ஒரு சேர்மன் தலைமையில் நடக்கிறது' இப்படியெல்லாம் சொல்வார்கள். உண்மை தான். 'நேரடிப் பொறுப்பு கிடையாது, அறிக்கையின் மீது விவாதிக்கிறோம், அவ்வளவு தான்' என்று சொல்வார்கள். அதுவும் உண்மைதான். எலெக்ட்ரிசிடி போர்டு தனிப்பட்டது என்றும், அதற்குச் சேர்மன் ஒருவர் இருக்கிறார் என்றும் சொல்வார்கள். அதெல்லாம் உண்மையே. ஆனால், அந்தச் சேர்மனை யார் நியமிக்கிறார்கள்? மந்திரிமார்கள் தான் நியமிக்கிறார்கள். ஆக, மின்சார போர்டின் மீது அமைச்சர்களுக்கு 'இன்-டைரக்ட் கண்ட்ரோல்' இருக்கிறது. அந்த மின்சார போர்டிலுள்ள லீகல் அட்வைசரும், துணை லீகல் அட்வைசரும் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள். இந்த வேலை மாறி மாறி வருகிறது கொஞ்ச நாட்களாக. முதலில் ஒருவர் இருந்தார். அவர் ஹைகோர்ட் நீதிபதியாகி விட்டார். அவருக்குத் துணையாக வழக்கறிஞர் கோகுலகிருஷ்ணன் துணை சட்ட ஆலோசகராக இருந்தார். அவர் விலக்கப்பட்டார். திரு. செங்கல்வராயன் சட்ட ஆலோசகராகவும் திரு. ராமானுஜம் துணைச்சட்ட ஆலோசகராகவும் ஆக்கப்பட்டார்கள். திரு. செங்கல்வராயன் காங்கிரஸ் கட்சி வக்கீல்; பெரிய தலைவர். அவருக்காவது பப்ளிக் ப்ராசிக்யூடர் பதவியோ, அட்வகேட்-ஜெனரல் பதவியோ கொடுத்திருக்கலாம். அது கொடுக்காதது மட்டுமல்ல; சட்ட ஆலோசகர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். இன்றைக்கு வேறு ஒருவரை திரு. இராமானுஜம் என்பவரை சட்ட ஆலோசகர் (லீகல் அட்வைசர்) ஆகப் போட்டு, அவருக்குக் கீழ் துணை ஆலோசகராக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். நம்முடைய முதல் அமைச்சர் குடும்பத்திற்கு மிகவும் உறவினரான மத்திய அரசாங்க அமைச்சராக

[திரு. கே. ஏ. மதியழகன்] [22nd October 1964

இருக்கும் திரு. ஓ. வி. அளகேசன் குடும்பத்தைச் சார்ந்த ஒருவர்—அவரது மருமகன்—இந்தத் துணை சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். 'திரு. ஓ. வி. அளகேசன் அவர்களுடைய உறவு முறையாக இருப்பவர் ஒருவர் இப்படிப்பட்ட பதவிக்கு வரவே கூடாதா?' என்ற வாதம் நிகழ்த்தலாம். அந்த அடிப்படையில் நான் வாதிக்கவில்லை. திரு. ஓ. வி. அளகேசன் அவர்களுடைய மருமகனை அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை, திரு. செங்கல்வராயன் அவர்கள் லீகல் அட்வைசர் பதவியை விட்டுப் போகும்போது, துணை ஆலோசகராகப் போட்டிருக்கிறார்கள். மாதம் ரூ. 600 முதல் ரூ. 700 வரை சம்பளம் வரும். அவர் ஏதாவது சட்ட நிபுணரா என்றால் இல்லை; ஒரு வருஷம் கூட இருக்காது, ஆறு மாதம் தான் இருக்கலாம். சட்டக் கல்லூரியை விட்டு வந்து. திரு. ஓ. வி. அளகேசன் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக, அவரும் முதல் அமைச்சருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக, தம்முடைய காலத்திலேயே இப்படி நியமனம் செய்ய வேண்டும் என்பதற்காக உத்தியோகம் கொடுக்கப் பட்டுள்ளது. இப்படியெல்லாம் அதிகாரத்தைப் பயன்படுத்தலாமா? எப்படி இந்த நியமனம் வந்தது? திரு. செங்கல்வராயன் அவர்களை ஏன் நீக்கினார்கள்? நீக்கினால் தான் திரு. இராமானுஜத்தை சட்ட ஆலோசகராக்கலாம். துணை சட்ட ஆலோசகர் பதவியை உறவினருக்குக் கொடுக்கலாம். பிறகு நாலு வருடங்கள் கழித்து சட்ட ஆலோசகர் பதவியை உறவினருக்கு கொடுக்கலாம் என்பதைத் தவிர வேறு என்ன? அப்படி ஆக்குவதென்றால், ஏணியைப் போன்று உபயோகப்படுத்துவதைத் தவிர வேறு என்ன? இதற்குப் பெயர் 'நெபாடிசம்' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். தமிழிலே என்ன வார்த்தைகளைச் சொல்வது இதற்கு? இப்படிக் காரியங்களை நடத்திவிட்டு, மக்கள் மன்றத்திலேயே பொறுப்புணர்ச்சி பற்றி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்றால், உண்மையிலேயே நான் வேதனைப்படுகிறேன். மிக வருத்தப்படுகிறேன். இன்றைக்கு இந்த மந்திரி சபை நம்முடைய நம்பிக்கையை எல்லாம் நிர்மூலமாக்கி நாட்டு மக்களின் உண்மையான பிரச்னைகளையெல்லாம் தவறுதலாக இழுத்து விட்டிருக்கிறது. உணவு விவகாரம் ஒன்று போதாதா? உணவுப் பிரச்னை ஒன்றே இன்றைக்கு ஒரு அறைகூவலாக விளங்குகிறதே. கள்ள மார்க்கெட்காரர்களின் மனதிலே, கள்ளச்சந்தை நிலப் பிரபுக்களின் கரத்திலே, சமூகத் துரோகிகளின் கரத்திலே நாட்டை சிக்க வைத்துவிட்டு இந்த சர்க்கார் இன்றைக்கு யாருக்கோ கையாளாக, அவர்களுக்கு உடந்தையாகக் கேவலமாக இருக்கிறது. ஆட்சிப் பொறுப்பில்லாதவர்கள் இன்றைய தினம் தங்கள் பதவிகளைக் கட்சி நலன்களுக்கு சொந்தக்காரர் நலன்களுக்கு பயன் படுத்துகிறார்கள். இந்த வகையில் சர்க்கார் இந்த மாநில மக்களுடைய நம்பிக்கையை இழந்த சர்க்காராக மாறிவிட்டது. பல்வேறு காரியங்களிலே தவறியிருக்கிறார்கள். தமிழிலே பாட மொழியை வைத்தார்களா? இல்லை. ஆந்திர அரசியலின் குளறுபடிகளின் கதாநாயகனை சஞ்சீவி ரெட்டி சேலத்து சந்தைக் கடையிலே நின்றுகொண்டு சேலம் இரும்பாலை இல்லை என்று கூவினார். தட்டிக்கேட்டீர்களா என்றால் இல்லை, இப்படி பல்வேறு



22nd October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

பிரச்னைகளிலே திறமைக் குறைவை காட்டியிருக்கிறார்கள். 11-30 a.m.
அமைச்சர்களிடத்தில் நம்பிக்கை இல்லை. மக்களுடைய நம்பிக்கையை இழந்து விட்டார்கள். மக்கள் குரலே மகேசன் குரல். ஆகவே கனம் பக்தவத்சலம் அவர்களைத் தலைமையாகக் கொண்ட இந்த மந்திரி சபையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கின்ற இந்த தீர்மானத்தை முன்மொழிகிறேன். மற்ற அங்கத்தினர்கள் இந்த அமைச்சர் அவை மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தி பேச இருக்கிறார்கள் என்று கூறி முடிக்கிறேன்.

* **புலவர் கா. கோவிந்தன்:** கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் தலைமையில் இயங்கி வருகிற தமிழ்நாட்டு மந்திரிசபை மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. மதியழகன் கொண்டு வந்திருக்கிறார்கள். அதையொட்டி அவர்கள் நம்பிக்கையிழந்ததற்குக் காரணமாக குறைபாடுகள் என்ன என்ன செய்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த நாட்டிலும் முன்னேற்றம் வேண்டுமென்றால் கல்வி இல்லாமல் முடியாது. கல்வி முறையில் ஒரு நேரான கொள்கையை இந்த அரசு மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சுமத்துகிறேன். இந்த அரசு எப்படி எப்படியெல்லாம் நிலைதடுமாறி இருக்கிறது என்பதை நன்றாக சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். இந்த மந்திரிசபையில் கல்வித் துறையைக் கனம் முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது குறித்த குற்றச்சாட்டுகளை பின்னால் கூறுகிறேன். ஒரே கட்சியைச் சார்ந்த மந்திரி சபை பதினைந்து ஆண்டு காலமாக ஆட்சியில் இருந்து வந்திருக்கிறது. இந்தப் பதினைந்து ஆண்டு காலத்திலே கல்வி முறையில் என்ன என்ன மாறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று பார்க்க வேண்டும். அவிநாசிலிங்கம் செட்டியார் காலத்தில் இருந்த முறை சுப்ரமணியம் காலத்தில் இல்லை. சுப்பிரமணியம் மேற்கொண்ட கல்வி முறை முதலமைச்சர் பக்தவத்சலம் காலத்தில் இல்லை. ஒரே மந்திரி சபையில் இலாகா மாறினால், அமைச்சர் மாறினால் கல்வித் திட்டம் மாறுகிறது, ஏன்? கல்வித் துறையில் செய்யும் மாறுபாடு ஒரு தலைமுறையையே கெடுத்துவிடும் என்பதை உணர வேண்டும். தங்கள் மனதில் சரியென்றுபட்டால் போதும், மாற்றிவிடுகிறார்கள். நிபுணர்கள் கருத்து மாறுபட்டிருக்கும், அதையும் பொருட்படுத்துவதில்லை. இன்றைக்கு ஆளும் கட்சி அங்கத்தினர்கள் கல்வி பற்றி சொல்லும்போது சொல்லுவார்கள். கிராமத்திற்கு ஒரு பள்ளி நகரத்திற்கு ஒரு உயர்நிலைப்பள்ளி, மாநகரத்திற்கு ஒரு கல்லூரி என்று அமைந்திருக்கிற மந்திரிசபை மீதா நம்பிக்கையில்லையென்று கூறுவது என்று கேட்பார்கள். வகுப்புக்கொரு ஆசிரியர் கொடுக்கிறோம் என்கிறார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது? இது சம்பந்தமாக நான் முன்பு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். பதிலளித்த முதலமைச்சர் 8,000 ஆசிரியர்களை நியமிக்கிறோம் என்று சொன்னார்கள். நடந்ததா? அதைப்பற்றி அமைச்சரிடம் கேட்டபோது இடம் கிடையாது, நிதி கிடையாது இதையெல்லாம் பார்த்துதான் ஆசிரியர்களைப் போட வேண்டும்; அப்படி

[புலவர் கா. கோவிந்தன்] [22nd October 1964

போடும் அதிகாரம் கல்வி இயக்குநருக்கு கொடுத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். 8,000 ஆசிரியர்களை வகுப்புக்கு ஒருவர் என்று போடப் போகிறோம் என்று சொல்லிவிட்டு நிதி இல்லை, இடமில்லை என்றால் அது எந்த அளவுக்குப் பொருந்தும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். சொல்லும்போது சிற்றூர் தோறும் பள்ளிகள் அமைத்துவிட்டோம் என்கிறார்கள். என்ன நிலையில் இருக்கிறது? வடை சுட ஆசைப்பட்ட ஒருவன் 'பருப்பு வாங்க வேண்டும், எண்ணெய் வாங்க வேண்டும், விறகு வாங்கவேண்டும்' என்னிடத்தில் என்ன இருக்கிறது என்றால் அந்த வடையில் பொத்தல் போட விரல் இருக்கிறது என்று சொல்வார்களே அதுபோல, பள்ளிக்கூடம் வைக்க கட்டடம் கொடுங்கள், நிதி கொடுங்கள், எல்லாம் கொடுத்தால் ஆசிரியரை அனுப்புகிறோம் என்கிறார்கள். இதனால் என்ன பிரயோசனம்? நகரங்களில் உயர்நிலைப்பள்ளி வேண்டுமென்றால் கட்டடம் கொடுத்து ரூபாய் 5,000-ம் கொடு என்கிறார்கள். கல்லூரி வைக்க வேண்டுமென்றால் ஐந்து லட்சம் ரூபாய் கொடு என்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் கனம் ஜீவரத்தினம் முற்பட்டார்கள். இரண்டு லட்சம் கொடுக்கப்பட்டது. ஆனால் பாக்கி மூன்று லட்சம் கொடுக்க முடியவில்லை. வேலூருக்கு கல்லூரி இல்லை. குடியாத்தத்தில் ஐந்து லட்சம் கொடுத்துவிட்டார்கள். அங்கே கல்லூரி வந்துவிட்டது. கல்லூரி எங்கு தேவையோ அங்கே ஏற்படவில்லை.

அடுத்தபடியாக மிக அழகாகச் சொல்லுவார்கள், மதிய உணவு, சீருடை, ஆதாரக் கல்வி இவையெல்லாம் இல்லையா என்று கேட்பார்கள். உள்ளே சென்று பார்த்தால்தான் உண்மை புலப்படும். மதிய உணவை பற்றி ஆராய திரு. சுப்பிரமணியக் கவுண்டர் தலைமையில் ஒரு குழு அமைத்தார்கள். அந்தக் குழு ஊர் ஊராக, பள்ளி பள்ளியாகச் சென்று பார்த்து ஒரு அறிக்கை கொடுத்தார்கள். அவர்கள் கண்டுபிடிப்பில் என்ன கூறியிருக்கிறார்கள்? அவர்கள் கண்டுபிடித்த ஊழல்கள் என்ன என்ன? பொய்க் கணக்குகள் எழுதப்பட்டுள்ளன. பத்து நாளைக்கு உணவு கொடுத்தால் இருபது நாளைக்கு என்று பொய்க் கணக்கு எழுதுகிறார்கள். பத்து மாணவர்களுக்கு உணவளித்தால் இருபது மாணவர்கள் என்று பொய்க்கணக்கு எழுதி வைத்துவிடுகிறார்கள். இதற்கு ஒரு பாராட்டா? சீருடை என்றால் என்ன? பெற்றோர்களிடமிருந்து வெள்ளைச் சட்டையும், கலரிலே பாவாடையும், வெள்ளை சட்டையும், கலர் நிஜாரும் தைத்துக் கொண்டுவரச் செய்வதை, மந்திரிகளைக் கொண்டு திருப்பித் தருவது. இதற்கு ஒரு விழா, அதற்கு அமைச்சர் போய்விட்டு வருகிறார். பள்ளிச் சீரமைப்பு என்கிறார்கள், இதற்குக் கொண்டுவந்த பொருளெல்லாம் கொடுக்கப்பட்ட பொருளே அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். மாநாடு நடந்த பிறகு இந்தப் பொருள்களெல்லாம் பள்ளிக்கூடத்தில் இருப்பதில்லை. என்ன என்ன பொருள்கள் என்பதற்கு பள்ளிக்கூடத்தில் பட்டியல் இல்லை. இதெல்லாம் சுப்ரமணியக் கவுண்டர் கமிட்டி குறிப்பிட்ட கண்டுபிடிப்புகள். இதற்கு ஒரு விழா. இந்த சீரமைப்பு மாநாட்டிற்கு ஜனாதிபதியையே கொண்டு வந்துவிடுகிறார்கள். எல்லாம் விளம்பரம்.



22nd October 1964] [புலவர் கா. கோவிந்தன்]

ஆதாரக்கல்வித் திட்டம். அதைப்பற்றிச் சொன்னால் முதலமைச்சர் அவர்களுக்கு ஆத்திரம் வருகிறது. நடைமுறையிலே எப்படி யென்று பார்க்க ஒரு கமிட்டியைப் போட்டார்கள். அந்தக் கமிட்டி சென்று எவ்வளவு ஊழல்கள் இருக்கின்றன என்று கூறி இருக்கிறது. அந்தக் கமிட்டியின் குறிப்பு இங்கே இருக்கிறது. அதை எடுத்துச் சொன்னால், அவர் ஒரு "எக்ஸெண்ட்ரிக்" என்கிறார். யார் "எக்ஸெண்ட்ரிக்" சர்க்காருக்கு விரோதமான குறிப்புக் கொடுத்தார்கள் என்றால், அவர் ஒரு "எக்ஸெண்ட்ரிக்". தெரிந்துதானே போட்டார்கள். போடும்போது யார் என்று தெரியவில்லையா?

பள்ளிகளைத் திறக்கும்போது கட்டிடங்கள் நன்றாக இருக்கின்றனவா என்று பார்த்து பள்ளிக்கூடம் ஆரம்பிக்கவில்லை. பல இடங்களிலே கூரைக்கொட்டகைகளிலே பெஞ்சில்லாத மணல் தரைகளில் குழந்தைகள் உட்கார வைக்கப்படுகிறார்கள். பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டதாக ரிக்கார்டுகளில்தான் இருக்கும். பள்ளிக்கூடம் கிடையாது. கூரை கிடையாது. இத்தகைய ஒரு அவல நிலையைத்தான் நாட்டில் பார்க்கிறோம். பச்சிளம் குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு சென்று பலியானதை நாம் இன்னும் மறந்திருக்க முடியாது. மதுரை மாநகர நிகழ்ச்சி என்றைக்கும் நம் மனதில் இருக்கும். தலைவாரி பூ முடித்து நல்ல ஆடையணி புனைந்து பள்ளிக்குச் சென்று வா என்று தன் குழந்தையை பள்ளிக்கு அனுப்பி வைத்து மாலை வழி பார்த்து நின்றவருக்கு பிணக்காட்சிதான் கிடைத்தது என்றால் இந்தச் சர்க்கார் நேர்மை உணர்ச்சி உள்ளவர்களானால் அன்றைய தினமே ராஜினாமா செய்திருக்க மாட்டார்களா? இந்தக் குற்றத்திற்கு யார் பொறுப்பாளி?

"மாரிபொய்ப்பினும், வாரி குன்றினும்
இயற்கையல்லன செயற்கையில் தோன்றினும்,
காவலர்ப் பழிக்கும் இக்கண்ணகல் ஞாலம்"

இதுதான் விதி. இந்தக் கொள்கையை நேர்மை உணர்ச்சியுள்ள அரசாங்கமாக இருந்தால் ஏற்றுக்கொண்டிருக்காதா?

அடுத்து சென்ற ஆண்டு எஸ்.எஸ்.எல்.ஸி. பரிட்சை நடந்தது. பரிட்சைக்கு முன் தினமே கேள்வித்தாள்கள் வெளியாயின. இங்கிருந்து, என்ன கேள்விகள் வரப்போகின்றன என்பதை வேறு பல நகரங்களில் உள்ளவர்களுக்கு டிரங்கால் மூலம் தெரிவித்திருக்கிறார்கள். இப்படிக் கேள்வித்தாள்கள் பரிட்சை தினத்திற்கு முன்கூட்டியே வெளியாகிவிட்டனவே, இதற்கு யார் பொறுப்பாளி என்று கேட்டதற்கு நேர்மை உள்ள அரசாங்கமாக இருந்தால் அவ்வாறு வெளியானதற்கு வருத்தம் தெரிவித்து அதை விசாரிப்பதாகவாவது சொல்லியிருப்பார்கள். ஆனால் அந்த மாதிரியாக வெளியாகவே இல்லை. ஆசிரியர்கள் தங்கள் நுண்ணறிவின் காரணமாக இன்னின்ன கேள்விகள் வரக்கூடும் என்று ஊகித்து வெளியிட்டிருக்கிறார்கள் என்று சொல்லி தப்பிக்கப் பார்த்திருக்கிறார்கள் என்றால் அமைச்சருடைய வார்த்தையில் நாட்டு மக்கள் நம்பிக்கை வைத்திருப்பார்களா?

[புலவர் கா. கோவிந்தன்] [22nd October 1964

"மெய்யுடை ஒருவன் சொல் இன்மையினால்
பொய்போலும்மே, பொய்போலும்மே,
பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே, மெய்போலும்மே"

என்பது போல தமக்கு உறுப்பினர்கள் பலம் இருக்கிறது. எதை வேண்டுமானாலும் சொல்லலாம், நாம் பொய்யைச் சொன்னாலும் அது மெய்யாகிவிடும் என்றால் அது மெய்யாகி விடுமா? இதை யூகித்துப் பார்க்க வேண்டும். இப்படிச் சொல்லுகின்ற இந்தச் சர்க்காரின் மீது எப்படி நம்பிக்கை வைக்க முடியும். அடுத்த படியாக தமிழ் தமிழ் என்று சொல்லுகிறார்களே தவிர தமிழுக்கே மறைமுகமாக துரோகம் அளிக்கும் காரியங்களில்தான் மறைமுகமான வஞ்சகமான செயல் முறைகளில் ஈடுபடுகிறார்கள் என்பதை பல உதாரணங்களோடு எடுத்துக்காட்ட முடியும். "எங்களுக்கு தமிழின் மீது பற்று இல்லையா? நாங்கள் பாரதியாரைப் போற்றினோமே" என்கிறார்கள். இவர்கள் பாரதியாரை எதற்காகப் போற்றினார்கள்? அவர் நல்ல இலக்கிய கர்த்தா என்று போற்றினார்கள். பாரதியார் ஒரு நல்ல இலக்கிய கர்த்தாதான். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இவர்கள் பாரதியாரைப் போற்றியது அவர் தேசீயப் பாடல்கள் புனைந்து தந்தார் என்பதற்காகத்தான். நாட்டு விடுதலையைப் பாராட்டினார். ஆகவே இவர்கள் அவரைப் பாராட்டியிருக்கலாமே தவிர தமிழ்ப் புலவர் என்றால் தேசத் துரோகிகளைப் போல இவர்கள் நினைப்பது உண்மையில் மிக்க வருந்தத்தக்க விஷயமாகும். இவர்கள் இன்றைய தினம் செய்கிற காரியங்கள் எல்லாம் தமிழ் வளர்ச்சிக்கு கொஞ்சம்கூட உதவி செய்யாது. மும்மொழித் திட்டம் என்று கொண்டுவந்தார்கள். இங்குள்ளவர்கள் வேண்டுமானால் ஹிந்தியையும் சேர்த்து மும்மொழித் திட்டமாக அமைகிறதே தவிர வடநாட்டில் உள்ளவர்கள் யாரும் தென்னிந்திய மொழியைக் கற்க முற்படுவதில்லை. திரு. சுப்பிரமணியம் இருந்தபொழுது இந்தி பரிட்சையே வேண்டாம் என்று வைத்திருந்தார்கள். ஆனால் திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக வந்தபொழுது இந்தியை எல்லா மாணவர்களும் கட்டாயமாக படிக்கக்கூடிய வகையில் கட்டாயமாக படிக்க வேண்டும் என்று நேர்முகமாகச் சொல்லவில்லை. படிக்கிறவர்கள் படிக்கலாம். எஸ். எஸ்.எல். ஸி. தேர்வுக்கு அதன் மார்க்குகள் கணக்கிடப் படாவிட்டாலும் மேல் படிப்புக்கு சேரும்போது மொத்த மார்க்கின் எண்ணிக்கையோடு அது கூட்டிக்கொள்ளப்படும் என்று மறைமுகமாகச் செய்து நயவஞ்சகமான முறையில் இந்தி மொழியைப் புகுத்தி விட்டார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். அப்படிப்பட்ட இந்த அரசின் மீது எப்படி நம்பிக்கை வரும்?

இனி அடுத்து கூட்டுறவுத் துறையை எடுத்துக் கொள்வோம். எங்களுடைய மாவட்டம் கூட்டுறவுத் துறைக்கு பெயர்போன மாவட்டம். கூட்டுறவுத் துறைதான் இந்த நாட்டின் பொருளாதாரத்தைச் சீராக பரவலாக ஏற்படுத்தும் என்பதாக பற்பல வகைகளிலே பிரச்சாரம் செய்கிறார்களே தவிர இன்றைய தினம் யார் கூட்டுறவுத் துறையில் நுழைகிறார்கள். நிச்சயமாக நான்



22nd October 1964] [புலவர் கா. கோவிந்தன்]

சொல்வேன், கூட்டுறவுத் துறையில் நுழைகின்ற பெரும் பகுதியினர் நல்ல எண்ணத்தோடு நுழைவதில்லை. கூட்டுறவுத் துறையில் நுழைந்தால் எப்படி எந்த வகையில் கொள்ளை லாபம் அடிக்கலாம் என்றே நினைக்கிறார்கள். உதாரணமாக ஒன்று சொல்லுகிறேன். எங்கள் மாவட்டத்தில் அரக்கோணத்தில் ஒரு கூட்டுறவு சொசைட்டி இருக்கிறது. அதன் தலைவர் ஒரு பெரிய புள்ளி. வட ஆற்காடு காங்கிரஸ் கட்சியிலே பெரிய தலைவர். இந்தக் காங்கிரஸ் மந்திரி சபை 1952-லே ஆட்டம் கொடுத்தபோது, கைகொடுத்து உதவியவர்; இந்த மன்றத்தின் உதவி சபாநாயகராகவும் இருந்து பணி புரிந்தவர். அவர் அந்த சொஸைட்டி பணத்தை கையாண்ட முறையைப் பற்றி சர்க்காருடைய கவனத்திற்கு நேரிடையாகக் கொண்டு வந்தபோதிலும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது. குறிப்பாக ஒரு நிகழ்ச்சியை நான் சொல்ல விரும்புகிறேன். அவர் சென்னையிலிருந்து அந்தக் கூட்டுறவு ஸ்டோர் மானேஜருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்.

Dear Bhaktha,

I have arranged a car for Rs. 10,000. You better draw money from stores and go over here tomorrow morning by Cochin Express. You better ask M. Janakiraman to issue a cheque and get money at once. I am waiting for you. Come at once.

Yours,

22—3—1962. B. B. Naidu.

23—3—1962-ல் பாங்கியிலிருந்த கரண்ட் அக்கௌண்டில் இருந்த 8,196 ரூபாயிலிருந்து ரூ. 8,000 எடுத்திருக்கிறார்கள். அடுத்து கேஷ் ஆன் ஹாண்டிலிருந்து 2,000 ரூபாய் போட்டு ஆக பத்தாயிரம் எடுக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் 1962, பிப்ரவரியில். ஆனால் இந்த நிகழ்ச்சி 1962, மார்ச்சில் நடந்திருக்கிறது. தேர்தல் சமயத்தில் அந்த ஊரிலிருந்த மாடர்ன் மைசூர் கபேயில் இவர் ஒரு அக்கௌண்ட் வைத்துக்கொண்டிருந்தார். 1,478 ரூபாய் 77 பைசா அந்தக் கணக்கில் பற்றாகியிருக்கிறது. 1962 ஏப்ரலில், அந்த ஓட்டலுக்கு கூட்டுறவு ஸ்டோரிலிருந்து 715 ரூபாய்க்கு மளிகைச் சாமான்கள் அனுப்பியிருக்கிறார். ஆனால், அது பி. பி. நாயுடு அவர்கள் பெயரில் பற்று எழுதப்படாமல், ஓட்டல் பெயரில் பற்றாகியிருக்கிறது. 24—11—1963-ல் அந்த சொசைட்டியின் மகா சபைக்கூட்டம் ஜெனரல்பாடி மீட்டிங்கிற்கு சப்ளை செய்த உண்வுப் பண்டங்களுக்காக 135 ரூபாய் பணம் அந்த ஓட்டலுக்கு கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே 715 ரூபாய் மளிகைச் சாமான் பெற்றுக்கொண்டதற்கு அந்த கபேக்காரர் பணம் கட்டாமல் பற்றில் இருக்கும்போது இந்த ஜெனரல் பாடி மீட்டிங்கில் அன்னத் தொகையைக் கொடுத்திருக்க வேண்டியதில்லை. அடுத்து 4—7—1962-ல் ரூ. 3,318·18 அதிகக் கையிருப்பு இருந்தும் 5—7—1962-ல் கரண்ட் அக்கவுண்டிலிருந்து ரூ 3,900 வாங்கியிருக்கிறார்கள். இந்த முறைகேட்டை மறைக்க 13—7—1962-ல் தனராஜ் என்பவருக்கு 1,500 ரூபாயும், 18—7—1962-ல் சின்னதல் நாயுடு என்பவருக்கு 1,500 ரூபாயும் கொடுத்துக் கணக்கெழுதி

யுள்ளார்கள். இது கடன் கொடுக்கும் ஸ்தாபனம் அன்று. அவ்வாறு கொடுக்கப்பட்ட பணம் 30—9—1962-லும் 14—11—1963-லும் வரவு வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணம் 14—11—1963-ல் நிலஅடமான பாங்கியில், பி. பி. நாயுடு வாங்கிய ரூ. 7,000 கடனிலிருந்துதான் ஈடு செய்யப்பட்டுள்ளது. 9—1—1962-ல் இருந்து சிலகாலம் வரை 4,000 ரூபாய் கையிருப்பு அதிகமாக இருந்திருக்கிறது. அந்தப் பணம் தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. அவருக்குத் தேர்தல் நிதிக்காக அவர் நண்பர்கள் கொடுத்த செக்குகளும் அவர் இந்தச் சபையின் சபாநாயகராக இருந்து பெறப்பட்ட சம்பளப் பணத்திற்கான செக்கும், அந்த ஸ்டோரில் போடப்பட்டு 'காஷ்' ஆகியிருக்கிறது. 14—2—1962-ல் ரூ. 499-60 வரவு; 21—2—1962-ல் ரூ. 499-60 வரவு; 1—3—1962-ல் ரூ. 499-60 வரவு; 10—3—1962-ல் ரூ. 1,468-56 வரவு. இதிலே திருவண்ணாமலை திரு. டி. எஸ். பத்திராசலம் பிள்ளை அவர்கள் அளித்த செக்கும் இருப்பதாக அறிகிறேன்.

அடுத்து, ஜீப் நிகழ்ச்சியைப்பற்றி நண்பர் தர்மலிங்கம் அவர்கள் முன்பு ஒரு முறை இதே மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அரக்கோணம் நகராட்சித் தேர்தல் 19—3—1964-ல் நடந்திருக்கிறது. சொசைட்டிக்கு சம்பந்தப்பட்ட எம்.டி.ஜே. 3331 ஜீப்பில் 15—3—1964-ல் நகராட்சி மன்ற உறுப்பினர்களை எடுத்துக் கொண்டு மைசூருக்குச் சென்றிருக்கிறார்கள். கிருஷ்ண ராஜசாகர் அணையில் அணைக்கட்டு நுழைவுக்கான சீட்டு 15—3—1964 தேதியிட்ட 12267 எண், நுழைவு சீட்டு, அந்த ஜீப்புக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி 15—3—1964 அன்றே அமைச்சர், மாநிலப் பதிவாளர்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த ஜீப் அங்கே போவானேன்? இதிலே சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா?

நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் இந்த இடத்தில் இல்லை. என்னுடைய நண்பர் எஸ். ஜே. ராமசாமி அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள் 'அரக்கோணம் தாலூகா சித்தேரியில் விவசாய பாங்கில் 30,000 ரூபாய் கையாடல் செய்யப்பட்டது சர்க்காருக்குத் தெரியுமா?' என்று கேட்டார்கள். அமைச்சர் அவர்கள் ரொம்பக் கெட்டிக்காரத்தனமாக 'அங்கே ஒரு விவசாய பாங்கு இல்லை' என்று பதில் சொல்லிவிட்டார்கள். அங்கே ஒரு கிரெடிட் சொசைட்டி இருக்கிறது; அதிலே இந்த ஊழல் நடந்திருக்கிறது. அதிலே, 1957-ல் செத்துப் போனவர்களுக்கெல்லாம் 1962-ல் கடன் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குச் செயலாளர் பழனி. போலீஸ் இலாகாவிலே பணியாற்றி ஊழல் காரணமாக விலக்கப்பட்டவர். பி. பி. நாயுடுவுக்கு வேண்டியவர். அவர்கள் வீட்டிலே பணியாற்றியவர். இப்படிப்பட்ட ஊழல்கள் நடைபெற்றிருந்தும் தங்களுக்கு வேண்டியவர்கள் என்பதற்காக நடவடிக்கைகள் எதுவும் எடுக்காமல் விட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சர்க்கார் மீது நாட்டு மக்களுக்கு நம்பிக்கை இருக்க முடியுமா?

உணவுப் பிரச்சினைபற்றிப் பலரும் பேசினார்கள். இந்த மந்திரி சபை ஒரே கட்சியின் கையில் 17 ஆண்டு காலமாக இருந்து





வருகிறது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் 565 கோடி ரூபாயைப் போட்டாகிவிட்டது. சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் எவ்வளவோ பணத்தை வாங்கியாகிவிட்டது. கட்டாயச் சேமிப்புத் திட்டத்தின் கீழ் பணத்தை வாங்கிச் செலவழித்தாகி விட்டது. எலக்ட்ரிசிடி போர்டு மூலமாகவும் கடன் வாங்கியாகி விட்டது. ப்ராவிடண்ட் பணத்தை எல்லாம் எடுத்தாகிவிட்டது. முன்பு போடப்பட்டதை விட இப்போது பல மடங்கு வரி போட்டாகிவிட்டது. இவ்வளவையும் செய்து விட்டு இந்தச் சபையின் முதலமைச்சர் அவர்களும் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களும், 'போராட்டம் உணவுக்கா அல்லது மொழிக்கா?' என்று கேட்கிறார்கள். ஒரு அரசாங்கத்தின் முதற் பெரும் கடமை தன்னுடைய நாட்டு மக்களுக்குச் சோறு போடுவது. சுந்தரமூர்த்தி நாயனார், "நெய்விரவு கறிசோறு முப்போதும் வேண்டும்" என்று கேட்கிறார். நாட்டு மக்கள் அதைக் கேட்கவில்லையே! ஒரு வேளை சோறு போடுங்கள் என்று தானே கேட்கிறார்கள். நியாய விலைக் கடைகளிலே 17 காசு குறைவாக விற்கிற காரணத்தால் அங்கே வாங்கி விற்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 17 காசுக்காக அந்த நிலைமை நாட்டில் இருக்கிறது என்பதைக் கூற அமைச்சர் அவர்கள் வெட்கப்பட வேண்டாமா? விலைவாசி ஏறியிருக்கிறது என்று நாங்கள் முன்பு சொன்ன நேரத்தில் 'எங்கே விலை ஏறியிருக்கிறது?' என்று கேட்டார்கள். இப்போதுதான் அவர்களுக்கு அரிசி விலை ஏறியிருப்பது தெரிகிறது. ஏனைய பொருள்களின் விலை ஏற்றம் தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் இனி ஒரு போராட்டம் தொடங்கி 'பருப்பு விலை ஏறியிருக்கிறது' எனக் கோஷமிட்டுச் சிறை சென்றால்தான் அரசாங்கத்திற்குப் பருப்பு விலை ஏறியிருக்கிறது என்பது தெரியும் போலும். தமிழ் நாட்டில் எல்லா உணவுப் பொருள்களின் விலையும் ஏறியிருக்கிறது. அதைக் காலம் கடந்து இப்போது உணர்ந்து சில திட்டங்களைச் செயல் படுத்த முன் வந்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டத்திற்கு வியாபாரிகள் ஒத்துழைக்கவில்லை. கூட்டுறவுத் துறையைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது; அதுவும் சரியில்லை, சர்க்கார்தான் ஏற்றுக் கொள்ளவேண்டும் என மாறி மாறி அறிக்கைகள் விட்டுக் கொண்டு பாதிக் கிணறு தாண்டிக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் நெல்லுக்கு ரூ. 30-12 என்று நிர்ணயித்தது. ஆனால் 37 ரூபாய், 38 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சர்க்கார் நிர்ணயித்த விலை 30 ரூபாய் 12 காசாக இருக்கும்போது 37 ரூபாய்க்கு விற்கப் படுகிறது என்று சொல்ல இந்தச் சர்க்கார் வெட்கப்பட வேண்டாமா? இவ்வாறு விற்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி விட்டு வியாபாரிகள் செய்கிறார்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம். நம்முடைய முதலமைச்சர் அவர்களே நெல் வியாபாரியாக இருந்தாலும் இப்படிப்பட்ட நிலைமையில் 30 ரூபாய்க்கு விற்கமாட்டார்கள்; 38 ரூபாய்க்குத்தான் விற்பார்கள். அப்படிப் பட்ட ஊழல்களுக்கு வழிவகைகள் செய்து விட்டு, ஓட்டைச் சட்டத்தைச் செய்து விட்டு அவர்கள் மீது பழி, இவர்கள் மீது பழி என்று பழி சுமத்திக் கொண்டிருக்கிறார்கள். உணவுத்

[புலவர் கா. கோவிந்தன்] [22nd October 1964

திட்டத்திலே ஊழல்களைக் கொண்டிருக்கிற இந்தச் சர்க்கார் மீது, கல்வித் திட்டத்திலே நேர்மையற்ற இந்தச் சர்க்கார் மீது நம்பிக்கை இல்லை, நம்பிக்கை இல்லை என்று கூறி முடிக்கின்றேன்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையில் கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் சர்க்காரின் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். மற்றொரு அங்கத்தினர் கம்யூனிஸ்டு கட்சி அங்கத்தினர் உணவுப் பிரச்சனையில் அரசாங்கத்தினுடைய பொறுப்பை வலியுறுத்துவதற்காக மற்றொரு பிரேரணையைக் கொடுத்திருக்கிறார்கள். இரண்டு பிரதான கட்சிகள் அவர்களுடைய பிரதிநிதிகளின் மூலமாக இரண்டு விதமான பிரேரணைகளைக் கொடுத்திருப்பதில் இருந்தே நானும் இந்த நாடும் ஊகித்துக் கொள்ளக் கூடியது, கனம் கலியாணசுந்தரம் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய உணவுப் பிரச்சினை சம்பந்தப்பட்டது என்று நினைக்கிறபோது உணவுப் பிரச்சினையைப் பற்றி மற்றொரு தனியான பிரேரணையைக் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. உணவுப் பிரச்சினை என்பது இந்த ராஜ்ய அரசாங்கத்தோடு மாத்திரம் நின்று விடக் கூடியது அல்ல என்பதைப் பழமையான அனுபவம் பெற்ற கலியாணசுந்தரம் அவர்கள் உணர்ந்துதான் மற்றொரு தீர்மானம் கொடுத்திருப்பதாகக் கருதுகிறேன். உணவுப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் இந்த ராஜ்ய அரசாங்கத்திற்கு மட்டும் தனியாகப் பொறுப்பு இல்லையென்பதை இந்த நாடு ஏற்றுக்கொள்ளும். உணவுப் பிரச்சினை என்பது ஒரு தேசியப் பிரச்சினை. தேசத்தின் எல்லையைக் கடந்த சர்வதேச ரீதியில்கூட தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும். நண்பர் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை வலுவாக எதிர்க்கிறேன். இந்த ராஜ்ய மந்திரிசபை மீது பரிபூரண நம்பிக்கை இந்தச் சபைக்கும், இந்த ராஜ்ய மக்களுக்கும் உண்டு என்பதை நம்புகிறேன். கடந்த ஒரு வருஷ காலத்திற்கு முன்புதான் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிற இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று கூற அவ்வளவு அவகாசம் கிடைத்து விட்டதா? 1958-ம் வருஷத்திலே ஒரு நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொடுத்திருக்கக் கூடிய எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கடந்த ஆறு வருஷ காலத்திற்கு மத்தியிலே இந்த ராஜ்ய அரசாங்கம் நேராக நடந்து கொண்டிருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறார்களா? சிறந்த தேச பக்தியும், நல்ல நிர்வாகத் திறனும், அமைதியும் பொறுமையும் கொண்டிருக்கக் கூடிய ஒரு தலைவரின் கீழ் இந்த மந்திரிசபை அமைக்கப்பட்டிருக்கிறது. குறுகிய கால அவகாசத்திற்குள்ளாக உணவுப் பிரச்சினையைத் தீர்த்து விட முடியாது. இந்த ராஜ்யம் இந்த ஒரு வருஷ காலத்திற்குள்ளாக எடுத்திருக்கக் கூடிய நடவடிக்கைகள், நல்ல காரியங்களை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். பல ஆண்டு காலமாக, காங்கிரஸ் கட்சியினர் பொறுப்பு ஏடுத்துக்கொண்டு பல வருஷ காலமாக கிராமத்தில்



22nd October 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

இருக்கக்கூடிய கிராம உத்யோகஸ்தர்களுக்கு பல நன்மைகளை செய்து கொடுக்கவேண்டும் என்று முயற்சித்து வந்தது. அது இப்போது சித்தி பெறவும் செய்தது. இந்த நாட்டினுடைய ஒற்றுமைக்காக நாம் பல்வேறு பிரச்னைகள் தீர்க்கவேண்டியிருந்தது. முக்கியமாக கிராம அமைப்போடு ஒட்டியிருக்கின்ற கிராம உத்யோகஸ்தர்களுடைய பிரச்னை கடந்த 15 வருடகாலமாக இருந்து வந்தது. சமீபத்தில் தான் அது தீர்த்து வைக்கப்பட்டது. அது மிகவும் பெருமைக்குரிய விஷயம். இதை இந்த காங்கிரஸ் சர்க்கார் தான் தீர்த்து வைத்தது என்று நிச்சயமாக பெருமைப்பட்டுக்கொள்ள முடியும். 12-00 noon.

மேலும், பல காலமாக, தாலூகா ஆபீஸ், கலெக்டர் ஆபீஸ், ஆர். டி. ஓ. ஆபீஸ்களில் எல்லாம் சாதாரணமாக கிராம மக்கள் போய் தங்கள் தேவைகளுக்கு பரிகாரம் தேடுவதற்காக வருகின்ற மக்களுக்கு போதுமான விவரங்களை தெரிவிப்பதற்கும், அவர்களுடைய குறைகளை தீர்த்துக்கொள்வதற்கு வசதியாகவும் இருக்கும்படியான அளவில், இதற்காக தனியாக சிப்பந்திகளையும் அதிகாரிகளையும் நியமித்திருப்பது அனைவருக்கும் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். தாலூகா ஆபீஸாக இருந்தாலும் சரி, ஆர். டி. ஓ. ஆபீஸாக இருந்தாலும் சரி, கலெக்டர் ஆபீஸாக இருந்தாலும் சரி, தங்கள் விரும்புகின்ற விஷயங்களை தெரிந்து கொள்வதற்கென்று வசதி செய்து கொடுத்திருப்பது இந்த அரசாங்கத்தின் முயற்சிதான் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. அந்தந்த பகுதியிலுள்ள மக்கள் தங்களுடைய கஷ்டங்கள் என்ன என்பதை தெரிவிப்பதற்கும், வாரத்தில் ஒரு நாள் ஒதுக்கி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அதற்கான பரிகாரங்களை தேடிக்கொள்வதற்கும் வசதி செய்து கொடுத்தது இந்த அரசாங்கம் தான் என்பது மிகவும் பெருமைக்குரியது.

அடுத்தபடியாக நாம் பிரத்யட்ச கண்ணோடு பார்த்துக் கொண்டிருப்பது, சாதாரணமாக மனிதனுடைய வாழ்க்கையில், நாட்டில் எங்கும் லஞ்சம் இருந்து கொண்டிருக்கிறது என்கின்ற பேச்சுத்தான். அப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டை அப்படிப்பட்ட பிரச்னையை ஒரு தேசியப் பிரச்னையாக எடுத்து, அதில் மிக சிரத்தை எடுத்து அதற்கான எல்லா விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இது பாராட்டுதற்குரியது அல்லவா? நாட்டு மக்களின் நம்பிக்கை பெருக வேண்டும் என்பதிலும், அரசாங்கத்தின் பேரிலுள்ள நம்பிக்கை பெருக வேண்டும் என்பதிலும் அரசாங்கத்திற்கு பெரிய அக்கரை இருந்து கொண்டிருக்கிறது. மிக முக்கியமான பிரச்னை லஞ்ச ஒழிப்புப் பிரச்னை. அந்த அளவுக்கு தீவிரமான கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக மக்களுக்குப் புதியதொரு தெம்பு ஏற்பட்டு வருகிறது என்று தான் நான் கருதுகிறேன்.

நாட்டிலே செலவுகள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன, அதோடு இருக்கின்ற சட்டத்தில் பல ஓட்டைகளை அடைக்க வேண்டும், அதோடு அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானங்கள்

சரியாக வருவதில்லை என்று அறிந்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதற்காக வர்த்தக வரி இலாகாவினர் பல நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்றால் அதற்காக அரசாங்கத்தின் மீது ஏன் எரிந்து விழவேண்டும். இந்த ராஜ்ய அரசாங்கம் பாரபட்சம் இல்லாமல் காங்கிரஸ்காரர்கள் என்றோ அல்லது வேறு எந்தவிதமான கட்சிக்காரர்கள் என்றோ பார்க்காமல் கண்டிப்பான நிலைமையில் இருந்து நடவடிக்கை எடுத்து வந்தார்கள் என்பதை எல்லோரும் அறிவோம். விற்பனை வரி இலாகாவினருக்கு இப்போது இரண்டு மாத காலம் கெடு கொடுத்து, தவறான வழியில் யாராவது கணக்கு கொடுக்காமல் இருப்பார்களேயானால் கணக்கு கொடுக்க முன் வந்தால், அபராதம் இல்லாத நிலைமையில் வரிகளை கொடுத்துவிட முடியும் என்ற எண்ணத்தில் தான் இரண்டு மாத காலம் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர வரி கொடுப்பதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக முயற்சி எடுக்கவில்லை. இல்லையென்றால் சக்தி இருக்கிறவர்கள் ஹைக்கோர்ட், வேண்டுமானால் சுப்ரீம் கோர்ட் வரையிலும் போக முடியும். இத்தகைய முயற்சி நமது ராஜ்யத்தில் மட்டும் எடுக்கவில்லை. மற்ற சில தேசங்களில் இம்மாதிரி நடந்திருக்கிறது. நேற்று நான் சுட்டிக்காட்டியது போல், பெல்ஜியம் நாட்டிலும் இம்மாதிரி ஒரு வருஷ கால நீடிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதன் காரணமாக நல்லவர்களுக்கு நாம் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதை குற்றம் என்று யாரும் சொல்ல முடியாது. எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் எத்தனை நஷ்டங்கள் வந்தாலும் அரசாங்கத்தின் வருமானம் சரியாக கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வர்த்தக வரி இலாகாவினர் தங்களுடைய உயிரையும் பணயம் வைத்து வரிகளை ஏய்த்துக் கொண்டிருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றால் அதற்காக இந்த அரசாங்கத்தை பாராட்டுவதற்குப் பதிலாக பழிப்புக்குரியதாக ஆக்குவது நல்லதா என்று கேட்க விரும்புகிறேன். இப்போது இந்தத் துறையில் கொடுத்திருக்கின்ற சலுகைகளை எல்லாம் நல்லவர்கள் நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை.)

இன்றைய தினம் 5, 6 மாதகாலத்திற்குள் இருமுறை அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும், சிப்பந்திகளுக்கும், கிராம உத்யோகஸ்தர்களுக்கும் கொடுத்திருக்கும் சலுகைகளை எண்ணிப் பார்த்தால், இவைகள் எல்லாம் அரசாங்கமே முன் வந்து கொடுத்த சலுகையாகும் என்பதை நாம் கண்டு கொள்ள முடியும். பாரபட்சமற்ற முறையில்தான் இந்த உதவிகள் எல்லாம் செய்து கொடுக்கிறது அரசாங்கம். இத்தகைய நிலைமையில் இந்த ராஜ்ய அரசாங்கம் இது போன்ற பல துறைகளிலும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தான் நான் சொல்ல விரும்புகிறேன்.





தொழில் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு, மேலும் என்னென்ன தொழில்களில் ஈடுபடலாம் என்பதை சொல்வதற்காக, யார் யார், என்னென்ன தொழில்களில் ஈடுபடலாம் என்பதை சொல்வதற்காக தனியாக அதிகாரியை இந்த அரசாங்கம் நியமித்திருக்கிறது. அது மட்டுமல்ல, கண் கலங்கி கடல் கடந்து தாயகத்தை நோக்கி வந்திருக்கும் தமிழர்களின் கண்ணீரை துடைப்பதற்கு ஓரளவுக்கு பல வியாபார நோக்கங்களை தெளிவுபடுத்தி, அவர்களுக்கு திட்டம் வகுத்துக்கொடுத்து ரீகாபிடுலேட் செய்வதற்கு இந்த ராஜ்ய அரசாங்கம் பல திட்டங்களை வகுத்திருக்கிறது. இதையெல்லாம் இந்த அரசாங்கம் செய்திருக்கிறதே தவிர வேறு யாரும் செய்யவில்லை.

எனக்கு முன்பு பேசிய கனம் புலவர் கோவிந்தன் அவர்கள் தமிழ் ஆசிரியர்களுக்கு இருக்கிற நிலையைப்பற்றி சொன்னார்கள். இன்றைக்கு இந்தி ஆசிரியர்கள் முறையிடுவது என்னவென்றால், ஹைஸ்கூல்களில் தமிழ் ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படும் சலுகை தங்களுக்கு கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லி முறையிடுகிறார்கள். அதாவது ஒரு வாரத்தில் 17 மணி நேரத்தில் 24 பீரியட் பாடம் எடுப்பவர்களுக்கு முதல் கிரேட் கொடுக்கப்படவேண்டும் என்றிருக்கிறது. இவ்விதம் இந்தி ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படவில்லை. அவ்விதம் கொடுக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் தமிழ் ஆசிரியர்களுக்கு முதல் கிரேட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் தமிழ் வித்வான்கள். தமிழாசிரியர்கள் உரிய இடம் பெற்றிருக்கிறார்களா இல்லையா என்ற கேள்வியை எழுப்ப விரும்புகிறேன்.

தற்போது இருக்கின்ற உணவு பிரச்னையை மட்டும் ஆயுதமாக வைத்துக் கொண்டு எதிர்கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதனால் தற்போதைய நிலைமை வைத்துக் கொண்டு, பஞ்ச நிலைமையை மூலதனமாக வைத்துக்கொண்டு இதை எழுப்பியிருக்கிறார்கள். நாஷனல் காரக்டர் என்ற எண்ணத்தோடு இதைப் பார்த்தால் இவ்விதம் தீர்மானம் கொண்டு வந்திருப்பது சரியா என்று கேட்க விரும்புகிறேன். அந்த எண்ணத்தில் பார்க்கும் போது நாட்டில் நடக்கின்ற பல நிகழ்ச்சிகளையும் நாம் ஆராய்ந்து பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். அந்த முறையில் நான் ஒரு குற்றச் சாட்டை சொல்ல விரும்புகிறேன். அதை தெரிவித்தால் யாரும் தவறாக நினைத்துக் கொள்ளக்கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே இந்த ராஜ்யத்திலுள்ள அமைச்சர்கள் ஓடோடியும் சென்று, பறந்து சென்று, எந்தெந்தப் பகுதிகளுக்குச் செல்ல முடியுமோ அந்தப் பகுதிகளுக்குச் சென்று, அவசரமாகக் கஷ்டத்திற்கு பரிகாரம் காணவேண்டுமென்று, தஞ்சைக்குச் சென்று, மதுரைக்கு சென்று, ஆந்திராவுக்குச் சென்று, பரிகாரம் காண முயற்சித்து, திரட்டிய உணவு தானியத்தை தலைநகருக்குக் கொண்டு வர முயற்சித்தபோது, எப்படி அவைகளை வேகமாகக் கொண்டு செல்லலாம் என்ற முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது, தானியங்கள் வருவதற்கு

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [22nd October 1964

உரிய வழிவகைகளை காண முயற்சித்துக்கொண்டிருக்கும்போது ரயில் பாதையில் ஃபிஷ் ப்ளேட்டுகளைக் கழற்றி எறியும் முயற்சி இருக்குமானால், இந்தக் காரியத்தை எந்தச் சிறியவர் செய்தாலும் எத்தகைய உள் நோக்கத்தோடு செய்தாலும் கூட, இன்றைக்கு நம் மாநிலத்தில் ஆங்காங்கு பஞ்ச நிலைமையால், உணவுப் பிரச்னையால் ஏற்பட்டிருக்கிற கஷ்டத்தை மூலதனமாக ஆக்கிக்கொள்ள முற்பட்டிருக்கும் எதிர்க்கட்சிகளில் தூண்டுதல் நேரடியாக இல்லாவிட்டாலும், மறைமுகமாக உதவவில்லையா என்று கேட்க விரும்புகிறேன். இன்றைய தினம் ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கிற உணவுப் பற்றாக்குறைக்கு காரணத்தை ஒவ்வொரு அமைச்சரும் மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆந்திர ராஜ்ய முதல் அமைச்சர் மதிப்புப் படி ஏறக்குறைய 24 கோடி ரூபாய்க்கு உணவு தானியங்கள் ஆந்திராவில் நஷ்டம் ஏற்பட்டதால்தான் இந்த கஷ்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பது. மற்றொரு அமைச்சர் மதிப்பீட்டின்படி, 15 கோடி ரூபாய் அளவுக்கு தானியங்கள் அழிந்துபோயிருக்கின்றன என்பது. இந்த நஷ்டமெல்லாம் இதற்குக் காரணமாக இருக்கலாம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் புதிதாக சாகுபடிக்குக் கொண்டுவரவேண்டிய நிலம் 1.9 மிலியன் ஏக்கர், அதாவது 190 லட்சம் ஏக்கர் நிலத்தை பயிர் நிலமாகச் செய்து சாகுபடிக்குக் கொண்டுவரவேண்டும் என்று அரசாங்கம் திட்டத்தைத் தீட்டியது. பல்வேறு கஷ்ட நஷ்டங்களால், அப்போதைக்கப்போது ஏற்பட்ட இயற்கைக் கோளாறுகள் காரணமாக 150 லட்சம் ஏக்கர் அளவுக்கு தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் கொண்டுவர முடியும் என்ற முடிவுக்கு சர்க்கார் வந்திருக்கிறது. இவைகளெல்லாம், இதைப் போன்ற பல்வேறு அம்சங்களெல்லாம் இந்த நிலைமைக்குக் காரணமாக இருக்கலாம். உலகத்தில் ஏற்பட்டிருக்கிற மாற்றங்கள், எதிரிகளுடைய நடவடிக்கைகள், அவர்களுடைய வேகமான பேச்சுக்கள் இவைகளால் நாட்டில் எல்லையில் ஆபத்து காத்திருக்கும்போது, ஒரு அரசியல் ஸ்டண்ட்டாக உள்நாட்டிலே, எப்படியோ ஏற்பட்டிருக்கக் கூடிய, தாற்காலிகக் கஷ்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இதையே மூலதனமாக ஆக்கிக்கொண்டு ராஜ்ய அரசாங்கத்தை குற்றம் சாட்ட வந்திருப்பது தேசத்திற்கும் தேச பந்தோபஸ்திற்கும் உதவி செய்வதாக ஆகுமா என்று கேட்க விரும்புகிறேன். ராஜ்ய அரசாங்கம் செய்து வந்திருக்கிற பல்வேறு நல்ல காரியங்கள் ஒருபுறம் இருக்க பல்வேறு நல்ல அம்சங்களாக, அடையாளங்களாக இந்த ராஜ்ய சரித்திரத்திலேயே நல்ல பொன் எட்டிலே பொறிக்கும் அளவுக்கு மதுரையில் சர்வகலாசாலை அமைப்பதில், அதற்கு ஒரு முயற்சி, அதிலே ஒரு சித்தி, அதிலே ஒரு வெற்றி, அத்தகைய முறையிலே முயற்சி செய்து சித்தி, வெற்றி பெற்றிருக்கிறது இந்த ராஜ்ய அரசாங்கம். இந்த ராஜ்ய அரசாங்கம் நல்ல பணி செய்து நல்ல நிலைமைகள் ஏற்படக் கூடிய நிலையில் நல்ல பலன் ஏற்படவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் கண்ணோடும் கருத்தோடும் காத்துவரக் கூடிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அற நிலையங்கள், அந்த அற நிலையங்களில் இருந்து வருகிற பொருள்கள் பக்தர்களுக்கும் ஆலய வளர்ச்சிக்கும்



22nd October 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

மாத்திரம் இல்லாமல் எந்த அளவுக்கு அதை சமுதாயத்திற்குச் சொந்தமாக ஆக்கி நல்ல பணிகளுக்கு உபயோகப்படுத்தலாம் என்று அவர்கள் எடுத்துக்கொள்ளுகிற எண்ணம், இந்த ராஜ்ய அரசாங்கத்தின் நல்ல நோக்கு, இவைகளெல்லாம் உதவியாக இருப்பதால் தான் பெண்களுக்கு என்று தனியாக ஒரு கல்லூரி அற நிலையத் துறையின் உதவியைக் கொண்டு குற்றாலத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. இந்த முயற்சி மேலும் மேலும் தொடரும். தொடர்ந்து பல ஹைஸ்கூல்கள், கல்லூரிகள், மற்ற ஸ்தாபனங்கள் எல்லாம் எண்ணற்ற ஸ்தாபனங்களை நிறுவ இவைகள் உதவியாக இருக்கலாம். இவைகளெல்லாம் சமீப காலத்தில் ஒரு வருஷ கால கட்டத்திற்குள் எடுத்துக்கொண்ட நல்ல அம்சங்கள் என்று நான் சொல்லுவேன். பிரத்தியட்சக் கண்கொண்டு, சித்தாந்தத்திற்கு மாத்திரம் மனதைப் பறி கொடுக்காமல் இந்த ராஜ்ய அரசாங்கம் எடுத்து வந்திருக்கிற முயற்சிகளைக் குற்றச்சாட்டாகக் குறிப்பிட்டார்களே அவற்றுள் கூட, ஆதாரக் கல்வியில் கூட ஒரு பிரத்தியட்சக் கண்ணோட்டம் ராஜ்ய அரசாங்கத்திற்கு இருந்து வருகிறது இது வரையிலும் சமீப நாட்களுக்குள் ராஜ்யம் முழுவதிலும் ஹையர் எலிமெண்ட்டரி ஸ்கூல்ஸ் அத்தனையையும் ஆதாரக் கல்வியின் கீழே மாற்றி அமைக்கப்பட்டிருக்கவேண்டும். முன்பு ஏற்றுக் கொண்டிருந்த நோக்கத்திலே செய்து விட்டார்களா? எந்த அளவுக்குச் சாத்தியம் என்று உணர்ந்து எந்தப் பள்ளியையும் ஆதார கல்விப் பள்ளிகளாக மாற்றாத அளவுக்கு நிதானமாக வேலை செய்கிறார்கள். அதே போல இது வரையிலும் உணர்ச்சி வசப்பட்டு கல்லூரிகளில் தமிழை போதனா மொழியாகக் கொண்டு வர வேண்டும் என்று பரீட்சார்த்தமாகச் செய்து பார்த்து இப்போது எது சரி என்கிற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் வந்திருக்கிற முடிவு ஆங்கிலம் இருக்க வேண்டும், கல்லூரிகளில் ஆங்கிலத்தை எடுத்து விட்டு அதனால் குழந்தைகளின் வாய்ப்பு கெட்டு விடக் கூடாது, ஆகையால் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று அதற்கு வழி செய்தது. தமிழுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் அளவுக்கு ஆங்கிலத்தோடு தமிழையும் படிக்க வேண்டும் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதோடு மூன்றாவது வகுப்பிலிருந்தே கூட ஆங்கிலத்தை ஆரம்பித்து கற்றுக் கொடுக்க வேண்டும் என்று வழி வகை செய்திருப்பது பிரத்தியட்சக் கண் கொண்டு, நடைமுறைக்கு உகந்த முறையில் செய்யும் வழிவகைகளில் ஈடுபட்டிருப்பதற்கு உதாரணமாகும். இது போன்ற நிலையில் இன்று ஏற்பட்டிருக்கக் கூடிய தாற்காலிகக் கஷ்டத்தைப் போக்குவதில் அவர்களுக்கு அன்பாக யோசனைகளைச் சொல்லி செய்யத் தவறியவற்றை சுட்டிக் காட்டுவதற்குப் பதில், உணவுப் பற்றாக்குறையை மூலதனமாகக் கொண்டு, பயிர் செய்து அறுவடை செய்வதில் எதிர் கட்சிகள் ஈடுபடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். யாரோ சிலரை வக்கீலாக, சர்க்கார் வக்கீலாக, அவர்களை ஏன் நியமிக்கக் கூடாது என்று திரு. கோவிந்த சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். திரு. செங்கல்வராயனைக் குறிப்பிட்டார்கள். அவர்களை நியமித்திருந்தால், திருமதி அம்மு சுவாமிநாதன் அவர்களுடைய உறவினர் கோமதி சுவாமிநாதன்.

அவர் காங்கிரஸ்காரர், செங்கல்வராயன் அவர்களும் காங்கிரஸ்காரர் என்று எதிர்கட்சிக்காரர்கள் கூறுவார்கள். தகுதியை உணர்ந்து யார் யார் எந்த எந்தப் பதவிக்குத் தகுந்தவர்கள் என்று பார்த்துத் தான் நியமனம் செய்கிறார்கள். இந்த சபைக்கும், இந்த ராஜ்ய முழுவதற்கும் இந்த ராஜ்ய அரசாங்கமானது குறுகிய காலத்தில் நல்ல பல காரியங்களைச் செய்து முறையாக நடத்தி வருகிறது. இந்த முறை தொடர்ந்து நடைபெறவேண்டும். தாற்காலிகமாக ஏற்பட்டிருக்கும் சிரமங்கள் பனி போல மறைந்து போகும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த சபைக்கும் அந்த நம்பிக்கை இருக்கும் என்று கூறி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை நான் மறுக்கிறேன், எதிர்க்கிறேன் என்று கூறி எனது வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. உ. சண்முகம்:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் மதியழகன் அவர்கள் சர்க்கார் மீது கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லை என்கிற தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து தங்கள் மூலம் சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நண்பர் மதியழகன் கொண்டுவந்திருக்கிற தீர்மானம் நண்பர் செல்வராஜன் குறிப்பிட்டதைப் போல நாட்டிலே ஏற்பட்டிருக்கிற பஞ்சத்தை அடிப்படையாக வைத்து அதை எங்கள் கட்சிக்கு மூலதனமாக ஆக்கிக்கொள்ளும் ஈன புத்தியில் கொண்டுவரப்பட்டதல்ல என்று நான் துவக்கத்திலேயே கூறிக் கொள்ள விரும்புகிறேன். நாட்டிலே பஞ்சம் இல்லை என்று நண்பர் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் முதல் அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அரிசி பற்றாக்குறை இல்லை, அரிசிப் பஞ்சம் இல்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் அடிக்கடி கூறி வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாதம் என்னவென்றால், அரிசி பற்றாக்குறை இல்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்களே, அந்த வாதத்தை ஏற்றுக்கொள்வது என்றால், இந்த நாட்டில் இந்த மாதிரி அமளி என் ஏற்பட்டிருக்கிறது என்பது பற்றி எங்களுக்கு அருள் கூர்ந்து பதில் சொல்லுங்கள். நாங்கள் கேட்டால் முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறார். 'பதுக்கல் இல்லை என்று சொல்லமாட்டேன். இல்லாமலும் இல்லை என்று நான் சொல்ல முடியம்' என்று விடுகதை போடுவதுபோல் பதில் சொன்னார். பள்ளிக்கூடத்தில் சிறுவர்கள் விடுகதை போடுவதுபோல், சட்டமன்றத்தில் முதல் அமைச்சர் அவர்கள் விடுகதை போடுவார்களேயானால் அதை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை என்று தங்கள் மூலம் முதல் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

நாட்டில் உணவு பற்றாக்குறை இல்லை என்று ஒத்துக்கொள்கிறார்கள், முதல் மந்திரி அவர்களே சொல்லுகிறார்கள். இவர்கள் கொடுத்த புள்ளிவிவரங்கள் தவறு என்று இவர்கள்



வெளியிட்ட புத்தகத்திலிருந்தே நான் நிரூபிக்கிறேன். இவர்கள் எங்களுக்குக் கொடுத்த புள்ளிவிவரங்கள் தவறா அல்லது இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் தவறா என்று எனக்குப் புரியவில்லை. புள்ளிவிவரம் பசியைப் போக்காது என்பது எனக்குத் தெரியும். அரசாங்கம் புள்ளிவிவரத்தைக் காட்டியே நாட்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். அதுவும் தவறான புள்ளிவிவரங்கள். அந்தப் புள்ளிவிவரங்கள் தவறானவை என்று சர்க்கார் கொடுத்திருக்கும் புத்தகங்களிலிருந்தே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னிடம் இரண்டு புத்தகங்கள் இருக்கின்றன மாதிரிக்காக. 'செகண்டு பைவ் ஈயர் பிளான் ஸிம்போஸியம்' என்பது ஒரு புத்தகம். இன்னொரு புத்தகம் 1961-62-ல் நிதி மந்திரியாக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கொடுத்த வரவு செலவு திட்ட புத்தகம். இரண்டு புத்தகங்களில் ஒன்று 1958-ல் வெளியானது. இன்னொன்று 1961-62-ல் வெளியானது. ஒரு புத்தகத்தைப் பார்க்கும்பொழுது 1955-56-ல் நாட்டில் உணவு எவ்வளவு விளைந்தது என்பதற்கு புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். இன்னொரு புத்தகத்திலும் புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். முதல் புத்தகத்தில் சொல்லும்பொழுது 1955-56-ல் தமிழ் நாட்டில் அரிசி விளைச்சல் 25½ லட்சம் டன் என்று சொல்லுகிறார்கள். இன்னொரு புத்தகத்தைப் பார்க்கும்பொழுது 1955-56-ல் 29½ லட்சம் டன் என்று சொல்லியிருக்கிறார்கள். எதை நாம் நம்புவது? இப்படி முரண்பட்ட புள்ளி விவரம் எப்படி கிடைத்தது சர்க்காருக்கு? எங்கிருந்து கொடுத்திருக்கிறார்கள் இந்தப் புள்ளிவிவரத்தை? நிலைமை அப்படியிருக்கும்பொழுது, எப்படி இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியும் என்று கருதுகிறார்கள்? எப்படி நம்பிக்கை வைப்பது? நண்பர் திரு. செல்வராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள். மதுரை யுனிவர்ஸிடி ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள், பாராட்டினோம். இலவசக் கல்வி அளித்திருக்கிறார்கள் என்று கூறினார்கள், பாராட்டினோம். அதற்காக இவ்வளவு பெரிய தவறை நாட்டு மக்களுக்கு செய்திருக்கிற அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியுமா? நம்பிக்கை வைக்க வேண்டுமா? ஆடும், நாகமும், பாயும் புலியும் அழகாகத் தான் இருக்கும்! அழகாக இருக்கிறதே என்று எடுத்து வைத்து கொஞ்ச முடியுமா? நஞ்சை எப்படி மறுக்காமல் இருக்க முடியும்? வெறுக்காமல் இருக்க முடியும்? அரசாங்கம் இப்பேர்ப்பட்ட தவறான, முரண்பட்ட புள்ளிவிவரங்களைக் கொடுத்து நாட்டு மக்களை ஏமாற்றுகிறது. நாட்டில் போதுமான அரிசி விளைச்சல் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. 1961-62 என்று கருதுகிறேன், கனம் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இதே மன்றத்தில் ஆற்றிய உரையில் தமிழ் நாட்டு மக்கள் 3 கோடி மக்கள், 3 கோடி மக்களுக்கு ஒரு ஆளுக்கு ஒரு நாளைக்கு ஒரு பவுண்டு அரிசி என்று கணக்கிட்டு 48 லட்சம் டன் அரிசி தேவை என்று கணக்குப் போட்டார். அது தவறு என்று யாரும் கருதமாட்டார்கள். தமிழ் நாட்டு ஜனத்தொகை 3½ கோடி என்று வாதத்திற்கு எடுத்துக்கொண்டாலும், 56 லட்சம் டன்

[திரு. ப. உ. சண்முகம்] [22nd October 1964

அரிசி நமக்குத் தேவை, உணவு உற்பத்தி கூடுதலாக இருக்கிறது, 56 லட்சம் டன்னுக்கு அதிகமாக இருக்கிறது விளைச்சல் என்று சொல்லப்பட்டது. அப்படியிருந்தும், விலை குறையவில்லையே? கடைத்தெருவில் அரிசி கிடைக்க வில்லையே? இதற்கு யார் பொறுப்பாளி? பத்திரிக்கைச் செய்தி ஒரு நாள் பார்த்தோம், மாஜி மந்திரி ஒருவருடைய கிடங்கிலிருந்து 1,000 மூட்டை வெளிவந்தது என்று. உள்ளபடியே நான் சொல்லுகிறேன், பதுக்கல்காரர்கள் பதுக்கி வைத்திருக்கிறார்கள். பதுக்கிவைத்திருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஏன் தவறிவிட்டது? இந்தப் பதுக்கல்காரர்களைப் பிடித்தால் சர்க்கார் அவர்களிடமிருந்து கண்டிரோல் விலைக்கு வாங்கிக் கொள்கிறார்கள், அவ்வளவு தான். ஏன் அந்த அரிசியை, பதுக்கி வைத்த அந்த அரிசியை பறிமுதல் செய்யக்கூடாது? பதுக்கல்காரர்கள் சமூக துரோகிகள். இவ்வளவு பெரிய நாட்டில் இயற்கையாக பற்றாக்குறை இல்லாதபொழுது, செயற்கை முறையிலே பற்றாக்குறை ஏற்படும் நிலையில் பதுக்கி வைக்கக் கூடியவர்கள் போட்டி சர்க்கார் நடத்துகிறார்கள் என்று தானே அர்த்தம்? வேறு என்ன அர்த்தம்?. இந்த போட்டி சர்க்காரை முறியடிக்க முடியாத நிலையில் இந்த அரசாங்கம் இருக்குமானால், இந்த அரசாங்கம் இருப்பதைவிட போவது நல்லது அல்லவா?

நான் இன்னொன்று சொல்லுகிறேன். திரு. மு. கருணாநிதி எங்கே வெளியே போய் சாப்பிடுகிறார், திரு. அரங்கண்ணல் எங்கே போய் சாப்பிடுகிறார், திரு. நெடுஞ்செழியன் எங்கே போய் சாப்பிடுகிறார் என்று பார்க்க ஒற்றர்களை இந்த அரசாங்கம் அனுப்புகிறது. இந்த அரசாங்கம் பதுக்கல்காரர்களை தேடுவதற்கு இந்த ஒற்றர்களை பயன்படுத்துவதற்கு தவறிவிட்டது. அப்படியிருக்கும்பொழுது இந்த அரசாங்கத்தை எப்படி நம்ப முடியும்? எனக்கு முன்னால் பேசிய புலவர் கோவிந்தன், திரு. மதியழகன் ஆகியோர் கூறிய குற்றச்சாட்டுகளை திரு. செல்வராஜன் அவர்கள் மறுக்க முடிந்ததா, மறுக்கத் தயாராக இருக்கிறார்களா என்று நான் கேட்கிறேன்.

நாட்டில் ஏற்பட்டிருக்கிற உணவுப் பஞ்சம், உணவுப் பற்றாக்குறை காரணமாக, க்யூ வரிசையில் ஏழை எளிய மக்கள் நிற்பதை காரில் போகிறவர்கள் பார்க்கும்பொழுது கண்ணீர் வரவில்லையா? ஏழை, எளிய மக்களை கள்ள வியாபாரிகள், கள்ளச் சந்தையில் விற்றுப் பிழைப்பவர்கள் என்று ஈனத்தனமாக ஏசுவது கேவலம் இல்லையா? சோற்றுக்கு நிற்கிற ஏழை எளிய மக்களை இப்படி பேச எப்படி மனம் வந்தது? வெட்கம் இல்லையா? ஜில்லா, ஜில்லாவாக சுற்றுகிறார்கள் என்று திரு. செல்வராஜன் அவர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் 'பால் ரூம்' டான்ஸுக்கு வருகிறார்கள். இந்த நாட்டில் நடக்கக்கூடிய இந்தக் கொடுமையை நாம் எங்கும் காணமாட்டோம். ரோம் நாடு பற்றி எரிந்தபொழுது வீணை வாசித்தாராம் மன்னர் அதைவிட இந்த அமைச்சர்கள் எந்த வகையில் நல்லவர்கள்?



22nd October 1964] [திரு. ப. உ. சண்முகம்]

நான் உள்ளபடியே கேட்கிறேன். நாட்டில் இவ்வளவு கடும் பஞ்சம் ஏற்பட்டிருக்கும்பொழுது கேலிப் பேச்சா? சினிமாவுக்கு க்யூ வரிசையில் நிற்கவில்லையா என்று கேட்கிறார்கள்? இப்பொழுது க்யூ வரிசையில் அரிசிக்காக கால் கடுக்க நிற்கும் அதே மக்கள் 1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் க்யூ வரிசையில் கால் கடுக்க நிற்கும்பொழுது, இந்த அரிசிப் பஞ்சத்தின் கொடுமை அவர்களுக்கு நினைவுக்கு வாராதுபோகும் என்று நினைக்கிறீர்களா? நினைவுக்கு வந்தே தீரும். க்யூ வரிசை இதற்கு ஒன்று தான் என்பது இல்லை. இந்த பயங்கர நிலைமை ஏற்பட்டதற்கு அரசாங்கம் தான் பொறுப்பு ஏற்றுக் கொள்ளவேண்டும். வேறு யாரைச் சார்ந்தது இந்தக் குற்றம்? தமிழ்நாட்டு அரசாங்கத்தைச் சார்ந்தது தான் இந்தக் குற்றம். திரு. காமராஜ் அவர்கள் ஆட்சியில் 1958-ல் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இப்பொழுது திரு. பக்தவத்சலம் ஆட்சி நடக்கும்பொழுது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்திருக்கிறோம். இந்த இடைவெளியில் நம்பிக்கை இருந்ததா என்று கேட்கலாம். அதற்கும் நான் பதில் கூறுவேன். எதிர்க்கட்சி இருப்பதே அரசாங்கத்தின் கொள்கைகளில் நம்பிக்கை இல்லாத காரணத்தினால்தான். அதை உணரவேண்டும். எதிர்க்கட்சி என்று இருப்பதினாலே அரசாங்கத்தின் கொள்கையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதுதான் அர்த்தம். அப்படி நம்பிக்கை இருந்தால் எதிர்ப்பக்கத்தில் நாங்கள் இருக்கவேண்டும்.

**கனம் சபாநாயகர்:** அப்பொழுது இன்னொரு எதிர்க்கட்சி இருப்பதற்கு தேவை இல்லையா?

**திரு. ப. உ. சண்முகம்:** அப்பொழுது அந்தக் கட்சிக் கொள்கையில் நம்பிக்கையில்லை என்று பொருள்படுகிறது. எதிர்க்கட்சிக்கு இலக்கணம் இதுதான். இங்கு எதிர்கட்சியாக உட்கார்ந்து இருப்பதினாலேயே நம்பிக்கையில்லா தீர்மானத்தின் கேள்விக் குறி என்பதுதான் பொருள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் எங்கேயோ பேசும்போது—நான் படித்தேன், நான் கேட்கவில்லை மன்னித்துக்கொள்ளவும்—'தரம் உள்ள எதிர்க்கட்சி இல்லை. அதனால் நான் பதில் சொல்லுவது மிக எளிது' என்று சொன்னாராம். தரம் உள்ள எதிர்க்கட்சி இல்லை என்று சொல்லுகிறாரே. ஆளும் கட்சியினருக்கு என்ன தரம் இருக்கிறது? ஆளும் கட்சி தரம் உள்ள ஆளும் கட்சியினராக இல்லையே? (எதிர்க்கட்சி அங்கத்தினர்கள்: 'ஹியர், ஹியர்'). திரு. மதியழகன், புலவர் கோவிந்தன் சொன்ன குற்றச்சாட்டுகளுக்கும், இன்னும் நானும் மற்றவர்களும் சொல்லப்போகிற குற்றச்சாட்டுகளுக்கும் பதில் சொல்ல முடியுமா? இல்லையே? அப்படியில்லை என்றால் கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள். எப்படி நடந்துக்கொள்ளவேண்டும் எதிர்க்கட்சியினர் என்று காட்டுவதற்கு 1967-ல் உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கிறோம், நடந்து காட்டுங்கள் தரம் இல்லாத

எதிர்க்கட்சி என்று எங்கேயோ பேசிவிட்டால் மட்டும் போதாது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்லுகிற குற்றச்சாட்டுகளிலிருந்து அரசாங்கம் நழுவி விடுகிறது.

நான் இன்னொரு குற்றச்சாட்டை, பயங்கர குற்றச்சாட்டை முன்பு இதே மன்றத்தில் சொன்னேன். அதற்கு கனம் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் சரியாக பதில் சொல்லவில்லை, 'கவனிக்கிறேன்' என்று சொல்லி தட்டிக் கழித்து விட்டார். இன்றைக்கும் அதே குற்றச்சாட்டை எடுத்துக் கூற விரும்புகிறேன். பெரம்பூருக்கு அருகே மின்சாரபோர்டு ஊழியர்களுக்காக வீடுகள் கட்டுவதற்காக முன்பு அந்த இடத்தை சர்க்கார் வாங்குவதாக இருந்தது. சர்க்கார் வாங்கப் போகிறது என்று தெரிந்த உடனேயே ஒரு வியாபாரி அதை ரூ. 1,20,000-க்கு வாங்கினார். அவர் வாங்கி இரண்டு மாதங்களுக்குப் பின்பு சர்க்கார் அதே இடத்தை வாங்கிற்று. என்ன விலைக்கு? ரூ. 1.20,000-க்கு வியாபாரி வாங்கிய அந்த இடத்திற்கு இரண்டு மாதம் கழித்து ரூ. 3, 60,000 கொடுத்து சர்க்கார் வாங்கியிருக்கிறார்கள். வெட்கமாக இல்லையா? யார் வீட்டுப் பணம்? உள்ளபடியே சொல்லுவதற்கு வருத்தப்படுகிறேன்.

MR. SPEAKER: The hon. Member can put it effectively. But he should not talk in the manner in which he is now talking.

**திரு. ப. உ. சண்முகம் :** பொது மக்கள் வரிப்பணம் அல்லவா? அதை இப்படி வாரி விடுவது எந்த முறையில் சரி? எவ்வளவோ விஷயத்தில் இந்த அரசாங்கம் முறை தவறி நடக்கிறது. எவ்வளவோ குறைபாடுகள் இருக்கின்றன. பல உதாரணங்களை எங்களால் எடுத்துக் காட்ட முடியும்.

தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் கல்வித் தரம் எந்த விதத்திலும் குறையாது என்று இன்று காலையில் பதில் சொல்லும் பொழுது முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். முன்னாள் மந்திரி திரு. சி. சுப்பிரமணியத்தை நான் பாராட்டுகிறேன் என்று சொன்னால், அவர் இருக்கும்பொழுது நான் பாராட்டினேனா என்று கேட்கலாம். அவர் போட்டுவந்த திட்டங்களில் இதாவது இருந்ததே என்று நினைத்தேன். இந்தி பரீட்சை எழுதினாலும் எழுதலாம், எழுதாமல் விட்டாலும் விடலாம் என்று திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் போட்டுவிட்டுப் போய்விட்டார். திரு. பக்தவத்சலம் வந்தபொழுது அப்படி ஒரு பரீட்சையே இருக்க வேண்டாம், எதற்கு அந்தப் பரீட்சை, பரீட்சையே வேண்டாம் என்று சொன்னார்கள். பத்திரிகைகள் இவ்விதமாக செய்தி வெளியிட்டன. எனக்குத் தெரியாது. 'இந்தி பரீட்சை தேவையில்லை, சென்னை சர்க்கார் முடிவு' என்ற செய்தி பத்திரிகையில் வெளிவந்தது. இந்தச் செய்தி டெல்லிக்கு எட்டியது. டெல்லியிலிருந்து பிறகு இங்கே என்ன தாக்கீது வந்ததோ தெரியவில்லை. பிறகு 'கட்டாயம் இந்தி பரீட்சை எழுத வேண்டும்' என்று உத்தரவு போடப்பட்டது. 'சும்மாக இருக்கும் சங்கை ஊதிக் கெடுத்தானும்' என்பது போல, இங்கே என்ன ஆயிற்று? என்



இப்படி மாற்றப்பட்டது என்று கேட்டால், மாணவர்களுக்கு ஒரு சலுகை செய்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். என்ன சலுகை? மற்ற ஸப்ஜெக்டில் மார்க் குறைந்துவிட்டால், இந்தியில் 12-30 p.m.
வாங்கும் மார்க்கை அதில் சேர்த்துப் போட்டு, அவர்களுக்கு பாஸ் போடப்படும். இதிலே கல்வித் தரம் குறையாதா? எந்த வகையிலே குறையாது என்று சொல்லுகிறார்கள்? எப்படி நாம் இதை ஒத்துக்கொள்ள முடியும். கணக்கில் ஒரு பையன் 10 மார்க்கு வாங்கியிருக்கிறான். ஹிந்தியில் 15 மார்க்கு வாங்கியிருக்கிறான். பத்தும் பதினைந்தும் சேர்த்து இருப்பத்தைந்து என்று போட்டும் அவனை பாஸ் செய்யா விட்டால் அவன் கணக்கில் பாஸ் செய்தவன் ஆகிவிடுவானா? இதனால் கல்விதரம் வளர்ந்து விடுமா? இப்படியெல்லாம் செய்தவன் மூலம் தமிழ் நாட்டுக்கு இருக்கிற பெருமைக்கே உலை வைத்துவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சுமத்த விரும்புகிறேன். கல்வித்தரம் பலவகையில் சீரழிந்து போகிறதை தடுத்து நிறுத்த இந்த அரசாங்கம் முன் வராது எப்படியோ இந்தி மார்க்கையும் கூட்டிப்போடுகிறோம். நீங்கள் பாஸ் செய்து விடுங்கள். அதற்கும் தகுதியில்லையென்றால் கேள்வித் தாள்களையும் கடையில் விற்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதை முன்கூட்டியே வாங்கிப் பார்த்து பாஸ் செய்துவிடுங்கள் என்று சொல்லுகிற இந்த அரசாங்கத்தின் மீது எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்.

எனக்கு முன்னே கூட்டுறவு அமைச்சர் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. எனக்கு முன் பேசிய புலவர் கோவிந்தன் அவர்கள் பேசிய போது வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கூட்டுறவு சொசைட்டியின் தலைவர் அந்த சொசைட்டியின் பணத்தில் ரூ. 10,000 கையாடல் செய்திருப்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். இதே பணக் கையாடல் சம்பந்தமாக அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் மீது வழக்கு தொடரப்பட்டு அது விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நான் அதைப் பற்றி இப்பொழுது பேசவில்லை. ஆனால் திரு. கோவிந்தன் கூட்டிக் காட்டியதுபோல இந்த ஒரு குறிப்பிட்ட சொஸைட்டியின் ஏராளமான அளவுக்கு பணக்கையாடல் செய்திருந்தும் அதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தும் கூட ஏன் இவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் பயப்படுவானேன், தயங்குவானேன், அவரை ஏன் கைது செய்யவில்லை. அவரைக் கைது செய்யாததற்கு ஒரே ஒரு காரணம், அவர் காங்கிரஸ்காரர் என்பதுதானே? இந்தக் குற்றச்சாட்டுக்கு இந்த அமைச்சர் அவை எவ்வாறு சமாதானம் சொல்ல முடியும். கூட்டுறவு சங்கங்கள் பல இந்த ராஜ்யத்தில் இருக்கின்றன. எத்தனையோ சங்கங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் மந்திரியின் மேஜை மீது தூங்கிக் கொண்டிருக்கின்றன. ஆதாரம் இருக்கிறதோ இல்லையோ, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சம்பந்தப்பட்ட சொசைட்டியாக இருந்தால் பிடி பிடி என்கிறீர்களே, உங்கள் கட்சிக்கு ஆதரவான ஒருவர் சட்டத்திற்கு புறம்பாக எத்தனை காரியங்களில் ஈடுபட்டாலும்

அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காது இருப்பது இந்த அரசாங்கத்தின் நேர்மை உணர்ச்சிக்கு எடுத்துக்காட்டா? எப்படி உங்கள் மீது நம்பிக்கை வைப்பது? இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்பதற்கு இந்த ஒரு ஆதாரம் போதாதா?

அது மட்டுமல்ல. தமிழ்நாட்டு மக்களுக்கே பெரிய அவமானத்தை நீங்கள் தேடி வைத்திருக்கிறீர்கள். அது என்னவென்றால் தமிழ் நாட்டுக்கும் திருப்பதிக்குமாக ஓடிக்கொண்டிருந்த நமது சர்க்கார் போக்குவரத்து இலாகா பஸ்ஸை ஆந்திர சர்க்கார் தடுத்து நிறுத்தி அதோடு அந்த பஸ் டிரைவரையும் கைது செய்திருக்கிறது என்றால் இதை விட பெரிய வெட்கக்கேடு வேறு என்ன உண்டு. பஸ் கண்டக்டரையும் டிரைவரையும் அவர்கள் கைது செய்யவில்லை. தமிழ் நாட்டு அரசையே கைது செய்ததாகத்தானே பொருள். அது வெட்கக் கேடாக இல்லையா, அவமானமாக இல்லை, இந்த அவமானத்திற்கு யார் காரணம்? இப்படித் தமிழ் நாட்டு மக்கள் தலை குனியும்படியாகச் செய்த இந்த அரசாங்கத்தின் மீது எவ்வாறு நம்பிக்கை வைப்பது? தமிழ் நாட்டுக்கு வந்து கொண்டிருந்த அரிசியை பெர்மிட்டோடு வந்த அரிசி லாரியை ஆந்திர சர்க்கார் தடுத்து நிறுத்துகிறது. ஏன் என்று கேட்டால் ஒரு சின்ன டெக்னிக்கல் அப்ஜெக்ஷன் காரணமாக நிறுத்தி விட்டார்கள் என்று சமாதானம் சொல்லுவதற்கு உங்களுக்கு வெட்கமில்லையா? எங்கள் அமைச்சராக இருந்ததன் காரணமாக அரிசி இல்லை என்று அங்குமிங்கும் ஓடுகிறார்கள். அரிசியை வாங்கி வருகிறார்கள் என்று அந்தக் கட்சியிலுள்ளவர் சொன்னார்கள். இத்தனை நாள் அவர்களுடைய அமைச்சர் எங்கே இருந்தார்கள். இத்தகைய ஒரு பயங்கர நெருக்கடி நாட்டில் உண்டாக இருக்கிறது என்பதை அவர்களால் முன்கூட்டியே அறியமுடியவில்லையா? விலைவாசி ஏறிக் கொண்டே போகிறது. உணவு தான்ய பற்றாக்குறை நிச்சயமாக இந்த நிலை நீடித்தால் உண்டாகிவிடும் என்று நாங்கள் எச்சரிக்கை செய்தோமே அப்பொழுதாவது செவி மடுத்தார்களா? எங்களைக் கேலி பேசினார்கள். இரண்டு ஆண்டு காலத்திற்குள்ளே இத்தகைய ஒரு பயங்கர நிலை உண்டாகியிருக்கிறது என்றால் இதற்குக் காரணம் யார்? இங்கே இருக்கிற அமைச்சர் அவைதான். இந்தக் காங்கிரஸ் அமைச்சர் அவைதான். இது போதாதா இந்த அமைச்சர் அவையின் மீது நம்பிக்கை இல்லை என்பதற்கு. காங்கிரஸ் அரசின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. கட்சியின் கொள்கையின் மீதும் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. நாட்டு மக்களை வெகுவாகப் பாதிக்கிற கள்ள மார்க்கெட்டுக்காரர்களுக்கு இவர்கள் உறுதுணையாக இருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டை நான் சுமத்த விரும்புகிறேன். கள்ளக் கணக்கு வைப்பது இவர்களுடைய ஆட்சியில் சர்வ சாதாரணமாகிவிட்டது. கள்ளக் கணக்கு வைப்பவர்களை நாங்கள் பிடிக்கிறோம் என்று சொல்லுவதற்கே உங்களுக்கு வெட்கமாக இல்லையா? சர்க்காருக்குச் சேர வேண்டிய வரியை ஒருவன் ஏமாற்றுகிறான். கையும் களவுமாக அவன் கணக்கைப் பற்றுகிறீர்கள், வரி கட்டப்பா என்று வரியை வாங்கி வருகிறீர்களே தவிர அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய



வரிப் பணத்தை ஒழித்த அந்த சமூகத் துரோகியை கைது செய்ய உங்கள் சட்டம் ஏன் தயங்குகிறது. யாராக இருந்தால் என்ன? அரசு தயை தாட்சண்யத்திற்கு அப்பாற் பட்டது. நீங்கள் எதற்காக பாரபட்சம் காட்ட வேண்டும். 1958-ம் ஆண்டு என்று நினைக்கிறேன், இதே மன்றத்தில் நான் ஒரு கேள்வி போட்டிருக்கிறேன். 1 ரூபாய், 2 ரூபாய் கள்ள நோட்டுகள் இன்ன இடத்தில் அச்சடிக்கிறார்களே அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு என்ன என்று கேட்டதற்கு அன்றைய தினம் போலீஸ் அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் இதே மன்றத்தில் அந்தக் கேள்விக்கும் பதிலளித்தார்கள். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு கேட்கிறேன். அந்த கள்ளநோட்டு அச்சடிப்பவர் மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள், அந்தக் குற்றத்தைக் கண்டு பிடித்தீர்களா? வழக்கு தொடர்ந்தீர்களா? ஏன் அந்த வழக்கையே பதுக்கி விட்டீர்கள்? அவர் உங்கள் கட்சியைச் சார்ந்தவர் என்பதற்காகவா? இப்படி ஓரவஞ்சகமாக இந்த அரசாங்கம் நடந்து கொள்கிறது என்பதற்கு பல குற்றச் சாட்டுகளை என்னால் சொல்ல முடியும். ஒருவர் அரசியல் சட்டத்தை கொளுத்தப் போகிறேன் என்கிறார். அவருக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுத்து கொள்ளுங்கள் என்பது போல் காவல் காக்கிறார்கள். அதே காரியத்தை இன்னொரு கட்சிக்காரர் செய்யப் போவதாக அறிவிக்கும்போது அவரைப் பிடித்து உள்ளே போட்டு ஆறு மாதம், நான்கு மாதம் என்று தண்டனை வாங்கித் தருகிறார்கள். எங்களுக்கு தண்டனை வாங்கித் தரக்கூடாது என்று வேண்டிக் கொள்ள நான் வரவில்லை. ஆனால் இதுதான் நீதியா நிர்வாகமா என்று கேட்கிறேன்.

நாங்கள் விலைவாசிப் போராட்டம் நடத்தியபொழுது எங்களைப் பிடித்து அடித்து உள்ளே தள்ளி மூன்று மாதம் ஆறு மாதம் தண்டனை வாங்கிக் கொடுத்தார்கள். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி விலைவாசிப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தவுடனே கைலாக்கு கொடுத்து உள்ளே அழைத்துப்போய் விருந்தினரைப் போல் நடத்தி அவர்கள் மீது எவ்வித வழக்கும் தொடராமல் மறு தினம் வெளியே கொண்டு வந்து விட்டார்கள். இது ஏன்? என்று கேட்கிறேன். ஏன் இந்த ஓர வஞ்சகம்? இந்த ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லை என்பதற்கு இந்த ஒரு ஆதாரம் போதாதா?

கடைசியில் பர்மாவிலிருந்து வந்த தமிழர்களுக்கு இந்த அரசாங்கம் புனர் வாழ்வளிக்க எல்லா வகையிலும் தவறி விட்டது என்கிற குற்றச் சாட்டை நான் சுமத்த விரும்புகிறேன். முகாம்களில் இருந்து வெளியே போங்கள் என்று அவர்களை விரட்டியடிக்கிறார்கள். நேற்றைய முன்தினம் கூட நான் சாத்தனூரில் போய்ப் பார்த்தேன். அந்த முகாமுக்குள் இருக்கிற அகதிகளுக்கு கொடுத்திருக்கிற உத்தரவு 'நீங்கள் வெளியாள் யாருடனும் பேசக் கூடாது. பேசினால் கேம்பை விட்டு வெளியே போக வேண்டும்' என்பதாகும். நாள் முழுவதும் அவரிடம் வேலை வாங்கப்படுகிறது. ஆனால் ஒரு நாளைக்கு ஒரு ஆளுக்கு 6 அணா கொடுக்கிறார்கள். அதுவும் கூட இனிமேல் கொடுக்கப்படமாட்டாது என்று அறிவித்து விட்டார்கள். அங்கே தங்கியுள்ள அகதிகள் எங்கே

போய்ப் பிழைப்பார்கள்? என்ன வேலையில் ஈடுபடுவார்கள்? ஒருவன் கள்ளச் சாராயம் காய்ச்சத்தான் வேண்டும், ஒருவன் கன்னக்கோல் எடுத்துச் செல்லத்தான் வேண்டும், இவ்வளவு கேவலமான நிலைக்கு அவர்களை விரட்டி விட்ட, ஒரு தலை முறைக்குப் பிறகு தன் தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு இத் தகைய அவமானத்தை தேடி வைத்த இந்த அரசாங்கத்தின் மீது எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்? பாகிஸ்தான் அகதிகளுக்கு எத்தகைய வசதிகளைத் தேடித் தந்தார்களோ, அத்தகைய வசதிகள் இந்த பர்மா அகதிகளுக்குத் தேடித்தரப்பட்டதா? ஏன் தேடித் தரப்படவில்லை? இத்தகைய அரசின் மீது எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்? ஆகவே, இந்த அமைச்சர் அவையின் மீது நம்பிக்கை இல்லை என்பதாக திரு. மதியழகன் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

* **திரு. பி. கே. மூக்கையா தேவர்:** தலைவர் அவர்களே, திரு. மதியழகன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் குறிப்பிட ஆசைப்படுகிறேன். பொதுவாக இந்த நாட்டிலுள்ள பிரச்சினையில் முக்கியமாக நேஷனல் பிராப்ளம் முதன் முதலில் சீனாக்காரர் நம் மீது படையெடுத்து வந்தபோது எழுந்தது. அதனால் நம்முடைய சுதந்திர நாட்டு பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டது. அன்று நாம் எல்லோரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளையைப் போல கொள்கை கட்சிகளை மறந்து வெறுப்புகளை மறந்து ஒன்று பட்டோம். மாற்றானை விரட்டியபாடில்லை. அந்த பிரச்சினை இன்றைய தினம் முழுமையாகத் தீர்ந்தபாடில்லை. இழந்த நிலத்தை மீண்டும் பெற முடியாத நிலையில்தான் நாம் சிக்கிக் கொண்டிருக்கிறோம். தேசப் பாதுகாப்பு நாட்டின் ஒரு கண். இந்தக் காங்கிரஸ் ஆட்சி தங்களுடைய அஜாக்கிரதைக் குறைவினாலே ஒரு கண்ணை இழந்தோம். அடுத்த கண்ணாக இருப்பது உணவுப் பிரச்சினை. "உண்டி கொடுப்பாரே உயிர் கொடுப்பவர்"—முதுமொழி—நாட்டு மக்களுக்கு உணவு அளிக்கும் விஷயத்திலே இன்றைய தினம் நாம் தவறி விட்டோம். வீட்டை விட்டு வெளியே வராதவர்களைக்கூட பிச்சைக்காரர்களைப்போல தெருக்களில் நிற்க வைத்துவிட்டோம். ஒரு வேளை உணவுக்காக கடும் வெயிலில் அவ்வாறு நிற்கின்ற மக்களைப் பார்த்து கேலி செய்வது, கள்ள மார்க்கெட்டுக்காரர் என்று சொல்லுவது—அவர்கள் பெரிய கள்ள மார்க்கெட்டு வியாபாரிகள் இல்லையா—மிக மிக வெட்கக்கேடாகும்.

அது மட்டுமல்ல, க்யூ வரிசையில் நிற்பவர்கள் பிச்சைக்காரர்கள், வாங்கி விற்கிறவர்கள் என்று சொல்வது நியாயமா? ஓட்டுப் போட்ட மக்களைப் பார்த்தா இப்படி பேசுவது? நான் இங்கே பார்த்ததை மட்டும் சொல்லவில்லை. மதுரையில் ஒரு மாதத்திற்கு முன்பு நடந்ததைச் சொல்லுகிறேன். தாய் பிள்ளையைப் பிடித்துக்கொண்டு கூட்டத்தில் நின்று பட்ட அவஸ்தையையும் மக்கள் பட்ட தொந்தரவையும் அங்கே டி.எஸ்.பி. யிடமும் கலெக்டரிடமும் அன்றே சொன்னேன். கரிலில் இருக்கிற மீனுக்கு பொரி தூவுவது போல கொஞ்சம் கொஞ்சம் கொடுக்கும் அரிசி



போதுமா? மக்களின் பசியைத் தீர்க்க முடியுமா? இரண்டு மூன்று இடங்களில் நாலைந்து மூட்டைகளைக் கொடுத்துவிட்டு மக்களுக்கு வினியோகம் செய்யச் சொன்னால் ஏராளமாக க்யூ வரிசையில் நின்று விட்டு ஆறு மணி, எட்டு மணிக்குப் பிறகு சண்டை போட்டுக் கொண்டு வெறும் கையோடு ஒன்றும் இல்லாமல் வரும் நிலைமைதான் இருக்கிறது. நான் சும்மா சொல்லவில்லை. அத்தனை மக்களையும் சாகடித்த பிறகு, நாங்களும் இல்லை, நீங்களும் இல்லை அமைச்சரும் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த சம்பவத்தை தெரிவிக்க விரும்புகிறேன். நாங்கள் உண்ணாவிரதம் இருந்தது அச்சத்தோடு அல்ல, அதிகாரத்திற்கு அடங்கி அல்ல, முதலமைச்சர் தெய்வ பக்தி உள்ளவர், அவர் மனதில் படவேண்டும் என்பதற்காகத்தான் உண்ணாவிரதம் இருந்தோம். இரண்டு நாட்களுக்கு முன்னால் மவுண்ட் ரோடில் நான் சென்று கொண்டிருந்தபொழுது கதர்ச் சட்டையைப் பார்த்து சட்டமன்ற அங்கத்தினர் என்று தெரிந்து கொண்டு அரிசி கிடைக்காமல் க்யூ வரிசையில் நின்று கலைந்து வந்து கூட்டத்தில் ஒரு பெண் என் சட்டையைப் பிடித்து 'நீங்களெல்லாம் எதற்காக இருக்கிறீர்கள்? எங்களை ஏன் சாகடிக்கிறீர்கள்?' என்று கேட்டு சட்டையைப் பிடித்து கிழித்து விட்டாள். கிழிந்த சட்டை இருக்கிறது. அப்படிப்பட்ட பரிதாப நிலையில் மக்கள் இருக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால் நாடு இல்லை, மக்கள் இல்லை, என்ற அவல நிலைதான் ஏற்படும். நீண்ட நெடுங் காலமாக ஆட்சியில் இருந்து விட்ட இந்த அமைச்சர் அவைக்கு எந்தப் பிரச்சினையும் பெரிய பிரச்சினையாக இல்லை. எந்தப் பிரச்சினைக்கும் பதில் கொடுத்து விடுவது என்பது பழகிப் போய் விட்டது. அப்படி மீறிப் போனால் தொண்டைக்குமேல் குறி பார்த்துச் சுட்டால் தீர்ந்தது. இந்த நிலையில்தான் அமைச்சர்கள் இருக்கிறார்கள். சொல்லுகிறார்கள், கன்ஸ்யூமர்ஸ் ஹோர்டர்ஸ், டிரேடர்ஸ் ஹோர்டர்ஸ் என்று. நான் சொல்லுகிறேன், கவர்மெண்டு ஹோர்டர்ஸ் என்று கவர்மெண்டு ஸ்டாக்கு என்னயிற்று? இதோ வருகிறது, அதோ வருகிறது என்கிறார்கள், ஆனால் பேப்பரில் தான் இருக்கிறது. அதை ஏன் இன்னும் அனுப்பவில்லையென்று தெரியவில்லை. இதிலே யார் ஹோர்டர்ஸ்? அமைச்சர்கள் தங்களிடமுள்ள ஸ்டாக்குகளை டிக்ளேர் செய்தார்களோ என்னவோ தெரியாது. அவர்களுக்கு மட்டும் அரிசி எங்கிருந்து வருகிறதோ, அதுவும் தெரியாது.

நாங்கள் நேற்று உண்ணாவிரதம் இருந்தோம். இது எதிர்க்கட்சிக்கு முதலீடு என்று குறிப்பிடுகிறார்கள். எங்களுக்கு இந்த முதலீடு தேவையில்லை. அதை இந்த சர்க்கார் நம்பவில்லை என்றால் இதையே முதலாக வைத்து இப்பொழுதே மந்திரி சபை ராஜினாமா செய்யட்டும். தேர்தலை நடத்தட்டும். அப்பொழுது மக்கள் முடிவு தக்கபடி செய்வார்கள். மக்கள் இவர்களுக்கு ஆதரவு அளித்தால் நாங்கள் தூக்குப் போட்டுக் கொண்டு சாகத் தயார். நீங்கள் தயாரா? பதவியை யாவது விடுவீர்களா? இதைத் [illegible]துப் பார்க்க ஜனநாயகத்தில் நாம் முன்னேறி [illegible] என்று கேட்பார்கள்.

இந்த அரசாங்கத்தின் ஊழல்களுக்கெல்லாம் காரணம் ஐந்தாண்டுத் திட்டங்கள். முன்னேற்றம் வரும் என்று திட்டம் போடுகிறார்கள். பிறகு ஜனத்தொகை பெருகி விட்டது என்கிறார்கள். அதைக் கட்டுப் படுத்த பஞ்சாயத்து அமைத்தோம் என்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்கினோம் என்கிறார்கள். ஆனால் இன்று மக்கள் பசியினால் வாடுகிறார்கள். இவ்வளவுக்கும் காரணம், கொள்கைக் கோளாறுதான், திட்டத்தின் கோளாறுதான். நோட்டு உற்பத்தியைப் பெருக்குகிறார்கள். 1939-ம் ஆண்டு 210 கோடியிலிருந்து இன்று 2,500 கோடி வரை ரூபாய் நோட்டுகளைப் பெருக்கினார்கள். அதன் காரணமாக இன்பிளேஷன் ஏற்பட்டது. உணவு உற்பத்தி ஏற்படவில்லை. நோட்டு உற்பத்திதான் ஏற்பட்டது. அதற்கும் மேலாக இந்த நாட்டின் முக்கியத் தொழிலான விவசாயத்தைக் கெடுத்தார்கள். தலையிலே கோளாறு என்றால் கை கால்களைப் பற்றிக் கவலைப்பட்டு என்ன பிரயோசனம். மத்திய சர்க்காரே, மேலிடமே சரியில்லை. மாகாணத்தைச் சொல்லி என்ன ஆவது ? இது சாதாரண பிரச்சினை அல்ல. நட்டின் உயிர்நாடியான விவசாயத்தையே கெடுத்துவிட்டார்கள். எத்தனை ஐந்தாண்டுத் திட்டம் போட்டாலும் இதைச் சரி செய்ய முடியாது. நாட்டின் அடிப்படை விவசாயம் The basic industry of this country is agriculture. இந்த நாட்டிலே விவசாயத்தையே நம்பியிருக்கும் மக்கள்தான் நாட்டின் முதுகெலும்பு. மகாத்மா காந்தி, 'The real spirit of India lives in villages, not in cities and towns' என்ற உண்மையை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு விவசாய நிலங்களையெல்லாம் எடுத்து, தொழில்களை ஏற்படுத்தி விட்டதால் உற்பத்தி குறைந்திருக்கிறது. " Agriculture has become a neglected industry " என்று நாங்கள் சொல்லவில்லை. நேரு அவர்களே சொல்லியிருக்கிறார். புத்தகங்களைப் பாருங்கள். உணவுக் கொள்கையில் தோற்று விட்டோம் என்று அவரே ஒத்துக் கொண்டிருக்கிறார். 'It has became a neglected industry என்ற அளவில் இருப்பதைப் பார்க்கிறோம். வேறொன்றும் செய்யாவிட்டாலும் விவசாயத்தைக் கெடுக்காமல் இருந்தோமோ, இல்லை. தொழில்களை ஆரம்பிக்கிறார்கள். தொழிலமைச்சரைப் பாராட்டுகிறோம். ஆனால் அதே நேரத்தில் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் விவசாய நிலம் பாதிக்கப்படுகிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் பத்தாயிரம் ஏகர் விளை நிலம் போய் விட்டது. எங்கு பார்த்தாலும் தொழில், தொழில் என்கிறார்கள். விவசாயத்தைப் பெருக்க முடியவில்லை. கோயம்புத்தூரைப் பாருங்கள், விவசாயம் பாதிக்கப்பட்டு விட்டது. ஆகவேதான் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. தொழிலைப் பெருக்குங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. எதற்காகத் தொழிலைப் பெருக்குகிறோம் ? பொருள்களை உற்பத்தி செய்து சரக்கையெல்லாம் அந்நிய நாடுகளுக்கு அனுப்புகிறோம். எதற்காக ? அந்நியச் செலாவணி தேடுவதற்காக. அந்நியச் செலாவணியை வைத்துக்கொண்டு என்ன வாங்குகிறோம் ? இந்தக் குதிரைக் கோதும்பையை வாங்குகிறோம். விவசாயத்தை அழித்து கெடுத்து தொழிலை வளர்க்கிறோம்.





என்கிறார்கள். அந்த நிலைக்கு விவசாயம் கெட்டு விட்டது. யாரையும் குற்றம் சொல்லிப் பிரயோசனம் இல்லை. ஆனால் அமைச்சர் அவர்கள் இதெல்லாம் paper made famine என்கிறார்கள். நான் சொல்லுகிறேன். It is all Minister—made famine Birth-day presentation ஆக கேரளாவுக்கு பத்தாயிரம் மூட்டைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கேரளாவிலிருந்து வீணாகப்போகும் தண்ணீரை நமக்கு கிடைக்கச் செய்ய முடியவில்லை. அதை வற்புறுத்திச் சொல்ல முடியாத நிலைமை ஏற்படுகிறது என்றால் எதற்காக இன்றைக்கு காங்கிரஸ் என்றும், தேச ஐக்கியம் என்றும் சொல்லிக்கொண்டிருக்கவேண்டும் என்று நான் கேட்கின்றேன். உங்களால் ஒன்றும் முடியாதபோது நாட்டைப் பிரித்தாவது நாட்டு மக்களைக் காப்பாற்ற முடியும் என்று என் நண்பர்கள் கூறுவார்களானால் அதை வரவேற்கிறேன். அதற்காக நான் தி.மு. கழகத்தைச் சேர்ந்தவனல்ல. குடிக்கக்கூடத் தண்ணீர் கொடுக்க முடியாது என்று அவர்கள் சொல்கிற நிலைமையில் நான் அவர்கள் மனம் மிகவும் புண்பட்டுக் கேட்கிறார்கள்.

ஆந்திராவை எடுத்துக்கொள்ளுங்கள். டாக்டர் லோகநாதன் ரிபோர்ட்டில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது ? முப்பது லட்சம் ஏக்கருக்குப் பாயக்கூடிய தண்ணீர் கடலில் வீணாகப் போகிறது. தண்ணீர் வீணாவது மாத்திரமல்ல; வீணாக விரயமாக்கப்பட்டு அந்த நாட்டின் ஒரு பகுதியையே அழித்திருக்கிறது. 25, 30 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டத்தை விளைவித்திருக்கிறது. நூற்றுக்கணக்கான மக்கள் செத்து ஒழிந்து மடிகிறார்கள். 200 மைல் நீளத்திற்குத் தண்ணீரை இந்தப் பக்கம் திருப்பி விட்டால் வளம் ஏற்படாதா ? நெல் விளைச்சல் ஏற்பட்டுப் பஞ்சம் போகாதா ? இதைச் செய்ய முடியாதவர்கள் அதிகாரத்தில் இருக்க வேண்டிய அவசியம்தான் என்ன ? இது உடனடிப் பிரச்சினை இல்லையா ? இதைச் செய்ய முடியாதா ? திறமை வாய்ந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் இங்கு இருக்கும்போது ஏன் ஆந்திர சர்க்காரைக் கேட்டு, அந்தத் தண்ணீரைத் தமிழ்நாட்டுக்குப் பயன்படுத்தும் வகையில் பாடுபடக் கூடாது ? அப்படி அவர் பாடுபடவேண்டும் என்பதற்கு உதவியாக இருக்கவேண்டுமென்று நாங்கள் உண்ணாவிரதம் இருந்தால், போர்டுகளை வைத்து, ஏதேதோ கேலி செய்வதா ? நாங்கள் வற்புறுத்தினால்தானே அவர்கள் மத்திய சர்க்காரை அணுக முடியும் ? நாட்டிலுள்ள நிலைமையை நாங்கள் எடுத்துக்காட்டுவதற்கு முயற்சி செய்தால், அது தவறா ? ஆகவே, ஆட்சியாளருக்குள்ள இந்த அலட்சியப் போக்கு மாறவேண்டும்.

இன்னும் ஒரு முக்கியமான விஷயம். பர்மா அகதிகளைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். எனது சொந்தக்காரர்கள்—இராமநாதபுரம் ஜில்லாவிற்கு வரக்கூடியவர்கள் லட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். ஏற்கனவே வந்தவர்கள் செத்துக் கொண்டே இருக்கிறார்கள். பெட்டி, படுக்கை, துணி மணி முதலியவற்றைத் திருப்பரங்குன்றம் சந்தையிலே விற்றுக்கொண்டிருக்கிறார்கள் சாப்பாட்டுக்கு இல்லாமல். ஒவ்வொருவருக்கும் ஐந்து

[திரு. பி. கே. மூக்கையா தேவர்] [22nd October 1964

ஏக்கர் நிலம் கொடுக்கப்படும் என்றும், ஐயாயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்றும் விளம்பரம் செய்யப்பட்டது பர்மாவில். அங்கேயுள்ள எத்தனையோ பொருள்களை அவர்கள் எறிந்துவிட்டு வர வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. திரு. கலியாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டது போல, ஏரோட்ரோமிலே உட்கார்ந்திருந்த ஆபீசர்கள் சோதனை போட்டு, 'பர்மா செருப்பு' 'பர்மா துணி' என்று சொல்லி அங்கேயே வைத்துவிடும்படிச் சொன்னதன் காரணமாக அவற்றை அங்கேயே வைத்துவிட்டு, கட்டிய கோவணத்தோடு அகதிகளாக வெளியேறியிருக்கிறார்கள். ஏன் இப்படி என்று எதிர்த்துக் கேட்டால் அவர்களைப் பார்த்து, 'உங்கள் செத்துப் போன காந்தியைக் கேள்' என்று அவமானத்படுத்தக் கூடிய நிலை அவர்களுக்கு அங்கே ஏற்பட்டது. அப்படி அவமான்ப்படுத்தப்பட்டு லட்சக் கணக்கில் தமிழ்நாட்டுக்கு வரும் மக்களைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறோம். பர்மாவிலிருந்து இப்படி வருகிறவர்கள் ஒருபுறமிருக்கட்டும். இலங்கையிலிருந்தும் தமிழர்கள் வர இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் தென்னாடே அகதிக் காம்ப்பாக மாறப் போகிறதோ என்று அச்சப்படும் நிலையில் 1956-ம் ஆண்டிலிருந்தே எச்சரித்தோம். தமிழர்களாகப் பிறந்த நாம், அதைக் குறித்து எடுத்துச் சொல்வது குற்றமாக இருந்தால், இந்த அரசாங்கத்தைப்பற்றி என்ன சொல்வது ? இந்த ஆட்சியை நடத்துகிறவர்கள் தங்களுக்குக் கட்சிதான் முக்கியம். தேர்தல்தான் முக்கியம், பதவிதான் முக்கியம் என்று கருதுவதாகத்தான் இருக்கிறது. உண்மையிலேயே இந்த ஆட்சியாளர்கள், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு இருப்பார்களானால், தயவு செய்து, அவர்கள், உணவுப் பிரச்னையிலாகட்டும், இன்னும் இதுபோன்ற முக்கியப் பிரச்னைகளிலாகட்டும், தங்களுடைய கட்சிக் கொள்கையைக் கடைப்பிடிக்காமல், அவற்றையெல்லாம் தேசீயப் பிரச்னைகளாகக் கருதி செயல்படவேண்டும். அதற்கேற்றபடி அவர்கள் காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிட்டு, எதிர்க்கட்சியினரையும் சேர்த்துக் கொண்டு, தேசீய ரீதியாக, மக்கள் ரீதியாக நாட்டை ஆளுவதாக இருந்தால் நிர்வாகம் சரியாக இருக்கமுடியும். அப்படி இல்லையென்றால் அமைச்சர்கள் பதவிக்காக மட்டும் இருப்பதாகத்தான் ஆகும், நாட்டு மக்களுக்காக இருப்பதாகச் சொல்ல முடியாது. நாட்டு மக்களுக்காக அமைச்சரவை இருக்கவில்லை என்பதை இவர்கள் கடைப்பிடிக்கின்ற உணவுக் கொள்கையும், வெளிநாட்டுக் கொள்கையும், இன்னும் இவை போன்ற முக்கியமான கொள்கைகளும் எடுத்துக்காட்டுகின்றன. இந்த அமைச்சரவைக்குத் தங்கள் பதவித்தான் மேலாக இருக்கிறதே தவிர, நாட்டு மக்களுடைய நலன் முக்கியமாகத் தெரியவில்லை. நாட்டு நடப்பும் தீர்மானமும் அதைத்தான் எடுத்துக்காட்டுகிறது. இதை எடுத்துக்காட்ட வேண்டியது என்னுடைய கடமை என்று சொல்லி, என்னுடைய உரையை இத்துடன் முடிக்கிறேன்.

**திரு. ஏ. பி. ஸி. வீரபாகு:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே இருக்கிற இந்த அமைச்சரவை மீது கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை



22nd October 1964] [திரு. ஏ. பி. ஸி. வீரபாகு]

எதிர்த்து, அவர்கள் சொன்ன காரணங்கள் எந்த விதத்திலும் பொருத்தமற்றவை என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடுகூட, நண்பர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள், 'உணவுக் கொள்கையை இந்த மன்றம் ஒப்புக்கொள்ளவில்லை' என்கிற ஒரு தீர்மானத்தைச் சில காரணங்களைக் காட்டி கூறியிருக்கிறார்கள். அந்தக் காரணங்களே இப்பொழுது நாம் மேற்கொண்ட உணவுக் கொள்கைக்குக் காரணங்கள் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப்பற்றிப் பேசிய எதிர்க்கட்சி அன்பர்கள் மிகவும் உணர்ச்சியோடு பேசினார்கள். உணர்ச்சி பரிகாரம் தருவதாயிருந்தால், நானும் உணர்ச்சியோடு பதில் கொடுத்துவிடலாம். ஆனால், நிதானமாக, இருக்கக்கூடிய நிலைமைகளைப் பரிசீலனை செய்து, தப்பித்துக் கொள்ளவேண்டும் என்ற மனோபாவம் இல்லாமல், இந்த நிலைமையைச் சீராக்க வேண்டும், சரியாக்கவேண்டும் என்ற நிலையில் இருப்பதால் எல்லா நடவடிக்கைகளையும் உடனடியாக எடுத்துப் பரிகாரம் காண முடியாதிருக்கிறது. அதனால் எதிர்த்தரப்பிலுள்ளவர்கள் உணர்ச்சிவசப்படுகிறார்கள் என்றுதான் நான் சொல்ல முடியும்.

இந்த உணவு நிலைமையைப் பற்றிப் பேசுவதற்கு முன்னால், சில குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டதைக் குறிப்பிட விரும்புகிறேன். 'மேல் அதிகாரிகள் மீது ஏன் நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை' என்பது ஒரு குற்றச்சாட்டு. 'மேல் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தால், அவர்களே தொடர்ந்து ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ?' என்பது இன்னொரு குற்றச்சாட்டு, 'அரசாங்கமே உணவைத் தொழிலாக ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை?' என்பது மற்றோர் குற்றச்சாட்டு. 'க்யூ'வில் நிற்பவர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு எதற்காகக் கொடுக்கவேண்டும் ? போலீசாரே இல்லாமல், ஜனங்கள் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொண்டு, நிதானமாக நடந்துகொள்ளமாட்டார்களா ? என்கிற குறிப்புக்களையெல்லாம் கொண்டு அவர்கள் பேசியிருக்கிறார்கள். இதிலே அரசாங்கம் என்னவோ, பெரிய அதிகாரிகள் தவறுதலாக நடந்திருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பயப்படுகிற மாதிரியும், அவர்களைத் தாஜா செய்கிற மாதிரியும் இருப்பதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி எனக்கு இப்பொழுது ஞாபகம் வருகிறது. இதே சட்ட மன்றத்தில், முன்பு இன்ஸ்பெக்டர்-ஜெனரலாக இருந்த திரு. ராஜாத்னம் அவர்கள் பேரில் ஒரு குற்றச்சாட்டை எதிர்க்கட்சி அன்பர்கள் கொண்டு வந்தார்கள். பகிரங்கமாக இந்தச் சட்ட மன்றத்தில் கொண்டுவந்தார்கள். இப்பொழுது இருக்கிற முதலமைச்சர் அவர்கள் அப்பொழுது ஹோம் மினிஸ்டராக இருந்தார். அவர் எந்த விதமான ஆலோசனைக்கும் இடம் கொடுக்காமல், இரண்டு நாள் அவகாசம்கூட எடுக்காமல், 'நீதிபதி ஜஸ்டிஸ் இராமசாமி அய்யருடைய விசாரணைக்கு அனுப்பு

[திரு. ஏ. பி. ஸி. வீரபாகு] [22nd October 1964

கிறேன்' என்று உடனடியாக ஏற்றுக்கொண்டார். எதிர்க்கட்சினர் அந்த விசாரணைக்கு ஒரு உதவியும் செய்யவில்லை. நிர்வாகத்திலுள்ள பெரிய அதிகாரிகளைப்பற்றிக் குற்றம் சாட்டும்போது, ஸ்பெஸிஃபிக் ஆக இருந்தால் நிச்சயமாக அரசாங்கத்திற்கு நடவடிக்கை எடுக்க உதவிகரமாக இருக்கும். அதை விட்டுவிட்டு, பொதுவாக, 'அதிகாரி பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை' என்று குற்றஞ்சாட்டுவது veiled threat ஆகத்தான் இருக்க முடியும். குற்றச் சாட்டுகள் சொல்லும்போது ஸ்பெஸிஃபிக்காக இருக்கவேண்டும். எந்த உயர் அதிகாரி எந்தவித குற்றங்களைச் செய்திருக்கிறார் என்று குறிப்பாகச் சொல்லி, அவர் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தயங்கிற்று என்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலாவது சொல்லியிருக்கவேண்டும். அப்படிச் சொல்லவில்லை. ஒரு உயர்தர அதிகாரி மீது குற்றச்சாட்டு சொன்னபோது, அன்று ஹோம் மினிஸ்டர் பதவியில் இருந்த இன்றைய முதல் அமைச்சர் அவர்கள் உடனேயே, நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்தார்கள். அப்போது என்ன நடந்தது? நீதி விசாரணை கொடுக்கவேண்டிய அளவுக்கு தஸ்தாவேஜை எதிர்க்கட்சியினர்கள் கொடுத்தார்களா? இம்மாதிரி ஏதோ ஒரு 'பொலிடிகல் ஸ்டண்ட்'—முதலில் அந்த வார்த்தையை நான் சொல்ல விரும்பவில்லை, அதற்காகத்தான் இப்பொழுது சொல்ல விரும்புகிறேன்—அதாவது அரசியல் ஸ்டண்ட்டுக்காக இதை உபயோகப்படுத்துகிறார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன். இம்மாதிரி பொறுப்பு வாய்ந்த மன்றத்திலே, அதிலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரும் நேரத்திலே, 'ஸ்பெஸிபிக்காக' எந்த உயர்தர அதிகாரி மீதாவது அவர்கள் குற்றச்சாட்டு கொண்டு வந்திருந்தால் உதவிகரமாக இருக்கும். 'இதை நாங்கள் சொன்னோம், அதை நீங்கள் செய்யத் தவறிவிட்டீர்கள்' என்று எதுவும் ஸ்பெஸிபிக்காகத் தெரிவிக்கப்படவில்லை என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

யாரோ பத்திரிகை அதிபர் ஸேல்ஸ் டாக்ஸ் மோசடியில் 'இன்வால்வ்' ஆகியிருந்தார் என்றெல்லாம் 'ஊகம்' செய்கிறார்கள். எல்லாம் ப்ரிஸம்ப்ஷன் ஆகவே சொல்கிறார்கள். 'அதனால் இரண்டு மாத அவகாசம் தரப்படுகிறது' என்று சொல்கிறார்கள். இந்த மாநிலத்திலுள்ள அத்தனை வியாபாரிகளும் சேர்ந்த வியாபாரிகள் சங்கம் தீர்மானம் போட்டு, 'இம்மாதிரி கெடுபிடி நடக்கிறது, ஏதோ சிலர் தவறுதல் செய்திருக்கலாம், மாற்ற சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும்' என்று டெபுடேஷன் வந்து முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டார்கள். ஐந்து கோடி வசூல் ஆயிற்று. வாஸ்தவம். வியாபாரிகள் கணக்குக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை, 'கள்ளக் கணக்கு வைத்திருந்தாலும் அதையும் சொல்லிவிடுங்கள், நாங்கள், கண்டுபிடிப்பதை விட நீங்களாகக் கொடுத்துவிடுங்கள்' என்று அந்த டெபுடேஷனுக்குச் சொல்லப்பட்டது. இதைப் பத்திரிகை அதிபருக்குச் செய்த சலுகை என்று எப்படி சொல்வது? அப்படியானால்,



22nd October 1964] [திரு. ஏ. பி. ஸி. வீரபாகு]

வியாபாரிகளின் கோரிக்கைகளையே சர்க்கார் கேட்கக் கூடாதா? மந்திரி சபை கேட்கவே கூடாது என்று சட்டம் செய்து விட முடியுமா? வியாபாரிகளுக்குச் சங்கம் வைக்க உரிமை இல்லை என்று சொல்லிவிடுவதா? இந்த மாநில வியாபாரிகள் சங்கங்கள் அத்தனையும் சேர்ந்து, 'நாங்கள் நேர்மையாகக் கணக்குக் கொடுக்க சந்தர்ப்பம் கொடுங்கள், தவறுகளைத் திருத்த எங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்' என்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். இரண்டு மாத அவகாசம் கொடுத்தார்கள். என்னுடைய அபிப்பிராயம் இந்த இரண்டு மாத அவகாசம் போதாது என்பது. 'வியாபாரிகள்' என்றால், அவர்களுக்கு என்ன என்று இலேசாகச் சொல்லிவிடலாம். ஒருவராவது வியாபார சம்பந்தம் இல்லாமல் இந்த மன்றத்தில் இருந்திருக்கிறோமா? வியாபாரியோடு தொடர்பு இல்லாமல் இருக்கக் கூடியவர் இந்த மன்றத்தில் அதிகமான பேர்கள் இருக்க முடியுமா? இன்று என்ன நடக்கிறது? கன்ஸ்யூமர் ஹோர்டிங், ப்ரொட்யூசர் ஹோர்டிங் என்று சொல்கிறார்களே,. இதெல்லாம் வியாபாரம் இல்லாமல் வேறு என்ன? எனக்குத் தெரிந்த ஒரு கிராமத்தில் எங்கள் பகுதியில் 112 படி. கொண்ட கோட்டை, 40,000 கோட்டைகள் மூன்று மாதங்களுக்கு முன்பு இருந்தது. எனக்கு நேரடியாகத் தெரியுமே. அத்தனை விவசாயிகளும் வைத்திருந்தார்களே, என்ன நோக்கத்துடன் வைத்திருந்தார்கள்? வியாபாரம் செய்வதற்காகத்தானே வைத்திருந்தார்கள். வியாபாரிகள் தவறு செய்தால் அவர்களை எடுத்த எடுப்பிலேயே தண்டிக்க வேண்டாம் என்ற நோக்கத்தோடு சர்க்கார் நடவடிக்கையெடுத்தால் அது ஒரு குற்றச்சாட்டு ஆகுமா? இவ்வாறு நோக்கம் கற்பித்துப்பேசுவது சரியல்ல. அப்படிப் பேசுவது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பொருத்தமில்லாத விஷயமாகும். ஏதோ ஒரு பத்திரிகை அதிபரைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தப் பத்திரிகை அதிபர் மூன்று வருஷங்களுக்கு முன்னால் சென்னையிலிருந்து அந்தப் பத்திரிகையை நடத்தமுடியாமல் போனதன் காரணமென்ன? அப்பொழுது அவர் இவர்களுடைய விரோதியாகவும் இப்பொழுது நண்பராகவும் மாறிவிட்டாரா? இதையெல்லாம் எதிர்கட்சியினர் யோசித்துப் பார்க்கவேண்டும். எதிர்க்கட்சிகள், அதிலும் நேற்றைய தினம் உண்ணாவிரதம் இருந்துவிட்டு இன்று ஒரு பெரிய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, உணவுப் பிரச்னையை. அதற்கு ஆதாரமாக வைத்து கொண்டுவந்துவிட்டு, அதன்மீது இப்படியா பேசுவது? இதைவிட நல்ல காரியங்களைச் சொல்லலாமே. நான் எதிர்க்கட்சியில் இருந்தால் அப்படித்தான் சொல்லியிருப்பேன். (எதிர்க்கட்சியிலிருந்து குறுக்கீடு: நீங்கள் எங்களுக்கு வழிகாட்டுங்கள்). நான் வழிகாட்டுவதற்குத் தயார். ஆனால், நான் ஒரு பொறுப்பற்றவனல்ல, குறிப்பாக, மூக்கையாத் தேவரவர்கள் சில விஷயங்களைப்பற்றிச் சொன்னார்கள். இந்த அரசாங்கம் இந்தக் கொள்கையை விட்டிருக்கவேண்டும், இண்டஸ்டிரியல் எக்ஸ்பேன்ஷன் இருந்திருக்கக்கூடாது, எல்லா நிலமும் விவசாய நிலமாக இருக்கவேண்டும், விவசாய நிலத்திலே தொழிற்சாலைகள்

அமைக்கக்கூடாது என்று எல்லாம் திரு. மூக்கையாத் தேவரவர்கள் சொன்னார்கள். ஒரு கட்சி, வியாபாரிகளுக்கு அதிகமான உரிமைகள் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறது. அவ்வாறு உரிமைகள் கொடுத்தும் சீராகச் செய்யவில்லை என்பதுதான் இப்பொழுதுள்ள நிலைமை. அதே எதிர்க்கட்சிகளில் ஒரு கட்சி சர்க்கார் கண்ட்ரோல் முறை இல்லாமலிருந்தால் இந்தமாதிரி நிலை வந்திருக்காது என்று சொல்கிறது. மூக்கையாத் தேவரவர்கள் சொல்கிறபடி சொன்னால் அதை ஒத்துக்கொள்ளலாம். நான் எதிர்க்கட்சியிலிருந்தால் அப்படித்தான் சொல்லியிருப்பேன். கண்ட்ரோல் கூடாது, ரேஷனிங் கூடாது, வியாபாரத்தில் சர்க்கார் தலையிடு கூடாது, ஐந்தாண்டுத் திட்டங்கள் கூடாது, இவையெல்லாம் இல்லாமலிருந்தால் நாட்டின் நிலைமை சீராகவிருக்கும் என்று சொல்லியிருப்பேன். திரு. கலியாணசுந்தரம் அவர்கள் அரசாங்கமே இதை ஏற்று நடத்தவேண்டும், உச்ச பட்ச விலையை நிர்ணயிக்கவேண்டும், வியாபாரிகளின் இஷ்டத்திற்கு விடக்கூடாது, அதை அமல் நடத்துவதற்கு குடும்ப ரேஷன் கார்டுகள் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். நாங்கள் ஏற்கனவே எந்தக் கொள்கையின்படி நடக்கவேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறோமோ அதையே இப்பொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் சிலர் எடுத்துச் சொல்கிறார்கள். எதிர்கட்சிகளுக்குள்ளேயே ஒரு முரண்பட்ட நிலையிருப்பதை நாம் பார்க்கிறோம். ஒருவர் சொல்கிற கருத்து மற்றக் கட்சியிலுள்ளவர்களுக்குப் பிடிக்காது. மற்றக் கட்சியில் உள்ளவர்கள் சொல்கிற கருத்து இன்னொரு கட்சிக்குப் பிடிக்காது. இவர்கள் எல்லாம் சேர்ந்துதான் இன்று நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படி இவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து, அதன் காரணமாக பொதுமக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தி நாளை இவர்களே அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் ஒருவர் ரேஷன் கொண்டுவர வேண்டுமென்று சொல்வார், வேறொரு கட்சியைச் சேர்ந்தவர் ஃபிரீ டிரேடுக்கு விடவேண்டுமென்று சொல்வார். அதனால்தான் எதிர்கட்சிகளுக்கு ஓட்டுகளே கிடைக்கவில்லை. இந்த நிலைமை நமது தமிழ்நாட்டில் சென்ற 17 ஆண்டுகளாக இருப்பதை நாம் பார்க்கிறோம். அதனால்தான் எதிர்க்கட்சிக்கு சந்தர்ப்பமே கொடுக்கப்படவில்லை. எதிர்க்கட்சிகளுக்குள் கொள்கையில் முரண்பாடு இருப்பதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். எதிர்க்கட்சிகளெல்லாம் ஒரு நாள்மட்டும் சேர்ந்து இயங்கினால் போதுமா? (சிரிப்பு) ஐந்தாண்டு காலம் சேர்ந்தியங்கினால்தான் ஆட்சி நடத்த முடியும். ஒரு நாள் மட்டும் சேர்ந்து இயங்கினால் எதிர்க்கட்சியாகத்தான் இருக்கமுடியும். அவர்கள் எல்லோரும் நிரந்தரமாகச் சேர்ந்து ஒரு கொள்கையை அமல் நடத்தமுடியாது. ஃபிரீ டிரேட் வேண்டுமென்று நினைத்து அதற்காக ஜனங்கள் ஓட்டுப்போட்டால் அதிலே ஒன்றும் தவறில்லை. அதற்கு நாங்கள் தயாராக இல்லையென்றால் வெளியே போகிறோம். நாங்கள் பிளாண்டு எகானமி வேண்டுமென்று சொல்கிறோம். கன்ட்ரோல் வேண்டுமென்று



சொல்கிறோம். இன்டெக்ரேட்டட் பிளானிங் வேண்டுமென்று சொல்கிறோம். தொழிலபிவிருத்திதான் இந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அடிப்படை என்று சொல்கிறோம். விவசாயத்தை எவ்வளவு தூரம் அபிவிருத்தி செய்யமுடியுமோ அதை திட்டங்களின் மூலமாக செய்யவேண்டுமென்று சொல்கிறோம். சில தேசத்து நிபுணர்களின் புதிய கொள்கைகளை ஏற்றுக் கொண்டு வழி காண முடியுமென்று சொன்னால் அவற்றைப் பரிசீலித்து ஏற்கக்கூடியதாயிருந்தால் ஏற்றுக்கொள்கிறோம். உங்கள் கொள்கையை ஒட்டி நாங்கள் நடக்கவில்லை என்று நீங்கள் பேசுகிறீர்கள். எங்கள் கொள்கைக்கு முரணான கொள்கையை உடையவர்கள், ஆகவே உங்களிடத்தில் நம்பிக்கையில்லை என்ற வகையிலே திரு. சண்முகம் அவர்கள் பேசினார்கள். புலவர் கோவிந்தன் அவர்கள் "நேர் எதிரிடையான கொள்கை" என்று குறிப்பிட்டார். அப்படி எதிரான கொள்கை உள்ளவர்களுக்கு எங்கள் பேரில் எப்படி நம்பிக்கை ஏற்படும். (சிரிப்பு). எங்கள் கொள்கையில் நாங்கள் பிடிவாதமாக இருக்கிறோம்.

இந்த கல்வி முறையிலே ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதுதான் இந்த மந்திரி சபையின் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு முக்கிய காரணமென்று பொருள்படும்படி புலவர் கோவிந்தன் அவர்கள் ஆமோதித்து—ஆமோதித்து என்று சொன்னால் அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்—ஆகவே, வழிமொழிந்து பேசினார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன். அப்படி அவர்கள் வழிமொழிந்து பேசும்பொழுது உணவுக் கொள்கையைப்பற்றிச் சொல்லியிருந்தால் ஓரளவுக்கு பொருத்தமாக இருக்கும். ஆனால், கல்விக் கொள்கையைப் பற்றிப் பேசினார்கள். நாளைக்கு ஒருவிதமாக கல்விக்கொள்கையை இந்த மந்திரிசபை மாற்றுகிறதென்று சொன்னார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு இந்தக் கல்விக் கொள்கைதானா அகப்பட்டது என்பதைப்பார்க்கும் பொழுது உண்மையிலேயே எனக்கு அவர்கள் மீது பரிதாபமாக இருக்கிறது. கல்விக் கொள்கை என்று சொன்னார்களே தவிர, கடைசியில் பேசும் பொழுது மதிய உணவையும், சீருடையையும் எதிர்த்து அவர்கள் பேசினார்கள். எங்கே செகண்டரி கல்வி 11 வருஷம் என்ற கொள்கை வேண்டாம் என்று சொல்கிறாரோ, அல்லது கல்லூரியில் ஆங்கில மீடியம் இருக்கக்கூடாது தமிழ் மீடியம்தான் இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லப்போகிறாரோ என்று நான் நினைத்தேன். இந்த சர்க்காரின் கல்விக் கொள்கை மாதிரி எடுத்துக் காட்டாக இருக்கிற கொள்கை வேறு எங்கும் கிடையாது. ஆளுங் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. மறுபடியும் சொல்கிறேன், நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு இதை நீங்கள் எடுத்துக்கொண்டீர்களே என்று நான் பரிதாபப் படவேண்டியிருக்கிறது (சிரிப்பு). செகண்டரி கல்வி லெவலிலே தாய் மொழிக்கு முதலிடம் கொடுக்கும் திட்டத்தை திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் கொண்டு வந்தார்கள். இதுவரையிலும், கல்விக் கொள்கையில் ஒரு

[திரு. ஏ. பி. ஸி. வீரபாகு] [22nd October 1964

மாற்றமும் செய்யவில்லை. நமது முதலமைச்சர் அவர்கள் அதிலே பிடிவாதமாக இருக்கிறார். ஆனால் செகண்டரி கல்வி கமிஷன் ரிப்போர்ட்டின் பேரில் சில முடிவுகள் எடுத்தோம். 1957-ல் இந்த சபை முன்பு "ஒயிட் பேப்பர் ஆன் எஜுகேஷன்" சமர்ப்பிக்கப் பட்டது. அகில இந்திய செகண்டரி எஜுகேஷன் கமிஷன் கொடுத்த ரிப்போர்ட் அது. அந்த கமிஷனின் சிபாரிசுகளின் பேரில் பாரத நாடு பூராவும் ஒரு இன்டெக்ரேட்டட் சிஸ்டம் ஆப் எஜுகேஷன் இருக்க வேண்டுமென்ற வகையில் ஒரு ஒயிட் பேப்பர் தயாரித்து அதன்படி செய்தோம். இது மந்திரி சபை கொண்டு வந்த கல்வித் திட்டமா என்று நான் கேட்கிறேன். கல்வி நிபுணர்கள் கொண்டு வந்த திட்டம். நம் எல்லோருடைய மதிப்பிற்குரிய திரு. ஏ. எல். முதலியார் அதிலே இருந்திருக்கிறார். நீங்கள் பேசுவதாயிருந்தால் "எங்கள் மதிப்புக்குப் பாத்திரமான திரு. முதலியார்" என்று சொல்வீர்கள், அவர் மேல் சபையில் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதைக் கொண்டு. ஆனால், நான் சொல்கிறேன் "நம் எல்லோருடைய மதிப்புக்கும் பாத்திரமான அவர் கொண்டு வந்த திட்டம் அது." 11 வருஷம் இன்டெக்ரேட்டட் செகண்டரி எஜுகேஷன் இருக்கவேண்டும், 14 வருஷத்திற்குமேல் படிப்பின் காலம் கூடாது என்று கொண்டு வந்தார்கள். அது எப்படி சென்னை சர்க்காரின் கல்வித் திட்டமாக இருக்கும்? அதை எதிர்க் கட்சிகள் எதிர்க்கிறார்களா? வேண்டாமென்று சொல்கிறார்களா? என்ன மாற்றம் செய்து விட்டோம்? ஒரே ஒரு மாற்றம், அதாவது ஆப்ஷனல் சப்ஜெக்ட்டுகளை பழையபடி கொண்டு வரலாம் என்று சொன்னார்கள். அதுவும் ஸ்டேட் எஜுகேஷன் கன்செல்டேட்டிவ் கமிட்டி ஒப்புக்கொண்ட பிறகு கொண்டு வந்தார்கள். எதிர்க்கட்சியிலுள்ளவர்களும் அந்தக் கமிட்டியிலே அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அப்படி ஆப்ஷனல் வேண்டாமென்றால் ஏன் அங்கே சொல்லியிருக்கக் கூடாது. கல்விக்கொள்கையிலே ஏதோ ஒரு பெரிய மாற்றம் செய்துவிட்டோமென்று ஒரு பாசுபதாஸ்தரத்தை இங்கே கொண்டு வந்து விட்டார்கள். அந்தக் கொள்கையினால் என்ன ஏற்பட்டு விட்டதென்று சொல்லவில்லை. அதற்கு நேர்மாறாக, மதிய உணவு ஏன் போடுகிறீர்கள், சீருடை ஏன் வழங்குகிறீர்கள் என்று கேட்டார்கள். நல்லவேளையாக இங்கே அயல்நாட்டு ரிப்போர்ட்டர்கள் ஒருவரும் இல்லை. இப்படிக் கேட்கிறவர்களுக்கு நாம் ஏன் 1½ கோடி ரூபாய் கொடுக்கிறோம் என்று நினைத்திருப்பார்கள். மதிய உணவு கொண்டு வந்ததன் காரணமாகத்தான் இன்று எல்லா ஏழை மாணவர்களும் பள்ளிக்கூடத்திற்கு வருகிறார்கள்.

மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஊழல் இருக்கிறது என்று சொல்லி, இதைக் கல்விக் குற்றச்சாட்டாகக் கூறினார்கள். (குறுக்கீடு) அவர்களுக்கு ஏன் ஆத்திரம் வருகிறது? சொன்ன குற்றச்சாட்டு சரியில்லை என்று சொன்னால் ஆத்திரம் வருகிறது. கடைசியாக இவற்றுக்கெல்லாம் மந்திரி அவர்கள் பதில் சொல்லலாம். எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் இரண்டு நாட்களில் 10 மணி நேரம் பேசுகின்ற எல்லாவற்றுக்கும் முதலமைச்சர் அவர்



22nd October 1964] [திரு. ஏ. பி. ஸி. வீரபாகு]

கள் ஒன்றரை மணி நேரத்தில் பதில் சொல்ல முடியாது என்ற காரணத்தால் நாங்கள் பதில் கொடுக்க வேண்டிய வேலையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். யார் அந்த ஊழலைக் கண்டு பிடித்தார்கள்? இந்தச் சர்க்கார் போட்ட கமிட்டி அது. சுப்பிரமணிய கவுண்டர் தலைமையில் நடந்தது. எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் மதிய உணவுத் திட்டத்தை நல்லமுறையில் நடத்த 'பீப்பிள்ஸ் இயக்கம்' என்ற அளவிலே கொண்டு வருவதற்கு கோஆப்பரேஷனைத் தந்திருக்கிறீர்களா? இப்பொழுது மதிய உணவுத் திட்டத்தில் ஊழல் இருக்கிறது என்று சொன்னால் அந்தப் பொறுப்பிலே இருக்கிற ஆசிரியர்கள் ஊழல் செய்கிறார்கள் என்று சொல்கிறார்களா? அப்படி ஊழல் செய்கிறார்கள் என்றால் ஆசிரியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் காட்டுகின்ற பரிவு எத்தகையது? பிரச்சினையைச் சரியாகப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டுமென்பதற்காகத்தான் இவற்றையெல்லாம் குறிப்பிட விரும்புகிறேன்.

சீருடையைப் பொறுத்தவரையில் சில இடங்களில் இலவசமாகக் கொடுக்கலாம். சில இடங்களில் அவரவர்களே சொந்தத்தில் தைத்துக் கொள்ளலாம். சீருடைத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் பள்ளி மாணவர்கள் மனத்திலே தோன்றக்கூடாது என்பதுதான். பணக்காரன் வீட்டுக் குழந்தை நல்ல மஸ்லின் சட்டை போட்டுக் கொண்டும், ஏழைக் குழந்தை சாதாரணச் சட்டையைப் போட்டுக் கொண்டும் இருக்கக் கூடிய ஏற்றத் தாழ்வான நிலை இருக்கக்கூடாது என்ற காரணத்தால்தான் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சீருடையை இலவச உடை என்று மாற்றிக்கொண்டு ஏன் குற்றம் காண்கிறீர்கள்?

இந்தியை மாடரேஷனில் சேர்த்திருப்பதால் தரம் குறைந்து விடவில்லையா என்று கேட்டார்கள். கணக்கில் 10 மார்க், 15 மார்க் வாங்கி மாடரேஷன் செய்தால் தரம் குறைந்து இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் மாடரேஷன் என்பது கல்வி முறையிலே ஒரு பாலிசியாக வகுக்கப்பட்டிருக்கிறது. மாடரேஷனைப் பாலிசியாக ஒத்துக் கொண்டிருக்கிறார்களா, இல்லையா? ஒரு சப்ஜக்டில் குறைவான மார்க் வாங்கி இன்னொரு சப்ஜக்டில் அதிகமான மார்க் வாங்கியிருந்தால் அப்போது மாடரேஷன் பயன் படுகிறது. கணிதத் துறையில் குறைவாகவும், சரித்திரத்தில் நிறையவும் மார்க் வாங்கியிருந்தால் அவன் சரித்திர ஸ்பெஷலிஸ்ட் ஆவான். எஜுகேஷன் ஸ்டாண்டர்டைப் பொறுத்து மாடரேஷன் என்பது வைஸ் சான்சலர், மற்ற நிபுணர்கள் எல்லாம் பரிசீலித்துக் கொண்டு வந்த கொள்கை. அந்த மாடரேஷன் ப்ரின்சிபிளை இந்திக்குக் கொடுத்தால் என்ன? அவன் லிங்விஸ்ட் ஆகிறான், அதனால் கல்வியின் தரம் குறைந்து விட்டது என்று சொல்வது எவ்வளவு பொருத்தமாகும்? ஆகவே, அதுவும் பொருத்தமாகாது.

சத்தியமூர்த்தி பவனை 1,500 ரூபாய்க்கு சர்க்கார் அலுவலகத்திற்கு வாடகைக்கு விட்டிருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டைக் கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சொந்தமான

[திரு. ஏ. பி. ஸி. வீரபாகு] [22nd October 1964

கட்டிடங்களை வாடகைக்கு எடுக்க நான் சிபார்சு செய்கிறேன். காங்கிரஸ் கட்சிக்குச் சொந்தமான கட்டிடமாக இருந்தால் வாடகைக்கு எடுத்துக் கொண்டது தவறு என்று சொல்வது சரிதானா? அந்த இடத்தில் எத்தனை ஸ்கொயர் பீட் இடம் இருக்கிறது; பொதுவாக அந்த இடத்திற்கு எத்தனை ரூபாய் வாடகை கொடுக்கலாம் என்று பார்த்து அந்தக் தொகைக்கு மேலே வாடகை வாங்கினால் அது தவறு; குற்றம் சாட்டலாம். சென்னை நகரிலே இடம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அதற்காகத்தான் வாடகை சட்டம் எல்லாம் வைத்திருக்கிறோம். அந்த நிலையில் அந்தக் கட்டிடத்தை வாடகைக்கு எடுத்துக் கொண்டதில் என்ன தவறு? வேண்டுமானால் இனிமேல் ஆபீசுக்கு இடம் கிடைக்கவில்லையென்றால் எல்லோரும் எதிர்க் கட்சியிடத்தில் ரிக்விசிஷன் கொடுக்கலாம். அந்த கட்டிட வாடகையை வாங்கித்தான் காங்கிரஸ் கட்சி வாழ வேண்டுமென்ற நிலையில் இல்லை. இதுவரை உணவுக்கொள்கையைத் தவிர மற்ற வற்றுக்குப் பதில் சொன்னேன். இதை எவ்வளவு தூரம் ஏற்றுக் கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ளட்டும். எதிர்க்கட்சியில் சில பேராவது மனதிலே ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

சென்னை நகரத்திலே உணவுக் கொள்கை நிலைமையைப்பற்றி 'கொஸ்டியன்' பண்ணினார்கள். அவர்கள் படித்து தயாரித்து வந்தவர்கள். நான் வந்த இடத்தில் பதில் சொல்பவன். அவர்கள் புள்ளி விவரத்தை எடுத்துக் கூறினார்கள். இதுவரை ஏன் அரிசி கிடைக்கவில்லையென்று கேட்டார்கள். அவர்களுக்கும் காரணம் தெரியும். இந்த ஸ்டேட் அரிசி அளவில் ஒரு தனி ஏரியா என்று சொல்லக்கூடிய நிலைமை இப்போதுதான் வந்தது. பதினைந்து நாட்களுக்கு முன்னால் வரை சௌத் ஸோன் ஆகத்தான் இருந்தது. ஆந்திராவிலிருந்து அரிசி கொண்டு வரலாம்; கேரளாவுக்குக் கொண்டுபோகலாம் என்ற நிலைமை இருந்தது. அண்டை மாநில மான கேரளாவில் ரொம்ப பற்றாக் குறை இருந்தது. எங்கள் ஜில்லாவில் இருந்து கூட கேரளாவுக்கு அரிசி போய்க் கொண்டிருந்தது. தமிழ் நாட்டுக்குப் போதுமான அளவுக்கு விளைகிற தன்மை இருந்த போதிலும் வெளியே போய்க் கொண்டிருந்த காரணத்தால் சிறிது பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. உண்மை யிலேயே இங்கு ஒரு பஞ்ச நிலைமை ஏற்பட்டு விடவில்லை. நீங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு பஞ்ச நிலைமையை உண்டாக்கப் பார்க்கிறீர்கள். நாம் ஆறு அவுன்ஸ் சுதந்திரநாட்டில் இருந்தோம். இப்போது அந்த நிலைமைக்கு கொண்டு வரக்கூடாது என்றுதான் முதலமைச்சர் அவர்கள் யோசித்து வருகிறார்கள். திரு. கலியாண சுந்தரம் அவர்கள் பாலிசி தவறு என்று சொல்கிறார்கள். எதிர்க் கட்சியில் ஸ்டேட் டிரேடிங் கூடாது என்று ஒருவர் சொல்கிறார், இன்னொருவர் வேண்டுமென்று சொல்கிறார். யாரைக் கேட்டு நடப்பது? எங்களுடைய கொள்கையின்படி நடக்கிறோம். எல்லோருக்கும் வியாபார மனப்பான்மை இருக்கும் அல்லது இராது என்று எப்படி சொல்லிவிட முடியும்? மந்திரிகள் ஏதோ அரிசி வாங்குவதற்காக சென்றார்கள் என்றால் அதை கேலி பண்ணு



22nd October 1964] [திரு. ஏ. பி. ஸி. வீரபாகு]

கிறார்கள். ஏதோ பிச்சைக் கேட்கப் போனார்கள் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) பிச்சைக் கேட்பதைப்போல் ஏதோ ஒரு பத்திரிகையில் பார்த்தேன். ஏதோ அமைச்சர் மன்றாடியார் அவர்கள் ஆந்திராவில் போய் 'அம்மா பிச்சை போடு' என்று போட்டிருந்த ஒரு படத்தை நான் பார்த்தேன். க்யூவில் மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதைப்பார்த்து நீங்கள் மட்டும் என்ன, உங்களைவிட நாங்கள் மிகவும் வேதனைப்படுகிறோம். . . .

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் அங்கத்தினர் மற்ற அங்கத்தினர் பேசக்கூடிய நேரத்தைவிட அதிகமாக பேசியிருக்கிறார்கள்.

SRI P. U. SHANMUGAM : Rose.

MR. SPEAKER : Let the hon. Member take even one hour. But that is within the time allotted to the Congress Party.

திரு. கே. ஏ. மதியழகன்: அப்படியானால் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் இவ்வளவு நேரம் என்று ஒதுக்கிவிடுவது நல்லதல்லவா, இல்லையென்றால் பலரும் பேசுவதற்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும்.

MR. SPEAKER : I will make the point clear. To-day the hon. Members belonging to the Dravida Munnetra Kazhagam took $1\frac{1}{2}$ hours.

SRI P. U. SHANMUGHAM : One hour.

MR. SPEAKER : No, I know it. The hon. Members belonging to the D.M.K. Party have taken more time. I have given a chance to the hon. Member Sri Mookiah Thevar, to speak and if time permits, I may call one more hon. Member to speak to-day. To-morrow I shall make it a point to divide the time equally for hon. Members sitting on both the sides.

திரு. ஏ. பி. ஸி. வீரபாகு: இந்த நிலைமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துத்தான் ஆகவேண்டும். உணவுப் பொருட்கள் விநியோகத்தைப் பொறுத்தவரையில் இதை நாம் மனிதாபிமானத்தோடு தான் பார்க்கவேண்டும். இதற்காக இருக்கின்ற நிலைமையை மாற்ற வேண்டாம் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. இம் மாதிரி சந்தர்ப்பங்களில் ஏராளமாக உணவு தான்யத்தைக் கொடுத்து சமாளிக்க முடியும். அப்படியேற்பட்டுப் போய் விட்டால் ஒழுங்காக எல்லாம் நடக்கும். இதற்காக அமைச்சர்கள் வெளியே போய் கேட்டால் அதில் வெட்கப்படுவதற்கொன்றும் மில்லை. அவ்விதம் போய் கேட்பது சந்தோஷத்தையும் தைரியத்தையும் தான் கொடுக்கிறது. நிறைய உணவை சென்னைக்கு கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும். இப்போதுள்ள 300, 400 செண்டர்களைவிட இன்னும் கூடுதலாக செண்டர்கள் மூலம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். உடனடியாக ரிசர்வில் இருக்கும் 10 ஆயிரம் டன் அரிசியையும் ரிலீஸ் செய்ய வேண்டும். அதற்காக நமது முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போதுள்ள நிலைமையை இரண்டு வழிகளால் தான் சமாளிக்க முடியும். ஒன்று, உடனடியாக சப்ளை செய்ய

[திரு. ஏ. பி. ஸி. வீரபாகு] [22nd October 1964

வேண்டும். இன்னென்று ஃபாமிலி கார்ட் மூலம் விநியோகம் செய்யவேண்டும். இதைப்பற்றி மந்திரிசபை முடிவு செய்ய வேண்டும். முக்கியமாக எல்லோருக்கும் போதுமான அளவு உணவு கிடைக்க வேண்டிய நிலையை உண்டு பண்ணுவதற்கு நிச்சயமாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துத்தான் ஆகவேண்டும். இப்போது ரிசர்வில் இருக்கும் 10 ஆயிரம் டன் அரிசியையும் ரிலீஸ் செய்துவிடலாம். அரசாங்கம் ரிசர்வ் செய்து வைத்திருப்பது இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கொடுப்பதற்குத்தான். ஏதோ கவர்ன்மெண்ட் ஹோர்டிங் இருப்பதாகச் சொல்லப்பட்டது. இவ்விதம் ஹோர்டிங்கிலிருந்து எடுப்பதுதான் நல்லது. இப்போது 10 ஆயிரம் டன் ரிலீஸ் செய்தால், அது ஒரு லட்சம் 30 ஆயிரம் மூட்டை அரிசியாகும். அப்படிப் பார்க்கும்போது ஒரு டிவிஷனுக்கு 1,300 மூட்டை கிடைக்கிறது. இதை உடனடியாகச் செய்ய வேண்டும். அதோடு தஞ்சாவூரிலிருந்தும் அரிசி கொண்டு வர வேண்டும். அப்போது நிலைமை சீர்திருந்திவிடும், க்யூவில் நிற்கின்ற நிலைமையும் இராது. எப்படியாவது இதை சமாளித்தேயாக வேண்டும்.

பொதுவாக தமிழ்நாடு சம்பந்தப்பட்ட வரையில், இந்த நெருக்கடி தவிர்க்க முடியாதது அல்ல. அதே போன்று தான் அண்டையிலுள்ள நாட்டுக்கும் நாம் உணவு அனுப்பவேண்டியது தான். கேரளத்தை எடுத்துக்கொண்டால் அவர்கள் நமக்கு தண்ணீர் கொடுப்பதற்கு மறுத்து வந்தாலும் கூட அவர்களுக்கு நாம் அரிசி அனுப்ப வேண்டியது அவசியம் என்ற எண்ணமுடையவன் நான். அதே போன்று தான் ஆந்திராவுக்கும் உதவி செய்யவேண்டும். கர்ணன் பரம்பரையா என்று கேட்கலாம். உண்மையில் கர்ணன் பரம்பரை தான். சந்தேகமேயில்லை. உங்களுக்கு வேண்டுமானுல் கர்ணன் வடநாட்டைச் சேர்ந்தவனுக இருக்கலாம். கேரளத்திற்கு 10 ஆயிரம் டன் உணவு கனம் முதலமைச்சர் அவர்கள் பரிசாக அளித்தார்கள் என்ருல் அதைப் பார்த்து நான் உண்மையிலேயே சந்தோஷப்படுகிறேன். அதே போன்று தான் மேலும் மேலும் அவர்களுக்கு வேண்டிய தான்யத்தை அனுப்ப நாம் முற்படவேண்டும். அப்போது தான் பாரத தேசம் எல்லாம் ஒன்று என்கின்ற எண்ணம் உண்டாகும். பட்டினியிலும் பங்கு கொள்வோம் என்ற கொள்கையின் அடிப்படையில் தான் நாம் வேலை செய்யவேண்டும். அந்த முறையில் மந்திரிசபை நடவடிக்கை எடுக்கும்போது அதற்காக பிரைஸ் கன்ட்ரோல் அமல் செய்யும் போது இரண்டு வழிகளைத்தான் பின்பற்றவேண்டும். ஒன்று, ஃபேர் [illegible] தான்யங்களை கொடுக்கவேண்டும். அல்லது ஃபாமிலி கார்டு முறை கொண்டு வரவேண்டும். நம்முடைய தமிழ் நாட்டை மட்டும் எடுத்துக்கொண்டால் சில ஜில்லாக்களில் குறைவாக இருக்கலாம். அதே போன்று சில ஜில்லாக்களில் கூடுதலாக இருக்கலாம். நெல்லை ஜில்லாவைப் பொறுத்தவரை இப்போது உடனடியாக எந்த விதமான [illegible] வருவதற்கு வழியில்லை. ஆனால் பருவ மழை சரியாக பெய்யாமல் இருக்கின்ற இதே நிலை இன்னும் இரண்டு மாதங்களுக்கு இருந்து கொண்டிருந்தால், நிச்சயமாக



22nd October 1964] [திரு. ஏ. பி. ஸி. வீரபாகு]

இந்த நிலைமை அங்கும் வரத்தான் செய்யும். இம்மாதிரி தட்டுப்பாடு வந்துவிடுமோ என்ற பயம் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கும் நாம் இப்போதே கண்காணிக்கிற அளவில் சிவில் சப்ளை இலாகா அதிகாரிகள் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். போதுமான தான்யத்தை சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். அல்லது ரேஷன் கார்டு முறை கொண்டு வர முடியுமா என்பதைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டும். பாரத தேசம் ஒன்று என்று சொல்லும்போது, பட்டினியிலும் பங்கு என்ற எண்ணத்தில் ரேஷன் முறையிலாவது எல்லோருக்கும் ஒரே மாதிரி உணவை கொடுப்பதற்கான வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோ பிரைஸ் பாலிஸி தோற்றுப்போய்விட்டது என்று கம்யூனிஸ்ட் நண்பர்கள் சொன்னுர்கள். கிறேன். போதுமான தான்யத்தை சேகரித்து வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதை அமல் நடத்துவதில் தான் கஷ்டங்கள் இருக்கலாம். அப்படியிருக்கும் போது கம்யூனிஸ்ட் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கும் தீர்மானத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது . . . .

'shooting up of prices of all essential articles of life, very steeply'

Therefore, control is necessary.

'hoarding and black-marketing by wholesale traders with the aid of "legal bank-money" and "illegal black money"'

Therefore, State Trading is essential.

"man-made scarcity of foodgrains and other vital articles of dialy use, subjecting millions of people to unprecedented suffering"

Therefore, fair distribution is necessary.

இம்மாதிரி மூன்று காரணங்களைச் சொல்லும்போது நம்முடைய கொள்கையை எதற்காக மாற்ற வேண்டும். விலை நிர்ணயப்படுத்த வேண்டும் என்பதுதான். நாம் எடுத்திருக்கும் கொள்கை. அதைத்தான் கம்யூனிஸ்ட் கட்சியும் சொல்கிறது. விலையே நிர்ணயம் செய்யக்கூடாது என்று சுதந்திரா கட்சி சொல்கிறது. காரணம் அதற்கான பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். அதிகப்படியான குறைந்த விலையில் பொருட்கள் கொடுக்க வேண்டும் என்று எல்லோரும் சொல்வதை [illegible] தான், பேசிக் basic -காக இருக்கிற அரிசிக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற அளவில் பிரைஸ் கண்ட்ரோல் இருந்தாக வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம். இவ்விதம் இருக்கும்போது எப்படி இதை ரிவைஸ் பண்ண முடியும்? ஆகவேதான் சொல்லுகிறேன். நம்பிக்கையில்லாத் 1-30 p.m.
தீர்மானத்திற்குச் சொல்லப்பட்டிருக்கிற காரணம் அத்தனையும் அபத்தம், ஒன்றும் ஒத்துக்கொள்ள முடியாதது. இப்போது [illegible] விலை நிர்ணயக் கொள்கையை மாற்ற வேண்டிய அவசியம் [illegible] முறையில் [illegible] எவ்வளவு தூரம் அமல் நடத்த

முடியுமோ, என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அவைகளை எடுக்கவேண்டும், நம் பக்கம் மக்கள் நிற்பார்கள் என்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: May we continue for 15 minutes more? The hon. Member Shi K. A. Mathialagan has taken one hour and the hon. Member Sri Pulavar Govindan 25 minutes, the hon. Member Sri P. U. Shanmugam 18 minutes and the hon. Member Sri P. K. Mookiah Thevar 17 minutes. So I have given for the Opposition two hours. For the Congress Party, the hon. Member Sri M. S. Selvarajan has taken 25 minutes and the hon. Member Sri A. P. C. Veerabahu 35 minutes. So, for the Congress Party, I have allowed one hour. Now I am calling the Independent member Sri A. Swamidhas.

***திரு. ஏ. சுவாமிதாஸ்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது எழுந்திருக்கிற விவாதத்தில் கலந்து கொண்டு ஒரு சில வார்த்தைகளைக் கூறி எனது கருத்துக்களை எடுத்து வைக்கலாம் என்று எண்ணுகிறேன்.

இப்போது முக்கியமாக உள்ளது உணவுப் பிரச்னை. உணவுப் பிரச்னையைப் பொறுத்த அளவில் நம் மாநிலம் தன்நிறைவு பெற்றிருக்கிறது என்ற புள்ளிவிவரக் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. நம் மாநிலத்தில் நெல் உற்பத்தி திட்டமிட்டபடி பெருகவில்லை என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இருப்பினும் இன்றைய அரிசி பற்றாக்குறை நிலைமையையும், விலை உயர்வையும் பார்க்கும்போது அதற்குப் பல காரணங்கள் உண்டு. முதல் காரணம் ஆகக் குறிப்பிட விரும்புவது, அறுவடை காலத்தில் நெல் விலை அதிகம் உயராமல் இருந்துகொண்டு வந்தது. சற்று ஏறக்குறைய ஒரு ஆண்டுக்கு முன்னால் மிகவும் மலிவான விலையில் நெல் விற்கப்பட்டு வந்தது. அப்படி இருக்கும் போது அண்டைய பற்றாக்குறை மாநிலங்களுக்கு நெல் அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தினால் அரசாங்கமே நெல்லை கொள்முதல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு, அரிசி மில்காரர்களிடமிருந்து லெவி ஸிஸ்டம் வைத்து, இவ்வளவு அரிசி மூட்டைகள் கொடுக்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தினோம். அந்த நிலை ஏற்பட்ட பிறகு தான் நெல் விலை ஓரளவு உயர்ந்தது. லெவி ஸிஸ்டம் வைத்து என்ன சட்டம் போட்டோம்? இவ்வளவு மூட்டை அரசாங்கத்திற்குக் கொடுத்து விடுங்கள், எஞ்சியதை விற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னவுடனே, அதைப் பயன் படுத்திக்கொண்டு நெல் விலையை உயர்த்திக்கொண்டு போனார்கள். அரிசி விலையும் உயர்ந்து விட்டது. அந்த நிலை இப்படி இருக்க, இன்னொரு நிலை ஏற்பட்டது. அது என்னவென்றால் சேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகளின் கெடுபிடி. லாரிகளிலோ, வண்டிகளிலோ மூட்டை மூட்டையாக வந்து கொண்டிருக்கிற நெல் அரிசியைத் தடுத்து பரிசோதனை செய்தார்கள் சேல்ஸ் டாக்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதா, இல்லையா என்று பார்க்க. அப்படி பரிசோதனை செய்த காரணத்தினால்



ஃப்ரீ மூவ்மெண்ட், மாவட்டத்திற்கு மாவட்டம், மாநிலத்திற்கு மாநிலம் போய்க் கொண்டிருந்த நிலை தடைப்பட்டது. வியாபாரிகளும் என்ன செய்தார்கள் என்றால் அவர்களாக முன் வந்து தங்கள் தொழிலை அதிகரிக்க முன் வரவில்லை. இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இந்த வியாபாரத்தை செய்வதை விட அதை நிறுத்துவது நல்லது என்று கொஞ்சம் தளர்த்தி விட்டார்கள். இந்தக் காரணத்தினாலே நெல் விலை உயர்ந்தது. இப்படி உயர்ந்தபோது நம் மத்திய அரசு என்ன செய்தது? விலை விஷம் போல ஏறிக்கொண்டு இருக்கிறது என்று கட்டுப்பாடு விலை போட்டார்கள். நெல் உற்பத்தி ஆகிற இடங்களில் உள்ள நெல் விலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதிலே விவசாயிகளுக்கு ஓரளவு திருப்தி தான். அவர்களும் பரவாயில்லை, விற்கலாம் என்று இருந்தார்கள். அப்படி இருக்கும்போது அண்டை மாநிலத்தில், கேரளாவில் அரிசியே கிடையாது, ஒரே பற்றாக்குறை. நாங்கள் பக்கத்தில் இருப்பதால் எங்களுக்கு அங்குள்ள நிலைமை நன்றாகத் தெரியும். திருவனந்தபுரம் கலெக்டர் என்ன ஆணை போட்டார் என்றால், கட்டுப்பாடு போட்டதால் அரிசி நமக்கு கிட்டாது என்று, அண்டை ஜில்லாவான கன்னியாகுமரியிலே உள்ள விலையை விட க்விண்டாலுக்கு நான்கு ரூபாய் அதிகம் வைத்து விலை நிர்ணயம் செய்தார். அதோடு கேரள வியாபாரிகளுக்கு ஒரு அறிக்கை விட்டார், என்ன விலை கொடுத்தாகிலும் வாங்கி விநியோகிக்கவேண்டும் என்று. அறுவடை நடக்கும்போதே பக்கத்து திருநெல்வேலி, கன்னியாகுமரி பகுதிகளில் அதிக விலை கொடுத்து வாங்கிக்கொண்டு சென்று விட்டார்கள். அதனால் கன்னியாகுமரி மாவட்டத்திலே அரிசிக்கும் நெல்லுக்கும் பஞ்சம் ஏற்பட்டது. இதை மனதில் வைத்துக்கொண்டு பார்த்தால், லெவி ஸிஸ்டம், சேல்ஸ்-டாக்ஸ் அதிகாரிகள் கெடுபிடி, இப்போது கட்டுப்பாடு திட்டம் இவைகள் தான் இன்றைய பற்றாக்குறை நெருக்கடிக்குக் காரணம் என்பது தெரியும். ஒவ்வொரு மாவட்ட கலெக்டரும் தங்கள் மாவட்டம் பாதிக்கப்படக் கூடாது என்று தங்களுக்குள்ளாக ஒரு திட்டத்தை வைத்துக்கொண்டார்கள். கன்னியாகுமரி கலெக்டர் ஒரு உத்தரவு, திருநெல்வேலி கலெக்டர் ஒரு உத்தரவு என்ற முறையில் ஒவ்வொரு கலெக்டரும் ஒரு உத்தரவு போட்ட காரணத்தினால் வியாபாரிகள் அறவே தங்கள் தொழிலை நிறுத்தி விட்டார்கள். அப்படி நிறுத்திய காரணத்தினால் பட்டணங்களிலும் கிராமங்களிலும் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதை மனதில் வைத்து இதற்குப் பரிகாரம் தேட வேண்டும். இன்றைக்குப் பல பரிகாரங்கள் சொல்லுகிறார்கள். ரேஷன் முறை கொண்டு வந்தால் என்ன என்று சொல்லுகிறார்கள். கட்டுப்பாட்டைத் தளர்த்தி விட்டால் என்ன என்று சொல்லுகிறார்கள். நம் மாநிலத்தில் உள்ள நெல் நமக்குப் போதுமா என்று மனதில் வைத்து இதற்கு வழி கோல வேண்டும். புள்ளிவிவரக் கணக்கு இருக்கலாம். எனக்கு இந்த புள்ளிவிவரத்தில் நம்பிக்கை இடையாது. புள்ளி விவரங்கள் எப்படி கிடைக்கின்றன? எப்படி யெப்படியோ கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த புள்ளி

விவரம் சரியாக இருந்தால் இத்தகைய நிலையை நாம் இன்று பார்க்க முடியாது. உண்மையிலேயே தாராளமாக மற்ற பற்றாக் குறைப் பகுதிகளுக்கு நாம் அதிகமாக அனுப்பிக்கொண் டிருக்கலாம். இன்னொன்று குறிப்பிட விரும்புகிறேன். நெல் பயிரிட்டு வந்த நிலங்களெல்லாம் இன்று வருவாய் கொடுக்கிற இதரப் பயிர்களைப் பயிரிட உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. கரும்பு சாகுபடி செய்து வருகிறார்கள். அதனால் என்ன ஆயிற்று? நெல் விளைச்சல் இல்லை, குறைந்துகொண்டே வருகிறது. இதையும் மனதில் வைத்து திட்டத்தை தீட்டவேண்டும். நெல் இல்லை, அரிசி இல்லை என்று குறைப்படுகிறோம். அந்த நிலங்களிலெல்லாம் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வாழை சாகுபடி செய் கிறார்கள். இதர வருவாய் கொடுக்கும் பயிர்களை விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் நெல் விலை கட்டுப்படியாகததுதான்.

அது தவிர விவசாயிகளுக்கு நாம் காட்டும் சலுகை போதாது. அரசாங்கத்திலிருந்து பெரிய தொகைகளை ஒதுக்கியிருக்கிறோம். இருப்பினும் விவசாயிகளுக்கு அவர்கள் ஈடுபட்டிருக்கும் தொழி லில் இன்வென்ட்டிவ் (ஆர்வம்) ஏற்பட்டு சிரத்தையாக ஈடுபட வாய்ப்பு போதாது என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நெல் விலைக்கு மாத்திரம் கட்டுப்பாடு போட்டிருக்கிறார்கள். விவசாயி உழுவதற்கு இரண்டு மாடுகள் வாங்கவேண்டுமென்றால், 2–3 ஆண்டு களுக்கு முன் 150 ரூபாய் கொடுத்தால் இரண்டு மாடுகள் வாங்க முடியும். இன்று 400 ரூபாய் இல்லாமல் வாங்க முடியாது. மாட்டுக்கு தீனி போட வேண்டும். பருத்திக்கொட்டை, பிண்ணா க்கு போட வேண்டும். ஒரு மூட்டை பிண்ணாக்கு 48–50 ரூபாய. பருத்திக்கொட்டை விலையும் மிகக் கூடியிருக்கிறது. தவிடு ஒரு மூட்டை விலை 3–4 ரூபாயாக இருந்தது 17–18 ரூபாயாக இருக் கிறது. அதையும் பார்க்கவேண்டும். இன்னொன்று சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். நவீன விவசாயக் கருவிகள் கொடுக் கிறோம், நவீன முறைகளை புகுத்த முன் வருகிறோம் என்று சொல்லுகிறார்கள். அது நல்ல திட்டம் தான். நான் என்னுடைய அனுபவத்தைச் சொல்ல விரும்புகிறேன். எனது உறவினர் ஒரு வரை நான் ஒரு டிராக்டர் வாங்கவேண்டுமென்று தூண்டினேன். மாடுகளை வைத்துக்கொண்டு உழுவதால் உற்பத்தி பெருகாது, டிராக்டர் உபயோகப்படுத்தவேண்டும் என்று சொன்னதன் பேரில் அவர் டிராக்டர் வாங்க முன் வந்தார். அதற்கான மனுவைத் தயா ரித்து அதிகாரிகளிடத்தில் கொடுக்கும் நேரத்தில், அரசாங்கத்தி லிருந்து ஆணை இருக்கிறது, டிராக்டர் வாங்குவதற்கு உரிய மனுக் களை வாங்கவேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். கன்யாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கு இருக்கும் நெல் போதும். பிற மாவட்டங்களிலிருந்து வர வேண்டியதில்லை. அந்த மாவட்டத்திற்கு ஒரு டிராக்டர் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு டிராக்டர் வாங்கவேண்டு மென்று மனு கொடுத்தபோது அதை வாங்கிக்கொள்ளத் தயாரா யில்லை. டிராக்டர் இல்லை, கொடுக்க முடியாது என்று சொல்லப்பட்டு இருந்து. இந்த மாதிரி நிலைமை இருக்கிறது. இந்த விவாதத்தைப்





பொறுத்தமட்டில், பொதுவாக இன்னும் சொல்லப்போனால், எவ்வ ளவோ சொல்ல முடியும். விவசாயிகள் நெல் பயிரிடுவதை மாற்றி வேறு ஏதாவது பயிர் செய்வதற்கு வாய்ப்பு அளிக்கக்கூடாது. அதைக் கட்டாயமாக கவனிக்கவேண்டும். நானும்கூட என்ன எண்ணுகிறேன் என்றால், எனக்கு இருக்கிற சொந்த நிலத்தில் நெல் பயிர் செய்யாமல் ஏன் தென்னை பயிர் செய்யக்கூடாது என்பது தான். தென்னை பயிரிட்டால் என்ன என்ற எண்ணம் எனக்கு ஏற்படுகிறது.

Mr. SPEAKER: The hon. Member is talking more on agriculture than on the no-confidence motion.

**திரு. ஏ. சுவாமிதாஸ்:** நான் இன்னொன்றும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய அரசாங்க அட்மினிஸ்டிரேடிவ் மெஷினரி இருக்கிறதே, இயந்திரம் இருக்கிறதே, அது மிகவும் பழமையாகப் போய்விட்டது. வெள்ளைக்காரர் காலத்தில் இருந்த 'அட்மினிஸ்டிரேடிவ் மெஷினரி' அப்படியே இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அதை கனம் மந்திரி அவர்கள் தற்காலத் திற்கு ஏற்றவாறு மாற்றி அமைத்தால் மிக்க நலமாக இருக்கும். அதற்குப் பல காரணங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

Mr. SPEAKER: The hon. Member Sri Swamidas has got two minutes more.

**திரு. ஏ. சுவாமிதாஸ்.** ஆகவே, இப்பொழுது எழுந்திருக்கிற உணவுப் பிரச்னையைப் பொறுத்த அளவிலே இதை மனதில் வைத் துக்கொண்டு அரசாங்கம் நல்ல முடிவுக்கு வந்தால் நலமாக இருக் கும் என்று நினைக்கிறேன்.

Sri. S. NANJUNDA ROW: Is the hon. Member supporting or opposing the motion?

Mr. SPEAKER: The hon. Member is not prepared to say it. Why is the hon. Member very anxious to know it?

### VIII.—ANNOUNCEMENT.

Mr. SPEAKER: I have to announce to the House that the Business Advisory Committee which met this morning has decided that the following official Bills be taken up for consideration on the 24th October 1964, before the commencement of the discussion on the No-Confidence Motion:—

1. The Madras General Sales Tax (Special Provisions) Bill, 1964.
2. The Madras Electricity Duty (Amendment) Bill, 1964.
3. The Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1964.

It has also been decided that the House will adjourn sine die on the 24th October 1964.

It has also been decided that the non-official business will be taken up sometime later to give more time for the No-Confidence Motion.

[22nd October 1964

SRI M. KALYANASUNDARAM : Today is a day allotted for non-official business. What have we transacted all along, official or non-official business ? There has been no resolution before this House today to treat this as official day for transacting official business.

MR. SPEAKER : We have followed the decision taken at the last Business Advisory Committee meeting. The hon. Member was also a party to it. The hon. Member cannot blow hot and cold.

1-45 p.m. The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow, the 23rd October 1964.

The House then adjourned.

## IX.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. *Statutory Rules and Orders.*

86. *Notification issued with G.O. Ms. No. 1654, Rural Development and Local Administration, dated 7th August 1964 authorising the Joint Development Commissioner to exercise the power vested in Government in regard to all Panchayat Union Councils.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

87. *Notification issued with G.O. Ms. No.* 2155, *Revenue, dated 24th August* 1964 *amending the Revenue Department Notification S.R.O. No.* 5457 *of* 1957, *published at page* 1512 *of Part I of the* Fort St. George Gazette, *dated the 4th September* 1957. [*Laid on the Table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

88. *Notification issued with G.O. Ms. No.* 2223, *Revenue, dated 31st August* 1964 *appainting the 19th October* 1964 *as the date on which certain provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948), *shall come into force in Thorapalli Agraharam inam estate of Hosur taluk in Salem district.* [*Laid on the Table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act* 1948 (*Madras Act XXVI of* 1948).]

### B. *Reports, Notifications and other papers.*

* 30. *The Madras Appropriation* (No. 6) *Bill*, 1964 (*L.A. Bill No.* 42 *of* 1964).

* 31. *The Madras Appropriation* (No. 7) *Bill*, 1964 (*L.A. Bill No.* 43 *of* 1964).

---

* Sent to Members by General Despatch on 21st October 1964.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 23rd October 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *புதிய பள்ளிகள் நிறுவுதல்*

* 66 கேள்வி—திரு. சோ. ஆறுமுகம் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமங்களில் நிறுவப்படும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் மக்கள் தொகையின் அடிப்படையிலா அல்லது ஒரு பள்ளிக்கும், புதிதாக ஏற்படுத்தப்படும் பள்ளிக்கும் இடையில் உள்ள தூரத்தின் அடிப்படையிலா ?

(இ) இரண்டு பஞ்சாயத்துக்கள் இணையும் எல்லையில் உள்ள கிராமங்களில் ஒரு பஞ்சாயத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடம் கட்டி விட்டால் மற்றொரு பஞ்சாயத்து பள்ளிக் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Both the factors are taken into consideration.

(*b*) The criterion for the opening of a school is the need for a school locality in the particular locality and not whether the locality falls within one panchayat or the other.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தற்போது புதிதாக ஆரம்பப் பள்ளிகள் திறப்பதற்கு மாகாணக் கல்வி அதிகாரிதான் அனுமதி கொடுக்க வேண்டுமென்று விதி இருக்கிறதா ? தாமதத்தைத் தவிர்ப்பதற்குக் கூடுமான வரையில், டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அளவிலே அதிகாரம் வழங்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 300 ஜனத்தொகைக்கு மேற்பட்ட கிராமமாயிருந்து, வேறு அந்த இடத்திலே பள்ளி இல்லை என்றால், கல்வி அதிகாரியின் அனுமதியில்லாமலேயே வைத்துக் கொள்ளலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகள் வைக்கும் பொழுதுதான், கல்வி அதிகாரி பார்த்து அது அவசியமா என்று பரிசீலனை செய்து, அவருடைய அனுமதி பெறவேண்டியிருக்கிறது.

திரு. மு. சண்முகம் : ஆரம்பப் பள்ளிகளை ஏற்படுத்தும் பொழுது, மக்கள் தொகையை மட்டில் கணக்கில் எடுத்துக் கொண்டு தூரத்தைக் கணக்கிடாமல் பள்ளிகளை நிறுவுவதை அரசாங்கம் கவனிக்குமா ?

[23rd October 1964

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் முன்பு விடையளித்தது போல், மக்கள் தொகையை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு பள்ளிகளை நிர்ணயிப்பது சரியாக இருக்காது என்பது அரசாங்கத்தின் கருத்து.

**புலவர் கா. கோவிந்தன்:** பெரிய ஊராட்சி மன்றங்களிலே இப்படி ஒரு மைல் இடைவெளியைப் பார்க்காமல், மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்து பள்ளிகள் வைக்கிறார்கள். ஆனால் சிறு கிராமங்களில் படிக்கக்கூடிய அளவுக்கு மாணவர்கள் இருந்தும், இடைவெளி ஒரு மைல் இல்லை என்ற காரணத்திற்காக பள்ளிகள் திறப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. பிள்ளைகள் இருந்தால் அங்கே பள்ளிக்கூடம் திறப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதெல்லாம் கல்வி அதிகாரியின் கவனத்தில் இருக்கிறது. இதையெல்லாம் பார்த்துத்தான் அனுமதி கொடுக்கப்படுகிறது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** செங்கோட்டை தாலுகாவைப் பொறுத்தவரையில் எலிமெண்டரி எஜுகேஷன் சர்க்கார் பொறுப்பில் இருந்துகொண்டிருக்கிறது. அடிக்கடி சென்னைக்கு வந்து, பள்ளிகள் திறப்பதற்கோ அல்லது திட்டங்கள் வகுப்பதற்கோ, டி.பி.ஐ. லெவலில் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. பிளாக் லெவலிலே இருக்கிற மாதிரி, பிளாக்கின் நிர்வாகத்திற்கே இதை விடுவதற்கு சர்க்கார் யோசிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** செங்கோட்டைப் பகுதியிலிருந்து கூட, சென்னைக்கு வரவேண்டிய அவசியம் இல்லை. ஸ்தல அதிகாரிகளிடம் கலந்து பேசி, வேண்டியதை ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

**திரு. மு. பொ. வடிவேல்:** இப்பொழுது ஜனத்தொகை 300 இருந்து 30 பிள்ளைகள் இருந்தால் டி.இ.ஓ. விடம் பெர்மிஷன் வாங்க வேண்டியிருக்கிறது. அதை மாற்றி பஞ்சாயத்து யூனியனுக்கே விடுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் முன்பு கூறியதுபோல், ஜனத்தொகை 300-க்கு மேற்பட்ட கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம் கூட இல்லை என்றால் யார் அனுமதியும் வேண்டாம். பஞ்சாயத்து யூனியனே பள்ளிக்கூடம் வைத்துக்கொள்ளலாம்.

**திரு. எஸ். முருகையன்:** ஜனத்தொகை 300-க்கு மேற்பட்ட கிராமங்களில்கூட, சர்க்கார் உத்தரவுப்படி கல்வி அதிகாரியின் அனுமதியைப் பெறவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அமைச்சர் அவர்கள் அப்படி இல்லை என்று சொல்லுகிறார்கள். இதிலே எது சரி என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் சொன்னபடி 300-க்கு மேற்பட்ட கிராமமாயிருந்து, வேறு பள்ளிக்கூடம் இல்லாமல் இருந்து, கல்வி அதிகாரியின் அனுமதியைப் பெற வேண்டுமென்று



23rd October 1964]

சொல்லியிருந்தால், அப்படி ஏதாவது குறிப்பிட்ட இடத்தைப் பற்றியிருந்தால், அதை எனக்குத் தெரிவித்தால் மேற்கொண்டு கவனம் செலுத்தப்படும்.

### புதிய உயர்நிலைப்பள்ளிகள்

*67 **கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன்:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-64 பள்ளி ஆண்டில் எத்தனை உயர்நிலைப்பள்ளிகள் திறக்கப்பட்டன?

(இ) இதில் (1) தனியார் (2) அரசினர் (3) மாவட்டக்கழகம் நிர்வாகத்தின் கீழ் உள்ளவை எத்தனை?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** (அ) 190.

(இ) (1) 46.

(2) 4.

(3) 132.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** தற்போது ஜில்லா போர்டு ஹைஸ்கூல்களை நிர்வகிப்பதற்குத் தனியாக அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். ஜில்லா போர்டு அங்கம் நடைமுறையில் இல்லாமல் இருப்பதால் போர்டு பாடசாலை என்று பெயரிட்டு அதைத் தனியாக வைப்பதற்குப் பதிலாக சர்க்காரே போர்டு பள்ளிகளை எடுத்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்பொழுது ஒரு தனி 'கேட்டிகரி'யாக இருக்கிறது. சர்க்காரே நடத்துகிற பள்ளிகள் சில. பழைய ஜில்லா போர்டு வைத்த பள்ளிகளை சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் பள்ளிகள் அந்த வகையிலே புதிதாகத் திறக்கப்படுகின்றன. சர்க்கார் பள்ளிகளாகவே இவை செயல்படவேண்டுமென்று சொன்னால் மேலும் பரிசீலனை செய்து அதற்குப் பிறகு கவனிக்கப்படும்.

### ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம்

*68 **கேள்வி.—திரு. டி. கடம்பவனசுந்தரம்:**
**திரு. மீ. கலியாணசுந்தரம்:**
**திரு. எம். எஸ். செல்வராஜன்:**
கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இப்போது அமலிலிருக்கும் ஆசிரியர்-மாணவர் விகிதாசாரத்தின் காரணமாய் பல பள்ளிகளில் இரண்டு மூன்று வகுப்புகளை ஒரே ஆசிரியர் போதிக்க வேண்டிய நிலைமையும் 60, 70 மாணவர்களை ஒரே ஆசிரியர் பார்த்துக் கொள்ள வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருப்பது சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா?

[23rd October 1964

*(இ) அப்படியானால் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The Government have since issued orders revising the teacher-pupil ratio. Under the new teacher-pupil ratio the question of having a class with 60 or 70 pupils for one teacher will not arise and cases of plural class teaching in a school will be considerably reduced

*திரு. எம். எஸ். செல்வராஜன் : சர்க்காரின் புதிய உத்தரவுப்படி ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம் என்ன என்பதை அறிவிக்க முடியுமா?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The number of teachers admissible are as follows :—

Two teachers if the average attendance of combined standards is 30 and above.

Three teachers if the average attendance of combined standards exceeds 55.

Four teachers if the average attendance of combined standards exceeds 75.

Five teachers if the average attendance of combined standards exceeds 95.

*திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்தப் புதிய விகிதாசாரத்தை அமலுக்குக் கொண்டுவருவதற்கு அடிப்படையான காரணம் குழந்தைகளின் கல்வித்திறம் கெடக்கூடாது ஒவ்வொரு ஆசிரியருக்கும் குறைந்தபட்ச பிள்ளைகள் இருக்கவேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல் ஏராளமான ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற அம்சமும் இதிலே அடங்கியுள்ளது என்பது உண்மையா? அரசாங்கம் எதிர்பார்ப்பது போல 8,000 ஆசிரியர்களை இந்த ஆண்டிலேயே வேலைக்கு அமர்த்தும் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா?*

*கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆசியர்களுக்கு வேலை கொடுப்பது ஒரு விஷயம். அதைவிட முக்கியமான விஷயம் பிள்ளைகளுக்கு சரியாகப் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்பது. அந்த அடிப்படையில்தான் அதிகபட்ச ஆசிரியர்களைப் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.*

*திரு. மு. பொ. வடிவேல் : முன்பெல்லாம் 40 மாணவர்களுக்கு என்ற விகிதாசாரத்தில் ஆசிரியர்களைப் போடும்பொழுது பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரம் இருந்தது. தற்சமயம் குறைந்தபட்ச எண்ணிக்கை இருந்தும்கூட மேலதிகாரியின் உத்திரவில்லாமல் ஆசிரியர்களைப் போடமுடியாத நிலையிருப்பதால் பல பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லாமலிருக்கிறார்கள். ஆகவே இந்த முறையை மாற்றி பஞ்சாயத்து யூனியனுக்கே இந்த அதிகாரத்தை வழங்கமுடியுமா?*



23rd October 1964]

*கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆசிரியர்-மாணவர் விகிதாசாரத்தை மாற்றியமைத்தபிறகு, அதனாலே பைனான்ஷியல் கமிட்மெண்ட் அதிகமாகி இருக்கிறது. இத்தனை ஆசிரியர்களுக்கு இடமுண்டு என்று திட்டத்திலே குறிப்பிட்டு அதற்காக பணம் ஒதுக்குகிறோம். ஆனால், பஞ்சாயத்து யூனியன்கள் வேறு தகவல் இல்லாமலே ஆசிரியர்களை நியமித்துக்கொண்டேபோனால் எவ்வளவு ஆசிரியர்களுக்கு இடம் போட்டிருக்கிறோமோ அதைவிட அதிகமாகலாம். அதனால்தான் கல்வி இலாகாவுக்கு பொறுப்புக் கொடுத்து, கல்வி இலாகாவின் அங்கீகாரத்தின்பேரில் நியமிக்க வேண்டுமென்று இப்பொழுது உத்திரவு போடப்பட்டிருக்கிறது.*

### *ராஜா பெர்டிலைசர்ஸ், வேலூர்*

**69 கேள்வி.—திரு. ர. ஜீவரத்னம் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

*(அ) வேலூர் ராஜா பெர்டிலைசர்ஸ் ஸ்தாபனத்துக்கு மொத்தம் எவ்வளவு தொகை கடன் அளிக்கப்பட்டிருக்கிறது?*

*(இ) எவ்வளவு தொகை இதுவரை வசூலிக்கப்பட்டிருக்கிறது?*

*(உ) இப்போது அந்த ஸ்தாபனம் நடைபெற்று வருகிறதா?*

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) வேலூர் ராஜா பெர்டிலைசர்ஸ் ஸ்தாபனத்துக்கு கடன் ஏதும் அளிக்கப்படவில்லை.*

*(இ) எழாது.*

*(உ) இல்லை.*

### *Compensation for lands acquired*

*70 *Q.*—SRIMATHI A. KRISHNAVENI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that no compensation has so far been paid to the Harijans whose lands have been acquired for the Bhojaraj Mills, to be started near Theni, Madurai district; and

(*b*) if so, when the amounts will be distributed?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) All the records relating to the acquisition of the lands in question had to be filed in the High Court in connection with writ petitions filed by certain pattadars and in the absence of the records, the awards for compensation could not be passed by the Land Acquisition Officer. The writ petitions have since been dismissed and the records returned to the Sub-Collector, Periakulam. He will arrange to pass the awards soon.

[23rd October 1964

*Nagercoil-Puducada (State Transport buses)*

* 71 Q.—SRI R. PONNAPPA NADAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal for operating State Transport service from Nagercoil to Puducada (via) Iranipuram; and

(b) if so, when it will be introduced?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No.

(b) Does not arise.

*திருநெல்வேலி மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி*

* 72 கேள்வி.—திரு. நா. சௌந்தரபாண்டியன்: கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் தனியாரால் பொறியியல் கல்லூரி ஒன்று அமைக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதா?

(இ) ஆமெனில், தற்போது எந்த நிலையிலுள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Yes. There was a proposal to start an Engineering College at Tirunelveli by a private party.

(b) No steps have been taken so far in this direction.

திரு. நா. சௌந்திரபாண்டியன்: அடுத்து வரும் நிதியாண்டிலாவது இந்தக் கல்லூரியைத் துவக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது அரசாங்கம் ஏற்று நடத்தும் கல்லூரியல்ல. தனியார் துறைக்கு விடப்பட்ட ஒரு எஞ்சினியரிங் கல்லூரி. அதற்கான முயற்சிகளை அவர்கள் எடுக்காத காரணத்தால், மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலேயே இந்தக் கல்லூரி வராது என்று நான் நினைக்கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: சார், நம்முடைய மூன்றாவது திட்ட காலத்திற்குள்ளாக எஞ்சினியரிங் கல்லூரி நம் ராச்சியத்தில், போகிற போக்கைப்பார்த்தால் வராது என்ற நிலை ஏற்பட்டால், அரசாங்கம் எந்த அளவுக்கு அதைத் தீவிரப் படுத்த, என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறது என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியார் துறையில் வைக்கிறேன் என்று வந்தவர்கள் வரவில்லை என்றால் தீவிரப் படுத்த சர்க்காரிடத்தில் தூண்டுகோல் எதுவும் இல்லை. எஞ்சினியரிங் கல்லூரி சம்பந்தமாக நம் மாநிலத்திற்கு இரண்டு கல்லூரிகள் தேவையில்லை என்று மத்திய சர்க்கார் சொல்லி, இப்பொழுது நாம் சேலம் கல்லூரியை அடுத்த ஆண்டில் எடுக்க முடிவு செய்துள்ளோம்.



23rd October 1964]

திரு. நா. சௌந்தரபாண்டியன்: தனியார் இந்தக் கல்லூரியை அமைக்க முன்வரவில்லை என்றால், சர்க்காரே எடுத்து நடத்த முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதற்கு வேண்டிய நிதி வசதி சர்க்காரிடம் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன்: எந்த அளவுக்கு மக்கள் உதவித் தொகை அளிக்க முன்வந்தால், அரசாங்கம் அதை நிறைவேற்ற முன்வரும் என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சாதாரணமாக, சுலபமாக எஞ்ஜினியரிங் கல்லூரி வைக்கக்கூடியது அல்ல. அதற்கு சற்றேறக் குறைய ஒரு கோடி ரூபாய் வேண்டியிருக்கும். இது வரையில் பணம் கொடுக்க முன் வந்தவர்கள் 25 சத விகிதம் கொடுத்தால் போதும் என்று இருந்தது. ஆனால் இப்பொழுது 33 சதவிகிதம் கொடுத்தால் கூட சாத்தியமா என்பது சந்தேகம்தான். எல்லாவற்றையும் விட ராச்சிய சர்க்கார் ப்ளான் திட்டத்திற்கும் மேல் செலவழித்திருக்கிறார்கள். ஆகவே இப்பொழுது இன்னொரு எஞ்சினியரிங் கல்லூரி நிறுவவேண்டும் என்றால் அதற்கு வேண்டிய நிதி வசதி நம் சர்க்காரிடம் இல்லை.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, தனியார் துறை எந்த இடத்தில் கல்லூரி துவக்க, யார் முன்வந்திருக்கிறார்கள்?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன்: தனியார் துறை என்பது தனியார் துறைதான். பெயர் சொன்னால் தனியார் துறையாக இருக்காது.

*அத்திமேடு கிராம அரிசனங்களுக்கு வாசகசாலை*

* 73 கேள்வி.—திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: கனம் உள் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லை தாலூகா அத்திமேடு கிராம அரிசனங்களுக்கு வாசகசாலை கட்டிக்கொடுக்கும்படி கனம் அமைச்சர் அவர்களிடமும் பாளையங்கோட்டை பஞ்சாயத்து யூனியன் தலைவரிடமும் மனுக்கள் கொடுக்கப்பட்டது உண்மையா?

(இ) நெல்லை ஜில்லா நல உரிமை கமிட்டி இது சம்பந்தமாக சிபாரிசு செய்திருக்கிறதா?

(உ) இவைகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI P. KAKKAN: (a) Yes.

(b) The Tirunelveli District Welfare Committee at its meeting held on 17th September 1962 resolved that the construction of a Reading Room at Athimedu Harijan Colony in Tirunelveli taluk be recommended to the Director of Harijan Welfare for sanction.

[23rd October 1964

(c) The Collector of Tirunelveli has been requested to take up the construction of a Reading Room at Athimedu Harijan Colony through the Panchayat Union, Palayamcottai utilising the surplus, if any, under the village works (discretionary) grant.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** சார், அந்த பஞ்சாயத்து யூனியனி லிருந்து தங்களிடத்தில் பணம் இல்லை என்று எழுதி அனுப்பியிருப் பதை ஒட்டி, சர்க்காரிலேயே கட்ட ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பணம் இல்லை என்ற தகவல் எனக்குக் கிடைக்கவில்லை. இது பஞ்சாயத்து யூனியனால் கட்டப்பட வேண்டும். கலெக்டர் கிராம வேலைத் திட்டத்தின் கீழ் அந்த ஊரில் மெடர்னிடி அண்ட் சைல்ட் வெல்பேர் சென்டர் கட்ட ஏற்பாடு ஆகியிருக்கிறது. ரீடிங் ரூம் கட்டவும் ஏற்பாடு செய்யப்படும்.

### அறந்தாங்கி தாலூகாவிலே அரிசனங்களுக்கு வீட்டு வசதி

* 74 **கேள்வி.—திரு. ஆ. துரையரசன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

அறந்தாங்கி வட்டத்தில் அரிசனங்களுக்கு காலனி வீடுகள் எத்தனை கிராமங்களில் கட்டித்தரப்பட்டுள்ளது ?

THE HON. SRI P. KAKKAN : Seventy-four houses have so far been constructed for Harijans in four villages in Arantangi taluk.

**திரு. ஆ. துரையரசன் :** மீமிசல் பக்கத்தில் ரூ. 52,000 செலவில் கட்டப்பட்ட 43 வீடுகள் பழுதுபட்டு விட்டதால் அதில் அரிசனங்கள் குடியேற முடியவில்லை. அது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** தனிக் கேள்வி போடவேண்டும்.

### கொல்லி மலையில் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதி

* 75 **கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கொல்லிமலையில் ஆசிரியர்களுக்கு "மலைச்சாதியினர் அபி விருத்தி நிதியிலிருந்து" வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதியி லிருந்து கொல்லி மலையில் இரண்டு ஆசிரியைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொகையைப் பின்னர் மாநில அரசாங்கம் மேற்படி நிதிக்கு ஈடு செய்யும். இதைத்தவிர கொல்லிமலையில் மலைச் சாதியினர் வளர்ச்சிக்கான அபிவிருத்தி வட்டார நிதியிலிருந்து அல்லது ஹரிஜன நல நிதியி யிலிருந்து ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதுவுமில்லை.



23rd October 1964 ]

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** தலைவர் அவர்களே, கொல்லிமலை யில் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதி இல்லாததால், பல ஆசிரி யர்கள் நல்ல முறையில் பணியாற்றவில்லை என்ற தகவல் அரசாங் கத்திற்கு வந்ததா ? கொல்லிமலையில் உடனடியாக வீடு கட்ட அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கொல்லிமலையில் இரண்டு உபாத்தி யாயினிகளுக்கு வீடுகட்ட ஏற்பாடாகியிருக்கிறது. ஆசிரியர் களுக்கு அரிஜன நிதியிலிருந்து கட்ட திட்டம் இல்லை. இனிமேல் தான் பரிசீலனை செய்யவேண்டும்.

### *Hostels for Harijan students*

* 76 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Home be pleased to state the number of Harijan hostels proposed to be opened for boys and girls during the year 1964–65 in Salem district with the names of the places, taluk-wise?

**கனம் திரு. பூ. கக்கன் :** 1964-65-ல் சேலம் மாவட்டம், தர்மபுரி தாலூகாவைச் சேர்ந்த தர்மபுரியில் பெண்களுக்காக அரசாங்க விடுதி ஒன்றை ஏற்படுத்த உத்திரவிடப்பட்டுள்ளது. அதில் 30 பெண்கள் தங்கலாம்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** தலைவர் அவர்களே, சேந்த மங்கலத்தில் பெண்களுக்கு விடுதி துவக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டது. அதைப் பரிசீலனை செய்து கல்வி ஆண்டிலேயே துவக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** சேலம் மாவட்டத்தில் உள்ளதைப் பற்றிச் சொன்னேன். அங்கத்தினர் தரும் தகவல் சம்பந்தமாக கலெக்டரிடம் இருந்து தகவல் கோரி பின்னால் பரிசீலிக்கப்படும்.

**திரு. எம். வீ. கரிவேங்கடம் :** தலைவர் அவர்களே, இந்த அரிசன ஹாஸ்டலுக்கு மாணவர்களைப் பொறுக்கி எடுக்க ஒரு குழு இருக் கிறதே—நான் பொதுவாக கேட்கிறேன், எந்தக் குறிப்பிட்ட இடத்தைப் பற்றியும் கேட்கவில்லை—அந்தக் குழுவில் யார் அங்கம் வகிக்கிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** ஒவ்வொரு ஹாஸ்டலுக்கும் வேறு வேறு ஆட்கள் இருப்பார்கள்.

SRI M. V. KARIVENGADAM. In general I am asking how the committee is constituted.

MR. SPEAKER : All right.

**கனம் திரு. பூ. கக்கன் :** சம்பந்தப்பட்ட ஆர்.டி.ஓ தலைவராக இருப்பார்; மற்றதையெல்லாம் கலெக்டர் பார்த்துச் செய் கிறார்கள்.

[23rd October 1964

**திரு. இரா. நல்லமுத்து :** தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் எத்தனை விடுதிகள் இருக்கின்றன என்று தெரிவிக்க முடியுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** தனிக்கேள்வி போட்டால் சொல்லலாம். விவரம் இப்பொழுது இல்லை.

### பூச்சி நாசினிகள் வழங்குதல்

* 77 **கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பருத்தி, கடலை போன்ற பயிர்களுக்கு பூச்சி மருந்துகள் பாதி விலையில் கொடுப்பது போல் உணவு தானிய நெல், சோளம் ஆகிய பயிர்களுக்கும் மருந்து பாதி விலையில் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா?

THE HON. SRI P. KAKKAN : The question is under the consideration of the Government.

**திரு. ஆ. கு. சுப்பையா :** சார், தஞ்சை ஜில்லாவில் நெல் சாகுபடி பூச்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தடுக்க ஹெலிகாப்டர் மூலம் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** இது பெர்டிலைசர் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. ம. கமலநாதன் :** சார் பூச்சி மருந்துகள் சப்சிடி ரேட்டில் ப்ளாக்கு லெவலில் சப்ளை செய்கிறோம். விவசாயிகளுக்கு எந்த அளவில் சப்சிடி கொடுக்கிறோம் என்று தெரியவில்லை. அதனால் சப்சிடி துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. இதைத் தவிர்க்க ஒவ்வொரு டெப்போவிலும் இன்னின்ன மருந்து இவ்வளவு சப்சிடியில் கொடுக்கப்படும் என்று தமிழிலேயே விவரமாக எழுதிப்போட ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அநேகமாக ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டிருக்கிற பிரசுரங்களில் இவையெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, நெல் முதலிய உணவு தானியங்களுக்கு 25 பர்செண்ட் க்ரௌண்ட்நட், கோகநட் போன்ற ஆயில் சீட்ஸ்களுக்கு 50 பர்சன்ட், சேலம் டிஸ்ட்ரிக்டில் வெற்றிலைக் கொடிக்காலுக்கு 25 பர்சன்ட், சில்லி முதலியவற்றிக்கு 25 பர்சன்ட், சீப்-ரேயர்ஸ் அண்ட் டஸ்டாசுக்கு 50 பர்சன்ட் என்ற வகையிலே சப்சிடி கொடுக்கப்படுகிறது.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் தமிழிலே எழுதிப் போடவேண்டும் என்று சொல்லுகிறார்.

**திரு. ம. கமலநாதன் :** எந்தெந்த உணவுப் பயிர்களுக்கு எவ்வளவு சப்சிடி என்பதைப் பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். சப்சிடி ரேட்டை நான் கேட்கவில்லை. என்னென்ன மருந்துக்களுக்கு எவ்வளவு சப்சிடி என்று வாங்குகிற விவசாயிகளுக்குத் தெரியவில்லை. அதனால் டெபோ க்ளார்க், மேஸ்திரி



23rd October 1964]

போன்றவர்கள், புல் ரேட்டுக்கே விற்று மக்களிடத்தில் மோசம் செய்யக்கூடிய சான்ஸ் இருக்கிறது. ஆகவேதான் சொல்லுகிறேன், விலைப்பட்டியல் ஒன்றைத் தமிழிலே எழுதி, அந்த விவரத்தை வெளியில் ஒரு போர்டில் போட்டு மாட்டினால், துஷ்பிரயோகம் இல்லாமல் இருக்கும். ஆகவே அதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒவ்வொரு டெப்போவிலும் அந்த விவரம் இருக்கும். எழுத்து மூலம் இல்லாவிட்டாலும்கூட, வருகிறவர்களுக்குச் சொல்லுவார்கள். அங்கத்தினருடைய யோசனையையும் கவனிக்கலாம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** பூச்சி நாசினிகள் விவசாய இலாகாவின் மூலமாக விநியோகம் செய்யப்படுகின்றன. அவற்றை விநியோகம் செய்வதில் கால தாமதம் ஆவதால், பஞ்சாயத்துக்கள் மூலமாகவோ அல்லது தனியார் மூலமாகவோ அவற்றைக் காலாகாலத்தில் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** தனியார் மூலமாகக் கொடுப்பது நன்றாக இருக்காது என்று அரசாங்கம் நினைக்கிறது. ஏனென்றால் அதிலே கஷ்டங்கள் வந்தாலும் வரலாம். சில சமயங்களில் துஷ்பிரயோகம் செய்தாலும் செய்யக்கூடும். பஞ்சாயத்து மூலமாகக் கொடுக்கலாம் என்றாலும், அதிலும் சிலசமயம் ஆபத்து வந்தாலும் வரும். இதையெல்லாம் ஆலோசித்துப் பார்த்து நேரடியாகக் கொடுப்பது நல்லது என்ற வகையில் அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

### *Sale of sugar*

* 78. *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the number of persons prosecuted for black-marketing in sugar during 1963 ; and

(*b*) how many persons were convicted?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR :

(*a*) Forty-five.
(*b*) Twenty-nine.

(அ) நாற்பத்தைந்து.

(ஆ) இருபத்தொன்பது

### அரிசி மில் நடத்த அனுமதி

* 79 **கேள்வி.—திரு. மா. இராசாங்கம் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதிதாக அரிசி மில்கள் நடத்த கூட்டுறவுத் துறையைத் தவிர தனியார் துறைக்கு அனுமதி அளிப்பதில்லை என்று அரசு முடிவு எடுத்திருக்கிறதா?

[23rd October 1964

(இ) ஆம் என்றால், ஆரம்ப அனுமதி எல்லாம் பெற்று வேலை முடித்து இறுதி அனுமதிக்குக் காத்திருக்கும் தனி நபர்களுக்காவது அனுமதி அளிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :**

(அ) இல்லை.

(இ) வினா எழ இடம் இல்லை.

**திரு. மா. இராசாங்கம் :** கூட்டுறவுத் துறைக்குத்தான் அரிசி மில் வைக்க அனுமதியளிக்கவேண்டும் என்பது சில மாதங்களுக்கு முன்னால் வந்த உத்தரவு. ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இருந்து ஏராளமான பொருட்செலவு செய்து, ரெவினியூ போர்டு உத்தரவு ஒன்றைத் தவிர மாவட்ட அளவில் பெறவேண்டிய அத்தனை உத்தரவுகளும் பெற்றவர்களுக்கு இதில் என்ன வழி இருக்கிறது என்று அறியலாமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** 'கூட்டுறவுத் துறையில்தான் அரிசி மில் வைக்கவேண்டும், மற்றவர்களுக்கு அனுமதி இல்லை' என்ற பிரச்சினை இல்லை என்று முக்கிய கேள்விக்குப் பதில் சொல்லும்போதே நான் தெரிவித்தேன்.

**திரு. எஸ். முருகையன் :** ஐந்தாறு ஆண்டுக் காலமாக அரிசி மில் லைசென்சுக்கு மனுச் செய்து, கட்டடம் கட்டி, ஏராளமாகப் பணம் செலவழித்தும்கூட, அனுமதி கிடைக்கவில்லை, திருவண்ணாமலை நகரில் பத்துப் பன்னிரண்டு கட்டடங்கள் கட்டி வைத்துக் கொண்டு லைசன்ஸ் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் தனியாகக் கவனம் செலுத்தி, அதுபோன்ற ரைஸ் மில்களுக்கு லைசன்ஸ் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அவர்கள் கட்டடம் கட்டுவதற்கு முன்னாலேயே அனுமதி பெற்றுத்தான் கட்டியிருக்கவேண்டும். லைசன்ஸ் வரும் என்ற எண்ணத்தில் கட்டடம் கட்டியிருந்தாலும், அதைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்து பார்த்துத்தான் லைசன்ஸ் கொடுக்க வேண்டும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, புதிய அரிசி மில்களுக்கு அனுமதி வழங்குகின்ற முறையில் எந்த முறைகள் கையாளப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இப்பொழுது என்னிடம் அந்த விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட வேண்டும்.

**திரு. சா. கணேசன் :** ஏற்கனவே ஓரிடத்தில் இருக்கின்ற அரிசி மில்லை இன்னொரு பிராந்தியத்திற்கு மாற்றுவதற்கு விண்ணப்பித்துக்கொண்டால், அதை அரசாங்கம் எவ்விதமாகக் கருதி அதன் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று நான் அறிய விரும்புகிறேன்.



23rd October 1964 ]

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** ஓரிடத்தில் அரிசி மில் வைக்கவேண்டுமென்றால் அந்தப் பகுதியில் அரைக்கப் போதுமான நெல் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். ஒரு மில்லை இன்னொரு இடத்திற்கு மாற்றுவதென்றாலும்கூட அந்த அடிப்படையில் வைத்து என்ன செய்யவேண்டும் என்று பரிசீலனை செய்துத்தான் லைசன்ஸ் கொடுக்க வேண்டும்.

**திரு. மா. இராசாங்கம் :** அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில், மில்கள் கட்டுவதற்கு அரசாங்க உத்தரவு வாங்கித்தான் கட்டடம் கட்டவேண்டும் என்று சொன்னார்கள். அப்படி உத்தரவு வாங்கித் தான் கட்டடம் கட்டி, அத்தனை வேலையும் செய்திருக்கிறார்கள். ஆறு, ஏழு வருஷங்கள் வேலை செய்து, ஏராளமான பொருட்செலவு செய்தும் வேறு வழியில்லாமல் இருக்கிறார்களே, அவர்களுக்கு என்ன வழி செய்ய சர்க்கார் உத்தேசித்திருக்கிறது ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அப்படியிருக்கக்கூடிய சில தகவல்களும் எனக்கு வந்துகொண்டிருக்கின்றன. இன்னும் அதுபோல் இருக்குமானால் கனம் அங்கத்தினர் அவர்கள் என்னிடம் சொன்னால், அதில் என்ன செய்ய வேண்டும் என்று பார்த்துப் பரிசீலனை செய்து, சாத்தியப்பட்டதைச் செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

**திரு. எஸ். முருகையன் :** பர்மிட் முறை வருவதற்கு முன்னதாகவே, கட்டடம் கட்டி லைசன்சுக்காக மனுச் செய்தவர்கள் திருவண்ணாமலை நகரில் மட்டும் 13 பேர்கள் இன்று வரை லைசென்ஸ் கிடைக்காமல் இருக்கிறார்கள். அதனால் பல லட்ச ரூபாய் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படும்போலிருக்கிறது. இதைத் கருதியாவது அந்த மில்களுக்கு லைசன்ஸ் கொடுக்க சர்க்கார் ஆலோசிக்குமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அவர்கள் கட்டடம் கட்டுவதற்கு முன்பு அந்த இடத்தில் போதுமான நெல் அரைப்பதற்கு இருக்கிறதா, இல்லையா என்று கலெக்டர் அவர்கள் பரிசீலிக்கவேண்டும். கலெக்டருக்கு மனுச் செய்துகொண்டு, அவர் அனுமதி பெற்றுத்தான் கட்டடங்கள் கட்டப்பட்டனவா என்று புரிந்துகொள்ள முடியவில்லை.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, 15 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட அரிசி மில்களுக்கு டிஸ்ட்ரிக்ட் போர்டிலிருந்து லைசன்ஸ் பெற்றால் போதும் என்று இருந்தது. அவர்கள் தொடர்ந்து இன்று வரை நடத்திக்கொண்டு வருகிறார்கள். 'சர்க்காருடைய லைசன்ஸ் பெற்றால்தான் தொடர்ந்து நடத்தலாம், இல்லாவிட்டால் ரத்து செய்துவிடுவேன்' என்று பயமுறுத்துவதால், அவர்களுக்கு நீடித்து லைசன்ஸ் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** முன்பு ஜில்லா போர்டார் லைசன்ஸ் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு சர்க்காரிலிருந்து உத்தரவு வாங்கவேண்டுமென்று வந்தது. இன்னும் மற்ற விவரங்கள் வேண்டுமென்றால், தனியாகக் கேள்வி போடவேண்டும்.

[23rd October 1964

***திரு. சா. கணேசன் :*** ஏற்கெனவே நகருக்குப் புறம்பாக இருக்கிற ரைஸ் மில்களை ஜனங்கள் கூடியிருக்கிற நகரின் குடியிருப்புப் பகுதிகளிலே கொண்டுவர விண்ணப்பித்தால் அதை அரசாங்கம் மறுக்குமா ?

***கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :*** தனிக்கேள்வி போடவேண்டும்.

***கனம் சபாநாயகர் :*** கேள்வி எண் 80 ஒத்திவைக்கப்படுகிறது. இத்துடன் கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

### II.—CALLING ATTENTION TO REMOVAL OF FISH PLATES IN THE RAILWAY LINES BETWEEN MAMBALAM AND KODAMBAKKAM.

* ***திரு. சா. கணேசன் :*** கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஏற்கெனவே இதைத் தங்கள் அனுமதி பெற்றுக் கொண்டுவர அறிவிப்பு கொடுத்தபோது, ஓரிடத்தில்தான் இந்த சம்பவம் நடந்திருக்கிறது. கோடம்பாக்கம் இரயில் நிலையத்திற்கும், மேம்பாலத்திற்கும் இடையில் ரயில் தண்டவாளங்களின் இணைப்புத் தகடுகள் அகற்றப்பெற்றிருக்கின்றன. இப்பொழுது வேறு பல இடங்களுக்கும் அது வந்திருக்கிறது. ஆகவே, இதனுடைய முக்கியத்துவத்தையும், அவசரத்தினையும், கவனிக்கப்படவேண்டிய இன்றியமையா நிலையையும், அதனால் விளையக்கூடிய அபாயங்களையும் மனத்திலே கொண்டு காரியங்களை விரைவாக அரசாங்கம் எடுக்கும் என்பதிலே எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால், இந்த நிகழ்ச்சிக்கு . . .

MR. SPEAKER : The hon. Member, Sri Saw. Ganesan, should not make a speech.

***திரு. சா. கணேசன் :*** இந்த நிகழ்ச்சிக்குக் காரணமாக இருந்த குற்றவாளிகள் யார், அவர்களைக் கண்டுபிடிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பனவற்றையெல்லாம் அரசாங்கம் தெரிவிக்கவேண்டும் என்று, உங்கள் மூலமாக, நீங்கள் அனுமதித்த இந்த அவசர முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I want to make a statement about this matter.

On 19th October 1964 at 05-14 hours, when train No. 116, Madurai Parcel Passenger, was passing over a power point between KM. 10/2 and 10/3 between Mambalam and Kodambakkam stations, the driver felt a jerk with an unusual noise as if the engine had derailed. He stopped the train after the last bogie had passed over the point and checked up what had happened. It was found that a fish plate fixed to the heel block had been removed by taking off the four bolts which held it to the latter and had been inserted as a wedge between the western tongue rail and the heel block pushing the rail inwards by about 2¼ inches. This had caused the jerk. Two



23rd October 1964] [Sri M. Bhaktavatsalam]

of the bolts were slipped in between the tongue rail and the running rail. The train left after a detention of 81 minutes arriving at Madras-Egmore at 06-55 hours. A case was registered in Egmore Railway Police Station under section 126 of the Indian Railways Act.

The case was investigated by Inspector, Railway Police, Egmore and Deputy Superintendent, Railway Police, Madras, with the help of Police dogs and R.P.F. dogs. The dogs touched the huts of a vendor of groundnuts and a vegetable seller, about two to three furlongs south-west of the scene, but enquiries about them did not bring out any clue. Finger-prints could not be developed on the affected parts.

Again on 20th October 1964, at 04-55 hours, light engine, on its way from Arkonam to Pattabiram, got derailed between KM 35/5 and 35/7, about two furlongs west of Shevapet railway station. The engine stopped after derailing. Investigation disclosed that all the four bolts of the heel block had been taken off and the fish plates removed. The rail was levered inwards to a distance of about 2¼ inches. The fish plate was lying on a sleeper adjoining the heel block. Two bolts and the washers and some small pieces of black stone resembling iron ore were scattered outside. The engine wheel which hit the rail which had been levered inwards had slipped in between the tongue and the long rails and ploughed through to a stop, all the other wheels on the right had rail following suit. Enquiries revealed that this interference should have happened between 04-30 hours and 04-55 hours. A case in Arkonam R.P. Crime No. 420 of 1964 under section 126, Indian Railways Act was registered in this connection.

The case was investigated by Inspector, Railway Police, Madras Central and Deputy Superintendent, Railway Police, Madras, with the help of the R.P.F. dogs, but no clues have been obtained so far.

The two incidents dislocated the train services to some extent on the two days. Intensive track patrols have been introduced by the Railway authorities assisted by the Railway Police and the R.P.F. as a preventive measure. The Collector of Chingleput has also arranged for the patrolling of the railway line in the affected areas by the local police and the Village Vigilance staff.

These two incidents appear to have a motive behind them, which can be attributed to a particular agency. The possibility of sabotage cannot be ruled out. The investigation in the above cases is under progress. 9-00 a.m.

### III.—PRESENTATION OF THE REPORT OF THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

SRI A. RAGHAVA REDDI : Sir, I present the Fifth Report (Third Assembly) of the Committee on Government Assurances.

[23rd October 1964

### IV.—ANNOUNCEMENTS.

(1) THE MADRAS ELECTRICITY DUTY (AMENDMENT) BILL, 1964.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation for the introduction in and consideration of the Madras Legislative Assembly of the Madras Electricity Duty (Amendment) Bill, 1964.

### V.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS ELECTRICITY DUTY (AMENDMENT) BILL, 1964

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

"That leave be granted for introduction of the Madras Electricity Duty (Amendment) Bill, 1964"

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

### IV.—ANNOUNCEMENTS—*cont.*

(2) THE MADRAS ELECTRICITY (TAXATION ON CONSUMPTION) AMENDMENT BILL, 1964.

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation for the introduction in and consideration by the Madras Legislative Assembly of the Madras Electricity Duty (Amendment) Bill, 1964.

### V.—GOVERNMENT BILLS—*cont.*

(2) THE MADRAS ELECTRICITY (TAXATION ON CONSUMPTION) AMENDMENT BILL, 1964.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

"That leave be granted for the introduction of the Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1964".

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: : The Bill is introduced.

### VI.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY AND MOTION DISAPPROVING THE FOOD POLICY OF THE MINISTRY—*cont.*

MR. SPEAKER: The hon. Member Sri M. Kalyanasundaram may now speak.



23rd October 1964]

*திரு. மீ. கலியாணசுந்தரம்:* கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய தீர்மானத்தை நேற்று நான் பிரேரேபித்து இருக்கிறேன். என்னுடைய தீர்மானம் அரசாங்கத்தினுடைய உணவுக் கொள்கையில் ஏற்பட்டு இருக்கக்கூடிய தவறுகளைச் சுட்டிக் காண்பித்து அதற்காகக் கண்டனம் தெரிவிக்க வேண்டுமென்ற நோக்கமுடையது. பார்லிமெண்டரி சம்பிரதாயத்தின்படி அமைச்சரவையின் மீது கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானமாக இருந்தாலும், கண்டனத் தீர்மானமாக இருந்தாலும் இரண்டின் நோக்கமும் ஒன்றுதான் பலனும் ஒன்றுதான்.

நேற்றைய விவாதத்தில்கூட, மேலோங்கி நின்றது உணவுக் கொள்கை சம்பந்தமாகத்தான் நிலைமை மோசமாக இருக்கிறது. நம்முடைய ராஜ்யத்திலே என்றும் இல்லாத அளவுக்கு உணவு நிலை இவ்வளவு மோசமாக இருக்கிறபோது மக்களிடத்தில் கவலை ஏற்பட்டு இருக்கிறது. இந்த அரசாங்கத்தினிடத்தில் அவநம்பிக்கை ஏற்பட்டு இருக்கிறது என்கிறதுதான்.

பொதுவாக இந்தச் சபை முன்பு நம்பிக்கை இல்லை என்கிற தீர்மானமும், கண்டனத் தீர்மானமும் வந்திருக்கிறபோது என்னுடைய அபிப்பிராயம் எதிர்க்கட்சிகளுக்குள்ளே எவ்வளவு ஒற்றுமை இருக்கிறது என்பதை மட்டும் கவனிப்பது முக்கியமான பிரச்சினை அல்ல. ஒற்றுமை இருப்பது சாத்தியமாகுமானால் ஒரே அமைப்பாக இருந்திருக்கும். தனித்தனியாக இருந்திருக்க வேண்டியதில்லை. அடிப்படைக் கருத்திலே வேற்றுமை இருப்பது காரணமாகத்தான் தனித் தனி எதிர்க்கட்சிகளாக இயங்குகின்றன. அதற்காக இந்தத் தீர்மானம் கொண்டு வந்ததைப்பற்றி ஏளனம் செய்து திருப்தி அடைவதில் பலன் இல்லையென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நான் அரசாங்கத்தைக் கண்டித்தால் போதும் என்று நினைக்கலாம். உணவு தானிய வர்த்தகம் பூராவையும் அரசாங்கமே மேற்கொண்டு மொத்த வியாபாரம் பூராவையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது என் கொள்கையாக இருக்கலாம். நகர்ப்புறங்களில் குடும்ப அடையாள சீட்டுக் கொடுத்து அரிசி விநியோகத்தை சீராக்க வேண்டும் என்று யோசனை சொல்லலாம்.

சுதந்திராக் கட்சித் தலைவர் அடியோடு இது தவறு என்று சொல்லலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தினர்களுக்கு எப்படியாவது இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இந்த அமைச்சரவை வெளியேற்றப்பட்டு வேறு அமைச்சரவை அமைந்தால் இன்றுள்ள பிரச்சினைகளுக்கும் பரிகாரம் ஏற்படும் என்று சொல்லலாம். இவற்றில் எது தப்பு, எது சரி என்பதைப் பற்றிப் பிரச்சினை இல்லை. இப்படி மாறுபட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளுக்குள்ளே ஒற்றுமை இல்லையே என்று கேலி செய்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று தான் எனக்குப் புரியவில்லை. நூற்று முப்பத்தெட்டு மெம்பர்களைக் கொண்ட ஒரே கட்சியாக இருக்கிற காங்கிரஸ் கட்சிக்குள் கருத்து

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [23rd October 1964

வேற்றுமை இல்லையா? அவர்களுக்குள் கட்சிக் கட்டுப்பாடு இருக்கலாம். கருத்து வேற்றுமை இருந்தாலும் கட்சி கட்டுப்பாடு உடையக்கூடாது என்கிற கருத்தைக் கொண்டவன்தான் நானும். ஆகவே இன்றைக்கு இருக்கிற அவர்களுடைய அமைச்சரவை செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாது, செய்ய வேண்டாத பல காரியங்களில் ஈடுபடுகிறது என்பதன் காரணமாக அவர்களுக்குள்ளேயே பெரும் அளவுக்கு வேற்றுமை வளர்ந்துவிட்டிருக்கிறது என்றாலும், எதிர்க்கட்சியினர்களால் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறபோது, கை தூக்கி அவசியம் இந்த மந்திரி சபையைக் காப்பாற்றத்தான் வேண்டும். கொள்கை அளவில்லாது இந்த மந்திரி சபையை ஆதரித்துப் பேசியாக வேண்டும். அதை நான் வரவேற்கிறேன். நேற்று பேசிய கனம் வீரபாகு பிள்ளை அவர்கள் மிக நல்ல முறையில் எதிர்க்கட்சியினர்களுக்குப் பதில் அளிக்கக்கூடிய முறையில் பேசுவதற்கு முயற்சித்தார்கள் அம்மாதிரி முயற்சி ஆளும் கட்சிப் பக்கத்தில் உள்ளவர்களிடத்தில் வளருவதை நான் வரவேற்கிறேன். அது எங்களைக்கூட சிந்திக்கத் தூண்டிவிடும். "உங்களுக்குள் ஏற்பட்டிருப்பது இந்த ஒரு நாள் ஒற்றுமை தானே" என்று எங்களைக் கேலி செய்யலாம். நிலையான ஒரு ஒற்றுமை ஏற்படாமல் இருப்பது அவர்களுடைய அதிருஷ்டம்தான். எப்படி இருந்தாலும் எதிர்க்கட்சியினர்களால் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தை எதிர்க்கின்றபோது ஆளும் கட்சியினர்களும்கூட ஓர் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. மக்கள் அரிசி கிடைக்காமல் பல கடைகளில் க்யூவில் நிற்கிறார்கள். அதை ஒழிக்க வேண்டுமென்று அவர்களும் கூடச் சொல்ல வேண்டியிருந்தது. அதேசமயம் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் நீண்ட க்யூ வரிசை இருந்தால் தான் என்ன என்று கேட்கிறார்கள். (கனம் சபாநாயகர்:— எங்கே கேட்கிறார்கள்?) இங்கே கேட்டதாகச் சொல்லவில்லை. வெளியே கேட்கிறார்கள். இந்தச் சபையில் பேச சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால் இங்கேயும் சொல்லியிருப்பார்களோ என்னவோ? நீண்ட க்யூ வரிசை இருப்பது சுபீட்சத்தின் அறிகுறி என்கிறார். இப்படி ஒரே கட்சிக்குள் அபிப்பிராய பேதம் இருப்பதைப்பற்றி அறிந்து ஆச்சரியப்படவேண்டுமே தவிர அடிப்படைக் கருத்திலே வேறுபாடு உள்ள எதிர்க்கட்சிக்குள் ஒரு ஒற்றுமை இல்லையே என்பது ஆச்சரியப்படத்தக்கதல்ல. உணவு நெருக்கடி இருப்பதைக் குறித்து மக்களிடையே பீதியும் கவலையும் அதிகமாக இருக்கிற இந்த நேரத்தில் இதை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து திட்டவட்டமான கருத்துக்களைக் கூறுவதற்கும் அரசாங்கம் இதுபற்றி தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கும் எதிர்க்கட்சிகளிடையே ஒரு ஒற்றுமை ஏற்பட்டது என்றால் அது கேலி செய்வதற்குரிய விஷயமல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தீர்மானத்தைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அப்படி இருக்க அவர் வந்து இவர்களோடு சேர்ந்து கொண்டு இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு ஆதரவும்,



23rd October 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

அல்லது கண்டனத் தீர்மானம் கொண்டு வருவதற்கு வேண்டிய அவசியமும் என்ன என்று கேட்டார்கள். கனம் அங்கத்தினர் வீரபாகு பிள்ளை அவர்கள் எந்தக் கட்சியைப் பேசுகிறார்கள் என்று என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை. அரசாங்கத்தின் இன்றைய கொள்கை என்ன? நமது முதலமைச்சர் அவர்கள் கடந்த பட்ஜட் உரையில் அந்தக் கொள்கையை விளக்கியிருக்கிறார். அதை வைத்துத்தான் நாங்கள் தீர்மானம் கொடுக்க முடியும், பேச முடியும். இந்த ஆண்டு பட்ஜட் உரையில் முதலமைச்சர் அவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள். வழக்கத்திற்கு மாறாக இந்த வருஷத்திய பட்ஜெட்டில் 'உணவு தானியக் கொள்கை' என்று கொள்கை விளக்கம் அளித்திருக்கிறார்கள். வழக்கமாகச் சொல்வது போல் உணவு தானிய உற்பத்தியைப் பற்றித் தெளிவாகச் செல்லவில்லை; புள்ளி விவரம் கொடுக்கவில்லை. ஆனால் கொள்கையைப் பற்றி விளக்க வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டு விளக்கி இருக்கிறார்கள். அவர்கள் விளக்கி இருப்பது என்ன?

"It should suffice if by regulating the profit margins of traders we ensure that prices of foodgrains do not rise above a particular level. There is no need for Government to take over trading in foodgrains.",

என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். வியாபாரிகளுடைய லாபத்தை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்த முடியுமோ, வரையறுக்க முடியுமோ, குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைக்க நடவடிக்கை எடுத்தால் இதை விட விலைவாசி உயராது என்பது தெளிவு; ஆகவே, சர்க்காரே வியாபாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை என்பதை வெகு தெளிவாகச் சொல்லிவிட்டார். அனுதாபம் யார் மீது? குடியானவர்கள் மீது. " such a course of action may cause hardship to the farmers " சர்க்கார் உணவு தானியத்தை எடுத்துக் கொண்டு விட்டால் அது குடியானவர்களுக்கு ரொம்ப ஆபத்தை உண்டாக்குமாம்; துன்பத்தைக் கொடுக்குமாம். ஆகவே, அதை வியாபாரிகளிடத்திலேயே விட்டு வைக்கும்; வியாபாரிகள் லாபம் பெறுவதற்குள்ள சந்தர்ப்பத்தைக் குறைத்து விலையை நிர்ணயம் செய்து விட்டால் பரிகாரம் ஏற்பட்டு விடும் என்ற கொள்கையைக் கூறினார். அவர்களுடைய லட்சியத்தையும் கூறியிருக்கிறார்கள் அரசாங்கத்தினுடைய லட்சியம் , . .

"This Government owes its allegiance to the Congress ideology which has been summed up as one of democratic socialism at the recen tBhubaneswar Congress".

சமீபத்தில் புவனேசுவரத்தில் காங்கிரஸ் முடிவு செய்திருக்கிற ஜனநாயக சோஷலிசம் என்பது எங்களுடைய லட்சியம். அந்த லட்சியத்திற்கு நாங்கள் விஸ்வாசம் உடையவர்களாக இருப்போம் என்று இந்த மந்திரிசபை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது. கடந்த பத்து வருஷங்களுக்கு முன்னால் இருந்த நிலைமை இருக்கட்டும்; ஆறு மாதத்திற்கு முன்னால் உள்ள நிலைமை என்ன?

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [23rd October 1964

இன்னும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். அனுபவம் என்ன போதிக்கிறது என்பதை அரசாங்கம் உணர வேண்டுமென்பதுதான் என்னுடைய தீர்மானத்தினுடைய நோக்கம்.-

கனம் முதலமைச்சர் அவர்கள் அந்தப் பிரசங்கத்தைச் செய்த நேரத்தில் விலைவாசிப் புள்ளியின் அளவுகோல் என்ன? ஜூலை, ஆகஸ்டில் புள்ளி விவரம் என்ன? செப்டம்பர், அக்டோபர் புள்ளி விவரம் நான் பார்க்கவில்லை. அவர் பிரசங்கம் செய்த மாதத்தில் விலைவாசிப் புள்ளி 506. நான் லேட்டஸ்ட் கெஜட்டில் எடுத்த விவரப்படி விலைவாசிப் புள்ளி 583. இவ்வளவு வேகமாக விலைவாசி உயர்ந்திருப்பதற்குக் காரணம் என்ன? நல்ல வேளையாக இந்தப் புள்ளி விவரத்தையாவது கெஜட்டில் கொடுக்கிறார்கள். நான் அரசாங்கம் கொடுத்திருக்கிற புள்ளி விவரத்திலே இருந்து சொல்கிறேனே தவிர, கடைவீதியிலே நின்று கொண்டிருக்கிற மக்களின் நீண்ட க்யூவைப் பார்த்துச் சொல்லவில்லை. இப்போது விற்கக் கூடிய விலையை எடுத்துக் கணக்குப் பார்த்தால் விலைவாசி இன்னும் அதிகமாக இருக்கும். வியாபாரிகளுக்கு எந்த வித இடையூறும் செய்யப் போவதில்லை என்று பகிரங்கப்படுத்திய பிறகு, அரசாங்கம் உணவு தானிய வியாபாரத்தை எடுத்துக் கொள்ளாது என்று கூறிய பிறகு அவர்கள் முதலமைச்சர் அவர்களிடந்தானே கருணை காட்டினார்களா? இரக்கம் மிகுந்த முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சிக்கு இடையூறு தரக் கூடாது என்று அனுதாபம் காட்டினார்களா? அரசாங்கத்தோடு ஒத்துழைத்தார்களா? இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் செய்து கொடுத்த வசதியெல்லாம், இன்னும் எவ்வளவு தூரம் ஆபத்தை இந்த நாட்டில் ஏற்படுத்த வேண்டுமோ அதை ஏற்படுத்தினார்கள். மக்களுடைய உணவுக்கு ஆபத்து உண்டாக்கக் கூடிய நெருக்கடி ஏற்பட்டு அந்த நெருக்கடி அரசாங்கத்திற்கு நெருக்கடியாக முற்றக் காரணம் மொத்த வியாபாரிகள் என்று சொன்னால் மிகையாகாது அவர்கள் வேண்டுமென்றால் மறுக்கலாம். 'வியாபாரிகளை நம்பினால் அபாயகரமாக இருக்கிறது; வேறு இடத்திற்குக் கொண்டு போய் விடுகிறார்கள்' என்று அமைச்சர் அவர்களே இப்போது கோபப்பட்டுப் பேசியிருக்கிறார்கள். வியாபாரிகளுக்கு நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு இப்போது அவர்கள் மேல் கோபிப்பதால் என்ன பயன்? இது வியாபாரிகளைப் பார்த்து 'நான் நோகாமல் அடிக்கிறேன், நீங்கள் ஓயாமல் அழுங்கள்' என்று சொல்வதைப் போல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் தொடர்ந்து நிலைமை இப்படியே இருக்கவேண்டும் என்று நினைக்கிறார்களா? இந்த உணவு தானிய நெருக்கடியானது சுலபத்தில் தீர்க்கக் கூடியது அல்ல என்பதையும் கனம் முதலமைச்சர் அவர்கள் உணருவார்கள். மந்திரி சபையைக் கண்டிக்க வேண்டுமென்ற எண்ணத்தினால் கூட அவசரப்பட்டு இது இன்றைக்கு ஏற்பட்ட நெருக்கடியாகச் சொல்லவில்லை. இது இன்றைக்கு ஏற்பட்ட நெருக்கடி அல்ல. இந்த ஒரு ராஜ்ய சர்க்கார் மட்டும் முயற்சி எடுத்துத் தீர்த்து விடக் கூடியதும் அல்ல.



23rd October 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம், அண்டையில் இருக்கக் கூடிய மாகாண அரசாங்கங்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் நாம் என்ற உயர்ந்த எண்ணத்தோடு, கட்சிப் பிரச்சினையாகக் கருதாமல் மக்களுடைய தேசியப் பிரச்சினையாகக் கருதி அரசாங்கம் முடிவு எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இதிலே எந்தக் கட்சி அதிகாரத்தில் இருக்கிறது என்ற பிரச்சினை இல்லை. இன்றைக்கு மக்கள் கோபம் பூராவும் அமைச்சர்கள் பேரிலேதான் வருகிறது. நகர்ப் புறத்தில் மட்டுமல்ல; கிராமப்புறத்திலும், புஞ்சை தானியம் கூட உணவுக்குக் கிடைப்பதில்லை. ஒருபடி கேழ்வரகு ஒரு ரூபாய்; ஒரு படி சோளம் ஒரு ரூபாய்; என்ற நிலைமையிலேயே விற்கப்படுகிறது. அரிசி விலையைப் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை. இப்போது கலெக்டர் என்ன சொல்கிறார் என்றால், 'உணவு தானிய விலை நிர்ணயிப்பது ஒரு புறம் இருக்கட்டும்; எப்படியாவது அரிசி விற்றால் போதும்; 1 ரூபாய் 17 பைசாவோ அல்லது 1 ரூபாய் 75 பைசாவோ விற்றால் போதும்' என்று சொல்கிறார்கள். அந்த முறையில் அவர்கள் கண்டும் காணாதது போல் விலைக் கட்டுப்பாட்டை அமல் நடத்தாது இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் 'லெவி' போட்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். அமல் நடத்த முடிந்ததா? அமல் நடத்த முடியாத உத்தரவைப் போட்டு அமல் நடத்தச் சொன்னார்கள். லிட்டர் அளவையில் அளக்க வேண்டுமென்பதைப் பற்றிக் கூட இப்போது கவனிப்பதில்லை. அதிகாரிகள் அதைக் கூட வற்புறுத்துவது இல்லை. இப்போதுள்ள நிலைமை என்ன, அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு யாராவது விற்கிறார்களா? எந்த விலைக்கு விற்றாலும் பரவாயில்லை, அரிசி வெளியில் கிடைத்தால் போதும் என்று தான் அதிகாரிகளும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அரசாங்க உத்தரவை அமல் நடத்துவதில் அவ்வளவு கவனமாக இல்லை. அமல் நடத்தவும் முடியவில்லை. அமல் நடத்த முடியாத சட்டத்தைதான் அரசாங்கம் போட்டு வைத்திருக்கிறது. இதன் காரணமாக அரசாங்கத்தினுடைய நோக்கமும் நிறைவேறாமல் விலையையும் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரிசி கிடைப்பது என்பது அரிதாகிவிட்டது. மொத்த வியாபாரிகள் என்ன சொல்லுகிறார்கள். அரசாங்க விலையிலிருந்து ஒரு மூட்டைக்கு நான்கு அல்லது ஐந்து அல்லது ஆறு ரூபாய் கூடுதலாக இருந்தால்தான் எங்களுக்குக் கட்டுப்படியாகும் என்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமையினால் இன்றைக்கு மொத்த வியாபாரிகளின் கை மேலோங்கி நிற்கிறது. இந்த நிலைமை இருப்பது வரையிலும் பரிகாரம் காண்பது இயலாத காரியம். முடியாத காரியத்தை முரட்டு தைரியத்தோடு கொண்டு வர வேண்டாம் என்று தான் முதல் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் மிகத் திறமைசாலிதான், அதில் சந்தேகமேயில்லை. அவர்களுடைய திறமையைப் பற்றி நான் குறை கூறவில்லை. நேற்றுப் பேசிய கனம் மதியழகன் அவர்கள் இந்த மந்திரிசபை திறமையற்றது என்று சொன்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [23rd October 1964

ணர்கள். இவர்களுக்கு ஏதோ திறமை குறைவு இருப்பதாக நினைக்கிறார்கள். இப்போது இருக்கின்ற அமைச்சர்களைவிட வேறு திறமையானவர்கள் வந்துவிடுவார்கள் என்று மதியழகன் அவர்கள் நினைக்கிறார்கள் என்று நான் எண்ணவில்லை. தனிப்பட்ட முறையில் நமது முதலமைச்சர் அவர்கள் மிகத் திறமைசாலிதான். அதே போன்றுதான் நமது தொழில் அமைச்சர் அவர்களும் மிகத் திறமைசாலிதான், போலீஸ் அமைச்சர் அவர்களும் நல்ல திறமைசாலி தான், அவர் மிக அடக்கமாகவும் ஒடுக்கமாகவும் இருந்தாலும் நாட்டு மக்களுடைய பிரச்னையைப்பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இவர்களுக்கு நாட்டுமக்களைப்பற்றிக் கவலையில்லை என்று நான் சொல்லவரவில்லை. கனம் மதியழகன் அவர்கள் ஏதோ இந்தப் பக்கத்திலுள்ளவர்களின் கையில் நாற்காலி வந்துவிட்டால் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். அவ்வளவு சீக்கிரமாக இதைத் தீர்த்துவிட முடியாது. முக்கியமாக இருக்கின்ற கொள்கை சரியல்ல என்பதைத்தான் நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதை மாற்றிக்கொள்ளாமல் எத்த பொருளாதார நிபுணர் நிதி அமைச்சராக வந்தாலும் இதே நிலைமை தான் இருந்து கொண்டிருக்கும். நம்முடைய உணவு அமைச்சரைப் பொறுத்த அளவில் அவருக்கு உணவுப் பிரச்னையைப்பற்றி அவ்வளவு கவலைப்பட வேண்டிய தேவையே யில்லை. அவர்களுடைய . . .

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினருடைய நேரம் (டைம்) போய்க்கொண்டிருக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் ;** நான் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். எனக்கு குறைந்தது ஒரு மணி நேரமாவது தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** இப்படி எல்லோரும் நேரம் கூடுதலாக வேண்டும் என்று கேட்டால் சபாநாயகர் ஒன்றும் செய்வதற்கில்லை. அனுமதித்த நேரத்திற்குள் பேச்சை முடித்துக்கொள்வது தான் நல்லது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அமைச்சர்களைப் பொறுத்த வரையில் எல்லோரும் திறமைசாலிகள் தான். நமது முதலமைச்சர் அவர்கள் தனித் திறமைசாலி, அவர்களுக்குக் கைவலி ஏற்பட்டிருந்த நேரத்தில், ஆசுபத்திரியில் இருந்து கொண்டு ஒரு கையினாலேயே வந்த கடிதங்களுக்கெல்லாம் பதில் எழுதிக்கொண்டிருந்தார்கள். இந்தவிதமான திறமை இருப்பதினால் மட்டும் நமது உணவுப் பிரச்னையைத் தீர்த்துவிடமுடியாது. போட்டிருக்கின்ற கொள்கை சரியான முறையில் அமல் நடத்தப் படுகிறதா என்பதைப் பார்க்கவேண்டும். அதோடு போட்டிருக்கின்ற கொள்கை சரியான கொள்கையாக இருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும். இன்றுள்ள கொள்கை மொத்த வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிப்பதற்குச் சாதகமான கொள்கையாக இருக்கிறது.



23rd October 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

பணம் படைத்தவர்களுக்கு பதுக்கி வைத்துக்கொள்வதற்கு சாதகமாக இருக்கக்கூடிய கொள்கை. பெரிய நிலப்பிரபுக்கள் தங்களை நல்ல முறையில் பாதுகாத்துக்கொள்வதற்கான கொள்கை. இப்படிப்பட்ட நிலைமையில் போட்டிருக்கின்ற கொள்கையை அமல் நடத்த முடியாமல் முரட்டு தைரியத்தோடு இருந்தால் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. இவ்விதம் இருந்து கொண்டிருப்பதின் விளைவு தான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற விலைவாசி உயர்வு ஏற்பட்டிருப்பதும், அரிசி கிடைப்பதற்கு ஏற்பட்டிருக்கின்ற கஷ்டமான நிலைமையும் என்பதை அரசாங்கம் உணர வேண்டும். இதற்குப் பொறுப்பு இந்த ராஜ்யம் மட்டும் என்று கூறிவிட முடியாது. இதற்கு ஒரு ராஜ்யம் மட்டும் பொறுப்பல்ல.

"The evolution of food policy on these lines for the country as a whole is primarily the responsibility of the Government of India".

அதிலும் முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்லிவிட்டார்கள். இவர்கள் வைத்திருக்கின்ற உணவுக் கொள்கையின் அடிப்படையில் மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கையையும் வகுக்க வேண்டும் என்று வேறு கேட்டிருக்கிறார்கள். இவர்கள் வகுத்திருக்கின்ற கொள்கையை அவர்களும் மேற்கொள்ளவேண்டும் என்று ஏன் கேட்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அரசாங்கத்திற்கு எதிராக மக்களைத் தூண்டிவிடக்கூடிய கொள்கையாக இருக்கிறது. எப்போதுமே உணவுப்பஞ்சம் ஏற்பட்டபோதுதான் எல்லா நாட்டிலும் குழப்பமும் புரட்சியும் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். ரொட்டி வேண்டும் என்று தான் 'லார்' (ஜார்) மன்னனை நோக்கிப் ரஷ்ய மக்கள் திரண்டெழுந்தார்கள். கிரெம்ளின் மாளிகையை நோக்கிப் புறப்பட்ட அந்த ரஷ்ய மக்களை ஜார் மன்னனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கிரெம்ளின் மாளிகையையும் காப்பாற்ற முடியவில்லை. உணவு நெருக்கடியின் காரணமாகத் தான் நாட்டில் புரட்சிகளும் போராட்டங்களும் ஏற்படுகின்றன என்பதை அரசினர் உணரவேண்டும். இங்கு மட்டுமல்ல மத்திய அரசாங்கத்தின் கொள்கையே சரியில்லாமல் இருப்பதின் காரணமாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தில் உணவு அமைச்சராக இருக்கக்கூடிய உணவு அமைச்சர் அவர்களும் மிகத் திறமைசாலிதான். அவர்கள் 18 மணி நேரம் 20 மணி நேரம் வேலை செய்யக்கூடியவர் என்பது தெரிந்ததே. அவர் இந்த ராஜ்யத்திலும் அமைச்சராக இருந்து நல்ல அனுபவம் பெற்றிருக்கிறார். இவ்வளவு அனுபவம் பெற்றவர்கள் இருந்தும் மந்திரிகளாக ஏன் இந்த உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியவில்லை? இதை அரசினர் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 1958-லிருந்து கண்ட்ரோலை எடுத்துவிட்டார்கள். அன்றைக்கு மத்திய அரசாங்கத்தில் இருந்த உணவு அமைச்சர் திரு. [illegible] அவர்களும் இன்று முதலமைச்சராக இருந்த ராஜாஜி அவர்களும் [illegible] இந்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்...

டிருக்கிறது. அன்றைக்கே நாங்கள் சபையில் இதைப்பற்றி எச்சரித்தோம். அன்றைய தினம் பிரிட்டிஷார் அக்கிரமமான பல கொள்கைகளை வைத்திருந்தார்கள். கனம் நல்லசிவம் அவர்கள் கூறியது போல் மக்களுடைய ஆத்திரத்தைத் திருப்புகின்ற வகையில்தான் அன்றைக்கு அரசியல் சூதாட்டம் என்று கூட சொல்லலாம். அந்த முறையில் அன்றைக்கு நடந்தது. அன்றைக்கு 'டீக் கன்ட்ரோல்' கொண்டு வந்தது தான் அரசியல் ஸ்டன்ட் என்று சொல்லலாம். கொண்டு வந்தும் கூட நிலைமை ஏதாவது திரும்பியதா என்று பார்த்தால் மேலும் நிலைமை மோசமாகிக்கொண்டுதான் போவதை அரசாங்கத்தில் இருப்பவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். உண்மையான அரசியல் வாதிகள் என்றால் நாட்டுக்காக நாட்டு மக்களுக்காக திட்டங்களைக் கொண்டு வரவேண்டும். தங்களுடைய பதவி காலத்திற்கு மட்டும் திட்டம் கொண்டு வந்தால் போதாது. தங்கள் கட்சியின் பதவி காலத்திற்கு மட்டும் திட்டம் கொண்டு வந்தால் போதாது. தங்கள் தலைமுறையினருக்கு மட்டும் அல்ல, தங்களுக்குப் பின்னால் வருகின்ற ஒரு தலைமுறை அல்ல, இரண்டு தலைமுறை அல்ல, பல தலைமுறைகளுக்கு உதவக்கூடிய திட்டத்தைப் போட வேண்டும். அதுதான் உண்மையான அரசியல் வாதிகள் செய்யக்கூடிய சேவையாக இருக்க முடியும். அப்படிப் பட்டவர்களுக்குத்தான் நாட்டுப்பற்று அரசியல் பற்று இருக்க முடியும். அதல்லாமல் ஏதோ காலத்திற்கு தகுந்தபடி திட்டத்தைப் போட்டுக்கொண்டு மாற்றிக்கொண்டிருந்தால், அது வெறும் அரசியல் ஸ்டன்ட் என்றுதான் சொல்ல முடியும் மொத்தமாக நாட்டு மக்களுக்காக திட்டங்களைப் போட வேண்டும் என்பதைத்தான் நாங்கள் ஏழு வருட காலமாக வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். விலைவாசி உயர்வுக்கும் சோஷியலிஸத்திற்கும் சம்பந்தம் இல்லை. உற்பத்தி செய்கின்ற பொருட்களை நியாயமான முறையில் வினியோகிக்கவேண்டும் என்பது ஜனநாயக ஆட்சியில் அரசாங்கம் செய்யவேண்டிய ஒரு கடமை. அதைச் செய்யத் தவறினால் விலைவாசி ஏறிக்கொண்டுதான் போகும். அந்த முறையில் தான் இப்போது அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அரிசிப் பிரச்னை என்பது இன்று நேற்று 9-30 a.m. ஏற்பட்டது அல்ல இந்த ராஜ்யத்திற்கு மட்டும் ஏற்பட்டிருக்கும் பிரச்னையும் அல்ல, கடந்த பத்து வருட காலமாக அரசாங்கத்தின் தவறான கொள்கை, தவறான போக்கு இவைகளின் காரணமாக இந்த உணவுப் பிரச்னையைத் தீர்க்க முடியாமல் விலைவாசி உயர்வும் தட்டுப்பாடும் ஏற்பட்டிருக்கிறது. மக்களுடைய அதிருப்தியும் ஏறிக்கொண்டே இருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து வாங்கிக் கொள்ளலாமா என்று சிந்திக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தியில் குறைவு ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், பத்து வருட காலத்தில் என்ன ஏற்பட்டிருக்கிறது. பத்து வருட காலமாக தேசம் பூராவும் ஐந்து கோடி டன் உற்பத்தி பெருகவேண்டும் என்று திட்டமிடப்பட்டது. அதன்படி உற்பத்தியும் பெருகியிருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 38 லட்சம் டன் உற்பத்தி



இருக்க வேண்டும் என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்டது. அது 9-30 a.m. முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 44 லட்சம் டன்னாக அதிகரித்தது. அமைச்சர்கள் தொடர்ந்து சொன்ன கதைகள் இன்னும் ஞாபகத்தில் தான் இருக்கின்றன: அவைகளெல்லாம் இன்னும் மறக்கவில்லை. இரண்டாவது திட்ட காலத்தில் என்ன கூறினார்கள்? 12 லட்சம் டன் அதிகரிக்கவேண்டும் என்று கூறினார்கள். அப்புறம் ஏதோ தவறுகள் ஏற்பட்டு விட்டன, அதனால் 12 லட்சம் முடியவில்லை, 9 லட்சம் கிடைத்தது என்று சொன்னார்கள். முதலில் இருந்த 44 லட்சம் டன்னோடு இந்த 9 லட்சத்தையும் சேர்த்தால் மொத்தம் 53 லட்சம் டன் ஆகிறது. எத்தனை கோடி ரூபாய்கள் செலவு செய்வதற்கு நாம் அனுமதி கொடுத்திருக்கிறோம்? நாம் எதிர்பார்த்ததைவிட 3 லட்சம் குறைவாகக் கிடைத்தது என்று சொன்னாலும், அதிகரித்து இருக்கிறது. அது தானே உண்மை? மூன்றாவது திட்ட காலத்திற்கு என்ன சொன்னார்கள்? 17 லட்சம் டன் அதிகரிக்கவேண்டும் என்று திட்டம் போட்டார்கள். அதாவது 70 லட்சம் டன் நம் திட்ட இலக்கு, திட்ட இறுதி ஆண்டில் அந்த அளவுக்கு இருக்கவேண்டும் என்று சொல்லி, சென்ற ஆண்டு நம் முதல் அமைச்சர் பேசியது 2 லட்சம் டன்னுக்கு மேல் அதிகமாக உற்பத்தி ஆகியிருக்கிறது என்று கூறினார்கள். அதற்கு என்ன அர்த்தம்? 53 லட்சம் டன்னோடு இந்த 2 லட்சம் டன்னும் சேர்ந்து 55 லட்சம் டன் உணவு தானியம் உற்பத்தி ஆகியிருக்கிறது என்று தானே அர்த்தம்? 43 லட்சம் டன் உற்பத்தி ஆன காலத்தில் ஒரு ரூபாய்க்கு எத்தனை படி அரிசி என்று கேட்ட நிலைமை போய் இன்றைக்கு 53 லட்சம் டன் அல்லது 55 லட்சம் டன் உற்பத்தி ஆகும்போது ஒரு படி அரிசி எத்தனை ரூபாய் என்று ஜனங்கள் பார்த்துக் கேட்கிறார்கள் என்றால், என்ன உங்கள் திட்டம் என்று திட்டத்தைக் கேவலப்படுத்தும் அளவுக்குக் கொள்கையைக் கேவலப்படுத்தும் நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறீர்களே. திட்டத்தைக் கேவலப்படுத்த வேண்டும் என்பதில் சுதந்திரா கட்சியை விட காங்கிரஸ் கட்சிக்கே எண்ணம் இருக்குமோ என்று எனக்குத் தோன்றுகிறது. விலை இப்படி ஏறிக்கொண்டிருக்கிறது என்பது அல்லாமல் அரிசி பதுங்கி விடுகிறது. பதுங்கிய அரிசியைக் கண்டுபிடிக்க எடுத்த நடவடிக்கை என்ன? ஒரு ராஜ்யத்தை மட்டும் குறை சொன்னால் என்ன செய்வது என்று சொல்லலாம். மத்திய அமைச்சர்களெல்லாம் ராஜ்ய சர்க்கார் மீது பழியைப் போடுகிறார்கள். ராஜ்ய சர்க்கார் அமைச்சர்கள் மத்திய சர்க்கார் மீது பழியைப் போடுகிறார்கள். ராஜ்ய சர்க்காரர்களும், மத்திய சர்க்காரும் ஒருவர் மீது ஒருவர் பழியைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ராஜ்ய சர்க்காரிலும் மத்திய சர்க்காரிலும் வேறு வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களா? ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள், ஒரே கொள்கை உடையவர்கள், ஒரே திட்டத்தைப் பற்றிச் சொல்லுகிறவர்கள் தான் இருக்கிறார்கள். அங்கே இருக்கிற நிதி அமைச்சர் என்ன சொல்லுகிறார்கள்? மூன்று அவசியமான பண்டங்கள், உண்பதற்கு உணவு, உடுப்பதற்கு உடை, இருப்பதற்கு இடம் எல்லா மக்களுக்கும் கொடுப்பது

தான் எங்களுடைய லட்சியம் என்று சொல்லுகிறார்கள். யார் இவைகளை மக்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று கையைப் பிடித்தார்கள்? அவைகளைக் கொடுப்பதற்கான அதிகாரம் இல்லையா? தொழிலாளி உழைக்க மாட்டேன் என்று சொன்னானா? அல்லது விவசாயிகள் உழைக்க மாட்டேன் என்று சொன்னார்களா? அல்லது மக்கள் ஏதாவது இடைஞ்சலாக இருந்தார்களா? அல்லது எதிர்க் கட்சி ஏதாவது இடைஞ்சலாக இருக்கிறதா? 17 வருஷத் தலைமை, ஒரே தலைமை, ஒரே கட்சி, ஒரே கொள்கை தொடர்ந்து இருக்கும் பாக்கியம் யாருக்குக் கிடைத்திருக்கிறது? ஏன் சொன்னதை நிறைவேற்ற முடியவில்லை? பதினேழு வருஷங்களுக்குப் பின் ஏன் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படவேண்டும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அங்கு அவர்கள் அப்படி பேசவேண்டியது. நம் ராஜ்யத்திலிருந்து சென்ற உணவு அமைச்சர் என்ன சொல்லுகிறார் "Either I will break profiteering orprofiteering will break me." வியாபாரிகளோடு சவால் விட்டார். ஒன்று நான் கொள்ளை லாபத்தை உடைத்து எறிகின்றேன், அல்லது கொள்ளை லாபம் என்னை உடைத்து எறியட்டும் என்று வீரத்தோடு, இராணுவ பாஷையில் பேசினார். ஆனால் இன்று வரையில் அவரும் உடையவில்லை, கொள்ளை லாபமும் உடையவில்லை. ஏன் இந்த ஸ்தம்பிப்பு? இந்த நிலைமை இருக்கும் வரையில் அது நாட்டுக்கு நல்லதல்ல. இதை அரசியல் பிரச்னை என்று நினைக்காதீர்கள். இதில் ஒன்றும் அத்தகைய தத்துவார்த்தம் இல்லை. உற்பத்தி பெருகினாலும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை இடையில் இருக்கிறவர்கள் தட்டிக்கொண்டு போகிறார்கள். வர்த்தகத்தை எதிர்ப்பதாகச் சிலர் சொல்லலாம். நேற்று பேசிய கனம் அங்கத்தினர் வீரபாகு அவர்கள்கூட வியாபாரிகளை எதிர்க்கிறேன் என்ற எண்ணத்தில் பேசினார். வியாபாரம் ஓரளவுக்கு சில்லரை வியாபாரிகள் மூலம் நடந்துதான் ஆகவேண்டும். எந்த வியாபாரத்தை எதிர்க்கிறோம்? மூன்று சீட்டு காம்ப்ளிங் இருக்கிறது. அந்த காம்ப்ளிங்கில் ஈடுபட்டவர்களைப் பிடித்து சிறையில் அடைக்கிறோம். அதற்கு இன்றைக்குச் சட்டம் இருக்கிறது. அத்தகைய காம்ப்ளிங்கினால் அவர்களுக்குத்தான் நஷ்டம். ஆனால் இந்த காம்ப்ளிங் சமுதாயத்தையே பணயமாக வைத்து ஆடக் கூடிய சூதாட்டமாக இருக்கிறது. ரிஸர்வ் பாங்க் அறிக்கையை எடுத்துப் பாருங்கள். மார்ச், ஏப்ரல், மே இப்படி ஒவ்வொரு மாதமும் படிப்படியாக அரிசியின் மேலே, உணவு தான்யத்தின் மேலே கொடுக்கப்படும் அட்வான்ஸ் அதிகரித்துக்கொண்டே போகிறது. ஃபிப்ரவரி மாதம் 126 கோடி ரூபாய்; ஏப்ரல் மாதத்தில் 140 கோடி ரூபாய். ஏன் இவ்வளவு கடன் கொடுக்க வேண்டும்? ஏன் இத்தனை லட்சம் கூடியது? இன்னும் கணக்குகளை எடுத்துச் சொல்லலாம். ஆனால் அதற்கெல்லாம் நேரம் ஆகுமே என்று சொல்லவில்லை . . .

MR. SPEAKER: Let the hon. Member please finish his speech by 9-45 a.m.





**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஆகையால், இப்படிக் கடன் கொடுப்பதில் அந்தக் கடனை யாருக்குக் கொடுக்கிறார்கள். உற்பத்தி செய்வதற்குக் கொடுத்தால் அதை என்னால் புரிந்துகொள்ள முடியும். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குக் கொடுத்தால் அதைப் புரிந்துகொள்ளலாம். பொருள்களைப் பதுக்கி வைக்க பொருள்கள் மேல் கடன் கொடுப்பது வர்த்தகச் சூதாட்டத்திற்கு இடம் கொடுப்பதாக ஆகாதா? சாதாரண சூதாட்டம் அல்லாமல் சமுதாயத்தையே பணயம் வைக்கும் சூதாட்டத்தை ஆதரிக்கலாமா? அதற்கு இடம் கொடுக்கலாமா? விலை குறையும்போது அதற்கு நியாயமான விலை வைத்து விவசாயிகளுக்குப் பாதகம் இல்லாமல் உணவுப் பொருள்களை வாங்கலாம். விலை ஏறும்போது குறைந்த விலையில் மக்களுக்குக் கொடுக்கலாம். அதனால் உபயோகப்படுத்துகின்றவர்களுக்கும் நன்மை கிடைக்கும். உற்பத்தி செய்கிறவர்களுக்கும் அதனால் உற்சாகம் ஏற்படும். மொத்த வியாபாரம் அரசாங்கத்தின் கையிலே, மத்திய அரசாங்கமானாலும், மாநில அரசாங்கமானாலும், அரசாங்கத்தின் கையிலே இருந்தால் தான் ஒழுங்காகச் செய்ய முடியும். அப்படிக்கில்லாமல் வியாபாரிகளிடத்தில் விட்டு விட்டு, விலையை நிர்ணயிக்கிறேன் என்று சொன்னால் அராஜகத்தில், குழப்பத்தில் தான் கொண்டு போய் விடும். இந்தக் கொள்கையைத்தான் நமது அமைச்சர் அவை அனுஷ்டிக்கிறது. இதைத் தான் நிறுத்தவேண்டும் என்று நான் சொல்லுகிறேன். அரைக் கிணறு தாண்டுகிறேன் என்று சொன்னால் சரியாகுமா? அது முடியுமா? அந்தக் கொள்கையைத் தான் நான் நிராகரிக்கிறேன். அத்தியாவசியமான மொத்த வியாபாரத்தை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும். வினியோகம் செய்வதை யார் வேண்டுமானாலும் செய்யட்டும். கூட்டுறவு சங்கங்கள் செய்யட்டும், சில்லரை வியாபாரிகள் செய்யட்டும், பொது மக்கள் ஒத்துழைப்பைப் பெற்று செய்யட்டும். தொழிற்சாலைகளிலுள்ள கூட்டுறவு பண்டகசாலைகள் இருக்கின்றன, அவர்கள் செய்யட்டும். இவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று தவறு ஏற்படாமல் வினியோகம் செய்வது சாத்தியம். இப்போது அரசாங்கம் கொள்முதல் செய்கிறது. பூராவும் கொள்முதல் செய்தால் பரவாயில்லை. அறைகுறையாகச் செய்து ஒரு பகுதி உற்பத்தியாளர்களிடத்திலும், வியாபாரிகள் கையிலும் விட்டு, கொஞ்சத்தைப் பெற்றுக்கொண்டு மக்களுக்குக் கொடுப்பதால் என்ன கஷ்டம் ஏற்படுகிறது? எல்லா ஜில்லாக்களிலிருந்தும் என்ன புகார் வருகிறது? க்யூ வரிசையில் நின்றாலும் கடைசியில் கிடைக்கும் என்ற நிலைமை இல்லை. யார் யாரோ வாங்கி விற்கிறார்கள் என்று சொன்னால், 8 மணி நேரம் வேலை செய்து கிடைக்கும் ஊதியத்தை விட இரண்டு மணி நேரம் இதில் ஈடுபட்டு விற்பதில் அதிகலாபம் வருகிறது. அவர்கள் போய் கள்ள மார்க்கெட்டில் விற்று லாபம் செய்கிறார்கள். முதல் அமைச்சர் அன்றைக்கு ஒப்புக்கொண்டார்கள். அன்றைக்கு என்ன சொன்னார்கள்? பற்றாக்குறை அல்ல காரணம் என்று சொல்லி; அதனால் பதுக்கல் இருக்கிறது என்ற அர்த்தம் அல்ல, பதுக்கல் இல்லை

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [23rd October 1964

என்றும் அர்த்தம் இல்லை என்று அவர்கள் பதுக்கல் இருக்கிறது என்று ஒப்புக்கொள்ளச் சங்கடப்பட்டு அந்த முறையில் சொன்னார்கள். வினியோகத்தில் கோளாறு இருக்கிறது என்று ஒப்புக்கொண்டார்கள். வினியோகத்தில் கோளாறு இருந்தால் அதற்கு யார் பொறுப்பாளி? அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை? அந்த அதிகாரத்தை துணிந்து, தைரியத்தோடு செலுத்தி ஆட்சி நடத்தக் கூடாதா? இன்றைக்கு இந்த நிலை என் இருக்க வேண்டும். அவர்கள் ஆட்சி நடத்துகிறார்களே என்ற பொறாமை எனக்கு இல்லை. வினியோகத்தில் இருக்கிற கோளாறுகளை எப்படி நீக்க முடியும் என்று நினைத்து அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டாமா? அடையாள கார்டுகளாவது கொடுக்கப்பட்டு 15 நாட்களுக்கு இவ்வளவு அரிசி என்று நிர்ணயித்து, பூராவும் ஆரம்பத்தில் கொடுக்க முடியாவிட்டாலும், இன்னும் மூன்று மாதங்களில் இவ்வளவு அதிகம் கொடுக்கிறோம் என்று வாக்குறுதி இருக்குமானால் மக்களுக்கு இந்தக் கவலை, இந்த ஆதங்கம் இராது. அடையாளக் கார்டுகள் மூலம் வினியோகிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். சாத்தியமான அளவுக்கு ரேஷன் கடைகளைத் திறந்து, சாத்தியமான அளவுக்கு சில்லரை வியாபாரிகளைப் பயன்படுத்தி, சாத்தியமான அளவுக்கு தொழிற்சங்கங்கள் முதலியவற்றின் ஒத்துழைப்பைப் பெற்று, விருப்பு வெறுப்பின்றி விநியோகத்தைச் சீர்படுத்தவேண்டுமென்று வலியுறுத்திக் கூறத்தான் இந்தத் தீர்மானத்தை, கண்டிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். அவர்கள் கொள்கை கண்டிக்கத் தக்கது, நிராகரிக்கப்பட வேண்டியது, நாட்டுக்கு அபாயமானது என்று எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். இந்த பட்ஜெட் பிரசங்கத்தில் கூறியிருக்கக் கூடிய கொள்கையைத்தான் நிராகரிக்கவேண்டுமென்று நான் சொல்லுகிறேன். அவர்கள் மனதில் கொண்டிருக்கிற, நேற்று கனம் அங்கத்தினர் வீரபாகு அவர்கள் சொன்ன மாதிரி, அவர்கள் மனதில் வைத்துக்கொண்டிருக்கிற கார்டு கொடுக்கவேண்டும் என்ற கொள்கையை நிராகரிக்கவில்லை. மொத்த வியாபாரத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டு, ஸ்டேட் டிரேடிங்கில் எடுத்துக்கொண்டு, வினியோகத்தை அரசாங்கம் முறையாகச் செய்ய ரேஷன் என்று சொன்னால் கூட அதைக் கொண்டு வருவதற்குத் தயங்கவேண்டாம். மக்களே ரேஷன் வந்தாலும் தேவலை என்று நினைக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் 10 வருஷம் ஆனாலும் நம் நாட்டிலே உணவுப் பிரச்னை கவலைக்கிடமாகத்தான் இருக்கப் போகிறது. அதில் ஒரு பெரும் பிரச்னை இருக்கலாம். நமக்குப் புரிந்துகொள்ள முடியவில்லை. கடந்த 10 ஆண்டுகளாக அந்தப் பிரச்னை தீர்க்கப்படவில்லை. இன்னும் 10 ஆண்டுகளுக்குள் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையும் இல்லை. இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு எல்லாக் கட்சிகளும் சேர்ந்து முன்வருவோம். எல்லோரும் சேர்ந்து முடிவு எடுத்தால் எல்லாக் கட்சிகளும் பொறுப்பு எடுத்துக்கொள்வதற்குத் தயார். பொறுப்பு எடுத்துக்கொண்டு, அதற்கான பிரசாரம் செய்வதற்கு, அதற்கான தயாரிப்புகள் செய்வதற்கு என்னுடைய கட்சி சார்பி



23rd October 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

லே நான் உறுதி கொடுக்கமுடியும், அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இதற்கு சாதகமாக மக்கள் மனப்பான்மையை திருப்ப, நாட்டில் சூழ்நிலையை உருவாக்க கம்யூனிஸ்ட் கட்சி தயார். இந்த அடிப்படையில் இந்தப் பிரச்னையை அணுக வேண்டும். இதையும் ஒரு அரசியல் பிரச்னையாகக் கருதக்கூடாது. சபையில் பேசி வாக்கு வன்மையினால் சமாளித்துவிடலாம். வாக்கு வன்மையிருந்தால், வாய் ஜாலம் இருந்தால் எங்கும் கொஞ்சம் சமாளித்துக் கொள்ளலாம். வாக்கு ஜாலத்தினால் கொஞ்சம் பலன் இருக்கிறது. வாய் ஜாலத்திற்கு கொஞ்சம் செல்வாக்கு இருக்லாம். ஆனால், அந்தச் செல்வாக்கு கொஞ்ச நாட்களுக்குத்தான் இருக்கும். வாய் ஜாலத்தினால் மட்டும், அதிக நாட்களுக்கு ஏமாற்ற முடியாது. (ஒரு அங்கத்தினர் : ஏமாந்தவர்கள் யார்) யார் என்று நான் சொல்லவில்லை. பேச்சுத் திறமை வேண்டும், கொள்கையின் மேன்மையும் வேண்டும். கொள்கையும் இருக்கவேண்டும், திட்டமும் இருக்கவேண்டும், பேச்சுத் திறமையும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாட்டு மக்களுடைய பிரச்னையைத் தீர்க்க முடியும். மக்கள் எதிலிருந்து திருப்தி அடைய முடியும்? திட்டங்களைத் தீட்டி, திட்டங்களுடைய பலன் சாதாரண தொழிலாளிகள், விவசாயிகள் வீட்டிலே தெரியவேண்டும். பணக்காரர்கள் வீட்டிலே தெரிந்தால் போதாது. பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக ஆகும் முறையில் உங்கள் விலைவாசிக் கொள்கை இருக்கிறது. பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக்கக்கூடிய முறையில் உங்கள் உணவு தானிய விநியோகக் கொள்கை இருக்கிறது. ஏழை எளிய மக்கள் தொழிலாளிகள்; 8 மணி நேரம், 10 மணி நேரம் உழைக்கக்கூடிய தொழிலாளிகள் இவர்களுக்குப் பலன் அளிக்கக்கூடிய முறையில் உங்கள் கொள்கை அமையவில்லை. இதுதான் ஜனநாயகமா, இதுதான் சோஷலிஸமா என்று மக்கள் கேட்கக்கூடிய நிலை ஏற்படும். ஜனநாயகம் என்றால் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை தேர்தல் நடத்திவிட்டால் மட்டும் போதாது. சட்டம் இருக்கிறது, பார்லிமெண்டு இருக்கிறது, சட்டசபை இருக்கிறது என்று சொன்னால் மட்டும் ஜனநாயகம் ஆகிவிடுமா? மெஜாரிடியாக இருக்கக்கூடியவர்கள், தொழிலாளர்கள், அலுவலகத்தில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் போன்ற நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள், விவசாயிகள், சில்லரை வியாபாரிகள் ஆகியோர்கள்தான் மெஜாரிடியாக இருக்கக்கூடிய மக்கள், அமைச்சர்களுடைய திட்டத்தின் பலனை அடைந்து, திருப்தி அடைந்திருக்கிறார்களா? மெஜாரிடியாக இருக்கக்கூடியவர்களுக்கு அதிருப்தியை அளிக்கக்கூடிய வகையில்தான் இருக்கிறது உங்களுடைய கொள்கை. ஜனநாயகம் என்று சொன்னால், வோட்டுரிமை மட்டும் வழங்கி விட்டால் போதாது. உண்ணுவதற்கு உணவு, உடுப்பதற்கு உடை, குடியிருப்பதற்கு வீடு, கல்வி, ஆரோக்கியம் ஆகிய ஐந்து வசதிகளும் உள்நாட்டுப் பஞ்சசீலம் போன்றவை, மக்களுக்குள்ள அத்தியாவசியமான தேவைகள். வெளிநாட்டுக் கொள்கையில், பஞ்சசீலக் கொள்கையை அனுஷ்டிப்பதுபோல், உள்நாட்டுக் கொள்கையில் இதைப் பஞ்சசீலக்

*[திரு. மீ. கலியாணசுந்தரம்]* [23rd October 1964

கொள்கையாக ஏற்றுக்கொண்டு, அமுல் நடத்தவேண்டும். வெளிநாட்டுப் பஞ்சசீலக் கொள்கையை யாருக்கும் பயப்பட்டு விட்டுவிடமாட்டோம் என்று உறுதியாக கடைப்பிடித்துக் கொண்டிருப்பதுபோல், வியாபாரிகளுக்கு ஆத்திரம் வந்தாலும் சரி, நிலப்பிரபுக்களுக்கு ஆத்திரம் வந்தாலும் சரி, இந்த ஐந்து பெரும் கோட்பாடுகளை, மக்களுக்கு உண்ண உணவு, உடை, குடியிருக்க வீடு, கல்வி, ஆரோக்கியம் ஆகியவைகளுக்கு வழி செய்யக்கூடிய திட்டங்களை நிறைவேற்றவேண்டும். இவை இல்லாமல் ஜனநாயக சோஷலிஸம் என்று சொல்லிக்கொண்டு இருந்தால் மட்டும் பிரயோசனம் இல்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதுதான் குறிக்கோளாக இருக்கவேண்டும். உண்மையான ஜனநாயகமாக இருக்க வேண்டும். அதுதான் உண்மையான ஜனநாயகத்திற்கும், சோஷலிஸத்திற்கும் வழி கோலும்.

அடுத்தபடியாக, விவசாய உற்பத்தியை எப்படி பெருக்குவது, உணவு உற்பத்தியை எப்படிப் பெருக்குவது, அதிலும் என்னென்ன சங்கடங்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி யெல்லாம் விரிவாகப் பேசவில்லை, எனக்கு நேரம் குறைவாக இருக்கக்கூடிய காரணத்தினால். விவசாய அபிவிருத்திக்காக எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகள் எவ்வளவு பற்றாக்குறை என்பதற்கு விவசாய உற்பத்திப் பெருக்கத்தைப்பற்றி முதல் அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் மௌனம் சாதித்திருப்பதே போதுமான எடுத்துக்காட்டு என்று நினைக்கிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இடைக்கால பரிசீலனையில் 17 லட்சம் டன் என்று போட்டிருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள், எவ்வளவு அடைந்தோம் என்பதைப்பற்றி மௌனம்தான் இருக்கிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு சாதாரணமாக உழைக்கக்கூடிய விவசாயிகளுடைய ஒத்துழைப்பைப் பெறவேண்டும். இது வரைக்கும் உணவுப் பஞ்சம் என்பது நகர்புறத்தில்தான் இருந்து வந்தது. கடந்த 6 மாதங்களாக கிராமத்தில் உழைக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கும் உணவு தானியம் அரிதாகிவிட்டது. நகர்ப்புறங்களில் தான் பண்டகசாலைகள், ரேஷன் ஷாப்புகள், ஃபேர் பிரைஸ் ஷாப்புகள் ஆகியவைகள் இருக்கின்றன என்று கூறுகிறார்கள். கிராமப்புறங்களில் உணவு தானிய நெருக்கடி முற்றிவருகிறது. தைரியமாக நான் கூறியிருக்கிற இந்த யோசனைகளை ஏற்றுக்கொண்டு அமைச்சர் அவை நடவடிக்கை எடுக்கவேண்டும், துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்துடன் தான் இந்தக் கண்டனத் தீர்மானத்தை நான் கொண்டுவந்திருக்கிறேன். இதே நோக்கம் மேலோங்கியதன் காரணமாக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கும் நாங்கள் ஆதரவு கொடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, மந்திரி சபையின் மீது கொண்டுவரப்பெற்றிருக்கும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது, அதை ஆதரித்து, அதாவது அந்தத்



23rd October 1964] *[திரு. சா. கணேசன்]*

தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன். கருத்துக்களைச் சொல்லுவதற்கு முன்பாக, மந்திரிகளின் மீதோ அல்லது தனிப்பட்டவர்கள் மீதோ எங்களுக்கோ, எனக்கோ அல்லது எனது கட்சிக்கோ எந்த விதமான வெறுப்பும், கோபமும் அல்லது வேறு வகையிலே புண்படுத்தத் தக்க மன நிலைகளோ தனிப்பட்ட முறையில் இல்லை என்பதை முதற்கண் புலப்படுத்திக்கொண்டு, நிலைமையை நாடுகின்ற முறையிலே ஏற்பட்ட, ஏற்படுகிற அபிப்பிராய பேதங்களின் காரணங்களை அடிப்படையாகக் கொண்ட என்னுடைய கருத்துக்களை இங்கே உங்கள் மூலமாக சபையின் முன்னே வைக்கிறேன்.

பொதுவாக நாங்கள் ஆட்சியாளர்கள் மீது கூறுகிற குறை, திட்டம் அமைக்கும் முறையைப் பற்றித்தான், திட்டத்தைப்பற்றி அல்ல. திட்டத்தை நாங்கள் மறுக்கவில்லை; வெறுக்கவில்லை; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் திட்டம் அமைக்கின்ற முறையும், அளவும், அதை நடத்துவதற்கு மேற்கொள்கிற, கடைப்பிடிக்கிற வழிமுறைகளும் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் பயனற்றவை, துன்பம் தருபவை, தீமை பயப்பவை என்ற எங்களின் அழுத்தமான கருத்தைத் தெளிவாக நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். இந்தத் திட்ட அமைப்பு முறைகளினாலும் திட்டத்தின் அமைப்பு அளவினாலும் திட்டத்தை செயல்படுத்துகிற நெறிமுறையினாலும் இன்று பிரத்தியட்சத்தில் ஏற்பட்டிருக்கிற ஒரு பெரிய இடிசாமம் அல்லது துயரமே இன்றுள்ள உணவு நெருக்கடிக்கு மூல காரணம்.

இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை, ஓரளவு தன்னிறைவு மாநிலம் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். புள்ளி விவரங்களும் ஓரளவு சொல்லுகின்றன. சில புள்ளிவிவரங்களைப் பார்த்தால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற டையரியில் காணப்படுகிற புள்ளிவிவரங்களைப் பார்த்தால் அவை முரண்படுகின்றன. நேரம் அதிகம் இன்மையால் அங்கெல்லாம் போய், விரித்து உரைத்து நேரத்தைச் செலவழிக்க விருப்பமின்மையால் ஓரளவுக்கு மட்டும் சுட்டிக் காட்டிவிட்டுச் செல்கிறேன். அப்படி அமைச்சர் அவர்கள் சொல்லுவதைப்போல் இந்த மாநிலம் தன்னிறைவு மாநிலமாக இருக்குமானால், ஏன் இப்படிப்பட்ட உணவு நெருக்கடி நிலை வந்தது அல்லது 'பஞ்சம்' ஏற்பட்டது என்பதை நாம் சிறிது சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். உண்மையிலேயே சில அங்கத்தினர்கள் நேற்றும் சொன்னார்கள், ஏதோ பக்கத்தில் இருக்கிற மாநிலம் பற்றாக்குறை மாநிலம், ஆகவே இங்கிருந்து உறிஞ்சிக்கொண்டு விடுகிறது என்று. ஓரளவுக்கு அது உண்மையாக இருக்கலாம். அதே மாதிரி, நம்முடைய நிலத்திலிருந்து நீர் மற்றொரு நிலத்தினால் உறிஞ்சப்படுமானால், நமக்குப் பக்கத்திலுள்ள நிலத்தின் நீரை. நம்முடைய நிலம் உறிஞ்சாதா ?

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

தமிழகத்திலிருந்து கேரளாவுக்கு நம்முடைய உணவு தானியங்கள் சென்று விடுகின்றன என்ற நிலை ஏற்படும்பொழுது, ஆந்திரா

விலிருந்து, உபரியாக இருக்கிற அந்த மாநிலத்திலிருந்து, உணவு தானியங்கள் ஏன் நம்முடைய மாநிலத்திற்கு வந்தபாடில்லை? அப்படி அது வருமானால், இது போகுமானால், இரண்டும் சரிக்கட்டிவிடும். (குறுக்கீடு) வரவே இல்லை என்று நான் சொல்லவில்லை. வருகிறது, போகிறது. வரவிற்கும் பற்றுக்கும் சரியாகத்தானே நிலை இருந்து ஆகவேண்டும் அல்லவா? இல்லை உண்மையிலேயே நான் நம்புகிறேன், நமது மாநிலத்திலே உணவுப் பஞ்சம் இல்லை. செயற்கைப் பஞ்சம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. காரணம் என்ன? காரணம் அணுகுகிற முறையிலேதான் அடிப்படைக் கோளாறு. கம்யூனிஸ்ட் மெம்பர் ஒரு மாதிரியாகச் சொல்வார். நான் இன்னொரு மாதிரியாகச் சொல்வேன். அவர் நம்பிக்கை அது, அவருடைய கொள்கை அது. என்னுடைய நம்பிக்கை இது, என்னுடைய கொள்கை இது. அடிப்படையிலே ஏன் பஞ்சம் வந்திருக்கிறதென்பதை நாம் பார்க்கவேண்டும். இப்பொழுது சர்க்கரை எங்கும் கிடைக்கவில்லையா? எத்தனை மூட்டைகள் வேண்டுமானாலும் கிடைக்கின்றன. விலை ரூ. 1-22 காசுகள் என்று சொல்கிறோம். ஆனால் அந்த விலைக்கு அவ்வளவும் கிடைக்கவில்லை. இரண்டு ரூபாய் கொடுத்துவிட்டால் எவ்வளவு சர்க்கரை வேண்டுமானாலும் கிடைக்கிறது. அதிகப்படியான விலை கொடுத்தால் எந்த அளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது என்ற நிலை இருக்குமேயானால், அங்கே பற்றாக்குறை இருக்கிறதா என்பது தான் கேள்வி. ஆகவே, பதுக்கிவைத்துக்கொண்டு, இம்மாதிரியான சூழ்நிலையை, நிர்ப்பந்த நிலையைப் பயன்படுத்திக்கொண்டு கொள்ளை லாபம் அடிக்கிறவர்கள்—அவர்கள் பெரிய வியாபாரிகளோ சிறிய வியாபாரிகளோ அல்லது வியாபாரிகள் அல்லாதவர்களோ, என்னைப் போன்றவர்களும்கூட அக்கிரமமாகப் பதுக்கிவைத்துக்கொண்டு விற்க முற்படுகிறார்கள். இந்த இழிந்துபோன, கெட்டுப்போன, அழுகிப்போன மனமுடையவர்கள் இப்படிச் செய்வதற்கு இடம் கொடுப்பது எது? கன்ட்ரோல். கன்ட்ரோல் என்று ஒன்று வந்துவிட்டால், உடனே பதுக்கலாம் அல்லது பதுக்கவேண்டும் என்ற உணர்ச்சி, சுயநலம், லாபத்திலே அக்கறையுள்ள ஒவ்வொருவனுக்கும் நான்கு அல்லது பத்துப்பேரைத் தவிர ஏற்பட்டுவிடுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. எனக்கு நன்றாகத் தெரியும், காரைக்குடியில் அது சிறிய கிராமமும் அல்ல, பெரிய நகரமும் அல்ல. அங்கே 60 காசுகளுக்கு கல்லுக்கட்டியிலே அரிசி கிடைத்துக் கொண்டிருந்தது. கல்லுக்கட்டி என்றால் எங்கள் மார்க்கட்டு ஏரியா. அதற்குப் பிறகு இரண்டு நாட்களிலே பத்திரிகைகளிலும், கெஜட்டிலும் கன்ட்ரோல் விலை 75 காசுகள் என்று வந்ததுமே, அங்கே க்யூ நிற்க ஆரம்பித்துவிட்டது. இந்த விலையைப் பார்த்ததும் வியாபாரிகளும், விவசாயிகளாக இருக்கிறவர்களும், அதாவது கொஞ்சம் வைத்துக்கொண்டு பாக்கியை விற்றுவிடலாம் என்று நினைப்பவர்களும், வியாபாரிகளும் அல்லாமல் விவசாயிகளும் அல்லாமல் இருக்கிறவர்களும் அரசாங்கமே 60 காசிலிருந்து 75 காசுகளாக விலையை



ஏற்றிவிட்டதே, இன்னும் விலை ஏறப்போகிறது என்ற அச்ச நிலையிலே பரபரப்பு நிலையிலே, குறைந்த பட்சம் அவநம்பிக்கை நிலையிலே, பதுக்க ஆரம்பித்து விடுகிறார்கள். 80 காசுகள் தருகிறேன், எனக்குத் தருகிறாயா? என்று ஒருவன் கேட்கிறான். 80 காசுகள் என்று காதில் பட்டதும் இன்னொருவன் 85 காசுகள் தருகிறேன் என்று சொல்கிறான். இப்படியாக விலை ஏறிக்கொண்டே போகிறது. இதைத்தான் ஆங்கிலத்தில் 'ஆர்ட்டிபிஷியல் ஸ்கேர்ஸிட்டி'. அதாவது உண்டாக்கப்பட்ட பற்றாக்குறை அல்லது பஞ்சம் என்று கூறுவார்கள். இம்மாதிரியான நிலைமை ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம், உண்மையான காரணம், நான் நிச்சயமாக நம்புகிற காரணம் கண்ட்ரோல்; கண்ட்ரோல் தான் ஆகவே, இந்த கண்ட்ரோல் முறையை நான் பலமாக எதிர்க்கிறேன். அன்று ராஜாஜி கண்ட்ரோலை எடுத்தது தான் இன்றுள்ள உணவு நெருக்கடிக்குக் காரணம் என்று எனது நண்பர் கலியாணசுந்தரம் அவர்கள் இப்பொழுது சொன்னார்கள். இவர்கள் கருத்தைத் தெரிந்து, காமராஜ் அவர்களோ அல்லது காமராஜ் அவர்கள் சொன்னதைக் கேட்டுக் கலியாணசுந்தரம் அவர்களோ இதைச் சொல்கிறார்கள். (திரு. மீ. கலியாணசுந்தரம் குறுக்கீடு) உங்களிடத்திலிருந்து அங்கோ அல்லது அங்கிருந்து இங்கோ, எங்கிருந்து எங்கானாலும் கருத்து விஷயத்தில் வேறுபாடில்லை ஒன்றுதான். இந்த நிலையிலே . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஒரு விளக்கம் இப்பொழுதே நான் கேட்க விரும்புகிறேன். இந்த கண்ட்ரோல் எல்லாம் ஜூன் மாதத்திற்குப் பிறகுதான் வந்தது. அதுவும் ஒரு சிறிய அளவில் கண்ட்ரோல் வந்தது. இந்தக் கண்ட்ரோலுக்கு முன்பே விலை ஏறிக்கொண்டு வந்தது. சென்ற ஆண்டு விலையை விட இந்த ஆண்டு விலை அதிகமாக ஏறியிருக்கிறது. இதற்குக் கனம் அங்கத்தினர் என்ன பரிகாரம் கூறுகிறார்கள்?

**திரு. சா. கணேசன்:** வரிசையாக நிலைமைகளையும், அவற்றின் காரணங்களையும் கூறிவிட்டு இறுதியிலே எது சரியான பரிகாரம் என்று எனக்குத் தோன்றுகிறதோ அதைச் சொல்வதுதான் என்னுடைய மரபு என்பதை இந்தச் சட்டசபை அறியும். அந்த முறையிலே இதற்கும் என்ன பரிகாரம் என்பதை நான் இறுதியிலே சொல்வேன். தயவுசெய்து நான் பேசும்பொழுது இடையிடையே பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் தடை பண்ணுகிறேன் என்று யாரும் நினைக்கக்கூடாது. அதற்குக் கனம் சபாநாயகர் அவர்கள் எனக்கு புரொடெக்ஷன் தருவார்கள் என்று நம்புகிறேன். குறுக்கீடுகளை நான் வரவேற்கிறேன். ஆனால், அதனால் எனக்கு தேவைப்படும் நேரத்தையும் தரவேண்டுமென்று தான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிலை சென்னை நகரத்திலே மட்டுமல்ல. எல்லாக் கிராமங்களுக்கும் இப்பொழுது பரவிவிட்டது. பலர் பேசியதைப் பார்த்தால், எதிர்க்கட்சிக்காரர்கள் ஏதோ சென்னை நகரத்தி

காகத்தான் வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுகிறார்களோ என்றுகூடச் சொல்லத் தோன்றுகிறது. எதிர்க்கட்சியிலே உள்ளவர்களில் இரண்டு மூன்று பேர் சென்னை நகரைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால், பாக்கியுள்ளவர்கள் அனைவரும் வெளியே இருப்பவர்கள். சென்னைநகர் மீது வெறுப்போ அல்லது மற்றப் பிரதேசங்கள்மீது வெறுப்போ எங்களில் யாருக்கும் கிடையாது. எல்லாவற்றையும் தமிழ் மாநிலம் என்ற அளவிலேதான் நாங்கள் கருதுகிறோம். எல்லா ஜில்லாக்களிலும், எல்லா நகரங்களிலும், எல்லா ஊர்களிலும் இந்த நிலை வந்துவிட்டது. சிறு கிராமங்கள், பட்டித்தொட்டிகளில் தடைகள் இல்லாத காரணத்தால் அங்கே இந்த மாதிரி க்யூ பாரம் செய்வதற்கு இடமில்லாமல் இருக்கிறது. அன்றேல் கிராமங்களிலும் க்யூ வரிசைக்குக் குறைவிருக்காது. அதுதான் நிலை. வாங்கி விற்பவர்கள் பலர் இந்தக் க்யூவிலே நிற்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. உண்மை. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். வாங்கி விற்கிறவர்களும் க்யூவிலே நிற்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. எதிர்க்கட்சிக்காரர்களும் அதை மறுக்கமாட்டார்கள். ஏன் நிற்கிறார்கள்? என்னைப் பொறுத்தே உதாரணம் காட்டி நான் பேசுவேன். நான் சட்ட சபைக்கு வந்துவிடுகிறேன். எனக்குச் சோறு வேண்டும். முன்பெல்லாம் யார் எனக்கு வேண்டியவனோ அல்லது என்னுடைய வேலைக்காரனோ அவனிடம் காசைக் கொடுத்து கடைக்குப்போய் வாங்கிக்கொண்டுவா என்று சொல்லி அதைப் பெற்றுச் சமைத்து நான் சாப்பிட்டுக்கொண்டு வந்தேன். இப்பொழுது எனக்குப் பதிலாக நீ க்யூவில் நில்லப்பா என்று சொல்லி ஒருவனை நிற்க வைக்கிறோம். அவனுக்கும் எப்படியாவது சம்பாதிக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஏதோ 40 அல்லது 50 காசுகள் கிடைக்கிறதென்று அவன் நினைக்கிறான். ஆனால், இப்படிக் க்யூவில் நிற்பவர்கள். . . .

(இந்த சமயத்தில் வை. சங்கரன் அவர்கள் தன் இடத்தில் எழுந்து நின்றார்கள்.)

SRI SAW. GANESAN : No! No! I am not yielding, Sir.

**திரு. வை. சங்கரன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சுதந்தரக் கட்சித் தலைவர் அவர்கள் இப்பொழுது பேசிக்கொண்டிருக்கும்பொழுது, அதே கட்சியைச் சேர்ந்த ஒரு மெம்பர் எங்கள் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு, 'ஹியர், ஹியர், பாயின்ட், பாயின்ட்' என்றெல்லாம் சொல்லி நாங்கள் ஏதோ அவருடைய பேச்சை ஆமோதிக்கிற மாதிரி இங்கே ஒரு ஃபால்ஸ் இம்பிரஷனை கிரியேட் செய்கிறார்கள். (சிரிப்பு.)

**திரு. சா. கணேசன் :** கேள்வி கேட்கிறபொழுதோ அல்லது அவர் பேசுகிறபொழுதோதான் தன்னுடைய இடத்திற்குப் போக வேண்டுமென்று கனம் சபாநாயகர் உத்திரவிடுவார் என்பதுதான் சம்பிரதாயம் என்று நான் கருதுகிறேன்.





இப்படிப் பலர் க்யூவில் நிற்கிறார்கள். சிலர் அவர்களுக்காகவே நிற்கிறார்கள். சிலர் பிறர்க்கு உதவும் முறையில் நிற்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேறு தொழில் அப்பொழுது கிடையாது. எப்படியாவது தங்களுடைய வயிற்றுப்பாட்டைக் கழுவுவதற்காக சில காசுகள் சம்பாதித்து அதன் மூலமாக அரிசி வாங்கி உண்ண வேண்டிய நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அப்படி க்யூவில் நின்று வாங்கி வந்த அரிசியை அவர்கள் பதுக்கி வைத்துக் கொண்டோ அல்லது மறைத்து வைத்துக்கொண்டோ, அல்லது குவித்து வைத்துக்கொண்டோ, அதன் மூலம் கொள்ளை லாபம் அடைகிறவர்கள் அல்ல. இப்படிக் க்யூவில் நிற்பவர்கள், முந்தின நாள் இரவு பத்து மணியிலிருந்து எங்கே அரிசி கிடைக்குமோ அந்தக் கடைக்கு எதிரில் வரிசையாகப் படுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் நிற்பதைக் கணக்கிட்டுப் பார்க்கிறபொழுது 'இப்படி க்யூவில் நிற்பவர்கள் நிற்கும் நேரத்தைக் கணக்கிட்டால் சராசரி 6 அல்லது 8 மணி நேரம் வரும். இரவிலே படுத்துத் தூங்கும் நேரத்தை நான் கணக்கில் சேர்க்கவில்லை. நிற்கும் நேரத்தைமட்டும்தான் கணக்கில் எடுத்துக்கொண்டிருக்கிறேன். இப்படி அவர்கள் நிற்பதை, செம்மையான முறையிலே நாம் கணக்கிடுவோமேயானால் இந்த நாட்டில் இருக்கின்ற மனித சக்தியின் எத்தனை லட்சம் கோடி மணி நேரம் விரயமாக்கப்படுகின்றனவென்பதை அரசாங்கம் புறக்கணித்துவிட முடியாது, 10-00 a.m. மறந்துவிடக் கூடாது, அலட்சியம் செய்தலும் ஆகாது. இந்தக் காரணத்தினால் இனியும் தொடர்ந்து க்யூ வரிசை ஏற்படாமல் செய்யவேண்டும். அதற்கு வேண்டிய வழிவகைகளை, நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதைவிட்டு விட்டு க்யூ வரிசையில் நிற்பவர்கள் அப்படிப்பட்டவர்கள், இப்படிப் பட்டவர்கள் என்று எல்லாம் குறைத்துக் கூறுவது நியாயம் ஆகாது, பொருத்தமும் ஆகாது, இப்பொழுது பத்திரிகைகளிளெல்லாம் பார்க்கிறோம், சென்னைக்கு 3,000 மூட்டை வருகிறது என்று சொல்கிறார்கள் அப்படி வருகிற வரை சந்தோஷம். அதை ஏதோ ரேஷன் போல கொடுக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். இந்த 3,000 மூட்டை சென்னைக்குப் போதுமா, இதைக் கொண்டு சென்னை வாசிகள் எல்லாருக்கும் அரிசி கொடுத்துவிட முடியுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். நிச்சயம் போதாது. போதவே போதாது. சென்னையின் ஜனத்தொகை எவ்வளவு? இங்கே ஒவ்வொரு நபருக்கும் ஒரு நாளைக்கு காலே அரைக்கால் படி அரிசியாவது வேண்டாமா? இப்படிக் கணக்குப் போட்டு அல்லது எப்படிச் சுற்றி வளைத்துச் சொன்னாலும்கூட; இந்த 3,000 மூட்டைகளும் அதிக பட்சம் மூன்று லட்சம் மக்களுக்குத்தான் போதும். அதற்குமேல் கொள்ளும் என்று தோன்றவில்லை. இதுவும் நம் போன்றவர்களைப் பொறுத்தவரைத்தான். பாடுபட்டு உழைக்கிறவர்களாக இருப்பவர்களுக்கு, ஆளுக்கு ஒரு பக்காப் படி வரை வேண்டியிருக்கும். நன்றாக உழைப்பதற்குத் தக்கபடி, ஊட்டத்தைக் கொடுக்கக் கூடிய உணவு அளவு வேண்டியதும் அத்தியாவசியம். அப்படி உழைப்பாளிகள் பலபேர் இருக்கிறார்கள். இப்படியெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்தால்,

[திரு. சா. கணேசன்] [23rd October 1964

நமக்கு வந்திருக்கும் அளவு மிகக் கீழ் மட்டத்திற்கு வந்துவிடும். ஆவடி போன்ற இடங்களில் இருக்கும் அரிசிகளெல்லாம் நாம் விற்றவைதான். அவற்றை ஏன் இவ்வளவு காலமாக மக்களுக்குக் கொடுக்கத் திறந்து விடவில்லை? இப்படிப்பட்ட நெருக்கடி நிலையில்கூட அதைக் கொண்டு வந்து ஜனங்களுக்கு விநியோகிக்க ஏன் பல மாதங்கள் தாமதப்பட்டன? அங்கே அரசாங்கம் ஏன் இவ்வளவு அரிசியைப் பதுக்கி வைத்திருந்தது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுதாவது அது அரிசியாக இருக்கிறதா அல்லது சங்கிலியாக இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும், அதாவது மக்கிப் போய் ஒட்டிக்கொண்டு கூட்டுறவாக இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பார்க்காமல்தானே சொல்வீர்கள்.) இங்கே இல்லாவிட்டாலும், வேறு இடங்களில் பார்த்திருக்கிறோம். இது மாதிரி 6 மாதம், 8 மாதம் என்று வைத்து விட்டால் என்ன ஆகும் என்பதைப் பார்த்திருக்கிறோம். அந்த அனுமானத்தின் பேரில்தான் ஏற்பட்டிருக்கும் ஐயத்தைக் கூறுகிறேன். இதை ஆட்சியாளர்கள் மனத்தில் கொள்ளவில்லை. நல்ல முறையிலே செயல்படவில்லை என்பதைக் கூறவேண்டியவனாக இருக்கிறேன்.

இனி பெரிய பெரிய கோதுமை மா மில்களுக்கெல்லாம் சப்ளை செய்வதைப் பார்ப்போம். அதன் விளைவுகளின் பயனையும் ஆராய்வோம். அரசாங்கம் கண்ட்ரோல் விலையில் அவர்களுக்கு விற்கிறது; அவர்களுக்குக் கொடுக்கப்படுவது இறக்குமதியான கோதுமை, ஓபன் மார்க்கெட்டில் அவர்கள் வாங்கவில்லை. அவர்களுக்கு சப்ளை செய்யும்போது விலை நிர்ணயிக்கப்படுகிறது. மைதா, ஆடா, சோஜி, ரவா இவற்றையெல்லாம், நிர்ணயித்த விலைக்கு விற்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இறக்குமதியான கோதுமையைக் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் விற்கும்போது இரண்டு மடங்கு அதிகமான விலைக்கு விற்கிறார்கள். வாங்கியவர்களுக்குத் தெரியும் அவர்கள் அறிவார்கள். மில்காரர்கட்கு கொடுக்கும்போது விலை நிர்ணயம் இருக்கிறது. ஆனால், அவர்கள் விற்பதோ கண்ட்ரோல் விலைக்கு இல்லை. அப்படிக் கட்டாயப்படுத்த, கண்ட்ரோல் விலைக்குத்தான் விற்கவேண்டும் என்று கட்டாயப் படுத்த அரசாங்கம் தவறி விட்டிருக்கிறது. அப்படி அவர்கள் விற்றபோது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தவறிவிட்டது. கொஞ்சம் கஷ்டம் வந்த பிறகு, நாங்களே கண்ட்ரோல் பண்ணி விற்கப் போகிறோம் என்று முன் வந்தது. அந்தப் பெரிய மில்காரர்கள் சர்க்காரிடம் தூது வந்தனர். அதன் பிறகு நமது அரசாங்கம் அந்த மில்காரர்கள் மூன்றில் ஒரு பங்கைத் தங்கள் இஷ்டம் போல விற்கலாம், அதாவது 66-2/3 பாகத்தை ஃபிக்சட் ப்ரைஸுக்கு அரசாங்கம் குறிப்பிடுபவர்கட்கு விற்கவேண்டும் பாக்கி 33-1/3 பங்கை தங்கள் இஷ்டம்போல் விற்கலாம் என்ற முறையைக் கொண்டுவந்தது. அந்த வகையில் அவர்களுக்கு சர்க்கார் நெகிழ்ந்து கொடுத்துவிட்டது. ரவா, சோஜி, ஆடா போன்றவைகளைத் தயாரிப்பதற்குக் கோதுமையை சர்க்காரே வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து



23rd October 1964] [திரு. சா. கணேசன்]

கொடுத்தது. ஆனால் அவை நிர்ணயித்த விலைக்கு விற்கப்படவில்லை. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன என்பதை நாம் நன்றாகக் கவனிக்கவேண்டும். ஒரு சிலருக்குமட்டும் ஏகபோக உரிமை. மற்றவர்கள் சின்னச் சின்ன ஹல்லர்களை வைத்துக் கொண்டு, தனக்குத் தானே வேலை கொடுத்துக் கொண்டிருக்கக் கூடிய சிறிய மில்காரர்களுக்கு எவ்வித வசதியையும் சர்க்கார் செய்து கொடுக்கவில்லை. பெரிய பெரிய மில்கள் வைத்து, விரல் விட்டு எண்ணக் கூடியவர்களுக்கு கொள்ளை அடிக்கச் சந்தர்ப்பம், வாய்ப்பு, வசதி, ஏற்படக்கூடாது என்பதுதான் எங்கள் நோக்கம். எல்லாம் பரவலாக வந்துவிட்டால் ஏகபோக உரிமை இல்லாமல் இருந்தால் தவறு நடக்காமல் செய்யலாம். அந்த நிலை இல்லாமல், குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் பர்மிட், லைசென்ஸ் கொடுத்ததுதான் இந்த நிலைமைக்குக் காரணம் என்பதை மறந்து விடப்படாது, மறுத்து விடவும் முடியாது.

இதற்கு எல்லாம் பரிகாரம் என்ன என்று கனம் முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். சொல்லுகிறேன் இனி சரியான பரிகாரத்தை முதலில் உணவுக் கட்டுப்பாட்டை எடுக்க வேண்டும். ஆங்காங்கே நம் மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு செல்வதைத் தடை செய்ய வேண்டும் (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது கண்ட்ரோல் இல்லையா?) நேரிடையான டிக்ஷனரி மீனிங் படி பொருள் அதுதான். ஆனால் நான் சொல்லுவது தடை அதாவது பாதுகாப்பு. இங்கே நானும் என் தம்பியும் பரிமாறிக் கொள்ளவேண்டும் என்றால் அதற்கொரு முட்டுக்கட்டை வேண்டாம் என்பதுதான். வெளி மாநிலங்களுக்கு அனுப்ப வேண்டும் என்றால் சர்க்கார் கொள்முதல் செய்து, அரசாங்கத்திற்கு அரசாங்கம் அனுப்பலாம்; ஏற்றுகொள்ளுகிறோம். ஆனால் காரைக்குடி நெல்லை பக்கத்து மதுரைக்கு எடுத்துச் செல்லத்தடை விதிக்கக் கூடாது; என்னிடத்தில் 50 மூட்டைகள் இருந்தால், அதில் 4 மூட்டை வேண்டியவர் யாருக்கோ விற்பதானால் அதற்கு என்ன தடை? எல்லாவற்றிற்கும் மேலாக ரேஷன் கார்டு கொண்டு வருகிறோம் என்கிறார்கள். எனக்கு அதைத் தடுக்கும் ஆற்றலில்லை. ஆனால் அது தீங்கையே விளைவிக்கும் என்று சொல்லாமல் இருக்க முடியாது. இந்த யோசனையை, காங்கிரஸ் ஆட்சிக்கு கெட்ட பெயர் வேண்டாம் என்ற இருதய சுத்தியோடு சொல்லுகிறோமே அல்லாமல், அவர்களுக்குக் கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்க வேண்டும், அதை எங்களுக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ளவேண்டும் என்ற இழிந்த மனோபாவம் இல்லை. பொதுவாக தேசம் செம்மையாக இருக்கவேண்டும். தேசத்தைப் பொறுத்தவரை காங்கிரஸ்காரர்கள் வேறு, நாங்கள் வேறு என்ற உணர்ச்சியில் பேசவில்லை. எல்லோரும் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், இந்த மாநிலத்திற்குத் தீமை வராமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை இவ்வளவு அழுத்தமாகச் சொல்லுகிறேன்.

அதற்கும் மேலாக உணவுப் பண்டங்கள் உற்பத்தி செய்கின்ற உழவனுக்கு எவ்வித நிர்ப்பந்தமும் இருக்கப்படாது. தீர்வைகள், வரிகள் கணிசமாகக் குறைக்கப்பட வேண்டும். உணவுப் பயிர்

பயிரிடுவதைத் தடை செய்து, பணப் பயிர் உற்பத்தி செய்ய வேண்டும் என்று கட்டாயம் செய்யக் கூடாது. உணவுப் பயிர் உற்பத்தி செய்தால் தண்டத் தீர்வை போடுவேன் என்று பயமுறுத்தக் கூடாது. அப்படி உழவர்களைப் பயமுறுத்தி, அவர்களிடம் அச்சத்தையும், நடுக்கத்தையும் ஊட்டாமல் இருக்க வேண்டும். தனக்கு மிஞ்சித்தான் தானம் என்பது போல, நம் தேவையைப் பூர்த்தி செய்து கொண்ட பிறகுதான் ஏற்றுமதியை பற்றி நினைக்க வேண்டும். அதை விட்டு, இப்பொழுது சர்க்கரையாக உற்பத்தி செய்து அமெரிக்காவிற்கு அனுப்புகிறோம் என்கிறார்கள். இங்கே அரிசிப் பஞ்சம். நாம் சர்க்கரை ஏற்றுமதி செய்யத் துடிக்கிறோம். ஏற்றுமதி செய்வதென்றால், ஏற்றுமதி செய்ய ஆபீசர்கள், இறக்குமதி செய்ய ஆபீசர்கள் என்று இம்மாதிரி டிபார்ட்மெண்டுகள்தான் அதிகமாகின்றனவே தவிர, தேவையற்ற செலவுகள் குறைக்கப்படவில்லை. சர்க்கரை விலை இங்கே என்னவாக இருக்கிறது? ஒரு கிலோ ரூ. 1.22 பைசாவாக இருக்கிறது. அமெரிக்காவில் விற்கும்போது எல்லாச் செலவுகளையும் ஏற்றுக்கொண்டு போக்குவரத்துச் செலவு, ஆபீசர்கள் சம்பளம், படி, பிரயாணப்படி முதலியவைகள் எல்லாம் நாம் பொறுத்துக்கொண்டு அங்கே 45 பைசா அல்லது 50 பைசாவிற்கு விற்கிறோம். நாலு ஐந்து பைசா முன்னே பின்னே இருக்கலாம். ஆனால் அதிக பட்சம் 50 காசுக்கு மேல் விற்க முடியாது. இங்கே நமக்கு ரூ. 1.22-க்கு விற்றுக்கொண்டு அங்கே கொண்டுபோய் எல்லாச் செலவும் உட்பட சுமார் 50 காசுக்கு விற்கவேண்டிய நிலைமையை ஏற்படுத்துவது தேசத்திற்கு நன்மையைப் பயக்குமா. அதிலேயேகூட ஏற்றுமதி, இறக்குமதி ஆபீசர்கள் செய்யும் செலவுகள், அவர்கள் உபயோகிக்கும் ஜீப்புகள், அதனால் தேய்மானம் ஏற்படும் ரோடுகள், இவற்றையெல்லாம் கழித்துக் கணக்குப் போட்டுப் பார்த்தால், முழு சைஃபர்தான் மிஞ்சி நிற்கும். எந்தப் பொருளாதாரத் தத்துவத்தின் அடிப்படையில் பார்த்தாலும் இந்த முறை தேசத்திற்குத் தீமையைத்தான் கொடுக்கும் என்று சத்தியமாக உணருகிறதனால் தான் இந்த உண்மையை எடுத்துச் சொல்லுகிறோம். இதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். விருப்பு வெறுப்பற்ற முறையில் விஷயத்தை அணுகி, பிடிவாதத்தை விட்டு நன்மையைக் கைக்கொள்ளவும் வேண்டும்.

சமீபத்தில் டிங்கி காய்ச்சல் வந்து பல பகுதிகளில் மக்களை வாட்டியெடுத்தது. வேறு எந்த நாடாகவாவது இருக்குமானால், உடனே இதற்கென்று தக்கபடி ஒரு குழுவைக் கூட்டி நோயின் மூலத்தை ஆராய்ந்து உடனே தக்கப்படி தடுப்பு நடவடிக்கைகளெல்லாம் செய்திருப்பார்கள். பல்வேறு டாக்டர்களைக் கூப்பிட்டு, ஒரு மாநாடே நடத்தி, இந்தக் காய்ச்சல் எப்படி வந்தது, இதற்குக் காரணமான கிருமி எது, கொசுவினால் வந்ததா, தொத்து நோய் (கண்டேஜியஸ் டிஸீஸ்) போல ஏற்பட்டதா என்றெல்லாம் கணித்துப் பார்த்து, அதற்கு வேண்டிய மருந்துவகைகளைத் தயாரித்து, அதைப் பரவவொட்டாமல் தடுத்திருப்பார்கள். அதைப் போன்று நமது அரசாங்கமும் அக்கறை எடுத்துக்கொண்



டிருக்க வேண்டும். அப்படிச் செம்மையாகச் செய்ததாக நான் கருதவில்லை. டிங்கி காய்ச்சல் நம்மிடம் கருணை காட்டி என்னமோ உயிரை வாங்காமல் விட்டுவிட்டுப் போய்விட்டது. ஆனால் வருகிற போதே ப்ளேக் நோய் போல வந்திருந்தால் என்ன கதியாகியிருக்கும்? ஆண்டவன் கிருபையினாலே, ஆளைக் கொல்லாமல் ஏதோ மூட்டுக்களில் வலியை ஏற்படுத்திவிட்டு இருபது நாட்களில் போய்விட்டது, "பாவம்! நாம் ஏன் இவர்களைக் கொல்ல வேண்டும்" என்ற பரிவு அக்காய்ச்சலுக்கு இருந்திருக்கிறது போலும் அல்லாமல் பெருவாரியாக மக்களைக் கொல்லும் நிலையில் அந்தக் காய்ச்சல் வந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? ஒரு கால் ஜனத்தொகை குறையவேண்டும் என்கிற லட்சியம் ஒரு அளவு பூர்த்தியாகியிருக்கலாம்! வேறு எந்த வகையாலும் நன்மை ஏற்பட்டிருக்காது. இது அரசாங்கம் செய்யத் தவறியதாகும்.

ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்கு—முதல் அமைச்சர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர்களுக்கும்—எதிர்க்கட்சியிலுள்ளவர்களைக் கிண்டல் செய்வதிலே ஒரு திருப்தி. எங்களைக் கிண்டல் செய்வதிலே அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதற்காக நாங்கள் வருத்தப்படவில்லை. நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறோம். "எல்லோரும் இன்புற்றிருக்க. நினைப்பதுவே, அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்ற பண்பாட்டில் ஊறிய தமிழ்ச்சந்ததியினரே நாங்களும், எங்களைக் கிண்டல் செய்வதன் மூலம் அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுமானால், அதிலே எங்களுக்கும் திருப்திதான். என்றாலும், அது நாகரிகம் இல்லை என்று மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். உணர்ச்சியோடு நாங்கள் பேசியிருக்கலாம். அல்லது வேடிக்கையாகவும் நாங்கள் பேசியிருக்கலாம். ஆனால், எங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக நாங்கள் எதையும் செய்யவில்லை. ஒரு குறிப்பிட்ட விஷயம் தீமை பயக்கக்கூடியது, அது நல்லதல்ல என்று தோன்றியதை மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் எடுத்துச் சொல்கிறோம். வாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும், நாங்கள் எண்ணுவது நியாயம் என்பதை நாங்கள் நிலை நாட்ட முடியும். ஆனால், இங்கே மைனாரிடி, மெஜாரிடி அடிப்படையில் எங்கள் வாதத்தின் உண்மையை நிலை நாட்ட முடியாது. முதல் அமைச்சர் அவர்கள் அன்று சொன்னார்கள் இங்கே எதிர்க் கட்சியினரும் ஆளும் கட்சியினரும் மிக சௌஜன்யமாகவும், சுமுகமாகவும், பண்போடும், நாகரிகத்தோடும் நடந்து கொள்ளுகிறார்கள் என்று. அப்படியிருக்கும் போது எங்களைக் கிண்டல் செய்துகொண்டிருப்பதில் உருப்படியான பயன் என்னவோ?

(கனம் சபாநாயகர் தலைமை.)

இராணிப்பேட்டைத் தோல் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைக் குறித்து அவசரத் தீர்மானம் கொண்டுவந்த போது, "தொழிலாளர்கள் மீது சுதந்திரக் கட்சித் தலைவருக்கே இவ்வளவு அக்கறை இருக்கிறதே!" என்று ஆளுங்கட்சியில் உள்ளவர்கள், கனம் மந்திரி அவர்களே சொன்னால் அதை என்னவென்று

நான் சொல்வது? அப்படியானால், சுதந்திரக் கட்சித் தலைவருக்கு இல்லாத அக்கறை மற்றவர்களுக்கு இருக்கிறது என்று சொல்கிறார்களா? மற்றவர்களைவிட சுதந்திரக் கட்சிக்கும், சுதந்திரக் கட்சித் தலைவனுக்கும் தொழிலாளி சேமநலத்தில் மிகவும் அக்கறை உண்டு என்று கண்ணியமான முறையில் ஆனால் உறுதியாக நான் பதில் சொல்ல முயலுகிறேன். எங்கள் கட்சியை 'முதலாளிக் கட்சி' என்று கிண்டல் செய்யலாம். நாங்கள் சொல்வதெல்லாம் முதலாளிகளுக்கு விரோதமாக இருப்பதாக முதலாளிகள் கூறுகிறார்கள். ஆகவேதான், முதலாளிகள் எங்கள் கட்சிக்கு உதவி செய்வது இல்லை; ஆளுங் கட்சிக்கு உதவி செய்கிறார்கள். இருக்கும் நிலைமையைப் பார்த்தால் எங்கே முதலாளிகள் குவிந்திருக்கிறார்கள்; ஏன் குவிந்திருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளியத் தெரியும், எனவே வீணாகக் கிண்டல் செய்வது நியாயம் அல்ல; விஷய அடிப்படையில் பேசுவதுதான் தரமான முறை என்று மட்டும் ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில் மக்கள் பிரதிநிதிகள் 64 பேரைக் கிண்டல் செய்யும் வகையில் ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. எங்களைக் கிண்டல் செய்ததாக நாங்கள் உணருகிறோம். எங்கள் மனத்தில் தைக்கிறதை வைத்துத்தானே நாங்கள் சொல்லவேண்டும்? மற்றவர்கள் பார்த்து என்ன நினைக்கிறார்கள் என்பது மட்டும் அளவிடும் கருவி அல்ல என்பதைத் தருக்க நூல் வல்லவர்கள் அதாவது, அளவை நூல் வல்லவர்கள் நன்றாக அறிவார்கள். அமைச்சர்களும் நன்றாக அறிவார்கள். அச் செயல் எங்களைப் புண்படுத்தியது. இதைச் சொன்ன நேரத்தில் கனம் சபாநாயகர் அவர்கள் ஒரு தீர்ப்புக் கொடுத்தார்கள். அந்தத் தீர்ப்பை மனமாற ஏற்றுக் கொண்டு அதற்குப் பணிகிறோம். "உணர்ச்சிகளைப் புண்படுத்தியிருக்குமானால், அதை விசாரிக்கிறோம்" என்று ஆட்சியிலே இருக்கிறவர்கள் சொல்லியிருந்தால் அது பண்பாடு உள்ளதாக ஆகும் அல்லவா? என்று உங்கள் மூலமாக நான் சர்க்காரைக் கேட்கிறேன்.

முதல் அமைச்சர் அவர்களோ, மற்ற அமைச்சர்களோ சுற்றுப் பயணம் போகும்போது, ஏதோ ஓரிடத்திலுள்ள மக்கள் தங்களுடைய அதிருப்தியைத் தெரிவிப்பதற்கு கறுப்புக் கொடியைத் தூக்கி வரப்போகிறார்கள் என்று தெரிந்தவுடனேயே, அமைச்சர்கள் அந்த ஊருக்குப் போவதற்கு முன்பே, கறுப்புக் கொடி வைத்திருப்பவர்களையெல்லாம் போலீஸ் ஸ்டேஷனில் வைத்து, பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். ஆனால், எங்களைப் போன்ற "64 மக்கட் பிரதிநிதிகளை வேண்டுமென்றே, மனமார எண்ணியே புண்படுத்தவேண்டும் என்று செய்த காரியம் சரிதான்". என்று ஆட்சியாளர் கருதுகிறார்கள். நாங்கள் அறவழி என்று கருதுகிற முறையிலே ஒன்றைச் செய்தோம். அதை "இழிவுபடுத்துவது பண்பாடல்ல" என்று கூட ஆட்சித் துறையில் இருக்கிறவர்கள் சொல்ல மனம் கொள்ள





மாட்டேன் என்றால் அதைப்பற்றி நான் என்னத்தைச் சொல்வேன்? இது நியாயமா? தர்மமா? பண்பாடு உடையதா? கேவலம் நாகரிகந்தானாகுமா? என்று தான் நான் கேட்க விரும்புகிறேன். இதையெல்லாம் இனியாவது மனத்திலே கொள்ள வேண்டும்.

இப்படித்தான் அர்ஜுனன் கேசும். அர்ஜுனன் குற்றவாளி அல்ல', என்றோ 'சிறையிலிருந்து வந்தார்' என்றோ, கெட்டவர்' என்றோ, 'நல்லவர்' என்றோ நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. எங்களைப் பொறுத்தவரையில், இதை நீதித் துறை விசாரணைக்கு விடவேண்டும், குறைந்தபட்சம் ஜில்லா ஜட்ஜ் பதவிக்குக் குறைவில்லாத ஒரு நீதி அதிகாரியை வைத்து இதை விசாரித்து, நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றுதான் சொன்னோம். இது போன்ற விசாரணை வேண்டுமென்று அந்தக் காலத்திலே நாமே சொன்னதுதான். காங்கிரஸ்காரர்களாக இருந்தபோது, வெள்ளைக்காரன் ஆண்டகாலத்தில், இதே விஞ்ஞாபனத்தை நாம் அந்தக் காலத்தில் விடுத்தோம். அவர்களும் பல விஷயங்களில் இதற்கு உடன்பட்டார்கள். அப்படிக் கோரிக்கைகளை விடுத்த சபையின் உறுப்பினர்களே இன்று ஆட்சிப் பீடத்தில் இருக்கும் போது, இந்த நியாயமான, மிகக் குறைந்தபட்சமான; எந்த விதமான குற்றம்குறையும் பூராத எந்தவிதமான பழியும் சுமத்தாத ஒரு கோரிக்கையை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்றால் இது நியாயமா? அங்கிருக்கிற அத்தனை வக்கீல்களும் சேர்ந்த கோவை வக்கீல் சங்கம் ஒரு தீர்மானம் போட்டிருக்கிறது, "ஹைகோர்ட் ஜட்ஜ் ஒருவரைக் கொண்டு இதை விசாரிக்கவேண்டுமென்று" அப்படியானால், அத்தனை வழக்கறிஞர்களும் சேர்ந்த ஒரு சங்கமும் நான் சொன்னதை உண்மை என்று ஒப்புக்கொண்டு அதனுடைய வன்மையை நன்றாக உணர்ந்து ஒரு படி மேலே போய், ஹைகோர்ட் ஜட்ஜ் லெவலிலே உள்ளவரைக் கொண்டுதான் விசாரிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை அரசாங்கம் கவனிக்கவில்லையென்றால் இவர்களைப் பற்றி என்ன சொல்வது? இப்படியெல்லாம், எதைச் சொன்னாலும் கவனிக்க மாட்டேன் என்கிறார்கள். சொல்கிற விஷயம் என்ன என்று பார்க்காமல் சொல்வது யார் என்று கஜக்கோல் பிடித்து அளந்தால், "நாங்கள் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை உடையவர்கள்; இந்த அரசாங்கத்தை நாங்கள் ஆதரிக்கிறோம்" என்று சொல்ல எங்களுக்கு எப்படி மனம் வரும்? ஆகவே, எதிர்க் கட்சியைச் சார்ந்த அன்பர் திரு. மதியழகன் அவர்கள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மனப்பூர்வமாக ஆதரித்து, என்னுடைய உரையை நிறைவு செய்துகொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஜே. மாதா கவுடர்**: கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் கொண்டுவந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நேற்றையதினம், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் பேசும்போது, திரு. மதியழகன் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்திற்கு ஆட்சியிலே இருக்கக்கூடியவர்களுடைய கொள்கை என்ன, அந்தக் கொள்கையை எப்படிக் கடைப்பிடித்து இதுவரையிலும் நடந்து வந்திருக்கிறோம் என்பதை நன்றாகப் புரியும்படியாகத் தெளிவாக இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள்.

இன்றைக்கு நண்பர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் இந்த விவாதத்தை ஆரம்பித்து வைக்கும்போது, 'மந்திரிசபை மீது நம்பிக்கை உண்டு' என்ற கருத்திலேயே பேசினார்கள். இந்த மந்திரி சபை மீது நம்பிக்கை இல்லை என்ற கருத்தை அவர் கொண்டிருப்பாரேயானால், அவரும் 'நம்பிக்கை இல்லை' என்ற தீர்மானத்தை இந்த மன்றத்திலே கொடுத்திருப்பார்கள். ஆனால், அவர் கொடுக்கவில்லை. நண்பர் திரு. மதியழகன் அவர்கள், 'நம்பிக்கை இல்லை' என்று தீர்மானம் கொடுத்ததிலே திரு. கலியாணசுந்தரம் அவர்களுக்கு அபிப்பிராய வித்தியாசம் உண்டு. திராவிட முன்னேற்றக் கட்சியினை நம்பி, நாமும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே சிக்கிக்கொண்டால் என்ன ஆவது? என்று யோசித்திருக்க வேண்டும். திரு. கலியாணசுந்தரம் அவர்களுக்குப் பழைய ஞாபகம் இருக்கிறது. 1957-ஆம் வருஷம் அக்டோபர் மாதத்தில் இந்த மன்றத்தில் நடந்த அந்தச் சம்பவத்தை நண்பர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவர் இந்த மன்றத்திலே மந்திரி சபை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்தபோது, முதலிலே எல்லோரும் தன்னை ஆதரிப்பார்கள் என்ற முறையிலே பேசிக்கொண்டிருந்தார். அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. அண்ணாதுரை அவர்கள் பேசிய பேச்சு, ஆரம்பத்தில் திரு. கலியாணசுந்தரம் அவர்களுடைய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதைப் போலத்தான் இருந்தது. அப்படித்தான் திரு. கலியாணசுந்தரம் அவர்களும் நம்பிக்கொண்டிருந்தார்கள். ஆனால், கடைசி நேரத்தில் வாக்கெடுக்கும்போது, இந்த மன்றத்திலேயே வைத்து, திரு. கலியாணசுந்தரம் அவர்களுடைய காலை வாரிவிடும் வகையில், திரு. அண்ணாதுரை அவர்கள் இந்த மன்றத்தைவிட்டே வெளியேறிவிட்டார். திரு. அண்ணாதுரை அவர்கள் தம் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் எல்லோரையும் தம்முடன் வெளியிலே அழைத்துச் சென்றுவிட்டார்கள். அதைத் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் மனத்திலே வைத்துத்தான், 'நம்பிக்கை இல்லை' என்ற வார்த்தைகளை இங்கே குறிப்பிடாமல் 'கண்டிக்கிறேன்' என்ற அளவிலே பேசியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் வந்திருப்பதைப் பார்த்து, அவர் உடனே முடிவு செய்துவிடவில்லை. அன்றைக்கு அவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள், யார் யார், எந்த எந்தக் கட்சியினர் எப்படி எப்படி நடந்துகொண்டார்கள் என்பதை அவர் புத்திசாலித்தனமாக, நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் நேற்றைய தினம் இன்றைய தினம் நடந்துக்கொண்டிருக்கிற



விவாதம் நாளைய தினம் எவ்வாறு நடக்கப் போகிறது என்று பார்க்க வேண்டும். இதில் அவர்களுக்குள் எத்தகைய ஒற்றுமை நிலவப் போகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். நிச்சயமாக எனக்குத் தெரியும் திரு. மதியழகன் கொண்டுவந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது ஓட்டு எடுக்கிறபோது திரு. கலியாணசுந்தரம் அவர்கள் வெளியே போய்விடுவார்கள். அவ்வாறு போகத்தான் வேண்டும். முன்பு திரு. கலியாணசுந்தரம் அவர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது திரு. அண்ணாத்துரை அவர்கள் அப்படித்தான் வெளியே போய் விட்டார்கள் தன்னுடைய கட்சி உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு. திரு. கலியாணசுந்தரம் அவர்களும் இன்றைக்கு அப்படிச் செல்வதுதான் முறை. இது டிட் ஃபார் டேட். திரு. மதியழகன் அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுக்கும்போதே அதற்கு ஒரு பெரிய முட்டுக்கட்டை இருந்தது. பத்திரிகையில் பார்த்தோம். எங்கள் கட்சியில் அம்மாதிரி ஒரு தீர்மானத்தை மதியழகன் அவர்கள் கொடுப்பதற்கு நாங்கள் அனுமதிக்கவில்லை என்று அவர்கள் கட்சிக் கூட்டத்திலேயே விவாதம் எழுந்ததாகப் பத்திரிகையில் வந்தது. "எங்கள் கட்சித் தலைவர் சிறையில் இருக்கும்போது, அண்ணா அவர்கள் இல்லாதபோது எப்படி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பிரேரேபிக்கலாம் என்பதாக அன்பில் தர்மலிங்கம் அவர்கள் அறிக்கை கொடுத்திருந்தார்கள். அவர்தான் சட்டசபை திராவிட முன்னேற்றக் கட்சியின் குறடா. (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்; அவர்கள் சண்டையைப் பற்றி நமக்கு என்ன?) நான் சொல்ல வந்தது என்னவென்றால் இப்படி அவர்களுக்குள்ளேயே சண்டை இருக்கும்போது அவர்களுக்குள் ஒரு ஒற்றுமை இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி அவர்களே தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர, காங்கிரஸ் மந்திரி சபையின் மீது நம்பிக்கை இல்லை என்கிற காரணத்திற்காக அல்ல, உணவுப் பிரச்சினை சம்பந்தமாக நம்பிக்கை யில்லையென்றால் யார் மீது நம்பிக்கை இல்லை. உணவு அமைச்சர் மீதா? முதலமைச்சர் மீதா? இதில் அவர்களுக்குள்ளேயே தகராறு. கடைசி நேரத்தில் மந்திரி சபைமீது என்று போட்டுவிட்டார்கள். நாளை இது எப்படி மாறும் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

அடுத்து பட்ஜெட் உரையில் ஸ்டேட் டிரேடிங் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்களே, என்று சொன்னார்கள். அதற்கு விளக்கம் சொல்லாமல் அப்படியே விட்டுவிட்டார்கள். ஸ்டேட் டிரேடிங் வேண்டுமா, வேண்டாமா? இவர்கள் கருத்து என்ன? எதையும் அவர்கள் விளக்கவில்லை அவர்கள் அபிப்பிராயம் ஸ்டேட் ட்ரேடிங் கொண்டுவர வேண்டும். சர்க்காரே உணவு தான்ய விநியோகத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். மக்களுக்கு உரிமை கொடுக்கக் கூடாது என்றிருக்கலாம். அதே நேரத்தில் நாங்கள்

[திரு. ஜெ. மாதா கவுடர்] [23rd October 1964

ஸ்டேட் டிரேடிங்கை எடுக்கவில்லை. எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இன்றைக்கு அந்தந்த மாவட்டத்திலிருக்கக்கூடிய கலக்டர்கள் சர்க்கார் கஜானாவிலிருக்கக்கூடிய பணத்தை எடுத்து வியாபாரிகளுக்குக் கொடுத்து நெல் கொள்முதல் செய்து லைசென்ஸ் வியாபாரிகளுக்குக் கொடுத்து வினியோகம் செய்யச் சொல்லுகிறார்களே அல்லாமல் நாங்கள் வியாபாரம் செய்யவில்லை என்று திரு. கலியாணசுந்தரம் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் அவர் ஆரம்பத்திலேயே ஒன்றைக் குறிப்பிட்டு விட்டார். விவாத ஆரம்பத்திலேயே தன் கொள்கை வேறு, சுதந்திராக் கட்சிக் கொள்கை வேறு, தி.மு.க. கொள்கை வேறு என்று நன்றாகப் பிரித்து காண்பித்தார்கள். நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இவர் கொள்கை எல்லாவற்றையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றிருக்கலாம். சுதந்திராக் கட்சியின் வாதம் என்ன? அரசாங்கத்தலையீடு எந்த விஷயத்திலும் இருக்கக் கூடாது. யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்பதுதானே. திரு. கலியாண சுந்தரம் அவர்களே சொன்னார்கள், தி.மு.க.-வைப் பொறுத்தவரையில் கொள்கை என்பது ஒன்றுமே இல்லை. எப்படியாவது ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும் என்பதுதான் என்று குற்றம் சாட்டிவிட்டார்கள். அதைப்பற்றி மகிழ்ச்சியடைகிறேன். இத்தகைய எதிர்க்கட்சிகளைப் பார்த்து அமைச்சர் அவர்கள் ஒரு தரமான எதிர்க்கட்சி அமையவில்லை என்பதிலே என்ன தவறு? அதை நாங்கள் சொல்லவில்லையென்றாலும் மக்களுக்குத் தெரியாதா? சர்க்காரை எதிர்ப்பதிலே இந்த ஒரு நாள் ஒற்றுமைகூட அவர்களிடத்தில் இல்லாத போது அமைச்சர் அவர்கள் சொன்னதாலே என்ன தப்பு இருக்கிறது. முரண்பட்ட எதிர்க்கட்சியாக இருப்பதினால்தான் மக்கள் காங்கிரஸ் கட்சியை ஆட்சி பீடத்தில் வைத்திருக்கிறார்கள். இந்த மந்திரிசபையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த எதிர்க்கட்சிகளின்மீது மக்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை அடுத்து வரும் தேர்தலிலே நாம் பார்த்துக் கொள்ளலாம். தேர்தலைக் கண்டு யார் பயப்படுகிறார்கள். 1952 தேர்தலைப் பார்க்கவில்லையா? 1957 தேர்தலைப் பார்க்கவில்லையா? 1962 தேர்தலைத்தான் பார்க்கவில்லையா? காங்கிரஸ் ஆட்சி ஆறு அவுன்ஸ் ஆட்சி என்றால் தி.மு.க. ஆட்சியில் அதுகூடக் கிடைக்காது என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். 1957-ல் என்னமோ அழுகு பொருள் தட்டுப்பாட்டை வைத்து கார்ப்பரேஷனை தி.மு.க. பிடித்து விட்டார்கள். இன்றைய தினம் கார்ப்பரேஷன் ஆட்சி எவ்வாறு நடக்கின்றது என்று மக்கள் உணர்ந்து கொள்ளாமலா இருக்கிறார்கள்? அரிசி பற்றாக்குறை காரணமாக நீண்ட க்யூ வரிசையில் மக்கள் நிற்கிறார்கள் என்றால் க்யூ வரிசையில்
10-30 நின்றாவது காங்கிரஸ் ஆட்சியில் அரிசி கிடைக்கும். தி.மு.க. வந்தால் அதுவும்கூட கிடைக்காது என்கிற உண்மை எல்லா மக்களுக்கும் தெரியும்.



23rd October 1964] [திரு. ஜெ. மாதா கவுடர்]

உணவுப் பிரச்சினையைப் பற்றி நம்பிக்கை இல்லாத் தீர்மானம் எங்கள் பேரில் வரட்டும். ஆனால் உணவுப் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்று யாராவது எதிர்க்கட்சியில் ஒரு தீர்மானம் போட்டிருக்கிறீர்களா? கிளர்ச்சி செய்கிறீர்கள், ஆர்ப்பாட்டம் செய்கிறீர்கள், சிறைக்குச் செல்கிறீர்கள். சர்க்காருக்கு எதிராக என்னென்ன நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமோ அத்தனையிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள். மக்களுக்கு இந்தப் பிரச்னையிலே என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி உங்கள் மகாநாட்டிலே ஏதாவது தீர்மானம் போட்டிருக்கிறீர்களா? குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஏதாவது கூறியிருக்கிறார்களா? (திரு. அரங்கண்ணல் அவர்கள் பத்திரிகையைப் பாருங்கள் என்றார்.)

* * * *

கனம் சபாநாயகர் அவர்களே நேற்று நண்பர் ப. உ. சண்முகம் அவர்கள் பேசும்போது ஒரு குறிப்பை எடுத்துச் சொன்னார்கள். 1961-62-ம் வருஷ பட்ஜெட் புள்ளி விவரத்தைப் பற்றிச் சொன்னார்கள். அந்தப் புள்ளி விவரம் சரியா இல்லையா என்பதை அன்றைக்கே எடுத்துச் சொல்லியிருக்கலாம். அவர் மிகவும் ஆவேசமாகப் பேசினார். இந்தப் புள்ளி விவரக் கணக்கைக் கொடுக்கும்போது தாங்களும் இந்த மன்றத்தில் இருந்தீர்கள் என்பதைத் தங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1961-ம் வருஷத்தில் அமைச்சர் அவர்கள் இந்தப் புள்ளி விவரத்தை எடுத்துச் சொல்லியபோதே அது தவறு என்று வாதிட்டுச் சொல்லியிருந்தால் அதிலே நியாயம் இருக்கலாம். ஆனால் இன்று உணவுப் பிரச்சினையிலே ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடி நிலையிலே, எப்படியாவது இதை வைத்து மக்களிடத்திலே சொல்லி, கணக்கு தவறு, அரசாங்கம் ஏமாற்றுகிறது என்று பேசுவதற்காக, வாதத்திற்காகச் சொல்லியிருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை. 'இந்தச் சர்க்காருடைய எந்தக் கொள்கையிலும் எங்களுக்கு நம்பிக்கை இல்லை' என்று ஒரு அங்கத்தினர் பேசினார். அதற்காகவா நீங்கள் எதிர்க்கட்சியாக இருக்கிறீர்கள். மக்களுக்கு இது பாதகம் விளைவிக்கும், இது சாதகமாக இருக்கிறது என்ற பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய அளவிலே பேசுகின்ற எதிர்க்கட்சியாக இருந்தால் அது விரும்பத் தக்கது. இன்றைக்கு இருக்கக்கூடிய சர்க்காரிடத்தில் எந்தக் கொள்கையும் இல்லையென்று நீங்கள் சொன்னால், இங்கு வரக்கூடியவர்கள் எந்தக் கொள்கையிலே வந்து சர்க்காரை அமைக்க முடியும்? இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? உங்களுக்கு ஏதாவது கொள்கை என்று இருந்தால் அல்லவா? கொள்கையே இல்லாத நீங்கள் கொள்கை அடிப்படையில் நடந்து வருகிற ஆட்சியைப் பார்த்து 'கொள்கை இல்லாதவர்கள், ஆகவே நம்பிக்கை இல்லை' என்று சொன்னால் வெளியிலே சிரிக்க மாட்டார்களா? தலை குனிய வேண்டாமா? இதற்காக நாம் தலை குனிய வேண்டாமா?

(மணி அடிக்கப்பட்டது.)

* Expunged as ordered by the Chair

**திரு. பி. வி. சீராமுலு:** கனம் சபாநாயகர் அவர்களே, எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. மதியழகன் அவர்கள் கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரிக்கும் முகத்தான் என்னுடைய கருத்தைச் சொல்ல முன் வருகிறேன்.

**கனம் சபாநாயகர்:** ஒரு வேண்டுகோள். விஷயம் இல்லாது 'வெட்கப்படுகிறேன், தலை குனிகிறேன்' என்று வெறும் வார்த்தைகளை உபயோகிக்க வேண்டாம்.

**திரு. பி. வி. சீராமுலு:** அந்த எண்ணமும் கொள்கையும் எம்மிடத்திலே என்றும் இல்லை.

**கனம் சபாநாயகர்:** நான் எல்லோரையும் கேட்டுக் கொள்வது வெறும் வெத்து வேட்டுகளாக வார்த்தைகளைப் போட்டுக் குழப்ப வேண்டாம்.

**திரு. பி. வி. சீராமுலு:** இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கக் கூடிய திட்டங்களின் செயல்கள் எந்த அளவுக்கு பின் தங்கியிருக்கின்றன என்பதைப் பார்க்கவேண்டும். பாசன வசதிகளைச் செய்து கொடுப்பதிலே மிகவும் பின் தங்கியிருக்கிறது. அதோடு மட்டுமல்ல விவசாயத்திலும் மிக மிகப் பின் தங்கியிருக்கிறது. பாசன இலாகாவும், விவசாய இலாகாவும் சம்பந்தம் இல்லாமல் நடந்துக் கொண்டிருக்கின்றன. என்னுடைய பகுதியில் இருக்கும்படியான கே.ஆர்.பி. ரிசர்வாயர் திட்டத்தின் லட்சணத்தைப் பார்த்தாலே இது தெரியும். இந்த அமைச்சரவை வருவதற்கு முன்பு ஆங்கிலேயன் 1942-ம் ஆண்டு 'க்ரோ மோர் புட் காம்பைன்' திட்டத்தை வகுத்து விட்டுச் சென்றான். 1945-ம் ஆண்டு காங்கிரஸ் மந்திரிசபை பதவியேற்றது. ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்தபோது 35 கோடி ரூபாய் செலவு செய்து இந்தத் திட்டத்தை உருவாக்கி நம்முடைய ஆட்சியின் கையில் ஒப்படைத்தார்கள். இப்பொழுது இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. 75 கோடி ரூபாய் செலவு செய்து மக்களுடைய பணத்தை வீணாக்கி விட்டிருக்கிறது. இது லாயக்கான சர்க்காரா என்று கேட்க விரும்புகிறேன். இந்த கே.ஆர்.பி. ரிஸர்வாயர் திட்டம் 1 கோடி 88 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்தின் பயனை 52½ அடி தண்ணீர் நிற்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய குறிக்கோளாக இருந்தது. இப்போது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை நிறைவேற்றுவதற்காக முதலமைச்சராக இருந்த கனம் காமராஜர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திற்கான செலவுக்கு வேண்டிய பணத்தை நமது மாநில சர்க்கார் கடன் கோரி அதற்காக மூன்று சதவிகிதம், நான்கு சதவிகிதம் வட்டியும் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இவ்வளவு செய்தும் யாரோ ஒரு சிறிய அதிகாரி 138 எக்கரா நிலத்தை ஆர்ஜிதம் செய்வதில் காட்டிய அசிரத்தையின் காரணமாக 49½ அடி தண்ணீர்தான் இப்பொழுது நிற்கிறது. இதை ஒரு போகத்





திற்குதான் உபயோகிக்க முடியும் என்று சர்க்கார் பறை சாற்றுகிறது. ஆனால் இரண்டு மூன்று ஆண்டுகளாக நல்ல மழை பெய்தும் விவசாயக் குடிமக்கள் நல்ல முறையில் சாகுபடி செய்து வாழ வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தத் தண்ணீரை இரண்டு போகத்திற்கும் விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். ஆனால் இதன் மூலமாக தற்போது ஒன்பதாயிரம் ஏக்கர் நிலம் சாகுபடி செய்யப்படுகிறது. இரண்டு போகத்திற்கும் தண்ணீர் விட்டிருந்தால் அதிகமாக ஒன்பதாயிரம் ஏக்கர் நிலம் சாகுபடி செய்யப்பட்டிருக்கும். இதன் மூலமாக 60 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைத்திருக்கும். தற்போது அதிகாரிகளை அனுமதிக்காதன் காரணமாக 60 ஆயிரம் ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. யார் அப்பன் வீட்டுப் பணம் இது? இது மட்டுமல்ல, கிட்டத்தட்ட 17 ஆயிரம் ரூபாய் அதிகாரிகளுக்குத் தனியாகச் செலவிடப்படுகிறது. இது யாருடைய பணம்? மக்களுடைய பணம் அல்லவா?

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் யார் அப்பன் வீட்டுச் சொத்து என்று கேட்டால், மற்றவர்களும் உங்கள் அப்பன் வீட்டுச் சொத்தா என்று கேட்கக்கூடும். ஆதலால் அப்பன் வீட்டு சொத்தா அப்பன் வீட்டுப் பணமா என்றெல்லாம் கேட்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. வி. சீராமுலு நாயுடு:** இவ்விதம் உருவாக்கப்பட்ட திட்டத்தை விவசாய அமைச்சர் அவர்களும் உணவு அமைச்சர் அவர்களும் வந்து பார்வையிட்டார்கள். 133 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்யவேண்டும், அது தான் இப்போது அரசாங்கம் உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைப்பற்றி அமைச்சர்களிடத்தில் சொல்லும்போது, பார்க்கலாம் என்று மட்டும் கூறிவிடுகிறார்கள். ஆனால் இன்று வரையிலும் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. இதன் காரணமாக இன்றைக்கு 49½ அடி தண்ணீர் தான் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைக் கொண்டு ஒரு போகம் தான் சாகுபடியாகும். கிட்டத்தட்ட 32½ அடி தண்ணீர் இருக்கும் போது இன்னொரு போகத்திற்கும் தண்ணீர் விட வேண்டும் என்று கேட்டோம். அப்போது 41 அடி தண்ணீர் வருவதற்கான வாய்ப்பும் இருந்தது. இவ்விதம் நாங்கள் கேட்டபோது இந்தத் தண்ணீர் அடுத்த போகத்திற்கு வேண்டும் என்று சொல்லி விட்டார்கள். இதன் காரணமாக 90 ஆயிரம் மூட்டை நெல் விளைவதை இது தடுத்திருக்கிறது. அரசாங்க அதிகாரிகளுடைய போக்கினால் நாம் 90 ஆயிரம் மூட்டை பெறுவதை இழந்திருக்கிறோம். இதற்கு யார் பொறுப்பு என்பதைத்தான் அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக உணவுப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், அரசாங்கத்தின் நிலைமை என்ன என்பதைப் பார்க்கும்போது, மூன்று அமாவாசை மூன்று பௌர்ணமி ஆகவில்லை, அதற்குள்ளாக

[திரு. பி. வி. சீராமுலு] [23rd October 1964

37 அறிக்கைகள், எத்தனையோ திட்டங்கள், எத்தனையோ பேச்சுகள் இத்தனையும் அரசாங்கம் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. அரசாங்கம் ஒரு நேரத்தில் விட்டிருக்கும் அறிக்கையைப் பார்க்கும்போது, கூட்டுறவுச் சங்கத்திற்குத்தான் அத்தனை அதிகாரத்தையும் கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அடுத்தநாள் பார்க்கும்போது பிரைவேட் நபர்களுக்கும் உரிமை கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இரண்டும் கெட்டான் நிலைமையில் தான் இவர்களுடைய உத்தரவு இருந்துக் கொண்டிருக்கிறது. என்னுடைய பகுதியில் காங்கிரஸ் கமிட்டியில் உள்ள ஒரு பிரமுகர் ஒரு ரைஸ்மில் சொந்தக்காரரிடம் அங்குள்ள தாசில்தார் மூலமாக சென்று இரவில் ரைஸ் மில் ஓட்டக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். இது அரசாங்கத்தினுடைய உத்தரவா என்பது தெரியவில்லை. அங்குள்ள அதிகாரிகள் எல்லாம் காங்கிரஸ்காரர்களின் பேச்சுக்குத் தகுந்தபடி செயலாற்ற வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இந்த அளவுக்கு மண்டல காங்கிரஸ் கமிட்டியிலுள்ள ஒருவர் சொல்லியிருக்கிறார்.

மேலும் வியாபாரிகளைப்பற்றி அரசாங்கம் தரக் குறைவான முறையில் பேசி வருகிறது. சென்ற ஆண்டுகளில் அரசாங்கம் கடன் எழுப்பிய நேரத்தில் எல்லாம் அரசாங்க அதிகாரிகள் இந்த வியாபாரிகளிடத்தில் போய் பல்லைக்காட்டி தான் கடனைப் பெற்றுக் கொள்கிறார்கள். அது மட்டுமல்ல, வியாபாரிகளிடத்தில் எங்கள் பகுதியில் என்ன நடக்கிறது என்றால், ஒரு வியாபாரிக்கு ஏதாவது லைசென்ஸ் கொடுக்கவேண்டுமென்றால், வெல்பேர் டிப்பார்ட்மெண்டில் 100 ரூபாய்க்கு டிக்கட் வாங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். அப்படி டிக்கட் வாங்கினால் தான் சர்க்கரை கோட்டா, கோதுமை கோட்டா மற்றுமுள்ள கோட்டா போன்றவைகள் கொடுப்பார்கள். இது தான் இன்றைக்கு எங்கள் பகுதியில் இருந்து வரக்கூடிய நிலை. எங்கள் பகுதியில் மூன்று பஞ்சாயத்து ஒன்றிப்பு மன்றங்கள் இருக்கின்றன. இவற்றில் எல்லாம் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள் தான் தலைவர்களாக இருக்கிறார்கள். இதில் ஒரு காங்கிரஸ் தலைவர் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறார் என்றால், ஆசிரியர்களிடத்தில், 100 ரூபாய் கொடுத்தால் நாங்கள் சொல்லக்கூடிய இடத்திற்கு உத்யோகத்தை மாற்றித் தரலாம், 200 ரூபாய் கொடுத்தால் நீர் கேட்கக்கூடிய இடத்திற்கு உத்யோகத்தை மாற்றித் தரலாம் என்று சொல்லி இன்றைக்கு அவ்விதம் ரூபாய் பெற்றுக்கொண்டிருக்கிறார்.

சென்ற இரண்டு ஆண்டுகளாக பஞ்சாயத்து தலைவர்கள் எல்லாம் . . . .

MR. SPEAKER: The hon. Member is making an allegation against a particular person.

திரு. பி. வி. சீராமுலு: அதோடு மட்டுமல்ல, என்னுடைய பஞ்சாயத்து யூனியனில் என்ன நடக்கிறது என்றால், அந்த பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்த 42 பஞ்சாயத்துக்களிலே 40 பஞ்சாயத்துக்கள் பழைய பாக்கி, அதாவது 5—6 ஆண்டுகளுக்கு



23rd October 1964] [திரு. பி. வி. சீராமுலு]

முன்பாகக் கட்ட வேண்டிய வீட்டு வரியை வசூல் செய்யவில்லை. அதற்கான அத்தனை பஞ்சாயத்து . . . .

(மணி அடிக்கப்பட்டது.)

திருமதி கி. குழந்தையம்மாள்: கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சியினர் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் நம்பிக்கை இல்லை என்று சொல்லுவதற்காகச் சொல்லக்கூடிய குற்றச் சாட்டுகளிலே ஒன்றிரண்டை எடுத்து அதற்குப் பதில் சொல்லுகிற முறையிலே பார்ப்போமானால் முதலாவது குற்றச்சாட்டு என்னவென்றால், அதாவது இன்றைக்கு இருக்கக்கூடிய உணவு நெருக்கடி, நகரப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தக் குறையை நீக்குவதற்கு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கனம் உறுப்பினர் அவர்கள் கண்ட்ரோலை கண்டிப்பாகத் தீவிரப்படுத்தவேண்டுமென்று சொன்னார்கள். 1953-வது ஆண்டிலிருந்து நம்முடைய அமைச்சர் அவையும் நாமும் இந்தக் கண்ட்ரோலைக் கொண்டு வரவில்லை, அமுல் நடத்தவில்லை; சாதாரணமாக விட்டுக்கொண்டிருந்த காரணத்தினாலே விஷம் போல விலை ஏறிக்கொண்டு வந்தபோது, 10 வருஷமாக ஏற்பட்டிருக்கிற அனுபவத்தை வைத்துக்கொண்டு இந்த உணவுப் பொருளை வாங்கக் கூடியவர்கள் யார் என்று சொன்னால் ஓரளவு மாதா மாதம் வருமானம் உள்ளவர்கள், மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் தாராளமாக வாங்கி மூன்று வேளைகள் உண்ண முடிந்தது. அன்றாடக் கூலிகள் மூன்று வேளைகளும் அந்த அளவுக்கு உண்ணும் அளவுக்கு விலைவாசி கட்டுப்படியாக இருக்கவில்லை. இன்றைக்கு நம் சர்க்கார் ஏழை மக்களுக்காக கருணை கூர்ந்து கட்டுப்பாட்டை அமுல் நடத்தவேண்டுமென்று இப்படிப்பட்ட கண்ட்ரோலைக் கொண்டு வந்திருக்கிறது. அந்த முறையில் கொண்டு வந்தவுடனே ஒரு வாரம் அல்லது 10 நாட்களில் ஏற்பட்டிருக்கிற பிரச்சினையை வைத்துக்கொண்டு, நீங்கள் தான் நெருக்கடிக்குக் காரணம், ஆகவே நம்பிக்கை இல்லை என்று தெரிவிப்பது பொருத்தம் அல்ல, நியாயம் ஆனதும் அல்ல. ஏழை மக்கள் மீது கருணை கூர்ந்து, இந்தியா பூராவிலும் ஏற்பட்டிருக்கிற பற்றாக்குறையை நாமும் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்ற நம் சர்க்காருடைய நல்ல எண்ணத்தினால், நம்மைப் பொறுத்த வரையில் நாம் தன்னிறைவு பெற்றிருந்தாலும், அண்டை மாநிலங்களில் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால் ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைச் சமாளிக்க இன்று நாம் பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம். மந்திரி சபை எடுத்துக்கொண்டிருக்கிற நல்ல செயல்களை பாராட்டாதபடி, மந்திரிசபையின் மேல் நம்பிக்கை இல்லை என்று தெரிவிப்பது அவ்வளவு பொருத்தமாக இராது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று நேற்று கனம் மதியழகன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள் மந்திரிகளுக்குத் திறமை இல்லை என்று. இருந்தால் அண்டை ராஜ்யங்களில் இருந்து, மக்களை அடித்துக் கொண்டு செல்லும் தண்ணீரை, பேசிக் கொண்டு வந்திருக்கக்

[திருமதி சி. குழந்தையம்மாள்] [23rd October 1964

கூடாதா என்று சொன்னார்கள். அந்த அங்கத்ினருக்கும், அவர் சார்ந்திருக்கிற கட்சிக்கும் சொல்லிக்கொள்ளுவது, கடந்த 17 ஆண்டு காலத்தில் இப்போது இருக்கக் கூடிய மந்திரிசபை அண்டை ராஜ்யங்களோடு பேச்சுவார்த்தை நடத்தித்தான் சிறந்த நீர்ப் பாசனத் திட்டத்தை நன்கு உருவாக்கி நடந்துகொண்டிருக்கிறது. பேச்சு வார்த்தை நடத்துவது என்றால் 4 நாட்களில் போய்ப் பிடுங்கிக்கொண்டு வந்து விட முடியாது. பேச்சு வார்த்தை நடத்துவதற்கு 4-5 ஆண்டுகள் ஆகும். அந்த முறையில் பேச்சுவார்த்தை நடத்தித் தான் இன்றைக்கு பரம்பிக் குளத் திட்டம் அமலில் இருந்து வருகிறது. திட்ட வேலைகளெல்லாம் நடந்து வருகிறது. அவர்கள் நீர்ப்பாசனத்திற்குத் தாராளமாகக் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். நாமும் அவர்களுக்கு உணவு கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்கள் பிறந்த நாள் பரிசாக அனுப்பினார்கள் என்று கேவலமாகப் பேசினார்கள். அப்படிப் பேசுவதற்கு இடமே இல்லை. நாம் கொடுக்கவில்லை என்றால் டில்லியிலிருந்து கொடுக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். நாம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் தென் மண்டலம் என்ற காரணத்தினால். மந்திரிகள் பேச்சு வார்த்தை நடத்தி சாதித்திருக்கிறார்கள் என்று பாராட்டுவதற்கு பதில் 'உங்களுக்குத் திறமை இல்லை, பேச்சுவார்த்தை நடத்தி நீர்ப்பாசனத் திட்டத்தை அமல் நடத்தவில்லை, ஏன் கேட்கவில்லை' என்று சொன்னால் நீங்கள் போகிற வேகத்தில் கேட்டால் அங்கு நம்மைப் போல இருக்கிற அங்கத்தினர்கள் எழுந்து 'ஐயையோ, தமிழ் நாட்டிற்கு தாராளமாகக் கொடுக்கிறார்களே, கொடுக்கக் கூடாது' என்ற நிலைமைக்கு இறங்கினால் நமக்குப் பேராபத்து ஏற்படும். ஆகையால் இந்த மாதிரிப் பிரச்சினைகளை வெளிப்படையாகப் பேசாமல் இருப்பதே அவர்கள் தமிழ்நாட்டுக்குச் செய்யும் பேருபகாரம் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த மாதிரிப் பேச்சுவார்த்தைகளின் பலனைத் தான் பரம்பிக்குளம் திட்டம் போடப்பட்டு தொடர்ந்து திட்டம் நிறைவேறியிருக்கிறது. அதற்காக நமது பாராட்டுதலைத் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக கனம் அங்கத்தினர் சண்முகம் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். கணக்கிலே 15 மார்க் வாங்கி, ஹிந்தியிலே 25 மார்க் வாங்கினால் மாணவன் பாஸ் செய்து விடுகிறான், அப்படியானால் கணக்கில் திறமைக் குறைவானவனாகத் தானே இருப்பான், அதனால் கல்வியின் தரம் குறைந்து தானே இருக்கிறது, இத்தகைய நிலைமைக்குக் கொண்டு வந்தது இந்த மந்திரி சபை தானே, ஆகையால் நம்பிக்கையில்லை என்று சொன்னார்கள். பாவம் சண்முகம் அவர்கள் தெரியாமல் பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசியது இங்கு நடைமுறையில் இல்லாத ஒன்று. கணக்கில் 15 மார்க் வாங்கி ஹிந்தியில் 25 மார்க் வாங்கினால் இரண்டையும் கூட்டி, 40 மார்க் இருக்கிறது என்று அவன் பாஸ் செய்து விடுவான் என்ற நினைவோடு பிரசாரம் செய்துக் கொண்டிருந்தால் மாணவர் கூட்டத்தில் மத்தியில் படுதோல்வி அடைவீர்கள். ஹிந்தி



23rd October 1964] [திருமதி சி. குழந்தையம்மாள்]

மார்க் மாடரேஷனுக்குத் தான் உபயோகப்படும். மாடரேஷன் என்றால், ஒரு சப்ஜெக்டில் ஒருசில மார்க்குகள் குறைவாக இருந்தால், ஹிந்தியில் பெற்ற மார்க்குகளைப் பொறுத்து 10 மார்க்குகளுக்கு ஒன்று என்ற விதத்தில் அந்த மார்க்கோடு கூட்டுவார்கள். அதுதான் மாடரேஷனே தவிர, 15 மார்க்கையும் 25 மார்க்கையும் கூட்டி பாஸ் போட்டுவிடுவார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூட்டமாகச் சிலரைக் கூட்டி, செகண்டரி எஜுகேஷன் போர்டு ஆஃபீஸ் முன் நின்று போராட்டம் நடத்தினால் அவர்கள் படுதோல்வி அடைவார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு குற்றச்சாட்டை கனம் அங்கத்தினர் கோவிந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். முன்பு இருந்த கல்வி அமைச்சருக்கும் இப்போது இருக்கிற கல்வி அமைச்சருக்கும் முடிச்சுப் போடுகிற வேலை தான் எப்போதும் அவருக்கு. இல்லை என்றால் இங்கு வாழ முடியாது. அவர் தமிழுக்கு என்னவோ செய்து விட்டார் இவர் செய்யவில்லை என்று சொன்னார்கள். அந்தக் கல்வி அமைச்சர் இருந்த காலத்திலிருந்து தொடர்ந்து இந்த அரசாங்கம் பன்மடங்கு செய்து வருகிறது. உதாரணமாக சென்ற வெள்ளை அறிக்கையைப் பற்றிச் சொல்லவேண்டுமென்று சொன்னால் தி.மு.க. அங்கத்தினர்கள் எங்கே போய் தொங்கப் போகிறார்கள் என்று கேட்கிறேன். அன்றைக்கு இதே மன்றத்தில் அங்கத்தினராக இருந்த திரு. அண்ணாதுரை அவர்கள் அந்த அறிக்கையில் கையெழுத்திட்டு மும்மொழிக் கொள்கையை ஆதரித்திருக்கிறார்கள் . . .

திரு. கே. ஏ. மதியழகன் எழுந்தார்—

**கனம் சபாநாயகர்:** அதற்கு திரு. மதியழகன் அவர்கள் எக்ஸ்ப்ளனேஷன் கொடுக்கப்போகிறார்களா?

**திரு. கே. ஏ. மதியழகன்:** எங்கள் கட்சியின் சார்பில் நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த அறிக்கையில் எங்கள் தலைவர் அண்ணா அவர்கள் கையெழுத்திடவில்லை.

**திருமதி சி. குழந்தையம்மாள்:** அதிலே ஹிந்திக்கு எந்த இடம் கொடுக்கவேண்டுமென்பது தீர்மானம் ஆன சமாசாரம். அப்படி ஆன சமாசாரத்தில் அதை அமல் நடத்துவதில் எஜுகேஷன் கமிட்டி ஒன்று ஸ்டேட் லெவலில் இருக்கிறது. அதிலே கனம். அங்கத்தினர் நெடுஞ்செழியன் இருக்கிறார். அந்தக் கமிட்டியின் முடிவுதான் எஜுகேஷன் போர்டில் அமல் நடத்தப்படுகிறது. அவருக்கு மாற்றுக் கருத்து இருக்குமானால், இருந்திருக்குமானால், ஆட்சியாளர் செய்வதில் அதிருப்தி இருக்குமானால் அங்கே சொல்லி அமல் நடத்தாமல் இருக்கச் செய்திருக்க வேண்டாமா? அதில் ஒத்துக்கொண்டு அதைச் செய்து விட்டது இதைச் செய்து விட்டது என்று சொல்லி இப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சாட்டுவது பொருத்தம் அற்றது என்று தான் சொல்லிக்கொள்கிறேன் . . .

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்போது அமைக்கப்பட்டிருக்கிற கல்விக் குழுவில் நான் உறுப்பினராக இருக்கிறேன். அங்கே நான் என்னுடைய கருத்தைத் தெளிவுபட குறிப்பிட்டிருக்கிறேன் கல்வித் திட்டத்தில் ஹிந்தி மொழியைப் பாட மொழி ஆக்குவது பற்றி. பிறகு எழுத்து மூலமாகவும் கொடுத்திருக்கிறேன். கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் பெரும்பான்மையோரால் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. கருத்தைச் சொல்லவில்லை என்றோ, வற்புறுத்தவில்லை என்றோ கனம் உறுப்பினர் சொல்லுவது வருந்தத் தக்கது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திருமதி. சி. குழந்தையம்மாள் :** பெரும்பான்மையோர் இருக்கும் வரையில் அது தான் நடக்கும். . . .

**கனம் சபாநாயகர் :** அவருடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார். (Majority decision is carried.)

11-00 a.m. **திருமதி சி. குழந்தையம்மாள் :** இந்தப் பரீட்சையில் வாங்கும் மார்க்கை மற்ற சப்ஜெக்டில் மார்க்குகள் குறைந்துவிட்டால், மாடரேஷனுக்கு சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பதை அங்கு வற்புறுத்தவில்லை. நானும் அந்தக் கமிட்டியில் இருக்கிறேன். அவர்கள் அந்த வற்புறுத்தவில்லை என்பதை உங்கள் மூலமாக சபைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக திரு. சா. கணேசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். விவசாயிகள் தலையில் மிளகாய் அரைப்பதில் சுதந்திராக் கட்சி முதல் தாமாக இருக்கிறது என்பதை இந்தச் சபை அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கம்பு, சோளம், ராகி இவைகளை உற்பத்தி செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டது. வருஷம் பூராவும் நெல் விளைவிப்பவர்களுக்குத் தெரியும். சாப்பாட்டிற்கே வழி இல்லாமல் நெல் அவ்வளவு குறைவாக இருக்கிறது. ரூ. 10,000 மூட்டை கட்டிக்கொடுத்தால் கூட நெல் வைக்க முடியாது. பருத்தி ஒரு ஏக்கருக்கு 10 பொதி விளையும். 10 பொதி விலை ரூ. 200. 'நெல்விளை' என்றால் முடியாத காரியமாக இருக்கிறது. 50, 60 வருஷங்களுக்கு விவசாயி கடனாளியாகத்தான் இருந்து சாவான். அவன் பிள்ளை கூட கடனாளியாகத்தான் இருக்க முடியும். அதனால் இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகள் கடனாளிகளாகவே இருந்து மீளாமல் இருப்பதற்கு ஒரு வழியாகத் தான் இந்த யோசனையைச் சொல்லுகிறார்கள். ஆகவே, அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய குற்றத்தை நான் எதிர்த்துக் கூறுகிறேன். நாம் முடிந்த அளவுக்கு நெல் உற்பத்தி செய்வோம். அதற்கு மேல் முடிந்த அளவு புஞ்சை தானியங்களை விளைவிக்கிறோம். கரும்பு, வாழை, பருத்தி போன்ற பணப்பயிர்களுக்கு கட்டுப்பாடு விதிக்க வேண்டும், அப்படிச் செய்து தான் நாம் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற யோசனையை நான் ஆற்வே எதிர்க்கிறேன் என்று சுதந்திராக் கட்சி அங்கத்தினர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.



அடுத்து, கனம் கம்யூனிஸ்டு அங்கத்தினர்களும் கூட்டு சேர்ந்து இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். கனம் கம்யூனிஸ்டு அங்கத்தினர் ரேஷன் முறை கண்டிப்பாக வரவேண்டும், தீவிரப்படுத்த வேண்டும் என்று சொல்லுகிறார். சுதந்திரா கட்சி அங்கத்தினர் என்ன சொல்லி முடித்தார்? அறவே ரேஷன் முறை ஒழிக்கப்படவேண்டும், வெளி மாகாணங்களுக்குப் போவது மட்டும் கண்ட்ரோல் செய்யப்பட வேண்டும் என்று சொன்னார்கள். எலியும், தவளையும் கூடிச் சேர்ந்து போனால், தவளையை தண்ணீரில் விட்டால், தண்ணீருக்கு மேலே அது சுகமாக வாழும், ஆனால் எலி தண்ணீருக்குள் சென்ற கொஞ்ச நேரத்தில் மூச்சுத் திணறி செத்துப்போய்விடும். அம்மாதிரி இரண்டு பேர்களும் கூட்டுச் சேர்ந்திருக்கிறார்கள். ஒருவர் பக்கத்து மாநிலங்களுக்குப் போவதை மட்டும் கட்டுப்படுத்தவேண்டுமென்கிறார். இன்னொருவர் ரேஷன் முறை கொண்டு வரப்படவேண்டும் என்கிறார். அந்த மாதிரி யோசனை சொன்னால் யார் யோசனையை நாங்கள் கேட்பது? இரண்டு பேர்களும் தங்களுக்குள் யோசித்து ஒரு முடிவு செய்து, பிறகு இம்மாதிரி ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்து, அந்த யோசனை வருமானால், அதுபற்றி முடிவு எடுக்கக்கூடியதாக இருந்தால், அது ஏற்றுக்கொள்ளப்படும். இல்லையானால் அது விடப்படும்.

அதற்கு மேலே ஏதோ வியாபாரிகள் அதிக விலைக்கு விற்கிறார்கள். கலெக்டர் அதைப் பார்த்துக்கொண்டு, வியாபாரியை சும்மா விட்டுவிட்டார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டது. கோயம்புத்தூரில் ஒரு வியாபாரி ஒரு மூட்டைக்கு ரூ. 10 அதிகமான விலையில் விற்றதினால், அவர் அரெஸ்டு செய்யப்பட்டு, மூன்று நாட்களுக்கு ஜெயிலில் வைக்கப்பட்டு, பிறகு வெளியே விடப்பட்டார். அதற்கு மேலே கேஸ் தொடரப்பட்டிருக்கிறது. வியாபாரிகள் அதிக விலைக்கு விற்கிறார்கள் என்று மனப்பூர்வமாகத் தெரிந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப் படுகிறது. இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் 10 நாட்களாக ஏற்பட்டிருக்கிற கஷ்ட நிலைமையில் அதைத் தீவிரப்படுத்த முடியாத ஒரு நிலைமையிலே தான் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். எதிர்க்கட்சியினர் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானம் அபத்தமானது என்று தான் சொல்ல முடியும். நெருக்கடியான இந்த சமயத்தை உபயோகப்படுத்திக்கொண்டு, சர்க்கார் மீது நம்பிக்கையில்லை என்று குறிப்பிடுவது மிகவும் பொறுத்தமற்றது. அமைச்சர்கள் ஆங்காங்கு வெளி ஜில்லாக்களுக்குச் சென்று லாரிகள் மூலமாகவும், வாகனங்கள் மூலமாகவும், உணவுப் பொருள்களைக் கொண்டுவந்திருக்கும் சமயம் பார்த்து, உண்ணாவிரதமிருந்து, 'ஏதோ நாங்கள் உண்ணாவிரதம் இருந்ததினால் தான் சோறு கிடைத்துவிட்டது, க்யூ வரிசை குறைந்துவிட்டது, லிட்டர் அரிசி கிடைத்து விட்டது' என்று பிரசாரம் செய்வது சந்தர்ப்பவாதிகளுக்குப் பொறுத்தமாக இருக்குமே தவிர, உண்மையான அரசியல் தீவிர வாதிகளுக்குப் பொறுத்தமாக இருக்காது என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. பொ. வடிவேல்** : மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, திரு. கே. ஏ. மதியழகன் கொண்டுவந்துள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை; அதை ஆதரித்து, நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 17 ஆண்டு காலமாக இந்தக் காங்கிரஸ் அரசாங்கம் நம்முடைய தமிழகத்தை ஆண்டுகொண்டு வருகிறது. ஏராளமான, கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்து முதல் ஐந்தாண்டுத் திட்டம் முதல் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் திட்டம் தீட்டி அமல் நடத்தி நான்காவது ஐந்தாண்டுத் திட்டமும் போடப்படுகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய நோக்கமே விவசாயத்தில் சுயதேவைப் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது தான். கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டு ஏராளமான அணைக்கட்டுகள் கட்டப்பட்டன, வாய்க்கால்கள் வெட்டப்பட்டன ஏராளமான உர உற்பத்திச் சாலைகளை நிறுவியிருக்கிறோம், மின்சார விசைச் சாலைகளை நிறுவியிருக்கிறோம். அப்படியிருந்தும், வெட்டப்பட்ட கால்வாய்கள் எங்கே போயிற்று, கட்டப்பட்ட நீர்த்தேக்கங்கள் எங்கே போயிற்று? நீர்த்தேக்கங்களில் தண்ணீர் நிரம்பி வழியவில்லையா? கால்வாய்களில் தண்ணீர் ஓடவில்லையா? அல்லது தண்ணீர் ஓடி வயலில் பாயவில்லையா? பாய்ந்தது என்று சொன்னால், விளைந்த நெல், அரிசி எங்கே சென்றது? அதுமாத்திரமல்ல. 1956-ம் ஆண்டிலிருந்து இன்று வரையில் சுமார் 1,400 கோடி ரூபாய் பெருமான உணவு தானியங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு உணவு இறக்குமதி செய்திருந்தாலும் கூட, என்ன நிலைமை இந்த நாட்டில் இருக்கிறது? பத்திரிகையில் என்ன செய்தி வருகிறது? க்யூ வரிசை ஒரு மைல் நீளம் இருக்கிறது. க்யூ வரிசையில் நின்ற தாயின் கைக்குழந்தை உயிர் நீத்துவிட்டது. வாணியம்பாடியில் ஒரு முஸ்லீம் சிறுமிக்கு கூட்டத்தில் நெரிசலின் காரணமாக இரண்டு விரல்கள் நசுங்கி விட்டன. அரிசி இருப்பு இல்லை என்று சில்லரைக் கடைகளில் போர்டு தொங்கவிடப்பட்டிருக்கிறது. அரிசி விற்கலாம் என்றால் அடிதடியாகிறது, ஆகவே 'போலீஸ்காரர்களே எங்களுக்கு அபயம் அளியுங்கள்' என்று கடைக்காரர்கள் சொல்லக்கூடிய நிலைமை தான் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல சர்க்காருக்கு அடையாளமா? ஆகவே, நாங்கள் அமைச்சர் அவை மீது குற்றம் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். காஞ்சிபுரத்தில் ஒரு கதை உண்டு. ஒரு நண்பர் கஞ்சி வரதப்பா என்றால், பசியோடு உட்கார்ந்திருந்த ஒருவர் 'எங்கே கஞ்சி வருகிறது?' என்று கேட்டாராம். அதுமாதிரி இப்பொழுது தூங்குகிற ஒருவரை எழுப்ப வேண்டுமானால், அரிசி என்று சொன்ன உடனேயே அவர் எழுந்து விடக்கூடிய நிலைமை நாட்டில் நிலவுகிறது. இதற்கு என்ன காரணம்? இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது? இதற்குக் காரணம் பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். பத்திரிகைகள் மிகைப்படுத்திச் சொல்லுகின்றன என்று ஒரு மந்திரி கூறுகிறார். இன்னொரு அமைச்சர் ஏராளமாக அரிசி இருக்கிறது, வந்து கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறார். இன்னொரு அமைச்சர் க்யூ சிஸ்டம் நாட்டினுடைய முன்னேற்றத்தைக் காட்டுகிறது என்று



சொல்லுகிறார். இவைகளெல்லாம் நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு அடையாளமா என்று நீங்கள் பார்க்க வேண்டும். பெரியார் திரு. ராமசாமி அவர்கள் இதர தானியங்கள் சாப்பிடுகிறவர்கள், கேழ்வரகு, கம்பு, சோளம் சாப்பிடுகிறவர்கள் அரிசி தின்ன ஆரம்பித்து விட்டதினால் தான் அரிசி விலை ஏறிவிட்டது நாட்டில் என்று சொல்கிறார். அவர் வயதானவர், சொல்லிவிட்டுப் போகட்டும். அதைப் பார்த்து நம்முடைய அமைச்சரும் ஆமாம், அது உண்மை தான், கேழ்வரகு, கம்பு, சோளம் சாப்பிடுகிறவர்கள் அரிசி சாப்பிடுகிறார்கள், ஆகவே அரிசி விலை ஏறிப்போய் விட்டது என்று சொல்லுகிறார்கள். வாதத்திற்கு வேண்டுமானால் அதை ஒத்துக்கொண்டாலும் கூட, கம்பு, சோளம், கேழ்வரகு சாப்பிடுகிறவர்கள் அரிசி சாப்பிடுகிறார்கள் என்றால், கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற தானியங்களின் விலை இறங்கியிருக்க வேண்டும் அல்லவா? அவை அரிசியைவிட அதிகமான விலைக்கு விற்கின்றன. ஆகவே, திட்டத்தில் கோளாறு? விவசாயிகள் சரிவர இயங்கவில்லையா என்று நான் கேட்கிறேன். பதினேழு ஆண்டுகளாக இந்த அரசாங்கம் விவசாயிகளுக்கு என்ன செய்திருக்கிறது? சாதாரண வண்டிக் கட்டு கூட கொடுக்க முடியவில்லை. வேறு நவீன விவசாயக் கருவிகள் கொடுக்க முடியவில்லையென்றாலும், சாதாரண வண்டிக் கட்டு கூட அளிக்கப்படுவதில்லை. வண்டிக் கட்டுக்கு சாதாரண விலை ரூ. 20 அல்லது 30. ஆனால் பிளாக் மார்க்கெட்டில் ரூ. 90 அல்லது 100-க்குத் தான் கிடைக்கிறது. பரம்பரையாக பட்டா மாறுதல் செய்யப்படவில்லை. அறுபது வருஷம், 70 வருஷம், 80 வருஷங்களாக பட்டா மாறுதல் செய்வதற்கு சர்க்காரால் வழிவகை செய்யப்படவில்லை. இந்த நிலைமையில் இந்த அரசாங்கம் ஏன் நீடித்து இருக்க வேண்டும்? நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவருவதில் என்ன தவறு இருக்க முடியும் என்று நான் கேட்கிறேன். கிராமத்தை எடுத்துக்கொண்டால், ஒரு பக்கம் காடுகள் கழனிகளாகிக்கொண்டு வருகின்றன. மறுபக்கம் அவைகள் தோப்புகளாகிக்கொண்டு வருகின்றன. காரணம், விவசாயம் செய்வதற்கு அங்கு ஆட்கள் அகப்படவில்லை. நாட்டில் எல்லோருக்கும் 'கம்பல்சரி எஜுகேஷன்' என்று டெக்லரேஷன் செய்துவிட்டோம். சுதந்திர சர்க்காரில் எல்லோரும் நாட்டு மன்னர்கள், படிக்காமல் இருக்க முடியாது, படித்தாக வேண்டும். அவர்கள் 7-வது, 8-வது படித்துவிட்டு மாடு மேய்ப்பதற்கோ, ஆடு மேய்ப்பதற்கோ, விவசாயம் செய்வதற்கோ முன்வருவதில்லை. நாட்டிலே 'ரூரல் டெவலப்மெண்டு வொர்க்ஸ்' ஆரம்பித்தாகி விட்டது. பள்ளிகள் ஏற்படுத்தாமல் இருக்க முடியாது, கிணறுகள் வெட்டாமல் இருக்க முடியாது. ரோடுகள் போடாமல் இருக்க முடியாது. அந்த வசதிகளெல்லாம் கிராமங்களுக்கு அவசியம் செய்தாக வேண்டும். ரோடு போடுவதற்கு எஸ்டிமேட் அதிகமாகப் போடுகிறார்கள். ஆகவே, விவசாயம் செய்துகொண்டு இருந்தவர்கள் அந்த வேலைக்கு போய் விடுகிறார்கள். உண்மையான நிலைமை என்னவென்றால், கிராமப் புறங்களில் விவசாயம் செய்ய முடியவில்லை. இதை அமைச்சர் அவர்கள் உணர வேண்டும். இதற்கு மாற்று யோசனை என்னவென்றால், விவசாயிகளுக்கு நவீன இயந்திரங்கள் தருவிக்

கப்பட்டு, கொடுக்கப்பட வேண்டும். பஞ்சாயத்து யூனியனுக்கு ரூ. 2 லட்சம் தரவில்லையா என்று கேட்கலாம். சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் சபையின் அங்கத்தினர்கள், இந்த ரூ. 2 லட்சம் எதற்காக உபயோகப்படுகிறது? போஸ் கலப்பை விலை ரூ. 6 மொத்த விலை ரூ. 15 என்று சொல்லி, பாதி விலையில் நாங்கள் கொடுக்கிறோம் என்று ரூ. 7.50-க்குக் கொடுத்தால் எங்கள் பகுதி விவசாய மக்கள் இந்த அரசைப் பார்த்துச் சிரிக்க மாட்டார்களா? எங்களைத் தேர்ந்தெடுத்த மக்கள் கேட்க மாட்டார்களா? செயல் விளக்கப் பண்ணை என்று சொல்லுகிறார்கள். அங்கே என்ன செயல் விளக்கம் நடைபெறுகிறது? ரோடு ஓரத்திலே போர்டை மாட்டிக் கொண்டிருக்கிறார்களே தவிர, அங்கு என்ன நடக்கிறது? கிராம சகாயத் திட்டம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். விவசாயி களிடம் பண நெருக்கடி காரணமாக, நெல் அடித்த உடனேயே விற்று விடலாம் என்று விற்கிறார்கள். அப்பொழுது யார் வாங்கிக் கொள்கிறார்கள்? ஏட்டு அளவிலே வேண்டுமானால், அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று எழுதலாம். எருக் குழிக்கு ரூ. 6. உடனே டார்கெட் ரீச்சாக வேண்டும். ஒவ்வொரு யூனியனுக்கும் 1,000 எருக்குழிகள். உடனே கமிஷனர் கிராமசேவக்கை விரட்டுகிறார் இப்படி லட்சம் குழிகள் தயாரிக்கப்பட்டு விட்டன, இவ்வளவு எரு கிடைக்கிறது, என்று சொல்லப்படுகிறது. ஐம்பது பர்சென்ட் டார்கட் ரீச்சாகி விட்டது, சுய தேவை பூர்த்தியாகி விட்டது என்றெல்லாம் சொல்லி, மக்களை ஏமாற்றுவதிலே என்ன பிரயோசனம்? அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எங்களுக்கும் பதில் சொல்ல வேண்டும். ஸ்பிரேயர்கள் கொடுக்கிறார்கள். அதற்கான செலவில் இரண்டு பங்கை யூனியனும், ஒரு பங்கை பஞ்சாயத்தும் ஏற்கிறது. இந்த மன்றத்திலே சற்றேறக்குறைய 13 பேர்கள் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருக்கிறார்கள். ஒரு தடவை உபயோகித்த ஸ்பிரேயர்களை மறுபடியும் உபயோகிக்க முடிந்ததா என்பதை இந்த மன்றத்திலே இருக்கிற ஆளுங்கட்சியைச் சேர்ந்த சேர்மன்களே சொல்லட்டும். நான் அவர்களை அறைகூவி அழைக்கிறேன். ஒரு முறை உபயோகித்த பிறகு மறுபடியும் அதை உபயோகிக்க முடியவில்லை. ஷாவாலஸ் கம்பெனியிலிருந்து தான் வாங்க வேண்டும், அதுவும் வாங்கிக் கொண்டே இருக்க வேண்டுமென்றால், அப்படித் தான் இருக்கும். இதைப்பற்றி மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்தில் சொல்லியாய் விட்டது, மாவட்ட கலெக்டர் அவர்களிடத்திலும் சொல்லியாய் விட்டது. இப்படி வாங்க வேண்டுமென்று சொன்னால், எப்படி விவசாயம் அபிவிருத்தி அடையும்? தனிசமான விவசாயிகள் எல்லாம் தென்னந்தோப்பு, மாந்தோப்பு என்று வைக்கத் தொடங்கி விட்டார்கள் நன்றாக விளைந்து கொண்டிருந்த பூமிகள் எல்லாம் இவ்வாறு மாறிக் கொண்டிருக்கின்றன. அதனால் தான் இந்த மாதிரி நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இன்னொன்றைச் சொல்லிக் கொண்டு முடித்து விடுகிறேன். இப்பொழுது ஃபுல் பைனான்ஸ் ஸ்கீம் என்ற திட்டம் அமுலில் இருக்கிறது. இந்தத் திட்டத்தினால் என்ன பயன் ஏற்பட்டிருக்



கிறது? பிளாக்கில் இருந்து திட்டத்தின் கீழ் 5 அல்லது 10 வருட தவணைகளில் மாடுகள் வாங்கினார்கள், கிணறுகள் வெட்டினார்கள், பம்பு செட்டுகள் வைத்தார்கள். இப்பொழுது இந்தத் திட்டம் வந்த பிறகு மூன்று ஆண்டுத் தவணைக்குள்தான் கடன் வாங்க வேண்டும். அதிலே உள்ள நன்மை இந்தத் திட்டத்திலே இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். நன்மை இல்லாத ஒரு திட்டத்தை ஏன் கொண்டு வந்து புகுத்த வேண்டும்? இதைப் பற்றி அரசாங்கத்தினிடமும், அமைச்சர்களிடமும், எத்தனையோ முறைகள் சொல்லியாய் விட்டது. இதனால் பலர் கடன் வாங்க முடியவில்லை. நன்றாக நடந்து கொண்டிருந்த சொஸைட்டிகளும் டார்மெண்டாகப் போய்விட்டன. மேற்கொண்டு கடன் கொடுக்க முடியவில்லை. இந்தத் திட்டத்திலே நம்பிக்கையில்லை என்று சொன்னாலும், பழைய முறையேதான் நீடித்துக்கொண்டிருக்கிறது.

நம்முடைய காமராஜர் பிறந்த தினக் கொண்டாட்டவிழாவுக்கு ரூ. 9 லட்சம் செலவழித்ததாகச் சொல்லுகிறார்கள். அவர் ஒரு பெரிய அரசியல் கட்சியின் தலைவர். நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் பிறந்த நாள் விழாக் கொண்டாடினார்கள். அவர் நன்றாக இருக்க வேண்டுமென்று தனிப்பட்ட முறையிலே நான் வாழ்த்துகிறேன். அவர்கள் மகாராஷ்டிரத்திற்கோ அல்லது கேரளத்திற்கோ கவர்னராகச் செல்லாமல் இங்கேயே இருக்கட்டும். பிறந்த நாளன்று அவருக்கு ரூ. ஒரு லட்சம் பரிசாகக் கொடுக்கப்பட்டது. எந்த முதலாளி இதைக் கொடுத்தார்? அரசாங்கம் கணக்குக் காட்ட வேண்டாமா? மேலும் சென்னை பல்கலைக் கழகத்திற்கு ரூ. 35,000—ரூ.10,000-க்கு ஒரு பரிசும், ரூ. 25,000-க்கு ஒரு பரிசும் கொடுத்திருக்கிறார்கள். இதெல்லாம் யார் கொடுத்த பணம்? பொது மக்களுக்குத் தெரிய வேண்டாமா? எங்களைப் போன்ற விவசாயிகள் 5-ம் தேதிக்குள் எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது என்று கணக்குக் காட்ட வேண்டும். அமைச்சர்கள் எத்தனை பேர் ஸ்டேட்மெண்ட் கொடுத்தார்கள்? ஊருக்குத்தான் உபதேசம், எங்களுக்கு இல்லை என்று சொல்லுகிறார்களா? அரசாங்கத்திலுள்ள மந்திரிகள் ஸ்டேட்மெண்ட் கொடுக்க வேண்டாமா? காஞ்சிபுரத்திலுள்ள பக்தவத்சலம் பாலிடெக்னிக்குக்கு பெயர் சொல்லாமல் ஒருவர் ரூ. 10,000 கொடுத்திருக்கிறார். எங்கே இருந்து வந்தது அந்தப் பணம்? அப்படிப் பெயர் சொல்லாமல் கொடுத்தால், அதை வாங்கிக் கொள்வதா? Ceaser's wife should be above suspicion என்று சொல்லுவார்கள். இப்படி எல்லாம் செய்தால் அமைச்சர்களுடைய புனிதத் தன்மை கெட்டு விடுமே. இதை எல்லாம் எடுத்துச் சொன்னால் தரமான எதிர்க்கட்சிகள் இங்கே இல்லை என்று சொல்லுகிறார்கள். சமீபத்தில் வெளி மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் நடந்து கொண்டனவே, அம்மாதிரி நடந்து கொள்ள எங்களுக்குத் தரமில்லை என்று கருதுகிறார்களா? அல்லது ஆளுங்கட்சியைச் சேர்ந்த சிலர் சமீபத்தில் நேரு சாம்பல் மோசடி செய்தார்களே அம்மாதிரிச் செய்ய எங்களுக்குத் தரமில்லை என்று

[திரு. மு. பொ. வடிவேல்] [23rd October 1964

கருதுகிறாரா? அல்லது திரு. சஞ்சீவையா அவர்கள் சொன்னது போல் ஓட்டாண்டியாக இருந்த காங்கிரஸ்காரர்களெல்லாம் இன்று கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள், என்று சொன்னார்களே அந்த மாதிரிச் சொல்வதற்கு எங்களுக்குத் தரமில்லை என்று கருதுகிறாரா? அல்லது ஆளுக்கொரு லைசென்ஸ் வாங்குவதற்கு எதிர்க்கட்சியிலுள்ள எம்.எல்.ஏ.-க்களுக்குத் திறன் இல்லை என்று கருதுகிறாரா? நாங்கள் எப்படி அமைதியாக இந்த மன்றத்திலே நடந்துகொண்டிருக்கிறோம், இருக்கிற நிலைமையைத்தானே எடுத்துச் சொல்லுகிறோம். இந்த நாட்டிலே பிறந்த மன்னர்களுக்கு உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, இருக்க இடமில்லை. ஹரிஜன மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு எவ்வளவு காலமாகிறது. எத்தனை பேர் வீடில்லாமல் இருக்கிறார்கள். சென்னை நகரில் பிளாட்பாரத்திலே எத்தனையோ பேர் படுத்துக்கொண்டு காலம் கழிக்கிறார்கள். நாம் சுதந்தரமடைந்து 17 ஆண்டுகளுக்குப்பிறகும் இதுதான் நிலைமையா? இதையெல்லாம் எடுத்துச் சொன்னால் தரமில்லாதவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த மந்திரிசபைமீது பொதுமக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாங்களும் நம்பிக்கையை இழந்துவிட்டோம். கம்யூனிஸ்டுகள் இழந்து விட்டார்கள், சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இழந்துவிட்டார்கள். எனவே, இந்த அமைச்சரவைமீது 'நம்பிக்கையில்லை, இல்லை,' என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. சே. கு. ஹாஜா ஷரீப்: கனம் சபாநாயகர் அவர்களே எதிர்க்கட்சி அங்கத்தினர் கனம் மதியழகன் அவர்கள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் நான் எதிர்க்கின்ற முறையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக ஒரு மந்திரிசபைமீது நம்பிக்கையில்லை யென்று சொன்னால் அந்த மந்திரிசபை பொறுப்பில்லாமல் நடந்திருக்கவேண்டும். பொருள் விரயம் செய்யப்பட்டிருக்கவேண்டும். மக்களுடைய சூழ்நிலை நல்லவிதமாக உருவாக்கப்படாமல் இருந்திருக்கவேண்டும். இப்படியெல்லாம் இந்த மந்திரிசபை நடந்து இருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பேசும்பொழுது நான் நன்றாகக் கவனித்துக் கொண்டு இருந்தேன். அவர்கள் ஏதாவது ஒரு பெரிய குற்றம் சாட்டுவார்கள், அது உண்மையாக இருக்கும், நமக்குத் தெரியாமல் அப்படி ஏதாவது நடந்திருக்குமா என்றெல்லாம் நினைத்துக்கொண்டிருந்தேன். அந்தவிதமான குற்றச்சாட்டு எதுவும் சாட்டப்படவில்லை. பொதுவாக உணவுப் பற்றாக்குறை இருக்கிறது. அதனால் மக்கள் அவதிப்படுகிறார்கள் என்று சொன்னார்களே தவிர மற்றப்படி எதைக்குறித்தும் அவர்கள் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறன். மக்களின் நம்பிக்கையைப்பெற்ற மந்திரிசபை, மக்களின் நல்ல சூழ்நிலைக்கும் நாட்டின் உயர்வுக்கும் மக்களின் பொருளாதார உயர்வுக்கும் பாடுபடவேண்டும். அந்தவகையில் மக்களுடைய வருமானம் பெருகி



23rd October 1964 [திரு. க. சே. கு. ஹாஜா ஷரீப்]

ஒரு நல்ல ஆட்சியை நிலை நாட்டவேண்டும். அப்படியெல்லாம் இந்த மந்திரிசபை செய்திருக்கிறதா, இல்லையா என்று பார்த்தால் அந்த வகையில் கொஞ்சங்கூட நம்பிக்கையில்லாமல் நடந்துக்கொள்ளவில்லையென்பது புலனாகும்.

பொருளாதார நிலையை எடுத்துக் கொண்டால், 10 வருஷத்திற்கு முன் நிலைமை நம்முடைய மாநிலத்தில் எப்படி இருந்தது, இப்பொழுது எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அதைக் கவனித்துப்பார்த்தால் ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறோம் என்பதைக் காண்பார்கள். பத்து வருஷத்திற்கு முன் நம் மாநிலத்தில் எவ்வளவு தொழிற்சாலைகள் இருந்தன? மீடியம் ஸைஸ் தொழிற்சாலைகள், ஸ்மால் ஸைஸ் தொழிற்சாலைகள் எவ்வளவு இருந்தன. எத்தனை பேர்கள் வேலைக்கு இருந்தார்கள், என்ன ஊதியம் பெற்றார்கள்? இதையெல்லாம் நன்றாகக் கவனித்திருந்தால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்க முடியாது. Industrial Development of Madras State up to 1963–64 என்ற ஒரு அறிக்கையை இந்த சபை முன் மந்திரி வெங்கட்டராமன் வைத்திருக்கிறார்கள். அதிலிருந்து சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

| | | Table showing production and capacity of selected industries in the orgnanized sector. |
|---|---|---|
| 1956-ல் Motor cars production .. | | 2,000 |
| 1963-ல் Motor cars production .. | | 3,600 |
| 1956-ல் Motor cycles and schooters | | 1,100 |
| இப்பொழுது ,, | | 12,600 |
| Commercial Vehicles production | 1956 | 1,009 |
| | 1963 | 6,600 |
| Diesel Engines production .. | 1956 | 3,075 |
| | 1963 | 32,000 |
| Cycle production .. | 1956 | 129,000 |
| | 1963 | 300,000 |
| Sugar production .. | 1956 | 63,000 tons. |
| | 1963 | 116,000 tons. |
| Cement production .. | 1956 | 700,000 tons. |
| | 1963 | 2,200,000 tons. |
| Fertilizer production .. | 1956 | 42,000 tons. |
| | 1963 | More than 3 lakhs tons. |

இம்மாதிரியாகக் கணிசமான அளவு முன்னேற்றம் கண்டிருக்கிறோம். இல்லை என்றால்; இந்த ஸ்டேட்மெண்ட் தப்பு என்று காட்ட புள்ளி விவரங்கள் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[திரு. க. சே. கு. ஹாஜா ஷரீப்] [23rd October 1964

அது மட்டுமல்ல, அரசாங்கம் பொது உடைமைக்கும், தனி உடைமைக்கும், என்னென்ன செய்திருக்கிறார்கள் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் எடுத்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நாம் தென் மண்டலத்தில் இருக்கிறோம். மற்ற ஸ்டேட்டுகள் இந்தப் பத்து வருஷங்களில் எத்தனை இண்டஸ்ட்ரிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள், எவ்வளவு மூலதனம் திரட்டியிருக்கிறார்கள், அதே காலத்தில் நாம் எத்தனை உருவாக்கியிருக்கிறோம். நாம் எவ்வளவு **actual paid-up capital** திரட்டியிருக்கிறோம், எவ்வளவு மக்களிடமிருந்து கடனாகப் பெற்றிருக்கிறோம். எவ்வளவு வெளியிலிருந்து மூலதனம் அடைந்திருக்கிறோம் என்பதையெல்லாம் இந்த ஸ்டேட்மெண்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் படித்தால் இந்த மந்திரி சபை எவ்வளவு தூரம் பாடு பட்டு தொழில்களை வளர்க்க கஷ்டப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துக் கொள்ளலாம். அதையெல்லாம் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். இன்னும்,

Table showing production of cotton textiles என்பதை எடுத்துக் கொள்வோம்.

In 1951 the total number of cotton spinning mills and composite mills was 77 with 1,862,000 spindles. In 1963 the total number is 144 mills with 366,000 spindles.

இவைகளிலெல்லாம் எவ்வளவு கோடிக்கணக்கான அளவு நூல்களும், உடைகளும் உற்பத்தியாகியிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். இவ்வளவையும் உருவாக்கி இருக்கும் போது மக்களின் வாங்கும் சக்தியும் பெருகியிருக்கிறது. மக்களிடம் வாங்கும் சக்தி இல்லை என்று சொல்லிவிடுவார்களா? பத்து வருஷங்களுக்கு முன்பு பணப் புழக்கம் அதிகம் இல்லை. இப்பொழுது இம்மாதிரியான ஒரு நிலையில் பணப் புழக்கம் அதிகமாக இருக்கிறது. (இண்டஸ்ட்ரியல் பீஸ்) இருக்கிறது. நல்ல சூழ் நிலை உருவாகிக் கொண்டே வருகிறது. ஒரு நல்ல அரசாங்கம் இதையெல்லாம் தான் செய்ய வேண்டும். யார் என்ன நல்ல ஸ்கீம் போட்டாலும் அதற்கு அரசாங்கம் தக்க உதவியளிக்கிறது. அம்மாதிரி ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எந்த விதமான கஷ்டமும் இன்றி பெரிய பெரிய தொழிற் சாலைகள் உருவாகிக் கொண்டு வருகின்றன. ஒவ்வொரு இலாகாவிலும் விக்டரி கண்டு வருகிறோம். போக்கு வரத்து இலாகாவை எடுத்துக் கொண்டாலும் சரி, விவசாயத் துறையை எடுத்துக் கொண்டாலும் சரி, கல்வித் துறையை எடுத்துக் கொண்டாலும் சரி எல்லா இலாகாவிலும் வெற்றி கண்டிருக்கிறோம். எந்த இலாகாவில் வெற்றி காணவில்லை என்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எடுத்துக் காட்ட வேண்டும். எதிர்க் கட்சி அவசியம். எதிர்க்கட்சி அரசாங்கம் செய்வதை நல்ல கண்ணோட்டத்தோடு பாதுகாக்க வேண்டும். அவர்கள் எடுத்துக் காட்டவேண்டும், அரசாங்கம் எந்தெந்தத் துறையில், எந்தெந்த ஸ்கீமில் தப்பு செய்திருக்கிறார்கள், அதனால் என்ன பொருள் விரயம் ஆகியிருக்கிறது என்று.



23rd October 1964] [திரு. க. சே. கு. ஹாஜா ஷரீப்]

அப்படி அரசாங்கத்தின் ஸ்கீம்கள் சரியில்லையென்றால், மாற்று ஸ்கீம்களை, திட்டங்களை அவர்கள் கொடுக்க வேண்டும். அம்மாதிரியான திட்டங்கள் ஏதாவது என்றைக்காவது எதிர்க்கட்சிக்காரர்கள் கொடுத்திருக்கிறார்களா? அம்மாதிரிக் கொடுக்க இதுவரை எதிர்க்கட்சிக்காரர்கள் முன்வந்ததில்லை. நானும் 7, 8 வருஷமாக இந்த சபையில் அங்கத்தினராக இருக்கிறேன். "இந்த மாற்றுத் திட்டங்களை எடுத்துக் கொள்ளுங்கள், நீங்கள் போட்ட திட்டம் சரியில்லை, அதனால் பொதுப் பணம் விரயம் ஆகும். நாங்கள் மாற்றுத் திட்டம் கொடுத்திருக்கிறோம், அதை அனுசரியுங்கள்" என்று சொன்னால் அது பொருப்பைக் காட்டுவதாக இருக்கும். என்றைக்குமே அம்மாதிரித் திட்டம் கொண்டுவந்ததில்லை. கனம் அண்ணாதுரை ஒரே ஒரு யோசனை சொன்னார்கள். சர்க்கார் ஏன் கசாப்புக் கடை வைத்து ஆரம்பிக்கக்கூடாது என்று கேட்டார். ஃபின் லாண்டில் அவ்வாறு ஆரம்பித்து வளமாகப் பெருக்கி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்களே, அதனால் நிறைய ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் கிடைக்கிறதே, அதை ஏன் செய்யக் கூடாது என்று கேட்டார்கள். பஸ்களை யெல்லாம் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். பொது உடைமையாகப் பெரிய பெரிய தொழிற்சாலைகளை நிறுவி இருப்பதைப் பார்க்க வேண்டும். நெய்வேலி திட்டத்தையும் திருச்சியில் வந்திருக்கும் ஹை ப்ரெஷர் பாயிலர் திட்டத்தையும் அதில் ஆயிரக்கணக்கான பேர்கள் வேலை அடைந்திருப்பதையும் மறந்துவிடக் கூடாது. திருச்சி திட்டத்தில் 7 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு 40,000 பேர்கள் இருக்கிறார்கள். எங்கு இந்த அரசாங்கம் வெற்றி காணவில்லை, எங்கே தோல்வி யடைந்திருக்கிறார்கள்? அதை எடுத்துச் சொன்னால் நான் அவர்களுக்கு நன்றி செலுத்துவேன்.

மக்களிடம் எவ்வளவு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு சில புள்ளி விவரங்களை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். பட்ஜட்டோடு சேர்ந்த அபெண்டிசிஸ்களை எடுத்துக் கொண்டால் 1956-ல் சேல்ஸ் டாக்ஸ் மூலம் வருமானம் 437 லட்சம் ரூபாய்; இப்பொழுது 1964-ல் 2,775 லட்சம் வருமானம் வந்திருக்கிறது. 1964-65-ல் எதிர்பார்க்கப்படுவது 30 கோடி. இது உற்பத்தியாகும் பொருள்களெல்லாம் செலவாகிறது என்பதைக் காட்டவில்லையா? இல்லையென்றால், வரிமூலம் வருமானம் எப்படி வரும்? 15 வருஷத்திற்கு முன் சுதந்திரம் வருவதற்கு முன், நம் தேவைகள் எல்லாவற்றையும் குண்டூசி முதல் எல்லாவற்றையும் அன்னிய நாடுகளிலிருந்தே தருவித்துக் கொண்டிருந்தோம். ஆனால் இன்றைக்கு மிகப் பெரும் பகுதியை நாமே இங்கே உற்பத்தி செய்கிறோம். அவ்வளவு செழிப்பு ஏற்பட்டிருக்கிறது. மக்களிடையே வாங்கும் சக்தி பெருகி இருக்கிறது. ஃசேல்ஸ் டாக்ஸ் அவ்வளவு தூரம் உயர்ந்திருக்கிறது. 27 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்றால் அது செழிப்பைக் காட்டவில்லையா? அரசாங்கம் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நம்பிக்கைக்குப் பாத்திரம் இல்லாதவர்கள் என்று சொல்ல முடியுமா?

[திரு. க. சே. கு. ஹாஜா ஷரீப்] [23rd October 1964

சேல்ஸ் டாக்ஸ் கட்டுவதில் வியாபாரிகள் மோசமாக நடந்து கொள்கிறார்கள் என்று சொல்கிறார்கள். சில வியாபாரிகள் மோசமாக நடந்துக் கொண்டிருக்கலாம். அது காரணமாக வியாபாரிகள் குலமே அப்படிச் செய்கிறது என்று சொல்வது சரியாகாது. அப்படிச் சொல்வது வருந்தத் தக்கது. நான் கூட மந்திரிகளிடம் சொன்னேன், " நீங்கள் டாக்ஸ் இவேஷன் செய்பவர்களை அவசியம் கண்டுபிடிக்கவேண்டும். ஆனால் யார் டாக்ஸ் இவேஷன் பண்ணுகிறார்களோ அவர்களை மட்டும் கண்காணிக்க வேண்டுமே தவிர எல்லோரையும் துன்புறுத்தக்கூடாது " என்று. அவர்கள் கேட்டார்கள், " சில வியாபாரிகள் கணக்குப் புத்தகங்களை பூஜை ரூமிலும், பெட் ரூமிலும் வைத்திருந்தால், அவற்றை கண்டுபிடிக்க வேண்டாமா " என்று. இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் மந்திரிகள் பாரபட்சமில்லாமல் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டவேதான். அதையொட்டி சில வியாபாரிகளும், வியாபாரிகள் சங்கத் தலைவரும் கேட்டுக் கொண்டதன் பேரில் கொஞ்சம் டைம் கொடுத்திருக்கிறார்கள். இரண்டு மாத டைம் கொடுத்திருக்கிறார்கள். இதில் தவறு என்ன? ஒரு மரத்தில் சில காய்கள் சரியாக இல்லாவிட்டால், மரத்தையே வெட்டிவிட வேண்டும் என்று சொல்வதா? அது நியாயமா என்று எதிர்க் கட்சி அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, உணவு உற்பத்தியை எடுத்துக்கொள்வோம். கனம்
11-30 a.m. முதல் அமைச்சர் அவர்கள் " உணவுப் பற்றாக்குறை (Food shortage) நம்முடைய மாநிலத்தில் இல்லை, உணவு விநியோகத்தில் (Food distribution) தான் சில கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன, அதை அதிசீக்கிரத்தில் நிவர்த்திப்போம் " என்று சொன்னார்கள். இப்பொழுது மக்கள் அவதிப்படுவது வாஸ்தவம். மக்கள் க்யூ வரிசையில் நிற்பதும் வாஸ்தவம் தான். எதனால் இந்த உணவுப் பற்றாக்குறை என்று சொல்கிறார்களே அது ஏற்பட்டது?

உணவுப் பொருளின் விலை மிக மிக உயர்ந்துகொண்டே போகிறது, கன்ஸ்யூமர்களுடைய நலனைப் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அரசாங்கம் விலையைக் கட்டுப்படுத்தி ஒரு முறையைக் கொண்டுவந்தார்கள். அப்படிக் கொண்டுவரவில்லை என்றால், எதிர்க் கட்சியினர் நாளைக்கே இன்னொரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து, " மக்களுடைய சௌகரியத்தை அவர்கள் கவனிக்கவில்லை, அளவுக்கு மீறி தாறுமாறாக விலையை ஏற விட்டுவிட்டார்கள், வியாபாரிகளுக்கு அனுசரணையாக இருக்கிறார்கள் " என்றெல்லாம் குற்றச்சாட்டு கொண்டுவருவார்கள். எப்படி நியாயமோ அப்படித்தான் நடக்க வேண்டும்.

பொருளாதார அமைப்பின் நிலைமையில் விலை ஏறுவது சகஜம் தான். 'விலை ஏற முடியாது, ஏறக் கூடாது, ஏறுவதே இல்லை' என்று சொல்ல முடியாது. அவசியம் ஏறத்தான் செய்யும், ஆனால், ஏறினாலுங்கூட, நியாயமான நிலையில் வந்திருக்கவேண்டும். அப்படியில்லாமல் விலை ஏறிக்கொண்டே போகுமானால், அரசாங்கம் அதைத் தடுக்கத் தகுந்த சட்ட திட்டங்கள் போட வேண்டும்



23rd October 1964] [திரு. க. சே. கு. ஹாஜா ஷரீப்]

என்ற காரணத்தினால் தான் கொண்டுவந்தார்கள். அதன் காரணமாக சில கஷ்டங்கள் ஏற்பட்டன. அதை எல்லோரும் சேர்ந்து நிவர்த்திக்க ஆலோசனை செய்யவேண்டுமே தவிர, அதை ஒரு காரணமாக எடுத்துக்கொண்டு, மக்களிடையே ஒரு பெரிய பீதியை உண்டாக்கி, கஷ்டங்களை மிகுதியாகச் செய்வார்களானால் அது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

இந்த அரிசி விநியோகத்திலே மந்திரி சபை எவ்வளவு அக்கறை கொண்டு, எவ்வளவு தூரம் இதைத் துரிதமாக நடத்தவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அவ்வளவு விரைவில் மக்களுடைய கஷ்டங்களைப் போக்க அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை நாம் பாராட்ட வேண்டும்.

நான் கூட மந்திரிகளுக்குச் சொன்னேன். " இதைப்பற்றி உடனுக்குடனே நீங்கள் கவனிக்கவேண்டும், ஏராளமாக நியாய விலைக் கடைகளைத் (Fair price shops) திறக்க வேண்டும், லைசன்ஸ்டு டீலர்களுக்கு இந்தப் பொறுப்பைக் கொடுங்கள். ரூபாய் இரண்டாயிரமோ, ஐயாயிரமோ டெபாஸிட்டாக வாங்கிக் கொண்டு, ஒவ்வொரு டிவிஷனிலும் குறைந்தது பத்துப் பதினைந்து கடைகளுக்குக் குறைவில்லாமல் வையுங்கள். அப்பொழுதுதான் மக்களுக்கு உணவு தானியங்கள் விநியோகம் ஆகும். அவர்கள் உங்கள் கட்டளைக்கு உட்பட்டு நடக்கவேண்டும். மீறி நடந்தால் அவர்களுக்குத் தண்டனை கொடுக்கவேண்டும். அம்மாதிரி நிலையை உருவாக்கினால் கஷ்டம் தீரும் " என்று நான் சொன்னேன். அதற்கு அவர்கள் " அதி விரைவில் அம்மாதிரி யோசனை செய்யலாம். அவைகளைக் கொண்டுவரலாம், இருந்தாலும், இன்னும் சில நாட்களில் இப்போதைய நிலைமைமாறி சுமூகமான நிலை ஏற்படும் " என்று சொன்னார்கள். அதே மாதிரி நல்ல நிலை ஏற்பட்டுக்கொண்டு வருகிறது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, நம்முடைய ராஜ்யத்தில் ஒவ்வொரு துறையிலும் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது, பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்று நான் சொன்னால் எதிர்க் கட்சியினர்கள் அதை மறுக்க மாட்டார்கள். மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கனம் அங்கத்தினர் திரு. மூக்கையா தேவர் அவர்கள், inflation அதிகமாக இருக்கிறது என்று நேற்று ஒரு குற்றச்சாட்டு கொண்டுவந்தார்கள். Industrial development இருக்கும்போது 'இன்ஃப்ளேஷன்' இல்லாமல் இருக்காது. இன்ஃப்ளேஷன் இருந்துதான் தீரும். ஆனால், இன்ஃப்ளேஷன், அளவுக்கு மேல் போகாமல் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இன்ஃப்ளேஷன், அளவுக்கு மீறி போனால் மக்களுக்கு எல்லாவிதமான கஷ்டமும் ஏற்படும். 'உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பதிலாக ரூபாய் நோட்டு உற்பத்தியை சர்க்கார் அதிகரிக்கிறது' என்றும் திரு. மூக்கையா தேவர் அவர்கள் சொன்னார்கள்.

[திரு. க. சே. கு. ஹாஜா ஷரீப்] [23rd October 1964

Deficit finance இருந்துதான் தீரும். இப்பொழுது உலகத்திலேயே பெரிய நிபுணர்கள் இங்கு வந்து போகிறார்கள். அவர்கள் சொல்லும் வாக்குமூலத்திலே, 'இந்தியப் பொருளாதாரத்தில் எந்தவிதமான தவறுதலும் இல்லை' என்று கூறியிருக்கிறார்கள். ஏதாவது சில தவறுதல் இருக்கலாம், கஷ்டங்கள் இருக்கலாம், அந்தக் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்காக உடனுக்குடன் அரசாங்கம் எல்லாவிதமான நடவடிக்கையும் எடுத்து வருகிறது, இதனால் மக்களிடத்திலே நல்ல வளர்ச்சி ஏற்படுகிறது; ஆகவே இதையெல்லாம் எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் கவனிக்கவேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. க. ர. நல்லசிவம்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் வந்திருக்கக்கூடிய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். திரு. கலியாணசுந்தரம் அவர்கள் ஒரு கண்டனத் தீர்மானத்தையும், திரு. மதியழகன் அவர்கள் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கொண்டுவந்திருக்கிறார்கள். ஏன்? கண்டனத் தீர்மானம் போதாதா? நம்பிக்கையில்லாத் தீர்மானம் வேண்டுமா? என்ற கேள்வி எழலாம். இன்றிருக்கும் நிலைமையில் கண்டனத் தீர்மானம் போதாது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் தான் சரியானது; அவசியமானதும்கூட.

தனிப்பட்ட மந்திரி மீது குற்றச்சாட்டு சொல்லியோ, அல்லது மந்திரிகள் கடந்த 18 ஆண்டுகளில் என்ன செய்திருக்கிறார்கள் என்ற விமரிசனத்தையோ சொல்ல நான் முன்வரவில்லை. நான் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் இந்த மந்திரி சபையின் மீது நம்பிக்கை இல்லை என்று சொன்னால் அது மிகப் பொருத்தமானதாக இருக்கும். 18 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சியின் கையில் ஆட்சி இருந்துகொண்டிருக்கிறது. நாட்டில் 75 சத விகித மக்கள் விவசாயிகளாக இருக்கிறார்கள். இப்படிப் பெரும்பான்மையான விவசாய மக்களைக் கொண்ட ஒரு நாட்டில் இத்தகைய உணவு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்கிற ஒரே காரணத்திற்காக மட்டும் இந்த ஆட்சியாளர் மீது இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவது பொருத்தமாக அமையும். ஆயிரம் காரணம் சொல்லத் தேவையில்லை. இந்த ஒரு காரணம் மட்டுமே போதும், கண்டனத் தீர்மானம் போதாது, நம்பிக்கையில்லாத் தீர்மானம் அவசியம் என்பதற்கு. திரும்பத் திரும்பச் சொல்ல விரும்புகிறேன். பதினெட்டு ஆண்டு ஆட்சிக்குப் பின்னாலுங்கூட, இந்த நிலைமை இருப்பானேன்? 'திட்டம் போட்டிருக்கிறோம், அணைகள் கட்டியிருக்கிறோம், பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றியிருக்கிறோம்' என்று ஆட்சியாளர்கள் எத்தனையோ சொல்லலாம். எத்தனைதான் சொன்னாலும் இன்றுள்ள நிலைமை, உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், என்ன? 75 சதவிகித விவசாய மக்களைக் கொண்ட நாடு உலகத்திலேயே வேறு எங்கும் கிடையாது, இந்தியாவைத் தவிர. அப்படியிருக்க, இந்த நாட்டிலுள்ள மக்களுக்குச் சோறு போட இந்த ஆட்சியாளரால் முடியவில்லையே. உணவுப் பிரச்னை சீராகத் தீர்க்கப்படாததன்



[திரு. க. ர. நல்லசிவம்]

காரணமாகத்தானே எதிர்க்கட்சியிலிருந்து ஆட்சியாளர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வேண்டிய நிலைமையும், ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டிப் பேச வேண்டிய நிலைமையும் இன்று ஏற்பட்டிருக்கிறது?

எதிர்க் கட்சிகளிடையே காணப்படும் ஒற்றுமையின்மையைக் குறித்து பல பேர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எதிர் கட்சிகள் என்றால் அவர்களுக்குள்ளே கருத்து வேறுபாடு இருக்கத்தான் செய்யும். ஆளும் கட்சியினரிடையே கருத்து வேறுபாடு இல்லையென்று சொல்ல முடியுமா? உணவுக் கட்டுப்பாடு வேண்டுமா, வேண்டாமா என்பதைக் குறித்து ஆளுங்கட்சி அங்கத்தினர்களிடையே கூட பெரிய சர்ச்சை இருக்கிறது. காங்கிரஸ் கட்சியிலேயே—மேலே இருந்து கீழே வரை — இதில் கருத்து வேறுபாடு இருக்கிறது. அப்படியிருக்கும்போது, அடிப்படைக் கொள்கையிலேயே வேறுபாடு உள்ள எதிர்க்கட்சிகளைப் பார்த்து, 'கருத்து வேறுபாடு இருக்கிறதே' என நையாண்டி செய்வது சரியல்ல என்று ஆளும் கட்சியினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவு பிரச்னையில் சர்க்கார் ஏன் இவ்வளவு மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறது என்று நாம் பார்க்கவேண்டும். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவற்றின் மூலம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, நீர்ப்பாசனத் துறையில் நம்முடைய ராஜ்யத்தில் திட்டங்கள் அதிகமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அத்துடன், நீண்ட நெடுங்காலமாகக் கையாண்ட விவசாய முறைகளை மாற்றி, புதிய முறைகளின் மூலமாக எப்படி விவசாய உற்பத்தியைப் பெருக்கலாம் என்பதைக் குறித்தெல்லாம் அரசாங்கம் விளம்பரப்படுத்திக்கொண்டிருக்கிறது. ஆனால், நிர்வாகமும் சரி, அமைச்சரும் சரி இந்தத் துறையில் எந்த அளவு கவனம் செலுத்தவேண்டுமோ அந்த அளவுக்குக் குறைவாகத்தான் கவனம் செலுத்துவதாகத் தெரிகிறது.

சமீபத்தில் பத்திரிகையில் ஒரு செய்தி வந்ததைப் பார்த்தேன். ஒரு ஏக்கருக்கு இரண்டாயிரம் பவுண்டு சோளம் விளைந்ததாகப் பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. அதைக் குறித்து விவசாய இலாகாவினரிடம் நேரில் சொன்னேன். எழுத்து மூலமாகவும் தெரிவித்திருக்கிறேன். ஆனால், நடவடிக்கை ஒன்றையும் காணோம். இரண்டு வாரங்களுக்கு முன்னால் மழை பெய்தது. என்றாலும் சோளம் போட முடியவில்லை. நிலம் சும்மா இருக்கிறது. திட்டங்கள் போட்டோம் என்று மந்திரிகள் பேசுகிறார்கள். கோடிக் கணக்காகப் பணம் ஒதுக்குவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் விவசாயத் துறையில் சர்க்கார் கவனம் செலுத்துவது மிகவும் குறைவாகவே இருக்கிறது. திட்டங்களைப் போட்டுவிட்டால் மாத்திரம் போதாது. நீர்ப்பாசனத் திட்டங்கள் எத்தனையோ இருக்கின்றன. குறிப்பாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். பல அமைச்சர்கள் தேர்தல் காலங்களில்

ஆங்காங்கு போகின்ற இடங்களில் எல்லாம், ஜனங்கள் என்ன சொல்கிறார்களோ, அதற்கேற்ற முறையில், தேர்தல் வேகத்தில், தெரிந்தோ, தெரியாமலோ, வாக்குறுதியைக் கொடுத்து விடுகிறார்கள். வாய்க்கால் வெட்ட வேண்டும், குளம் வெட்ட வேண்டும், அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என்று அங்குள்ள மக்கள் கேட்பதற்கெல்லாம், 'கவனிக்கிறோம். பார்க்கிறோம்' என்று சொல்லிவிட்டு வந்துவிடுகிறார்கள். அதோடு நின்றுவிட்டால் கூடப் பாதகம் இல்லை. அதைத் தொடர்ந்து செயல்படுத்தவும் முனைந்துவிடுகிறார்கள். மந்திரிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விட்டோமே, ஏதாவது செய்ய வேண்டுமே என்று செய்ய முற்படுகிறார்கள். ஆனால் முன்பு போட்ட திட்டத்திற்குப் பாதகம் இல்லாமல் இருக்குமா என்று பார்க்காமல் காரியங்களைச் செய்வதால், முன்பு நிறைவேற்றிய திட்டமும் நாசமாய்விடும் சூழ்நிலை ஏற்படுகிறது. இது ஒரே ஒரு திட்டத்திற்கு மாத்திரமல்ல. அநேக திட்டங்கள் இப்படித்தான் இருக்கின்றன. எனக்குச் சர்க்காரிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. "கீழ் பவானியாற்றுத் தண்ணீர், நொய்யல் ஆற்றுத் தண்ணீர், அமராவதியாற்றுத் தண்ணீர் இவை யெல்லாம் காவிரிப் பாசனத்திற்கு அவசியமான போதிலும் அந்தத் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படும்" என்று சர்க்காரிடமிருந்து பதில் வந்திருக்கிறது. ஒரு மாநாட்டில் அமைச்சர்கள் கலந்துகொண்டு, அங்கு கொடுக்கப்பட்ட வரவேற்பிற்குப் பதில் அளிக்கக்கூடிய முறையில், தாசில்தார் மூலமாகப் பதில் கொடுத்திருக்கிறார்கள். அமராவதி, நொய்யல், கீழ் பவானி ஆகிய ஆறுகளில் எதற்காக அணை கட்டுகிறார்கள்? எப்பொழுது தஞ்சை ஜில்லாவில் நிரந்தரத் தண்ணீர்த் தட்டு இருக்கிறதென்று அரசாங்கம் கருதுகிறதோ அப்பொழுது எதற்காக மற்ற இடங்களில் எல்லாம் அணைகளைக் கட்டவேண்டும்? நீர்ப்பாசனத் திட்டங்கள் விஷயத்தில், தேர்தல் காலங்களில் கொடுக்கும் வாக்குறுதியை வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுத்தால், பழைய திட்டமும் புதுத் திட்மும் கூட நாசமாய்ப் போய்விடும் நிலைமை ஏற்படுகிறது. குறிப்பிட்ட பிரதேசம் என்பதற்காக நான் சொல்லவில்லை. சர்க்காருடைய கொள்கையைக் கண்டிக்கவேண்டும் என்பதற்காகவும் நான் இதைச் சொல்லவில்லை. என்னுடைய பிராந்தியத்தில் தண்ணீர் கொடுக்காததற்காகவும் நான் சொல்லவில்லை. சர்க்காருடைய கொள்கை வரையறுக்கப்படாத கொள்கையாக இருக்கிறது என்பதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். கடந்த வருஷம் பல வாய்க்கால்களுக்குத் தண்ணீர் கொடுக்கவில்லை. காரணம் கேட்டால் பருவமழை தவறிவிட்டது என்று சொன்னார்கள். உண்மையிலேயே தண்ணீர் இல்லையென்று சொல்ல முடியாது. அங்கே இருந்த தண்ணீரை நீர்ப்பாசனத்திற்குக் கொடுக்காமல் மின்சாரம் உற்பத்தி செய்து கொள்வதற்காக நிறுத்திக் கொண்டார்கள். இதனால் எத்தனை ஏக்கரா சாகுபடி பாதிக்கப் பட்டது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். எதற்காக மேலே அணைகள் கட்ட வேண்டும்? தஞ்சாவூர் ஜில்லாவிற்கு தண்ணீர் கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. மூன்று போக சாகுபடிக்கு 24 மணி



நேரமும் கொடுக்கட்டும். வருடம் முழுவதும் கொடுப்பதைப் பற்றிக் கூட ஆட்சேபணை கிடையாது. ஆனால் அதன் உபநதிப் பகுதிகளில் இத்தனை ஏக்கராவுக்கு இவ்வளவு தண்ணீர் கொடுக்க முடியும் என்று கொடுத்த வாக்குறுதிப்படி கூட இவர்கள் கொடுக்கவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அப்படியிருக்கும்போது இப்போது கூட ஈரோடு தாலுகாவில் குறனூர் திட்டம், பெரும்பள்ளம் திட்டம் இவற்றிற்கு அடிகோல் நாட்டு விழா நடைபெற்றிருக்கிறது. 1954-ம் ஆண்டிலேயே பெரும்பள்ளம் திட்டத்திற்காக அந்த ஊர் விவசாயிகள் ஒரு திட்டத்தைக் கொடுத்தார்கள். ஆனால் இன்றைய தினம் அது அரசியல் செல்வாக்கின் காரணமாக வேறு பக்கம் திருப்பி விடப்பட்டிருக்கிறது என்றால் இந்தச் சர்க்காரின் மீது நம்பிக்கை இல்லை என்று சுட்டிக் காட்டுவதைத் தவிர வேறு என்ன இருக்கிறது, நான் இன்னும் சொல்வேன். கடந்த வருடம் கீழ் பவானி பிரதேசத்தில் 5,000 ஏக்கராவுக்குத் தண்ணீர் கொடுக்கவில்லை. மேட்டூர் அணையில் தண்ணீர் இருந்தது. ஆனால் மின்சார திட்டத்திற்காக ஒரு டனல் கட்டிக் கொண்டிருந்தார்கள். அதற்காக அணையிலிருந்து தண்ணீர் வடித்துவிடப்பட்டது, என்கிற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். இன்னும் கூட ஒரு பெரிய குற்றச் சாட்டைச் சுமத்த விரும்புகிறேன். 1924-ம் வருஷம் மைசூர் அரசாங்கத்திற்கும் நம்முடைய அரசாங்கத்திற்கும் ஒரு உடன்பாடு ஏற்பட்டது, காவேரி தண்ணீர் சம்பந்தமாக. ஆனால் நான் டெல்லி சென்றிருந்தபோது மத்திய சர்க்கார் நீர்ப்பாசன மின்சார அலுவலகத்திலே சென்று பார்த்தபோது பல விஷயங்கள் என் கவனத்திற்கு வந்தன. குறிப்பாக காவேரியைப் பொறுத்த வரையில் நமது அரசாங்கம் உடன்பாட்டின்படி நடந்துகொள்ளவில்லை. பல சந்தர்ப்பங்களில் உடன்பாட்டை மீறி இருக்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் இவ்வாறு பேசுவது சரியல்ல. மைசூர் அரசாங்கத்திற்கு பரிந்து கொண்டு பேசுகிறார்களா? நம்முடைய அரசாங்கம் எப்படி எந்த வகையில் உடன்பாட்டை மீறி இருக்கிறது என்கிற உண்மையை நன்கு விளக்கமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவம்:** மைசூர் அரசாங்கத்திற்காக நான் பேசவில்லை. அந்த ஒப்பந்த அடிப்படையில் நமது அரசாங்கம் 32 விஷயங்களில் மீறியிருப்பதாகவும் மைசூர் அரசாங்கம் 42 விஷயங்களில் மீறியிருப்பதாகவும் அவர்கள் சொன்னார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மீண்டும் நான் சொல்லிக்கொள்கிறேன். கனம் அங்கத்தினர் இப்படிப் பொதுப்படையாக எதுவும் சொல்லக் கூடாது. எதையாவது சொன்னால் பொறுப்புணர்ச்சியோடு விவரமாகச் சொல்ல வேண்டும். இல்லையென்றால் இப்படிச் சொல்வதில் பயனில்லை.

**திரு. க. ர. நல்லசிவம்:** கீழ்பவானியைப் பொறுத்தவரையில் ஒப்பந்தப்படி நடந்து கொள்ளவில்லை. முதலில் 2 போகம் புஞ்சைப் பயிருக்கு தண்ணீர் விடுவதாகச் சொன்னார்கள். புஞ்சைக்கு 2 லட்சம் ஏக்கராவுக்கு 6½ மாதம் அல்லது 7 மாதம் தண்ணீர் கொடுப்பது என்று திட்டம் வகுக்கப்பட்டது. அப்பொழுது திரு. சுப்பிரமணியம் இருந்தார்கள். நாங்களெல்லாம் அதைப் பற்றி எடுத்துச் சொன்னபோது பயிர்க்கட்டுப்பாடு இல்லாமல் மொத்த நிலத்தில் ஒரு பகுதிக்கு இரண்டு போகத்திற்கு தண்ணீர் உத்திரவாதம் அளிக்கப்பட்டது. அதன் காரணமாக நெல் பயிர் வைக்க ஆரம்பித்தார்கள். ஆனால் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்கிற குற்றச்சாட்டை சொல்ல விரும்புகிறேன். அடுத்தபடியாக நான் சொல்லுவது நிலச்சீர்திருத்தத்தைப்பற்றி. பரவலாகப் பேசப்படுகிறது. ஒரு அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தை தானே அகதிகளுக்குக் கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். சட்டபூர்வமாகப் பார்த்தால் யாராக இருந்தாலும் அமைச்சராகவே இருந்தாலும் தங்களுடைய நிலத்தை எடுத்து தாங்களே கொடுப்பதற்கு வழி கிடையாது. உணவுப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் இந்த அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. இன்றைக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய பல சிக்கல்களுக்கும் இந்த அரசாங்கம்தான் காரணம். ஜனநாயகம் சரியாக செயல் படாத அளவுக்கு பகிரங்கமாக பலவகையில் அது மீறப்படுகிறது. போலீஸ் இலாகாவை எடுத்துக் கொண்டால் பல தவறுகள் செய்கிறார்கள். அதை ஆதரித்தே தீரவேண்டும் என்பதுபோல அரசாங்கத் தரப்பில் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. நான் உதாரணம் சொல்வேன். சசிரி மில்லில் தொழிலாளர்களுக்கும் முதலாளிக்கும் தகராறு நடந்தது. என்னை அழைத்தார்கள். நான் போய் அவர்களுக்குள் ஒரு சமரசத்தை ஏற்படுத்திவிட்டேன். பிரச்னை முடிந்துவிட்டது. ஆனாலும் கொஞ்சம் நேரம் கழித்து வந்த போலீசார்கள், நான் பிரச்சினை சுமுகமாக முடிந்து விட்டது என்று சொல்லியும் கேட்காமல் ஊழியர்களை கைது செய்து கொண்டு போனார்கள். தங்களுடைய ஜபர்தஸ்தைக் காட்டுவதற்காக 200-க்கு மேற்பட்ட தொழிலாளர்களை கைது செய்து கொண்டு போய் ரிமாண்டில் வைத்தார்கள். அர்ஜுனன் சம்பந்தமாக நடந்தது என்ன? எனக்குப் பல தகவல்கள் வந்திருக்கின்றன. சர்க்காருக்கும் வந்திருக்கும். சுட வேண்டிய சந்தர்ப்பம் அங்கே என்ன இருந்தது?

ஜாதி என்று பேசப்படுகிறது. ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஜாதியைப் பொறுத்தவரை எதிர்க்கட்சியை விட ஆளும் கட்சிதான் மிக வேகமாக அதை வளர்த்து வருகிறது. அமைச்சர்கள் பல இடங்களுக்கும் போகின்றபோது வெளியிலே அந்தந்த ஜாதிக்கு அந்தந்த ஜாதி காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள். அதற்கு ஊக்கம் நேரடியாகக் கொடுக்கப்படுகிறது. ஜாதி பலவேறு விஷயங்களிலே புகுந்து கொண்டிருக்கிறது.





இது ஜனநாயகத்தை வளர்க்க உதவாது என்று பணிவோடு சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிறேன். இது சோஷலிச சமுதாயத்திற்கு அஸ்திவாரமாக அமையாது. உங்கள் உள்ளத்திலிருந்து ஜாதி உணர்வை வெளியே எடுத்து வைக்க வேண்டும். இந்த சர்க்கார் நடந்து கொள்ளும் போக்கில் நிச்சயமாக சமதர்மம் வரப் போவதில்லை; சோஷலிசம் வரப்போவதில்லை. இந்த அடிப்படையில் இந்தச் சர்க்கார் மீது நம்பிக்கை இல்லையென்று தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. பி. பழனி:** கனம் சபாநாயகர் அவர்களே, அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்களால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நாட்டின் விடுதலைக்குப் பிறகு நிர்வாகத் திறமையிலும் சரி, தனிப்பட்ட அமைச்சர்களுடைய தூய்மையிலும் சரி, அல்லது ஐந்தாண்டுத் திட்டங்களின் அடிப்படையிலும் சரி, நம்முடைய சென்னை மாநிலம் இந்தியாவிலேயே ஒரு சீரான சிறப்பான இடத்தைப் பெற்று எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த நல்ல பெயருக்கு ஊறு செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு நம்முடைய மன்றத்திலே இருக்கின்ற எதிர்க்கட்சி அன்பர்கள் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். நேற்றிலிருந்து நடைபெறுகின்ற இந்த விவாதத்திலே அவர்கள் அத்தனை பேரும் ஆவேசமாகவும், ஆர்ப்பாட்டமாகவும் பேசினார்கள். அதே நேரத்தில் நம்பிக்கை இல்லையென்று சொல்வதற்கான அவசியமான காரணமோ, அர்த்தமோ அவர்களுடைய பேச்சுக்களில், குற்றச்சாட்டுக்களில் இல்லை என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எங்களைப் பொறுத்தவரையில் இத்தகைய நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை அவர்கள் கொண்டு வந்திருப்பது குறித்து உண்மையிலேயே நாங்கள் ஆத்திரப்படவில்லை; அனுதாபப்பட வேண்டிய நிலையிலே தான் இருக்கிறோம். காரணம் என்னவென்று கேட்டால் குறிப்பாக, பிரதான எதிர்க்கட்சியாக இயங்குகின்ற திராவிட முன்னேற்றக் கழகம் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற லட்சியத்தைப் பல ஆண்டுகாலமாகப் பேசி வந்தது. இருந்த லட்சியத்தை இழந்த நிலையில் அடுத்து அவர்கள் இந்திப் பிரச்சினையைப் பயன்படுத்திப் போராட்டத்திலே இறங்கினர். அந்த இந்திப் பிரச்சினைப் போராட்டங்கள் பிசுபிசுத்த காரணத்தால் இந்த உணவுப் பிரச்சினையைப் பெரிதாக்கி நாட்டு மக்களுடைய அன்பை, ஆதரவைப் பெற வேண்டுமென்ற முயற்சியிலே அவர்கள் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

முதலாவதாக, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கான காரணங்களைச் சொல்லுகின்ற நேரத்தில் விலைவாசி உயர்வு பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். கடந்த பத்தாண்டு கால உலகப் பொருளாதாரச் சூழ்நிலையை எண்ணிப் பார்த்தால் எந்தெந்த நாடுகளில். 'டெவலப்பிங் எகானமி' என்று சொல்லக்கூடிய

வளர்ந்து வருகிற பொருளாதார நிலைமை இருக்கின்றது? அந்த நாடுகளில் எல்லாம் கூட இந்த விலைவாசி உயர்வு ஏற்பட்டிருப்பதை பார்க்கிறோம். அமெரிக்க நாட்டில் கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்டிருக்கிற விலைவாசி உயர்வையும், ஜப்பான், ஜெர்மனி அதே போல் ரஷ்யா போன்ற நாடுகளில் ஏற்பட்டிருக்கக் கூடிய விலைவாசி உயர்வைப் பார்க்கும்போது புள்ளி விவரமாக அந்த விகிதாசார எண்ணிக்கையைப் பார்த்தால் நம்முடைய நாட்டில் விலைவாசி உயர்வு மற்ற நாடுகளைவிடக் குறைந்த அளவில்தான் இருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்து உணவுப் பற்றாக்குறையைப் பற்றிப் பலரும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். இன்று நாட்டிலே இருக்கக்கூடிய இந்த நிலைமையைப் பார்க்கும் நோக்கில் எதிர்க்கட்சி அன்பர்கள் நாட்டிலே பஞ்சம் பஞ்சம் என்று பேசுகின்ற அளவுக்கு உணவுப் பஞ்சம் நாட்டிலே இல்லை. உணவுப் பற்றாக்குறைதான் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். அதற்கான காரணம் என்னவென்று கேட்டால், கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளில் நம்முடைய நாட்டில் இரண்டு வகையான சக்திகளுக்கிடையே ஒரு வகையான போட்டி பந்தயம் 'ரன்னிங் ரேஸ்' ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஒன்று, உணவு உற்பத்தி செய்யக் கூடிய தனிப்பட்ட சக்தி. மற்றொன்று மக்களை உற்பத்தி செய்யக்கூடிய சக்தி. இந்த இரண்டு சக்திகளுக்கும் இடையே ஏற்பட்டு வருகின்ற போட்டிப் பந்தயத்தில் மக்கள் இனத்தை உற்பத்தி செய்கின்ற சக்தியினுடைய ஒரு தன்மை, ஒரு வேகம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இன்று நாம் இங்கு பேசுகின்ற உணவுப் பற்றாக் குறை ஏற்பட்டிருக்கிறது. நிச்சயமாக நாட்டின் அபிவிருத்திக்குப் பிறகு, நாட்டின் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் நம்முடைய திட்டத்தின் வெற்றிக்குப் பிறகு உணவு உற்பத்தி பெருகவில்லை என்று மனச்சாட்சி உள்ள எதிர்க்கட்சி அன்பர்கள் நிச்சயமாகக் கூற இயலாது. அதே நேரத்தில் அந்த உற்பத்திப் பெருக்கத்தை ஈடு செய்ய இயலாத அளவுக்கு நாட்டிலே மக்கள் பெருக்கம் இருக்கின்ற காரணத்தால் இந்தப் பற்றாக்குறை இருக்கிறது என்ற நெருக்கடியான நிலைமையும் இருக்கிறது. இந்தப் பிரச்சினையானது நிச்சயமாக இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எதிர்க்கட்சி அன்பர்களுக்குத் தெரியும் என்று எண்ணுகிறேன். இந்தப் பிரச்சினை சென்னை மாகாணத்திலே இருக்கக்கூடியவர்களோ அல்லது இந்த அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் மட்டும் முடிவு செய்யக்கூடிய பிரச்சினை அல்ல. இந்தப் பிரச்சினை அகில இந்திய ரீதியில் முடிவு செய்ய வேண்டிய ஒரு பிரச்சினை ஆகும். இதை உணர்ந்த காரணத்தால் தான் நம்முடைய மதிப்பிற்குரிய பிரதம அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு நாட்டிலே உள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனை பேருக்கும் அழைப்பு விடுத்தார்கள். அதிலே திராவிட



முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. அண்ணாதுரை அவர்கள் சென்று கலந்து கொள்ளவில்லை. இந்த உணவுப் பற்றாக்குறை போக வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருக்குமானால் மதிப்புக்குரிய சாஸ்திரி விடுத்த அழைப்பை ஏற்றுச் சென்றிருக்க வேண்டாமா? ஆனால் அவர்கள் அவ்வாறு செல்லாமல் இந்தப் பிரச்சினையின் அடிப்படையிலே அவர்களுடைய அரசியல் கட்சியை வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில் பல பொதுக் கூட்டங்களில் பேசி வருகின்றார். திராவிட முன்னேற்றக் கழகக் கட்சித் தலைவர் திரு. அண்ணாதுரை அவர்கள் சொல்லுகிறார்கள் 'அடுத்த பொதுத் தேர்தலுக்கு இந்த உணவுப் பிரச்சினை ஒன்று போதும்; இந்தப் பிரச்சினை தேர்தல் வரை நீடித்தால் ஆட்சி எங்களுடையதுதான்' என்று பேசியிருக்கிறார். அதே போன்று முக்கிய தலைவர்களில் ஒருவரான திரு. என். வி. நடராசன் அவர்கள் 'உணவுப் பஞ்சத்தால் அவதிப்படும் மக்களை அரசாங்கத்திற்கு எதிராகத் தூண்டி விட்டு ஒரே நாளில் இந்த ஆட்சியைக் கவிழ்ப்போம்' என்று பேசியிருக்கிறார். இந்த மன்றத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த அங்கத்தினர் மதியழகன் அவர்கள் 'கழகத்தை அரியணையில் ஏற்ற இந்தச் சோற்றுப் பிரச்சினை ஒன்று போதாதா!' என்று பேசியிருக்கிறார். இதிலிருந்து அவர்களுடைய உள்நோக்கம் 'இந்த உணவுப் பற்றாக்குறை நீடிக்கவேண்டும், இது நீடித்தால்தான் தாங்கள் அரசியலில் வாழ இயலும்' என்று கருதுகிறார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. இன்று பல்வேறு கட்சியைச் சார்ந்தவர்களும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்திருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய ஆளும் கட்சி அங்கத்தினர் குறிப்பிட்டது போல் 'அவர்களுக்குள்ளாகவே ஏற்றத்தாழ்வு, மாறுபாடு' இருக்கிறது என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் இந்தப் பிரச்சினையிலே கண்ட்ரோல் முறை தேவையென்று சொன்னால் இன்னொரு எதிர்க்கட்சி "இந்தக் கண்ட்ரோல் முறை தேவையற்றது, தீங்கு விளைவிக்கக்கூடியது; 'ப்ரீ ட்ரேடு'—சுதந்திரமான வாணிபம் தேவை" என்று கூறுகிறார்கள். அதே நேரத்தில் பிரதம எதிர்க் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம், ஏறத்தாழ 50 உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் பற்றாக் குறையை, நெருக்கடியைச் சமாளிப்பதற்கு அவர்கள் "ஃபுட் பாலிசி' பொருளாதாரக் கருத்து என்ன என்பதை இது வரையில் வெளியிட்டதாகத் தெரியவில்லை. 'எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போல் அவர்களுடைய இலட்சியம் எல்லாம் 1967 பொதுத் தேர்தல் ஆகும். நேற்றுக் கூட ஒரு சில அன்பர்கள் அது பற்றி விரிவாக எடுத்துச் சொன்னார்கள். 'நிச்சயமாக 1967-ல் நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தே தீருவோம்' என்று சொன்னார்கள். இந்த நாட்டு மக்கள் நடக்கின்ற நிகழ்ச்சிகளை எல்லாம் நன்றாகக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இன்று நீங்கள் 50 பேர் சட்ட மன்றத்தில் இருக்கிறீர்கள் என்று சொன்னால் நீங்கள் உண்மையைச் சொல்லி

வாக்குகள் வாங்கி வரவில்லை; லட்சியத்தைச் சொல்லி வாக்குகள் வாங்கிவரவில்லை. இன்று இந்த மன்றத்திலே இத்தனை பேர் இருக்கிறீர்கள் என்று சொன்னால், நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய ஒரு சில பகுதிகளிலே வாழ்கின்ற வாக்காளர் பெருமக்களிடத்திலே மூன்று படி அரிசியிலே மோகம் காட்டி, ஐந்து ஏக்கர் நிலத்திலே ஆசை காட்டி, 'அத்தான் செத்தான்' என்ற அனுதாபம் காட்டி நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் 1967 தேர்தலில் எத்தகைய முகத்தோடு நாட்டு மக்களை, வாக்காளர் பெருமக்களைச் சந்திக்கப் போகிறீர்கள் என்பது எதிர்காலம் வழங்க வேண்டிய ஒரு விடையாகும்.

12-00 noon. ஏதோ இப்போது ஏற்பட்ட உணவுப் பிரச்சினையை பெரிது படுத்தி நாங்கள் தான் அடுத்ததாக ஆட்சிப் பொறுப்பில் இருப்போம் என்று சொல்வது அரசியல் நாகரீகம் ஆகாது என்பதை உங்கள் வாயிலாக அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, அண்மையில் ஏற்பட்ட அர்ச்சுனன் மரணமடைந்த வழக்கு பற்றி பலர் எடுத்துச் சொன்னார்கள் . . . .

MR. SPEAKER : The hon. Member, Sri K. B. Palani, should not go into the details. The matter is sub-judice.

திரு. கே. பி. பழனி: அவர்கள் வேறு விதமாக எல்லாம் சொல்லுகிறார்கள். உண்மையில் அன்றைய தினம் போலீஸ் அதிகாரி இந்த நடவடிக்கை எடுத்திராவிடில் பல கொலைகள் ஏற்பட்டிருக்கும் என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். நல்லமுறையில் சமாளித்த போலீஸ் அதிகாரி பாராட்டுதற்குரியவர் என்பதைத்தான் இந்த மன்றத்தில் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அடுத்ததாக, தலைவர் காமராஜ் அவர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுத்துவருவதைப்பற்றி மதியழகன் அவர்கள் சொன்னார்கள். திரு. காமராஜ் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் இயக்கத்தின் தலைவர், இந்தியாவிலுள்ள 45 கோடி மக்களின் நம்பிக்கைக்கு உரியவராக இருக்கிறார். அப்படிப்பட்ட ஒருவருக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்கிறார்கள் என்றால் அது உள்துறை அமைச்சரோ அல்லது முதலமைச்சரோ கொடுக்கும் போலீஸ் பாதுகாப்பல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். போலீஸ் அதிகாரிகள், எந்த தலைவர்களாக இருந்தாலும் சரி, யார் யாருக்கு பாதுகாப்பு வேண்டும் என்று கருதுகிறார்களோ அவர்களுக்கு செக்யூரிட்டி, பந்தோபஸ்து முதலிய வசதிகள் கொடுக்கிறார்கள், ஆகவே இது ஒரு குற்றச்சாட்டாகாது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் தலைவர் அவர்கள் தனித்து, தன்னையே இந்த நாட்டுக்கு தியாகம் செய்திருப்பதை மறந்துவிடுகிறார்கள். அவர் இங்கு அமைச்சராக இருந்த காலத்தில் அரசாங்கத்தின் பங்களாவையோ அல்லது அரசாங்கத்தின் காரையோ உபயோகித்து வரவில்லை என்பதையும் நாம் தெரிந்து



கொள்ள வேண்டும். 1954-லிருந்து அவர் சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த காலத்தில் அரசாங்கத்தால் ஒதுக்கப்படுகின்ற பங்களாவுக்குச் செல்லவில்லை . . . .

MR. SPEAKER : The hon. Member, Sri K. B. Palani, need not dilate on that point. That is not the matter before the House.

SRI K. A. MATHIALAGAN : The hon. Member, K. B. Palani, can talk on that subject.

MR. SPEAKER : I do not think so. It is not the matter before the House.

SRI K. A. MATHIALAGAN : It is definitely a matter. The hon. Member can talk on the subject.

MR. SPEAKER : No, no.

திரு. கே. பி. பழனி: இதிலிருந்து தலைவர் காமராஜ் அவர்களுடைய தியாகத்தையும், தூய்மையையும் நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் மந்திரி சபையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது எந்த விதத்திலும் சரியல்ல என்பதை அவர்களுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அமைச்சர் அவர்களுடைய விருப்பத்தின்பேரில் ஐ.ஜி. அவர்களை நியமித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதே மன்றத்தில், சென்ற ஆண்டு இதே எதிர்க் கட்சியினர் பேசிய நேரத்தில், மதிப்பிற்குரிய ஐ.ஜி. அருள் அவர்களுடைய தகுதி, திறமை இவைகளைப் பற்றி விரிவாக பெருமையோடு பேசினார்கள். ஆனால் இன்றைக்கு ஐ.ஜி.-யாக நியமித்த பின்னால் அதைப்பற்றி குறை கூறுகிறார்கள். ஐ.ஜி. பதவி என்பது ஸெலக்‌ஷன் கிரேட் போஸ்ட் ஆகும். யாருடைய சர்வீஸ் தேவை என்று கருதுகிறதோ அவர்களை தெரிந்தெடுக்கக் கூடிய உரிமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. இன்னும் சொல்லவேண்டுமென்றால், போலீஸ் இலாகாவில் கீழ் பதவியில் பணியாற்றியவர்தான் ஐ.ஜி.-யாக வரவேண்டும் என்கின்ற அவசியம்கூட இல்லை. நாட்டின் விடுதலைக்குப் பிறகு, நடந்திருக்கின்ற நியமனங்களைப் பார்த்தால் இது நன்கு தெரியும். திரு. விஜயராகவன் ஐ.ஸி.எஸ்., அவர்களை போலீஸ் ஐ.ஜி.-யாக நியமித்தார்கள் என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. அது மட்டுமல்ல, அருள் அவர்கள் ஐ.ஜி.-யாக பணியாற்றுவதற்கு தகுதியுள்ள நபர் என்ற காரணத்தினால் அவர்கள் இன்றைக்கு ஐ.ஜி.-யாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, முதலமைச்சர் அவர்கள் தனது உறவினர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்புக்களை கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி சொன்னார்கள். தகுதியும் திறமையும் இருக்கிறவர்கள் எந்த ஜில்லாக்களை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கத்தான் செய்யும். ஆகவே இன்னின்ன

ஆட்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்திருக்கிறார் என்று சொல்வது அர்த்தமற்ற வாதம். அது மட்டுமல்ல, செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒருவர் அட்வகேட் ஜெனரலாக வரவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. முதலமைச்சர் அவர்களுடைய ஜில்லாவும், அட்வகேட் ஜெனரலாக வந்தவருடைய ஜில்லாவும் செங்கற்பட்டாக இருப்பதால். அவர் வேலைக்கு வரக்கூடாது என்றிருக்கிறதா? அவருக்கும் உயர்பதவி ஏற்படக்கூடாதா? ஆகவே ஏதோ வேண்டுமென்றே குற்றம் சொல்லவேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப் பட்ட கருத்துக்களை சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்து, கள்ளக்கணக்கு பற்றி பலர் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பிட்ட ஒரு சினிமா நடிகையின் வீட்டில் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகள் போய் சோதனை போட்ட போது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள், "கள்ளப்பணம் இவர்களுடைய வீட்டில் மட்டும் தானா இருக்கிறது. வேறு இடத்தில் இல்லையா, அங்கு போய் பார்ப்பது தானே," என்று அரசாங்க அதிகாரிகளை பாராட்டுவதற்குப் பதிலாக, நடிகைக்கு வக்காலத்து வாங்குகின்ற முறையில் பேசுகின்றார்கள் . . .

திரு. மு. கருணாநிதி: ஸார், பாயின்ட் ஆப் ஆர்டர், சபையில் இல்லாத திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரைப்பற்றியும், அவர் பேசியதாக பத்திரிக்கையில் வந்த செய்தியைப்பற்றியும் இல்லாத ஒன்றை நண்பர் அவர்கள் கற்பனை செய்து பேசுகிறார். அதை அவர் வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று உங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: People who are not here to refute the hon. Member's arugument should not be referred to. The hon. Member may leave the point. at that

திரு. கே. பி. பழனி: மன்றத்தில் இல்லாத பலரின் பேச்சுக்களைப் பற்றி எனக்கு முன்னால் பலர் பேசியிருக்கிறார்கள். அந்த முறையில்தான் இதையும் எடுத்துச் சொன்னேன். ஆகவே இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் அர்த்தமற்றது. அகில இந்திய ரீதியில் உள்ள காங்கிரஸ் அரசாங்கம், அதிலும் தமிழ்நாட்டில் கனம் பக்தவத்சலம் அவர்களது சிரிய தலைமையின் கீழ் இயங்கும் காங்கிரஸ் அரசாங்கம் நிச்சயமாக ஜனநாயக சோஷியலிய லட்சியத்தை நிறைவேற்றியே தீரும், அதற்கு எதிராக எந்தவிதமான தீயசக்திகள் வந்தாலும் அவற்றை எல்லாம் தகர்ந்தெறிவோம் என்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இங்கே எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. மதியழகன் அவர்கள் கொடுத்திருக்கின்ற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்கின்ற வகையில் ஒருசில





வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நண்பர் மதியழகன் அவர்கள் கொடுத்த தீர்மானத்தை ஏதோ நான் எதிர்த்து அறிக்கை விட்டதாகவும், அதனால் எங்கள் கட்சியிலே தகராறு இருப்பதாகவும் ஒரு அங்கத்தினர் கூறினார். சந்தேகத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கும், கட்சியை வைத்தே தினம் தினம் பிழைத்துக்கொண்டிருக்கும் கனம் அங்கத்தினர் அப்படி இங்கு கூறினார்கள் . . .

கனம் சபாநாயகர்: அப்படி சொல்லக்கூடாது. அவர் அப்படி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் கட்சி, கட்சி என்று சொல்லிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? இரண்டு பேரும் சொல்லவேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டு கடைசியில் இப்படியெல்லாம் சொல்லக்கூடாது என்று புத்தியும் சொல்லுகிறார்கள் . . .

திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் சொன்ன முறையிலேயேதான் பதிலும் சொல்லவேண்டும். இவ்விதம் சொன்னவருடைய கட்சியில் என்ன நடந்தது. நீலகிரியில் அவருடைய சக அங்கத்தினரோடு மோதிக்கொண்டு கண்ணா பின்னா என்று ஏசினது எல்லாம் பத்திரிக்கையில் கொட்டை எழுத்துக்களில் வந்தது. தற்போது கோட்டைக்கு வந்து காங்கிரஸ் கமிட்டியில் விசாரணையிலிருக்கிறது. அவர்கள் மாதிரி நாங்கள் பயந்து கொண்டு சாகவில்லை; மிக்க தைரியத்துடன்தான் நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறோம். ஆளும் கட்சியினர் பலர் பேசும் போது இந்த மந்திரி சபையின் மீது தங்களுக்கு மிகுந்த நம்பிக்கையிருக்கிறது என்று சொன்னார்கள். அவ்வளவு நம்பிக்கையிருந்தால் மந்திரி சபைக்கு முதல்வராக பக்தவத்சலம் அவர்களை தேர்ந்தெடுக்கும்போது அவருக்கு எதிராக ஏன் போட்டியிட்டீர்கள்? காமராஜருக்கு ஏன் போட்டி போட வில்லை? நிறைய நம்பிக்கையிருக்கிறது என்றால் கனம் பக்தவத்சலம் அவர்களுக்கு எதிராக போட்டி போட்டிருப்பானேன்?

திரு. கே. டி. கோசல்ராம்: அது ஜனநாயகத்தைக் காட்டுகிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படியானால் அவர் இருந்தது சர்வாதிகாரத்தைக் காட்டுகிறதா? காமராஜ் இருந்த காலத்தில் எதிர்ப்பு இருந்ததா? இல்லை என்றால் அப்போது ஜனநாயகம் இல்லையா? காமராஜர் இருந்தபோது சர்வாதிகாரம்தான் இருந்ததா? அவரை எதிர்த்துப் போட்டியில்லை என்றால் சர்வாதிகாரம் இல்லையா? . இப்போது நடைபெறுவது தான் ஜனநாயகமா? அதை கனம் அங்கத்தினர் ஒத்துக்கொள்கிறார்களா? உண்மையிலேயே இந்த மந்திரி சபை மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லக் காரணம் இது நீதியின் அடிப்படையில் அமைக்கப்பட்ட மந்திரி சபை அல்ல, ஜாதியின் அடிப்படையில் அமைக்கப்பட்ட மந்திரி சபை என்பதாலும். இன்றைக்கு மந்திரி சபை எப்படி இருக்கிறது? ஆற்றல் மிக்கவர்

கள் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்ட மந்திரி சபையா இது? ஜாதிக்கு ஒருவருக்கு மந்திரி வேலை என்று அமைக்கப்பட்ட மந்திரி சபையே தவிர நீதியோடு, நேர்மையோடு அமைக்கப்பட்ட மந்திரி சபை என்று எங்களால் ஒத்துக்கொள்ள முடியாது. பொதுவாக நீதியையும் நிர்வாகத்தையும் பிரிக்கவேண்டும் என்று சொல்லப் பட்டாலும், நிர்வாகத்திலிருந்து நீதியையே பிரித்து விட்டார்கள். நிர்வாகத்தில் தலையிடுவது என்பது அன்றாடப் பிரச்னையாகி விட்டது. அப்படி இருக்கிற காரணத்தினால் ஏதாவது சுட்டிக் காட்டவேண்டுமென்று சொன்னால் எதைச் சுட்டிக் காட்டுவது? அத்திப் பழத்தைப் பிட்டால் அத்தனையும் சொத்தை என்று கூறக் கூடிய முறையில் எதை எடுத்துச் சொல்வது என்று தோன்ற வில்லை. இந்தச் சபையிலே எடுத்துச் சொல்லப்பட்டவைகளுக்கு எதற்கு பரிகாரம் காணப்பட்டிருக்கிறது? இந்தச் சபையிலே கூட்டுறவு பற்றி சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் விசாரணை முடிந்திருந்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அதற்குக் காரணம் என்ன? சுட்டிக் காட்டவில்லை என்று சொல்லுகிறார்களே தவிர, பட்ஜெட் விவாதத்திலே சொல்லும்போது நான் பிரேதர் தலுக்கு வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு பாங்க் ஜீப் போய் விபத்தில் சிக்கிக்கொண்டது பற்றி, ஜீப் நம்பர் உட்பட, போனது வந்தது ரசீது எல்லாவற்றையும் ஒப்படைத்தும் இன்று வரையில் நடவடிக்கை எடுக்காததன் காரணம் என்ன? காரணம் அவர் ஒரு காங்கிரஸ்காரர் என்பதுதானே? அவர் இருந்தால்தான் வட ஆற்காடு மாவட்டத்தில் காங்கிரஸ் வாழும் என்ற நம்பிக்கை சர்க் காருக்கு இருக்கிறது. குறிப்பாகச் சொல்லவில்லை என்று சொல்லு கிறார்கள். 1957-58-ம் ஆண்டில் இதே மாமன்றம் அமைத்த எஸ்டி மேட்ஸ் கமிட்டி பல இடங்களைச் சுற்றிப்பார்த்து வந்த நேரத்திலே புதுக்கோட்டை பகுதியில் வந்தபோது அங்கேயுள்ள ஸீட் ஃபார்மைப் பார்த்திருக்கிறது. அந்த ஸீட் ஃபார்ம் பொதுமக்கு விதைகளை விவசாயிகளுக்காக உற்பத்தி செய்யும் இடம். 1958-ம் ஆண்டு அந்தக் கமிட்டியின் தலைவர் திரு. சுப்பிரமணிய கவுண்டர் எழுதியிருக்கிறார்:

'A compensation of Rs. 2,300 was paid for 120 coconut trees in the Sakkottai State Seed Farm whereas a sum of Rs. 11,250 has been paid as compensation for 148 trees at the Tiruvarankulam State Seed Farm. The compensation of Rs. 600 per acre paid for the submergible portion of dry lands at Tiruvarankulam is very excessive. These lands were, it is understood purchased by the party for about Rs. 8,000 about 10 years back along with the coconut trees which are more than 20 years old and a compensation of about Rs. 48,219 has been paid for the land and Rs. 11,250 for the coconut trees. The Committee recommends that Government should take suitable action in regard to the heavy compensation paid in this case.'

இது 1958-59-ம் ஆண்டு வந்தது. பிற்பாடு ஏன் இது வரையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை?



நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டதா? எடுத்துக் கொள்ளப் பட்ட நடவடிக்கை என்ன? இப்போதும் அந்த ஸீட் ஃபார்ம் இருக்கிறது. அதை வாங்குவதற்காக போடப்பட்ட கமிட்டியில் கனம் அமைச்சருக்கு நெருங்கிய உறவினர் இருந்த காரணத்தினால், (பல அங்கத்தினர்கள்: யார் அந்த அமைச்சர்?) கனம் அமைச்சர் ராமையாதான். அவர்களுக்கு நெருங்கிய உறவினர் இருந்த காரணத்தினால், 8,000 ரூபாய்க்கு வாங்கப்பட்ட நிலம், மரங் களோடு 8,000 ரூபாய்க்கு வாங்கப்பட்ட நிலம், பிறகு நிலத்திற் கென்று 48 ஆயிரத்து சொச்சம் ரூபாய் கொடுத்து. மரங்களுக் கென்று 11 ஆயிரம் சொச்சம் ரூபாய் காம்பென்ஸேஷன் கொடுப்பது என்று சொன்னால் எப்படிக் கொடுத்திருக்க முடியும்? இன்னும் இந்த மாதரி பல இருக்கின்றன. அவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லுவதற்கு நேரம் இல்லை. இப்போது பல இடங் களில் நிலங்கள் வாங்கும்போது காம்பென்ஸேஷன் என்ற முறை யில் அதிகத் தொகையை கொடுத்து விவசாயிகளை வாங்கிக்கொள் என்று சர்க்கார் சொல்லுகிறது. விவசாயி வாங்க மறுக்கிறான். அவ்வளவு இல்லை என்று சொல்லுகின்றான். இருந்தாலும் வாங்கிக் கொள் என்று சொல்லுகிறார்கள் என்ன காரணம்? இதிலெல்லாம் பொது மக்கள் பணம் விரயம் ஆகவில்லையா? இதையெல்லாம் எடுத்துச் சொன்னால் இல்லை என்று சொல்லுவது. இப்போது சமீபத்திலே நம்முடைய மதிப்புக்குரிய முதல் அமைச்சர் அவர் கள் அக்கினி ஆறு என்ற ஆற்றில் பாலம் கட்டித் திறந்து வைத்தார்கள் அதில் தண்ணீர் இல்லை. தண்ணீர் இல்லை என்று சொன்னவுடன் லாரியில் தண்ணீர் கொண்டுவந்து ஊற்றி ஸ்லூயிசைத் திறந்து விடுகிறார். ஆறு அக்கினி ஆறு. போடப்பட்ட திட்ட அளவு 17,70,000 ரூபாய். இப்போது ஆகியிருப்பது 14,00,000 ரூபாய். இன்னும் பூராவும் முடிய வில்லை. போட்ட அளவுக்கு கட்டப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன என்றால் அந்தத் திட்டத்திற்குப் பக்கத்தில் ஒரு அமைச்சருக்கு நிலம் இருக்கிறதாம், அதற்கு வாய்க்கால் வரப் போகிறதாம். அவர் நிலத்திற்குச் சரியாகும் முறையில் செய்து, முறையான வழியில் நிறைவேறப்படாமல் பாக்கியாக விடப் பட்டிருக்கிறது. இந்த மாதிரி பல சொல்ல முடியும். நேரம் தான் இல்லை. புதுக்கோட்டையில் கூட்டுறவு இயக்கத்தில் நடப்ப தென்ன? கூட்டுறவு நாட்டுக்குத் தேவைதான்—ஆனால் கூட்டுறவு இயக்கம் சிலர் கையில் அகப்பட்டு, குடும்பச் சொத்தாக ஆகி அந்த நிலையில் இருக்கிறதே தவிர, கூட்டுறவு இயக்கம் நாட்டு மக்களுக்கு பயன்படும் முறையில் பயன்படுத்தப்படவில்லை. கூட்டுறவு இயக்கம் வேண்டாம் என்று சொல்லவில்லை. வம்பன் என்று ஒரு ஊர். ஊரின் பேரே வம்பன் . . .

**கனம் சபாநாயகர்:** அந்த வம்பன் இப்போது உங்களிடம் அகப்பட்டுக்கொண்டிருக்கிறதா?

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அந்த ஊரில் ஒரு கூட்டுறவு சங்கம். அதற்கு நடேசன் அம்பலகாரர் அவர்கள் பிரசிடெண்ட். கூட்டுறவு இயக்கம் ஆரம்பித்து, கைக்குத்தல் அரிசி கூட்டுறவு

சங்கம் என்று 1959-ம் ஆண்டுக்கு முன் 5,000 ரூபாய் போட்டு ஆரம்பித்தார்கள். இப்போது என்ன நிலைமை என்றால் அந்த கூட்டுறவு சங்கம் மூடப்பட்டது. 5,000 ரூபாயைக் கொடு என்று அதிகாரிகள் வாங்கிக் கொண்டு போய் விட்டார்கள் . . . அந்தக் கூட்டுறவு சங்கம் இருந்தபோது அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு மாவட்ட கூட்டுறவு சங்கத்திற்கு அங்கத்தினராக ஆனார். இன்றைக்கு சங்கம் போய் விட்டது. ஆனால் அவர் இன்னும் மாவட்ட சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறார். அதைக் கண்டுபிடிக்க குழு போடவேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் குழு என்ன செய்தது என்று சொல்லவில்லை. 65-வது பிரிவின்படி விசாரணை நடத்தலாம். அல்லது 72-வது பிரிவின்படி சூபர்ஸெஷன் செய்யலாம். அதுவும் இல்லை. கொடுத்த 5,000 ரூபாயையும் வாங்கிக் கொண்டு போய் விட்டார்கள். சங்கம் இல்லை. ஆனால் அங்கிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி மாவட்ட கூட்டுறவு சங்கத்திலே இன்னும் உறுப்பினராக இருக்கிறார். காரணம் என்ன? அவர் மந்திரிக்கு வேண்டியவர் என்பதுதானே? அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கக் கூடாதா என்று கேட்கலாம். ஐயோ, நடவடிக்கை எடுத்து விட்டால் அப்புறம் என்ன கதி? . . .

கனம் திரு. பூ. கக்கன்: மதிப்புக்குரிய பொதுப் பணித் துறை அமைச்சரைப் பற்றி மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்ட எந்த விஷயத்திலும் அவர் நீதிக்கும் நேர்மைக்கும் புறம்பாகப் போகும் மந்திரி அல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: நாங்கள் இதை வைத்து கட்சியை வளர்ப்பதாகச் சொல்லி ஸ்டண்ட் அடிக்கிறோம் என்று சொன்னார்கள். நாங்களும் சொல்லலாம் அல்லவா? மந்திரிகள் நெல் பிடிக்கப் போகிறார்கள். நெல் பிடிக்க மந்திரிகள்தானா போகவேண்டும்? இங்கிருந்துகொண்டே கலெக்டருக்கு ஃபோனில் உத்தரவு போட்டால் உடனே நெல் வராதா? மந்திரி பறக்கிறார்; மந்திரி ஓடுகிறார்; மந்திரி ரயிலில் போகிறார்;—இப்படியெல்லாம் பத்திரிகையில் செய்தி வரவேண்டுமே என்று பத்திரிகைகாரர்களிடம் சொல்லிவிட்டுப் போகிறீர்களே, இது கட்சியை வளர்க்க இல்லையா? கோட்டையில் குந்தியிராமல் ஓடினோம், ஊர் ஊராகப் போனோம், நெல் பிடிக்கச் சென்றோம் என்று பத்திரிக்கைகளில் செய்தி வர வேண்டும் என்று ஸ்டண்டு அடிக்கிறார்களா? நீங்கள் ஏன் போகிறீர்கள் நெல் பிடிக்க? மந்திரி வேலை பார்க்கச் சொன்னால் நெல் பிடிக்கும் வேலை பார்க்கிறீர்களே. இது சரியா?

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார் . . .

கனம் சபாநாயகர்: அதனால்தான் ஓடுகிறார்கள்.

திரு. மு. கருணாநிதி: 'பரந்து கெடுக' என்று தான் வள்ளுவர் கூறினார். 'பரந்து ஓடுக' என்று வள்ளுவர் பாடவில்லை.





திரு. அ. பெ. தர்மலிங்கம்: 'தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதியார் சொன்னார். காலஞ் சென்ற புரட்சி கவிஞர் பாரதிதாசன் கூறினார்:

தனி மனிதன் தேவைக்கே இத்தேசம் உண்டென்றால்
அத் தேசம் ஒழிதல் நன்றே—என்று.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருவதற்கு முன்பே ராஜிநாமா செய்து இருக்க வேண்டும். அதைத்தான் செய்யவில்லை. நம்பிக்கையில்லா தீர்மானம் வந்த பிறகு, நிலமை இவ்வளவு கடுமையாகப் போன பிறகு, நீங்களாகவே விட்டுவிட்டுச் சென்றிருக்கவேண்டாமா? உங்களால் முடியவில்லை என்றால், முடியவில்லை என்று சொல்லிவிட்டு நீங்களாகவே விட்டுவிட்டுப் போக வேண்டும். 'நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்' என்று எங்களைக் கேட்பதில் என்ன பிரயோசனம்? முடியாத காரியத்தை நீங்கள் ஏன் செய்து கொண்டிருக்கிறீர்கள்? நீங்களாகவே விட்டுவிட்டுப் போக வேண்டியதுதானே? எங்களைச் சொல்லுங்கள் என்றால் நாங்கள் சொல்லுவதாயிருந்தால் நாங்கள் அந்தப் பக்கத்தில் அல்லவா உட்கார்ந்திருக்கவேண்டும்.

மேலும் தரமான எதிர்க்கட்சி இல்லை என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதாகப் பார்த்தேன்.

கனம் சபாநாயகர்: 'தரம்' 'தரம்' என்று, 'தரம்' இரண்டு பக்கத்திலும் பலமாகிவிட்டது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது சரியோ, தப்போ, இன்றைக்கு நடக்கிற தரத்தை பார்த்த பிற்பாடு நான் சொல்லியதில் ஒன்றும் ஆட்சேபனைக்கு இடம் இல்லை என்றுதான் தோன்றுகிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: தாயைப்போல பிள்ளை, நூலைப் போல சேலை என்று சொல்லுவார்கள். இவ்வளவு ஆண்டு காலமாக எங்களை நீங்கள் தரமுள்ளவர்களாக ஆக்க முடியவில்லை. அது உங்களுடைய குற்றம்தான். எங்கள் குற்றம் அல்லவே. உங்களிடத்தில் நாங்கள் வந்திருப்பதே தவறுதான்.

கனம் சபாநாயகர்: இரண்டு பேர்களும் அதை விட்டுவிடுவது நல்லது. கனம் அங்கத்தினர் அதை ஒத்துக்கொள்கிறார்களா? அவர் பேச்சு வேகத்தில் ஒத்துக்கொள்வது மாதிரி இருக்கிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னால்கூடப் பரவாயில்லை. கனம் அங்கத்தினர் திரு. மாதா கவுடர் அவர்கள் எங்களுடைய தரத்தைப்பற்றி சொன்னார். அகில உலக அதிசி மோசடி . . .

MR. SPEAKER: Mr. Karunanithi can tell me what is meant by tharam.

[23rd October 1964

**திரு. மு. கருணாநிதி :** தரம் என்பது தகுதியைக் குறிக்கும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆங்கிலத்தில் சொன்னால் 'ஸ்டாண்டர்டு'.

**கனம் சபாநாயகர் :** அப்பொழுது இதிலே கோபிப்பதற்கு ஒன்றும் இல்லையே.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அதை கொள்கை அடிப்படையில் கொண்டிருக்கிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** 'தரம்' என்றால் என்ன அர்த்தம்? 'தரம்' என்றால் கேவலமான அரத்தத்தில்தான் சொல்லுவதா?

**திரு. ப. உ. ஷண்முகம் :** 'தரம்' என்பதற்கு ஆங்கிலப் பதம் 'ஸ்டாண்டர்டு' என்று இருந்தாலும், தமிழ் நாட்டுப் பழக்கப்படி கேவலமாகச் சொல்லும்போதுதான் அம்மாதிரி சொல்லுவது பழக்கம். உதாரணமாக 'மொட்டைத் தலை' என்பதற்கு ஆங்கிலத்தில் 'ஷேவ்டு ஹெட்' என்று சொல்வார்கள். 'ஷேவ்டு' என்று சொல்வதில் ஒன்றும் தவறுதல் இல்லை. ஆனால், 'மொட்டை' என்று சொன்னால் அதற்கு வேறு அர்த்தம் கொடுக்கும். அது போல 'தரம்' என்று தமிழில் சொன்னால் அதற்கு தனி அர்த்தம் கொடுக்கப்படுகிறது. அப்படிச் சொல்லுவது கேவலமாக இருப்பதின் காரணத்தினால்தான், இந்த மன்றத்தில் அமைச்சர் வாயால் அதைச் சொல்லுவது தரக்குறைவு.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர்தான் இப்பொழுது சொல்லுகிறார்.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அந்த வார்த்தையை உபயோகப் படுத்தக்கூடாது என்று சொல்லிவிட்டு, அவரே உபயோகப்படுத்துகிறார்.

So, the hon. Member is not prepared to abide by it but he wants the Minister to abide by it. That is very bad.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அகில உலக அஸ்தி மோசடி இந்த நாட்டில் நடந்தது போல் வேறு எந்த நாட்டிலும் நடைபெற்றதில்லை. இதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? கலெக்டரே நேரே வந்து கண்டுபிடித்தாரே? லட்சக்கணக்கான மக்கள் கூடினார்களே? இது ஒரு பெரிய மோசடி இல்லையா? புனிதமான காலஞ் சென்ற நேருவின் அஸ்தியை இப்படி செய்யலாமா? எங்களுக்கு கொள்கை இல்லை என்று சொல்லுகிறார்கள். எங்கேயாவது போய் மொட்டை அடித்துக் கொண்டு ஸ்நானம் செய்தால் செய்த பாவம் தீர்ந்துவிடுமா? காங்கிரஸ் கமிட்டி தலைவர் இதற்கு உடந்தையாக இருந்ததாகக் கலெக்டர் கண்டுபிடித்தார்களே? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?



23rd October 1964] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

என்னென்னமோ மோசடி எல்லாம் நடப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். அஸ்தி மோசடி நடப்பதை இந்த ஆட்சியிலே தானே கேள்விப்படுகிறோம். ஏன் சர்க்கார் இதற்கு உடந்தையாக இருக்கிறது? இப்படிப்பட்ட காரியங்கள் செய்வதில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் உடந்தையாக இருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டை பகிரங்கமாக சொல்ல விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல. ஏதோ நாங்கள் முடிச்சுப் போடுகிறோம் என்று சொல்லப்பட்டது. முடிச்சுப் போடுவது நல்லதுதான், தப்பு இல்லை. ஆனால் முடிச்சை அவிழ்ப்பதுதான் தவறு, குற்றம்.

**கனம் சபாநாயகர் :** வெவ்வேறு முடிச்சை நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு பேர்களும் ஒரே முடிச்சை நினைக்கவில்லை.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** குறிப்பாக, விவசாய உணவு உற்பத்தியை மட்டும் பற்றி சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** The hon. Member can take five more minutes.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** சாதாரணமாக ஒருவனுக்கு ஏழரை நாட்டுச் சனியன் பிடித்திருக்கிறது என்று சொல்லுவார்கள். ஆனால் இந்த நாட்டுக்கு ஏழரை நாட்டு சனீசுவரன் பிடிக்கவில்லை. இந்த நாட்டை 17½ ஆண்டு கால சனீசுவரன் பிடித்து ஆட்டுகிறான். அதனால்தான் ஒன்றும் உருப்படவில்லை. தொட்டதெல்லாம் துலங்கவில்லை. தொடாததும் ஒன்றுமில்லை. எல்லாவற்றையும் தொட்டாகிவிட்டது. ஒன்றும் உருப்படவில்லை. விவசாயம் முன்னேற்றம் அடைந்ததா? இல்லை. காரணம் செய்ய வேண்டிய காரியங்களை செய்ய வேண்டிய காலத்தில் செய்ய வேண்டிய முறைப்படி செய்யாத காரணத்தினால்தான் உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயத்தை எடுத்துக்கொண்டால் கக்கன் அவர்கள் விவசாய மந்திரியாக இருக்கிறார். அவர்கள் எங்களைப் போன்றவர். அதனால் எங்கள் பிரதிநிதியாக இருக்கிறார். உணவு மந்திரியாக இருப்பவர் திரு. மன்றாடியார் அவர்கள். அவர்கள் மிராசுதார், ஸ்டாக் வைப்பதில் பழக்கம், அந்த வகையிலே வசதி உள்ளவர்கள். இரண்டும் ஒருவரிடத்தில் இருந்தால் என்ன கெட்டுப்போய்விடும்? விவசாய உற்பத்தியைப்பற்றி கேட்டால் 'நீங்கள் விவசாய மந்திரியைப் போய் பாருங்கள்' என்று உணவு மந்திரி சொல்லுகிறார். சாப்பாடு போடுங்கள் என்றால் 'நீங்கள் உணவு மந்திரியைப் போய் பாருங்கள்' என்று இவர் சொல்லுகிறார். இரண்டு துறைகளும் ஒரு மந்திரி கையிலே இருந்தால் என்ன கெட்டுப் போய் விடும்? தலை வேறு, முண்டம் வேறாக இருப்பானேன்? இரண்டும் ஒருவரிடத்தில் இருப்பது நல்லது அல்லவா?

சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். புள்ளிவிவரம் காண்பிக்கிறார்கள். அந்தக் காலத்தில் ஒரு பெரியவர் சொன்னார். 'பள்ளிக் கணக்கு புள்ளிக்கு ஆகாது' என்று சொன்னார். இங்கே பல

அங்கத்தினர்கள் மேல் நாட்டுக்கும் நம் நாட்டுக்கும் இருக்கிற புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டுகிறார்கள். மேல் நாட்டைப் பற்றி எனக்குத் தெரியாது. நம் நாட்டைப் பற்றி சொல்லுகிறேன். 'சீனிச்சர்க்கரை சித்தப்பா என்றால் ஏட்டில் எழுதி தின்னப்பா' என்று சொல்லுவார்கள். இந்த நாட்டு மக்களுடைய நிலைமை அப்படித்தான் இருக்கிறது. காகிதத்தில் புள்ளிவிவரம் இருந்தால், வயிற்றுக்கு சோறு ஆகிவிடுமா ? வயிறு ரொம்ப வில்லையே ? புள்ளிவிவரத்தைக் காட்டினால் வயிறு ரொம்பி விடாது. புள்ளிவிவரத்தினால் நாட்டு மக்களை ஏமாற்றிவிட முடியாது. உணவுப் பிரச்சினையை தீர்த்துவிட முடியுமா ? முடியவே முடியாது. நிலச் சீர்திருத்தம் என்று சொல்லி பல சட்டங்கள் கொண்டு வந்தார்கள். 1952-ல் தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. 1955-ல் குத்தகைக் காரர் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதற்குப் பிறகு நியாய வாரச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்குப் பிறகு லாண்டு ஸீலிங் ஆக்ட் கொண்டுவரப்பட்டது. இம்மாதிரி எவ்வளவோ சட்டங்கள் விவசாயிகளின் நன்மையைக் கருதி செய்யப்பட்டன. அதனால் ஏற்பட்ட பலன் என்ன ? எண்ணெய் செலவழித்தும் பிள்ளை பிழைக்கவில்லை என்றால் என்ன பிரயோசனம் ? 'ஆபரேஷன் சக்சஸ்புல் பேஷண்டு கொலாப்ஸ்டு' என்பது போலத்தான் இருக்கிறது விஷயம் என்ன ஆயிற்று, ஆள் 'குளோஸ்'. இந்த சட்ட திட்டங்களினால் எந்த விவசாயியும் லாபம் அடையவில்லை. 30 ஏக்கர் யாரும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று சட்டம் சொல்லுகிறது. எந்த மிராசுதாரிடமும் 30 ஏக்கருக்கு மேல் இல்லையா ? 5 ஏக்கருக்கு மேல் குத்தகை விவசாயி சொந்த சாகுபடிக்கு வைத்துக் கொள்ளக்கூடாது என்பது சட்டம். ஆனால் யாரிடமும் அப்படி 5 ஏக்கருக்கு மேல் இல்லையா ? செய்ய வேண்டியதை செய்ய வேண்டிய காலத்தில் செய்யாததினாலே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காலத்தில் செய்திருந்தால், அப்படிப்பட்டவர்களெல்லாம், நிலச்சுவான்தார்களெல்லாம் காங்கிரஸ் கட்சியில் இருக்க மாட்டார்கள், அதற்கு ஒத்துழைக்க மாட்டடார்கள் மிராசுதார்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையிலேதான், கொண்டுவரப்பட்ட சட்டங்கள் அமுல் செய்யப்பட்டிருக்கின்றன. சட்டங்களைக் கொண்டு வந்தால் மட்டும் போதாது. அவைகள் எந்த நோக்கத்திற்காக கொண்டு வரப்பட்டனவோ, அந்த நோக்கம் நிறைவேற வேண்டும். அதற்கு வழிவகை செய்து கொடுக்கத் தவறிய காரணத்தினால் மந்திரி சபை, மந்திரிகள் இதற்கு உடந்தையாக இருந்ததினால் விவசாயிகளுக்கு நல்லது செய்யவில்லை என்பதைக் காட்டி நம்பிக்கையில்லை என்று சொல்லுகிறோம்.

அதைப்போலவே, பல விஷயங்களைப்பற்றி இங்கே சொல்லலாம். பள்ளி ஆசிரியர்களை, எங்கள் வாடை அடித்தாலே மாற்றிவிடுகிறார்கள். ஆதாரத்தோடு எடுத்துக் காட்டுங்கள் என்று சொல்லுகிறார்கள். தஞ்சையில் ராமமூர்த்தி என்று ஒரு ஆசிரியர் இருந்தார். கனம் திரு. வெங்கட்டராமன் அவர்களுடைய





தேர்தலுக்கு அவரும் கூடவே இருந்து பிரசாரம் செய்தார். போஸ்டரைக்கூட கொண்டு வந்து கொடுத்தோம். என்ன செய்தார்கள்? யாராவது ஒரு ஆசிரியருக்கு எங்கள் வாடை அடித்தால் போதும், உடனே அவர் மாற்றப்படுகிறார். அதிகாரிகள் அரசியலில் கலக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி ஒருவரை அங்கத்தினராகச் சேர்த்திருக்கிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** யாரைச் சேர்த்திருக்கிறார்கள் ?

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** நா நயினார், நிர்வாக அதிகாரி, கீழ்க்கரை பஞ்சாயத்து, கீழ்க்கரை என்பவர் அங்கத்தினராக சேர்க்கப்பட்டிருக்கிறார். அவர் பஞ்சாயத்து போர்டு எக்சிக்யுடிவ் ஆபிசர், அவரை அங்கத்தினராக சேர்த்திருக்கிறார்கள். ஏன் ? காங்கிரஸில் சேருங்கள், இல்லாவிட்டால் உங்களுக்கு உத்தியோகம் கிடையாது என்று மிரட்டி, அகப்பட்டவர்களை அங்கத்தினர்களாக சேர்க்கிறார்கள். இது நீதி உள்ள சர்க்காரா ? நேர்மை உள்ள சர்க்காரா? இது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ரசீதுதான் (ரசீதை அங்கத்தினர் அவர்கள் காட்டினார்). மோசடி ரசீது அல்ல. ரசீது நம்பர் இருக்கிறது. வேண்டுமானால் உங்கள் மூலம் இதை நான் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** யார் சேர்த்தது என்று விவரம் கொடுத்தால் தேவலை.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** எஸ் வி பாலன் 27—2—64-ல்

**கனம் சபாநாயகர்** எப்படி அது கனம் அங்கத்தினரிடம் வந்தது என்று சொல்ல முடியுமா?

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அது சொல்ல முடியாது. நீங்கள் விரும்பினால், தனியாகச் சொல்லலாம்.

**கனம் சபாநாயகர் :** அவரே கொடுத்தாரா ?

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அவரா கொடுப்பார் ? அவர் மகா 12-30 p.m.
துணிச்சல் உள்ள ஆள். இல்லாவிட்டால் மெம்பராகச் சேருவாரா? எங்கள் வாடை அடித்தாலே பள்ளி வாத்தியார் படுகிற பாடு எங்களுக்குத் தெரியுமே? இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் பலவற்றை நான் சொல்லமுடியும். விவசாய அபிவிருத்திக்காக இந்த சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிற வழிவகைகள் போதாது என்பதை கூறிக்கொண்டு, இந்த அமைச்சரவை பேரில் எங்களுக்கு நம்பிக்கையில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு எங்களுக்கு மாத்திரமல்ல, எங்களிடம் ஆளும் கட்சி அங்கத்தினர் எவ்வளவோ பேர் சொல்லியிருக்கிறார்கள்—அவர்களும் இதற்கு ஆதரவு தர வேண்டுமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** கனம் சபாநாயகர் அவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது ஒன்று. திரு. கலியாணசுந்தரம் அவர்கள் சர்க்காரின் கொள்கை தவறாக இருக்கிறது என்று சொல்லுவது மற்றொன்று. இப்படி முரண்பட்ட நிலையில் இரண்டு தீர்மானங்கள் இந்த சபைமுன்பு கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இங்கே எதிர்க்கட்சி நண்பர்கள் பேசியதை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, நம்பிக்கையில்லாத் தீர்மானம். அடுத்தபடியாக கம்யூனிஸ்ட் மெம்பர் கொண்டுவந்த தீர்மானத்தின்மீது இதுவரையிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு அங்கத்தினராவது பேசினதாகத் தெரியவில்லை. கடைசியாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் உணவு நெருக்கடியைப்பற்றி பேசுவதற்காகத்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அதைப்பற்றித்தான் முக்கியமாக எல்லோரும் பேசுகிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** இரு பக்கமும் நிறைய சத்தம் கேட்கிறது. அமைதியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** இதற்கு தனியாக ஒரு நாள் ஒதுக்கவேண்டுமென்று சொல்லி, இதைப்பற்றி பேசினால் அதிலே அர்த்தம் இருக்கும். நிர்வாகத்தில் நடைமுறையில் இருக்கக்கூடிய குறைகள், டிஸ்டிரிபியூஷனில் இருக்கக்கூடிய குறைகளைப்பற்றி பேசுவது இந்த இடத்தில் அவசியமில்லையென்று நான் நினைக்கிறேன். எனக்கு முன்பு பேசிய நண்பர் அதிகமாக தாக்கிப் பேசிவிட்டார். ஆகையால் அதைப்பற்றி நான் மேலும் பேச வேண்டாமென்று நினைக்கிறேன்.

நண்பர் திரு. சா. கணேசன் அவர்கள் எடுத்துச்சொன்ன சில கொள்கைகளைப்பற்றி நான் பேச விரும்புகிறேன். கட்டுப்பாடு வேண்டாமென்று அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் அன்னிய நாட்டிலிருந்து வரக்கூடிய கோதுமைக்கு கட்டுப்பாடு இருக்கிறது. அதை அமல் நடத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். மேலும், ஒரு மாநிலத்திலிருந்து அடுத்த மாநிலத்திற்கு தானியங்கள் போவதற்கு கட்டுப்பாடு வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் இருக்கிறது. விலை அதிகமாக இருக்கிறதே, அதைக் கட்டுப்படுத்த வேண்டாமா என்பதைப் பற்றி அவர் பேசவில்லை. அவரவர்களுடைய கட்சியின் அடிப்படையில்தான் இங்கே பேசுகிறார்கள். அகில இந்தியா பூராவிலும் இருக்கக்கூடிய உணவு நெருக்கடியை மனதில் வைத்து, நாட்டினுடைய கஷ்ட நிலையை மனதில்கொண்டு, அதைப்பற்றிப் பேசுவதற்கு பதிலாக, கட்சி அடிப்படையில் பேசுவதைப் பார்க்கும் பொழுது உண்மையிலேயே வருந்தக்கூடிய நிலையில் இருக்கிறது. உணவு நெருக்கடி என்பது நாட்டின் நெருக்கடி. இந்த நிலையில் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து அதற்கு வழிவகை காண முயற்சித்தால் அது நலமாக இருக்கும். திரு. கலியாணசுந்தரம்





அவர்கள் அர்பன் ஏரியாவிற்கெல்லாம் ரேஷன் முறையைக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னார்கள். இந்த உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நாம் இரண்டு விதமான பாலிசிகளைக் கையாளவேண்டும். ஒன்று ஷார்ட் டெர்ம் பாலிசி, இரண்டாவது லாங் டெர்ம் பாலிசி. உடனடியாகச் செய்யவேண்டியது என்னவென்றால், அர்பன் ஏரியாவையும், டெஃபிசிட் பாக்கெட்டுகளையும் ஒன்றாக இணைத்து, அதிகமாக ஸ்டாக்கைக் கொண்டுவந்து சேர்த்து பேமிலி கார்டு முறையை ஏற்படுத்தினால் நலமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். இப்பொழுது இந்த நெருக்கடி அர்பன் ஏரியாவிலும், டெஃபிசிட் பாக்கெட்டுகளாக உள்ள நகரங்களிலும்தான் அதிகமாக இருக்கிறது. இந்த இடங்களுக்கு வெளியிலிருந்து அரிசி வரவேண்டிய நிலையிலிருப்பதால் மக்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே, பம்பர் ஸ்டாக் கொண்டுவந்து பேமிலி கார்டு முறையையும் ஏற்படுத்தினால் நலமாக இருக்கும். சர்க்காருடைய மேற்பார்வையில் நெல் கொள்முதல் செய்வதைப்பற்றி நான் குற்றம் சொல்லவில்லை. அதே நேரத்தில் சர்க்கார் பொறுப்பிலேயே எல்லாவற்றையும் விட்டுவிட்டால் ஆங்காங்கு நடக்கக்கூடிய ஊழல்கள் தெரியாமல் போய்விடும். ஆகவே, நிர்வாகத்தில் இருக்கக்கூடிய கஷ்டங்கள், அன்றாடம் நடைமுறையில் ஏற்படக்கூடிய கஷ்டங்கள், இவைகளையெல்லாம் கவனிப்பதற்கு ஸ்டேட் லெவல் கமிட்டி ஒன்று இருந்தால், இந்த ஷார்ட் டெர்ம் பாலிசியினால் ஏற்படக்கூடிய குறைகளை நிவர்த்திக்க முடியும். ஸ்டேட் லெவலில் ஒரு கமிட்டியும் ஜில்லா அடிப்படையில் ஒரு கமிட்டியும் கூட இருக்கலாம். முன்பு ரேஷனிங் கொண்டு வந்தபொழுது உணவு கமிட்டியென்று ஒன்று இருந்தது. இது அட்வைசரி கமிட்டியாக இருந்தால் போதும். விநியோகத்தில் இருக்கக்கூடிய கஷ்டங்களையெல்லாம் தெரிந்து கொள்வதற்கும், நடைமுறையில் இருக்கக்கூடிய குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் ஸ்டேட் லெவலில் ஒரு கமிட்டியை நியமனம் செய்தால் அது நல்ல முறையில் வேலை செய்யும். மேலும், ஸ்டேட் லெவலில் லெவி சிஸ்டம் என்ற முறையைக் கொண்டுவரலாமென்று நான் நினைக்கிறேன். ஒரு ஏக்கருக்கு இவ்வளவு மூட்டைகள் கொடுக்க வேண்டுமென்று சொல்லலாம். அர்பன் ஏரியாவிலும், டெஃபிசிட் பாக்கெட்டுகளிலும் உள்ள ஜனத்தொகையைக் கணக்கிட்டு எவ்வளவு தேவை என்பதை முதலில் பார்க்கவேண்டும். அன்னிய நாட்டிலிருந்து வரக்கூடிய உணவு தானியம் போக பாக்கியுள்ளதற்கு இந்த லெவி முறையைக் கொண்டுவந்தால் இப்பொழுதிருக்கக்கூடிய கஷ்டம் நிவர்த்தியாகுமென்று நினைக்கிறேன். இப்பொழுது பிரைஸ் கண்ட்ரோல் இருக்கிறது. அது வரவேற்கக்கூடிய ஒன்று. இன்று பிரைஸ் கண்ட்ரோல் இல்லாவிட்டால் விலைகள் மேலும் மேலும் ஏறிக் கொண்டே போகும். 1952-ல் சர்க்கார் கண்ட்ரோலை எடுத்தார்கள். அதற்குப் பிறகு வருஷா வருஷம் விலை ஏறிக்கொண்டே போகிறது. அன்று கண்ட்ரோலை எடுத்தவர்களின் மனப்பான்மை தற்காலிகமாக இருக்கலாம். நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், அது ஒரு டெஃபிசிட் ஏரியாவாக இல்லாவிட்டாலும்

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [23rd October 1964

சர்ப்ளஸ் ஆக இல்லாமலிருப்பதினால் கண்ட்ரோல் இருப்பது அவசியம். அதே நேரத்தில் கண்ட்ரோல் இருந்தால் விவசாயிகளுக்குப் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. என்னைப் பொறுத்த வரையில் இந்த லெவி முறையை ஏற்படுத்தி கண்ட்ரோலையும் வைத்து இந்த லெவி முறையினால் கிடைக்கக்கூடிய தானியத்தை அர்பன் ஏரியாக்களுக்குக் கொடுத்துவிட்டால் கஷ்டம் இருக்காது என்று நினைக்கிறேன். டிஸ்டிரிபியூஷனைக் கவனித்துக்கொள்ள ஸ்டேட் லெவலில் ஒரு அட்வைசரி கமிட்டி இருக்கவேண்டியது அவசியம். தாலூக்கா லெவலிலுங்கூட உணவு அட்வைசரி கமிட்டி ஏற்படுத்தி, மேற்பார்வை பார்க்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டால் ஆங்காங்கு நடக்கக்கூடிய தவறுகளை நிவர்த்தி செய்ய முடியும்.

இப்பொழுது இந்த அகில இந்திய பாலிசியைப் பொறுத்த வரையில் அது ஒரு நல்ல கொள்கைதான். ஆனால், அதை அமல் நடத்தும்பொழுது நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் எல்லாம் சரியாக நடக்கிறது. மற்ற மாநிலங்களில் அந்தக் கொள்கை சரியாக நடத்தப்படவில்லை.

MR. SPEAKER : The hon. Member should not criticise Governments of other States.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : உதாரணமாக இன்று கேரளாவை எடுத்துக்கொண்டால் அவர்கள் அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். எந்த அடிப்படையில் வாங்குகிறார்கள் என்பதை பார்க்கும்பொழுது அது ஆராய்ச்சிக்குரிய விஷயமாக இருக்கிறது. குறிப்பிட்ட விலைக்கு மேல் நம்மால் வாங்க முடியவில்லை. ஆனால், கேரளாவில் இருக்கக்கூடியவர்கள் அதிக விலை கொடுத்து வாங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். நமது கம்யூனிஸ்ட் நண்பர் ஸ்டேட் டிரேடிங் வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே மெம்பராக இருந்து இருக்கிறார்கள். அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட்டிலே ஸ்டேட் டிரேடிங்கினால் அரசாங்கத்திற்கு பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, ஸ்டேட் டிரேடிங் என்பது கூடாது. ஓவர்ஹெட் சார்ஜ்கள் அதிகமாக ஏற்படும். மேலும், ஊழல்களும் ஏற்படும். அதற்குப் பதிலாக மாகாண ரீதியில் மத்திய சர்க்கார் ஒரு கொள்கையை வகுத்து டிரேடிங் கார்ப்பரேஷன் என்று வைக்கலாம். அதாவது சர்க்கார் 50 பர்சென்ட் முதலீடு செய்யவேண்டும். பொது மக்களிடமிருந்து ஷேர்கள் மூலமாகவோ அல்லது காண்ட்ரிபியூஷன் மூலமாகவோ பாக்கியுள்ள 50 பர்சென்ட்டைப் பெற வேண்டும். இவ்வாறு முதலீடு செய்து இன்டிபெண்டன்ட் ஆக ஒரு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனை ஏற்படுத்தலாமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அதை அவர்கள் வாங்கவும், வினியோகம் செய்யவும் வழிவகைகள் செய்யலாம். உதாரணமாக, டீயை எடுத்துக் கொண்டால், உற்பத்தி செய்பவர்கள் அவையெல்லாம் பூல் செய்து விநியோகம் செய்கிறார்கள். ஒரு குறைபாடும் இல்லை. ஒரு சிறிய கிராமக் கடைக்குக்கூட டீ வந்துவிடுகிறது. மொத்தமாகப் பூல் செய்து அப்படிச் செய்கிறார்கள். ட்ரேட் கார்ப்பொரேஷன் போல் பொதுப் பூலாக வைத்துக் கொண்டு நிர்வாகம் செய்கிறார்கள். ஸ்டேட் டிரேடிங் கார்ப்பொரேஷன் வைத்தால் ஏகப்பட்ட ஊழல்கள் ஏற்படும்.



23rd October 1964] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

அடுத்தபடியாக உற்பத்தியைப் பெருக்க வேண்டும். உற்பத்தித் திட்டத்தை விரிவு படுத்த வேண்டும். அதைச் செய்தாலொழிய நாட்டுக்கு வழியில்லை. உணவு உற்பத்தியைப் பெருக்க பல திட்டங்கள் இருக்கின்றன. இப்பொழுது மெட்ராஸ் பப்ளிக் ட்ரஸ்ட்ஸ் ஆக்டை எடுத்துக் கொள்ளுங்கள். ஐந்து ஏக்கருக்கு மேல் ஒருவன் சாகுபடி செய்ய வேண்டாம் என்று போட்டிருக்கிறோம். ஆனால் ஒரே குடும்பத்தில், அண்ணன் ஐந்து ஏக்கரும், தம்பி ஐந்து ஏக்கரும் வைத்து விவசாயம் செய்கிறார்கள். இதையெல்லாம் தனித்தனியாகப் பிரித்து உற்பத்தி செய்தால்தான் உற்பத்தி பெருக வழி ஏற்படும். மடாதிபதிகளை எடுத்துக் கொண்டாலும் அப்படித்தான். அவர்கள் நிலத்திலும் அதிக விரயம் ஆகிறது. அதையெல்லாம் நிவர்த்திக்க வழி செய்தால்தான் உற்பத்தி பெருக முடியும். சாகுபடிதாருக்கு ஊக்கம் ஏற்பட்டு உற்பத்தியைப் பெருக்குவார்கள். அடுத்தபடியாக இர்ரிகேஷனை எடுத்துக் கொள்ளுங்கள். அது ஐந்து பேர் பொறுப்பில் இருக்கிறது. அதைப் பிரித்து அமைத்தால்தான் செவ்வனே செயல் படமுடியும். ப்ரைம் மினிஸ்டர்கூட சொல்லியிருக்கிறார்கள். "இர்ரிகேஷனை இரண்டாகப் பிரிக்கவேண்டும். மைனர் இர்ரிகேஷன், மேஜர் இர்ரிகேஷன் என்று செய்யவேண்டும். இரண்டு பேர்கள் பொறுப்பில் இருக்க வேண்டும், அப்பொழுதுதான் அது செவ்வனே நடக்கும்" என்று இப்பொழுது எஸ்.எம்.ஐ.பி., ஃபுட் ப்ரொடக்ஷன், ரெவின்யூ ட்டிபார்ட்மெண்ட், பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண் என்றும், பிளாக் லெவல் இர்ரிகேஷன் என்றும் ஐந்து இலாக்காக்களின் பொறுப்பில் இருக்கிறது. இவைகளையெல்லாம் மாற்றி நல்ல முறையில் அமைக்க வேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு க்ரெடிட் ஃபெசிலிடிகள் கொடுக்க வேண்டும். அதற்கான வழிவகை செய்ய வேண்டும். ஃபெர்டிலைசர் விநியோகம், சாயில் டெஸ்ட் இவைகளின் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இந்தத் திட்டங்களையெல்லாம் வகுத்து நல்ல முறையில் செயல் படுத்தினால். . .

**திரு. ஆர். வி. சுவாமிநாதன்**: இது என்ன பட்ஜெட் ஸ்பீச்சா என்று கேட்கிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : அதிகமான உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று இந்த வழிகளையெல்லாம் சொல்லுவது நலம் என்று நினைக்கிறேன். கனம் அங்கத்தினர் சுவாமிநாதன் மட்டும் அப்படியெல்லாம்தான் பேசும்போது சொல்லலாம் என்கிறார்கள். கண்ட்ரோல் வந்தால் ஜனங்களுக்கு நன்மை ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:* தலைவர் அவர்களே, எதிர்த் தரப்பிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கும், நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒரு மந்திரி சபைமேல் கொண்டு வரவேண்டுமானால், சில சில தகுதியான, தரமான காரணங்கள் இருக்க வேண்டும். ஆளும் தரப்பினர் அத்து மீறிப் போகின்றார்களா? ஆளும் கட்சி வண்டி தடம் புரண்டு விட்டதா? ஆணவத்துடன் நடக்கிறார்களா? எதிர்க் கட்சியினரின் ஆலோசனைகளைக் கேட்காமல் தன் போக்கில் செல்லும் நிலை ஏற்பட்டு விட்டதா? அகங்காரம் பிடித்தவர்களாக ஆகிவிட்டார்களா? என்ன நடந்து விட்டது அமைச்சரவையை மாற்றி அமைக்க வேண்டும் என்று நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு?. எதிர்க் கட்சி, சுதந்திராக் கட்சித் தலைவர் காலையில் சொன்னார்கள் ஆளும் கட்சியினரும், எதிர்க் கட்சியினரும் இந்த சட்ட மன்றத்தில் மிகவும் பரஸ்பர சௌஜன்யமாக நடந்து கொள்கிறார்கள் என்று. அவர்களே, அப்படி எடுத்துக் கூறும்போது, நம்பிக்கை இல்லாத் தீர்மானம் எதற்கு என்று ஒரு சந்தேகம் எழுகிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து பேசும்போது, எதிர்த் தரப்பினர் ஒருமைப்பாட்டு அடிப்படையில் பேசுகிறார்களா என்றால் அதுவும் இல்லை. ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களில் ஒரு சாரார் கட்டுப்பாடு வேண்டும் என்று சொல்லுகிறார்கள்; இன்னொரு சாரார் கட்டுப்பாடு வேண்டியதே இல்லை என்கிறார்கள், கட்டுப்பாட்டை எடுத்துவிட்டால் உடனே அரிசி, நெல் எல்லாம் அகப்பட்டுக் கொண்டே இருக்கும் என்கிறார்கள். இன்னுமொரு சாரார் நடுவிலே இருந்துகொண்டு, இருக்கலாம், இருக்காமலும் இருக்கலாம் என்று பள்ளிக்கூடத்திற்குப் போவதற்கு முன்பு 'புஷ்பம்' என்று சொன்ன பிள்ளை பள்ளிக்குப் போன பிறகு, 'புய்ப்பம்' என்று சொல்ல, 'என்ன ஆசிரியரே, புஷ்பம் என்று சொன்ன பிள்ளை புய்ப்பம் என்கிறானே' என்று கேட்டதற்கு ஆசிரியர் 'புய்ப்பம் என்றும் சொல்லலாம், புஷ்பம் என்றும் சொல்லலாம்' என்று சொன்னாராம்—இரண்டுங்கெட்டான் வகையில் கட்டுப்பாடு இருக்கலாம், இருக்காமலும் இருக்கலாம் என்று சொல்லக்கூடிய நிலையில், இவர்களெல்லாம் சேர்ந்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால் அதை என்ன என்று நினைப்பது? இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமையை பயன்படுத்துக்கொள்ள நினைக்கிறார்களோ என்றுதான் அஞ்ச வேண்டியிருக்கிறது.

மந்திரி அவர்கள் மதுரைக்குச் சென்றதைக் குறித்து, கோட்டையிலிருந்து மதுரைக்கு எதற்காகச் சென்றார்கள் என்று கேட்டார்கள். மந்திரிகள் எட்டுப் பேர்களும் கோட்டையில் இருந்து கொண்டிருந்தால் முன்னொரு முறை சொன்னார்கள், அங்கே கிணற்றில் எட்டுப் பிணங்கள், இங்கே கோட்டையில் எட்டு மந்திரிகள் என்று; அந்த மாதிரி குற்றச் சாட்டைச் சொல்லும் சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டாம் என்று இல்லாவிட்டாலும்,





அங்கே அரிசி கிடைக்கவில்லை என்று போன் வந்தவுடன் மந்திரி மன்றாடியார் பறந்து சென்றார்கள். இங்கே எதிர்க் கட்சியினர் உண்ணாவிரதத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும்போது, மந்திரிகள் அத்தனை பேரும் சேர்ந்து கூடிப் பேசி மக்களுக்கு எப்படி உணவுப் பொருள்களைக் கொண்டு கொடுப்பது என்று முடிவுக்கு வந்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொருவராகச் சென்று, எங்கெங்கே அரிசி கிடைக்கும் என்று பார்த்து அங்கெல்லாம் அரசாங்க ரீதியில் வாங்கி விநியோகிக்க, கலெக்டர்களுக்கு உத்தரவு போட்டு, பணத்தைக் கொடுத்து வாங்கச்செய்து, சென்னைக்கு அரிசி வரக்கூடிய நிலையை உண்டாக்க வேண்டும் என்று செயல்பட்ட மந்திரிகளை, பறந்து சென்று காரியத்தைச் சாதித்த மந்திரிகளை, கட்சியை வளர்க்கிறார்கள் என்று சொல்வது எவ்வளவு வருந்தத் தக்கது என்று சொல்ல வேண்டியதில்லை. அதை விட்டு மந்திரிகள் கோட்டையில் இருந்திருந்தால், என்ன சொல்லியிருப்பார்கள்? அங்கே மக்கள் பஞ்சத்தாலும், பசியாலும் வாடுகிறார்கள், இங்கே மந்திரிகள் கோட்டையில் ஃபேன் அடியில் உட்கார்ந்து கொண்டு, ப்யூன்கள் சீட்டைக் கொடுத்து கொடுத்து ஒவ்வொருவராகப் பார்த்துக் கொண்டு, பெரிய பெரிய கார்களில் அழகாகப் போய்க் கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்லுவார்கள். மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய, மக்களின் கஷ்டத்தை நிவர்த்திக்க மந்திரிகள் பறந்து சென்று செய்த சேவையை மக்கள் பாராட்டுவார்கள்; இவர்கள் பாராட்டாவிட்டாலும் மக்கள் கட்டாயம் பாராட்டுவார்கள். இவர்கள் இங்கே நெருக்கடியான நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு, ஏதோ அரசியலில் கட்சியை வளர்த்துக் கொள்ளலாம் என்று செயல்பட்டிருக்கிறார்கள் என்று கூறாமல் இருக்க முடியாது. எரிகிற வீட்டில் அடித்தது ஆதாயம் என்ற முறையில் செய்தார்கள் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். நாட்டில் மக்கள் பசியால் வாடிக் கொண்டிருக்கும் போது, இவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தும், உண்ணாவிரதம் இருந்து கொண்டும், பத்திரிக்கையில் பத்தி பத்தியாக செய்திகள் வரவும், அழகாகப் படங்கள் வரவும், காலையிலே இங்கே உண்ணாவிரதம் இருக்க, மாலையில் பத்திரிகைகளில் படங்கள் வர, மறுநாள் ஆயிரக்கணக்கான டன்கள் அரிசி தஞ்சையிலிருந்தும், மற்ற இடங்களிலிருந்தும் வரவும், உண்ணாவிரதத்தால் அரிசி வந்தது போல பத்திரிகைகளில் செய்திகள் தோன்றவும் எல்லாம் சரியாக இருக்கவேண்டும் என்று செய்திருக்கிறார்கள். குருவி உட்கார்ந்தாலும் பனம்பழம் விழுந்தது போல், அமைச்சர்கள் செயல்படவும் இவர்கள் இங்கே உண்ணாவிரதம் இருக்கவும், அரிசி வரவும் சரியாகத்தான் இருந்திருக்கிறது.

கனம் அங்கத்தினர் மூக்கையா தேவர் நேற்றுப் பேசினார்கள்: க்யூ வரிசையில் நிற்பவர்கள் எல்லாம் பிச்சைக்காரர்கள் என்கிறார்கள் என்றார். பகல் உணவு இல்லாத பாமர ஜனங்கள் பிள்ளைகளுக்கு, வீட்டில் சென்று பார்த்தால் பழைய சோறுகூட இல்லாத வீட்டுக் குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுக்க வேண்டும் என்று

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [23rd October 1964

நீட்டிய திட்டத்திற்கு, அமெரிக்கா போன்று உபரிப் பொருள்கள் உள்ள நாடுகளிலிருந்து, அவர்களுடைய உபரிப் பொருள்களைப் கொடுங்கள் என்று கேட்கும்போது, மந்திரிகளைப் பிச்சைக்காரர்கள் ஆக்கினார்கள் இந்த எதிர்க்கட்சிக்காரர்கள்; ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உதவியாக மதிய உணவுத் திட்டத்தை நடத்த ஊக்கம் எடுத்தபோது, ஆசிரியர்களை பிச்சைக்காரர்கள் ஆக்கினார்கள் இந்த எதிர்க் கட்சிக்காரர்கள்; அவர்கள் இன்றைக்குச் சொல்லுகிறார்கள், க்யூ வரிசையில் நின்று அரிசி வாங்குகிறவர்களை பிச்சைக்காரர்கள் ஆக்கிவிட்டார்கள் என்று. அவ்விதம் மந்திரி சொன்னார்கள் என்று சொன்னார்கள். எங்கே சொன்னார்கள் என்பதைச் சொல்லவில்லை. இந்த வகையிலே மந்திரியிலிருந்து மக்கள் வரையில் அத்தனை பேர்களையும் 'பிச்சைக்காரர்கள்' என்று குறிப்பிட்டு அரசியல் பிச்சை ஆடவேண்டுமா? என்று என் போன்றவர்கள் கேட்கத் துணிகிறோம். இம்மாதிரி நெருக்கடி நிலைமை ஏற்படும்போது எதிர்க் கட்சியினருடைய ஒத்துழைப்பும் ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கு மிகவும் அவசியம்.

'மூவாயிரம் கோடி ரூபாய் அளவுக்குப் பதுக்கல் இருக்கிறது' என்று எதிர்த் தரப்பிலுள்ளவர்கள் இப்பொழுது குறிப்பிடுகிறார்கள். 'மூவாயிரம் கோடி ரூபாய் பதுக்கல் இருக்கிறது, குவியல் முறையில் பணம் இருக்கிறது' என்று எடுத்துச் சொன்னது யார்? பதுக்கல் பணத்தை வெளியே கொண்டு வர வேண்டும் என்று எடுத்துச் சொன்னது யார்? லஞ்சத்தை ஒழிக்க வேண்டும் என்று கமிட்டிகள் நியமித்தது யார்? கள்ளச் சந்தை இருக்கிறது, கள்ளப் பணத்தை வெளியே கொண்டு வந்தே தீர வேண்டும் என்று குரல் கொடுத்தது யார்? திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், திரு. வி. கே. கிருஷ்ணமேனன் போன்ற காங்கிரஸ் தலைவர்கள் இதையெல்லாம் எடுத்துச் சொன்னார்களே தவிர, வேறு யாரும் இல்லை. தைரியமாக நடவடிக்கை எடுக்க காங்கிரஸ் கட்சி என்றுமே தயங்கியதில்லை. அதனால்தான் காங்கிரஸ் ஆட்சி இன்று நாட்டு மக்களிடையே நங்கூரம் பாய்ச்சிக்கொண்டு நிற்கிறது. இந்த நிலையில்தான் எதிர்க் கட்சிகள் தங்களுக்குத் தொல்லையாக காங்கிரஸ் கட்சியைக் கருதிக்கொண்டு, 'பதினேழு ஆண்டுகளாகச் சனியன் பிடித்துவிட்டதே' என்று திரு. தர்மலிங்கம் அவர்களும் சொன்னார்கள். 'சனியன் பிடித்துவிட்டதே' என்று எதிர்க் கட்சியினர் நினைக்கக்கூடிய அளவுக்கு, மக்கள் மன நிலையில் நங்கூரம் போட்டுவிட்டது காங்கிரஸ். ஆகவே, ஒன்றல்ல, இரண்டல்ல, ஆயிரக்கணக்கான விழுதுகளைப் பாப்பி பெரிய ஆலமரமாக வளர்ந்து விட்டது காங்கிரஸ். இதிலிருந்து நாம் தைரியமாகச் சொல்லலாம், மக்களிடம் காங்கிரசுக்கு நல்ல ஒரு நம்பிக்கை இருக்கும் காரணமாகத்தான் நாட்டுக்கு அமைதியான ஒரு ஆட்சியைக் கொடுத்தது மட்டுமல்ல; நீதியோடு, நேர்மையோடு, அற உள்ளத்தோடு ஆட்சி நடத்தும் நிலை காங்கிரஸ் கட்சிக்கு இருக்கிறது என்று மக்கள் நம்புகிறார்கள். அந்த அளவுக்குத்தான் நாம் நெருக்கடியைச் சமாளிக்கப் பார்க்கிறோம். லஞ்ச ஊழலை ஒழிக்கவில்லை என்று எதிர்க் கட்சியில் இருக்கிறவர்கள் சொல்ல



23rd October 1964] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

லாம். நேற்று எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் பேசும்போது, உதாரணத்திற்காக எடுத்துச் சொல்வதற்கு, 'காந்திஜி சொன்னார்' 'நேருஜி சொன்னார்'' என்று தான் சொன்னார்கள். நாட்டிலே இருக்கும் விவசாயம் 'ஃபயிெல் ஆய்விட்டது', 'தொழில் ஃபெயில் ஆய்விட்டது' என்று நேரு அவர்கள் சொன்னதையே தான் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் பேசிய சரக்கெல்லாம் ஆளும் கட்சியினர் எடுத்துச் சொன்ன சரக்காகத்தான் இருக்கிறது. அங்கேயுள்ள சொந்தச் சரக்காக இருக்கிறதா என்றால், இல்லை என்று நான் நிச்சயமாகச் சொல்ல முடியும். இப்படியிருக்க, 'ஆளுங்கட்சியினர் பதினேழு ஆண்டு காலமாக ஆண்டு வந்தும் நாட்டில் முன்னேற்றம் இல்லை' என்று தைரியமாகச் சொல்கிறார்கள் என்றால், அவர்கள் கண் மூடித்தனமாகப் பேசுகிறார்கள் என்று நான் சொல்லாமல் இருக்க முடியாது.

மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. ஹாஜா ஷெரிப் அவர்கள், பத்து, பதினைந்து ஆண்டுகளாக ஏற்பட்ட முன்னேற்றத்தை அழகாக எடுத்துச் சொன்னார்கள். வாகன வரி 4 கோடி ரூபாயிலிருந்து 14 கோடி ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது என்றும், விற்பனை வரியிலிருந்து வருமானம் 14 கோடி ரூபாயிலிருந்து 27 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்றும், தமிழ் நாட்டின் வருமானம் 57 கோடியாக இருந்தது பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது 130 கோடி ரூபாய் அளவை எட்டிப் பிடித்திருக்கிறது என்று நிதி நிலை அறிக்கையிலிருந்து தெரிகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த அளவுக்குத் தேசீய வருமானம் அதிகரித்திருக்கிறது. அப்படி இந்த நாட்டில் தொழில் வளரவில்லையா? விவசாய முன்னேற்றம் ஏற்படவில்லையா? நாட்டிலே கல்வி கற்கின்றவர்களின் எண்ணிக்கை உயரவில்லையா? எதிலும் முன்னேற்றம் இல்லை என்று சொல்ல முடியாது. நாளுக்கு இரண்டு ஆலைகளுக்குத் தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் லைசென்ஸ் கொடுத்திருக்கவில்லையா? தொழில் அபிவிருத்தி இந்த நாட்டில் இல்லையா? '1951-ம் ஆண்டில் ஐம்பதாயிரம் ஏக்கர் நிலத்தை ஏன் ஆர்ஜிதம் செய்து விட்டார்கள்?' என்று எதிர்த் தரப்பில் உள்ளவர்கள் கேட்டார்கள். நிலத்தை ஆர்ஜிதம் செய்யாமல், நிலத்தை எடுக்காமல் தொழில் எவ்வாறு வர முடியும்? நோட் அடிக்காமலேயே திட்டம் நிறைவேறிவிடுமா? மக்களிடம் வாங்கும் சக்தி அதிகமாகியிருக்கிறது. ரூபாய்க்கு எட்டு படி அரிசி விற்றபோது மட்டும் பட்டினி இல்லாமலா இருந்தது? அப்பொழுது தான் எத்தனையோ பேர்கள் பட்டினி, பசியால் வாடினார்கள். அப்போது ஒரு படி அரிசி வாங்க இரண்டணா கூடக் கிடைக்காத காலம். இப்பொழுது படி ஒன்றரை ரூபாயாக இருந்தாலும் அதை வாங்கும் சக்தி மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. 'மக்கள் சினிமாவுக்குக் க்யூ வரிசையில் போகவில்லையா?' என்று அமைச்சர் பேசினார் என்றால், அவர் மக்களுடைய வாங்கும் சக்தியைக் குறிப்பிடுவதற்காகச் சொன்னார். அதைச் சுட்டிக்காட்டி, 'மந்திரி வாயை மூடிக்கொண்டு ஏன் இருக்கக்கூடாது' என்று திரு. மதியழகன் அவர்கள் கேட்டார்கள். மக்களுக்கு வாங்கும் சக்தி

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [23rd October 1964

அதிகரித்திருக்கிறது என்று சொல்லக்கூட அமைச்சருக்கு உரிமை இல்லையா? மக்களுடைய வாங்கும் சக்தி அதிகரிக்கவில்லையா? என்று நான் கேட்கிறேன்.

விவசாயத்தை எடுத்துக்கொண்டால் கரடு முரடான நிலத்தையெல்லாம் கழனிகளாக்கவில்லையா? முன்பு முக்கால் ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தவர்களெல்லாம் இப்பொழுது மூன்று ரூபாய் சம்பளம் வாங்குகிறார்களே, இது வாங்கும் சக்தி அதிகரித்திருப்பதைக் காட்டுவதாக இல்லையா? விற்பனை வரி வருமானம் அதிகரித்திருப்பதற்குக் காரணம் என்ன? ஒரு கடை இருந்த இடத்தில் பத்து கடைகள் வந்திருந்தால் தானே விற்பனை வரி அதிகம் வந்திருக்க முடியும்? ஒரு ஜவுளிக் கடை இருந்த இடத்தில் பத்து ஜவுளிக் கடைகள் வந்திருக்க வேண்டும். ஒரு பெட்டிக் கடை இருந்த இடத்தில் ஐம்பது பெட்டிக் கடைகள் வந்திருக்கலாம். பத்து ஆண்டுகளுக்கு முன்பு, பெரிய மிராசுதார்கள், பண்ணையார்கள், பட்டாதார்கள், பழம்பெரும் முதலாளிகள் வீட்டிலேதான் கார் வேகமாகப் போய் நிற்கும். அப்பொழுது 'டஸ்ட்லெஸ்' ரோடு கிடையாது. ஊருக்குள் கார் வர முடியாது. ரோடெல்லாம் தூசியைக் கிளப்பிக்கொண்டு போவார்கள். ஆனால், இப்பொழுது நிலைமை என்ன? கார்கள் அடுத்தடுத்து, இரயில் வண்டிபோல் போகின்றன என்றால் அந்த அளவுக்கு ரோடு வசதி ஏற்பட்டிக்கிறது. அந்த அளவுக்கு வளம் பெருகியிருக்கிறது. மக்களுக்கு வாங்கும் சக்தி அதிகரித்து, வியாபாரமும், வாணிபமும், அதிகமாகித் தொழில்கள் அபிவிருத்தி அடைந்து வருவதை நாம் பார்க்கிறோம். மளிகைக் கடைக்காரர்கூட அம்பாஸடர் கார் வைத்திருப்பதையும், அரிசிக் கடைக்காரர் அம்பாஸடர் காரை மாற்றி, லேடஸ்ட் ஃபியட் காருக்கு ரிஜிஸ்டர் பண்ணி வைக்கிற அளவுக்கு வளம் பெருகியிருக்கிறது என்பதை நாம் 'இல்லை' என்று சொல்ல முடியாது.

முதல் அமைச்சர் அவர்கள் பரிசு பெற்றார்கள் என்று சொல்லப்பட்டது. இந்தச் சமயத்தில் நான் கூறிக்கொள்கிறேன்—அடுத்த கட்சிகளிலே இருப்பவர்களுக்கு பரிசு கொடுக்கப்படவில்லையா? பிறந்த நாள் பரிசாகக் கார் கொடுக்கப்படவில்லையா? முதல் அமைச்சர் அவர்கள் தம்முடைய கையாலே அந்தப் பணத்தைக்கூட வாங்காமலும், அந்தப் பணம் தன்னிடத்திலே வாராமலேயே, அது மாணவர்கள் கல்விக்காகப் போகவேண்டும் என்று சொன்னதை ஏன் மற்றவர்கள் பாராட்டியிருக்கக் கூடாது? பொதுவாக வசூல் செய்ததற்குக் கணக்கு இல்லை என்று சொல்வது? அதை முதலமைச்சரா எடுத்துச் சென்றுவிட்டார்? இங்கிலாந்து நாட்டில் 23 அமைச்சர்கள் இருக்கிறார்கள். முன்னேற்றம் அடைந்துள்ள நாடு அது. நம்மைவிட பழமையாகச் சுதந்திரம் அடைந்த நாடு அது. அங்கே 23 அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஆனால், இங்கே எட்டு அமைச்சர்களை மட்டுமே வைத்துக்கொண்டு கச்சிதமாக நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறபோது, அவரைப் பாராட்ட வேண்டியிருக்க, பண்பிற்குப் பண்டகசாலை என்று கருதிக்கொண்டிருப்பவர்கள்,



23rd October 1964] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

பழம்பெரும் தேச பக்தரை, பொறுமைக்குச் சின்னமாக இருக்கக் கூடியவரைப் பார்த்து, 'வெட்கம் இல்லையா? மானம் இல்லையா? ஈனம் இல்லையா? என்று கேட்பதா? எதிர் கட்சியினர் சொல்வதையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டு பொறுமையின் உருவமாகவே இருப்பவரை ஏன் இம்மாதிரி கேவலமாகப் பேச வேண்டும் என்று என் போன்றவர்கள் கேட்கின்றோம்.

திரு. மா. இராசாங்கம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கொண்டு வந்திருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களையும் எடுத்து விளம்ப நான் முற்படுகிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பொறுத்து நான் முதலில் சொல்லும்போது, 'மாணத்திற்குத் தவணை ஒன்று, மன்னிப்புக்கு தவணை இரண்டு, நம்பிக்கைக்குத் தவணை மூன்று' என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஒருவன் ஒரு முறை தவறு செய்தால் மன்னிக்கலாம். இரண்டாம் முறை தவறு செய்தாலும் மன்னிக்கக் கூடும். மூன்றும் முறை தவறு செய்தால் அதை யாருமே மன்னிக்க மாட்டார்கள். நான் 'தவறு' என்று இந்த இடத்தில் சொல்லும்போது, 'நம்பிக்கையின்மையில் நடந்து கொள்வது' என்ற பொருளிலேயே சொல்கிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து ஆயிற்று. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து ஆயிற்று. மூன்றாவது ஐந்து ஆண்டுத் திட்டமும் முடியும் தறுவாய் ஆயிற்று. உணவுப் பிரச்னை என்ன ஆயிற்று? சாதாரண இந்த உணவுப் பிரச்சினையைக்கூட இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் சமாளிக்க முடியவில்லை என்றால், நாம் இனி எதைச் சாதிக்கப் போகிறோம்? எதை சமாளிக்கப் போகிறோம்? நூற்றுக்கு எழுபத்தைந்து பேர்கள் விவசாயத் தொழிலாளர்களைக் கொண்ட இந்த நாட்டிலே, நாம் இதைச் சமாளிக்க முடியவில்லை என்றால், வேறு எந்தக் காலத்தில் உணவுப் பிரச்சினையை நாம் சமாளிக்கப் போகிறோம்? இதற்கெல்லாம் நிர்வாகத் திறமையின்மை தான் காரணம் என்று நான் உங்கள் மூலமாக இந்த சர்க்காருக்குச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்பு, வெள்ளைக்காரனை—இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்தபோது—'கொள்ளைக்காரன்' என்று நாம் சொன்னோம். அந்தக் காலத்தில் கூட இப்படிப்பட்ட நிலை வரவில்லை. ஒரு தடவை யுத்தம் வந்தபோது கூட இப்படி வரவில்லை. அப்பொழுது நாம் சொன்னோம். காங்கிரஸ் கட்சியினரும் கூட சொன்னார்கள். "அரிசியை அளந்து போடுகிறான்" என்று சொன்னார்கள். "அவுன்ஸ் கணக்கில் போடுகிறான்" என்றும் சொன்னார்கள். இன்று அவுன்ஸ் கணக்கில் இல்லை, 'டிராப்' கணக்கில் கூட கிடைக்க முடியாத நிலைமை வந்திருப்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

'உணவுப் பொருள் இன்றைக்குக் கிடைக்காத நிலைமைக்குக் காரணம் உற்பத்திக் குறைவு' என்று சொன்னால், 'இல்லை, உற்பத்தி அதிகமாயிருக்கிறது' என்று ஆளும் கட்சியிலிருப்பவர்

[திரு. மா. இராசாங்கம்] [23rd October 1964

கள் சொல்கிறார்கள். ஆக, உற்பத்திக் குறைவு என்று சொல்ல விரும்பாவிட்டால், இந்த நிலைமைக்கு யார் மீது பழியை இவர்கள் சொல்லப் போகிறார்கள்? அதே நேரத்தில், 'விநியோகத்தில் தான் தவறு இருக்கிறது' என்பது அமைச்சர்கள் ஒத்துக்கொண்ட உண்மையாகும். அதைக் கண்டுபிடிக்க என்ன வழி செய்தார்கள் அமைச்சர்கள்? அதற்கு அரசாங்கம் மேற்கொண்ட வியாபாரம் தான் காரணம். அரசாங்கம் மேற்கொண்ட வியாபாரம் அரைக் கிணறு தாண்டியவன் கதி தான். அதுவும் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அரிசி விநியோகத்தில் அரசாங்கம் மேற்கொண்ட பொருளாதாரம் ஒரு கலப்படப் பொருளாதாரம். இதை நான் சொல்லும்போது உங்கள் மூலமாக, இந்த அமைச்சரவைக்கு சொல்லிக்கொள்வேன்—இது ஒரு ஆண்மையாகவோ அல்லது பெண்மையாகவோ முழுமையாக இல்லை. நான் இன்னும் சொல்வேன்—ஒரு அலி போன்ற நிலைமையில் தான் இந்த வியாபார முறை இருக்கிறது. ஏன் இதைச் சொல்கிறேன்? ஒன்று—அரசாங்கமே அதனை எடுத்து நடத்த வேண்டும். இல்லையென்றால், வியாபாரிகள் கையில் விட்டாவது போயிருக்கவேண்டும். இரண்டு நிலைமையும் இல்லாதபோது இதை இப்படித்தான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது.

இதை நான் சொல்லும்போது ஒரு வாரத்தில் சரியாகப் போய்விடும், இரண்டு வாரத்தில் சரியாகப் போய்விடும் என்று சொல்லியிருக்கிறார்கள். பசி வந்திடப் பத்தும் பறந்து போய்விடும் என்று சொல்லியிருக்கிறார்கள். நாள் பூராவும் கால் கடுக்க க்யூவில் நின்றாலும் அரிசி கிடைப்பது இல்லை என்ற நிலைதான் இன்றும்
1-00 p.m. நீடிக்கிறது. பசியோடு, பட்டினியோடு வாடுகிற அந்த மக்கள் எங்கே அரிசி என்று தான் கேட்கிறார்களே தவிர, பத்து நாள் பொறுங்கள், அரிசி கிடைப்பது சாதாரண நிலைக்கு வந்துவிடும் என்று அமைச்சர்கள் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்பதில்லை. கேட்பார்கள் என்றும் எதிர்பார்ப்பதற்கு இல்லை. இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டு இருக்கிற பஞ்சத்திற்குக் காரணம் என்ன? விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் என்ன என்று பார்க்கிறபோது, வியாபாரிகள் தான் காரணம் என்று அமைச்சரவையில் உள்ளவர்களே குற்றம் சாட்டுகிறார்கள். இப்படி உணவு தானியங்களைப் பதுக்குகிற 'ஆண்டி—சோஷல் எலிமெண்ட்ஸ்' கள் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று கேட்கிறேன். அவர்கள் தான் இந்த உணவு நெருக்கடியை உண்டாக்கியதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டிவிட்டு தப்பிக்கப் பார்க்கிறார்கள்.

• • • •

இன்றைக்கு வெளியில் இருக்கக்கூடிய நிலை என்ன? எங்கே பார்த்தாலும் பசி, பட்டினி, மக்கள் நீண்ட க்யூவிலே நிற்கிறார்கள். (கனம் சபாநாயகர்—உங்களுக்கு பசி. இல்லையே, பசி இருக்கிற மாதிரி பேசுங்கள்) இன்றுவரை வீட்டை விட்டு வெளி வராத பெண்களை, கோஷாப் பெண்கள் உள்பட, கடைத்தெருவில் மணிக் கணக்கில் நிற்க வைத்துவிட்டார்கள். நிறைமாத கர்ப்பிணிகள்,

* Expunged as ordered by the Chair.



23rd October 1964] [திரு. மா .இராசரங்கம்]

பள்ளிக்குப் போகும் சிறுவர்கள் ஆகியவர்கள் எல்லாம் பசி பசி என்று நடுத்தெருவில் நிற்க அரசாங்கம் வேடிக்கை காட்ட முடியாது. பள்ளிக்குச் செல்கிற நேரத்தில் மாணவர்கள் பசி பசி என்று அலறுகிறார்கள். தாய்மார்கள் அரிசிக்காக கடைத்தெருவில் நிற்க வேண்டியிருக்கிறது. பால் குடிக்கிற கைக்குழந்தை பாலுக்காக அலறுகிறது . . .

MR. SPEAKER : The Hon. Member Srimathi A. S. Ponnammal will now speak.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியினரால் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தை நான் வன்மையாக எதிர்க்கிறேன். அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த அவர்கள் அதற்கு ஆதாரமாகச் சரியான காரணம் எதையும் காட்டாமல் இங்கே ரோடு சரியாக இல்லை, அங்கே பள்ளி சரியாக இல்லை அதனாலே எங்களுக்கு இந்தச் சர்க்காரிடத்தில் நம்பிக்கை இல்லை என்பதாகத் தங்களுடைய வாதத்தை எழுப்பியிருக்கிறார்கள். ஆனால் கடந்த 17½ ஆண்டுகளாகப் பதவியில் இருந்து வருகிற காங்கிரஸ் கட்சி அரசாங்கம் தொடர்ந்து இந்த நாட்டு மக்களுக்கு எவ்வளவு வசதிகளைச் செய்து வந்திருக்கிறது என்பதை மக்கள் நன்றாக அறிவார்கள். இருபது ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலைமைக்கும், இன்றுள்ள நிலைமைக்கும் உள்ள வித்தியாசத்தை அவர்கள் நன்றாக உணருவார்கள்.

எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய திரு. மூக்கையா தேவர் அவர்கள் பேசும்போது ஆளும் கட்சியில் இருக்கக் கூடியவர்கள் பதவி ஆசை பிடித்திருப்பதன் காரணமாக அதிகாரத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று சொன்னார். பதவியில் நாங்களாக உட்காரவில்லை. பதவியில் யார் உட்காருவது என்பதை நிர்ணயிக்கக் கூடியவர்கள் இந்த நாட்டில் உள்ள 40 கோடி மன்னர்கள். அந்த 40 கோடி மக்களாகிய மன்னர்களின் நம்பிக்கையைப் பெற்று அவர்களுடைய வாக்குகளைப் பெற்றுத்தான் காங்கிரஸ் கட்சி இன்றைய தினம் ஆட்சி பீடத்தில் உட்கார்ந்து இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். இதை மறந்துவிட்டு, இந்தநாட்டு மக்கள் இந்த ஆட்சியாளரிடத்தில் வைத்திருக்கிற நம்பிக்கையை மறந்துவிட்டு சனியன் பிடித்தது போல 17½ ஆண்டுகளாக பிடித்திருக்கிறது என்ற அபத்தமான வார்த்தையை இந்தச் சட்ட மன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள். இது மிகவும் வருந்தக்கூடியது. இன்றைக்கு விலைவாசி ஏறிக் கொண்டே போகிறது. இந்த விலைவாசி உயர்வைத் தடுக்க வேண்டும் என்பதற்காக எதிர்க்கட்சியினர்கள் சொல்வதற்கு முன்னால் ஆளும் கட்சியில் உள்ள நாங்களும் சொன்னோம். ஏறிக்கொண்டே போகிற விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அரசாங்கத்தார் விலை நிர்ணயம் செய்ய முன் வந்தார்கள். விலை நிர்ணயம் வரப்போகிறது என்று தெரிந்தவுடனே பதுக்கல்காரர்கள் உணவு தானியத்தைப் பதுக்க முன் வந்தார்கள். பதுக்கல்காரர்களைக் கண்டுபிடித்து

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [23rd October 1964

உணவு தானியத்தை வெளிக்கொணர சர்க்கார் தீவிரமாக நடவடிக்கை எடுக்க முன் வந்த நேரத்தில் ஒரு பெரியவர்—அவர் பெயரை நான் இங்கே சொல்வதற்கு கனம் சபாநாயகர் அனுமதிக்க மாட்டார் என்று அவர் பெயரைச் சொல்லாமல் விடுகிறேன்—அவர் "பாருங்கள் இந்த அரசாங்கம் யாரையும் தொழில் நடத்த விடாது" என்று வெளியே கூக்குரலிட ஆரம்பித்தார். அவரை நல்லவரே, வல்லவரே என்று பாராட்டுகிற திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் இப்படி தொழில் நடத்துகிறவர்களை வாழவொட்டாமல் அழிக்கிறார்களே என்று வெளியில் கூக்குரலிடுகிறார்கள். இங்கே வந்து எங்கே அரிசி, எப்படி உணவுப் பிரச்சினையைச் சமாளிக்கப் போகிறீர்கள் என்று பேசினால்—இப்படி வெளியில் ஒன்று, உள்ளே ஒன்று என்று பேசுகிற கேவலமான நிலையில் உள்ளவர்களைத்தான் முதலில் தூக்கில் இட வேண்டும் என்று சொல்வேன்.

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் இப்படிப் பேசினால் அதை நான் அனுமதிக்கமுடியாது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கண்டபடி பேசும்போது நீங்கள் விட்டுக்கொண்டிருந்தீர்கள் . . .

**கனம் சபாநாயகர்:** அவர்கள் பேசினார்கள் என்பதற்காக கனம் அங்கத்தினர் பேசினால் அப்போது இரண்டு பேருமே பேசிக் கொண்டிருப்பதா? எனக்குப் புரியவில்லையே. I will be very serious with any hon. Member whether he is on this side or that side.

**திரு. மு. கருணாநிதி:** தங்களுடைய தீர்ப்பிலே குறுக்கிடுகிறேன் என்று தவறாகக் கருதக்கூடாது. 'தூக்கில் இட வேண்டும்' என்ற வார்த்தையை சட்டசபைப் புத்தகத்திலிருந்து எடுத்து விடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். *

MR. SPEAKER: The hon. Lady Member Srimathi A. S. Ponnammal should withdraw her remarks.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** அவர்கள் சொன்னார்கள் . . .

**கனம் சபாநாயகர்:** அவர்கள் சொன்னார்கள், இவர்கள் சொன்னார்கள் என்று அதைப் பற்றிப் பேசக் கூடாது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** அந்தப் பிரச்சினையை அப்படியே விட்டு விடுகிறேன்.

லஞ்ச ஊழலைப் பற்றிப் பேசினார்கள். அவர்களை இந்த அரசாங்கம் கண்காணித்து வருகிறது. நம்முடைய மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்களை முன்பு அவர்கள் வாயார வாழ்த்தினார்கள். அப்படிப்பட்ட திறமையான மந்திரி சபை இந்த லஞ்ச ஊழல்களை யெல்லாம் கண்டு பிடித்து தண்டனை அளிப்பதற்குத் தக்க நட-

* Expunged as ordered by the Chair.



23rd October 1964] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

வடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. சிறிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, பெரிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தவுடன் கமிட்டிக்கு அனுப்பி குற்றச் சாட்டு உண்மையா என்று பார்த்து, பரிசீலித்து தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வைர உள்ளம் படைத்த இந்தக் கட்சியில் இருந்த தலைவரைக் கூட சில குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன என்ற காரணத்தால், அது உண்மை என்று தெரிந்தவுடனேயே அவரைப் பதவியிலிருந்து இறக்கியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் திருப்பரங்குன்றத்திலே ஒரு மாநாடு நடத்தியது. அந்த மாநாட்டிலே வசூலான பணம் என்ன வாயிற்று என்று கேட்டார்கள். பதில் வரவில்லை. மக்கள் கொடுத்த பணந்தானே அந்தப் பணம்? அந்தச் சிறப்பு மாநாட்டில் வசூலான பணத்தில் சில ஆயிரத்துக்குக் கணக்குக் கேட்க தைரியம் இல்லாமல் பல பிரிவுகள். . . .

**திரு. மு. கருணாநிதி:** 'ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்' திருப்பரங்குன்றம் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டு வசூல் கணக்கு காட்டப்படவில்லையென்று அம்மையார் அவர்கள் கூறினார்கள். கழகத்தின் மாநாட்டுக் கணக்குகள் அவ்வப்போது ஆறு மாதத்தில் கூட்டப் பெறுகின்ற தலைமைப் பொதுக்குழுவில் சமர்ப்பிக்கப்படுகின்றது என்பதை அம்மையாருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வேண்டுமானால் காங்கிரஸ் மாநாட்டுக் கணக்குகள் வராமல் இருக்கலாம்.

[கனம் சபாநாயகர் மணியடித்து திரு. கி. இரா. சம்பந்தத்தை அழைத்தார்.]

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** (உட்கார்ந்தபடியே) சபாநாயகர் தப்பு பண்ணுகிறார்.

**திரு. மு. கருணாநிதி:** 'சபாநாயகர் தப்பு பண்ணுகிறார்' என்று அம்மையார் கூறுவது சபாநாயகரை அவமதிப்பதாகாதா?

MR. SPEAKER: The hon. Lady Member, Srimathi A. S. Ponnammal, must withdraw her remarks.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** அந்த வார்த்தையை 'வித்ட்ரா' பண்ணிக் கொள்கிறேன். கொடுத்த 'டைம்'க்குள்ளாக நிறுத்திவிடுவது சரியானதல்ல.

MR. SPEAKER: Again, I say that the hon. Lady Member Srimathi A. S. Ponnammal, must withdraw her remarks.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** நான் அதை 'வித்ட்ரா' பண்ணிக் கொள்கிறேன். . .

* **திரு. கி. இரா. சம்பந்தம் :** கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர் மதியழகன் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து ஒரு சில கருத்துக்களை இந்தச் சபையின் முன் வைக்க விரும்புகிறேன். இப்போது அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய தீர்மானத்தை ஜெயித்து விடுவோம் என்ற நம்பிக்கையில் கொண்டு வரவில்லை. 1952-லே எதிர்க்கட்சியிலே அபரிதமான அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள். அந்தச் சமயத்தில் காங்கிரஸ் நிர்வாகம் நடந்து கொண்டிருந்தது. அப்போது ஒவ்வொரு திட்டத்திலும் தினம் தினம் டிவிஷன் கேட்கப்பட்டு எந்த நேரத்திலே சர்க்கார் கவிழ்ந்து விடுமோ என்ற நிலைமை இருந்தது. அந்தச் சமயத்தில் கூட எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை. ஆனால் ஆளும் கட்சியானது நம்பிக்கை இருக்கிறது என்ற தீர்மானத்தை அந்த அவையிலே வைத்து வெற்றிகரமாக நிறைவேற்றினார்கள். ஆகவே, இப்போது எதிர்க்கட்சியினருக்குப் பிரசாரத்திற்காக மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலே அதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சைனாக்காரன் நம்முடைய நாட்டை ஆக்கிரமித்த போது எப்படி எல்லோரும் ஒன்று சேர்ந்து செயலாற்றினோமோ, அதே முறையில் நாட்டிலே தற்போது உணவுப்பிரச்சினையிலே ஏற்பட்டிருக்கக் கூடிய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு முன் வராமல் மக்களுடைய வரிப்பணத்தை வீணடிக்கும் முறையிலே கடந்த மூன்று நாட்களாக அனாவசியமான வாதங்கள் இந்தச் சபையிலே நடைபெற்று வருவதைப் பார்க்க நான் மிகவும் வருந்துகிறேன்.

அரிசிப் பிரச்சினையைப் பற்றி அவர்கள் வெகுவாகப் பேசிக் கொண்டு வருகிறார்கள். அமைச்சர் அவர்கள் ஆங்காங்கே சென்று நெல்லை வாங்கி கஷ்டப்படுகிற மக்களுக்காக விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்வதைப் பற்றிக்கூடக் குறை சொல்கிறார்கள். இவ்வாறு அமைச்சர்கள் தேவையான நடவடிக்கைகளையெல்லாம் மேற்கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் 'மக்கள்படும் கஷ்டங்களை அமைச்சர்கள் கவனிக்கவில்லை; கோட்டையிலே நிம்மதியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்' என்று பேசுகிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது எனக்கு ஒரு சிறு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு தகப்பனும், மகனும் ஒரு கழுதையை மார்க்கெட்டில் விற்கச் சென்றார்கள்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நாய்க் கதை, கழுதைக் கதை தவிர வேறு எவ்வளவோ விஷயங்கள் பேசுவதற்கு இருக்கின்றன.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** எல்லாருக்கும் தெரிந்த கதையானதால் விட்டு விடுகிறேன். ஆங்கில நீடிப்பைப் பற்றிய மசோதா ஒன்று இங்கு வந்தது. அதிலே ஆங்கிலத்தை நீடிக்க வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றித்தான் பேச வேண்டுமே தவிர இந்தி எதிர்ப்பைப் பற்றிப் பேசவேண்டிய அவசியமில்லை.





அவர்கள் விஷயத்தை விட்டு விட்டு இந்தியை எதிர்ப்பது பற்றியே பேசினார்கள். திரு. நல்லசிவம் அவர்கள் ஒரே ஆளாக இருந்த போதிலும் தைரியமாக தமிழ்தான் வேண்டுமென்று அழுத்தம் திருத்தமாகப் பேசி ஒரு டிவிஷனையும் கேட்டார்கள். தமிழுக்காகப் பாடுபடுகிறோம் என்று சொல்கிற இவர்கள் தமிழைப்பற்றி ஒன்றும் பேசவேயில்லை. அவர்கள் அவ்வாறு பேசியதற்குக் காரணம், திரு. ராஜகோபாலாச்சாரி அவர்கள் ஆங்கில நீடிப்புச் சட்டத்திற்கு ஏன் ஆதரவு தரவில்லை என்று கேட்பார்களே என்று பயந்து நடந்து கொண்டார்கள். நல்லசிவம் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்திற்கு 'நியூட்ரலாக' இருந்தார்கள். அப்படிப்பட்ட எதிர்க்கட்சியினர் இந்த மந்திரி சபையின் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை கொண்டு வருவதற்கு என்ன தகுதி இருக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அர்ஜுனன் மீது ஷூட்டிங் நடந்ததுபற்றிப் பேசினார்கள். அவர் ஏற்கெனவே அரசாங்க அதிகாரியாக இருந்தவர். அதன் பிறகு தகாத செயல்களில் இறங்கினதின் காரணமாக. . . .

MR. SPEAKER : It is not relevant here.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** அந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லவில்லை. தவறான காரியங்களுக்கு ஆதரவு கொடுத்து. . . .

**கனம் சபாநாயகர் :** அவர் 'காண்டக்ட்' தவறு என்று கனம் அங்கத்தினர் சொல்லப் போகிறார்களா? அதைப்பற்றியெல்லாம் பேசவேண்டாம். ப்ரிசம்ஷன் எல்லாம் வேண்டாம். That is why I say that is not relevant.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** நான் அதை விட்டு விடுகிறேன்.

அடுத்தபடியாக கல்வியைப்பற்றிப் பேசும்போது தமிழ் ஆசிரியர்களுக்கு நல்ல முறையில் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். குறைந்த சம்பளம் வாங்கிக்கொண்டு இருந்த ஆசிரியர்களுக்கு காங்கிரஸ் சர்க்கார் வந்த பின்னால்தான் குறைந்த பட்ச சம்பளம் நூறு ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். மேலும், அகில இந்திய கல்வி மாநாட்டில் நம்முடைய கல்வி அமைச்சராக இருந்த கனம் சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது எங்கள் மாகாணத்தில் ஆசிரியர்களுக்கு குறைந்த அளவு சம்பளம் 100 ரூபாய் கொடுக்கிறோம் என்று சொன்னபோது அங்கிருந்த மற்ற மாநிலத்தில் உள்ளவர்கள் எங்களால் அவ்விதம் கொடுக்க முடியவில்லையே, ஆகவே நீங்கள் இதை இங்கு சொன்னால் எங்கள் மகாணத்திலும் கூடுதல் சம்பளம் வேண்டும் என்று கேட்க ஆரம்பித்து விடுவார்கள் என்று சொன்னார்கள் என்பது இங்கு தெரிவிக்கப்பட்டது. அந்த அளவுக்கு நாம் ஆசிரியர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். கல்வி இலாகாவைப் பற்றியும் சீருடையைப்பற்றியும் பேசினார்கள். நமது காங்கிரஸ் சர்க்கார்தான் ஆசிரியர்களுக்கும் சரி, மாணவர்களுக்கும் சரி நிறைய உதவிகளைச் செய்திருக்கிறது. நம் நாட்டிலிருக்கின்ற

[திரு. கி. இரா. சம்பந்தம்] [23rd October 1964

துரதிருஷ்டம் என்னவென்றால் சர்க்கார் செய்கின்ற பல நல்ல காரியஙகள் வெளியில் புலப்படுவதில்லை. அமெரிக்காவிலிருந்தோ ரஷ்யாவிலிருந்தோ, சைனாவிலிருந்தோ யாராவது வந்து இந்த ராஜ்யத்தில் ஜனநாயக முறையில் எல்லாக் காரியங்களும் அமைதியாக நடைபெறுகின்றன என்று சொல்லிவிட்டு போன பின்னால்தான், அப்படியா? என்று நமக்குக் கேட்கத் தோன்றும். நமக்குள்ளே நமது சர்க்கார் செய்கின்ற நல்ல காரியங்கள் தெரிவதில்லை. இந்த நாட்டை ஆண்டு வந்த ராணி அவர்கள் நமது நாட்டிற்கு விஜயம் செய்தபோது இந்த நாட்டிலுள்ள அபிவிருத்தி திட்டங்களையெல்லாம் பார்த்துவிட்டு மகிழ்ச்சி தெரிவித்தார்கள். அப்படியிருக்கும்போது இந்த நாட்டில் ஒன்றுமே சரியாக நடைபெறவில்லை என்று சொல்லுவதைப் பார்த்தால் காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் என்று சொல்லுவது போல்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இங்கிலாந்தில் லேபர் பார்ட்டி, கன்ஸர்வேட்டிவ் பார்ட்டி என்றெல்லாம் கட்சிகள் இருக்கின்றன. ஆனால் அவர்கள் உருப்படியான திட்டத்தையும் கொள்கைகளையும் அடிப்படையாக வைத்து தேர்தல் நடத்துகிறார்கள். அதனால்தான் அவைகள் ஆட்சியை நடத்த முடிகிறது. அவர்கள் பல நல்ல கொள்கைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கு ஆட்சியில் வருவோம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு உருப்படியான கொள்கை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. சமீபத்தில் யாருக்கும் தெரியாமல் எந்த வித காரணமும் சொல்லாமல் திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையை விட்டு விட்டார்கள். இப்போது இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்று சொல்லிக்கொண்டு ஏதோ போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அரிசிப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி, அதையும் நிறுத்திவிட்டார்கள். காங்கிரஸ்காரர்கள் எந்தக் காலத்திலும் இந்த மாதிரி செய்தது கிடையாது. ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று எண்ணினால் நிச்சயமாக அதை செய்தே தீர்வார்கள் காங்கிரஸ்காரர்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் இங்கு என்ன சொன்னாலும் மக்களுக்கு அவர்கள் பேரில் நம்பிக்கை கிடையாது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். வருகின்ற தேர்தலில் நாங்கள்தான் மந்திரிசபை அமைக்கப் போகிறோம், என்று சொல்லுகிறார்கள், திராவிட முன்னேற்றக் கட்சியினர். அவர்கள் பெருவாரியாக ஒரு நாளும் வரப்போவதில்லை என்பதை இப்போது சொல்லிக்கொள்கிறேன். இவர்களுக்கு போராட்டங்கள், தியாகங்கள் எல்லாம் பேச்சிலேதான். இப்பேச்சு மக்களுடைய சிக்கலைத்தான் அதிகப்படுத்தியிருக்கிறது. கனம் வடிவேலு அவர்கள் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாகவும் இருக்கிறார்கள். அவர்கள் அபிவிருத்தித் திட்டங்களையெல்லாம் மிகவும் கேவலமாகப் பேசினார்கள். ஐந்தாண்டுத் திட்டங்களில் உள்ள வேலைகள் காங்கிரஸ் தியாகிகளுக்குத்தான் கொடுக்கப்படுகிறது என்றும் ஐந்தாண்டுத் திட்டத்தை வைத்து காங்கிரஸ் கட்சி பிரசாரம் செய்கிறது என்றும் எதிர்த்தார்கள். ஆனால்



23rd October 1964] [திரு. கி. இரா. சம்பந்தம்]

மக்களுடைய சக்தியெல்லாம் ஒன்று சேர்ந்து, மக்கள் பங்கும் அரசாங்கத்தினுடைய பங்கும் சேர்ந்து பல இடங்களில் பல திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேறி வருகின்றன. ஆனால் கனம் வடிவேலு அவர்கள் அந்த இடத்தில் நிர்வாகத் தலைவராக இருந்தும், ஒரு குட்டி அரசராக இருந்தும் அந்த இடத்தில் நல்ல முறையில் திட்டங்களை நிறைவேற்றவில்லை என்றால், அதற்கு அவர்தான் குற்றவாளியே தவிர அபிவிருத்தி திட்டங்கள் காரணம் அல்ல. அதே நேரத்தில் எங்களுடைய ஆக்கூர் பஞ்சாயத்து யூனியனில், பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம், பிரைமரி ஹெல்த் சென்டர், கம்யூனிட்டி ஹால், ரேடியோ வசதி இது போன்ற பல காரியங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். மகாத்மா காந்தி என்ன கனவு கண்டாரோ அதையெல்லாம் அதற்கு ஏதாவது எதிர்ப்பு இருந்தாலும்கூட அவைகளையெல்லாம் விட்டு விட்டு, நிதி உள்ளவர்களிடமிருந்து நிதிகளைப் பெற்று பல திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். நாம் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை என்ன? ஒரு பக்கம் சைனாக்காரன் தங்கள் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பட்டினிப் படையை திருப்பி விடுகின்ற முறையில் சண்டைக்கு இழுத்துக் கொண்டிருக்கின்றான். அதுமட்டுமல்ல, வாரத்திற்கு ஒரு நாள் மட்டும் மட்டன் கிடைக்கிறது என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது அந்த நாட்டில். இந்த நிலைமையை மாற்றுவதற்கு நம் பக்கம் திருப்பி எக்கேடாவது கெட்டுப் போங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்னொரு பக்கத்தில் பாகிஸ்தான் உறுமிக் கொண்டிருக்கிறது. இத்தகைய நிலைமையில் நம் நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலை என்ன? மேல் நாட்டினரெல்லாம் பாராட்டும் வகையில் நாம் நிர்வாகத்தை நடத்தி வருகிறோம். பஞ்சாப் முதல்வர் சூற்றம் செய்தார் என்பதற்காக மனு நீதி தவறாத முறையில் அவரைப் பதவியிலிருந்து இறக்கி விட்டிருப்பதும் மட்டுமல்ல, சட்டசபை உறுப்பினர் பதவியையும் இழக்கச் செய்யக்கூடிய வகையில் காங்கிரஸ் ஆட்சி செய்து வருகிறது. ஆனால் வசை பாடவேண்டும் என்ற நோக்கத்துடன் எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்ற நோக்கத்துடன் பலவற்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பெரு வாரியான அளவில் திட்டத்தை நிறைவேற்றும்போது இரண்டு மூன்று இடங்களில் ஓட்டை உடைசல்கள் இருக்கத்தான் செய்யும். இதை மட்டும் வைத்துக்கொண்டு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கல்யாண சுந்தரம் போன்றவர்கள் இந்தப் பதினேழு ஆண்டுகளில் திட்ட வேலைகளினால் என்ன முன்னேற்றம் ஏற்பட்டது என்று சர்வாதிகாரப் போக்கில் கேட்கிறார்கள். ஆனால் உலகம் என்ன நினைக்கிறது? நாம் ஜனநாயக முறையில் மூன்று தேர்தல்களை நடத்திக் காட்டியிருக்கிறோம். அதை வெளியில் உள்ளவர்கள் வந்து பார்த்து விட்டு புகழ்ந்திருக்கிறார்கள். நம்முடைய காங்கிரஸ் சர்க்கார் செய்து வரக்கூடிய திட்டங்கள் இந்த நாட்டுக்கு மட்டுமல்ல உலக நாடுகளுக்கே வழிகாட்டியாக இருக்கிறது. நம்முடைய கூட்டுச் சேராக் கொள்கையை சமீபத்தில் சுதந்திரம் அடைந்த 58 நாடுகளுக்கு மேல் ஒத்துக்

*[திரு. கி. இரா. சம்பந்தம்]* [23rd October 1964

*கொண்டிருக்கிறது. கெய்ரோ மகாநாட்டில் சாஸ்திரியின் திட்டம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது. இந்த உலகத்தை யாருடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப் போகிறார்கள்? ரஷ்யாவா, அமெரிக்காவா என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற இந்தத் தருணத்தில், அவர்கள் கூட நம் கூட்டு சேராகக் கொள்கையை ஒத்துக்கொண்டு நம் பக்கம் திரும்பி வந்துக்கொண்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பண்டித நேரு அவர்கள் கொடுத்துச் சென்ற வாக்கை நாம் கையில் வைத்துக் கொண்டிருக்கிறோம். அயல் நாட்டு கொள்கையைப்பற்றி இந்தச் சபையில் பேசுவதற்கு இடமில்லை என்றாலும் எதிர்க்கட்சிக்காரர்கள் இந்த சபையில் நம் அயல்நாட்டுக் கொள்கையை எதிர்த்து பேசினதின் காரணமாக இதைச் சொல்கிறேன்.*

*அடுத்தபடியாக் இங்கு சரியான முறையில் கல்வித் திட்டத்தை உருவாக்கவில்லை என்று சொல்கிறார்கள். நமது கல்வித் திட்டமெல்லாம் மக்களுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டு வருகிறது. இதில் யார் வந்தாலும் சரி வாராவிட்டாலும் சரி* Men may come, Men may go *என்ற முதுமொழிக்கேற்ப நம்முடைய திட்டம் வாழையடி வாழையாக உருப்பெற்று வருகிறது. அதிலும் காலத்திற்கு ஏற்றாற்போல் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் நாம் திட்டங்களைப் போட்டு வருகிறோம். நம்முடைய டைரக்டர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் ரஷ்யாவுக்குச் சென்று அங்குள்ள கல்வி முறைகளைப் பற்றியெல்லாம் ஆராய்ந்திருக்கிறார்கள். சென்ற 1952 முதல் 1957 வரையிலும் கனம் சுப்பிரமணியம் அவர்கள் கல்வித் திட்டத்தை சீரமைத்துக் கொடுத்தார்கள். பின்னால் வந்த அமைச்சர் அவர்கள் நாட்டிலிருக்கின்ற நிலைமைக்கு ஏற்றவாறு சூழ்நிலைக்கு ஏற்றவாறு சிறிது மாற்றம் செய்து திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். இம்மாதிரிப்பட்ட பல திட்டங்களை நமது காங்கிரஸ் அரசாங்கம் செய்து மக்களுக்காக வேலை செய்து வருகிறது என்பதைக் கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.*

### IV.—ANNOUNCEMENTS—*cont.*

### (3) BUSINESS OF THE HOUSE

MR. SPEAKER : I have to announce to the House that the following Bills have been passed by the Legislative Council without any amendment :

(1) The Travancore-Cochin Lime Shells (Control) Repeal Bill, 1964 (L.A. Bill No. 33 of 1964).

(2) The Madras State Legislature (Continuance of use of English Language) Bill, 1964 (L.A. Bill No. 41 of 1964).

I have also to announce to the House that the following Bills have been passed by the Legislative Council without any recommendation :—

(1) The Madras Appropriation (No. 6) Bill, 1964 (L.A. Bill No. 42 of 1964).



23rd October 1964] [Mr. Speaker]

(2) The Madras Appropriation (No. 7) Bill, 1964 (L.A. Bill No. 43 of 1964).

The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. p m.

The House then adjourned.

### VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

## A. Statutory Rules and Orders.

89. Notification issued with G.O. Ms. No. 504, Home, dated 25th February 1964 exempting from the payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, the vehicle bearing registration No. MDA 270 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Registrar of Co-operative Societies, Madras. (*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931.)

90. Notification issued with G.O. Ms. No. 2231, Revenue, dated 1st September 1964 effecting the ryotwari settlement of Pagaivandi inam estate in Paramakudi taluk of Ramanathapuram district which was *taken over by the Government under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948) on the 3rd June 1964. [*Laid on the Table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

## B. Reports, Notifications and other papers.

* 32. The Madras General Sales Tax (Special Provisions) Bill, 1964 (L.A. Bill No. 44 of 1964).

33. Fifth Report (Third Assembly) of the Committee on Government Assurances.

---

* Sent to Members by general despatch on 21st October 1964.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 24th October 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Deputy Speaker (SRI K. PARTHASARATHY) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

*Arrest of members of Tamil Arasu Kazhagam*

*2 *S.N. Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any representation was received by him from the Leader of Tamil Arasu Kazhagam regarding indiscriminate arrest of his followers at the places of visit by Hon. Chief Minister;

(*b*) what are the reasons for such arrests; and

(*c*) the law under which such arrests were made?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) & (*c*) They were taken into preventive custody under section 151, Criminal Procedure Code, in order to ensure the peaceful conduct of the functions attended by the Chief Minister and also to prevent any disturbance to public peace.

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : ஸார், கனம் முதல் அமைச்சர் அவர்கள் போகும் இடங்களில் அமைதிக்கு எந்த முறையில் பங்கம் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது? போலீசார் தாமாகவே கண்டுபிடிக்கவேண்டிய எந்த விதக் குற்றங்களை இவர்கள் செய்யப்போவதாகப் பயந்து 151-வது பிரிவின்கீழ் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டார்கள்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்**: ஏதோ குற்றங்கள், அதற்கு பயந்து என்பதெல்லாம் சாதாரணமாக கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுவது வழக்கம். ஒரு இடத்தில் ஒரு விழாவை ஏற்பாடு செய்கிறார்கள். அதையொட்டி கூட்டம் வருகிறது. வேறு ஏதோ அபிப்பிராயம் உள்ளவர்கள், அங்கே நடக்கக் கூடிய கூட்டத்திற்கு சம்பந்தப்பட்டவர்கள் அல்லாதவர்கள், வேறு அபிப்பிராயம் உடையவர்கள், கல்லூரிகளில் படிக்கிற மாணவர்கள் இப்படித் தான் படிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள், அதையொட்டி கருப்புக் கொடி எடுத்துக் கொண்டு வருவது என்று சொன்னால் அது அமைதியின்மைக்கு இடம் கொடுக்கிறது. அமைதியின்மைக்கு இடம் கொடுக்கிறது என்பது யூகம் மட்டுமல்ல. இதற்கு முன் அந்த மாதிரி அமைதியின்மைக்கு இடம் கொடுத்திருக்கிறது. நான் ஒரு

[24th October 1964

கூட்டத்திற்குப் போயிருந்தேன். ஒரு இடத்தில், திருவல்லிக்கேணியில் பேசிக்கொண்டிருந்தபோது அங்கே ஒலிபெருக்கி வைத்திருந்தார்கள். அதற்கு எதிரிலே நின்றுகொண்டு கோஷமிட்டார்கள். கோஷம் போட்டவர்கள் அங்கே நடந்த கூட்டத்திற்குச் சம்பந்தப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் போட்ட கோஷம் இங்கே இருந்த ஒலிபெருக்கியின் சப்தத்திற்கும் மேலே இருந்தது. இங்கே நடக்கக் கூடிய கூட்டத்திற்கு ஆட்சேபமுள்ளதாக இருந்தாலும் பரவாயில்லை. அதிருப்தியைத் தெரிவிப்பதற்கு எவ்வளவோ மார்க்கங்கள் இருக்கின்றன. அவர்கள் வேறு கூட்டம் போடலாம். தீர்மானம் போடலாம். இன்னொரு கூட்டத்தில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடாது என்ற பொறுப்பு உணர்ச்சியோடுதான் போலீஸார் நடவடிக்கை எடுத்தார்கள்.

**திரு. மு. கருணாநிதி:** தனிப்பட்ட ஒருவர் மீது அல்ல, தனிப்பட்டவர்கள் கையாளுகிற கொள்கை மீது எதிர்ப்புக் காட்ட கருப்புக்கொடி காட்டுவது என்பது ஜனநாயகத்தில் எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற முறைகளில் ஒன்றாகும். தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்கவில்லை என்று குற்றம் சாட்டி கருப்புக்கொடி காட்ட ஏற்பாடு செய்தார்கள். அப்படிக் காட்டும்போது குறிப்பிடுகிற ஒரு இடத்திலே, அமைதிக்கு ஊறு நேராத வண்ணம், வேறு இடத்திலிருந்து கருப்புக் கொடி காட்ட ஏன் போலீஸார் அவர்களுக்கு அனுமதி அளித்திருக்கக் கூடாது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அமைதியின்மைக்கு இடம் கொடுக்கக் கூடாது. கருப்புக் கொடி காட்டுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஜனநாயகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்றும் நான் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராயில்லை. கண்டனத்தைத் தெரிவிக்க வேறு வழிகள் இருக்கின்றன. ஒரு கூட்டம் நடக்கிறது. அந்தக் கூட்டத்திற்குப் போகிறார்கள். கூட்டத்திற்குச் சம்பந்தம் இல்லாத வகையில், கூட்டத்திற்கு இடைஞ்சலாக அவர்கள் ஏதாவது செய்தால் அதற்கு 'கவுண்டராக' வேறு கிளம்பும். அம்மாதிரி அமைதியின்மை ஏற்படும். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று தான் போலீஸார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, தமிழரசுக் கழகத் தலைவர் முதல் அமைச்சரைச் சந்தித்தாரா ? அங்கே என்ன விவாதம் நடைபெற்றது என்று அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சந்தித்துப் பேசினார்கள். அவர்களுக்கும் நான் இதைத் தான் விளக்கிச் சொன்னேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கோஷங்கள் போடாமல், அமைதியான முறையில், கூட்டங்களுக்கு இடையூறு இல்லாமல், முதல் அமைச்சர் போகிற இடத்தில் மட்டும், ஏதாவது ஒரு இடத்தில் மட்டும், இருந்து



24th October 1964]

கருப்புக்கொடி மட்டும் காட்டப்படும் என்று திரு. கிராமணியார் முதல் அமைச்சரிடம் கூறினார்களா ? அந்த முறையில் தெரிவித்து அனுமதி கோரினார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அம்மாதிரி கூறியதாக எனக்கு நினைவு இல்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா:** முதல் அமைச்சர் அவர்கள் எந்த இடத்திற்குச் செல்லுகிறார்களோ அங்கு இருக்கக் கூடியவர்களைத் தான் போலீஸார்கள் முன் கூட்டியே கைது செய்யலாம். ஆனால் சீர்காழிக்கு வந்தபோது வேதாரண்யத்தில் இருக்கக் கூடியவர்களைக் கைது செய்யக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** போலீஸார், அவர்களுக்கு இருக்கிற தகவலையொட்டி நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். இதைப் பற்றி விவரங்கள் கூறுவதற்கில்லை.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** அமைதியான முறையில் அதிருப்தி தெரிவிப்பது கூட அமைதிக்குப் பங்கம் என்று கருதுகிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எது அமைதி, எது அமைதிக்குப் பங்கம் என்பதைப் பற்றி வேறு வேறு கருத்துக்கள் இருக்கின்றன.

**திரு. மு. கருணாநிதி:** கருப்புக்கொடி நிகழ்ச்சி சம்பந்தமாக எத்தனை தமிழரசுக் கழகத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** முதல் அமைச்சர் அவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கருப்புக்கொடி பிடிப்பதாக இருந்தால் மட்டும் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ? அல்லது பொதுவாக அரசாங்கத்தின் கொள்கையே அந்த முறையில் மாறியிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** முதல் அமைச்சர் என்று இல்லை. அவருக்கு எதிர்ப்பு என்று இல்லை. ஒரு கூட்டம் ஏற்படுத்துகிறார்கள். அதையொட்டி சற்றும் சம்பந்தம் இல்லாமல் வேறு ஏதாவது செய்தால் அமைதிக்குப் பங்கம் விளையும் என்பது தான் பிரச்சினை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** எனக்கு ஞாபகம் இருக்கிறது. முன்பு திரு. ராஜாஜி அவர்கள் இருந்தபோது அவர்கள் கலந்துகொண்ட மாநாட்டுக்கு எதிராக நாங்கள் விவசாயிகளைத் திரட்டி கொள்கையை எதிர்க்கும் முறையில் கருப்புக்கொடி காட்டினோம். அப்போது கருப்புக்கொடி காட்டுவதற்கு வசதி இருந்தது. கருப்புக்கொடி காட்டுவது என்பது ஜனநாயக முறையில் சரி

என்று நான் கருதுகிறேன். இப்போது முதல் அமைச்சர் அவர்களுடைய கொள்கையில் அதிருப்தி இருக்கக் கூடியவர்கள், மாற்றுக் கருத்து இருக்கக் கூடியவர்கள் கருப்புக்கொடி காட்டுவதை ஏன் தடுக்கவேண்டும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ராஜாஜி அவர்களுக்குக் கனம் உறுப்பினர் ஏதோ கருப்புக்கொடி காட்டினார் என்று சொன்னார்கள். இதே உறுப்பினர் எனக்கும் காட்டியிருக்கிறார்கள். தமிழரசுக் கழகமும் கருப்புக்கொடி காட்டியிருக்கிறது. அப்போது அவர்களுக்கெல்லாம் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. அதில் பார்த்ததிலிருந்து தான் இம்மாதிரி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அனுபவத்தின் பேரில் தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லுகிறேன், அமைதி, அமைதியின்மை என்பதுபற்றி வேறு வேறு கருத்துக்கள் இருக்கலாம். ரொம்பவும் அமைதியாக எட்டி உதைக்கிறேன் என்று கூடச் சொல்லலாம்.

**திரு. கரு. சீமைச்சாமி:** ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள், பிரதம மந்திரி அவர்கள் காந்திக்கிராமம் வரும்போது கருப்புக்கொடி காட்டியபோது தனியாக இடத்தைக் கொடுத்து இந்த இடத்திலிருந்து காட்டுங்கள் என்று சொன்னார்கள். அந்த வழக்கம் ஏன் மேற்கொள்ளப்படவில்லை ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அது முன்பு நடைபெற்றது. அப்போது அனுமதிக்கப்பட்டது. அந்த அனுபவத்தின் பேரில் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னேன். கனம் அங்கத்தினர் சீமைச்சாமி குறிப்பிடுவது முதல் முதலாக முதுகுளத்தூரில் நடந்த சம்பவத்திற்குப் பிறகு பிரதமர் வந்தபோது, ஜனநாயகக் கட்சி என்ற கட்சி, தாங்கள் இங்கே சென்னை அரசாங்கத்தின் நடவடிக்கையை ஒப்புக்கொள்ளவில்லை, கண்டிக்கிறோம் என்று பிரதமருக்குத் தெரிவிக்கவேண்டும் என்று சொன்னபோது, தனியாக ஒரு இடம் ஒதுக்கி அங்கே அனுமதிக்கப்பட்டார்கள்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் சபைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பெல்லாம் அதிருப்தியாளர்கள் அதிருப்தியைக் காட்ட கருப்புக் கொடி காட்டுகிற அத்தகைய நிகழ்ச்சி நடைபெற்று இருக்கிறது. அத்தகைய நிகழ்ச்சி பல்லாண்டு காலமாக நடைபெற்று வருகிறது. கருப்புக்கொடி காட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதே ஏற்பாட்டை இப்போது ஏன் செய்து கொடுக்கக் கூடாது என்று அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அப்போது ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்ட அந்த அனுபவத்திலிருந்து தான் இப்போது இந்த ஏற்பாடு என்று நான் முன்பே சொன்னேன்.





**புலவர் கா. கோவிந்தன்:** கருப்புக்கொடி காட்டிய நடவடிக்கைகளால் எங்காவது பாதகம் ஏற்பட்ட கூட்டங்களைப் பற்றி குறிப்பிட்டு எடுத்துக்காட்ட முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் அதைத் தான் சொன்னேன். திருவல்லிக்கேணியில் நடந்த கூட்டத்தில் கூட்டத்திற்கு எதிரே ஒலிபெருக்கி வைத்துக்கொண்டு கோஷம் போட்டு சம்பந்தம் இல்லாதவர்கள் செய்திருக்கிறார்கள். நானும் சில பெண் அங்கத்தினர்களும் பேசிக்கொண்டிருந்தபோது எதிரிலே போட்ட கோஷம் இந்தக் கூட்டத்திற்கே பாதகமாகி அமைதியின்மையை விளைவித்தது என்று சொன்னேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து அரசாங்கத்தின் கொள்கையில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது. இனி இங்கே யாருக்கும் எதிராக கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை அனுமதிக்கக் கூடாது என்பது தான் அரசாங்கத்தின் கொள்கையா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதில் கொள்கை ஒன்றும் இல்லை.

**திரு. மு. கருணாநிதி:** முதல் அமைச்சரை திரு. ம.பொ.சி. சந்தித்த போது குறிப்பிட்ட இடத்திலிருந்து கருப்புக்கொடி காட்டுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்கவில்லை என்று சொன்னார்கள். கேட்டால் அனுமதி அளிக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதைப் பற்றியெல்லாம் திரு. ம.பொ.சி. அவர்கள் பேசினார்கள். அவர்கள் சில கருத்துக்களைக் கூறினார்கள். நானும் அவர்களுக்கு விளக்கிச் சொன்னேன். மேலும் ஏதாவது கருத்துத் தெரிவித்தால் அதைப்பற்றிக் கவனிக்கலாம்.

தோல் பதனிடும் சாலை (ராணிப்பேட்டை முதலிய ஊர்கள்)

* 3 கு.கா. கேள்வி.—திரு. சா. கணேசன்: } திரு. மு. பொ. வடிவேல்: } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ராணிப்பேட்டை, பேரணம்பட்டு, வாணியம்பாடி முதலிய ஊர்களில் உள்ள தோல் பதனிடும் சாலை நிர்வாகிகள் எவ்வித அறிவிப்புமின்றி ஊறல் வேலைகளை நிறுத்தி விட்டதால் சுமார் 6,000 ஹரிஜனங்கள் வேலையற்று அவதிக்குள்ளான செய்தி அரசாங்கத்திற்கு வந்ததா?

(இ) அத்தகைய நிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன ?

(உ) அதன்மீது தொழிலாளர் நலத்துறை அதிகாரி ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டாரா?

[24th October 1964

*(எ) இந்த நிலை மாறி மீண்டும் சுமுகமாகத் தொழில் நடை பெறவும் தொழிலாளர் துயர் அகலவும் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது அல்லது எடுத்துக் கொள்ளப் போகிறது ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) On account of the strained relations between the management and the workers.

(*c*) Yes.

(*d*) Interim settlement under section 12 (3) of the Industrial Disputes Act, 1947 has been effected between the two parties by the Labour Officer, Vellore, on 19th October 1964 and work has been resumed on 20th October 1964.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** *அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 'ஸ்ட்ரைன்டு ரிலேஷன்ஷிப்' என்று சொன்னார்கள். இதனுடைய முழு விவரம் என்ன?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** வேலை வாங்குகிற தொழில் அதிபர்கள், வேலை செய்கின்ற தொழிலாளர்கள் இவர்களிடையே நல்லுறவு எப்பொழுதும் இருக்கவேண்டும். சில சமயங்களில் இந்த உறவு கெட்டுப் போகிறது. அது தான் 'ஸ்ட்ரைன்டு ரிலேஷன்'.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** *கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து கேள்வி கேட்கவேண்டியிருக்கிறது. அவர் 'ஸ்ட்ரைன்டு ரிலேஷன்ஸ்' என்ற வார்த்தைகளை உபயோகப்படுத்தினார்கள். முதலில் சாதாரணமாக அதிகாரிகள் எழுதிவைத்திருக்கிறார்கள் என்று விட்டுவிட்டேன். அவர்கள் கேட்ட கோரிக்கை போனஸ் கோரிக்கை. போனஸ் வேண்டும் என்று அவர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். நோட்டீஸ் கொடுத்ததும் முதலாளி தோல் நனைப்பதை மூடிவிட்டார்கள். இது நான் நடந்தது. கோரிக்கைகளை வைத்து சமரசம் செய்து கொள்ள வசதி இருக்கும்பொழுது, உறவு கெட்டுவிட்டது என்று சொல்லுவது சரியா ?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவர்கள் நியாயமான கோரிக்கைகள் கேட்டால் கூட, அதைத் தொழில் அதிபர்கள் கொடுக்க அனுமதிக்காவிட்டால் அது தான் 'ஸ்ட்ரைண்டு ரிலேஷன்ஸ்'. அதில் ஒன்றும் தவறுதல் இல்லை. நான் ஒன்றும் தவறுதலாகச் சொல்லவில்லை.

### விடுமுறை விடுதிகள்

* 80 **கேள்வி.—திரு. ம. கமலநாதன்:** *கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*சென்னைக் கடற்கரையிலும், மகாபலிபுரத்திலும் விடுமுறை கழிக்கும் விடுதிகள் (Holiday huts) கட்டும் திட்டம் உண்டா?*

**கனம் திரு. கோ. பூவராகன்: ஆம், ஐயா.**



24th October 1964]

**திரு. ம. கமலநாதன்:** *அப்படி என்றால் இந்தத் திட்டம் எந்தக் கட்டத்தில் இருக்கிறது? இந்தத் திட்டம் துவங்கப்பட்டதா? எங்கு கட்டப்படும்? எவ்வளவு செலவழிக்கப்படுகிறது என்று அறியலாமா?*

**கனம் திரு. கோ. பூவராகன்:** தேசீய நெருக்கடி காரணமாக துவங்கப்படவில்லை. 1964-65-ம் ஆண்டில் துவங்கப்பட இருக்கிறது.

### பட்ட வகுப்புகளுக்குத் தமிழ் பயிற்று மொழி

* 81 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி:** *கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*தமிழகத்தில் இதுவரை எத்தனை கல்லூரிகளில் பட்ட வகுப்புகளுக்குத் தமிழ் போதனா மொழியாக வைக்கப்பட்டிருக்கிறது ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 7 (Seven) Colleges.

**புலவர் கா. கோவிந்தன்:** *தலைவர் அவர்களே, எந்த பாடங்களுக்கு இந்தப் பயிற்சி மொழித் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது? ஒவ்வொரு பாடத்திலும் எத்தனை மாணவர்கள் படித்து வருகிறார்கள்?*

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** Economics, Social Sciences, History.

இந்தப் பாடங்கள் தமிழ் மொழியிலே சொல்லிக்கொடுக்கப்படுகிறது. அது இல்லாமல் Politics, Geography and Psychology அவைகளும் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. மாணவர்களுடைய எண்ணிக்கை இப்பொழுது எவ்வளவு இருக்கிறது என்கின்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

### *The Madras Gift Goods (Unlawful Possession) Act,* 1961.

* 82 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of cases detected so far under the Madras Gift Goods (Unlawful Possession) Act, 1961, since its enforcement;

(*b*) the name of district where the number of the cases is highest; and

(*c*) the number of cases ended in conviction, pending and ended in acquittal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 64.

(*b*) Madurai.

(*c*) Conviction—34.
Acquittal—16.
Pending Trial—7.
Discharged—3.
Under investigation—2.
Undetected—2.

[24th October 1964

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** எவ்வளவு பேர்கள் ஆசிரியர்கள்? எவ்வளவு பேர்கள் ஆசிரியர்கள் அல்லாதவர்கள்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அந்த விவரம் என்னிடம் இல்லை.

### அமைச்சர்களின் சொத்து விவரங்கள்

*83 **கேள்வி.**—திரு. மு. கருணாநிதி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலங்களிலுள்ள அமைச்சர்கள் தங்களுடைய சொத்துக்களின் விவரங்களை அரசாங்கத்திற்கு அறிவிக்க வேண்டுமென்று மத்திய அரசு, மாநில அரசாங்கங்களுக்கு ஏதேனும் உத்திரவு பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் இம்மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) There has been no directive from the Central Government in this regard. But the Madras Government have decided that the Ministers should report to the Chief Minister and the Party Chief their assets and liabilties and also send annual reports about them. The details are being worked out.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** அமைச்சர் அவையிலே இருக்கக்கூடிய அமைச்சர்களெல்லாம் முதல் அமைச்சர்களிடம் தங்களுடைய கணக்குகளைக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அமைச்சர்களுடைய பெயரில் இருக்கக்கூடிய சொத்துக்களை மட்டும் கொடுக்கவேண்டுமா? அமைச்சர்களுடைய மனைவிமார்கள் மக்கள் இவர்கள் பெயரில் உள்ள சொத்துக்களின் விவரங்களையும் கொடுக்கவேண்டுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** Details are being worked out. என்று சொன்னேன். அந்த வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விவரங்கள் இப்பொழுது கவனிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. இராம. அரங்கண்ணல்:** இப்படி அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் யாரிடம் சொத்து விவரங்களைக் கொடுக்கவேண்டும்? அப்படி ஒப்படைக்கின்ற நேரத்தில் அதனுடைய நகல் நமது சபை முன் வைக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சந்தானம் கமிட்டி என்று ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. பார்லிமெண்டு, மத்திய அரசாங்கம் அதற்கு ஏற்பாடு செய்தது. அவர்கள் லஞ்ச ஒழிப்பு விஷயத்தைப் பற்றி பல சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். அந்த சிபார்சுகளில் இதெல்லாம் கூட சேர்ந்து இருக்கிறது. மந்திரிகளைப் பொறுத்த மட்டில் இந்த ஏற்பாடு. முதல் அமைச்சர் கூட இதில் சேர்ந்தவர் தான். முதல் அமைச்சரும் அந்த விவரங்களெல்லாம் கொடுக்க வேண்டியது தான். அதைக் கட்சி ரீதியிலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. அரசாங்க ஆட்சி ரீதியிலே இல்லை. ஆனால், சட்ட மன்ற உறுப்பினர்களைப் பொறுத்த மட்டில், அதைப்பற்றிக் கூட சந்தானம் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. அதைப்பற்றி சபையின் தலைவர், மற்றக் கட்சித் தலைவர் இவர்களையெல்லாம் சேர்த்து வைத்துப்பேசி இது பற்றி எல்லோருக்கும் உடன்பாடு ஏற்படக்கூடிய வகையில் என்ன செய்வது என்று பின்னால் முடிவு செய்யலாம் என்று இருக்கிறோம்.



**திரு. ம. கமலநாதன்:** அமைச்சர்கள் முதல் அமைச்சர் அவர்களிடமும் கட்சித் தலைவரிடமும் கணக்கு காட்டவேண்டும் என்று முதல் அமைச்சர் சொன்னார்கள். முதல் அமைச்சர் அவருடைய கணக்கை யாரிடம் காட்டுவது என்று அறியலாமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** காங்கிரஸ் தலைவர், அல்லது பிரதம மந்திரி, அல்லது மத்திய அரசாங்கத்து உள் நாட்டு அமைச்சர் இவர்களிடம் கொடுக்கலாம். முதல் அமைச்சர் யாரிடம் கொடுப்பது என்பது தான் இப்பொழுது 'வொர்க் அவுட்' ஆகிறது.

### லஞ்சக் குற்றங்கள்

*84 **கேள்வி**—திரு. ப. உ. சண்முகம்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) லஞ்ச ஒழிப்பிற்காக தனி இலாகா ஏற்படுத்திய பின் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள லஞ்சக்குற்றங்கள் எத்தனை?

(இ) அவைகளின் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Ten cases have been detected. Enquiries in about 145 cases are in progress.

(b) One case has been charge-sheeted and is pending in Court; the other nine cases are under investigation and will be charge-sheeted shortly.

### *Fourth Five-Year Plan*

*85 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether draft proposals for the Fourth Five-Year Plan have been finalised; and

(b) if so, the total out-lay for the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No.

(b) Does not arise.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இதற்கு முன்பு ஒவ்வொரு திட்டத்திற்கான விவரங்களைத் தயாரிக்கக்கூடிய சமயத்தில் இந்தச் சட்ட சபையில் உள்ள எல்லாக் கட்சியினரையும் கலந்து செய்தது போல அந்த முறையில் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[24th October 1964

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்பொழுது "டிராப்ட் ப்ளான்" இன்னும் தயாராகவில்லை. அடுத்த 27, 28 தேதிகளில் டெல்லியில் நடைபெறுகிற "நாஷனல் டெவலப்மெண்டு கவுன்சில்" கூட்டத்தில் இதுபற்றி ஆலோசிக்கப்படும். அந்த "டிராப்டு" இன்னது என்று தெரிந்து, இந்த மாநில ஆட்சிக்கு விவரங்கள் தெரிந்த பிறகு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்பது அப்பொழுது முடிவு செய்யப்படும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** நகல் சம்பந்தமாக எல்லா விவரங்களும் இன்னும் சேகரிக்கப்படாவிட்டாலும் கூட, 'வொர்கிங் குரூப்ஸ்' நியமிக்கப்பட்டு பரிசிலனையில் இருக்கிற விவரங்கள் நன்ருகத் தெரியும். தேசீய அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்தில் இதைப்பற்றி விவாதிப்பதற்குக் கனம் முதல் அமைச்சர் அவர்களும், கனம் தொழில் அமைச்சர் அவர்களும் போக இருக்கிருர்கள் என்பதையும் அறிகிறேன். அங்கு நம்முடைய ராஜ்யத்திற்காக எந்த அளவுக்கு திட்டத்திற்கு மொத்த நிதி ஒதுக்கவேண்டும் என்று கோரப்போகிருர்கள் என்ருவது அறியலாமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்பொழுது 'வொர்கிங் குரூப்ஸ்' வேலைகள் இன்னும் முடிந்தபாடு இல்லை. பூர்வாங்கமான ஆலோசனைதான். விவாதம்தான் இப்பொழுது நடைபெறுகிறது. நாஷனல் டெவலப்மெண்டு கவுன்சில் திட்டத்திற்கு மொத்தத் தொகை எவ்வளவு என்பதை நிர்ணயித்த பிறகுதான், அதற்கு மேலே நாம் என்ன கோருவது என்பது தெரியவேண்டும். பின்னுல் விவரங்கள் தெரிந்த பிறகுதான் இதெல்லாம் தெரிவிக்கப் படும்.

**திரு. ப. உ. சண்முகம்:** சென்னை சர்க்கார் பூர்வாங்க திட்டம் தயாரித்திருக்கிறதா? அப்படியென்ருல் அங்கத்தினர்கள் பார்வைக்கு அது அளிக்கப்படுமா?

MR. DEPUTY SPEAKER: The hon. the Chief Minister has already answered this point.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தயாரிக்கவில்லை என்று சொன்னேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** திட்டத்தைத் தயாரித்து இறுதி முடிவு எடுப்பதற்கு முன்பு சபையில் உள்ள எல்லாக் கட்சியினர்களையும் கலந்து ஆலோசித்தால்தான் பலன் உள்ளதாக இருக்கும். இறுதி முடிவு எடுத்தபிறகு கலந்து ஆலோசித்தால் அது பிரயோசனம் இல்லாமல் போய்விடும். ஆகவே, அதற்கு முன்னலேயே இந்தச் சபையின் சர்வ கட்சிக் குழுவை நியமித்து அதைப் பரிசீலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இறுதி முடிவு எடுத்தபின் சட்ட மன்றத்தில் சமர்ப்பிப்பது முறையல்ல, பலனற்றதாகப் போய் விடும் என்று கனம் அங்கத்தினர் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இது ஒரு 'லாங் ப்ரோஸஸ்' நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாக உடனடியாக 1, 2 மாதங்



24th October 1964]

களுக்குள் இதெல்லாம் முடிவு செய்யப்படக்கூடிய விஷயம். ஆகையினுல் என்ன ஸ்டேஜில் என்ன செய்கிறது என்பது பின்னுல் யோசித்து முடிவு செய்யப்படும்.

### அரசாங்க ஊழியர்களின் கட்டாய சேமிப்புத்தொகை

***86 கேள்வி—திரு. மு. கருணுநிதி:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெருக்கடி நிலையை முன்னிட்டு சென்னை மாநில அரசிதழ் பதிவு பெருத ஊழியர்களிடமிருந்து அதிகப்படியாக வசூலித்த கட்டாய சேமிப்புத் தொகையைத் திருப்பித்தர வேண்டுமென்ற யோசனை அரசாங்கத்தின் பரிசிலனையிலிருக்கின்றதா?

(இ) ஆம் எனில், அந்தத் தொகையை உடனடியாகத் திருப்பித்தர அரசு உத்திரவு பிறப்பிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b): The Government have issued orders sanctioning increases in the rates of Dearness Allowance ranging from Rs. 3·50 to 20 per mensem with effect from 1st September 1964 for Government servants drawing a pay up to a maximum of Rs. 600 per mensem. In view of this, the Government have decided to continue the present rates of deduction from pay towards employees' subscription to the provident fund and to review the matter again after some time in the light of circumstances obtaining then.

### *Pension scheme for employees in Private Sector*

*** 87 Q.—SRI M. KALYANASUNDARAM:** Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government of India called for the views of the State Government regarding the proposal for extending pension scheme for the employees in Private Sector; and

(b) if so, what are the details of the scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No.

(b) The question does not arise.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** நம்முடைய அரசாங்கத்தின் ஆலோசனையிலாவது தனியார் துறையிலே இம்மாதிரி பென்ஷன் திட்டம் ஏற்படுத்த வேண்டுமென்ற ஆலோசனை உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தனியார் துறையிலே பணி புரிகிற ஆசிரியர்களுக்கு பென்ஷன் ஸ்கீம் இருக்கிறது. மற்ற உத்தியோகஸ்தர்கள், தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், எம்பிளாயீஸ் பிராவிடென்ட் பண்டு ஸ்கீம், எம்பிளாயீஸ் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் ஸ்கீம்கள் இருக்கின்றன. இத்தகைய சட்டங்களின் கீழ் அவர்களுடைய நலன் கவனிக்கப்பட்டு வருகிறது.

[24th October 1964

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தனியார் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெறுகிற ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்சம் பென்ஷனை ரூ. 20 கொடுக்கவேண்டுமென்று வகுக்கப்பட்டிருக்கிறது. தனியார் துறையிலே பணியாற்றி, ஓய்வு பெறுகிற ஆசிரியர்களுக்கு அந்தத் தொகை கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட ஆசிரியர்களுக்குக் கொடுப்பதற்கு வழி வகை செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** பிராவிடெண்ட் பண்டுத் திட்டத்திலே பென்ஷன் திட்டத்தையும் இணைத்து, அவர்கள் ஓய்வு பெறும் காலத்தில் வசதி அளிப்பதற்கு வேண்டி, தனியார் துறையிலுள்ள தொழிலாளர்களுக்கும் அத்தகைய திட்டத்தை விஸ்தரிக்கும் யோசனை அரசாங்கத்தினிடம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதெல்லாம் மத்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது.

### நஞ்சை நிலங்களில் நீர்ப்பிடிப்பு (வானூர்)

* 88 **கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டத்தில் வானூர் தொகுதியிலுள்ள ஏரி எதிர்வாய்களிலுள்ள நஞ்சை நிலங்கள் நீர்ப் பிடிப்பினால் வருடா வருடம் மகசூல் நட்டம் ஏற்படுவது பற்றி சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?

(இ) ஆமெனில், என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடம் இல்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, ஒன்றிப்பு மன்றத் தலைவர்கள்கூட, பல ஏரிகள் இம்மாதிரி நீர்ப்பிடிப்பினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று கலெக்டர் மூலமாக அரசாங்கத்திற்குத் தெரிவித்திருந்தும் கூட, அமைச்சர் அவர்கள் தகவல் இல்லை என்று சொல்லுவது வேதனை அளிப்பதாக இருக்கிறது. டி.ஸி.ஆர். ஸ்கீமின்படி வேலை தேவைப் படுகிற இடங்களில் இனிமேலாவது வேலை நடப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த வானூர் தொகுதியைப் பொறுத்த வரையில், நான்கு ஏரிகளை ரிப்பேர் செய்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறது. அதாவது, நேசல் டாங்க், இரும்பை டாங்க், வாடம்பூண்டி டாங்க், ராயப் புதுப்பாக்கம் டாங்க். இந்த நான்கு ஏரிகளையும் எஸ்.எம்.ஐ.பி. திட்டத்தின் கீழ் ரிப்பேர்



24th October 1964]

செய்வதைப்பற்றி சீப் என்ஜினியர் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். எஸ்டிமேட்டுகள் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, வேலை துவக்கப்படும். குறிப்பிட்ட எந்த டாங்கையாவது பற்றிக் கேள்வி கேட்டால், உண்டா, இல்லையா என்று பதில் சொல்லலாம். அதோடு மட்டுமல்லாமல் கிளியனூர் சித்தேரி டாங்கை ரூ. 53,500 செலவில் ரிப்பேர் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ம. கமலநாதன் :** இப்படி ஏரி எதிர்வாய்க்காலிலுள்ள நிலங்களை நீர் பிடிப்பினால் நஷ்டம் ஏற்பட விடுவதற்குப் பதிலாக, அதை ஆர்ஜிதம் செய்தால் நல்லது என்று அரசினர் உணர்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஆர்ஜிதம் செய்ய வேண்டிய ஆர்ஜிதம் செய்கிறோம். தண்ணீர் வற்றும்பொழுது, விவசாயிகள் விவசாயம் செய்து அதனால் பலன் அடைகிறார்கள். மாமூலாக பல வருஷங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படியிருக்கும் அப்புறப்படுத்தினால் நலமாக இருக்காது என்பது அரசாங்கத்தின் கருத்து.

### விவசாயிகளுக்கு நிவாரணம்

* 89 **கேள்வி—மு. ரா. கிருஷ்ணமூர்த்தி:** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் தஞ்சை மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும் அறுவடை செய்யப்பட்ட சம்பா நஞ்சை நிலங்களில் உற்பத்திக் குறைவினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில் அவர்களுக்கு எந்த வகையில் நிவாரணம் அளிக்க உத்தேசம் ?

**THE HON. SRI P. KAKKAN :** (a) Yes Sir.

(b) One hundred and eighty bags of paddy seeds were distributed to the ryots affected by floods at half cost in South Arcot district. A special remission of Rs. 5,762.15 was granted for the crops affected in the floods as a relief measure. In Thanjavur district 1,130 bags of samba seeds was distributed to ryots in flood affected areas at subsidised rate. A short term spot loan of Rs. 1,49,500 has been disbursed to them. A remission of Rs. 31,291-74 nP. was also granted for an extent of 6,118.82 acres.

**திரு. எம் தண்டாயுதபாணி:** தஞ்சை ஜில்லாவில் இருபோக சாகுபடி பாதிக்கப்பட்டது சம்பந்தமாக இந்தக் கேள்வி கேட்கப் பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் கடந்த ஆண்டு சம்பா சாகுபடி எவ்வளவு பாதிக்கப் பட்டது, எதிர்பார்த்தது எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** தனியாகக் கேள்வி போடவேண்டும்.

**திரு. ம. கமலநாதன் :** நஞ்சை நிலங்களில் உற்பத்திக் குறைவினால் விவசாயிகளுக்கு என்ன நிவாரணம் அளிக்கப்பட்டது என்று கேட்கப்பட்டது. அமைச்சரவர்கள் பதில் சொல்லும்

[24th October 1964

பொழுது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்திக் குறைவினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது என்றால், மற்ற மாவட்டங்களிலும் அப்படிப்பட்ட ஏற்பாடுகளை அரசினர் செய்வதற்கு முன்வருவார்களா?

**கனம் திரு. பூ. கக்கன் :** மழை பெய்து வெள்ளம் வந்து அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு கொடுக்கிறோம். மற்றவர்களுக்கு கொடுப்பதில்லை. அந்தந்த சமயத்தில் மக்கள் முறையிட்டால் அதைப் பரிசீலனைசெய்து அரசாங்கம் முடிவெடுக்கும்.

## UNSTARRED QUESTIONS

*Advances for installation of pump sets.*

16 Q.—SRI T. P. ALAGAMUTHU கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-64-ல் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு வடிமுனை போர் கிணறுகளில் (Filter point) பம்ப் செட் அமைக்க விவசாயிகளுக்கு கடன் கொடுக்க எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது?

(இ) ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவழிக்கப் பட்டதா?

A.—(a) Rs. 1,00,000 (Ruppees one lakh).

(b) No, Sir. A sum of Rs. 68,360 (rupees sixty-eight thousand three hundred and sixty) only was spent.

(அ) ரூ. 1,00,000.

(இ) இல்லை. ரூ. 68,360 மட்டுமே செலவழிக்கப்பட்டது.

*Slum clearance in Mylapore.*

17 Q.—SRI RAMA ARANGANNAL : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மயிலை 84-வது வட்டத்திலுள்ள சிலேட்டர்புரம், மீனம்பாள்புரம், ருதக்போர்டு ஆகிய அரிசன மக்களுடைய குடிசைவாழ் பகுதிகளைத் திருத்தியமைக்கும் திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா?

A.—*Meenambal and Ruthekford Slums.*—There is no scheme at present to clear these slums.

These will be considered for inclusion in the comprehensive scheme for clearing the slums on both sides of Buckingam Canal.



24th October 1964]

*Slaterpuram Slum.*—Yes. The State Housing Board has programmed to clear this clum. As soon as alternative lands are ready the scheme will be implemented.

**மீனம்பாள்புரம், ரூதக்போர்டு குடிசைவாழ் பகுதிகள்**—இந்தக் குடிசைவாழ் பகுதிகளை அகற்றுவதற்கான திட்டம் எதுவும் இப்போது இல்லை.

பக்கிங்ஹாம் கால்வாயின் இருமருங்கிலுமுள்ள குடிசைவாழ் பகுதிகளை அகற்றும் விரிவான திட்டத்தில் இவைகளைச் சேர்க்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**சிலேட்டர்புரம் குடிசைவாழ் பகுதி.**—ஆம். இந்தக்குடிசைவாழ் பகுதியை அகற்ற மாநில வீட்டு வசதி வாரியம் (போர்டு) திட்டமிட்டிருக்கிறது. இதற்குப் பதில் வேறு இடத்தில் நிலங்கள் கிடைத்தவுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

*Mid-day Meals Scheme.*

18 Q.—SRI A. K. SUBBIAH : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரிசன இலாகாவால் நடத்தப்படும் பள்ளிகளில் மதிய உணவு கட்டணம் மாணவர் ஒருவருக்கு எவ்வளவு கொடுக்கப் படுகிறது?

(இ) இந்தக் கட்டணம் குறைவாக உள்ளது என்று சர்க்காருக்குத் தகவல் வந்துள்ளதா?

A.—(a) The supply of mid-day meal to pupils in Harijan Welfar Schools is made through contractors who are paid at the rate of 15 paise per meal per pupil per day.

(b) Yes.

(அ) அரிசன நலப்பள்ளி மாணவர்களுக்கு காண்டிராக்டர்கள் மூலம் மதிய உணவு வழங்கப் படுகிறது. இதற்காக ஒரு மாணவருக்கு அன்றாடம் ஒரு வேளைச் சாப்பாட்டிற்கு 15 காசுகள் என்ற விதத்தில் காண்டிராக்டர்களுக்குத் தொகை செலுத்தப் படுகிறது.

(இ) ஆம்.

*Mineral concession for gypsum*

19. Q.—SRI K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of applications received from the private parties for mineral concessions for gypsum in Tiruchirappalli, Madurai and Ramanathapuram districts during 1963 ?

A.—The number of applications received from private parties for mineral concession for gypsum during 1963 on the three districts are as follows :—

| | Mining Lease. | Prospecting Licence. | Total. |
|---|---|---|---|
| Tiruchirappalli | 1 | 1 | 2 |
| Ramanathapuram | .. | .. | 3 |
| Madurai. | .. | .. | .. |

Both the applications received in Tiruchirappalli district relate to areas in Perambalur taluk. In respect of Ramanathapuram district, all the three applications relate to areas in Sattur and Mudukulathur taluks.

இந்த மூன்று மாவட்டங்களிலும் 1963-ல் களிக்கல் (ஜிப்சம்) வெட்டியெடுப்பது சம்பந்தமாக தனிப்பட்டவர்களிடமிருந்து பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப் பட்டுள்ளது:—

| | சுரங்க வேலை லைசென்சுக்கு. | கனிப்பொருள் கிடைக்கின்றதா என்று ஆராய்வதற்கான லைசென்சுக்கு. | மொத்தம் |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| திருச்சிராப்பள்ளி .. | 1 | 1 | 2 |
| ராமநாதபுரம் .. | 3 | .. | 3 |
| மதுரை .. .. | .. | .. | .. |

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெறப்பட்ட இரண்டு விண்ணப்பங்களும் பெரம்பலூர் தாலூகாவிற்கு சம்பந்தப்பட்டவையாகும். ராமநாதபுரம் மாவட்டம் சம்பந்தமான மூன்று விண்ணப்பங்களும், சாத்தூர், முதுகுளத்தூர் தாலூகாக் களிலுள்ள பகுதிகளுக்குச் சம்பந்தப்பட்டவையாகும்.

*Legislators' Hostels, Madras.*

20 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR. Will the Hon. the Chief Minister be pleased to state the gross amount that have been realised by way of rent in the new and old Legislators' Hostels in the Government Estate, Madras, during the year 1963–64 and the amount spent towards maintenance charges such as electrical, telephone, etc.?

A.—Rent realised during the year 1963–64 is Rs. 70,151·10 P. Maintenance charges during the period amount to Rs. 63,634·81 P. which is made up of the following items :—

| | RS. | P. |
|---|---|---|
| Electricity .. .. .. | 12,548 | 50 |
| Telephone .. .. .. | 5,592 | 00 |
| Linen Washing .. .. .. | 1,875 | 55 |
| Electricity for pump motors .. | 4,184 | 40 |
| Water .. .. .. .. | 923 | 50 |
| Salary for the permanent staff ... ... | 28,628 | 00 |
| Salary for the lump allotment staff ... | 8,932 | 25 |
| Vim powder, phenyle, etc ... ... ... | 945 | 61 |
| Total ... | 63,634 | 81 |





This amount does not include the expenditure incurred by the Public Works Department towards property tax, furniture repairs, repairs for the buildings, white washing, etc.

*Public Works Department*

21 Q.—SRI A. THANGAVELU : கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள பொது மராமத்து இலாகா சப்-டிவிஷன் உதவி பொறியாளர் எத்தனை பேர்?

(இ) எந்தெந்த சப் டிவிஷனுக்கு ஜீப் கார் கொடுக்கப் பட்டிருக்கிறது?

(உ) ஜீப் கார் இல்லாத சப்-டிவிஷன்கள் எவை?

(எ) ஜீப் கார் கொடுக்கப்படாததற்கு காரணமென்ன?

A.—(*a*) There are 274 Subdivisional Officers in the Public Works Department Branch of Tamilnad.

(*b*) to (*d*) The particulars are furnished in the statement[a] enclosed.

(அ) தமிழ்நாட்டிலுள்ள பொதுப்பணித்துறை பிரிவில் 274 சப்-டிவிஷனில் அதிகாரிகள் உள்ளனர்.

(இ), (உ), (எ) இணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

*Harijan Students*

22 Q.—SRI A. ARUMUGAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் 1953-ல் எத்தனை அரிசன மாணவ மாணவிகள் உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படித்தார்கள்?

(இ) 1963-ல் எத்தனை பேர் படித்தார்கள்?

A.—

| | 1952–53. | | 1962–63. | |
|---|---|---|---|---|
| | Boys. | Girls. | Boys. | Girls. |
| Colleges for Arts and Science | 1,825 | 111 | 2,158 | 297 |
| High Schools .. .. | 45,820 | 8,282 | 58,900 | 19,455 |

(அ), (இ)—

| | 1952–53. | | 1962–63. | |
|---|---|---|---|---|
| | மாணவர்கள் | மாணவிகள். | மாணவர்கள். | மாணவிகள். |
| கலைக் கல்லூரிகள் விஞ்ஞான கல்லூரிகள் | 1,825 | 111 | 2,158 | 297 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 45,820 | 8,282 | 58,900 | 19,455 |

a Printed as Appendix II onpages 780–823

[24th October 1964

*Tank at Kandhadu*

23 Q.—SRI A. G. BALAKRISHNAN : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம், மரக்காணம் யூனியன், காந்தாடு கிராமத்திற்கு மேற்கேயுள்ள ஏரியை புதிதாகக் கட்டவேண்டுமென்று கிராம பொதுமக்கள் மனு அனுப்பியுள்ளார்களா?

(இ) ஆமெனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

A.—(a) No.

(b) Does not arise.

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*Electrification of villages of Kattumannarkoil Constituency.*

24 Q.—SRI M. R. KRISHNAMURTHY : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் தொகுதியில் மின்சார வசதி செய்யப்பட்டிருக்கின்ற கிராமங்கள் எத்தனை ?

(இ) மேலும் எத்தனை கிராமங்களுக்கு இவ்வசதி செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

A.—(a) Twenty-one villages have been electrified in Kattumannarkoil Constituency.

(b) Twenty villages have been proposed to be electrified during the next two years.

(அ) காட்டுமன்னார்கோயில் தொகுதியில் 21 கிராமங்களுக்கு மின்சார வசதி செய்யப்பட்டிருக்கிறது.

(இ) அடுத்த இரண்டு ஆண்டுகளில் இன்னும் 20 கிராமங்களுக்கு மின்சார வசதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*Electricity for Thiruppethangudi village*

25 Q.—SRI C. M. AMBIKAPATHY : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலுகா திருப்பேத்தாங்குடி கிராமத்திற்கு 1963-64-ல் மின்சாரம் கொடுக்கும் உத்தேசம் உண்டா?



24th October 1964]

A.—Thiruppethangudi village in Nannilam taluk, Thanjavur district, has already been electrified on 11th March 1964. Twelve domestic service connections have been effected on the date of energisation. The street lights in the village were switched on 29th March 1964.

தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் தாலுகாவிலுள்ள திருப்பேத்தாங்குடி கிராமத்திற்கு 11-3-1964-ல் ஏற்கனவே மின்சார வசதி கொடுக்கப்பட்டுள்ளது. மின்சார இணைப்பு கொடுத்த தேதியில் பன்னிரண்டு வீடுகளுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டது. 29-3-64-ல் இந்த கிராமத்தில் தெரு விளக்குகள் எரிய ஆரம்பித்தன.

*Mylai Vaideeka Sabha (use of amplifier)*

26 Q.—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether objections have been received by the Commissioner of Police to the issue of licence for the daily and long use of amplifier to the Mylai Vaideeka Sabha, in Chitrakulam North street, Mylapore, by the residents of the place; and

(b) if so, the action taken thereon ?

A.—(a) Yes. Objections were received from a few individuals.

(b) No rule or law was voilated by the Sabha in using the louudspeaker inside the Sabha premises and the conditions were adhered to by the organisers of the Sabha. Hence the question of taking action did not arise.

(அ) ஆம். சிலர் இதனை ஆட்சேபித்துக் கடிதம் எழுதியுள்ளனர்.

(இ) சபை நிர்வாகிகள் சபைக்குள் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தியதால் எந்த விதியோ சட்டமோ மீறப்படவில்லை. இதுபற்றிய நிபந்தனைகளைச் சபை நிர்வாகிகள் அனுசரித்தே நடந்தனர். எனவே, இவ் விஷயத்தில் நடவடிக்கை எடுப்பது குறித்த கேள்விக்கே இடமில்லை.

*Green leaf manure*

27 Q.—SRI R. JEEVARATHINAM : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு ஜில்லா காடுகளில் பசுந்தாள் உரத்திற்காக பாதுகாக்கப்பட்ட காடுகளிலிருந்து எத்தனை டன்கள் தழை எருக்கள் பொதுமக்களுக்கு (விவசாயிகளுக்கு) அனுமதிக்கப்பட்டன ?

[24th October 1964

(இ) காட்டிலிருந்து தழை எருக்கள் கொண்டுவருவதில் விவசாயிகளுக்கு காட்டிலாகா சிப்பந்திகளால் ஏற்படும் தொந்தரவுகள் குறித்து கனம் அமைச்சர் அவர்களுக்கு புகார்கள் ஏதாவது வந்தனவா ?

(உ) ஆமெனில், அவைகளின்மீது என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன ?

*A.*—(*a*) A total quantity of 3,030 cart-loads or 1,515 tonnes of green leaf manure was removed from the forests of North Arcot district during 1963–64 under permits issued by the Forest Department.

(*b*) No.

(*c*) Does not arise.

(அ) 1963-64ல் வட ஆற்காடு மாவட்டக் காடுகளிலிருந்து மொத்தம் 3,030 வண்டி பசுந்தாள் உரம் அல்லது 1,515 மெட்ரிக் டன் பசுந்தாள் உரம் காட்டிலாகா வழங்கிய அனுமதிச் சீட்டுகளின்படி அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

### *Bridge across Uppanar*

28 *Q.*—SRI S. SIVASUBRAMANIAN : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலுகாவில் பிச்சவரம் உப்பனாற்றில் ஒரு பாலம் கட்ட உத்தேசமுண்டா ?

*A.*—Yes. Thhere is a proposal under the consideration of the Chief Engineer (Irrigation) to construct a bridge-*cum*-regulator across the Uppanar near Pichavaram ferry crossing in Chidambaram taluk. The plans and estimate for the above work for Rs. 3·80 lakhs are under scrutiny and as soon as they are finalised, necessary action will be taken by the Chief Engineer (Irrigation) to get the estimate approved by the competent authority.

சிதம்பரம் தாலுகாவில் பிச்சவரம் தோணித்துறை சந்திப்பில் உப்பனாற்றின் குறுக்கே பாலம்-ரெகுலேட்டர் ஒன்றைக் கட்டுவது பற்றி (பாசனத்) தலைமைப் பொறியாளர் திட்டம் ஒன்றை ஆலோசித்து வருகிறார். மேற்சொன்ன வேலையை நிறைவேற்ற ரூ. 3.80 லட்சம் செலவாகும். இத்திட்டம் குறித்து வரைபடங்களும் மதிப்பீடுகளும் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. பரிசீலனை செய்து அவற்றை முடிவு செய்ததும் (பாசனத்) தலைமைப் பொறியாளர் மதிப்பீடுகளைத் தகுந்த அதிகாரிக்கு அனுப்பி அங்கீகாரம் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்.



24th October 1964]

### *Hospital at Bhuvanagiri (expansion of)*

29. *Q.*—SRI S. SIVASUBRAMANIAN : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புவனகிரியில் இருக்கும் அரசாங்க மருத்துவ மனையை பெரிதாக்கும் திட்டம் உண்டா ?

(இ) ஆமெனில், எப்போது ?

*A.*—(*a*) There is only a Panchayat Union, dispensary at Bhuvanagiri and there is no proposal to expand it.

(*b*) Does not arise.

(அ) புவனகிரியில் பஞ்சாயத்து யூனியன் மருத்துவமனை மட்டும்தான் இருக்கிறது. அதை விஸ்தரிக்கும் திட்டம் எதுவும் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

### *Flood bank for Paravanar*

30. *Q.*—SRI S. SIVASUBRAMANIAN : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் சேத்தியாத்தோப்பு குறுக்கு ரோட்டிலிருந்து பின்னலூர் வழியாக வடலூர் போகும் ரோட்டிற்குக் கிழக்கில் பரவனாற்றில் பல ஏக்கர் நிலங்கள் வெள்ளத்தினால் நாசமாவதைத் தடுக்க ஒரு தடுப்பு அணை போடத் திட்டமுண்டா?

*A.*—Yes. There is a proposal to form a flood bank on the right side of Paravanar below the Paravanar bridge, in the road leading to Pinnalur from Vadalur. Detailed estimate for the proposal is under preparation.

ஆம். வடலூரிலிருந்து பின்னலூக்குச் செல்லும் சாலையில் பரவனாற்றுப் பாலத்துக்குக் கீழே பரவனாற்றின் வலப்பக்கத்தில் வெள்ளத் தடுப்புக் கரை ஒன்றை அமைக்கும் திட்டம் இருக்கிறது. இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

[24th October 1964

### Sub-Registry office for Vettavalam

31. *Q.*—SRI P. U. SHANMUGAM : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருவண்ணாமலை தாலூகா வேட்டவலம் கிராமத்தில் பத்திரப் பதிவாளர் அலுவலகம் திறக்க உத்தேசமுண்டா?

*A.*—The matter is under consideration.

அந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

### Co-operative banks (Defalcation of funds)

32 *Q.*—SRI P. U. SHANMUGHAM : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தைச் சார்ந்த செங்காலிபாளையம், துடியலூர், பல்லடம் கூட்டுறவு பாங்குகளில் பண மோசடி நடந்து விசாரணை நடந்தது உண்மையா?

(இ) ஆமெனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

*A.*—(*a*) No instances of defalcation have been reported in regard to the affairs of the Thudiyalur and Palladam Co-operative Banks. There is no co-operative bank at Sengalipalayam. There is, however, a Multi-purpose Co-operative Society at Sengalipalayam in which offences amounting to misappropriation of funds to the extent of Rs. 1,30,700 have come to notice.

(*b*) The case is under investigation by the Police.

(அ) துடியலூர், பல்லடம் கூட்டுறவு பாங்குகளில் பணக் கையாடல் எதுவும் நடந்ததாக அறிவிக்கப்படவில்லை. செங்காலி பாளையத்தில் கூட்டுறவு பாங்க் எதுவும் இல்லை. எனினும், செங்காலிபாளையத்தில் பல நோக்கக் கூட்டுறவு சங்கம் ஒன்று உள்ளது. அதில் ரூ. 1,30,700 வரையில் பணக் கையாடல் நடந்ததாகத் தகவல் கிடைத்துள்ளது.

(இ) போலீசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

### Tirupur Municipality (Defalcation of funds)

32. *Q.*—SRI P. U. SHANMUGAM. கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சியில் பணமோசடி நடந்திருப்பது உண்மையா?



24th October 1964]

(இ) விசாரணை எந்த நிலையில் உள்ளது?

*A.*—(*a*) Yes.

(*b*) The matter is still under investigation.

(அ) ஆம்.

(இ) மேலும் விசாரணை நடைபெறுகிறது.

## II.—CALLING ATTENTION TO DETERIORATING POSITION IN AGRICULTURE IN THANJAVUR DISTRICT.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சென்ற இரண்டு அறுவடை காலமாக உற்பத்தி குறைந்த உள்ளது. இப்பொழுது அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டு இப்பொழுதுள்ள நெருக்கடி நிலைமையில் தஞ்சையிலிருந்து சென்னை நகரத்திற்கும் மற்ற ஜில்லாக்களுக்கும் அரிசி சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இன்னும் மூன்று லட்சம் ஏக்கர் நிலம் அறுவடையாக இருக்கிறது. நல்ல விதமான முறையில் உற்பத்தியை அதிகரிப்பதற்கு டிராக்டர்களையும் மற்றும் விவசாயிகளுக்கு வேண்டிய உரங்களையும், விவசாயிகளுக்குத் தேவைப்படும் கடன்களையும் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும். . . .

MR. DEPUTY SPEAKER : The hon. Member has simply to read the notice to draw the attention of the Hon. Minister to the matter.

THE HON. SRI P. KAKKAN : Mr. Deputy Speaker, Sir, I want to make the following statement :—

There was unprecedented heavy rainfall during the latter half of November 1963 and the first week of December 1963 in Thanjavur district. The rainfall was particularly heavy from 2nd to 6th December 1963 in the coastal areas of the district, viz., Shiyali, Mayuram, Nagapattinam and Thiruthuraipoondi taluks. Due to continuous and heavy rains, the water in the paddy fields could not drain away and the fields were inundated badly. The extent of paddy crops affected due to inundation in Thanjavur district is reported to be as follows :—

Samba—41,990 acres.

Thaladi—16,600 acres.

Total—58,590 acres.

Due to this failure arising from abnormally heavy rains, the yield during 1963–64 was badly affected. As a result of the reduction in yield, there was some difficulty in the repayment of loans by the farmers and the loans issued by the Kumbakonam Co-operative Central Bank during 1963–64 could not be recovered in full. As

[Sri P. Kakkan] [24th October 1964

the resources of the bank were locked up in the overdues, there was some difficulty in the sanction of loans in the area covered by the Kumbakonam Co-operative Central Bank. The Special credit limit applied for by the Bank was also pending sanction with the Reserve Bank of India, therefore, arrangements were made to provide funds to the Kumbakonam Co-operative Central Bank from the resources of the Madras State Co-operative Bank. The Madras State Co-operative Bank has so far sanctioned loans to an extent of Rs. 70 lakhs to the Kumbakonam Co-operative Central Bank. From the funds obtained from the Madras State Co-operative Bank, the Kumbakonam Co-operative Central Bank has issued loans to the extent of Rs. 52.56 lakhs to 19,962 farm plan holders till 19th September 1964.

The Government are considering the question of channelising the taccavi loans and the loans under the Intensive Manuring Scheme through the Co-operative Societies in Full Finance areas. Pending issue of orders, the Collector of Thanjavur has been permitted to issue loans under the Intensive Manuring Scheme in Tiruvarur, Tirumarugal, Nannilam and Vedaranyam blocks in the non-package areas in the jurisdiction of the Kumbakonam Co-operative Central Bank. As regards the area served by the Thanjavur Co-operative Central Bank, the Bank was able to finance all the eligible farm plan holders without any difficulty.

There was no shortage of fertilisers in the district during the last two years. The following quantities of chemical fertilisers were distributed in the district during 1962-63 and 1963-64.

| | | | Ammonium sulphate. | Super phosphate. |
|---|---|---|---|---|
| 1962-63 | .. | .. | 26,326 tons. | 28,442 tons. |
| 1963-64 | .. | .. | 29,000 ,, | 34,748 ,, |

There was also a carry over of fertilisers at the end of the last
9-00 a.m. two seasons, which would conclusively prove that there was no shortage as such. With a view to ensuring the timely supply of fertilisers to the ryots in the Intensive Agricultural District Programme area, issue of fertilisers from the retail depots to the members to the extent provided for in the loan applications was arranged even prior to the sanction of loans. In view of this arrangement, the ryots were able to get the fertilisers in time.

One T.D. 14 tractor maintained by the Agricultural department under Tractor Hiring Scheme is idle from August 1963, for want of spare parts for which orders have been placed with Messrs. Voltas Limited. The parts are expected to be delivered by their principals to the Indian Supply Mission, Washington, for shipment in due course. None of the Intensive Agricultural District Programme tractors was kept idle due to lack of spare parts. The Agricultural Engineer, Tiruvarur has reported that these tractors are being repaired and overhauled at the implements workshop promptly, whenever found necessary.



24th October 1964] [Sri P. Kakkan]

Tractors up to 50 Draw Bar Horse Power imported into India have been exempted from customs duty. These tractors are exempted from the whole of excise duty leviable thereon. No end-use certificate that such tractors are used solely for agricultural purpose is necessary. The trailers are made locally and there is, therefore, no question of payment of customs duty.

Under section 11-A of the Madras Motor Vehicles Act, 1939, tax need not be paid in respect of motor vehicles used solely for agricultural purposes. A motor vehicle used for transporting agricultural produce will not for the purpose of this section be deemed to be used solely for purposes of agriculture. The question of amending this section to cover all motor vehicles designed and used solely for agricultural operation on farms or farm lands in engaging the attention of the Government.

## III.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS GENERAL SALES TAX (SPECIAL PROVISIONS) BILL, 1964 (L.A. BILL NO. 44 OF 1964).

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I beg to move—

' That the Madras General Sales Tax (Special Provisions) Bill, 1964 (L.A. Bill No. 44 of 1964) be taken into consideration '.

*கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஸ்டேட்மெண்ட் ரெகார்டுக்காகப் படித்தாலும், பல கனம் அங்கத்தினர்களுக்கு இந்த விஷயம் புரியாதோ என்று நான் அச்சப்படுவதால், முதலில் (திரு. மீ. கலியாணசுந்தரம்: புரியாத மாதிரி அந்த ஸ்டேட்மெண்ட் தயார் செய்யப்பட்டிருக்கிறதா அல்லது . . . .) இல்லை, இல்லை இது ரொம்ப டெக்னிகல் மேட்டார், 'லா' சம்மந்தப்பட்டது. ஆகவே முதலில் இரண்டொரு வார்த்தைகள் விளக்கத்திற்காகச் சொல்லிவிட்டு பிறகு இதைப் படிக்கிறேன். நான் இதற்கு முன்னால் ஏற்படுத்திய முறையில் வெளி ராச்சியங்களிலிருந்து "ரா ஹைட்ஸ்" கொண்டு வந்தாலும், 'ட்ரெஸ்ட் டேன்ட்ஹைட்ஸ்' கொடுத்து வந்தாலும் 2 சதவிகிதம் வரி கொடுக்க வேண்டும் என்று போட்டு இருந்தோம். 'ரா ஹைட்ஸ்' விலை மதிப்புக் குறைவு. 'ரஸ்ட் ஹைட்ஸ்' விலை மதிப்பு அதிகம். இரண்டு மூன்று மடங்கு கூட இருக்கும். ரா ஹைட்ஸ் ரூ. 100 என்றால் ட்ரெஸ்ட் ஹைட்ஸ் ரூ. 200, 300 கூட இருக்கும். ஆகவே அம்மாதிரி வரி விதித்தால், வெளிராச்சியத்திலேயிருந்து ரா ஹைட்ஸ் கொண்டு வந்து நம் ராச்சியத்திலே ட்ரெஸ் செய்தால் வரி ரூ. 2 தான் கொடுக்க வேண்டும். டேன்ட் ஹைட்ஸ் கொண்டு வந்தால், அதனுடைய மதிப்பு ரூ. 200 என்றால், ரூ. 4 டாக்ஸ் கொடுக்க வேண்டும். இப்படி வரி விதித்தது சுப்ரீம் கோர்ட்டில் சரியில்லை, அது டிஸ்க்ரிமினேஷனாக இருக்கிறது, சென்னை ராச்சியத்திற்குள்ளே 'டேன்னிங்' செய்கிறவர்களுக்கு சலுகை ஆகவும், 'ட்ரெஸ்ட் டேன்ட் ஹைட்ஸ்' டீல் செய்கிறவர்களுக்கு பாதகமாகவும் இருக்கிறது, ஆகவே இந்த டிஸ்க்ரிமினேஷன்*

[Sri R. Venkataraman] [24th October 1964

தவறு என்று சொல்லிவிட்டார்கள். அந்த டிஸ்க்ரிமினேஷனைப் போக்கி, ரா ஹைட்ஸ் என்ன மதிப்போ, அந்த அளவுக்கு வரி கொடுக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தோம். இப்பொழுது ஸ்டேட்மெண்டைப் படிக்கிறேன்.

Rule 16 of the Madras General Sales Tax (Turnover and Assessment) Rules, 1939, prescribed the points at which the single point tax on hides and skins were to be assessed and collected under the Madras General Sales Tax Act, 1939. According to this rule, untanned hides and skins were liable to a State sales tax of 2 per cent at the point of last purchase. Tanned hides and skins were liable to a sales tax of 2 per cent at the point of first sale provided they had not suffered State sales tax as untanned hides and skins. This would mean that in the case of hides and skins bought and tanned within the State and then sold within the State, the liability to tax was only on the untanned hides and skins at 2 per cent of their purchase value at the last purchase, whereas if hides and skins tanned outside this State were imported and sold here, they would be liable to a first point sales tax of 2 per cent on their value, which no doubt would be substantially higher than the value of the same hides and skins in the untanned condition. In Writ Petition No. 147 of 1959, the Supreme Court held rule 16 (2) of the Madras General Sales Tax (Turnover and Assessment) Rules, 1939, as invalid, on the ground that the rule discriminated in the matter of levy of tax between hides and skins imported from outside the State and hides and skins purchased within the State and thus contravened the provisions of Article 304 (a) of the Constitution. That is with regard to inter-State trade and commerce. As the State would have to forego large revenues if the decision of the Supreme Court were to be given effect to, there was an urgent need to remove the discrimination pointed out by the Supreme Court in the matter of levy of tax on hides and skins and to provide re-assessment and collection of tax from dealers on hides and skins without any discrimination. The Madras General Sales Tax (Special Provisions) Ordinance, 1963 (Madras Ordinance 3 of 1963) was accordingly promulgated to achieve the object mentioned above and this House passed the Madras General Sales Tax (Special Provisions) Act, 1963 (Madras Act 11 of 1963) to replace the Ordinance.

Under Madras Act 11 of 1963, the rate of tax on sale of dressed hides and skins, during the period commencing on the 1st April 1955 and ending on the 31st March 1959 as raw hides and skins is 2 per cent of the amount for which such hides and skins were last purchased in the untanned condition. The Supreme Court again held in Haji Abdul Shukoor vs. State of Madras (Writ petitions 201 to 203 of 1963) that sub-section (1) of section 2 of Madras Act 11 of 1963 discriminated against imported hides and skins, which were sold up to the 1st August 1957, up to which date (according to the Supreme Court) the tax on sale of raw hides and skins was at the rate of 3 pies per rupee or one and nine-sixteenth per cent and that the sub-section could not be held to be valid even to the 1st August 1957 as the provision was void with respect to a certain initial period. The Government examined the judgment of the Supreme Court and they decided to amend Madras Act 11 of 1963 so as to bring that Act into conformity with the judgment subject, however, to the modification that the rate of one and nine-sixteenth per cent would operate only up to the 31st March 1957 and not up to the 1st August 1957, as the rate of tax of the sale of hides and skins (whether in a raw or dressed state) was increased to two per cent even from the 1st April 1957 by Madras Ordinance 1 of 1957.



24th October 1964] [Sri R. Venkataraman]

The general rate of tax specified in section 3 (1) of Madras Act IX of 1939, which had no application to hides and skins with effect from the 1st April 1957, was however increased to two per cent only with effect from the 1st August 1957, by Madras Act III of 1957.

As the situation that arose in 1963 had again arisen, there was an urgent need to remove the discrimination pointed out by the Supreme Court and so the Madras General Sales Tax (Special Provisions) Ordinance, 1964 (Madras Ordinance 1 of 1964) was promulgated.

The Bill seeks to re-enact the provisions of Madras Act 11 of 1963, as amended by Madras Ordinance 1 of 1964, with suitable modifications and to repeal the said Act and the Ordinance.

With these words, Sir, I commend the motion for the acceptance of the House.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Madras General Sales Tax (Special Provisions) Bill, 1964 (L.A. Bill No. 44 of 1964) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

"That the Madras General Sales Tax (Special Provisions) Bill, 1964 (L.A. Bill No. 44 of 1964) be passed."

The motion was put and carried and the Bill was passed.

[24th October 1964

## (2) THE MADRAS ELECTRICITY DUTY (AMENDMENT) BILL, 1964 (L.A. BILL NO. 45 OF 1964).

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That the Madras Electricity Duty (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 45 of 1964) be taken into consideration".

Under the Madras Electricity Duty Act, 1939 (Madras Act V of 1939), a duty calculated at the rate of three naye paise per unit of energy sold by a licensee at a price of more than twelve naye paise per unit is being levied and collected. The Madras State Electricity Board has decided to revise its tariff rates for the supply of electrical energy. The revised rates will take effect from 1st December 1964. The licensees in the State obtain supply of energy from the State Electricity Board for distribution. Consequent on the revision of tariff rates by the State Electricity Board, it has become necessary for the licensees also to enhance their rates of tariff. The licensees have represented to Government that when they revise the rates of tariff consistent with the revision of tariff rates by the State Electricity Board, sales of energy which are now exempt from the payment of duty will become liable to payment of duty in certain cases. After careful examination Government consider that the revision of tariff rates would result in some extra burden on the licensees which they might attempt to pass on to the consumers. It is therefore proposed to raise the taxable floor level of twelve paise per unit to fifteen paise per unit in order to give relief to the licensees. I may add here that the licensees have agreed that when they increase the tariff, the difference which now exists between the Electricity Board tariff and theirs, that difference, would be maintained in the same level. The Bill gives effect to the above decision. With these words I request, the House, Sir, to accept the motion.

MR. DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Electricity Duty (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 45 of 1964) be taken into consideration".

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவினாலே எந்தப் பாதகமும் ஏற்படவில்லை. ஏற்கெனவே இருக்கிற கஷ்டங்கள் என்ன உண்டோ அந்தக் கஷ்டங்கள் நீடிக்க இருக்கும். ஆனால், இந்தத் திருத்த மசோதா எதன் காரணமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அதனால் அதிகப் பளு ஏற்படுகிறது என்பதையும், குறிப்பாக, விவசாயத் தேவைக்கும், குடும்பத் தேவைக்கும் உபயோகப்படுத்தக்கூடிய மின்சாரத்திற்கு அதிகமான தொகை கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

பட்ஜெட் நேரத்தில் அமைச்சர் அவர்கள் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'ஒரு கமிட்டி போடப்பட்டது. அந்த கமிட்டி அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது' என்ற வகையில்



24th October 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

அமைச்சரவர்கள் சொல்லி, கட்டணத்தை உயர்த்தவேண்டுமென்று ஆரம்பித்தார்கள். அந்தக் கமிட்டியின் சிபார்சு என்ன என்று நமக்குத் தெரியாது. ஆனால், மின்சார போர்டு கட்டணத்தை அதிகரிக்க உத்தேசித்திருக்கக்கூடிய யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, உத்தரவு பிறப்பித்து கெஜட்டிலே வெளியிட்டிருக்கிறார்கள். இதன் மூலம், குடும்பத் தேவைக்காக மின்சாரத்தை உபயோகப்படுத்தினாலும், விவசாயத்திற்கு உபயோகப்படுத்தினாலும் எல்லாவற்றுக்குமே கட்டணம் உயர்த்தப்படப் போகிறது. அது ஒரு புறம் இருக்கட்டும்.

இப்பொழுது மின்சாரக் கட்டணம் விதிக்கக்கூடிய வகையில் இத்தனை வகைகள் இருக்க வேண்டுமா என்று யோசிக்க வேண்டும். அரசாங்கம் இன்னொரு திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள். அடுத்த மசோதா வர இருக்கிறது. அதன் அடிப்படையில் மின்சாரக் கட்டணத்தின் மீது வரி விதிக்கப்படுகிறது. இந்த மின்சாரக் கட்டணத்தின் மீது இதுவும் வரியாகக் கேட்கப்படுகிறது. வண்டியின் பாரம் பூமியிலே என்றபடி, இதை வரி என்று வசூலித்தாலும் சரி, உபரி வரி என்று வசூலித்தாலும் சரி, ட்யூடி என்று வசூலித்தாலும் சரி, கடைசியாக மின்சாரத்தை உபயோகப்படுத்தக்கூடிய மக்கள் தலையில்தான் இந்தப் பாரம் பூராவும் விழ இருக்கிறது. மின்சாரக் கட்டணம் எவ்வளவு என்று ஜனங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் கட்டணத்தை நிர்ணயித்துவிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். கட்டண விகிதம் ஒன்று இருக்கிறது. அடுத்து, கட்டணத்தின் மீது ஒரு வரி, அதற்கடுத்து, வரியின் மீது உபரி வரி, அடுத்து 'ட்யூடி' என்று இப்படிப் பல வகையாகப் பிரித்து, 'கட்டணம் குறைவாக இருக்கிறது' என்று அதில் காண்பிப்பது அர்த்தம் இல்லாமல் இருக்கிறது. இப்பொழுது கொண்டுவந்திருக்கும் இந்தத் திருத்தத்திலாவது அம்மாதிரி செய்திருக்கிறார்களா என்று பார்த்தால், அதுவும் இல்லை. பழைய முறையே தொடர்ந்து நடக்கிறது. இதிலே என்ன கஷ்டம் என்றால், ஜனங்களுக்கும் பிரயோஜனம் இல்லை; அரசாங்கத்திற்கும் பிரயோஜனம் இல்லை. மின்சார போர்டுக்கும் பிரயோஜனம் இல்லை. இப்படி எதற்கும் பிரயோஜனம் இல்லாமல், நிர்வாகச் செலவு மட்டும் அதிகரிக்கிறது. பல வகைகளில் கட்டணம் வசூலிக்கக்கூடிய காரணத்தால், ஒவ்வொன்றுக்கும் சில குமாஸ்தாக்கள் அதிகமாகத் தேவைப்படுகிறார்கள். வேலையும் அதிகரிக்கிறது, வசூலிக்கக்கூடிய தொகையில் ஒரு பகுதி வசூலிக்கிற செலவிலே விரயம் ஆகிறது. இதெல்லாம் கட்டணத்தோடு இணைக்கப்பட்டிருக்குமானால் ஓரளவு மக்களுக்காவது இந்தச் சலுகை கொடுக்க முடியும்; அரசாங்கத்திற்கும் செலவு கொஞ்சம் மிச்சமாகும். அப்படியிருக்க, பல வகையிலே போட்டு வசூலிக்க வேண்டிய காரணம் என்ன? இதையெல்லாம் பரிசீலிக்க ஒரே அடிப்படையில் கட்டணத்தை நிர்ணயிக்கக்கூடிய உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

*[திரு. மீ. கலியாணசுந்தரம்]* [24th October 1964

இன்றைக்குள்ள கட்டணத்தையும் உயர்த்தக் கூடாது. ஏற்கெனவே கட்டணம் உயர்ந்திருப்பது. சாதாரண ஜனங்கள் உபயோகப்படுத்தக்கூடிய சக்திக்கு மீறியதாக இருக்கிறது. புதிய கட்டண விகிதத்திலாவது ஏழை எளிய மக்கள் கூட மின்சாரத்தைப் பயன்படுத்தும் அளவுக்குச் சலுகை இருக்குமா என்று பார்த்தால், அத்தகைய சலுகை இல்லை. கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்களே தவிர, சலுகை ஏதும் காணோம். முன்பு, மின்சாரத்தை இவ்வளவு வேகமாக உபயோகப்படுத்திய காலத்‌லேயே, சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருந்தன. ஏழை எளியவர்கள், தங்கள் வீட்டுக்கு ஒரு விளக்கு, இரண்டு விளக்கு வைத்துக்கொண்டு மலிவான கட்டணங்கள் கட்டிக்கொண்டு இருந்தார்கள். அந்த மலிவான கட்டணம் தொழிலாளர் பகுதியில் இருக்கக் கூடியவர்களுக்கு உபயோகமாக இருந்தது. இப்படிப்பட்ட ஏழை எளிய தொழிலாளர்கள் போன்ற, குறைந்த வருமானமுள்ளவர்கள் மின்சாரத்தை உபயோகிக்கும் அளவுக்குக் கட்டணம் குறைவாக இருக்கவேண்டும். அப்படிச் செய்தால், குறைந்திருக்கும் வருமானம் அதிகரிக்குமே தவிர, அதனால் நஷ்டம் ஏற்படும் என்று கூறுவதற்கில்லை. எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுத்துவிட்டோம் என்று சொன்னாலுங் கூட, ஆயிரம் பேர்கள் இருக்கக்கூடிய கிராமத்தில் 50 பேர்கள்கூட மின்சாரத்தைப் பெற்றுப் பயன்பெறக்கூடிய நிலைமை இல்லை. நகரப் புறங்களில் எத்தனைபேர்கள் மின்சாரத்தினால் பயன் அடைகிறார்கள்? குடும்பத் தேவைக்கும் மின்சாரத்தைத் உபயோகப் படுத்துவதற்கான முறையில் கட்டண விகிதத்தைத் திருத்தியமைத்திருக்கவேண்டும். அதிலே தவறியிருக்கிறார்கள். இந்த மசோதாவின் மூலம் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்ற காரணத்தால் இந்த மசோதாவை நான் எதிர்க்காவிட்டாலும், அடுத்த மசோதாவை நான் எதிர்க்க போகிறேன் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, திரு. கலியாணசுந்தரம் அவர்கள் எலக்ட்ரிசிடி பட்ஜெட்டில் பேச வேண்டிய பிரசங்கத்தை இப்போது பேசிவிட்டார்கள். இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் நான் கூறிக்கொள்ள விரும்புவது என்னவென்றால் இப்போது பன்னிரண்டு நயாபைசா வரையிலும் லைசென்ஸிக்கு எலக்டிரிசிட்டி டியூட்டி டேக்ஸிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பன்னிரண்டு நயாபைசாவுக்கு மேல் போனால் ஒரு ஒரு யூனிட்டுக்கு மூன்று பைசா விதம் டியூட்டி கட்டுவார்கள். இப்போது மின்சார எலக்டிரிசிட்டி போர்டார் டேரிப் ரேட்ஸை கொஞ்சம் உயர்த்த இருப்பதால் நாம் பதினைந்து நயாபைசா வரையிலும் லைசென்சிக்கு எலக்டிரிஸிட்டி டியூட்டி கட்ட வேண்டாம் என்று விலக்களிக்க இருக்கிறோம். இதற்குக் காரணமே எலக்ரிசிட்டி டேரிப் ரேட்ஸ் அதிகமாவதால் எலக்டிரிசிட்டி டியூட்டியும் பன்னிரண்டு பைசாவுக்கு மேல் விழுந்தால் அதை கன்ஸ்யூமர்ஸ் பேரில் அவர்கள் உயர்த்திவிடக் கூடும். அவ்வாறு அவர்கள் செய்யக்கூடாது என்பதுதான் நாம் இப்படிச் செய்கிறோம். லைசென்ஸிலே நம்பிவிட்டப்படி



24th October 1964] *[திரு. ஆர். வெங்கட்டராமன்]*

வினியோகச் சார்ஜை கட்டுப்படுத்த வேண்டும் என்றால் முடியாது. இன்றைக்கு இருக்கிற சட்டத்தின் படிதான் சர்க்கார் நடக்க முடியும். மனம் போன போக்கில் நடக்க முடியாது. ஆகவேதான் இந்தச் சட்டத்தின்படி பதினைந்து நயாபைசா வரையிலும் அவர்களுக்கு விலக்களித்து கன்ஸியூமர்ஸ் ரேட்டை உயர்த்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறோம்.

இரண்டாவதாக நான்கைந்து ரேட் இருப்பதாகச் சொன்னார்கள். அதெல்லாம் முன்பு மின்சார போர்டு அமைக்கப்பட்ட பிறகு எல்லாம் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன. கன்ஸம்சன் டேக்ஸ் என்பது சர்க்காருக்குப் போய்ச் சேரும். எலக்டிரிசிட்டி டியூட்டி லைசென்ஸி கொடுப்பது. இது வேறு. அது வேறு. முன்பு இருந்த சர்ஜார்ஜை சேர்த்து விவசாயத்திற்கு சப்ளை செய்யப்பட்டது 8.05 என்றால் இப்போது 8.25 தான் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு யாரும் ஆட்சேபனை செய்ய வில்லை. ஆகையால் நாம் இதை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்று சொல்லி இந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதனால் அரசாங்கத்திற்கு வருமானம் குறையுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** குறையும். குறையும் என்றால் லாபத்தில் நஷ்டம் வரும். இன்றைக்கு இருக்கக்கூடிய வருமானத்தில் குறைவு ஏற்படாது. வரக்கூடிய வருமானத்தில் கொஞ்சம் குறையலாம். இந்த 12 நயாபைசா அளவுக்குக் கொடுப்பது ஸ்மால் ஸ்கேல், இண்டஸ்டிரிகளுக்கும்தான். அக்ரிகல்சர் சம்பந்தமாக உபயோகித்துக் கொள்பவர்களுக்கும் தான். இவர்களுக்கு கொஞ்சம் விலக்கு கொடுக்க வேண்டுமென்றே நினைக்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Electricty Duty (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 45 of 1964) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 3 and 4 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Madras Electricity Duty (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 45 of 1964) be passed."

The motion was put and carried and the Bill was passed.

(3) THE MADRAS ELECTRICITY (TAXATION ON CURRUPTION) AMENDMENT BILL, 1964 (L.A. BILL NO. 46 OF 1964).

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1964 (L.A. Bill No. 46 of 1964) be taken into consideration."

கனம் சபாநாயகர் அவர்களே, இது பற்றியும் நான் முதலில் சிறிது விளக்கிவிட்டுப் பிறகு அந்த அறிக்கையைப படிக்கலாம் என்று விரும்புகிறேன். ப்ரைஸ் ஆப் எனர்ஜி என்று சொன்னால் கரண்டு சார்ஜை தனியாகக் கணக்கிடுவதா, ஓவர் ஆல் சார்ஜ் மீடர் ரெண்ட், ப்யூஸ் சார்ஜ், ரீ கனெக்ஷன் சார்ஜ் எல்லாம் சேர்ந்ததா என்கிற சந்தேகம் வந்தது. இதற்கு சர்சார்ஜ் போடு கிறபோது மொத்தத்தில் போடுவதா, தனியாகப் போடுவதா ப்ரைஸ் ஆப் எனர்சி என்றால் என்ன என்பதற்கு விளக்கம் கூற வேண்டும் என்பதன் காரணமாகத்தான் இது கொண்டு வரப் பட்டிருக்கிறது என்று சொல்லி இந்த அறிக்கையைப் படிக்க விரும்புகிறேன்.

Clause 9 of section 2 of the Madras Electricity (Taxation on Consumption) Act, 1962 (Madras Act 4 of 1962) defines "price of energy" as the money consideration paid by a consumer to a licensee for the energy supplied by the licensee but as not including meter charges, interest on delayed payment, fuel surcharge and fuse of call charges and re-connection charges. Under the Madras Electricity Supply (Madras State Electricity Board and Licensees Areas) Surcharge Order, 1963, which came into force on the 1st November, 1963, a surcharge is being levied and collected on the sale of electrical energy by the licensees. The surcharge is levied on the basis of overall charges. "Overall charges" as defined in the Explanation to clause 4 of the said order means the aggregate amount mentioned in the bill for energy excluding service connection balances and tax on consumption of energy but including meter rent, fuse off calls and meter testing charges and charges for the maintenance of street lighting equipment. After the surcharge Order of 1963 came into force, electricity tax is being levied on the total amount of the price of energy including a portion of the surcharge leviable under that Order. It is not the entire amount of surcharge leviable under the Order that is added on to the price of energy including a portion of the surcharge leviable under that order. It is not the entire amount of surcharge leviable under the Order that is added on to the prices of energy for the purpose of taxation under Madras Act 4 of 1962 but only a portion of the surcharge so levied. This is on account of the fact that certain items of charges such as meter rent, fuse off call charges, etc., are not liable to tax at all. The levy of surharge has enhanced the price paid for the consumption of energy and hence electricty tax is leviable on the enhanced price. The question whether "price of energy"



as defined in clause (9) of Section 2 of the Madras Act 4 of 1962 would include the surcharge leviable under the 1963 order is not free from doubt. It may be contended that the "price of energy" does not include surcharge. In order, therefore, to place the matter beyond doubt it is proposed to amend Madras Act 4 of 1962 to provide that "price of energy" as defined in that Act would include a portion of the surcharge also. What portion of the surcharge leviable under the 1963 Order would be included in the "price of energy" for purposes of levying the tax is specified in new clause (c) of the Explanation to clause (9) of Section 2 of the Act. This amendment is given retrospective effect from the 1st November 1963, which is the date on which the Surcharge Order came into force. A provison for validating the levy and collection of surcharge already made is also proposed in clause 3 of the Bill. According to sub-clause (d) of that clause any electricity tax which becomes leviable under Madras Act 4 of 1962 as now proposed to be amended for any period during which the Madras Electricity Supply (Madras State Electricity Board and Licensees Areas) Surcharge Order, 1963, is in force may be levied and collected in the manner provided in that said Madras Act 4 of 1962 as now proposed to be amended. The Surcharge Order of 1963 will cease to be in force on the 1st December 1964. From that date onwards, the price of energy will not include surcharge and hence the electricity tax leviable under Madras Act 4 of 1962 will be only on the money consideration paid by the consumer for the energy supplied, but excluding the surcharge.

I want to clarify that after this new section of revised rates came into force, there will be no surcharge and the Surcharge Order of 1963 will cease to be in force from 1st December 1964. 9-30 a.m.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, சர்சார்ஜ் எல்லாம் வரி போடுகிறபோதே எடுத்து விட்டதாகச் சிறிது நேரத்திற்கு முன்னாலே கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சர்சார்ஜ் இருக்கிறது; கட்டணத்தை உயர்த்துகிற போதுதான் அவை நீக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் இப்போது கூறியதிலிருந்து தெரிகிறது. எப்படி இருந்தாலும் இந்த சர்சார்ஜின் மீது வரி விதிப்பதற்குள்ள அதிகாரத்தை அரசாங்கத்தார் எடுத்துக் கொள்கிறார்கள். அதைக் கொடுக்கக் கூடியது பூராவும் லைசென்சிகளுடையதல்ல; கன்ஸ்யூமரிடமிருந்து தான் வசூல் செய்து கொடுக்கப் போகிறார்கள். இந்த இடைக் காலத்தில் எங்காவது வசூலித்தால் செல்லாது என்று கோர்ட்டில் தீர்ப்பு ஆகிவிட்டால் என்னாவது என்பதற்காக முன் ஜாக்கிரதை யாக சட்டத்தைத் திருத்தி வைக்கிறார்கள். அவ்வாறு வசூலிக்கிற அடிப்படையே தவறு என்பது என்னுடைய அபிப்பிராயம். இதைத் தொழில் அதிபர்கள் ஆட்சேபிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மின்சார அபிவிருத்தியினால் அதிக லாபம் பெறுகிறவர்கள் தொழிலதிபர்கள்தான். அவர்கள் இதை ஆட்சேபிக்க முடியாது. இதிலே அதிகப் பளுவை ஏற்றுக்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [24th October 1964

கொண்டிருப்பவர்கள் விவசாயிகள்தான். மூன்று நாட்களாக உணவு நிலைமையைப் பற்றிக் கடுமையாக விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. விவசாய அபிவிருத்திக்கு அவர்களுக்கு மலிவான கட்டணத்தில் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்பதை அரசாங்கம் நோக்கமாகக் கொள்ளவேண்டும். விவசாயி பம்பு செட்டுக்கு உபயோகப்படுத்தும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 8¼ பைசா என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது லைசென்சிகள் ஏற்றுக் கொண்டிருக்கிற 7 பைசாவை விட அதிகமாக இருக்கிறது. இதைப் பார்த்தவுடன் அவர்கள் இந்த அளவுக்கு உயர்த்துவார்கள். இதற்கு மேல் வரியும் இருக்கிறது. அதையும் கன்ஸ்யூமர்கள்தான் கொடுத்தாக வேண்டும். மினிமம் காரண்டி கூட குதிரை வேகத்திற்குப் 17½ ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. உபயோகித்தாலும், உபயோகிக்கா விட்டாலும் கூட அவ்வாறு விதிக்கப்படும். இவ்வாறு புதிய அளவில் கட்டணத்தை அதிகரிப்பது விவசாயிகளுக்கு அதிக பாதகத்தை ஏற்படுத்தும் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அமைச்சர் அவர்கள் நான் பட்ஜெட்டில் பேசவேண்டிய விஷயத்தை இப்போது பேசியதாகக் கூறினார்கள். இது டிசம்பர் மாதத்தில் இருந்து அமுலுக்கு வரப் போகிறது. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தை எடுத்துக் கொள்ளாமல் வேறு எந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்வது?

***கனம் திரு. ஆர் வெங்கட்டராமன்**: கனம் சபாநாயகர் அவர்களே, சாதாரணமாக, திரு. கலியாணசுந்தரம் அவர்களுக்கு விவரங்களைத் தவறு இல்லாமல் சொல்லக்கூடிய ஆற்றல், அதற்கு வேண்டிய திறமை எல்லாம் உண்டு. ஓரொரு சமயத்தில் தவறிப் போய் விடுவதும் உண்டு. அவர் சொன்னது போல் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் கட்டணம் லைசன்சிஸ் ஏரியாவில் குறைவாகவும் போர்டு ஏரியாவில் அதிகமாகவும் இருக்கிறது என்று சொன்னது தவறு, ஏழு பைசா என்பது பேசிக் ரேட் தான். அதற்கு மேல் சர்சார்ஜ், அதற்கு மேல் கன்சம்ஷன் ட்யூட்டி போர்டு ஏரியாவானாலும், லைசென்சிஸ் ஏரியாவானாலும் ஒரு யூனிட்டுக்கு 8.05 பைசா ஓர்க் அவுட் ஆகிறது. 8.05 என்பது கணக்குக்குக் கஷ்டமாக இருக்கிறது என்ற காரணத்தால் அதை 8¼ என்று திருத்தியிருக்கிறோம். வேறு ஒரு சலுகை கொடுத்திருக்கிறோம். மினிமம் காரண்டியை 17½ ரூபாய் என்று குறைத்து விட்டோம். முன்பு அது 25 ரூபாயாக இருந்தது. விவசாயத்திற்காக நாம் கொடுக்கிற ரேட் இந்தியாவிலேயே ஒரு ராஜ்யத்தைத் தவிர குறைவான ரேட் ஆகும். அதையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். நல்ல காரியம் எது செய்தாலும் ஊருக்குத் தெரிய வேண்டுமல்லவா? இந்த ரேட்டை அதிகப்படுத்தி உணவு உற்பத்திக்கு இடையூறு செய்து விட்டதாகச் சொல்வது சரியல்ல. இந்த ரேட் இந்தியாவிலேயே ஒரு ராஜ்யத்தைத் தவிர மிக மலிவானது. அந்த ஒரு ராஜ்யத்திலும் கொடுக்கக்கூடிய மின்சாரத்தின் அளவு குறைவு. நாம் அதிகமான அளவுக்கு மின்சாரத்தை நாம் உற்பத்தி செய்கின்ற மொத்த



24th October 1964] [திரு ஆர். வெங்கட்டராமன்]

மின்சாரத்தில் மூன்றில் ஒரு பங்கை விவசாயத்திற்காகக் கொடுக்கிறோம். வேறு எந்த ராஜ்யத்திற்கும் இந்தப் பெருமை கிடையாது. ஆகவே, ரேட்டில் தவறு ஒன்றுமில்லை. சட்டத்தைப் பொறுத்தவரை அவர்களே புரிந்து சொன்னபடி பின்னால் இதிலே ஏதோ தவறுகள் இருக்கின்றன என்று குறிப்பிடாதபடி முன் கூட்டியே டெபனிஷனைச் சரி பண்ணி வைத்துக் கொள்கிறோம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்**: கனம் அமைச்சர் அவர்கள் கூறிய விவரப்படி லைசென்சி ஏரியாக்களில் யூனிட்டுக்கு 8 பைசா கணக்காகி விடுகிறது என்று சொன்னார்கள். அந்த விவரம் தெளிவாகக் கொடுக்கப்படவில்லை. அதை லைசென்சி ஏரியாக்களில் போர்டு ரேட்டை விட அதிகப்படுத்தக்கூடாது என்று உத்தரவிடப்படுமா? லைசென்சி ஏரியாக்களில் மினிமம் காரண்டி ஒரு ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய் 55 ரூபாய் என்று வசூலிக்கிறார்கள். அரசாங்கம் 17½ ரூபாய் அளவுக்குக் குறைந்திருக்கும்போது அவர்களையும் அந்த அளவுக்குக் குறைத்துக் கொள்ளும்படி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்**: அதற்கு நம்மிடத்தில் அதிகாரம் இல்லை. நம்முடைய அதிகாரத்தில் இருக்கும் எல்லாப் பகுதிகளிலும் மினிமம் காரண்டியை எடுத்து விட்டோம். மினிமம் கன்ஸம்ப்ஷன் இருக்கிறது. அதைத்தான் 17½ ரூபாயாகக் குறைத்திருக்கிறோம். ஒரு ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய் இருந்ததை போர்டு ஏரியாக்களில் இப்பொழுது பூராவும் எடுத்து விட்டோம். லைசென்சிஸ் அவ்வாறு செய்வது தங்களுக்குக் கட்டுப்படியாகாது என்று சொல்கிறார்கள். இதற்கெல்லாம் வழி சர்க்காரே அந்தப் பகுதிகளையும் எடுத்துக் கொள்வதுதான்.

**MR. DEPUTY SPEAKER**: The question is—

'That the Madras Electricty (Taxation on Consumption) Amendment Bill, 1964, [L.A. Bill No. 46 of 1964] be taken into consideration.'

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

'That the Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1964, [L.A. Bill No. 46 of 1964] be passed.

MR. DEPUTY SPEAKER: Motion moved—

'That the Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill, 1964, [L.A. Bill No. 46 of 1964] be passed.

**திரு. மீ. கலியாணசுந்தரம்**: இந்த மசோதாவைப் பற்றி நான் சொல்லுகிறபோது, இது ரொம்ப சிரமப்பட்டு முயற்சி எடுத்தவர்களுக்கு நேற்று மாலைதான் கிடைத்தது. சிரமம் எடுக்காதவர்களுக்கு இரவு 9 மணி, 10 மணிக்குத்தான் கிடைத்திருக்கும். அப்படியே இருந்தாலும் இந்த மாதிரி முக்கியமான மசோதாக்கள் வருகின்றபோது அரசாங்கத்திற்குச் சங்கடம் கூடாது என்பதற்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [24th October 1964

காகத்தான் நெருக்கடியில் சேர்த்துக் கொள்வதற்கு பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் ஒத்துக் கொள்கிறோம். இன்றைக்குக் கடைசி நாள்; ஆகவே இந்தச் சங்கடம் இருந்திருக்கலாம். 24 மணி நேர அவகாசம் கூடக் கிடைக்காமல் படித்து என்ன பேசுவது. சேகரிக்கக் கூட அவகாசம் இல்லை. இவ்வாறு குறுகிய காலத்தில் வேகமாக மசோதாக்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதைத் தவிர்த்து அவகாசம் கொடுத்து மசோதாக்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிர்வாகத்தில் இருக்கின்றவர்கள் நெருக்கடி ஏற்படுகின்ற காலத்தில் திடீர் திடீர் என்று சில மசோதாக்களைக் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். சாதாரணமாக இருந்து வருகின்ற நிர்வாகத்தில் இது தேவையில்லை. ஆனால் ஆர்டினன்ஸ் பிறப்பிக்கும்போது உத்தரவு பிறப்பித்து ஆறு வாரத்திற்குள்ளாக சட்டசபையில் கொண்டு வந்து நிறைவேற்றியாகவேண்டும். அந்த முறையில் தான் சில மசோதாக்களை அவசரமாகக் கொண்டு வரவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதோடு இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் கன்ஸூமர்ஸ் இன்டரஸ்ட்டைப் பார்த்துத்தான் இப்போது அவசரமாகக் கொண்டு வரப்பட்டது. இப்படி அவசரமாகக் கொண்டு வரவேண்டாம் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வார்கள் என்றால் இதை நாங்கள் பின் வாங்கிக் கொள்கிறோம், வெளியில் இவ்விதம் நடந்ததை நாங்களும் பயன்படுத்திக்கொள்ளலாம். இந்த மசோதாபடி நிறைவேற்றவிட்டால் எலக்ட்ரிசிடி ட்யூடி டிசம்பர் மாதம் ஒன்றும் தேதி குறைக்க முடியாது. அதற்கு அதிகாரமும் கிடையாது. இப்போது நிறைவேற்றுகின்ற மசோதாவில் இந்த அதிகாரம் இருக்கிறது. ஆகவே மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இது அவசரமாக கொண்டுவரப்பட்டிருக்கிறது.

பொதுவாக மசோதாக்கள் அவசரமாகக் கொண்டு வருவது சரியல்ல என்பதை நான் மறுக்கவில்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** நமது அரசாங்கத்திற்கு மக்களிடத்தில் இவ்வளவு அக்கரை இருப்பதற்குப் பாராட்டுகிறேன். இதை ஏன் கொண்டுவந்தார்கள் என்று நான் கேட்கவில்லை. ஆனால் இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதா நேற்று மத்தியானம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை முன்னதாகக் கொடுத்திருந்தால் இதைப்பற்றி படிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். நமது சபை 16-ம் தேதியிலிருந்து நடந்து கொண்டிருக்கிறது. இது வரை டிப்பார்ட்மென்ட் என்ன செய்து கொண்டிருந்தது என்பது தான் எனக்குப் புரியவில்லை.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** பல வருஷம் அனுபவமுள்ள திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் இவ்வாறு சொல்வதைப்பார்த்து நான் அதிசயப்படுகிறேன். நேற்று காலையில் தான் இந்த



24th October 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

மசோதா இன்ட்ரட்யூஸ் (அறிமுகம்) செய்யப்பட்டது. அதன் பின்னால்தான் இது அங்கத்தினர்களுக்குக் கொடுக்க முடியும். சபையில் இருந்தவர்களுக்கு சபையிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** நமது சட்டசபை விதிகள் 93-ன் படி சபாநாயகர் அவர்கள் இதை வெளியிட உரிமையிருக்கிறது. அந்த முறையில் இதை ஒரு வாரத்திற்கு முன்பே வெளியிட்டிருக்கலாம். அப்படியில்லாமல் அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லுகின்ற சமாதானத்தைப் போல் சொல்லிக்கொண்டிருந்தால், இனிமேலும் அரசாங்க டிபார்ட்மென்ட் ஆமை வேகத்தில் தான் போகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: I think this is a matter which the Hon. Speaker will take up with the Hon. Minister and the leaders of parties.

The question is—

"That the Madras Electricty (Taxation on Consumption) Amendment Bill, 1964, be passed.

The motion was put and carried and the Bill was passed.

## IV.—MOTION EXPRESSING WANT OF CONFIDENCE IN THE MINISTRY AND MOTION DISAPPROVING THE FOOD POLICY OF THE MINISTRY.

MR. DEPUTY SPEAKER: The hon. Member, Sri Munu Adhi will now speak.

**திரு. முனு ஆதி:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பில் கொண்டுவரப்பட்டிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய குற்றச்சாட்டுகளில் சிலவற்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் உணவுப் பிரச்சினையை மூலதனமாக வைத்துக்கொண்டு கட்சியை வளர்க்கப் பார்க்கிறார்கள், என்று மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள். இம்மாதிரிப்பட்ட உணவுப் பஞ்சத்தை ஆளும் கட்சியினர் தான் மூலதனமாக வைத்து தங்கள் கட்சியை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் ஆதாரத்தோடு சொல்ல முடியும். இந்த ஆட்சியாளர்கள் ஒரு நபருக்கு ஒரு படி அரிசி தான் விற்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, போலீஸ் நிலையத்தில் இருந்து கொண்டு காங்கிரஸ்காரர்கள் குல்லாயும் அணிந்து கொண்டு 1 ரூபாய் 34. ந. பை. என்று விற்கவேண்டியதை 1 ரூபாய் 69 ந.பை. என்று விற்றிருக்கிறார்கள். இதிலிருந்து யார் அரசியல் கட்சியை வளர்க்கிறார்கள் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். அது மட்டுமல்ல, சென்னை சூளை வட்டத்தில், அதாவது 63-வது வட்டத்தில் தர்மராஜ் நாடார் என்பவரின் மளிகைக் கடையில் அங்குள்ள காமராஜ் சேவா சங்கம் என்ற சங்கத்திலுள்ளவர்கள் இம்மாதிரி கிட்டியெடுத்தால் தான் "காமராஜ்" சேவா

[திரு. முனு. ஆதி] [24th October 1964

சங்கம் என்ற ரப்பர் ஸ்டாம்ப் பதித்த சிட்டை காண்பித்தார்) அரிசி கொடுக்க வேண்டும் என்று சொல்லி அரிசி விநியோகம் செய்திருக்கிறார்கள். இப்படி தங்கள் கட்சியை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் ஆளும் கட்சியினர். இப்படிப்பட்டவர்கள் மீது தான் நம்பிக்கையில்லை என்று தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம்.

இன்னொன்று நான் சொல்ல விரும்புவது, அமைச்சர்கள் சில பதவிகளை எல்லாம் தங்கள் உறவினர்களுக்கே குடும்பச் சொத்தாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட எத்தனையோ குற்றச்சாட்டுகளை நான் ஆதாரபூர்வமாகச் சொல்ல முடியும். நமது முதலமைச்சர் அவர்களது தொகுதியில் பூந்தமல்லி பகுதியில் இருக்கின்ற ஒரு பஞ்சாயத்தில் தலைவராக இருக்கின்றவர் மீது ஒரு லட்சம் ரூபாய்க்கு ஊழல் நடந்திருக்கிறது என்ற செய்தி வந்து, பின்னால் அதைப்பற்றி கமிஷனர் கான்ஃபிடன்ஷியல் ரிப்போர்ட் அனுப்பி, பின்னால் அடிஷனல் டெவலப்மெண்ட் கமிஷனர் இதைப்பற்றித் தனியாக விசாரணை செய்தும், இதுவரை அந்தக் குற்றவாளி மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. காரணம் இப்படிப்பட்ட குற்றம் செய்தவர் முதலமைச்சர் அவர்கள் மீது தேர்தல் வழக்கு நடந்த போது, அவருக்கு சாதகமாக சாட்சியம் சொன்னார்களோ என்னவோ என்ற ஐயம் எழுகிறது. இப்படிப்பட்ட விஷயத்தில் அரசாங்கம் கவனிக்காமல் இருப்பதின் காரணமாகத்தான் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்று சொல்லுகிறோம். முதலமைச்சர் அவர்களின் உறவினராக இருக்கும். அது மட்டுமல்ல, பி.டபிள்யு.டி டிபார்ட்மென்டில் முதல் அமைச்சரின் உறவினராகயிருக்கும் அசிஸ்டன்ட் இன்சினியர் ஒருவரை பிரமோஷன் கொடுக்கின்ற முறையில் அடிஷனல் டைரக்டர் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன் பதவிக்கு உயர்த்தி, நான்கு அட்வான்ஸ் இன்கிரிமென்டும் கொடுத்து, கீழேயுள்ள ஜூனியர்களை எல்லாம் 'ஓவர் லுக்' செய்து கொடுத்திருக்கிறார்கள். இதன் காரணமாகக் கீழேயுள்ளவர்களுக்கு எல்லாம் மனசலிப்பு ஏற்பட்டிருக்கிறது. இன்னொன்று, உள்துறை அமைச்சர் அவர்களது திருமகனார் அவர்களுக்கு டெப்யுடி கலெக்டர் உத்யோகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் பிரதம மந்திரியாகப் பதவி யேற்றதும், தன்னுடைய உறவினர் யாரும் தான் பார்க்கின்ற இலாகாவில் உத்யோகம் பெறக்கூடாது, அதில் எந்த விதமான சலுகையும் பெறக்கூடாது என்று பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லியிருக்கின்ற நிலைமையில் நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்களுடைய திரு குமாரனுக்கு இப்படிப்பட்ட உத்தியோகம் அளிக்கப்பட்டிருக்கிறது. . .

**கனம் திரு. பூ. கக்கன்:** ஸார், பாயின்ட் ஆஃப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன், என்னுடைய மகன் பி.ஏ. பட்டம் பெற்றிருக்கிறான், எம்.ஏ-க்கு படித்தவன், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக டெப்யுடி கலக்டர் போஸ்ட்-க்கு விண்ணப்பம் செய்திருந்தான்.



24th October 1964] [திரு. பூ. கக்கன்]

டெப்யுடி கலக்டர் போஸ்ட் கிடைக்கவில்லை, டெப்யுடி ரெஜிஸ்டிரார் ஆஃப் கோப்ரடிவ் சொஸைட்டீஸ் வேலைக்குத்தான் செலக்ஷன் கிடைத்தது. அந்த வேலை பார்த்துக்கொண்டிருக்கிறான். இது என்னுடைய மகன் என்பதால் கிடைக்கவில்லை, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தகுதி முதலியவைகளையெல்லாம் பார்த்துத்தான் வேலைக்கு எடுத்தார்கள்.

**திரு. முனு. ஆதி:** தகுதியைப்பார்த்து எடுத்தார்கள் என்றால், இவரோடு இன்னும் மூன்று பேர்கள் போயிருந்தார்கள். ஏன் இவரை மட்டும் தேர்ந்தெடுத்தார்கள்? (எதிர்பக்கத்திலிருந்து சத்தம் கேட்டது) ஆத்திரப்படுவதில் பிரயோசனம் இல்லை. நாங்கள் சொல்லுவதில் உண்மையிருக்கிறதா என்பதைப்பற்றித் தான் தயவு செய்து பரிசீலனை செய்யவேண்டும்.

மேலும் அழகேசன் அவர்களுடைய தமக்கையார் குமாரன், அவர் விவசாயக் கல்லூரியில் பட்டம் பெற்றவர் அல்ல, விவசாயம் சம்பந்தமாக அவருக்கு விசேஷ படிப்பு ஒன்றும் கிடையாது, அப்படிப்பட்டவரை அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்கிறார்கள், முதலமைச்சர் அவர்களின் உறவினர் என்ற காரணத்திற்காக. நல்ல திறமையுள்ளவர்களை அந்தமானுக்காவது அனுப்புவதற்கு கருணை காட்டாமல் இருக்கும்போது திறமையற்றவர்களை, தகுதியில்லாதவர்களை உலகம் சுற்றிப் பார்ப்பதற்காக வெளியே அனுப்புவதன் காரணம் என்ன? உண்மையான விவசாயிகளுக்கு எங்கே சலுகை காண்பிக்கப்படுகிறது? அது மட்டுமல்ல, "சோஷியல் வெல்பேர் டிப்பார்ட்மென்டிலும்", "விமன் வெல்பேர் டிப்பார்ட்மெண்டிலும்" நாம் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்கிறோம். இந்த டிப்பார்ட்மென்டில் எல்லாம் முதல் அமைச்சர் அவர்களின் திருகுமாரத்தியும், அழகேசனார் அவர்களுடைய மனைவிக்கும் தான் பொறுப்புகள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. நன்றாக வேலை செய்யக்கூடிய ஆட்கள் வேறு இல்லையா? இவர்கள் இந்த இலாகாவைத் தங்கள் குடும்பச் சொத்தாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியாது.

அதே போன்று உள்துறை அமைச்சர் அவர்களுடைய உறவினர் ஒருவர் பி.டப்ளியு.டி.யில் எக்ஸிக்யூட்டிவ் என்சினியராக இருக்கக் கூடியவர், அவருக்கு மேலே எத்தனையோ ஸீனியர் ஆபீஸர்கள் இருக்கிறார்கள், அவர்களை எல்லாம் விட்டு விட்டு அமைச்சர் அவர்களுடைய இந்த உறவினருக்கு சூப்பிரடென்டிங் என்சினியர் பதவி கொடுத்திருக்கிறார்கள் . . .

**கனம் திரு. பூ. கக்கன்:** பெயரை சொன்னால் நல்லது.

**திரு. முனு. ஆதி:** அமைச்சர் அவர்கள் பெயரைச் சொல்ல சொல்லுகிறார்கள், சொல்லுகிறேன், அவருடைய பெயர் கந்தசாமி என்பது. அவர் இதுவரை எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியராக இருந்தவர். இப்போது சூப்பிரன்டென்டிங் என்ஜினியராக இருக்கிறார் . . .

[24th October 1964

**கனம் திரு. பூ. கக்கன் :** கந்தசாமி என்பவர் என் உறவினரே அல்ல. என் குடும்ப பங்காளியும் அல்ல, அல்லது என் மைத்துனரோ மருமகனோ அல்ல. அவர் வேண்டுமென்றால் என் ஜாதியினராக இருக்கலாம் . . . .

**திரு. முனு. ஆதி :** உறவினர் இல்லாவிட்டாலும், அமைச்சர் அவர்களுடைய முயற்சியினால் தான் இது நடந்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஒரு மந்திரியின் முயற்சியினால் அந்தப் பதவி கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அது இன்சினுவேஷன். ஒன்று அதை ப்ரூவ் பண்ணவேண்டும். இல்லையென்றால் அதை வாபஸ் பெறவேண்டும்.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** ஹரிஜனங்களுக்குச் சலுகை காட்டி அவர்கள் பதவிக்கு வரக்கூடாது என்று சொல்லுகிறார்களா ?

MR. DEPUTY SPEAKER : The hon. Member said that the concerned officer was a relation of the Hon. Minister. Now he says that even though he may not be a relation of the Hon. Minister, with his support or effort, he was made the Superintending Engineer. What is the position of the hon. Member? If he has not got the material to prove his allegation, it is better that he does not pursue the allegation.

**திரு. முனு. ஆதி :** துணைத் தலைவர் அவர்களே, ஒரு குழு அமையுங்கள், நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். நீதிபதியை நியமித்து இதற்கு ஒரு குழு அமையுங்கள். இண்டஸ்ட்ரீஸ் அண்ட் காமர்ஸ் டிபார்ட்மெண்ட்டோடு இணைக்கப்பட்டிருந்த டெக்னிக்கல் எஜுகேஷனை, ஒரு டெபுடி டைரக்டருக்குத் தனியாக கொடுக்க வேண்டுமென்று அவரை அதற்கு டைரக்டராக ஆக்கி தனியாக நியமித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்னைகளில் ஆத்திரப்படத் தேவையில்லை. அதைப் பற்றி நான் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆத்திரம் ஒன்றும் இல்லை. பேசும் போது பொறுப்புணர்ச்சியுடன் பேசவேண்டும். உள்நாட்டு அமைச்சர் பற்றி உறவினர் என்று சொல்லி, இல்லை என்றால் முயற்சி என்று சொல்லுகிறார். இது தானா பொறுப்புணர்ச்சியோடு பேசுவது என்று கேட்கிறேன்.

**திரு. முனு. ஆதி :** இரண்டும் இருக்கிறது. உறவினரும் கூட, முயற்சியும் கூட. துணைத் தலைவர் அவர்கள் ஒரு குழு அமைத்தால் அதைப் பற்றி நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன் . . .

பல அங்கத்தினர்கள் எழுந்தார்கள்.

**திரு. முனு. ஆதி :** இங்கே ஒருவருக்கும் பதில் சொல்லத் தயாராக இல்லை. துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டாகி விட்டது. என்னுடைய பேச்சில் குறுக்கிடுவதால் . . . .



24th October 1964]

**திரு. ஏ. ஆறுமுகம் எழுந்தார்—**

MR. DEPUTY SPEAKER : When the Chair is on its legs, the hon. Member should resume his seat. The hon. Member has made the allegation that the Director of Technical Education is a relation of the Hon. Chief Minister and I want to know whether he is prepared to substantiate it.

**திரு. முனு. ஆதி :** இங்கே விவாதத்தை வைத்துக்கொண்டு சொல்லுவதைவிட, இதற்கு ஒரு குழு அமையுங்கள் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதிலே குழு அமைக்கிற பிரச்னை இல்லை. குழு அமைக்க வேண்டும் என்று கேட்பதற்கு உறுப்பினர் யார் ? எதற்காகக் குழு அமைப்பது ? இங்கே பேசும் போது பொறுப்புணர்ச்சியோடு பேச வேண்டும் என்று மறுபடியும் சொல்லுகிறேன். டைரக்டர் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன் என்னுடைய உறவினர் என்று உறுப்பினர் சொல்லுகிறார். இதைக் கொண்டே எத்தகைய பொறுப்புணர்ச்சியோடு உறுப்பினர் பணியாற்றுகிறார் என்று தெரியும்.

MR. DEPUTY SPEAKER : Now I take it that the hon. Member is not prepared to substantiate it.

SRI MUNU. ADHI : I am prepared to substantiate it.

திரு. ரா. ஜீவரத்தினம் எழுந்தார்—

**திரு. மு. கருணாநிதி :** கனம் துணைத் தலைவர் அவர்களே, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்போது பேசுகிற உறுப்பினர் அமைச்சர் மீது குற்றம் சாட்ட உரிமை படைத்திருக்கிறார். அந்தக் குற்றங்களை அமைச்சர்கள் மறுப்பதற்கு உரிமை பெற்றிருக்கிறார்கள். குற்றம் சாட்டப்படுகிறபோது இல்லை என்று நிரூபிக்க அமைச்சர் கடமைப்பட்டிருக்கிறார். அதற்கான கமிட்டி அமைக்கப்பட்டால் எங்கள் கட்சி உறுப்பினர் ஆதாரத்தோடு நிரூபிக்கத் தயாராக இருக்கிறார் என்பதை அவரே கூறிய பிறகும் வீண் விவாதம் ஏன் என்று கேட்க விரும்புகிறேன்.

பல காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எழுந்தார்கள்—

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** டைரக்டர் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன் என்னுடைய உறவினர் என்று சொன்னார். எந்த விதத்தில் அவர் எனக்கு உறவினர் என்று சொல்ல வேண்டும். இதற்கு ஒரு குழு அமைத்து அதைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டியதில்லை. பொறுப்புணர்ச்சியோடு குற்றம் சாட்டலாம். அப்போது அதற்கு நாங்களும் சமாதானம் அளிக்க முடியும். அதைத் தவிர்த்து உறவு, உறவினர் என்றால் எப்படி உறவினர் என்று உறுப்பினர் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார். அப்படித் தெரிவிக்கவில்லை என்றால் உறுப்பினர் பொறுப்புணர்ச்சி இல்லாமல் பேசுகிறார் என்று தான் அர்த்தம்.

**கனம் உதவி சபாநாயகர் :** நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மேல் மட்டுமல்ல. எந்தத் தீர்மானத்தின் மேலும் சபையில் உள்ள அங்கத்தினர்கள் பேசலாம். இங்கே சபையில் உள்ள அங்கத்

தினர்கள் பேசப் பாதுகாப்பு இருக்கிறது. பாதுகாப்பு இருப்பதனாலேயே அங்கத்தினர்களுக்கு மிகுந்த பொறுப்பு இருக்கிறது. ஆகவே இங்கே பேசும்போது பொறுப்பை உணர்ந்து எந்தக் குற்றச் சாட்டுகளை நிரூபிக்க முடியுமோ அவைகளைத் தான் சொல்ல வேண்டும். அவைகளைச் சொன்னால் தான் கண்ணியத்திற்கு உகந்ததாக இருக்கும். பொறுப்புணர்ச்சியோடு விளக்க வேண்டுமென்று கேட்டால் அதைப்பற்றி ஆத்திரப்படுவது உகந்ததல்ல. எந்த முறையில் உறவு என்று சொன்னால் சரியாக இருந்தால் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். முடியவில்லை என்று சொன்னால் சொன்னதைத் திரும்பப் பெறுவது தான் நியாயமானது.

**திரு. நா. மகாலிங்கம்:** இப்போது விவாதத்தில் இருக்கக்கூடிய டைரக்டர் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன் முன்பு அமைச்சர் சுப்பிரமணியம் கல்வி இலாகாவை வைத்திருந்தபோது நியமிக்கப்பட்டார் என்பதைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**திரு. முனு. ஆதி:** நான் பேசுவது அத்தை மகனா, மாமன் மகனா என்று இப்போது ஆராய்ந்து சொல்லுவதற்கு . . .

*பல காங்கிரஸ் அங்கத்தினர்கள் எழுந்தார்கள்—*

MR. DEPUTY SPEAKER: If the hon. Member has got definite information, he can give it. Otherwise let him proceed with his speech.

**திரு. முனு. ஆதி:** சொல்லுவதற்கே சந்தர்ப்பம் கொடுக்காமல் ஆளும் கட்சி அங்கத்தினர்கள் குறுக்கிடுவதால் அதற்கு ஒரு குழு அமைத்தால் சொல்லுகிறேன்; இல்லையென்றால் திரும்பப் பெற்றுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இந்த நாட்டில் நியாய விலைக் கடைகளை ஆளும் கட்சிக்காரர்கள் யார் யாருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் ஆளும் கட்சிக்கு யார் யார் ஊக்கம் கொடுக்கிறார்களோ, யார் யார் ஆக்கம் கொடுக்கிறார்களோ அவர்களுக்குத் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஊரிலேயும் காங்கிரஸ் கட்சிக்கு யார் துணையாக இருக்கிறார்களோ, யார் நிதி கொடுக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் நியாய விலைக் கடைகள் கொடுக்கப்பட்டு அங்கெல்லாம் அநியாய விலைக்குத் தானியங்கள் விற்கப்படுவது நேரடியாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அரிசி கிடைத்தால் போதும் என்று இருக்கிற நிலையில் இதையெல்லாம் சொல்லி ஏன் குழப்புகிறீர்கள் என்று சொல்லக் கூடும். அந்த நிலை இருந்தால் விலை நிர்ணயம் செய்வானேன்? கள்ள மார்க்கெட்காரர்களை உற்சாகப்படுத்தவா? நியாய விலைக் கடைகள் மூலம் முறையாகப் பங்கிட்டுத் தரப்படுகிறதா என்று பார்க்கும்போது, சிறிதளவும் எங்களுக்கு மட்டுமல்ல, நாட்டிலே உள்ள மக்களுக்குக் கூட நம்பிக்கை இல்லை என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். சென்னையில் அரிசிப் பஞ்சம் தீரும் நிலை வந்து விட்டது, மந்திரிகள் போய் மூட்டைகளைக் கொண்டு வந்து விட்டார்கள் என்று சொல்லு





கிறார்கள். நியாய விலைக் கடைகளுக்கு முன்பு போடப்பட்டிருக்கிற போர்டைப் பார்க்கும்போது அத்தனையும் காங்கிரஸ் பெரும் புள்ளிகளாக இருக்கிறதே தவிர, கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குக் கூட. நியாய விலைக் கடைகள் கொடுக்கப்பட்டு அங்கே திறக்கப்படவில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

அதே போன்று என்.ஜி.ஓ.-க்கள் நம் ஊழியர்களுக்கும் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும் . . .

**கனம் உதவி சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் இன்னும் ஒரு நிமிஷத்தில் முடித்துக்கொள்ளவேண்டும்.

**திரு. முனு. ஆதி:** இன்றைக்கு இரண்டு பேர்களுமே விலைவாசி ஏற்றத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு ஒரு மாதிரியாகவும் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு ஒருமாதிரியாகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. இதைப் போக்கவேண்டும் என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ஏன் அதைப் போக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே நேரம் இல்லாத காரணத்தினால் இதோடு நிறுத்திக்கொண்டு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எதிர் கட்சி அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை எதிர்த்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதற்காகக் கொடுத்தார்கள் என்று சொன்னால் முதலிலேயே புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த மூன்று நாள் விவாதத்திலே உண்மையிலே நம்பிக்கையில்லை என்று சொல்லுவதற்கு ஏதாவது ஒன்று நல்ல ஆதாரத்துடன் இவர்கள் சொல்லியிருக்கிறார்களா என்று பார்க்கும்போது எதுவும் இல்லை என்று தான் எல்லோரும் நினைக்கவேண்டும். இதுவரையில் கொடுத்த புள்ளி விவரங்களெல்லாம் எந்த அளவுக்குப் பொருத்தமானது என்று பார்க்கும்போது ஏதோ நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துவிட்டோம் அதற்காக ஏதாவது பேசவேண்டும் என்ற அளவில் தான் இருக்கிறது. இப்போது இருக்கும் உணவு நிலைமையைப் பயன்படுத்தி, மற்ற மாநிலங்களிலெல்லாம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்களே, பார்லிமெண்டிலும் இதே மாதிரி வந்திருக்கிறதே, நாமும் எதிர்க் கட்சி என்று இருந்து ஒன்றும் செய்யாமல் இருந்தால் நன்றாக இல்லை என்று இந்தக் காரணத்தினால் வந்திருக்கிறதே தவிர வேறு எந்தக் காரணமும் இருக்க முடியாது. உணவு நிலையை எடுத்துக்கொண்டால் சாதாரணமாக விவசாயத்திற்கு வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் நம் அரசாங்கம் மற்ற எல்லா ராஜ்யங்களையும் விட செய்து வந்திருந்தது என்று புள்ளி விவரத்துடன் சொல்ல முடியும். அதே சமயத்தில் விவசாயம் அரசாங்கம் உத்திரவிட்டு விட்டால்

[திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்] [24th October 1964

அதிகமாக விளைந்து விடாது. விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். அதற்கு என்னென்ன சலுகைகள் கொடுக்க முடியுமோ அதெல்லாம் கொடுத்து வருகிறார்கள். நம் நாட்டைப் பொறுத்த வரையில் உணவு அதிக அளவில் பற்றாக்குறை என்று யாரும் எடுத்துக்கொள்ளவே வேண்டியதில்லை. இப்போது 83 மிலியன் டன் உற்பத்தி ஆகின்றது. நாம் சாதாரணமாக வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்வது 4 முதல் 6 மிலியன் டன் தான். இந்த அளவுக்குத் தான் இது வரையில் இறக்குமதி செய்து கொண்டு வந்தோம். சாதாரணமாக உணவுப் பற்றாக்குறையை 10-00 a.m. மொத்தத்திலே நாம் எடுத்துக் கொண்டால் 10 சதவிகிதம் தான் பற்றாக்குறை இருக்கிறது. இப்பொழுது இருக்கிற பற்றாக்குறை அதிகமாக இருக்கிறதா என்று பார்க்கும்பொழுது, நெல்தான் அரிசி தான் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறதே தவிர, கோதுமை ஜோளவுக்கு பற்றாக்குறை இருக்கிறதே தவிர, மொத்தத்திலே பார்க்கும் பொழுது 'ஓவரால் டெபிஸிட்' என்பது மிக மிகக் குறைவு. அதுவும் நம்முடைய இந்தியா பூராவும் எடுத்துக்கொண்டால்; தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே நமக்கு ஒரு 'மார்ஜினல் ஸர்ப்ளஸ்' இருக்கிறது என்று சொல்லிவந்திருக்கிறார்கள். அது தவறு என்று யாரும் இதுவரையில் சொல்லவில்லை. கேரளாவுக்கு நாம் கொடுத்துவருகிறோம். எந்த அளவுக்கு நாம் கேரளாவுக்கு கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு ஆந்திராவிலிருந்து நம்முடைய தமிழகத்திற்கு நாம் கொண்டுவருகிறோம். அதிலே பார்க்கும் பொழுது, கேரளாவுக்கு நாம் எவ்வளவு கொடுத்து வருகிறோமோ அதைத் தொடர்ந்து கொடுத்து வருகிறோம். ஆனால், ஆந்திராவிலிருந்து நமக்கு வருவதிலே சற்றுத் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் மேட்டூரில் தண்ணீர் சற்றுக் குறைவாக இருந்ததின் காரணமாக தஞ்சாவூரில் குறுவை அறுவை சற்றுத் தாமதமாயிற்று. இப்படி அறுவடை 10, 20 நாட்கள் சற்று தாமதமானதினால் ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடி ஏற்படும் என்று நம்முடைய நாட்டினுடைய பிரதம மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் முதல் அமைச்சர்கள் மகாநாட்டில் குறிப்பிட்டார்கள். நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டில் கூட்டுறவு சங்கங்கள் எவ்வளவு வாங்கிவைக்க முடியுமோ அவ்வளவு வாங்கிவைக்கலாம் என்ற அளவிலே நம்முடைய முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். இதன் காரணமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வளவு வாங்கி வைக்க முடியுமோ அதையெல்லாம் பூரணமாக வாங்கி வைத்ததன் காரணமாகத்தான் கோவை, சேலம் போன்ற இடங்களில் இவ்வளவாவது நிலைமையைச் சமாளிக்க முடிந்தது. நமது முதல் அமைச்சர் அவர்கள் இதற்கெல்லாம் ஏற்பாடு செய்யாமல் இருந்திருந்தால், இந்த நெருக்கடி இன்னும் முதலிலேயே வந்திருக்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். அவர்கள் கூட்டுறவு இயக்கம் சம்பந்தமாக 'லெவி ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை, நீங்கள் வாங்கி எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட்டார்கள். அதனால் தான் கூட்டுறவுச் சங்கங்களும் எவ்வளவு



24th October 1964] [திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்]

வாங்க முடியுமோ அவ்வளவு வாங்கி வைத்திருந்தார்கள். சென்னையில் இந்த அளவிலே செய்திருக்கிறபொழுது ஏன் மற்ற இடங்களில் செய்ய முடியாது என்று மத்திய அரசாங்கத்தில் கம்யூனிடி டெவலெப்மெண்டு மினிஸ்டிரியில் இதைப் பரிசீலனை செய்து, பிறகு மற்ற இடங்களுக்கும் இம்மாதிரி உத்தரவு பிறப்பிக்கக்கூடிய நிலைமை இருந்தது என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். நம்முடைய ராஜ்யத்தில் உணவு உற்பத்தி விஷயத்திலே இன்னும் அதிகமாகச் செய்ய முடியுமா என்று பரிசீலனை செய்து, இன்னும் சிறிதளவு அதிகமாகச் செய்ய முடியும் என்று கருதி நம்முடைய அரசாங்கம் 'அக்ரிகல்சரல் ப்ரொடக்ஷன் கமிட்டி' என்று ஒரு கமிட்டியை நம்முடைய நிதி இலாகா காரியதரிசியை தலைவராக வைத்து ஏற்படுத்தி, இன்னும் எந்தெந்த வகையில் உணவு உற்பத்தியை அதிகமாகச் செய்ய முடியுமோ, அதைச் செய்வது பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது என்பது எல்லா அங்கத்தினர்களுக்கும் நன்றாகத் தெரியும். நம்முடைய ராஜ்யத்திலும் மற்ற ராஜ்யங்களைப் போல் இதிலே ஒன்றும் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்று யாராவது சொல்வார்களேயானால், அதை யாரும் ஒப்புக்கொள்ள முடியாது என்பதைத்தான் எதிர்க்கட்சியினருக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உணவு உற்பத்தி நிலைமையைப் பொறுத்தவரையிலே திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கண்டனத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். திரு. கலியாணசுந்தரம் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இம்மாதிரி "hundred flowers blossom" என்று சைனாவினால் உணவு உற்பத்தித் திட்டம் ஏற்படுத்தப்பட்டு, அந்தத் திட்டம் வெற்றி அடையவில்லை, கைவிடப்பட்டது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதே மாதிரி ரஷ்யாவில் "Large size agricultural mechanised farm" என்று வைத்து உணவு உற்பத்திக்கு அதிகமாக ஊக்கமும் ஆக்கமும் கொடுக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் வெளி நாடுகளிலிருந்து குறிப்பாக, அமெரிக்காவிலிருந்து, உணவு தானியத்தை இறக்குமதி செய்து, அங்குள்ள உணவு நெருக்கடியைச் சமாளிக்கிறார்கள் என்பதையும் நண்பர் கலியாணசுந்தரம் அவர்கள் மறந்துவிடக்கூடாது. அதே போல் நம்முடைய நாட்டிலும் பற்றாக்குறை இருந்ததினால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டார்களா, இல்லையா என்று பார்த்தால், அதற்கான முயற்சிகளை அரசாங்கம் பரிபூரணமாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். இம்மாதிரி நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னமே சர்க்கார் பி.எல். 480 என்ற கணக்கில் அமெரிக்காவிலிருந்து எவ்வளவு அரிசி இறக்குமதி செய்யமுடியுமோ, எவ்வளவு கோதுமை இறக்குமதி செய்ய முடியுமோ அவ்வளவையும் இறக்குமதி செய்வதற்கான ஏற்பாட்டை உடனடியாக நம்முடைய அரசாங்கம் செய்துள்ளார்கள். அது மாத்திரமல்ல. இன்னும் வேறு மற்ற நாடுகளிலிருந்தும் எங்கெல்லாம் உணவு தானியங்கள் கிடைக்கிறதோ, குறிப்பாக அரிசி கிடைக்கிறதோ, அங்கிருந்தெல்லாம் வாங்குவதற்கான எல்லா முயற்சிகளையும் நம்முடைய அரசாங்கமும்,

*[திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்]* [24th October 1964

மத்திய அரசாங்கமும் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இதிலெல்லாம் ராஜ்ய அரசாங்கத்தின் முயற்சியும் பூரணமாக இருக்கிறது. நம்முடைய நாட்டினுடைய பிரதம மந்திரி அவர்களும் எல்லா முதல் அமைச்சர்களும் கலந்து செய்வதற்கான காரியங்களைப் பூரணமாக செய்து வருகிறார்கள். இருக்கக்கூடிய நிலைமை சில நாட்களுக்கு சற்று சிரமமாக இருக்கும் என்பதை நம்முடைய நாட்டு பிரதம மந்திரியே சொல்லிவந்திருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு தான் எப்படியும் ஒரு நெருக்கடி வரப் போகிறது, இந்த சமயத்தில் நாம் ஒரு நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொடுத்து மக்களுடைய செல்வாக்கைத் தங்களுடைய அரசியல் கட்சிக்குப் பெறலாம் என்று செய்வது முற்றிலும் தவறு, அது நியாயமற்றது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் ஏதோ பல தவறுகள் நடந்திருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு மந்திரி சபையும், முதல் மந்திரி பக்தவத்சலம் அவர்களும் பொறுப்பு என்ற முறையில் சொன்னார்கள். அது முற்றிலும் தவறு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ரிசர்வ் பாங்கு நிபுணர்கள் இந்தியாவிலேயே தமிழ் நாட்டைத் தவிர எந்த ராஜ்யமும் கூட்டுறவுத் துறையில் முன்னணியில் நிற்கிறது என்று சொல்ல முடியாது. மற்ற ராஜ்யங்கள் தமிழ் நாட்டு நிலைக்கு வருவதற்குப் பல ஆண்டுகள் பிடிக்கும் என்று சொல்லுகிறார்கள். ஏதோ ஒன்றிரண்டு தப்புகளை வைத்துக்கொண்டு, நம்முடைய தமிழ் நாட்டில் கூட்டுறவு இயக்கமே மோசம் என்று சொல்லுவது சரியல்ல. ஒன்று, அவர்களுக்குக் கூட்டுறவு இயக்கம் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று வைத்துக்கொள்ள வேண்டும். அப்படியில்லாவிட்டால், அதில் என்ன நடக்கிறது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளாமல் இருக்கவேண்டும். 'பாங்கு, இந்தத் தேதி போட்ட செக்' என்றெல்லாம் சொன்னார்கள். அம்மாதிரி ஏதாவது தவறுதல் இருக்குமானால், அதை அரசாங்கத்திற்கு எழுதித் தெரிவித்தால், யாராக இருந்தாலும் கூட்டுறவு இயக்கத்தில் தப்பு நடந்தால் நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் யார் என்ன என்று பார்க்காமல் பூர்ணமாகத் தண்டிப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். பல நிகழ்ச்சிகள் அம்மாதிரி நடந்திருக்கின்றன. அதிலே எந்தவிதமான ஐயமும் இல்லை.

இன்னொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஏதோ 'மிட்டே மீல் கமிட்டியில்' நான் ஒரு ரிபோர்ட் கொடுத்திருக்கிறேன், 'சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் கூட இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்' என்று கூறினார்கள். அதைப் பூரணமாகப் படித்திருந்தால் தான் தெரியும். அது ஒரு பெரிய திட்டம். குறுகிய காலத்தில் மிக நல்ல முறையிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அம்மாதிரி செய்யும்பொழுது சில தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தத் தவறுகளெல்லாம் இன்னென்ன இருக்கின்றன, அதை இன்னென்ன முறையில் நிவாரணம் செய்ய



24th October 1964] *[திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர்]*

முடியும் என்ற அளவில் தான் நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒரு பெரிய திட்டம் அமைக்கின்றபொழுது, ஏதாவது ஒன்றிரண்டு தவறுகள் ஏற்படுவது இயற்கை தான். இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு பெரிய திட்டத்தை நிறைவேற்றினார்களே என்பதைப்பற்றி 'அப்ரிசியேட்' செய்ய வேண்டும் என்பதைத் தான் இந்தச் சமயத்தில் கூறிக்கொள்கிறேன்.

இந்தத் தீர்மானத்தை எதிர்த்து, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய கட்சியைச் சார்ந்த செயலாளர் திரு. மதியழகன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து நான் இங்கே பேச முன்வந்துள்ளேன். இந்த மன்றத்தில் வீற்றிருக்கிற முதல் அமைச்சர் அவர்கள் மிகவும் நல்லவர்கள். அதே போலத் தான் மற்ற மந்திரிகளும் மிகவும் நல்லவர்கள். அது மட்டுமல்ல. எதிர்புறத்தில் உட்கார்ந்திருக்கும் காங்கிரஸ் அங்கத்தினர்கள் எல்லோரும் நல்லவர்கள். அவர்கள் எந்த விதத்தில் நல்லவர்கள் என்றால், பழகுவதற்கு மிகவும் நல்லவர்கள். ஆனால், ஆட்சிப் பொறுப்பிலே இருந்துகொண்டு சில காரியங்களைச் செய்யத் தவறி விட்டார்கள். நாமெல்லாம் நக்கீரர் பரம்பரையில் வந்தவர்கள். ஆகவே, நம்முடைய அமைச்சர்களாக இருந்தாலும் சரி, அல்லது வேறு யாராக இருந்தாலும் சரி தவறு செய்தால் செய்தது தவறு என்று சுட்டிக்காட்டுவதுதான் சரி. அந்த வகையில்தான் காங்கிரஸ் கட்சியினரும் இதைக் கருதுவார்கள் என்ற முறையில் நான் பேச விரும்புகிறேன்.

நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் 18 வருஷ காலமாக இந்த நாட்டில் மந்திரியாக இருந்து நாட்டை ஆண்டுகொண்டு வந்திருக்கிறார்கள். 'இப்படி நம்முடைய கடைசி காலத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்களே மகா பாவிகள்' என்று கூடச் சபிக்கலாம் பின்னால் பேசும்பொழுது. அதையெல்லாம் தாங்கிக்கொள்வதற்கு நல்ல தைரியத்துடன் தான் இருக்கிறோம். அவர்கள் கடமையிலிருந்து தவறியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லுகிற சமயத்தில், இந்த நாட்டு மக்களுக்கு அதனால் சிக்கல்களும், வேதனைகளும், தொல்லைகளும் ஏற்பட்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டுகளை சொல்லுகிற சமயத்தில், வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பார்க்காமல், விருப்பு வெறுப்பு இல்லாமல், எதிர்புறத்தில் இருக்கும் காங்கிரஸ் கட்சிக்காரர்களும் மனச்சாட்சியை விலைக்கு விற்காமல் வோட்டு அளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir.

SRI V. KRISHNAMOORTHY : I am not yielding.

THE HON. SRI R. VENKATARAMAN : It is a point of Order. There is no use of the hon. Member saying 'not yielding'.

SRI V. KRISHNAMOORTHY : The Hon. Minister must say ' Point of Order '.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மனச்சாட்சியை விலைக்கு விற்காமல் என்பது " பார்லிமெண்டரி வெர்ட்ஸ் " அல்ல.

MR. DEPUTY SPEAKER : This is an insinuation against the hon. Members belonging to the Congress party.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** மனச்சாட்சிக்குப் புறம்பாக என்று அர்த்தம்.

THE HON. SRI R. VENKATARAMAN : I insist that the words be expunged.

**கனம் உதவி சபாநாயகர் :** 'மனச்சாட்சியை விலைக்கு விற்காமல்' என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அதை அவர்கள் திரும்பிப் பெறவேண்டும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** நான் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். இதில் ஒன்றும் தவறு கிடையாது மனசாட்சிக்கு புறம்பாக வாக்கு அளிக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் அவர்களெல்லாம் மனிதர்கள். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் விநியோகத்தில் கோளாறு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால், மற்றவர்களும், பெரும்பாலான மந்திரிகளும் உணவு உற்பத்தி போதவில்லை, கண்டிரோல் வேண்டும், குடும்பக் கார்டுகள் வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

இதிலே எது உண்மையென்பதை அமைச்சர்கள் விளக்க வேண்டும். உற்பத்திக் குறையவில்லையென்று சொன்னார்கள். விநியோகத்தில்தான் கோளாறு இருப்பதாகச் சொல்கிறார்கள். எவ்வளவு காலத்திற்கு இப்படி விநியோகத்தில் கோளாறு இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கப் போகிறார்கள்? சென்ற இரண்டு மாத காலமாக 'விநியோகத்தில் கோளாறு, கோளாறு' என்று பேசப்பட்டு வருகிறது. விநியோகத்தில் கோளாறு இருக்கிறதென்றால் அதைச்சரிப்படுத்த ஒரு வாரம் கொடுத்தோம், ஒரு மாதம் கொடுத்தோம். இன்னும் இந்த அமைச்சரவையால் அதைச் சீர்திருத்தம் செய்ய முடியவில்லை. இந்த நிலையில் ராஜினாமாச் செய்ய வேண்டியதுதான் இந்த மந்திரி சபையின் கடமை. எவ்வளவு காலம் 'கோளாறு, கோளாறு' என்று பேசித் தப்பிக்கப் பார்க்கிறீர்கள். உணவுப் பிரச்னையைப் பொறுத்த வரையில் இந்த மந்திரி சபை அதைச் சரியாக செயல்படுத்த முடியவில்லை. அதற்கு அவர்களுக்குத் தப்பு இல்லை என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். இந்த உணவு நிலைமையைப்பற்றிப் பேசுகிறபொழுது மந்திரி பூவராகன் அவர்கள் என்ன பேசுகிறார்கள். ஆயிரம் பேர்கள் இரவுபகலாக அரிசிக்காக க்யூவில் நிற்கிறார்கள் என்றால் அதற்கு அவர் என்ன சொல்கிறார்? இது அல்லவோ திட்டத்தின் முன்னேற்றம், இந்த நாட்டினுடைய முன்னேற்றத்தை இது குறிக்கவில்லையா? என்று அமைச்சரவர்கள்



கேட்கிறார். இந்த மூன்றாவது ஆண்டு திட்டக் காலத்திலே இப்படி ஆயிரம் பேர், மூவாயிரம் பேர் என்று க்யூவிலே நிற்கிறார்கள் என்றால் அடுத்த நான்காவது ஐந்தாவதுத் திட்டத்திலே நாலாயிரம் பேர் நிற்பார்கள். பிரச்னைகளை அமைச்சரவர்கள் எவ்வளவு அலட்சியமாகக் கவனிக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத் தான் இதைச் சொல்கிறேன். மேலும், உத்தியோக விஷயங்களிலேகூட இந்த அமைச்சர்கள் எல்லாம் தலையிடுகிறார்கள். திரு. முனு ஆதி அவர்கள் பேசுகிறபொழுது எதிர்ப் பக்கத்தில் உள்ள ஹரிஜன எம்.எல்.ஏ.-க்கள் குறுக்கீடு செய்தார்கள். ஹரிஜனங்கள் முன்னுக்கு வரவேண்டும், அவர்கள் எல்லோரும் முன்னேற்றம் அடையவேண்டும் என்ற வகையில்தான் திராவிட முன்னேற்றக் கழகமும் பாடுபடுகிறது. கோபால் என்ற ஒரு இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் ரிஜிஸ்ட்ரேஷன் அதிகாரி இருந்தார். அவர் ஒரு ஆதி திராவிடர்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த கோபால் பற்றிய விஷயம் இப்பொழுது கோர்ட்டிலே இருக்கிறது. ஆகவே, அது சப்ஜுடிஸ். அதைப்பற்றி இங்கே பேசுவது முறையல்ல.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இந்த முறையில் அமைச்சர்கள் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள். இதனால், இந்த நாட்டினுடைய அபிவிருத்தி எவ்வளவு கெட்டு வருகிறது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நெய்வேலி நிலக்கரியையும் சேலம் இரும்பையும் கொண்டு ஒரு உருக்குத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் எல்லோரும் சொன்னார்கள். அதற்கு அமைச்சரவர்கள் என்ன சொன்னார்கள். எதிர்க்கட்சி அதை வேண்டாமென்று விரும்புகிறார்களா என்று கேட்டார்கள். நாங்கள் தான் சேலம் உருக்குத் தொழிற்சாலைக்குக் குறுக்கே நிற்பதாகச் சொன்னார்கள். 'நாங்கள் தஸ்தூர் கம்பெனியின் ரிப்போர்ட்டிற்காக' காத்துக்கொண்டிருக்கிறோம். சுமார் 24,000 ஏக்கர் நிலம் இதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டது, உடனடியாக இதை ஆரம்பிப்போம்' என்றெல்லாம் சொன்னார்கள். அது என்ன ஆயிற்று? இப்பொழுது ஹாஸ்பெடிலா அல்லது விசாகப்பட்டினத்திலா என்று ஜோசியம் பார்க்கக்கூடிய நிலையில் இருக்கிறது. இந்த அமைச்சரவை சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிப்பதை தடுத்திருக்கிறார்கள். இவர்களின் செயலற்ற காரணத்தினால் இந்த இரும்புத் தொழிற்சாலை வரவில்லை.

'யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.'

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். அந்த முறையில் இவர்கள் நாக்கையாவது காக்கக் கூடாதா? மத்திய அரசாங்கத்திலிருக்கும் மந்திரியைப் பார்த்து, நாம் எல்லோரும் ஒருமுகமாகக் கேட்கலாமே, நாங்கள் இதிலே உங்களுக்கு உறு துணையாக இருப்போம். ஆனால் நடந்திருப்பதென்ன? நேற்று முன் தினம் இந்த மன்றத்திலே என்ன சொன்னார்கள்? இந்த

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [24th October 1964

மன்றத்திலேயே ஒரு ஏகோபித்த தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கலாமே அதற்குப் பதிலாக இந்த மாநில சர்க்காரே இந்த சேலம் ஸ்டீல் பிளான்டை ஆரம்பிக்க முடியுமென்று நேற்றைய முன் தினம் இந்தச் சபையிலே அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், நேற்றைய தினம் இதைப்பற்றிப் பேசிய திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள். இரண்டு மூன்று இடங்களைக் குறிப்பிட்டு எந்த இடத்திலே வைப்பதென்பது பிற்பாடுதான் முடிவு செய்யப்படும், சேலம் ஸ்டீல் பிளான்டைப் பொறுத்தவரையில் சென்னை அரசாங்கமே அதை எடுத்து நடத்தத் தயாராயிருக்கிறது, என்று சொன்னதாகப் பத்திரிகையிலே வந்து இருக்கிறது. அதற்கு வேண்டிய ரூ. 100 கோடி எங்கேயிருக்கிறது என்று நான் கேட்கிறேன். உங்களால் எந்த அளவுக்கு இனிமேல் வரி போட முடியும்? வாயை மூடிக்கொண்டிருப்பதற்கு உங்களுக்கு வக்கு இல்லை. வாயை மூடிக்கொண்டு மத்திய சர்க்காரைப் பார்த்துக் கேட்பதற்கு உங்களுக்குத் திறனில்லை.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், வக்கு இல்லை, துப்பு இல்லை, வெட்கமில்லையா என்ற வார்த்தைகளையெல்லாம் வெகு வேகமாகக் கனம் அங்கத்தினர் பிரயோகித்துக்கொண்டே போகிறார். இவைகள் எல்லாம் பார்லிமெண்டரி வார்த்தைகள் அல்ல. இவைகள் 'அன்பார்லிமெண்டரி' என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** அவைகள் பார்லிமெண்டரி வார்த்தைகள்தான்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் பார்த்துச் சொல்லட்டும். இப்படிப் பேசுவதெல்லாம், பார்லிமெண்டரி என்று சொன்னால் எதிர்க்கட்சியிலுள்ள 60 பேருக்கு எதிராக எங்களிடம் 130 பேர் இருக்கிறார்கள். (டிரெஷரி பெஞ்சிலிருந்து ஆரவாரம்).

**கனம் உதவி சபாநாயகர் :** இந்த விவாதத்திலே பேசும்பொழுது, கனம் அங்கத்தினர்கள் பொறுப்புணர்ச்சியோடு, மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் கருத்துக்களைச் சொல்லவேண்டுமே தவிர, யாரையும் ஏசக்கூடாது. கனம் அங்கத்தினர் பொறுப்பு உணர்ச்சியுடன், சபையின் கௌரவத்திற்கு உகந்த முறையில் வார்த்தைகளை உபயோகிக்கவேண்டும்.

**திரு. ம. கமலநாதன் :** ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், சார். கனம் அமைச்சர் அவர்கள், அவர்கள் பக்கத்தில் 130 பேர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லி உணர்ச்சியைக் கிளறி. . .

MR. DEPUTY SPEAKER : There is no point of information in this.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இந்த சேலம் ஸ்டீல் மில்லை ஏற்படுத்துவதிலும் இந்த அரசாங்கம் பின்தங்கி விட்டது. இந்த மந்திரிசபை எல்லாம் வல்ல மந்திரி சபை. இந்த மாதிரி சபை



24th October 1964] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

மற்ற மந்திரி சபை மாதிரி என்று நான் சொல்லிவிட மாட்டேன். கோயம்புத்தூரில் ஒரு மில் வைக்க வேண்டுமென்று சொன்னால், ரூ. 10 லட்சம் கூட லஞ்சம் கொடுத்து லைசென்ஸ் பெறுவதற்கு அங்கே உள்ள முதலாளிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். வேண்டுமானால் அரசாங்கமே நேரடியாகக் கேட்டால் ரூ. 5 லட்சம் கொடுப்பதற்குத் தயாராயிருக்கிறார்கள். பதின்மூன்று மில்களுக்கு லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 300 பேருக்கு மேல் விண்ணப்பம் போட்டிருந்தார்கள். யார் யாருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று நான் கேட்கிறேன். ரங்கசாமி நாயுடு என்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செயலாளருக்கு லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். இவர் ரூ. 10,000 க்குக்கூட இம்மவையின் புராப்பர்ட்டி இல்லாதவர். இவருக்கு எப்படி ரூ. 65 லட்சம் செலவில் ஒரு மில்லை ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ் கொடுத்தார்கள் என்று நான் கேட்கிறேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** தனிப்பட்ட நபர்களைப்பற்றி கனம் அங்கத்தினர் குறை சொல்லக்கூடாது.

THE HON. SRI R. VENKATARAMAN : I am very sorry to intervene. I do not think ordinary talking could go to any length. I want to humbly submit for the consideration of the Hon. Leader of the Opposition that if the hon. Member says that there has been malpractice or corruption of the kind mentioned by the hon. Member in giving permits and licences to somebody, he should make a specific charge. But to make allegations against those who are not members of the House would be outside the purview of the discussion here.

SRI K. A. MATHIALAGAN : The allegation is not against outsiders but against those to whom permits and licences were granted.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதை நான் விளக்குகிறேன். இந்த பெர்மிட்டுகள், லைசென்ஸ்கள் வழங்குவதிலே பணம் வாங்கியோ அல்லது தவறான முறையிலோ அல்லது கரப்ஷன் மூலமாகவோ கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அவர்கள் குற்றச்சாட்டு சொன்னால். . .

SRI K. A. MATHIALAGAN : That is what the hon. Member Sri V. Krishnamoorthi is saying.

THE HON. SRI R. VENKATARAMAN : That is what the hon. Member Sri K. A. Mathialagan wants the hon. Member Sri V. Krishnamoorthy to say now.

I want to appeal to the Chair and to the leaders of parties that we should conduct our discussion at a higher level. There are many faults, commissions and omissions on which we can dwell. Unnecessary charges might be avoided if it could be helped.

[24th October 1964

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் உறுப்பினர் மதியழகன் அவர்கள் யோசனை கூறியதைக் கேட்டிருப்பார்கள். அப்படியானால், பொறுப்புணர்ச்சியோடு யார் எவ்வளவு லஞ்சம் வாங்கினார்கள் என்று கனம் மதியழகன் யோசனைப்படி அவர்கள் சொல்லட்டும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** லஞ்சம் வாங்கினார்கள் என்று அர்த்தம் அல்ல. மில்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. வசதியில்லாதவர்களுக்கு 'கொடுத்திருக்கிறார்கள் என்பதுதான் உறுப்பினரின் குற்றச்சாட்டு. அமைச்சர் அவர்களைக் குறிப்பிட்டுதான் சொல்கிறார்களே தவிர, வெளியில் இருப்பவர்களைப் பற்றியல்ல.

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் பேசும்பொழுது அவர் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியாக இருந்தார் என்று சொன்னார். அவருடைய தனிப்பட்ட ஸ்டேட்டஸைப்பற்றிச் சொல்வது முறையல்ல என்று நான் சொன்னேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** நான் காபினெட் முறையையுமே சார்ஜ் பண்ணுகிறேன். தனிப்பட்ட மந்திரிகளை சார்ஜ் பண்ணவில்லை. 300-க்கும் மேற்பட்ட மனுக்கள் வந்திருக்கின்றன. ஆனால் குறிப்பிட்ட சிலருக்குத்தான் லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒரு பஸ் ரூட் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் அந்த விஷயம் எவ்வளவோ டிரிபியூனல்களுக்குப் போகிறது. அமைச்சர்கள் யாரை வைத்துப் பரிசீலனை செய்து கொடுத்தார்கள் என்றுதான் கேட்கிறேன். இந்த காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராக இருந்த ரங்கசாமி நாயுடுக்கு ரூ. 65 லட்சம் போட்டு ஆரம்பிக்கக்கூடிய மில்லுக்கு லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு என்ன சொத்து இருக்கிறது? சொத்து இல்லாதவருக்கு எப்படிக் கொடுத்தார்கள் என்று நான் கேட்கிறேன்.

மந்திரிகளின் சொந்தக்காரர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்படவில்லையா? மந்திரி மன்றாடியார் தம்பி மனைவி, இந்த சபை அங்கத்தினர் பார்வதி அர்ச்சுனன் அவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்படவில்லையா? அரசாங்கப் பதவியை வைத்துக்கொண்டு ஒரு சிலருக்குச் சாதகமாகச் செய்திருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறேன். நடராஜ அய்யர் என்கிற ஆட்டோ ஸ்பேர் பார்ட்ஸ் டீலருக்கு எப்படி லைசென்ஸ் கொடுத்தார்கள்? தஞ்சை ஸ்ரீனிவாச அய்யர் என்பவருக்கு எப்படி லைசென்ஸ் கொடுத்தார்கள்? சுந்தரராமன் என்பவருக்கு எப்படி லைசென்ஸ் கொடுத்தார்கள்? இப்படிப் பலப் பல சந்தர்ப்பங்களில் எப்படி எப்படி இந்த சர்க்கார் தன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்திருக்கிறது என்று சொல்லிக் கொண்டே போக முடியும். அப்படிக் குற்றம் சாட்டுகிறேன்.

நான் காமராஜ் அவர்களை மிகவும் மதிக்கிறேன். அவர் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும், அகில இந்திய காங்கிரஸ் ஸ்தாபனத்திற்குத் தலைவராக இருக்கிறார்கள் என்று மகிழ்ச்சி அடைகிறேன். மாற்றான் மாலையாக (மல்லிகையாக) இருந்தாலும் மணம்



24th October 1964] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

இருக்கிறது என்று மதிக்கிறேன். இன்றைய தினம் டெல்லி மாநகரத்தில் அவர்கள் மீது குற்றம் சாட்டுகிறார்கள், ஹைதராபாத் பாங்கியில் சொத்து வைத்திருக்கிறார்கள் என்று. அது உண்மையா? அந்தப் பணம் ஏது? லைசென்ஸ் கொடுத்த பணமா என்று கேட்கிறேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் (திரு. காமராஜ்) இந்த சபையில் அங்கத்தினர் என்றாலும், சர்க்காரில் பொறுப்பு வகிக்காத முறையில் வெளியே இருக்கிறவர்கள். . .

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** அவர் பேரில் ஏற்பட்டிருக்கும் கறை துடைக்கப்படவேண்டும் என்று தான் சொல்லுகிறேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** The hon. Member may resume his seat. யாரோ சொன்னார்கள் என்பதைச் சொல்லுவது சரியாகாது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** பத்திரிகையில் வந்திருக்கிறது.

**கனம் உதவி சபாநாயகர் :** பத்திரிகையில் வந்தது என்றால் அதை இங்கே சொல்லிவிடுவது சரியல்ல.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஆகையால் இந்த மாநிலத்திலிருந்து சென்றிருக்கும் ஒருவருக்கு, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு ஏற்பட்டிருக்கும், அவதூறை, கறையைத் துடைக்க வேண்டும், அப்படித் துடைக்க வேண்டியது மந்திரி சபையின் கடமையாகும். ஹைதராபாத் பாங்கியில் அவர்கள் ஒரு கோடி ரூபாய் போட்டிருக்கிறார்கள் என்ற அவதூறைக் களைய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு:

கோயம்புத்தூரில் அர்ச்சுனன் குண்டடிப்பட்டு செத்திருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் கூறவிரும்புகிறேன். அர்ச்சுனன் அவர்கள் நம்முடைய உள்துறை அமைச்சர் கக்கன் அவர்களுடைய கொடும்பாவியை எரிப்பேன் (இழுப்பேன்) என்று சொன்னார்கள். அவர்கள் அப்படிக் கொடும்பாவியை இழுப்பேன் என்று சொன்ன பிறகு குண்டு அடிபட்டுச் செத்திருக்கிறார்கள். ஆகையினால் இந்த அரசு கொலைக் குற்றத்திலிருந்து தப்பிக்க முடியாது. 'உங்கள் களங்கத்தை ஏழ் கடல்களிலும் கழுவினாலும் கறை போகாது' என்று கூறிக்கொண்டு முடிக்கிறேன்.

***திரு. கோ. ராஜாராம்:** கனம் துணைத் தலைவர் அவர்களே, தரம் இருக்கிறதோ இல்லையோ காரம் நிறைந்த எதிர்க்கட்சிகள்— ஒருவர் மீது ஒருவருக்கு நம்பிக்கையில்லாத எதிர்க்கட்சிகள் இன்றையதினம் இணைந்து, இழைந்து நிறைவேறும் என்ற நம்பிக்கையில்லா நிலையிலே ஆளுகின்ற கட்சி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இசைக் கச்சேரி பற்றி விமரிசனம் செய்ய இருகாதும் கேளாதவன் புறப்பட்டானாம். அதைப்போல இசையோடு வாழும் இந்த அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகின்றார்கள். மாநிலங்களுக்கெல்லாம் சென்னை மாநிலம் வழி காட்டியாக இருக்

கிறது என்ற மாநில முதலமைச்சர்களின் பாராட்டுரை, அந்தப் புகழ் உரையின் இனிய ஒலி மறைவதற்கு முன்னாலே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் அபஸ்வரமாகக் காதுகளைத் தாக்குகின்றது.

1967-ம் ஆண்டுவரை வாழ வேண்டும் என்ற ஆசை, அதுவரை கூட வாழ முடியாது போய்விடுமோ என்ற அச்சம், இப்படி ஆசையும், அச்சமும் நெஞ்சைக் குடைக்கின்ற காரணத்தினாலே தான் இது போன்ற அரசியல் சாகசங்களை, அரசியல் நாடகங்களை அரசியல் செப்படி வித்தைகளைச் செய்துகாட்டவேண்டிய கட்டாய நிலைக்கு எதிர்க்கட்சியினர் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். நாடக மேடையில் திடீரென்று வசனத்தை மறந்துவிட்ட நடிகன் நாடக புத்தகத்திலே இல்லாத வசனத்தைத் தானாகவே எடுத்தும் சொல்லி அன்றைய தினம் நாடகம் பார்க்க வந்த மக்களின் கல்லடியிலே இருந்து தப்பித்துக் கொள்ள முயற்சி செய்வதைப் போல, அரசியல் நாடகம் ஆட வந்த இவர்கள் இலட்சியத்தை மறந்துவிட்டு, கொள்கையை, திடீரென்று தொலைத்து விட்டு மக்களுடைய கண்டனக்கணைகளிலேயிருந்து தப்பித்துக் கொள்வதற்காக இப்படிப்பட்ட புதிய புதிய வேஷங்களைப் போடுவதிலும் புதிய காட்சிகளை அரங்கேற்றுவதிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள். மூலக் கதையிலே காணப்படாத முற்றிலும் மாறுபட்ட புதிய காட்சிகளிலே ஒன்றுதான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம்.

நாட்டிலே நம்பிக்கையில்லாத தீர்மானம் உருவாகிறதென்றால் நாட்டு அரசியலில் பெரிய கொந்தளிப்பு; நாட்டு அரசியலில் புயல்; புரட்சிகரமான சூழ்நிலை! நாட்டு மக்கள் நெஞ்சமெல்லாம் வெறுப்புணர்ச்சி ஆளுகின்ற கட்சி மீது எதிர்ப்புணர்ச்சி இந்த உணர்வுகளெல்லாம் பெரியதொரு சக்தியாக உருவெடுத்து எதிர்க்கட்சிகளின் வலிமையும், பொலிவையும் பலமுள்ளதாக்கி அதன் விளைவாக எந்த நேரமும் ஆளும் கட்சி விழும், அழியும் என்ற நிலை—இத்தகைய சூழ்நிலையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறதென்றால் அதில் பொருளிருக்க முடியும்—நம்மால் அதைப் புரிந்து கொள்ளவும் முடியும். ஆனால், இங்கோ ஆளுகின்ற கட்சிக்கு நாளும் மக்கள் ஆதரவு வளர்பிறையாக இருக்கும்போது எதிர்க்கட்சிகளுக்கோ அது தேய்பிறையாக இருக்கின்ற காட்சி. நம்பிக்கையில்லாத் தீர்மானம் புறப்பட்டு வருகிறது. சிறகொடிந்த பறவை பறக்க முடியாது—முனை ஒடிந்த வேல் தாக்க முடியாது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நம்மை என்ன செய்து விட முடியும்?

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்களே! இந்த அரசு நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் செய்த தவறுகள் என்ன? செய்யத்தவறிய நன்மைகள் என்ன? 17 ஆண்டுகால ஆட்சியில் அதைச் செய்யவில்லை இதைச்செய்யவில்லை என்று அடுக்குகின்றார்களே! அரசியல் உலகில் 17 ஆண்டுகள் என்பது





மிகக்குறுகிய காலமல்லவா? அமெரிக்க நாடு சுதந்திரத்திற்குப் பின்னாலே 150 ஆண்டு காலத்திற்குப்பிறகுதானே சிறப்பான முன்னேற்றத்தைப் பெற முடிந்தது! பல ஆண்டுகள் பல திட்டங்களை விழுங்கிய பிறகு தானே ரஷ்ய நாடு புதுமை மிகும் சாதனைகளைப் பெற முடிந்தது. இந்த 17 ஆண்டு காலத்திலே அயல்நாட்டு அறிஞர்கள் போற்றிப் பாராட்டுகின்ற வகையில் இந்த தேசம் முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறதே! தேசிய வருமானம் உயர்ந்திருக்கிறது—தனி நபர் வருவாய் பெருகியிருக்கிறது என்று பெருமையோடு சொல்லிக்கொள்ளும் நேரத்தில் இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை மற்றைய மாநிலங்கள் பொறாமைக் கண்களோடு பார்க்கின்ற அளவுக்கு ஒவ்வொரு துறையிலும் வளர்ச்சியையும் மலர்ச்சியையும் பெற்றிருப்பதை மறக்க முடியுமா? விவசாய உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம்; தொழில் வளத்தைக் கூட்டியிருக்கிறோம்; எங்கு பார்த்தாலும் 'பாதை தெரியுது பார்' என்ற நிலை; போக்கு வரத்துத் துறையிலே சிறப்பான வளர்ச்சி; பிணி போக்கும் பணியிலே நல்லதொரு முன்னேற்றம் சுகாதாரத்துறையிலே சுவையான திருப்பங்கள்; கிராமங்கள் எல்லாம் எழிற்கோலம் பூண்டிருக்கும் காட்சி! கிராம மக்கள் முகமெல்லாம் அறிவொளி! அவர் தம் இல்லமெல்லாம் மின்னொளி! விவசாயிகள் நெஞ்சிலே புயல் வீசினால் வயல் வறண்டு விடும் என்பதால் அவர்களுக்கு உற்சாகமளிக்கக் கூடிய பல்வேறு நிலச்சீர்த்திருத்தச் சட்டங்கள், ஆசிரியப் பெருமக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய வாழ்க்கை வசதித்திட்டங்கள்—கல்வித்துறையிலே மாபெரும் வளர்ச்சி. இந்த நேரத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது! அவசியம் என்ன? பொருளிருக்கிறதா?

இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்த பிரதான எதிர்க்கட்சித் தலைவருடைய உரையைக் கேட்கும்போது அதில் தெளிவின்மையும் தேக்கமும் நிறைந்திருப்பதை உணர முடிந்தது. எதையோ சொல்ல நினைத்து சொல்ல முடியாதவர்களாக எதையோ சொல்லிக்கொண்டு போனார்கள். அவர்கள் பேச்சைக் கேட்டபோது சென்சார் செய்யப்பட்ட ஆங்கிலப்படத்தை பார்க்கின்ற உணர்வு தான் ஏற்பட்டது. உள்ளத்திலே தெளிவு இருந்தால்தான் வாக்கினில் ஒளி உண்டாகும் என்று சொல்வார்கள். உள்ளத்தெளிவில்லாத காரணத்தினால் தான் எதிர்க்கட்சி நண்பருடைய இல்லாத பொல்லாத கூற்றுகள் தணிக்கை செய்யப்பட்ட ஆங்கிலப் படத்தைப் போல் எங்களுக்கெல்லாம் தோன்றியது. அடுத்தபடியாக மிகவும் தைரியத்துடன் பேசுவதாகக் கனம் அங்கத்தினர் அன்பில் தருமலிங்கம் குற்றஞ்சாட்டிப் பேசினார்கள். என்ன சொன்னார்கள். "இந்த அரசு நீதி முறையால் அமைந்த அரசு அல்ல; சாதி முறையால் அமைந்த அரசு. சாதிக்கு ஒரு மந்திரி இருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். என்ன பொருள்? சரி நாலு முதலியார்களுக்கும் நாலு பிராமணர்களுக்கும் மந்திரி வேலை கொடுத்திருந்தால் இவர்கள் திருப்திப்பட்டிருப்பார்களா?

[திரு. கோ. ராஜாராம்] [24th October 1964

நாலு வன்னியர்களுக்கும் நாலு ஹரிஜனங்களுக்கும் மந்திரி சபையில் இடமளித்திருந்தால் இந்த அரசை புறாவுக்காக சதையை அறுத்துக் கொடுத்த சிபிச் சக்ரவர்த்தி பாரம்பரை என்றோ, மகனைத் தேர்க்காலின்கீழ் இட்ட மனுநீதிச்சோழன் வாரிசு என்றோ போற்றியிருப்பார்களா? மாட்டார்கள். அநியாயம்! அக்கிரமம்! என்று தான் கூறியிருப்பார்கள். சாதி அமைப்புகள் இருக்கின்ற நிலையிலே சாதிக்கொருவராக மந்திரி சபையில் பிரதிநிதித்துவம் பெற்றதில் என்ன தவறிருக்க முடியும்?

விலைவாசிப் பிரச்சினையைப் பற்றியும் ஹிந்திப் பிரச்சினையைப் பற்றியும் பெரியதாகப் பேசினார்கள். விலைவாசிப் பிரச்சினை அரசியல் பிரச்சினையா? அது பொருளாதாரப் பிரச்சினை அல்லவா? இந்தப் பிரச்னையிலே தீர்வு காண்பதற்கு இந்த அரசு ஏற்றுக்கொண்ட பொருளாதாரத் திட்டங்களை, கொள்கைகளை, தர்க்க ரீதியாக விமரிசித்து இவர்கள் குறை சொன்னதுண்டா? மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்காக இந்த அரசு மேற்கொண்ட முயற்சிகள், ஆற்றிய பணிகள் மகிழ்ச்சிக்குரியதல்லவா? போய்ப் பாருங்கள். மவுண்ட் ரோடிலே மட்டமான படத்திற்குக் கூட முதல் பத்து நாட்களுக்கு டிக்கட் கிடைப்பதில்லை. அதற்குப் பின்னாலும் பாஸ்டில் சிறைச்சாலைக்கு முன்னாலே கூடி நின்ற பிரெஞ்சு புரட்சியாளர் கூட்டம் போல தியேட்டர்கள் முன்னால் மக்கள் முண்டியடித்துக் கொண்டு நிற்கின்ற காட்சி! மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கவில்லையா? இப்படிச் சொன்னால் அமைச்சர் பூவராகன் மீது ஏன் ஆத்திரம் பிறக்கிறது? பொருளாதார நெருக்கடி, உணவுப் பற்றுக்குறை இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறதென்றால், அது ஒரு இடைக்கால நிலை, உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், இந்த நிலைமையை வளர்த்தவும் பெரிதுபடுத்தவும் பத்திரிகைக்காரர்கள் பெருந் தூண்டுதலாக இருந்திருக்கிறார்கள். கனம் தொழிலமைச்சர் அவர்கள் அதனால் தான் இதை Paper made Scarcity என்று சொன்னார்கள். அவர் மீது கோபம் வருவானேன்? அது தானே உண்மை நிலை! நான் எல்லாப் பத்திரிகைக்காரர்களையும் கூறவில்லை. நாட்டிலே உணவு உற்பத்தி பெருகவேண்டிய அதே நேரத்தில் மக்கள் உற்பத்தி குறைக்கப்பட வேண்டுமென்பதற்காக கருத்தடைப் பிரசாரங்கள் இந்த அரசு மேற்கொண்டபோது 'வயிற்றை அறுக்கிறார்கள், வயிற்றைக் கிழிக்கிறார்கள்' என்ற வதந்திகளைப் பெரிதாக்கி பத்திரிகை விற்பனையைப் பெருக்கிக்கொள்ள நினைத்த அதே பத்திரிகைகள் தான் இன்று நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு மக்களின் க்யூ வரிசைப் படங்களைப் பெரிதாகப் போட்டு நிலைமையைப் பெரிது
10 30 a.m. படுத்தி நாட்டு மக்களைப் பீதிக்குள்ளாக்கியிருக்கிறார்கள். பாம்பு கடித்த மனிதன் சாவதைவிட பயத்தினால் செத்துவிடுவதாகச் சொல்வார்கள். அதுபோல, அரிசிப் பஞ்சத்தைவிட பத்திரிகைக்காரர்கள் ஏற்படுத்திவிட்டிருக்கின்ற இந்த அரிசிப் பஞ்ச பீதியினாலேதான் மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாக்கப்பட்டு பாதிக்கப்



24th October 1964] [திரு. கோ. ராஜாராம்]

பட்டிருக்கின்றார்கள். இன்றைய தினம் நாட்டிலே அரிசிப் பஞ்சம் இல்லை, பொறுப்புணர்ச்சிப் பஞ்சம்தான் இருக்கிறது. கடமையுணர்ச்சியிலேதான் பஞ்சம் இருக்கிறது. அதனாலேதான் 'ஹிந்து' பத்திரிகை தனது 22—10—1964 இதழ் தலையங்கத்தில், "இந்த நாட்டு மக்களுக்கு இந்த சோதனையான சூழ்நிலையில் பொறுப்புணர்ச்சியும், கடமையுணர்வும், தியாக மனப்பான்மையும் நிறையத்தேவை" என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தது.

இங்கே நண்பர் திரு. முனு ஆதி அவர்கள் அமைச்சரவை மீது குற்றஞ்சாட்டும்போது, உள்துறை அமைச்சருடைய சொந்தக்காரருக்கு உத்தியோகம் கொடுத்ததாகச் சொன்னார்கள். மறுத்த போது பேச்சை மாற்றிக்கொண்டார்கள். அதைப் போலவே டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷன், முதலமைச்சருடைய உறவினர் என்று குற்றஞ்சாட்டினார்கள். முதலமைச்சர் மறுத்த போது 'உறவறிய குழு' வேண்டும் என்றார்கள். . .

**கனம் உதவி சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசலாம்.

திரு. கோ. ராஜாராம்: இப்படிப் பொறுப்பற்ற தன்மையில் எதிர்க் கட்சியினர் குற்றத்தைச் சுமத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, ஹிந்திப் பிரச்னையில் இந்த அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை என்று சொன்னார்கள். அவர்கள் தமிழ் மொழி மீது தங்களுக்கு இருக்கும் பாசத்தைக் காட்டிக் கொள்வதை விட ஹிந்தி மீது தங்களுக்குள்ள எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படுத்திக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டினார்கள், அக்கறை செலுத்தினார்கள். நாங்கள் தைரியமாகச் சொல்லிக் கொள்வோம். எங்களுக்குத் தமிழ் மீது தணியாத பற்றும் பாசமுமுண்டு. தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன் என்ற உணர்வு எங்களுக்குண்டு. அதனாலேதான் தமிழுக்குத் தரவேண்டிய பெருமையை நாங்கள் தந்திருக்கிறோம். தமிழை இந்த நாட்டு ஆட்சிமொழியாக்கி இருக்கிறோம். அரியணை ஏற்றியிருக்கிறோம். கல்லூரிகளிலே தமிழைப் போதனா மொழியாக்க சகலவிதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். பள்ளிக்கூடங்களிலேகூட ஹிந்தியைக் கட்டாயமில்லாத நிலையில் வைத்திருக்கிறோம். பொதுமொழியாக ஹிந்தியை ஏற்றிருக்கிற அதே நேரத்தில் ஆரியத்தோடு உறழ்தரு தமிழ் தெய்வத்தையும் உரிய இடத்தில் வைத்திருக்கிறோம். ஹிந்தியைப் பொது மொழியாக ஏற்றியிருக்கிறோம் என்றால் இலக்கிய வளம் நிறைந்தது என்பதனால் அல்ல, நிர்வாக சௌகரியத்தைக் கருத்திலே கொண்டு தான்.

இன்னும் எதையெதையோ சொல்லவேண்டுமே என்பதற்காகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். நான் சொல்வேன், கற்புக்கரசியான கண்ணகியைப் பிரிந்து காதல் கலையிலே தேர்ந்த, மயக்கு மொழியிலே வல்ல மாதவியின் வலையிலே விழுந்த காரணத்தினாலே தான் கோவலன் கள்வனெனப் பழியேற்கவும், கொலைக் களத்தில்

[திரு. கோ. ராஜாராம்] [24th October 1964

கொலையுண்டு மடியவும், மதுரைமாநகர் எரியவுமான துர்ச்சம்பவங்கள் நிகழ்ந்தன. கண்ணகி போன்ற காங்கிரஸ் கட்சியை விட்டு மயக்குமொழி மாதவி போன்ற எதிர்க் கட்சியினரின் மாய வலையில் மக்கள் ஒருபோதும் விழமாட்டார்கள். இந்த உண்மை எங்களைவிட எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு—கலைஞருக்கு—நன்றாகத் தெரியும். காரணம், கண்ணகி கதையைப் படித்து மறந்து போனவர்களுக்கு நினைவூட்டவும், படிக்காதவர்கள் தெரிந்து கொள்ளவும் 'பூம்புகாரை' இந்த அவையின் தலைவர் முன்னிலையில் சிறப்பாக அவர்கள் தந்திருக்கிறார்கள். இந்த உண்மைகளையெல்லாம் நன்றாகத் தெரிந்தும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருகிறார்கள் என்றால் ஒரு ஆசை ஒரு சான்ஸ் போனால் ஒரு ரூபாய்; வந்தால் ஒரு லட்சம் என்று எதிர்பார்த்து ஒரிசா லாட்டரி சீட்டு வாங்குபவரைப் போல இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம்—இந்த மன்றத்திலே வந்திருக்கின்ற தீர்மானம் கட்டாயம் நிறைவேறப்போவதில்லை. ஆனால், 1967-ம் ஆண்டில் மக்கள் எதிர்க்கட்சியினர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தீர்மானம் நிச்சயம் நிறைவேறியே தீரும். அப்படி நிறைவேறுகின்றபோது அடுத்த முறை இந்த மன்றத்தில் இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருகின்ற சிறிய ஆசை ஏற்பட்டு அதற்கு நீங்கள் முயற்சித்தாலும் அந்தத் தீர்மானத்தைச் சபையின் நாயகர் அனுமதிப்பதற்கு வேண்டிய சிறுபான்மை பலத்தைப் பெற்றவர்களாகக்கூட நீங்கள் இங்கே இருக்கமாட்டீர்கள். அதற்கான கால்கோள் விழாவைத்தான் நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று அவர்களுக்குச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்ட மன்றச் செயலாளர் நண்பர் திரு. மதியழகன் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது என்னுடைய ஆதரவைத் தெரிவித்து, கருத்துக்களை எடுத்துக்கூற நான் விரும்புகிறேன்.

நான் என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்பு, எனக்கு முன் பேசிய கனம் நண்பர் ராஜாராம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 'பூம்புகார்' படத்திற்கான நல்ல விளம்பரத்தை அவர்கள் தந்ததற்காக நான் அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி, இரண்டு நாட்களாக இரு தரப்பிலும்—ஆளும் கட்சியிலும் எதிர்த் தரப்பிலும்—உள்ள உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து அதில் பேசுகிற நேரத்தில், உள்ளபடியே



24th October 1964] [திரு. மு. கருணாநிதி]

எங்களுக்கு நண்பர் கிருஷ்ணமூர்த்தி எடுத்துச் சொன்னதுபோல் ஒரு சின்ன நெருக்கடி, குருக்ஷேத்திரம் போர்க்களத்தில் பாண்டவர்களுக்கு ஏற்பட்டது போன்ற நெருக்கடி ஏற்பட்டது, காரணம், மிக இனிமையாகப் பழகிக்கொண்டிருக்கிற, நெருங்கி உறவாடிக் கொண்டிருக்கிற, இந்த ஆளுங் கட்சியை சார்ந்தவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவிக்க வேண்டியிருக்கிறதே என்ற கவலை, உள்ளத்தை ஒரு புறத்திலே உலுக்கிக் கொண்டுதான் இருக்கிறது. ஆனாலும், பாண்டவர்களை உற்சாகப்படுத்தி, 'உறவினர் என்றாலும் பார்க்காமல் அவர்கள் மீது கணைகளைப் பொழிய வேண்டியதுதான் யுத்த தருமம்' என்று கூறிய கண்ணன் எங்களுக்குச் சொல்லாவிட்டாலும், "கடமை" எங்களுக்கு அறிவுறுத்த, நாட்டில் ஜனநாயகம் தழைக்கவும், சம தருமம் செழிக்கவும், நாடு வாழவும், நலிவு நீங்கவும் ஊழல் ஒழியவும் உண்மை ஒளி விடவும் நாங்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியத்திற்கு ஆளாகி இருக்கிறோம்.

போர்க் களத்திலே சுடு கணைகளை—அக்கினியாஸ்திரங்களை—விடுவது உண்டு. அதைப்போலவேதான் நான் இங்கு ஏவுகிற கணைகளும், அக்கிரமத்திற்குத் துணை போகிற நிலைமையிலே இருக்கின்ற, அமைச்சர் பெருமக்களுக்கு. அர்ஜுனன் கணைகள் எப்படி பீஷ்மாச்சாரியாரைச் சரப் படுக்கையில் படுக்க வைத்து மரியாதை செலுத்தியதோ, அதைப்போலவே இந்தச் சுடுகணைகளும் பாய்ந்திடும் என்று நான் நம்புகிறேன்.

'நம்பிக்கை இல்லை' என்று நாங்கள் தெரிவிக்கின்ற அதே நேரத்தில், நேற்றைய தினமும் இன்றைய தினமும் பேசிய ஆளுங் கட்சி உறுப்பினர்கள் ஒரு விஷயத்தை மிகக் கவனமாகக் குறிப்பிட்டார்கள். "எங்களில் 130-க்கு மேற்பட்டவர்களை இந்தச் சட்ட மன்றத்திற்கு வாக்காளர்கள் அனுப்பி வைத்திருக்கின்றார்கள். பெரும்பான்மையாக எங்களை அனுப்பி வைத்தபோதே மக்கள் எங்களை நம்பித்தான் அனுப்பி வைத்திருக்கிறார்கள். அறுபது பேர்களாக அமர்ந்திருக்கிற நீங்களா எங்கள் மீது நம்பிக்கையில்லை என்று கூறுவதற்கு அருகதையுள்ளவர்கள்?" என்றெல்லாம் கேட்டார்கள்.

ஆனால், இந்த ஒரு விஷயத்தில், கிடைத்திருக்கின்ற இடங்களை மாத்திரம் பார்க்கக்கூடாது. வெற்றி பெற்றிருக்கின்ற உறுப்பினர்களுடைய தொகையை மாத்திரம் பார்த்தால் நல்லதல்ல. 1962-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி பெற்றிருக்கிற வாக்குகள் 58,48,974. காங்கிரசை எதிர்த்து நின்ற கட்சிகளெல்லாம் பெற்றிருக்கின்ற வாக்குகள் 68,27,372. இதிலிருந்தே, வாக்காளர்கள் மத்தியில் காங்கிரசுக் கட்சி மீது நம்பிக்கை இல்லை என்பது புலனாகிறது. இந்தப் பத்து லட்சம் வாக்குகள் வித்தியாசத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம் 34 லட்சத்திற்கு மேற்பட்ட வாக்குகளைச் சென்ற தேர்தலிலே பெற்றிருக்கிறது. இது திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து வருகின்ற கட்சி என்பதை நாட்டுக்குப் புலப்படுத்துகின்ற ஒன்றாகும். இடங்களைத் தேர்ந்

தெடுத்துக் கொடுத்திருக்கின்ற வாக்குகளை வைத்து, விகிதாசார முறையிலே இடங்களைத் தேர்ந்தெடுப்பது என்று பார்த்தால் எதிர் கட்சிகளுக்குத்தான் அதிக இடங்கள் கிடைத்திருக்க முடியும் என்பதை நாம் இந்த நேரத்திலே மறந்துவிடக் கூடாது. ஆகவே, மக்கள் நம் பக்கம்தான் இருக்கிறார்கள் என்று தவறாகக் கருதிக் கொண்டு அந்த நினைப்பில் அரசினர் பல்வேறு தவறுகளைச் செய்வார்களானால் அது நல்லதல்ல என்று இடித்துக் காட்டத்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நண்பர் திரு. மதியழகன் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள்.

முதலில், சர்க்காருக்கும் கட்சிக்கும் இருக்கிற வேறுபாட்டை நாம் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும். நாட்டைக் காங்கிரஸ் கட்சியினுடைய சர்க்கார் ஆளுகிறது என்றால் பரவாயில்லை. ஆனால் காங்கிரஸ் கமிட்டியேதான் ஆளுகிறது என்றால், அதுவும் தமிழகத்தைப் பொறுத்த வரையில், குறிப்பாக, திரு. காமராஜரேதான் மறைமுகமாக ஆண்டுகொண்டிருக்கிறார் என்றால் இது உள்ளபடியே குற்றம் சாட்டப்படுவதற்குத் தகுதியான பொருளா? அல்லவா? நான் இதை ஆதாரம் இல்லாமல் சொல்லவில்லை. ஏதோ தானோ என்று, 'மறைமுகமாக அவர் ஆளுகிறார்' என்று வார்த்தை அலங்காரத்தோடு முடித்துவிடவும் விரும்பவில்லை. சில நிகழ்ச்சிகளை நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

18—10—1964 அன்று, உணவுப் பிரச்னையைப்பற்றி விவாதிக்க முதல் அமைச்சர் அவர்களும், அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களும், அமைச்சர் திரு. ராமையா அவர்களும் கூடுகிறார்கள். எங்கே? இங்கே, செக்ரடேரியட்டிலா? அல்ல. முதல் அமைச்சருடைய இல்லத்திலா? அல்ல. காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய வீட்டிலே கூடுகிறார்கள். உணவுப் பிரச்சினையைப் பற்றி அங்கே விவாதிக்கிறார்கள். சென்றவர்கள் மந்திரிகள் மாத்திரமல்ல. அதிலே குறிப்பிடத்தக்க குற்றச்சாட்டு என்னவென்றால், இந்தச் சர்க்காருடைய பிரதம காரியதரிசி திரு. செட்டூர் அவர்களே அந்தக் கூட்டத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ரெவின்யூ போர்டினுடைய முதல் மெம்பர் திரு. வர்கீஸ் அவர்களும் அந்தக் கூட்டத்திற்குச் சென்றிருக்கிறார்கள். Code of Conduct of Government Servants. என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதே அதற்கு மாறாக திரு. செட்டூர் அவர்களும், திரு. வர்கீஸ் அவர்களும் உணவுப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க ஒரு கட்சித் தலைவரின் வீட்டிற்குச் சென்றிருக்கிறார்கள் என்றால், இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்று கூறுவதற்கு இதைவிட வேறு என்ன காரணம் வேண்டுமென்று நீங்கள் கேட்கிறீர்கள். (எதிர்க்கட்சித் தரப்பில் ஆரவாரம்). நான் கேட்கிறேன். அது மாத்திரம் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த கண்ணதாசன் அவர்களுடைய அன்னையார் இறந்துவிட்டதற்காக அனுதாபக் கடிதம் எழுதிய போலீஸ்காரர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர் அதனால் பாதிக்கப்பட்டார்.





ஒரு அரசியல் க்ட்சியிலிருந்த உறுப்பினர் ஒருவருடைய தாயார் இறந்ததற்காக ஒரு சர்க்கார் சிப்பந்தி அனுதாபக் கடிதம் எழுதினார் என்பதற்காக எத்தகைய ஒரு நடவடிக்கையை எடுத்துக் கொண்டார்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால் இன்றைய தினம் நடந்திருக்கிற தவறை எண்ணிப் பாருங்கள். அதன் தொடர்பாக இன்னொரு குற்றச் சாட்டையும் சொல்ல விரும்புகிறேன். அருமைத் தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய பிறந்த நாள் விழா சென்னை நகரிலும் மற்ற இடங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. தமிழகத்தில் பிறந்த தமிழன் ஒருவனுடைய பிறந்தநாள் விழாவை அகில இந்தியாவிலும் கொண்டாடப்படுவது பற்றி நாங்களும் பெருமைப் படுகிறோம், வாழ்த்துகிறோம். அந்த வகையில்தான், அவருடைய பிறந்த தின விழாவின்போது நாங்கள் எங்களுடைய பத்திரிகையில் வாழ்த்துச் செய்தி பிரசுரித்தோம். அவருக்கும் அனுப்பியிருந்தோம். எங்கள் அண்ணாவும் அவரை வாழ்த்திப் பேசினார். காமராஜ் வேண்டுமானால் அண்ணா அவர்களின் பிறந்த தின விழாவிற்கு வாழ்த்து அனுப்பாது இருந்திருக்கலாம். அவர்கள் கட்சியிலே அண்ணா பிறந்த நாள் விழாவைக் கேலி பேசும் பண்பாளர்கள் இருந்திருக்கக் கூடும். ஆனால் நல்ல பண்பாளர்கள் பாசறையில் வளர்ந்திருக்கக் கூடிய நாங்கள் இன்றைய தினம் காமராஜர் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடியதைக் குறைகூற முன் வரவில்லை. ஆனால் அந்தப் பிறந்தநாள் விழா ஒரு கட்சித் தலைவருக்கு நடத்துகின்ற விழாவாக இருந்ததா? சர்க்கார் நடத்துகின்ற விழாவாக நடைபெற்றதா? என்றுதான் ஆராயவேண்டும். அது சர்க்கார் திருவிழாவாகத்தான் நடைபெற்றது. ஜனநாயக சோஷலிச வாரம் என்ற முறையில் நடைபெற்றது. பட முதலாளிகளும், சினிமா அதிபர்களும், மில் ஓனர்களும் அங்கங்கே பல லட்சம் செலவில் சென்னை நகரில் வளைவுகள் போட்டார்கள். 'ஜனநாயக சோஷலிசம் என்று சொல்கிறீர்கள். ஜனநாயக சோஷலிசம் என்றால் நாங்கள் போட்ட வளைவுகளுக்குள்ளே சற்று குனிந்து செல்லுங்கள்' என்று திரு. காமராஜரைப் பார்த்துச் சொன்னார்கள். அது பற்றி நான் கவலைப்படவில்லை! ஆனால் நடந்தது என்ன? அந்த விழாவுக்கு ஆயிரக்கணக்கான கொடிகள் பறக்கவிடப்பட்டன. அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் பறக்கவிடப் பட்ட கொடிகளை எங்கள் கட்சியிலுள்ள அன்றாடம் காய்ச்சிகள் மூங்கில் மரங்களில் பறக்கவிடுவது போல பறக்க விட்டார்களா? ஒவ்வொரு கொடியும் 20 அடி உயரமுள்ள ஒரு பைப்பிலே பறக்க விடப்பட்டது. ஒரே மாதிரியாக 20 அடி உயரமுள்ள இரும்பு பைப்புகள், ஒரு அடி 2 ரூபாய் விலையுள்ள பைப்புகள் 980, அதாவது ஏறத்தாழ 30,000 ரூபாய் மதிப்புள்ள பைப்புகள் தருவிக்கப் பட்டிருந்தன. அந்தப் பைப்புகள் எங்கிருந்து வந்தன? அந்த மாதிரி பைப்புகள் சர்க்காரிடம் 80 லட்சம் ரூபாய் கண்டிராக்ட் கேட்டுக்கொண்டிருந்த ஒரு கம்பெனியாருடையது என அறிகிறேன். அது ஊர்ஜிதமான செய்திதானா? அல்லது வேறு ஒரு செய்தியும் காதில் விழுந்தது. அத்தனை பைப்புகளும் சர்க்காருடைய மராமத்து இலாகா

விலிருந்து வரவழைக்கப்பட்டது என்று சொல்லப்பட்டது. இந்த 30,000 ரூபாய் மதிப்புள்ள பைப்புகளும் அரசாங்க இலாகாவிலிருந்து தருவிக்கப்பட்டதுதானா? இந்த பைப்புகள் எங்கிருந்து வந்தன? மாயாபஜாரில் வருவது போல் வந்து மறைந்துவிட்ட இந்தப் பைப்புகளின் வரலாறு என்ன? அதுமட்டுமல்ல, ஊர்வலத்திற்கு மீன் இலாகா ஜீப் கார் எம்.எஸ்.வி. 6907 பயன் படுத்தப்பட்டது. டெல்லி பட்டின குடியரசு தின விழாவிலே எத்தகைய ஒரு அலங்காரத்தோடு அது வெளியே விடப்பட்டதோ அதே அலங்காரம் கலையாமல் இங்கே ஒரு கட்சித் தலைவருடைய பிறந்த தின விழாவிலே அலங்காரமாக பவனிவருவதற்குப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்றால் என்ன பொருள்? முதல் நாளே அமைச்சர் பூவராகன் அவர்கள் அந்த எம். எஸ். வி. 6907 நம்பருடைய அரசாங்க ஜீப் காரின் அலங்காரத்தைப் பார்வையிட்டிருக்கிறார்கள். அது மறு தினம் சுற்றுலா விடப்பட்டுள்ளது. அன்றைய தினம் கடற்கரையிலே பொதுக்கூட்டத்திற்காக அமைக்கப்பட்ட கூட்ட மேடை லிப்ட் பொதுப்பணித் துறை இலாகாவிலிருந்து எடுத்துவரப் பட்ட லிப்டாகும். இன்னும், பொதுப்பணித்துறை டிராக்டர்கள் அலங்கரிக்கப்பட்டு பிறந்த தின விழாவின் போது ஊர்வலமாக விடப்பட்டிருக்கின்றன. இதோ அந்த டிராக்டர்களின் புகைப்படங்கள். இதைவிட இந்தச் சர்க்காரின் மீது நம்பிக்கையில்லை என்று தீர்மானம் கொண்டு வருவதற்கு ஆதாரம் வேண்டுமா? இதற்கு சரியான பதிலை அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

திரு. பழனி அவர்கள், 45 கோடி மக்களின் தலைவர் காமராஜ் என்று சொன்னார். நான் பெருமைப் படுகிறேன், பாராட்டுகிறேன். அத்தகைய மாபெரும் தலைவர் ஒருவருடைய விழா பொது மக்கள் அனைவராலும் பெருமையோடும் பூரிப்போடும் கொண்டாடப்பட வேண்டியிருக்க அதை ஒரு அரசாங்க விழாவாக்கி அந்த விழாவிற்கே ஊனம் உண்டாக்கி விட்டீர்களே, அவருடைய விழாவிற்கே ஒரு களங்கத்தை உண்டு பண்ணி விட்டீர்களே என்று காமராசர் சார்பில் குற்றம் சாட்ட விரும்புகிறேன். ஆகவே, இன்றைய தினம் காங்கிரஸ் கமிட்டி நாட்டை ஆளுகிறதா? காங்கிரஸ் சர்க்கார் நாட்டை ஆளுகிறதா? என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது. தவறு செய்தவர்களும், கொள்ளை லாபம் அடிக்கிறவர்களும், கள்ளக் கணக்கு எழுதுகிறவர்களும், பலர் காங்கிரஸ்காரர்கள் என்பதாலும் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்திற்கு பயன் படுகிறவர்கள் என்கிற காரணத்தினாலும் சரியான நடவடிக்கை இந்த அரசாங்கத்தின் மூலம் எடுக்கப்படவில்லை என்கிற குற்றச்சாட்டை சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய பாதுகாப்புக்குள்தான் இந்த அரசாங்கம் இன்றைய தினம் வாழ முடிகிறது, வாழுகிறது என்றும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அருமை நண்பர் திரு. வீரபாகு அவர்கள் கேட்டார்கள், ஊழல்களைப் பற்றி பட்டியல் தருகிறீர்களே, அவற்றிற்கு ஆதாரம் காட்டுங்கள் என்று அவருடைய பொருக்



கேற்ப வீரத்தோடு கேட்டார்கள். நான் மரியாதையோடு ஏற்றுக் கொள்கிறேன். முதல் நாள் பேசிய புலவர் கோவிந்தன் அவர்கள், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவு மத்திய பாங்கு தலைவரைப் பற்றிய குற்றங்களை குறிப்பிட்டார்கள். அந்த மாவட்டத்திலே அவர் ஒரு பெரும் காங்கிரஸ் தலைவர். இந்த சபையில் உதவி சபாநாயகராக வீற்றிருந்தவர். கூட்டுறவு மத்திய பாங்கு தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறவர். அவரைப் பற்றிய குற்றச் சாட்டுகளை ஆதாரங்களோடு அவர் கைப்பட எழுதிய கடிதத்தோடு திரு. கோவிந்தன் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். அதன் தொடர்பாக இரண்டொரு ஆதாரத்தைச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தேவைப் படும் பொருள்களை, கூட்டுறவு நிறுவனங்கள் மூலமே வாங்க வேண்டுமென்று கூட்டுறவு பதிவாளர் உத்திரவு இருந்தும்---அவர் தன் மைத்துனர் வாசுதேவன் மீது ஏஜெண்ட் எடுத்து "சாம்ராஜ் ஆயில் மில்ஸ்" என்ற பிண்ணாக்கு கம்பெனியிலிருந்து 10 லட்சத்திற்குப் பிண்ணாக்கு வாங்கி 1 லட்சம் லாபம் பெற்றிருக்கிறார், என்ற குற்றச் சாட்டைச் சுமத்த விரும்புகிறேன்.

அரக்கோணம் வட்டம், சித்தேரி கூட்டுறவு சொசைட்டியில் 1963 ஜூன் மாதம் குறுகிய கால நீண்ட கால கடன் 36,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி வழங்கிய கடனில் ரிசர்வ் பாங்க் கண்டுபிடித்ததில் 1957-இல் செத்தவர்களும் கடன் பெற்றிருக்கின்றனர். செக்ரடரி பழனி தலைவர் வீட்டில் பதுங்கியிருக்கிறார். அதே தலைவருடைய மற்றொரு சொந்தக்காரர் ஆதிகேசவலு நாயுடு என்பவருக்கு கொடுக்க சொசைட்டியில் 8,000-ம் செய்யார் வட்டம் கூட்டுறவு மானேஜிங் சொசைட்டியில் 12,000-ம் கடனை தானியத்தின் மீது தரப்பட்டது. தானியக்கிடங்கை உடைத்தால் தானியமில்லை. கதவு இருந்தது, பூட்டு இருந்தது, அறை இருந்தது, தானியமில்லை. இல்லாத தானியத்தை உள்ளே இருப்பதாக வைத்துக் கடன் கொடுக்கப்பட்டது என்று கண்டு பிடிக்கப்பட்டது. அவர் மேல் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அது விசாரணைக்கு வந்தபோது ஸ்டேட்மெண்ட் தரப்பட்டது. அந்த ஸ்டேட்மெண்டில் தலைவர் சொன்னார். 'நான் கார் வாங்க அந்தப் பத்தாயிரத்தை எடுக்கச் சொன்னேன்! பிறகு கார் வாங்குகிற தீர்மானத்தைக் கை விட்டு விட்டேன்' என்று. அந்த சொசைட்டியின் செயலாளர் சொன்னார். 'ஜவுளிக் கடை வைக்க வேண்டுமென்று பத்தாயிரம் எடுக்கச் சொன்னார்; பிறகு வைக்க வேண்டாமென்று திருப்பிப் போட்டு விட்டோம்' என்று. கார் வாங்கப் பணம் எடுத்தது உண்மையா; அல்லது ஜவுளிக் கடை வைக்கப் பணம் எடுத்தது உண்மையா அல்லது காங்கிரஸ்காரர் என்பதற்காக அவர் மேல் இதுவரை நடவடிக்கை எடுக்காமல் இருப்பது உண்மையா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இது மாத்திரமல்ல; நண்பர் ஏ. எல். சி.

கிருஷ்ணசாமி அவர்கள் துண்டு வெளியீடுகள் வெளியிட்டு கனம் அமைச்சர் ராமையா அவர்கள் அங்கு சென்றிருந்தபோது அவற்றை அவரிடமும் கொடுத்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கொடுத்தார். ஆனால் குற்றவாளி கைது செய்யப்படவில்லை; ஆனால் குற்றங்களைச் சுட்டிக்காட்டிய பரிதாபத்துக்குரிய நண்பர் கிருஷ்ணசாமி அவர்கள் கைது செய்யப்பட்டு பிறகு ஜாமீனில் வெளியே வந்தார்கள். இது நிலைமை. அரசாங்கத்திற்கு வேண்டியவர்கள் தவறு செய்தால் ஏன் மன்னிக்கப் படுகிறார்கள் ?

மெட்ராஸ் பப்ளிக் சர்விஸ் கமிஷனில் லஞ்ச ஊழல் தாண்டவமாடிற்று என்ற காரணத்திற்காக சேர்மன் கைது செய்யப் பட்டார் (ஹவுஸ் அரெஸ்ட்); செக்ரடரி கைது செய்யப்பட்டார்; சூப்பரின்டென்டெண்டு கைது செய்யப்பட்டார். அவர்கள் கைது செய்யப்பட்டார்களே தவிர, இதுவரை அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்படவில்லை. காரணம் கேட்டால்—ஊர் பேசுகிறது . . .

**கனம் உதவி சபாநாயகர்:** 'ஊர் பேசுகிறது' என்றெல்லாம் கனம் அங்கத்தினர் பேசவேண்டாம்.

**திரு. மு. கருணாநிதி:** 'எங்கள் மீது வழக்குத் தொடரப் பட்டால் நாங்கள் சில அமைச்சர்களைக்கூட இதிலே காட்டிக் கொடுப்போம்' என்று அந்த குற்றவாளிகள் மிரட்டியதாக வதந்திகள் உலவுகின்றன. அமைச்சர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள் என்ற களங்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காகவாவது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா; அந்த வழக்கு பதிவு செய்யப்பட வேண்டாமா என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சொந்தக்காரர் விஷயம், வேண்டியவர் விஷயங்கள் கூட்டுறவுச் சங்கங்களோடு, சர்விஸ் கமிஷனோடு போய்விட்டதா என்றால் இல்லை. அதையும் கடந்து அமைச்சர்கள் நிலையில் வந்திருப்பதற்கான ஆதாரங்களையும் இந்த மன்றத்தில் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுத் துறை, தனியார் துறை இரண்டையும் இந்தச் சர்க்கார் தங்களுடைய பொருளாதாரத் துறையிலே இலக்கணமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். முதலாளிகளிடமே ஏன் எல்லாவற்றையும் கொடுக்கிறீர்கள் ; ஏன் அவற்றையெல்லாம் பொதுத் துறையிலே எடுத்துச் செய்யக் கூடாது என்று கேட்டால் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் 'நம்மிடத்தில் அவ்வளவு பணம் இல்லை; தனியார் துறையினர் முதலீடு செய்ய முந்திக் கொண்டு வருகிறார்கள் ; அதைப் பயன் படுத்தி நாம் அந்தத் தொழில்களை வளர்க்க வேண்டாமா ? என்று கேட்கிறார். அவர்களைப் பொறுத்தவரையில் வாதம் நியாயம். ஆனால் நடைமுறையில் அப்படி நடைபெறுகிறதா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஈரோட்டின் அருகில்



இருக்கும் பள்ளிப்பாளையத்தில் சேஷசாயி பேப்பர் மில் என்ற மில் ஒன்று துவக்கப்பட்டது. அதன் முதலீடு ஆறு கோடி ரூபாய். அந்த மில்லுக்குத் தேவையான ஆறு கோடி ரூபாயில் அதன் டைரக்டர்களாக இருப்பவர்கள், தனியார் துறையினர் தருவதாக வாக்களித்திருப்பது 20 அல்லது 25 லட்சம். ஆனால் பொதுப் பணத்திலிருந்து ஸ்டேட் கவர்ன்மெண்டு, இண்டஸ்ட்ரியல் கார்ப்போரேஷன் இவைகளின் மூலமாகக் கொடுக்கப்படுகிற பணம் ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும். தனியார் துறை போடுகின்ற பணம் 25 லட்சம்; பொதுப் பணத்திலிருந்து இண்டஸ்டிரியல் கார்ப்பொரேஷன், ஸ்டேட் கவர்ன்மென்ட் தருகிற பணம் ஐந்து கோடிக்கு மேல். 90 சதவிகிதம் பொதுப் பணத்திற்கு வழிகோலி விட்டு, பிறகு தனியார் துறைக்குத் தருவானேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அது பற்றிய உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு ஒரு கோடி ரூபாய் மெட்ராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் கொடுத்திருக்கிறது; மூன்று கோடி ரூபாயை வொர்ல்டு பாங்கு மூலமாக வாங்கியிருக்கிறார்கள். ப்ரைவேட் எண்டர்ப்ரைசுக்குத்தான் வொர்ல்டு பாங்கியிலிருந்து கடன் கொடுப்பார்கள். நம்முடைய ராஜ்யத்தில் 70 டன் காகிதத் தொழிற்சாலை வரவேண்டும் என்பதற்காக எம்.ஐ.சி. மூலமாகப் பணம் கொடுத்திருக்கிறோம்.

**திரு. மு. கருணாநிதி:** நான் ஆரம்பத்தில் இவ்வளவுதான் என்று திட்டவட்டமாகச் சொல்லவில்லை. 20 அல்லது 25 லட்சம் அவர்கள் போட்டிருக்கக் கூடும் என்று சொன்னேன். அதேபோல் ஐந்து கோடி ரூபாய் பொதுப் பணத்திலிருந்து இருக்கக் கூடும் என்று சொன்னேன். எனக்குச் சரியான புள்ளி விவரம் தெரியாத காரணத்தால் அவ்வாறு சொன்னேன். ஆரம்பத்திலேயே உலக பாங்கிலிருந்து வாங்குகிற கடனை தனியார் துறைக்கு என்று வாங்காமல் பொதுத் துறைக்கு என்று சொல்லி வாங்கி ஏன் இந்த அரசு நடத்த முன் வந்திருக்கக் கூடாது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அவர்களுடைய பாலிசி அப்படி. வொர்ல்டு பாங்கு கவர்ன்மெண்டுக்குப் பணம் கொடுக்க மாட்டார்கள். கவர்ன்மெண்டுக்கு கவர்ன்மெண்டு லோன் கொடுக்கிறார்கள். வொர்ல்டு பாங்கு ப்ரைவேட் எண்டர்பிரைசுக்குத்தான் கடன் கொடுக்கிறார்கள்.

**திரு. மு. கருணாநிதி:** நமது பொதுத் துறையை பற்றி அவர்கள் அவ்வாறு கருதுகிறார்கள் போலும். அடுத்து, சேலம் மாக்னசைட் ஏறத்தாழ 99 வருஷ காலம் வெள்ளைக்காரனிடத்திலே குத்தகைக்கு இருந்தது. அது நல்ல லாபகரமான தொழில். குத்தகை காலம் முடிந்ததும் அதை ஒப்படைக்கிற நேரத்தில் அந்தத் தொழிலைப் பொதுத் துறையில் சர்க்காரே ஏற்று நடத்தி இருக்கலாம். அதற்குப் பதிலாக கல்கத்தா பர்ன் அண்டு கம்பெனிக்கு

தனியார் துறைக்கு சேலம் மாக்னசைட்டை நடத்துகிற உரிமை—கட்டிடங்கள், மெஷினரிகள் உட்பட மூன்று கோடி ரூபாய் விலைக்கு விற்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் சர்க்கார் ஆண்டு தோறும் அடைய வேண்டிய லாபத்தை இழந்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

கூட்டுறவு ஸ்பின்னிங் மில்கள் ஏறத்தாழ 10 மாவட்டங்களில் இருக்குமென்று வைத்துக் கொண்டால் ஒரு ஸ்பின்னிங் மில்லுக்கு போட வேண்டிய மூலதனம் 50 லட்சம் ரூபாய். எல்லா ஸ்பின்னிங் மில்களுக்கும் தேவையான அளவுக்கு மெஷினரிகள் வாங்க கிட்டத்தட்ட மூன்று கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய முதலீடு செய்யப்பட்டிருக்கிற ஸ்பின்னிங் மில்களுக்குத் தொடர்பு கொண்டிருக்க வேண்டிய இலாகா அதிகாரிகள் ஒன்று டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரிஸ் ஆக இருக்கவேண்டும் அல்லது கூட்டுறவு ரிஜிஸ்ட்ராராக இருக்கவேண்டும். ஆனால் இந்தத் தொடர்பு இன்று டைரக்டர் ஆப் ரிஜிஸ்ட்ராரிடமும் இல்லை; கூட்டுறவு ரிஜிஸ்ட்ராரிடத்திலும் இல்லை; இந்தத் தொடர்பு டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ் என்ற பதவியோடு ஒட்ட வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு காரணம் அதன் தலைவர் மகாதேவன், ஐ.ஏ.எஸ். அவர்கள் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்களுக்கு மிக வேண்டியவர் என்று சொல்லப்படுகிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : I expect the hon. the Deputy Leader of the Opposition to make statements with a full sense of responsibility. Does he impute improper motive?

திரு. மு. கருணாநிதி: அது இணைக்கப்பட வேண்டியது டைரக்டர் ஆப் இன்டஸ்ட்ரீஸ் அல்லது கூட்டுறவுப் பதிவாளர் . .

THE HON. SRI R. VENKATARAMAN : I want a very definite answer. The Director of Handlooms is the ex-officio Registrar of Co-operative Societies, perhaps the hon. Member may not know it. But if he imputes any motive against me or the officer (Mahadevan) he must be able to prove it. Otherwise, it is improper. The hon. Deputy Leader of the Opposition should be prepared to substantiate his statement immediately. I do not want any vacillation on this point.

கனம் உதவி சபாநாயகர்: கனம் அங்கத்தினர் தெளிவாகச் சொல்லி விட வேண்டும்.

திரு. மு. கருணாநிதி : மூன்று கோடி ரூபாய் மெஷினரியில், உள்நாட்டில் வாங்கியது போக வெளி நாட்டில் வாங்க ஜப்பான் நாட்டுக்குச் சென்றார்கள். மெஷினரி வாங்கச் செல்கின்ற நேரத்தில். .

THE HON. SRI R. VENKATARAMAN : I want a very definite answer.

கனம் உதவி சபாநாயகர்: கனம் அங்கத்தினர் அவரது குற்றச்சாட்டைப் பற்றித் தெளிவாக எடுத்துக் கூறவேண்டும்.





திரு. மு. கருணாநிதி : நான், டைரக்டர் ஆப் இன்டஸ்ரிஸ் அல்லது கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் அவர்களும் ஸ்ப்பின்னிங் மில்களுடன் தொடர்பு இருக்க வேண்டியிருக்க, டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ்—இடம் அந்தத் தொடர்பை ஏற்படுத்த என்ன காரணம் என்ற கேள்வியைத்தான் எழுப்பினேன். மகாதேவன் அவர்கள் . . . :

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தக் கேள்வி தவறு என்று சொன்னேன். Mr. Deputy Speaker Sir, I want a straight answer to my oejection. I do not want any vacillation on this இப்போது, மகாதேவன் எனக்கு வேண்டியவர் என்று சொன்னது . . . (திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி, மற்றும் சில தி.மு.க. உறுப்பினர்கள் குறுக்கீடு) கருணாநிதியை விட நீங்கள் எல்லாம் கெட்டிக்காரர்கள் அல்ல. அவருக்கு என்ன பேசுகிறோம், என்ன பதில் சொல்ல வேண்டும் என்பது நன்றாகத் தெரியும். அவரைத்தான் நான் கேட்கிறேன். 'வேண்டியவர்' என்று சொன்னதிலே 'இம்ப்ராப்பர் மோட்டிவ்' இல்லையா என்று கேட்கிறேன். The Hon. Member Sri M. Karunanidhi, will take care of himself.

திரு. மு. கருணாநிதி: வேண்டியவர் என்ற காரணம் கற்பிக்கப்பட்டு அது அமைச்சர் அவர்களுக்குக் களங்கத்தைக் கொண்டு வந்து சேர்க்குமே என்ற காரணத்தால் ஏன் அந்தப் பொறுப்பு மாற்றப்பட்டது என்று கேட்டேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : It goes further. I want to know whether the hon. Member, Sri Karunanithi, honestly, sincerely and personally thinks that there is something improper . . .

திரு. மு. கருணாநிதி: அவர் இருப்பதால் வேண்டியவர் என்று கருதினேன். அவர் வேண்டியவர் அல்ல என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களேயானால் நான் நன்றியோடு ஏற்றுக் கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : This is not proper.

திரு. மு. கருணாநிதி : வேறு உள்நோக்கத்தோடு சொல்லவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்று கோடி ரூபாய்க்கு மெஷினரி வாங்குவதிலே உள்நாட்டிலே வாங்கியது போக மிச்சத்தை ஜப்பான் நாட்டிலே வாங்க வேண்டும். . . .

(There was noise in the House.)

MR. DEPUTY SPEAKER : When an hon. Member is speaking, other hon. Members should keep silence.

**திரு. மு. கருணாநிதி:** அப்படி ஜப்பான் நாட்டிலே சென்று வாங்குவதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசரை அனுப்பியதற்குப் பதிலாக அவருடன் ஒரு எஞ்சினியரை அனுப்பி இருக்கலாம்.

11-00 a.m. அப்படிப்பட்ட ஒரு அதிகாரி எதற்காக அனுப்பப்படவேண்டும் என்கின்ற சந்தேகத்தை எழுப்புகின்ற பிரச்னையாக அது அமைகின்ற காரணத்தினால் இதைப்பற்றி அமைச்சர்கள் சரியாக நடந்து கொள்ள தவறியிருக்கிறார்கள் என்பதைத் தான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மெஷினறிகள் வாங்குகின்ற நேரத்தில் கிடைக்க வேண்டிய 'உள் கமிஷன்' இந்த ஸ்ப்பின்னிங் மில்களுக்கு சேர்ந்திருக்கிறதா என்பது தெரியவில்லை.

MR. DEPUTY SPEAKER: If the hon. Member is making a definite allegation, he should make bold to say that it is so. Otherwise, he need not go into details.

**திரு. மு. கருணாநிதி:** தனியார்களுக்கு கொடுக்கப்படுகின்ற ஸ்பின்னிங் மில்களுக்கான லைசன்ஸ் 13 பேருக்குத் தரப்பட்டிருக்கின்றன. இவ்வாறு கொடுக்கப்பட்ட 13 லைசன்ஸ்களும் காங்கிரஸ்காரர்களுக்கே கொடுக்கப்படுகிறது என்கின்ற குற்றச்சாட்டை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

மூன்று கோடி ரூபாய் மூலதனம் போடவேண்டிய ஒரு டயர் உற்பத்தி தொழிற்சாலைக்கான லைசன்ஸ் ஒருவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கான லைசன்ஸ் வாங்கியவர் இதற்கான மூலதனத்தை போட முடியாமல் இன்றைக்கு பலரிடம் மூலதனத்திற்காக அலைந்து கொண்டிருக்கிறார். தனியார் துறை என்ன வாழ்கிறது? தனியார் துறையில் தான் பெருமளவில் மூலதனம் போடக்கூடியவர்கள் இருக்கிறார்கள். ஆகவே பல பெரிய தொழில்களை அவர்களிடம் ஒப்படைக்கிறோம் என்று சர்க்கார் சொல்லுகிறது. ஆனால் இப்படிப்பட்ட ஒரு தனியாரிடம் லைசன்ஸ் கொடுத்து ஒன்றரை வருடம் ஆகிறது. தனக்கு முதலீடு செய்ய முடியாமல் இன்றைக்கு பல பாகங்களிலும் அலைந்து கொண்டிருக்கிறார். இவருடைய பெயர் நாராயண அய்யர் என்பது. இவர் தான் மூலதனம் போட முடியாமல் இன்றைக்கு அலைந்து கொண்டிருக்கிறார். தனியார் துறையில்தான் மூலதனம் போடக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள் இருக்கிறார்கள். ஆகவேதான் அவர்களிடம் பெரும் தொழில்களை எல்லாம் ஒப்படைக்கிறோம், சர்க்காரே எல்லாவற்றுக்கும் பணம் போடுவதென்றால் முடியக்கூடிய காரியமா என்று நமக்கு சர்க்கார் எடுத்துக் கூறுகின்றார்கள். இப்போது சர்க்கார் என்ன சொல்லுகிறது? இதில் சர்க்காருடைய பொருளாதாரக் கொள்கை சேதப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை சர்க்கார் ஆராய வேண்டும்.

மற்றொன்று, சென்னையில் சாக்கடைத்திட்டம் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக ஐந்தாவது வட்டார (5-வது லேடன்) சாக்கடைத் திட்டம் ஒன்றை அரசினர் அங்கீகாரம் செய்து





மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. அரசாங்கம் இதற்கான நிதியையும் மாநகராட்சிக்கும் வழங்கியிருக்கிறது. அது மட்டுமல்ல, பல லட்சக்கணக்கான ரூபாய் செலவில் சாக்கடைத்திட்டம் போடுவதற்காக பைப்களும் வாங்கி தரையில் போடப்பட்டிருக்கின்றன. இந்தச் சாக்கடைத்திட்டம் திருவான்மியூர் பக்கத்தில் நீலங்கரை கிராமத்தில் இருக்கின்ற சுமார் 400 ஏக்கர் நிலத்தில் நிறைவேற்ற வேண்டிய திட்டம். இந்த நிலத்தில் சாக்கடைத் தண்ணீரை சுத்தம் செய்து, பின்னால் அதை பக்கிம்காம் கால்வாயில் இணைக்க வேண்டும் என்பது தான் திட்டம். இந்த 400 ஏக்கர் நிலத்திற்குள் சாக்கடையை சுத்தப்படுத்தவேண்டும். இதை மதிப்பிற்குரிய அமைச்சர் மஜீத் அவர்களும், மதிப்பிற்குரிய ஜோதி அம்மையார் அவர்களும் போய் அங்கீகாரத்திற்காக பார்வையிட்டதாகவும் கேள்விப்பட்டேன். அப்படிப்பட்ட இடம் கடந்த மூன்று ஆண்டு காலமாக கார்ப்பரேஷனுக்கு கிடைக்காத காரணத்தால் இந்த ஐந்தாவது வட்டார சாக்கடைத் திட்டம் நிறைவேற முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறது. இந்த 400 ஏக்கர் நிலத்திற்கு 'ஆர்.வி. அவின்யூ' என்று பெயர்பொறிக்கப்பட்டிருக்கிறது. இது அமைச்சர் ஆர். வெங்கட்டராமன் அவர்களுடைய நிலம் என்று சொல்லப்படுகிறது! என்றால் இதுபற்றி அறுதியிட்டுக் கூற இயலாவிட்டாலும், ஏன் 'ஆர். வி. அவன்யூ' என்று போடப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்ளமுடியவில்லை. அமைச்சர் அவர்களுடைய பெயரிடப்பட்டிருப்பதால் இத்திட்டம் நிறைவேறாமல் தாமதப்படுகிறதா என்கின்ற சந்தேகம் பலருக்கு ஏற்படுகிறது. இந்த நிலையில் கார்ப்பரேஷன் நாறுகிறது என்று சொல்கிறார்கள், இப்போது எது நாறுகிறது? கார்ப்பரேஷனா அல்லது சர்க்காரா, உண்மையில் சர்க்கார் தான் நாறுகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நாற்றத்தை தொடர்ந்து இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். பல நல்ல அதிகாரிகள் கண்டுபிடித்த கள்ளக்கணக்குகளை எல்லாம் வைத்திருக்கின்ற வியாபாரிகளுக்கு அரசினர் பாதுகாப்பு வேலி அமைக்கின்ற வகையில் இன்னும் இரண்டு மாத தவணை கொடுக்கிறார்கள். இப்படி இரண்டு மாத தவணைக் கொடுத்திருந்தால் எங்கே அவர்கள் இனி கள்ளக் கணக்கை சரி செய்யாமல் வைத்திருக்கப் போகிறார்கள்? 'இன்று போய் நாளைவா' என்று ராமாயணத்தில் ராமன் ராவணனிடத்தில் கூறியதாக பார்த்தோம். ராமாயணம், பௌராணிகர்களால் எழுதப்பட்டபோதிலும், ராவணன் நேர்மையாக இருந்ததன் காரணமாக அதே போன்று நடந்து கொண்டான். நேர்மையற்றவனாக இருந்திருந்தால், அன்று இரவே சீதையையும் அசோகவனத்திலிருந்து எடுத்துக்கொண்டு வேறு எங்காவது ஓடிப் போயிருப்பான், ராவணன் நேர்மையாக இருந்ததால் சீதைக்கும் பாதுகாப்பு கொடுத்து, அடுத்த நாள் போருக்கு வந்தான், உயிர் விட்டான். அந்தக் கதை வேறு விஷயம். ஆனால் இந்த ராவணன்கள் 'இன்று போய் நாளை வா' என்பதை வைத்துக்கொண்டு கள்ளக் கணக்கு எனும் சீதையையும் தூக்கிக்கொண்டு இரவோடு இரவாக

மறைந்து விடுவார்கள் என்பதை இந்த அரசுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். இப்பேர்ப்பட்டவர்களுக்கு அரசாங்கம் பாது காப்புக் கொடுக்க முற்படலாமா என்பதை கேட்க விரும்பு கிறேன்.

வேண்டியவர்களுக்கு கொடுக்கப்படும் சலுகைகள் பற்றி இது வரை சொன்னேன், வேண்டாதவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் என்ன என்பதைப் பற்றியும் சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன். மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களுடைய தேர்தல் வழக்கு நடக்கும்போது முதலமைச்சர் அவர்களுக்கு எதிராக சாட்சியம் சொன்னார்கள் என்ற காரணத்திற்காக ஆவடி போலீசார் சிலரின் மீது எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை கூறு கிறேன். இவைகளை எல்லாம் முதலமைச்சர் அவர்கள் நேரடி யாகச் செய்தார் என்று நான் குறிப்பிட மாட்டேன். இவ்விதம் செய்தால் முதலமைச்சர் அவர்கள் திருப்தியடைவார்கள் என்ற நோக்கத்தோடு சிலர் செய்திருக்கலாம். அவர்கள் அவ்விதம் கருத முதலமைச்சர் அவர்கள் காரணமாக இருந்திருப்பார்களே யானால் அதுவும் முதலமைச்சர் அவர்களைச் சார்ந்த குற்றம் என்பதையே நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். ஆவடியில் திருமால் என்பவர், பி.ஸி. நம்பர் 560, 1-வது பட்டாலியனில் எஸ்.ஏ.பி.-யில் இருந்தவர், எம்.எஸ்.பி. 3-வது பட்டாலியனுக்கு மாற்றப்பட்டு நேபா பகுதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். அடுத்து, துரைசாமி, லான்ட்ஸ்நாயக் நம்பர் 819, எஸ்.ஏ.பி.-யில் இருந்தவர், எம்.எஸ்.பி. யில் 3-வது பட்டாலியனுக்கு மாற்றப்பட்டு நேபா பகுதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார், அடுத்து மதுரைப் பிள்ளை என்பவர், பி.ஸி. 739, எஸ்.ஏ.பி.-யில் 1-வது பட்டாலியனிலிருந்து எஸ்.ஏ.பி.க்கு 2-வது பட்டாலியனுக்கு மாற்றப்பட்டு ஒரிசாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். இவ் விதமான கொடுமைகள் செய்யப்பட்டிருக்கின்றன. நேர்மாறாக முதலமைச்சர் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் சொன்னவர் களில் 49 பேர்களில் 20 பேர்களுக்கு லான்ட்ஸ் நாயக், நாயக், ஹவில்தார் இவ்விதமாக பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. இதை முதலமைச்சர் அவர்களே நேரடியாக செய்தார் என்று கூறவில்லை. முதலமைச்சர் அவர்கள் திருப்தி அடைவார் என்ற காரணத்திற்காக யாராவது செய்திருப்பார்களேயானால் அதற்கு காரணமாயிருந்தது முதலமைச்சர் அவர்களுடைய குற்றமா இல்லையா என்பதை கேட்க விரும்புகிறேன். இவ்வளவும் செய்து விட்டு, நேர்மையான நிர்வாகம் நடக்கிறது என்றால் எப்படி அதை ஒப்புக்கொள்ள முடியும்?

இன்னும், இதே சட்டமன்றத்தில் மொழிப் பிரச்னையைப்பற்றி பல நேரங்களில் விவாதித்திருக்கிறோம். தமிழ் மொழியை அழிக் கின்ற வகையில் இந்தி மொழி புகுத்தப்படுகிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. முன்பு இதைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில் இந்தி என்பது நமக்கு கள்ளிப்பால் போன்றிருக்கிறது என்று நான் சொன்ன போது, பதில் அளித்த நமது முதலமைச்சர் அவர்கள் இந்திமொழி 'கள்ளிப்பால்' அல்ல 'கழுதைப்பால்'





என்று குறிப்பிட்டார்கள். இதே முதலமைச்சர் அவர்கள் ரஷ்யா வுக்குச் சென்றிருந்தபோது, அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தொன்றில் ஒட்டகப்பால் வழங்கப்பட்டது என்றும், உடம்புக்கு ஒட்டகப்பால் மிகவும் நல்லது என்ற போதிலும், அது எனக்கு பிடிக்கவில்லை என்று உபயோகிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் ஒரு விருந்தில் சொன்னார்கள். அவ்விதம் உடம்புக்கு நல்லதாக இருந்த ஒட்டகப்பால் பிடிக்காத நேரத்தில், இந்த கழுதைப்பால் மட்டும் எப்படிப் பிடித்தது என்பது தெரிய வில்லை. மொழிப் பிரச்னைக்காக தமிழர்களுடைய உயிர் பறிக்கப் படுகிறது. தமிழர்கள் எல்லாம் கொடிய அடக்கு முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அரசியல் கட்சிக்காரர்களை எல்லாம் விலங்கிட்டு சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்லப்படுகிறார்கள். இது அடக்குமுறை அல்லவா? இது கொடுமை அல்லவா? தமிழ் பாட மொழியாக இருக்கவேண்டும் என்று போராடுகிற தமிழரசுக் கழகம் அடக்குமுறைக்கு ஆளாகிறது. அது கொடுமை அல்லவா? மொழிப் பிரச்னைக்கு அடுத்ததாக மற்றொரு பிரச்னையை இறுதி யாகக் குறிப்பிட்டுப் பேச விரும்புகிறேன் அதுதான் உணவு நிலைமை. அரிசி வாங்க க்யூ வரிசையில் இன்றைய தினம் ஆண் களும் பெண்களும் நிற்கிற கோரக் காட்சியை ஏற்படுத்தியதற்கு யார் காரணம்? பற்றாக்குறை என்கிறார்களா? இல்லை என்கிறார் கள். பதுக்கல் இருக்கிறதா? இல்லை என்கிறார்கள். சரியாக வினியோகிக்க முடியவில்லை என்கிறார்கள். இந்த நிலைமையில்தான் இன்றையதினம் பல தரப்பட்ட கருத்துக்கள் எடுத்துச் சொல்லப் படுகின்றன. இதற்காக எத்தனை பேர்கள் பலியிடப்பட்டார்கள். மக்கள் க்யூவில் நிற்பதைப்பற்றி அமைச்சர் பூவராகன் அவர்கள் பேசும்போது க்யூவில் நிற்பது நாட்டு முன்னேற்றத்தைக் குறிப்பிடுகிறது என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால் கோவை மாவட்டத்தில் பில்லூர் அணைக்கட்டில் மக்கள் புகுந்து கொள்ளை அடித்தார்கள் என்றால், அது மக்களுடைய சுதந்திர உணர்ச்சியைக் காட்டுகிறது என்று சொல்லக் கூடும். மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்களே என்று சொன்னால், அது போலீசாருடைய வீரத்தைக் காட்டுகிறது என்று சொல்லக் கூடும். ஆனால் இது எதையும் காட்டவில்லை, உங்களுக்கு வாக்களித்த மக்களுடைய இளிச்ச வாய்த்தனத்தைத் தான் காட்டுகிறது. உணவுப் போராட்டத்தில் ஈடுபட்ட அர்ச்சுனன் கொலை செய்யப் பட்டார். அர்ச்சுனன் என்று சொல்லும்போது நம்முடைய உணவு அமைச்சர் ஞாபகம் வருகிறது. அவருக்குக்கூட அருமைத் தம்பி ஒருவர் இருந்தார் அர்ச்சுனன் என்று. அதே கோவை மாவட்டத்தில்தான் இந்த அர்ச்சுனன் சுட்டுக் கொல்லப்பட்டார், அர்ச்சுனன் என்றால் அது என்ன சாதாரண ஜந்துவா? நாயா? நரியா? அவனும் இந்த நாட்டில் வாழப் பிறந்த பிரஜை அல்லவா? அவனுடைய மனைவி மஞ்சள் குங்குமம் இழக்க, மக்கள் கதறக் கதற, தற்காப்புக்காகச் சுட்டேன், ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கிக் கூட அல்ல, தொண்டைக்குழிக்கு நேராகச் சுட்டேன் என்று போலீஸ் அதிகாரி சொல்ல, பொது விசாரணை வேண்டு மென்று கேட்கிறோம் இந்த மன்றத்தில், ஆனால் அது மறுக்கப்

[திரு. மு. கருணாநிதி] [24th October 1964

பட்டிருக்கிறது. உணவுப் பஞ்சம், மொழிப் பிரச்னையில் பிடிவாதம், பல்வேறு நிர்வாக ஊழல்கள் இத்தனையும் சேர்ந்து இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்ற வாதத்தை வலுப்படுத்துகின்றது.

கடைசியாக ஒன்று. 1943–44-ம் ஆண்டில் ஏற்பட்ட பஞ்சத்தைப்பற்றி நேரு அவர்கள் அன்று குறிப்பிட்ட வாசகம்—டிஸ்கவரி ஆஃப் இண்டியா என்ற புத்தகத்தில் குறிப்பிட்ட வாசகம்—அதைப் படித்தால் அமைச்சர்கள் சொல்லுகிற எல்லா வாதங்களுக்கும் பதில் இருக்கின்றன. "இயற்கையில் கொடுமையோ வேறு நிலைமைகளோ இந்தப் பஞ்சத்திற்குக் காரணமல்ல. போர் நடவடிக்கைகளும் பகைவர் முற்றுகையும் காரணமல்ல. வரும்பொருள் உணர்ந்து முன் எச்சரிக்கையுடன் செயலாற்றியிருந்தால் இதைத் தடுத்திருக்கலாம். அதிகார வர்க்கத்தின் அலட்சியமும், ஆற்றல் அற்ற தன்மையும் அனைவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். கடைசி வினாடி வரை தெருக்களில் பிணங்கள் விழுந்த பின்னரும், பற்றாக்குறை, பஞ்சம், இவை இல்லவே இல்லை என்று அரசினர் சார்பில் மறுத்தனர். நெஞ்சுருக்கும் படங்களை ஸ்டேட்ஸ்மன் பத்திரிகை வெளியிட்டபோது அதை அரசினர் சார்பில் மறுத்த ஒரு பிரமுகர் 'நிலைமையை மிகைப்படுத்தி நாடகமாடுகின்ற துரோகத் தன்மையில் பத்திரிகைகள் இறங்கிவிட்டன' என்று வர்ணித்தார்—பத்திரிகைக்காரர்களைத் திட்டுகிற காங்கிரஸ்காரர்களுக்கு அப்போதே பதில் சொல்லியிருக்கிறார் பண்டிதர் நேரு. "பரவலான பஞ்சம் இருக்கிறது என்ற உண்மையை மறுக்க இயலாத நிலை வந்தபோது, மேல்மட்டத்தில் ஒருவரை ஒருவர் வெளிப்படையாக குற்றம் சாட்டிக் கொண்டனர்" இங்கேயும் அது நடந்திருக்கிறது. "எந்த ஜனநாயக நாடாக இருந்தாலும், இந்த நிலைமை அரசாங்கத்தையே தூக்கி எறிந்து சின்னாபின்னப்படுத்தியிருக்கும். இங்கே அனைத்துமே வழக்கப்படி நீடித்தன. ஆகவே, இந்த அரசாங்கமும் நீடித்தது" என்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் எழுதியிருக்கிறார்கள். நாங்கள் சொல்லுகிறோம் என்பதற்காக அல்ல—நேரு சொல்லியிருக்கிறார் என்பதற்காக—தயவு செய்து ராஜினாமா செய்துவிடுங்கள்.

இறுதியாக, இந்த அரசு, சொந்தக் கட்சி நலத்திற்காக நடைபெறுகிறது; கட்சிக்கும் சர்க்காருக்கும் வேறுபாடு தெரியவில்லை; அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது; உற்றார், உறவினர், நண்பர் இவர்களுக்குச் சலுகைகள் வழங்குகிறது; மர்மம் நிறைந்த சில லாபங்களுக்காகத் தனியார் துறையை வளர்த்துப் பொதுத் துறையை சவலைப் பிள்ளையாக்கி வைத்திருக்கிறது; ஆளும் கட்சியினர், அல்லது அதனை ஆதரிப்பவர்கள் நடத்தும் பணக் கையாடல், லஞ்சம் போன்ற ஊழல்களுக்குத் தக்க நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல, ரகசியப் பாதுகாப்பும் அளித்து வருகிறது; உணவு விஷயத்தில் நிலையான கொள்கை இல்லாத காரணத்தினாலும், எதிர் கட்சிகளின் யோசனைகளை ஏற்றுக் கொள்ளாத காரணத்தினாலும், ஒரு சர்வகட்சிக் குழுவின் மூலம்



24th October 1964] [டாக்டர் ப. நடராஜன்]

பிரச்னையைத் தீர்க்க முன் வராததாலும் உணவுப் பஞ்சத்தை உருவாக்கி விட்டிருக்கிறது; தமிழை ஆட்சி மொழியாக்கவும், பயிற்சி மொழியாக்கவும் அளித்த உறுதிமொழிகளைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டது; ஆகவே, எனக்கு இந்த மந்திரி சபை மீது, தெளிவாகச் சொல்லுகிறேன், நிறைந்த நம்பிக்கை இருக்கிறது, நீங்களாக ராஜினாமா செய்து விடுவீர்கள் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

***டாக்டர் ப. நடராஜன்**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றி பத்திரிகையில் செய்திகளைப் படித்தபோது நண்பர் ஹாஜா ஷெரீஃப் போல நானும் பரபரப்பு அடைந்தேன். ஏதோ எதிர்ப்பாராத செய்திகளையெல்லாம் மந்திரிகளைப் பற்றி இங்கே சொல்லப் போகிறார்கள், அவர்கள் என்னென்ன தவறுகள் செய்தார்களோ, எந்த கூடா ஒழுக்கச் செயல்களில் ஈடுபட்டார்களோ, அல்லது மது விலக்குச் சட்டத்தைத் தாண்டிவிட்டார்களோ, அல்லது ஏதோ அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்தித் தங்கள் சொந்த நலனுக்காக, அல்லது அவர்கள் உற்றார் உறவினர்கள் நலனுக்காக, அவர்கள் பெரும் பொருள் திரட்ட ஏதாவது வழிவகை செய்தார்களோ, அல்லது லஞ்சத்தை எங்காவது வாங்கி விட்டார்களோ இப்படியெல்லாம் குற்றச்சாட்டு வரும்போல இருக்கிறது—ஏன் என்றால் நம்பிக்கையில்லை என்று தீர்மானம் வருகிறது அல்லவா?—மற்றப்படி ஆண்டுதோறும் நடைமுறையில் நடக்கிற விஷயங்களைப் பற்றி பட்ஜெட் விவாதத்திலே பேசுகிறோம், தினம் தினம் பேசுகிறோம்; நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது பெரிய விஷயம், அது பெரிய கருவி, நாளும் உபயோகிக்கக் கூடிய கருவி அல்ல—அந்தக் கருவியை கனம் அங்கத்தினர் மதியழகன் கையாளப் போகிறார் என்று கேட்டபோது இப்படியெல்லாம் மிகவும் பதட்டம் அடைந்தேன். ஆனால் கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் இங்கு வந்து தனது குற்றச்சாட்டுகளை வரிசையாக அடுக்கியபோது நான் சற்று ஏமாந்துதான் போனேன். ஏமாந்தது என்ன என்றால், இதிலே நம்பிக்கையில்லாத தீர்மானத்திற்கு உரிய குற்றச்சாட்டுகளாக என்றுமே இல்லை. சாதாரணமாக அன்றாட ஆட்சி முறையில், நடவடிக்கைகளில் ஏற்படுகிற சில குறைபாடுகள், மந்திரிகளுக்கு எழுதினால் அல்லது மந்திரிகளோடு பேசினால் தீர்ந்து போகக் கூடிய குற்றங்கள்தானே யொழிய, மந்திரி சபையைக் கவிழ்க்க வேண்டுமென்று கூறுவதற்குரிய எந்தக் குற்றச்சாட்டுகளும் இல்லை. பல குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். காமராஜ் ஆட்சி தான் இன்று இங்கு நடக்கிறது என்று சொன்னார்கள். காமராஜ் ஆட்சி தான் இன்னும் நடக்கிறது என்ற குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். ஆனால் நான் சொல்லுகிறேன், அது குற்றச்சாட்டு அல்ல. அது பொருமைப்பட வேண்டிய விஷயம் என்று சொல்கிறேன். ஏனென்றால், காமராஜ் இங்கு இல்லாவிட்டாலும், டில்லியில் இருந்தாலும், தன்னுடைய செல்வாக்கினாலும், ஆலோசனையினாலும் 10 ஆண்டுகளாக எந்த வகையில் பெரும்பாடுபட்டு நம் ராஜ்யத்தை

[டாக்டர் ப. நடராஜன்] [24th October 1964

முன்னேற்றத்திற்குக் கொண்டு வந்தார்களோ அதே முறையில் அங்கே இருந்தாலும் அவர்கள் நல்ல உதவிகளைச் செய்துகொண் டிருக்கிறார்கள் என்பதை அறியப் பெருமைப்படவேண்டும். அதற்காக இந்த மந்திரி சபையை பாராட்டவேண்டுமே தவிர, மந்திரி சபை மீது நம்பிக்கையில்லை என்று சொல்வது சற்றும் பொருத்தம் ஆகாது.

இரண்டாவதாக அவர்கள் கல்வித் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். கல்வித் திட்டத்தில் நாம் தவறியது என்ன? பெரிய குற்றங்கள் என்ன என்றால், மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்; பிறகு என்ன? மாணவர்கள் சீருடை அணிய வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள்; பிறகு என்ன? பள்ளிச் சீரமைப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்; பிறகு என்ன?— அதைப்பற்றி அவர்கள் சொல்லவில்லை—இலவசக் கல்வி கொடுத் தார்கள். பிறகு என்ன ?—அதைப் பற்றியும் அவர்கள் சொல்லவில்லை—அநேக கல்விச் சாலைகளை ஏற்படுத்தினார்கள். இதெல்லாம் மந்திரி சபையின் மீது குற்றம். மந்திரி சபைக்கு உறுதியான கல்வித் திட்டம் இல்லை, அடிக்கடி மாற்றிக்கொண் டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் சொல்லுகிறேன், மந்திரி சபைக்கு நிலையான கல்விக்கொள்கை இருக்கக் கூடாது. காலத்திற்கேற்றப்படி மாற்றிக்கொண்டிருக்கவேண்டும். 19-ம் நூற்றாண்டில் இருந்த கல்வித் திட்டம் சிளார்க்குகளை உற்பத்தி செய்யும் திட்டமாகத் தான் இருந்தது. வரும் காலத்தில் தொழில் துறையில் நாம் முன்னேற இன்னும் நல்ல கல்வித் திட்டம் வேண்டும். விஞ்ஞான அறிவை வளர்க்கும் கல்வித் திட்டம் வேண்டும். ஆகவே, காலம்தோறும் கல்வித் திட்டமானது ஆராய்ச்சி செய்யப்பட்டு, சீரமைக்கப்பட்டு, புதியதாக வருவது தான் முறையே தவிர, கல்வித்திட்டமானது ஓரேடியாக நிர்ந்தரமாக இருக்கத்தக்கது அல்ல. ஆகவே அது பற்றி குணமாகச் சொல்லுவதை குற்றமாக சொல்லுகிறார்கள்.

இன்னும் பல குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். இப்பொழுது நண்பர் திரு கருணாநிதி அவர்கள் யாருக்கு லைசென்ஸ் கொடுப்பது என்பது. பற்றிச் சொன்னார்கள். இதுபற்றி நமது முதல் அமைச்சர் அவர்கள் நன்றாக விளக்குவார்கள். ஆனால் ஒன்று நான் சொல்ல விரும்புகிறேன். லைசென்ஸ் கொடுப்பதற்கு, ஒரு தொழில் துவக்குவதற்கு ஒருவர் பெரிய பணக்காரராக இருக்கவேண்டு மென்பது அல்ல. அவர்கள் தொழிலுக்கு வேண்டிய பணத்தை பலபேர்களிடமிருந்து திட்டக்கூடிய தொழில் நுட்பம் உடைய வர்களாக இருந்தால் போதும். அவர்கள் அந்தத் தொழிலை தொடங்கினால், அதை நன்றாக வைத்து நடத்துவார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருந்தால் போதும். அப்பேர்பட்டவர் களுக்கு லைசென்ஸ் கொடுக்கலாம். பெரிய முதலாளிகளுக்கே மேலும் மேலும் லைசென்ஸ் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டு மென்றால், இவர்கள் முதலாளித்துவம் வளரவேண்டுமென்று விரும்புகிறார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஆகவே, முதலாளித்துவ வளர்ச்சியானது குறைந்து பரவலாக பொருள்,



24th October 1964] [டாக்டர் ப. நடராஜன்]

பொருளாதாரம் விநியோகம் செய்யப்படவேண்டும், ஏற்றத் தாழ்வுகள் குறையவேண்டும் என்ற கருத்தோடு லைசென்ஸ் அதிக பணம் இல்லாதவர்களுக்கு கூட கொடுக்கப்படுகிறது. அந்தக் கொள்கை தவறு என்று குற்றச்சாட்டாக அவர்கள் சொல்லுகிறார் கள். எதை நாம் நல்லது என்று செய்கிறோமோ அதெல்லாம் அவர்களுக்குக் குற்றமாகப் படுகிறது. ஒன்று, அவர்களுக்கு வேறு குற்றச்சாட்டுகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கொள்ளவேண்டும். அல்லது, இல்லாததையெல்லாம் இம்மாதிரி குற்றச்சாட்டாக சொல்லவேண்டுமென்று சொல்லுகிற அந்த ஒரு நிலைதான் இருக்கிறது என்று கொள்ளவேண்டும்.

லைசன்ஸைப்பற்றி நான் இன்னொன்று சொல்ல விரும்புகிறேன், நமது மாகாணத்தில் இருக்கும் தமிழர்களுக்கு, ஆந்திராவில் பலருக்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. கேரளாவில் பலர் லைசன்ஸ் வாங்கி இருக்கிறார்கள். ஓரிசாவில் லைசன்ஸ் வாங்கியிருக்கிறார்கள். அரசாங்கத்தில் இருப்பவர்களின் உறவினர் களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது என்பது அல்ல லைசென்ஸ் கொள்கை. தொழில் நடத்தக்கூடிய ஆற்றலும், அதை வளர்ச்சி செய்யக்கூடிய ஆற்றலும் உடையவர்களாக யார் இருக்கிறார்கள் என்று பார்த்துத்தான் லைசென்ஸ் கொடுக்கிறார்கள். அது அமைச்சர்களின் அனுபவத்திலிருந்து வருகிறது. இதற்கு ஒரு மோடிவ் இருக்கிறது என்று சொல்லக்கூடிய முறையில், வேண்டிய வர்கள், வேண்டாதவர்கள் என்று அல்லது ஏதாவது ஒரு கருத்தை உள்ளடக்கி, அஞ்சி, குறைகளைச் சொல்லுகிற முறையில் இந்தக் குற்றச்சாட்டுகள் அமைந்திருக்கின்றன என்று நான் சொல்லுகிறேன். இன்னும் பலவிதமான குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். அவைகளெல்லாம் வெறும் சாதாரணமாக குற்றச் சாட்டுகள். அடிப்படையாக இருப்பது உணவுப் பிரச்சினை. உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நமது மந்திரி சபை ஏதோ கடமையில் தவறிவிட்டது என்று சொல்லுகிறார்கள். ஏதாவது ஒரு உருப்படியான குற்றச்சாட்டாக அவர்கள் சொன்ன தில் வாதத்துக்காக நாம் வைத்துப் பேசவேண்டுமானால், இந்த ஒன்றுதான். கவனிக்கவேண்டியது இந்த ஒன்றுதான். நீண்ட பெரும் க்யூ வரிசைகள் நிற்கின்றன. பல மணி நேரங்களுக்கு க்யூ வரிசையில் மக்கள் நிற்கிறார்கள், அவர்களுக்கு அரிசி கிடைக்கவில்லை, உணவு கிடைக்கவில்லை ஆகவே இது ஒரு பெரிய பிரச்னை என்று சொல்லுகிறார்கள். உணவுப் பிரச்னை என்பது, பல அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டியதுபோல, நமது மாநிலத்திற்கு மட்டுமல்ல, இன்று இந்தியா முழுவதுக்குமே அந்தப் பிரச்னை இருக்கிறது. அதனால் நமக்கு அதில் பொறுப்பு குறைந்துவிட்டது என்று நான் சொல்ல வரவில்லை. நாம் விஷயத் தை நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும். நம்முடைய அரசாங்கம் அதற்கு எந்த அளவில் பரிகாரம் தேட முடியும் என்பதை நாம் நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும். உத்திரப் பிரதேசம் ஒரு பெரிய மகாணம், 45 ஜில்லாக்களை, மாவட்டங்களைக் கொண்ட ஒரு பெரிய மாநிலம். எப்பொழுதும் கங்கை கொழிக்கின்ற அந்த

இடத்தில் கோதுமைக்கு தட்டுப்பாடு. இது போல ஒவ்வொரு மாகாணத்திலும் இருக்கிற நிலைமையை இன்று அகில இந்தியாவிலும் இருக்கிறது என்று நாம் அறிகிறோம்.

என்னுடைய நண்பர் சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் சொன்னதுபோல உணவு உற்பத்தி குறையவில்லை. நான் உங்களுடைய அனுமதி கொண்டு சில புள்ளிவிவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது என்று சொல்லுகிறார்கள், அவர்கள் விவாதம் செய்யும்பொழுது அதே புள்ளி விவரங்களைக் கொண்டுதான் சொல்லுகிறார்கள். வேறு எதை வைத்துத்தான் நாம் விவாதம் செய்வது என்று தெரியவில்லை. 1962-ம் வருடத்திய புள்ளி நம்மிடம் இருக்கிறது. 'ஸிரியல்ஸ்' உணவு தானியங்கள், ஒரு நாளுக்கு 13.6 அவுன்ஸ் 'பெர் காபிடா' ஒரு தலைக்கு 2.25 அவுன்ஸ். 'பல்ஸஸ்' அதாவது பருப்புவகை, அப்பொழுது 15.8 அவுன்ஸ் தலைக்கு ஒரு நாளைக்கு இந்த நாட்டில் உற்பத்தியாகி இருக்கிறது. வருடா வருடம் பார்த்தால் உற்பத்தியானது வளர்ந்து கொண்டேதான் இருக்கிறது. 1950-லிருந்து அப்பொழுது ஏறக்குறைய 100 என்று கணக்கு வைத்துக் கொண்டால் 1961-62-ல் 135 ஆக உணவு தானிய உற்பத்தி பெருகியிருக்கிறது. அரிசி 136, கோதுமை 174 என்று இப்படி புள்ளிக்குறியீடுகள் இருக்கின்றன. இதுபோக ஏராளமாக நாம் தானியத்தையும் இறக்குமதி செய்கிறோம். 1962-63-ல் 151 கோடி ரூபாய், 1961-62-ல் 119 கோடி ரூபாய். 1960-61-ல் 194 கோடி ரூபாய் இப்படி சராசரி ரூ. 100 கோடி ரூபாய் அளவுக்கு நாம் உணவு தானியங்களை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். 40 லட்சம், 50 லட்சம் டன்கள் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். இப்படி இருந்தும், இந்த நெருக்கடி வருவானேன்? இந்த வருஷம் மிகுதியாக இறக்குமதி செய்திருந்தபோதிலும், இவ்வளவு உணவு தானியங்கள் இருந்தும், இந்த உணவு நெருக்கடி இந்த ஆண்டு வருவானேன்? போன ஆண்டிற்கும், இந்த ஆண்டிற்கும் அதிகமாக வித்தியாசம் இல்லை. உற்பத்தியானது சிறிது கூடத்தான் இருக்கிறது. அப்படியிருந்தும் இந்த ஆண்டில் மட்டும் ஏன் இப்படி நிலைமை இருக்க வேண்டும். அதுதான் இதில் இருக்கிற ஒரு ரகசியம், 'மிஸ்டரி'. இதை உணர்ந்துவிட்டார்கள் என்றால், எதிர்க்கட்சியினர்கள் உணவுப் பிரச்னையை வைத்து நம்பிக்கை இல்லா தீர்மானத்தைக் கொண்டு வரமாட்டார்கள். உணவுப் பெருக்கம் ஆண்டுதோறும் வளர்ந்துகொண்டே வருகிறது. யாரோ ஒரு அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது ஏராளமாக பருத்தி போடுகிறார்கள், ஏராளமாக கரும்பு சாகுபடி செய்கிறார்கள் என்று கூறினார்கள். அதற்கும் கணக்கு இருக்கிறது. கரும்பு சாகுபடியை நிறுத்திவிட்டு நெல் சாகுபடியைப் பெருக்குவதற்கு என்ன, பருத்தி சாகுபடியை நிறுத்திவிட்டு நெல் சாகுபடியைப் பெருக்குவதற்கு என்ன என்று கேட்டார்கள். இந்த 10 ஆண்டுகளாக உணவுப் பயிர்களுடைய வளர்ச்சி அதிகமாக இருக்கிறது. ஏனென்றால், ஏராளமாக அணைக்கட்டுகளைக் கட்டி, புது நிலங்களையெல்லாம் இப்பொழுது பாசனத்திற்குக் கொண்டுவந்திருக்



கிறோம். அது மாத்திரமல்ல. நமக்கு அரிசி வேண்டியதைப் போல, சர்க்கரையும் வேண்டும், பருத்தியும் வேண்டும். நம்முடைய தொழில் வளர்ச்சிக்கு இவைகள் வேண்டும். ஆகவே, ஒன்றுக்கு ஒன்று போட்டி இல்லை. அந்த முறையில் நாம் பார்த்தால், உணவு உற்பத்தி மிகுதியாக இருந்தும், இந்த ஆண்டு மட்டும் திடீரென்று ஏன் விலைவாசி ஏறிற்று, விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்கு நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன, இவ்வளவு நெருக்கடியான நிலை ஏன் வந்தது என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். இதை வெகு எளிதாகச் சொல்லுவதற்கு முடியாது. ஏனென்றால் இது பல சிக்கல்கள் நிறைந்த விஷயம். விலைவாசி ஏறத் தொடங்கியதும், ஏதோ ஒன்று நடந்துவிட்டது, உற்பத்தியானது வெளி வரவில்லை. வியாபாரிகளைக் குற்றம் சொல்லுகிறார்கள். என்ன தவறு, எப்படி குறைபாடு ஏற்பட்டது, நேற்று வரையில் வந்து கொண்டிருந்த தானியம் இன்று திடீரென்று வராமல் ஏன் நின்று போய்விட்டது? திடீரென்று இந்த ஆண்டு நடந்த விஷயம் இது. அதற்குச் சொல்லுகிறார்கள் அவர்கள், ஏன் வியாபாரிகளை தூக்கில் போடவில்லை, ஏன் வியாபாரிகளை 'அரெஸ்டு' செய்யவில்லை என்று கேட்கிறார்கள். வியாபாரிகளை 'அரெஸ்டு' செய்தால், வியாபாரிகளை 'அரெஸ்டு' செய்கிறார்கள், இவ்வளவு கொடுமை இந்த நாட்டிலே, இப்படி, அப்படி என்றெல்லாம் சொல்லுகிறார்கள். எதைத்தான் அரசாங்கம் செய்வது என்று தெரியவில்லை. 'வேண்டாத பெண்ணுக்கு கால் குற்றம், கை குற்றம்' என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள். இந்த அரசாங்கம் நமக்கு வேண்டாம், ஆகவே, அப்படிச் செய்தால் இப்படி, இப்படிச் செய்தால் அப்படி என்று எதிரான முறையில் பேசுகிறார்கள். விலைவாசி உயர்ந்தது. 'கண்டிரோல்' விலை வைத்தார்கள். விவசாயிகளுக்கு லாபம் தரக்கூடிய அளவிலும், அவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஊக்கம் தரக்கூடிய அளவிலும் இந்த விலை அமைய வேண்டும், அதே சமயத்தில் வாங்குகிறவர்களுக்கும் அதிக விலையாக இருக்கக்கூடாது என்றும் சொன்னோம். ஆகவே, எல்லோரும் கலந்து, ஒரு விலையைத் தீர்மானம் பண்ணினோம். அதில் நாம் ஒன்று பார்த்தோம். அதாவது கண்ட்ரோல் விலை குறைந்தபட்ச விலையாக ஆகிவிட்டது. இப்பொழுது விவசாயிகளெல்லாம் அதை ஒரு 'மினிமம் பிரைஸாக', குறைந்த விலையாக வைத்துக்கொண்டு, அதற்குமேல்தான் விலை கேட்கிறார்கள். கண்ட்ரோல் விலைதான் உச்ச விலை என்ற கருத்து அவர்களுக்கு இல்லை. நம்மிடத்தில் ஏராளமான ஸ்டாக் இருந்தால், இப்படி அவர்கள் கண்டிரோல் விலையை மீறி விற்கும்பொழுது, அந்த ஸ்டாக்கை வெளியிலே விட்டு, விலையைக் குறைக்கலாம். விலையை நிர்ணயித்ததால், ஸ்டாக்குகளைச் சேகரிப்பதற்குள்ளாகவே, விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் நோக்கத்தோடும், வாங்குவோருக்கு நீதி வழங்குகிற நோக்கத்தோடும் இப்படியாக கண்டிரோல் விலை வைத்ததினால், ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது நமது அரசாங்கம் இதைச் சமாளித்துக் கொண்டிருக்கிறது. மந்திரிகள் தஞ்சாவூர், திருச்சிக்கு எல்லாம் போனார்கள், அரிசி வாங்குவதா மந்திரிகளின் வேலை என்று கேட்கிறார்கள். அப்படி அவர்கள் போகவில்லை என்றால்,

11-30 a.m.

[டாக்டர் ப. நடராஜன்] [24th October 1964

சென்னை நகரில் உல்லாசமாக காரில் போய்க்கொண்டிருக்கிறார்கள், ஏன் அங்கே போய் அரிசிக்கு ஏற்பாடு செய்யக்கூடாது ' என்று கேட்பார்கள். மந்திரிகள் தங்கள் கடமையைச் செய்யும் வகையில், இந்தச் சிக்கலான நேரத்தில் நேராக நாமே போய், ஒவ்வொரு மணி அரிசியையும் இங்கே கொண்டு வந்து, நெருக்கடி நிலைமையைத் தீர்க்க வேண்டுமென்று இருக்கிறார்கள். இந்த நெருக்கடி நிலைமை நம் நாட்டில் மட்டும் ஏற்பட்டதல்ல. 45 வருஷங்களாக வெகு வேகமாகத் திட்டங்கள் அமைத்த ரஷியாவில் ஏற்பட்டது. தங்கத்தை விற்று அமெரிக்காவில் உணவு வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. போலண்டில்கூட அத்தகைய ஒரு நெருக்கடி ஏற்பட்டு, 1954-ல் கோமுல்கா டிக்டேடர்ஷிப் ஆட்சி வந்தது. சைனாவிலும் இம்மாதிரி நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஆர்தர் லூயி என்பவர், எங்கு பொருளாதார வளர்ச்சி ஏற்படுகிறதோ, அங்கெல்லாம் விளைச்சல் குறைந்து, உணவுப் பஞ்சம் ஏற்படுவது இயற்கை, ஆகவே இதைச் சமாளித்துக்கொண்டே செல்ல வேண்டும் என்று " stresses and strains in strategy " என்பதைப் பற்றிச் சொல்லும்பொழுது குறிப்பிட்டிருக்கிறார். இம்மாதிரி நெருக்கடி ஏற்பட்டு, விலை ஏறுவதும், இறங்குவதுமான நிலைமை ஏற்படுகிறது. அதை சமாளித்துக் கொண்டு போவதுதான் வளர்ச்சித் திட்டங்களின் ஸ்ட்ராடஜி என்று சொல்லுகிறார். இது எல்லா நாடுகளிலும் ஏற்படுகிறது. ஏராளமான தொழில்கள் ஏற்படும்பொழுது, மக்களின் வாங்கும் ஆற்றல் உயருகிறது. மந்திரி அவர்கள் வாங்கும் ஆற்றல் உயர்ந்திருக்கிறது என்று எப்படிச் சொல்லுவார்கள் என்று கூறுகிறார்கள். சென்ற 10, 15 ஆண்டுகளாக, வாழ்க்கைத் தரம் உயரவில்லை என்று சொல்ல முடியுமா? க்யூவில் நிற்கிறவர்கள் "எங்களுக்கு அரிசி வேண்டும், க்யூ வேண்டாம்" என்று சொல்லுகிறார்களே தவிர, "விலை அதிகம்" என்று சொல்லவில்லை. இந்த கண்டிரோல் எடுத்துவிட்டால் மக்களுக்கு வேண்டிய நெல், அரிசி தானாக வந்துவிடும் என்று சொல்லுகிறார்கள். அப்படி என்றால், வியாபாரிகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தானே பொருள்? அப்படியிருக்கும் பொழுது, வியாபாரிகளை நமது முதலமைச்சர் அவர்கள் குறைகூறுவதில் என்ன தவறு இருக்கிறது? யார் இப்பொழுது சேகரித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? திரு. ஏ.பி.ஸி. வீரபாகு அவர்கள் சொன்னதுபோல வியாபாரத்தைத் தொழிலாகக் கொண்டவர்களும், உற்பத்தி செய்கிறவர்களும் எங்கெல்லாம் அரிசி மூட்டை கிடைக்கிறதோ, அதைச் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததினால் உண்மையிலேயே எதிர்க்கட்சிகள் நாட்டிற்கு நன்மை செய்தவர்கள் ஆக மாட்டார்கள். இந்த உணவுப் பிரச்னையைப் பெரிதாக்கி ஒரு மனோ பயத்தை உண்டாக்கி வருகிறார்கள். இப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, மக்கள் பீதியை அதிகமாக்குவதினால், இவர்கள் நாட்டிற்கே கெடுதல் செய்கிறார்கள். ஆகவே நாட்டின் நன்மையை உத்தேசித்து, இந்தத் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.



24th October 1964]

* **திரு. கோ. வெங்கட்டராமன்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் நக்கீரர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நாங்கள் என்று சொல்லுகிறவர்கள், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்து, துவக்கம் முதற்கொண்டே ஆளுங்கட்சியின் மீது குற்றம் சாட்டினார்கள். நக்கீரர், "நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே" என்று இறுதி வரையில் கொள்கையைக் கடைப்பிடித்தவர்கள். ஆனால், இங்கே ஓரிரு சந்தர்ப்பங்களில், நமது மதிப்பிற்குரிய அமைச்சர்கள் குறிப்பிட்டு, வேண்டியவர் என்று சொல்லுகிறீர்களே, அதை நிரூபிக்க முடியுமா, தவறான நோக்கம் கற்பிக்க முடியுமா என்று கேட்டபொழுது, அந்த வார்த்தைகளைத் திரும்ப பெறக்கூடிய சூழ்நிலையைப் பார்த்தோம். தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால், தம்பி சண்டப்பிரசண்டம் என்பதைப் போல, குற்றச் சாட்டுகளுக்கு திரும்ப பதில் அளிக்கிறவர்கள் இல்லை என்றால், எதை வேண்டுமானாலும் அடுக்கிக் கொண்டு போகலாம் என்ற நிலையைப் பார்த்தோம். இன்றைய தினம் முதலில் பேசிய தாம்பரம் உறுப்பினர், முதலமைச்சருக்கு ஒரு அதிகாரி உறவினர் என்று சொன்னபோது, அதை நிரூபிக்க முடியுமா என்று அமைச்சர்கள் கேட்டபொழுது, அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். அதேமாதிரி, மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் துணைத்தலைவர், டைரக்டர் மஹாதேவன் தொழிலமைச்சருக்கு வேண்டியவர் என்று சொன்னபொழுது, தவறான நோக்கம் கற்பிக்க முடியுமா என்று குறுக்கிட்டு அமைச்சர் அவர்கள் கேட்டபொழுது, அதைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். வாய்க்கு வந்தபடி குற்றச் சாட்டுகளைச் சொல்லி, இறுதி வரையில் அவற்றை நிரூபித்துக் காட்ட முடியாத ஒரு நிலையை எதிர்க்கட்சியினர் பின்பற்றி வந்ததை நாம் பார்த்தோம். துணைத் தலைவர் அவர்கள் இது ஒரு பாரத யுத்தம் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும், நாங்கள் பாண்டவர்கள், எங்கள் ரதத்தை ஓட்டுவதற்கு கண்ணனுக்குக் கடமை இருக்கிறது என்று—சொல்ல வந்ததை மறந்துவிட்டு—சொன்னார்கள். கண்ணன் இருக்கிறார் என்று சொன்னால், திரு. ராஜாஜி இருக்கிறார் என்று சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லியிருந்தால் அவர் அம்புக் கணைகளை இவர்கள் மீதே தொடுத்திருப்பார்கள். அர்ஜுனனை அம்புக் கணைகளிலிருந்து பாதுகாக்க முயற்சித்திருக்க மாட்டார்கள். உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு உறுதியான கொள்கை இல்லை. ராஜாஜி, கண்டிரோலை எடுத்து விடவேண்டும், வியாபாரிகளுக்கு உரிமை கொடுக்க வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகப் பேசிக் கொண்டிருக்கிறார். உணவுக் கொள்கையைப் பற்றி பேசிய எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அனைவரும் இருக்கிற நிலைமையை சரியான முறையில் புரிந்து கொண்டு பேசவில்லை. கொள்கையிலேயே ஒன்றிப்பு இல்லாத எதிர்க்கட்சிக்காரர்கள் ஒன்று சேர்ந்து இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற நாடகத்தை நடத்துகிறார்கள். இன்று டைரக்டர் மகாதேவன் அவர்களின் ஜப்பான் விஜயம் காரணமாக, கூட்டுறவுத் துறையில் நிறுவப்பட்டுள்ள ஜப்பு

[திரு. கோ. வெங்கட்டராமன்] [24th October 1964

ஆலைகளுக்கு வேண்டிய இயந்திரங்களை பல லட்சக்கணக்கான ரூபாய்கள் குறைத்து வாங்கி வந்திருக்கிறார். அத்தகைய திறமையும் அனுபவமும் உள்ள அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்து, நியமித்து, நாட்டிலே தொழில் திட்டங்களைப் பெருக்குவதற்காக இந்த அரசாங்கம் பாடுபட்டு வருகிறது. அதேமாதிரி, சேஷஸாயி பேப்பர் மில்லுக்கு சர்க்கார் ரூ. 5 கோடி கொடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். நமது தொழிலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுக் கேட்டபொழுது, எங்களுக்கு நிச்சயமாகத் தெரியாது, கொடுத்திருக்கக்கூடும் என்ற பதில் வந்தது. இப்படி நிச்சயமற்ற, தெளிவில்லாத கொள்கைகளை எதிர்க் கட்சிகள் சொல்லி, இந்த நாட்டு மக்களை குழப்பத்திற்கு உள்ளாக்கி வருகிறார்கள். இந்த நியாயவிலைக் கடைகளில் நிற்கும் க்யூ வரிசையைப் பார்த்த உடனே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டுச் சாவடியின் ஞாபகம் வருகிறது. க்யூவில் நிற்கின்றவர்கள் அனைவரும் தங்களுக்கு ஆதரவு அளிப்பார்கள், இங்கே வந்து நாற்காலியைப் பிடிக்கலாம் என்ற அவர்களது கனவு நினைவாகிவிடும் என்று நினைக்கிறார்கள். மக்களுக்கு வாக்களித்துள்ள இந்த சர்க்கார் மக்களின் முன்னேற்றத்திற்காகத் திட்டங்களைத் தயாரித்து, மக்களின் சுபிட்சத்திற்காகப் பாடுபடுமேயல்லாது, கோழைகளைப் போல பயந்துகொண்டு ராஜீனாமாச் செய்துவிடாது. இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், இந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவதற்காகவும் ஒரு புதிய சோஷலிசத்தை திரு. காமராஜ் அவர்கள் தலைமையின் கீழ் இந்த சர்க்கார் உருவாக்கித் தருவார்கள் என்று சொல்லிக் கொண்டு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கும் வகையில், என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. இரா. நெடுஞ்செழியன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், ஏனைய எதிர்க்கட்சிகளின் ஆதரவோடும், கனம் உறுப்பினர் மதியழகன் அவர்கள், இன்றைய அமைச்சரவையின் மீது கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வலியுறுத்தி, சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல், கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள், உணவுப் பிரச்னை குறித்து, இன்றைய ஆட்சியாளரைக் கண்டிக்கிற வகையில் ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டுவந்துள்ளார்கள். இந்தத் தீர்மானங்களின் முடிவு என்ன ஆகும் என்பதை நாங்களும் அறிவோம், இந்த மன்றமும் அறியும், இந்த நாட்டிலுள்ள மக்கள் அத்தனை பேரும் அறிவார்கள். அரசியலில் ஏற்படுகிற பல்வேறு நிகழ்ச்சிகளை இந்த மன்றத்தில் விவாதிக்கும்பொழுது, என்ன முடிவு ஏற்படுகிறது என்பதை நாம் நன்கு அறிவோம். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் கொண்டு வருவதன் மூலம் அரசினர் செய்துள்ள குற்றங்குறைகளை அழுத்தந் திருத்தமாக எடுத்து வைப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது ; உண்மை நிலையை பொதுமக்களுக்கு உணர்த்திக் காட்ட வாய்ப்பு ஏற்படுகிறது ; இங்கே கூறப்படுகிற குற்றச்சாட்டுகளை [illegible]ச்சரவை சிந்தித்து சீர்திருந்துவதற்கு வாய்ப்பு ஏற்படு



24th October 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கிறது. இத்தகைய பலன்கள் இதன் மூலம் ஏற்படுகின்றன என்பதை உணர்ந்துதான் இந்த நேரத்தில் இந்தத் தீர்மானங்கள் இந்த மன்றத்தின் முன்பு வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த தீர்மானத்திற்கே அவசியம் இல்லை என்று கூறினார்கள் ஆளும் கட்சியினர். எனக்கு முன்பு பேசிய கனம் உறுப்பினர் டாக்டர் நடராஜன் அவர்கள் உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் வேண்டுமென்றால் குறையாகச் சொல்லலாம் என்று கூறினார்கள். நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவருவதற்கு இதைவிட வேறு என்ன காரணம் வேண்டும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் ப. நடராஜன் : 'குறையாகச் சொல்லலாம்' என்று சொல்லவில்லை. ஏதாவது வாதத்திற்கு உரியது என்று கருத வேண்டுமானால் இதை எடுத்துக்கொள்ளலாம் என்று, இப்பொழுது இருக்கும் உணவு நெருக்கடியை மனதில் நினைத்து சொன்னேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆகவே உணவு நிலையைப் பொறுத்தவரை நெருக்கடி இருக்கிறது என்பதை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். எதிர்க்கட்சி தரப்பிலுள்ள அங்கத்தினர்கள் எல்லாம், குற்றங் குறைகளைச் செவ்வையாக எடுத்து வைத்திருக்கிறார்கள். இப்பொழுது நாட்டிலே ஏற்பட்டிருக்கிற நிலையையும் பார்த்து, ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலையின் அடிப்படையையும் பார்க்கும்போது அச்சம் ஏற்படுகிறது. மக்களுக்குத் தேவையான அளவுக்கு உணவைக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. இன்றைய நிலையில் மக்களுக்கு அந்த உணவு கிடைக்கிறதா என்று பார்க்கிறபோது, அந்த உணவு கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. மக்கள் விரும்புகிற, குறைந்த விலையில், நியாயமான விலையில் எளிமையாக வேண்டிய அளவுக்கு உணவுப் பொருள்களை வாங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லை. இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் மக்கள் அத்தனை பேரும் தேவையான உணவை நியாயமான விலையில் பெறுவதற்கான வழிவகைகளை இந்த அரசு செய்யவில்லை. அந்த வகையில் இந்த அரசு கடமையைச் செய்யத் தவறி இருக்கிறது, தவறி இருக்கிறது என்ற குற்றசாட்டை அழுத்தம் திருத்தமாக எதிர்க்கட்சியினர் கூறியிருக்கிறார்கள். ஆளும் கட்சித் தரப்பில் இருக்கிறவர்கள் இந்த நிலையை மறுக்க முடியாது. ஆட்சிப் பொறுப்பு ஏற்று, 40 கோடி ரூபாய் அளவில் நிர்வாக இயந்திரத்தை வைத்துக்கொண்டு, மக்களுக்கு ஏற்ற வகையில் வழிவகைகளைச் செய்ய அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் பெற்று, வைத்துக்கொண்டிருக்கிற அரசு செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றவில்லை என்ற குற்றச் சாட்டை சாட்டுகிறேன். எனவேதான் எதிர்க் கட்சியினர் இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை என்ற குற்றச்சாட்டை வன்மையாக எடுத்து வைத்திருக்கிறார்கள்.

நாட்டில் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலைக்குக் காரணங்கள் சொல்லப்பட்டன. எந்தெந்த வகையில், எந்த எந்த முறையில் குறைகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது, அதை

ஏன் செய்யவில்லை என்று கேட்டார்கள். க்யூ வரிசைகளில் மக்கள் நிற்கிறார்கள் என்றால், மக்கள் வேதனை உள்ளத்தோடு நிற்கிறார்கள். தேவையான உணவு வேண்டும், குறைந்த விலையில் வேண்டும், நியாயமான விலையில் வேண்டும் என்று நிற்கிறார்கள். க்யூ வரிசையில் மக்கள் நிற்பது நாட்டின் முன்னேற்றத்திற்கு எடுத்துக்காட்டு என்று சொல்லுகின்ற அளவுக்கு அமைச்சர்கள் இருக்கிறார்கள்; அதுவும் சினிமா கொட்டகைக்கு முன்னால் க்யூ வரிசை இல்லையா என்று கேட்கிறார்கள். சினிமா கொட்டகைக்கு முன் க்யூ வரிசையில் நிற்கும் மக்களுடைய உள்ளத்திற்கும், உணவுப் பண்டங்கள் கடைகளுக்கு முன் க்யூ வரிசையில் நிற்கும் மக்களின் உள்ளத்துக்கும் வேறுபாடு இருக்கின்றது. சினிமா கொட்டகைக்கு முன் மக்கள் நிற்கும் க்யூ வரிசை அவர்களே விரும்பி ஏற்றுக்கொண்ட ஒன்று; அவர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்ட ஒன்று. வேண்டாம் என்றால் அவர்களே விரும்பி விட்டுவிட்டுச் செல்லலாம்; க்யூ வரிசையில் நின்றுதான் ஆகவேண்டும் என்ற இக்கட்டான, கட்டாயமான சூழ்நிலை ஒன்றும் இல்லை, தனிப்பட்டவர்களோ அல்லது அரசினரோ கட்டாயப் படுத்தாத, அவர்களாகவே விரும்பி ஏற்றுக் கொள்ளும் ஒன்று அந்த நிலை; க்யூ வரிசையில் நிற்கிறவர்கள் தாம் மகிழ்ச்சி அடையப்போகிறோம், தம் ஆவல் நிறைவேறப்போகிறது என்று விரும்பி ஏற்றுக்கொண்ட நிலை சினிமா கொட்டகைக்கு முன் க்யூ வரிசையில் நிற்பவர்களுடையது. ஆனால், உணவுக் கடைக்கு முன் நிற்கிறவர்கள், உள்ளே குமுறுகின்ற உள்ளத்தோடு, வேதனை நிறைந்த உள்ளத்தோடு, கவலை நிரம்பிய நெஞ்சத்தோடு, வாரத்திற்கு ஒரு முறை நிற்கவேண்டும் என்ற நிலையில்லை. அன்றாடம், 4, 5, 6 மணி நேரம் நின்றால்தான் தங்களுடைய அடிப்படை வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பொருளைப் பெறமுடியும் என்று குமுறுகின்ற உள்ளத்தோடு, நின்று கொண்டு இருக்கிறவர்கள். இந்த இக்கட்டான நிலைக்குக் காரணம் இந்த அரசுதான். இந்த அரசின் மீது மக்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்படும்.

இப்பொழுது, பண்டித நேருவின் ஃபோடோ கண்காட்சி ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. க்யூ வரிசையில் நின்று மக்கள் பார்க்கிறார்கள். அந்தக் க்யூ வரிசையில் உள்ளவர்களுடைய உள்ளத்தில் மகிழ்ச்சி இருக்கிறது. ஆகவே க்யூ வரிசை என்ற காரணத்தால் எல்லா க்யூ வரிசையும் ஒன்றுதான் என்று மதித்து அரிசிக் கடையில் க்யூ வரிசையில் நின்றால் என்ன என்று கேட்கின்ற வாதத்தின் அடிப்படைப் பொருளை நம்மால் புரிந்து கொள்ளமுடியவில்லை. நாம் நிச்சயமாகக் கருதுகின்றோம், மக்களுக்கு தேவையான அரிசியைக் கொடுப்பதில் இந்த அரசு தவறி இருக்கிறது. மக்களுக்கு தேவையான அரிசியைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய டாக்டர் நடராஜன், உலகில் பல்வேறு நாடுகளிலும் அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டினார்கள். நாட்டின் பல நெருக்கடி



களையும், இதர நிலைகளையும், மக்கள் பெருக்கத்தையும் பற்றி பொருளாதார நிபுணர்கள் பல்லாண்டுக் காலமாக வற்புறுத்தி எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்கள். அவற்றை ஆராய்கின்றவர்கள், எதிர்க்கட்சிகளாகட்டும், பொது மக்களாகட்டும், அமைச்சரவையும் பொருளாதார நிபுணர்களும் பத்திரிகையில் சொல்லுகின்ற கருத்துக்களின் அடிப்படையில் ஒரு முடிவிற்கு வரவேண்டியவர்களாக இருக்கிறார்கள். மற்ற வகையில் அறிந்து கொள்ளும் சூழ்நிலை இல்லை. சாதாரணமாக அரிசியை, உணவுப் பண்டங்களை எல்லாம் சேகரித்துக்கொண்டு வரும் பொறுப்பு தனிப்பட்டவர்களிடம் கொடுக்கப்படுகிறது. தேவையான பொருள், நியாயமான விலைக்கு, விரும்பிய அளவுக்கு, வேண்டும்போது கிடைக்கிறது என்கின்ற நிலை இருந்தால் தனிப்பட்டவர்களைக் குற்றம் சொல்வதற்கில்லை. ஆனால் குறைபாடு ஏற்பட்டிருக்கிறது. குறைந்த விலைக்குக் கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. தேவையான பொருள் பெறமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. கள்ள மார்க்கெட்டில் வாங்கவேண்டிய நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையைச் சீர்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. கண்ட்ரோல் வேண்டுமா, கண்ட்ரோல் வேண்டாமா? அது சரியா, சரியில்லையா? கண்ட்ரோல் இருக்கும் கொள்கையை ஒப்புக் கொள்கிறார்களா? அல்லது கண்ட்ரோல் இல்லாத நிலையை ஒப்புக்கொள்கிறார்களா? மொத்த வியாபாரிகள் மூலம் செய்வதா அல்லது கூட்டுறவு சங்கங்கள் மூலம் செய்வதா? தனிப்பட்டவர்கள் எடுத்து நடத்துவதா அல்லது முழுவதையும் அரசாங்கமே ஏற்று நடத்துவதா? என்ற முறைகளைப் பற்றியல்ல வாதம் இப்பொழுது. நமக்குத் தேவை அத்தனை பேருக்கும் உணவு வேண்டும்; அந்த உணவு சாதாரண வியாபாரிகள் மூலம் குறைந்த விலைக்கு, நியாயமான விலைக்குக் கிடைக்க முடியும், கிடைத்துக் கொண்டு வருகிறது, என்றால் தகராறு இல்லை. ஆனால் அவர்கள் தவறு செய்கிறார்கள் என்று கனம் முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடக் கூறியுள்ளார்கள். அரசினருக்கு நாட்டின் உணவு நிலையை அதுபற்றிய புள்ளிவிவரங்களை ஆராய வாய்ப்பு இருக்கிறது. நாட்டு மக்களுடைய மனப்பான்மை, பொருள்களின் நிலைகள், மற்றவைகளை அறிவிக்கக்கூடிய நிர்வாக இயந்திரம் அவர்கள் கையில் இருக்கிறது; மற்றைய சூழ்நிலைகளைக் கண்டறிய ஸி.ஐ.டி. போலீசு இலாக்காக்கள் இருக்கின்றன. மற்றைய துறைகளும் இருக்கின்றன. அவர்கள் கூறுகிறார்கள், இந்த நாட்டில் போதுமான அளவு அரிசி இருக்கிறது, ஆனால் வினியோகத்தில்தான் தவறு இருக்கிறது என்று. தனிப்பட்டவர்கள் தவறுகள் செய்கிறார்கள் என்றால், அத்தகைய சூழ்நிலையைத் தவிர்க்கும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. பாதுகாத்தும் தவறுகள் நீடிக்கும் என்றால், கொள்ளை லாபம் அடிப்பதில் பெரிய வியாபாரிகள் ஈடுபடுகிறார்கள் என்று அரசு, அது அறிகிற உண்மையின் அடிப்படையில் கருதினால், அதற்கு நாட்டு மக்கள் எதிர்பார்ப்பது என்னவென்றால், வினியோகத்தை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான். தனிப்பட்ட முதலாளிகள், தவறு செய்யும் மனப்பான்மையில்தான் உள்ளவர்கள்; தவறுகள் தொடர்ந்து நடந்து கொண்டுதானிருக்கும்;

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [24th October 1964

விலைகள் ஏறிக் கொண்டுதானிக்கும்; கள்ள மார்க்கெட்டில் வாங்க வேண்டிய நிலைகள், விற்கவேண்டிய நிலைகள் இருக்கத்தான் செய்யும்; பதுக்கல் இருக்கத்தான் செய்யும். தனிப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்ளும் வினியோகப் பொறுப்பு சரியாக நிறைவேறாது என்றால், அதை ஏற்றுச் சரிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசினரிடத்தில் இருக்கிறது. மக்கள் எதிர்பார்ப்பது அரசினர் கட்டுப்பாடு செய்கிறார்களா ? யார்மூலம் செய்கிறார்கள் ? அல்லது கட்டுப்பாட்டைத் தளர்த்துகிறார்களா ? என்பதல்ல. அத்தனை பேரும் விரும்பும் அளவுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்கவேண்டும், குறைந்த விலையில், நியாயமான விலையில் கிடைக்கவேண்டும் என்று தான் எதிர்பார்க்கிறார்கள். தனிப்பட்டவர்கள் விஷயத்தில் கட்டுப்பாடு ஏற்படுத்துவதில் ஊழல்கள், மற்றவைகள் நிரம்பி இருக்கின்றன என்றால், அதைச் செம்மையாக நடத்த இன்றைக்கு இருக்கின்ற நிர்வாக இயந்திரத்தால் இயலவேண்டும். இயலாது என்றால், தனிப்பட்டவர்கள் அதிகமான விலைக்கு விற்க, விலையை ஏற்ற வழி செய்து கொள்வார்கள். மக்கள் விரும்புவது என்னவென்றால், தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும் வியாபாரத்தை விட, அரசு நடத்தும் வியாபாரம் செம்மையாக இருக்கும், நியாயப்படி இருக்கும், நீதிப்படி நடக்கும்; தனிப்பட்டவர்கள் மூலம் நடத்தினால் விபரீத விளைவுகள் ஏற்படும், அரசு மூலம் நடந்தால் அவை ஏற்படா என்பதுதான். இதை மக்கள் எதிர்பார்ப்பதில் தவறு இல்லை. அரசினரின் நிர்வாக இயந்திரத்தின் மூலம் சரியாக நடத்த முடியும் என்ற நம்பிக்கை ஆட்சியாளர்களுக்கு இருக்கவேண்டும். கண்ட்ரோல் விலை ரூ. 1.22 ஆக இருந்து, லைசென்சு பெற்றவர்கள் ரூ. 2-க்கு விற்கும் நிலை இருந்தால், நிர்வாக இயந்தரம் அதைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை தான் ஏற்படும் என்றால், மக்கள் சாதாரணமாகச் சொல்லுவார்கள், "இதை விட தனிப்பட்டவர்கள் வைத்துக்கொண்டு இருப்பதே மேல்" என்று; அப்படிப்பட்ட முடிவுக்கு வருவார்கள். ஆகையால், எந்த முறையிலே செய்வது, எந்த வழியிலே இதை நிறைவேற்றுவது என்பது அல்ல பொதுமக்களின் பிரச்சினை. அரிசி அத்தனை பேருக்கும் தேவை. உணவுப் பொருள் அத்தனை பேருக்கும் தேவை. குறைந்த விலையில், நியாயமான விலையில் அது கிடைக்கவேண்டும். எப்படியும் கொழுக்கட்டை வேக வேண்டும். 'அதை எப்படி வேக வைத்தீர்கள் ?' என்பது அல்ல பிரச்சினை. கொழுக்கட்டை வேகவே இல்லை என்பதற்குக் காரணம் சொல்லும்போது வேண்டுமானால், 'இந்தச் சட்டியில் வைக்கலாமா ? அந்தச் சட்டியில் வைக்கலாமா ? மண் சட்டியில் வைக்கலாமா ? பித்தளைச் சட்டியில் வைக்கலாமா ?' என்று பல பேர் கருத்து கூறும் நிலை ஏற்படும். எப்படியும் கொழுக்கட்டை வெந்த கொழுக்கட்டையாக இருக்க வேண்டும். அதுபோல நல்ல அரிசி நியாய விலையில் கிடைக்க வேண்டும். அதை எப்படிச் செய்வீர்கள் ? கார்டு வழங்குவதன் மூலமாகவா ? தனிப்பட்டவர்கள் மூலமாகவா ? கூட்டுறவினிடத்தில் ஒப்படைப்பதன் மூலமாகவா ? இவையெல்லாம் கண்டறிந்து சிந்தித்து செய்யவேண்டிய பொறுப்பு அமைச்சரவையினிடத்



24th October 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

திலே இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையை எதிர்பார்க்க வேண்டிய பொறுப்பு அமைச்சரவையைச் சார்ந்ததாகும். நீண்ட நெடுங்காலமாக இருக்கும் சூழ்நிலையில், இது எப்படி வளர்ந்து வருகிறது என்பதைக் கண்டறிவதற்குப் பொருளாதார வல்லுநர்களும், அரசாங்க அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே சீர்திருத்தி செம்மையாக நடத்தவேண்டிய பொறுப்பு அரசினரிடத்திலே இருக்கிறது. அந்தப் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றத் தவறிவிட்டது இந்த அமைச்சரவை என்கிற இந்தக் குற்றச்சாட்டைத்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே மிக அழுத்தந்திருத்தமாக எதிர்க் கட்சியினர் வலியுறுத்தி கூறியுள்ளார்கள்.

'நாட்டிலிருக்கும் உணவுப் பொருள்கள் தேவையான அளவுக்கு இருக்கின்றன. ஆனால், தனிப்பட்டவர்கள் தவறு செய்வதன் காரணமாகத்தான் பரவவில்லை' என்று எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் எடுத்துச் சொல்லலாம், நாட்டில் பொதுவாக இருப்பவர்களும் எடுத்துச் சொல்லலாம். அதிகாரிகளையும் மற்றவர்களையும், வைத்துக்கொண்டிருக்கும் அமைச்சர்கள் சொல்கிறார்கள், என்பதுதான் வியப்பைத் தருகிறது. 'வியாபாரிகள் தவறு செய்கிறார்கள், ஆகவே தான் பரவவில்லை' என்று முதலமைச்சர் கூறுகிறார். பரவவில்லை யென்றால், பரவச் செய்ய வேண்டிய பொறுப்பு அமைச்சரவையைச் சார்ந்ததல்லவா ? இதில் இந்த அரசு வெற்றி பெற்றதா ? "மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்தல்" என்பது போல, பின்னால் வருவதை முன்கூட்டியே அறிந்து காரியங்கள் செய்ய வேண்டிய பொறுப்புள்ளவர்களாக அமைச்சர்கள் இருக்கிறார்கள். 'மக்கட் பெருக்கம் ஏற்பட்டுவிட்டது, ஆகவே, நிலைமை இப்படி ஏற்பட்டிருக்கிறது, வேறு பல சூழ்நிலைகளும் ஏற்பட்டுவிட்டன' என்று சூழ்நிலைக்குக் காரணங்கள் சொல்கிறார்கள். காரணங்கள் அல்ல மக்கள் கேட்பது, அவர்களுக்கு வேண்டியது உணவுப் பொருள். அதைக் கொண்டுவந்து சேர்க்கின்ற பொறுப்பு அரசைச் சார்ந்தது. தனிப்பட்டவர் யாரையும் இந்த நாட்டு மக்கள் எதிர்பார்க்க முடியாது. செய்ய வேண்டிய பொறுப்பு அரசினரிடத்திலே இருக்கிறது. அதை இந்த அரசு நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டைத் தான் அரசினருக்கு நாம் எடுத்துச் சொல்கிறோம்.

உணவுப் பொருட்களின் மொத்த விலைப்புள்ளி, இந்த ஆண்டில் மட்டும் திடீர் என்று ஏறுகிற நிலைமைக்குக் காரணமாக இருக்கிற சூழ்நிலையை மாற்றியமைக்க அரசு தவறிவிட்டது. 1939-ஆம் ஆண்டின் கணக்குப்படி அடிப்படைப் புள்ளி 100 என்று வைத்துக் கொண்டால், 1959-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 510 புள்ளியாக இருந்தது, 1963-ஆம் ஆண்டில் 532 புள்ளியாகி, 1964-ம் ஆண்டில் 612 புள்ளியாக வளர்ந்திருக்கிறது. ஓராண்டுக் காலத்திற்குள்ளே இந்த வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தும் அளவிற்கு நிர்வாக இயந்திரம் அமைச்சரவையினிடத்தில் இருந்தும், அதைச் சரிக்கட்ட முடியவில்லை. ஆகவே தான், உணவுக் கொள்கையில் அரசு தோல்வியுற்றிருக்கிறது என்று எதிர்க்கட்சியினர் அழுத்தந்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [24th October 1964

திருத்தமாகக் குற்றஞ் சாட்டியுள்ளார்கள். ஆகஸ்டு மாதக் கணக்கை எடுத்துப் பார்த்தாலுங்கூட, 1959-ஆம் ஆண்டில் 489 புள்ளியாக இருந்தது, 1963-ம் ஆண்டில் 579 புள்ளியாகி, 1964-ம் ஆண்டில் 697 புள்ளியாக ஏறியிருக்கிறது. இதைக் கட்டுப்படுத்தி, நிறுத்தி, இந்த நிலைமைகள் ஏற்படாத அளவுக்குப் பாதுகாக்க இந்த அரசு தவறியிருக்கிறது, இந்த அரசு கவனம் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டைத்தான் நான் சாட்டுகிறேன்.

வாழ்க்கைச் செலவினுடைய புள்ளித் தன்மையைச் சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் எடுத்துக்கொண்டால், 1962 ஜனவரியில் 482 புள்ளியாக இருந்தது, 1963-இல் 485 புள்ளி ஆகி, 1964-இல் 508 புள்ளியாக ஏறி இருக்கிறது. அதே போன்று செப்டம்பர் மாதக் கணக்கை எடுத்துக்கொண்டால், 1962-இல் 488 புள்ளியாக இருந்தது, 1963-இல் 490 புள்ளியாகி, 1964-இல் 563 புள்ளியாக ஏறி நிற்கிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கான காரணம் என்ன என்று பல கனம் உறுப்பினர்கள் இந்த மன்றத்தில் கேட்டார்கள். இந்த நெருக்கடி நிலைமை ஏற்பட்டு, இப்படிப் பட்ட நெருக்கடிக்குச் சமாதானம் காண, வாய்ப்பு வழியையும் வகையையும் காண அரசு தவறியிருக்கிறது என்ற அடிப்படையிலே தான் இதைத் தெளிவுபட எடுத்துச் சொல்கிறோம்.

உற்பத்தியைப் பெருக்குகின்ற நிலைமையிலே கூட, இந்திய சர்க்கார் உணவுப் பொருட்களைப் பெருக்கித் தரும் பொறுப்பு உடையவர்களாக இருக்கிறார்கள் என்று எனக்கு முன்பு பேசிய கனம் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய சர்க்கார் 500 சில்லரை கோடி ரூபாய் விவசாயத் துறையில் உணவுப் பெருக்கத்திற்காகச் செலவிட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 950 கோடி ரூபாய்க்கு மேல் இந்திய சர்க்கார் செலவிட்டது. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் 1,700 சில்லரை கோடி ரூபாய் செலவழிக்கிறது. கிட்டத்தட்ட 3,200 கோடி ரூபாய்க்குமேல் செலவழித்தும் நாட்டிலே இத்தகைய நிலைமை, நாட்டிலுள்ள அத்தனை பேருக்கும் தேவைப்படும் அளவுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்கவில்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவேதான், இந்த அரசு அந்தக் கடமையைச் செய்வதற்கு இவ்வளவு செலவழித்தும், பல திட்டங்கள் போட்டும், பல திட்டங்களையும் நிறைவேற்றியும் குறிக்கோளை நிறைவேற்றத் தவறியிருக்கிறது என்று நாங்கள் சொல்கிறோம்.

தமிழக அரசைப் பொறுத்தவரையிலும் கூட, முதல், இரண்டு, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலே பல திட்டங்களையும் தீட்டியும், பல கோடிக் கணக்கான ரூபாயைச் செலவழித்தும் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நிலைமை நிர்வாகத் திறமையின்மையைக் குறிக்கும் அளவுக்கு இருப்பதாலும், ஓராண்டுக் காலத்தில்



24th October 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

செய்யவேண்டிய கடமையைச் செய்ய மறந்தார்கள் என்ற காரணத்தாலும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அழுத்தந்திருத்தமாகக் கொண்டு வந்து சேர்க்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அரசாங்கம் தன்னுடைய கடமையைச் செய்யத் தவறியிருக்கிறது. செய்ய வேண்டிய செயல்களைச் செய்யவேண்டிய காலத்தில் செய்யாமல் விட்டதன் காரணமாக இந்த விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இதைப் பொருளாதார நிபுணர்கள் குழுவினர் மிகத் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். 1957-ஆம் ஆண்டில் அசோக் மேத்தா குழுவினர்—உணவுப் பொருள்கள் விசாரணைக் குழுவினர்—வெளியிட்ட அறிக்கையில்,

"In the great experiment of economic development through political democracy that our country is engaged in, the crucial position is occupied by Food Policy."

எடுத்துசொல்லியிருக்கிறார்கள். அந்தக்கொள்கை சரிவர நிறைவேற்றப்படவில்லை. மேலும் அவர்கள்—

"The assessment that we have made of the likely supply and of the demand for foodgrains shows that food position will continue to be difficult.

It is for that reason that we have emphasised the need for price stabilisation control over trade of foodgrains and its progressive socialisation."

என்று கூறியிருக்கிறார்கள். இந்தக் கருத்தை அவர்கள் சிபார்சு செய்தாலும், இந்தச் சிபார்சு செய்த கருத்தை நிறைவேற்றி, இந்தக் கருத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான அளவுக்கு அரசினர் வெற்றி பெற்றிருக்கிறார்களா என்றால் இல்லை. பொருளாதார நிபுணர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிற கருத்துக்களை நிறைவேற்றுகிற அளவுக்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுச் செய்யவேண்டிய அரசு தன்னுடைய செயலைச் செய்யவில்லை என்ற காரணத்தால் தான் இத்தகைய சூழ்நிலை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் நன்றாக அறிகிறோம். என்ன விளைவு ஏற்படுமோ என்று அஞ்சத்தக்க அளவுக்கு நாட்டில் நாளுக்கு நாள் நெருக்கடி நிலை ஏற்பட்டு வருகின்றது.

உணவுப் பிரச்சினையில் கடமையாற்றச் சென்ற ஒருவர் கோவையில் துப்பாக்கிச் சூடு காரணமாகப் படுகொலைக்கு ஆளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டது பற்றி ஒரு உறுப்பினர் தெளிவுபட எடுத்துக் கூறினார். அந்த வகையிலே கூட, நீதியை நிலைநாட்டவும், மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் இந்த அரசு தவறியிருக்கிறது என்று இந்த மன்றத்திலேயே பல கனம் உறுப்பினர்கள் பலர் தெளிவுபட எடுத்துக் கூறினார்கள். அப்படிப் பட்ட பரிதாப சூழ்நிலை ஏற்பட்டதற்குக் காரணமாக இந்த

உணவுப் பிரச்சினை இருந்திருக்கிறது, அதற்கு அடிப்படைக் காரணமாக உணவுப் பிரச்சினை தான் அமைந்திருக்கிறது என்பதைத் தெளிவாக அனைவரும் உணர்ந்துகொண்டிருக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகளினுடையவும், போலீசாருடையவும் கடமையையும் எதிர்க் கட்சியினராகிய நாங்கள் நன்றாக உணருகிறோம். போலீசார் நமக்குப் பகைவர்களாகக் கருதப்படுபவர் அல்லர்; அவர்களுக்குத் தரவேண்டிய மதிப்பும் மரியாதையும் தந்து அவர்கள் தங்களுடைய பணிகளைச் செவ்வனே செய்வதற்கேற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவது அத்தனை பேர்களுடைய கடமையாகும் என்பதை எதிர்க் கட்சியில் உள்ள அத்தனை பேர்களும் உணருகிறோம். சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றுகின்ற நிலையில் அவர்கள் எடுத்துக்கொள்ளும் முறைகளுக்கு மக்களுடைய ஆதரவும் இருக்கவேண்டும் என்ற உண்மையையும் ஒப்புக்கொள்கிறோம். அதே வகையில் போலீசாரிடமிருந்தும் நேர்மையின்பாற்பட்ட, நீதியின்பாற்பட்ட, ஒழுங்கின்பாற்பட்ட கடமையுணர்ச்சியை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். போலீஸ் அதிகாரிகளுக்கோ மற்றவர்களுக்கோ ஆபத்தான சூழ்நிலை ஏற்படும்போது, எதிர்க்கட்சியினர் அது கண்டு இரங்காமல், அனுதாபம் தெரிவிக்காமல் இருப்பதில்லை. சேலம் மாவட்டத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுவதைக் கண்டுபிடிக்கச் சென்ற ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் படுகொலை செய்யப்பட்டார். படுகொலை செய்த கயவர்களை வன்மையாகக் கண்டிக்கும் அளவுக்கும் படுகொலைக்கு ஆளான அத்தகைய போலீஸ் அதிகாரிக்கு ஆழ்ந்த இரக்கம் காட்டும் அளவுக்கும் எதிர்க்கட்சியிலே நாங்கள் இருந்துவருகிறோம். அதே போன்று ஈரோட்டிலிருந்து கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைப் பிடிப்பதற்காகப் போலீஸ் அதிகாரி ஒருவரும் சில கான்ஸ்டேபிள்களும் காவிரியாற்றைக் கடந்து செல்லும்போது, சதி செய்யப்பட்டு கவிழ்க்கப்பட்டார்கள். சதி செய்த கயவர்கள் இழித்துச் சொல்லப்பட வேண்டிய அளவுக்கும், கண்டிக்கப்பட வேண்டிய அளவுக்கும் எதிர்க்கட்சியினரால் கருதப்பட்டார்கள். போலீஸ் அதிகாரிக்கு ஆபத்து ஏற்படுகின்ற தன்மையில் அவர்கள் பொறுப்பை உணர்ந்து பாதுகாப்போடு நடத்தப்படவேண்டுமென்ற அக்கறையை நாம் காட்டி வருகிறோம். ஆனால், கோயமுத்தூரில் அன்று ஏற்பட்ட சூழ்நிலையைப் பத்திரிகையிலே பார்க்கிறோம். நான் கோவை சிறையில் இருக்கும்போது பத்திரிகையில் வருகின்ற பல்வேறு செய்திகளை அறிந்ததிலிருந்து நான் உணரக்கூடிய அளவிலே, சொல்கிறேன். கோவை துப்பாக்கிச் சூடு பொறுத்த வரையிலும் இந்த மன்றத்தில் நீதி வேண்டுமென்று கோரப்பட்டது. இப்பொழுது மக்களிடையே இருக்கும் ஐயப்பாடு போக்கப்பட வேண்டும். அந்த ஐயப்பாட்டைப் போக்க வேண்டிய பெருமுயற்சியை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால்
12-00 noon. அதை இந்த அமைச்சரவை ஏற்றுக் கொள்ளவில்லை. கோவையில் ஊர்வலமாக வந்தவர்கள் ஆயுதம் தாங்கி வரவில்லை. யாரிடமும் ஆபத்தை விளைவிக்கக் கூடிய எத்தகைய ஆயுதமும் இருந்ததாகப் பத்திரிகையில் வரவில்லை. அவர்களால் கலவரம் மூளக்கூடும்





என்கிற பயம் இருந்திருந்தால் அத்தகைய கலவரம் நடைபெறாதபடி தடுக்க போதுமான உள்பாதுகாப்பு நகரம்தான் கோவை. உடனடியான தக்கப் பாதுகாப்பைத் தேடிக்கொள்வதற்குரிய வாய்ப்பு அந்த நகரத்தில் உண்டு. வந்தவர்கள் துப்பாக்கி, குண்டு, அரிவாள், கடப்பாறை போன்ற எந்தவித ஆயுதமும் எடுத்துவரவில்லை என்பதும் உண்மை. மேலும் அர்ஜுனனைச் சுடுவதற்கு முன்னால் அச்சத்தை விளைவிக்கக் கூடிய வகையில் முதல் எம்.டி. ஷாட்டும் கொடுக்கப்படவில்லை. நேரிடையாக அவர் மார்பில் குண்டு பாய்ச்சப்பட்டிருக்கிறது என்றால் இது சந்தேகப்பட வேண்டியதாகவேயிருக்கிறது. பாரபட்சமற்ற உயர் நீதி மன்ற நீதிபதி ஒருவரை நியமித்து இதைப்பற்றி விசாரிக்க வேண்டும் என்கிற நியாயமான கோரிக்கையைக்கூட அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. அர்ஜுனன் என்கிற தனிப்பட்ட ஒருவருடைய பிரச்சினை அல்ல இது. அவருடைய கொள்கைகளை நாங்கள் ஆதரிப்பவர்கள் அல்லர். அவருடைய செய்கையை பகிரங்கமாகவே நாங்கள் கண்டித்திருக்கிறோம். போலீஸ் அதிகாரியாக இருக்கக்கூடிய ஒருவர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமோ அவ்வாறு நடந்துகொள்ளாமல் பகிரங்கமாக சாராயம் காய்ச்ச முன்வந்தபோது நாங்கள் கண்டித்திருக்கிறோம். ஆகவே நாங்கள் அவருடைய கொள்கையை ஏற்றுக்கொண்டவர்கள் அல்லர். ஆனாலும் அர்ஜுனன் என்ற ஒரு குடிமகன் கொல்லப்பட்டார். அதற்குப் பின்னால் பல காரணங்கள் பரவுகின்றன. உண்மையாக நடந்தது என்ன? என்பதை அறிந்து கொள்ள வேண்டுமென்றால் அதிகாரிகளைக் கொண்டு விசாரிப்பதன் மூலமாக வெளிப்படாது. கோவை நகரத்திலிருக்கிற கட்சி சார்பற்ற வழக்கறிஞர்கள் குழுவின் தலைவர் கூட அந்த வழக்கறிஞர் எல்லோரும் கூடி நிறைவேற்றிய தீர்மானத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதிகாரியைப் போட்டு விசாரிப்பது போதாது உயர் நீதி மன்ற விசாரணைக்கு விட்டால்தான் நல்லதொரு பாதுகாப்பு ஏற்படும். இல்லையானால் பொதுமக்களுக்கு பாதுகாப்பு ஏற்பட முடியாது என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த நிலையை ஏற்க இந்த அரசு தவறியது என்கிற குற்றச் சாட்டை வன்மையாகவும் அழுத்தம் திருத்தமாகவும் இந்த மன்றத்தின் முன்னால் எடுத்துவைக்க முன்வருகிறேன்.

மேலும் தமிழ் மொழியை ஆட்சிமொழியாகக் கொள்வதில், கல்லூரிப் பாடமொழியாக அமைப்பதில் போதுமான கவனம் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை அடிக்கடி சாட்டி வருகிறேன். இந்திய அரசினர் இந்தியை பரப்புவதற்கும் அதை வளர்ப்பதற்கும் கொடுக்கிற சலுகைகளில் நூற்றில், ஆயிரத்தில் ஒரு பங்கு கூட நமது அரசாங்கம் நம்முடைய தாய்மொழியை வளர்ப்பதற்கு அளிக்கவில்லை என்கிற குற்றச்சாட்டைச் சுமத்துகிறேன். இந்திய அரசினர் சமீபத்தில் வெளியிட்டுள்ள உத்திரவு என்ன என்பதை நாம் கவனிக்க வேண்டும். தமிழக சர்க்காரில் இந்தி தேவைப்படும் வேலைகளுக்கு தகுதியானவர்கள் கிடைக்கச் செய்வதற்காக கல்லூரிகளில் இந்தி படிக்கும் மாணவர்களுக்கு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [24th October 1964

உபகாரச் சம்பளம் அளிக்க இந்திய அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளது. இந்தி பேசாத மாநிலங்களில் இந்திப் படிப்பை ஊக்குவிப்பதும், இந்தி சொல்லிக் கொடுக்க ஆசிரியர்களை தயார் செய்வதும், இந்தி பேசாத மாநில அரசாங்கங்களில் இந்தி தேவைப்படும் வேலைகளுக்கு தகுதியானவர்களை தயார் செய்வதும், இந்த திட்டத்தின் நோக்கம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. புகுமுக வகுப்பு (பி.யு.சி.), பி.ஏ., பி.எஸ்.சி. ஆனர்ஸ் ஆகிய வகுப்புகளில் இந்தியை முக்கிய பாடங்களில் ஒன்றாக எடுத்துக்கொண்டவர்களுக்கு இந்த உபகாரச் சம்பளம் கிடைக்கும்.

புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு மாதம் 50 ரூபாயும் பி.ஏ. ஆனர்ஸ் வகுப்பு மாணவர்களுக்கு மாதம் 75 ரூபாயும், எம்.ஏ., பி.எச்.டி. வகுப்பு மாணவர்களுக்கு மாதம் 105 ரூபாயும் உபகாரச் சம்பளமாகக் கொடுக்கப்படும். நம்முடைய தமிழ்நாடு அரசாங்கத்தின் ஆட்சிமொழி தமிழ் என்பதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் நம்முடைய மொழி எல்லாக் கட்டங்களிலும் சீராக சிறப்பாக வளர்ச்சியடைவதற்கு இத்தகைய ஊக்கமும் ஆக்கமும் எத்தகைய நிலையிலும் தரப்படவில்லை என்கிற குற்றச்சாட்டை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மக்களாக எல்லாவற்றிற்கும் விரும்பி வருவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அவ்வாறு வந்தவர்களுக்கு அரசாங்கம் அளிக்கிற வசதிகளையும் ஆதரவையும் பொறுத்துத்தான் மற்றவர்களும் கூட முன்வருவார்கள். பலன்களை எதிர்பார்த்தே காரியம் செய்கிற தன்மையுடையவர்களாக நாம் இருக்கிறோம். இந்தியில் பயிற்சி பெற்றால்தான் வேலை என்கிற நிலை உண்டாக்குகிறபோது விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்தியைப் படிக்கின்ற நிலை ஏற்படுகிறது. கட்டுப்பாடாக படித்தே தீரவேண்டும் என்கிற அவசியம் ஏற்படுகிறது. ஆகவேதான் இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது. தமிழ் சரியான முறையில் வளர்க்கப்படவில்லை. தமிழ் மொழியை வளர்ப்பதற்காக நியமிக்கப்படுகிற அதிகாரிகளும் கூட ஐந்தாவது, ஆறாவது மட்டும் தமிழ் படித்தவர்களே தவிர தமிழில் தனிப் பயிற்சி பெற்றவர்கள் அல்ல, என்கிற குற்றச்சாட்டை இந்த மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன். இந்தியைப் பொறுத்தவரையில் அறிஞர் இவான் ஜென்னிங்ஸ் ஆசியாவில் காமன்வெல்த் என்ற தொடர்பில் 1949-ம் ஆண்டில் ஆக்ஸ்போர்டு கல்லூரியில் சிறப்புரை ஆற்றிய போது எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். "இந்தி தேசிய மொழியாகும்போது என்ன நிகழும் ஆங்கிலம் பேசுவோர் எப்படி இன்று மேலோங்கி நிற்கிறார்களோ, இப்படியே, அன்று இந்தி பேசும் வடநாட்டினர் மேலோங்கி நிற்பார்கள். ஆங்கிலமாவது இந்தியர் அனைவருக்கும் எச்சார்பும் இல்லாத நடு மொழியாக இருக்கிறது. இந்தியோ, சிலருக்கு மட்டும் தனிச் சலுகைகள் அளிக்கும்; இது மற்றவருக்கெல்லாம் கசப்பூட்டும்." என்பதாக அரசியல் நிலைமையையும் ஆட்சியாளருடைய போக்கையும் நன்றாக அறிந்து அவர் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். அதே நிலையில்தான் இந்த மத்திய அரசும் சென்றுகொண்டிருக்கிறது. அடக்கு முறையின் மூலமாக





24th October 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

தமிழக மக்களுடைய உரிமையையும் தாய்மொழியையும் நசுக்க இந்த அரசும் செயல்படுகிறது என்கிற குற்றச்சாட்டை நான் வலியுறுத்திக் கூறுகிறேன்.

அடுத்தபடியாக சேலம் இரும்புத் தொழிற்சாலையைப் பற்றி சிறப்பாகப் பேசப்பட்டு வந்திருக்கிறது. எதிர்க்கட்சியினர் அனைவரும் மிக்க வன்மையாக வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அது நிச்சயமாக வரும் என்றும் பல தடவை வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் இது வரையிலும் திட்ட வட்டமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. குறிப்பாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய விபரங்கள் அடங்கிய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதை நான் அமைச்சரவையில் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையை உருவாக்குவது என்பதை இந்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

"The setting up of a steel plant has been taken by the Government and included in the Third Plan."

இந்தத் திட்டத்தை நிறைவேற்ற 25 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்று திட்டவட்டமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க இந்திய அரசு திட்டவட்டமான முடிவை— ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

"The provision of Rs. 25 crores has been made for this project."

"A technical committee has also been appointed by the Government of India to study this question. The Committee has recommended that the tests suggested by the East German Experts should be carried out. Besides it has recommended that tests should be undertaken using the electric low shaft furnace process develope in Norway. The Committee has also indicated that the National Metallurgical Laboratory at Jamshedpur should undertake tests in their pilot low shaft furnace with representative samples ore using metallurgical coke." என்று திட்டவட்டமான முடிவு எடுக்கப்பட்டு இன்றைய நிலையில் அது அவதிக்குள்ளாவானேன்? ஒதுக்கப்பட்ட தொகை என்னவாயிற்று? ஒதுக்கப்பட்ட தொகையை வைத்திருக்கிறீர்களா அல்லது வேறு திட்டத்திற்கு மாற்றி விட்டீர்களா? நேற்று மத்திய அமைச்சர் திரு சஞ்சீவ ரெட்டியை நிருபர்கள் சந்தித்தபோது 'சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை வைக்கப்படுமா?' என்று கேட்கப்பட்டபோது 'அது பரிசீலனையில் இருக்கிறது; பொருளாதார சாத்தியமாகக் கூடிய ஒன்றைத் தான் சிந்திப்போம்; அந்த முடிவுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம்' என்று கூறியிருக்கிறார். நம்முடைய மன்றத்திலே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுகின்றபோது அமைச்சர் அவர்கள் 'மத்திய சர்க்கார் இந்தத் திட்டத்தை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [24th October 1964

ஏற்றுக் கொள்ள முன் வரவில்லை என்றால் இந்த மாநில சர்க்காரே அந்தத்திட்டத்தை ஏற்று நடத்துவதற்கு முயற்சி எடுக்கும்' என்று கூறியதைப்பற்றி நிருபர்கள் அவருடைய கருத்தைக் கேட்டதற்கு, 'அப்படி முயற்சி எடுத்தால் நாங்கள் விட்டு விடுவோம்; அதற்கு 100 கோடி ரூபாய் ஆகும்' என்று கூறியிருக்கிறார்.

"Sri Sanjeeva Reddi said that the Madras Government could set up the steel plant in the State if it so desires. The cost would be Rs. 100 crores."

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்."

என்று வள்ளுவர் கூறியதற்கொப்ப செய்ய வேண்டியவைகளை செய்யாமல் விட்டாலும் கேடு உண்டாகும். எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல; சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஏற்பட வேண்டுமென்பது எல்லாக் கட்சினருடைய உள்ளத்திலும் பதிந்து விட்ட எண்ணமாகும். இத்தகைய ஒரு திட்டம் இன்று நிறைவேறாது என்று ஐயப்படும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சமுதாய வளர்ச்சித் திட்டமும் இந்த ஆட்சியினால் செம்மையாக நிறைவேற்றப்படவில்லை; ஊழல்களுக்கும், குறைபாடுகளுக்கும் உறைவிடமாக இருக்கிறது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதனை அந்தந்த தொகுதியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் மிகத் தெளிவாக அறிவார்கள். 'சமுதாய நலத் திட்டங்களுக்கும், தேசிய விஸ்தரிப்புத் திட்ட வேலைகளுக்கும் 140 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு 12,000 பேர் வேலை செய்து வருகிறார்கள். ஆனால் அதனால் எதிர்பார்த்த பலன் ஏற்படவில்லை; இவ்வளவு ஆட்களை வேலைக்கு விட்டு, இவ்வளவு பணத்தைச் செலவிட்டிருப்பதற்கு ஒரு புதிய தமிழ் நாட்டையே உருவாக்கி இருக்க வேண்டும்' என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தைச் சொன்னவர் வேறு யாருமில்லை; இதற்கு அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றிருக்கிற திரு. வெங்கடாசலபதி அவர்கள் தான், இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசு திட்டங்களைச் சரிவர நிறைவேற்றுவதிலிருந்து தவறி இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். பணம் பாழாகியிருக்கிறது.

இங்கே ஜனநாயகப் பண்புகள் சரிவர நிறைவேற்றப்படவில்லை என்பதை எதிர்கட்சி உறுப்பினர்கள் தெளிவுபட எடுத்துக் கூறினார்கள். ஆளும் கட்சிக்கும் ஆட்சிக்கும் வேறுபாடு இல்லாத அளவுக்குச் செயல்கள் நடைபெற்றுக்கொண்டு வருவதைப்பற்றி எடுத்துக் கூறினார்கள்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வசர்மற் றெல்லாம்.
தொழுதுண்டு பின்செல் பவர்.'



24th October 1964] [இரா. நெடுஞ்செழியன்]

என்று வள்ளுவர் கூறினார். இந்த நிலைமை மாறி வெள்ளையர்கள் காலத்தில், அந்நிய ஆதிக்க காலத்தில்

'டை கட்டி வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
கை கட்டிப் பின்செல்பவர்'

என்ற நிலைமை ஏற்பட்டது. அந்த நிலைமை இந்தக் காங்கிரஸ் ஆட்சியில் மாறி

'கதர் கட்டி வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
சதிர் இட்டுப் பின்செல்பவர்'

என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் கட்சிக்கும் ஆட்சிக்கும் உள்ள வித்தியாசத்தை, வேறுபாட்டை உணர்ந்து செயலாற்ற வேண்டும். ஜனநாயக பண்புகள் சீர்படுதல் வேண்டும். ஜனநாயகப் பண்புகளை நிலைநாட்ட இன்றைய ஆட்சி தவறிவிட்டது. 'அன்று ஔவையார் 'வரப்பு உயர' என்று வாழ்த்தினார்கள். அந்த ஒரு சொல்லிலேயே அவ்வளவு அர்த்தமும் அடங்கும் என்று சொல்லப்பட்டது.

'வரப்பு உயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயர்வான்'

இவ்வாறு அந்த ஒரு சொற்றொடரையே வைத்து வாழ்த்தினார்கள். இன்று நடைமுறையில் பார்த்தால் இன்றைய அரசினர் 'வரி உயர' என்று வாழ்த்திக் கொண்டிருக்கின்றனர்.

'வரி உயர விலை உயரும்,
விலை உயர வறுமை உயரும்,
வறுமை உயர வாட்டம் உயரும்,
வாட்டம் உயர பீடை உயரும்,
பீடை உயரப் பிணி உயரும்,
பிணி உயரப் பிணங்கள் உயரும்'

என்ற நிலைமையில் மக்கள் வாழ்க்கை அமைந்திருக்கிறது.

இன்றைய உணவு நிலைமையைப் பொறுத்து எதிர்க்கட்சியினர் அரசினரைக் குற்றம் சாட்டினால், அரசினர் 'வியாபாரிகளால்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது' என்று சொல்வதிலே என்ன பொருள் இருக்கக் கூடும். வியாபாரிகள் செய்கின்றார்கள் என்றால் அதைத் தீர்க்கின்ற பொறுப்பு அரசாங்கத்திடம் இருக்கிறது; அதற்கான அதிகாரம் அரசாங்கத்திடம் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் மற்றவர்களை பொறுப்பு காட்டுவதிலே பொருள் இருக்க முடியாது. இந்தக் காரணங்களையெல்லாம் அடிப்படையாக வைத்துத்தான் இந்தத் தீர்மானங்கள் எதிர்க்கட்சியின் தரப்பிலே இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த

முறையிலே தாங்கள் ஒப்புக்கொண்டிருக்கிற கொள்கைகளை ஏற்று செயல்களை நிறைவேற்றாத அளவுக்கு இந்த ஆட்சியினர் இருக்கிறார்கள்.

"வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு"

என்று வள்ளுவர் கூறியதற்கொப்ப, முயற்சி எடுத்துச் செயலாற்றாமல் விட்டவரை உலகம் நம்பிக்கை இழந்து விட்டு விடும் என்ற கருத்தின் அடிப்படையில் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மாணத்தை எதிர்க்கட்சியினர் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை வலியுறுத்தி ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மூன்று நாட்களாக இந்த மன்றத்தில் இரண்டு விஷயங்களைப்பற்றி விவாதிக்கப்பட்டது. ஒன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பிரேரேபிக்கப்பட்ட, 'இந்த மந்திரி சபையின் மீது நம்பிக்கையில்லை' என்ற தீர்மானம். மற்றொன்று, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களால் கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானம். அதாவது உணவுப் பிரச்னையில் அரசாங்கம் சரியாக அணுகவில்லை, சரியான முறையில் உணவுப்பிரச்னையை சமாளிக்கவில்லை என்ற குற்றச் சாட்டை சொல்லுகின்ற முறையில் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியபோது இதுவும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் அடங்கியதுதான் என்று சொன்னார்கள். உணவுப் பிரச்னையைப் பொறுத்தளவில் அரசாங்கம் சரியாக நடந்து கொள்ளவில்லை என்று திராவிட முன்னேற்றக் கட்சி உப தலைவர் அவர்களும், அவர்கள் கட்சி உறுப்பினர்களும் சுட்டிக்காட்டினார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து இந்த மந்திரி சபையின் மீது நம்பிக்கையில்லை என்று தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றால், அது சரிதான், இவர்களுக்கு நம்பிக்கையிருக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை, எதிர்பார்ப்பதற்கும் இல்லை, எங்கள் மீது இவர்களுக்கு நம்பிக்கையிருக்கும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது, ஒருக்கால் எங்கள் மீது அல்லது மந்திரி சபை மீது நம்பிக்கையிருக்கின்றது என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சொல்லியிருந்தால் நான் உண்மையிலேயே கவலைப்பட்டிருப்பேன். இவர்களுடைய நம்பிக்கையிருந்தால் மந்திரிசபை என்ன ஆவது, மக்கள் மந்திரிசபையைப்பற்றி என்ன நினைப்பார்கள்? மக்கள் அல்லவா நம்பிக்கையோடு எங்களை இங்கு அனுப்பியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒருவிதத்தில் எங்கள் மீது நம்பிக்கையிருப்பதாகச் சொன்னார்கள், அதாவது நாங்களாகவே ராஜிநாமா செய்து விடுவோம் என்று, அந்த நம்பிக்கையும் வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். எதை எப்போது செய்யவேண்டும் என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். இவர்கள் சொல்லுகின்ற



மாதிரி அவ்வளவு யோசனை இல்லாமல் எதையும் செய்து விட மாட்டோம், அவ்வளவு முட்டாள்கள் அல்ல நாங்கள். எங்களுடைய பாதை நன்றாக இருக்கிறது, ஆகவே நாங்கள் ராஜிநாமா செய்து விடுவோம் என்ற நம்பிக்கையை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நாங்கள் ராஜிநாமா செய்யவே மாட்டோம், என்றால் என்றென்றைக்கும் சாசுவதமாக இருப்போம் என்று சொல்வதாக அர்த்தமல்ல. அந்த குறுகிய நோக்கம் எங்களுக்கு கிடையாது. காங்கிரஸ் தான் இந்த நாட்டுக்கு சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தது. அந்த சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. பெற்ற சுதந்திரம் சரியான முறையில் பயன்படுத்தப்படுகிறதா என்று பார்க்க வேண்டிய பொறுப்பு காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கிறது. அதை சின்னா பின்னப்படுத்தாமல் பார்க்கவேண்டிய பொறுப்பு காங்கிரஸ் கட்சிக்கு உண்டு, என்றாலும் என்றென்றைக்கும் சாசுவதமாக மந்திரி சபையிலேயே இருக்க வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. எங்களுடைய பிரச்னை என்னவென்றால் நாங்கள் ஆட்சியை விட்டுவிடுகிறோம், சரி, யாரிடம் பின்னால் விடுவது? (எதிர்கட்சித் தரப்பிலிருந்து சிரிப்பு). இது சிரிப்பதற்குரிய விஷயம் அல்ல. சிரிப்பதற்குப் பதிலாக சிந்தித்துப் பார்க்க வேண்டிய விஷயம். வெளிநாடுகளில் எல்லாம், பல ஜனநாயக நாடுகளில் தேர்தல் நடைபெற்றது. இங்கிலாந்தில் தேர்தல் நடைபெற்றது. அமெரிக்காவில் தேர்தல் நடைபெற்றது. அங்கெல்லாம் உருப்படியான அரசியல் கட்சிகள் பலமாக இருக்கின்றன. ஒரு கட்சி மெஜாரிட்டியாக வரவில்லையானால் இன்னொரு கட்சி ஆட்சிக்கு வருகிறது. அந்த முறையில் இன்றைக்கு தமிழ்நாட்டில் ஆட்சி செய்து கொண்டிருக்கிற கட்சி பதவியிலிருந்து விலகி வேறு கட்சிக்குக் கொடுக்கலாம் என்றால் மக்களுக்கு நல்ல முறையில் வழிகாட்டக்கூடிய அளவில் அதாவது ஒரு எதிர்க்கட்சி அமைந்திருக்கிறதா என்றால் அது இல்லை என்று நான் சொல்வேன். இதைத்தான் எதிர்கட்சிகள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுதான் எனக்கு கவலை. அந்தப் பொருளில்தான் நான் எதிர்கட்சிகள் நமக்கு ஏமாற்றத்தை அளித்துக்கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறேன். இதைத்தான் நான் ஏதோ தரம் குறைவாக இருக்கிறது என்று சொன்னதாகச் சொன்னார்கள்.

(கனம் சபாநாயகர் தலைமை)

இன்றும் சொல்கிறேன். தரத்தைப்பற்றி நன்றாக, இவ்வளவு குறைவாக இங்கு யாரும் இந்தச் சபையில் பேசவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். நேற்றும் சொன்னேன். இன்றும் உறுதியோடு சொல்லுகிறேன். கனம் எதிர்கட்சி உறுப்பினர்கள் சிலர் பேசிய முறை, அது எத்தகைய தரமாய் இருந்தது என்பதை நன்றாக வெளிப்படுத்தியது. அதிலும் கனம் எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் திறமை மிகுந்த வாதத் திறமையுள்ள

வர், நிரம்ப படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் இருக்கிற வேறுபாட்டை எல்லாம் கவனிக்கின்ற பழக்கம் எனக்கில்ல. அவர்களுடைய ஆற்றலை நான் எப்போதும் பாராட்டக்கூடியவன். நான் ஒரு போதும் வெறுத்தது கிடையாது. அதற்குப் பதிலாக அதை வரவேற்கிறவன் நான். என்னை அவர்கள் கண்டித்த போதிலும், நம் மீது என்ன குறை கூறின போதிலும் நமக்கு பலம் கிடைக்கக்கூடிய வகையில் எதைச் சொன்னபோதிலும் அதையெல்லாம் நான் அவர்களுடைய வாதத் திறமையை நினைத்து கேட்பதுண்டு. ஆனால் இன்றைக்கு அவர்கள்கூட சற்று கீழேஇறங்க வேண்டி வந்தது. கூட்டுறவு அமைச்சர் அவர்களுக்கு வேண்டியவர் என்ற காரணத்திற்காக நூற்பு ஆலைகளுக்கான சாமான்கள் வாங்குவதற்காக டைரக்டர் ஆஃப் ஹான்ட் லூம் அவர்கள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டார் என்கின்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அவர்களை ஜப்பானுக்கு அனுப்பியதாகக் குறிப்பிட்டார்கள். தொழில் அமைச்சர் அவர்களுக்கு வேண்டியவர் என்றும் குறிப்பிட்டார்கள். எனக்கு இந்த ஹான்ட் லூம் டைரக்டர் அவர்களைப்பற்றி தெரியாது. அவர்கள் நல்ல திறமையுள்ளவர்கள் என்று நாங்கள் நினைக்கின்றோம். அதற்காக நான் அவர்களை பாராட்டுகிறேன். எனக்கு அவர் வேண்டியவராகவும் இருக்கலாம், வேண்டாதவராகவும் இருக்கலாம். ஆனால், இதை எத்தனைபொருள்களில் வேண்டுமானால் சொல்லலாம் . . .

**திரு. மு. கருணாநிதி:** நான் வேண்டியவர் என்று சாதாரணமாகத்தான் சொன்னேன். அதை ஏன் நீங்கள் தவறாக எடுத்துக் கொண்டீர்கள் என்பதுதான் தெரியவில்லை . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அப்படியானால் இதை ஏன் நீங்கள் எடுத்துக் கூறினீர்கள் என்று தெரியவில்லை. ஜப்பான் நாட்டுக்கு எதற்காக இதுவரை அனுப்பவேண்டும் என்று கேட்கலாம். வெளிநாடுகளில் போய் ஒவ்வொரு கூட்டுறவு ஆலைக்கும் மெஷினரிகள் வாங்கியதில் நமக்கு சுமார் 3 லட்சம் ரூபாய்க்கு லாபம் கிடைத்திருக்கிறது. (காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பக்கமிருந்து ஆரவாரம்) 15 சதவிகிதம் டிஸ்கௌன்ட் கிடைப்பதற்குப் பதிலாக இந்த அதிகாரி நேரிடையாகப் போனதின் காரணமாக 25 சதவிகிதம் டிஸ்கௌன்ட் கொடுத்தார்கள். தனியாக இந்த அதிகாரி வேண்டியவர் என்று சொன்னதை நிரூபிக்க முடியுமா என்று கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். வேண்டியவர் அல்ல என்பதும் நிரூபிக்கப்பட்டது. இதை கேட்கவில்லையானால், சில பத்திரிகைகளில், அவர்கள் பத்திரிகையைப்பற்றி சொல்லவில்லை, மற்ற பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் இதைப்பற்றி செய்தி வரலாம். இன்ன அதிகாரி இன்னின்ன மந்திரிகளுக்கு வேண்டியவர் என்று போட்டு விடுவார்கள் பத்திரிகைகளில். அதை மறுக்கவில்லை என்றால் ஏதோ இதில் உண்மையிருக்கிறது என்று மக்கள் நம்பிவிடுவார்கள். இந்த மாதிரிதான் இன்று சில முறைகளைப் பார்த்தேன். எதிர் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் இந்த முறையை கையாண்





டார்கள். பொதுவாக மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று கொண்டு வந்துவிட்டு இதைப்பற்றி பேசும் போது இரண்டு வார்த்தைகள் பலமாக அடிப்பட்டது. குற்றம் வெட்கம் என்கின்ற இரண்டு வார்த்தைகள்தான் அவை. இதில் யார் குற்றம் செய்தார்கள், யார் வெட்கப்பட்டது என்பது வேறு விஷயம். மந்திரிசபையை பலமாக தாக்க வேண்டும். அமைச்சர்களைத் தாக்கவேண்டும் என்கின்ற நோக்கத்துடன்தான் இவ்விதம் எல்லாம் பேசப்பட்டது என்று நினைக்கிறேன். ஒரு பக்கத்தில் சென்னை மாநில ஆட்சியை எல்லோரும் புகழ்கிறார்கள். சமீபத்தில் ஒரு நண்பர் அவர்கள் காங்கிரஸ்காரர் அல்ல. அமெரிக்கா போய் சுற்றி பல இடங்களையும் பார்வையிட்டதாக சொன்னார்கள். அதோடு அவர் சொன்னார், அமெரிக்காவில் எல்லா இடங்களிலும் சென்னையைச் சேர்ந்தவர் என்று கேள்விப்பட்டதும் அங்கு (சென்னையில்) நல்ல நிர்வாகம் நடப்பதாக புகழ்கிறார்கள் என்று சொன்னார்கள். அது மட்டுமல்ல, எதிர்கட்சியிலுள்ள முக்கியமான தலைவர் சென்னையிலுள்ள நிர்வாகத்தைப்பற்றி சொல்லிவிட்டு, சென்னை மந்திரி சபையில் லஞ்சம் என்று சொல்ல முடியாது என்று அவர்களே சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது மந்திரிசபையைப்பற்றி எப்படி தாக்குவது என்று நினைத்துதான் எல்லோரும் இதையே சொன்னார்கள். இந்த தீர்மானத்தை பிரேரேபித்த திரு. மதியழகன் அவர்கள் முதலில் பேசினார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு மதிப்பில்லாமல் போய்விடுமே என்று எண்ணி நெப்பாட்டிஸம் என்று எல்லாம் கடுமையாக, பலவற்றைச் சொன்னார்கள். அதே நிலைமைதான் கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் ஏற்பட்டது. இதே நிலைமை மற்றவர்களுக்கும் ஏற்பட்டது. இதைப்பற்றி அவர்கள் சிந்திப்பார்ப்பார்களேயானால் நான் இதைப் பற்றி இன்னும் பேசி அதிக நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டிய தேவையில்லை என்று நினைக்கிறேன். மற்றபடி எதிர்பார்த்த படிதான் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள். கனம் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு எப்போதும் குறைகள் உண்டு. முக்கியமாக நான் சொல்ல விரும்புவது. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சிறந்த தமிழ் புலவர், துணைத் தலைவர் அவர்களும் தமிழ் புலவர்தான். எல்லோரும் தமிழ் மீது அன்பு கொண்டவர்கள். எனக்கும் தமிழ் மீது மிகுந்த அன்பு உண்டு, பற்றுதல் உண்டு. அப்படிந்தான் கருதுகிறேன். அதே மாதிரி திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் பலருக்கும் தமிழ் மீது அன்பு உண்டு, பற்றுதல் உண்டு. இந்த நிலையில் நக்கீரர் பரம்பரையை ஏற்று கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்ல வேண்டியதில்லை என்பதைதான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வேறு சில உறுப்பினர்கள் நேற்றும் நேற்று முன்தினமும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப்பற்றி பேசினார்கள். இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த மதியழகன் அவர்கள் பேசும்போது அவர்களிடம் அதிகமான காரம் இருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் அமைதியாக பேசினார்கள். ஒன்றரை மணி நேரம் அவர்கள் பேசலாம் என்று அனுமதிக்கப்பட்டிருந்த

[திரு. எம். பக்தவத்சலம்] [24th October 1964

போதிலும் ஒரு மணி நேரத்தோடு அவர்கள் பேசி முடித்து விட்டார். அதற்கு மேல் அவர்களுக்குப் பேசுவதற்கு ஒன்றும் இல்லையோ என்னவோ தெரியவில்லை. ஆனால் எங்கள் ஜில்லாவை சேர்ந்த தாம்பரம் பிரதிநிதி அவர்கள் மிக ஆவேசமாக பேசினார்கள். அதாவது மந்திரிகள் மீது ஏதாவது குற்றங்களை சொல்லவேண்டும் என்கிற முறையில்தான் அவர்கள் பேசினார்கள். டைரக்டர் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன் அவர்கள் 5, 6 ஆண்டு
12-30 p.m. களாக இருக்கிறார்கள். அப்போதே திரு. மகாலிங்கம் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். முன்பு கல்வி அமைச்சராக ஸ்ரீ சுப்பிரமணியம் இருந்தபோது அவர் நியமிக்கப்பட்டார் என்று சொன்னார்கள். ரொம்ப நாட்களாக அவர் எந்த ஊர், எந்த ஜாதி என்று கூட எனக்குத் தெரியாது. எப்போது அவரைப்பற்றித் தெரியும் என்றால் அவர் விசாகப்பட்டணத்தில் எக்ஸிகூட்டிவ் என்ஜினியராக இருந்தார். ஆந்திரா நம் ராஜ்யத்தோடு சேர்ந்திருந்தபோது ஆந்திராவில் இருந்தார். எனக்கு அவரைப்பற்றி எப்படி தெரிந்தது என்றால், சாதாரணமாக ஆந்திரர்கள் தமிழ் அதிகாரிகளைப்பற்றி நல்ல பெயர் சொல்லமாட்டார்கள். தமிழ் நாட்டைப்பற்றிக் குறை கூறுவார்கள். ஆனால் இவரைப் பற்றி என்னிடம் வந்து இவர் ரொம்ப நல்ல என்ஜினியர், இவரை மாற்றாதீர்கள் என்று சொன்னார்கள். இன்னொரு என்ஜினியர் இதே மாதிரி பெஜவாடாவில் இருந்தார். அவர்கள் அந்த முறையில் சொன்னால் அந்த அதிகாரிகள் மிகவும் கெட்டிக்காரர்கள் என்று நான் எடுத்துக்கொள்ளுவது வழக்கம். டைரக்டர் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன் எனது சொந்தக்காரர் என்று சொன்னார்கள். எப்படி, என்ன ரிலேஷன் என்று கேட்டால், குழு வேண்டுமென்று சொல்லுகிறார். என்னுடைய ரிலேஷனைப் பார்க்க ஒரு ஆராய்ச்சிக் குழு வைத்துப் பார்க்கவேண்டுமென்று சொல்லுகிறார். அதே மாதிரித்தான் ஒவ்வொன்றும். திரு. அளகேசன் அவர்களுடைய மருமகன் அமெரிக்காவிற்குப் போனார். அதைப்பற்றி இந்த அரசாங்கத்திற்கு ஒன்றும் தெரியாது. இந்த அரசாங்கத்திற்கு சம்பந்தமும் இல்லை. மத்திய அரசாங்கத்திற்கும் சம்பந்தமும் இல்லை. இங்கே பயிராளர் மன்றம் என்று இருக்கிறது. அந்த மன்றத்திற்கும் அமெரிக்காவில் இருக்கிற மன்றத்திற்கும் எக்ஸ்சேஞ்ச் ப்ரொக்ராம் இருக்கிறது. சொந்தக்காரர் போனார். அவரை அனுப்பிவிட்டார்கள் என்று சொல்லிவிடுவோமே என்று சொன்னால் எது வேண்டுமானாலும் சொல்லலாம். உள்துறை அமைச்சரைப்பற்றி அவருடைய மகனுக்கு டெபுடி கலெக்டர் வேலை ஆகிவிட்டது என்று சொன்னார்கள். டெபுடி கலெக்டர் அல்ல, டெபுடி ரிஜிஸ்ட்ராராக பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று சொன்னவுடன், சிபாரிசு செய்து விட்டார்கள் என்று சொன்னார். இப்படியே சொல்லிக்கொண்டே போகலாம். அதற்கு முடிவே இல்லை. அப்புறம் என்னுடைய மகள் சோஷியல் வெல்ஃபேர் போர்டில் இருக்கிறாள். சென்ட்ரல் சோஷியல் வெல்ஃபேர் போர்டில் அங்கு இருக்கிறவர்கள் நியமித்திருக்கிறார்கள். அது



24th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

சம்பளம் வாங்கும் உத்தியோகம் அல்ல. நியமித்திருக்கிறார்கள், வேலை செய்கிறார்கள் என்று சொல்லிவிட்டு விடுவோமே, பார்த்துக் கொள்ளலாம், என்ற முறையிலே திரு. முனு ஆதி அவர்கள் குற்றம் சாட்டினார்கள். குற்றம் என்றால் எத்தகைய குற்றம் சாட்ட முடிந்தது என்று எடுத்துக் காட்டத்தான் இதைச் சொன்னேன். நான் இதையெல்லாம் சீரியஸாக எடுத்துக்கொள்வதில்லை. எதிர்க் கட்சி என்ன நிலைமையில் இருக்கிறது, எவ்வளவு தூரம் போகிறது என்று மேலும் தெளிவுபடுத்தக் கூடிய முறையில் இன்று விவாதங்கள் நடைபெற்றன. ஆனால், இவ்வளவு நடக்கிறது இங்கே. இன்றைக்கு சுதந்திரா கட்சித் தலைவர் இல்லை. ஏன் இன்றைக்கு இல்லாமல் போய் விட்டார் என்று தெரியவில்லை. அவர்கள் பேசும் போது, நான் கிண்டல் செய்கிறேன் என்று சொன்னார். நான் எதற்காக கிண்டல் செய்வது? கிண்டல் செய்வது இல்லை. ஆங்கிலத்தில் இன்ஸினுவேஷன் என்று சொல்லுவது உண்டு. அதிலே கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கலியாணசுந்தரம் கை தேர்ந்தவர். (திரு. மீ. கலியாணசுந்தரம்: இஸ் இட் எ காம்ப்ளிமெண்ட்?) எஸ்; காம்ப்ளிமெண்ட் தான். இன்சினுவேஷன் பண்ணலாம். இன்ஸினுவேஷன் பண்ண உரிமை இருக்கிறது. எப்படியோ வியாபாரிகளை ஒழிக்கவேண்டும், ஆனால் வியாபாரிகளை அடியோடு அகற்றுவதற்கில்லை. வியாபாரிகளிடத்தில் அக்கறை இருக்கிறது. இப்படியே நுழைந்து விடுவது. அதில் ஆட்சேபனை இல்லை. இதைப்பற்றி பின்னாலே பதில் சொல்லப் போகிறேன். அம்மாதிரி திரு. கணேசன் அவர்கள் ஹிந்தி கூடவே கூடாது என்றால், எத்தனை நாட்களாக கூடவே கூடாது என்று ஏற்பட்டது, இதை சுதந்திரா கட்சித் தலைவர் என்ற ஹோதாவில் சொல்லுகிறாரா என்று கேட்டால், கிண்டல் அது. அல்லது எதிர் கட்சியினர் இருக்கிறார்கள். திடீரென்று உபவாசம் இருக்கிறார்கள். சட்டசபை நடக்கும்போது வரமாட்டோம் என்று சொல்லுகிறார்கள். அதைப்பற்றிச் சொன்னால், கிண்டல் அது. இதெல்லாம் கிண்டல் ஆகாது. இன்சினுவேஷன் பண்ணலாம். ஆனால் கல்சரோடு பண்ணவேண்டும். அதே மாதிரித்தான் நகைச்சுவை. நகைச்சுவை என்று இருக்கிறதே அதை யாரும் கையாள முடியாது. சில பேர் அதை கையாண்டால் ஆபாசமாகப் போய் விடுகிறது. ஹ்யூமர் என்பது ஆங்கில இலக்கியங்களைப் படித்திருக்கிறவர்களுக்குத் தெரியும். எல்லோரும் அதை கையாளுவதில்லை. திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கூட சில சமயத்தில் கீழே இறங்கிவிடுகிறார், ஆத்திரம் மேலிட்டால். எப்போதோ அந்த மாதிரி; எப்போதும் அல்ல. அவர் இன்ஸினுவேஷன் கையாளுகிறார் என்றால் நாம் இப்படியா காப்பி அடிப்பது? உற்றார், உறவினர், உங்க அப்பன், பாட்டன், யார் அப்பன் சொத்து என்று இப்படியெல்லாமா பேசுவது? இது திறமையா என்று கேட்கிறேன். தெரியாமல் பேசுவது. ஏதோ குறை சொல்ல வேண்டும். வேறு சொல்லுவதற்கில்லை என்பதற்காக ஏதாவது சொல்லவேண்டுமென்று ஏதாவது சொல்லுவது. இது திறமையா என்று கேட்கிறேன்?

இப்போது முதலிலே உணவுப் பிரச்னையை எடுத்துக்கொள்ளுகிறேன். கடைசியாக எதிர் கட்சித் தலைவர் அவர்கள் அதைப் பற்றி வற்புறுத்திப் பேசினார்கள். மற்றதையெல்லாம் விடவில்லை. கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் இதையே ஒரு பிரச்னையாகக் கொண்டு வந்தார்கள். அவர்கள் கொண்டு வந்தது சரி. டாக்டர் நடராஜன் அவர்களே குற்றம் கண்டிருக்கிறார் மந்திரி சபை மீது என்று சொன்னார்கள். குற்றம் காணலாம். இந்த கட்சியில் இருக்கிறவர்கள்கூட குற்றம் காணலாம். அவர் பேச்சை நானும் கேட்டேன். டாக்டர் நடராஜன் அவர்களின் பேச்சில் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுவது, நம்பிக்கை இல்லை என்பது கிடையாது. உணவுப் பிரச்னை உண்மையில் கவலை அளிக்கும் பிரச்னை என்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். அதைப் பற்றி அரசாங்கம் உணராமல் இல்லை. அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகிறது. மற்ற மன்றத்தில் நானே ஒரு மோஷன் கொண்டு வந்திருக்கிறேன். உணவுப் பிரச்னையை விவாதிக்க நானே ஒரு மோஷன் கொண்டு வந்து அங்கே விவாதம் நடக்கிறது. கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கொண்டு வந்தது சரி. அதை நான் வரவேற்கிறேன். வரவேற்கிறேன் என்றால், குற்றம் செய்து விட்டேன் என்று அல்ல. நிலைமையை விளக்க அது வாய்ப்பு அளிக்கிறது. அவர்கள் எடுத்துக்கொண்டு வந்ததை நான் பாராட்டுகிறேன். அதற்காக நான் வருத்தப்படவில்லை. அவர்கள் அவர்களுடைய கொள்கையை விளக்கினார்கள். வியாபாரிகளை அடியோடு விட்டு விட்டு அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். சுதந்திராக் கட்சியினர், சிறப்பாக தலைவர் அவர்கள், நீங்கள் தலையிட்டதால்தானே தொல்லை வந்தது என்று சொன்னார்கள். திடீரென்று எப்படி இப்படி வந்தது என்று எதிர்க் கட்சித் தலைவர் கேட்டார்கள். எப்படி வந்தது என்றால், சென்ற ஆண்டு வரையில் ஜூன் மாதம் வரையில் விலை நிர்ணயம் இல்லை. விலை கட்டுப்பாடு இல்லை. ஆனால், நாம் கவனித்தது என்ன? ஆண்டுதோறும் விலை ஏறிக்கொண்டு வருகிறது என்று சொல்லப்பட்டது உண்மைதான். நிலைமை ஓரளவுக்கு கவனித்துக் கொண்டு வரப்பட்டது. சென்ற ஆண்டைவிட ஜூன் மாதத்தில் விலை ஏறிக்கொண்டு இருந்தது. மேலும் ஏற இடம் கொடுக்கக் கூடாது, விலை ஏறுவதற்கு எத்தனையோ காரணங்கள் இருந்தாலும் இடம் கொடுக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு செய்யப்பட்டது, இதுவும் ஒன்று. மற்றொன்று, இந்த மாநில ஆட்சிக்கு உரிமை இல்லாமல் இல்லை; அட்டானமி இல்லாமல் இல்லை; உணவு என்பது இந்த மாநிலத்தைப் பொறுத்ததுதான்; மாநிலம் பொறுப்பு ஏற்றுக்கொள்ளுகிறது. ஆனால் அகில இந்தியாவுக்கும் சேர்ந்து கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது. இங்கே பற்றாக்குறை இல்லை என்றாலும் கேரளத்தில் பற்றாக்குறை இருக்கிறது. மகாராஷ்டிரத்தில் பற்றாக்குறை இருக்கிறது. ஒன்றுக்கொன்று பரிமாறிக்கொள்ளவேண்டியிருக்கிறது. இன்றைக்கு நாம் இணைந்து



தனியாக வாழ முடியாது. அகில இந்திய ரீதியில் நாம் கவனிக்க வேண்டும். கேரளாவில் கட்டுப்பாட்டை சரியாகக் கையாளாததால்தான் இந்தநிலைமை ஏற்பட்டது என்று முன்பே விளக்கினேன். அதிக பட்ச விலை, குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டது. அதுதான் காரணம். ஏன் அதிக பட்ச விலையை நிர்ணயித்தபோது அரசாங்கமே ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் குற்றம்சாட்டினார்கள். அரசாங்கமே எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளுவதில் சில பாதகம் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த முறையில் சொல்லி இன்ஸினுவேட் செய்தார்கள். ஏற்றுக்கொள்ளாததற்கு வியாபாரிகள் மீது இருக்கிற அக்கரை, சலுகை தாட்சண்யம் ஏதாவது ஒன்று என்று சொன்னார்கள். அதெல்லாம் ஒன்றும் இல்லை. எத்தனையோ முறை அதைப் பற்றி நான் விளக்கியிருக்கிறேன். அதுதான் பரிபூர்ணமாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாததன் காரணம். இதேதான் இன்றையதினம் மத்திய அரசாங்கத்தின் கொள்கை; மற்ற மாநில ஆட்சிகளின் கொள்கையும் இதுதான். இரண்டு நாட்களுக்கு முன்பு நம் பிரதம மந்திரியோடு கூட பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். நானும் சில கருத்துக்களைத் தெரிவித்தேன். அந்த முறையில் பேசிக்கொண்டிருந்தேன். அவர்களும் இதே கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். வியாபாரிகளையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் லாபம் சம்பாதிக்கவேண்டும் என்று அல்ல. அவர்களும் ஓரளவு பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும்; அதை அரசாங்கம் கண்காணிக்கவேண்டும்; எல்லாவற்றையும் அரசாங்கம் தலையில் போட்டுக்கொண்டிருந்தால் பாதகம் ஏற்படும்; அதனால் மக்களுக்கும் பாதகம் ஏற்படும்; உழைக்கிற விவசாயிகளுக்கும் பாதகம் ஏற்படக் கூடாது; மக்களுக்கும் பாதகம் ஏற்படக்கூடாது; வியாபாரிகளும் இருக்கட்டும்; கட்டுப்பாடு இருக்கட்டும்; அவர்களும் கட்டுப்பாடுகளுக்கு உட்படட்டும்; நான் வேறு இடங்களில் விளக்கியது போல விவசாயிகளைப் பொறுத்த மட்டில், குறைந்தபட்ச கண்டிரோல், 'மினிமம் கண்டிரோல்' வைத்திருக்கிறோம். விவசாயிகளுக்கு என்று அதிகபட்ச விலை, அந்த விலைக்கு மேல் விற்கக்கூடாது என்று சொல்லுகிறோம். அதுவும் கண்டிரோல்தான். ஆனால், அந்தக் கண்டிரோல் கூட கூடாது என்று திரு. சா. கணேசன் கட்சியினர் சொல்லுகிறார்கள். அது இல்லாமல் இருக்க முடியாது. மக்களுடைய நன்மையை உத்தேசித்து ஓரளவுக்குக் கண்டிரோல் வைத்திருக்கிறோம். விவசாயிகள் ஒரு குறிப்பிட்ட பயிரை பயிரிடவேண்டும் என்று சொன்னால் அதைப் பயிரிடவேண்டும். 'எனக்கும் நிலம் இருக்கிறது, சாகுபடி செய்யாமல் தரம்பாக வைத்திருப்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது' என்று சொன்னால் அந்த உரிமையை ஒப்புக்கொள்ள முடியாது. விவசாயிகளுக்கு ஓரளவு கண்டிரோல் என்றால் அதை கூட ஆட்சேபிக்க முடியாது. விவசாயிகளைப்

[திரு. எம். பக்தவத்சலம்] [24th October 1964

பொறுத்தவரையில் குறைந்தபட்ச கண்டிரோல், மினிமம் கண்டிரோல்' வைத்திருக்கிறோம். அந்தக் கண்டிரோலுக்கு உட்பட்டு, தாங்கள் விற்கக்கூடிய தானியங்களை விற்றால், அதை வாங்கி வியாபாரம் செய்கிற வியாபாரிகளுக்கு 'நெசசரி கண்டிரோல்', அவசியமான கண்டிரோல் வைத்திருக்கிறோம். கண்டிரோல் பரிபூரணமாக வேண்டும் என்று நான் கூறவில்லை, எங்கள் பக்கத்தில் இருப்பவர்கள் சொல்லவில்லை, மத்திய அரசாங்கத்திலும் யாரும் கூறவில்லை. கண்டிரோல் அதிகமாக இருந்தால் தொல்லை. அதற்காக கண்டிரோல் தொல்லை கொடுக்கிறது, மக்கள் எப்படியாவது போகட்டும் என்று அதையும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எந்த அளவுக்கு கண்டிரோல் வேண்டுமோ அந்த அளவுக்கு கண்டிரோல், வைத்திருக்கிறோம். ஆகவே குறைந்த பட்ச அளவு கண்டிரோல், 'மினிமம் கண்டிரோல்' விவசாயிகளுக்கு அவசியமான கண்டிரோல் வியாபாரிகளுக்கு, அதாவது 'நெசசரி கண்டிரோல்' என்று சொன்னோம். வியாபாரிகள் ஓரளவுக்கு பண்டங்களை வாங்கி விநியோகத்தில் ஈடுபடவேண்டும் என்று சொன்னோம். அதுதான் உங்கள் தவறு கொள்கை அளவிலே' என்று சொல்லுகிறார்கள். கொள்கை அளவிலே அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். வியாபாரிகளே கூடாது என்று சொல்லுகிறார்கள். ஆனால் சில்லரை வியாபாரிகள் இருக்கட்டும் என்று சொல்லுகிறார்கள். அதற்கும் தீவிரமாக சொல்ல முடியாதா? 'ரீடைல் வியாபாரிகள்' 10 மூட்டைகள் வைத்துக்கொண்டிருக்தால், 5 மூட்டைகளைக் கொடுத்தவுடன்; ஸ்டாக் இல்லை என்று கதவை மூடிவிடுகிறார்கள். ஆகவே ரீடைல் டீலர்ஸ்' வேண்டாம் அரசாங்கமே 'ரீடைல்' ஷாப்புகளையும் வைத்து நடத்தலாம் என்றும் சொல்லலாம் வாதத்திற்கு வேண்டுமானால் சொல்லலாம். திரு. கலியாணசுந்தரம் அவர்களைவிட இன்னும் கொஞ்சம் தீவிரமாகக் கூட பேசக்கூடும். அப்படியும் வாதம் செய்யமுடியும் என்பதை நான் இந்த சமயத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதில் தீவிர வாதம் என்பது அல்ல. மக்களுக்கு எது நல்லது, மக்களுக்கு உகந்தது எது, மக்களுக்கு உடனடியாக திருப்தியளிக்கக்கூடியது எது, அதைத்தான் நாம் பார்க்க வேண்டும். அந்த அளவிலேதான் அரசாங்கம் கட்டுப்பாடுகளை வைத்து, அதைக் கண்காணிக்கிறோம். வியாபாரிகள் நியாயமான லாபம் வைத்துக் கொள்ளட்டும். லைசென்ஸ் கொடுக்கிறோம்; எல்லோரும் 'ஸ்டாக்' இருப்பதை டிக்லரேஷன் செய்யவேண்டும் என்று சொன்னோம். 'இதையெல்லாம் நான் அப்பொழுதே சொன்னேனே' என்று கூறுவது சுலபம். 'ஐ டோல்டு யு ஸோ' என்று சாதாரணமாகச் சொல்லுவது மிகவும் சுலபம். சில பேர்கள் ரொம்ப தீர்க்கதரிசிகளாக இருக்கலாம். அரசாங்கத்தில் தேச பக்தர்கள் இருக்கலாம். ஆற்றல் உள்ளவர்கள் இருக்கலாம், அனுபவம் உள்ளவர்கள் இருக்கலாம், எல்லோரும் தீர்க்கதரிசிகள் என்று சொல்லுவதற்கு இல்லை. வியாபாரிகள் இவ்வளவு தவறுதலாக நடந்துகொள்வார்கள். நியாயமான இலாபத்தில் வியாபாரம் செய்வோம் என்று இல்லாமல்



24th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

'இங்கே தான் விலை கட்டுப்பாடு செய்கிறார்கள், கேரளாவில் அதிக விலைக்குக்கேட்கிறார்கள், இங்கே அந்த விலை கொடுக்க வில்லை மக்கள் இங்கே எப்படியாவது போகட்டும் என்ற நிலைக்கு மொத்த வியாபாரிகள் வருவார்கள் என்று எல்லோரும் எதிர்பார்த்திருக்க முடியாது. இருநதாலும், படிப்படியாகத்தான் இந்த நிலைமையை நன்றாக உணாந்துக் கொண்டோம். திடீரென்று ஸ்தம்பித்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்கு இதுதான் மூல காரணம். ஆனால் தொடர்ந்து அரசாங்கம் வாளாக இருக்கவில்லை, பார்த்துக் கொண்டு இருக்கவில்லை. தொடர்ந்து என்னென்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ, அந்த நடவடிக்கைகளை அதிகாரிகள் மூலமும் கூட்டுறவு சங்கங்கள் மூலமும் எடுத்துக்கொண்டுதான் வந்திருக்கிறோம். மொத்தத்தில் ஜில்லாக்களில் எங்கு எங்கு பற்றாக்குறை இருக்கிறது என்று அறிந்து ஆங்காங்கு இருக்கிற தானியங்களை எடுத்து பரிமாறி கொடுத்துக்கொண்டு வருகிறோம். கேரளாவில் அதிக விலைக்குக் கேட்கிறார்கள் என்று கருதி வியாபாரிகள் கேரளாவுக்கு அனுப்புவதற்கு மட்டும் அக்கறை கொண்டிருந்தார்கள். இங்கு விநியோகிக்க முடியாது என்று பொதுவாக சொல்லிக்கொண்டிருந்தார்கள். இருந்தாலும், அந்த நிலையை சமாளிக்க சென்னை நகரத்தில் நியாய விலைக் கடைகள் ஓரளவுக்கு இருக்கின்றன. மொத்தத்தில் 100, 150 கடைகள்தான் இருக்கின்றன. தமிழ் நாடு முழுவதற்கும் 700 நியாயவிலைக் கடைகள்தான் இருக்கின்றன. அதுவும் அங்கே 'ஸப்ஸிடைஸ்டு பிரைஸில்' கொடுக்கிறோம். மத்திய அரசாங்கத்தினுடைய 'ஸப்ஸிடைஸ்டு பிரைசில்' கொடுக்கிறோம். மத்திய அரசாங்கம் கொடுக்கிற ஸ்டாக்கிலிருந்து கொடுக்கிறோம். அது ரொம்பக் குறைந்த விலையாக இருக்கும். பெரும்பாலானவர்கள் அந்தக் கடைகளில் வாங்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். சில பேர்கள் அங்கே வாங்கி வியாபாரம் செய்துகொண்டிருந்தார்கள். இதில் குற்றம் என்னவென்றால் சாதாரணமாக வியாபாரிகள் கடைகளில் அரிசி இல்லை என்று திடீரென்று நிறுத்தியதுதான்.

மற்றொன்று இப்பொழுது சொல்லுகிறேன். நாம் விவசாயத்தில் இப்பொழுது தோல்வி அடையவில்லை. விவசாயத்தில் நமக்கு போதிய உற்பத்தி ஏற்படவில்லை என்பது உண்மைதான்; யாரோ ஒரு கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். ரஷ்யாவில் என்ன நடந்தது என்று சொன்னார்கள். கனம் உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள். ரஷ்யாவில் ஏராளமான நிலம் இருக்கிறது. உயர்ந்த விஞ்ஞான ஆராய்ச்சி இருக்கிறது. அற்புதமான சாதனைகள் சாதித்துக்கொண்டு வருகிறார்கள் அவர்கள். ஆனால், அங்கே விவசாயத்தில் ரொம்ப கெடுபிடி இருந்தது. முன்பு இருந்த பிரதம மந்திரி குருசேவ் அவர்கள் எத்தனையோ விவசாய அமைச்சர்களை டிஸ்மிஸ் செய்தார்கள் திருப்தி இல்லாமல். இப்பொழுது அவரைப் பதவியிலிருந்து இறக்கியது விவசாய சம்பந்தமாக அல்ல. இப்பொழுது வேறு காரணங்களுக்காக அவர் மாறி, வேறு பிதம மந்திரி, வேறு கட்சி

[திரு. எம். பக்தவத்சலம்] [24th October 1964

காரியதரிசி வந்திருக்கிறார்கள். ஆனால் நான் சொல்லுவேன்; 1917-ம் ஆண்டிலே அவர்கள் ஆட்சியை ஸ்தாபித்தனர். அங்கே அதிகமாக நிலம் இருக்கிறது; இங்கே நமக்கு இருக்கிற நிலம் குறைவு, நிலம் அங்கே அதிகமாக இருந்தாலும் விவசாயத்தில் அவர்கள் இன்னும் வெற்றியைக் காணமுடியவில்லை என்பதை அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். மற்றும் பொதுவாக புள்ளிவிவரம், அகில இந்திய புள்ளிவிவரம் அங்கே 'டெபிஸிட்' இங்கே 'டெபிஸிட்' இதையெல்லாம் சொல்லுவதில் பிரயோசனம் இல்லை. தமிழ் நாட்டு நிலைமைக்கு தமிழ் நாட்டு ஆட்சி பொறுப்பு, தமிழ் நாட்டு நிலைமைக்கு நாங்கள் பொறுப்பு. தமிழ் நாட்டில் உற்பத்தி பெருகிக்கொண்டிருக்கிறது. போதுமான அளவு பெருகவில்லை. முன்பே இந்த மன்றத்தில் நான் கூறியிருக்கிறேன். அதற்கு முக்கிய காரணம் ரசாயன உரத்தை அதிகமாக உபயோகிக்கவேண்டும். ஒரு காலத்தில் போதிய அளவில் ரசாயன உரம் கிடைக்கவில்லை. ஒரு காலத்திலே விவசாயிகள் போதிய அளவில் ரசாயன உரத்தை உபயோகிப்பதற்கு முன்வரவில்லை என்பதுதான் அதற்கு முக்கிய காரணம் என்று கூறப்பட்டது. தீவிர சாகுபடித் திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். தீவிர சாகுபடித் திட்டம் சரியாகத் தான் நடைபெறுகிறது. தஞ்சாவூரில் தீவிர சாகுபடி திட்டம் நல்ல முறையில்தான் நடைபெற்று வருகிறது. எல்லா பிளாக்குகளி லும் நான் பார்க்கவில்லை. உதாரணமாக திருவையாறு பிளாக்கில் 1955-56-ல் ஏக்கருக்கு அரிசி 1,016 ராத்தல் உற்பத்தியாகியிருக் கிறது. 1958-59-ல் 1,900 சில்லரை ராத்தல் உற்பத்தியாகியிருக் கிறது. உற்பத்தி ஓரளவுக்கு பெருகியிருக்கிறது. கனம் உறுப் பினர் திரு. மதியழகன் அவர்கள் யாரோ ஒரு நிபுணர் சொன்ன தாகச் சொன்னார்கள். அதற்கப்புறம் எத்தனையோ நிபுணர்கள் வந்து பார்த்துவிட்டு திருப்தி தெரிவித்திருக்கிறார்கள். ஏதோ நான்கு இடத்தைப் பார்த்துவிட்டு, சில பேர்கள் சொல்லுவதை வைத்து அவர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். 'போர்டு பவுன்டேஷனைச் சேர்ந்த டாக்டர் 'பிரௌன்' அவர்கள் தஞ்சா வூரை சுற்றிப்பார்த்து விட்டு, ரொம்ப நல்ல முறையில் நடப்ப தாகச் சொல்லியிருக்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து சில குழு வினரை தஞ்சாவூருக்கு மத்திய அரசு அனுப்பியது. இங்கே தொடர்ந்து அவர்களுடைய பிரதிநிதிகள் இருக்கிறார்கள். ஒரு பொறுக்குக் குழு முதல் தரமான ஒரு பாக்கேஜ் திட்டப் பிராந் தியத்தையும், மிகப் பின்னணியில் உள்ள ஒரு பாக்கேஜ் திட்டப் பிராந்தியத்தையும் ஆக இரண்டையும் பார்க்கவேண்டுமென்று சொன்னார்கள். முதல் தரமான பிராந்தியத்தைப் பார்க்கவேண்டு மென்றால் தஞ்சாவூர் தீவிர சாகுபடித் திட்டத்தைப் பாருங்கள் என்று, அவர்களுக்கு வேண்டியதை சுற்றிக் காட்டும்படி கலெக்டர் அவர்களிடம் தெரிவித்தோம். அவர்களும் சுற்றிப் பார்த்துவிட்டு 'ரொம்ப திருப்தி, நல்ல முறையில் நடக்கிறது' என்று சொன்னார் கள். திருப்தியாக நடக்கிறது என்று சொல்லிவிட்டதனால் 'காம்ப்லஸென்ஸி' இல்லை. இன்னும் எவ்வளவோ செய்ய வேண் டியது இருக்கிறது. தீவிர சாகுபடி திட்டம் சம்பந்தமாகவும்



24th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

செய்யவேண்டியது இருக்கிறது. 'கிராஷ் ப்ரோகிராம்', மற்ற திட்டங்களும் இருக்கின்றன. இப்பொழுது அடிக்கடி அதைப் பற்றி நிபுணர்களைக் கலந்து ஆலோசிக்கிறோம். திட்டக் குழு வையும் கலந்து ஆலோசிக்கிறோம், பொருள் வசதி வேண்டும். அந்தத் திட்டங்களெல்லாம் இப்பொழுது நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகின்றன. அவைகளினால் கணிசமான அளவுக்கு உற்பத்தி பெருகக்கூடும். நமக்கு நிலம் குறைவாக இருந்தாலும் அந்த அளவுக்கு நாம் உற்பத்தியைப் பெருக்கலாம் என்ற எண்ணத் தோடுதான் இந்தத் திட்டங்களையெல்லாம் மேற்கொண்டிருக் கிறோம். உற்பத்தி பெருகிக்கொண்டு வருகிறது. இருந்தாலும், இப்பொழுது ஏறக்குறைய தமிழ் நாட்டிற்கு வேண்டிய அரிசி இங்கே உற்பத்தியாகிறது. என்றாலும், ஓரளவுக்குப் கேரளா வுக்குப் போகிறது. இப்பொழுது செய்வது போல் வியாபாரிகள் போய் வாங்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யவில்லை. அப்பொழுது ஆந்திர ராஜ்யத்திலிருந்து இவ்வளவு அரிசி கொடுக்கவேண்டு மென்றும் கேட்பதில்லை. வியாபாரிகளே போய் நெல்லூர் பச்சரிசி வாங்கிக்கொண்டு வந்தார்கள். கூட்டுறவு சங்கங்களும் வாங்கிக் கொண்டார்கள். டி.யு.ஸி.எஸ். அங்கே ஒரு ரைஸ் மில் வைத்து நெல்லை அரைத்துக் கொண்டு வந்தார்கள். மற்ற வியாபாரிகளும் புழுங்கலரிசி வாங்கிவிற்று வந்தார்கள். அந்த மாதிரி அங்கிருந்து அரிசி வந்துகொண்டிருந்தது. இங்கிருந்து கேரளாவுக்குப் போய்க் கொண்டிருந்தது. ஆனால், ஆந்திராவிலிருந்து வருவதை விட, அதிகமாக கேரளாவுக்குப் போய்கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு சிறிய உபரி தமிழ் நாட்டில் இருந்துகொண்டு தான் இருக்கிறது. அதனால் ஆந்திரத்திலிருந்து வருவது கொஞ்சம் விலை ஏறியிருக்கிறது. கட்டுப்பாடு என்றால் வியாபாரிகளுக்குப் பிடிக்கவில்லை. அகில இந்தியாவிலும் இதுதான் நிலைமை. அதனால் அங்கிருந்து வருவது நின்றது. மறுபடியும் முயற்சி எடுத்து, நீங்கள் அனுப்பவேண்டுமென்று ஆந்திர அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டோம். அனுப்புகிறோம் என்று சொன்னார்கள். அதன்பிறகு அங்கே வெள்ளம் வந்தது. அங்கிருந்து வருவது கொஞ்ச காலத்திற்குத் தடைப்பட்டது. நான் சென்ற நான்கு மாதங்களாகவே சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஒரு அரசாங்கத் திலிருந்து இன்னொரு அரசாங்கத்திற்கு அனுப்புவது என்றால் அந்த அரசாங்கத்தின் மூலமாக அல்லது அந்த அரசாங்க ஏஜண் ட்களின் மூலமாக இருக்கவேண்டுமென்று. தனிப்பட்டவர்கள் லாபத்தில்மட்டும் கண்ணும் கருத்துமாக இருப்பதால் என்ன போகிறது என்ன வருகிறது என்பது தெரியவில்லை. மத்திய அரசாங்கமும் இதை ஒப்புக்கொண்டிருக்கிறது. கேரள அரசாங் கமும் ஒப்புக்கொண்டிருக்கிறது. ஏதோ பர்த் டே பரிசாக நான் இலவசமாக கேரளாவுக்கு அரிசி கொடுத்துவிட்டேன் என்று சொன்னார்கள். கேரளா கவர்னர் இங்கே வந்திருந்தார். 'எங்களுக்கு அரிசி வேண்டியிருக்கிறது சென்னை முதலமைச்சர் அவர்களின் பர்த் டே பிரசன்ட்டாகக் கொடுங்கள்' என்று கவர்னர்

[திரு. எம். பக்தவத்சலம்]  [24th October 1964

கேட்டுக்கொண்டார். இதுவரையிலும் கேரளாவுக்கு அரிசி போய்க் கொண்டே இருந்தது. தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுக்கக் கூடாதென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டோம். அவர்கள் உத்திரவு போடவில்லையென்றால் நான் இப்படிப் போவதை நிறுத்த முடியாது. மத்திய அரசாங்கம் ஒன்று இருப்பதை நாம் மறக்க முடியாது. 'நீங்கள் நிறுத்திவிடுங்கள், எங்கள் மூலமாகப் போகட்டும்' என்று சொன்னபிறகு ஒரு லட்சம், இரண்டு லட்சம் டன் என்று போனதை நிறுத்திவிட்ட பிறகு எப்படிக் கொடுக்க மாட்டேன் என்று சொல்வது. அவர்கள் நிறுத்தி விட்டார்கள். இப்பொழுது வியாபாரிகள் கொண்டுபோக முடியாது. திருட்டுத் தனமாக ஒருவேளை கொண்டுபோக முயற்சிக்கலாம். ஆனால் அதற்கும் கண்காணிப்பு இருக்கிறது. கொண்டு போவது நிறுத்தப் பட்டதினால் 'நீங்கள் கொடுங்கள்' என்று அவர்கள் கேட்பதிலே என்ன தப்பு இருக்கிறது. கொடுக்க மாட்டேன் என்று நான் எப்படிச் சொல்லுவது. அதிகமாகக் கொடுக்க முடியாது. சரி பத்தாயிரம் டன் கொடுக்கிறேன் என்று சொன்னேன். இதை என்ன, நானா கொடுக்கிறேன்? இதைப்பற்றி ஏதோ பர்த் டே பிரசெண்ட்டாக ஏராளமான அரிசியை நான் கேரளாவுக்குக் கொடுத்து விட்டதாக இங்கே பிரமாதமாகப் பேசினார்கள்.

சுதந்திராக் கட்சி தலைவர் விலையை கட்டுப்பாடு செய்ததினால் இம்மாதிரி நிலை ஏற்பட்டு விட்டது என்று சொன்னார்கள். விலைக் கட்டுப்பாடு செய்யாவிட்டால் என்ன ஆகும்? இதைப் பற்றி டாக்டர் நடராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். கட்டுப்பாடு செய்யாமல் விட்டுவிட்டால் எல்லாம் சரியாகப் போய்விடும் என்று சொன்னால், அப்பொழுது அரிசி இருக்கிறது என்றுதானே அர்த்தம். ஆகவே அரிசி இருக்கிறது என்றுதான் நான் நம்புகிறேன். அதை மறுக்கவில்லை. அதைப் பெறுவது பற்றி அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. எனக்குக் கிடைத்த தகவல் என்னவென்றால்
" Vilation of paddy and rice declaration and requisitioning of **stocks** "
படி 175 கிரிமினல் கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. 155 பேர்கள் அரஸ்ட் செய்யப்பட்டு, அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. மற்ற கேஸ்கள் பரிசீலனையில் இருக்கின்றது. 51,113 க்விண்டால் நெல்லையும், 26,235 க்விண்டால் அரிசியையும் ரெக்விஸிஷன் செய்து அதை பெதுமக்களுக்கு வினியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆங்காங்கு உள்ள கலெக்டர்கள் இதை கவனித்துக்கொண்டு வருகிறார்கள். அது போதாது. நல்ல வேளையாக இப்பொழுது குருவை சாகுபடி ஆரம்பித்து விட்டது. குருவை விளைச்சல் குறைவில்லாமல் இருக்கிறது. கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மேலும் அதிகமாக ரிசர்வ் பாங்கு மூலம் கடன் வசதி அளிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இது மட்டும்



24th October 1964]  [திரு. எம். பக்தவத்சலம்]

போதாது. கூட்டுறவு சங்கங்கள் போதிய அளவு பக்குவமடையவில்லை என்பதினால் அரசாங்கமே இனிமேல் மேற்கொள்வது என்ற புதிய கொள்கை இப்பொழுது ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. மத்திய நிதி அமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். அவருடன் பேசினதில் 'நீங்கள் கடன் வாங்கிக் கொள்ளுங்கள், அக்காமடேஷன் கொடுக்கிறோம்' என்று அவர்கள் சொன்னார்கள். அந்த அக்காமடேஷன் பேரில் அதிகமான அளவுக்கு அரசாங்கமே கொள்முதல் செய்து கொண்டிருக்கிறது. கொள்முதல் செய்த போதிலும் அதை வினியோகிப்பது மிகவும் முக்கியமானது. இப்பொழுது கொள்முதல் செய்து, அதிகமான அளவு சென்னைக்கு லாரிகளில் வந்து கொண்டிருக்கிறது. லாரிகளில் வருவது போதாததினால் ரயிலும் வந்து கொண்டிருக்கிறது. இதைச் சரியான முறையில் வினியோகிப்பதற்கு இன்னும் சில அதிகாரிகளை நியமித்து ரீடெயில் ஷாப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இப்படி வினியோகிப்பது என்றால், ஒரு நாளைக்கு எவ்வளவு வேண்டுமோ அதற்கு கொஞ்சம் அதிகமாகவே சப்ளை செய்ய வேண்டும். அதற்கு போதுமான ஸ்டாக் இப்பொழுது இல்லை. வந்து கொண்டிருக்கிறது. ஆந்திர அரசாங்கத்திலிருந்து இப்பொழுது கொஞ்சம் வந்துகொண்டிருக்கிறது. இன்னும் சேலம், கோயம்புத்தூர், ராமநாதபுரம் போன்ற ஜில்லாக்களிலும் அரிசி இல்லை என்று கேட்கிறார்கள். அரிசி இருக்கிறதோ, இல்லையோ அரிசி கொடுங்கள் என்று கேட்பது இப்பொழுது பாஷனாகப் போய்விட்டது. உற்பத்தியாகக் கூடிய இடங்களுக்குக் கூட கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எங்கு அரிசி இருக்கிறதோ, அங்கே ரெக்விசிஷன் பண்ண வேண்டிய அவசியமிருந்தால் அவ்வாறே செய்கிறோம். அதோடு கூட இன்னும் கொஞ்சம் அதிகமாக ஸ்டாக் வரவேண்டும் என்பதற்காக ஒரிஸா முதலமைச்சர் அவர்களிடம் நேற்று முன்தினம் நான் பேசினேன். நான் சொன்னதற்காக, அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நமக்கு கொடுக்க வேண்டுமென்ற நிமித்தம் இல்லை. பத்தாயிரம் டன் கொடுங்கள் என்று சொன்னேன். இப்பொழுது 5,000 டன் கொடுக்கிறோம், பிறகு 5,000 டன் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அவரிடம், மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி வாங்கித் தருகிறேன் என்று நான் சொன்னேன். மத்திய உணவு மந்திரி அவர்களிடம் பேசி அதற்கு அனுமதி வாங்கியிருக்கிறேன். இதற்காக ஒரு தனி அதிகாரி புவனேஸ்வரத்திற்குப் போய் இருக்கிறார். முக்கியமாக சென்னை நகரத்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் கவனிக்க வேண்டும். வேறு எங்கு கவனிக்க வேண்டுமோ அந்த வகையிலும் இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. வினியோகம் செய்வதைப் பற்றி கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். சிலர் ரேஷன் வேண்டும் என்று சொன்னார்கள். ரேஷன் முறையிலே மக்களுக்கு கொஞ்சம் அதிருப்தி ஏற்படக் கூடும். தொல்லைகள் ஏற்படக்கூடும். அதைப்பற்றிக் கூட [illegible]. [illegible]

[திரு. எம். பக்தவத்சலம்] [24th October 1964

நடத்தலாம். ஆனால் இப்பொழுது எவ்வளவு அரிசியை வைத்துக் கொண்டு சமாளிக்க முடியுமென்று நாம் நினைக்கிறோமோ, அதைப் போல இரண்டு மடங்கு அரிசி இருந்தால்தான் ரேஷன் முறையில் இறங்கலாம். சில உறுப்பினர்கள், எனக்கும் காங்கிரஸ் தலைவருக்கும் அபிப்பிராய பேதம் இருப்பதாகச் சொன்னார்கள். அபிப்பிராயப் பேதம் ஒன்றும் இல்லை. காங்கிரஸ் கட்சித் தலைவர் சொன்னது என்னவென்றால்,—அதைப்பற்றி நான் இங்கே சொல்ல வேண்டியது இல்லை, இருந்தாலும் குறிப்பிட்டுச் சொன்னதினால் சொல்லுகிறேன். திரு. கலியாணசுந்தரம் அவர்களும் அதே கருத்தைச் சொன்னார்கள். முன்பிருந்த அரசாங்கம் 1953-ல் திடீரென்று ரேஷனை எடுத்துவிட்டார்கள். அப்பொழுது சௌகரியமாய் இருந்தது. அதிலிருந்து தொடர்ந்து ஏற்பட்ட அவதி என்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்து எனக்கும்தான் இருக்கிறது. திரு. கல்யாணசுந்தரம் அவர்களுக்கும் இருக்கிறது. இன்றைக்கு ரேஷன் கொண்டுவருவது சாத்தியமா என்பதைப்பற்றிச் சொல்லும்போது கார்டு சிஸ்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று சொன்னார்கள். இதைத் தீவிரமாக நாங்கள் யோசித்துக் கொண்டு இருக்கிறோம். பற்றாக்குறை இருக்கிற வரையில் கண்டிரோல் விலைக்கு ரீடெயில் ஷாப்புகளுக்கு அரிசி கொடுத்தால் இந்த ஸ்கேர் போய்விடும். இப்பொழுது ஒரு வாரத்திற்குக் கொடுத்தால், இரண்டு வாரத்திற்கு வேண்டுமென்று சேர்த்து வைக்கிறார்கள். அவர்களுக்கு கவலையிருக்கிறது. சில நாட்களில் இந்தக் கவலை நீங்கிவிடும். அப்படி கவலையிருப்பதினால் அதிகமாகக் கேட்கலாம். சில பேருக்கு இல்லாமல் போகலாம். ஃபாமிலி கார்டு முறை கொண்டு வருவதற்கு குடும்பக் கணக்கு எடுத்து விடலாம். கார்டுகள் அச்சடிக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் யோசனையும் அதுதான். சென்னை நகரில் ஃபாமிலி கார்டு சிஸ்டம் கொண்டு வரலாம் என்பது. அதற்குப் பிறகு 3 லட்சம், 5 லட்சம் ஜனத்தொகை உள்ள பெரிய நகரங்களில் நிமித்தம் இருந்தால் கொண்டு வரலாம். இப்பொழுது சென்னை நகரில் சீக்கிரத்திலேயே இந்த கார்டு சிஸ்டத்தை கொண்டு வர வேண்டும் என்ற யோசனையும் இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

1-00 p.m. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதைப்பற்றிப் பேசிய கனம் அங்கத்தினர் நிலச் சீர்திருத்தச் சட்டம், குடியானவர் பாது காப்புச் சட்டம், இவற்றைப் பற்றிப் பேசினார்கள். இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், நாம் உச்ச வரம்பு நிர்ணயித்திருக்கிறோம். அது நிறைவேற்றப்பட்டு வருகின்றது. நடுவிலே கோர்ட்டு தீர்ப்பின் காரணமாக தாமதம் இருந்தது. இப்பொழுது தீர்ந்துவிட்டது. இன்று அமுலுக்கும் கொண்டு வரப் பட்டிருக்கிறது. டெனன்சி சட்டமும், குடியானவர்கள் நியாய வாரச் சட்டமும் நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. தவறுகள் இருந்தால் கவனிக்கப்பட்டு வருகிறது. இந்த குடியானவர்கள் நியாயவாரச் சட்டம் இப்பொழுது தற்காலிகமாக இருந்து



24th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

வருகிறது. சீக்கிரத்திலேயே இதை நிரந்தரச் சட்டமாக ஆக்க வேண்டும் என்ற யோசனையும் அரசாங்கத்தில் இருக்கிறது. இந்தச் சட்டங்களையெல்லாம் எந்த வகையிலே நிறைவேற்ற முடியுமோ, அந்த வகையில் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். விவசாயிகளுக்கு நவீன சாதனங்களை வழங்கவும் அதற்கு சலுகைகள் கொடுக்கவும், உரம் வாங்குவதில் சலுகைகள் கொடுக்கவும், கடன் வசதிகள் செய்து கொடுக்கவும் தொடர்ந்து கவனம் செலுத்தப் பட்டு வருகிறது, இப்பொழுது செய்திருப்பது போதாது என்றாலும் மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்றாலும் அது செய்யப் பட்டு வருகிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்க பல திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றி வருகிறோம். கிடைக்கும் தானியங்களை நியாயமான விலையில் குறைந்த விலையில் கவலையில்லாமல் ஜனங்களுக்கு வினியோகிக்க வேண்டும் என்ற கவலை அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் வருகிறோம் என்று சொல்ல விரும்புகிறேன்.

மற்றொன்று, இந்த தீர்மானத்தை பிரேரேபித்த கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் நாங்கள் ஏதோ உத்தியோகஸ்தர்கள் நியமிப்பதில் வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டிவிட்டோம் என்றார்கள். இன்றைக்கு அட்வகேட் ஜெனரல் அரசியல் சட்டப் படி, விதிப்படி எத்தனை காலம் வழக்கறிஞராக இருந்தார்கள். என்றும், பின்னால் நீதிபதி பதவிக்கு தகுதியுள்ளவர்களா என்றும் பார்த்து நியமிக்கப்படுகிறார். முன்னே இருந்த அட்வகேட் ஜெனரல் ராஜிநாமா செய்தார்கள். இப்பொழுது அட்வகேட் ஜெனரலாக இருப்பவர் முன்பு பப்ளிக் புராசிக்யூடராக இருந்தவர், சிறந்த வழக்கறிஞர். அவர் செங்கற்பட்டைச் சேர்ந்தவர். அதுதான் ஒரு பாவம். அதற்காக நாங்கள் தவறு செய்துவிட்டதாக நினைத்து விட்டார்கள். செங்கற்பட்டிலேயே இரண்டு மூன்று முறை பப்ளிக் புராஸிக்யூட்டராக இருந்தார்கள். பிறகு முதுகளத்தூர் செஷன்ஸ் கேஸ் நடந்தபோது அங்கு வேறு யாரும் போகமுடியாததால், இவர் ராமநாதபுரத்திற்கு ஸ்பெஷல் பப்ளிக் பிராசிக்யூட்டராக அங்கே நியமிக்கப்பட்டார். அதற்கப்புரம் பப்ளிக் பிராசிக்யூட்டர் பதவி காலியான போது இவர் பப்ளிக் பிராஸிக்யூட்டராக நியமிக்கப்பட்டு பணியாற்றினார். இப்பொழுது அட்வோகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அட்வெகேட் ஜெனரலாவதற்கு முன்பு, ஒரு முறை ஹைகோர்ட்டிலே இடம் காலியான போது, மேலிடத்தில்—அவ்வளவு தான் சொல்ல முடியும், அதற்குமேல் சொல்வதற்கில்லை—'இவர்களைப் போட்டால் என்ன' என்று கருத்துத் தெரிவித்தார்கள். இவர்களைக் கூப்பிட்டு 'உயர் நீதிபதியாகப் போகிறீர்களா' என்று கேட்டபோது, 'கொஞ்ச நாட்களுக்கு வக்கீலாகவே இருக்கிறேன்' என்று அவர்கள் சொன்னார்கள். இப்பவும் ஹைகோர்ட்டையும் கேட்டுத்தான் அவரை அட்வகேட் ஜெனரலாக நியமித்தோம்.

[திரு. எம். பக்தவத்சலம்] [24th October 1964

அட்வகேட் ஜெனரல் பதவிக்கு திறமை வேண்டும்; அதுமட்டுமல்ல, அரசாங்கத்திற்கு அவரிடம் நம்பிக்கை வேண்டும். திரு. மதியழகன் சொல்லும் பேர்களையெல்லாம் போட்டு விடமுடியாது. அரசாங்கத்தின் நம்பிக்கை பெற்றவர்களாக இருக்கவேண்டும். அது ஒரு பொலிடிகல் அப்பாயின்ட்மெண்ட் என்று கூடச் சொல்லலாம். தொடர்ந்து வேறு வேறு மந்திரி சபைகள் வந்தால், அவர்கள் 'நான் தொடர்ந்து இருக்கிறதா?' என்று கேட்பார்கள். வேறு சில நாடுகளில் அது பார்ட்டி அப்பாயிண்ட்மெண்டாகக் கூட இருக்கிறது. இங்கே குற்றம், அவர்கள் செங்கல்பட்டைச் சேர்ந்தவர்கள் என்பது ஒன்றுதான், அவர் காங்கிரஸ்காரர் இல்லை. ஆகவே தகுதியற்றவர்களை நியமித்ததாகச் சொல்வதற்குக் கொஞ்சங்கூட இடம் இல்லை என்பதை கனம் அங்கத்தினர் இப்பொழுது உணர்வார்கள்.

அதே மாதிரித்தான் பப்ளிக் பிராசிக்யூடர் பதவி காலியாயிற்று. திரு. வி. பி. ராமன் அவர்களை, வேண்டியவர்களாக இருந்தார்கள், பப்ளிக் ப்ராசிக்யூட்டராகப் போட்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள். 1957-ம் ஆண்டில், ஏழு ஆண்டுகளுக்கு முன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்களுக்கு வேண்டியவர்களாக இருந்தவர்கள், அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் அவர்களுக்காக ஆஜரானவர். எதிரே யார்? . . .

**திரு. மு. கருணாநிதி:** இப்பொழுது அமைச்சர் "வேண்டியவர்" என்று சொல்லுவதற்கு என்ன பொருள் என்று புரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவர்கள் கட்சியில் மெம்பராக இருந்தார். அவ்வளவு தான். இப்பொழுது கட்சியில் இருந்து போய் விட்டார்கள். அதனால் ஆத்திரப்படுகிறார்கள். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? ஏழு ஆண்டுகளுக்கு முன் தி.மு.க. வழக்குகளில் அவர் ஆஜரானார். எதிர்த் தரப்பில் யார்? பெரிய வக்கீல் என்று பெயர் பெற்ற நம்பியார் அவர்கள்; அப்பொழுது அட்வகேட் ஜெனரலாக இருந்த திரு. வி. கே. திருவேங்கடாச்சாரி இவர்களுக்கெல்லாம் எதிராக ஆஜராகி திரு. வி. பி. ராமன் வெற்றி அடைந்தார்கள். அந்தத் திறமையை நான் பாராட்டியிருக்கிறேன். அதனால்தான் அவரை என் கேஸுக்கு அமர்த்திக் கொண்டேன். நான் முட்டாள் இல்லை. கெட்டிக்காரரைத்தான் அமர்த்தினேன். இதில் என்ன ஜாதி உணர்ச்சி? முன்பு ஜஸ்டிஸ் கட்சி இருந்த காலத்தில் கூட பிராமணர்களைத்தான் பிடிப்பார்கள். திறமையைத் தான் பார்ப்பார்கள். ஜஸ்டிஸ் கட்சிக் காலத்தில் கூட ஜாதியையும் கட்சியையும் பார்ப்பது இல்லை. ஆகவே திறமையுள்ளவர்கள் என்று தான் அவரை நியமித்தோம். என் கேசில் அப்பியரான பிறகு எவ்வளவு நன்றாக கேசுகளை படிக்கிறார், வாதாடுகிறார் என்பது எல்லாம் புரிந்தது. கனம் மதியழகன் சொல்வது போல எனக்காக அவர் இலவசமாக அப்பியர் ஆகவில்லை. பீஸ் எல்லாம் வாங்கிக் கொண்டுதான் அப்பியர் ஆனார். அவருக்கும், அவருடைய ஜூனியருக்கும் பீஸ் எல்லாம்



24th October 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

கொடுக்கப்பட்டது. அவர் தான் இப்பொழுது பப்ளிக் பிராஸிக்யூட்டராக இருக்கிறார். எனக்கு அப்பியர் ஆனதற்காக அவர் பப்ளிக்ப்ராஸிக்யூட்டர் ஆகக்கூடாது என்று சொல்வது நியாயமான வாதம் ஆகுமா?

அதே மாதிரித்தான். கனம் எதிர் கட்சித் துணைத் தலைவர் சொன்னார்கள். என் கேசில் விரோதமாக சாட்சி சொன்னவர்கள் தண்டிக்கப்பட்டார்கள் என்றும் சாதகமாக சொன்னவர்கள் சலுகை கொடுக்கப்பட்டார்கள் என்றும் சொன்னார்கள். அவரவர்களுக்கு ரெகார்டு இருக்கிறது. இதிலே தீர்ப்பு கொடுத்த ஆந்திரா நீதிபதி பொய் என்று சொல்லி இருந்த வகைகளில் கூட நடவடிக்கை எடுக்கவில்லை. நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் எடுக்கவில்லை. கனம் அங்கத்தினர் சொன்னது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. அதற்கு மாறாக என்னிடம் சிலர் கேட்டார்கள். "அப்படியெல்லாம் முன்பு பொய் சொன்னார்கள், அவர்களை அப்படியே வைத்திருக்கிறீர்களே, அது தர்மமா" என்று கேட்டார்கள். எனக்கு இந்த அக்கரன்ஸ் பற்றி விஷயமே தெரியாது. வேண்டும் என்றே துணைத் தலைவர் இம்மாதிரி குத்தாமல் குத்துவது நியாயம் இல்லை. "அவர்ளுக்குத் தெரியாமல் இருக்கலாம். அவர்களுக்கு திருப்தியாக இருக்கும் என்று அதிகாரி யாராவது செய்து இருக்கலாம்" என்று சொன்னார்கள். அப்படி யாராவது செய்து இருந்தாலும் எனக்குத் தெரியாது. அப்படி யாராவது செய்திருந்தாலும் அந்தப்பழியை நான் வாங்கிக் கொள்ளுகிறேன் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதே மாதிரித்தான் எலக்டிரிசிடி போர்டில் லீகல் அட்வைசர், அசிஸ்டெண்ட் லீகல் அட்வைசர் போட்டது. அது எல்லாம் எனக்கு தெரியவே தெரியாது. கனம் மின்சார அமைச்சர் அவர்களுக்கும் தெரியாது. எலக்டிரிசிடி போர்டு ஒரு தனி கார்ப்பொரேஷன். அவர்கள் சட்ட ஆலோசகர்களை நியமிக்கிறார்கள். முன்பு இருந்தவர்கள் பார்லிமெண்ட் மெம்பரான பிறகு வேறு ஒருவர் வேண்டும் என்று நியமித்தார்கள். சாதாரணமாக அரசாங்கத்திற்குச் சம்மந்தப்பட்ட ஸ்தாபனங்களுக்கு கவர்ன்மெண்ட் பிளீடரே பார்ப்பார்கள். எலக்டிரிசிடி போர்டார் துணை ஆலோசகர் வேண்டும் என்று கேட்டார்கள். இவர் கவர்ன்மெண்ட் ப்ளீடர் ஆபீசில் வேலை பார்த்தவர். ஆகவே துணை ஆலோசகராக நியமித்தார்கள். இதில் ஏதோ குற்றம் சொல்வது என்பது சிறிதும் நியாயம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்களைப்பற்றி கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்கள் பேசினார்கள். கனம் துணைத் தலைவர் அவர்களும் பேசினார்கள். ஒன்று நான் சொல்ல விரும்புகிறேன். டாக்டர் நடராஜன் அவர்களே குறிப்பிட்டார்கள். இன்று நடைபெறுவது கட்சி அரசாங்கம், காங்கிரஸ் கட்சி அரசாங்கம். ஆகவே நாங்கள் கட்சியின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவர்கள். அவ்வப்பொழுது நாங்கள் கட்சி கூட்டத்தைக்

[திரு. எம். பக்தவத்சலம்] [24th October 1964

கூட்டி அதிலே தீர்மானங்கள் எடுத்து அதைத்தான் இங்கே அனுமதிக்கு கொண்டு வருகிறோம். அதோடு கூட மேலே காரியக் கமிட்டி இருக்கிறது. காரியக்கமிட்டியும் உணவுப் பிரச்னையை விவாதித்து தீர்மானங்கள் எடுக்கிறார்கள். அதை காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொள்ளும். அதைத் தான் இந்த மன்றத்திற்கு நான் கொண்டு வருவேன். அதற்குத் தான் இந்த மன்றத்தின ஆதரவை நான் கோருவேன். Party system தான் நடக்கிறது. எதிர்க் கட்சியிலே எப்படி நடக்கிறதோ அது எனக்குத் தெரியாது. எங்கள் கட்சியில் நடக்கிறதை நான் சொல்லுகிறேன்.

இப்பொழுதுள்ள அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். அவர் முதலமைச்சர் பதவியை ராஜீனாமா செய்துவிட்டுக் காங்கிரஸ் தலைவராக வந்திருக்கவில்லையென்றால் ஏதோ ஒரு மாதிரி குற்றம் சாட்டுவதற்கு எதிர்க்க கட்சியினருக்கு இடம் உண்டு என்று நான் சொல்வேன். ஆனால், இன்று அவர் காங்கிரஸ் தலைவராக இருக்கிறார். எதற்கும் அவரைத்தான் கேட்போம். அவர் நல்ல அனுபவம் உள்ளவர். அவருடைய அனுபவம் தமிழ்நாட்டுக்கும் பயன்படவேண்டும் என்று அவரை அப்போதைக்கப்போது கேட்கிறோம். தமிழ்நாட்டுக்கு உகந்த நல்ல ஆலோசனைகளை அவர்கள் சொல்கிறார்கள். அதைப்பற்றி பொறாமைப்படுவதில் பிரயோஜனம் இல்லை. வயிற்றெரிச்சல் படுவதிலும் பிரயோஜனம் இல்லை.

**திரு. மு. கருணாநிதி:** காங்கிரஸ் தலைவருடைய இல்லத்திற்கு சர்க்காருடைய பிரதம காரியதரிசி திரு. செட்டூர் அவர்களும், நிதிக் காரியதரிசி திரு. வர்க்கீஸ் அவர்களும் செல்லவேண்டுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர்கள் இங்கே குறிப்பிட்டவை எல்லாவற்றையும் நான் குறித்து வைத்திருக்கின்றேன். அவற்றிற்கெல்லாம் பதில் சொல்லத்தான் போகிறேன். அதற்குப் பூர்வ பீடிகையாகத்தான் சொல்லிக்கொண்டு வருகிறேன். இந்த விஷயத்திற்கு இப்போதே பதில் சொல்லி விடுகிறேன்.

'காங்கிரஸ் தலைவருடைய இல்லத்திற்குச் சர்க்காரப் பிரதம காரியதரிசி அவர்களும், நிதிக் காரியதரிசி அவர்கள் போனார்கள்.' என்று இங்கே சொல்லப்பட்டது. காங்கிரஸ் தலைவருடைய இல்லத்திற்கு நான் போனேன். என்னுடைய சகாக்களும் வந்தார்கள். பிரதம காரியதரிசி, நிதிக் காரியதரிசி ஆகிய இருவரையும் நான் அங்கு வரச் சொன்னேன். அவர்கள் வந்தார்கள். நான் எங்கே வரச் சொன்னாலும் வரவேண்டியது தான். (காங்கிரஸ் கட்சித் தரப்பில் ஆரவாரம்) திரு. காமராஜ் அவர்களுடைய இல்லத்தில் ஒரு விவாதம் வைத்துக்கொண்டிருந்தோம். அந்த இல்லத்திற்கு நான் அவர்களை வரச்சொன்னேன். (எதிர்க் கட்சித் தரப்பு கனம் உறுப்பினர்களில் சிலர்: அது தான் தப்பு என்கிறோம்.) (எதிர்க் கட்சித் தரப்பில் ஆரவாரம்).



24th October 1964]

**கனம் சபாநாயகர்:** கனம் முதலமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது எந்தத் தரப்பிலுமே சப்தம் போடாமலிருப்பது நல்லது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அடுத்தபடியாக, கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் பேசும்போது, 'முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்த பின்பும் அவருடைய வீட்டில் இன்னும் சர்க்கார் பர்னிச்சர் இருக்கிறது' என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர் எதையும் தெரிந்து சொல்லவேண்டும். கொஞ்சமாவது பொறுப்பு வேண்டாமா? ஒரு பெரிய தலைவர்—முதலமைச்சராக இருந்தவர்—அவரைப்பற்றி சொல்லும்போது கொஞ்சம் பொறுப்போடு பேசலாம். கனம் அங்கத்தினருக்குச் செய்தி கொடுக்கிறவர்கள் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. கிடைத்த செய்தியை வைத்து, ஒருவரைக் கேட்டதோடு நிற்காமல் இன்னொருவரையும் கேட்டு, உண்மையைத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். 'சர்க்காருடைய பர்னிச்சர் அங்கே இருக்கிறதா?' என்று அறிந்திருக்கவேண்டும். அமைச்சர் பதவியை ஒருவர் விடுகிறார் என்றால், மறு நாளே அரசாங்க பர்னிச்சரை எல்லாம் எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். ஒரு நாள் கூட அதிகமாக இருக்காது. காங்கிரஸ் தலைவருடைய வீட்டிலிருக்கும் பர்னிச்சரெல்லாம் அவருடைய சொந்த பர்னிச்சரே தவிர, சர்க்காருடையது ஒன்றுமில்லை. திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்த பிறகு, அவரை நான் அவருடைய இல்லத்தில் போய்ப் பார்த்தேன். அரசாங்கம் கொடுத்த பர்னிச்சரைவிடக் கொஞ்சம் நல்ல பர்னிச்சராக இருப்பதைப் பார்த்தேன். எங்கள் வீட்டிலே கூட, அம்மாதிரி பர்னிச்சர் கிடையாது. அரசாங்க பர்னிச்சர் அங்கே இல்லை. ஆக, அரசாங்க பர்னிச்சர் அங்கே இருக்கிறதா? இல்லையா? என்பதைத் தெரிந்து கொள்ளாமலேயே கூட, அதைப்பற்றிக் கனம் அங்கத்தினர் இங்கே சொல்வதென்றால் அது எப்படிப் பொருத்தமாக இருக்கும்?

அதே மாதிரி, 'போலீஸ் கார்டு, ஸெக்யூரிடி மென்' இருப்பதாக சொன்னார்கள். யாராயிருந்தாலும், போலீசாருக்கென்று சில பொறுப்புக்கள் இருக்கின்றன. காந்தியடிகளுக்குக் கூட எத்தனையோ ஸி.ஐ.டி.-க்களை வைத்திருந்தார்கள். காவலுக்கு வைத்தார்கள் என்று நான் சொல்லவில்லை. போலீசாருக்குச் சில பொறுப்புகள் இருக்கின்றன. மந்திரி சபையிலே இல்லாதவராக இருந்தாலும், ஆட்சியிலே இல்லாதவராக இருந்தாலும், போலீசாருக்குள்ள பொறுப்புக்களை நிறைவேற்றும் வகையில் அவர்கள் பணியாற்றுகிறார்கள். யார் யாருக்கு இந்தகைய பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்களோ அந்த வகையிலே அவர்கள் செயல்படுகிறார்களே தவிர, வேறு ஒன்றும் தவறுதலாகச் செய்யவில்லை.

அதே போன்று, அவர்களுக்காக ஒரு க்ளார்க் பணியாற்றுகிறதாகச் சொன்னார்கள். அது ஒன்றும் இல்லை. திரு. காமராஜ் அவர்களிடத்தில் எனக்குச் சில வேலைகள் இருக்கும்போது, நான்

போவேன். என்றால் நேரில் போக முடியாத அளவுக்கு எனக்கு இங்கே வேலை இருந்தால், அப்பொழுது என்னுடைய க்ளார்க்கை அனுப்பி வைப்பேன். அதைத் தவிர்க்க முடியாது. ஏதோ ஒரு விஷயத்தில் திரு. காமராஜ் அவர்களுடைய ஆலோசனை எனக்குத் தேவையாக இருந்தால், 'திரு. காமராஜ் அவர்களைக் கேட்டு வாருங்கள்' என்று சொல்லி, என்னுடைய ப்ரைவேட் செக்ரடரியை அவரிடம் அனுப்பி வைக்கிறேன். அவரை நேரில் பார்க்க எனக்கு அவகாசம் இல்லையென்றால், என்னுடைய ப்ரைவேட் செக்ரடரி போகிறார். ஃபைனான்ஸ் செக்ரடரியாக இருந்தாலும், அவரையும் கூட, 'திரு. காமராஜ் அவர்களிடம் இதைப்பற்றிப் பேசிவிட்டு வாருங்கள், எனக்குப் பதிலாக நீங்கள் போய் அவரிடம் எக்ஸ்ப்ளெயின் பண்ணிவிட்டு வாருங்கள்' என்று சொல்வதுண்டு. இதிலெல்லாமா குற்றம் கண்டுபிடிப்பது? அம்மாதிரி தான் எங்களிடம் இருக்கும் க்ளார்க்கையும் அனுப்புகிறோம். திரு. காமராஜ் அவர்களிடம் சில விஷயங்களைக் கேட்டு வரும்படியாக அனுப்பி வைக்கிறோம். அவ்வாறுதான் அவரும் போய்வருகிறார். இதிலே என்ன தவறு இருக்கிறது?

மற்றொன்று, 'திரு. காமராஜ் அவர்களுடைய பிறந்த தின விழாவிலே சர்க்கார் எல்லாம் கலந்துகொண்டார்கள், சர்க்கார் திருவிழாவாக இருந்தது' என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஜனநாயக சோஷலிசத்தை நம்முடைய லட்சியமாகக் கொண்டிருக்கிறோம். சர்க்காருக்கும் அதிலே அக்கறை இருக்கிறது. சர்க்காருடைய கொள்கையும் அதுதான். நான் பட்ஜெட்டைச் சமர்ப்பித்தபோதே சொன்னேன். சர்க்காருடைய கொள்கை ஜனநாயக சோஷலிசக் கொள்கை. திரு. காமராஜ் அவர்களுடைய பிறந்த தின விழாவைக் கொண்டாடும்போது, 'டெமக்ராடிக் சோஷலிச' விழாவாக நாட்டில் கொண்டாடுகிறார்கள். அதில் சர்க்கார் கலந்து கொள்ளவில்லை.

கொடிக் கம்புகளைப்பற்றியெல்லாம் இங்கே குறிப்பிடப்பட்டது. அவையெல்லாம் காமராஜ் அவர்களின் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டக் கமிட்டியார் வாடகை கொடுத்து வாங்கியவையாகும். வாடகை இல்லாமல் சும்மா யாரிடமிருந்தும் வாங்கவில்லை. அப்படியிருக்க, insinnation செய்கின்ற முறையில், 'யாரோ கண்டிராக்டர் சும்மா கொடுத்துவிட்டார், அதிகமாகக் கொடுத்து விட்டார்' என்று பொதுவாகச் சொல்வதில் பிரயோஜனம் இல்லை. குறிப்பாகக் குற்றஞ்சாட்டுவதாக இருந்தால் சாட்டட்டும். அதற்குச் சமாதானம் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஃபிஷரிஸ் டிபார்ட்மென்ட் பற்றிச் சொன்னார்கள். பப்ளிஸிடிக்காகச் செய்திருக்கிறார்கள். பாதி அஃபிஷியல், பாதி நான்-அஃபிஷியல். மீனவர்கள் கூடுகிற இடத்தில் 'பப்ளிஸிடி' கொடுக்கவேண்டும் என்று ஏதோ செய்தார்கள் என்றால், இந்தச் சின்ன விஷயத்தையுமா பெரிது பண்ணுவது? நாம் ஏதோ தவறு செய்துவிட்டோம் என்று சொல்வது நியாயம் அல்ல என்று நான்



சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ட்ராக்டர் வந்ததைப்பற்றிச் சொன்னார்கள். ட்ராக்டர் வந்திருக்கலாம். அதில் ஒன்றுமே தவறுதல் இல்லை.

**திரு. மு. கருணாநிதி:** பி.டபிள்யூ.டி. ட்ராக்டர் வந்ததற்குப் புகைப் படத்தைக் காட்டினேன். அதைத் தவறு என்று சொல்கிறார்களா? தவறு இல்லை என்று சொல்கிறார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** வந்தது எனக்குத் தெரியாது. வந்திருந்தால் தவறுதல் இல்லை.

பப்ளிக் சர்வீஸ் கமிஷனைப்பற்றிக் குறிப்பிட்டார்கள் 'Public Service Commission Chairman is under house escort' என்று பத்திரிகையில் வந்ததை வைத்துக்கொண்டு பேசுவது பொறுப்புணர்ச்சி இல்லாமல் பேசுவதாகுமே தவிர, வேறொன்றுமில்லை. யாரோ பத்திரிகையில் போட்டிருந்தார்கள். அது குறித்து போலீசை விசாரித்ததில், 'அப்படி ஒன்றும் இல்லை' என்று தெரிந்தது. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் சேர்மனை 'அரெஸ்ட்' செய்தார்கள் என்று சொல்வதே defamatory ஆகும். ஆனால், இங்கே சொல்வதனால் அஞ்சவேண்டியதில்லை. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் சேர்மன் மீது புகார் ஒன்றும் வரவில்லை. அங்குள்ள செக்ரடரி, சூபரின்டென்டு இவர்கள் மீதுதான் புகார் வந்தது. போலீசார் விசாரித்தார்கள். அதற்குமேல் ப்ராஸிக்யூஷனுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பப்ளிக் சர்வீஸ் கமிஷனைச் சார்ந்ததாக இருப்பதால் எப்படிச் செய்வது, ட்ரிப்யூனலுக்கு விடுவதா, பப்ளிக் சர்வீஸ் கமிஷனே விசாரிப்பதா என்று நடவடிக்கை முறைகளைப்பற்றி ஆராய்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறதே தவிர, சும்மாவிட்டுவிடவில்லை.

அடுத்து, டைரக்டர் ஆஃப் விஜிலன்சைப்பற்றிச் சொன்னார்கள். 'டைரக்டர் ஆஃப் விஜிலன்ஸ் ஒரு பெரிய அதிகாரியை அரெஸ்ட் செய்தார். அதோடு விட்டுவிட்டார், ஒன்றும் செய்யவில்லை' என்று சொன்னார்கள். பெரிய அதிகாரியாக இருந்தாலும் சிறிய அதிகாரியாக இருந்தாலும், டைரக்டரேட் ஆஃப் விஜிலன்ஸ் ஏற்பட்ட பிறகு நிறைய கவனம் செலுத்தப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு, வழக்குகளும் தொடரப்பட்டிருக்கின்றன. பல பேர்கள் கண்டுபிடிக்கப்பட்டும் வருகிறார்கள். அந்த டைரக்டரேட் நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டு வருகிறது. 'அரெஸ்ட்' செய்து விட்டு, விசாரிப்பது என்பது அல்ல. 'இன்வெஸ்டிகேஷன்' செய்த பிறகு ப்ராசிக்யூஷனுக்கு இடமிருந்தால் ப்ராசிக்யூட் பண்ணுவார்கள். அரசாங்க அனுமதி வேண்டுமா, வேண்டாமா என்பதெல்லாம் யோசிக்கப்பட்டு எல்லாம் முடிந்துவிட்டது. ப்ராசிக்யூஷன் பண்ணியிருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். தவிர்க்கக்கூடிய தாமதம் ஒன்றும் இல்லை. யாரையும் மூடி மறைக்க வேண்டும், யாரையும் பாதுகாக்க வேண்டும் என்கிற எண்ணம் கொஞ்சம்கூட இல்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, இன்ஸ்பெக்டர், ஜெனரல் ஆஃப் போலீஸ் பதவிக்கு நியமனம் செய்ததைப்பற்றி கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் மிகவும் நுட்பமாக எடுத்துக் சொன்னார்கள். நாம் ஏதோ தவறுதல் செய்துவிட்டோம் என்றும் சொன்னார்கள். டைரக்டர் ஆஃப் விஜிலன்ஸ் அதற்கு முன்னாலே இருக்கிறார். சீனியராக இருக்கிறவரை அடிஷனல் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆஃப் போலீஸாகப் போட்டு அவரே டைரக்டர் ஆப் விஜிலன்ஸ் சாகவும் இருக்கட்டும் என்று போட்டிருக்கிறோம். டைரக்டர் ஆப் விஜிலன்ஸ் பதவிக்கு நல்ல சீனியராகவுள்ள ஒருவர் நல்ல அந்தஸ்து உள்ள ஒருவர் இருந்தால்தான், நல்ல முறையில் அதிலே கவனம் செலுத்த முடியும் என்பதற்காக சீனியராக இருப்பவரைப் போட்டோம். அதற்குப் பிறகு இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆஃப் போலீஸ் பதவியில் vacancy' வந்தது. டைரக்டர் ஆப் விஜிலன்சாக இருப்பவரையே கூட I.G. ஆகப் போட்டிருக்கலாம். ஆனால்; அவர் ஆறு மாதங்களாக டைரக்டர் ஆப் விஜிலன்ஸ்சாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அதிலே மாறுதல் வேண்டாம், அவரே டைரக்டர் ஆப் விஜிலன்சாகத் தொடர்ந்து இருக்கட்டும் என்ற கருத்தில் இப்பொழுதிருக்கும் இன்ஸ்பெக்டர்-ஜெனரலை நாம் இப்பொழுது நியமித்திருக்கிறோம். இதிலே என்ன தவறுதல் இருக்கிறது? வேறு மாதிரி போட்டால் அதற்கும் குற்றம் சொல்வார்கள். இதுதான் சரி என்று கவனித்துச் செய்யப் பட்டது இதிலே குற்றம் சாட்டுவதற்கு ஒன்றும் இடமில்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று, சத்தியமூர்த்தி பவனில் காங்கிரஸ் கட்டிடம் இருக்கிறது. அந்தக் கட்டிடத்தில் ஒரு பாகத்தில், இடம் கிடைக்காத காரணத்தினால், மாதர் நல இலாகா இருந்தது. மராமத்து இலாகா நிர்ணயித்த வாடகைக்குத் தான் அவர்கள் அங்கே இருந்தார்கள். இப்போது அரசாங்கக் கட்டிடமே கிடைத்துவிட்ட காரணத்தினால் அவர்கள் கூட அங்கே இருந்து காலி செய்துகொண்டு அரசாங்கக் கட்டிடத்திற்கே வந்துவிட்டார்கள். இவர்கள் காலி செய்து விட்டார்கள் என்பதற்காக அந்தக் கட்டிடம் காலியாக இருக்கவில்லை. இவர்கள் கொடுத்துக் கொண்டிருந்த வாடகையை விட அதிகமாகவே கொடுப்பதற்கு வேறு இரண்டு மூன்று பேர்கள் வந்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் காங்கிரஸ் கட்சிக்குப் பணம் வேண்டுமென்றால் அந்தக் கட்டிடத்தை அரசாங்கக் காரியாலயத்திற்கு வாடகைக்கு விட்டுத்தானா பெற வேண்டும்? தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குச் சலுகை காட்ட வேண்டுமென்று நாங்கள் இதைச் செய்தோம்? நாங்கள் அந்த நிலையில் இல்லை. எதிர்க் கட்சியிலுள்ளவர்களின் நிலைமை அவ்வாறு இருக்கலாம்.

இதே மாதிரி விற்பனை வரியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். விற்பனை வரி அதிகாரிகள் அங்கங்கே சோதனை போட்டார்கள். வரி ஏய்ப்பு செய்திருப்பது பற்றி கணக்குகள் கண்டுபிடிக்கப் பட்டது. இப்போது இரண்டு மாதம் கிரேஸ் கொடுக்கப்பட்டது





என்று சொல்லப்பட்டது. கமிஷனரேதான் இந்தப் பிரப்போசலை அனுப்பினார்கள். பிடித்த கணக்குகளை நன்றாகப் பரிசீலனை செய்து வரி விதிப்பதற்கு இந்த அவகாசம் பயன் படலாம். சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ் உறுப்பினர்களும்கூட இரண்டு மாதம் கொடுத்தால் அவர்களாகவே கணக்குகள் கொடுக்கக்கூடும் என்று சொன்னார்கள். அதன் பேரில்தான் இந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது. யாரையும் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கம் அரசாங்கத்திற்கு சிறிதும் கிடையாது.

கூட்டுறவு சங்கங்களில் உள்ள ஊழல்களைப் பற்றியும் சொன்னார்கள். ஊழல்கள் இல்லையென்று யாரும் சொல்லவில்லை. ஊழல் எங்கிருக்கிறது என்று தெரிந்தாலும் அரசாங்கம் உடனடியாக கண்டிப்பாக நடவடிக்கையை எடுத்துக் கொள்கிறது. ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். சிறந்த காங்கிரஸ்காரர் நீண்ட நாள் சிறையிலிருந்தவர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் பணிபுரிந்தவர், இன்றைக்குக் கூட அவர்கள் காங்கிரஸ்காரர் தான், அவர் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் எந்த விதத்திலும் தயக்கம் காட்டவில்லையே—காங்கிரஸ்காரர் என்பதினால் விட்டுவிட்டதா? அதற்காக ஒருவரைப்பற்றி ஒருவர் புகார் செய்தவுடனே கைது செய்து விட முடியுமா? அந்தப் புகாருக்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா என்று அரசாங்கம் பரிசீலித்துப் பார்க்க வேண்டாமா? எங்களுக்கு எத்தனையோ பேர்களின் மீது குற்றச்சாட்டுகள் வந்து கொண்டேயிருக்கின்றன. திரு. முனு. ஆதி பேரிலே கூட வந்தது. அவர் சேர்மனாக இருந்த முனிசிபாலிட்டியிலே மறுநாள் அது கலைக்கப்பட போகிறது—முதல் நாளே எத்தனை பேர்களுக்கு எத்தனை உத்திரவுகள் போட்டிருக்கிறார்கள். எத்தனை தீர்மானங்கள் போட்டிருக்கிறார்கள். அதனால் எத்தனை செலவுகள் உண்டாகும். செலவைத்தான் நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்தோம். அவர் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டோம். (திரு. முனு ஆதி: ஆன் எ பாயிண்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளேனேஷன்) முடிவில் சொல்லிக்கொள்ளலாம்.

அடுத்து திரு. அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் முன்பு அவர் உறுப்பினராக இருந்த பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி விதைப் பண்ணைகள் சம்பந்தமாகக் குறிப்பிட்டதை சொன்னார்கள். அவர்கள் சொன்ன யோசனையின் பேரில் அப்போதே பல நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்றைக்குப் புதிதாக விதைப்பண்ணை இல்லை. கனம் திரு. இராமையா அவர்கள் எதற்கோ வேண்டுமென்றே அதிகப்பணம் கொடுத்தார்கள் என்றும் அவர் அவருடைய உறவினர் என்று சொன்னார்கள். கனம் திரு. ராமையா அவர்கள் இங்கே இல்லை. அவர் இல்லாத சமயத்தில் அவர் இவருடைய உறவினரா இல்லையா என்று என்னால் சொல்ல முடியாது. அவர் இல்லாத சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு இவர்கள் அப்படிச் சொல்வதும் சரியில்லை என்று தான் நான் சொல்லுவேன். (திரு. அ. பெ. தர்மலிங்கம்: அவர் இருந்திருக்கலாம்). அவர் இங்கே இருக்கக்கூடாது என்று

வெளியே போகவில்லை. இலங்கை விஷயமாக டெல்லியில் பேச்சு வார்த்தை நடத்த வேண்டியிருந்தது. இதைவிட அது மிகவும் முக்கியமானது. நீங்கள் இருக்க முடியாவிட்டாலும் உங்கள் சகாயாராவது ஒருவர் இருக்க வேண்டும் என்று டெல்லியில் உள்ளவர்களும் சொன்னார்கள். ஆகவே நான்தான் அவரை அங்கே இருக்கும்படிச் சொன்னேன்.

அடுத்து சேலம் உருக்காலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த உருக்காலையைப் பொருத்த மட்டில் மத்திய அரசு கை விரித்து விட்டது. தஸ்தூர் கம்பெனி அறிக்கை வந்த பிறகும் இவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்று கேட்டார்கள். அந்தக் கம்பெனியாரின் அறிக்கை நமக்கு எப்போது கிடைத்தது? ஆகஸ்ட் 27-ம் தேதி வந்தது. (திரு. மு. கருணாநிதி : சேலம் உருக்காலை வரும் என்று அமைச்சர் அவர்கள் நம்பினால் பார்லிமெண்ட் உறுப்பினர்களை அழைத்துப் பேசுவானேன்?) பேசினால் என்ன? நான் டெல்லிக்குப் போகிற ஒவ்வொரு சமயமும் அவர்களை அழைத்து பல விஷயங்களைப் பற்றி பேசுகிறேன். அவர்களே கூட அங்குள்ள நிலவரங்களை நீங்கள் இங்கே வரும்போது விளக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்தத் தடவை போனபோது கூட உணவுப் பிரச்னை சம்பந்தமாக கலந்து பேசிக்கொண்டிருந்தேன். ஸ்டீல் பிளாண்ட் நிலைமை, உணவுப் பிரச்னை சம்பந்தமாக விளக்கினேன். எதிர்க்கட்சிக்காரர்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி ஸ்டீல் பிளாண்ட் எப்படியும் வரும் என்று இந்த நேரத்தில் நான் உறுதியாகக் கூறுகிறேன். (பலத்த கைத்தட்டல்) (குறுக்கீடு: எவ்வளவு காலத்திற்குள்?) இன்றைக்குக் கூட பத்திரிகையில் பார்த்தேன். பத்து மாதம் இல்லாமலே கூட குழந்தை பிறக்கக் கூடும் என்று ஒரு விஞ்ஞானி சொல்லியிருக்கிறார் அதைப் பார்த்துச் செய்யலாம். (சிரிப்பு)

இன்னும் பல குற்றச் சாட்டுக்கள் எல்லாவற்றுக்கும் நான் பதில் சொல்ல விரும்புகிறேன். சொல்லாமல் விட்டு விட்டால் அதை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் எனச் சொல்லுவார்கள். ஆனால் அதற்கு அவகாசம் இல்லை. கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அடுத்த தேர்தலைப் பற்றிச் சொன்னார்கள். தேர்தல் வரத்தான் போகிறது. காங்கிரஸ்தான் வெற்றியடையப் போகிறது. தி.மு.க.-வுக்கு வாக்களிப்பதில்லை என்பதை மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். நாங்கள் எங்களுடைய கடமைகளைச் செய்கிறோம். மக்கள் எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்ற அடிப்படையில் தான் நாங்கள் பணி புரிகிறோம். தி.மு.க. எப்படி வேண்டுமென்றாலும் சொல்லலாம். அது அவர்களுடைய உரிமை. பர்த் டே பிரசண்டேஷனாக எனக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுத்ததாகச் சொன்னார்கள். எனக்கு யார் கொடுத்தார்கள்? ஒரு ரூபாய் கூட யாரும் கொடுக்க வில்லையே! ஒரு ஸுவனியர் பிரிண்ட் பண்ணிக் கொடுத்தார்கள். பக்தவத்சலம் நகர் என்றிருந்தால் அந்த நகரிலுள்ள வீடுகளெல்





லாம் என்னுடையது ஆகி விடுமா? அப்படித்தான் ஆர். . வி. அவின்யூ என்பது. (திரு. மு. கருணாநிதி : ஆர். வி. அவின்யூ என்பது வெறும் பெயரா? அதற்கு உரிமையாளர் யார்?) கருணாநிதி நகர் என்றுகூட கட்டியிருக்கலாம். அதனால் அங்குள்ள வீடுகள் அனைத்தும் அவருடையது என்று சொல்ல முடியாது. உணவுப் பிரச்னையைப் பற்றி நான் முன்பே விளக்கியிருக்கிறேன். இந்தி திணிப்பது என்பது இல்லை என்பதையும் விளக்கியிருக்கிறேன். நம்பிக்கையில்லை என்ற தீர்மானமே வேண்டாம். அதற்கு இவைகளெல்லாம் ஆதாரங்களாகவும் ஆக மாட்டா. தி.மு.க.-வுக்கு எங்களிடத்தில் நம்பிக்கை இல்லை. எங்களுக்கு, தி.மு.க. விடத்தில் நம்பிக்கையில்லை. ஆகவே, அவர்களுக்கு எங்களிடத்தில் நம்பிக்கை இல்லை என்ற ஒன்றை மட்டும் வைத்து இதை ஓட்டுக்கு விட்டுவிடலாம்.

ஆனால் ஒன்று, தி.மு.க. இத்தகைய பிரசாரம் செய்கின்ற போதிலும், இத்தகைய முறையிலே இயங்குகின்றபோதும் மக்கள் நிலைமையை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். இன்றைக்கு உணவு 1 30 p.m
நெருக்கடியினால் அவதி ஏற்பட்டிருக்கும்போதும் அந்த அவதி எப்படி ஏற்பட்டிருக்கிறது, அரசாங்கம் அதை எப்படித் தீர்த்துக் கொண்டு வருகிறது என்பதை நன்றாக மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். மக்களுடைய ஆதரவு காங்கிரசுக்கும் காங்கிரஸ் ஆட்சிக்கும் எப்போதும் உண்டு என்ற நம்பிக்கையோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

SRI K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I may be given half-an-hour.

MR. SPEAKER : The hon. Member can have only fifteen minutes.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் முதலிலே பேசும்போது நேரத்தை ஒரு மணி நேரமாக குறைத்துக் கொண்டேன். இப்போது எனக்கு அருள்கூர்ந்து சபாநாயகர் அவர்கள் அரை மணி நேரமாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** இப்படி நேரத்தை ஜாஸ்தி பண்ண வேண்டாம். இப்போது புதிதாக ஒன்றும் சொல்லப் போவதில்லையே!

**திரு. கே. ஏ. மதியழகன் :** நான் சில விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அருள் கூர்ந்து இந்தச் சபையை 2½ மணி வரை நீடிக்க சபாநாயகர் அவர்கள் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I request the hon. Member Sri K. A. Methialagan to finish his reply within fifteen minutes.

* **திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது கடந்த மூன்று நாட்களாக விவாதம் நடந்தது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள்

[திரு. கே. ஏ. மதியழகன்] [24th October 1964

பதிலளித்திருக்கிறார்கள். அவர்களுடைய பதிலில் அதற்கு என்ன சமாதானம் சொன்னார்கள் என்ற நிலைமையைப் பார்க்கின்ற நேரத்திலே, உண்மையிலேயே நாங்கள் இந்த மன்றத்திலே சாட்டிய எந்தக் குற்றச்சாட்டையும் அவர்கள் மறுத்ததாகத் தெரியவில்லை. அவர்கள் இங்கு வாதம் செய்ததை என்ன பெயரிட்டு அழைப்பது என்று தெரியவில்லை. ஓர் மழுப்பலுரையாகத் தான் முடிந்துள்ளது. அவருடைய பதில் எப்படி இருந்தது என்றால், வழக்கு மன்றத்திலே குற்றவாளியாக இருக்கின்றவர் சார்பில் தலை சிறந்த வழக்கறிஞர் தயாரித்த Accused (அக்கியூஸ்டு) ஸ்டேட்மெண்ட் போல் பதில் சொன்னார்கள். அந்தத் திறமையைப் பற்றி கூற வேண்டியதில்லை. ஒன்றே ஒன்று, கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய தவறு என்று ஒப்புக்கொள்கிறேன். காமராஜர் அவர்களுடைய இல்லத்திலே சர்க்கார் மேஜை நாற்காலிகள் உள்ளன, வாருங்கள் இப்போதே காண்பிக்கிறேன் என்று நான் பேசிய அன்றே அங்கே சென்றிருக்க வேண்டும். அவ்வாறு சொல்லாமல் நான் தவறி விட்டது ஒன்றுதான் குற்றமே தவிர மற்றப்படி சாட்டிய குற்றச்சாட்டுகள் எதனையும் மறுத்ததாகத் தெரியவில்லை. அட்வகேட்-ஜெனரல் நியமனம் பற்றி அரை நிமிஷத்தில் சொல்லி முடித்து விட்டார்கள். அது அவ்வளவு சிறிய விஷயம் அல்ல. அட்வகேட்-ஜெனரல் என்பவர் இந்த மாநில சர்க்காருடைய பெரிய சட்ட ஆலோசகர். அவர்களுக்கு இருக்கிற உரிமை ——

Article 177 says:

"Every Minister and the Advocate-General for a State shall have right to seek in, and otherwise to take part in the proceedings of, the Legislative Assembly of the State or, in the case of a State having a Legislative Council, both Houses, and to speak in, and otherwise to take part in the proceedings of, any committee of the Legislature of which he may be named a member, but shall not, by virtue of this article, be entitled to vote."

என்று கான்ஸ்டிடியூஷனில் 177-வது விதியில் வகுக்கப்பட்டிருக்கிறது. அட்வகேட்-ஜெனரல் இந்த மன்றத்திலே வோட் அளிக்க முடியாதே தவிர, இந்தச் சபையிலோ மேல் சபையிலோ நடக்கிற விவாதத்திலே கலந்து கொள்ளலாம். எப்படி கனம் வெங்கட்டராமன் அவர்கள் எலக்ஷனிலே நின்று இந்த மன்ற உறுப்பினராக ஆகாவிட்டாலும் அமைச்சராக எல்லா நடவடிக்கைகளிலும் கலந்து கொள்ளலாமோ அந்த அளவுக்கு அவரும் இந்த மன்ற விவாதங்களிலே கலந்து கொள்ளலாம். இந்த கான்ஸ்டிடியூஷனில் ஆபீசுக்கு இதுவரையிலே வழக்கறிஞர்களின் தலைவர்கள்தான் நியமிக்கப்பட்டு வந்தார்கள். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர், வி. கே. திருவேங்கடாச்சாரி போன்றவர்கள் இதற்கு முன்பு இதனை அலங்கரித்திருக்கிறார்கள். இந்த நியமனத்திலே இப்போது நீதி செத்துவிட்டது, நியாயம் தவறி இருக்கிறது என்ற நிலைமையை எடுத்துக் கூற அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஒரு



24th October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

யத்தை மட்டும் சொல்லி மற்ற விஷயங்களைக் கொஞ்சம் சுருக்கிக் கொள்கிறேன். இந்த விஷயத்தைப் பொறுத்து ஐயாயிரம் வக்கீல்கள் இதிலே மனக்கொதிப்பு அடைந்துள்ளார்கள் என்பதை உணர வேண்டும். 1964-ல் ஏப்ரல் மாதம் 12-ம் தேதி அட்வகேட்-ஜெனரல் திருவேங்கடாச்சாரி அவர்கள் ராஜிநாமா செய்துவிட்டார்கள். அன்று முதலமைச்சர் அவர்கள் விமானத்திலே டில்லிக்குச் செல்கிறார்கள். ஏப்ரல் மாதம் 13-ம் தேதி தமிழ் வருஷப் பிறப்பு. ஆபிஸ் கிடையாது. 14-ம் தேதி கோட்டையில் கதவு திறக்கிறது. அன்று காலை பத்து மணியிலிருந்து மாலை 4 மணிக்குள்ளாக மூன்று பெரிய காரியம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. திருவேங்கடாச்சாரி ராஜிநாமா அங்கீகரிக்கப்பட்டு பப்ளிக் பிராசிக்யூடர் கிருஷ்ணசாமி ரெட்டியாரை அட்வகேட்-ஜெனரலாக நியமித்து, அங்கே காலியான இடத்தில் பப்ளிக் ப்ராசிக்யூடராக திரு. வி. பி. ராமன் நுழைக்கப்படுகிறார். இந்த மூன்று காரியங்கள் ஒரே நேரத்தில் நடைபெற்றன. இதைப்பற்றிக் கேட்டால் 'பேனல்' கேட்டோம் என்று சொல்கிறார்கள். எப்படி ஒரே நாளில் பேனல் கொடுக்க முடிந்தது. கிருஷ்ணசாமி ரெட்டியார் செங்கல்பட்டைச் சார்ந்தவர்கள் என்பதற்காக எடுத்துக் கொள்ளவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செங்கல்பட்டு என்றால் எனக்கு பிடிக்காத ஒன்று என்பதல்ல. அதற்காக நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. எங்கள் தலைவரே செங்கல்பட்டு ஜில்லாவைச் சேர்ந்தவர்தான். திரு. கிருஷ்ணசாமி அவர்கள் 1940 முதல் 1957 வரை செங்கல்பட்டில் வக்கீலாக இருந்தார். 1960-லே பப்ளிக் ப்ராசிக்யூடர். அப்போதும் ஹைகோர்ட்டிலிருந்து பேனல் அனுப்பப்பட்டது. அதை நிராகரித்து விட்டுக் கொடுத்தார்கள். திறமை இருப்பதோடு நம்பிக்கை இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். கடந்த பத்து வருஷ காலத்திலேயும் அதற்கு முன்பும் பப்ளிக் பிராசிக்யூடர் பதவிக்கு எவ்வாறு தேர்ந்தெடுத்தார்கள்? என்ன மரபு கையாளப்பட்டது? 1950-ல் ஓர் பேனல் அனுப்பப்பட்டது. வி. டி. ரங்கசாமி ஐயங்கார், வி. ராஜகோபாலாச்சாரி பாஷி ரெட்டி ஆகிய மூன்று பெயர்கள் இருந்தன. வி. டி. ரங்கசாமி ஐயங்கார், பப்ளிக் புராசிக்யூடர் ஆக நியமிக்கப்பட்டார். 1955-ம் ஆண்டு ஓர் பேனல் அனுப்பப்பட்டது. அதில் கோவிந்தசாமிநாதன், ஜி. கோபாலசாமி, பி. எஸ். கைலாசம் ஆகியோர் பெயர்கள் இருந்தன. கைலாசம் நியமிக்கப்பட்டார். 1960-ம் ஆண்டு பேனலில் கோவிந்சாமிநாதன், ஜி. கோபாலசாமி பெயர்கள் இருந்தன. இரண்டையும் நிராகரித்து கிருஷ்ணசாமி ரெட்டியார் நியமிக்கப்பட்டார். உங்களுக்கு நீதி நியாயத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற கடமை இல்லையா? இப்போது அட்வகேட்-ஜெனரலாக நியமிக்கப்பட்டவர் சென்னை பார் கவுன்சிலில் கடந்த ஐந்து வருஷ காலமாகத்தான் மெம்பராக இருக்கிறார். அந்தப் பதவியிலே நியமிக்கப்படுகிறவர்களுக்கு சட்டப் பிரச்சினையின் சகல துறையும் தெரிய வேண்டும். சிவில் கிரிமினல் அரசியல் சட்ட விவகாரங்கள் தெரியவேண்டும். கடந்த ஏப்ரல் 14-ம் தேதிக்கு முன்னால் அவர் ஏதாவது ஒரு வழக்கில் கான்ஸ்டிடியூஷன் சட்டப் பிரச்சினை சம்பந்தமாகவோ, சிவில் அப்பீல் வழக்கு சம்பந்த

[திரு. கே. ஏ. மதியழகன்] [24th October 1964

மாகவோ, இரண்டு நீதிபதிகள் கொண்ட வழக்கு மன்றத்தில் ஆஜராயுள்ளாரா? அறை கூவி கேட்கிறேன், வழக்கின் நம்பரைக் காட்டட்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்படியே விவாதம் செய்வது பயனற்றது. இதைப்பற்றி ஹைகோர்டில் ரிட் போட்டு அங்கே பேச வேண்டியது. இதையெல்லாம் இங்கே திருப்பித் திருப்பிச் சொன்னால் விடை அளிக்க ஒன்றும் இல்லை.

SRI K. A. MATHIALAGAN: No previous Public Prosecutor was elavated to the post of Advocate-General. There was no such precedent. Let the HON. the Chief Minister reply to my point. நூறு ஆண்டு உயர்நீதி மன்ற வரலாற்றில் எந்த ஒரு பப்ளிக் பிராசிக்யூடரும் அட்வகேட்-ஜெனரலாக நியமிக்கப்பட்டதில்லை. அதற்கு உதாரணம் கிடையாது. ஆனால் கவர்ன்மென்ட் பிளீடர்கள் அட்வகேட்-ஜெனரல்களாக நியமிக்கப்பட்டதற்கு உதாரணங்கள் உண்டு. இப்போது கவர்ன்மென்ட் பிளீடராக உள்ள அழகரிசாமி அவர்கள் நியமிக்கப்படாததற்குக் காரணம் திரு. சி. சுப்பிரமணியத்திற்கு அவர் வேண்டியவர் என்பதால் மட்டுமல்ல. பப்ளிக் பிராசிக்யூடர் பதவி காலியானால்தான் அங்கு திரு. வி. பி. ராமனை நுழைக்க முடியும். எனவேதான் இந்த முறைகள் கையாளப்பட்டன.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அரசியல் அமைப்புச் சட்டத்தை அவர்கள் சான்றாகக் காட்டினார்கள். அதன்படி பார்த்தால் நியமிக்க முடியாது என்பது விளங்கும்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** அவ்விதம் நியமிக்க முடியவில்லை என்றாலும் புதிதாக இவர்களைக் கொண்டு வரவேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? பப்ளிக் பிராசிக்யூடராக நியமிக்கப்பட்டு உள்ளவர், கடந்த ஏப்ரல் 14-ம் தேதிக்கு முன்பு Criminal Bench of two Judges "இரண்டு நீதிபதிகள் கொண்ட கிரிமினல் அப்பீல் வழக்கு மன்றத்தில் எந்த வழக்கிலாவது வழக்காடியிருக்கிறாரா? இவ்விதம் நியமிக்கப்பட்ட திரு. ராமன் அவர்களுடைய திறமை பற்றிச் சொன்னார்கள். ஆனால் பப்ளிக் பிராசிக்யூடர் உத்யோகத்திற்கு வருவதற்கு முன்பு இரண்டு நீதிபதிகள் கொண்ட கிரிமினல் அப்பீல் வழக்கு மன்றத்தில் அவர் ஆஜரான ஒரு வழக்கின் நம்பரை நிரூபிக்கட்டும். பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக வக்கீல் தொழிலில் அனுபவம் கொண்ட ஒருவர் எப்போதாவது பப்ளிக் பிராசிக்யூடராக நியமிக்கப்பட்டதுண்டா? இதைக் கேட்டால் "உங்கள் அப்பன் வீட்டுச் சொத்தா" என்று நாம் கேட்பதாகக் கூறினார். பொறுப்புள்ள முதலமைச்சர் சொல்லட்டும். அட்வகேட்-ஜெனரல் பதவியும் பப்ளிக் பிராசிக்யூடர் பதவியும் நசரத் பேட்டை ஜமீனிலும், மீஞ்சூர்ப் பண்ணையிலும் உள்ள கூலியாள் வேலை என்று முதலமைச்சர் கருதிக்கொண்டிருக்கிறாரா? இந்தப் பிரச்னையைப்பற்றி இன்றைய தினம் 5,000 வக்கீல்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். நியாயம்



24th October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

செத்திருக்கிறது இந்த விவகாரத்தில் என்பதைத்தான் எல்லோரும் சுட்டிக் காட்டுகிறார்கள். இதற்கு முதலமைச்சர் அவர்கள் தக்க சமாதானம் கூற கடமைப்பட்டிருக்கின்றார்கள் என்பதை நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன். எலக்ட்ரிசிடி போர்டுத் துணைச் சட்ட ஆலோசகர் நியமனம் பற்றிக் கேட்டால் அது எங்களுக்குத் தெரியாது இப்போதுதான் தெரியும் என்கிறீர்கள். உங்களுக்குத் தெரியாமலா இத்தனை காரியங்கள் நடக்கின்றன? இப்படி பதில் அளிக்கும் பாணி நமது முதலமைச்சருக்கு புதியதல்ல. பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு திரு. ஓ. வி. அளகேசனுக்கு திரிபுரசுந்தரி பஸ் சர்வீஸ் பர்மிட் பெற திரு. பக்தவத்சலம் உதவினார் என்று திரு. பிரகாசம் குற்றம் சாட்டினார். அப்போதும் இப்படிப்பட்ட பதிலைத்தான் தந்தார். மூன்றரைக் கோடி மக்களுக்குப் பொறுப்பானவர் இப்படியா பதில் சொல்வது? இப்படிப்பட்டவர் எங்களைப் பார்த்து பொறுப்புணர்ச்சிபற்றி விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார். முதலமைச்சராக இல்லாமல் வெறும் பொறுப்புணர்ச்சிபற்றி மட்டும் சொல்லிக்கொண்டிருந்தால், ஏதோ மைலாப்பூரிலுள்ள ஒரு பெரியவராக பொறுப்புணர்ச்சிபற்றி சாயங்கால வேளையில் சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்திக்கொண்டிருந்தால் அதைக் கேட்கப் போயிருப்போம். மாலைகூட போட்டிருப்போம், காமராஜர் அவர்களோடு முதலமைச்சர் அவர்களின் பெர்சனல் கிளார்க் சாமிநாதன் என்பவர் இருக்கிறாரே, அது நியாயமா என்று கேட்டால் பல வேலைகளை கவனிப்பதற்கு அவர்கள் வீட்டுக்கு அனுப்பவேண்டாமா என்று கேட்கிறார்கள். இது எந்த விதத்தில் பொருத்தமாகும்?

இன்னொன்றையும் சொன்னார்கள். இங்குள்ள மந்திரிசபையில் லஞ்சம் இல்லை. அதற்குக் காரணம் எதிர்க்கட்சியாகிய நாங்கள் பத்திரம் கொடுத்திருக்கிறார் என்று. உண்மை. எங்கள் தலைவர் சொன்னார்கள். என்ன சொன்னார்கள்? தலையையும் வாலையும் விட்டுவிட்டு முண்டத்தை மட்டும் முதலமைச்சர் சொன்னார். இங்கு லஞ்சம் இல்லை, அதற்குக் காரணம் எதிர்க்கட்சியாகிய நாங்கள் கண்காணிப்பாக (விஜிலண்டாக) இருக்கிறோம். ஆகவே தவறு நடக்கவில்லை என்றார்கள். அது உங்களுக்கு எப்படி நற்சாட்சிப் பத்திரம் ஆகும்? மூன்றரை கோடி மக்களுடைய நம்பிக்கைக்கு நீங்கள் பாத்திரமாய் இருக்கவேண்டியவர்கள், அதை இன்று நீங்கள் தகர்த்துவிட்டிருக்கிறீர்கள். எலக்ட்ரிசிடி போர்டில் ஏற்பட்ட நியமனம் பற்றி சொல்லப்பட்டது. கோகுல கிருஷ்ணன் அவர்களை முதலிலேயே விலக்கினீர்கள். பிறகு இப்போது செங்கல்வராயனையும் விலக்கிவிட்டீர்கள். கேட்டால் செங்கல்வராயனுக்கு னுக்கு வேலை இருந்தது என்கிறீர்கள். உண்மை அதுவல்ல. செங்கல்வராயனை அவரது விருப்பத்திற்கு மாறாக அப்புறப்படுத்தி உங்களுக்கு வேண்டியவரை நுழைத்திருக்கிறீர்கள். இது உண்மையல்ல என்று உங்களால் சொல்ல முடியுமா? இதையெல்லாம் கேட்டால் ஏதோ நகைச்சுவைக்காகப் பேசுவது போல் ஏதோ பேசுகிறார்கள். இதுவா பொறுப்புணர்ச்சியைக் காட்டுகிறது?

[திரு. கே. ஏ. மதியழகன்] [24th October 1964

நான் இந்த மந்திரிசபைக்கு சொல்ல விரும்புவது, பஞ்சாபில் கெய்ரோன் தான் விலகுவதற்கு சின்னாட்கள் முன்பு தன்னுடைய வழக்கில் வக்கீலாக இருந்த கபூர் என்பவரை அட்வகேட்-ஜெனரலாக நியமித்தார். இதுபற்றி ஜனாதிபதி அவர்களிடம் இரண்டாவது விண்ணப்பமாக another act of blatant nepotism என்று விண்ணப்பம் கொடுக்கப்பட்டது. பஞ்சாபில் நடைபெற்றது போல் நம் நாட்டிலும் நடைபெறலாமா? மக்கள் உங்களைப் பற்றி வெளியில் என்ன சொல்வார்கள்? 'தமிழ்நாட்டு கெய்ரோன்' என்று உங்களை பழிச்சொல் சொல்லும்போது, தமிழ் நாடு என்று இணைக்கப்படுவதால், அந்தப் பழியில் எங்களுக்கும் பங்கு வந்துவிடுமே என்பதற்குத்தான் கவலைப்படுகிறோம். அதற்கு பதில் சொல்லவேண்டியது உங்கள் கடமை. இதை நீங்கள் தட்டிக் கழிக்க முடியாது.

சேல்ஸ் டாக்ஸ் இனத்தில் இந்தத் துறையிலுள்ள அதிகாரிகள் வரி கொடுக்காமல் கள்ளக்கணக்கு வைத்திருக்கின்றவர்களிடமிருந்து 5 கோடி வசூல் செய்து காட்டினார்கள். இன்றைக்கு அவர்களுடைய நடவடிக்கைக்கு முட்டுக்கட்டை போடுவது போல் உத்திரவுகளைப்போட்டு அவர்களை அலக்கழித்துக் கொண்டிருக்கிறது அரசாங்கம். கள்ள வியாபாரிக்கு 'கருணைக்காலம்' தேவைதானா? மிகவும் வருத்தப்படுவதற்குரிய விஷயம். சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை அமுல் படுத்தாததால் அரசாங்கத்திற்கு பல லட்சம் நஷ்டம். டி.வி.எஸ். நிறுவனம் மட்டும் பல லட்சம் ஏமாற்ற முடிந்தது. அவர்கள் நிர்ப்பந்தத்திற்கு பணிந்து விட்டீர்கள் என்று குற்றம் சாட்டினேன். என்ன சமாதானம் சொல்ல முடிந்தது? இதை தயவு செய்து அமைச்சர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இன்றைக்கு நாட்டில் முக்கியமாக இருக்கின்ற பிரச்னை உணவுப் பிரச்னை. இதில் சரியான நடவடிக்கை இல்லை என்பதைப்பற்றி எடுத்துச் சொன்னோம். இந்த விவாதத்தில் ஒளி இருக்க வேண்டும், வெப்பம் இருக்கக்கூடாது என்று சபாநாயகர் சொன்னார்கள். வெப்பம் இருந்ததே தவிர ஒளி இருந்ததா? இந்த விவாதத்தில் முக்கியமாக உணவு அமைச்சர் அவர்கள் பேசியிருக்க வேண்டும். எங்கள் பட்டக்காரர்-பழைய கோட்டையின் பட்டக்காரர்-புதிய கோட்டையின் மந்திரியார், மூன்று நாள் விவாதத்தில் ஒரு வார்த்தை கூட இதைப்பற்றி பேசுவதற்குத் தயாராக இல்லை. ஆனால் வெளியே பேசாமலும் இருப்பதில்லை. அரிசிப் பஞ்சம் போக பால் சாப்பிடுங்கள் என்கிறார். ஊர் முழுதும் அவருக்கு பழய கோட்டை அரண்மனையாகவும், காங்கேயம் பண்ணையாகவும் தெரிகிறது. ஃபிரெஞ்ச் நாட்டில் அண்டொய்னட் என்ற ராணியிடம் மக்கள் ரொட்டி வேண்டும் என்று கேட்டதற்கு 'கேக் சாப்பிடுங்கள்' என்று பதில் சொன்னாளாம். இரண்டுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. இந்த நிலையில்தான் அமைச்சர்களுடைய பதில் இருந்து கொண்டிருக்கிறது. இருக்கின்ற பிரச்னைகளைச் சொன்னால் அவைகளைத் தட்டிக் கழிப்பதில்தான் அமைச்சர்கள் முயலுகிறார்கள். உணவுப் பிரச்னையைப்



24th October 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

பற்றி டெல்லியில் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் ஒரு மகாநாட்டைக் கூட்டினார்கள். அதேபோல் இங்கு ஏன் மகாநாடு கூட்டியிருக்கக் கூடாது? எங்கள் கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்களை அழைத்திருக்கலாம். திரு. சசிவர்ணத்தேவர் அவர்களை அழைத்திருக்கலாம். திரு. சா. கணேசன் அவர்களை அழைத்திருக்கலாம். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கலியாணசுந்தரம் அவர்களை அழைத்திருக்கலாம். திரு. நல்லசிவம் அவர்களை அழைத்திருக்கலாம். இவர்களை ஒன்றும் அழைக்காமல் பிரச்னையைப்பற்றி எப்படி முடிப்பது? இன்றைக்குக்கூட கார்ட் சிஸ்டம் கொண்டு வருவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்விதம் கார்ட் கொடுப்பதை ஊர்க்காவல் படையிடம் (ஹோம் கார்ட்) கொடுக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் பிரிவைச் சேர்ந்தவர்களிடம் ஏன் இதை ஒப்படைக்க வேண்டும்? கார்ப்பரேஷனிடம் ஒப்படைக்கக் கூடாதா? கௌன்சிலர்களிடத்தில் ஒப்படைக்கக்கூடாதா? சட்டமன்ற உறுப்பினர்களிடம் ஒப்படைக்கக்கூடாதா? டெல்லியில் நடைபெற்ற மகாநாட்டில் எங்கள் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே. மனோகரன் அவர்கள் கலந்து கொண்டார்கள். அவர்கள் எங்கள் தலைவர் சார்பில் பல அம்சங்களை அங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த யோசனைகள் எல்லாம் எங்கே அமல் நடத்தப்பட்டது? இந்த மன்றத்தோடு எல்லாம் தீர்ந்து விட்டது என்று நீங்கள் கருதிக்கொண்டிருக்கிறீர்கள். வெளியில் மூன்றரைக் கோடி மக்கள் இதைப்பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கு ஓர் நிரந்தரமான சட்டமன்றம் கூடியுள்ளது. அவர்கள் தான் உங்களுக்கு நல்ல தீர்ப்பு வழங்கப்போகிறார்கள். அதை நீங்கள் அனுபவிக்கத்தான் போகிறீர்கள். இந்தப் பிரச்னையின் காரணமாக காந்தப்பன் சாகடிக்கப்பட்ட பின்னாலாவது, அர்ச்சுனன் படுகொலைக்குப் பிறகாவது, குறைந்தது, பழைய கோட்டை பண்பின் அடிப்படையில், இங்கேயுள்ள உணவு மந்திரி ராஜிநாமா செய்வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் நமது பழைய கோட்டை அமைச்சர் அவர்கள் இந்தப் புதியகோட்டை பதவியை விட மாட்டேன் என்று கெட்டியாய் பிடித்துக்கொண்டிருக்கிறார். நிச்சயமாக உங்களுக்கு 1967-ம் வருஷத்தில் மக்கள் இதற்கு பாடம் கற்பித்துத்தான் விடுவார்கள் என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்திக்கொள்கிறேன். உணவுப் பிரச்னை இன்றைக்கு இந்த நிலைமைக்கு வந்த காரணம், முழுப்பொறுப்பு, நீங்கள் உறுதியற்ற கொள்கையை வைத்துக்கொண்டிருப்பதுதான். இதைத் தான் நாங்கள் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னோம். அதற்கு நீங்கள் எந்தவிதமான சரியான பதிலும் அளிக்கவில்லை. அது மட்டுமல்ல. அட்வகேட்-ஜெனரல் நியமனம் போன்றவற்றில் நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்பதை எடுத்துக்காட்டினோம். அவற்றிற்கெல்லாம் சரியான பதில் எதுவும் அளிக்கப்படவில்லை என்பதைக் கூறி, மக்களுக்கு நன்மை எதையும் செய்யாத இந்த மந்திரி சபை மீது நம்பிக்கையில்லை என்று கொடுத்திருக்கின்ற இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக எல்லோரும் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[24th October 1964

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, தங்கள் நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் மிக ஆவேசமாகப் பேசியபோதிலும் அவைகளுக்கு விடையளிக்க விரும்பவில்லை. இத்தோடு நிறுத்திக்கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட 1¼ மணி நேரம், இந்தச் சபையின் நேரம் போனது தெரியாதபடி சுவாரசியமாகப் பல பதில்களைச் சொன்னார்கள். அதன் பிறகு நண்பர் மதியழகன் அவர்களும் பதிலைச் சொன்னார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் உணவுப் பிரச்னை சம்பந்தமானது முக்கியமானது. மற்ற குற்றச்சாட்டுகளுக்குச் சொன்ன பதில்கள் பல அவர்களே பரிசீலனை செய்ய வேண்டியவைகளாகவும் இருக்கும். நம்முடைய நாடு பல அரசியல் கட்சிகள் சேர்ந்து ஆட்சி நடத்தக் கூடிய நாடு. நம் நாட்டிலே மல்ட்டி-பார்ட்டி சிஸ்டம் இருக்கிறது. ஒரே கட்சியின் ஆட்சி நடக்கிற நாடு அல்ல. அந்த மாதிரி எல்லா மக்களும் சேர்ந்து ஒரே கட்சிதான் இருக்கவேண்டும் என்று முடிவு செய்து விட்டால் அப்போது நிலைமை வேறு. பல கட்சிகள் இருந்து ஜனநாயக முறையில் ஆட்சி நடத்தப்படும் நேரத்தில் கட்சி வேறு, அரசாங்கம் வேறு. இரண்டும் தனித் தனி. கட்சித் தலைவரை ஆலோசனை கேட்பது தவறு அல்ல. கேட்கவும் வேண்டியதுதான். ஆனால் ஒரு விஷயம் ஆச்சரியத்தை விளைவித்தது. அது என்ன என்றால்—முதல் அமைச்சர் அவர்கள் சிந்தித்து நிதானித்துப் பேசுகிறவர்கள்—எதிரில் இருக்கிற மதியழகன், அவர்களுக்கு ஊக்கம் அளித்ததாலோ என்னவோ அவர்களும் "என்னுடைய பிரதம காரியதரிசி நான் கூப்பிட்டால் வரவேண்டியதுதானே, கூப்பிட்ட இடத்திற்கு வரவேண்டியது தானே" என்று சொன்னார்கள். அது சரியா என்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். "The Chief Secretary is the Chief Secretary to the Government of Madras. He is not a Political Secretary சீஃப் மினிஸ்டருக்கு செகரட்டரி அல்ல. வேண்டுமானால் பொலிட்டிகல் செக்ரட்டரி வைத்துக் கொள்ளட்டும். சொன்ன இடத்திற்குப் போக வர ப்ரைவேட் செகரட்டரி வைத்துக்கொள்ளட்டும். அவர்களுக்கு வேண்டுமானால் 1,000 ரூபாய் சம்பளம் கொடுக்கட்டும். அவர் போய் அரசியல் விவரங்களைத் தேடிக்கொண்டு வரட்டும். அது முறையாக இருக்கும். கேரளாவில் கம்யூனிஸ்ட் மந்திரி சபை இருந்தபோது அந்த முறையில் ப்ரைவேட் செகரட்டரி வைத்துக்கொண்டார்கள். சர்க்கார் அதிகாரிகளை இந்தக் காரியங்களுக்கு உபயோகப்படுத்தக்கூடாது என்று, அரசாங்கம் வேறு, கட்சி வேறு என்று, அந்த மாதிரி வைத்துக் கொண்டு போகச் சொல்ல, வரச் சொல்லச் செய்தால் தவறு ஏற்படாது. ஆனால்; குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி நான் சொல்லவில்லை; உணவு நெருக்கடி முற்றி இருக்கும் சமயத்தில் காமராஜ் அவர்கள் செய்த உதவியை மறக்கவில்லை; தேசம் பூரா



24th October 1964] *[திரு. மீ. கலியாணசுந்தரம்]*

விலும் இருக்கும் செல்வாக்கை உபயோகப்படுத்தி பல ராஜ்யங்களிலிருந்து அரிசி கொண்டுவர யோசனை சொல்லப் பயன்பட்ட சம்பவத்தைப் பற்றிச் சொல்லவில்லை; ஆனால் முதல் அமைச்சர் கூறிய பதிலிலிருந்து ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது. கட்சி வேறு, அரசாங்கம் வேறு. இதை முறையாக அமல் நடத்தவேண்டும். "எனது காரியதரிசி; நான் கூப்பிட்ட இடத்திற்கு வரவேண்டியது தானே; போய்ப் பார்த்துவிட்டு வா என்றால் பார்த்து விட்டு வர வேண்டியதுதானே" என்று சொன்னார்கள். இதைப் பற்றி அந்த அதிகாரிகளே என்ன நினைப்பார்கள் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். "பல கட்சி ஆட்சி" நடக்கும் நாட்டில் இருக்கிறோம் என்பதை முதல் அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது நிற்க, உணவுப் பிரச்னை பற்றி அவர்கள் சொன்னதில் ஒரு விஷயம் ஐடெண்ட்டிஃபிகேஷன் கார்டு—அடையாளச் சீட்டு கொடுக்க முன் வந்தது ஓரளவு வரவேற்கத் தகுந்தது. ஆனால் அவர்கள் கூறிய பதில் சிறிதும் திருப்தி அளிக்கவில்லை. நான் கூறிய பல விஷயங்களை அவர்கள் இடையிடையே நான் மறைமுகமாக குத்தலாகப் பேசுவதாகச் சொன்னார்கள். எனக்கு ஒன்றும் அப்படி திறமை இருப்பதாக நான் நினைக்கவில்லை. அமைச்சர் அவர்கள் குற்றமாகத்தான் சொன்னார்கள். அவர் சொன்னது நல்ல அம்சமாக இருந்தாலும், கெட்ட அம்சமாக இருந்தாலும், அது சகவாச தோஷத்தால் ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். இந்தத் திறமை இந்தச் சபைக்கு வருவதற்கு முன்னால் இருந்ததாகத் தெரியவில்லை. முதல் அமைச்சரை கவனித்து கவனித்து என்னையும் தொத்திக்கொண்டு விட்டதோ என்னவோ. (குறுக்கீடு) பேசுகிற முறையில் அப்படி ஏதாவது தெரிந்திருந்தால் அது என்னுடைய குற்றம் அல்ல, சகவாச தோஷக் குற்றமாகத்தான் இருக்கும். அது நிற்க.

நான் குறிப்பிட்டது எல்லா வியாபாரிகளையும் ஒழிக்க வேண்டும் என்பதல்ல. வர்த்தகச் சூதாட்டத்தைத்தான் ஒழிக்க வேண்டும் என்று கூறினேன். அப்படியானால் சில்லரை வியாபாரிகளை ஏன் வைத்துக்கொள்ளவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில்லரை வியாபாரிகளை ஒழித்து விட்டால் அவர்களுக்கு என்ன மாற்று ஏற்பாடுகள் செய்யப் போகிறீர்கள்? பஸ் வந்தபோதே ரிக்ஷாக்காரர்கள். சைக்கிள் ரிக்ஷாக்காரர்கள் மாற்று வேலை இல்லாமல் திண்டாடினார்கள். இந்த நிலையில் சில்லரை வியாபாரிகளை ஒழித்து விட முடியாது. நமது நாட்டைப்பற்றி நான் கொஞ்சம் புரிந்துகொண்டிருக்கிறேன். அவர்கள் அளவு ஞானம் இல்லாவிட்டாலும் ஏதோ கொஞ்சம் புரிந்துகொண்டிருக்கிறேன். நம் நாட்டைப் பற்றி கவலையே தவிர ரஷ்யாவைப் பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. ரஷ்யாவில் அமெரிக்காவிலிருந்து கோதுமை இறக்குமதி செய்கிறார்கள் என்றால் அவர்களுக்கு வசதி இருக்கிறது. அதைப் பற்றியெல்லாம் நாம் எந்த அளவுக்கு விவாதிக்க முடியும் என்பது

*[திரு. மீ. கலியாணசுந்தரம்]* [24th October 1964

எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அதைப் பற்றி விவாதிப்பதென்றால் விவரமும் தெரிந்திருக்கவேண்டும். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் 1970-ம் வருஷத்தில் ரொட்டி எல்லோருக்கும் இலவசமாகக் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் இறக்குமதி செய்தால் அது வேறு விஷயம். இறக்குமதி, உற்பத்தி விஷயம் நமக்குச் சாதகமாக இருக்கிறது என்று டாக்டர் நடராஜன் அவர்கள் சொன்னார்கள். உற்பத்தி பெருகியிருக்கிறது, இறக்குமதி இருக்கிறது என்று சொன்னார்கள். டாக்டர் நடராஜன் அவர்கள் நமது நிபுணர்களில் ஒருவர். பதில் சொன்னால் சங்கடம் ஏற்படுமே என்று கேள்வி போட்டுவிட்டு விட்டுவிட்டார். (டாக்டர் ப. நடராஜன்: கனம் உதவி சபாநாயகர் மணி அடித்து விட்டார்.) மொத்த வியாபாரம், வர்த்தக சூதாட்டத்திற்கு வழி செய்யும் பணப் புழக்கம் இவைகளை நீக்கவேண்டுமென்று சொன்னேன். இந்த ராஜ்யத்தில் மட்டும் இதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்று சொல்லுவதற்கில்லை. ஏன்? மத்திய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே வந்து மக்களுக்கெல்லாம் அவர்களுக்கான தேவைகள் கிடைக்க வழி செய்யவேண்டும் என்று பேசிவிட்டுப் போகிறாரே? கள்ளப் பணத்தை அபகரிக்கப் போகிறோம் என்று சொல்லுகிறாரே? ஏதோ ஒரு சினிமா ஸ்டார் வீட்டில் புகுந்து கள்ளப்பணத்தைக் கண்டுபிடித்து விட்டேன் என்று சொல்லிவிட்டால் தீர்ந்துவிட்டதா? வேறு வழியா இல்லை? நிதி சீர்திருத்தம் கொண்டுவர சக்தி இல்லையா? அதிகாரம் இல்லையா? அல்லது விஷயம் தெரியாதவரா? தெரிந்தவர்தான். ஆனால் பாம்புக்கும் நோகக் கூடாது, பாம்பு அடித்த கோலும் வளையக் கூடாது. ஆகையால்தான் சொல்லுகிறேன். திறமையைப் பற்றிச் சொன்னார்கள். தனிப்பட்ட முறையில் திறமைசாலிகள்தான். இந்தக் கொள்கையைப் பின் பற்றுகிறார்கள். முதல் அமைச்சர் சொன்ன சீர்திருத்தம் கொண்டு வந்தாலும் அதையும் அறைகுறையாகத்தான் செய்கிறார்கள். உணவுப் பிரச்னை ரஷ்ய நாட்டிலும் இருக்கிறது, எந்த நாட்டோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் எங்கும் இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களிடமிருந்து என்ன கற்றுக்கொண்டிருக்கவேண்டும்? ரஷ்யா போன்ற அநேக நாடுகளில் உணவுப் பிரச்னையைத் தீர்க்கமுடியவில்லை என்றால் நாம் தீர்ப்பதற்கு என்ன வழி என்ற கவலை இருக்க வேண்டும். அதற்கு எத்தகைய நீண்ட காலத் திட்டம் இருக்க வேண்டும்? சென்னையில் உள்ள நெருக்கடியைத் தாற்காலிகமாகத் தீர்த்து விடலாமா, ஒரிஸாவிலிருந்து, தஞ்சையிலிருந்து; திருச்சியிலிருந்து கொண்டுவந்து தீர்த்துவிடலாமா என்று நினைப்பது? 1953-ம் ஆண்டில் கண்ட்ரோலை எடுத்த பிறகிலிருந்தே இந்தப் பிரச்னை இருக்கிறது என்று சொன்னதை ஒத்துக்கொள்கிறேன் என்று ஒத்துக்கொண்டார்கள். அதில் எஎல்லோருக்கும் பொறுப்பு உண்டு. அன்றைக்கு உணவு அமைச்சராக இருந்தவர் அங்கு உணவு அமைச்சராக இருக்கிறார். பத்து வருஷ படிப்பினையைக் கற்றுக்கொண்டார்களா? ரேஷனிங் என்பதற்கு ஏன் சங்கோசப்படவேண்டும். ரேஷன் என்பது சாவித்திரி பிள்ளை வரம் கேட்ட



24th October 1964] *[திரு. மீ. கலியாணசுந்தரம்]*

மாதிரி. பிள்ளை வேண்டும் என்று கேட்டால் நிச்சயமாக புருஷனுக்கு உயிர் கொடுத்தாக வேண்டும். இல்லாவிட்டால் எப்படி பிள்ளை பிறக்கும்? ரேஷனிங் என்று ஒப்புக்கொண்டு விட்டால் அதன் விளைவாக அரிசி தேட வேண்டியது, உணவு தானியங்களை கொள் முதல் செய்வது ஆகிய எல்லாப் பொறுப்புகளையும் அரசாங்கங்கள் எடுத்துக்கொண்டாகவேண்டும். உணவு தானிய வர்த்தகம் பற்றி முதல் அமைச்சர் அவர்கள் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. வேண்டிய ஸ்டாக்குகளை எப்படி ஏற்படுத்தப் போகிறோம் என்று சொல்லவில்லை. இல்லாவிட்டால் என்ன ஆகும்? அதற்கு உத்திரவாதம் இல்லாமல் அடையாளச் சீட்டு வழங்கி, இரண்டு வாரம் கொடுத்து விட்டு, பிறகு ஸ்டாக் இல்லை என்றால், கடைகளில் ஸ்டாக் இல்லை என்று எழுதுகிற மாதிரி, சிமெண்ட் விற்கக் கூடிய இடம், ஆனால் ஸ்டாக் இல்லை, சக்கரை விற்கக் கூடிய இடம், ஆனால் ஸ்டாக் இல்லை என்ற முறையில் அடையாளச் சீட்டு இருக்கிறது ஆனால் ஸ்டாக் இல்லை என்றால் பலன் ஏற்படாது. ஆகையால்தான் சொல்லுகிறேன், பாதிக் கிணறு தாண்டவேண்டாம் என்று. பூரணமாகச் செய்தால்தான் 2-00
பலன் உண்டு. கனம் முதல் அமைச்சர் அவர்கள் என்னுடைய p.m.
கருத்துக்கள் சிலவற்றை ஏற்றுக்கொண்டு சொன்னபோதிலும் கூட இன்னும் இந்தப் பிரச்னையில் அதிக கவனம் செலுத்த வேண்டும், அதிக அக்கரை செலுத்த வேண்டும். இது ஒரு வருஷத்தில் அல்லது இரண்டு வருஷங்களில் தீர்க்கக் கூடிய பிரச்னை அல்ல. நாம் பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் அடையவேண்டுமென்றால், நம்முடைய திட்டங்கள் வெற்றி அடைய வேண்டுமென்றால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வசதிகளை சரியானபடி பெருக்கிக்கொள்ள வேண்டும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிர்வாகச் செலவு குறைவாக இருக்கவேண்டும், தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்கும் நல்ல திருப்தி அளிக்கக் கூடியதை அவசியம் செய்யவேண்டும். இது ஒரு ஜீவநாடியான பிரச்னை, மிக கவலை தரக்கூடிய பிரச்னை. இது பற்றி அமைச்சர் அவர்களுடைய பதில் எனக்கு திருப்தி அளிக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, ஓரே ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். கட்சி வேறு, அரசு வேறு என்பதை நாங்கள் நன்றாக உணர்ந்துகொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் இயங்கிக்கொண்டு வருகிறோம். 'சீஃப் செக்ரடரி' அவர்களை அழைத்தது பற்றி குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி நான் அவர்கள் எங்கே கூப்பிட்டாலும் வரவேண்டும் என்று சொன்னதாகக் கூறினார்கள். அன்று இரவு 9 மணிக்கு மத்திய நிதி அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். காங்கிரஸ் தலைவர் அவர்களும் அவர்களோடு இருந்தார்கள். அவர்கள் இருவரும் மறுநாள் வெளியே செல்ல இருந்தார்கள். அவர்கள் சில யோசனைகள் பற்றி பேச வேண்டும், விவாதிக்கவேண்டுமென்றும் கூறினார்கள். நிதி அமைச்சர் அவர்கள் வீட்டிற்கு வருவதா, அல்லது காங்கிரஸ்

[திரு. எம். பக்தவத்சலம்] [24th October 1964

தலைவர் அவர்களுடைய வீட்டிற்கு வருவதா என்பது பிரச்னை. நிதி அமைச்சர் அவர்கள் காங்கிரஸ் தலைவர் அவர்கள் வீட்டிற்குப் போய் அங்கே சந்திக்கலாம் என்று சொன்னார்கள். என்னுடன் இரண்டு சகாக்களும் தொழில் அமைச்சர் அவர்களும், மராமத்து இலாகா அமைச்சர் அவர்களும் கூட உடன் வந்தார்கள். இதுபற்றி விவாதிக்கும்பொழுது, சம்பந்தப்பட்ட காரியதரிசிகளும்கூட இருந்தால், மேற்கொண்டு துரிதமாக இந்தப் பிரச்னையில் கவனம் செலுத்தலாம், நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று கருதி, பிரதம காரியதரிசியையும், நிதி இலாகா காரியதரிசியையும் அங்கே வரச்சொன்னேன். அவர்களை எப்பொழுது வரச்சொல்லவேண்டும், எங்கே வரச் சொல்லவேண்டும் என்பது எனக்குத் தெரியும். நாங்கள் வரச் சொன்னால் வரத்தான் வேண்டும், அவர்களும் வருவார்கள், ஒன்றும் மறுக்க மாட்டார்கள். அதில் ஒன்றும் தப்பு இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் பேசிய பிறகு, அவர் பேசின பேச்சுக்கு பதில் சொல்லும் முறையில் நான் ஒன்றுமே பேசவில்லை. ஆகவே, அவர்கள் கிளாரிபிகேஷன் சொல்லுவதற்கு வழி இல்லை.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் பேசியதற்கு மந்திரி அவர்கள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஆகவே, வேறு என்ன இருக்கிறது 'கிளாரிபிகேஷன்' செய்வதற்கு?

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** என்னுடைய தீர்மானத்தை 'வாய்ஸ் வோட்டுகள்' மூலம் முடிவு செய்துவிட்டு, பிறகு மற்றொரு தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம். அந்தத் தீர்மானத்தின் பேரில் 'டிவிஷன்' கேட்கப் போகிறார்கள் என்று அறிகிறேன். ஆகவே, முதலிலே என்னுடைய தீர்மானத்தை 'வாய்ஸ் வோட்டு'களின் பேரில் முடிவு செய்துவிட்டு, பிறகு அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம்.

MR. SPEAKER: I will put the motion of Sri M. Kalyanasundaram to the vote of the House.

The question is—

'That this House disapproves the policy of the Ministry in respect of food crisis which has resulted in—

(a) shooting up of prices of all essential articles of life very steeply,

(b) hoarding and black-marketing by wholesale traders with the aid of "legal bank-money" and "illegal black money",

(c) man-made scarcity of foodgrains and other vital articles of daily use, subjecting millions of people to unprecedented suffering.'

The motion was put and lost.



24th October 1964]

MR. SPEAKER: I will put the motion of Sri K. A. Mathialagan to the vote of the House.

The question is—

'That this House expresses its want of confidence in the Council of Ministers'.

The motion was put and declared lost.

A poll was demanded and the House divided thus:—

*Ayes.*

Sri V. R. Nedunchezhiyan
„ M. Karunanithi.
„ K. A. Mathialagan
„ T. L. Sasivarna Thaver
„ M. Kalyanasundaram
„ A. P. Dharmalingam
„ Rama. Arangannal
„ P. K. Mookiah Thevar
„ A. K. Subbiah
„ V. S. S. Mani
„ M. Rajangam
„ Kanchi Manimozhiar
„ KR. RM. Kariamanicka Ambalam
„ A. Perumal
„ K. Cheemaichamy
„ M. Shaumugam
„ N. Rajangam
„ V. Arunachalam
„ K. S. Mani
„ N. Chinnamunissamy Chetty
Srimathi Manonmani Ammal
Sri T. P. Alagamuthu
„ S. Mani
„ A. Thiagarajan
„ P. Murugaiyan
„ A. Duraiyarasan
„ V. R. Periannan
„ P. V. Sriramulu
„ M. Kamalanathan
Sri C. G. Viswanathan
„ S. Muthulingam
Pulavar K. Govindan
Sri C. V. Velappan
„ C. Manickam
„ T. Chinnasamy
„ M. R. Krishnamurthy
„ A. Thangavelu
„ Munu Adhi
„ S. Murugaiyan
„ P. U. Shanmugam
Srimathi Jagadambal Velayudham
Sri M. S. Mani
„ K. Thirupathy
„ C. K. Chinnaraji
„ M. P. Vadivelu
„ R. Nallamuthu
„ N. P. Sengottuvelu
„ S. Arumugham
„ M. V. Karivengadam
„ A. G. Balakrishnan
„ R. Narayanan
„ S. Ramaswamy
„ V. Krishnamurthy
„ K. R. Munirathnam
„ R. Abdul Khaleel
„ S. J. Ramaswamy
„ R. Sampangi
„ K. R. Nallasivam

*Noes.*

Sri K. Parthasarathy
„ N. P. M. Chinniah Gounder
„ S. Chinnayyan
„ M. Alagiriswamy
„ C. M. Ambikapathi
„ L. Anandan
„ S. Angamuthu Naicker
„ K. S. Ardhanareeswara Gounder
„ P. Appavoo
„ A. Appavoo Thevar
„ A. Arumugam
„ R. S. Arumugam
„ V. S. Arunachalam
„ A. B. Balagan
„ A. M. V. S. [illegible]
„ V. Bashyam Reddi
„ M. Chellaiah
„ G. R. Chinnadurai
„ S. Chinnakaruppa Thevar
„ A. [illegible] Ambalakarar
The Hon. Sri M. Bhaktavatsalam
The Hon. Sri P. Kakkan
Sri R. Krishnaswamy Naidu
„ A. S. Dhakshinamoorthy Gounder
„ M. Dhandayuthapani Pillai
„ A. Doraiswamy
„ N. Ekambara Mudaliar
„ V. Ellama Naidu
„ T. P. Elumalai
„ G. Gomathisankara Dikshidar
„ K. Gopala Gounder
„ R. Govindarajulu Naidu
„ K. S. G. Haja Sheriff
„ P. Jayaraj
„ T. Kadambavana Sundaram
„ T. M. [illegible]
„ A. K. Kaliappa Gounder
„ T. [illegible] Gowder
„ S. V. Natesa Mudaliar
„ R. Krishnaswami Gopalan

*Noes*—cont.

Sri M. Kulandaiswamy Gounder
„ N. Mahalingam
„ T. Manavalan
„ K. Marappa Gounder
„ M. Maruthanayagam Pillai
„ J. Matha Gowder
„ M. Mayandi Nadar
„ K. K. Muthiah
„ V. A. Muthiah
„ M. P. Muthukaruppannaswamy Gounder.
„ P. K. Muthuvelappa Gounder
„ T. M. Nallaswamy
„ S. Nanjunda Row
The Hon. Sri N.Nallasenapathi Sarkarai Manradiar.
The Hon. Sri G. Bhuvarahan
The Hon. Sri S. M. A. Majid
Srimathi A. Suares
„ C. Kolandai Ammal
„ P.K. R. Lakshmikantham
„ A. S. Ponnammal
„ A. Krishnaveni
„ B. Lakshminarasamma
„ Rajathi Kunchithapatham
„ Parvathi Arjunan
„ N. K. Ranganayaki
Kumari D. Sulochana
Sri K. Narayanaswamy Pillai
„ G. Narayanaswamy Naidu
„ K. S. Nataraja Gounder
„ N. Duraipandi
„ K. P. Palanisamy
„ K. N. Palaniswami Gounder
„ G. D. Perumal Raju
„ R. Ponnappa Nadar.
„ K. Ponniah
„ A. M. Ponrangam
„ S. Ponnuswamy
„ R. Rajagopalaswamy Naicker
„ B. Rajagopal Naidu
„ P. Rajagopal
„ G. Rajaram
„ A. Ramachandra Rayer
„ N. Ramachandra Reddy
„ A. L. Ramakrishna Naidu
„ N. S. Ramalingam
Sri S. Ramalingam
„ V. Ramanathan
„ A. R. Ramasami
„ S. Ramaswamy Naidu
„ N. Ramaswamy Udayar
„ A. Rathnavel Gounder
„ R. Rangaswamy
„ S. Sadasivam
„ R. Shanmuga Rajeswara Sethupathi
„ R. Jeevarathnam
„ B. Parameswaran
„ R. V. Swaminathan
„ K. T. Kosalram
Dr. B. Natarajan
Sri A. P. C. Veerabahu
„ S. Sangili
„ K. R. Sambandam
„ V. Sankaran
„ P. R. Sreenivasa Padayachi
„ M. S. Selvarajan
„ A. Senapathi Gownder
„ R. Sengaliappan
„ N. Shanmugasundaram
„ SV. SM. Sivaraman Ambalam
„ S. Sivasubramaniam
„ N. Sountharapandian
„ O. Sreenivasa Reddiar
„ C. Srinivasan
„ Soundravel Servai
„ A. R. Subbiah Mudaliar
„ R. Subramaniam
„ K.S Subramania Gounder
„ N. Subramaniam Chettiar
„ N. S. Sundararajan
„ K. B. Palani
„ T. S. Swaminatha Odayar
„ R. Thangavelu
„ M. D. Thiagaraja Pillai
„ R. Thiruvengadam
„ P. Urkavalan
„ G. Venkataraman
„ O. Venkatasubba Reddy
„ N. V. Venugopalakrishnaswami
„ M. William
„ A. Chidambaranatha Nadar.

Ayes: 58; Noes: 130; Neutral: Nil.

The motion was put and lost.

### V.—ANNOUNCEMENT.

#### NOMINATION OF COUNCIL MEMBER TO THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

MR. SPEAKER: I have to announce to the House that Mr. Rajah Iyer has been nominated by the Legislative Council to associate with the Committee on Subordinate Legislation of the Legislative Assembly for the year 1964-65 in the vacancy caused by the resignation of his membership of the Council by Dr. P. V. Rajamannar with effect from 13th May 1964.



As decided by the Business Advisory Committee, the House is adjourned *sine die*. 2-21 p.m.

The House then adjourned *sine die*.

### VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

#### A. Statutory Rules and Orders.

91. *Notification issued with G.O. Ms. No.* 2265, *Food and Agriculture, dated* 29*th July* 1964 *declaring the market area and notified market area to the Regulated Markets at Kattumannargudi and Sethiathope in South Arcot district for the purposes of the Madras Agricultural Produce Markets Act,* 1959, *in respect of cotton, groundnut, paddy and gingelly.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act,* 1959 (*Madras Act* 23 *of* 1959).]

92. *Notification issued with G.O. Ms. No.* 3368, *Industries, Labour and Co-operation (Housing), dated* 1*st July* 1964 *issuing* "*the Madras State Housing Board (Board Premises) Rules,* 1964" *under the Madras State Housing Board Act,* 1961. [*Laid on the Table of the House under section* 120 (4) *of the Madras State Housing Board Act,* 1961 (*Madras Act* 17 *of* 1961).]

#### B. Reports, Notifications and other papers.

34. *List of Unstarred Questions and Answers from Nos.* 16 *to* 33.

35. *Corrigendum to the list of Unstarred Questions and Answers laid on the Table of the House on* 16*th October* 1964.

* 36. *The Madras Electricity Duty (Amendment) Bill,* 1964 (*L.A. Bill No.* 44 *of* 1964) *with Annexure to the Bill.*

* 37. *The Madras Electricity (Taxation on Consumption) Amendment Bill,* 1964 (*L.A. Bill No.* 45 *of* 1964) *with Annexure to the Bill.*

---

* Sent to Members by general despatch on 23rd October 1964.

# APPENDIX.

[*Vide* answer to Unstarred Question No. 21 on page 663]

STATEMENT.

| *Serial number and name of the Circle.* | *Total number of the Subdivisional office under the control of the Circle.* | *Name of the subdivision to which jeep supplied.* | *Name of the Subdivision to which no jeep has been supplied.* | *Reasons for the non-supply of jeeps.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. Madras Circle .. .. | 24 (twenty-four). | 1. Chingleput Subdivision, Chingleput. | 1. North East Subdivision, Madras. | The permanent subdivisions and other temporary subdivisions are not provided with jeeps as there are no irrigation works under the Second and Third Five-Year Plan Schemes and as these Subdivisional Officers need not travel to interior parts of the district. |
| | | 2. Tiruvellore Subdivision, Madras. | 2. North West Subdivision, Madras. | |
| | | 3. Buckingham Canals Subdivision, Madras. | 3. Boat Building Yard Subdivision. | |
| | | 4. Sathanur Reservoir Project Canals Subdivision. | 4. Government House Subdivision, Madras. | |
| | | 5. Sathanur Reservoir Project Canals Second Stage Subdivision. | 5. South East Subdivision, Madras. | |
| | | 6. Palar Anicut Headworks, Canals, Stores and Machinery Subdivision. | 6. South West Subdivision, Madras. | (Out of the 13 jeeps, one is being used for two Subdivisional Officers. Hence the total Subdivisional Officers using jeeps will be 14). Sathanur Canals Subdivision has been closed on 29th February 1964 and attached to the Sathanur Dam Subdivision. |
| | | 7. Palar Anicut Tank Improvement Subdivision. | 7. Marina Improvement Subdivision, Madras. | |
| | | 8. Desilting-*cum*-Reclamation Subdivision, No. I. Madras. | 8. Arni Subdivision, Arni. | |
| | | 9. Desilting-*cum*-Reclamation Subdivision. No. II, Srivilliputhur. | 9. Ranipet Subdivision, Ranipet. | |
| | | 10. Desilting-*cum*-Reclamation Subdivision No. III, Chingleput. | 10. Vellore Subdivision, Vellore. | |
| | | 11. Desilting-*cum*-Reclamation Subdivision, Vellore, No. IV. | 11. Sathanur Reservoir Project Dam Subdivision, Tiruvannamalai. | |
| | | 12. Desilting-*cum*-Reclamation Subdivision V, Madras. | | |
| | | 13. Aranair Subdivision. | | |
| | | *I. Tiruchirappalli Division.* | *I. Tiruchirappalli Division.* | |
| 2. Tiruchirappalli Circle .. | 21 (twenty-one). | 1. Tiruchirappalli North Subdivision, Tiruchirappalli. | 1. Pudukkottai (Special Subdivision), Pudukottai. | 1. There is no necessity for a jeep for this Subdivisional Officer as he is in charge of repairs to buildings in places normally accessible. |

| Serial number and name the Circle. | Total number of the sub-divisional office under the control of the Circle. | Name of the subdivision to which jeep supplied. | Name of the subdivision to which no jeep has been supplied. | Reasons for the non-supply of jeeps. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 2 Tiruchirappalli—*cont.* | | 2. Tiruchirapalli South Subdivision, Tiruchirappalli. | 2. Agniar Special Subdivision. | 2. This Subdivisional Officer is to share the jeep of item (3) of column (4). |
| | | 3. Pudukkoattai (Regular) Subdivision. | 3. Amaravathi Remodelling Subdivision, Karur. | 3. This Subdivision has since been wound up from 29th February 1964 afternoon. |
| | | 4. Machinery Subdivision, Tiruchirappalli. | | |
| | | *II. Periyar-Vaigai Division.* | *II. Periyar-Vaigai Division.* | |
| | | 5. Periar Subdivision, Madurai.<br>6. Uthamapalayam Subdivision.<br>7. Vaigai Dam Subdivision.<br>8. Vaigai Subdivision, Manamadurai.<br>9. S.M.I.P. Subdivision Bodinayakanur. | 4. Special Subdivision for Grouting Periyar Dam. | 4 Jeep is not necessary as the work is confined to a particular place in Periyar Dam. |
| | | *III. Madurai Division.* | *III. Madurai Division.* | |
| | | 10 Madurai North Subdivision, Madurai.<br>11 Sathiar-Odai Special Subdivision, Alanganallur. | 5 Madurai South Subdivision, Madurai.<br>6 Dindigul Subdivision, Dindigul. | 5 The Subdivisional Officer Sri N. Sambandam Pillai owns a car.<br>6 The Subdivisional Officer Sri Samuel Ambrose owns a car. |
| | | 12 Special Minor Irrigation Programme (Execution) Subdivision, Madurai. | 7 Dairy and Milk Supply Scheme Subdivision, Madurai. | 7 Jeep has not been supplied. |
| | | *IV. Manjalar Division.* | *IV. Manjalar Division.* | |
| | | (One jeep has since been supplied to the Manjalar Subdivision.) | 8 Manjalar Subdivision No. I. | The proposal of the Chief Engineer (Irrigation) for supply of jeep has been sanctioned by Government. |
| | | 13 Manjalar Subdivision No. II. | | |

| *Serial number and name of the circle.* (1) | *Total number of the Subdivisional office under the control of the circle.* (2) | *Name of the subdivision to which jeep supplied.* (3) | *Name of the subdivision to which no jeep has been supplied.* (4) | *Reasons for the non-supply of jeeps.* (5) |
|---|---|---|---|---|
| 3 Marine Works Circle, Madras. | 3 (Three). | 1 Sethusamudram Project Investigation Subdivision, Mandapam Camp. | 1 Marine Works Subdivision at Madras.<br>2 Marine Works Subdivision at Cuddalore. | 1 The Subdivisional Officer at Madras is attached to the Office of the Superintending Engineer, Marine Works Circle, Madras. Hence a jeep has not been provided.<br>2 Action is being taken to procure a jeep for the use of the Subdivision at Cuddalore. |
| 4 Tirunelveli Circle .. | 21 (Twenty-one). | *I. Ramanathapuram Division.*<br>1 Special Minor Irrigation Programme (Execution) Subdivision, Sathur. | | |



| *Serial number and name of the circle.* (1) | *Total number of the Subdivisional office under the control of the circle.* (2) | *Name of the subdivision to which jeep supplied.* (3) | *Name of the subdivision to which no jeep has been supplied.* (4) | *Reasons for the non-supply of jeeps.* (5) |
|---|---|---|---|---|
| | | * 2 Virudhunagar Subdivision, Virudhunagar.<br>* 3 Paramakudi Subdivision, Paramakudi.<br>* 4 Karaikudi Subdivision, Karaikudi.<br>* *(One jeep is provided for three subdivisions and it is used by them one week each).* | | |
| | | *II. Tirunelveli Division.*<br>5 Remodelling Subdivision, Tirunelveli.<br>6 S.M.I.P. Subdivision, Shencottah.<br>7 Manimuthar Canals Subdivision, Moolakarai Patti.<br>8 Manimuthar Dam Subdivisions, Manimuthar. | *II. Tirunelveli Division.*<br>1 Tirunelveli Subdivision.<br>2 Cheranmahadevi Subdivision.<br>3 Srivaikuntam Subdivision. | Items 1 and 2—i.e., The Subdivisional Officer, Tirunelveli Subdivision and Cheranmahadevi Subdivision own cars. |

| *Serial number and name of the circle.* (1) | *Total number of the Subdivisional office under the control of the circle.* (2) | *Name of the subdivision to which jeep supplied.* (3) | *Name of the subdivision to which no jeep has been supplied.* (4) | *Reasons for the non-supply of jeeps.* (5) |
|---|---|---|---|---|
| | | *III. Kanyakumari Division.* | *III. Kanyakumari Division.* | |
| 4 Tirunelveli Circle—*cont.* | 21 (Twenty-one) —*cont.* | 9 S.M.I.P. Subdivision, Nagercoil.<br>10 Remodelling Subdivision, Nagercoil.<br>11 Neyyar Irrigation Project Residuary Subdivision, Kuzhithurai. | 4 Nagercoil Subdivision.<br>5 Thuckalai Subdivision.<br>6 Cheruppalur Subdivision. | The Subdivisional Officer, Cheruppalur Subdivision owns a car. |
| | | *IV. Chittar Pattanamkal Division.* | *IV. Chittar Pattanamkal Division.* | |
| | | 12 Chittar Pattanamkal Subdivision No. I, Nagercoil.<br>13 Chittar Pattanamkal Subdivision No. II, Cheruppalur. | 7 Chittar Pattanamkal Subdivision No. III, Kuzhithurai.<br>8 Chittar Pattanamkal Subdivision No. IV, Kuzhithurai. | The Superintending Engineer, Public Works Department, Tirunelveli, has reported that the nature of work in some of the Subdivision is such that the need for supply of Government jeep is not felt. As regards the two subdivisions of Chittar Pattanamkal Divisions not provided with jeeps, the Chief Engineer's proposal for supply of jeeps to the subdivisions is under consideration of Government. It is reported by the Superintending Engineer, Public Works Department, Tirunelveli, that some of the Subdivisional Officers are maintaining their own cars and utilising them for inspection of works and draw Travelling Allowance as per rules in force. |
| 5 Coimbatore Circle .. | 14 (fourteen) | 1. Mettur Canals Subdivision, Bhavani.<br>2. Erode West Subdivision, Erode.<br>3. Erode East Subdivision, Erode.<br>4. Gobi Subdivision, Gobi. | 1. Coimbatore Subdivision, Coimbatore.<br>2. Pollahi Subdivision, Pollachi.<br>3. The Nilgiris Subdivision, Ootacamund.<br>4. Stanly Dam Subdivision, Mettur Dam. | *Items* 1 and 2—No jeep have been found necessary.<br>3. A medium sized car in lieu of a jeep has since been sanctioned.<br>4. There is a bus type van at Mettur Dam |

| *Serial number and name of the circle.* | *Total number of the Subdivisional office under the control of the circle.* | *Name of the subdivision to which jeep supplied.* | *Name of the subdivision to which no jeep has been supplied.* | *Reasons for the non-supply of jeeps.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 5 Coimbatore Circle—*cont.* | 14 (fourteen)—*cont.* | 5. Kangayam Subdivision, Kangayam.<br>6. Amaravathi Subdivision, Amaravathinagar. | 5. Salem Subdivision, Salem.<br>6. Thirupathur, Subdivision, Tirupathur.<br>7. Lower Bhavani Project Canals Special Subdivision, Bhavani.<br>8. Lower Bhavani Project Headworks Subdivision, Bhavanisagar. | for inspecting officers and it is used by the Subdivisonal Officer for inspecting purposes.<br>5. Jeep is not found necessary.<br>6. The jeep supplied to the Salem Division is being used by this Subdivisional Officer.<br>7 and 8. Jeeps available with other Subdivisional Officers are being used by these two Subdivisional Officers. |
| | | *I. Cauvery Division, Thanjavur.* | *I. Cauvery Division, Thanjavur.* | |
| 6 Thanjavur Circle .. | 37 (Thirty-seven). | 1. Thanjavur Subdivision.<br>2. Floods Specials Subdivision, Thiruvaiyaru. | 1. Mayuram Subdivision, Mayuram.<br>2. Nannilam Subdivision, Nannilam. | The jeep supplied to the Thanjavur Subdivision is a common jeep for Superintending Engineers, Executive Engineers and Subdivisional Officers. |
| | | *II. Vennar Division, Thanjavur.* | *II Vennar Division, Thanjavur.* | |
| | | 3. S.M.I.P. Subdivision, Thiruthuraipoondi.<br>4. Drainage Subdivision, Nagappattinam. | 3. Vennar Subdivision, Thanjavur.<br>4. Nagappattinam Subdivision, Nagappattinam.<br>5. Thiruthuraipoondi Subdivision.<br>6. Special Floods Subdivision, Tiruvàrur. | 2 Items 1 to 13 supply of jeeps to all these Subdivisional Officers are not felt. |
| | | *III. Grand Anicut Canals Division, Thanjavur.* | *III. Grand Anicut Canals Division, Thanjavur.* | |
| | | 5. No. III Subdivision, Pattukkottai. | 7. No. I Subdivision, Thanjavur. | |
| | | 6. Drainage Subdivision, Pattukkottai. | 8. No. II Subdivision, Pattukkottai.<br>9. Mannargudi Subdivision, Mannargudi. | |

| Serial number and name of the circle. | Total number of the Sub-divisional office under the control of the circle. | Name of the sub-division to which jeep supplied. | Name of the sub-division to which no jeep has been supplied. | Reasons for the non-supply of jeeps. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | *IV. South Arcot Division, Cuddalore.* | *IV. South Arcot Division, Cuddalore.* | |
| 6 Thanjavur Circle —*cont.* | 37 (Thirty-seven) —*cont.* | 7. S.M.I.P. Subdivision, Cuddalore.<br>8. Ponniar Anicut Subdivision, Cuddalore. | 10. Cuddalore Subdivision, Cuddalore.<br>11. Tindivanam Subdivision, Tindivanam.<br>12. Vridhachalam Subdivision, Vridhachalam. | |
| | | *V. Upper River Conservancy Division, Tiruchirappalli.* | *V. Upper River Conservancy Division, Tiruchirappalli.* | |
| | | 9. Tiruchirappalli Subdivision, Tiruchirappalli.<br>10. Lalgudi Subdivision, Lalgudi.<br>11. Kulithalai Subdivision, Kulithalai.<br>12. Kattalai Pullambadi Subdivision, Tiruchirappalli. | 13. Musiri Subdivision, Musiri. | |
| | | 13. Special Subdivision, Kumbakonam.<br>14. Lower Anicut Subdivision, Lower Anicut.<br>15. Chidambaram Subdivision, Chidambaram. | .... | The jeep supplied to the Chidambaram Subdivision is used by the Executive Engineer, Lower River Conservancy Division. |
| | | *VII. Modernisation Division, Thanjavur.* | | |
| | | 16. Thiruthuraipoondi Subdivision.<br>17. Mayuram Subdivision.<br>18. Thanjavur Subdivision.<br>19. Thiruvarur Subdivision. | .... | *General remarks.*—Jeeps are supplied to those subdivisions where the necessity is absolutely felt. |
| | | *VIII. Reclassification Division, Thanjavur.* | | |
